III. 11 (அ)

RETIRED MEMBER OF MYSORE [illegible]

கணபதி துணை.

கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய

மதுரைக்

# கூலவாணிகன்சாத்தனார்

அருளிச்செய்த

# மணிமேகலை மூலமும்,

கும்பகோணம் கவர்ன்மென்ட் காலேஜ

தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

## வே. சாமிநாதையரெழுதிய

அரும்பதவுரையும்.

---

இவை

பாலவனத்தம் ஜமீந்தாரவாகளாகிய

இராமநாதபுரம்

ம-ரா-ரா-ஸ்ரீ

## பாண்டித்துரைத்தேவரவர்கள்

உதவியைக்கோண்டு,

வே சாமிநாதையரால்

சென்னை:

வெ. நா. ஜூபிலி அச்சுகூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன

---

1898.

விலை ரூபா ரு.

(*Copy-Right Registered.*)

# )ப்புத்தகத்திலடங்கியவை.

க. முகவுரை.

உ. நூலாசிரியர் வரலாறு.

ரு புத்தசரித்திரம்.

ச. பௌத்ததருமம்.

டு. பௌத்தசங்கம்.

சு. மணிமேகலைக்கதைச்சுருக்கம்.

எ. மணிமேகலை அபிதானவிளக்கம்.

அ. சூசீபத்திரம்.

கூ. மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும்,

கo. மணிமேகலைப்பாட்டு முதற்குறிப்பகராதி, ருஉக.

கக⁻ அரும்பதவகராதி, ருஉஉ.

கஉ. அருந்தொடரகராதி, ருருஉ..

கரு. மணிமேகலை மூலவிஷயசூசிகை, ருசஎ.

கச. அரும்பதவுரையில் அடங்கியவை, ருசுசு.

கடு. அரும்பதவுரையிலுள்ள உதாரணச்செய்யுளகராதி, சஉஎ.

கசு. அரும்பதவுரையிலுள்ள தமிழ்நூற்பெயர்கள்முதலியவற்றினகராதி,சருசு.

கஎ. மணிமேகலையால் தெரிந்த அரசர்களின்பெயர்கள்முதலியன, சருஅ.

கஅ. மணிமேகலைப் பிரயோகவிளக்கம், சசஉ.

ககூ. மணிமேகலையில்வந்துள்ள வேறுகதைகள், சசடு.

உo. புத்ததேவன்பெயர்கள், சசஎ.

உக. பௌத்தசமயத்தைப்பற்றிப் பெரியோர்கொண்டகருத்து.

உஉ. பிழையுந்திருத்தமும்.

# முகவுரை.

"தன்றே ணன்கி ரென்று கைம்மிகூஉங்
களிறுவா ரெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றலியவென் னெஞ்சே."

உலகமா பன்னூற் றிலகமா யிலகி
நவையறு மொன்பான் சுவைபுணர்ந் தினிமைத
திரட்டுறு *மைந்து பொருட்டொடர் நிலைகளு
ளமிழ்தின் சிறந்த தமிழெனு மடந்தை
யணிமே கலையா மணிமே கலைதான்,
நச்சம் பெருமை முச்சங் கத்துட்
கறைமிடற் றிறைவ னிறையரு ளெனப்பெயர்
வாய்ந்தே †புலம்பல வாய்ந்த சங்கத்
தொல்லிசை பலவுறு நல்லிசைப் புலவருட்
சிலமார் மதுரைக் கூலவாணிகன் சாத்தனொன்னும்

புலவாபெருமானுல அருளிச்செய்யபபட்டது; இளம்பூரணர், நச்சினர்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார், ‡சமயதிவாகரவாமனமுனிவர், இலக்கணவிளக்கவுரையாசிரியர், §திருவோற்றியூர் ஞானப்பிரசாசர், சங்கரநமச்சிவாயர் முதலிய ||உரையாசிரியாகளால எடுத்துககாடடப்படடுள்ள பிரமாண நூலகளுள் ஒனறு. தன்மைகவிறகியணியும பாவிகவணியும இன்னேரன்ன பிறவணிகளுமே ஆங்காங்கு அமைநதிருததலால், தன்னுட் கூறப்பட்டுளள மலை கடல தீவு வனம நாடு நக ஆறுமுதலியவற்றையும் பிறவறறையும நேரில அறிநதுகொண்டாறபோலப் படிப்பவர்களு டைபமனத்திறகு னனறாகப் புலப்படசெய்யுஞ் நலப்பாடுற்றது; இக்கா

---

* ஐந்து பொருட்டொடர் நிலைகளாவன .—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதியென்பன

† புலம் - நூல், இதனை, "புலந்தொகுத தோனே" என்னுந்தொல்காப்பியப் பாயிரததாலுணர்க.

‡ சமயதிவாகரவாமனமுனிவர் - நீலகேசித்திரட்டினுரையாசிரியர்.

§ திருவோற்றியூர் ஞானப்பிரகாசர் - சிவஞானசித்தியார், பரபக்கவுரையாசிரியர்களுள் ஒருவர்

|| இவ்வுரையாசிரியர்கள் இந்நூலை இன்ன இன்ன இடத்தில் எடுத்தாண்டனரென்பதை, இப்புத்தகததின் பின்புள்ள பிரயோகவிளக்கததாலுணர்க (பக்கம்-ஒஎ.)

லத்தில் வேறொருவாற்றாலும் விளங்காதனவாகிய சிலதெய்வங்களுடைய பெயர்களையும், அத்தெய்வங்களை வழிபடுமுறைமையையும, சிலசாதியாரையும், அவர்களுடைய நடைமுதலியவற்றையும, சில நகரங்கள தீவுகள் மலைகள் வனங்கள் கோட்டங்கள் அறச்சாலைகள் மன்றங்கள் முதலியவற்றையும், அவைகள் இன்ன இன்ன வண்ணமாக இருந்தனவென்பதையும, இன்ன இன்ன சமயங்கள் இன்ன இன்ன இடத்திற் பரவியிருந்தனவென்பதையும், அவற்றின் இலக்கணங்களையும, சில அரசர சில முனிவர முதலியோருடைய சரித்திரங்களையும, பிறவற்றையும இந்நூலில விளங்க அறிந்துகொள்ளலாம; இதில சொல்லியிருப்பன பொருள்நூடபங்கள் நூலளவேயாகிய நுண்ணறிவிற்கேற்ப எவ்விடத்துங்காணப்படுமென்று கூறுவர். இதனை,

> "மந்தா கினியணி வேணிப்பி ரான்வெங்கை மன்னவனீ
> கொந்தார் குழன்மணி மேகலை நாமம் கொள்வதெங்ஙன
> சிந்தா மணியுந் திருக்கோ வையுமெழு திகொளினு
> நந்தா வுலையை யெழுதலெவ் வாறு நவின்றருளே."

என்று கவிஞர்பெருமானுகிய துறைமங்கலம சிவப்பிரகாசமுனிவர் அருளிச்செய்த வெங்கைக்கோவைச செய்யுளாலுணர்க

சிலப்பதிகாரக கதைத்தலைவனை கோவலனுடையமகளாகிய மணிமேகலையென்பவளுடைய சரித்திரமாதலின், இந்நூல, சிலப்பதிகாரத தோடு கதைத்தொடர்புடையது.

இதில, சோழவளநாட்டிலள்ள காவிரிப்பூம்பட்டினத்தில பெருங்குடவாணிகர்மரபில் உதித்த கோவலனுக்கு மாதவியினனும நாடகக்கணிகையிடந்தோன்றிய மணிமேகலையென்பவள், தனனுடைய தாய் கோவலன் மதுரையில் வெட்டுண்டிறந்ததுகேட்டுப பரத்தைமைதொழிலை வெறுத்துப் பௌத்தமுனிவராகிய அறவணவடிகளைச சரணடைந்து வாய்மைநான்கும மூலமைந்தும உபதேசிக்கபபெற்றுப பௌத்தசங்கத்திருத்தலை யடைந்து, அவளோடுபழகி, சிறுபிராயத்திலேதாவே பௌத்தத்தருமங்களை அறிதற்கேற்ற உணாச்சியுற்று, ஒருநாள், தாயினகட்டளைப்படி சுதமதியுடன பூங்கொய்தற்கு மலரவனஞ்சென்று, தனனை விரும்பிவந்த உதயகுமரனுக்கு அருகி அங்குள்ள பளிங்கறையில ஒளிந்திருந்து, அவன் போனபின்பு வெளியேவந்து, தன் குருவேதவதையாகிய மணிமேகலாதெய்வத்தால மணிபல்லவத்தீவிற கொண்டுபோகப்பட்டு, அத்தீவிலுள்ள புத்தபீடிகைக்காட்சியால தன்னுடைய பழம்பிறப்பில நிகழ்ந்த செய்திகளையறிந்து, அப்பால் அத்தெய்வம் அறிவுறுத்திய மூன்றுமந்திரங்களையுணர்ந்து, முற்பிறப்பிற் கணவனுயிருந்த இராகுலனென்பவனே இப்பிறப்பில் உதயகுமரனுகவந்தானென்று அதனெய்

# முகவுரை.

வங்கூறக்கேடடு, அப்பிடிகையின் காவற்றெய்வமாகிய தீவதிலகையினு தவியாற் கோமுகியென்னும பொய்கையை யடைந்து, அதிலிருந்த அமுத சுரபியென்னும் அக்ஷயபாத்திரம் தன்கையில் வரப்பெற்று, பின்பு காவி ரிப்பூம்பட்டினத்தைச்சார்ந்து, அறவணவடிகளை யடைந்து, ஆபுத்திரன் வரலாற்றையும அவனுக்கு மதுரையிற் சிந்தாதேவி அமுதசுரபியைக் கொடுத்ததையும் பசித்தவயிர்களுக்கு உணவளித்தலே எல்லாவற்றி னும் மேலான தருமமென்பதையும அவாகூறக்கேட்டு, அவர்கூறியவா றே உணவளித்தற்பொருட்டு அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு வீதியிறசென்று, சிறந்தபத்தினியாகிய ஆதிரையென்பவள்வந்து முத லிற் பிசசையிடபபெற்று, காயசண்டிகையென்னும் வித்தியாதரமங்கை யின் தீராப்பசியை அப்பாதத்திரத்திலிருநதெடுத்ததவிய ஒருபிடி யமுதாற் போகசி, அப்பாதத்திரதில மேன்மேலும அமுது வளரப்பெற்று, அந்த கரத்துளள உலகவறவியென்னுமமபலத்தை யடைந்து, அங்கேவந்த எல்லாவுயிரகளின் பசிபையுமபோகசி, அவ்வறஞ்செய்தலேயே நித்தநியம மாகபபூண்டு, தனனை விருமபிவநத உதயகுமரன் அழிதுகொள்ளா வண்ணம மேறகுறிய காயசண்டிகையின வடிவங்கொண்டு அந்தகரத் துள்ள சிறைசசாலையைபடைநது, அங்கே பசித்திருப்பவர்களுக்கெல் லாம உணவளித்து அதனை அறசசாலையாக்கி, தன்னை மீட்டும் விடாது தொடாந்த உதயகுமரன காயசண்டிகையின் கணவனுல வெட்டிண்டு வீழ்நதபபரண்டு மனங்கலங்கிய பின்பு கநதிற்பாவைத்தெய்வத்தின் மொழிகளால் தேறுதலுறறு, உதயகுமரனுடைய தநதையாகிய மாவண் கிளளியாற சிறையில்வைக்கப்படடு, இராசமாதேவியின் முயறசியால் அச் சிறையினினறு நீங்கி, நாகபுரதையடைநது அதன்றலைவனை புண்ணிய ராசனெனறு மணிபலலவஞ்சாரநது புதபபீடிகையைக்காட்டி அதனல் அவனது பழமபிறபபை அவனுகமிவித்து, காவி டபூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டசெய்தியைத் தீவதிலகையாலறிநதுகொண்டு, அபபாற் சென்று வஞ்சிமாநகரபுறதேதியுளள பததினிகடவுளாகிய கண்ணகியின் கோயிலையடைநது தரிசிதது, தனனுடைய எதிரகாலசசெய்திகளைக் கண் ணகி கூற அறிநதுசென்று, அங்கிருந்த சமயவாதிகள் பலரையுஞ்சார்ந்து அவரவாகளுடைய கொளகைகளைத் தனிததனியேவினவியுணாநது, அக் நகரில தமைபுரிநதுகொண்டிருநத மாசாத்துவாணைக்கண்டு அவன் மொ ழிநதசெய்திகள பலவற்றையுங் கேட்டு, அவனகூறியவாறு காஞ்சிநகரம் போய், அந்நகரிற பகியாலவருநதிவாடிய எலலாவுயிரகளுக்கும் உணவளி த்து, அங்கேவநத அறவணவடிகளைத தரிசிதது, அவர் உபதேசித்த அற மொழிகளைகேடடு, பின முதநதிபபுறறபொருடடு அநநகரிலேயே கவஞ்செய்துகொண்டிருநதாளெனபதை விரித்துக கூறபபடும.

இந்நூல், பௌத்தசமயச்சார்பினளாகிய மணிமேகலையின் சரித்திர மாதலின், இதில் அச்சமயக்கொள்கைகளைப் பரக்கக் காணலாம்.

பற்பல தருமங்கள் இதிற் சொல்லப்பட்டுள்ளன ; அவற்றுள் மிகு தியாகக்காணப்படுவது ஒருவன் மனமொழிமெய்களை தூயனாகி எல்லா வுயிர்களிடத்தும் எப்பொழுதும அருளுடையனாதல்வேண்டுமென்பதே.

மணிமேகலையென்பவளுடைய சரித்திரத்தை விரித்துக்கூறுதலின், இஃது இப்பெயர் பெற்றதெனபர். நீலகேசித்திரட்டில், புத்தவாதசசருக்க த்தில், "குயலாகுயலம்" என்னுஞ்செய்யுளாயில, *"'தீவினை யென்பது .....பிரமரு மாகி' என்பது மணிமேகலைதுறவாதலின், இத னால், ஸம்ஸ்காரமழிக்துகொள்க" எனச சமயதிவாகரவாமனமுனிவரும், சிவஞானசித்தியார் பரபக்கத்திற் சௌதாந்திராகதிகனமதத்துள்ள "ஓங் கிய வுருவம்" என்னுந் திருவிருத்தத்துரையில், *"'தீவினையென்பது..... .....பிரமருமாகி' என்பது மணிமேகலை துறவாதலின், இதனால ஸம்ஸ்காரமழிக்துகொள்க" எனத் திருவோற்றியூர் ஞானப்பிரகாசரும் எழுதி யிருத்தலால, இந்நூல, மணிமேகலைதுறவென்னும அக்காலத்தில் வழங் கப்பட்டுவந்ததென்று தெரிகின்றது ; "மணிமேகலைதுற, வாறைம பாட்டினு ளறியவைத்தனன்" என்று பதிகத்திறுதியிற் கூறப்பட்டிருத தலும் இதற்கு இயைபருண்டென்பதை நனகுபுலப்படுத்தும.

இந்நூல், அமமைமுதலாகிய எனபபெடடினுள் இயைபின்பாற்படும்; தொல்காப்பியச் செய்யுளியலினகண்ணே, 'அமமைமுதலியவனப்பெட்டும தொடர்நிலைச்செய்யுட்கிலக்கணம்' என்று கூறுகின்றுழி, †"ஞகாரை முத லா னகாரை யீற்றுப், புள்ளி யிறுதி யியைபென பபடுமே" என்னுஞ் சூத்திரவுரையில், 'ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள வென்னும் பதினொரு புள்ளியுள் ஒன்றனை ஈறுகவமைத்துச செய்யுளைப் பொருட்டொடராகவும சொற்றொடராகவுஞ்செய்வது இயைபெனபபடுமே', ‡'னகாரவீறாயினு மும் பொருளுமியைபாது சொல்லுமியைபாதுவாதலன, சீத்தலைச்சாத்தனாரா செய்யப்பட்ட மணிமேகலையும், கொங்குவேளாற செயயபபட்ட உத யணன்கதையும் போலவன' என்று ஆசிரியா நச்சினார்க்கினியர் எழுதியிரு த்தலகாண்க. இதனால, மணிமேகலைசெய்யுள் ஒவ்வொன்றும் 'என்' என னகரவொற்றீறுகவே படிக்கப்படவேண்டுமென்பது அமியப்படுமா யினும், இக்காலத்தில் வழங்குறதீகறப அரசெய்யுட்கள் னகர அகர

---

* மணிமேகலை, உசு-ம் காதை, கஉசு - கசுக, நo - ம் காதை, சுசு - அo.

† தொல்காப்பியம். செய்யுளியல், உசக.

‡ ஈண்டெழுதியவாறு, தொல்காப்பிய பொருளதிகாரவுரைக கையெழுத்துப பிரதிகளிற காணப்பட்டது.

வீரமகவேகொள்ளப்பட்டன; வேண்டுமேல் அவற்றை ஒற்றீருக்கிப் படித்துக்கொள்க. இந்நூலிற் சொல்லியையும் பொருளியையும் அமைந் திருத்தல்காண்க.

இதிற்கூறப்பட்டுள்ள சரித்திரம்கிழ்ந்தகாலமும் இந்நூலாசிரியர் காலமும் ஒன்றென்றும், இஃது அவரால் தமிழிலேதான் முதலிற் பாடப் பட்டதென்றும், சிலப்பதிகாரத்தாலும் அதன்பதிகத்தொடக்கத்தில் அடி யார்க்குநல்லாரெழுதிய உரைநடையாலும் இந்நூற்பதிகத்தாலும் நன்கு வீளங்குகின்றமையின், இது வேறுமொழியிலிருந்துவந்ததென்று சொல லுவதற்கிடமில்லை.

இது, கதையைத் தொகுத்துக்கூறுவதாம பதிகமென்று வழங்கப் படுவதுமாகிய கதைபொதிபாட்டை முதலிற்பெற்று, விழாவறைகாதை முதற் பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதையிறுதியாகவுள்ள முப் பதுபகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது; காதை - பாட்டு; நீலகேசித்திரட்டு, குண்டலகேசிவாதசருக்கம், உ - ம செய்யுளுரையில், "'மூன்றுன் பெருமைக்கணின்றுன்' என்னுங்காதையை அனுவதித்தவாறு" எனவும், ஊ - ம் செய்யுளுரையில, "'பிடகம' என்னுங்காதை சொன்னவாறு" எனவும், மொகலவாதசருக்கம, ஊ-ம் செய்யுளுரையில, "'தன்புற த்தி' என்னுங்காதைசொலலப்பட்டது" எனவும, சு-ம செய்யுளுரையில, "'எழுமபைத்தி' என்னுங்காதை" எனவும், சக - ம் செய்யுளுரையில், "'காவினுற்சுமந்துய்ப்பான்' என்னுங்காதை" எனவும, சூ-ம செய்யுளு ரையில், "'மக்கட்பண்பழியாது' என்னுங்காதை" எனவும், அந்நூலுரை யாசிரியர் எழுதியிருத்தலால், காதையென்பதற்குப் பாட்டென்று பொரு ள்கொள்ளுதல துணியப்படும; "ஆறைம பாட்டினு ளமியவைத்தனன்" எனப பதிகத்திறுதியிற் கூறப்பட்டிருத்தலும், மிதிலைப்பட்டித் திருச்சிற் றம்பலக்கவிராயரவர்கள் வீட்டிற்கிடைத்த பிரதியில் இந்நூற்பகுதிகளின் பெயர்கள்யாவும பாட்டென்றே காணப்பட்டிருத்தலும் இதனைவற்புறுத் தும்; காதையென்பதை இசையோடு பாடப்படுவதாகியசெய்யுளென்று பொருள்படுகிற 'காதா' (गाथा) என்னும் வடசொற்சிதைவென்றுகொண் டால் யாதோரிழுக்குமின்றென்று வடமொழியாளர்கூறுவர்; இது நிற்க.

சிலவருடங்களுக்குமுன் பழைய தமிழ்ப்புத்தகங்களைத் தேடும்வண் ணம் இத்தமிழ்நாட்டினுளளே செல்லுதற்குரிய பல ஊர்களுக்குச் சென்று அங்கங்குள்ள பரமபரைத் தமிழ்ப்பண்டிதர்களுடையவீடுகள் தோறும உள்ளனவாகிய கையெழுத்துப்பிரதிகளைப் பரிசோதித்துப பாரததகாலங்களிலெல்லாம எனகரு மணிமேகலைமூலப்பிரதிகள் கிடை த்தனவேயன்றி உரைப்பிரதி யாண்டும கிடைத்திலது. சென்னை தஞ்சை

முதலிய நகரங்களிலுள்ள பழைய கையெழுத்துப்புத்தகசாலைகளும் பார்க்கப்பட்டன; அங்கும் கிடைக்கவில்லை. வெளிநாட்டிலுள்ள நண்பர்கள் பலரைப் பத்திரிகைவாயிலாக இதைப்பற்றி வினவினேன்; அங்ஙனம் வினவப் பட்டவர்களுள், இப்பொழுது கொழும்பிலிருக்கும் யாழ்ப்பாணத்துநல்லூர் ம-ா-ா-ஸ்ரீ சிற். கைலாசபிள்ளையவர்கள் தமதுகையாலெழுதிய மூலப்பிரதியொன்றை அன்புடன் அனுப்பினர்கள்; பின்பு பாரிஸ்நகரத்துள்ள (Julien Vinson, Professor of Oriental Languages) ஜூலியன்வின்ஸன் என்பவர், 'இந்நகரத்துக் கையெழுத்துப்புத்தகசாலையில மணிமேகலைமூலப்பிரதி ஒன்றேயுள்ளது' என்றுதெரிவித்து மாதிரிகைக்காக அதிலிருந்து பதிகமட்டும் எழுதியனுப்பினர். மற்றவாகள் 'யாதொன்றுங் கிடைக்கவில்லை' என்று விடையளித்துவிட்டாகள். கிடைத்தபிரதிகளை வைத்துக்கொண்டு ஒப்புநோக்கி ஆராய்ந்துவருகதபொழுது பிரதிகளில எழுதுவோர்கள் இயலபாகவேசெய்வித்திருந்த வேறுபாடுகளாலும, இது பௌத்தசமயகாப்பியமாதலால அசசமயக்கொள்கைகளைக் கூறுமபாகங்களையெல்லாம எளிதிறறெரிந்துகொள்ளல கூடாமையாலும, அவற்றை ஒழுஙகாகப புலப்படுத்தும பழைய *தமிழ்ப் பௌத்தநூலகள் பண்டைகாலத்தில இருந்தும பாதுகாப்பாரின்மையால இக்காலத்தில இறந்தொழிந்தமையாலும, அக்கொள்கைகளை விளங்கசசொல்லுவோர அகப்படாமையாலும, பிழைகளைப் பிழைகளென்று நிசசயித்துக்களைந்து திருத்தமானபாடங்களைத் தெரிந்துகொள்ளுதறகு எடுத்துக்கொண்டமுயற்சியும கழித்தகாலமும அடைந்தவருத்தமும அளவுபடுவனவலல.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சைவசமயாசாரியர்கள் அருளிச்செய்த தேவாரங்களிலுள்ள பௌத்தசமயமறபுக்களும, பெரிய புராணமுதலியவற்றுட் கூறபட்டுள்ள அசசமயகொள்கைகளும மறுப்பும, சிவஞானசித்தியார் பரபக்கத்துள்ள சௌத்திராந்திகன் மதமுதலியனவும், அவற்றிற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் எழுதியவுரையும, அவ்வுரையிலுள்ள சில உதாரணசசெய்புட்களும, மறுப்புக்களும், நீலகேசித்திரட்டும் அதனுரையும், அவ்வுரையில மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள சிலகவிகளும, வீரசோழியம் யாப்புப்படலவுரையிலுள்ள சிலவுதாரணப்பாடல்களும, இன்னுஞ்சிலவும் பௌத்தசமயமரபுகளிற் சிலவற்றையும் அசசமயத்தோர் பேசியவந்த சில தமிழ்ப்பரிபா

---

* அடியிலுள்ளவை பண்டைக்காலத்துப் பௌத்தநூல்களென்று சிலநாளைக்குமுன்னேதான் தெரிந்தது. அவை தண்டலகேசி, சித்தாந்தத்தொகை, திருப்பதிகம், விம்பசாரகதையென்பன, அவற்றிலிருந்து இரண்டொருபாடல்களே நீலகேசித்திரட்டினை முதலியவற்றில் நூற்பெயர்களோடு எழுதப்பட்டிருந்தன.

# முகவுரை.

ஷைகளையும் பிறவற்றையும் ஒருவாறு விளங்கச்செய்தன ; செய்தும் முன்பிருந்த ஐயங்கள் முற்றுந் தீராமையாற் பின்னும் அறிந்தோர்பாற் சென்றும தூரதேசததார்க்குக் கடிதமெழுதியும விசாரித்தலையே மேற் கொண்டிருந்தேன்.

ஆராய்ச்சிசெய்யத் தொடங்கிப் பலவருடங்களாகியும் இந்நூலை முன் னமே வெளிப்படுத்தாமைக்குக் காரணம் இதுவே

இப்படி இருக்கையில், ஹிந்துதேசத்துவித்தகளிலும் ஆங்கிலேய வித்தகளிலும் மிகப்பயிற்சியடைந்துவிளங்கும் மஹூர், ஸ்ரீமத் உ. வே. அரங்காசாரியரவர்கள், M. A. பௌத்தசமயநூல்களிலும பாண்டித்தியமு ள்ளவர்களென்பதை அறிந்துகொண்டு உரியகாலங்களில் அவர்களிடத் துசென்று வினவிவந்தேன்; வருகையில், ஒவ்வோரமயத்தும் தடை யின்றி உடனுடன் அவர்கள்சுமியவிடைகளால் அதற்குமுன்பு எனக் கிருந்த ஐயங்களிற் பெருமபாலன நீங்கின. நீங்கவே இந்நூலைப்பரி சோதித்தலில் என்மனம ஊக்கம்பெற்றது. அவர்களுடையபேருதவி இல்லையாயின், மணிமேகலையில்வந்துள்ள துடிதலோகம், பாரமிதை, அநுபபபிரமர், உநுபப்பிரமர் முதலியசொற்களுக்குங்கூட உள்ளவாறே பொருள்கொள்ளுதல எனக்கு மிகவரிதாகும் ; தமக்குரிய அரியவேலை கள் அநேகமிருந்தும் பழைய இத்தமிழ்நூல் வெளியேவந்து உலாவு தலையே பயனுகக்கருதி, யான செலவுங்காலங்களோறும் சிறிதும் சலிப் பின்றி அவர்கள் செயதுவந்ததபேருதவி ஒருபொழுதும் மறக்கற்பால தன்று ; அம்மஹோபகாரிவிஷயத்தில இததமிழ்நாட்டினேமாகிய நா மெலலாம் நன்றிபாராட்டுதற்கு உரியவர்களாக இருக்கிறோம்.

எவ்விடத்தும இந்நூலுக்கு உரையகப்படாமையாலும், உரை முன் னபு உண்டென்று ஒருவாற்றலும் விளங்காமையாலும இனி மூலத் தைமட்டுமாவது வெளிபபடுத்தவேண்டுமென்று நிசயித்துப் பதிப்பிக் கத் தொடங்கியபொழுது, தமிழ்ப்பாஷாபிமானிகளாகிய அன்பர்களிற் சிலர், 'உரையெழுதியே இதனை வெளிப்படுத்தவேண்டும்' என்று வற்பு றுத்திக்கூறினமையின், அவர்கள்சொலலை மறுத்தற்கஞ்சி, இது புலவர் திலகாகள் செய்தறகுரிய அரிய காரியமென்றுகருதாமல், "ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவமாநதி, மூங்கையான் பேச லுற்ற னென்னையான் மொழிய லுற்றேன்" என்று பெரியோர் கூறியதறகு இலக் கியமாக, தக்கநூலாராய்சசியும் எண்ணியவற்றைச சுவைபயக்குமபடி நல்லநடையில் விளங்கவெழுதும்வன்மையுமில்லாத யான், "மணிமேகலை நூனுட்பங்கோள்வதெங்ஙன்" என்று ஆன்றோரால் நன்குபாராட்டப்பட் டுள்ள இந்நூற்கு அரும்பதவுரையென்ற ஏதோவொன்றை எழுதத்தொ டங்கினேன்:

மொழிகளுட் பெரும்பாலனவற்றிற்குப் பொருள் விளங்கிக்கிடக் கின்றமையின், அரியவற்றிற்குமட்டுமே பொருள்செய்தும், ஆங்காங் குள்ள வாக்கியங்களே ஒத்தவைகளாக இந்நூலிலும் வேறுநூலி லும் காணப்பட்டவாக்கியங்களே அவ்வவ்விடத்தில்தந்துகாட்டி அவற்றி னிடங்களே உடனுடன் விளங்கச்செய்தும், பொருள்விளங்காத இடங் களில் (?) இக்கேள்விக்குறியை அமைத்தும், கையெழுத்துப் பிரதி களிற்கண்ட பாடபேதங்களே எடுத்துக்காட்டி அவற்றுள் இன்றியமை யாத சிலவற்றிற்குமட்டுமே பொருளேப்புலப்படுத்தியும், எல்லாருக்கும் எளிதிற் பொருள்விளங்குதற்பொருட்டு வடசொற்களேப் பெரும்பாலும் விரவவித்தும், சிலவற்றிற்கு சங்கமருவிய நூல்களிலிருந்து மேற்கோள் கள் இப்பொழுது அகப்படாமைபால் அவற்றைவிளக்குதற்குப் பிற்கா லத்துநூல்களிலிருந்து பிரயோகங்களே எடுத்துக்காட்டியும் ஒருவாறு எழுதிமுடித்தேன்.

*"சவியுறத் தெளிந்து தண்ணென் றெழுக்கமும பயின்று" என்று சம்பகாடரும், † "செல்லாறு தோறும பொருளாழ்ந்து தெளிந்து" எனப் பரஞ்சோதிமுனிவரும் அருளிச்செய்த திருவாக்குகளுக்கு இலக்காகவிள ங்குங் கவிகளினுடையவரிசையிலேநிற்குந தகுதியுள்ள பாட்டுக்களேயு டைய இந்நூலுகு யான் அரும்பதவுரையெழுதுபவன்? இதுசெய்தற் குதகுணிந்துவந்த எனது தமுகண்மையைப் பொறுத்தருளுமபடி இத தமிழுலகத்தை மிகவும வேண்டுகிறேன்

பழைய செந்தமிழ்நாற்பரிபாலகரும இவ்வாராய்ச்சியால் எனக்கு மனச்சோர்வுண்டாகாதவண்ணம அடிக்கடி ஊக்கமளித்துவருபவரும் கொழும்புநகரத்துப் பிரபுசிகாமணியுமாகிய Hon. பொ. குமாரசாமிமுதலி யாரவர்கள், இந்நூலிற் சிற்சிலவிடங்களில முன்னம நிகழ்ந்த ஐயங்களே நீக்கிக்கொள்ளுதற்பொருட்டு யான் கேட்டவினுக்களுகு இலங்கையி லுள்ள பௌத்தவித்தியோதய பாடசாலேத்தலேவராகிய ஸ்ரீஸுமங்களரவா களேக்கொண்டு விடைகளெழுதுவித்து அனுப்பிப் பேருதவிசெய்துவந தார்கள்.

மணிமேகலேயைக் கவலேயின்றி ஆராய்ந்து பதிப்பித்து வெளிப்படு த்துதற்குப் பொருளுதவிசெய்த பாலவனத்தம ஜமீந்தாரவர்களாகிய இராமநாதபுரம் ம-ா-ா-ஸ்ரீ பொ. பாண்டித்துரைத்தேவரவர்களுடைய தண்ணளியும பெருந்தகைமையும ஒருபொழுதும மறக்கற்பாலனவல்ல; மிகவும பாராட்டற்பாலன. இதைப்போன்ற எத்தனேயோ பெரியகாரி யங்களேத் திருத்தமாகச் செய்துநிறைவேற்றியவர்களின் வழித்தோன்ற

* கம்பராமாயணம், ஆரணியகாண்டம், சூர்ப்பநகைப்படலம், க.

† திருவிளையாடற்புராணம், அன்னக்குழியும் வையையுமழைத்தபடலம், உஉ.

லாய் மிக்க பாண்டித்தியமடைந்து நூலாராய்ச்சியே இன்பத்துள்ளின்பமெ
ணக்கொண்டுவாழும் அப்பிரபு அவாகளுக்குப் பழையநூல்களையும் அவற்
றினுரைகளையும பதிப்பித்து வெளிப்படசெய்து அமிழ்தினுமினிய தமி
ழைப் பரிபாலித்தல் இயலபாயினும் படிப்பாரும் கேட்பாருமின்றி மூல
யிலே மறைந்துகிடக்கும் அரியபெரிய நூல்களைத் தேடித்தொகுத்துப்
படித்துக்கொண்டு அநாதரவற்றிருப்போர்க்கு அஃது அரியதினும் அரி
யதாகத்தோற்றுமெனபது திண்ணம.

எனக்குண்டாகும் ஆயுங்களை உடனுடன்போகவிட்டுப் பெருதவிசெய்
தருளிய மஹாமஹோபாத்தியாயரவர்களாகிய பிரகவாழ்ந்தான் ஸ்ரீமத்,
உ. வே. அரங்காசாரியரவர்களுக்கும, குமபகோணம கவர்ன்மென்ட்காலெஜ
மஸ்கிருதபண்டிதரவாகளாகிய திருமலை ராசசமபாடி ஸ்ரீமத், உ. வே.
ஸ்ரீநிவாஸாசாரியரவர்களுக்கும எனனுடைய வநதனதை நன்றியறிவுடன்
சமர்பபிகின்றேன்

சென்னைக்குச் சிலவுங்கோதாறும யாதொருகவலையுமின்றியிருநது
நூலாராய்ச்சிசெய்யுமபடி எனக்குத் தமது அழகியமாளிகையில இடங்
தந்து ஊக்கமளித்தது அன்புடன் ஆதரித்துவருகின்றவர்களாகிய ஹை
கோர்டு வகீல, எழுமபூர், ஸ்ரீமத், உ. வே. K. இராஜகோபாலாசாரியரவர்
களுடையபெருநதகைமை மிகப பாராட்டற்பாலது.

சிவகங்கைபரிபாலநத சிறுவயல் ஜமீநதாரவர்களாகிய ம-ள-ள-ஸ்ரீ
முத்துராமலிங்கத்தேவரவர்கள், எனது அன்பருமம பழைய தமிழ்நூலா
ராய்ச்சியிற் கூடாத அமிழினருமம தமது வித்துவானுமாகிய திருமானூர்
ம-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணையரவர்களுக்கு மாதவேதனமளித்தது வேண்டியகாலங்
களிலெல்லாம அனுபபிப் பெருதவிசெய்துவநதார்கள ; இவ்வகையான
உதவிசெய்தல் மிகசிறநததென்பது யாவருக்கும தெரிநததே.

இநநூலை ஒப்புநோகிவநதபொழுது ஏட்டுப்பிரதிகளைவைத்துக்
கொண்டு பலமுறைபடித்தது முதலில் அனபுடன் உதவிசெய்தவர்கள:—

குமபகோணம, பேட்டைத்தெரு, ம-ள-ள-ஸ்ரீ தியாகராஜபண்டாரம்.
திருப்பெருந்துறை, ,, பொன்னுசாமிப்பிள்ளை.

தங்களுக்கு அவ்வாசமுள்ளகாலங்களிலெல்லாமவநது உடனிருநது
இப்புத்தகவிஷயதத்தில எல்லாவுதவியும அனபுடன் செய்தவர்கள்:—

திருமானூர் ம-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணையர்.
கும்பகோணம் கேட்டிவ்ஹை ஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய மணலூர் ,, இராமானுஜாசாரியர்.
பினனதனூர் ,, நாராயணஸாமிஐயர்.
மணலூர் ,, சந்தானமையங்கார்.

இழுக்கலுடையுழி ஊன்றுகோல்போன்ற இவர்கள் யாதொன்றை
யுமதிபாராமறசெய்துவநத பெருதவியை நினைக்குநதோறும், "பயன்

ஆக்கார் செய்த வுதவி கயன்ஆக்கி, னன்மை கடலிற் பெரிது" என்னும் அருமைத்திருக்குறள் ஞாபகத்திற்குவருது மனதைக்குளிர்விக்கின்றது.

மணிமேகலை பௌத்தசமயக்காப்பியமாதலின், படிப்பவர்களுக்கு விளங்கும்வண்ணம, அசசயக்கொளகைகளை விரிவாக எழுதிச சோகக வேண்டுமென்று சிலகனவான்கள் வற்புறுத்தினகுனிமையால, பௌத்தாகளால் மும்மணிகளென்று பாராட்டப்படும புத்ததர்மசங்கங்களின் விவரணங்களாகப் புத்தசரித்திரமும் பௌத்ததருமமும் பௌத்தசங்கமும் ஆகிய இவை, மேற்கூறிய மஹா, ஸ்ரீமத், உ. வே. அரங்காசாரியரவர்களுடையபேருதவியாலியற்றி, இப்புத்தகத்திற்கு அங்கமாகப் பதிப்பிக்கப்பட்டன.

புத்தசரித்திரத்தை 'இங்கிலிஷ்' புஸ்தகங்களிலிருந்து தமிழிற்பெயர்த்து உதவியஅன்பாகள்:—

ம-ா-ாஸ்ரீ V. P. சுப்பிரமணியமுதலியார், G.B.,V.C.
,, S. கிருஷ்ணசாமி ஐயர், B.A., B L.
,, K. P. சோமசுந்தர ஐயர்.
,, V. சுப்பிரமணிய ஐயர், B A.
,, M. S. ஈடேச ஐயர், B A.

நான்போய் எழுதகூடாதகாலங்களில ஷை மஹா அரங்காசாரியரவாகளிடஞ்சென்றுசென்று பௌத்ததருமத்தையும பௌத்தசங்கதையும எழுதியளித்த அன்பாகள்:—

ம-ா-ா-ஸ்ரீ ஸு. கோபாலசாமிஐயா, B.A. முதலியவாகள்.

பௌத்ததருமத்தையும பௌத்தசங்கதையும் மஹர், அரங்காசாரியரவாகளிடஞ்சென்று படித்துகாட்டிச செபபஞ்செய்துகொள்ளுதற்கு எனக்குக்காலம்வாயாமையால், அவாகள் முதனமுறை சொலலியெழுதுவித்தபடியே அவைகள் பதிபபிகபபட்டன.

தமக்குப் பற்பல அரியகாரியங்களிருக்கவும யான்விரும்பியபொழுதெல்லாம ஒப்புநோக்குதலமுதலிய பற்பலவுதவிகளை ஊகதுடன செய்துவருத (Ch. of Scot. Mission College, Madras) தமிழ்ப்பண்டிதராகிய திருவல்லிக்கேணி, ஸ்ரீமத உ. வே. வை மு சடகோபராமானுஜாசாரியரவாகளுடைய அன்புடைமை ஒருபொழுதும மறகதறபாலதனது.

எனக்கு இயலபாகவுள்ள அமிவின்மையாலும, மறதியாலும, வேலை மிகுதியாலுண்டாகும் அயாசசியாலும, பிறகாரணங்களாலும் இப்புத்தகதில பல பிழைகள் இருத்தல்கூடும; அவறறைத் திருத்திப்படித்துக கொள்ளும்படி எலலோரையும வேண்டுகிறேன்.

தொடங்கியகாரியத்தை நிறைவேறுமபடி செய்தருளிய எல்லாம வல்ல முழுமுதற்கடவுளின் இணையடிகளை சிந்தித்து வந்திக்கின்றேன்.

இங்ஙனம்

உத்தமதானபுரம், வே. சாமிநாதன்.

# கிடைத்த மணிமேகலைக் கையெழுத்துப் பிரதிகள்

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்துப்... ... ... பிரதி க.

ாட்டையபுரம் பெரிய அரண்மனை ... .. ,, க.

இது, திருவாவடுதுறையாதீனத்து
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகரவர்கள் வருவித்துத்
தந்தது.

சிவகங்கையைச்சார்ந்த மிதிலைப்பட்டி

ஸ்ரீ அழகியசிற்றம்பலக்கவிராயரவர்கள் .. ,, க.

திருமயிலையிலிருந்த திருநெல்வேலித

,, திருவம்பலத்தின்னமுதம்பிள்ளையவர்கள் ,, க.

இந்தப் பிரதிகொடுத்தவர், திருமயிலைப் பார்த்தசாரதிக
கிராமணியென்பவர்.

சேலம்,

,, இராமசாமிமுதலியாரவர்கள் ... ... ,, க.

முதலிற்கிடைத்த பிரதி இதுவே.

யாழ்ப்பாணத்துநல்லூர்,

,, சிற். கைலாசபிள்ளையவர்கள் ... ... ,, க.

ஆறுமுகமங்கலம,

,, ஏ. சுந்தரமூர்த்திப்பிள்ளையவர்கள் ... ,, க,

S P.G. High School, Vepery, தமிழ்ப்பண்டிதர், திருமயிலை,

,, சண்முகம்பிள்ளையவர்கள் . ,, க.

சென்னை,

,, தி. முத்துக்குமாரசாமிமுதலியாரவர்கள்... ,, க.

சென்னையிலுள்ள,

ராசாங்கத்துக் கையெழுத்துப்புத்தகசாலை .. ,, க.

அப்பொழுதைக்கப்பொழுது ஒப்புநோக்கி உடனுடன்
கொடுத்துவிடப்பட்ட பிரதிகள் சில

இவற்றுள், மிகப்பழமையானதும் பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்ததும் மற்றைப்பிரதிகளிற் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும்போகிய பாகங்களையெல்லாம் ஒழுங்குபடச்செய்ததும் கோப்புச்சிதைந்து அழகுகெட்டு மாசுபொதிந்து கிடந்த, செந்தமிழ்ச்செல்வியின் மணிமேகலையை அவளணிந்துகொள்ளும்வண்ணம் செப்பஞ்செய்துகொடுத்ததும் மிதிலைப்பட்டிப்பிரதியே.

இந்நூலாசிரியராகிய

மதுரைக்கூலவாணிகன்சாத்தனார்

# வ ர லா று.

இவர், கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர்; கூலவியாபாரஞ்செய்துகொண்டிருந்தமையின் இப்பெயர்பெற்றாரென்பர்; பதினெண்கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றையும் அவள்பிறப்பிடமாகிய பாண்டியநாட்டையும் சேரன்செங்குட்டுவனுக்கு அறிவுறுத்தி அவனுக்கொண்டு அவளுக்குக் கோயிலெடுப்பித்து நித்தியபூசை முதலியனநடக்கும்படிசெய்தவர். அவ்வரசனுக்குக் கண்ணகியின்வரலாற்றைக் கூறியபொழுது அவனோடு கூடவுள்ளிருந்தவரும அவன்சகோதரரும துறவுபூண்டவருமாகிய இளங்கோவடிகள் அவளுடையசரிதத்தைப் பொருட்டொடர்நிலைசெய்யுளாகச்செய்தற்கு வேட்கையடையுமவண்ணஞ் செய்தவர இவரே; இதனை, சிலப்பதிகாரத்தின் பதிகத்தாலும, அந்நூலிலுள்ள உரை-வது காடுகாதையாலுமுணர்க. எட்டுத்தொகையில் நற்றிணை முதலிய நூல்களில இவராற செய்யப்படடுள்ள பாக்களுமுண்டு. இவர்பெயர், கூலவாணிகன்சாத்தனெனவும, மதுரைச்சீத்தலைச்சாத்தனெனவும், சீத்தலைச்சாத்தனெனவும, சாத்தனெனவும வழங்கும. "தண்டமிழ்ச்சாத்தன்" (பதிகம, க0) என்றும, "தண்டமிழாசான்சாத்தன" (காட்சிகாதை, சுசு) என்றும, "நன்னூற்புலவன்" (காட்சிகாதை, க0சு) என்றும சிலப்பதிகாரத்து இவர சிறபபிக்கப்பட்டிருக்கின்றனர. சங்கத்தில அரங்கேறறுவித்தற்பொருட்டுவரும் நூல்களிற் பிழைகள் காணபபடுந்தோறும ஆக்கியோர்களைக் குற்றங்கூறுதற்குத் துணியாராய் 'இந்தப்பிழைகளைக் கேட்குமபடி நேரிட்டதே' என்று இவர் மனமவருந்தித் தமதுதலையைக்குதிகொள்வரென்றும, அதனால தலை புண்பட்டுச் சீயோடிருந்தமையின், சீத்தலைச சாத்தனெனபது இவர்க்குப்பெயராயிறறென்றுங்கூறுவர; இதனை, "வள்ளுவர் முப்பாலாற், றலைக்குத்துத் தீவுசாத்தற்கு" என்று மருத்துவன் நாமோதரனர் திருக்குறளைச் சிறப்பித்துக்கூறிய செய்யுளிற் குறிபபித்திருத்தலகாண்க.

---

* கூலங்களாவன:—நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகியெனபன; கூலம் பதினெண்வகைத்தென்பர் கூத்தனூலார்.

† அவகாசக்குறைவால் இவரைப்பற்றி இன்னும் எழுதவேண்டியவற்றை இப் பொழுது எழுதக்கூடவில்லை.

# புத்தசரித்திரம்.

இந்தப் பரதகண்டத்தில், *உத்தரகோசலதேசத்தில், †உரோகிணி நதிக் கரையிலுள்ள ‡கபிலவாஸ்து என்னும் நகரத்தில், இக்ஷ்வாகு பரம்பரையிலுதித்துச் சுத்தோதனனென்று பெயர்பெற்ற ஓரரசன் இருந்தான். அவனுடையகாலம, இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முந்தியதென்பர். அவனுக்குச் சுக்கிலோதனன், அமிருதோதனன், தௌதோதனன், கனிதோதனனென்னும் நான்குசகோதரர்களும், பிரமிதை, அமிருதையென்னும் இரண்டுசகோதரிகளும் இருந்தார்கள். அவனுடையமுன்னோர், §சாகவிருக்ஷங்கள் அடர்ந்துள்ள இடத்தில் முன்னம் இருந்ததுபற்றிச் சாக்கியரென்றும், கோதமரென்பவரது மரபிலுதித்தமைபற்றிக் கௌதமரென்றுஞ்சொல்லப்படுவர. சுத்தோதனன், கோலியதேசாதிபதியாகிய அஞ்சனனென்னும் அரசனுடையமகளிரான மாயாதேவியையும் கௌதமியையும் மணஞ்செய்துகொண்டான்.

மாயாதேவி மூத்தவள் ; ||கௌதமி இளையவள்.

கௌதமி, பிரஜாவதியென்றும் மஹாப்பிரஜாவதிகௌதமியென்றும் பிரஜாவதிகௌதமியென்றுங் கூறப்படுவாள். இவ்விருவருள்ளே குண

---

* கிழக்கே லிச்சவிகளின்தேயமும் மகததேயமும், தெற்கே கோலியதேயமும், மேற்கே ஸ்ராவஸ்திதேயமும, வடக்கே மலையில்வாழ்பவர்களாகிய மங்கோலியருடையதேயமும், உத்தரகோசலத்திற்கு எல்லைகளாகக் கூறப்பட்டுள்ளன. லிச்சவிகளென்பது ஒருவகைக்குழுஉவின்பெயர். உத்தரகோசலம் சாக்கியதேசமென்றுங் கூறப்படும்.

† உரோகிணிநதி, இக்கால்த்தில் 'கொகனை' என்று வழங்குகின்றது ; இது நங்கையின் கிளைநதிகளுள் ஒன்று.

‡ 'கபிலவாஸ்து' என்பதற்குக் கபிலரென்றபெயருள்ள முனிவரொருவர்தங்கித் தவஞ்செய்த இடமென்று பொருள்கூறுவர். [வாஸ்து - இடம்.] பழையதமிழ்நூல்களில் இந்நகரப்பெயர் கபிலபுரமென்றும் கபிலையென்றும், இந்நகரையுடையநாடு மகதநாடென்றும் வழங்கப்படுகின்றன ; "கண்டார் விரும்புங் கபில புரமென்ப, தண்டு" என்பது நீலகேசித்தீராட்டி, மொக்கலவாதச்சருக்கம், ககடு - ம் பாட்டு ; 'மறந்து மழைமரு மகதநன் னாட்டுக், கொருபெருந் திலகமென் றுரவோ ருரைக்கு நங், கரவரும் பெருமைக் கபிலேயம் பதி" என்பது மணிமேகலை, உக - ம் காதை, ஈஉ - சச.

§ சாகவிருக்ஷம் - தேக்கமரம்.

|| கௌதமி மூத்தவளென்றும், மாயாதேவி இளையவளென்றும் லெபுஸ்தகங்களிற் சொல்லப்படுகிறார்கள்.

வதியாகிய மாயாதேவி பேரழகுடையளாயிருந்ததுபற்றி, அரசன் அவளிடத்து மிக்க வேட்கையுடையனாகியிருந்தான். கௌதமி அதுதெரிந்து மாயாதேவிபால் அழுக்காறுற்று மனங்கொதித்துக்கொண்டே காலங் கழித்துவந்தாள். இவ்விருவரும் நெடுங்காலம்வரையிற் புத்திரப்பேறின்றி இருந்தார்கள்.

இப்படி இருக்கையில், துஷிதலோகவாசியாகிய பிரபாபாலரென்னும் †போதிசத்துவர், உயிர்களைத் தீயவழியினின்றும்நீக்கி நலவழியிற்செலுத்துதற்கு இவ்வுலகில் அவதரிக்கவிருப்புற்று, ஒருநாள் பொன்மயமான ‡தெய்வவிமானமூர்ந்துவந்து, மாயாதேவி சுத்தோதனன் என்னும்விருவர்களவிலுங்தோன்றி, தாம் அவர்களுக்குப்புத்திரராக அவதரிக்கப்போதலைத் தனித்தனியேயுணர்த்திப் பின்பு மாயாதேவியினுடைய §வயிற்றிற் புகுந்தனர். எங்கும் நிறைந்துள்ளதெய்வம இங்ஙனஞ்செய்ததென்றும், மாயை ஒரு வட்கோணாகாரத்திரம் தன்வயிற்றிற்புகுந்ததாகக் கனவுகண்டு பின்பு கருவுற்றாளென்றுஞ் சொல்லுவதுமுண்டு. மாயாதேவி கருவுற்றனளென்பதை அவளுடைய தோள்மெலிவுமுதலியவற்றாலறிந்த அரசன்முதலியோர் அகமகிழ்ந்தனர்.

அப்பொழுது அவளுக்குப் பிராயம் நாற்பத்தைந்து. மாயாதேவி மட்டுமே கருப்பிணியாயினளென்று நமதுமொழிப்பிறழ்ச்சியினாலே கௌதமி அவளுடைய உயிரைப்போக்குதற்குப் பலவாறுமுயன்றாள்; முயன்றும் அது சிறிதும் பலிக்கவில்லை. அதன்பின்பு கௌதமி தானசெய்த குற்றத்தை நினைந்துநினைந்து மனம்நொந்து, மாயாதேவிபால அன்புகூர்ந்து ஒழுகுவாளாயினள். மற்றொருநாள், மாயாதேவியின்கனவில் பிரபாபாலர் ஓராண்குழந்தைவடிவாகத்தோன்றி அவளுக்குச் சில நலமொழிகளை உபதேசித்து மீட்டும அவள்வயிற்றிற்புகுந்தனர். அவள் அவர உபதேசித்தவாறே நியமவழியில் ஒழுகுவாளாயினள். உலகத்திற் கருவுற்றமங்கை

---

* துஷிதலோகம் - தெய்வலோகங்களாறினுள் ஈன்காவது.

† போதிசத்துவர் - புத்தராக வருதற்குரியோர், "புத்தராகு மாண்பினோர் போதிசத்துவர்களாம்" என்பது நீலகேசித்தாட்டி, மொக்கலவாதச்சருக்கம், சூத - வது செய்யுள். கௌதமபுத்தருடைய பழையபிறப்புக்களையுணர்ததும் வடநூலைப் போதிசத்துவாவதான கல்பலதையென்று கூறுதல்காண்க.

‡ 'துடிதலிமானத்தினின்றும்போந்து குயிலாலபுரத்துத்தோன்றி உலும்பினிவனத்துப்பிறந்து கபிலபுரத்துப் புத்தத்துவமபெற்றுத தர்மோபதேசம பண்ணி மஹாபோதிப்பிரதேசத்துப் பொன்றக்கெடுதல புத்தனுக்குரியது' (மொக்கலவாதச் சருக்கம, சூஅ - ம் பாட்டினை) என்று சிலவற்றை வேறுபடுத்திக்கூறுவர் நீலகேசித்தாட்டையாசிரியர்.

§ ஈசானசகாப்தம் சுஎ - ம்ஞுத்தில் மாயாதேவி கருப்பமுற்றாளென்று பர்மாதேசத்துப் பௌத்தநூல்கள் தெரிவிக்கின்றன. அவள் கருப்பமுற்றநாளுத்திரம் உத்தராட்டாதியென்பர்.

யாகளுக்கு உளவாகும் *வயாவும் வருத்தமும் அவளுக்கு இலவாயின. கருவுயிர்கருங்காலமணுகிற்று; அணுகவே அவள் இனிய பலவகைக்காட் சிகளுமமைந்த உலும்பினியென்னும் பூஞ்சோலையையடைதற்கு விரும்பித் தன்கருத்தை அரசனுக்குத்தெரிவித்தாள். அவன் அகப்பரிசாரங்களும் புறப்பரிசாரங்களுஞ்சூழ அவளுடன் அசோகலையையடைந்து,அதிலுள்ள மாளிகையொன்றிலதங்கி, அவளுள்ளத்தைக்கவரும் நறுமலர்களைக்கொ ணரும்படி தன்பரிவாரங்களுக்குக் கட்டளையிட்டான். அதைக்கேட்ட பலரும பலவகைமலருங்கொணர்ந்து காட்டி அவளை மகிழ்வித்தார்கள். பின்பு அரசன் மாயாதேவியுடன் அசோகலையிடையே மலர்ந்துவிளங்கும் அசோகமரமொன்றைச்சார்ந்து,அதனிழலில் மயில் கலாபத்தைவிரித்தாடு தலையும கலவிங்கமென்னுமபறவை அதற்கேறப்பாடுதலையும் கண்டும் கேட்டும விழிகளுக்கும செவிகளுக்கும விருந்தூட்டிக் களிக்கும் அவளை நோக்கி, "இமமரப்பூவொன்றைப பறித்துத்தா" என்று வேண்டினன். பூப்பறிக அவள் அமமரத்தின் கிளையொன்றைப்பற்றுதற்கு வலக்கையை உயர்த்தினள். முன்னம், ஒளாவரென்னுமுனிவர் தமதுதாயினது துடை யிலிருந்தும, பிருது எனனும சக்கரவாத்தி வேனராஜாவினுடைய கையி லிருந்தும, மாந்தாதா †உபோஷிகனுடைய நெற்றியிலிருந்தும், ‡ககஷீவா னென்னுமுனிவா சுதேகஷ்ணாதேவியின் கைம்மூலத்திலிருந்தும் வெளிப் பட்டதுபோலப பிரபாபாலா அப்பொழுது மாயாதேவியின் கருப்பத்தி லிருந்து சிறிதும அவளுக்கு வருத்தத்தை உண்டுபண்ணமல் மெல்ல மெல்ல அவளுடைய வலப்பக்கத்தின்வழியே ஆண்குழந்தைவடிவாக வெளியேவந்து அவள்காலருகே அசசமயத்தில் தேரருளையைப்போல பெரிதாக முளைத்துதோன்றிய நீலத்தாமரைமலரொன்றிற் சென்றி ருந்தார. அவர §பிறந்ததினமும, வைசாகசுத்தபூர்ணிமை. அக்கணமே தெய்வஅரசாகள் நாலவரும நந்தன் உபநந்தனென்ற நாகஅரசர்கள் இருவரும அங்கேவந்து, முன்பு அவதரித்துள்ள புத்தர்களுக்குத் தாம செயததுபோலச செய்யவேண்டிய பல உபசாரங்களையும செய்துவிட் டுத் தத்தம உறைவிடஞ்சென்றாகள. அப்பால், அவர், அந்நீலத்தாம

---

* வயா - வேட்கைநோய்.

† உபோஷிகன் - யுவனுசுவன்.

‡ ககஷீவானென்பவர், 'தீர்க்கதமஸ்' என்றமுனிவருடைய அனுக்கிரகத்தால் பலியென்னுமரசன்மனைவி சுதேகஷ்ணையின் ககஷ்தலிலிருந்து பிறந்தாரென்று ஸ்ரீ மஹாபாரதங் கூறுகின்றது. ககஷம - கைம்மூலம்.

§ கௌதமபுத்தர் பிறந்ததினம், ஈசானசகாப்தம், கூ.மு-ம்ஸ்ரு வைகாஸிமாதத் திற் பூர்ணிமையும விசாகநக்ஷத்திரமுங்கூடிய வெள்ளிகிழமையென்று சொலலு வா; "இருதில வேனிலி லெரிகதி ரிடபத், தொருபதின மேலு மொருமூன்று சென்றபின், மீனத் திடைநிலை மீனத் தகவயிற், போதித் தலைவனுடு பொருந்திய போழ்தத்து" என்று மணிமேகலையிலும கூறப்பட்டிருத்தல்காண்க. கரு-ம் காதை, உ - உசு.

ரைமலரினின்றும் சிங்கக்குருளைபோல் ஏழடிநடந்துபோந்து தாம் புத்தாவதாரமென்பதை ஆங்குள்ளவருக்குக் கூறினர். கூறியவுடன் வெப்பமும் தட்பமுமுள்ள *நீரோடைகளிரண்டு தனித்தனியே ஆகாயவழியே வந்து அவரை மஞ்சனஞ்செய்வித்தன. தேவர்கள் மலர்மழைபொழிந்தார்கள்; ஆகாயம மேகத்தால்மூடப்படுதலின்றித் தூய்மையுற்றுவிளங்கிற்று; விலங்குகளும் பறவைகளும் தம்முட் பகைமையின்றி அன்புற்றுப் பயின்றன; இன்னும் பற்பல †நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. தீயவழிகளுக்குத் தலைவனை மாரனென்னுந்தேவன் ஒருவனுமே துன்புற்றான். மாயாதேவி பொறையுயிர்த்தலாலுண்டாகுந்தளர்ச்சி சிறிதுமின்றி மேற்கூறிய அசோகமரத்தின்கீழேயிருந்தாள். கௌதமி அன்புகூர்ந்து அக்குழந்தையையெடுத்துச் சீராட்டிப் பாராட்டி வருவாளாயினள். குழந்தையும் அவள்பால் அன்புமிக்கது. அப்படியிருக்கையில், சிறந்தகிமித்திகனாகிய அந்தணனொருவன்வந்து, அக்குழந்தையை உற்றுநோக்கி, "ஆசிரியராக வருவோர்களுக்குரிய இலக்கணங்களெல்லாம் இவன்பால் உள்ளன; ஆதலால், இவன் துறந்து பலவிடத்துஞ்சென்று தருமோபதேசமபுரிதலே மேற்கொள்வான்; இவனால் மனிதர்கள் அடையும் ஊதியம மிகப்பல" என்று அரசனுக்குக்கூறி நன்கொடைபெற்றுச்சென்றான். மாயாதேவி, கருவுயிர்த்த ‡ஏழாநாளில் ஆனந்தாதிசயத்தால் இறந்தாள்.

"உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருகுல வடநோ யுரும
லான்றே னவ்வழித் தோன்றின ளுதலி
னீன்றே ளேழாநா ளின்னுயி ரைத்தாள்."

(விம்பசாரகதையென்னுங்காப்பியம்.)

---

* நீரூற்று ஒன்று, மாயாதேவியின் அருகே பூமியில் தோன்றி மஞ்சனஞ்செய்வித்ததெனறுங் கூறுவதுண்டு.

† "மைத்திருள் கூர்ந்த மனமாசு நீர்ப், புத்த ஞாயிறு தோன்றுங் காலைத், திங்களு ஞாயிறுந் தீங்குறு விளங்கத், தகுநா ணாண்மீன் றகைமையி னடக்கும், வானம் பொய்யாது மாநிலம் வளம்படு, மூனுடை யுயிர்க ளுறுதுயர் காணு, வளிவலங் கொட்டு மாதிரம் வளம்படு, நளியிரு முந்நீர் நலம்பல தருநஉ, கறவைகன் ஞர்த்திக் கலநிறை பொழியும், பறவை பயனறுய்த்த துறைபதி நீங்கா, விலங்கு மக்களும் வெளுஉப்பகை நீங்குஉ, கலங்களுர் நரகரும் பேயுங் கைவிடுங், கூனுங் குறளு மூமுஞ் செவிடு, மாவு மருளு மன்னுயிர் பெறுஉ" என்று புத்தரவதரிக்குங்காலத்தில உலகத்துண்டாகும் நிமித்தவிசேடங்களே மணிமேகலையில் விளங்கக் கூறியிருத்தல காண்க; கஉ - ம காதை, அடி - கூஅ.

‡ "புத்தன்றாய் நண்டிப்பி வாழை புனமூங்கில், கத்தும் விரியன் கடுஞ்சினத்தி - இத்தனையும், வேலாலும் வாளாலு மன்றியே தாங்கொண்ட, சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு" என்பது உலோகவடன மென்னுநூல்; இச்செய்யுள், நீலகேசிதிரட்டு மாயிற் கண்டது. 'இவன் பிறக்கின்ற காலத்து மாதாவினது வலமருங்குலாற் பிறந்தான்; அவளும் ஆறுநாட் குற்றுயிரோடு கிடந்து ஏழாநாள் இறந்தாள். இது புத்தமாதாக்கள் யாவர்க்கும் ஒக்கும்' என்பது நீலகேசித்திரட்டு, குண்டலகேசிவாதச் சருக்கம், சக - ம் பாட்டுரை.

அவளுடம்பைத்தகித்து அவளுடைய என்பையும் சாம்பரையும் ஒரு குடத்தில் நிறைத்து, அவளிருந்துவந்த மாளிகையை *அஸ்தமயகிரியிற் பெயர்த்துக்கட்டி அதில் அக்குடத்தை அடக்கஞ்செய்தார்கள். அவளுடைய பெருமையைப் புலப்படுத்தற்பொருட்டு நூற்றறுபது அடி உயரமுள்ள ஆலயமொன்று அம்மாளிகையினருகே எடுப்பிக்கப்பட்டதன்றி மேற்கூறிய அசோகமரமும் அவ்வாலயத்தின் எதிரிலே பெயர்த்து நடப்பட்டது.

கௌதமி குழந்தையை எடுத்து வளர்த்துவந்தாள்.

ஒருநாள், சுத்தோதனன் குழந்தையையெடுத்துக்கொண்டு கோயில் சென்று பண்டனதேவரைத் தரிசித்தபொழுது, அத்தேவர் தமதுபடிமத்திலிருந்து வெளிப்பட்டு, அக்குழந்தையின்பெருமைகளை அவனுக்கு விரித்துக்கூறினர். பின்பு அக்குழந்தைக்கு †ஸித்தார்த்தனென்று நாமகரணஞ் செய்தார்கள்; செய்தும் எல்லாரும் கௌதமனென்னும் குடிப்பெயராலேயே அழைத்துவந்தார்கள்.

கௌதமர், உரிய காலத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்று ‡மித்திரரென்றுபெயருள்ள ஒரு பிராஹ்மணரிடம் பலகலைகளையும் முறையாகக் கற்றுவந்தார். 'வினையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப, ஜீவகாருணியமுதலிய நற்குணங்கள் பலவும் அவர்பால் இளம பருவந்தொடங்கியே நாடோறும வளராசசியுற்று விளங்கின. கற்கவேண்டிய கலைகள எலலாவற்றையும அவர் யாதிகாருவருத்தமுமின்றிக் கறறுவந்தார. அது தெரிநத சுத்தோதனன் பெருமகிழ்சியடைநதான். அவரோடி கற்றுவநத பார்ப்பனபபாங்கன் உதாயியென்பவன்.

அவ்வளவில் அஸிதரென்னு முனிவர்வநது கௌதமகைக்கண்டு பரிபூர்ண புத்தாகளுக்குரிய §ஸஹஸ்ரார சக்கரரேகை முதலிய ஸாமுத்திரிகலக்ஷணங்கள் பலவும் அவர்பால் உளவாதலியறிந்து வியநது, "மானிடராகிய மரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறையே மலரு மலரிககுழநதை; உமது குலப்பெருமையை என்னவென்று சொலலுவேன்; ன் தூறவுபூண்டு உலோக ரக்ஷகனை இருப்பான்" என்று அரசனுக்

* அஸ்தமயகிரியென்பது அங்கேயுள்ள ஒரு மலையின் பெயர்.

† வித்தார்த்தன் (தநதையின்) விருப்பத்தை நிறைவேற்றியவன். ஸர்வார்த்த வித்தியென்று நாமகரணஞ்செய்ததாகச் சொல்லுவதுமுண்டு. அவருக்கு இன்னும் உள்ளனவாகிய பெயர்கள் பல.

‡ இப்பெயர், விசுவாமித்திரரென்றும் சில புத்தகங்களிற் காணப்படுகின்றது.

§ ஸஹஸ்ராரசக்கரரேகை புத்தருடைய பாதத்திலிருந்த நூற்று வித்தேடமென்பர், இதுபற்றியே அவனை, "ஆயிரவாரத்தாழியன்" என்னூர் மணிமேகலையிலும்; ஆ - ம் காதை, 60ச.

குக் கூறினர். அரசன், "துறப்பது எப்பொழுதோ?" என்றான். அவர் "அஃது இப்பொழுது அறிவிக்கற்பாலதன்று" என்று சொல்லித் தம மிடஞ்சென்றனர். செல்லவே அரசன் கௌதமர் துறப்பாரென்பதை முன்பு ஒரு நிமித்திகனும் அறிந்தோனுதலால், அவருடைய உள்ளத்தை உலகவழியிற் புகுத்தற்பொருட்டுப் பலவாறு முயன்றுவருதலோடு உலக வாழ்வில் அவருக்கு ஒருபொழுதும் யாதொரு வெறுப்புந் தோற்றமு மிருக்கும்வண்ணஞ்செய்வித்தும வருதான்.

அந்நாட்களிலே ஒருநாள் தோழர்களுள் ஒருவனுகிய தேவதத்த னென்பவன் தான் ஓரிடத்தில் எய்துவீழ்த்திய *அன்னப்பறவையைக் கௌதமர் அளிசுரந்தெடுத்து அதன்மேலே தைத்திருந்த அமபைப் பிடுங்கி யெறிந்து அப்பறவையைத் தைவந்து பாதுகாத்துவிடுத்தமைபற்றிக் கோபமுற்றுப் பகைமைகொண்டு அவரை நீங்கித் தனக்கமைந்த நண்பர்சிலருடன் வேற்றிடஞ்சென்றான்.

சிலநாளைக்குப்பின் கௌதமரைச சுத்தோதனன் தன்னுடைய இள வரசாக நியமித்து அதற்குரிய சிறப்பீடிருகுமபடி செய்வித்தான். அப்பொழுது அவருக்குப்பிராயம் பதினேழது. இளவரசாக இருந்தே சிலவருடங்களைப்போக்கினர்.

பின்பு, அரசன், தன் மைத்துனனுகிய சுப்பிரபுத்தனுடையமகள் யசோதரையை அவருக்கு †மணம்புரிவித்தான்; அப்பொழுது அவருக் குப்பிராயம் பத்தென்பது.

அப்பால் கௌதமர் யசோதரைபாற்காதல்கூர்ந்து வேறொன்றையும மறியாது அவள்போகத்திலேயே சிலகாலம அழுந்திகிடந்தார். அது தெரிந்த உறவினர் கவலையுற்று, "மேன்மேலும அறிந்துகொள்ளவேண் டிய படைக்கலப்பயிற்சி முதலியவை கௌதமனுக்கு இல்லையாயினவே. எப்பொழுதேனும் யுத்தம் நேருமாயின் அக்காலத்து இவன் யாதுசெய் வான்?" என்று அரசனுக்குச்சொன்னார்கள். அதைத்தெரிந்துகொண்ட கௌதமர், அவ்வுறவினர் பலரையும வருவித்து, தாம் அவற்றிலவல்லரா தலை அரசன்முன்பு வெளிப்படுத்தி, அவ்வுறவினரால் நன்கு மதிக்கப்பட் டார். இச்செய்தி விவாகத்திற்குமுன்னே நடந்ததென்றும் இதைக் கண்டுவியந்த சுப்பிரபுத்தன் தன்மகளைக் கௌதமருக்கு மணமபுரிவித்தா னென்றுங்கூறுவதுண்டு. 'நிமித்திகனும் அஸிதருஷியும் முன்புகூறிய வாறு கௌதமன் துறவுபூண்பானேல்' என்று கவலையுற்ற அரசன், ஒரு

* பருந்தென்று கூறுவதுமுண்டு.

† காட்டப்பட்ட மங்கையர் பலருள்ளே யசோதரை கௌதமரால் தெரிந்தெ டுத்து விவாகஞ்செய்துகொள்ளப்பட்டாளென்றுஞ் சொல்லுவர்.

தோட்டத்தில் வேனிற்காலம், மழைக்காலம், பனிக்காலம் ஆகிய மூ மூன்றிலும் மு றையே தங்கிப் போகம் நுகர்தற்குத் தகுதியாக மூன்று மாளிகைகள் கட்டுவித்து, அவற்றின் நாற்புறவழிகளிலும் வலிய நிலைகளும் கதவுகளும் அமைபித்து, அத்தோட்டத்தைச் சூழ உயர்ந்த மதிலையெழுப்பி, இரவும் பகலும் அம்மதிலைச் சூழ்ந்து போர்வீரர் காக்கவும், அருவருக்கத்தக்க பொருள்களுள் யாதொன்றும் கண்ணுக்குப் புலப்படாமலிருக்கவும் புரிவித்து, கௌதமரை அங்கே தங்கி இன்புறுகும்வண்ணஞ் செய்வித்தான். அரசன் இவ்வாறு மேன்மேலுஞ் செய்துவந்த பெருமுற்சிகளாற பிணிமூபுபுச சாக்காடென்பவைகள் மனிதர்களுக்கு உண்டென்ற ஞாபகம் அநகாலமவரையிற் கௌதமருக்குச் சிறிதும உண்டாகவேயில்லை.

அப்படியிருக்கையில், ஒருநாள் உலும்பினிவனத்திலுள்ள அரண்மனையில வந்து தன்னைக்காணுமபடி அரசன் அவருக்குத் திருமுகமனுப்பினன். அதனைபபெற்று உடனே தந்தையைக்காணுதற்கு நினைந்து தாமிருக்குந தோட்டத்தின் கீழைவாயில்வழியே சிவிகையூர்ந்துசெல்லுங்கௌதமர, தபமெதிரேவந்த மிக்க பிணியாளரொருவனைக்கண்டு எல்லாரும இப்படியே பிணிவாய்ப்பட்டுத் துன்புறுவாரென்பதையும, மற்றொருநாள் அங்ஙனஞ் செல்லுகையில மிகத்தளர்ந்து வருந்திக்கொண்டேவந்த முதியோன்ஒருவனை வழியிடையே கண்ணுறறு எல்லாரும இங்ஙனம் மூபபுறறுவருந்துவாரென்பதையும, வேறொருநாள் குதிரையேறி மேலேவாயில்வழியே செலலுகையில அங்கே அழுகிக்கிடந்த பிணமொன்றைக்கண்டு எல்லாரும் இறக்கத்தக்குரியாரென்பதையும் உடன்வந்த குதிரைக்காரனுகிய *சந்தகனால் அறிந்தறிந்து, "அநித்தியமாகிய உலக வாழ்வில அருவருபபுறறு இபபிணிமூப்புச சாக்காட்டிற்குக் காரணமாகிய பிறபபிற்கு இடங்கொடாத நல்வழியையறிந்து நாமுமுய்ந்து உலகத்தையுமஉய்வித்தல எபபொழுதுகூடுமோவென்று கவலையடைந்து அதைக்குறித்து ஆலோசித்துக்கொண்டே மீண்டுமீண்டு வருவாராயினர்.

† சுத்தாவாஸதேவர்களுளொருவர் கௌதமருக்கு நிலையாமையை அறிவுறுத்தற்பொருட்டு முதியோன்வடிவமுதலிய மூன்றுவடிவங்களாகத் தோற்றினரென்று கூறுவர்.

இக்காட்சிகளால் கௌதமருடைய மனம் வேறுபட்டிருந்தலைக் கேள்வியுற்ற அரசனுடைய கட்டளையால் உதாயியுடன் அழகிய மங்கைபர் பலர்வந்து தம்வயமாக்க முயன்றும், ஒத்த தோழர்களாகிய மந்திரி

* அறிந்தது பாங்கனுகிய உதாயியென்பவனுலென்றுங் கூறுவதுண்டு.

† சுத்தாவாஸதேவரென்பார் பிரமகணங்களுள் ஒருவகையார்.

குமாரர்கள் பலர்வந்து சிற்றின்பத்தைப்பற்றிப் பலவகையாகப் போதித்தும் கௌதமருடைய உள்ளம் சிறிதும வேறுபடவில்லை; வேறுபடுத்தத் துணிந்துவந்தவர்கள், கௌதமருடைய அழகிய மேனியையும், கம்பீரமான தோற்றத்தையும், சாந்தமான பார்வையையும, மற்றுமுள்ள விசேடங்களையுங்கண்டு அஞ்சிச சென்றார்கள்.

பின்பு ஒருநாள் கௌதமர் தேரேறித் தோட்டம்பார்க்கப்போன பொழுது வழியின் இருபுறத்துமுள்ள நன்செய்களிலும் புன்செய்களிலும உழவர்முதலியோரும வருத்தமுதலியவைகளும் உழைத்தலையும, அதனால் அவ்வுயிர்களடையும வருத்தங்களையுங்கண்டு மனமவருந்தி ஒரு நாவன்மரத்தின்கீழேதங்கிக கண்ணீரழுதுகொண்டு, துக்கமாகிய பிறப்புப் பிணிமூப்பிறப்புக்களையும, அவற்றிற்குரியகாரணங்களையும, அவற்றைமாற்றும வழிகளையும் மெல்ல ஆராய்ந்துகொண்டிருந்தார்; அங்ஙனமிருக்கும்பொழுது, முன்பு தாம பிணியாளனவடிவங்கொண்டு தோன்றி யாவரும் பிணிவாய்ப்படுதற்குரியரெனபதையும், முதியவன்வடிவங் கொண்டுதோன்றி யாவரும் மூதறற்குரியரென்பதையும, பிணவடிவங் கொண்டுதோன்றி யாவரும் இறத்தற்குரியரென்பதையும புலப்படுத்திய சுத்தாவாஸதேவர், துறவறநெறியையும கௌதமருக்கு அறிவுறுத்த நினைந்து துவராடையணிந்த ஒரு *துறவியாகிவந்து "சித்தார்த்த" என்று அழைக்க, அவர் விழித்துப்பார்த்து, "நீர் யார்" என்றார். அவர் "நான் ஒரு †ஸ்ரமணன்; துக்கத்தை நினைந்து நினைந்து என்மனம் இடைவிடாது வருந்தாநின்றது. இதற்குக்காரணம் நீங்கி என்றுமழியாததும, ஆதியந்தமில்லாததும, நட்புப்பகைமையற்றதும, ஏகாந்தமானதும், ஆகாந்தமயமாகவுள்ளதுமான ஒருநிலையையடைதற்கு அவாவுகின்றது. ஆதலால், ஊர்ப்புறத்தேதங்கி ஸமஃபுலன்களையுமடக்கிச சமாதியிலிருந்துகொண்டு உயிரைப்பாதுகாத்தற்கு வேண்டியவளவே உணவை இரந்து உண்டு வாழும் பிக்ஷுக்களினிலைமையை விழைந்தேன்" என்று கூறி அவர்கள்பெருமையையும எடுத்துச சொல்லிவிட்டுச சென்றனர்; அதுகேட்டவுடனே துறவுக்குத்துணிந்த கௌதமர் அவ்விடத்திலிருந்தும எழுந்து அரண்மனைசென்று, தாம் துறவுபூண இசைத்திருத்தலைத் தந்தைக்குத் தெரிவித்தார்; அதுகேட்டசுத்தோதனன், மனங்கலங்கிக் கண்ணீர்பெருக, "ஐய, அதற்குக்காலம் இஃதன்று; எம்மைப்பாதுகாத்து நெடுங்காலம் அரசாண்டபின்னரே அதுவிரும்பத்தக்கது" என்ன,

---

* பிணியாளன்முதற்றமுதல் இத்துறவியின் தோற்றமிறுதியாகிய நான்கையும் ஒரேநாளில் கௌதமர் கண்டனரென்று கூறுவதுமுண்டு.

† ஸ்ரமணனென்பதற்குத் தன்புற்றுத் தவஞ்செய்பவனென்றுபொருள்; இச்சொல் ஸ்ரீவால்மீகராமாயணத்திலும் வந்துள்ளது.

கௌதமர், "பிறப்புப்பிணிமூப்புசாக்காடாகிய இத்துன்பங்களை ஒழித்தற்குரியவழியை அறிந்துகொண்டாலன்றி இங்கு நில்லேன்" என்று உறுதியாகக் கூறிவிடுத்தமது உறைவிடமடைந்தார்; அரசன் அவருடைய மனநிலைமை அவ்வாறு திருப்பிக்கூடுமாறு ஆடல்பாடலகளில் வல்ல மகளிரைப் பலவும் அவ்வாறு அனுப்பினன்; அவர்களால்வந்தது இயன்றவளவிலே முயன்றும் அம்முயற்சி சிறிதும் பயன்படவில்லை. அவர்களுடைய அழகியவடிவங்கள் வைராகியமிகுந்த கௌதமருக்கு அருவருக்கத்தக்கனவாகத் தோற்றின; இப்படியிருக்கையில், *ஒருநாள் ஆறுசென்று நீராடிய கௌதமர் அரண்மனைசெலலுதற்குத் தேரேறுகையில், ஒருவன் வந்து, †"உமக்கு மகனபிறந்தான்" எனறனன். அதுகேட்ட கௌதமர் "பந்தந்தினமேறு பந்தமுண்டாயிற்றே; இத்தனபகடலிலக்கடப்பது எப்படி?" எனறு கவலியுறறுகொண்டே தேரூர்ந்து அரண்மனைக்குச் சென்றாராயினர்; அங்ஙனஞ்சென்றதையில் அவருடைய தேருக்கு முன்னும் பின்னும் பலவாத்தியங்கள் முழங்கின; நகரத்தாரபலரும் 'நமமர சனுக்குப் பௌத்தினிறந்தான்' என்று மகிழ்ந்து புகழ்ந்துகொண்டே வந்தாரகள்; ஆடல்பாடலகள் நிகழ்ந்தன; அவற்றுள் யாதொன்றும் அவாமனத்திற்கு இனபந்தரவிலலை; அவருடைய உறவினளாகிய மங்கையொருத்தி, "இக்குழந்தையினதந்தை பாகியவான்; தாயும் பாக்கியவதி; மனனியும் பாகியவதி" என்றபாடிய பாட்டொன்றும் துக்கநிவாரணத்திற்குரியவுபாயமாகிலென்று இடைவிடாமற் சிந்தித்துக்கொண்டே செலலுகிற அவருக்கு அப்பொழுது கண்ணிமித்தமாகவிருந்த இன்பந்தந்தது; அவர் அந்த ‡உபஜீவனத்திற்காக அவளபால கன்னிபாராட்டிவாராய்ந்தமது கழுத்திலிருந்த விலையுயர்ந்ததான முத்தமாலையை அவளுக்கு நனகொடையாகக் கொடுத்தார்; அதைப பெற்றுக்கொண்டவுடன், அமமங்கை, கௌதமர் தனனிடத்திலுளள விருப்பத்தாலளித்தாரென்றும் பிறகாலத்தில் தான அவருடைய முதன்மையுள்ளமனனியாக ஆதல்கூடுமென்னும் மனோராச்சியஞ் செய்வளாயினள்.

அப்பால அவர் அரண்மனைசென்று அங்கேநிகழ்ந்த நாடகமுதலிய காட்சிகளுள் ஒன்றையும் பாராட்டாமலே அன்றிரவின்முற்பாகத்தில் அயர்வு நித்திரைசெய்து களைப்பில திடீரென்றுவிழித்தவுடனெழுந்து, தான் உலகியலிருக்குமபொழுது தனவிடு தீபமறறிகொண்டதென்

---

* இக்காலம், கௌதமர் நான்காவது தோற்றங்கண்ட தினத்தின் பிற்பகலென் றுரைப்பாருமுண்டு.

† "உமக்குமகன்பிறந்தான்" என்பதைக்கேட்ட கௌதமர், அம்மகன் தமது நாட்டிலுள்ள நிகமங்களை விழுங்கவந்த ராகுவெனறு சொன்னரென்றும், அதனால் அப்பிறப்புக்கு ராகுலனென்று பின்பு பெயரிடப்பட்டதென்றுஞ் சொல்லுவர்.

‡ உபஜீ - உதவியானசெல.

றதை அறிந்தவொருவன் அவ்வாபத்தினின்று நீங்குவதற்கு எவ்வளவு பரபரப்புடனெழுவானோ அவ்வாறேயெழுந்து, எல்லாவறையுங்குற நது வேற்றிடஞ்செல்லுதற்குத் துணிந்தார்; துணிந்தபொழுது, மேற் கூறிய சுத்தாவாலேதவராற் கதவுகள் திறந்துவைக்கப்பட்டன; கௌத மர், தம்மைசூழ்ந்து தாறுமாறுகச சயனித்துக்கொண்டிருந்த மங்கை யர்களினகூட்டத்தினினும்நீங்கிப் புறத்தேபோந்து அங்கே விழித்துக் கொண்டிருந்த சந்தகனேயழைத்துத் தமமுடைய கண்டகமென்னும் பெ யருள்ளகுதிரையை விரைவிறகொண்டுவருமபடி அவனுக்குக கடடளை யிடடார்; சந்தகன், மஹாராஜாவின் அனுமதியின்றி இளவரசன்கட்டளை இவ்விரவில நிறைவேறறலாமோவென்று சிறிதுபொழுது சிந்தித் துக்கொண்டேநின்று பின்பு மேற்கூறிய தேவருடைய அருளால் துணி வுண்டாகப்பெற்றுக குதிரைகொணரச சென்றான்; அவன் சென்றவுடன், எல்லாவற்றையுங துறத்தற்குத்துணிந்த கௌதமர், இல்வாழ்க்கையி லுள்ள வலியபறறை அபபொழுதே முற்றுங்துறக்கலாற்றாமல், தமது குழந்தையைக கையிலெடுத்துபபார்ததற்கு நினைந்து சென்று, அந்தப் புரத்திற குழந்தையுடன் யசோதரை சயனித்திருக்கும அறையின்கதவை மெலலத்திறநது, அங்கே மலரணைமேலே யசோதரையால் அணைபபுண்டு அவளோடுதியலுங் குழந்தையைத் தீபவொளியாற் கண்டு, "இக்குழந் தையையெடுத்தால இவள் விழித்துக்கொள்வாள; விழிப்பின் அது நம்முடைய செலவிற்குப பெருந்தடையாகுமே" என்று நினைந்து, இன னது செய்கிறதென்று தெரியாமல மயங்கி அவ்விருவரையும காதலோடு பார்த்துக்கொண்டே வாயிற்படியிற சிறிதுபொழுது நின்றார்; நின்றவர், தடுமாறிகொண்டிருந்தமனம பின்பு தெளியபபெறறு, "நாம இவளுக குமு இவனுக்குமு பிற்காலத்தில் ஞானசரியனைகவும ஆதலகூடும" என்று எண்ணித் துணிந்து புறபபட்டார். அவர அங்ஙனம வெளிபபட்ட தினம் பூர்ணிமையென்பர். இங்ஙனம அவர் வெளிப்பட்டவளவிற சந் தகன் குதிரையைக் கொணர்ந்து நிறுத்தினன். அவர அதில ஏறிச செலுத்தியபொழுது நான்கு தேவர்கள், அதன் குளமபுகளின் ஓசைகளை ஒருவருடைய செவிக்குமு புலபபடாவண்ணம் அடக்கிகொண்டு உடன் சென்றனர். இளவரசராகிய கௌதமர், "உலகத்திற் பிறபபுப் பிணிமூப புசசாகளாடாகிய துன்பங்களேயெலலாம முறறுமு போகுறகுரிய வழியை அறிந்தாலன்றி மீளேன்" எனறு உள்ளதில் உறுதிகொண்டு

*செல்வராயினர்.

அப்பொழுது அவருக்குப பிராயம இருபத்தெந்தாவது.

---

*கௌதமர் இங்ஙனஞ் சென்றகாலம், ஈசான சகாப்தத்தில் கூ-ம ஆண்டுமென்றும், வாரம் வெள்ளிக்கிழமையென்றும் சொல்லுவர்.

கௌதமர், அதத்துறவுபூண்டு எல்லாவற்றிலும் அருவருப்புற்று, தந்தை முதலியோரையும், அரண்மனையையும், பெருஞ்செல்வத்தையும், மனைவியையும், பிள்ளையையும் *பிரிந்துசென்றதை மஹாபிநிஷ்கிரமண மென்று கூறுவர்.

பாவத்திற்குக்காரணமான இச்சைகளை உண்டாக்குந்தெய்வமாகிய மாரனென்பவன், இப்படி அரண்மனையைவிட்டுப் புறப்பட்ட கௌதமரைத் தொடர்ந்துவந்து, "நீர் துறவன்மின்; துறவாதொழியின், இன்று முதல் ஏழாநாளுக்குள் நான்கு மஹாத்துவீபங்களுக்கும் உம்மை அரசராகச் செய்வேன்" எனத்தெரிவித்துத் தடுத்தான். அவர் அத்தடையையதியாமற் சென்றார்; செல்லவே மாரன் வெலலுதற்குரிய சமயம் தனக்கு எப்பொழுதுவாய்க்குமோவென்று நிழல்போலவே அவரைத்தொடர்ந்து செல்வானாயினன்.

சென்ற கௌதமர், அவ்விரவில் நாகர்களுந் தேவர்களும் தமக்கு இயல்பாகவுள்ள ஒளியால் வழிகாட்டிக்கொண்டுசெல்ல, ஒருநிமிஷமேனும் இடையே தங்காமல், கலாசிரியர் சங்கேதகிடைப்பாரென்ற கவலையோடுசென்று கோலியதேசத்துக்கு அப்பாலுள்ள அநோமநதிக்கரையைச் சூரியோதயத்திற்குமுன்னமே அடைந்தார். அடைதலும் கண்டகனென்னுங்குதிரை அக்கு நின்றுவிட்டது. அப்போது அங்கேயுள்ள பாரகவரென்னும் தாபதருடைய தவப்பள்ளியையும் அதில் வைக்கப்படடுள்ள பிக்ஷுப்பாத்திரங்கள் பல்வகையுங்கண்டு, கபிலவாஸ்துவிலிருந்து புலிப்பினை மூன்றுயோசனையளவு விரைந்துவந்ததான குதிரை அததபஸ்பள்ளியை அணுகியவுடன் தானுமேவே நின்றுவிட்டதைத் துறவிருமபிவந்த தமகுநன்னிமித்தமாகக்கொண்டு களிப்புற்றார். பின்பு அவர் தமமுடன்வந்த சந்தகனைநோக்கி, "ஆடையவேண்டுமென்று பலநாளாக நினைந்துக்கொண்டேயிருந்தவிடத்தை இப்பொழுது அடைந்தேன்; நமமுறவு இன்றோடு முடிவுபெற்றது" என்றுகூறித தமதுகுழற்றிலிருந்த விஷயபாரத்தைக்கண்டகரத்தைக்கழறி அவனுக்குநன்கொடையாக இனசொலலிலாடு கொடுத்தார். கொடுத்தவர் பின்பு தமது முடிமணியையெடுத்து அவன்கையிலவைத்து, "இதனை நான் அன்புடன் கொடுத்தகாரசசொலலி அரசனுக்குக்கொடு; என்னிடத்திலுள்ள காதலை நான் முறறும மறகசசொனனதாகத் தெரிவி; இலவாழ்க்கையின் வழியாகத் துக்கசகடலை நீந்துதற்குரியதெப்பம எனக்குக் கிடையாமையினாலேயே நான் பிரிந்தேனென்று சொன்னதாகவும விண்ணப்பஞ்செய்" என்று கூறினார்; அதனைக்கேட்டு மனமகிழாதிய சந்தகன், "இப்பொழுது துறத்

* திரிபிடகத்தில் இச்செய்தியைக்கூறும் பாகதநூற்கு மஹாபிநிஷ்கிரமண ஸூத்ரமென்றுபெயர். மஹாபிநிஷ்கிரமணம் - பெருந்துறவு.

தல் தக்கதன்று'' என்று பலவகையாக மறுத்து, அதற்கு அவரிணங்காததுபற்றிப் பின்பு "நானும உடன்வருவேன்" என்றான். கௌதமர அதற்கு இணங்காமற் குதிரையின் முதுகைத்தடவித் தட்டிக்கொடுத்து அதற்கு இனியவார்த்தைகளைச சொல்லிவிட்டு அதைக்கொண்டு செல்லுமபடி வற்புறுத்திக்கூறி அவனுக்கு விடைகொடுத்தார.

அதுகேட்டுத்தபின் கௌதமர அரசமரத்தியின்மனைவிற்றங்கி உடைவாளால் தமது மயிர்முடியை அறுத்தெறிந்துவிட்டு அங்குச சிலதுபொழுது உண்மையை *ஆராய்ந்துகொண்டேயிருந்தார். இதன சந்தகனுக்குவிடையளித்தற்குமுன்பு நிகழ்ந்ததாகக கூறுவதுமுண்டு.

அங்ஙனம் ஆராய்ந்துகொண்டிருக்கையில், மேற்கூறிய சுத்தாவாஸதேவர் துவராடையுடுத்து விலலுமம அமபும் தாங்கிய ஒரு †வேடனைத் தோன்ற, கௌதமர தமமுடையபடாடையை அவ்வேடனுக்குக்கொடுத்துவிட்டு அவனுடைய துவராடையைத தாம வாங்கியுடுத்திருகொணடு உண்மையை அறிவுறுத்தும் பெரியோராய்த் தெரிபவரென்ன.

கௌதமரிடத்தில் விடைபெற்று, அவ சேகரந்தை அறுத்தெறிந்ததைப்பார்த்துக்கொண்டேநின்று, அவர கடலையை மறுதலைகஞ்சிவரு நதிசென்ற சுதசகன் கண்ணீர்பெருக்க காலையாகது மனமழுங்கிக் குதிரையுடன் நகாக்கு மீண்டான.

பெரியோராய்த் தேடிச்சென்ற கௌதமர், காற்று சுத்தமீர் மலர்கள் இளங்குருத்துக்கள் காய்கனி கள் சிழங்குகள அகிய் இவைபுள ஏதாவதொன்றையேனும எடுத்த பிரசையையேனும உடை நீரிலேனும் நெருப்பிலேனும இனனும பலவாறுமவொழுகியும அருந்தவம புரிந்துவரும் முனிவாகள்பலரை வழியிடையிறகண்டு அவாகளோடு அளவளாவி, "துகநீகக்கத்திற்குரியவழி யாது?" எனறு அவாகளைகேட்டு, அவாகள்கூறியவைகள் தமமனதிற்குப பொருநதாமையால அவற்றை மறுத்துரைத்து, அவ்விடத்தைநீங்கி அவாகளுடைய சொற்படி, சூரியாஸ்தமயத்திற்குபபின், மகததேசத்துள்ள ‡பாளைரபதியை சார்ந்து, அம்மலைக்குகையில் தவஞசெய்துகொண்டிருகுகும §அராளராம

---

* இவர்தங்கி ஆராய்ந்துகொண்டிருந்ததற்கு அறிகுறியாக அங்கே பிற்காலத்தாரால் மேல்வரிவுளள மணடபமொன்று கட்டப்பட்டதென்றுகூறுவர்.

† வேடனைக்கூறிய இவ்விடத்தில் ஏழையாகிய வழிப்போக்கனெருவனைச் சொல்லுவதுமுண்டு.

‡ வெண்ணிறமுடைமையால், இம்மலை இப்பெயர்பெற்றது, இக்காரணம்பற்றிச் சுவேதகிரியென்றுங் கூறப்படும்.

§ இப்பெயர் ஆரடருத்திரராமர், ஆரடராமர், அராளகாலராமரெனப் பலவாறுகக் காணப்படுகின்றது.

முனிவனாக்கண்டு வணங்கி "பிறப்புமுதலிய துக்கங்களையொழித்தற்குரிய உபாயத்தை அடியேனுக்கு உரைத்தருள்க." என்று விண்ணப்பித்தனர். அராளராம்போகமாக்கத்தை உபதேசிக்க, கௌதமர் அநெஞ்சையைக் கடைப்பிடித்து ஒழுகுவாராயினர்.

கபிலவஸ்துவில் முன்பு தெய்வீகமாகத் திறக்கப்பட்டுக் கௌதமருக்கு வழிவைக்கொடுத்த அரண்மனைகதவுகளெல்லாம் மீட்டும் மூடின படியேயிருந்தன; அவைகள அவ்வாறிருக்கவும், எல்லோரும், கௌதமரும் முன்னிலையும் குதிரைக்காரனுமில்லாமையையறிந்து, திகைத்து மருண்டு எங்கும் தேடுவாராயினர்.

அப்பொழுது, குதிரையுடன் அழுதுகொண்டேசென்ற சந்தகன் நிகழ்ந்தவற்றை அவர்களுக்குத் தெரிவித்தான். அவற்றைகேட்டவர் எல்லோரும் துக்கசாகரத்தில் அழுந்தினார்கள்.

தன்மகன் துறந்தானென்பதை அறிந்த மஹாப்பிரஜாவதிகௌதமி, பெருங்காற்றால் தாக்குண்ட இளவாழைபோலக் கைகால் முதலிய அவயவங்களெல்லாம் சோர்ந்து சிறிதுபொழுது கீழேவிழுந்துகிடந்து பின்பு ஒருவாறு உணர்ச்சியுற்று எழுந்து மிகவும் பெருமூச்செறிந்து கொண்டு, "அந்தோ! இக்ஷ்வாகுகுலசிகாமணியே! இருண்டு வலப்புறத் தேசஞ்சுழன்று தூய்மையையுடையதாய் அழகுதாகிவிளங்கிக் கடவுண்ணுதற்பொருட்டு பூமியைத்தொடுமே முடிந்தபொழுது கீழிடமேபான்று திரண்டுமே பளபளப்பாகவிருந்த அந்தகருமி சுருக்கப்பட்டுப் புலிமுகிடக்கின்றதே! ஆ! அந்தத் திரண்டதோள்களை, அந்தச் சிங்கநடை, விடையேறுவினை நிகர்த்தபோன்ற அந்தகண்கள், பளபளப்பான பொன்போல் ஒளியையுடைய விளங்கும அந்தந்தேகம, அந்தச சதுரமாடு முதலியவற்றையுடையாய், நீ துனபத்திற்கிடமாகிய காட்டிற்கு சென்றனையே! தூய்மையிலும, நிறைதலிலும மென்மையிலும அலிமலர்போன்ற அப்பாதங்கள் கறுகளாலும முட்களாலும கிழிக்கப்படுகின்றனவே! ஆ! அப்பாதங்கள் அத்துன்பத்தை எவ்வாறு பொறுக்கும? காவலுள்ள இராசமாளிகையிற பிறந்து இனிது வளர்க்கப்பெற்று மிகவு மெலலிய ஆண்டையு டுத்த சிறந்த நறுநீரில் நானமாடி இனிய அறுகவையையுடைய நால்வகையடிசிலுமுண்டு விளங்கிய நீ இப்படிபொழுது தாகத்தி விறைக்கசெய்யும குளிர்காற்றில அடிபட்டுப் பட்டினியுற்றுப் பனிக்குள்ளாகி வருந்துகின்றனையே! மிக்க வெயபக்காலத்திலும் மிக்க தட்பக்காலத்திலும இவைப் பாறுமிடம் உனக்கு அங்கே எவ்வாறு கிடைக்கும?" என்று தன்பிள்ளையை நினைந்து நினைந்து பிரலாபித்து விமமிவிமமி ஆற்றெணுதவ்வளாய் மீண்டும நிலத்திலேவிழுந்து கிடந்தாள். ஏவல்மகளிர் அவளையெடுத்துத் தாங்கிக் கண்ணீர் துடைத்துத் தேற்றுவாராயினர்.

யசோதை, தனது உயிர்த்துணைவர் துறந்தாரென்பதுகேட்டுக் கல
ங்கி நெஞ்சுருகிக் கல்லும மரமுமிரங்குமபடி வேய்ங்குழல் அழுமாறு
போல அழுது அவருடைய அவயவங்களை முன்னிலைப்படுத்திக்கொண்டு,
"தாமரைமலர்போலுந் திருவடிகளே! உமக்கு யான்செய்தகுற்றம் யாது?
முன்பு தனிசாகி என்னைசசுமந்து ஆளுந்தன்மையையுடைய துடைகளே!
அளிக்கத்தக்க இப்பெண்ணுயிர்தான் அளியாககால் வருந்துமென்று
நீங்கள் நினையாமற பிரிந்தீர; இது தருமோ? எனகரு மாலையும் திகழு
மேருதிக குங்குமமெழுதிப் பூரதாதை அளகதகிலை அப்பிச ஓவரது
அனபுற்றிருந்த விரலகளே' என்னைப் பாதுகாகக்கதக்க நீங்களும அவ
ரெண்ணியதையே எண்ணினீர; இஃது அறமோ? தேவகிகாள' அவா
இனி நுகரேமென்று கைவிட்ட என்னை நீங்கள் அணைதழுத் தழுவிக
கொள்ளீர; நீங்களும நெஞ்சம வலியிராகி நிறபிரோ? எனகரு அணையா
யமாரேப' என்பாறகொடை நடபைக் கைவிட்டு நீங்கினீரே; கழுநீர்த்
தாரே' அவரேபோல நீயும எனனைப் பாதுகாவாமற கைவிட்டனையே;
செவ்விய நாவே' அவரிபோல நியும அருளினமி என்னை இகழ்ந்தனை
யே; இங்ஙன மிகழ்தற்கு என்னிடத்துகண்ட குறறம யாது? அதனைக்
கூறு; கண்களே! முன்பு என்னைப்பாராத்துப பினபுபழற்று எனக்கும
பினபத்தைதருந்த நீர இப்பொழுது என்பால் அருளிலீராயினீர;
இதறகுக காரணம யாது? எனது வண்ணங்கெடடபடியைக் காணமின்"
எனறு பலவாறு பிரலபித்து விமமிவிமமிப் பினனும வருநதிப புலமபு
வாரையினள்; அதுகேளிந்து அந்தகரின் எப்புறதமுளை மகளிகளை
பலருமவநது ஒருங்குகூடி அழுதலாலே, அநதபபுரதறகு கடலோலியேபோ
லே ஓரொலியுண்டாயிறறு; நகரமுற்றுங் கலங்கிறறு.

சுதேதாதனன் இவ்வாறு நிகழுமென்பதை முனனமே அறிநதவ
னகவிருந்தும அவன் அப்போகடைந்த வருதததிறகு அவலிலை; மக
ப்பிரிவினுந் துயாவலிதியாவதே.

அவ்வளவிலே இராஜபுரோகிதா, சுதேதாதனனைகதேற்றி, "அரசி
ளஞ்சிங்கததை விரைவிற்கொணாவேன்" என்று சொலலிவிட்டு, ஒரு
மநதிரியோடு கூடிப் பலவிடத்தும தேடிக்கொண்டுபோய் அரளரரம
முனிவருடைய தவசசாலைகருகே கௌதமரைகண்டு பிரிவாற்றமல்
அரசன்முதலியோர் படமபாடடைசசொலலி வருந்தி அழைத்தார்; அழை
த்தவர்க்குக் கௌதமர, "அழகிய இராசமாளிகை எனக்குக் கனலகிறை
நத இடமபோலும்; இனிமையுளள உணவுகளை ஆக்குதறகுரிய மடைப்
பள்ளியோ நஞ்சினை உண்பிக்குமிடமபோலும; எல்லாம துக்கரமாக
வேயுள்ளன; ஆதலால், நீலைத்த இன்பத்தைப் பெறவேண்டுமென்பதே
என்கருத்து; அது மூற்றுப்பெற்றலலவி மீளேன்" என்று மறுத்து
ரைத்தார்; அவ்விருவரும் அளவற்றதுயரமுற்று மீண்டுபோனாகள்.

அவர்கள் போனபின், ஒருநாள், பிக்ஷையெடுத்தற்காக இராஜகிருக நகரத்தையடைந்த கௌதமர், அந்நகரத்தரசனாகிய *பிம்பஸாரன் பல பசுக்களைப்படித்து யாகஞ்செய்கிறானென்பதைக் கேள்வியுற்று மிக்கபர பரப்புடன் அந்தயாகசாலைக்குச்சென்று, கொல்லாமையாகிய நல்லறத் தின் பெருமையை விரித்துக்கூறி அவ்வேள்வியில் நிகழுங்கொலையை மாற்றிவிட்டு, இவ்விடத்திற் சிலதகலிருக்க வேண்டுமென்று வேண்டிய அவனுக்கு "நான் உண்மையுணர்ந்த பின்பு நான் இவ்விடம் வருவேன்" என்று வாக்களித்துவிட்டுச்சென்றார்.

பிம்பஸாரன், அதுதொடங்கிக் கொல்லாமையாகிய நல்லறத்தை மற்கொண்டு ஒழுகிவந்தான்.

அக்காலந்தொடங்கிக் கௌதமருக்குக் கௌதமபிக்ஷு, பிக்ஷு கௌதமரென்னும பெயர்கள் வழங்கலாயினவென்பர்.

கௌதமர், ஆளாரகாமமுனிவருபதேசித்த வழியிலேயே பலகாளா ழுகிவந்து அதனால் உண்மை விளங்காததுபற்றி அவரை நீங்கி உருத்திர கரென்னும வேறொரு முனிவரை ஆசிரியராகவடைந்து அவர் உபதேசித்த வழியிலும் பலநாள் முயன்றுழுகி ஆராய்ந்துவந்தார். அதனாலும் கௌதமருக்கு உண்மை புலப்படவில்லை.

அப்பால அவர் துக்கபரம்பரையைப்போக்கும வழியை அறிந்து கொள்ளவேண்டி ஞாரஞ்ஜனியமெனப்படும †உருவேலாவனத்தைச்சார்ந் அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த கௌண்டிந்யகுலப்புத்திரா, தச பலகாசியபா, பாஷபா, அசுவஜித, பத்திரரென்னும ஐந்தமுனிவர்களோ யடைந்து அளவளாவி அவர்களோடு அவ்வனத்தில் அருந்தவமபரிவர ராயினர்.

இவ்வாறு பலநாளசென்றபின், ஒருநாள், கௌதமர், உண்மையை யறிந்துகொள்ளுதற்குரியவழியை ஆராய்ந்துகொண்டே உலாவுங்காலத் தில், பலகாலம பட்டினியுற்று கோறறுவருந்த இளைப்பால் நிற்கலாற்றாது மூர்ச்சித்துக் கீழேவீழுந்துவிட்டார்; மேற்கூறிய தாபஸிகளெலரும் இவ ரிறந்தாரென்றே நிசயித்தார்கள்; கௌதமர் சிறிதுபொழுது சென்ற பின் தெளிவடைந்து எழுந்து, "இப்படிப பட்டினியுற்றுச்செய்யுந்தவத்

* பிம்பவமசமென்று ஒருவம்சமுண்டென்று தெரிகின்றது. மாளவிகாக்கினி மித்திரீயமென்னும வடநூலில் அக்கினிமித்திரனென்பவன் பைம்பீகனென்று சொ லலப்படுகிறான்.

† உருவேலாவென்பது நைரஞ்சரையென்னும் நதியின்கரையிலுள்ளதென்று தெரிகிறது. இந்நதி இக்காலத்துப் பல்குனியென்று வழங்கப்படும்; நைரஞ்சரை யென்பது பௌத்தநூல்வழக்கு.

தாலே யாதும்பயனில்லே" என்று நினைந்து கிடைத்தவுணவை *உண்ணுதற்தொடங்கினர்; தொடங்கவே மேற்கூறிய ஐந்துதாபதாகளும், "இவர் விரதபங்கமுற்றார்" என்று வெறுப்புற்று மதியாமல், அவனை விட்டுநீங்கி வேறிடஞ்சென்றார்கள்.

மஹாபிநிஷ்கிரமணத்திற்குப்பின் உண்மையை அறிந்துகொள்ளுதற்குச செய்தமுயற்சியில கௌதமருககு இவ்வாறு ஆறுவருடங்கள சென்றன.

மேற்கூறிய ஐந்துதாபதாகளும் நீங்கியபின் அவர் கைலஞ்சரையென்னும ஆற்றின்கரையை யடைந்து ஆங்குள்ள ஓர் †அரசமரத்தடியிலிருந்துகொண்டு ‡இருபத்தெட்டுநாட்கள் அகோராத்திரம அயிந்துதலுந்துயிலுதலுமின்றி உண்மையை ஆராய்சசிசெய்துகொண்டேயிருந்தார்; இருபத்தொன்பதாவது தினத்தின்காலேயில அந்தகேயுள்ள ஊரிலிருப்பவனுகிய பலனென்னு மிடையனுடையமகள் §ஸுஜாதையென்பவள், தன்னுடைய வழிபடுதெய்வத்திற்கு நிவேதனஞ்செய்யசகலமைதாக கையிலவைதுதுக்கொண்டிருந்த பாலன்னத்தையூட்டினளை; அதை யுண்டு கௌதமர் ஒளியால் விளங்கினர்.||

அப்பொழுது சிலவிரோதியாகிய மாரனெனபவன் தன்னரசாட்சிக்குக் கேடுவருதுவிட்டதென்று வருந்துமுற்றுக கௌதமருடைய மனதை வேறுபடித்தநினைத்து, காமம, வெகுளி, மயக்கமென்னுந தன்புதல்விகள் மூவருடன்வந்து பலவாறுமுயனறு மிகப்போராசெய்தும அவருடையமனம சிறிதும வேறுபடவில்லை.

---

'உணவால் உடம்பும உடம்பால் உணர்வும் ஆகுமெனபது பௌத்தர்கொள்கை' என்பர் நீலகேசித்திரட்டுரை யாசிரியர்; "மறறுடமபு சாவாக வுணாவெழு பெழுதறகும், பெற்றிமைப் பறையடிப்பப் பெறுமொலியே யுரையாதோ" எனபது, நீலகேசித்திரட்டு, புத்தவாதச்சருக்கம், இரண்டாம பாட்டுரையிற்கண்டசெய்யுள்.

† இதனடியிற் கௌதமருக்கு ஞானுதயமானமையின், இது மஹாபோதி யென்று பௌத்தராற்கூறப்படும; "பண்ணைந் தோகுகிய பாகிலேப் போதி" (சில்பபதிகாரம், நாடுகாண்காதை, கக) என்றதனால், இவ்வரசமரம் ஐந்துயோஜனையடையதென்று தெரிகிறது. இது, பௌத்தர்களால் திசைநோக்கித் தொழப்படுவது.

‡ நாற்பத்தொன்பது நாட்களென்று சொல்வதுமுண்டு.

§ இப்பெயர், நங்தையென்றும விசாகையென்றுங காணப்படுகின்றது.

|| 'போதிவ்ருக்ஷத்தி நாற்றிசையும் எவ்வேழுநாள் போதிவ்ருக்ஷம்பார்த்துநின்று உபவஸித்துப் பின் விசாகையென்பாள் பொற்கலத்திற் சோறிட்டுப் புதகன் உண்டானெனபதுமுண்டு' என்பது, நிலகேசித்திரட்டு, மொக்கலவாதச்சருக்கம், கூகம்பாட்டுரை அவ்விருபத்தெட்டு நாட்களுள் முதலேழுநாட்களிற கௌதமாதியானஞ்செய்துகொண்டே யிருந்தாரென்றும், இரண்டாம வழுநாட்களில மாரன் அவருடைய உளளத்திற் பல வேறுபாடுள்ள தீய எண்ணங்களேயுண்டாக்கினனென்றுந் தெரிகின்றது.

இங்ஙனம் வேறுபடாதுநின்ற கௌதமபுத்தருடைய மனவுறுதியைப் பாராட்டிப் பழைய பௌத்தகவிகள் கூறிய பாடலகள் வருமாறு:—

*"வாடாப் போதி மரகதப் பாசடை
மரநிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கும்
அருளின நீக்தே னிறைந்து ணனிஞெகிழ்ந்து
மலரினு மெல்லி தென்ப வதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கி நிமிர்ந்தெதித
வாளும் போழ்ந்தில வாயின
யாதோ மற்றது மெல்லிய வாறே."

†"தாமுறுங் குழன்மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே மூனந்தொலைத்தாற் கண்ணுேட்டம் யாதாங்கொல்."

கௌதமருடைய உள்ளத்தை வேறுபடுத்தற்குரியவன்மை தனக் கில்லாமையைத் தெரிந்துகொண்ட ‡மாரன் தோல்வியுற்றுத் தன் உறை விட மடைந்தான்; கௌதமருடையவுள்ளம் ஞானவொளியால் விளங் கற்று.

இங்ஙனம மாரனென்று வீரனுகிய சனனமற்றுச் சீலசமாதியி னிருந்த கௌதமருக்கு மேற்கூறிய §இருபத்தொன்பதாவதாகியதினத்தி னிரவில் பழமபிறப்புணர்ச்சியும் தத்துவஞானமும் முறையே உண்டா பின; அப்பொழுது முதலில் முற்பிறப்பிற பாவஞ்செய்தோர் இப்பிறப் பில வருந்துதலேயும் சிவகாருணியமபூண்டோர் இன்புற்று வாழ்தலேயும் அவர் தமமுடைய ஞானகண்ணுலறிந்தார்; அறிந்தவர், பின்பு காமம் வெகுளி மயக்கமெனனும இவற்றையுடையவர்கள் துக்கத்துக்கே உரிய வர்களாகிப் பிறந்து பிணிவாய்ப்பட்டு மூத்து இறக்கிறார்களென்றும், அந்த இறப்பு பிறபபிலிருந்தும, பிறப்பு கருமக்கூட்டத்திலிருந்தும், கரு மககூட்டம பற்றிலிருந்தும, ||பற்று வேட்கையிலிருந்தும், வேட்கை துகா

---

* இது, தொல்காப்பியப்புறத்திணையியலில் "அறவகைப்பட்ட" என்னுஞ் சூத்திரத்துள்ள 'மறவில் . .... . . . தேயமும்' என்பதற்கு ஆசிரியர் நச்சினர்க் கனியர் எழுதிய உரையிலும், வீரசோழியர், பொருட்படலத்துள்ள "காற்குலப் பககம்" எனனுங் கலிதத்துறையுரையிலுங்கண்ட செய்யுள்.

† இது, வீரசோழியம், யாப்புப்படலம், கக-ம் கலித்துறையுதாணச்செய்யுள்.

‡ மாரன் தோல்வியுற்றுப் போனபின்பு ஊழாதை பாலன்னமளித்ததாகச் சொல்லுவதுமுண்டு.

§ புததருக்கு ஞானேதயமானதினம் வைசாகசுத்த பூர்ணிமையென்பர்; அத னுல், ஒவ்வொருவருடதது அந்ததினம் சிறந்த திருநாளாகப் பௌத்தராற் கொ ணடாடப்படும். இதுபற்றியே "மதிகாண் முற்றிய மகலத் திருநாட், பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்" என்றார் மணிமேகலையிலும்; கo-ம் காதை, அடி-ஃ க.

|| "அவாசசாரந்து பற்றுகும பற்றிஞல் வினேமுதிராவாந், தவாதவிவ் வினேமுதிர் வாற் பிறப்பாரும் பிறப்பினுற், குவாவிய பிணிமூப்புச் சாக்காட்டின் கூட்ட மா, யுடா யவித் தியோற்ற மொழிவின்றி யுருளுமே." என்பது, நீலகேசித்திராடி, புதிதவாதச சருக்கம கக-ம செய்யுளினுரையிற கணடசெய்யுள்.

விலிருந்தும், துகர்வு பரிசத்திலிருந்தும், பரிசம் வாயிலிலிருந்தும், வாயில்கள் நாமரூபத்திலிருந்தும், நாமரூபம் விஞ்ஞானத்திலிருந்தும், விஞ்ஞானம் செய்கையிலிருந்தும், செய்கை பேதைமையிலிருந்தும் உண்டாகின்றனவாதலாற் பிறப்பைநீக்க இறப்பும், கருமக்கூட்டத்தைநீக்கப் பிறப்பும், பற்றைநீக்கக் கருமக்கூட்டமும், வேட்கையைநீக்கப பற்றும், துகர்வைநீக்க வேட்கையும், ஸ்பரிசத்தைநீக்க துகர்வும, வாயிலைநீக்க ஸ்பரிசமும், நாமரூபத்தைநீக்க வாயிலும், விஞ்ஞானத்தைநீக்க நாமரூபமும், செய்கையைநீக்க விஞ்ஞானமும், பேதைமையைநீக்கச செய்கையும் நீங்குமென்றும் துக்கம், துக்கோத்பத்தி, துக்கநிவாரணமென்னும் மூன்று சத்தியங்களே ஆராய்ந்து தெரிந்துகொண்டதன்றி நற்காட்சி, நல்லாற்றம, நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்து ஓர்தலைப்பாடென்கிற நான்காவது சதசியமாகிய துக்கநிவாரணமார்க்கமெனப்படும நல்வழிகளைட்டையுமாராய்ந்து தெரிந்துகொண்டார்.

* 'போதிவிருக்ஷத்தினடியேயிருந்தநாட்களுள் ஒருநாளிரவில் புத்தர் தியானஞ்செய்கையில் முதல்யாமத்திற்செய்த தியானத்திற் பழமபிறப்பின் நிலைமைகளெல்லாம அவருக்குத தெரியவந்தன ; இரண்டாம யாமத்திற்செய்த தியானத்தில் அப்பொழுதுள்ள பிறப்பின் நிலைமைகளெல்லாம அவருக்குத் தெரியவந்தன ; மூன்றும்யாமத்திற்செய்த தியானத்தில் துவாதசநிதானரூபமாகிய ஏதுநிகழ்ச்சி அவருக்குத் தெரியவந்தது. நான்காந்தியானத்திற் சூரியனுதியாகிற்கையில் முழுதும் அவருக்குத்தெரியவந்தது' என்று சொலலுவதுமுண்டு.

அரசமரத்தினடியிலிருக்குநாட்களுள் ஒருநாள் கௌதமர் நைரஞ்சரையென்னும் ஆற்றையடைந்து நீராடுகையில, அவ்வாற்றில தூண்றென்று மிதந்துவந்ததென்றும், அந்தூணில, "தேன்றவனவெல்லாம நிலையற்றன ; அவை பிறப்பிறப்பிற்கு உட்பட்டவை ; எக்காலத்து இந்தச் சனனமரணநிடமம நீங்குமோ அக்காலத்தேதான் ஆனந்தங் காணப்படும்" என்னும பொருளடங்கிய வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தனவென்றும் அவற்றைக் கண்ணுற்றறிந்தபின்பு அவருக்கு ஞானோதயமாயிற்றென்றும் ஜப்பான்தேசத்துப் பௌத்தநூல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வண்ணம் கௌதமர் †ஸத்தியசதுஷ்டய ஞானத்தைப்பெற்றபின், நாகரும தேவரும மற்றையோருங்களித்தனர் ; நன்னிமித்தங்கள் பல நிகழ்ந்தன.

அப்பால் கௌதமர், " நான்விரும்பியதையடைந்தேன் ; யானென

* போதிவிருக்ஷம் - அரசமரம்.

† ஸத்தியசதுஷ்டயமாவன துக்கம், துக்கோத்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரணமார்க்கமென்பன.

தென்னும் அகங்கார மமகாரங்களினின்றுந்தப்பினேன்" என்று களிப் புற்றார். *அப்பொழுது மஹாப்பிரஹ்மா அவருக்குமுன்னேதோன்றி, "கவலியால்மெலிகின்ற மனிதர்மேல் இரக்கம்வை; உலகத்தார் தமது பயனேயகருதி உழைக்கின்றனர்; பிறவியிரோம்புதலேப் பேணிலர்; எல்லோர்க்கும தருமோபதேசஞ்செய்து அத்தியவழியினேமாற்று" என் றனர். அதுகேட்ட †ததாகதர் மனமகிழ்ந்து அவர்கூறியவாறே உண் மையை உபதேசித்துப் பரவசசெய்து எல்லாவுயிர்களேயும் நல்வழிப்படு த்தற்கு நிசசயித்தார்; நிசசயித்தவர் தமக்குண்டான உண்மைஞானத் தைத நாம் முன்பு ஆசிரயித்திருந்த அராளராமமுனிவர் உருத்திரகர் என்பவாகளுக்கு முதலில் அறிவிகவேண்டுமென்றுநினேத்து விசாரிக் கும்பொழுது அவாகள் இறந்துபோய்விட்டார்களென்பதைக்கேட்டு மிக வும் வருதமுற்றார்.

அப்பால், முன்பு உருவேலாவனத்தில் தம்மோடு தவஞ்செய்துகொ ண்டிருந்த ஐந்து தாபதாகளுக்கும் தாமபெற்றபேற்றைக் கொடுத்தற்கு நினேந்து அவாகளேத் தேடிகொண்டு அவ்வனதத்தின்வழியே செல்பவர், அங்கே உபகனெனனும அநதணனெருவனேக்கண்டு அவனேநோக்கியாடித் தாமபிந்தவண்மையை வெளியிட்டு, அவனே மகிழ்வித்து, அதனால் தமது கொள்கை பிறருக்கு உபதேசிக்கத்தக்கதென்பதில் ஊக்கமுற்று, மேற்கு மியதாபதர்களேவரும் காசியிலிருப்பதாகக் கேள்வியுற்றுப்போய்க் காசி யைசசாரந்த ‡மிருகதாவமென்னும வனத்திற்புகுந்தார்; அங்கேதவம் புரிந்துகொண்டிருந்த கௌண்டிந்யகுலபுத்திராமுதலிய ஐவரும் அவ ரைந தூரத்துக் கண்டமாத்திரத "இவர் முன்பு தவத்தினின்றுநீங்கின மையால, இவருக்கு நாம யாதோருபசாரமுஞ்செய்தலாகாது" என்று கமமுட் பேசி நிசசயித்துக்கொண்டிருந்தும சமீபத்திற் கண்டவுடனே அவருடைய முகமலாசரிமுதலியவற்றால தாம் பரவசமுற்றுத் திடீரென் றெழுந்து உபசாரஞ்செய்தாகள்; ததாகதர் அதையேற்றுக்கொண்டு, 'காயகஷ்டசம் செய்தற்கு வலியில்லாமல் வேண்டியவாறே நூகர்ந்தொ ழுகுபவன் மனத்தை எவ்வாறு அடக்குதல்கூடும்? இப்பொழுது நீர் அமிந்துகொண்டவழி யாது?" என்று வினவிய அவர்களுக்கு "நற்காட்சி முதலிய எட்டு அங்கங்களேயுடைய வழியைப்பற்றி ஒழுகல்வேண்டும்; அவ்வாறு ஒழுகினேலன்றி சனனமரணங்களே நீக்குதல ஆகாது; துக் கம, துக்கோத்பத்தி, துககநிவாரணமென்பனவற்றை உள்ளவாறறிந்த

* கௌதமர் இஙஙனம் ஞானம்பெற்றுப் புத்தத்தவம்பெற்றகாலம், ஈசான கோற்கம், ௬௬ - ம் வருடத்தில விசாகநக்ஷத்திரமும் பௌர்ணமாவியுங்கூடிய புத னிகிழமையென்பர்.

† ஞாஜேதயமானபின்பு, கௌதமருக்குத் ததாகதர், புத்தர், ஜினர் என்பவை யிய காரணப்பெயர்கள் வழங்குவனவாயின.

‡ மிருகதாவம் - மான்காடு.

பின்பே இவ்வழியைப்பற்றி ஒழுகுதல்வேண்டும்; இதுவே நான்கண்ட வழி" என்று உபதேசித்தார்; கேட்ட ஐவரும் அவாகூறியவற்றை அங்கீகரித்துச சிஷ்யர்களாய் அவரைசசோந்தாகள்.

இங்ஙனம் அவர்கள் தம்மூட் கூடியிருக்கத்தொடங்கியதே, பௌத்தர்களாற்கூறபபடும் *மும்மணிகளுள்ஒன்றுன ஸங்கத்திற்குத தொடக்கமென்பர்.

கண்டோரை வசீகரிக்தற்குரிய அழகியபார்வையும் முகமலாசசியும் கேட்டோருடைய உள்ளத்தைக் கவர்தற்கமைந்த சிறந்த இசைக்குரலும் இன்சொல்லும் புத்தருக்கிருந்தனவென்றும அவைகளே அவருடையபிரஸங்கங் கேட்டோர்களே விரைவில் அவருக்குச சிஷ்யர்களாகசசெய்வதற்குச் சிறந்த கருவிகளாக விருந்தனவென்றும் புத்தசரித்திரங்கள கூறுகிற்கும்.

பின்பு புத்தர், தாம் அறிந்துகைகொண்ட தருமமாகியசகரத்தை எவ்விடத்துமுருட்டநினைந்துஅந்த மிருகதாவவனத்திலேயேயிருந்துகொண்டு சாதிவேற்றுமைகருதாமலும ஆண்பாலா பெண்பாலாரென்றுபாராமலும இவர் பகைவர் இவா நட்பினரென்று நினையாமலும் அங்குவந்தோர் யாவருக்கும் ஒப்பத் தமது சித்தாந்தத்தை உபதேசித்துவந்தா.

"இன்னுர்க்கு மினியனு யிறந்தார்க்கு மினநீம்பால்
குன்றுமற் பொழிந்திட்ட குன்றிய குணத்தினுன்"

(நீலகேசித்தீராட்டே, புத்தவாதச்சருக்கம், கூக - ம் பாட்டுரையிற்கண்டசெய்யுள்.)

அபபொழுது,குசிநகரத்திருந்தயசனென்னுஞசெலவவாணருவன், அவர்பெருமையைக் கேள்வியுறறு விரைவில அவரைச சரணமடைந்து அறங்கேட்டுத் தன்னுடைய பாலியநண்பர்களாகிய ஐமபதுநாலவராளோடும் பிக்ஷுவாய்ப் பௌத்தசங்கத்தைச சாந்தான்.

அவருக்கு ஞானேதயமானநாள்முதல் ஐநதுமாதத்திற்குள்ளாகவே அறுபதுபேர்கள் இல்வாழ்க்கையைத்துறநது பிக்ஷுக்களாய்ப் பௌத்ததருமத்தையே தஞ்சமாகப்பெற்றுச் சிஷ்யாகளுக்குரிய நிலையைப் பாராட்டிக்கொண்டு சங்கத்தின் அங்கமாக விளங்கினர்கள். இதனல், தமமுடையதருமத்தை எல்லாரும் வருத்தமின்றியறிந்து அங்கீகரிக்குமபடி செய்தற்கு வேண்டிய போதனைசக்தி புத்தருக்கு மிகவுமிருந்ததென்றும, அவருபதேசித்ததருமம மிக்கவிரைவிற் பரவிற்றென்றும அறிந்துகொள்ளலாம்.

பின்பு யசனுடைய தாயை தாய் மணவி ஆகிய மூவரும் அவரையடைந்து அறங்கேட்டு †உபாஸகரானர்கள்.

---

* மும்மணிகளாவன - புத்த தர்ம ஸங்கமென்பன, "புதத தர்ம சங்க மென்னு, மூத்திற மணியை மும்மையின் வணங்கி" என்று மணிமேகலையில் வந்திருத்தல் காண்க; கூ - ம் காதை, கூ - சி.

† உபாஸகர் - பௌத்தரில் இல்லறத்தோர்; "மேலே மாதவர் பாதம் விளக்குஞ், சீல வுபாசகர் செங்கைநறு நீரும்" என்று மணிமேகலையில் வந்திருத்தல்காண்க; உ - ம் காதை, கக - கஉ.

அப்பால், அவர் மேற்கூறிய அறுபதுசிஷ்யர்களையும் ஒருங்குசோத்து முகமலர்ச்சியோடும் அவர்களைநோக்கி, "அன்பர்களே, யான் உபதேசித்தவுண்மையை அறிவில்லாத மானிடாகளுக்கு விளங்கப் போதித்து அவாகளை அவ்வறிவின்மையினின்றும் நீக்கி நல்வழிப்படுத்துதல் உங்களுடைய கடப்பாடாகும்; ஆதலால், நீங்கள்தனித்தனியே பலவிடங்களுக்குஞ்சென்று நம்முடைய சமயகொள்கைகளைப் பலர்க்கும் உபதேசித்து வருக" எனறு கட்டளையிட, அவர்களில் யசன்மட்டுமே காசியிலிருந்தும் மறறவாகள் தனித்தனியே பலவிடங்களிற்சென்றும் தாமறிந்ததருமங்களை எலலாருக்கும அன்புடன் போதிப்பாராயினர்.

வருடந்தோறும் மழைக்காலத்தில் தமதுசிஷ்யர்களை வருவித்துத் தம்முடனிருக்கசெய்வதும மற்றைக்காலங்களில் அவர்களைப் பலவிடங்களுகுகுமனுப்பித் தருமப்பிரசங்கம்புரியச்செய்வதும அவருக்கு வழக்கமாகவிருந்தன.

ததாகதர், மேற்கூறிய உருவேலாவனத்திலிருந்து அக்கினியைவழிபடுபவரும அக்காலத்தில ஆசிரியரென்று பெயர்பெற்றிருந்தவரும் வானபிரஸ்தருமாகிய அக்கினிகாசியபரென்பவரிடஞ்சென்று, அவரிடத்திருந்த கொடியபாமபொன்றைத் தமமுடைய விசேட ஆற்றலாலடக்கி அவா வழிபடவந்த அக்கினியையே உதாரணமாகக்காட்டி, "புலன்களெலலாம பொறிகளின்வழியேசென்று காமவெகுளிமயகங்களை உள்ளதறிவுண்டாகாகி அஞ்ஞானமாகிய பெருந்தீயால ஒவ்வொருவரும் எரிந்து வருந்துமபடி செய்துகொண்டிவருகின்றனவெனறும், அத்தீயையவித்து நிருவாணத்தைப் பெறுதற்கு முயல்வோராயாவரும புலனகளால உள்ளஞ்சலியாதபடி தமமுடையபொறிகளை வெல்லவேண்டுமென்றும, இதையன்றி நிருவாணத்தையடைதறகுரியவழி வேறெதுவுமிலலையெனறும் உபதேசிகக, அவரும அவருடைய சிஷ்யாகள் ஐஞ்ஞாறுவரும தங்கள்கொள்கைகளைத்துறந்து சங்கத்தைசசார்ந்தாகள்; பின்பு அந்தகாசியபருடைய சகோதரராகளாகிய நதீகாசியபர், கயாகாசியபரென்னுமிருவரும ததாகதரைச சரணமடைந்து அறங்கேட்டுப் பிக்ஷுக்களானாகள். அகனிகாசியபருக்குப் புத்தர் அக்கினியை உதாரணமாகக் காட்டி உபதேசித்தவிஷயங்கள் ஆதித்தியபரியாய சூத்திரமென்னுநூலிற் கூறப்பட்டுள்ளன.

பின்பு புத்தர், பிம்பஸாரனுக்கு முன்பு வாக்களித்ததை நினைந்து, அக்கினிகாசியபர்முதலியவர்களோடே உருவேலாவனத்திலிருந்து இராசகிருகநகரத்தைச் சார்ந்த *யஷ்டிவனத்தையடைந்தபொழுது, ஆங்குள்ளார் அவருக்கும் அக்கினிகாசியபருக்குமுள்ள வேற்றுமையைத் தெரிந்துகொள்ளாமல் மயங்கினார்கள்; அப்பொழுது இராசகிருகநகரத்

* யஷ்டி - அதிமதுரம்.

தரசனுகிய பிம்பஸாரன் லுத்துபார்த்து மிகப்புகழ்பெற்ற காசியபரே இவ ருக்குச் சிஷ்யராஞென்ரல், இவர் ஒப்பற்ற பெரியோராயிருத்தல் வேண்டுமென்று முன்னியிலும் நன்குமதித்துப் புத்தரை வணங்கினன்; அப்பொழுது காசியபர் பிம்பஸாரனுக்குப் புத்தருடைய மேம்பாட்டை மிகப் பாராட்டிக்கூறினர். அந்தசமயத்திற் காசியபரின் பெருமையைப் புலப்படுத்தற்பொருட்டு அவருடைய பழம்பிறப்பைப்பற்றிய ஜாதக கதையொன்று புத்தராற்சொல்லப்பட்டது; அதனால், ததாகதருக்குப் பழம்பிறப்புணர்ச்சியுமுண்டெனநிணைந்து இவரே பெரியோரென்று அர சனமுதலிய எல்லோரும் தெளிந்து அவரைச்சரணமடைய, அவர் ஜன மரணங்களைநீக்கும்வழியை விளங்க விரித்து உபதேசித்தார்; அதுகேட்ட வரனைவரும பரமார்த்த தத்துவப்பொருளையறிந்து அவருக்கு அடியவ ராஞர்கள்; பிம்பஸாரன், தன்னுட்டிலு ள்ளபெறியிலடைபட்டிருந்தோர் யாவ ரையும் விடுவித்து எல்லாவுயிர்களுக்கும தண்ணளிசுரந்து அரசாட்சி செய்வானுயினன்; அந்தகரத்துள்ள மற்றையோரும யஷ்டிவனஞ்சார்ந்து புத்தபால் தருமோபதேசமபெற்று வந்தார்கள்.

பின்பு ஒருநாள் ததாகதர் பிக்ஷுக்குவந்தபொழுது யஷ்டிவனம் இராசகிருக நகரத்திற்குத் தூரமாயிருத்தல்பற்றிச் சிந்தித்த அரசன், சமீ பத்திலுள்ளதாகிய *வேணுவனத்தில் ஒரு †விஹாரங்கட்டுவித்து, அவ்வி ஹாரத்தோடு அவ்வனத்தை அவருக்கும அவருடையசங்கத்திற்கும வா ஸஸ்தலமாகக்கொடுத்தான். லெலோரையும் தமதுவழியைப்பறறி ஒழு கும்படிசெய்து அவர்களுடைய உள்ளங்களில் நிலைத்த ஞானதீபதை ஏற்றுதற்பொருட்டுத் ததாகதர் அவ்வனத்திற்றங்கி அங்குவருவோ களுக்கெலலாம அனுபுடன் தருமோபதேசஞ செய்துவருவாரானர்.

இப்படியிருக்கையில், ஒருநாள் அவருடைய சிஷ்யர்களாகிய அசுவ ஜித், பாஷ்பினைற பிக்ஷுக்களிருவரும உரியகாலத்திற் பிக்ஷையெடுத் தற்பொருட்டு இராசகிருகநகரவீதியிற் செலலுகையில், கபிலனென்பவ ரின் மாணாக்கர்களுள்ளே மேம்மபட்டவிளங்கும ‡சாரிபுத்திரனென்பவன், அவர்களுடைய தோற்றப்பொலிவைக்கண்டு நன்குமதித்து அவர்களுட னாயாடிக் கௌதமருடையமகிமைகளையறிந்து தனது நட்பாளனுகிய மௌத்கல்யாயனனென்பவனேடும தனதுமாணாக்கர்கள் இருநூற்றைம்

---

* வேணுவனம் - மூங்கிற்காடு. இது புத்தருக்குப் பிரியமான வாஸஸ்தலங்களு ளொன்று; இதில் அவர் பலவருடங்கள் சங்கத்துடன் தங்கியிருந்தாரென்று தெரி கின்றது; இது கரண்டவேணுவனமென்றும் வழங்கப்படும்.

† விஹாரம் - பௌத்தமுனிவர்கள் தங்குவதற்காகவே கட்டிய இடம்; "இந் திர விகார மேழுடன் போகி" என்பது, சிலப்பதிகாரம், நாகொண்காதை, கச.

‡ சாரீபுத்திரன் - சாரியென்பவளின் புதல்வன்; இதுபற்றியே இவன் போதி ஸத்துவரானது. கல்பலதையென்னும் வடநூலிற் சாரிஸுதனென்று வழங்கப்படு வன். இவனையும் பின்புகூறப்படும மௌத்கல்யா னையும் ஸஞ்சயரென்பவரின் மாணாக்கர்களாகச் சொல்லுவதுமுண்டு.

பதின்மரோடும் வேணுவனஞ்சார்ந்து புத்தனைச்சரணமடைந்து தரு மோபதேசம்பெற்று *அருகத்தசையை அடைந்தான்; சாரீபுத்திரன் †புத்தருடையசிஷ்யர் பதின்மாகளுள் உயர்ந்தவன்; பௌத்தசமயநூ லுணர்ச்சியிற் பெயர்பெற்றவன். மௌத்கல்யாயனன் ‡இருத்தியிற்சிற நதவன்.

அப்பால், புத்தர், சாரீபுத்திரனுக்கும் மௌத்கல்யாயனனுக்கும் தமது சங்கத்தில் முதன்மையளித்தனர். அதுபற்றிச் சங்கத்துள்ள மற் றையோர் பிணங்கி அவ்விருவரோடும் கலகம்விளைப்பாராயினர்; புத்தர், அதுதெரிந்து தமது சங்கத்தார் எப்பொழுதும் கைக்கொண்டொழுக வேண்டிய விதிகளை அப்பொழுது அவர்களுக்கு உபதேசித்தார். அதன் பின் சங்கம அமைதிபெற்று ஒழுகுவதாயிற்று. அதுதொடங்கிச் சங்கம் §சேவகஸங்கபாதமென்று பெயர்பெற்றது. மேற்கூறியவிதிகள் பிராதி மோக்ஷமென்றநூலில அடங்கியுள்ளன.

சங்கம இவ்வாறு மேன்மேலும் வளர்ச்சியடைதலைப்பொறுத மற் றைச சமயவாதிகள் பௌத்தசமம் பரவாதிருத்தற்பொருட்டுப் பல்வ கையான இடையூறுகள் செய்துவந்தார்கள். ததாகதர் அவற்றைச்சிறி தும மதியாமல் தமது கடப்பாட்டை மேற்கொண்டொழுகிவந்தார்.

பின்பு காசியபஅக்கினிதத்தனென்னுந்தூவியொருவர், வைசாலி நகரஞ்செல்லுதற்குப் புறப்பட்டு வழிக்கொண்டவராய் இடையே சாக் கியமுனிவரின் பெருமையைக் கேள்வியுற்று அவரையடைந்து அறங் கேடுத்த தமதுகொளகையைத்துறந்து பௌத்தபிக்ஷுவாயினர்; சங்க த்தில மிகவும் மேன்மையுற்று விளங்கினமையின், இவர் மஹாகாசியப னென்றுங் கூறப்படுவர்.

கோசலதேசத்தில் ஸ்ராவஸ்திநகரத்துள்ளவனும் பெருஞ்செல்வவா னுமாகிய ‖அநாதபிண்டகனென்னுமவணிகன், புத்தருடைய காருணிய உபதேச விசேடத்தைக் கேள்வியுற்று, உடனே இராஜகிருகநகரம் வந்து ஆங்குள்ள சூளனென்னுமித்திரனவிட்டில தங்கி அன்றிரவே பரபரப் புடன புத்தசைச சரணமடைந்து அறங்கேட்டு யாம நீங்கப்பெற்று அவாவற்றுப் பிறப்பாகிய பெருங்கடலைக் கடத்தற்குரிய தெப்பமாகிய நலவழியைக் கடைப்பிடித்தான்.

---

* அருகத்தசை – நிருவாணமடைவோர்க்குரிய தியானங்களோந்தனுள் நான்கா வது தியானதசையடைந்தவாகளின நிலைமை.

† புத்தருடைய சிஷ்யர் பதின்மர்களாவார்: காசியபன், ஆனந்தன், சாரீபுத் திரன், மௌத்கல்யாயனன், அனுருத்தன், ஸுபூதி, பூர்ணன், காத்தியாயனன், உபாலி, இராகுலனென்பவர்.

‡ இருத்தி – அற்புதசக்தி; இது சித்தியென்றுங் கூறப்படும்.

§ சேவகஸங்கபாதம் – அடியவர்களின்கூட்டம்.

‖ இப்பெயர் அநாதபரிபாலகனென்றுங் காணப்படுகின்றது.

புத்தர் வேணுவனத்தில் இருக்கும்பொழுது அவரிடத்தில் தருமத்தைக்கேட்டுத் தத்தங்கொள்கைகளேவிட்டுப் பௌத்தமதத்தையடைந்து *சிவரதாரிகளாய்ப் பிக்ஷுக்களானேர் தொள்ளாயிரவரென்றும் உபாலகரானேர் மிகப்பலரென்றுங்கூறுவர்.

இப்படியிருக்கையில், கௌதமர் சிறந்தஞானியாகிப் பலவிடத்துஞ் சென்று செய்துவரும் பிரசங்கத்தைக்கேட்ட அநேகர் தீயவழிகளினின்றுநீங்கி நல்லொழுக்கமுடையவராகளாயினரென்பதைச் சுத்தோதனன்கேட்டுத் தான் இறக்குமுன்னமே ஒருமுறையேனும அவரைப்பாக்கவேண்டுமென்றுவிரும்பி அடிக்கடி பலரைத் தூண்டினமையால் அவர்கள் கபிலவாஸ்துவிலிருந்துவந்து அரசன்கருத்தைப் புத்தருக்குத்தெரிவித்தாகள். அப்பால், புத்தர், சுத்தோதனன்முதலியோரைக்கண்டு தருமோபதேசஞ்செய்து அவர்களேயும் நலவழிப்படுத்தி நிக்ரோதவேணுவனத்தைநீங்கிக் கபிலவாஸ்துவுக்குச் செலலுவாராயினர்.

அங்ஙனஞ்செல்லுகையில், இடையயுள்ள பிரபாஸதேசத்தரசனுகிய வைரியனென்பவன் அவன் வேண்டுகோளினபடி நலவழிப்படுத்தக்கருதியபுத்தர் அரசமரத்திலிருந்து கடைநதெடுத்த நூறடிடமணிகள் கோக்கப்பட்டுள்ள மாலையால, "நமோபுத்தாய, நமோதாமாய, நமஸ்ஸங்காய" என்னுமந்திரத்தைத் தினநதோறும இரண்டிலக்கம (உ,00,00,0) தரம் ஜபித்து உருவேற்றுமபடி உபதேசித்து, அதனுலுண்டாகும்பயனையும் அவனுக்குக்கூறி, அப்பாற்சென்று, †நியகுரோதவனத்தையடைந்தாரென்று சொல்லுவதுண்டு.

பின்பு அவர் நியக்குரோதவனத்திலிருந்து கபிலவாஸ்துவைக்கிட்டிச் சுத்தோதனனுல் தக்கவாறு உபசரிததழைக்கப்பட்டு அநகரத்துள்ளே சென்றார். சுற்றத்தாரல்லாத ஏணையோர் அவமதித்து அவருக்குயாதோருபசாரமுஞ் செய்யவில்லை; துறவிகளே நகரத்தார் அழைதது சென்று பிக்ஷாபண்ணுவிப்பது அக்காலவழக்கமாகவிருந்தது, அவாகள் புத்தரைப் பிக்ஷாக்கு அழையாமலே இருந்துவிட்டார்கள. அதனுல், புத்தர், உரியகாலத்தில் பாத்திரமேந்திக்கொண்டு சுவேச்யர்களுடன்சென்று எவ்விடத்தும பிக்ஷாவாங்குவாராயினர, தன்புத்திரர் இப்படிவீடுகள்தோறும்போய்ப் பிக்ஷையெடுக்கிறரென்றசெய்தி சுத்தோதனன் காதிற்கு எட்டியது; எட்டவே அவன் எழுநது விரைவாக ஓடிவநது அவரைக்கண்டு, "மகிமைபொருந்திய புத்தரே, இப்படிச்செய்து என் எங்கீர்யெல்லாம் அவமதிப்புக்கு உள்ளாக்குகிறீர? நீர எல்லாருடைய

---

* சிவரம் - பௌத்தபிக்ஷுக்கள் தரித்துக்கொள்ளும் ஆடை.

† நியக்குரோதவனம் - ஆலமரச்சோலை; இது கபிலவாஸ்துவிற்குச் சமீபமாகவுள்ளது.

வீடுகளிலுஞ்சென்று பிக்ஷையெடுக்கவேண்டுமா? உமக்கும் உம்மையடுத்த இவர்களுக்கும் பிக்ஷாபண்ணுவித்தற்கு என்னால் முடியாதா?" என்றுசொன்னன். புத்தர், "எங்களுடைய முரபிலுள்ளார்க்கு இவ்வாறு இரந்துபுசிப்பதே இயல்பு" என்றார். சுத்தோதனன், "அஃது எப்படி? நீர் புகழ்பெற்ற இராசபரம்பரையிற் பிறக்கவில்லையா? இந்த வம்சத்திற் பிறந்தவருள் ஒருவரேனும் ஒழுங்கீனமாக இப்படி நடந்ததுண்டோ?" என்றான். புத்தர், "நீரும் உமது முன்னோர்களும் இராசாங்க ஒழுக்கத்துக்கு உரியவர்கள். இதற்கு முன்புபிறந்தவர்களும் இனிப்பிறப்பவர்களுமாகிய *புத்தர்களுடைய மரபிற்கு நான் உரியேன்; ஆதலால், அவர்கள் மேற்கொண்டொழுகிய ஒழுக்கத்தையே கைக்கொண்டேன்; இஃது இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் தரும பெருமையையுடையது; இது நிற்க, ஒருவன ஒருபுதையலைக் கண்டெடுத்தால் அதனைத் தன் தந்தைக்குக்கொடுப்பது அவனுடைய கடமையாகும்; ஆதலால், நான் கண்டெடுத்த இப்புதையலைத் தருவேன்; தாமதியாமற் பெற்றுக்கொள்க" என்றார். சுத்தோதனன் நாணமுற்றுப் புத்தருடைய பிக்ஷாபாத்திரத்தைக் கையில் வாங்கிக்கொண்டு புத்தரைத் தன் அரண்மனைக்கு அழைத்துப்போய் அவருக்கும் அவருடன்வந்த ஆயிரத்தைநூறு பிக்ஷுக்களுக்கும் அமுதுசெய்விப்பானாயினன். இங்ஙனம் கபிலவாஸ்துவிலிருக்கையில், ஒருநாள், புத்தர் தாம் பிக்ஷுவாக இருத்தல் பற்றி நாணிய சுத்தோதனனுக்கும் தமதுடைய தாயத்தாக்கும் தாம்

---

* உலகத்திற் பாவங்கள்பெருக புண்ணியங்கள் குறைந்த காலந்தோறும் உபதேசத்தால் அப்பாவங்களைப்போக்கி அருளறத்தை நிலைநிறுத்தி உயிர்களை நல்வழிப்படுத்தற்பொருட்டுப் புத்ததேவர் அவதரித்தருளுவரென்பது பௌத்தநூற்றுணிபு. அப்படியே இந்தக் கௌதமபுத்தருக்குமுன்பு அவதரித்த புத்தர்களுக்கு அளவில்லையென்று கூறுவர், அஃது, "இறந்த காலத் தெண்ணில்புத் தர்களுஞ், சிறந்தருள சூர்ந்து திருவாய் மொழிந்தது" (கூ0-ம் காதை, கச-கந.) என்ற மணிமேகலையிற் கூறியிருத்தலாலும் பெறப்படுகின்றது அவர்களுள், கௌதமபுத்தருக்குமுன்னமே முறையே அவதரித்திருந்த இருபததேழு புதர்களுடைய பெயர்களமட்டும் இப்பொழுது தெரிகின்றன; அப்பெயர்களை, மணிமேகலைப் புத்தகத்தின் கூ0உ-ம் பக்கத்திற்காண்க. கௌதமபுதருக்குப்பின்பு அவதரிப்போராகிய புத்தர் பெயர் மைத்திரேயபுத்தரென்பது என்பர். அதனை, பின்னெடுத்துக்காட்டப்படுமை சுக்கியாகப்பரணியின் உரையாலுணர்க:— 'அந்தத் ததாகதபுத்தர் ஸ்ரீவாரணியிலே தருமமருளிச்செய்கிறார்: இனிப் பிறக்கக்கடவ மைத்திரியாழ்வாரான புத்ததேவர்க்குப் பாதாளதலத்திலே மாணிக்கத்தால் அடித்துக்கிடந்ததொரு கோயிலுண்டு, அக்கோயில் மாணிக்கத்தினாளிகை; ஐந்நூறுயோசனைநீளமும் ஐந்நூறுயோசனையகலமுமுள்ளதொன்றென்று தம்முடைய ஸ்ரீபாதத்திலொன்றாலே பெருவிரலும் மணிவிரலுங்கொண்டு எடுத்துக்காட்டியருளி மீண்டும் காவாலே, அழுத்தியருளினரென்றுண்டு.'—"சதபரானன்" என்னுந் தாழிசையின விசேடவுரை.) மைத்திரியாழ்வார் - மைத்திரேயபுத்தர்; புத்தரையும், அவருடைய தாதுக்களையும், பௌத்தபிக்ஷுக்களுள மேம்பட்டோரையும் ஆழ்வாரென்றல் தமிழ்ப்பௌத்தநூன்மரபென்று தெரிகின்றது, புத்ததாதுக்கள் தாதுஆழ்வாரென்றும் பௌத்தபிக்ஷு ஒருவர் ஏழமடிப்படுதததாடையாழ்வாரென்றும் நீலகேசித்திரட்டுமா முதலியவற்றிற்கூறப்பட்டிருத்தல்காண்க.

பெற்றிருந்த *இருத்தியாற்றலகளைக்காட்டி அவைகளால் தன்புமதிக்கப பெற்றுப் பின்பு தருமோபதேசஞ்செய்தார

**ததாகதர் கபிலவாஸ்துவிற்குச் சென்றபொழுது முதல்ந கபிலச்சோஷ்டியென்ற ஒருபிரபுவின்வீட்டிலும பின்பு தமதுதாயின் சரீரதாது வைக்கப்பட்டுள்ள ஆலயத்திலும தங்குவாராய் அநகரவீதிகளிற்சென்று பிக்ஷையெடுத்துப் பாதசாரமாகமியவுடன் தமது இருப்பிடத்திற்குச் செல்லுவாரென்றுசொலலுவர.

அந்நகரத்திலே துவாதச நிதானத்தைப்பற்றியும மஹாபரிநிர்வாணசூத்திரத்திலுள்ளபடி பிரஜஞாபாரமிதையைப்பற்றியும புதர உபதேசித்ததைக்கேட்டுப் பௌத்தராகினோ மிகபலர.

அந்நாட்களிலே ஒருநாள் சிஷ்யர்களோடு புதர்தாதனுடைய அரண்மனையிற் பிக்ஷைக்குப்போனபொழுது ஆங்குள்ள ஆணபாலரும பெண்பாலாராகிய இருநிறத்தாரும வந்து பணிந்து புதரை உபசரித்தார்கள். யசோதரைமட்டும வரவிலலீல. ஆபதாகல செவ்வு புத்ததரிசனத்திற்காக வரவேண்டுமென்று யசோதரையை யழைத்தபொழுது, அவள், "என்னைக் குணவதியென்று தாம் எண்ணியிருபபின், அவர என்னை நல்வழிப்படுத்தற்பொருட்டு இங்கே எழுந்தருளுவார; அப்படியாழுது அடியேனும அவரை இவ்விடத்திலேயே தக்கவாறு வழிபடுதற்கு உரியேன்" என்று சொன்னாள். புதர, தமமைத தரிசித்ததற்குவந்த குழாங்களுள்ளே யசோதரையைமட்டுங்காணாமையால தாம முன்பு கருதியிருந்தவாறே அவளுக்குத் தருமோபதேசஞ்செய்து ஆசிரியரதற்குரிய பிச் சிஷ்யாகளாகிய இரண்டு பிக்ஷுக்களுடன் அவளிடஞ்சென்று அவளாற் பூசிக்கப்பட்டுத் தமது பழைய நிலைமையைநினைந்து வருந்தி மிகத் துக்கித்த அவளது துயரத்தைத தமது இனியமொழிகளாற்போகி, எல்லாவற்றாலும மேம்பட்டு விளங்கிய அபபெண்மணியின் நற்குணஙகளையும செய்கைகளையும அவளுடைய உண்மையான வைராகியதையும அங்கேகவந்திருந்த சுத்தோதனன் சொலலக்கேடடு மகிழ்ந்து, பழமபிறபபிலும் அவள் தூய்மையையுடையவளாயிருந்ததினாலைபற்ற ஆண்டுள்ளாரெல்லோரக்கும புலப்படுத்துதறகு அவனிப்பற்றிய ஜாதககதையொன்றைச் சொல்லி அவளுக்குத் தமமுடைய தருமததை உபதேசித்தார.

இவ்வாறு உபதேசமபெற்றுக்கொண்ட யசோதரை, சிலதினஙகளுக்குப்பின், தன் புதல்வனுகிய இராகுலனியழைதது, "உன்தகபபனையை

---

* 'நின்னேப்பணியாது மானித்துநின்ற அரசன்முன் வில்லேற்றி அவனமானந் தவிர்த்து, மற்றுநின்ஞாதிகள் தமதுமானதத்தால் நினனே அவமதிப்ப, அவர்களது மாணம்போக்குதற்கு நீ இருததிகாட்டினமை மறந்தாயோ' (நீலகேசித்திரட்டு, புதத வாதச்சருக்கம், ஈ-ம பாட்டினை) என்பதனால், புத்தர் சுதோதனனுக்கு விலலேற்றியும் தமது பெருமையைப் புலப்படுத்தினரென்று தெரிகினறது.

டைத்து, அவரிடமிருந்து நீ பெறத்தக்க உரிமைப் பொருள்களை யெலாம் விரைவிற்பெற்றுக்கொள்" என்றாள். அதற்கு அப்பாலன் "என்தாதையை இன்னிரென்று அறிந்திலேனே ; நான்போய்க்கேட்பது எப்படி?" என்றான். யசோதரை உடனே அவனையெடுத்துக்கொண்டு அரண்மனைக்குப்போய் ஒரு சுவாமறையில்நின்று, அங்கே பிரகாசிக்கின்ற தீபத்தைச் சாவரவழியாற்காட்டி, "அதோ பலபிரகாரங்களில்நடுவே அழுதுசெய்துகொண்டிருக்கும் மிகுந்த ஒளியுள்ளவராகிய ஸுதாவாகிய உன்தந்தையாவார்" என்று சொல்லி, அப்பாலனை அவரிடமனுப்பினாள் ; எழு அல்லது எடுப்பிராயத்துக்குமேற்படாத அவன் அப்படியே புத்தரிடம்போய்த் தனக்குரியசொத்தைக் கொடுக்கவேண்டுமென்று இடைவிடாமற் கேட்டுக்கொண்டே அவரைத் தொடர்ந்து நியக்குரோதவனத்தையடைந்தான். அப்பொழுது புத்தர்—எல்லோரும் தங்கள் பிள்ளைகளுக்குக்கொடுக்கும் பொருளைத் தாழிவுள்ளவை ; நான் போதிவிருக்ஷத்தினடியில் அடைந்திதி அழிவற்றது ; அதனை இவனுக்குக்கொடுப்பேன்—என்று எண்ணிக்கொண்டு சாரிபுத்திரனைநோக்கி, "இராகுலனையும சங்கத்திற்சேர்த்துக்கொள்க" என்று கட்டளையிட, அவன் அவ்வாறு செய்தான்.

பின்பு ஒருநாள் புத்தர் கபிலவாஸ்துவிற்குப்போனபொழுது அங்கே மணமகனைக் இருக்கும் (கௌதமியின் புதல்வனுகிய) நந்தனையடைந்து, தம்மைக் கண்டு மிகுந்த பரபரப்போடு வந்த அனுபவத்தை அவனை நோக்கி, "அகங்காரமமகாரங்களை விட்டு ஆரியசத்தியத்தை உண்மைப்பொருளை யறிதலே எல்லாவற்றிலும் மேலானது" என்று உபதேசிக்க, அவன் அதனை மகிழ்ந்து கேட்டு, உடனே எல்லாவற்றையுங் துறந்து, அவருடைய பிக்ஷாபாத்திரத்தை வாங்கித் தன்கையிலெடுத்துக்கொண்டு, அவரோடு கூடவே நியக்ரோதவனத்தையடைந்து, பிக்ஷுவாகிய சங்கத்தைச் சார்ந்தான். நந்தன் சங்கத்தைச்சார்ந்தது, இராகுலன் புத்தரையடைந்ததற்கு முன்பென்று கூறுவதுமுண்டு.

இவ்வாறு இராகுலனும் நந்தனும் துறவுபூண்டதையறிந்து, "அரசாட்சி செய்தற்குரிய அருமைப் புதல்வர்களிருவரையும் சிறந்த பேரெருவனையும இம முதுமைப்பருவத்தில் இழந்துவிட்டேனே ; இனி யாதுசெய்வேன்?" என்று மிகுந்த வருத்தமுற்று மற்றவர்களுக்கேனும்

---

* நந்தனும ஸுந்தரியென்பவளும், கௌதமி கௌதமனை வளர்க்கதெரடங்கியபின்பு அவள்பெற்ற மக்கள் ; 'புத்ததேவர்க்கு ஞாதியாவானெருவன் நந்தனென்பான; அவனுக்குத் தர்மோபதேசம்பண்ணித் தவமபடைத்தி அவனைப் பிடகத்திரய மோதுவிப்ப, அவன் நித்ராஸமயத்துத் தன் ஸ்திரீயாகிய வரசுந்தரியை நினைந்து அரற்ற, அந்த வேட்கையைத் தவிர்ப்பான் வேண்டித தேவலோகத்து அப்ஸரஸ ஸுக்களைக் காட்டி வரஸுந்தரிமேல் உபேக்ஷாபணணுவிக்கலுற, அவனும் அப்ஸரஸ்ஸுக்களைக் கண்டு ஸ்திரீவேட்கை பெருத்துத தவம்விட்டுப் போயினன்' எனபது, நீலகேசித்தீராட்டு, புத்தவாதச்சருக்கம், ௧௯ - ம் பாட்டுரை.

இனி இந்த வருத்தமில்லாதிருக்கும்படி செய்யவேண்டுமென்றெண்ணி அந்த சுத்தோதனனுடைய வேண்டுகோளின்படி, பெற்றோர்களுடைய அனுமதியின்றிப் பிள்ளைகளை பிக்ஷுக்களாகச் செய்வித்தல் கூடாதென்ற விதி அப்பொழுது அவரால் உண்டுபண்ணப்பட்டது.

போதிவிருக்ஷத்தினடியில் ஞானோதயமானகாலந் தொடங்கி இது வரையிற் புத்தருக்கு இவ்வாறு பதினெட்டு மாதங்கள் சென்றனவென்பர்.

பின்பு இராஜகிருக நகரத்தைச்சார்ந்த வேணுவனஞ்செல்ல நினைந்து வழிக்கொண்டு இடையேயுள்ள அநேக மதஸ்தர்களையெடுத்த 'அனுப்பிரியா' என்னுமிடத்தில ஒருமாந்தோப்பில் தங்கியிருக்கும்பொழுது அங்கே தரிசித்தற்குவந்த உறவினராகிய சாக்கியர்கள்பலரும் கோலியர்கள்பலரும் வேறுபலரும் அவரிடம் தருமோபதேசமபெற்றுப் பௌத்தமதத்தை அடைந்தார்கள். அவர்களுள்ளே மிகப் பிரஸித்தரானவர்கள் *ஆனந்தன் *தேவதத்தன், உபாலி, †அனுருத்தனென்பவர்கள். ஆனந்தன் புத்தரை வழிபடுபவர்களிலும் அவருடைய அன்பைப்பெறறவர்களிலும மேற்பட்டவன்; தேவதத்தன் பிற்காலத்திற் பொறாமையுற்றுப் புத்தருக்கு விரோதியாகி லங்கத்தில் பலகலகங்களைச்செய்தவன்; உபாலி சாதியில் அமபட்டன்; இவன் தன்னுடைய அறிவின்மிகுதியால் பௌத்தராகளுள்ளே மிக்க கௌரவமடைந்தவன். அனுருத்தன் பௌத்தமதத்தைச் சார்ந்த தத்துவசாஸ்திரங்களில் மஹாநிபுணனானவன்.

அப்பால் தகாகதர் தமது பெரியலங்கத்தோடு கோசலதேசத்தில் ‡'ரப்தி' நதிக்கரையிலுள்ளதாகிய ஸ்ராவஸ்திநகரஞ்சென்று அங்கேதம வரவுநோக்கி மிகஅலங்கரிக்கப்பட்டிருந்த §ஜேதவனவிஹாரத்தை லங்கத்திற்காக மேற்கூறிய அநாதபிண்டகனென்றபிரபு தாரைவார்த்துக் கொடுக்க, அதை அங்கீகரித்துகொண்டு அதிற்றங்கிச செய்துவந்த உபகாரியாலங்களைக்கேட்டுப் பௌத்தராஜர் பலர்; பின்பு அநாகரத்தரசனாகிய 'பிரஸேனஜித்' என்பவனும் வந்து தருமங்கேட்டு உலகப்பற்றை

புத்தர் தருமசக்கிரப்பிரவர்த்தனஞ் செய்யத் தொடங்கிய காலமுதலாக இவ்வாறு அவரால மூன்றுவருடங்கள் கழிக்கப்பட்டன.

---

* ஆனந்தனும் தேவதத்தனும் சுத்தோதனன் தம்பியாகிய சுக்கிலோதனனுடைய பிள்ளைகள்.

† அனுருத்தன் – சுத்தோதனன் தம்பியாகிய அமிர்தோதனனுடைய குமாரன்.

‡ இக்நதி அசிரவதியென்றுங் கூறப்படும்.

§ இவ்வனம், முதலில் ஜேதனென்ற ஏரசனுடையதாக இருந்தமையின், இப்பெயர்பெற்றதென்பர்; இதில் புத்தர் எழுவருஷகாலம் வஸித்தாரென்று ஜப்பான் தேசத்துப் பௌத்தநூல்களால் தெரியவருகிறது.

பின்பு, புத்தர், வைசாலிநகரஞ்சென்று அதைச்சார்ந்த 'மஹாவன மென்னும் சோலையிலுள்ள கூடாகாரவிஹாரத்தில் தங்கி அங்கேவருவோர்களுக்கெல்லாம் தருமோபதேசஞ் செய்துவந்தார்; அப்படியிருக்கையில், உரோகிணிநதியைப்பற்றிக் கோலியர்களுக்கும் சாக்கியர்களுக்கும் பிராணஹானியைத் தருவதற்குரிய பெரியகலகம் உண்டாயிருக்கிறதென்று கேள்வியுற்றுக் காருணியமேலிட்டால் உடனே கபிலவாஸ்துவுக்குச் சென்று அவர்களோடு சமாதானமுற்றிருக்கும்படி செய்துவிட்டு மீண்டு வந்து மஹாவனத்திலேயிருந்தனர்.

இவர் அவ்வனத்திலிருக்கும் நாட்களிலே, சுத்தோதனன் நோயால் மிகவும் துன்புறுகின்றனென்று அறிந்து அவ்வனத்திலிருந்து கபிலவாஸ்துவுக்குச்சென்று அவன் இறக்குங்காலத்திலே உடனிருந்து அவனிறந்தபின்பு அவனுக்குச்செய்தற்குரிய அபரக்கிரியைகளையெல்லாம் தாமே செய்துமுடித்தார். சுத்தோதனன் இறந்தகாலம் ஈசானசகாப்தம் நூற்றேழாவது வருடமென்றும், இறக்குமபோது அவனுக்குப் பிராயம தொண்ணூற்றேழென்றுங் கூறுவர்.

அப்பால், புத்தர், கபிலவாஸ்துவினின்றும் மீண்டு மஹாவனத்துள்ள கூடாகாரவிஹாரதத்துக்குவருது லங்கத்தீதாடு தங்குவாராயினர். அங்கே கபிலவாஸ்துவிலிருந்து தொடர்ந்துவந்த மஹாப்பிரஜாவதிகௌதமி, யசோதரை முதலிய சாக்கியமாதர்கள் பலர்க்கும் கோலியமாதாகள் பலர்க்கும தருமோபதேசஞ்செய்தார்.

அதுகேட்ட மஹாப்பிரஜாவதிகௌதமியும் மற்றமங்கையரும் இல்வாழ்க்கையில வெறுப்புற்றவராகளாய்த் தங்களையும லங்கத்திற்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்தார்கள். புத்தர் தமது தாய்சொல்லியதை நிறைவேறறுதற்பொருட்டே பெண்பாலாரும பிக்ஷுணிகளாகி லங்கத்தையடையலாமென்று நியமித்ததன்றிப பிக்ஷுணிகளுக்குரியவிதிகளையும அப்பொழுது கட்டளையிட்டார். உடனே மேற கூறிய மங்கையரபலரும பிக்ஷுணிகளாகிச சங்கத்தைச் சேர்ந்தார்கள்; அவர்களுள் முதலில பிக்ஷுணிகளானவர்கள் மஹாப்பிரஜாவதிகௌதமியும யசோதரையும்; அதுதொடங்கி ஸ்திரீகளும பிக்ஷுணிகளாகிச சங்கத்தைச்சேருமவழக்கம் நடைபெற்றுவருகிது.

முதலில் புத்தருக்கு ஸ்திரீகளை லங்கத்திற் சேர்த்துக்கொள்ளுதற்கு மனமில்லாமலிருந்ததென்றும், பின்பு, ஆனந்தனுடையவேண்டுகோளால் அவர்களைச் சேர்த்துக்கொள்ளுதற்கு அவர் உடன்பட்டாரென்றும் சொல்லுவதுண்டு.

பின்பு புத்தர் மஹாவனத்திலிருந்து பிரயாகைக்கு அருகேயுள்ள கௌசாம்பிநகரத்தைச்சார்ந்த மகுளமென்னுமலைக்குச்சென்று

அதிற் சிலகாலந்தங்கியிருந்து, அப்பால், இராஜகிருகநகரம்போய்ப் பிம்பசாரனுடைய மனைவியாகிய க்ஷேமையென்பவளுக்குத் தருமோபதேசஞ்செய்தார். அதுகேட்டு அவள் பிக்ஷுணியாகி லங்காத்தையடைந்தாள். அப்பொழுது லங்காத்திலுள்ள ஒருபிக்ஷுவானவர் தமக்குள்ள இருத்திசக்தியைப் புலப்படுத்தநினைந்து, அற்புதமானவழியாலே ஒரு பிக்ஷாபாத்திரம் பெற்றார். அதைப்பார்த்த புத்தர் வருத்தமடைந்து, "பிக்ஷுக்கள், தமக்குக்கிடைத்த இருத்திசக்தியை நிர்வாணமடைதற்கு உரியவழியை உறுதிப்படுத்திக் கொள்ளுதற்கன்றி உலகத்தார் மதிக்கும படி ஆச்சரியகரமானகாரியங்களைச் செய்வதற்குக் கருவியாகக்கொள்ளுதலில யாதும் பயனில்லை" என்று பிக்ஷுக்கள் யாவருக்குஞ்சொல்லி மேற்கூறிய பிக்ஷாபாத்திரத்தை உடைத்து விசியெறிந்தார். இவ்வாறு இருத்திசக்தியைப்பாராட்டி அற்புதகாரியங்களைச்செய்தலில யாதும பயனிலலையென்றுசொன்னமையாற் புத்தருக்கு அவ்வகையானசக்தி யாதொன்றும் இல்லையோவென்று பலர் எண்ணங்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அவ்வாறெண்ணியதைப் பிம்பசாரனுக்குரைத்தார், தமக்குள்ள சக்தியைப் புலப்படுத்தற்கு ஒருகாலத்தில் பற்பல அற்புதகாரியங்களைச்செய்தார்.

அதன்பின் திரயஸ்திரிம்சலோகஞ்சென்று அங்கே இருதிரன்மகளாகப்பிறந்து வளர்ந்துகொண்டிருந்த தாயாகிய மாயாதேவிக்குத் தத்துவோபதேசஞ்செய்து சிலகாள் அங்கிருந்துவிட்டுப் பின்பு அவ்வுலகிலிருந்து லங்கர்ஷ்மனனுமிடத்திலிறங்கி ஜேதவனவிகாரத்திற்குச் சென்றிருந்தாரென்று சொல்லுவதுண்டு.

அவர் அந்தவிகாரத்திலிருக்கும்பொழுது விரோதிகளிற்சிலர், தன்னை அவர் விரும்பிக்கூடினதாகச் சொல்லுமபடி துஷ்டமங்கையாகியசுந்தரியென்பவளைத் தூண்டினார்கள். அவளும் அவ்வண்ணமே அவர்பால் தோஷாரோபணம் செய்வாளாயினள். அந்த அபவாதம் அழுகுகாலுள்ள சிலருடைய முயற்சியாற் காரணமின்றியுண்டாக்கப்பட்டதென்று விசாரணையில் யாவர்க்கும புலப்பட்டுவிட்டது.

அப்பால், புத்தர் கபிலவாஸ்துவுக்கு அருகேயுள்ள *சிம்சுமாரம் என்னுங்கற்பாறையிற் சிலகாலமிருந்தார். இருக்குமபொழுது, அங்குவந்த நகுலனென்னும பிரஸித்தசிஷ்யனுடைய தாய் தந்தையர்களும, மௌத்கலியென்பவனுடைய தாய்தந்தையர்களும் அவர்பால் அறங்கேட்டுப் பௌத்தராஞர்கள். பின்பு புத்தர் கௌசாமபிநகரத்துக்கு லங்காத்துடன் மீண்டுவந்தார். அவர் அந்நகரத்திலிருக்கும்பொழுது மௌத்கலியென்பவனால் லங்காத்திற் பெருங்கலகமுண்டாயிற்று. புத்தர் இயன்றவரையில் சமாதானஞ்செய்தும் அடங்கவில்லை; கலகம் மேன்மேலும்

* இது சம்சுமாரமென்றும் காணப்படுகின்றது.

வளர்ச்சியுற்றுவந்தது. அதுதெரிந்த புத்தர் தமது சிஷ்யர்களோ, அங்கே விட்டுவிட்டுத் தனியே பாரிலேயகமென்ற காட்டையடைந்து அக்காட்டில் ஆங்குள்ளவர்களால கட்டிக்கொடுக்கப்பட்ட குடிசையொன்றிலிருந்தார இருக்கையில ஸங்கத்துளள சிஷ்யர்கள் தாங்களசெய்த குற்றவிஷயத்தில அநுதாபமுறறு, "போதி வேருதன் சரணலால அரண்புகேம" எனறு அவரைச சரணமடைநது பணிநது,

பூமகனே முதலாகப் புகுந்தமர ரொண்டிசையுந்
தூமலரா லடிமலரைத தொழுதிரந்து வினவியநாட்
காமமுங் கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த்
தீமைசால் கட்டினுக்குத் திறற்கருவி யாய்க்கிடந்த
நாமஞ்சார் நமர்களுக்கு நயப்படிமா றினிதுரைத்துச்
சேமஞ்சார நன்னெறிக்குச் செலலுமா றருளினேயே!

எண்ணிறந்த குணத்தோய்நீ யாவாக்கு மரியோய்நீ
புண்ணிறைந்த வருளோய்நீ யுயர்பா நிறைததோய்நீ
மெய்ப்பொருளே யறிந்தோய்நீ மெய்யறமிங் களித்தோய்நீ
செபபரிய தவததோய்நீ சோவார்க்குச் சார்வுநீ

நன்மைநீ தின்மைநீ ணனவுநீ கனவுநீ
வன்மைநீ மென்மைநீ மதியுநீ விதியுநீ

யிம்மைநீ மறுமைநீ யிாவுநீ பகலுநீ
செமமைநீ கருமைநீ சோவுநீ சார்வுநீ"

அருளாழி பயந்தோய்நீ யறவாழி நயந்தோய்நீ
மருளாழி துரந்தோய்நீ மறையாழி புரிந்தோய்நீ

மாதவரின் மாதவனீ வானவருள வானவனீ
போதனருட போதனனீ புண்ணியருட் புண்ணியனீ

ஆதிநீ யமலனீ யயனுநீ யரியுநீ
சோதிநீ நாதனீ துறைவனீ யிறைவனீ

யருளுநீ பொருளுநீ யறவனீ யகவனீ
தெருளுநீ திருவுநீ செறிவுநீ செமமனீ"

(வீரசோழியம், யாப்புப்படலம், கக-ம் கலிததுறையின் உரையிற்கண்டவை)

என்றுதுதித்து "எங்களகுறறதைதப் பொறுதது ருள்க" எனப் பிராரத்தித்தாகள்.

புத்தா அவாகளுடைய வேண்டுகோளுககு இசைந்து பொறுத்துக் கொண்டதன்றி அவாகளுககுச இததசமாதானமுண்டாகுமவண்ணம தா மோபதேசமுஞ்செய்தா.

அதனைக்கேட்டு மகிழ்ந்த சிஷ்யாகளுடன் மகததேசஞ்செல்லும புத்தர், இராஜகிருக நகரத்துக்கருகேயுள்ள கிராமமொன்றிலிருப்பவனனும, உழுதொழில்செய்து சீவிப்பவனுமாகிய பாரத்துவாசனென்னும பிராம

ணியடைந்து பிக்ஷுவே கேட்டார். அப்பொழுது அவருடைய தோற்றப் பொலிவைக்கண்ட பலர்வந்து அவரை வணங்கிநின்றார்கள். பாரத்து வாசன் அவர் தன்பால் இரத்தற்குவந்ததைநினைந்து கோபங்கொண்டு, "பிக்ஷுவே! நான் உழுது விதைத்து அதனலுண்டாகும்பயனையுண்டு சுக மாக இருக்கின்றேன்; நீரும் இவ்வண்ணமே செய்வீராயின், உமக்கு உள தாகுங்குறை யாது?" என்றான். புத்தர், "நானும் உழுகின்றேன்; விதை க்கின்றேன், அதனலுளதாகும் பயனைநுகர்ந்து இன்புற்றிருக்கின்றேன்" என்றார். அதற்கு அவன் "நீர் உழுபவரென்பது உண்மையாயின், மாடு எங்கே? கலப்பை எங்கே? விதைமுதலியன எங்கே? காட்டு மின்" என்றுகேட்டான். அதற்குப் புத்தர் "விதை ஸ்ரத்தை; அதை முளைத்து விருத்தியடையும்படி செய்வதாகிய மழை நற்காரியம்; வயல் தருமநூல்; உழுதற்குரிய கலப்பையின் அங்கங்கள் அறிவும்வணக்கமும; தாமம் அக்கலப்பையின்பிடி; உழும் எருது விடாமுயற்சி; அவ்வெருத் தைத் தன்வயமாக்கிச் செலுத்துங்கயிறு மனம்; தாற்றுக்கோல் ஊக்கம; பயிர்க்கு இடையூறுகிய களை மபக்கமாகும" என்றும், "இத்தகையதான வியவஸாயம் நிர்வாணமாகிய பலத்தை அளித்துப் பலவகைத்துக்கங் களையும போக்குகின்றது" என்றுகூறினர். இவ்வினியமொழிகளைக் கேட்ட பாரத்துவாசன், தனது வீண்செய்கைகளைத்துறந்து அவருக்குச் சிஷ்யனனான்.

பின்பு புத்தர் அங்கிருந்து கோசலதேசத்துள்ள ஸத்தியப்பிரியை யென்னுநகரத்தையடைந்து அங்கே சிலகாலந்தங்கினர். அப்பால் தெற் கே நெடுந்தூரம்வந்து பின்பு காசி, வைசாலி இந்நகரங்கள்வழியாகச்சென் று ஸ்ரீவஸ்திநகரத்தையடைந்தார். இடையிடையே அவர்செய்துவந்த் பிரஸங்கங்கள் பல; அவற்றைக்கேட்டுப் பௌத்தராஞர் மிகப் பலர்.

சிலநாளைக்குப்பின் ஸ்ரீவஸ்தியில் இராகுலனுக்கு மஹாராகுலஸூ த்திரத்திலுள்ள தர்மத்தைப்போதித்தார். அப்பொழுது அனுக்குப் பிராயம் பதினெட்டு.

அதன்பின் இராகுலன் மிக்க பரிபாகமடைந்திருக்கிறனென்பதை அறிந்துகொண்டு அவனைப்பிக்ஷுவாக்கி அவனுக்கு இராகுலஸூத்திர மென இக்காலத்தில் வழங்கும்நூலை உபதேசித்தார்.

பின்பு நியகுரோதவனத்தையடைந்து அதிற்சிலகாள் தங்கியிருந் தார்; இருக்கையில் சுத்தோதனனுக்கும் அவனைப் பின்பற்றி அரசனையிரு ந்த பத்திரகனென்பவனுக்கும் பின்பு கபிலவாஸ்துவை ஆண்டுகொண்டி ருந்த மஹாநாமனென்பவனுக்குத் தருமோபதேசஞ்செய்து அவனை உய் வித்தார்.

அக்காலத்தில், அங்கேவந்த ஸுப்பிரபுத்தன்தன்மகளாகிய யசோ தரையைத் துறந்ததுபற்றிப் புதனை வெளிப்படையாக வைதானென்

றும, அப்பொழுது பூமிவெடிக்க அவ்வெடிப்பில்விழுந்து அவன் பாத மமிபோயினனென்றும் சொல்லுவதுண்டு.

பின்பு, புத்தர், ஆலவியென்னு மூருக்குப்போய் அங்கே குழந்தை களபலவற்றை விழுங்கிக்கொண்டுவந்த துஷ்டராக்ஷஸனொருவனுக்குத் தருமோபதேசஞ்செய்து, அவனைச சிலவாளுக்கினர். அவர், அவ்வூரிலி ருகுமபொழுது, ஒருநாள் தருமங்கேட்டலில் மிக்க விருப்பமுற்றுவந்த ஒருவன் கமமபசியோடிருத்தலையறிந்து உண்பித்து, அப்பால் அவனுக் குத தருமோபதேசஞ்செய்தார். இதனால், புத்தரிடம தருமோபதேசம பெறுவதற்குப் பட்டினியிருத்தல்முதலிய விரதங்கள் வேண்டாவென் பதும அவா மிக்க இரக்கமுடையரென்பதும வெளியாகின்றன.

அதன்பின் மகததேசத்தையடைந்து அதிலுள்ள ஊர்களிதோறுஞ் சென்று கேட்பவாகளுடைய அளவுக்குத் தக்கவண்ணம் தருமோபதே சஞ்செய்துகொண்டு வருபவர், ஒருவேடனுற் கட்டப்பட்ட வலியொன் றில் அகப்பட்டுச சிக்குண்டு வருந்திய மானொன்றைக் கண்டு இரங்கி அதை அவ்வலியினின்றும விடுவித்துவிட்டுச் சென்று ஒருமரத்தடியிற் சிலசமாதியில் இருந்தார். இருந்தபொழுது, மேற்கூறிய வேடன் தான் அகபடுத்திய மானை அவா விடுவித்ததுதெரிந்து கோபங்கொண்டு அவ ரைக கொல்லத்தொடங்கி அவருடைய மகிமையால் தடிப்புண்டு நின்று விட்டான். சிறிதுபொழுது சென்றபின், அவர் அவனைப்பார்த்துச் செய்த தருமோபதேசத்தால், அவ்வேடனும் அவனுடைய குடுமபத்தாரும அல் லவைகடிந்து நல்லவைபுரிவாராயினர்.

அபபால், ஸ்ராவஸ்திநகரஞ்சென்று, அங்கே சிலநாள் தங்கி, "அறஞ் செய்மின்; மறம் ஒழிமின்" எனப் பிரஜங்கமாரி பொழிந்து பாவவெப் பத்தைத தணித்து வருபவர், தமது பிக்ஷுப்பாத்திரத்தைக் கூடவிரு நத பிக்ஷுவொருவா, கவர்ந்துகொண்டு பிரிந்துசென்றதைப் பாராட் டாமல இரண்டுமுறை பொறுத்தார்; பொறுத்தவர் பின்னும் அவ்வாறு நிகழாதிருக்கவேண்டி, தமக்கு உதவியாகப் பிரியாமற்கூடவிருக்கும் படி ஆனநதனுக்குக் கட்டளையிட்டார். அவனும் அவ்வாறே விட்டுப் பிரியாமல அவருக்குச செய்யவேண்டிய பணிவிடைகளை அன்புடன் செய்துவருவானுயினன்.

அப்படியிருக்கையில அநாகரத்துள்ள விசாகையென்பா ளொரு மடமதை, புத்தருடைய மகிமைகளைக் கேளவியுற்றுத் தருமத்தின் நுண் மைகளை ஆராய்ந்து, சங்கததா இனிது தங்குதறபொருட்டுப் பூர்வாராம மென்ற ஒரு சோலையையும அதிற் செவ்விதாகக கட்டப்பட்ட விஹார மொன்றையும அளித்தாள்.

பின்பு அவா சாலியையென்னுமூருக்கு அருகேயுள்ள கரட்டையடை ந்து, அதில ஆலத்துநிழலிலிருப்பவருக்கு அஞ்சலிமாலனென்னும் கொடிய

திருடனுக்குத் தமது இனியமொழிகளால் தருமோபதேசஞ்செய்ய, அவன் அதிகேட்டு எல்லாவற்றையும் வெறுத்துப் பிக்ஷுவாயினன்.

'அங்குலிமாரகனென்பானொருவன் வித்தை சாதிப்பதுடையனாய் அதற்கு ஆயிரம்விரல் தேடவேண்டி அதற்கு இரண்டுகுறைய ஆயிரம் விரல்தேடி அதற்குத் தன் மாதாவின் விரலில் இரண்டு குறைக்கப்புகப் புத்தனார் சென்று அவனைத் தார்மிகனுக்கித் தவம் படுத்தார்' (நீலகேசித் தீரட்டி, புத்தவாதச்சருக்கம், கடக-ம் பாட்டினை) என்பதனால், அங்குலி மாரகனென்ற தறுகண்ணொருவன் ஒருகாலத்தில் புத்தருடைய தரு மோபதேசத்தால் உய்வுற்றனென்று தெரிகின்றது; இவனே மேற்கூறிய அங்குலிமாலனென்று சொல்லுதற்கும் இடமுண்டு.

புத்தருக்கு ஞானோதயமானபின்பு இவ்வாறு இருபதுவருடங்கள் சென்றன.

இதற்குப் பின்பு புத்தர் பலவிடத்துஞ் சென்று அவரவர்களுடைய குணம் தொழில் அறிவுமுதலியவற்றிற்கு ஏற்பப் போதித்து அவர்களை நல்வழிப்படுத்தினரென்றுள்ள சரித்திரங்கள் மிகப் பலவாகவுள்ளன. அவற்றுள், இன்னதன்பின் இன்னது நடந்ததென்று அவைகளையெல்லாம் காலக்கிரமத்திற்கு ஒத்தபடி அறிந்து எடுத்தெழுதுவது எளிதாக இருக்கவில்லை; ஆதலால், இதற்குமேலும் அவருடைய நிருவாணத்திற்கு முன்புமுள்ள காலத்தினடந்த முக்கியமான சிலவிஷயங்கள்மட்டும் இங்கே எடுத்து எழுதப்படும்.

ஒருகாலத்தில், சூனியப்பிராந்தமென்னும இடத்திலிருந்துவந்த தருமங்கேட்டுத் துறவுபூண்டு பௌத்தசங்கத்தைச்சாராத ஒரு வியாபாரி தன்னைச் சார்ந்தவர்களையும் நல்வழிப்படுத்தினானந்து புத்தரை யடைந்து, "என்னுடைய சுற்றத்தார்களுக்குத் தருமத்தை உபதேசித்தற்பொருட்டுச் செல்லுதற்கு நீயோயாகின்றேன்; அங்ஙனஞ் செய்தற்கு விடைதருக" என்றான். அதற்குப் புத்தர், "சூனியப்பிராந்தத்திலுள்ள சனங்கள் மிகவும் மூர்க்கரன்றே; அவர்கள் நீ சொல்வதை மதியாமல உன்னைத் தூஷிப்பாராயின், நீ யாதுசெய்வாய்?" என்றார். அவன், "நான ஒன்றும் பேசேன்" என்றான். புத்தர், "அவர்கள் கோபங்கொண்டு அடிப்பாராயின் நீ செய்வது யாது?" என்றார். அவன், "மாறுக அவர்களை அடிக்கமாட்டேன்" என்றான்; புத்தர், "அவர்கள் உன்னைக் கொல்லத் தொடங்கினால் நீ யாது செய்வாயோ?" என்ன, அவன், "சாவினால் எனக்கு வரும் தீங்கு யாதொன்றுமில்லை; இறப்பையே விரும்புவோர் இவ்வுலகிற் பலருண்டு; நானே என்னுடைய வாழ்நாளைக் குறைக்கவாவது மிகுக்கவாவது முயலேன்" என்றான். இவற்றையெல்லாங்கேட்ட புத்தர் அவன் மனந்தூயனதலை யறிந்து, "நீ எண்ணியவாறே செய்துவருவாய்" என்று அவனுக்கு விடையளித்தார்.

மற்றொருகாலத்தில், கிருசாகௌதமியென்பாளொருமங்கை, தான் பெற்ற அழகிய குழந்தை நடக்கும்பருவத்திலேயே இறந்துபோனமையால், மிகவும வருத்தமுற்றுப் பலவாறு புலம்பி அன்பின் மிகுதியால் அக்குழந்தையினுடம்பையெடுத்து மார்போடணைத்துக்கொண்டு, தன்பால் அன்புள்ளவர்களுடைய வீடுகள்தோறுஞ் சென்று, "இக்குழந்தையைப் பிழைப்பித்தற்குரிய மருந்து எதேனும் உங்களிடம் இருக்குமாயின், அதனைக் கொடுத்துப் பாதுகாக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டு பரிதபித்துத் திரிவாளாயினள்; அதுதெரிந்த பௌத்தபிக்ஷுவொருவர் மனமிரங்கி, அவளைப் பார்த்து, "நீ கேட்கிற மருந்து இங்கே கிடைப்பதன்று; அதை வைத்துக்கொண்டிருக்கிற ஒருவரை மட்டுமயானறிவேன்" என்றார். கிருசாகௌதமி, "அவர் யாவர்? விரைவிற் சொல்லவேண்டும்" என்ன, அந்தப்பிக்ஷு, "மிகப் புகழ்பெற்றவராகிய புத்தரே; அவரிடம் போவாய்" என்று சொன்னார்; அவள் புத்தரை யடைந்து, வணங்கி, "ஸ்வாமீ, இறந்த இக்குழந்தையைப் பிழைப்பிக்கு மருந்தை அறிந்தருண்டோ?" எனறாள். புத்தர், "அதனை அறிவேன்" என்ன, அவள், "நீர் எந்தப் பசுவிலே, எந்த வேர், அல்லது வேறெவை கொண்டுவரும்படி கட்டளையிட்டாலும அவற்றையெல்லாம் விரைவிற் கொண்டுவருவேன்" என்றாள். அதற்குப் புத்தர், "ஒருபிடி கடுகுவேண்டும்" என்றார். அவள் அது கொண்டுவருதற்கு விரைந்துபோகாநிற்கையில், அவர அவளை யழைத்து, "ஒருவரும இறவாத வீட்டிலிருந்து வாங்கிவரவேண்டும்" என்று சொன்னார்; அவள நன்றென்று சொல்லிவிட்டுக் குழந்தையை ஏந்தி யணைத்துகொண்டு ஒரு வீட்டுவாயிலிற்சென்று, "ஒருபிடி கடுகு வேண்டும்" என்று கேட்டாள. அதைக்கேட்ட அவ்வீட்டார் கொணர்ந்து, "பெற்றுகொள" என்றுசொல்ல, அவள் அதை வாங்காமலநின்று, "உங்கள் வீட்டில் இதுவரையில் யாரேனும் இறந்ததுண்டோ? இறந்திருப்பின் இஃது எனகது வேண்டுவதில்லை" என்றாள்; அதற்கு அவரகள், இவளைப்பார்த்து நகைத்து, "நீ பித்துக்கொண்டனையோ? உயிரோடிருப்பவர்கள் மிகசிலர; இறந்தவர்கள் மிகப்பலர்; அங்ஙனமிருப்பவாகளுமபின்பு இறத்தற்குரியவாகளே" என்று சொன்னார்கள். அவள் அவ்வளவில் நில்லாது ஒவ்வொருவீட்டினுஞ் சென்று விசாரித்தபொழுது, என் பிள்ளை இறந்தானென்றும், என்னுடைய தாய்தந்தையர்கள் இறந்தார்களென்றும, என் மனைவி இறந்தாளென்றும், என் கணவன் இறந்தானென்றும், என்னுடைய அடிமைக்காரன் இறந்துவிட்டானென்றும் இப்படியே பலவாறுக ஒவ்வொருவரும கூறுவாராயினர். இவற்றையெல்லாங்கேட்ட கிருசாகௌதமி, பின்னும் பலமுறையகிலும் ஒருவரு மிறவாத வீடொன்றும் எங்கும்காணப்படாமையால், பிறக்தோர்யாரும் இறத்தற்குரியாரென்றுதெளிந்தவளாகிப் புத்திரசோகமொழிந்து மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, பிணத்தை மயானத்திற்சேர்த்து அங்கே

செய்யவேண்டியவற்றைச் செய்துவிட்டுப் புத்தரை யடைந்து வணங்கினள். புத்தர், "நான் சொல்லியவாறு கடுகு கொண்டுவரப்பட்டதோ?" என்று கேட்ப, அவள் நிகழ்ந்தவற்றைக் கூறினள். அதைக்கேட்ட புத்தர், "இவ்வுலகில் ஒன்றுமே நிலையுள்ளதன்று" என்னும் உண்மைப்பொருளை அவளுக்கு நன்குவிளங்கப் போதித்தார். அதனைக்கேட்ட அவள் மனமாசு நீங்கிப் பௌத்தமதத்தைச்சார்ந்து பிறப்பறுத்தற்குரியவழியில் நின்று நோற்பாளாயினள்.

மற்றொருகாலத்தில், மிக்க உலோபகுணமுடையானொருவன், ஒருவருக்கும் ஒன்றுங்கொடாமல் தான்மடியும் இன்பதுகர்தலையே பெருமபயனாக எண்ணிச் சீவித்துவருகிறானென்பதைக் கேள்வியுற்ற புத்தர், இரக்கமுற்று, அவனிடத்துள்ள உலோபமென்னும் பெருங்குற்றத்தைப் போக்கி அவனை நல்வழிப்படுத்தநினைந்து தாமாகவே அவனிடஞ்சென்றார்; அப்பொழுது, வேறிடத்திருந்தால் 'பிறர் தன்னைக்கண்டுபிடித்துக் கேட்பார்களென்று அஞ்சி, அவன் தன்மனைவியோடு மச்சில் ஏறி அங்கே ஒருவருக்குந்தெரியாமல் தனியே அப்பஞ்சுட்டுத் தின்றுகொண்டிருந்தான்; புத்தரும் அம்மச்சிலேறி அவன் தின்னுமப்பத்தைப் பிசசையாக இரந்து பெற்றுக்கொண்டு தருமோபதேசஞ்செய்து அவனுடைய குறைகளையெல்லாமாற்றி அவனை உய்வித்தார்; இசசெய்தி, நீலகேசித் தீரட்டை, புத்தவாதச்சருக்கம, சூஅ - ம் பாட்டுரையில், 'ஒருவன் தன் ஸ்திரீயுடனுங்கூட மச்சமேறி அப்பஞ்சுட்டுத்தின்பானது உலோபமேபோக்குதற்கு நீ அவ்வழிச்சென்று அப்பமிரந்தது அறியாயோ' என்று வருதுள்ளது.

வேறொருகாலத்திற் புத்தர், எல்லாவுயிர்களையும் நல்வழிப்படுத்தநினைந்து கிருத்திரகூடமலையின் உச்சியில் ஏறிநின்று, மனங்கனிந்துருகத் தருமோபதேசஞ்செய்தபொழுது, ஸ்ரோஸ்ராரசக்கரரோகையமைந்த அவருடையபாதங்கள் அழுந்தினமையால், அம்மலையுசசியில ஆயிரவார ஆழிச்சுவடுகளும் அவற்றையுடைய பாதச்சுவடுகளும் உண்டாயின. அதனால, அது பாதபங்கயமலையென்று பெயர்பெற்றது:

"ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்
மாதய ரெய்த மக்களை நீக்கி
விலங்குந் தம்முள் வெரூஉம்பகை நீக்கி
யுடங்குயிர் வாழ்கவென் றுள்ளங் கசிந்தகத்
தொன்றுகா லத்து நின்றற முரைத்த
குன்ற மருங்கிற் குற்றங் கெடுக்கும்
பாத பங்கயங் கிடத்தலி னீங்கிது
பாதபங் கயமலை யெனும்பெயர்த் தாயது."

(மணிமேகலை, கo - ம் காதை, சுக - சுஉ.)

புத்தர், அம்மலியின்மேற் கட்டப்பட்ட விஹாரத்திற் பலநாளிருந்துகொண்டு தமதுகொள்கையைப் பலர்க்கும போதித்துவந்தார். அக்காலத்தில், அம்மலியில் சனங்கள் வருத்தமின்றி ஏறியிறங்குவதற்கு அகன்று நீண்டனவாகிய அழகியபடிகள் பிமபஸாரனற் செய்விக்கப்பட்டன. புத்தர் அம்மலியில் தங்கியபொழுது, தேவதத்தனென்பவன் பொறுமைகொண்டு அவருக்குப் பல தீங்குகளைச் செய்துவந்தான்; அவைகளெல்லாம் அவருடையமகிமையால விலகிப்போயின; அவன் அவ்வளவில்நில்லாமல், அவரைக்கொல்லும்படி யானையொன்றை ஏவினன்; சினந்து கொல்லவந்த அந்தயானை அவருடைய தருமோபதேசத்தைக்கேட்டும் அவர் கனிவுதகையைக்கண்டும் சினந்தணிந்து நின்றுவிட்டது; இப்படியே மிகவும் கோபங்கொண்டு கொல்லவரும் கொடியவிலங்குகளையுங்கூடத் தமது இருத்திவலியால் அடக்குமாற்றல் புத்தருக்கு உண்டென்பது பின் வருவனவற்றாலும் விளங்குகின்றது:

'ஓரரசன் பௌத்த தரிசனங்கொண்டு மிகவும் புத்தபக்தனுய்ச் செல்ல, பிரீதனுகிய புத்தனும அரசன்சாவாமை வரங்கொடுக்க, இராஜயம்பண்ணிச செல்லாநிற்ப, புத்தன்சிஷ்யவர்க்கத்துள்ளானெருபிக்ஷு இராஜபுத்திரனைநோக்கி, "குமாரனே, பகவான் நின்பிதாவுக்குச சாவாவரம கொடுத்தனரானதலின், உனக்கு இராஜயப்பிராப்தி இல்லை" என்று சொல்ல, சவன்ற இராஜகுமாரன், பிக்ஷு உபதேசித்ததோர் உபாயப்பிரயோகத்தால் இராஜாவைவதித்து இராஜயங்கொண்டுசெல்வான் தன்மித்திரனுகிய பிக்ஷுவுக்குப் புத்தத்துவங்கொடுப்பான்வேண்டிப் புத்தன் பிக்ஷுக்குப்போகின்றவழி ஒருமத்தகஜத்தைக் கொல்லக் குறிசெய்துவரவிட, அதனைநோக்கிய புத்தர் தம கைகவித்துத் தருமோபதேசஞ் செய்து அதனை உபசாந்தமாக்கினரென்பது.'

"..... .....உணர்ந்தவன் விடப்பட்ட
களிகாகம விசையவித்த கையினு னல்லனே."

(நீலகேசித்திரட்டு, புத்தவாதச்சருக்கம், கஎ - ம் பாட்டின் உரையிற் கண்டவை.)

ஒருகாலத்தில், மகதநாட்டிலுள்ள எண்பதினுயிரங் கிராமத்தலைவர்களாகிய எண்பதினுயிரவரும் ஒருங்குகூடிவந்து புத்தரிடம் தருமோபதேசமபெற்றுப் பௌத்தரானர்களென்று தெரிகின்றது. இதனுல் மகதநாடுமுழுவதிலும் புத்தர்காலத்திலேயே அவருடைய தருமங்கள் நன்றுகப் பரவியிருந்தனவென்று அறிந்துகொள்ளலாம்; இதுபற்றியும், புத்தர் ஞானமடைதற்குரிய இடமாக இருந்ததுபற்றியும், மகதநாடு புண்ணியபூமியென்று பௌத்தர்களாற் கொண்டாடப்படும்.

வேறொருகாலத்தில், புத்தர் *வைசாலியென்னு நகரத்தையடைந்து,

* இந்நகரம், கங்கையும் கண்டகநதியும் சேருமிடத்திருந்ததென்பர்.

அந்நகரத்தைச்சார்ந்த *ஆம்ரவனத்திற்கட்டப்பட்ட விஹாரத்திற் சில காலமிருந்து செய்துவந்த பிரசங்கங்களைக் கேட்டோர்களில் இருபதினாயிரம்பேர்களுக்கு மேற்பட்டோர் ஒரேகாலத்திற் பௌத்தரானார்கள்.

மற்றொருகாலத்திற் புத்தர், தமது சிஷ்யர்களுடன் பாடலீபுத்திர நகரவழியேபோயக் கங்கையைக்கடக்க நிணைந்தபொழுது, அவர் வருகலைத்தெரிந்த கங்காதீரவாஸிகள் எதிர்கொண்டுவந்து உபசரித்துத் தாங்கள்கொணர்ந்த தோணிகளின்மீது ஏறிச செல்லவேண்டுமென்று ஒவ்வொருவரும் வேண்ட, புத்தர் ஒருவருடைய தோணியிலேயினால மற்றவர்களுடைய மனம் வருந்துமேயென்று நிணைந்து அத்தோணிகளுள் ஒன்றிலும் ஏறாமல் தமக்குள்ள இருத்திவலியால் ஸங்கத்துடன் ஆகாய வழியேசென்று அந்நதியைக் கடந்தாரென்றும், அதுமுதல் அந்நதத் தோணித்துறை கௌதமகட்டமென்று பெயரபெற்றதென்றுஞ் சொல்லுவதுண்டு.

ஒருவீருஷாகாலத்தில், புத்தர் வேணுவனத்திலிருந்தபொழுது தேவதத்தனென்பவனும், தனதுநகதையாகிய பிம்பஸாரராஜனைக்கொல்லுதற்கு முயன்ற அஜாதசத்துருவென்பவனுஞ்சேர்ந்து அழுக்காறுற்று அவருக்குச செய்துவந்த தீங்குகளபல; அவ்விருவரும், சங்கத்திற்கு முதலவராக இருந்ததலினின்றும புத்தரைநீக்குதற்கும், அவருடைய ஆசிரியத்தன்மையின் உயர்வைக் குறைத்தற்கும், அவருடைய கொள்கைகளுமாறுக வேறொருசங்கத்தையும் வேறொருசமயதத்தையும் உண்டாக்குதற்குமுயன்றார்கள்; பின்னும அவாகள் ஒருகாலத்தில் அவரைக்கொல்லுந்தொடங்கினார்கள்; புத்தர், தமதுபொறுமையாலும மகிமையாலும அவற்றையெல்லாம வென்றுவிளங்கினர.

ததாகதர், வருஷாகாலநதோறும ஊர்களைச்சார்ந்த சோலைகளினிடையே அல்லது காடுகளினிடையே கட்டப்பட்டுள்ள விகாரங்களில் சிஷ்யர்களுடனிருந்தும, மற்றைக்காலங்களில பல நகரங்களுக்கும் பல ஊர்களுக்கும் வேறுள்ள பல இடங்களுக்கும் சிஷ்யர்களுடனுவது தனித்தாவது சலிப்பின்றிசென்றும எல்லோரும் எப்போதும ஜீவகாருணியத்தையே மேற்கொண்டொழுகுமபடி செய்யவேண்டுமென்று இரக்கமுற்றுப் பற்பல உபந்யாஸங்கள் செய்துவந்ததோடி மயக்கத்தைக் கொடுப்பனவாகிய மதுமுதலியவற்றை அருந்திக் களிப்பவர்களை அத்தீங்கினின்றும மாற்றுதற்பொருட்டும், பிறன்மனையை விழைதல் வரைவில் மகளிரைவிழைதல் முதலியவற்றை மேற்கொண்டு வீணை காலங்கழிப்போரை அவற்றினின்றும விலக்குதற்பொருட்டும், பொய்யையே கூறி வந்தவர்களை மெய்யையே கூறுமபடி செய்தற்பொருட்டும், திருடிக்கொ

* ஆம்ரவனம் – மாஞ்சோலை.

ண்டே காலங்கழிப்பவர்களே அத்திருட்டுவழியினின்றும் நீக்குதற்பொருட்டும், தேகமுதலியவைகள் நிலையுள்ளனவென்று துணிந்திருப்போர்க்கு அவைகள் நிலையில்லாதனவென்று அறிவுறுத்தற்பொருட்டும், புண்ணியத்தைக் கனவிலுமறியாதவர்களுக்குப் புண்ணியம்புரிதல் எல்லாவற்றிலும் மேலானதென்று தெரிவித்தற்பொருட்டும், யாதொன்றையும் நிறுதேதனும் கொடுத்தலில்லாதோரை வண்மையுடையராகச் செய்தற்பொருட்டும், பிறர்செய்த நன்மையை நினையாத கொடியோர்களே அதனை மறவாதிருக்கும்படி செய்தற்பொருட்டும், இருவினைகளுமு இல்லையென்போர்களே அவைகள் உண்டென்று தெளிந்தொழுகுமபடி புரிதற்பொருட்டும், இன்னும பற்பல நன்மைகளே விளைத்தற்பொருட்டும் அவரவர்களுடைய பந்துவமுதலியவற்றிற்கேற்பப் பலபிரகாரமாகச் செய்துவந்தஅழகிய இனிய உபகயாஸங்கள் எத்தனையோ பற்பல; அவர்பேசிவந்த பாஷை பாலியாதலால, அவ்வுபகயாஸங்களெல்லாம் அந்தப்பாஷையிலேயே முதலிலிருந்தனவென்றும், பிற்காலத்தில் பற்பலதேசத்தாரால் இயன்றவரையில் தத்தமக்குரிய வேறுவேறுபாஷைகளில் பெயர்த்தெழுதப்பட்டுள்ளனவென்றுங் கூறுவர்.

புத்தருக்கு மகாபோதிவிருக்ஷத்தினடியில் ஞானோதயமான வருஷத்திற்கு ச - வது வருஷத்து வருஷாகாலம் ஜேதவனவிகாரத்திலிருந்து கழிக்கப்பட்ட

அப்பால், புத்தர் வைசாலிநகரத்தைச்சார்ந்த மாஞ்சோலையையடைந்து அதில் லங்கத்துடன் தங்கியிருந்தார். அங்கேவந்து அவருடைய உபகயாஸத்தைக்கேட்டு மகிழ்ச்சியடைந்தவர்களில், ஆம்பாலியென்னுங்கணிகை நல்வழியையறிந்து தன்னுடையதான மாஞ்சோலையொன்றை லங்கத்திற்குக கொடுத்தாள்.

லிச்சவிகள், புத்தர் மேற்கூறிய மாஞ்சோலையிற் சங்கத்துடன் தங்கியிருத்தலைக கேள்வியுற்று, ஒரு தினததில வந்து வணங்க, அவர் அப்பொழுது அவாகளுக்குத் தமது சித்தாந்தத்தைபபற்றிப் பிரஸங்கஞ்செய்தார். அதனைகேட்ட அவர்கள் அறிவுற்று மிகுந்த மகிழ்ச்சியடைந்து பௌத்தராஞர்கள். அதற்கு மறுநாள் புத்தர் ஆமபாலியின் வேண்டுகோளின்படி சங்கத்தாருடன் அவளுடைய வீட்டில் பிக்ஷைசெய்தார்.

பின்பு பெலுவமென்னுங் கிராமத்திற்குப்போய் அங்கே மழைக்காலமுற்றும் தங்கியிருந்தார். அஃது அவருக்கு ஞானோதயமானகாலத்திற்குப் பின் நாற்பத்தைந்தாம்வருஷத்து வருஷாகாலமென்பர்.

அக்காலத்தில் அவருக்குத் தேக அசௌக்கியம் உண்டாயிற்று. அதன்பின் வைசாலிநகரத்திற்குவந்து அங்குள்ள கபிஸரஸ்ஸைச்சார்ந்த குளிர்ந்த சோலையொன்றில் தங்கினர். அப்பொழுது, மாரன் அவரிடம

வருது, "நீர் எண்ணிய யாவும செய்துமுடிக்கப்பட்டன; ஆதலால், இனி நிர்வாணமடைதற்குரியீர்" என்றான். புத்தர், "இன்னும் சில மாதங்கள் சென்றபின் நீ கூறியவண்ணஞ் செய்வேன்" என்ன, அவன் அதுகேட்டுத் தன்னிடமடைந்தான்.

அப்பரல் ததாகதர் ஒரு மரத்தடியிற் சிலசமாதியிலிருந்து தாம சிவித்திருக்கவேண்டியகாலம் இவ்வளவென்பதை வரையறுத்தனர்; அப் பொழுது பல உற்பாதங்கணிகழ்ந்தன; பின்பு புத்தர் சமாதியினின்றும நீங்கி முன்னின்றுரைசேராக்கி, "என்னுடைய வாழ்நாள் முழுவதும நீங்கி விட்டது. இனிச சமாதியின் ஆற்றலாலேயே வாழ்வேன்; என்னுடம்பு, வருதல் போதலிரண்டிற்குங் காரணமாயிருத்தலேயொழிந்தது கொறுங்கிய தேர்போன்றுளது; இனிப் பரிபூர்ண நிர்வுததியைப்பெற்று முட்டையினின்றும வெளிப்படுங் குஞ்சுபோலத் *தடையின்றிச செல்வேன்" என்றார்; அப்பொழுது பூமி நடுங்கியது; அதைக்கண்டு ஆனந்தன் நெஞ் சந் திடுக்கிட்டு, "இவ்வதிசயிகருக்கு காரணமாயாது?" என்று கேட்ப, ததாகதர், "நான் இவ்வுலகை நீங்கக் கருதியிருப்பதே" என்றுசொலலி, அதை கேட்டு வருந்திய ஆனந்தனைத் தேற்றினர்.

பின்பு, ததாகதர் இவ்வுலகைத் துறத்தலேக கேள்வியுற்று அங்கே வந்த லிசசவிகள், வருந்தினின்று அவர்கூறிய அறமொழிகளைக் கேட்டு ஒருவாறு வருத்தந்தீர்ந்து தத்தமிடஞ்சென்று வேற்றுமதப்பற்றை முற் றுங்கைவிட்டுப் புத்தர்கூறிய தருமபதங்களேச சிந்தித்து அவ்வழியையே கடைப்பிடித்து ஒழுகிவந்தார்கள். ததாகதர், "யான் நிர்வாணத்தை யடையபோவதனால, இனி இவ்வைசாலிநகரம் என்னைப் பார்க்கப்படுவ தன்று" என்று கூறி மெலலமெல்லச சென்று போகநகரத்தையடைந்து ஆங்குள்ள ஆனந்தசைத்தியமென்று கூறப்படும சாலமரச சோலையிற் றங்கித் தம்மைச சூழ்ந்துள்ள பிகூஷுக்களுக்குத் தத்துவோபதேசஞ் செய்தார்.

அப்பால், புத்தர், †குசிநகரத்திற்குச செல்லுவாராய்ப் பாவாநக ரம்போய் அங்கே வந்த ‡மல்லர்கள் அன்புடன் செய்த உபசாரங்களே ஏற்றுக்கொண்டு அந்நகரத்துள்ள §ஈநதனென்னுந தட்டானுல் அழைக் கப்பட்டுசசென்று அவனுற் சங்கத்திற்குக் கொடுகைப்பட்டுள்ள சோலை யொன்றிற்றங்கி இளைப்பாறிவிட்டு அவனுடையவீட்டில் அன்று சிஷ்யா

---

* "குடம்பை தனிதொழியப் புட்பறந் தற்றே, உடம்போ யெரிடை நட்பு" என்பது தீநூற்றுள், கூகூஅ.

† இந்நகரம், காசிக்கு வடகிழக்கில் கஉ - காதவழித் தூரத்திலும், கபிலவாஸ் துவிற்கு நேர்கிழக்கிலுமுள்ளதென்பா.

‡ மல்லர்கள் - ஒருவகைச் சாதியார்; லிச்சவிகளேச் சார்ந்தோர். இவர்கள் குசி நகரத்துவாழ்வோரென்று தெரிகின்றது.

§ இப்பெயர் குண்டனென்றுங் காணப்படுகின்றது.

களுடன் உண்டார்; அவ்வுணவிற் பன்றியிறைச்சி கலக்கப்பட்டிருந்தமையின், தேகவியோகத்திற்குக் காரணமான அதிசளக்கிடம் அவருக்கு வளர்ச்சியுற்றதென்றும, அவ்வுணவே அவருக்கு ஈற்றுணவென்றுங் கூறுவர்.

அப்போது புத்தருக்குப் பிராயம் எண்பது.

"யாதும் நிலையுள்ளதன்று" என்கிற பொருளமைந்ததான பிரசங்கம் அன்று அங்கே அவராற் பண்ணப்பட்டது. அதன்பின்பு அவ்விடம்விட்டுப் புறப்பட்டுச் செல்லுங்பொழுது நடக்கலாற்றாது வழியிற்றங்கித் தங்கி இளைப்பாறிச செல்பவர், ஆனந்தனைப்பார்த்து, "தாகம் அதிகமாகவுள்ளது" என்றார். அவன் உடனே தண்ணீர்கொணர்ந்து கொடுத்தான். அதைப்பருகி இளைப்பாறிவிட்டு அங்கே ஓடுவதான குகுஷ்டை யென்னும் ஆற்றையடைந்து அதிற் கடைமுறை ஸ்நானஞ்செய்தார்.

"சந்தனளித்த உணவாலேயே புத்தருக்கு அசௌக்கியம் மிகுந்தது" என்று அருகேயுள்ளவர்கள் தம்முள் மெலலச் சொல்லிக்கொண்டிருந்ததைக்கேட்ட புத்தர், ஆனந்தனைநோக்கி, "சுந்தன் என்மரணத்துகுக் காரணமாயிருந்தானென்று பலரும் அவனைப் பழிப்பார்கள். அவனும அவ்வாறு நினைத்தல் கூடும்; அதுநிற்க. அவன் அளித்த உணவையுண்டபின்புதான் நான் நிருவாணமடைதற்கு உரியனானேன். இதனால் அவன் சிறந்த பயனையடைவது திண்ணம; அக்காலத்தில், அரசமரத்தடியில் நான் ஞானமடையுமுன்பு ஸுஜாதையளித்தவுணவும், இக்காலத்தில நிருவாணமடைதற்குமுன்பு சுந்தனளித்தவுணவும் எல்லாவற்றிலும் மேலானவை; இதனை அவனுக்குச்சொல்" என்று கூறினர்.

பின்பு, அவர், அவ்விடத்தை நீங்கி அடிக்கடி இடையிலையே தங்கித் தங்கிக் குசிநகரத்தையடைந்து, அதற்கு அருகே ஓடுவதான ஹிரண்ய வதியென்னும் ஆற்றின் கரையைச்சாராது, இளைப்பாறிவிட்டு, ஆனந்தனைப்பார்த்து, "அந்த இரட்டைச் சாலமரத்தின் நடுவிடத்தைப் பெருக்கி நீர் தெளித்துப் பாயையும விரிப்பாயாக; நான் இன்று நடுயாமத்தில் நிருவாணமடைவேன்" என்றார். தன் ஆசிரியர் சொல்லியதைக்கேட்ட ஆனந்தன் துக்கபரவசனாயிருந்தும் அவருடைய கட்டளையை மறுத்தற்கு அஞ்சி, அவர் கூறியவண்ணமே செய்து தெரிவித்தான்; ததாகதர், அந்த இடத்தையடைந்து தலையை வடக்கேவைத்து வலக்கையைத் தலையணையாகக்கொண்டு மேற்றிசையைநோக்கி வலப்புறமாக ஒருக்கணித்துக் கால்மேற் காலைக்கிடத்திச் சிங்கவேறுபோற் படுத்துக்கொண்டு, தாம் நிருவாணமடைந்தபின்பு தமது உடம்பை இன்னவாறு அடக்கஞ் செய்யவேண்டுமென்பதையும், தமக்குப்பின்பு சிஷ்யர்களாயிருப்பவர்கள் கைக்கொண்டு ஒழுகவேண்டிய விதிகள் சிலவற்றையும் அப்பொழுது ஆனந்தனுக்குச் சொன்னார்; சொன்னவர், ஆனந்தன் வருந்துவதைத் தெ

ரிந்து, "இவ்வுலகில் ஒன்றும் நிலையுள்ளதன்று; மிகவும் நெருங்கியுள்ள *ஒவ்வொருபொருளினின்றும் நாம் நீங்கவேண்டும்; அதுவே பேரின்பத்திற்குக்காரணமாகும்" என்று சொல்லிவிட்டு, தம்மையே பார்த்து மிகவும் வருந்திக்கொண்டு நாற்புறத்தும்நின்ற மற்றைச் சிஷ்யர்களைநோக்கி, "நான் அறிந்தவற்றையெல்லாம் அறிந்துகொண்டவன் ஆனந்தன்; ஆதலால், என்னால் அறியவேண்டியவற்றை இனி அவனால் அறிந்துகொண்மின்" என்றுகூறிச் சிறிதுபொழுது துயின்றார்.

துயிலுகையில், அவருடைய சிஷ்யர்கள்பலரும் அவரைச் சூழ்ந்துகொண்டு, "இப்பேருலகம் இருண்டதே" என்று நெட்டுயிர்த்து நின்றார்கள். காற்று ஒய்ந்தது. அங்குள்ள மரோட்டங்கள் ஒலியடங்கின. பறவைகளும் விலங்குகளும் யாதோரொலியையும் செய்யவில்லை. தேவரும் மனிதரும் மிக்க துக்கத்தோடு கூடினர். அவ்வளவில் ததாகதர் விழித்துக்கொண்டு ஆனந்தனை நோக்கி, "எனது நிர்வாணகாலம் நெருங்கிற்றென்பதை மல்லருக்குச் சொல்வாயாக" என்று சொல்ல, அவன் அழுதுகொண்டே சென்று அவர்களுக்கு அதனைக் கூறினன். அதுகேட்ட மல்லர்கள் புலம்பிக்கொண்டே வந்து புத்தரைப் பணிந்து அவருடைய தேகசக்தி மெல்லமெல்லக் குறைவதைக் கண்டு துன்புற்றார்கள். ததாகதர், முகமலர்ச்சியோடு அவர்களைப் பார்த்து, "நீங்கள் துன்பமடையன்மின்; இது மகிழ்தற்குரியகாலம்; அடையக்கருதிப் பலகாலாக முயன்றுவந்த பெரும்பேற்றை இப்பொழுது அடையப்போகிறேன்; துக்ககரமாகிய மீம்புலச்சிறையினின்றும் நீங்கி என்றும் அழியாத இன்பமயமான நிருவாணத்தை அடையப்போகிறேன்" என்று இவைபோன்ற பலவற்றைக்கூறி அவர்களைத் தேற்றி உண்மையை யுபதேசிக்க, அவர்கள் ஒருவாறு சித்தசமாதானமுற்றுத் திரும்பிச சென்றார்கள்.

அப்பொழுது, சிறந்த நூற்பயிற்சியும் நன்னடையுமுள்ளவரும் குசிநகரத்தினருமாகிய சுபத்திரரென்னும் பிராஹ்மண ஸந்யாஸியொருவர், ததாகதருடைய நிலையைக் கேள்வியுற்று, அவரைப்பார்த்தற்கு விரைந்துவந்து தமது கருத்தை ஆனந்தனுக்குத் தெரிவித்தார். ஆனந்தன், இவர் புத்தரோடு வாதஞ்செய்ய வந்திருக்கிறாரென்றும், வாதஞ்செய்தால் இச்சமயத்தில் அவருக்கு மிக்கதுன்பமுண்டாகுமென்றும் நினைந்து, சுபத்திரரைப் புத்தரிடம் அனுப்புவதற்கு உடன்படாமல் நின்றான். ததாகதர் அந்த ஸந்யாஸி வந்திருப்பதை வேறுவகையால் அறிந்துகொண்டு தம்மைப்பார்த்தற்கு அவரை வரவிடும்படி ஆனந்தனுக்குக்கூற, அதுதெரிந்த சுபத்திரர் உள்ளே சென்று அளவளாவி அவருடைய ஸித்தாந்தத்தைக் கேட்டு நன்குமதித்து அவர் மரித்தலிக்காணச சகியாதவராகித் துன்பமுற்று வேறிடஞ் சென்றார்

*. "யாதனின் யாதனி னீங்கியா னோக, அதனி னதனி னிலன்" என்பது திருக்குறள், கூஅ.

அப்பொழுது, அந்த இரவின் முற்பாகஞ்சென்றது. எவ்விடத்திலும் ஓசைகளடங்கின. புத்தர் மிகவும் இரங்கிய மனமுடையவராகித் தம்முடைய சிஷ்யர்களைப் பார்த்து *"'ததாகதன் சொல்லியவற்றில் ஏதேனும் ஐயமுண்டோ? இருக்குமானாற் சொல்லுமின்" என்று கேட்டார். அதற்கு ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. புத்தர் அதனையறிந்து, "என்னையும் யான் சொல்லியவற்றையும் நேசிப்பதுபோல நீங்கள் ஒருவரையொருவர் நேசித்து ஒழுகல்வேண்டும்" என்று கட்டளையிட்டார். அவர்களெலலோரும நெடுமபொழுது மௌனமாயிருக்கையில், அனுருத்தன் மிக்கதுக்கத்துடன் "ததாகதர் என் இவ்வளவு சீக்கிரத்தில் நிருவாணமடையவேண்டும" என்றான். அதைக்கேட்ட புத்தர், அவன்மனத்திற்குச சமாதானமுண்டாகுமபடி சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, எல்லோரையும் பார்த்து, "அன்பர்களே, பிறப்புக்குக் காரணம் எதுவோ அதுவே இறப்பிற்கும் காரணமாகும்; இந்த உண்மையை மறவன்மின்; இதை உங்களுடைய மனத்தில் தரித்துக்கொண்மின்; இனி என்வார்த்தைகள் வெளிப்படுவனவல்ல" என்று உபதேசித்துப் பின்பு எல்லாப்பற்றையுமொழித்து நிருவாணமடைந்தார்.

புத்தர் நிருவாணமடைந்தகாலம், ஈசானசகாப்தம், கசஅ-ம்ஹித்தில் வைகாசிமீ 3த்திற் பூர்ணிமையும் விசாகநக்ஷத்திரமுங்கூடிய செவ்வாய்க்கிழமையென்பர்.

அப்போது அவரைச் சூழ்ந்துநின்ற அருஹத்தக்களும் அரசர்களும் முனிவர்களும் வேறுபலருமம மனங்கலங்கி,

†" மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்டிலமா லென்செய் கேம்யாம்!
அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்டிலமா லென்செய் கேம்யாம்!!
பொருளறிய மருந்தவதுப் புவலரைக கண்டிலமா லென்செய் கேம்யாம்!!!"

என்றுபுலம்பி மிகத் துன்புற்றார்கள். எல்லாவுயிர்களும் கவலையடைந்தன. அனுருத்தன்,

'போதி மேவினை புன்மை யகற்றினை
சோதி வானவர் தொழுவெழுந் தருளினை
யாதி நாதநி னடியிணை பரவுதும்."

என்று ததாகதருடைய பரிநிருவாணத்தைப்பற்றி இவ்வாறுகப் புகழ்ந்து பாடினன். புத்தர் நிருவாணமடைந்த செய்தியைக் கேள்வியுற்ற மல்லர்கள் வந்து அவர் நெடுநதுயில்கொண்டதை உற்றுநோக்கி மிகப் பிரலாபித்தார்கள்; பின்பு, பரிமளமூட்டி அலங்கரித்த அவருடையவுடம்பைப் பொற்பல்லக்கின்மீது வைத்து எடுத்துக்கொண்டு நிருத்த கீத வாத்தியத்துடன்சென்று ஹிரண்யவதிநதியைக்கடந்து, முன்பு நிருவாணமுற்ற

---

* புத்தர், நானென்று சொல்லவேண்டிய இடங்களில் ததாகதனென்னும் பெயரையே உபயோகித்து வந்தனரென்பர்.

**வீரசோழியம்**, யாப்புப்படலம், கரும்ம கலித்துறையுரையிற் கண்டசெய்யுள்.
கரும்ம கலித்துறையுரையிற் கண்டசெய்யுள்.

புத்தர்களுக்காகச சைத்தியம் கட்டப்பட்டுள்ள இடத்தையடைந்து அங்
கே சந்தனமுதலிய நறுமணமுள்ள விறகுகளைப்பரப்பி அவ்வடுக்கில் அச்
சரீரத்தைவைத்து மேலும அவ்விறகுகளையடுக்கி அதன்மீது பரிமளதை
லங்களைவார்த்துத் தீமூட்டி வலம்வருது வணங்கினார்கள். செய்யவேண்டிய
யாவும் விதிப்படி செய்யப்பட்டன. எரிந்தபின் வைரம்போன்ற என்பு
கள்மட்டும் எஞ்சின ; மல்லாகள், அவற்றை ஒருபொற்கரகத்திற்பெய்து
நகரத்துட்கொண்டுசென்று ஒரு தாபுரத்தின்மேல் அக்கரகத்தை வைத்
துத் தரிசித்துப் பூசித்து வணங்கிவந்தார்கள்

அதன்பின், அதாகதருடைய நிருவாணத்தைக்கேட்ட மகதநாட்ட
ரசன்முதலிய எழுவர் வந்து அவ்வங்கத்திற்பங்குகொடுக்கும்படி மல்லர்
க்குத்தூதனுப்பினர் ; அதற்கு மல்லர்கள் இணங்கவில்லை. அதனால் அவ்
வெழுவரும் கோபங்கொண்டு மல்லர்களோடுபோசெய்வதற்குச் சேனை
களுடனவந்து குசிநகரத்தைசசூழ்ந்தனர் ; சூழ்வே இருதிறத்தார்க்கும்
மிக்கயுத்தம் நிகழத்தொடங்கியது. அப்பொழுது, *சுபதத்திரனென்னும்
பிராமணனொருவன மந்திரிகளுக்கினறு இருதிறத்தாரையும் ஸமாதா
னஞ்செய்ய யுத்தம நிறுத்திவிட்டது. பினபு அவ்வங்கத்தை எட்டுப்பங்கு
செய்து மல்லர்கள் ஒருபங்கும் மேற்கூறிய எழுராசரும எழுபங்குமாக
எடுத்துக்கொண்டு தத்தமிடங்களிற்சென்று பலகு ஒனமுக்கு ஒரு †தாது
கோபங்கட்டுவித்து அவறறில அப்பங்குகளைவைத்து வணங்கிவருவார
யினர் சுபத்திரன அங்கமிருந்த பொற்கரகத்தை மலலரிடமிருந்துபெ
ற்று, மேற்கூறிய எழுவரிடத்துஞ்சென்று அங்கத்துண்டு சிறிதுசிறிது
வாங்கி அவற்றை அகநகரத்திலிட்டு ஒருசைத்தியங்கட்டுவித்து அதில்
அக்கரகத்தை அடக்கஞ்செய்தான். அந்தசசைத்தியத்திறகுச் ஸுவர்ண
கரகதாதுகோபமென்று பெயர்வழங்கலாயிற்று. குசிநகரத்துமாகதர்
கள் புத்தருடைய தேகச்சாமபரைத் தொகுத்துவைத்து அதற்குச சைத்
தியமொனறு கட்டுவித்து அந்தசசைத்தியத்திறகுப் பஸ்மதாதுகோபமெ
ன்று பெயர்வைத்தார்கள்.

இப்படிச் சம்புத்தீவில் ஆதிகாலத்தில் பத்துத் தாதுகோபங்கள்
இருந்தன ; அவற்றுள், ஒவ்வொன்றிலும் பௌத்தர்கள் நிருத்தகீதத்து
டன் புத்தரை வழிபட்டுவருவாராயினர்.

புத்தர், வைரியனென்பவனுக்கு அரசமரத்திலிருந்து கடைந்தெ
டுத்த நூற்றெட்டு மணிகளாலாகிய மாலையைக்கொண்டு ஜபிக்கும்படி
மந்திரோபதேசஞ் செய்தமையால் ஜபமாலைகொண்டு மந்திரங்களை ஜபிக்
கும் வழக்கம் பௌத்தர்களுக்கு உண்டாயிற்றென றும், அவர் திரயஸ்
திரிம்சலோகத்திற்குச் சென்றபொழுது அவருடைய பிரிவாற்றாத பிம்ப

* இவன்வேறு, முன்புகூறிய சுபத்திரர்வேறென்பர்.

† தாதுகோபமென்பதற்குத் தாதுக்களைப் பாதுகாப்பது அல்லது மறைப்ப
தென்று பொருள்கூறுவர்.

ஸாரன்முதலியோர் சிறந்த ஒரு சிற்பியைக்கொண்டு அவரைப்போலவே ஐந்தடி இரண்டங்குல உயரமுள்ள படிமமொன்றைச்செய்வித்து அதைக் கிருத்திரகூட விஹாரத்தில ஸ்தாபித்துத் தரிசித்து வழிபட்டுவந்தமையால் புத்தாலயகளிற் புத்த படிமமவைத்துப் பூசிக்கும வழக்கமுண்டாயிற்றென்றும், உபதேசித்தற்கு வந்த புத்தருக்குத் திரயஸ்திரிம்சலோகத்திருந்த மாயாதேவி ஒரு மந்தாரமலரை அளித்தமையால் ஆலயங்களிற் புத்தப்படிமத்திற்குப் பூக்களைப் புனையும வழக்கமுண்டாயிற்றென்றும், புத்தா கிருத்திரகூட விஹாரத்திலிருந்தபொழுது அவரைக கொல்லுகிணற்ற தேவதத்தனுடைய முயற்சியால ஒரு மந்திரவாதி அனுப்பிய பேய்களை ஓடுதற்கு அவருடைய சட்டம்பியின்படி வந்த தெயவகணங்கள் காயிபரை முனனிட்டுப் பலகொடிகளைப் பிடித்துக்கொண்டும் ஜயகண்டி முதலிய பல வாத்தியங்களை முழக்கிக்கொண்டும் சென்றமையால் புத்தாலயங்களிற் கொடியெடுத்தலும ஜயகண்டிமுதலிய பல வாத்தியங்களை முழக்குதலுமாகிய வழக்கமுண்டாயிறறென்றும், மேற்கூறிய தேவதத்தனுடைய நட்பாளனாகிய மந்திரவாதி புத்தருடையமகிமையால தன் ஆற்றல் குறைந்து காளைவடிவங்கொண்டு இறகுகுங்காலத்தில அவரைநோக்கி "பகைவர்கள் உமது ஆறறலை அழித்திகளறும்படி என்னுடைய இவ்வுடமபினறேறலாற் கட்டுவித்த கோயிலை உமக்குமுன்பு அடிக்கும்படி செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டமையாற் புததாலயங்களிற் பேரி அடிக்கும வழக்கமுண்டாயிறறென்றுஞ் சொல்லுவர்.

புத்ததேவருடைய பாதபடிமைகள், காவிரிபூமபட்டினத்தைச் சார்ந்த உவவனதீதிலும இலங்கைதீதிலுள்ள (ரத்தினதீவு) சமந்தம் அலலது சமனொளி (ஆடமஸ்பீக) என்னும மலையின் உசசியிலும் இருநதனவென்றும, அவைகள பௌத்தமததைச்சார்ந்த தெய்வங்களாலும, பௌத்தசாரணர் முதலியவாகளாலும, உபாஸகாகளாலும புத்த தேவராகவே பாவித்து வணங்கித துதிக்கப்பட்டுவருதனவென்றும் மணிமேகலையால தெரிகினறன. இவறறை,

"அருளு மன்பு மாருயி ரோம்பு
மொருபெரும பூடகையு மொழியா நோன்பிற்
பகவன தாணையற பனமரம பூகசு
முவுடண மெனபதான றுண்டத னுள்ளது
விளிபபறை போகாது மெய்புறத் தீடுேம
பளிகசுறை மண்டப முண்டத னுளளது
தூறிற மாமணிச சுடரொளி வாந்த
தாமஸாப் பீடிகை தானுணக" வெவும், (கூ-ம் காதை, நிகூ-கூஅ.)
..... மணிமேகலா தெயவம்
பதியகத் துறையுமோ பைஙதாடி யாகி
மணியறைப் பீடிகை வலகுகொண டோங்கிப்
புலவன றீர்த்தன புணணியன பு ணண
னுலக நோனபி னுயர்ந்தா யெனகோ
குற்றங் கெடுத்தோய் செறறஞ செழுததோய்

மூற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ
காமற் கடந்தோ யேம மாயோய்
நெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
வாயிர வாரத் தாழியன் றிருந்தடி
நாவா யிரமிலே னேத்துவ தெவன்" எனவும், (நூ-ம் காதை, கூடு-கடு.)

"ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்
பாத பீடிகை" எனவும், (ஈ-ம் காதை, கக-கஉ.)

"ஈங்கித னயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
யறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉ
மறவி நாவா யாங்குளது" எனவும், (கக-ம் காதை, உக-உடு)

"இலங்கா தீவத்துச் சமஞெளி யென்னுஞ்
செம்பியே யெய்தி வலகுகொண்டு மீளுந்
தரும சாரணர்" எனவும், (உஉ-ம் காதை, கo௭-கo க.)

வருவனவற்றாலுணர்க.

இன்னும், காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே முப்பதுயோச னைத்தூரத்தில் கடலிலுள்ளதாகிய மணிபல்லவமென்னும் சிறியதீவில், புத்ததேவரிருத்தற்காக இந்திரனால் நிருமித்து இடப்பட்ட ஆசனமொன்று இருந்ததென்றும், அது தீவதிலகையென்னுந் தெய்வமங்கையால் காக்கப்பட்டிருந்ததென்றும், தன்னைத்தரிசித்தோர்க்கு அவர்களுடைய பழம்பிறப்பில் நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்துத் தன்னுடைய தெய்வத்தன்மையைப்புலப்படுத்தியதென்றும், அதனால் பலதேயத்தாருமுள்ள பௌத்தர்களால் வணங்கப்பட்டு வந்ததென்றும் மணிமேகலையால் தெரிகின்றன. அவை வருமாறு:—

"விரிந்திலங் கவிரொளி சிறந்துகதிர் பரப்பி
யுரைபெறு மும்மூழ நிலமிசை யோங்கித்
திசைதொறு மொன்பான் முழநில மகன்று
லிதிமா ணுடியின் வட்டங் குயின்று
பதும சதுர மீமிசை விளங்கி
யறவோற் கமைந்த வாசன மென்றே
நறுமல ரல்லது பிறமரஞ் சொரியாது
பறவையு முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புளிலங் கவிரொளி யறத்தகை யாசனம்" (அ-ம் காதை, சச-நிகூ)

"பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்
பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்துந்
தரும பீடிகை" (அ-ம் காதை, சுக-சுஉ.)

"வேக வெந்திற னாகநாட் டரசர்
னெமா சொழித்து மனமாசு தீர்த்தாங
கறச்செவி றிறந்து மறச்செவி யடைத்துப்
பிறவிப்பிணி மருத்துவ னிருந்தற முரைக்குந்
திருந்தொளி யாசனஞ் சென்றுகை தொழுதி
யன்றைப் பகலே யுன்பிறப் புணர்ந்தீங்
கின்றியா னுரைத்த வுரைதெளி வாய்" (கூ-ப் காதை, நிஅ-சுசு.)

"உயிர்க ளெல்லா மூணர்வுபா ழாகிப்
பொருள்வழங்கு செவித்தலே தூர்த்தறி விழந்த
வறந்தலை யுலகத் தறம்பாடு றெக்கச்
சுடர்வழக் கற்றத் தமிமாறு காலேயோ
ரினவள ஞாயிறு தோன்றிய தென்ன
நீயோ தோன்றினை நின்னடி பணிந்தே
னீயே யாயிநிற் கமைந்தவிவ் வாசன
நாமிசை வைத்தேன் றலைமிசைக் கொண்டேன்
பூமிசை யேற்றினேன் புலம்பறு கென்றே
வலங்கொண் டாசனம் வணங்குவோள்" (கo-ம் காதை, எ-கசு.)

"மன்பெரும் பீடிகை வணங்கினே யேத்தி
நின்பதிப் புகுவாய்" (கo-ம் காதை, ஈசு-அஎ.)

"மண்டெ ரும் பீடிகை யென்பிறப் புணர்ந்தேன்" (கசு-ம் காதை, கசு.)

"பழுதில் காட்சியிந் நன்மணிப் பீடிகை
தேவர்கோ னேவலிற் காவல் பூண்டேன்" (கசு-ம் காதை, உஎ-உஅ.)

"மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கி" (கசு-ம்காதை, ஙிசு.)

"கோமகன் பீடிகை தொழுது வலங்கொண்டு" (கசு-ம் காதை, கஉசு.)

"ஆங்கத் தீவகத் தறவோ ஞான
நீங்கிய பிறப்பு நேரிழைக் களித்ததும்" (கஉ-ம் காதை, கக-கஉ.)

"மணிப்பல் லவத்திடை யெண்ணேயாங் குய்த்துப்
பிணிப்பறு மாதவன் பீடிகை காட்டி
யென்பிறப் புணர்ந்த வென்மூற் றேரன்றி (உசும் காதை, கடு-கஎ.)

"மணிப்பல் லவம்வலங் கொண்டு மடக்கொடி
பிணிப்பறு மாதவன் பீடிகை காண்டலுங்
தொழுதுவலங் கொள்ளவத் தூமணிப் பீடிகைப்
பழுதில் காட்சி தன்பிறப் புணர்த்த" (உடு-ம் காதை, சுசு-சுசு.)

"பெரியவன் றேரன்ரு முன்னரிப் பீடிகை
கரியவ னிட்ட காரணந் தானு
மன்பெரும் பீடிகை மாய்ந்துயிர் நீங்கிய
வென்பிறப் புணர்த்தலு மென்னென்றி யான்றொழு
முற்ற வுணர்ந்த முதல்வனே யல்லது
மற்றப் பீடிகை தன்மிசைப் பொரு அது
பீடிகை பொறுத்த பின்ன ரல்லது
வானவன் வணங்கான் மற்ற வானவன்
பெருமகற் கமைத்துப் பிறந்தார் பிறவியைத்
தரும பீடிகை சாற்றுக வென்றே
யருளினன்" (உடு-ம் காதை, ஙிசு-சுசு.)

" .... . பூங்கொடி பொருந்தியித்
தீவகம் வலஞ்செய்து தேவர்கோ விட்ட
மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்துழி" (உடு-ம் காதை, கஅக-கஅசு.)

"செல்வற் கொணர்ந்தத் தீவகப் பீடிகை
யொல்காது காட்டப் பிறப்பினை யுணர்ந்ததும்" (உஅ-ம்காதை, வஎ-எஅ.)

"பொன்றிகழ் புத்த பீடிகை போற்றும்
தீவ திலகைய மித்திறஞ் செப்பினள்" (உக-ம் காதை, கூஅ-கூக.)

மணிமேகலையில் புத்தபீடிகைவணாப் பாராட்டியும் துதித்தும் வருவன பட் சில வருமாறு :—

"அருளு மன்பு மாருயி ரோம்பு
மொருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன்" (சு-ம் காதை, ஙிக-சுக.)

"வங்கோ னியல்குண னேதமில் குணப்பொரு
ளுலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள
னின்பச் செவ்வி மன்பதை யெய்த
வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறைகதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்தவாமன்" (நு-ம் காதை, கை-எஎ.)
"ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்" (ஈ-ம் காதை, கக.)
"ஆதிசான் முனிவன்" (எ-ம் காதை, ககூ.)
"பெருந்தவ முனிவன்" (அ-ம் காதை, கூக.)
"பிறவிப்பிணி மருத்துவன்" (ஊ-ம் காதை, கூக.)
"ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்" (கo-ம் காதை, கூக.)
"மதிநாண் மூற்றிய மங்கலத் திருநாட்
பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்" (ரo-ம் காதை, அங-அச.)
"தரும தலைவன்" (ரக-ம் காதை, கo.)
"மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
யெண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்பே யு நின்னடி
யுரகர் துயர மெ ழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னுவிற்
கடங்காது" (ஙக-ம் காதை, சுக-எஉ.)
"மைத்தி ளள் கூர்ந்த மனமாசு நீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலே" (கஉ-ம் காதை, அநி-அசூ.)
"தெளிந்த நாதன்" (உநி-ம் காதை, கூஙூ)
"தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு
மன்னுயிர் முதல்வ னன்' (உநி-ம் காதை, ககசு-ககஎ.)
"செம்பொன் மாக்கினைத் திருமணிப் பாசடைப்
பைம்பூம் போகிப் பகவன்" (உஅ-ம் காதை, எஙூ-கஎச.)
"அறிவு வறிதா யுயிர்கிறை காலச்
மூடிகையங் கமயர் முறைமுறை யிறப்பத்
துபத லோக மெ ழியச் தோன்றிப்
போதி மூலம் பொருந்தி யிருந்து
மாரனை வென்று வீர னுகிக்
குற்ற மூன்று மூற்ற வறுக்கும்
வாமன" (கo-ம் காதை, எ-கசூ.)

பழைய பௌத்தகவிஞர் இப்படியே புத்ததேவருடைய குணவிசேடங்களைப் பாராட்டிக் தமிழிற்பாடிய பாடல்களுள் இப்போதகிருடத்தவை மணிமேகலையின் அருமைபதவுரையில் உரியவிடங்களில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவற்றை அவ்வவ்விடங்களிற் பார்த்துக்கொள்க.

# பௌத்த தருமம்.

புத்தர், பிராஹ்மணர்களுக்கும் அவர்களுடைய கொள்கைக்கும் விரோதமாகத் தமமுடையீ கொள்கையை நிலைபெறச்செய்தாரென்பது சிலர் கருத்து. அஃது உண்மையன்றென்பது நிபுணர்களான ஐரோப்பாக் கண்டத்து வித்துவான்கள் பலருடைய அபிப்பிராயம்.

ரைஸ் டேவிட்ஸ் (Rhys Davids) என்பவர் இவ்விஷயமாகச் சொல்வது யாதெனின்:—"கௌதமர் ஹிந்துவாகவே பிறந்தார்; ஹிந்துவாகவே வளர்ந்தார்; ஹிந்துவாகவே பிழைத்தார்; ஹிந்துவாகவே இறந்தார். கௌதமருடைய கொள்கையை அனுஸரித்த *உபாஸகர்களில் மிகப்புகழ்பெற்ற அசோகனென்பவனீ ஜீவகாருண்யமும் கன்னடையு முள்ளவனுகவிருந்த பௌத்தசக்கரவர்த்தியென்று இப்பொழுதும் பல முறை சொல்லுகிறார்கள். ஆனலும் அவன் தன்னைத் †(தேவாநாம்ப்ரியஃ) தேவர்களுடைய அன்புக்குரியவனன அசோகனென்று சொல்லிக்கொள்வதில அதிகவிருப்பமுள்ளவனுக இருந்தான்; அவன் மிக்க உள்ளன்போடுகூடிய பௌத்தனுக இருந்தாலும, அவனைப் பௌத்தவகுப்பைச் சேர்ந்த ஹிந்துவென்று சொல்வதுதான் உண்மைக்கு ஒத்ததாகும; கௌதமருடைய தத்துவசாஸ்திரத்திலும மானஸசாஸ்திரத்திலும் ஹிந்துக்களுடைய வழிவழியாகவந்துள்ள ‡தாசனங்களுள் யாதோனுமொன்றில் இலலாதது ஒன்றுமிலலை; அவர்வகுத்த அறநெறிக்குரியவிதிகளோ அவருடைய காலதிற்கு முன்னுவது பின்னுவதுள்ள ஹிந்துக்களுடைய புஸ்தகங்களிலிருந்து எடுத்துக் காட்டக்கூடியவைகளாகவே இருக்கின்றன; கௌதமரிடத்திலிருந்த அரிய சிறபபாற்றல்களெல்லாம், பிறரால் முன்பு நன்முகசசொலலப்பட்டதை அபிவிருத்திசெய்து நன்கு பார்ாட்டிச சீர்ப்படுத்தியவழியிலும், ஹிந்துக்களில மிகப்புகழ்பெற்ற ஆராய்ச்சிமிக்க அறிஞர்கள் பண்டைக்காலத்திலேயே ஒத்துக்கொண்டிருக்கும்

* உபாஸகர் - பௌத்தரில் இல்லறத்தோர்.

† "தேவாநாம்ப்ரியஃ" என்பதற்கு மூடனென்று ஸம்ஸ்கிருதபாஷையில் இக்காலத்திற் பொருள் கூறப்படுகிறது; இதற்கு இப்பொருள்கூறும்வழக்கம் யாதுகாரணத்திலுல் வந்ததோ அது விளங்கவில்லை; அசோகனேச்சார்ந்த பல சிலாசாஸனங்களில் அவன் தன்னை "தேவாநாம்ப்ரியஃ" என்று சொல்லிக்கொண்டிருக்கிறபடியால், அதற்கு மூடனென்று பொருள்கொள்ள இடமில்லை. தேவர்களேவணங்கி அவர்களுடைய அன்பைப்பெறுவது பிராஹ்மணர்களுக்குரிமையாவதுபோலப் பௌத்தர்களுக்கில்லையாதலும், அசோகன் பிராஹ்மணர்களுடைய கொள்கைக்கு விரோதியாக இருந்தானென்று சொல்லுதற்கு நியாயமில்லை.

‡ தர்சனம் - ஸமயம்.

ஒழுங்கிற்கும் நடவுநிலைமைக்குமுரிய தர்மங்களை நியாயமாக எந்தமுடிபுவரையிற் கொண்டுசெலுத்தலாமோ அதுவரையிற் கொண்டுசெலுத்தியதிலுந்தான் காணப்படுகின்றன; கௌதமருக்கும் மற்றை ஆசிரியர்களுக்குமுள்ள வேறுபாடு, முக்கியமாக அவருடைய மிக ஆழமான ஆவத்துடன்கூடிய ஸ்ரீத்தையிலும உலோகோபகாரமாயிருக்கிற விசாலமான ஜீவகாருணியபாவத்திலு *முளளது. இந்தவேறுபாடுகூடப் பெரும்பாலும் இப்பொழுதுதான் அதிகமாகத்தோற்றுகின்றன. இவ்வேறுபாட்டால் அக்காலத்தில அவருக்குப் . பிராஹ்மணாகளில உயாநதவாகளாக இருந்தவர்களுடைய ஸமமதியும் ஸகாயமும் ஒருவிதத்திலும இலலாமற்போகவில்லை. அவருடைய முக்கியசிஷ்யர்களிற் பலரும் அவருடைய ஸங்கத்தோரில் மிகப்புகழ்பெற்றவர் பலரும் பிராஹ்மணாகளே; அவர் பிராஹ்மணர்களை மானிக்கத்தகுநதவர்களெனறு மதித்துப் பௌத்தபிகூக்களுடன் எப்பொழுதுஞ்சேர்த்துப் பாராட்டிக்கொண்டிருநதார்; பௌத்தசமயத்தில் ஆழ்ந்தவர்களான அருகதத்துக்களுக்குப் பிராஹ்மணரென்ற பெயரை ஒருகௌரவநாமமாக உபயோகித்துக்கொண்டிவநதார்; ஸங்கத்தாருக்குள் ஜாதிபேதமிலலாமற்செய்ததும் நிர்வாணத்திற் குரியவழி மிக உயர்ந்தவனுக எண்ணிகொண்டிருக்கும இருபிறப்பாளனுக்கும் மிகத் தாழ்ந்தசண்டாளனுக்கும் ஒரேவிதமாகத்திறநதுள்ளதென்று அவர்சொல்லியதும் அதிக அத்தருப்தியை உண்டுபண்ணினவென்பதிற் சந்தேகமில்லை; மேலும் யாகமுதலிய காமமாக்கத்தில் அவருக்கிருநத அவமதிப்பும் இந்தஜன்மத்தில இவ்விடத்திலேயே தாம் கரையேறுவதற்கு வேண்டியதைச செய்துகொள்ளும் யோக்கியதை ஒவ்வொருவருக்கு முண்டென்று அவருக்கிருநத தெளிவும் அபாயகரமான கொள்கைகளென்று புராதனவழியிலேயே பறறுள்ள கூட்டதாருக்குத் தோற்றின. மேற்கூறிய இருதிறத்தாருடைய சமபிரதாயங்கள் காலகிரமத்தில் ஒன்றற்கொன்று முற்றும் ஒவ்வாததாகவே ஆய்விட்டனவென்பது உண்மையாயிருத்தல்கூடும; ஆனால, பண்டைக்காலத்தில் கௌதமரும் பிராஹ்மணரிற் பெருமபான்மையாரும அவை அவ்வாறு வேறுபாடுள்ளனவென்று எண்ணவில்லை. அசோகன்காலத்திற்றுப்பிறகு நெடுங்காலஞ்சென்றபின்பு பௌத்தமதம் தன்னியற்கைமாறிச சீர்குலையுமளவும் மதசம்பந்தமான கலகத்தினல் வருந்துன்பம் இருந்ததாகவே கௌதமியில்லை. வழிவழியேவநதுள்ள ஹிந்துமதத்தினகத்திருந்தே பௌத்தமதம் வளர்ந்து பெருகியது; அந்தப் பௌத்தமதத்தில் அழகு மிகுநத பல மேம்பட்டவிஷயங்கள் அடங்கியிருக்கின்றனவென்பதை யாவரும அறிவாராதலின், அது, தனது மூலமாகிய ஹிந்துமதத்தின் சிறப்பினையே வினக்குவதென்றும், ஹிந்துமதம் இழிந்ததென்றேனும் துன்புறுத

* கௌதமரிடத்தில் இந்த இரண்டு குணங்களும் மிகுதியாகவிருந்தனவென்பது தாத்பரியம்.

துவதென்றேனும் விளக்கவந்ததன்றென்றும் அறியற்பாலது. கௌதம ருடைய பயிற்சியெல்லாம் பிராஹ்மணமதத்திலேயே. அப்புராதனமதத் தின் உட்பொருளேவெளியிட்டு மிகச் சரியாக விளக்கிக்காட்டியவர்களெல் லாருள்ளும் தாமே சிறந்தவரென்று கௌதமபுத்தர் தம்மைப்பற்றி எண்ணிக்கொள்வதற்கு உரிமையுண்டு. அவர், ஹிந்துக்களுள் மிகவுயர்ந் தவரும் அறிவுடையவரும் சிறந்தவருமாக இருந்தாரென்பதுதான் அவ ருக்குத்தக்கது." என்பது.

மத ஆராய்ச்சியில் உழைத்திருக்கும் சிறந்த வித்வச்சிகாமணிகளா கிய 'மாக்ஸ் முல்லர்' (Max Müllur) 'ஓல்டன்பர்க்' (Oldenberg) 'மானி யர் வில்லியம்ஸ்' (Monier Williams) முதலான மற்றை ஐரோப்பிய வித்துவான்களுடையகருத்தும இதுவே. கிழக்குத்திசைப் பரிசுத்த புஸ் தகங்களெனறு பொருள்படும "ஸேக்ரெட் புக்ஸ் ஆப் தி ஈஸ்ட்" (Sacred books of the east) என்ற இங்கிலிஷ் பெயரால் 'மாக்ஸ்முல்லர்' என்ப வா வெளிப்படுத்திவரும புஸ்தகங்களுள் கடை - ம் புஸ்தகத்தின் நூன் முகத்தில் இரண்டாம பக்கத்தில் அவர் சொல்லியிருப்பது யாதெனின்:— "என்புத்திக்கேற்க உபநிடதங்களே புத்தமதத்திற்கு மூலம்; புத்தம தம, பலவாறாறனும உபநிடதத்தின் கொள்கையை எளதமுடிபுவாயிற் கொண்டு செலுத்தலாமோ அளத முடிபாகவுள்ளது. அது, பின்னும் அளத உபநிடதங்களின் கொள்கையையே தன்னுடைய. நூதனமான கோட்பாட்டிற்கு ஆதாரமாகவுடையது. கொள்கையைப்பற்றிச சொல் லப்புகுங்கால், வேதாந்தத்தால நாடப்படுவதும எவற்றிற்கும் மேலான முடிவானதுமாகிய ஆத்மதத்துவஞானமானது பௌத்தர்களுடைய *ஸம் யக்ஸம்போதியேயாம். ஆசாரத்தைப்பற்றிப் பேசுங்கால், ஹிந்துலங்யா னியே பௌத்தபிக்ஷுவாம்; பிராஹ்மணப் பிரஹ்மசரியாச்ரமத்துக்குரிய தன்புறுத்தும நீதித்த நியமத்தினின்றும், பிராஹ்மண கிருகஸ்தனுடைய தருமங்களினின்றும, பிராஹ்மண வானப்பிரஸ்தனுக்கு நியமித்திருக் கும தவச்சுமையினின்றும் விடுதலையடைந்த துறவியே அந்தப்பிக்ஷு. ஹிந்துமதத்தில் ஸந்யாஸிக்கேயுரிய ஆத்ம ஸம்பந்தஸ்வாதந்திரியமா னது பௌத்தமதத்தில் ஸங்கமென்கிற சகோதர கோஷ்டியிலுள்ள எல் லாக்குமே உரிய பொதுப்பொருளாம். அந்தக் கோஷ்டியில் இளை ஞரும் முதியரும், பார்ப்பாரும் சூத்திரரும், வறியரும் செல்வரும், அறிஞ ரும் பேதையரும ஆகிய எல்லோருமே ஒருங்குசேரலாம்; உண்மையில் வேதத்தைப்பற்றி நிற்குமுலகமும் திரிபிடகத்தைப்பற்றி நிற்குமுல கமும் தொடர்சசியற்றவையே யல்ல; அவ்விரண்டிற்கும் தேச சரித்திரத் தால் தொடர்சசியுண்டு. ஒன்றேடொன்று மிக்கவேறுபாடுற்றுத் தோ ன்றும் இவ்விரண்டு கோடிகளையும் சேர்த்துப் பொருத்திக்காட்டுவதற்

* ஸம்யக்ஸம்போதி - நல்லஞானம்.

குள்ள இனயபை உபநிடதங்களில் தேடிக் கண்டுகொள்ளவேண்டும்" என்பதாம்.

இவ்விதமாக ஆராய்ந்துபார்க்குங்கால், பௌத்தமதத்திற்குள்ள ஆதாரங்கள், கௌதம புத்தருக்கும் முந்தியகாலத்திலேயே இருந்தன வாகக் காணப்படுகின்றன. பௌத்தநூல்களாலும் கௌதமபுத்தருக்கு முன்பு அநேக புத்தர்கள் இருந்தாகவென்றும் அந்தப்புத்தர்களில் இருபத்துநால்வர் மிகப் பெயர்பெற்றவர்களென்றும் அவர்களுள் இரு பத்துநான்காம் புத்தர் கௌதமபுத்தனென்றும் தெரிகின்றது. இதனா லும கௌதமபுத்தருடைய காலத்துக்குமுந்தியே பௌத்தசமயத்துக் குரிய இன்றியமையாத கொள்கைகளெல்லாம் வழக்கத்தில் இருந்தன வென்றறியலாம்.

"இறந்த காலத் தெண்ணில்புத் தர்களுஞ்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது

(மணிமேகலை, ஈ0 - ம் காதை, கச - கரு.)

ஸ்மிருதிகளிற்கூறப்பட்டுள்ள வருணச்சரம தர்மங்களைக்கைப்பற்றிப் பண்டைக்காலத்தில் ஹிந்துக்கள் யாவரும தவறாது ஒழுகிவந்தனரெ ன்று எண்ணுவதற்குப் பல ஸாதனங்கள் உண்டு. ஆரியாகள் பிரஹ்மசரி யத்திலிருந்து கிருஹஸ்தாச்சிரமத்திற்கும், அதிலிருந்து வானப்பிரஸ்தாச சிரமத்திற்கும், பிறகு ஸந்யாஸ ஆச்சிரமத்திற்குஞ் செல்லுவது வழக்க மாகவிருந்தது. பிரஹ்மசாரிக்கும் கிருஹஸ்தனுக்கும் ஸ்மிருதிகளால விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் பலவாம்; அவை கடினங்களுமாம்; வானப் பிரஸ்தனுக்குரிய ஒழுக்கங்கள் அவ்வளவு கடுமையுள்ளனவல்ல. ஸந்யா ஸிக்குரிய ஸ்வாதந்திரியமோ மிக அதிகம். அவன், நித்திய நைமித்திக கருமங்களினின்றும் கிருஹ்யஸமஸ்காரங்களினின்றும் ஜ்யோதிஷ்டோம யாகப்பிரக்கிரியைகளினின்றும நீங்கினவன். இந்த ஸ்வாதந்திரியத்தைக கருதியே அநேகர் தக்க காலத்தில் துறவறத்தை மேறகொண்டனர். இங்ஙனம் வானப்பிரஸ்தராயும் ஸந்யாஸிகளாயுமிருந்தோர், காட்டிற சென்று ஒருங்குசேர்ந்து ஆங்காங்குத் தத்துவவிசாரம்செய்துவந்ததின் பயன், வேதங்களிலுள்ள *ஆரண்யகபாகத்தைச்சார்ந்த உபநிடதங்களில நன்கு விளங்குகின்றது. ஹிந்துக்களுடைய பிரஸித்தமான †ஆறுதரி சனங்களும் உண்டானதுகூட இவ்வித தத்துவ விசாரத்தினாலேயே. இன்னும் கூத்திரியர்கள் நடுவுநிலைமையினின்று செங்கோல் செலுத்தி வருங்காலத்தில், அவர்களுள்ளே பலர் ஸ்மிருதிகளாற்பாராட்டப்படுகிற மூற்சொல்லிய வருணச்சிரமங்களின் ஏற்றத்தாழ்வுகள் ஜனங்களுக்குப

* ஆரணியகம்=காட்டிற்குச் சம்பந்தமுள்ளது.

† ஆறுதரிசனங்களாவன: ஸாங்கியம், யோகம், மீமாம்ஸை, வேதாந்தம், நியா யம், வைசேஷிகமென்பன. இவை ஷட்தரிசனமெனப்படும்.

# பௌத்தருமம்.

பொறுமையை யுண்டாக்குவதினால், அவை தமது நல்ல அரசாட்சிக்கு இடையூறுகவுள்ளவைகளென்று எண்ணங்கொண்டிருந்திருக்கலாமென்றும் ஊகித்தற்கிடமுண்டு. பௌத்தமத ஆராய்சியில் பேர்பெற்றவருள் ஒருவரான 'ஒல்டன்பர்க்' (Oldenberg) என்பவர், துறவறமானது முதலில ஹிந்துதேசத்தில் உதித்துப் பின்பு மற்றையிடங்களிற் பரவியதென்று எண்ணுகிறார். கௌதமபுத்தர்காலத்தில் விந்தியமலைக்கும் இமயமலைக்கும் நடுவேயுள்ள நாடாகிய ஆரியாவர்த்தத்தில் துறந்தோர் கூட்டம் பல இருந்தனவென்று பௌத்தநூல்களாலும் ஜைனநூல்களாலும் தெரியவருகிறதென்றும் அவர் சொல்லுகிறார். ஆகவே தத்துவ விசாரமுயற்சி எவ்விடத்தும மிகுதியாக விருந்தகாலத்திலேயே அவ்வாரியாவர்த்தத்தில் கௌதமபுத்தர் அவதரித்தனர். மேறகூறிய முன்னோர்களின் ஞானமே அவருக்கு மூலதனம். வேதாந்தத்திற்கும பௌத்தமதத்திற்கும் பலவற்றிலும் ஒற்றுமையிருப்பதறகு இதுவே காரணம். உலகவாழ்வானது துன்பத் தொகுதியென்பதும், மறுபிறப்பு அத்துன்பதைத் தொடர்ச்சியறுது வழிவழியாக வளர்விப்பதென்பதும், பிறவாமையே மாந்தர் எய்துதற்குரிய மேலான உறுதிப்பொருளென்பதும், அப்பிறவாமைகுப் பறறற்றுப் பயன் நோக்காது செய்யும நற்கருமங்களே காரணமாமென்பதும் ஹிந்துக்களுடைய தரிசனங்களிலும பௌத்தநூல்களிலும் ஒரோவிதமாகக் கூறப்பட்டுள்ளன:

> "பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெரும்பேரின்பம்
> பற்றின் வருவது மூன்றது பின்ன
> தற்றே ருறுவது"

(மணிமேகலை, உ-ம் காதை, சுச-சுஎ.)

*மூவகைத் துன்பங்களினின்றும் நீங்குவதே சிறந்த புருஷார்த்தமென்பது சாங்கிய தரிசனத்தின்கொள்கை. உலகவாழ்வு ஸாரமில்லாததென்றும் நிலையில்லாததென்றும் நினைத்து மாறுபடுதலில்லாததும் நித்தியமானதுமாகிய வீட்டையடைய ஒவ்வொருவரும் முயலவேண்டுமென்பதே வேதாந்தத்தின் கருத்து. இங்கே சொல்லிய அந்தமி லின்பத்தழிவில் வீட்டை வேதாந்திகள் நிர்வாணமென்றுங் கூறுவதுண்டு. பௌத்தர்களும் தாம் பெறுதற்குரிய மேலான புருஷார்த்தத்தை நிர்வாணமென்றே கூறுவர். இந்த நிர்வாணத்தினுடைய இலக்கணத்தைக் கூறுதலிலும இதனை அடைதற்குரிய வழியை அறிவுறுத்துதலிலும வேதாந்திகளுக்கும் பௌத்தர்களுக்கும் சிறிது வேறுபாடிருந்தாலும் அத்வைதிகளல்லாத மற்றை வேதாந்திகள் அத்வைதிகளோப் †பிரச்சன்ன பௌத்தர்க

* மூவகைத் துன்பங்களாவன:— (க) ஆத்யாத்மிகம் (உ) ஆதிதைவ்கம் (ங) ஆதிபௌதிகம்.

† பிரச்சன்ன பௌத்தர் - வேறுவேடத்தில் மறைந்த பௌத்தர்.

# பௌத்த தருமம்

என்று அவமதித்துக்கூறும் வழக்கம் வேதாந்தத்திற்கும் பௌத்த மதத்திற்குமுள்ள ஒற்றுமையை விளக்குகின்றது. பௌராணிகர், கௌதமபுத்தரை விஷ்ணுவின் அவதாரமாக ஏற்றுக்கொண்டிருப்பதும் பௌத்தமதம் ஹிந்துமதத்திற்கு நேரே முற்றும் முரணியதன்றென்பதைக் குறிப்பிக்கும.

பௌத்தமதத்தில் மஹாயானம் ஹீனயானமென்று இருவகையுண்டு; அவற்றுள், மஹாயானம நேபாலம், திபெத், சீனம, ஜபபான் என்கிற இடங்களில் நடைபெற்றுவருகிறது. ஹீனயானம பர்மாதேசத்திலும் இலங்கைத்தீவிலும் பரவியுள்ளது. மணிமேகலையிற் கூறப்பட்டுள்ளது இந்த ஹீனயானசம்பிரதாயமே. ஹிந்துதேசத்தின் வடக்கேயுள்ள மஹாயானசம்பிரதாயத்தாரும் வேதாந்திகளும் அடிக்கடி தம்முள் வாதித்து வந்தனரென்று தெரிகிறது. மஹாயானசம்பிரதாயத்தைச் சேர்ந்த பல நூல்கள் ஸம்ஸ்கிருதபாஷையிலே எழுதப்பட்டுள்ளன. ஹீனயானத்தார்க்குப் பாளிபாஷையில் எழுதப்பட்டுள்ள திரிபிடகமே மூலநூல்; வேறொன்றுமில்லை. கௌதமபுத்தர்காலத்திலே பௌத்தருக்கும் வேதாந்திகளுக்கும தத்துவசாஸ்திர விஷயமான வழக்கு அதிகமாக இருந்ததென்று தெரியவில்லையாதலால், அவர்காலத்துக்குப்பின்பே பௌத்தமதத்திற் பிரசித்தமாகவுள்ள மாத்தியமிகர், யோகாசாரர், ஸௌத்திராந்திகர், வைபாஷிகர் என்கிற நான்கு வகையாருடைய தத்துவசாஸ்திர சமபிரதாயங்களும் உண்டாயிருக்கவேண்டும.

கௌதமபுத்தர், வேதாந்தக்கொள்கையில் அடங்கியிருக்கிற அப்பிரத்தியக்ஷமான தத்துவங்களை அனுமானதர்க்கத்தினால் சாதிக்கமுடியாதென்ற அபிப்பிராயங்கொண்டவர்; ஆனாலும் ஸாங்கியர்களுடையவும வேதாந்திகளுடையவுமாகிய மானஸசாஸ்திரத்தையும முன்னோர்களுள்ள பல ஆசிரியர்களின் ஆசாரத்தையும் அவர்களுடைய அறமெதிக்குள்ள விதிகளையும் கைக்கொண்டவர்; ஸ்வப்பிரயோஜனத்தை நாடிமுயலவது அறமன்றென்பதும் அவ்வகைமுயற்சி தன்பமே உருவங்கொண்டாற் போன்ற உலகவாழ்வின்பற்றினை விருத்திசெய்துகொண்டே வருமென பதும பயன்கருதாமல் பிறருக்காகப் புரியுங்கருமமே துன்பந்தரும உலகப்பற்றினை அறுப்பதென்பதும அவருடையகொள்கை :

"தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்"

(மணிமேகலை, நி-ம் காதை, எஉ.)

"பிறர்க்கற முயலும் பெரியோய்"

(மணிமேகலை, கக-ய வாயதை, சுஉ.)

"பிறர்க்கற மருளும் பெரியோன்"

(மணிமேகலை, உக-ம் காதை, கஎ அ.)

"தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு
மன்னுயர் முதல்வன்"

(மணிமேகலை, உரு-ம் காதை, கசுசு-கஎ.)

"முன்னுன்பெரு மைக்கணின் னுன்முடி வெய்து காறு
நன்றே நினைந்தான் குணமொழிந் தான்ற னக்கென்
றொன்றானு மூள்ளான் பிறர்க்கேயு நிக்கு ழந்தா
னன்றே யிறைவ னவன்றுள்ச ரணங்க ளன்றே."

(குண்டலகேசி, கடவுள்வாழ்த்து.)

"இருட்பார வினைநீக்கி யெவ்வுயிர்க்கு நாவலென
வருட்பாற் றனிசுமந்த வுன்னுமுத லின்னளவு
மதவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரிததோ புண்ணியநின் றிருமேனி."

(வீரசோழியம், யாப்புப்படலம், கசு-ம் கலித்துறை யுதாரணம்.)

தெய்வமுண்டென்னும் உறுதியும் ஆன்மாக்களுண்டென்னுமுறுதியும் அவற்றின் இலக்கணங்களையும் சம்பந்தத்தையும அறிந்துகொள்ளுதலு மே நலலொழுக்கத்திற்கு ஆதாரமென்று அவர் உறுதியாக எண்ணினவ ரலலர். தெய்வத்தினதப்பற்றியும் ஆன்மாவைப்பற்றியும் எவரும் யாதொ ன்றும அறியவல்லவரல்லரென்பது அவரதருத்துப்போலும். ஆயினும் துன்பம்நிறைந்த பிறவிப்பிணியினின்றும நீங்குவதே மாந்தர் எய்துதற் குரிய பெருமபயனென்பதையும், யான் எனதென்ற இருவகைப்பற்றுமே அப்பிறவிப்பிணியை அறுத்தற்கு இடையூறுகளுள்ளனவென்பதையும், அப்பிணிநீங்கிய நிர்வாணநிலையில துன்பத்திறகு இடமேயிலலையென்ப தையும அவர் உறுதியாக நம்பினவர். ஆன்மாவைப்பற்றியும பிரஹ்மத் தைபபற்றியும் வழக்காடுவதைக்காட்டிலும் ஒழுக்கத்தைச் செவ்வைசெ ய்து நடைபெறசெய்வதால் உலகத்தில் துன்பகுறையுமென்றெண்ணி, அவர் தர்மத்தை வெளியிட்டு விளக்கிப் பரவசசெய்தாரென்றே நினைக்க வேண்டும். புத்தரைச சிலர் நாஸ்திகரென்றும் அநாத்மவாதியென்றும ப சுகிறார்கள். திரிபிடகத்திலடங்கிய புத்தருடைய உபதேசங்களுள் ஒன்றேனும இக்கருத்தை முற்றும் விளக்குவதாகத் தெரியவில்லை. இவ் வாறு கூறுபவர்கள் பௌத்தர்கள் சொலலும் நிர்வாணத்தைச சூனிய நிலையென்று கருதுகிறார்கள். அது புத்தருடையகொள்கையென்று சொ ல்லற்பாலதன்று.

(Oldenberg Page 278)

ஸம்யுக்தநிகாயம் என்கிற பௌத்தநூலில, வத்ஸகோத்திரன் என்ற ஒருதுறவி கௌதமபுத்தரிடஞ் சென்று "ஆன்மாவென்று ஒன்று உள. தோ?" என்று கேட்டபொழுது புத்தர் மௌனமுற்றிருந்தனரென்றும, நூலில் அங்ஙனம் ஒன்று இல்லையோவென்று பின்னும் அவன் வினவிய பொழுது அதற்கும் புத்தர் ஒன்றும் பேசாமலே இருந்தனரென்

றும் கூறியிருக்கிறார். கோசலதேசத்தரசனுகிய ப்ரஸேநஜித் என்பவன் ஸாகேத நகரத்திற்கும் ஸ்ராவஸ்தி நகரத்திற்கும் நடுவிற் போய்க்கொண்டிருக்கையில், கூஹமை என்கிற ஒரு பிக்ஷுணியைச் சந்தித்துப் பணிந்து அவளிடத்தில் பௌத்ததருமத்தைப்பற்றித் தான் ஐயுற்றபொருளைப பின்வரும் வினவிடைகளால் தெளிந்துகொண்டானென்று மேற்கூறிய வம்யுக்தநிகாயத்திலேயே தெரிகின்றது :

அரசன்—*" பகவதி! ததாகதன் இறந்தபின்னரும் உளனோ?"

கூஹமை—" அரசர்தலைவ! ததாகதன் இறந்தபின்னரும் இருப்பதாக ஆசாரியபுத்தன் சொல்லவில்லை."

அரசன்—" பகவதி! ஆனால் இறந்தபின்பு ததாகதன் இல்லையோ?"

கூஹமை—" அரசசிங்கமே! ததாகதன் இறந்தபின்னர் இல்லையென்பதையுங்கூட ஆசாரியபுத்தன் சொல்லவில்லை."

அரசன்—" பகவதி! அங்ஙனமாயின், ததாகதன் இறந்தபின்னர் உளனுமாம், இலனுமாம், என்னலாமோ?" பகவதி! ததாகதன் இறந்தபின்னர் உளனுமல்லன், இலனுமல்லன் என்றும் கூறலாமோ?"

இவ்வினுக்களுக்குமுன்போலவே அந்தப்பிக்ஷுணி "இவற்றைப்பற்றி ஆசாரியபுத்தன் ஒன்றும் சொலலவில்லை" என்றனள். இவ்வகை வினவிடைகளுங்கூட நிர்வாணமென்பது சூனியாவஸ்தையென்றும், ஆன்மாவென்று ஒன்றில்லையென்றும், கௌதமபுத்தர் உபதேசித்துக் கூறினரென்று காட்டவில்லை. நிர்வாணத்தை அடைந்தபின்னர் உலகத்துன்பமுற்றும் அறுமென்றும் அத்துன்பத்தை அறுக்கமுயலுவதே எல்லாத்தருமங்களுக்கும் முடிவானபயனென்றுங்கருதி, உலகம் உய்யும் பொருட்டுக் கௌதமபுத்தர் தமது மதத்தை யார்க்கும் உபதேசித்து வந்தனர்.

கௌதமபுத்தருக்குப் போதிவிருக்ஷத்தினடியில் ஞானோதயமான பொழுது அவருடைய மதத்திற்கு அடிப்படையாகிய நான்கு ஸத்தியங்கள் அவர் மனத்துட் புகுந்தன; அவற்றின் மேலேதான் அவர் பின்பெழுப்பிய கட்டிடமெல்லாம் நிற்கின்றன.

அந்த ஸத்தியங்களாவன: — க - துக்கம், உ - துக்கோத்பத்தி, துக்கநிவாரணம், ச. - துக்கநிவாரணமார்க்கமென்பன.

" துன்பந் தோற்றம் பற்றே காரண
மின்பம் வீடே பற்றிலி காரண
மொன்றிய வுளையே வாய்மைநான் காவது"

(மணிமேகலை, சுo-ம் காதை, கஅசு-கஅஎ.)

---

* பகவதி என்பது, பிக்ஷுணிகளைக் கௌரவித்தழைக்கும் விளிப்பெயர்; சுருணிகளைப் பவதியென்பதுபோல.

கௌதமபுத்தர் தமக்கு ஞானோதயமானபின்பு காசிக்குச்சென்று, முன்பு தம்முடன் தவஞ்செய்துகொண்டிருந்தோராகிய ஐந்துஸந்யாஸிகளுக்குத் தம்முடையகொள்கையைத் தெரிவிக்கும்பொருட்டுச் செய்த உபந்யாஸத்தில் காணப்படுவது யாதெனின்,

(Oldenberg Page 211.)

"ஓ ஸந்யாஸிகளே! துக்கமென்ற தூய்மையான ஸத்தியம் இது வே: பிறவி துன்பம்; பிணி துன்பம்; மூப்பு துன்பம்; இறப்பு துன்பம்; வன்பிலலாரோடு தொடர்பு துன்பம்; அன்புள்ளாரிடத்தினின்றும் பிரிவு துன்பம்; விரும்பியதைப் பெறுமை துன்பம்; சுருங்கசசொல்லின் ஐம் புலப்பற்றும் துன்பமேயாம்.

ஓ ஸந்யாஸிகளே! துகமோகத்தியாகிய தூய்மையான ஸத்தியம் இதுவே: இங்கும அங்கும் சிறுபான்மையே நிறைவேறுதற்குரியனவா யே காமலோபங்களோடுசேர்ந்த வேடகை (திருஷ்ணை) என்பதே இது; இதுவே பிறப்பீனும் வித்து;

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து." (திருக்குறள்.)

இன்பவேட்கையும உயிர்வாழ்வேடகையும அதிகாரவேட்கையும் இது வாம.

ஓ ஸந்யாஸிகளே! துக்கநிவாரணமாகிய தூய்மையானசத்தியம் இது வே: ஆசையை யொழித்து அதைத் தன்னிடத்தினின்றும வலிந்து நீக் கித தன்னை அதிலிருந்து பிரித்துகொண்டு அதற்கு இடங்கொடாமல் அதை முற்றும நாசஞ்செய்தலினை உண்டாகும இந்த திருஷ்ணையின் அழிவுதான்.

ஓ ஸந்யாஸிகளே! துகநிவாரணமார்க்கமாகிய தூய்மையான ஸத் தியம இதுவே: மிகக தூய்மையையுடைய அஷ்டாங்கமார்க்கம இதுதா ன்; அஃதாவது:—நற்காட்சி, நல்லூற்றம, நல்வாய்மை, நற்செய்கை, நலவாழ்க்கை, நன்முயற்சி, நறகடைப்பிடி, நல்லுளத்தோர் கூலப்பாடு என்னும் இவ்வெட்டுமாம."

"நற்காட்சி நல்லொழுக்க நல்வாய்மை நல்வாழ்க்கை
நற்செய்கை யோடைந்து நாடு."

"நன்முயற்சி நன்காங கடைப்பிடிநல் லோர்நம்பாற்
செல்கையுட னெட்டினைத்துந் தேறு." (பரமதீபிகாபானு.)

"பழித்திடாப் பழுதில் வாழ்க்கை யெட்டையும் பாரித்து"
(சிவஞானசித்தியார்.)

உலகவாழ்க்கை துன்பமென்பது, சாங்கியர்களுக்கும் வேதாந்திக ளுக்கும, மற்றைத் தரிசனத்தார்களுக்கும் சைனர்களுக்கும், பௌத்

தர்களுக்கும் பொதுவாகவுள்ள கொள்கை. மைத்திராயணியுபநிடதத்தின் தொடக்கத்தில உலகவாழ்வு நிலையற்றதென்பதும, ஆதலின அது துன்பத்திற்கு இருப்பிடமானதென்பதும பினவருமாறு விளக்கப்பட்டுள்ளன:

(Sacred books of the east Vol. xv. pages 287 - 289)

"பிருஹத்ரதனென்னுமரசன் யாக்கை நிலையாமையைக் கருதி வைராக்கியம்பூண்டு தன் அரசை மூத்தமகனிடத்து ஒபபித்துவிட்டுக் காடுக்குச் சென்றனன்; அங்கே அவன் சிரமேற்குவித்தகையுடைய சூரிய ணேய நோக்கிக்கொண்டு அருந்தவமபுரிநதான்; இங்ஙனம ஆயிரநாள் சென்றபின் ஒரு முனியையடைந்து அவர பாதத்தைப் பணிநது வீழ்ந்து கிடக்க, எல்லாவற்றையும எரிக்கினற புகையிலலாத நிசசுடரபோல ஒளிவீசும் ஆத்மஞானியான பகவான் சாகாயநரென்னும அமமுனிவர, அரசனேநோக்கி, "எழுவாய், எழுவாய்; விருமபியதைப் பெறுவாய்; நீ வேண்டுவது என்னை?" என்றனர; அதற்கு அவ்வரசன் அவரைப் பணிந்து, "யாவரும் வழிபடற்குரிய முனியே! தேவரீர மெய்ப்பொருளுணரசியுடையீர; அடியேனுக்கு ஆத்மஞானமிலலை; அடியேன் அதைக்கேடக விரும்புகிறேன்; எனக்கு உபதேசித்தருள வேண்டுகிறேன" எனறனன அதற்கு அம்முனிவர், "ஆத்மதத்துவ ஞானமானது பணடைக்காலத்திற் பெரியோர்களால நிசசயிக்கப்படடுள்ளது; அஃது எளிதிற் பெறக கூடியதன்று; ஆதலின், இங்ஙனாகு குலைதேதான்றலே! நீ விருமபிய பிறவற்றைக் கேட்பாயாக" என்றனர; அப்போது அரசன் சாகாயகரருடைய பாதத்தில் தன் சென்னியுறப்பணிநது பின்வரும காதையைகூறினன்.

"என்பு, தோல், நரமபு, எலபினுளிருக்கும மூளை, மூமஸம, சுக்கிலம், சோணிதம், சிலேஷ்மம, கண்ணீர ஆகிய இவற்றை யுடைமையாற பழிக்கப்படுவதாயும் மலமூத்திர வாத பித்த கபங்களுடைய கூட்டமாயுமுள்ள நாற்றமுடைய இநதச சரமிலலாத சரீரநதினிருநதுகொண்டு போகத்தை அனுபவித்தலினால யாதுபயன்? காமம, குரோதம, உலோபம், மோகம், பயம், துக்கம, அழுக்காறு, விருமபியதை யடையாமை, விரும்பாததை யடைதல, பசி, தாகம, மூப்பு, இறபபு, பிணி, சோகம ஆகிய இவற்றால் துன்புறும இசசரீரத்திலிருநது இன்பத்தை அனுபவித்தலால யாதுபயன்? ஈ கொசகுமுதலிய ஜநதுக்களும் புல பூண்டுகளும பிறநிறக்குமாறுபோலவே உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களேயும அழியுந்தன்மையனவாக நாம் பார்க்கிறோம; அவற்றால் யாதுபயன்? இஃதன்றிப் பெரியோர்களும், ஸுத்யும்நன், இக்ஷ்வாகு, குவலயாசுவன், யுவனாசுவன், வத்ரியாசுவன், அசுவபதி, சசிபிந்து, ஹரிசசந்திரன், அமபரீஷன், அநுதக்தன், சர்யாதி, யயாதி, அநரண்யன், உசநாலேஸன் முதலிய சிறந்த வில்லாளிகளான சக்கரவர்த்திகளும், மருத்து பிரதன்முதலிய அர

சாகளும தம்முடைய சுற்றத்தாருடைய கண்காணத் தமக்குரிய பெரிய ஐசுவரியத்தைத் துறந்து இவ்வுலகைவிடு வேற்றுலகஞ்சென்றனர். இம் மட்டுமேயன்று. வேறு பெரியோராகளும அவ்வாறே சென்றார்கள். கந்தாவா, அசுரர், யக்ஷா, அரக்கர, பூதகணங்கள், பிசாசர், உரகர், பேய்கள் முதலியோருடைய சாசதத்தையும கண்டிருக்கிறோம். இதுவுமன்றி, பெரியசமுத்திரம நீரவற்றுதலும், மலைகள் கீழேவிழுதலும், தருவகூடத்திரம சலித்தலும, பூமி ஆழ்தலும, தேவர்கள் தங்களிடங்களைவிட்டு ஓடுதலும உண்டு. இபபடியிருக்குமெனக்கு இந்த உலக ஸ்வாபாவங்களால் யாதபயன? அவறறை நமபினவர்களுக்கு இவ்வுலகில் அடிக்கடி பிறப்பு நேரிடுவதைப் பார்க்கலாம. ஆகையால், என்னைக் கைதூக்கிவிடல்வேண்டும. நான் இந்த உலகவாழ்வில் பாழ்ங்கிணற்றிலுள்ள தவளையைப் போன்றிருக்கிறேன. பூஜயரே! தேவரீரே எங்களுக்குக்கதி; பூஜயரே! தேவரீரே எங்களுக்குகதி."

இவ்வாறுகூறியுள்ள உபநிடதத்தின்பொருளை ஆராய்ந்து பார்க்குமிடத்தில உலகமும, உலகவாழ்வும, மானிடசரீரமும் நிலையற்று, மாறிப்போதலுக்கு உட்பட்டவையாதலால், அவை துன்பத்திற்கு ஓர் இருப்பிடமாகுமெனறும, நிலையுள்ளதும, வேறுபாடில்லாததுமானபொருள் ஆதமதத்துவம ஒன்றுதானென்றும தெரிந்துகொள்ளலாம். புத்தர் இந்த ஆத்மதத்துவத்தைப்பற்றி உறுதியாக ஒன்றும் சொல்லாவிட்டாறும பிராஞ்ஞ சபபாகமான பொருள்களெல்லாம நிலையற்றனவாகையால, அவைகள் துக்கத்திற்கு இருப்பிடமென்று உறுதியாய்சொல்லியிருக்கிறார். கௌதமபுத்தா தம்முடைய ஆதிசிஷ்யர்களாகிய ஐந்து துறவிகளுக்குக காசியில அடியிலவருமாறு உபதேசித்தாரென்று பௌத்தர்களுடைய மஹாவாக்கியமெனகிற நூலால தெரியவருகிறது:

"ஓ ஸாயாஸிகளே! உருவம ஆத்மாவன்று; உருவம ஆத்மாவாயின், ஸாயாஸிகளே! அந்த உருவத்திற்கு நோய்வருதல் கூடாது; ஒவ்வொரு வரும தம்முருவத்தைப்பற்றி என்றேதகம இவ்விதம இருத்தல்வேண்டுமெனறும இவ்விதமிருதலகூடாதென்றும சொல்லத் தகுந்தவராயிருத்தலிவேண்டும. ஆனால, ஓ ஸாயாஸிகளே! உருவம் ஆத்துமாவல்லாததாலால நோய்க்கு உட்படடிருகிறது. மனிதன் தன் உருவத்தைப் பற்றி எனறேதகம இவ்விதம இருதலவேண்டும இவ்விதம் இருத்தல் கூடாதென்று சொலலதகுந்தவனுகவில்லை."

வேதனை, ஸஞ்ஜனை, ஸம்ஸ்காரம, விஜ்ஞானம என்கிற மற்றை ஸ்கந்தங்களைப்பற்றியும "இவைகள் ஆத்துமாவலல" என்று தெரிந்துவிட்டுப புத்தா அவாகளோடு அடியிலவருமாறு சம்பாஷிக்கிறார்:

புத்தர்.—"ஓ ஸாயாஸிகளே! உருவம நிலையுள்ளதா? நிலையற்றதா? என எண்ணுகிறீர்கள?"

சிஷ்யர்.—"தந்தையே! நிலையற்றது"

புத்தர்.—"நிலையற்றுள்ளபொருள் துன்பமா? இன்பமா?"

சிஷ்யர்.—"தந்தையே! துன்பம"

புத்தர்.—"நிலையற்றதும் துன்பம் நிறைந்ததும் மாறுதலுக்குட்பட்டதுமான பொருளே முறையே ஆராய்ந்தபிறகு ஒரு மனிதன் 'அஃது என்னுடையது, அது நான், அது நானே,' என்று சொல்லுதல்கூடுமா?"

சிஷ்யர்.—"தந்தையே! சொல்லமுடியாது"

இவ்வாறே மற்றை நான்கு ஸ்கந்தங்களாகிய வேதனை, சமஜ்ஞை, ஸம்ஸ்காரம், விஜ்ஞானம எனபவற்றைப் பற்றியும நிலையற்ற தன்மையினால் அவை ஆத்துமாவல்லவென்றும துக்கதிற்கிடமென்றும் கூறியிருக்கிறார.

ஆத்தும தத்துவத்தைப் பற்றியும பரப்பிரஹ்மதத்வத்தைப பற்றியும் வேதாந்திகள் சொல்வதுபோல வெளிப்படையாகப புத்தர ஒன்றும சொல்லாவிட்டாலும் பிரபஞ்ச சம்மந்தமான பொருள்களெலலாம நிலையற்றனவாகையால உலகத்தையும உலகவாழ்வையும துன்பதிற்கிடமென்று வேதாந்திகள் சொலவதுபோலவே புத்தரும் சொல்லியிருக்கிறார. இவ்வாறு எல்லாம் துன்பமென்று பௌத்தாகள பாராடடுவதனால், அவாகள் லௌகிக வியாபாரம் ஒன்றும வேண்டாமென்று விட்டொழிந்து தங்களைத் தாங்களே எப்பொழுதும வருத்திகொண்டிருந்ததாக நினைபதறகு இடமில்லை; இதனை அவாகளுடைய தர்மபதமென்கிற நூலினின்று பின் எடுத்துக்காட்டும் வாக்கியங்களால அறிந்துகொள்ளலாம.

(Oldenberg Pages 221-222.)

அவை வருமாறு:—

"பழக்குகிறவனால் அடக்கப்படட குதிரைகளைப்போல எவனுடைய காமங்களானவை அடக்கப்பட்டிருக்கின்றனவோ! எவன் அகங்காரத்தைத் துறந்தவனோ? எவன் அசுத்தத்தினின்றும விலகினவனோ? அவனிதமான பரிபக்குவமுற்றவனைக்கண்டு தேவர்களும அழுகாமடைவார்கள். பகைநிரம்பிய இவ்வுலகத்தில ஒருசத்துருவுமிலலாமல பரிபூரணஞானத்தில் நாங்கள் வாழ்கிறோம; பகைநிரமபிய மனிதரிடையில பகையில்லாமல் நாங்கள் வசிக்கிறோம; நோயாளிகளிடையில் ஆரோக்கியமுள்ளவர்களாகப் பரிபூரணஞானதத்தில் நாங்கள் வாழ்கிறோம; நோயாளிகளிடையில் நோயற்று வசிக்கிறோம; உழைக்கிறவரிடையில் உழைப்பில்லாமல பரிபூர்ணஞானதத்தில் நாங்கள் வாழ்கிறோம; உழைகிற மனிதரிடையில உழையாமலே வசிக்கிறோம; யாதொரு பொருடபேறுமில்லாத நாங்கள் பரிபூரணஞானதத்தில் வாழ்கிறோம்; ஒளிபொருந்திய

தேவர்களின் ஆனந்தத்தைப்போன்ற ஆனந்தந்தான் எங்கள் பணப்பை யாயிருக்கிறது; ஒருவருமில்லாமல் ஒழிந்திருக்கிற வீட்டில் இருந்து கொண்டு தன் ஆதமாவைச சாந்தியால் நிரப்பிக்கொண்டிருக்கிற பிக்ஷு-வானவன் ஸ்த்தியத்திலேயே கருத்துடையவனுய் மணிதாக்குரிய ஆனந்தத்தைக்காட்டிலும் மிகந்த ஆனந்தத்தை அனுபவிக்கிறன்."

காமமும உலோபமும் இன்பவேட்கையும் இருப்பைப் பெறவேண்டுமென்னும் வேட்கையும அதிகாரவேட்கையுமே உலகவாழ்வினுள்ள துன்பத்திற்குக் காரணங்களாகுமென்று இரண்டாம்வாய்மையாகிய துக்கோத்பத்தியைபற்றிப் பௌத்தர சொலலுவதாக முன்னமே கூறப்பட்டிருக்கின்றது. இந்தக்காரணங்களிலிருந்து துக்கமுண்டாகும்வழி இன்னதென்று விளக்குதற்குப் பௌத்த நூலகளில், காரிய காரண முறைமையோடுகூடிய துவாதசநிதானங்களென்ற பெயரையுடைய பன்னிரண்டு தத்துவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேற்கூறிய துக்கோத்பத்தியைப்பற்றித் திரிபிடகத்திற் சொல்லியிருப்பது யாதெனின்,—

(Oldenberg Page 225.)

"அவித்தை (பேதைமை) யிலிருந்து ஸம்ஸ்காரங்கள் (செய்கைகள்) உண்டாகின்றன; ஸம்ஸ்காரத்திலிருந்து விஞ்ஞானம் (உணர்வு) உண்டாகின்றது; விஜ்ஞானத்திலிருந்து நாமரூபங்கள் (அருவுரு) உண்டாகின்றன; நாமரூபங்களிலிருந்து ஷடாயதனங்கள் (வாயில்கள்) உண்டாகின்றன; ஷடாயதனங்களிலிருந்து ஸ்பரிசம் (ஊறு) உண்டாகின்றது; ஸ்பரிசத்திலிருந்து வேதனை (நுகர்வு) உண்டாகின்றது; வேதனையிலிருந்து திருஷ்ணை (வேட்கை) உண்டாகின்றது; திருஷ்ணையிலிருந்து உபாதானம் (பற்று) உண்டாகின்றது; உபாதானத்தினின்று பவம (பிறப்புக்கு மூலமானகருமக்கூட்டம) உண்டாகிறது; பவத்திலிருந்து பிறப்பு உண்டாகிறது; பிறப்பினின்று மூப்பும மரணமும் வலியும் (pain), அழுகையும, துன்பமும் (suffering), கவலையும, எக்கமும (despair) ஆகிய விளைப்பயன்கள் உண்டாகின்றன; துன்பமெனகிற இராச்சியத்திற்கெல்லாம இதுதான் உத்பத்தி" என்பது.

"பேதைமை சார்வாச் செய்கை யாகுஞ்
செய்கை சார்வா வுணர்ச்சி யாகு
மூணர்ச்சி சார்வா வருவுரு வாகு
மருவுருச் சார்வா வாயி லாகும்
வாயில் சார்வா வூறு கும்மே
யூறு சார்ந்து நுகர்ச்சி யாகு
நுகர்ச்சி சார்ந்து வேட்கை யாகும்
வேட்கை சார்ந்து பற்று கும்மே
பற்றிற் றோன்றுங கருமத் தொகுதி
கருமத் தொகுதி காரண மாக

வருமே யேனை வழிமுறைத் தோற்றந்
தோற்றஞ் சார்பின் மூப்புப்பிணி சாக்கா
டவல மரற்றுக் கவலைகை யாறெனத்
தவலி றுன்பந் தலைவரு மெண்ப
வூழின்மண் டிலமாச் சுழுமிற் நுகர்ச்சி."

(மணிமேகலை, கூ0-ம் காதை, கo2-ககஉ.)

"அவித்தை, ஆசையை முற்றுந்துறப்பதினால் போக்கப்படும; அதனால ஸம்ஸ்காரங்கள் போக்கப்படுகின்றன; ஸம்ஸ்காரங்களைப் போக்குவத னால் விஜ்ஞானம் போக்கப்படுகின்றது; விஜ்ஞானத்தைப் போக்குவத னால் நாமரூபங்கள் போக்கப்படுகின்றன; நாமரூபங்களைப் போக்குவத னால் ஷடாயதனங்கள் போக்கப்படுகின்றன; ஷடாயதனங்களைப் போக் குவதனால ஸ்பரிசம் போக்கப்படுகின்றது; ஸ்பரிசத்தைப் போக்குவத னால் வேதனை போக்கப்படுகின்றது; வேதனையைப் போக்குவதனால திருஷ்ணை போக்கப்படுகின்றது; திருஷ்ணையைப் போக்குவதனால உபா தானம போக்கப்படுகின்றது; உபாதானத்தைப போக்குவதனால் பவம் போக்கப்படுகின்றது; பவத்தைப் போக்குவதனால் பிறப்பு போக்கப்படு கின்றது; பிறப்பைப் போக்குவதனால் மூப்பும் மாணமும வலியும (suffering) அழுகையும துன்பமும் கவலையும ஏக்கமும (despair) போக கடிக்கப்படுகின்றன. துன்பமென்கிற இராஜபததிறமெலலாடு இது தான

"பேதைமை மீளச் செய்கை மீளுஞ்
செய்கை மீள வுணர்ச்சி மீளு
முணர்ச்சி மீள வருவுரு மீளு
மருவுரு மீள வாயின் மீளும
வாயின் மீள வூறு மீளு
மூறு மீள நுகர்ச்சி மீளு
நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
வேட்கை மீளப் பற்று மீளும்
பற்று மீளக் கருமத் தொகுதி
மீளுங் கருமத் தொகுதி மீளத்
தோற்ற மீளுந் தோற்ற மீளப்
பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்
சாக்கா டவல மாற்றுக் கவலை
கையா றென்றிக் கடையி றுன்ப
மெல்லா மீளுமிவ் வகையான் மீட்சி"

(மணிமேகலை, கூ0 – ம் காதை, ககக – கஙக.)

இவ்விதமாகச சொல்லப்பட்டிருக்கிற அவித்தை, ஸம்ஸ்காரம், விஜ் ஞானம், நாமரூபம், ஷடாயதனம், ஸ்பரிசம், வேதனை, திருஷ்ணை, உபா தானம், பவம, பிறப்பு, பிணி மூப்புச சாக்காடுமுதலிய விஷயப்பயன் எல்

# பௌத்த தருமம்.

இந்த இப்பன்னிரண்டு தத்துவங்களுக்குள் ஒன்றற்கும் மற்றொன்றற்கு முள்ள காரணகாரியமுறைமையை அறிந்திகொண்டால், புத்தருடைய இரண்டாவது மூன்றாவது வாய்மைகளாகிய துக்கோத்பத்தி துககரிவா ரணங்களைப்பற்றிய எல்லாம் தெரியவரும்:

‘ பேதைமை செய்கை யுணர்வே யருவுரு
வாயி லூறே துகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பய
னிற்றென வகுத்த வியல்பீ ராறும
பிறதோ றறியிற் பெரும்பே றறிகுவ
ரறியா ராயி னஞ்ஞர கறிகுவர்.”

(மணிமேகலை, உசு-ம் காதை, கo௫-ககo, ஈo-ம் காதை, சஅ-ரு.o.)

பௌத்தமதம, ஸகலவஸ்துக்களினுடைய மூலகாரணமாகிய தத்துவத்தைத் தேடிக் கண்டுபிடிக்க முயலுவதில்லை; மத்தியமநிகாயமென்கிற பௌத்த நூலில, மாலுங்கனென்பவன கௌதமபுத்தரையடைந்து, “இவ்வுலகம நிலையுளதா? நிலையறதா?” என்று வினவியபொழுது, புத்தர் மௌனமொழிகூறிருந்தாரென்றும, அவ்விதமான ஆராய்ச்சி பயனகளைக் கொகாதென்பதுதான அவருடைய மௌனத்திற்குக காரணமென்னுஞ் சொலலியிருக்கிறது. மூலகாரணத்தைப்பற்றிய ஆராயச்சி பௌத்த மதத்தில இலலாவிடினும, உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களும எங்கும வியாபித்திருக்கும காரணகாரியமுறைமைகளுள அடங்கினவை யெனபதை அமமதம ஏற்றுகொண்டிருக்கிறது. ‘காரணமிருந்தால் காரியமுண்டாகும; காரணத்தைப்போக்கினால் காரியமும போயவிடும’ எனகிற நியாயத்தைக்கொண்டு, புத்தர உலகத்தில எங்குள் ளனபடுகிற துகத்தை எலலோரும போகடிப்பதற்கு கொள்ளுதற்கு முயலவேண்டியவழியைத் தாம கண்டுபிடித்து உபதேசித்தருளினார். இத்தனபம மூலகாரணத்தைச் சோதனத்தலலாதிருந்தால, அத்துன்பத்தைப் போகக முயலுபவர்களுக்கு அமமூலகாரணத்தைப்பற்றிய அறிவு வேண்டுவதேயிலலையென்று அவர நினைத்ததாகத்தெரியவருகிறது. அதனலதான மேற்கூறிய துவாதசநிதானங்களில எலலாவற்றிற்கும மூலகாரணமான தாக ஒன்று கூறபபடவிலலை. பௌத்தருடைய மானஸசாஸ்திரக் கொள்கைவழியே ஆராயுமிடத்து, அறிவுள்ள பிராணிகளெலலாம் ஜராதுஸ்காரங்களின் சோகத்தையினால உண்டாவதென்று அவாகளெண்ணியிருப்பதாகத் தெரியவருகிறது. அவ்வியாவன:—ரூபம, வேதனை, ஸஞ்ஜை, ஸம்ஸ்காரம், விஜ்ஞானமென்பன:

“உருவு துகர்ச்சி குறியே பாவனை
யுள்ள வறிவினை யைங்கந்த மாவன”

(மணிமேகலை, ஈo-ம் காதை, கஉக்-ககo.)

அவற்றுள், **ரூபஸ்கந்தமாவது** உருவங்கட்கெலலாம் காரணமாகிய பொருளைத் தெரிவிக்கின்றது. இந்த ரூபஸ்கந்தத்தில், பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்களும், ஐந்து ஞானேந்திரியங்களும், ரூப ரஸ கந்த சப்த ஸ்பரிசங்களாகிய ஐந்துபுலனகளும், ஆண்மை பெண்மை வேறுபாடுகளும், இவைபோல்வன பிறவுமாகிய இருபதெட்டுத் தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. ஆகாயத்தை ஒருபூதமாக அவாகள் கொள்ளார்.

**வேதனஸ்கந்தமாவது** இந்திரியங்களுகும புலன்களுக்குமுள்ள ஸம்பந்தத்திலை உண்டாகும் உணர்வு. பொறிகளைந்தும மனமொன்றும ஆகிய அறுவகை வாயில்களால், இவ்வுணர்வு அறுவகைப்படுமட; இந்தவாறும தனித்தனியே சுகலம், அசுகலம, சுகலாசுகலமென மூனறுவகைப் படுதலால், வேதனை பதினெட்டுவகைப்படும.

**ஸம்ஜ்ஞாஸ்கந்தமாவது** மெய், வாய், கண், மூக்கு, செவி, மனமென்னும ஆறு இந்திரியங்களாலுண்டாகிற அறுவகையுணர்வுக்குச் சம்பந்தமுற்று அவ்வுணர்வினாலுண்டாகும் பொதுவமிவையும, சிறப்பமிவையுங் கொண்டு பொருள்களைப் பெயரிட்டுக் குறித்துக்காட்டுவதற்கு வேண்டிய ஞானமாகும. இந்த ஸ்கந்தம், ஆறு இந்திரியங்களின வாயிலாகத் தோன்றுதல்பற்றி அறுவகையினதாகும்.

**ஸம்ஸ்கார ஸ்கந்தமாவது** மனம, வாக்கு, காயமென்கிற முக்கரணங்களாற் செய்யப்படும் தொழிலேவறுபாடுகளால அகரணங்களுக்குண்டாகும பரிபாகவிசேடம. இந்த ஸ்கந்தம ஐமபத்திரண்டு வகைப்படுமென்பர்.

**விஜ்ஞானஸ்கந்தமாவது** தூங்குவோருடைய உணாவானது காத்திருத்துவம, போக்திருத்துவமின்றிச சாஸ்வதாதிரமாய் நிற்றல்போலச சேதநர்களுடைய சரீரத்துள்ளிருந்து அவாகளுடைய அறிவுக்கெல்லாம ஆதாரமாய்நிற்கும சைதன்ய தத்துவம ஆகும:

> "உணர்வெனப் படுவ துறங்குவோ ருணர்விற்
> புரிவின் முகிப் புலன்கொளா ததுவே."
>
> (மணிமேகலை, கூ0-ம் காதை, அ-ஆ)

இந்த விஜ்ஞானஸ்கந்தம, தன்னுடைய காரியங்களாகிய பலவகைப படுமெண்ணங்களாலுண்டாகும் நல்வினை தீவினைகளைக்கொண்டு எண்பத தொன்பது வகையாக வகுக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்கந்தங்களெல்லாம் நிலையற்றன; ரூபம் நுரையைப்போன்று தோன்றி உடனே மறைவதென்றும், வேதனை நீரின்மீது அசைந்து தோன்றும் குமிழியைப் போன்றதென்றும், ஸம்ஜ்ஞை வெயிலில்தோன்றும் பேய்த்தேர்போல்வதென்றும், ஸம்ஸ்காரம் வாழைபோல வன்மை

யும நிலையுமில்லாததென்றும், விஜ்ஞானம் இந்திரஜாலத்தோற்றம்போல் வதித்தென்றும் சொலலப்பட்டுள்ளன.

"ஜாதஸ்ய மரணம தருவம" (பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம்) என்கிற விதமாகப் பிறந்தவர்களுக்கெல்லாம் பிணி மூப்பு முதலிய துன்பங்களு முண்டு. பிறப்பே துன்பத்திற்கு நேராக மூன்புள்ள காரணம. ஒருவனுக்கு மறுபிறப்பிற்கு இடமிருகிறவரையில் அவன துன்பமிலலாத ஸ்திதியை அடையமாட்டான்; மறுபிறப்புக்குக் காரணமும், மறுபிறபபுண்டாகுமு வழியும பௌத்தநூலகளில பின்வருமாறு சொல்லப்பட்டுளளன:

"ஒருவன் மரணமடையுமபொழுது அவனைச்சேர்ந்த ஐந்துஸ்கந்தங்களும தங்களுடைய பழைய சோகதையினின்றும் பிரிக்கப்படுகின்றன; மேற்கூறிய ஸ்கந்தங்கள இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கும் நிலையிலே அவன ஜீவித்திருந்தகாலததிற் செய்துவநத நல்வினை தீவினைகளாகிய செய்கைகளெல்லாம் விஜ்ஞானஸ்கந்தத்தில வித்துப்போன்று உள்ளடங்கியிருந்து அநத விஜ்ஞானஸ்கந்தத்தைத் தமக்குத் தகுதியுள்ள கதி (பிறபபு) யில மற்றை நான்கு ஸ்கந்தங்களோடு கலப்பித்து மறுபிறபபை அடையசசெய்கின்றன; இவ்வகையான கருமப்பிரவாகம மறுபிறபபின மூலம். ஒரு தீபததினின்றும பல தீபங்கள் எவ்வாறு ஏற்றபபடுமோ அவ்வாறே ஒருபிறப்பினின்றும பலபிறப்புக்கள் உண்டாக்கப்படும". ஓராற்றில நீர் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது ஓரிடத்தில் ஒருவிகாடியிற கண்ட நீர அவ்விடததில அடுத்த விகாடியில் இல்லாதிட்டாலும அவ்வாறிறைமூகமக ஒன்றைக் கருதப்படுமாறுபோல வரும் பிறபபுகளின் தொடாசசி ஒனறுகடவியிருக்கும. இதனை விளக்குதற் பொருட்டே இத்தொடாசசிகளு வாயுசந்தானம், தீபசந்தானம், *தோயசந்தானம், †பிபீலிகாசந்தானமென்னும இநதநான்கினை உதாரணமாகக் கூறினர. தாமிரபறிய நலவினை தீவினைகளுக்கு ஏற்றவாறு மக்கட்கதி, தேவகதி, பிரமகதி, நரககதி, விலங்குகதி, பேய்ககதியென்னும அறுவகைக் கதியுள் ஒன்றை அவரவர் அடைவர:

"மக்களுந் தேவரும் பிரமரு நரகருந்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
சொல்லப் பட்ட கருவிற் சார்தலும்."

(மணிமேகலை, உ0 - ம் காதை, ருள - கூ0.)

மக்கட்கதியி லுள்ளோாக்கு அவர்கள் இயற்றிய தீவினைகளின் வேறுபாட்டால் நரககதி, விலங்குகதி, பேய்க்கதியென்னும் மூன்றனுள் அவரவர்செய்கைக்குத் தக்கவாறு பிறபபுக்கள் உண்டாகும்:

* தாரை - நீர்ப்போக்கு.
† பிபீலிகை - எறும்பு.

"விலங்கு நரகரும் பேய்களு மாக்குங்
கலங்களுர்த் தீவினை."

(மணிமேகலை, உரு-ம் காதை, சக-சஉ.)

" ..... ..... பயன்றெரி புலவ
சித்திறம் படரார் படர்குவ ராயின்
விலங்கும் பேயு நரகரு மாகிக்
கலங்கிய வுள்ளக் கவலையிற் ரோன்றுவா."

(மணிமேகலை, கூ0-ம் காதை, எஉ-எரு)

மக்கட்கதி, தேவகதி, பிரமகதியென்னும இம்மூன்றினுமுள்ள பிறப்பின் வேறுபாடுகளானவை கல்வினையின்வேறுபாடுகளால் உண்டாகுமை.

"கலங்களுர்த் தீவினை கடிமின் கடிந்தாற்
றேவரு மக்களும் பிரமரு மாகுதி
ராகலி னல்வினை யயரா தோம்புமின்."

(மணிமேகலை, உரு-ம் காதை, சஉ-சச.)

"சொல்லிய பத்தின் ரெருகுதியி னீங்கிச்
சீலந் தாங்கித் தானந் தலைநின்று
மேலென வருத்த வொருமூன்று நிறத்துத்
தேவரு மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பய னுண்குவர்."

(மணிமேகலை, கூ0-ம் காதை, எஎ-ஆக.)

இவ்வறுவகைப்பட்டகதிகளுட் பிறந்தோர்களாவரும் சக்கரவாளமென்றுகூறும பிரஹ்மாண்டத்துள் அடங்கிய உலகமமுப்பதென்றனுள் இருப்பர்.

இந்த உலகம் முப்பதென்றும், சக்கரவாளத்தின் நடுவேநின்ற ஸுமேருமலையின் அடிதொட்டு அதன் உசரிவரையில் முறையே ஒன்றன்மேல் ஒன்றாக உள்ளனவாகும்; இப்படி அநேகசக்கரவாளங்கள் உள்ளனவென்பதும், அவைகள் *கற்பங்களின் துவக்கத்துத் தோன்றி அதன் முடிவில் அழியுமென்பதும, ஒவ்வொரு சக்கரவாளத்தினுள்ளும் மேற்கூறிய ஸுமேருவும அதனைச்சூழ்ந்துள்ள ஏழுகுலகிரிகளும் அக்குலகிரிகள் ஒவ்வொன்றினையுஞ்சூழ்ந்து அவ்வக்கிரியின் உயரவளவுள்ள ஆழமும அகலமுமமைந்த ஏழுகடல்களும ஆகிய இவற்றையெல்லாஞ் சூழ்ந்துகிடக்கும் பெரும்புறக்கடலும் அந்தப் பெருமபுறக்கடலிலுள்ள சமபுத்தீவு முதலிய நான்குமஹாத்வீபங்களும் அந்த நான்கனுள் ஒவ்வொன்றையும பரிவாரமாக ஐந்நூறு ஐந்நூறுகச்சூழ்ந்துள்ள

* கற்பம் என்பது காலத்தின்பேரெல்லை; ஹிந்துக்களின் சோதிடநூலின்படி பார்க்குமிடத்து சுகூ - கோடி வருஷமென்று தெரிகிறது; பௌத்தருடையகொள்கை கணக்கால் விளங்கவில்லை; 'கற்பமாவது ஒசனையகன்றுயர்ந்ததோர்வச்சிரமலை கருப்பிணியுதித்தபட்டாடைத்தோளைபட்டுக் கையறத் தேய்ந்ததாம்' (நீலகேசியுரை) என்பதனால் சைனருடையகொள்கை வெளியாகின்றது.

களும் உள்ளனவென்பதும் பௌத்தருடையகொள்கை. இந்த மஹாத் வீபம் நான்கனுள் தெற்கேயுள்ளது சம்புத்தீவென்பர். இத்தன்மைய தான சக்கரவாளத்தினுள்ளேயிருப்பனவாகிய உலகம் மூப்பத்தொன்ற னுள் எல்லாவற்றிற்கும் கீழேயுள்ளது நரகலோகம்; அது மகாநிரயம், இரௌரவம், காலசூத்திரம், ஸஞ்சீவனம், மகாவீசி, தபனம், ஸம்பிர தாபனம், ஸங்காதமென எட்டுவகைப்படும். இந்த நரகலோகத்திற்கு மேலுள்ளது விலங்கினுலகம்; அதற்குமேலுள்ளது பேயுலகம்; அதற்கு மேலுள்ளது அசுரலோகம; அதற்குமேலுள்ளது மக்களுலகம்; அதற்கு மேலுள்ளன ஆறுதேவலோகங்கள்; அவற்றிற்கு மேலேயுள்ளன இரு பதுபிரஹ்மலோகங்கள்; இவ்விருபதுலோகங்களுள் உச்சியிலுள்ள நான் கும அரூபப்பிரஹ்மலோகங்களென்றும் எஞ்சிய பதினறும் ரூபப்பிரஹ் மலோகங்களென்றும் சொல்லப்படும். நரகலோகமுதல் பரநிர்மிதவச வாதியென்னும ஆறுவது தேவலோகமிறுதியாகவுள்ள பதினென்ற னையும காமலோகங்களென்றும எஞ்சியனவாகிய பிரஹ்மலோகமிருப தினையும நிஷ்காமலோகங்களென்றும் சொலலுவார்கள்; நரகலோகமுதல் ஆஸுரிகலோகமிறுதியாகவுள்ள நான்கினையும பாபலோகங்களென்றும் மற்றை இருபத்தேழினையும புண்ணியலோகங்களென்றுங் கூறுவது ண்டு:—

"நால்வகை மரபி னரூபப் பிரமரு
நாலுல் வகையி னுரூபப் பிரமரு
மிருவகைச் சுடரு மிருமூ வகையிற்
பெருவனப் பெய்திய தெய்வத கணங்களும்
பல்வகை யசுரரும படுதய ருறூஉ
மெண்வகை நரகரு மிருவிசும் பியங்கும்
பன்மீ னீட்டமு நாளுவ கோளுந்
தன்னகத் தடக்கிய சக்கர வாளம்."

(மணிமேகலை, சுரம் காதை, களசுகஅசு.)

"சூழ்கடல் வளைஇய வாழியங் குன்றத்து
நடுவு நின்ற மேருக் குன்றமும
புடையி னின்ற செழுவகைக் குன்றமு
நால்வகை மரபின் மாபெருந் தீவு
மோரீ ராயிரஞ் சிற்றிடைத் தீவும்
பிறவு மாங்கத னிடவகை யுரியன
பெறுமுறை மரபி னறிவுவரக் காட்டி
யாங்குவா ழுயிர்களு மவ்வயி னிடங்களும்
பாங்குறு மண்ணீட்டிற் பண்புற வகுத்து
மிக்க மயனு லிழைக்கப் பட்ட
சகடர வாளக் கோட்டமீங் கிதுகாண்"

(மணிமேகலை, சுரம் காதை, கசஉ-உ0உ)

## உலகம்—ஙக.

ஙக. நைவஸமஜ்ஞாஸம்ஜ்ஞாயதனலோகம். ... ...

ஙஎ ஆகிஞ்சந்யாயதனலோகம்.... } வை ஐந்தாவிஜ்ஞாநந்த்யாயதனலோகம். ... ... ... } னத்தில் தேறியவாகள் அடைதற்

உஅ. ஆகாசாநந்த்யாயதன லோகம்.

உள. அகநிஷ்டலோகம். ... ... } இவை நான்காந்

உசூ. ஸுதர்சிலோகம. ... ... } தியானததில தேறி

உடு. ஸுதர்சலோகம. ... ... } யவர்கள் அடைதற்

உச. அதபலோகம். ... ... ... } குரியவை.

உங. அஸமஜ்ஞாஸ ... ... ... } ...

உக. பிருஹத்பலலோகம. ... ... } ...

உ0. சுபகிருஸ்ஸலோகம. ... ... } இவை மூன்றுந்

ககூ. அப்பிரமாணசுபலோகம. ... } தியானததில் தேறி

கஅ. பரீத்தசுபலோகம். ... ... } யவர்ஞள் அடைதற்

கள. ஆபாஸ்வரலோகம். ... ... } குரியவை.

ககூ. அப்பிரமாணுபலோகம. ... } இவை இரண்டாந்தியானதத்தில் தேறியவர்கள அடைதறகுரியவை.

கடு. பரீத்தாபலோகம். ... .... }

கச. மஹாப்ரஹ்மலோகம்.... ... } இவை மூதலாந்

கங. ப்ரஹ்மபுரோஹிதலோகம். ... } தியானததில தேறி

கஎ. ப்ரஹ்மகாயிகலோகம். .... } யவர்கள் அடைதற்

கக. பரநிர்மிதவசவர்த்திலோகம. } குரியவை.

க0 நிரமாணரதிலோகம. ... }

கூ. }

அ. }

எ. திரயஸ்திரிமசலலோகம. }

சு. மஹாராஜிகலோகம. ... }

டு. மனுஷ்யலோகம. ... .. }

ஆஸுரிகலோகம. .. }

ங. பிரேதலோகம. ... ... }

திரியக்லோகம. ... .. }

க. நரகலோகம.

இவ்வுலகங்களுட் சில வேறுபெயர்களாலும சொல்லப்படும.

இந்த நான்கும் பாபலோகங்கள்.

இந்த ஆறும் தேவலோகங்கள்.

இந்த நான்கும் அநுபப்ரஹ்ம லோகங்கள்.

இந்த இருபத்தேழும் புண்ணியலோகங்கள்.

இந்தப் பதினைந்தும் நபப்ரஹ்ம லோகங்கள்.

இவை நாற்பத்தொன்றும் லோகங்கள்.

ஸ்லோ ॥ யேதர்ம்ஹேதுப்ரபவாஹேதேஷாம்ததாகதஹ் । ஆஹதேஷாம்யோநிரோதஏவம்வாதீமஹாஸ்ரமணஹ் ॥ (“யேதர்மாஹேதுப்ரபவாஸ்தேஷாம்ஹேதும்ததாகதஹ்। ஆஹதேஷாம்யோநிரோதஸ் ஏவம்வாதீமஹாஸ்ரமணஹ்”) என்பது, புத்தமதத்தினுடைய முக்கியஸாரத்தை எடுத்துக்காட்டும் ஒரு பிரஸித்த சுலோகமாகப பௌத்தர்களுக்குள்ளே வழங்கிவருகின்றது. பௌத்தர்களிச்சேர்ந்த தாதிகோபமுதலியகட்டிடங்களுட் சிலவற்றில் இந்த சுலோகம் சிலகளிற்செதுக்கி அமைக்கப்படடுமுள்ளது. “காரணத்திலிருந்து உண்டாகுந்தன்மைகள் எவைகளோ? அவைகளுக்குக் காரணம யாதோ? பினனும அவற்றின்தடை யாதோ? இவறறைத ததாகதன் சொன்னன; இப்படிச சொன்னவன் மஹாஸ்ரமணன்” எனபது இந்த சுலோகத்தினபொருள். இதிற் கூறப்பட்டுளள மூன்றுவிஷயங்களும் மணிமேகலையில ‘ஏதுநிகழ்ச்சி’ என்று கூறப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| “ஏது நிகழ்ச்சி யெதிர்ந்துளது” | (கூ-ம் காதை, ச.) |
| “ஏது நிகழ்ச்சி யீங்கின்று” | (கூ-ம் காதை, நிக.) |
| “ஏது நிகழ்ச்சி யாவும் பலவள” | (கஉ-ம் காதை, கo.) |
| | (உக-ம் காதை, கசு o.) |

இந்த ஹேதுநிகழ்ச்சியை விளக்கியதே கௌதமபுத்தருடைய பெருமையாகும. உருவமுதல விஜ்ஞானமிறுதியாகவுள்ள ஐந்து ஸ்கந்தங்களும் இவ்வாறு காரண்ங்களிலிருந்து உண்டான காரியங்களென்பதுதான் அவருடையகொள்கை. ஹேதுநிகழ்ச்சியாகிய இந்தக்காரணகாரிய பரமபரைகளுந்த தடையின்றிசெலலுகை இருக்குமவரையில் நிலையின்மையாலுண்டாகுந துன்பம நீங்காது. காரணத்திலிருந்துண்டான பொருள்கள் யாவும் அக்காரணங்கள் நீங்கியபொழுது தாமும நீங்குதல் இயலபு; அதலால், இததன்மையனவாகிய பொருள்களெல்லாம் நிலையற்றன; ஸாரமிலலாதன; துன்பதிற்கு இடமுமாகும்.

“நிலையில வறிய துன்பமென நோக்க
வுலையா வீட்டிற் குறுதி யாகி.”
(மணிமேகலை, கo-ம் காதை, கo-கூ.)

“அநித்தந் துக்க மநான்மா வசுசியெனத
தனித்துப் பார்த்துப் பற்றறுத் திடுதல்.”
(மணிமேகலை, கo-ம் காதை, உசூ-உடு.)

நிலையில்லாமையையே பெருந்துன்பமாகப் பௌத்தர்கள் கொண்டிருத்தலால, இந்நிலையிலலாத்தன்மையிலிருந்து நீங்குதலதான் அவாகளுக்கு உயாந்த புருஷார்த்தமாகும; இப்படி நிலையிலலாத்தன்மையிலிருந்து நீங்கி நிலையுளளதன்மையை அடைதலே அவாகள்கூறும் நிர்வாணத்திற்குப் பொருளென்றுதெரிகிறது. இவ்வுலகத்திற் காட்சியளவையாலும் அநுமானவளவையாலும தாம அறிந்துகொள்ளுகிற பொருள்களெல

லாம் ஹேதுநிகழ்ச்சியுள் அடங்கியவையெனினும், நிலையில்லாதனவென்றும் அவரால் கொள்ளப்பட்டிருப்பினும், ஹேதுநிகழ்ச்சியுள் அடங்காததும் நிலையுள்ளதுமான தசை[illegible]ன்றிருக்குமென்று அவர்கள் கொண்டதாக ஏகம் ஊகிக்கலாம். இந்தத் தசைக்கு நிலையுள்ளதாக இருத்தலும் துன்பமின்மையிருத்தலுமே இலக்கணம்; இதைப்பற்றி வேறென்றும் சொல்லமுடியாது. இந்தத்தசையைப் பெறுவதற்குக் காட்சியாலும் அனுமானத்தாலும் அறிந்துகொள்ளக்கூடாத 'ஆத்மா' 'பிரஹ்மம்' என்கிற பொருள்களின்ஞானம் அநாவசியகமென்று கொண்டு, ஒழுக்கத்தைத் திருத்திக்கொள்ளுவதனாலேயே மேற்கூறிய துன்பமில்லா நிலையை எல்லோரும் அடையலாமென்றுணர்ந்து புத்தர் தமது அறவாழியை உருட்டிவந்தனர். நிலையில்லாத தன்மையோடுகூடிய தசையிலிருப்பதே துன்பமாகையாலும், நிலையில்லாப்பொருள்களெல்லாம் காரணங்களிலிருந்துண்டாகிய் காரியங்களாயிருப்பதனாலும், காரணத்தைப்போக்கினால் காரியமும் அழிந்துபோவதனாலும, நிலையில்லாத் தன்மையிலிருப்பதை உறுதியாக்குவதாகிய காரணமே துன்பத்திற்குக காரணமாகும்; அந்த நிலையில்லாத் தன்மையை நீக்குவதற்குவேண்டிய காரணமே துன்பதநிவிர்த்திக்குவேண்டிய காரணமாகும; ஆகையால், பௌத்தர்களுடைய பரமபுருஷார்த்தத்தைப் பெறுவதற்குக் காட்சியனுமானங்களால அறிந்துகொள்ளக்கூடிய ஹேதுநிகழ்ச்சியுமிவும் அதற்கு ஒத்ததான நன்னடையுமே போதியவை; துன்பமும துன்பத்தின் காரணங்களும காட்சியனுமானங்களால் அறிந்துகொள்ளக்கூடியவைகளாக இருத்தலினாலே அவை வ்யாவஹாரிகதசையைச சேர்ந்தனவாக இருக்கின்றன; ஆகையால், பாரமார்த்திகவிஷயவிசாரம் துன்பத்திலிருந்து நிவ்ருத்திபெறுவதற்கு வேண்டியதன்று. ஹேதுநிகழ்ச்சி முடிபொருளாகிய ஆதிகாரணத்தைத் தெரிவிக்கவந்ததன்று; வ்யாவஹாரிகமான ஸம்ஸாரபரம்பரையின் தோற்றத்தையும் அழிவையுமே காடடுகின்றது. ஸாதாரணமாக ஒருவன் யாதேனுமொருபொருளைத் தன்பொறிகளால் அறிந்துகொள்ள முயலுமபொழுது முதலில் நேரிடுவது பொருள்களுக்கும அவனுடைய பொறிகளுக்குமுண்டாகும் ஸம்பந்தந்தான்; இந்த ஸம்பந்ததை ஸ்பரிசமென்பர். இந்த ஸ்பரிசமுண்டானவுடன் இன்பதுன்பவடிவங்களான நுகர்ச்சி இயல்பாகவே உண்டாகின்றது. இதை வேதனையென்பர்; இந்நுகர்ச்சியைப பெற்றபின்பு இன்பதனைப் பெறவேண்டுமென்றும், துன்பத்தை அகற்ற வேண்டுமென்றும் தோன்றுகிற எண்ணம் இயல்பாகவே உண்டாகும; இவ்வெண்ணம் வேட்கையெனப்படும்; இவ்வேட்கையின் பயன் பற்று இதனை உபாதானமென்பர்; வழியல்லாதவழியில் உழைக்கும்படி ஒவ்வொருவரையும் தூண்டுதல்செய்வது இப்பற்றுத்தான்; இது தான் முடிவில்லாமல் ஒன்றன்பினொன்றுகத்தோற்றும் மறுபிறப்பிற்குக் காரணமாகிய பவத்தையுண்டுபண்ணுவது; இத்தன்மையையுடைய மறுபிறப்பு,

இல்லையாயின், பற்றின்றாண்டுதலாற் செய்யப்பட்ட தொழில்களின் பயனாகிய நல்வினைதீவினைகளே இயல்பிற்கேற்றபடி ஒவ்வொருவரும் அனுபவிப்பதற்கு இடமில்லாமலேபோகும். நல்வினைதீவினைகளின் பயன்களெல்லாம நிலையில்லாதனவாதலாலும் ஸாரமில்லாதனவாதலாலும் துன்பத்தையே கொடுக்கும். உலகப்பொருள்களிற் பொறிகளைச் செலுத்துவதனாலே மேற்கூறியபடி துன்பமுண்டாகுமென்பதில் யாருக்கும் ஸந்தேகமில்லை; இப்பொறிகள் துன்பத்தைத்தரும்வண்ணம் செல்லுதற்குக் காரணம யாதென்று விசாரிப்போமாக: பௌத்தர்கள் மெய் வாய் கண் மூக்கு செவியென்னும ஐந்துபொறிகளையும் மனத்தையும்கூட்டி ஆறுவாயிலகளாக அங்கீகரித்திருக்கிறார்கள். இவ்வாறும் புறத்தேயுள்ள ரூபத்தினறிவையும் அகத்தேயுள்ள நாமத்தினறிவையும் கொடுப்பதற்கு ஏற்ற இயல்போடு கூடியவைகளாம; இவ்வாயில்கள் அருவுருவாகிய இவ்விரு வகையறிவையும் கொடுப்பதற்கு மூலமாகவுள்ளது விஜ்ஞானமாகும். வேதாந்த நூல்களிலும் இப்படியே வெளியேயுள்ள பொருள்களைக்காட்டிலும் பொறிகள் உயர்ந்தனவென்றும பொறிகளைக்காட்டிலும் மனம் உயர்ந்ததென்றும், மனத்தைக்காட்டிலும் புத்தி உயர்ந்ததென்றும், புத்தியைக்காட்டிலும ஆன்மா உயர்ந்ததென்றும் கூறப்பட்டிருக்கின்றன. வேதாந்திகள் புத்தியென்பதைதான் பௌத்தர்கள் நாமரூபமென்று சொல்லுவதாகப பெருமபாலும தோற்றுகிறது. இந்த நாமரூபமானது விஞ்ஞான ஸம்ஸ்கார ஸம்ஜ்ஞாஸ்கந்தங்களுக்கு ஸமமந்ததமுள்ளதாகப் பௌத்தருடைய நூல்களால் விளங்கிவருகின்றது; ஆனால், பௌத்தர்களுடைய விஞ்ஞானம் வேதாந்திகள கொண்டிருக்கும ஆத்மதத்துவத்திற்குச் சமானமானதன்று; ஆத்மாவுக்கு அநாதியாகிய தன்மையையும நித்தியமாகிய தன்மையையும இலக்கணமாகச சொல்லுகிறார்கள். விஞ்ஞானத்திற்கு இவ்விரண்டுமில்லை; தீர்க்கநிகாயமென்கிற பௌத்தநூலில் ஒரிடத்தில் புத்தர் பிருதிவி அப்புத் தேயு வாயு ஆகாசம் விஞ்ஞானமென்கிற ஆறு பூதங்கள் உள்ளனவென்று சொல்லியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால், விஞ்ஞானத்தையுங்கூட ஒரு பூதமாகப் பௌத்தர்கள் கொண்டிருக்கிறாரெனென்று நினைக்கவேண்டும. இந்த விஞ்ஞானம் கபிலருடைய ஸாங்கியதரிசனத்திலுள்ள 'மகத்து' என்கிற தத்துவத்திற்கு ஒப்பாக இருக்கலாம்; இது ஸமஸ்காரத்திலிருந்தும ஸம்ஸ்காரம் அவித்தையிலிருந்தும உண்டாயினவென்று சொல்லுகிறார்கள்.

அத்வைத ஸித்தாந்தத்தில் மாயையை அவித்தையென்றும் அஜ்ஞானமென்றும் சொல்லுகிறார்கள். மாயை, அவித்தை, அஜ்ஞானமென்னும் இப்பெயர்கள் மூன்றும அந்த ஸம்பிரதாயத்தில் பிரகிருதியைக்குறிப்பதைக் காட்டுகின்றன; புத்தருடைய காலத்திற்குப்பிறகு த்வாதசநிதானத்தில் ஒன்றாகிய அவித்தையை அத்வைதிகள்கூறும் மாயைக்கு ஒப்பென்று

பௌத்தர்கள் எண்ணியதாகச்சொல்ல இடமுண்டு. பிரஜ்ஞாபாரமிதை என்னும் ஒரு புஸ்தகத்தில், புத்தருக்கும சாரீபுத்திரனுகும பின்வரு மாறு ஒருஸம்வாதம் நடந்ததாக இருக்கிறது.

புத்தர்.—"ஓ சாரீபுத்திர! மிகவும் பற்றுள்ளவர்களாய் அறிவுறுத்தப் படாதவாகளாய் ஸாதாரணமானவர்களும அஜ்ஞானிகளுமாகியிருக்கிற மனிதர்கள் நினைக்கிறவிதமாகப் பதார்த்தங்களுக்கு இருப்பு இலலை."

சாரீபுத்திரன். — "தந்தையே! ஆனல் அவைகளுக்கு இருபபு எப்படி?"

புத்தர்.—"ஓ சாரீபுத்திர! உண்மையில் இல்லாதனவாக அவைகள் இருக்கினறன. அவைகளுக்கு உண்மையான இருப்பு இலலாமையால், அவைகளை அவித்தையென்று சொலலுகிறார்கள். இவ்விஷயத்தைபபற்றி அறியாதவர்களாய் ஸாதாரணாகளாயும அறிவிலலாதவாகளாயுமிருக்கிற மனிதாகள் இதில (அவித்தையில) அதிகப்பற்றுள்ளவாகளாயிருகிறார்கள். தமமுள் ஒன்றறகும் உண்மையான இருப்பு இலலாத வஸ்துகளேயெலலாம் உண்மையான இருப்புள்ளனவாக அவாகள் தங்களமனதில பாவிக்கிறார்கள்."

பிரஜ்ஞாபாரமிதையென்னும் இநதப் புஸ்தகத்திலேயே ரூபமுதலிய ஸ்கந்தங்களைத்தும் இநதிரஜால வித்தையில சதுரப்பாடையவனொருவன் ஒருசதுஷ்கத்தில தன் வித்தையினல் கூட்டங்கூட்டமாக மனிதாகளைத் தோற்றுவித்தப பின்பு அவர்கள் மறையுமவண்ணஞ் செய்வது போலவே உள்ளனவென்று புததர் ஸுபூதியென்னும சிஷ்யனொருவனுக்கு உபதேசித்ததாகவும் சொலலியிருகிறது. ஆனல இவ்விதமான அபிப்பிராயம் பாளீபாஷையில உள்ளனவாகிய பௌத்தாகளுடைய மூலநூல்களால் விளங்கவில்லை. மத்தியமநிகாயத்தைசசேர்ந்த ஸம்யக்திருஷ்டிஸூத்திராந்தம் என்கிற புஸ்தகத்திற் சொல்லியிருகிறவிதமாகத திரிபிடகததில் அவித்தையைப்பற்றிச சொல்லுமிடங்களிலெலலாம "ஞண்பனே! துக்கத்தை அறிநதுகொள்ளாமையையும துக்கோகாத்பத்தியை அறிந்துகொள்ளாமையையும துக்கநிவாரணத்தை அறிநதுகொள்ளாமையையும துக்கநிவாரணமார்க்கத்தை அறிநதுகொள்ளாமையையுமே அவித்தையென்று சொல்லுகிறார்கள்" என்று சொல்லியிருக்கிறது. ஆகையால், பௌத்தர்களுடைய ஞான்குவாய்மைகளேயும் அறிந்துகொள்ளாமையே அவித்தை.

"பேதைமை யென்பது யாதென வினவி
லேதிய விவற்றை யுணராது மயங்கி
யியற்படி பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ ணென்றெனக் கேட்டது தெளிதல்."

(மணிமேகலை, கூ0-ம் காதை, ரிக-ருச.)

"பேய்மை யாக்குமிப் பேதைமைக் கள்வனை டெனுய்க்
காமுற் றுமதன் பயத்தினிற் காமனைக் கடந்து
நாம ரூபம்புகழ் கொடுப்பதோர் நன்னெறி நண்ணும்
வாமன் வாய்மொழி மறந்திட்டு மறந்தொழி கின்றும்."

(வீரசோழியம், யாப்புப்படலம், இ-ம் கலித்தறை யுரையிற்கண்டது.)

இத்தன்மையத்தான அவித்தையிலிருந்து ஸம்ஸ்காரமுண்டாகின்றது. ஸமஸ்காரமாவது மனோவாக்குக் காயங்கள் தத்தம் தொழில்களைச் செய்தலினால் அவைகளுக்குண்டாகும் பரிபாகவிசேடம் (திருத்தம்) என்று அதனிலக்கணம் முனனமே கூறப்பட்டிருக்கிறது. பதார்த்தங்களின் தனமைகளையெலலாம் ஸமஸ்காரத்தின்பயனைப் பௌத்தர்கள் சொல்லுகிறார்கள். புத்தர் நிர்வாணத்தை அடைந்தபொழுது, தேவனுகிய இந்திரன், "ஸம்ஸ்காரங்கள் உண்மையாக நிலையற்றன; தோற்றத்திற்கும் அழிவிற்கும உள்ளடங்கினவை; அவைகள் உண்டானபடியே அழிந்துவிடும; அவைகளினுடக்கமே இன்பம" என்று சொன்ன வாக்கியங்கள் திரிபிடகத்தில் இடந்தோறுங் காணப்படுமென்பர்; தர்மபதத்தில, ஸம்ஸ்காரத்தைப்பற்றிச சொலலியிருப்பது யாதெனின், "ஸமஸ்காரங்களெலலாம அநித்தியங்களாகவுள்ளவை; ஒருவன் இதை உண்மையாக அறிந்துகொண்டால் அவன துன்பத்திலிருந்து திருமபுவான்; இதுதான் பரிசுத்தமார்க்கம; ஸமஸ்காரங்களெல்லாம துன்பமயமாகவுள்ளவை; ஒருவன் இதை உண்மையாக அறிந்துகொண்டால, அவன் துன்பத்திலிருந்து திருமபுவான; இதுதான் பரிசுத்தமார்க்கம; இயல்புகளெல்லாம் அநாத்மாகளள்; ஒருவன் இதை உண்மையாக அறிந்துகொண்டால், அவன துன்பத்திலிருந்து திரும்புவான்; இதுதான் பரிசுத்தமார்க்கம்" என்பது. இங்கே ஆதமா இலலையென்றுசொன்னதாக நினைக்க இடமிலலை. செய்கை (ஸம்ஸ்காரம்), களும் இயலபுகளும் ஆகிய உலகத்துள்ள எல்லாப்பொருள்களும அநித்தியமானவைகளென்றும் துன்பமயமான வைகளென்றும அநாத்மாக்களென்றுமே சொலலப்பட்டிருக்கின்றன; நானுவாய்மைகளையும அறிந்துகொள்ளாமையாகிய அவித்தையானது ஸமஸ்காரத்தை வளரசசெய்யவேண்டுவது முறைதான்; இந்த ஸம்ஸ்காரம, ஒருபிறப்பிலிருந்து மறுபிறப்பிற்கும் செல்லும்; முன்ஜன்மத்திலிருந்து பின்ஜன்மத்திற்கு இவ்வாறு வந்திருக்கிற ஸமஸ்காரத்தை ஜன்மாந்தரவாஸனையென்று எலலாரும சொல்லுகிறார்கள்; இப்படியுண்டாயிருக்கிற ஜன்மாந்தரவாஸனை ஒவ்வொருவனுக்கும் இந்த ஜன்மத்தில் அவன் பெறக்கூடிய ஞானஞ்ஞான்களுக்குக் காரணமாய நிற்கும; அஃதாவது பூர்வஜன்மதனின் ஸமஸ்காரம கெட்டதாகவிருந்தால் அஃது இந்தஜன்மத்தில் அவித்தையையுண்டாகும்; நல்லதாக இருந்தால் அவித்தையை ஒழிக்கும என்றதாம. மேலும் முன்ஜன்மத்திலுள்ள அவித்தை மறுஜன்மத்தில் அவித்தையை உண்டாக்கக்கூடிய ஸம்ஸ்காரங்களுக்கு

இந்தஜன்மத்திலேயே காரணமாயிருக்கிறதென்பதை எளிதாக் அறிந்து கொள்ளலாம். ஒரேஜன்மத்தில் அவித்தை ஸ்ம்ஸ்காரத்தை உண்டாக்குகிறது; ஒருஜன்மத்திலிருந்து வேறொருஜன்மத்திற்குச் செல்லும்போழுது முன்ஜன்மத்தின் ஸம்ஸ்காரம பின்ஜன்மத்தில் அவித்தையை உண்டாக்குகிறது. ஆகையால், அவித்தை ஸம்ஸ்காரத்திற்குக் காரணமென்றும் ஸம்ஸ்காரம அவித்தைக்குக் காரணமென்றும் அறிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொருஜன்மத்திலும் இத்தன்மையையுடைய ஸம்ஸ்காரமில்லாவிட்டால் விஞ்ஞானமும் அதன்பயன்களும் உண்டாகா; இதைக் கொண்டு துக்கோத்பத்தி துக்கநிவாரணங்களென்கிற வாய்மைகளை விளங்க அறிந்துகொள்ளலாம்; மேற்கூறிய பன்னிரண்டு நிதானங்களின் இலக்கணம் இவ்வாறு மணிமேகலையில் கூறப்பட்டிருக்கிறது:

"பேதைமை யென்ப தியாதென வினவின்

உணர்வெனப் படுவ துறங்குவோ ருணர்விற்
புரிவின் றுகிப் புலன்கொளா ததுவே
யருவரு வென்பதவ் வுணர்வு சார்ந்த
வுயிரு முடம்பு மாகு மென்ப
வாயி லென்ப தாயுங் காலே
யுள்ளமுறு விக்க வுறுமிட ஞ்சூ
மூறென வுரைப்ப துள்ளமும் வாயிலும்
வேறு புலன்களே மேவுத லென்ப
துகர்வே யுணர்வு புலன்களே துகர்தல்
வேட்கை விரும்பி துகர்ச்சியா ராமை
பற்றெனப் படுவது பசைஇய வறிவே
பவமெனப் படுவது கரும வீட்டந்
தருமுறை யிதுவெனத் தாந்தாஞ் சார்தல்
பிறப்பெனப் படுவதக் கருமப் பெற்றியி
னுறப்புண ருள்ளஞ் சார்பொடு கதிகளிற்
காரண காரிய வருக்களிற் றோன்றல்
பிணியெனப் படுவது சார்பிற் பிறிதா
யியற்கையிற் றிரிந்துடம் பிடும்பை புரிதல்
மூப்பென மொழிவ தந்தத் தளவுந்
தாக்குறலே யாமையிற் றுன்தளர்ந் திடுதல்
சாக்கா டென்ப தருவுருத் தன்மை
யாக்கை வீழ்கதி னெனமறைந் திடுதல்."

(கூ0-ம் காதை, நிக-கூ0க.)

## (துக்கநிவாரணமார்க்கம்.)

புத்தர், காசியில் ஆதிசிஷ்யர்களாகிய ஐந்துபேர்களுக்குத் தம்முடைய மதத்தைச்சார்ந்த வாய்மைகள் நான்கையும் உபதேசித்தபோ

முது, அவைகளில் நான்காவதாகிய துக்கநிவாரணமார்க்கத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறியிருப்பதாகப் பௌத்தநூல்கள் தெரிவிக்கின்றன.

"ஓ ஸந்யாஸிகளே! துக்கவிநாசத்திற்குரிய மார்க்கமாகிய பரிசுத்தமான ஸத்தியம் இதுதான்; இதுதான் நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத் தோர்த்தலேப்பாடென்பனவாகிய பரிசுத்தமான அஷ்டாங்கமார்க்கம்."

இதைத்தான் விசுத்திமார்க்கமென்றும் பழுதிலாவாழ்க்கையென்றுங் கூறுவர். ஆராய்ந்துபார்க்குமிடத்தில் இந்த விசுத்திமார்க்கத்தில் நடப்பவாகளுக்கு முக்கியமான மூன்முருகுணங்கள் வேண்டுமென்பர். அவற்றைச் சீலம ஸமாதி பிரஜ்ஞையென்று கூறுவர். சீலமாவது விலக்கியவற்றை ஒழித்து விதித்தவற்றையே செய்தல். ஸமாதியாவது மனத்தை ஒருமுகப்படுத்துகை. பிரஜ்ஞையாவது மெய்ஞ்ஞானம். இம்மூன்றும் திரிபிடகத்தில் அடிக்கடி எடுத்துச சொல்லப்பட்டுள்ளன. ஒருவனுடைய உயிர்வாழ்வை நல்லொழுக்கத்தோடு செலுத்துவதாகிய பெரிய ஜீவமானயாத்திரையில் இவை மூன்றும் தங்குமிடங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த யாத்திரையின்முடிபு நிருவாணமாம்; "சீலத்தோடுகூடிய ஸமாதி, பயனைக்கொடுப்பதாயும் மிக்கமங்களத்தை அளிப்பதாயுமிருக்கிறது; ஸமாதியோடுகூடிய பிரஜ்ஞை பயனைக்கொடுப்பதாயும் மிக்கமங்களத்தை அளிப்பதாயுமிருக்கிறது; பிரஜ்ஞையோடுகூடியபொழுது ஆன்மாவானது ஆசையென்னும் மெலிவினின்றும், தோற்றமென்னும் மெலிவினின்றும், பிழையென்னும் மெலிவினின்றும், அவித்தையன்னும் மெலிவினின்றும, எல்லா மெலிவுகளினின்றும் முற்றும் நீக்கப்பட்டதாக ஆகின்றது" என்று திரிபிடகத்துள் ஓரிடத்திற் கூறப்பட்டிருக்கின்றது; "கையைக கை கழுவுதலேபோலவும் காலைக் கால் கழுவுதல் போலவும் சீலம பிரஜ்ஞையினால சுத்திசெயயப்படுகின்றது; பிரஜ்ஞை சீலத்தினால் சுத்திசெய்யப்படுகின்றது, எங்கே சீலமுண்டோ அங்கே பிரஜ்ஞையுண்டு; எங்கே பிரஜ்ஞையுண்டோ அங்கே சீலமுண்டு. சீலவான்களுடைய பிரஜ்ஞையும் பிரஜ்ஞாவான்களுடைய சீலமும் எல்லாப் பிரஜ்ஞைகளிலும் எல்லாச சீலங்களிலும் உயர்ந்த மதிப்புள்ளன" என்று வேறோரிடத்திற் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் சீலஸமாதிப் பிரஜ்ஞைகளைக்கொண்டு முற்பிறபபுக்களின் ஸமஸ்காரங்களையும், இப்பிறப்பின ஸமஸ்காரங்களையும் மறுபிறப்பிற்கு இடங்கொடாதபடி நீக்கிக் கொள்ள முயலவேண்டுமென்பதுதான் மேற்கூறிய விசுத்திமார்க்கத்தின் நோக்கமென்று தெரியவருகிறது.

சீலம், பஞ்சசீலமென்றும் அஷ்டசீலமென்றும தசசீலமென்றும மூன்றுவகைப்படும்.—கொல்லாமை, திருடாமை, வியபிசரியாமை, பொய்கூறாமை, கள்ளுண்ணாமையென்னுமிவை பஞ்சசீலமென்றும், இவை இல

லறத்தார் எல்லோர்க்கும் உரியனவென்றும், இவ்வைந்தினோடு இரவில் தூய்மையில்லாத உணவைப்புசியாமை, சந்தனமுதலிய மணமுள்ள பொருள்களை உபயோகியாமை, தரையிற் பாய்மேலே படுத்தல் என்னும மூன்றுஞ்சேர அஷ்டசீலமென்றும், இவை இல்லறத்தாரில் நிஷ்டாபரர்களுக்கே யுரியனவென்றும், இவ்வெட்டனோடு நாட்டியம் கானமுதலிய வற்றை விரும்பாமை, பொன் வெள்ளிகளைத் தொடாமையென்னும் இவ்விரண்டும்சேரத் தசசீலமென்றும், இப்பத்தும் துறவிகளுக்கேயுரியனவென்றும், இப்பத்தில் வியபிசரியாமை நின்றவிடத்திற் பிரமசரியம் கூறப்படுமென்றும் தார்மிகசூத்திரமென்னும் பௌத்தநூல கூறும்.

இப்பத்தினோடு தன்மதமே யுயர்ந்ததென்று எண்ணிக்கொண்டு பிறர்மதத்தை அவமதியாமையையும் ஒருசீலமாகக் கூறுவதுண்டு; சில வான்களிலுயர்ந்தோர் மனிஷி, மக்கள், பொருள், உயிர், பிறவிவிருப்பமென்னும ஐந்தையும விட்டுவிடவேண்டும். இவ்வீடு பஞ்சத்தியாகமென றுசொல்லப்படும்; இந்தச் சிலவான்களுக்கு அவா பற்று பேதைமை என்னும் மூன்று குற்றங்களும் இருத்தலாகாது.

"குலவிய குற்றமெனக் கூறப்படுமே
அவாவே பற்றே பேதைமை யென்றிவை."

(மணிமேகலை, கூ0-ம் காதை, கசுகூ-கஎ0.)

அக்குற்றமூன்றும் ஆஸ்ரவமென்றுங் கூறப்படும. மேற்கூறிய சில ஸமாதிப்பிரஞ்ஞைகளுக்குவிரோதமாய்நின்று அவைகளை வளராமற் செய்யக்கூடிய மனோபாவங்கள் பத்துண்டென்பதும, அவைகளை ஒழித்தாலன்றி முடிபாகிய நிருவாணத்தைநோக்கிச செலலமுடியாதென்பதும பௌத்தர்களுடைய கொள்கை. இதப் பத்துமனோபாவங்களுக்கும தசஸம்யோஜனங்களென்று பெயர். ஸம்யோஜனமென்பது விலங்கு; பற்றையுண்டாக்கித் துன்பமயமாகிய உலகவாழ்வினின்றும நிவிர்த்தியுண்டாகாதபடி ஒவ்வொருவரையும கட்டிவைபபதனால், இவறறிற்கு இப்பெயருண்டாயிற்று.

தசஸம்யோஜனங்களாவன:—

க. ஸத்காயதிருஷ்டி - உடமபு உண்மையுள்ளதென்னுமெண்ணம.
உ. விசிகித்ஸை - ஸந்தேகம.
ங. சீலவிரதம - பயனநாடிச செய்யப்படுமை விரதங்கள்.
ச. காமம் - சப்தாதிவிஷயவிருப்பம.
ஞ. ப்ரதிகை - கோபம்.
சு. ரூபராகம - உருவமபெறவேண்டுமென்னுமாசை.
எ. அரூபராகம - உருவம்பெறுதலிலிருத்தற்குரிய உலகங்களில்வாஞ்சித்தல.
அ. மானம் - கரவம்.

கூ. ஔத்தத்தியம் - நானே மேலானவனென்னும் தற்புகழ்ச்சி.
கo. அஜ்ஞானம் - அறியாமை.

இவைகளைப் போக்கடித்தாலன்றி விசுத்திமார்க்கத்திற்சென்று நிருவாணத்தைப்பெறுதல் ஒருவருக்கும் இயலுவதன்று.

இந்த ஸம்யோஜனங்களைப் போக்கடித்தற்குவேண்டிய பிரயத்தனத்தோடு விசுத்திமார்க்கத்திற்செல்லுவோர் நான்குவகைப்படுவர்; ஸத்ஸங்கம பௌத்ததர்மஶ்ரவணமனனங்கள் நலலொழுக்கம என்பவைகளால, ஸத்காயதிருஷ்டி, விசிகித்ஸை, சீலவிரதமென்கிற மூன்றையும் போக்கடித்துக்கொண்டு பாபம துவேஷம் அசுத்தி ஆகிய இவற்றுள் ஒன்றுமிலலாமலநீக்கி நான்குவாய்மைகளையும் அறிந்துகொள்ளதொடங்குதலுக்கு ஸ்ரோதாபததியென்று பெயர்; ஸ்ரோதாபத்தியாவது ஆற்றையடைதல; புத்ததாமமாகிய இவ்வாற்றை மேற்கண்டபடி அடைந்தவாகள் ஸ்ரோதாபன்னரென்று கூறப்படுவாகள். இங்ஙனம் புத்தருடைய தர்மதையடைந்த மேற்கூறிய மூன்று ஸம்யோஜனங்களையும தொலைதற்குமுயன்று வெறறிபெற்றவர்கள், காமம் வெகுளி மயக்கங்களை இயன்றவரையில் தம்மிடதில் இலலாதபடி குறைத்துவிடுவார்கள்; இப்படி ஜயத்தைப்பெறறவாகளுக்கு ஸக்ருதாகாமிகளென்று பெயர்; ஸக்ருதாகாமியென்பவன் பின்பு ஒரேபிறப்பைமட்டும பெறுதற்கு உரியவனாக இருப்பான்; அந்த மறுபிறப்பிலேயே அவன் நிருவாணத்தைப்பெறுதல் நிசயமென்பது இதன்கருத்து. இந்தவழியிலேயே வளாசகிபெற்றுக் காமவெகுளி மயகங்களை முறறும போக்கடித்துத் தமமைப்பற்றியாவது பிறரைப்பற்றியாவது தாழ்ந்தஎண்ணம் ஒன்றுமிலலாததசையை அடைந்தவர்களுக்கு அநாகாமிகளென்று பெயர். அநாகாமியென்பவன் மறுபிறப்பில் தோற்றுவதற்கு உரிமையையிலலாதவன்; பின்னும் பயிறசிசெய்வதனால் வளாசகிபெற்று எஞ்சிய ஸம்யோஜனங்களையெல்லாம போக்கடித்துக்கொண்டு எடுத்தபிறப்பிலேயே நிருவாணத்தைப்பெறுதற்கு உரியவனாகக்கூடியவன். அகநோக்கத்தினால் உண்மையையறிந்துகொண்டு ரூபாரூபராகங்களையும மான ஔத்தத்திய அவித்தைகளையும் போக்கடித்துக்கொண்டு எல்லாக்குறறங்களினின்றும விலக்கப்பட்டவர்களாய்ப் பொருள்களையெலலாம் உள்ளவாறே மதிகவல்லவாகளாய்த் தீயவெண்ணங்கள் ஒன்றுமிலலாமற் பிறரிடதில் தயையும் பரிசுத்தமான அன்பும் உள்ளவர்களாயிருப்பவர்கள் அருகத்துக்களென்று சொல்லபடுவார்கள்; அருகத்தென்றால பூஜையைப் பெறறுக்கொள்ளுதற்கு உரியவனென்பது கருத்து. இப்படிப் பரிபூரணமான பயிறசியைப்பெறறவன் அத்வைதிகள்சொல்லும ஜீவன்முக்தனுக்கு ஒப்பாகக்கொள்ளுதற்குரியன். இத்தன்மையையுடையவனுக்கு மரணம்நேரிட்டால் அவன் பரிநிருவாணமென்கிற துன்பமிலலாநிலையை அடைந்துவிடுவான்.

மேற்கூறியபடியே படிப்படியாகப் பரிபாகத்தையடைந்து நிருவாணநிலையைப் பெற்றுக்கொள்ள முயல்பவர்களுக்கு உதவியாக ஸ்மிருதிகளென்று பேரூள்ள நான்கு ஸதிப்பிரஸ்தானங்களும், நான்கு ஸம்யக்ப்ரதானங்களும், நான்கு ருத்திபாதங்களும், பஞ்சபலங்களும், ஸப்தபோத்தியங்கங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. புத்தர் தாம நிருவாணமடைவதற்குமுன் கூடாகாரமலையில் கூடியிருந்த தன் சிஷ்யர்களாகிய ஸங்கதார்க்குச் சொன்னதாகப் பின்வருமாறு மஹாபரிநிருவாணஸுத்திரத்தில் கூறப்பட்டுள்ளது:—

"ஓ பிக்ஷுக்களே! என்னுடைய சுத்தமான ஸமயம் நீடித்திருந்து கொண்டு ஜனங்களுடைய கூட்டத்திற்கெலலாம் நன்மையையும் ஸுகத்தையும் தருவதற்கு உரியதாய் நிலைபெற்றிருப்பதற்கும் உலகத்தாரிடதில் அருள்செலுத்துதற்கும் தேவர்கள் மனிதர்கள் ஆகிய இவர்களுக்கு இலாபத்தையும் அபிவிர்த்தியையும உண்டாக்குவதற்கும் நான் அறிந்து கொண்டு உபதேசித்துவரீத தர்மத்தை நன்றாகக்கற்று ஆசரித்துத் திருத்திப் பரவச்செய்யுமின்; அந்தத் தர்மமாவதென்னவெனின், நான்கு ஸதிப்பிரஸ்தானங்களும், நான்கு ஸம்யக்ப்ரதானங்களும், நான்கு ருத்திபாதங்களும், பஞ்சபலங்களும், ஸப்தபோதியங்கங்களும் அஷ்டாங்க மார்க்கமுமாயிருக்கிறது."

ஸ்மிருதிகளாகிய நான்கு ஸதிப்பிரஸ்தானங்களாவன:—

க. தேகம் அசுத்தமென்றுநினைத்தல்.
உ. வேதனை (நுகர்வு) களிலிருந்து உண்டாகும் கேடுகளைநினைத்தல்.
ங. எண்ணங்களின் நிலையில்லாத்தன்மையை நினைத்தல்.
ச. இருப்புக்கு இயல்பானதன்மைகளை நினைத்தல்.

நான்கு ஸம்யக்ப்ரதானங்களாவன - நான்குவிதமான நன்முயற்சிகள்:—

க. கெட்டகுணங்களுண்டாகாமல் அவற்றைத்தடுக்க முயலுதல்.
உ. உண்டாயிருக்கும்கெட்டகுணங்களை விலக்குதற்கு முயலுதல.
ங. முன்னில்லாத நன்மையை உண்டாக்க முயலுதல.
ச. உண்டாயிருக்கும்நன்மையை அதிகப்படுத்த முயலுதல்.

நான்கு ருத்திபாதங்களாவன - அருகத்துவநிலையாகிய ஸித்தியைப பெறுவதற்குவேண்டிய ஸாதனங்களாம்:—

க. இருத்தியைப் பெறவேண்டுமென்கிற நினைப்பு.
உ. இருத்தியைப்பெறுதற்குரிய பிரயத்தனம்.
ங. அதற்குரிய ஹ்ருதயபரிபாகம்.
ச. அதற்குரிய ஆராய்ச்சி.

பஞ்சபலங்களாவன - மனத்தின் அங்கங்களுக்குள்ள ஆற்றல்:—

க. சிரத்தை. ச. மனனம்.
உ. ஸாமர்த்தியம். டு. ஊகை (ஊகித்தல்).
ரூ. ஞாபகம்.

ஸப்தபோத்தியங்கங்களாவன - உண்மையானஞானத்தை உண்டாக்குதற்குவேண்டிய கருவிகள்:—

க. ஸாமர்த்தியம். டு. ஆனந்தம்.
உ. ஞாபகம். சு. சாந்தி.
ரூ. மனனம். எ. ஸமதிருஷ்டி.
ச. திரிபிடக ஆராய்ச்சி.

பற்றையறுத்து ஸம்ஸ்காரத்தை ஒழித்துவிடுவது வருத்தமின்மீச் சாதிக்கக்கூடியதாகப் புத்தர் நினைக்கவில்லையென்று மேற்கூறிய விஷயங்களை ஆராய்ச்சிசெய்து பார்ப்பவர்களுக்கு விளங்காமற்போகாது; ஆகையால பற்றையறுத்து ஸமஸ்காரத்தை ஒழித்துவிடுதலே ஸாதாரணமான ஜனங்கள் மிகவும் கஷ்டமாகநினைப்பார்களென்பதில் ஸந்தேகமென்ன?

இப்படிப்பட்ட கடினமான பயணயடைவதற்கு இன்னும் இரண்டு விதமான ஸாதனங்களுண்டு. அவைகளர்வன : ஐந்து பாவனைகளும் நான்கு தியானங்களுமாம்.

அவற்றுள் ஐந்து பாவனைகளாவன :—மைத்திரீபாவனை கருணாபாவனை முதிதாபாவனை அசுபபாவனை உபேக்ஷாபாவனை என்பன.

இவ்வைநதனுள் மைத்திரீபாவனையாவது:—ஒருதுறவி வசதியான ஓரிடத்தையடைநது தக்க ஆஸனததிலிருநதபின்பு பினவருமாறு தியானித்தலாம்; 'உத்தமமான பிறப்பினையுடைய பிராணிகளெல்லாம்களிப்புற்றுவாழ்வனவாகுக; அவையெல்லாம் துக்கம் வியாதி துராசையென்னும் இவைகளினின்றும் விடுபட்டனவாகுக; எல்லாமனிதர்களும் எல்லாத்தேவர்களும நரகவாதையினுற் பிடிக்கப்படுகிற யாவரும் ஸந்தோஷமுடையவர்களாக ஆகுக; அவர்கள் துக்கம் வியாதி துராசையென்னும் இவற்றினின்றும் விடுபட்டவர்களாக ஆகுக.'

கருணாபாவனையாவது :—'வறியவர்கள் வறுமைநீங்கிச் செல்வமுடையவர்களாக ஆகுக' என்றுபாவித்தல். கருணையாவது இரக்கமுள்ள எண்ணம்; அஃது, ஒருபிராணிதுன்பமுறுவதைக்காணின், மனக்கலக்கத்தையும் அத்துன்பத்தை நிவர்த்திபண்ணவேண்டுமென்பதையும் ஒருவருக்கு உண்டாக்கும.

முதிதாபாவனையாவது :—'ஆக்கமுடையவர்களுடைய நல்ல அதிர்ஷ்டமானது எப்பொழுதும் நீங்காதிருத்தல்வேண்டும்; ஒவ்வொருவரும் சித்தமக்கு அமைந்துள்ள நல்வினைப்பயனை அடைக' என்று பாவித்தல்

முதிதமென்பதற்குச சுகதோஷமென்பது பொருள்; ஆனல் அஃது உலகப்பொருள்களையுடைமையால் உண்டாகுங் களிப்பன்று; இதுமைதிரீ, கருணையென்னும் இரண்டுபாவனைகளுக்கும் சம்பந்தமானது.

[மேற்கூறிய மூன்றுவகைப்பாவனைகளுள் ஏதாவதொன்றை அப்பிய ஸிக்குவதுவனி, தான் கருதியபாவனையை முதலில் சிலஜனங்களிடத்தும அப்பால் ஒருதெருவில் வாழ்பவர்களிடத்தும் அப்பால ஒரூராரிடத்தும அப்பால் ஒரு தேயத்தாரிடத்தும் முறையேசெலுத்திப் பயிலுதல்நலம.]

அசுபபாவனையாவது:—அசுபமென்பதற்குப் பொருள் அமங்கலம்; கல்ல அதிர்ஷ்டமென்பதன் எதிர்மொழியாயிருப்பதேதி மகிழ்ச்சியின்மை வெறுப்பு என்பனவற்றையுண்டாக்குவதாகவுமுள்ளது. இதைப்பயிலும் ஒருவனனி, சரீரமானது பலவகைக்குற்றங்களால் ஆக்கப்பட்டதென்றும் சாணியின்குவியலில் தோன்றிவளரும் புழுக்கள்போலக் கருப்பப்பையில் உண்டாகின்றதென்றும் மலங்கழிக்குமிடத்தைப்போல அசுத்தத்தின் கொள்கலனுயிருப்பதென்றும் அருவருப்பானகிவு அதிலுள்ள நவத்துவாரங்களின்வழியே ஒயாமற் பெருகுகின்றதென்றும் ஜலதாரையைப்போல் வெறுத்தற்குரியகாற்றத்தை அது வெளிப்படுத்துகின்றதென்றும் பாவிக்கவேண்டும். 'சரீரத்தின் காலவளவை ஒரு நிமிஷமே; மின்னலேயும் நுரையையும நீரிறபோட்ட உப்பையும் காய்ந்த புல்லிற பற்றிய நெருப்பையும கடலின் அலையையும் ஆகாயத்திற் சஞ்சரிக்கிற ஜுவாலையையும் புன்னுனியிற்பட்ட பனித்துளியையுமபோலப் பிறந்தபோதே அதுநாசமாம்' என்று சரீரத்தின் நிலையின்மையைப்பாவித்தலும் அசுபபாவனையின்பாறபடும.

உபேகூஷாபாவனையாவது:—எல்லாவுயிர்களையும் சமமாகபபாவித்தலும் விருப்புவெறுப்பின்றி யிருத்தலுமாம். இது, மற்ற நான்குபாவனைகளைக்காட்டிலும் மிகவுயர்ந்தது; அருகத்துக்களால் அனுட்டிக்கப்படுவது; இது சமஸித்தத்துவமென்றுங் கூறப்படும். உபேகூஷை-உதாசீனம.

நான்கு தியானங்களுள் முதல் தியானமாவது:—பிகூஷுவானவன் காமத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் தன்னை விலக்கிக்கொண்டு மனனத்தோடும ஆராய்ச்சியோடுங் கூடியிருக்குமபொழுது தனித்திருத்தலினுண்டாகும் ஸுகதோஷமயமும ஆனந்தமயமுமான தசை.

இரண்டாந்தியானமாவது:—மனனமும் ஆராய்ச்சியுமில்லாமல் அவைகள் அடக்கப்பட்டிருக்குமபொழுது சாந்தியிலிருந்துண்டாகும ஸுகதோஷமயமும ஆனந்தமயமுமான லக்ஷ்தி.

மூன்றாந்தியானமாவது:—பிகூஷுவானவன் காமவெகுளிகளை நாசஞ் செய்து ஸுகதோஷத்தைப்பெற்றுக்கொண்டு ஆனந்தமுடையவனுகி அறிவுள்ளவனுகி அருகத்துக்கள் கொண்டாடுவதும பொறுமை அறிவு ஸுகதோஷங்களோடுகூடியதுமான ஆனந்தத்தைத் தன்னுள் அனுபவித்தல்.

நான்காந்தியானமாவது :—முன்னிருந்த லோகதுக்கங்களே விட்டொழித்து லோகதுக்கநாசங்களேப்பெற்று லோகமுமில்லாமல் துக்கமுமில்லாமலிருக்கிற ஸமதிருஷ்டியையும் அறிவையுமுடைய பரிசுத்தமான ஸ்திதி.

மேற்கூறிய தியானங்கள் நான்கும் ஸமாதிக்கு உதவியாகவுள்ளன.

இப்படிப் படிப்படியாகத் தியானங்களில் மனத்தைச்செலுத்துதலினால் பௌத்தபிக்ஷுக்கள் ஸமாதியாகிய யோகஸித்தியைப் பெற்றுவருகிறார்களென்று தெரியவருகிறது. புத்தர் போதிவிருக்ஷத்தினடியிலிருந்து தமக்கு ஞானோதயமாவதற்குமுன்பு ஒரிரவில தியானஞ்செய்துவந்தாரென்றும், முதல் யாமத்திற்செய்த முதலாவது தியானத்திற் பூர்வஜன்ம ஸ்திதிகளெலலாம அவருக்குத் தெரியவந்தனவென்றும், இரண்டாம யாமத்திற்செய்த இரண்டாவது தியானத்தில் அப்பொழுதுள்ள ஜன்மத்தின் ஸ்திதிகளெலலாம அவருக்குத தெரியவந்தனவென்றும், மூன்றும் யாமத்திற்செய்த மூன்றுவது தியானத்தில் துஷாதசநிதானரூபமாகிய ஹேதுநிகழ்ச்சி அவருக்குத் தெரியவந்தென்றும், நான்காந்தியானத்தில் சூரியனுதிபாகிற்க எல்லாம அவருகுத் தெரியவந்தனவென்றும இல பௌத்தநூல்கள் கூறும. மஹாபரிநிர்வாணஸூத்திரத்தில் பின்வருமாறு தியானங்கள சொலலப்பட்டிருக்கின்றன :—

"பிறகு பகவான் பிரதமத்யானத்தையடைந்தான் ; அந்த முதற்படியைக்கடந்து த்விதீயத்யானதத்திற்குசசென்றான் ; அந்த இரண்டாம்படியைக்கடந்து தருதீயத்யானதத்திற்குச சென்றான் ; அந்த மூன்றாமபடியைகடந்து துரியத்யானத்திற்குச சென்றான் ; அந்த நான்காமபடியைக்கடந்து வெட்டவெளி மட்டற்றதென்னுமறிவை உள்ளே ஸாக்ஷாத்கரித்துக் கொடுக்கும் ஆகாசாநந்தியாயதனமென்கிற தியானத்தை அடைந்தான் ; அந்த ஆகாசாநந்தியாயதன தயானத்தைக்கடந்து விஜ்ஞானம் எல்லையற்றதென்னுமறிவை உள்ளே ஸாக்ஷாத்கரித்துக்கொடுக்கும் விஜ்ஞானநந்தியாயதனமென்கிற தயானத்தையடைந்தான் ; அந்த விஜ்ஞானநந்தியாயதன த்யானத்தைக்கடந்து உண்மையாக யாதொரு வெளிப்பொருளுமில்லையென்கிற அறிவை உள்ளே ஸாக்ஷாத்கரித்துக்கொடுக்கும் ஆகிஞ்சந்யாயதனமென்கிற த்யானதத்தையடைந்தான் ; அந்த ஆகிஞ்சநயாயதன த்யானதத்தைக்கடந்து அறிவுள்ளதும் அறிவிலலாததுமல்லாததாகிய நைவஸம்ஜ்ஞானஸம்ஜ்ஞாயதனமெனகிற தயானத்தையடைந்தான்."

இன்னும் அநேகவிதமாகச சொல்லப்பட்டிருக்கிற தியானத்தினிலக்ஷணத்தை விவரிததுகாடடுவது கடினமாக இருக்கின்றது. இந்தத் தியானதத்தின் உதவியினால யோகஸமாதியை அடைந்தவர்களுக்கு ஆறுவகையான அபிஜ்ஞைகளுண்டாகுமென்பது பௌதத்தர்களின் கொள்கை. அபிஜ்ஞையென்பதறகு மறறதுமேபானவிஷயம் மீடடும நிஜனிலறகு வருகிலனபது பொருள.

ஆறுவகையான அபிஜஞைகள்:—

க. யோகசுரோத்திரம.

உ. யோகசகூஷ்ஸ்.

ங. பரசித்தஞானம.

ச. ஜன்மாநதரஸ்மரணம.

ஞ. காமதோஷவிநாசஞானம—காமத்தினாலுண்டாகுந தோஷங களைப் போக்கடித்துக்கொள்ளுமவழியை அறிந்துகொள்ளுதல்

சு. இருத்திகள்—அற்புதசகதிகள்; அவை நிலத்தில் நடப்பது போல நீரில தடையின்றிநடத்தல், நீரிற்புகுவதுபோல நிலத்திற்புகுதல், ஆகாயத்திற்செலலுதல முதலிய ஆசசரியசசெய்கைகள்; அவை பத்துவகைப்படுமெனபாரும, எண்பத்தொன்பதுவகைப்படுமெனபாரும வேறுகூறுவாருமூளர;

"நிலத்திற் குளித்து நெடுவிசும பேறிச
சலத்திற் றிரியுமோ சாரணன்."

(மணிமேகலை, உசும காதை, சூசுசஎ)

ஆனால, தியானங்கள் வழியாக யோகஸமாதியை அடையமுயலுவதன்றி மேற்கூறிய அபிஜஞைகளாகிய அஸாதாரண சகதியைப் பெறுவது பௌத்தர்களுடைய முக்கியமானகருத்தனறு; வாயிலகளின்வழியே புறத்தே செல்லுதலிலலாதபடி சித்தத்தை உள்ளடக்கி, ஊறு நுகர்வு பற்றுக்களை அறுத்துவிடுவதுதான் அவாகளுடைய முகியமான நோகமென்று தெரியவருகின்றது.

சில ஸமாதிப் பிரஜஞைகளைப்பெற்று அருகதசுகளாகிய பின்பு அதிகபரிபக்குவத்தையடைநது போதிஸத்துவாகளுடைய நிலைமையைப் பெற்றவர்கள் புத்தபதவியை யடைவதறகு வேண்டியவைகளான தச பாரமிதைகள் பௌத்தநூல்களில விளக்கிசசொல்லப்பட்டுள்ளன.

தசபாரமிதைகளாவன:—தானம், சீலம, கூதமை, வீரியம, தியானம, பிரஜஞை, உபாயம், தயை, பலம, ஞானமென்னும பத்துமாம. இதனை,

"தானஞ் சீல மேபொறை தக்க தாய வீரிய
மூன மிற்றி யானமே யுணர்ச்சி யோடு பாயமு
மான மில்ல ருளினே வைத்த லேவ லிமையு
ஞான மீனாம் பாரமிதை நாடுங காலி வைகளும்"

என்னும நீலகேசித்திரட்டு மொக்கலவாதசசருக்கச செய்யுளாலுணரக; இப்பெயர் பாரமெனவும வழங்கும;

"இன்பஞ்சார் பெரும்பார மீரைந்து முடனிறைந்
நன்கன நீலபெற்ற நாதன." எனவும்,

'தானமே முதலாகத தசபார நிறைத்தருளி
யூனமொன் றில்லாமை யொழிவின்றி யியற்றினையே." எனவும,

வருதல்கொண்டது. இப்பதுமம் உயிருறுபபுபமபொருணோர்ச்சிவகையான் முப்பதாமென்பர் ;

> 'அருணெறியாற பாரமிதை யாறைநது முடனடக்கிப்
> பொருண்முழுதும் போதிநிழ னன்குணர்ந்த முனிவரன்ற
> னருண்மொழியா னல்வாய்மை யறிந்தவரோ பிறப்பறுப்பார்
> மருணெறியாற் பிறநூலு மயக்கறுசகு மாறுளதோ.''
>
> (சித்தாந்தத்தோகை.)

பாரமிதையென்பதற்குக் கரையையடைநததென்றுபொருள். சண்டுக்கூறிய தானமுதலியபத்தும் நிரம்பபபெற்றமையின், புத்தரைத் தசபல ரென்றுவழங்குவர். இப்பத்தினுள், தானபாரமிதையை விளங்கக்கூறித் தாரனபாரமிஎதயென்று பெயர்பெற்றுள்ள ஒரு வடநூலிருப்பதாகத் தெரிகினறது ; இது, ஸ்ரீஹர்ஷகவிசெய்த ஸமஸ்கிருதகைவதகம், நி-ம ஸாகரத்துள்ள கத-வது சுலோகததாலும அதற்கு ஸ்ரீமல்லிநாதஸூரி செய்த வியாக்கியானத்தாலுமுணரப்படும.

புத்ததாமமாகிய நான்குவாய்மைகள் இதுவரையிற் சுருக்கமாகச் சொலலபபட்டன ; இங்கே சில ஸமாதிப் பிரஜ்ஞைகளைபபற்றிச சொல்லிய விவரங்களைலலாம, துறவறததைமேற்கொண்ட பிகூஷுக்கள்மட்டுமே கைகொண்டு அனுஷடிக்கவேண்டியவைகளாகவுள்ளன. இல்லற நெறியைப்பூண்ட உபாஸகாகளுக்கும உபாஸிகைகளுக்கும் பஞ்சசீலத்தையாவது அஷ்டசீலத்தையாவது கைக்கொண்டுநடப்பது கடமையாகும. வேறுசீலங்களும தியானஸமாதிமுதலியவைகளும அவர்களுக்குரியனவாகச் சொலலப் படவில்லை மேறகூறிய அஷ்டசீலங்களில் விலக்கபபட்டவற்றைப் பததுவகைத தீவினைகளென்று சொலலுவதுண்டு; அவைகள் தசபாபமென்றுங் கூறபபடும:—

> ''தீவினை யென்பது யாதென வினவி
> னுயதொடி கலலா யாங்கது கேளாய்
> கொலையே களவே காமத தீவிழை
> வுலயா வுடம்பிற் றோன்றுவ மூனறும
> பொய்யே குறளை கடுஞ்சொற் பயனில்
> சொலலெனச சொல்லிற் றோன்றுவ நான்கும
> வெஃகல் வெகுளல் பெல்லாக் காட்சியென்
> றுள்ளந் தன்னி லுருப்பன மூன்றுமெனப்
> பத்துவகையால்''
>
> (மணிமேகலை, உச-ம் காதை, கஉகூ-கஙக , கூ0-ம் காதை, சூச-எஉ.)

இதப் பத்துவகைப்பாவங்களையும் பௌதத்தரில எவ்வறத்தோரும் ஒருபொழுதும செய்யலாகாதென்பது விதி.

உபாஸகரும உபாஸிகைகளுமாகிய இல்லறத்தார், லங்கத்தில் விஹயிடகம் படிக்கப்படும்பொழுது அங்கேபோய் அதைக் கேட்கவேண்டு

மென்றும், அஷ்டமி பூர்ணிமை அமாவாஸ்யை ஆகிய இருதத் திதிகளிற பட்டினியாயிருத்தல்வேண்டுமென்றும், பௌத்தஸங்யாஸிகள் வெளியே ஸஞ்சரிக்கக்கூடாத காலமாகிய * வருஷாகாலத்திலும் விதித்தவரையில உபவாஸஞ்செய்யவேண்டுமென்றும, உபவாஸமிருந்ததினத்தின் மறுநாட காலையில் இபன்றவளவு முதலில் பிக்ஷுக்களையுண்பித்து அபபால் பார ணஞ்செய்யவேண்டுமென்றும் பௌதததூல்கள்கூறும. இன்னும இல்ல றத்தார்க்குரிய நியமங்கள், ஸ்ருகாலவாதசூத்திரமென்கிற நூலிற் பின்வரு மாறு கூறப்பட்டுள்ளன.

## க.—தாய்தந்தையர்க்கும் மக்களுக்குமுரிய ஒழுக்கங்கள்

தாய்தந்தையர்,

(க) மக்களோத தீசசெய்தைகளிலிருந்து விலகசவேண்டும

(உ) நற்செய்கைகளில அவாகளுக்குக கறபிகசவேண்டும.

(ங) அவாகளுகக்கு கலவி கறபிக்கவேணடும.

(ச) அவர்களுக்குத் தக்க பதிபததினிகளோத தேடிகொடுகக வேண்டும.

(ஞ) உரிய தாயபாகத்தை அவரவாகளுக கொடுகசவேண்டும.

மக்கள்,

(க) தங்களை பாதுகாதத தாய்தநதைகளோத தாங்கள பாதுகாபப தாகவும்,

(உ) குடும்பஸம்பந்தமாகச செய்யவேண்டிய கடமைகளிலெல லாஞ் செய்வதாகவும,

(ங) குடும்பத்தின் ஸொத்தைப் பாதுகாபபதாகவும்,

(ச) குடுமபபபொருளைப் பெறுவதற்குத் தக்கவாகளாகத தங்க ளைச் செய்துகொள்ளுவதாகவும்.

(ஞ) தாய்தந்தையா மரணத்தையடைநதபின்பு அவாகளை ஞாப கத்தில்வைத்துப்பாராட்டி வருவதாகவும நிசசயித்துத தங்கள கடமை களைச செய்யவேண்டியவர்களாக இருக்கிறாகள்.

## உ.—குரு சிஷ்யர்களுக்குரிய ஒழுக்கங்கள்.

சிஷ்யன், ஆசாரியர்களை,

(க) அவர்களுடைய எதிரில் நிற்றலாலும்,

(உ) அவர்களுக்குப் பணிவிடை செய்தலாலும்,

(ங) வணக்கத்தோடிருத்தலாலும்,

(ச) அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தலாலும்,

* இந்தக்காலம் பௌத்தர்களாற் பிராதிஹாரகபக்ஷமென்று சொல்லப்படும்

அவர்களுடைய உபதேசத்தைக் கடைப்பிடித்தலாலும் கௌரவப்படுத்தவேண்டும.

ஆசாரியன், சிஷ்யர்கள,

(க) நல்வழியிற் பயிற்றுதலாலும்,

(உ) ஞானத்தைக கைவிடாமலிருக்கும்படி உபதேசித்தலாலும்,

(ங) சாஸ்திரங்களிலும் காவ்யங்களிலும் ஞானத்தை உண்டாக்குதலாலும்,

(ச) அவாகளைபபற்றி அவர்களுடைய மித்திரர்களுக்கும் ஸகபாடிகளுககும தன்னுடைய நல்ல அபிப்பிராயத்தை வெளியிடுவதினாலும,

(ஞ) அபாயததிலிருநது பாதுகாப்பதினாலும அபிமானிக்கவேண்டியவனகவிருக்கிறான்.

## ங.—பதிபத்தினிகளுக்குரிய ஒழுக்கங்கள்.

பதியானவன், பத்தினியை,

(க) கௌரவதோடு நடதது வதனாலும,

(உ) அன்புடன் நடத்துவதனாலும,

(ங) அவளிவிடது அதிசரணைசெய்யாதிருததலினாலும,

(ச) பிறா கௌரவிக்குமபடி செய்தலினாலும்,

(ஞ) அவளுக்குததகுநத ஆபரணங்களையும் உடையையும் கொடுப்பதனாலும் பாராட்டிக்கொண்டு வருதற்குரியவனகஇருக்கிறான்.

பத்தினியானவள்,பதியினிடத்தில் தன் அன்பையும் கௌரவத்தையும் செலுத்துவாளானால்,

(க) வீட்டிலேவலைகளை திறமையுடன ஒழுங்காக நடத்திக்கொண்டிபோகவேண்டும.

(உ) சுறறங்களுககும நட்பினாக்கும நனறாக விருநதளிக்கவேண்டும.

(ங) கற்புடையவளாக இருத்தல்வேண்டும.

(ச) வீட்டுக்குரியசெலவை மிதமாகச செய்யவேண்டும்.

(ஞ) தான் செய்யும்வேலைகளிலெல்லாம மறவாமையும திறமையும உள்ளவளாகக் காணப்படவேண்டும்.

## ச.—நட்பினர் ஒருவரிடத்தில் ஒருவர் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கங்கள்.

சீலவானனமனிதன், தன்மித்திரர்களுக்கு,

(க) நன்கொடைகொடுப்பதனாலும்,

(உ) கௌரவித்துப் பேசுவதனாலும,

(ங) அவர்களுடைய நன்மையை அபிவிருத்திசெய்வதனாலும்,

(ச) அவாகளைத் தனக்குச் சமானமாக நடத்துவதனாலும்,

(ஞ) தன்னுடைய பாக்கியத்தை அவர்களோடு பகிர்ந்துகொள்ளுவதனாலும் உபகரிக்குங்குணமுள்ளவனாக இருக்கிறான்

அவர்கள்,

(க) அவன் அஜாக்கிரதையாக இருக்குபொழுது அவனைப் பாதுகாப்பதனாலும்,

(உ) அவன்பொருளைப் பாதுகாப்பதனாலும்,

(ங) அவனுக்கு அபாயம் நேரிட்டபொழுது மறைவிடத்தைக் கொடுத்துப் பாதுகாப்பதனாலும்,

(ச) அவனுக்குக் கஷ்டம்நேரிடும்பொழுது அவனைக் கைவிடாமையினாலும்,

(ஞ) அவனுடைய குடும்பத்தாரிடத்தில் அன்பைச் செலுத்துவதனாலும் அவனிடத்தில் தங்களுக்குள்ளஅபிமானத்தைப் பாராட்டவேண்டும்.

## ங.—யஜமானனுக்கும் வேலைக்காரர்களுக்குமுரிய ஒழுக்கங்கள்.

யஜமானன், வேலைக்காரர்களுடைய நன்மையை,

(க) அவரவாகளுடைய சக்திக்கு இயன்றதொழில்களை அவரவாகளுக்கு விதிப்பதனாலும்,

(உ) அவரவாகளுக்குத் தக்க உணவையும் கூலியையும் கொடுப்பதனாலும்,

(ங) அவர்கள் வியாதியை அடைவாராயின் மருந்து உணவு முதலியனகொடுத்து உபசரிப்பதனாலும்,

(ச) (இருநதால்) சுவையுள்ள நல்ல உணவுகளைக்கொடுத்து அவாகளை உண்பித்தலினாலும்,

(ஞ) விடுமுறைநாட்களை அவாகளுக்கு அப்போதைக்கப்போது கொடுத்தலினாலும் அபிவிருத்திசெய்ய வேண்டியவனாக இருக்கிறான்.

அவர்கள்,

(க) காலம பெற எழுந்திருப்பதனாலும்,

(உ) யஜமானன் தூங்கினபிற்பாடு தாம தூங்குதற்குச செல்லுதலாலும்,

(ங) கொடுத்ததைப் பெறறுக்கொண்டு திருப்தியடைவதனாலும்,

(ச) யாதொரு மனக்குறைவுமின்றி ஊக்கத்துடன் வேலைசெய்யும்,

(ஞ) அவனிடத்தும் அவனைப்பற்றிப் பிறரிடத்தும் கௌரவமாக வசனித்தலினாலும் தங்களுக்கு யஜமானனிடத்துள்ள பகதியைக் காட்டவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

## சு.—உபாஸகர்களுக்கும் பிக்ஷுக்களுக்குமுரிய ஒழுக்கங்கள்.

சீலவானனை உபாஸகன், பிக்ஷுக்களை,

(க) வாகினால அன்பைச செலுத்தாதலாலும,

(உ) காயத்தினால அன்பைச செலுத்தாதலாலும,

(ங) எண்ணத்தினால அன்பைச செலுத்தாதலாலும,

(ச) கண்டவுடன் நல்வரவுகூறி அழைத்து ஏற்றுக்கொள்வனாலும,

(ஞ) அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதனாலும உபகரிக்கவேண்டியவனாக இருக்கிறான்.

அவர்கள் உபாஸகனிடத்தில் தங்களுக்குள்ளபிரியை,

(க) அதாமஞ்செய்யாதபடிக்கும தாமமசெய்யுமபடிக்கும உபதேசிப்பதனாலும,

(உ) அன்பைச செலுத்துவதனாலும,

(ங) மதசாராபுள்ள நூற்பொருள்களை உபதேசிப்பதனாலும்,

(ச) அவனுடைய ஸந்தேகங்களைத் தீர்த்தலினாலும,

(ஞ) அவனுக்கு வீட்டுநெறியைக காடடிக்கொடுப்பதனாலும பாராடடிக்கொண்டுவரவேண்டும.

அந்த ஸ்ருகாலவாதசூத்திரத்தில, மேறசுமியவண்ணம நடபபவர களாவரும இந்த ஆறுவித்தமான இயைபுகளினாம சாந்தியோடும சுகத தோடும வாழ்வாகளெனனும, இலலறவொழுக்கங்களை நனறுகசெய்து பெருமைபெறுவருவாகமெனனும, மரியாதை கொடை அன்பு அன்னயமபாராட்டாமை ஆகிய இவையெலலாம உலகவாழ்வாகிய ஓடுகதோக்கு அசசாணியைப்போலவனவென்னும சொலலி, இவ்விஷயம முடிகபபட்டிருகிறது.

"தோடார நிலங்கு மலர்கோதி வண்டு வரிபாடு நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழன் மேய வரதன பயந்த வறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மை குணனுக் நாளு முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வா தனைய வினைசேர்த னிலமிலரே."

(வீரசோழியம், யாப்புப்படலம், கூ-ம் கலித்துறையுதாரணம்.)

# பௌத்த சங்கம்.

பௌத்த ஸந்யாஸிகளுடைய கூட்டத்துக்கு ஸங்கமென்று பெயர். புத்தர், தர்மம், சங்கம் என்று சொல்லுகிற திரிமணி [மும்மணி] களுள் மூன்றாவது இது ஞானோதயமானபின்பு, கௌதமபுத்தர் காசிக்குப் போய் முன்பு தமமோடுகூடத் தவஞ்செய்துகொண்டிருந்தவர்களான ஐந்து ஸந்யாஸிகளுக்கும் தமக்குத் தெரியவந்த நான்கு சத்தியங்களையும் உபதேசித்து அவர்களைத் தம்முடைய சிஷ்யாகளாக அங்கீகரித்த காலந்தான், இந்த சங்கத்துக்கு உற்பத்திகாலம். பின்பு, கௌதமபுத்தருடைய வாழ்நாளிலேயே இன்னும் எத்தனையோபலர் அவருக்குச சிஷ்யர்களாய்த் துறவுபூண்டு இந்த சங்கத்தைச சேர்ந்தார்கள். பிராமணக்ஷத்திரியவருணத்தவர்களிலும் பலர் கௌதமபுத்தருடைய உபதேசத்தினால் வைராக்கியமடைந்து துறவுபூண்டதாகவும தெரியவருகிறது. கௌதமபுத்தர் ஓரிடத்திலிருந்து வேறிடஞ்சென்று தருமோபதேசஞ்செய்துகொண்டுவந்த நாடுகளிலெல்லாம, பெண்பாலார், "உயர்ந்த குலத்திற்பிறந்த பிள்ளைகளையெல்லாம் இவன் துறவிகளாக்கிக்கொண்டு போய்விட வந்தான்" எனப் பாடிக்கொண்டிருந்தார்களென்று தெரிகிறது. ஆகையால், கௌதமபுத்தருக்குச சிஷ்யர்களைச சேர்த்துக் கொள்ளுகிற ஆற்றல் மிகவும் இருந்ததாகத் தெரிகின்றது. இந்த ஆற்றலுக்கு அவருடைய மிகுந்த கருணையும் பிரசித்தமான வைராக்கிய முமே காரணங்கள். அவர் தமதுதர்மத்தை உபதேசித்துவிட்டுச் சிஷ்யர்களுடைய கூட்டமாகிய சங்கத்தை நியமியாதிருந்தால், அவருடைய காலத்துக்குப்பின்பு, பௌத்தமதம நடைபெற்றிராது. அவருடைய தர்மம் உலகத்தில் நிலைபெற்றதற்கு முக்கியகாரணம் ஸங்கந்தான். பௌத்தபிக்ஷுக்களுக்குரியனவாகிய நியமங்களுக்கும் ஹிந்துக்களுடைய ஸ்மிருதிகளில் சொல்லியிருக்கும் ஸந்யாஸநியமங்களுக்கும் பலவிஷயங்களில் ஒற்றுமையிருத்தலால், புத்தர் சங்கமுண்டாக்கியதைப்பற்றி புதுமை யொன்றுமில்லையென்பர்; அஃதாவது முன்பு இருந்த ஸந்யாஸதருமங்களிற் பெரும்பாலனவற்றையே புத்தர் தமது மதத்துக்கும் உரியனவாக உபயோகித்துக்கொண்டாரென்றபடி. பிருஹதாரணியகோபநிஷத்தில், "பூர்வகாலத்துஞானிகள், சந்ததியில் ஆசையுள்ளவர்களல்லர்; 'ஆத்மாவை வீடாகப்பெற்ற எங்களுக்குச சந்ததியினால் என்ன பிரயோஜனம்?' என்று அவர்கள் புத்ரேஷணை வித்தேஷணை லோகேஷணைகளை விட்டுத் துறந்து பிக்ஷுயெடுத்துப் பிழைக்கிறார்கள்" என்று சொல்

யிருக்கிறது; ஆகையால, பண்டைக்காலத்திலேயே ஸங்யாஸமும்பிரதா யம பிரபலமாக இருந்ததென்று தெரிபவருகிறது. கௌதமபுத்தரும் அவருக்குச் சிலகாலத்திற்கு முனபிருந்த நிகனென்கிற மஹாவீரரும் தங்கள் மதத்தைப் பரவச்செய்துகொண்டிவந்தகாலத்தில், அநேகவித மான சித்தாந்தங்களைச் சார்ந்தவர்களாகிய பலஸந்யாஸிகளின் கூட்டங் கள் ஆரியாவர்த்தத்தில் அங்கங்கே யிருந்தனவென்று பாளீபாஷையி லுள்ள பௌத்தநூல்களை தெரிவிக்கின்றன. இப்படியிருந்த சந்யாசி கூட்டங்களுட்டமாகவே புத்தர் தமக்குச் சிஷ்யர்களாக்கிக்கொண்டு தமமுடைய சங்கத்தை வளரவைத்தாரென்றும பௌத்தநூல்களால் ளிளங்குகிறது. கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து வானப்ரஸ்தாச்ரமத்தை யடைந்து காட்டிலகிருஹஸ்த தருமங்களுக்கு உட்படாமல ஸ்வாத ந்திரியத்தைப்பெற்றுத தத்துவங்களை ஆராய்ந்துவந்த மஹான்களுடைய ஞானத்துக்குப் புலப்பட்ட உண்மைகளை, வேதத்தின் ஆரணியகபாகத்தி லுள்ள உபநிஷத்துக்களில அடங்கியிருக்கின்றன இவ்வாறு தத்துவத் தைத் தேடிக்கொண்டிவந்தகாலத்தில் அநேகர்கள் அநேகவிதமானமதங் களைச் சார்ந்துவந்தார்களென்பது பலருடைய கருத்து.

ஓல்டன்பர்க (Oldenberg) என்பவர், புத்தர்விஷயமாக எழுதிய நூலில், பண்டைக்காலத்தின நிலைமையைப்பற்றிப் பின்வருமாறு சொல் லியிருக்கிறார்: "உறுதியிலலாத பொருள்களைக்கொண்டு மதத்திற்குப்பின் மதத்தை அக்காலத்தில் உண்டாக்கிவந்தார்கள். அவைகளைப்பற்றிக் குறிப்பான சில விஷயங்கள் தெரியவருகின்றன வேயன்றி அதிகமாக ஒன்றும நமக்குத் தெரியவில்லை. உலகம் எப்பொழுதும் உள்ளதா? அன்றா? ஆத்மா நித்தியமா? அநித்தியமா? ஒருவழியில நிலைமையற்றதா யும வேறொருவழியில நிலைமையுள்ளதாயும் தோன்றுகிற தத்துவத்தை ஒப்புக்கொண்டு நடப்பது எவ்வாறு? உலகம அளவுபட்டதா? அளவுபடாத தா? அல்லது, ஒரேகாலத்தில் அளவுபட்டதாயும அளவுபடாததாயுமுள் ளதா? அல்லது, அளவுபட்டதும அளவுபடாததும அல்லாததா? என்கிற அநேக விஷயங்களைப்பற்றிய ஆராயசசி அக்காலத்தில நடைபெற்று வந்தது. அப்பொழுது, தருக்கத்தில்தேர்ந்தவர்களான ஸமயபரீக்ஷகர்கள் செய்ய வந்தனவாகிய, 'தோற்றுவனவெல்லாம உண்மை', 'தோற்றுவனவெல் லாம உண்மையல்ல' எனறு சொல்லுகிற மூன்றுவிதப் பிரதிஜ்ஞைகளோடு கூடிய இருவகைக்கொள்கைகள் பிறந்தன. இங்கே 'தோற்றுவனவெல் லாம உண்மையல்ல' என்றுசொல்லுவதாகக்கொள்ளப்பட்டால, 'எல்லாம் உண்மையல்ல' என்றுசொல்லுகிற சித்தாந்தம உன்னுடைய கொள்கை யைப்பற்றியும் இயலுமா? அக்கொள்கையும் உண்மையல்லாததா?" என்று கேட்பார்கள். மறுமையுலகமொன்று உள்ளதென்றும் மரணத் துக்குப்பின்பு ஸ்திதியுண்டென்றும் மனிதனுடைய ஸங்கல்பத்துக்கு

நிர்ப்பந்தமொன்றுமில்லையென்றும நல்வினை தீவினைகளுக்குத் தக்கபயன் இடைக்குமென்றும அக்காலத்து மனிதர்கள் வாதஞ்செய்துகொண்டு வந்தார்கள். நீயவழிகளை உபதேசித்துக்கொண்டிவருதவர்களில் மிகவுங் கொடியவனென்று புத்தரால் நிந்திக்கப்பட்ட 'மக்கலிகோஸாலன்' என்பவன், 'நாதாநசக்தி [தூண்டுமை ஆற்றல்] ஆகிய எங்கல்பதத்துக்கு ஸ்வாதந்திரியமில்லையென்று சொன்னதாகத் தெரியவருகிறது; மனிதனுக்குச சக்தியில்லை; சாமர்த்தியமில்லை; அதிகாரமில்லை; எல்லாவஸ்துக்களும உயிரோடுகூடிய ஒவ்வொரு ஜந்துவும ஆகிய இவைகளுக்குச் சக்தி அல்லது சாமர்த்தியம ஒன்றுமில்லை; விதியினாலும ஸ்வபாவதினாலும ஒவ்வொன்றும் தன்னுடைய கதியை அடையத் துரத்தப்படுகிறது. ஞானியும் அஜ்ஞானியும் முடிவில ஒருநிகராகத் துன்பததை அனுபவித்தொழித்துவிடுகிறார்கள். உலகத்திலுள்ள பொருள்களெலலாம நியாயமான தெய்விகச்செங்கோலுக்கு உள்ளடங்கியிருக்கின்றனவென்பதுகூட விலக்கப்பட்டிருந்தது. புராணகசியபரென்பவர், 'ஒருவன் கங்கையின் தென்கரையில் படையெடித்துக்கொண்டிவந்து உயிர்களைக்கொலையைச செய்தும செய்வித்தும் உலகத்தைப பாழாக்கியும பாழாக்குவித்தும் நீக்கொளுவியும கொளுவுவித்தும தான் குற்றஞ்செய்ததாகத் தோஷத்தைத் தன்னில ஆரோபித்துக்கொள்வதில்லை; குற்றத்துக்குச சிக்ஷை யாதுமில்லை. மற்றொருவன் கங்கையின் வடகரையிற்சென்று தருமதானங்கொடுப்பதனாலும கொடுக்கச்செய்வதனாலும யாகங்களைச்செய்வதனாலும செய்விப்பதனாலும அவன் நற்காரியமொன்றுஞ் செய்தவனுகான். நற்காரியத்துக்கு நற்பயன் யாதுமில்லை' என்று உபதேசித்துகொண்டு வருகாரென்பதும், 'ஞானியும் அஜ்ஞானியும உடலவிழுந்தவுடனே நாசத்தையடைந்து சூனியமாய்விடுகிறார்கள்; இறந்தபின்பு அவர்களிலில்லை' என்கிற கொள்கையும் அக்காலத்தில் இருந்ததனவென்பதும் தெரியவருகின்றன."

இங்ஙனம பலவகைச சித்தாந்தங்கள் பலவாறு பலவழிகளில புகுதியைச் செலுத்திய தத்துவத்தைத் தேடிபபிடித்து உண்மையான தருமத்தை அநேகர்க்கு உபதேசித்து வரவேண்டுமென்கிற ஆசையோடுகூடி இல்வாழ்வைத்துறந்து கூட்டங்கூட்டமாக விருந்துகொண்டு தருமவிசாரஞ் செய்துவருதகாலத்தில் உண்டான புதுதமதம தனக்கு ஓர் அங்கமாகச் சங்கத்தை யுண்டாக்கிக்கொண்டது ஒருவிதத்திலும் புதிதாகவாவது வியப்பாகவாவது நிந்தித்தற்கிடமில்லையெனபதில் ஐயமுண்டோ?

'ஹர்மன்ஜாகோபி' என்கிற ஜேர்மப்பியவித்துவான் ஒருவர், ஜைனசூத்திரங்களைப்பற்றி எழுதும்பொழுது, ஜைனமதம பௌத்தமதத்துக்கு முன்பிருந்ததா? பின்புண்டானதா? என்று விசாரஞ்செய்து, ஜைனமத பௌத்தமதம் என்னும் இரண்டும் முக்கியமாகப் பிராமணசந்யாஸிகளிடத்திலிருந்து உண்டாயினவென்று வெளியிட்டிருக்கிறார். இவ்வாறு தாம

# பௌத்தசங்கம்.

நிர்க்ரந்தர்களுடைய ஸ்மிருதிளமபிரதாயத்திலும பௌத்தசமபிரதாயத்திலும பிராமணர்களுடைய ஸ்மிருதிளமபிரதாயத்திலும உள்ள சன்யாசதருமங்களே அவா ஒத்திட்டுப் பாத்திருக்கிறா.—பௌத்தசன்யாஸிகளுக்குரிய *தசசில களள முன்னமே தருமததில கூறப்பட்டுளளன. கொல்லாமை முதலிய ஐநதும பௌத்தாகளில உபாஸகர்களெலலோரும். அநுஷ்டிக்கவேண்டிய பஞ்சசீலங்களென்று தெரிவிக்கப்படட்ன. இந்த ஐந்தும ஜைநசந்யாசிகளுக்குரிய ஐநது சீலங்களுக்கு ஏறக்குறையச் சமானமாகவுள்ளன. ஜைநசநயாஸிகளுக்குரிய சீலங்களாவன: அஹிம்ஸை (கொல்லாமை), ஸநூருதம (மெய்மமையாயும பிரியமாயுமுள்ளசொல்), அஸ்தேயம் (கள்ளாமை), பிரமசரியம (காமமின்மை), அப்ரதிக்ரஹம் (இரவாமை) என்பவை. 'பிராமண ஸநயாஸிகளுடைய மூக்கியமான பஞ்சப்பிரதிஜ்ஞை [விரதம]கள்:—அஹிம்ஸை, ஸநூருதம, அபரிக்ரஹம், பிரமசரியம், ஒளதாரியம' என்று போதாயனதருமசூத்திரம் தெரிவிக்கின்றது. பிராமண சநயாசிகளுக்கு இன்னும் ஐநது விரதங்களுண்டு; அவைகளாவன: தினமினமை, குருபக்தி, ஆராயாது செய்தலில்லாமை, தூய்மை, ஆஹார ரத்தி என்பன. 'மாக்ஸ்முலலர்,' 'பீகளர்,' 'கரன்' முதலிய ஐரோப்பிய வித்துவானகளமேகாகள், ஜைநசந்யாசிகளும் பௌத்தசந்யாசிகளும் பிராமணசநயாசிகளுடைய வழியை அநுசரித்துத் தங்களுடைய நியமங்களை உண்டாக்கிக்கொண்டாகளென்று சொலலுகிறாகள். பிராமணாகளுடைப் சநயாசநியமங்கள் அவாகளுடைய ஆசரம விபாகங்களுண்டானகாலத்திலேயே உண்டாயிருக்கவேண்டும. பௌத்தசநயாசிகளும ஜைநசநயாசிகளும தங்களுடைய மதங்கள் உண்டான ஆதிகாலத்திலே ஆரயாவாத்தத்தில சிறசிலபாகங்களில சிற்சிலராகளிருந்தனரென்பது அவாகளுடைய சமய நூலகளிலிருந்து தெரியவருகிறது. அந்தக் காலதத்தில பிராமணசமபிரதாயத்தை அநுசரித்த சநயாசிகள் தேசமெங்கும பரவியிருநதாகள. மேலும பிராமணாகளுக்குரிய ஆச்ரமதருமங்களை இககாலதத்தில சௌதமதருமசூத்திரங்களென்று வழங்கிவருகிற சூத்திரங்களால வெளியிட்ட கௌதமமுனிவர் கௌதமபுத்தருடைய காலதத்துககு முநதிய இருநதனரெனபதற்கு தக்க ஆதாரங்களுள்ளனவென்று ஐரோபபியவித்துவாகள் உறுதியாகச சொல்லுகிறாகள். பிராமணசநயாசிகளுடைய நியமங்களில சிலவறறைச சொல்லுவோம: அவாகள, தனதானியாதிகளில ஸனஹமறறும தாம சேகரத்துவைத்துக் கொள்ளலாகாது; ஜீவபொறிகளையும வென்றவாகளாகவிருத்தல்வேணடும; மழைக்காலதத்தில இடமவிடடுச பஞ்சரிகளகூடாது; அநுபவிகைக வாங்குதற்குமட்டுமே கிராமங்களினுட் பிரவேசிக்கலாம; கேட்டவிடத்திலேயே மடபடியுங் கேளாமல ராகாரணமாகவல்லோரும் பிர

* தசசீலங்களைப் பௌத்ததருமம் எனு - மபக்ததநிற் பாக்க.

ஜகஞ்செய்தற்குரிய காலமானபின்பு அவர்கள் அந்நகரைப் பிக்ஷையெடுத்துப்பெற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு இன்சுவையுணவில் ஆசையிருத்தல்கூடாது; வாயின்தொழிலையும் கண்ணின்தொழிலையும் அடக்கவேண்டும்; நக்நஞயில்லாமலிருப்பதற்காகவே வஸ்திரந்தரித்தல வேண்டும்; ஒருகிராமத்தில் ஓரிரவிற்குமேற்படத் தங்குதல்கூடாது; தமக்கு நன்மைசெய்தாலும் தீமைசெய்தாலும எல்லாப்பிராணிகள்விஷயத திலும் அவர்கள் உபேக்ஷையோடு கூடியிருக்கவேண்டும; அவர்கள் குடுமிவைத்துக்கொண்டாலும் கொள்ளலாம்; மழித்துக்கொண்டாலுங் கொள்ளலாம்; ஸ்வப்ரயோஜநத்துக்காக (அநுகூலப்பயன்கள் இமமையனவாயிருந்தாலுஞ் சரி மறுமையனவாயிருந்தாலுஞ் சரி) ஒன்றுஞ் செய்தலாகாது; தண்டம் கமண்டலம் பிக்ஷாபாத்ரம நீரைவடிக்கநடநிருதுணியினறு இவற்றிலிருந்து நீரெடுக்குங் கயிறுமன்று இவைகளை சகயாஸிகள் தங்களிடத்தில் வைத்திருக்கவேண்டிய பொருள்கள. இப்படிப்பட்ட நியமங்களெல்லாம் ஜைநர்களுக்குமே பௌத்தர்களுக்குமுள்ளன; ஆனல் துறவுக்கு முதன்மையான இலக்கணம மனத்திலுள்ள அடக்கமும அவாவின்மையுமேயென்பது எல்லாமதத்தாருடைய துணிபு. தர்மபதமென்கிற புத்தநூலில் உத்தமபிக்ஷுவின் இலக்கணமானது, அவனுடைய வேஷத்திலும உடையிலும இலலையென்றும வைராக்கியத்திலும சாந்தியிலும் சுத்தியிலும உள்ளதென்றும அதிகவிசேஷமாகச சொலலப்பட்டிருக்கிறது;—"தன்னுடைய வாக்கை நியமத்துக்குளளடக்கிச செநக்கிலாமல் விவேகத்தோடே பேசி இம்மையுமுமைக்கும் விளக்கிக்கொண்டு எவன்வருகிறானே அவனுடைய உபதேசம் மதுரமாயிருக்கும; அன்பையே உயிராகவும புத்தருமத்தையே ஆநநதமாகவுமுடைய பிக்ஷுவினவன் சாந்திநிலையை யடைநது ஸம்ஸ்காரங்களுக்கெலலாம முடிவைத்தரும நிர்வாணநகரத்தைப் பெறுவான; ஸ்கநதங்களுடைய உதபதியையும முடிவையும அறிந்துகொணடவுடனே ஞானிகளுக்கு அமிருதரூபமாயிருக்கிற நிர்வாணமெனறு நாமதாஷத்தின் ஆநநதத்தை அவன பெறுவன். தையேய அவனுக்கு ஜீவிதோபாயமாக விருக்கக்கடவது; கோரான விசுத்திமார்க்கமே அவனுக்கு ழுழுக்கமாக விருக்கக்கடவது, இப்படியிருந்தால பரிபூரணநகரத்தைப் பெறறு அவன துன்பத்தை சமமடைபச செய்வான். வாழ்நிலையெனகிற செடியானது வாடிப்போமலாகளைக் கிழுயுதிரபதுபோல, பிக்ஷுக்களே! நீங்கள் காமத்தையும தீய எண்ணங்களையும முற்றுமதுதுவிடுமின; முற்றுமுணரநதஞான புத்தரால உபதேசிக்கப்பட்ட தருமத்தை அநுதினமுகொணடவன, வேண்டிநினறீரையை எப்பொழுதும அநுபவம் ஆராதிதது துவருவதுபோல, அதை ஆராதிநதுக்கொணடுவரக்கடவன; பிரமசரியத்துக்கு நலனுமிசையாதே; அவனும தன்னை நலிவுசெய்பவரைத்தவிர அடிநதநதப் பிடிக்கக்கூடாது; பிரமசரியத்துக்கிரவலராகிய நாகு உண்டாகும; தனக்

யபுத்தவினை எதிராக அடிக்கிறவனுக்கு இன்னும் அதிகமானகேடு உண்டாகும் பேதையே! மயிரைச் சடையாகத்தரித்து வைத்துக்கொள்வதனால் என்னபயன்? தோலுடையால் என்னபயன்? உன்னுடைய துராசைகளெலலாம் உன் உள்ளத்தில் இருக்கின்றன. நீ வெளியைமாத்திரம் சுத்தமபண்ணிகொள்ளுகிறாய்." இவ்விதமாக அநேகவகையாய்த் தூஷணிகளுக்கு மனத்தூய்மையே முக்கியமென்று பின்னும் அநுதால தெரிவிக்கின்றது; இப்படியிருந்தும் பிக்ஷுக்களுக்குரிய சிலசியமங்கள், தார்மிக சூத்திரமென்ற பௌத்த நூலில் பின்வருமாறு புத்தர் சொன்னரென்று சொலலப்படடிருக்கின்றன:—"பிக்ஷுக்களே! கேளுங்கள்; பாவத்தை யொழிக்குந தருமத்தை நான் உங்களுக்கு உபதேசஞ்செய்கிறேன்; அதை உளளதில் உறுதியாகவைத்துகொண்டிருங்கள்; நன்மையை யடையத்தகுகிறஞானியானவன் சங்கத்தாருக்கு உரிய அடக்கநெறியை [ஹரியாபதம] கைகொண்டு ஒழுகவேண்டும. பகலில அகாலத்தில் கிராமங்களுக்கு அநுபிக்ஷைக்காகப போகக்கூடாது; இராத்திரியிலும போகக்கூடாது. அகாலத்தில் பிக்ஷையெடுக்கச செல்வதனால் தீங்கு நேரிடுமென்றறிந்து விவேகிகள் அவ்வாறு செய்வதில்லை. மேலுலகஞ்சும் பிராணிகளுக்கெலலாம மயக்கத்தையுண்டாக்குகின்றன. அப்புலன்களின் பற்றிலிருந்து ஆசையை நீக்கிவிடுங்கள. பிக்ஷுவானவன் தன்னுடைய மத்தியானபோசனத்தை உரியகாலத்தில பண்ணவேண்டும; அவன் ராகாலத்தில் தன்னுடைய உணவைப்பெற்றுத் தமியனாக மீண்டுவருது ஏகாந்தமாகவிருந்து தியானஞ்செய்துகொண்டிருக்கவேண்டும. அவன் தன்னுடைய சிந்தத்தைப பரவவிடகூடாது. மனத்தை நன்றாக அடக்கிகொண்டிருக்கவேண்டும அவன் உபாஸகாகளோடாவது பௌத்த பிக்ஷுக்களோடாவது பேசுமபோது பௌத்ததருமத்தினுடைய இயறுமையைப்பற்றிப பேசவேண்டும: பிறரைப்பறறிப் பழிமொழியாவது புறங்கூறலாகவாவது பேசலாகாது. பிக்ஷுக்களில சிலர் ஞானஞ் செயதறகுவேண்டிய வலலமையைப பெறுதறகு முயலுகிறாகள். அவாகளுடைய மனம சிறுமையுளளது அவாகளை நான் பாராடடுகிறதிலலை. இபபடிச செய்பவாகளுக்கு அநேகவழிகளாகத் தீங்கிற் பறறு உண்டாகும. அவாகளுக்கு வாசகத்தில முயறசியிருக்குமபோது, அவாகளை உணமையாகத தூயஎன மனத்தை நெடுநாளு செலுததிவிடுகிறாகள். பௌத்தபிக்ஷுவானவனை உணவு படடுக்கை ஆலயம உடலைடைகளினை தூயமைகுவேண்டியநீர இவைகளேயெலலாம பெற்றுகொள்வதில புத்தரால்படபடட கட்டளையொன்றையும கடைகலலாகாது. அவன் இவை களினபபறறிப் பரபரப்புள்ளவனுகளிருகக்கூடாது. தாமரையிலையிலுள்ள தண்ணீரபோலப் பற்றிலலாதவனுகளிருக்கவேண்டும."

புத்தர உயிரவாழ்ந்திருக்குங்காலத்தில் அவரையாசிரயித்த சிஷ்யர் களில் ஒருவரின் உபதேசத்திற்கு காரணமென்பது முன்னமே சொல

லப்பட்டிருக்கிறது. புத்தருக்கும் அவருடைய சிஷ்யாகளுக்குமிருந்த சமபந்தம், இந்தத்தேசத்தில தொன்றுதொட்டுப் பிரசித்தமாக ஆசிரியாகளில் கடைபெற்றவந்த குருசிஷ்யசம்பந்தத்தையொத்ததுதான். முதலில் சிஷ்யர்களையடையும்பொழுது, 'பிகூஹவே! இங்குவா; தருமதை உபதேசஞ்செய்கிறேன். பிரமசரியானுஷ்டாநஞ்செய்துகொண்டு துன்பத்தை முடித்துவிடு' என்று அவர்களுக்குச சொன்னதாகச சொலலியிருக்கிறது. இதனால ஹிந்துமதத்தாருடைய தாமசாஸ்திரங்களிலுள்ளவாறு பௌத்தாகளும தான்கு ஆசிரமங்களைப் பாராட்டிக்கொண்டு வருததாக நிணைக்கக்கூடவிலலை; பிரமசரியாசிரமத்திலிருந்து கிருஹஸ்தாசிரமத்துக்கும கிருஹஸ்தாசிரமத்திலிருநது வாநப்பிரஸ்தாச்சிரமதத்துக்கும அதிலிருந்து சநயாசதத்துக்கும படிபடியாகச செலலுகிறசம பிரதாய்ம் பௌத்தர்களாலேயே பங்கப்படுததப்பட்டதென்பது சிலருடைய கொள்கை. அதனாலும, எலலாசசாதியாருக்கும சநயாசத்தைப பெற யோக்கியதையுண்டெவறு ஒத்துகொண்டு அவ்வாறு நடததி வருததனாலும, ஸ்மிருதிசம்பிரதாயததை யநுஷ்டிகிற வைதிகமார்கத தாருக்கும் பௌததர்களுக்கும அநுகூலம் குறைநதுவந்ததென்று சொலலுகிறார்கள். மேறகூறிய வாக்கியததில பிரமசரியசபதத்துக்கு காமினி ஆஹார்திநியமங்களுக்கு உட்பட்டிருத்தலே பொருளென்று அறிந்துகொள்ளவேண்டியது. ஆரம்பகாலத்தில இவ்டமுள்ளவர்களெல்லாரும் சங்கத்தைச சேரலாமென்ற விதியிருந்தது. வரவரச சிலநியமங்கள் விதிக்கப்பட்டன. சங்கத்தைச்சேரதற்கு விருப்பமுள்ளவன் ஒட்டியாதியொன்றுக தனக்கிலலையென்றும, கூநயரோகம் தனக்கிலலையென்றும, மூர்ச்சாரோகம் தனக்கில்லையென்றும, தான் ஒருவருக்கும அடிமையல்லனென்றும, தனக்குக் கடனிலலையென்றும், தான போர்ப்படைச சேவகனல்லனென்றும, தான் சங்யாஸிபாவதில தனது தாய் தநதையாகளுக்கு உடன்பாடிண்டென்றும் தெரிவித்தல்வேண்டும. இவைகளெலலாம் பின்புதான் உண்டான விதிகளாம. ஆரம்பகாலத்தில் ஒருவன் தலையை மொட்டையடித்துகதொண்டு துவராடையையுடுத்துத் தனியேயிருப்பானுயின், அவனுகுப் பிகூஹத்தன்மை கிடைத்ததாக நிணைதுவந்தார்கள். பின்பு சங்கப்பிரவேசத்துகுவேண்டிய நியமங்கள உண்டாகப்பட்டன. சங்கப்பிரவேசத்துக்கு இரண்டுவழி:—ஒன்று, இருபது பிராயத்துக்குக் குறைவிலலாதவர்கள் நேராகவே சநயாசத்தையடைந்து சங்கத்தைச சேரலாமென்பது. மற்றொன்று, எட்டுமுதல் இருபது இறுதியான பிராயமுள்ளவாகள், பிற்காலததில சநயாசததை யடைவதற்குவேண்டிய சாதனங்களைப் பெறமுயன்றுகொண்டி சங்கத்தை ஒட்டினவாகளாகவிருக்கலாமெனபது. சநயாசநகொடுக்கிற முறையில இரண்டுபடிகளுண்டு; அவற்றில் தாழ்ந்த (முதல்) படிக்கு ப்ரவ்ரஜயையென்றும, உயர்நததான (இரண்டாம்) படிக்கு உபஸம்பதையென்றும பெயர்.

ப்ரவ்ரஜையையாவது பழையகிலையிலிருந்து நீங்குதல். உபஸம்பதையாவது நிக்ரஹங்களின் நிவ்ருத்தியைப்பெற்றுக்கொண்டு சங்கத்தாரில் தானும் ஒருவனாகி அசசங்கத்தையடைதல். ப்ரவ்ரஜ்யையைப்பெற்று உபஸம்பதையைப் பெறாத சகயாஸி வெளியாருக்குச் சங்கத்தைச் சேர்ந்தவனாக காணப்பட்டாலும சங்கத்தில் அவனுக்கு உள்ளபதவி தாழ்ந்ததே. சிலருக்கு ப்ரவ்ரஜபாஸம்ஸ்காரமும், உபஸம்பதாஸம்ஸ்காரமும ஏகாலத்தில நடத்தப்படும. ஆனால், சாதாரணமாக, ப்ரவ்ரஜ்யாஸம்ஸ்காரத்தைப்பெற்றுக்கொண்ட சிலகாலத்துக்குப்பின்புதான் உபஸம்பதாஸம்ஸ்காரத்தைக கொடுப்பதுவழக்கம. ப்ரவ்ரஜயையைப் பெற்றுகொளவேண்டியவன, சங்கதாதரெதரில் சென்றவுடன முதியவனை. ஒரு பௌத்தசகயாசியினிடமாவது அநுபஸம்ஸ்காரதைப் பெற்றுகொள்ளலாம; அநுபஸம்ஸ்காரத்துககு அதிகமாகச செய்யவேண்டியது ஒன்றுமிலலை; அநுபஸம்ஸ்காரத்தைப் பெறறுக்கொள்ளவேண்டியவன், துவராடையை யுடித்துககொண்டு தலைமுழுவதையும் முகமுழுவதையும் சிரைத்துக்கொண்டு தனக்கு ப்ரவ்ரஜயையைக்கொடுகக்கிற சங்யாசியினிடதில, மூன்றுதரம் வணக்கதுடனும பக்தியுடனும *"புத்தமசரணமகச சாமி", "தாமம்சரணமுசசாமி" "ஸங்கமசரணமகசசாமி" என்று சொலலவேண்டும. இதைசொன்னபின்பு பௌத்தசகயாசிகளுக்குரிய தசசிலங்களையும தான அனுஷ்டித்து வருவதாகவும அவன் விரதஞசெய்து கொளளவேண்டும; பினபு உபஸம்பதையைப பெற்றுக்கொள்ளுமபொழுது, அவன் சங்கததாகருமுன் சொனறு பணிந்து தலைமேறகூப்பிய கையுஞ்ச சங்கததைப்பாராதது பின்வருமாறு சொலலுதலவேண்டும:—"பூஜயாகளே! எனக்கு ஸகயாஸங் கொடுக்கவேண்டுமென்று சங்கதாரை வேண்டிக்கொளளுகிறன். சங்கததா என்னையும தங்களிலொருவனாகச செய்துகொள்ளவேண்டுகிறன்; என்மேல சங்கததாகயையுள்ளவாகளாகவிருகருமபடி வேண்டுகிறென். பூஜயாகளே' எனகது நீங்கள் சகயாசஙகதருளவேண்டுமென்று இப்படியே இரண்டுதரம மூன்றுதரம் கேட்டுகொள்ளுகிறன். சங்கத்தார் என்னை உயாத்தித் தங்களில் ஒருவனாகச செய்துகொள்ளவேண்டும; என்னிடத்தில கருணையுள்ளவாகளாயிருக்கவேண்டும." இப்படி அவன சொனனபின்பு சில கேள்விகள்கேட்டு அவனைப் பரிசோதித்து அவனுககுச சங்கத்தைச சோதற்குத தகுதியுண்டென்று சங்கத்தார் தெரிந்துகொள்ளுவார்கள்; அக்கேள்விகளாவன:-(வருதவனைப் பெயர்கூறியழைத்து) "நான் சொல்வதைச செவிகொடுத்துககேட்கின்றனையா? சத்தியமாகவும வஞ்சனையில்லாமலும் நீ பேசுவதற்கு இதுதான் சமயம். உன்னைப்பற்றிய நிலைமைகள்

* "முத்திற மணியை மும்மையின் வணங்கிச்
சரணு கியாய்ச் சரண்சென் றடைந்தபின்"
(மணிமேகலை, கஉ - ம் காதை, சு-இ.)

எப்படியிருக்கின்றனவோ, அவற்றைப்பற்றிக் கேட்கப்போகிறேன்; நீ உள்ளதை உள்ளதென்றே சொல்லவேண்டும். இல்லாததை இல்லையென்றே சொல்லவேண்டும். உனக்குப் பெருமையாதி, கண்டமாலை, வெள்ளைக் குஷ்டம், கூஷயம், மூர்ச்சாரோகம இவைகளுள் ஒன்றுமில்லையா? நீ வஞ்சனைவடிவம் பூண்டிராத உண்மையான மனிதன்தானே? நீ ஆண்மகனே? நீ யார்க்கேனும் அடிமையாக விருக்கின்றனையா? நீ கொடுக்கவேண்டிய கடன்களொன்றுமில்லையா? நீ இராஜனிஷ்வை செய்பவனே? சகோதரகலை யடைவதற்குத் தாய்தகப்பனையாகளினை கடட்டுன் பெற்றிருக்கின்றனையா? உனக்குப் பூர்ணமாக இருபதுபிராயமாயிற்றே? உனக்கு வேண்டிய பிக்ஷாபாத்திரமும், காஷாய வஸ்திரங்களும் இருக்கின்றனவா? உனபெயர் என்ன? உன் ஆசிரியனபெயர் என்ன?" (என்று சங்கதத்தாரில் ஒருவன் பரிசோதகனை முன்நின்று கேட்டான்.) இக்கேள்விகளுள் இறுதிக் கேள்வியால், ப்ரவ்ரஜனையை யடைந்தவன் உபஸம்பதையடையுமுன் சங்கத்தாருள் ஒருபிக்ஷுவைக குருவாக அடைந்து அவனிடம பௌத்த தருமங்களையும ஆசாரங்களையும அறியவேண்டுமென்று தெரிகிறது. இந்தக்கேள்விகளைக் கேட்டபரிசோதகன், அந்தககேள்விகளுக்கெல்லாம நேரானவிடை வந்தவுடனே சங்கத்தாரைப பார்த்துப பின்வருமாறு சொல்லுவான:—'பூஜ்யர்களே! சங்கதத்தார் ஞானசெல்வத்தைக் கேட்கவேண்டுகிறேன்; (குருசிஷ்யர்களுடைய பெயர்களைச்சொல்லி) இன்னாருடைய சிஷ்யனான இன்னான் சுயாசாரமபெற்றுக் கொண்டு சங்கத்தைச சேரவிரும்புகிறான்; இவன சங்கதத்தைச சேரவதற்கு விரோதமான தடையொன்றுமில்லை; இவனுக்குப் பிக்ஷாபாத்திரமும் துவராடைகளும் இருக்கின்றன. இவன இன்னாருடைய சிஷ்யனாக விருந்துகொண்டு தானும சங்கத்தைச்சேரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறான்; இவன் இன்னாருடைய சிஷ்யனாக விருந்துகொண்டு பிக்ஷுவாய்ச சங்கத்தைச சேரலாமென்று சங்கதத்தார் கட்டளையிடக் கருதுகிறார்களா. இசசங்கதத்திலுள்ள பெரியோர்களில், இன்னாருடைய சிஷ்யனாக இவனிருந்துகொண்டு சங்கத்தைச சேரலாமென்று எண்ணங் கொண்டவர்கள் மௌனமாக விருக்கவேண்டும்; அவ்வாறு எண்ணங் கொள்ளாதவர்கள் தங்கள் கருத்தை வெளியிடவேண்டும்" இவ்வாறு மூன்றுதரம் சொன்னபின்பு ஒருவரும பேசாதிருந்தால், அந்தப்பரிசோதகன், சபைக்குத் தலைவனான ஸ்தவிர [முதியோர்] னைப்பார்த்து வணங்கி (குருசிஷ்யர்களுடைய இயற்பெயர்சொல்லி) "இவன் இன்னாருடைய சிஷ்யனாகவிருந்துகொண்டு சங்கத்தைச சேர்தற்கு நியமனம் பெற்றுக் கொண்டான். சங்கத்தாரெல்லாரும் இதற்கு உடன்பட்டவர்கள். அதனாலேதான் எல்லாரும மௌனமாயிருக்கிறார்களென்று நான் எண்ணுகிறேன்" என்று சொன்னபின்பு அந்தச் சிஷ்யன் சங்கத்தில் ஒருவனாய் விடுகிறான். பின்பு பிசையெடுத்துப் பெற்றுக்கொண்ட அன்னதான

அவனுக்குத் தகுதியான அன்னமென்றும், பிறர்விட்டெறிந்த கந்தைகளைச் சோதித்துத் தைத்துக்கொண்ட ஆடைதான் அவனுக்குத்தக்க உடையென்றும், காட்டிலுள்ள மரங்களின் அடிதான் அவனுக்கு இருப்பிடமென்றும், கோமூத்திரந்தான் அவனுக்குத் தக்கமருந்தென்றும், உபாஸகர்கள் கூலல ஆடை உணவு இருப்பிடம் மருந்து ஆகிய இவற்றைக் கொடுப்பார்களாயின் அங்கிகரிக்கலாமாயினும் அவைகளையெல்லாம் மேறகூறிய விதமாகவே அவன் பெற்றுக்கொள்வது உத்தமமென்றும் கூறுவர். பின்பு, காமமின்மை கள்ளாமை கொல்லாமை யென்னும் விரதங்களிலிருந்து தவிராதலும், யோகத்தாற்கிடைக்கும் இருத்திசக்திகள தனக்கிருப்பனவர்கப் பெருமைபாராட்டினாலும் சங்கத்திலிருந்து விலக்கிவிடுவதற்கு இடமுண்டாகுமென்றும் சொல்லுவார்கள். இவ்வாறு சங்கத்தைச் சேர்ந்த ஒருவன் தன்னுடைய ஆசிரியனோடுகூடவே யிருந்து தருமதத்தையும் சீலதத்தையும் அவன்பால் அறிந்துகொண்டு தந்தையிடத்தில் மைந்தனிருக்குமவண்ணம் நடந்துகொள்ளவேண்டும். இங்ஙனந் தூறவியானவனுக்கு அந்த நிலைக்குரிய நியமங்களை நடத்த முடியாவிட்டால் அவன் அதிலிருந்து இல்லறநிலைக்கு வந்துவிடலாம.

பிக்ஷுக்களுக்குரிய ஆஹாரநியமங்கள் : — சூரியோதயமானபின்பு மத்தியான்னதுகுளளாகவே அநருபமான ஆஹாரத்தை உட்கொள்ளலாம. இந்த ஆஹாரதத்தை வீடுவீடாகப்போய்ப் பிசசையெடுத்துத் தொருகவேண்டும. வீடுவாயிலிறபோய் மௌனமாய்ப் பிக்ஷாபாத்திரதோடு †சும்மா நிறகவண்டும. கொடுத்தாற் பெற்றுக்கொள்ளவேண்டும; கொடாவிடடால அப்பாற் போய்விடவேண்டும். இன்னர் வீட்டுகுப் போகவேண்டுமெனறு தெரிந்தெடுத்து உத்தேசத்தோடு போகக்கூடாது. தனக்கு ஒருவேளைக்கு வேண்டியவளவான உணவு கிடைததபினபு பிசசைவாங்கக கூடாது பிசசையெடுத்த ஆஹாரத்தை ‡உண்பதற்குமுன் அசுபபாவனை செய்துகொண்டிருந்து, பின்பு தான் இறவாமலிருப்பதற்கு வேண்டுமளவே உண்ணவேண்டும். செல்வவான்களான உபாஸகர்கள் தாமாகவே பிக்ஷுக்கு அழைததால் போய் உண்

---

"ஒண்டுவ ராரதுகி லாடை மெய்போர்த துச்சிகொ ளாமையுண் டேயு ளைக்குங, குண்டர்க ளோடைக் கூறை யில்லார்'கூறுவ தாங்குண மல்ல கண்டீர்" என்பது திருஞானசம்பந்தழ்ந்நாயனர் தேவாரம்; கிழதிருக்காட்டுப்பள்ளி.

† "மனேயகம் புகுந்து மணிமே கலைதான், பனேயா வோவியம் போல நிற்றலும்" என்றதனால், பிக்ஷையிரத்தற்குச்சென்ற பிக்ஷுணிகளும் மௌனமாய்ச் சும்மா நிற்கவேண்டுமெனறு தெரிகிறது , மணிமேகலை, கசு-ம் காதை, கசுஎ-தூக்க.

‡ நீலகேசித்திரட்டு, மொக்கலவாதச்சருக்கம், டுஉ - ம் பாட்டினை:—'தலை சிதைத்தலே, புருவஞ்சினைத்தலே, அத்யுஷ்ணமும் அதிபாரமும் அதிதூர்கந்தியுமாகிய சீவரம்போர்த்ததலே, ஸர்வமும் அநசியென்றுபாவித்துண்டலே, காமஸம்தாபமே, பொழுதுசெருகதுண்டலே எனறிவைமுதலாயின' என்பதனாலும் பௌத்த பிக்ஷுக்கள உண்பதறகுமுன்பு அசுபபாவனை பண்ணவேண்டுமென்று தெரிகின்றது.

னலாம். உண்ணலாகாதென்கிற நிர்ப்பந்தமில்லை; அப்பொழுதுங்கூடப் பகலில் ஒருவேளையுணவுக்கே ஏற்பாகலாம். உபாஸகர்கள் பெரும்பாலும் பூர்ணிமையில் அழைப்பது வழக்கம். தாமிருக்கிறவிடத்துக்கு உபாஸகர் யாரேனும் தாமாகவாது உணவ்ளித்தால் அதை உண்ணுகிறவழக்கமும் உண்டு. சில பிக்ஷுக்களை ஆஹாரவிஷயத்தில் சில கடுமையான நியமங்களைக்கூட அனுஷ்டிப்பதுண்டு. மாமஸாஹாரத்தை யுண்பதில்லையென்றும, பிசசையெடுத்துப் பெற்றுக்கொண்டதையன்றி வேறெனறையும் உண்பதில்லையென்றும, *பிக்ஷாபாத்திரத்திறகிடைத்ததை எறிகிறதிலலையென்றும இப்படிச சில நியமங்களிருந்தனவென்று தெரிகிறது. பிக்ஷைக்குப் போகுமபொழுது ஊரிலுள்ளவர்கள் உண்டுவிட்டசெய்தியை இயன்றவரையில் தெரிந்துகொண்டு பின்பேபோகவேண்டுமெ; தமக்கு உணவைக கொடுத்துவிட்டு உபாஸகர் பட்டினியிருக்குமபடி முன்பு செலலலாகாது.

தனதென்று அபிமானிபபதற்கேறற பொருளொன்றும பிக்ஷுவுக்கு இருத்தல்கூடாது; ஆனாலும் பிக்ஷாபாத்திரம, †மூன்றுவஸ்திரம, இடையிற் கட்டுங்கச்சை, கருதைஊசி, தைத்தற்குவேண்டிய ஊசி, கெளரகத்தி, நீர்வடிகட்டுகிறதுணி என்னும ‡எட்டுமே இருக்கவேணுமெ. இவறறையன்றித் தனதென்று வேறொன்றையும் வைத்திருத்தல் கூடாது. அபபடி ஏதாவதொருபொருளை வைத்துகொண்டிருந்தால், அது நிருவாணமடைதற்குப பெருந்தடையாகுமென்பது அவர்கள் கருத்து. பகுதிகள தாம பறந்துசெலலுமிடங்களுக்குச சிறைகளையன்றி

* "கொள்ளு மாறுந்தங் கோரகை யுட்கஞ்சி, மொள்ளு மாறு முதுகு நெளிதண்டி" (நீலகேசித்திரட்டு, அருக்கசந்திரவாதசசருக்கம், சு - ம பாட்டு:) எனவும, "வழிக்கு மாறந்த மண்டையு ணுண்டி" (நீலகேசித்திரட்டு, அருக்கசந்திரவாதசசருக்கம, எ - ம் பாட்டு:) எனவும் வருவனவற்றால், பௌத்தபிக்ஷுக்களுடைய பிசசைப் பாத்திரம, கோரகையென்றும மண்டையென்றும கூறப்படுமென்றுணர்க

† மூன்றுவஸ்திரங்கள்—அந்தரவாஸகம், ஸங்காடி, உத்தராஸங்கமென்பன, "மருதின் வாழ்பகை யானவிம் மாந்தர்" (நீலகேசித்திரட்டு, குண்டலகேசிவாதசருக்கம், சுசு - ம் பாட்டு:) எனவும், 'புடைவைகொண்டுபிழிதது மகதநாட்டுச் சதிரவனைக் கண்ணுறுபோலத துன்னஞ்செய்து மருதந்துவர்தோய்த்துக் கொட்டி இவ்வாறு பகுக்கேசத்தற்போக்கின்றது மோக்ஷார்த்தம்' (நீலகேசித்திரட்டு, மொக்கலவாதச்சருக்கம், சு - ம் பாட்டுகள:) எனவும், "துவ்ராடைகண்மூடியசேடன்" (நீலகேசித்திரட்டு, புத்தவாதச்சருக்கம், உக - ம் பாட்டு:) எனவும், "நிலம்பொய் நீர்பொய் நெடுநகர் தாமும்பொய், கலமபெரய் காற்றொடு தீயும்பொய் காடும்பொய், குலமபொய் யேயெனக் கூறுஞ்செங்கூறையாய" (நீலகேசித்திரட்டு, புத்தவாதச்சருக்கம், எசு - ம் பாட்டு:) எனவும் வருவனவற்றால், பௌத்தபிக்ஷுக்களின் ஆடைகளிலக கணமும், அவை 'துவ்ராடை' 'செங்கூறை' என்று கூறப்படுதலுமறிக.

‡ மிழிக்கத்தி, கத்திரிகை, சுண்ணாம்புச்செப்பு, வெற்றிலைப்பெட்டி, பாக்குப்பை, பல்லுத்துடைக்கப் பாளைமுதலியனவும், தலைவழிக்கத்தி, தீட்டுகல், குடை, செருப்பு, மண்டை, கெண்டி முதலியனவும் பிக்ஷுக்கள் கைக்கொளளுதற்குரியனவென்பர், நீலகேசித்திரட்டுரையாசிரியர்; அருக்கசந்திரவாதச்சருக்கம் உ

வேறொன்றையும் எப்படி உடன்கொண்டு செல்லுவதில்லையோ, அப்படியே பிக்ஷுக்கள் காஷாயத்தையன்றி வேறொன்றையுங் கொண்டுசெல்லலாகாதென்று பௌத்த நூலகள் தெரிவிக்கின்றன. பணத்தை அவர் சற்ற தொடவுங்கூடாதென்பது விதி.

உபாஸகாகளில் யாராவது பிக்ஷுக்களுக்குப் பணங்கொடுக்க விரும்பினால் பணமாகக் கொடுக்காமல், அவர்களுக்கு உரிய வஸ்திரமுதலிய பொருள்களை வாங்கிக்கொடுத்தலுமுகமாகவே சேர்ப்பிக்கக் கடவர். ஒரு பிக்ஷு பணம் வாங்கினனென்று தெரிந்தால், அவனைச் சங்கத்தார் விசாரித்துக் *ருத்தத்தை ஒப்புக்கொள்ளுவித்து அவனிக்கொணடு அந்தப் பணத்தை அருகிலுள்ள உபாஸகனுக்குக் கொடுத்துவிடச் செய்வதும், அங்ஙனம் பெறுகொளள அந்த உபாஸகன் உடன்படாவிடடால், அவனைகொண்டாவது வேறு உபாஸகரைக்கொண்டாவது அதனை எடுத்தெறிந்துவிடச்செய்வதும், எந்த உபாஸகரும் எறிதற்கு உடனபடாவிட்டால் சங்கத்தார் ஒரு பிக்ஷுவை அதற்கெனறு நியமித்து அவனைகொண்டு அந்தப்பணத்தை எடுத்தெறிந்துவிடச்செய்வதும், அந்தப்பிக்ஷு தான் பணத்தையெறிந்தவிடத்தைக் கருந்திலவைத்து வெளியிடலாகாதென்பதும் அவர்களுடைய நியமங்கள்.

வஸ்திரம்.—பௌத்த பிக்ஷுக்கள் எப்பொழுதும் வஸ்திரமில்லாமலிருக்கக்கூடாதென்றும், நிருமபரிக்ரஹிகளாகவிருந்தால் அவர்களுக்கு விரதபங்கம் நேரிடுமென்றும் சொலலுவார்கள். சாதாரணமனுஷர்கள் உடம்பு முழுவதையும் வஸ்திரத்தால் மூடிக்கொளளாதிருந்தாலுங்கூட பிக்ஷுக்கள் உடம்புமுழுவதையும் வஸ்திரத்தால் மூடிக்கொள்ளவேண்டுமென்பது நியமம். இந்நாகரிகமான நாளாகவுடைய திகம்பரவாதத்துக்கு முழுவதும் எதிராகவுண்டாயிற்றென்று தோனறுகிறது. ஒவ்வொரு பிக்ஷுவுக்கும் அந்தரவாஸமென்றும், உத்தராஸங்கமென்றும் மூன்று காஷாய வஸ்திரமிருக்கவேண்டும். அந்தரவாஸகம - உளளாடை. ஸங்காடி - அரையிற்சுட்டிய ஆடை. உத்தராஸங்கம - மேற்போர்வை இந்த மூன்றையுங் தோய்த்து உலர்த்தி உபயோகித்துக்கொளளுவதற்கு உபகாரமாக வேறு மூன்றுவஸ்திரங்களே இருக்கலாம். உளளவஸ்திரங்கள் மலினமாகவும் கிழிலமாகவும் போய்விட்டால் வேறுவஸ்திரம் பெற்றுக்கொள்வதற்குந் தாமாகவே முயலலாகாது. இலலாமலிருப்பதைப் பார்த்து யாராவது தாமாகக கொடுத்தால் பெற்றுக்கொள்ளலாம

* பிக்ஷுக்களுக்கு ஏதேனுங் குற்றமநேரிடுமாயின், அதற்குப்பரிகாரம் நந்தவனத்துக்கு நீர்விடுகையெனறு தெரிகிறது. இதனை, 'பிக்ஷுணிகளுக்குப்பிழை புகுநதாற் பிராயச்சித்தம் புதுதாகோயில் மூற்றதற்கு மணற்சமக்கை, பிக்ஷுக்களுக்குப் பிராயச்சித்தம நந்தவனதற்குக் இறைக்கை' (நீலகேசித்திரட்டு, அருக்கசந்திரவாதச்சருக்கம், உடு - ம் பாட்டுரை:) என்பதனாலுணர்க

இருப்பிடம்:—காட்டில் மரத்தினடியில் தனித்து வாசஞ்செய்வது இந்திரிய நிக்கிரகத்துக்குச் சிறந்தவழியென்பது பௌத்தர்கள்கருத்து; ஆனல், கௌதமபுத்தர் தாம் தருமோபதேசஞ்செய்யத் தொடங்கின நாள்முதல் கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் அருகில் வாசஞ்செய்துகொண்டிவக்தார்; அநேகபிக்ஷுக்கள் தனியே காட்டிற்குசென்று மரத்தினடியில் வாசஞ்செய்துகொண்டிருந்தார்கள்; சில பிக்ஷுக்களை தமக்கு இருப்பிடமாகப் பிறரால் கட்டிக்கொடுக்கப்பட்ட விஹாரங்களில் கூட்டங்கூட்டமாக இருந்தார்களென்றும் தெரிகிறது. *விஹாரங்கள்.- ஊருக்கு அருகிலுள்ள பெரிய தோட்டங்களில பிக்ஷுக்கள் தங்குவதற்காக உபாஸகர் கட்டியமைதவை. கௌதமபுத்தகாலத்திலேயே சில விஹாரங்கள் அமைக்கபபட்டிருந்தனவென்றும, அவா காலத்துக்குப்பின் அங்கங்கே பற்பல விஹாரங்கள் அமைக்கப்பட்டன வென்றுஞ் சொல்லுவர். மலைக்குகைகளிலும், மலைகளில் சிறிதாகவும் பெரிதாகவும சிற்பிகளாற் குடைந்தமைக்கப்பட்ட செயற்கைமுழைகளிலும் பிக்ஷுக்கள் தனித்தனியாகவாவது கூட்டங்கூட்டமாகவாவது தங்குவதுமுண்டு. அத்தன்மைபனவாகிய குகைகள் பல நமமுடைய தேசத்தில் இப்பொழுதும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட விஹாரங்களிலாவது குகைகளிலாவது பிக்ஷுக்கள் வருஷமுழுவதும வசிக்கிறவழக்கமிலலை. அவர்கள் சாதாரணமா வருஷாகாலமொழிந்த மற்றைக்காலங்களில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடதுக்குப்பெயர்ந்து சஞ்சரித்துக்கொண்டேயிருத்தல்வேண்டும். வருஷாகாலத்தில்மாத்திரம ஓரிடத்திலேயே யிருத்தல்வேண்டும். வருஷாகாலத்தில் வெளியில மரத்தினடியில் வாசஞ்செய்யக்கூடாது; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச

பிக்ஷுக்களின் தினசரியை:—புதியபிக்ஷுவாய்க் குருவினிடத்தில் பணிவிடை செய்துகொண்டு வருபவன், சூரியோதயத்துக்கு முன்னமே எழுந்து ஸ்நானஞ்செய்து, தானும் தன் ஆசிரியனும இருக்கும விஹாரதை சுத்திசெய்து †தாம் தொழும அசுவத்தவிருக்ஷத்தின் அடியையும்

(நீலகேசித்தீகாட்டு, புத்தவாதச்சருக்கம், சுசு – ம் பாட்டுரை:) 'பள்ளியுட் சங்கத்தாரோடுகிடந்த உபாஸகன் நித்திராவசத்தாற் சங்கத்தார்மேற் காலேறட்டுவிழித்தால் அதற்குப் பச்சாத்தாபப்படுவது பாவமுண்டென்று அஞ்சுவனோ', (எடு-ம் பாட்டுரை:) 'ஒருபள்ளியுளிருந்த சங்கத்தார்பலருட் சிலரைத் தோஷமான்களென்றும வஹரோபோஜனைஹவாஸங்களுக்கு யோக்கியரல்லரென்றுங்கழித்தால் ஒழிந்தாரெல்லாரும் யோக்கியரென்றவாறுபோலக் குற்றமென்று உன்னுற்கழிக்கப்பட்ட நான்கு சொலலுமொழித்து ஒழிந்தன புண்ணியகாரணமாம்' என்பனவற்றாலும், சங்கத்தாருறைதற்குரிய விஹாரமென்பது தமிழிற் பள்ளியென்று சொல்லப்படுமென்றுதெரிகிறது.

† பௌத்தர்களால் அரசமரம் தொழப்படுதலை, (நீலகேசித்தீகாட்டு, மொக்கல வாதச்சருக்கம், சுஉ – ம் பாட்டு:) "புத்தர்கட் பத்தியிற் போதி மாத்தொழின்" என் பதனாலும், 'அருள் அறிவு துறவில்லாத போதிமரத்தை நீதொழுதல என்னை? புத்தி பத்தியால், அவனிருந்த போதிமரம்போலும் போதிமரம்தொழுகின்றவனையாயின்,

சுத்திசெய்து ஒருநாள்முழுதும் தாம் பருகவேண்டிய நீரையெடுத்து வடிக்கட்டிவைத்தல் வேண்டும். பின்பு ஏகாந்தமாகவிருந்து புத்ததரு மத்தைத் தியானஞ்செய்யவேண்டும். பின்பு *தாதுகோபத்தையாவது போதிவிருக்ஷத்தையாவது மலராலருச்சித்துத்தொழுது ஒருபிக்ஷாபாத் தீரத்தை யெடுத்துக்கொண்டு ஆசிரியனுடன் பிக்ஷையெடுக்கச் செல்ல வேண்டும. பிசசையெடுத்துக்கொண்டுவந்தபின்பு ஆசிரியன் காலிக்கழு விக்கொள்வதற்கு நீர்கொடுத்துப் பிக்ஷாபாத்திரத்தை அவன்முன்வை த்து அவனுந்தானுமுண்டபின்பு பிக்ஷாபாத்திரத்தைச சுத்திசெய்யவே ண்டும. மறுபடியும புத்தரைத்தொழுது தியானஞ்செய்யவேண்டும். பின்பு பௌத்தசமயநூலகளைப் படிக்கிறதும எழுதுகிறதும் தனக் குத் தெரியாதவற்றை ஆசிரியனிடம கேட்டு அறிகிறதும சாயங்காலம வரையில் அவன்செய்யவேண்டிய தொழில்கள்; சாயங்காலமானவுடனே விஹாரத்தைத் தூத்துச சுத்திசெய்து விளக்கேற்றி அன்று தால் பௌத்தநூலகளிலிருந்து நெட்டுருப்பண்ணிய பகுதிகளைக் குருமுன் பே ஒப்பிதது, தான் ஏதாவது குற்றஞ்செய்திருந்தால் அதை ஆசிரி யனுகரு அறிவித்து கூமிக்குமபடி கேட்டுகொள்ளவேண்டும்; நிரம் பிய மனமுடையவனுய் இருதிரியங்களை வெல்லமுயன்றுகொண்டு திரிகர ணங்களாலுஞ் சுத்தஞ்செய்ச சாந்திபுடன் வளர்சசியடைந்து வரவேண்டும். †ஸ்தவிரர்களான பிக்ஷுக்கள், இவ்வாறுசிஷ்யாகளால் உபசரிக்கப்பட்டு, தங்களுக்குள்ள காலத்தை, சிலாநுஷ்டானத்திலும ஐந்துவிதமான பாவ னைகளிலும தியானத்திலும சமாதியைப்பெறுவதிலும செலுத்திக்கொ ண்டு வருவாாகள. ஆசையைவென்று பற்றையறுத்து முற்பிறப்புக் களிலும இப்பிறப்பிலும் செய்துவந்த கருமங்களின் ஸம்ஸ்காரங்களை யெல்லாம நாசஞ்செயதுவிட்டு நிருவாணத்தைப்பெறுவதுதான், இவ்வ ருடைய முயறசிகளுகெலலாம பயன். இவ்வாறு சிலபாவனைத்தியா நஸமாதிகளால, முறையே ஸ்ரோதாபநரென்றும ஸக்ருதாகாமியென் றும அநாகாமியென்றும அாஹத்தென்றும படிப்படியாக உயர்ந்திருக

---

அவனிரந்த மண்டைபோலுமண்டைனையும அவன்தொட்ட செருப்புப்போலுஞ் செருப்பினையும் அவன குடைபோலுங்குடையினையுந்தொழுக" எனனும அதலுனை யாலுமுணர்க.

* தாதுகோபம் - (புத்தருடைய்) தாதுக்களைப் பாதுகாத்தற்குக்கட்டிய கட் டிடம்; தாது - என்புமுதலியன, (நீலகேசித்திரட்டு, அருக்கசந்திரவாதச்சருக்கம், உச - ம் பாட்டினை.) 'புததனுடைய என்பாயிய தாதுஎழுவா' எனவும், (நீலகேசித் திரட்டு, மொக்கலவாதச்சருக்கம், அட - ம் பரட்டினை:) 'நீதாதுவினைத்தொழுவது புத்ததாது வென்றன்றே' எனவும் வருவனவற்றுல், புத்ததாது பூசிக்கப்படுவஸ் ததை யறிந்துகொள்க.

† ஸ்தவிரர் - முதியபிக்ஷுக்கள்; இப்பெயர், (நீலகேசித்திரட்டு, அருக்கசந்திர வாதச்சருக்கம், கச - ம் பாட்டினை:) 'செங்கதத்தரென்பாரொருஸ்தவிரர் ஸங்கா வாஸத்துப்போதியின்கணின்ற பிக்ஷுணியைதசயாசெய்யப்புக' என்பதில் வந்திருத் தல்காண்க.

கும வகை. ஈன்கு உண்டு; அசேஷரென்கிற ஐந்தாம்வகையொன்றும் இருப்பதாகச சொல்வார்கள்.

"சங்கத்திலுறைபவன் வேறுசெய்தியைப்பற்றியும அற்பவிஷயங்களைப்பற்றியும பேசமாட்டான். தன்னுடைய சமயநூலையே விவரித்து வெளியிடுவருவான்; அல்லது வேறொருவரை அவ்வாறு செய்யத்தூண்டுவான்; அல்லது தூய்மையான மௌனத்தை அதிகௌரவத்துடன பாராட்டிவருவான்" என்றுதிரிபிடகத்தில் ஓரிடத்தில சொலலியிருக்

மாதத்தில் இருமுறை பருவகாலங்களில் சமீபித்த இடங்களிலுள்ள பிக்ஷுக்களெல்லாரும் ஒருங்குசேர்ந்து உபஷ்ஸதவிரதாநுஷ்டானஞ் செய்துவருவது வழக்கம. உபவஸதம்பாவது உபவாஸம [பட்டினியிருத்தல்]. கூடியிருக்கிறபிக்ஷுக்களுள் ஒவ்வொருவருங தங்களுடைய கடமைகளையும் ஆசாரத்தையும முறைப்படி நடத்திக்கொண்டுவருகிறாகளாவென்று விசாரித்தறிந்து கொள்ளுதலும, குறறஞ்செய்தவர்களெலலாம தத்தமகுறறத்தை அநுதாபத்துடன வெளியிட்டுச சங்கத்தாருடைய கூடமையைப் பெற்றுக்கொளவதுமே உபவஸதாநுஷ்டானத்தின முக்கியமான நோக்கம. ஒரெல்லைக்குட்பட்ட இடத்திலுள்ள பிக்ஷுக்களில மூத்தவனுக்கு இந்த உபவஸத பிக்ஷுஸங்கத்தைச சேர்ந்த அதிகாரமுண்டு. அசசபைக்கு வரவேண்டிய பிக்ஷுக்களெலலாரும, அந்த மூத்தவன் நியமித்தபடி சமீபத்திலுள்ள விஹாரத்திலாவது மலையிலுள்ள குகையிலாவது வந்துசேரவேண்டும. ஒருபிக்ஷுவாவது வராமலிருத்தல் கூடாது. பைத்தியமபிடித்திருந்தாலமடடுமே வராதிருக்கலாம. வரக்கூடாதபடி நோயை அநுபவித்துக்கொண்டிருப்பவர்கள், தாங்கள் விதியைக் கடந்து குறறமொனறுஞ் செய்யவிலலையென்று வேறொரு பிக்ஷுவைகொண்டு சங்கத்துக்குத தெரிவிக்கக்கூடுமானால வராமலிருந்துவிடலாம; இப்படிச்செய்யமுடியாவிடில நோயாளியைச சபைக்குத தூக்கிக்கொண்டு வரவேண்டும; அதுவுமு முடியாவிட்டால சபையே அவனிருக்குமிடஞ் செலலவேண்டும; இவ்வாறு வரவேண்டியவர்களெல்லாருமவந்தாலொழிய அநதச்சபையைநடதத ஒருவருக்கும்அதிகாரமிலலை.

சூரியாஸ்தமயமான பினபு தீபவொளியில் பிக்ஷுக்களெல்லாருமு உரிய இடங்களில் இருப்பார்கள். உபாஸகர்கள் ஒருவரும் அசசபை கூடுங்காலத்தில அங்கேயிருத்தலாகாது. பினபு, சபையில, எலலாருக்குமகேட்குமபடி ஸதவிரன் பிராதிமோக்ஷவாகியத்தைச சொல்லுவான. பிராதிமோக்ஷமென்பது குறறங்களை அநுதாபத்துடன் ஒத்துகொண்டு அவைகளின் பாதத்திலிருந்து விடுதிபெறுதல். "பூஜ்யாகளே! நான் சொல்வதைச் சங்கத்தார் அன்புடன் கேட்கவேண்டும; இன்று, பக்ஷத்தின் பதினைந்தாவதாகிய உபவஸத தினமாயிருக்கிறது; சங்கத்

தாரஸித்தராயிருந்தால் உபவஸதாநுஷ்டாநஞ்செய்து பிராதிமோக்ஷத்தைக் கேட்கலாம. பூஜ்யாகளே! உங்களுடைய பரிசுத்தியைப்பற்றிச் சங்கதாருகுத் தெரிவியுங்கள்; நீங்கள் குற்றஞ்செய்திருந்தால் அதை ஒப்புக்கொள்வதற்குவேண்டிய வாக்கியங்களை நான் சொல்லுகிறேன்; கேளுங்கள்" என்று ஸ்தவிரன் சொன்னவுடன், சபையிலுள்ள பிக்ஷுக்களாவரும் "காங்களெலலாம் நீர் சொலவதைக கேடடு அதற்கு ஏற்றவாறு நடந்துகொள்வோம" என்று சொல்வாாகள்; பின்பு ஸ்தவிரன பின்வருமாறு கூறுவான்:—"ஒரு குற்றஞ்செய்திருந்தாலும அதை அவன் ஒததுக்கொள்ளவேண்டும; குற்றஞசெயயாதவன் மௌனமாயிருகக்லாம. பூஜ்யாகளே! உங்களுடைய மௌனதிலிருந்து நீங்கள் குறறஞசெய்யவலலையென்று நான் அறிநதுகொளவேன. தனிமை ஒரு விஷ விஷமில்லையென்று அவன எபபடி விடைபகாவாரோ, அப்படியே, இசசபையை நோககி மூனறுமுறை நான கேட்குமகேள்விக்கு இங்குளள ஒவவொருவரும் தக்கவண்ணம விடையளிகக உரிமையுள்ளவாகனாய் விகினறனர." இப்படி ஸ்தவிரன் மூன்றுதரம கேள்வி கேட்டபின் ான செய்த குற்றம தன்ஞாபகத்திலுள்ளபொழுது அதை வெளிப்படையாகச சொலலி ஒத்துக்கொளளாத பிக்ஷு அருகதவாதாதாவதை [பொயசொன்ன குற்றத்தை] அடைவான. மனப்பூர்வமாகச செயலும அருதவாதம ாசததைத தருமென்று தாகாகா சொலலியிருகிறார். ஆகையால, செய்த குறறததை மறவாதிருநது அதன் தோஷதனினறும நீங்குதலித்திதிம ஒவ்வொரு பிக்ஷுவும் தன் குற்றத்தை வெளிபபடையாகச சொல்லி ஒத்துக்கொள்ளவேண்டும. இவ்வாறு வெளிப்படையாகச சொல்லி ஒத்துகொண்ட தோஷத்தின்பாரம் மிகவுங் குறைநதுவிடும. பிரமசரிய விரதபங்கம, அஸ்தேய விரதபங்கம, அஹிம ா விரதபங்கம, இருகதிசகதியைப் பாராட்டாமையாகிய விரதகதினினறும வழுவுதல ஆகிய இவறறைபபறறியும வேறுளள விரதபங்கங்களபபறறியும ஸ்தவிரன மூன்றுமுறை கேடடபினபு, சபையில எலலோரும மௌனமாயிருநதால, அபபொழுது அவன், "பூஜ்யாகளெலலோரும தோஷமிலலாமல சுததராயிருகிறாரகள; ஆகையாலதான அவாகள மௌனமாயிருகிறாகளென்று நிணகிகிறென" எனறு சொலலிப் பினபு அநத ஸ்தவிரன் சபையோரை நோககி, "நீங்கள எனனிடதகில ஏதாவது ஒரு குற்றததைக கண்டாவது கேட்டாவது அறிநதிருநதாலும என்னிடம்பற்றி ஏதாவது உங்களுருசு சநதேகமிருநதாலும அவறறைத் தயைசெய்து வெளிபபடையாக எனகுத் தெரிவிக்கவேண்டும. நான் என் குற்றங்களை யறிநதுகொண்டு அவைகளுகுரிய பரிகாரதைத தேடுகிறென" என்று சொலலி சபையாருடைய அநுமதியைப் பெற்றுககொண்டு சபையை முடித்துவிடுவான. உபவஸதகினதகில சாயங்காலத்துக்குமுன்பு பிக்ஷுக்கள சோநதிருக்குமிடத்திற்கு

உபாஸகர்களும் பிக்ஷுணிகளுமாகிய எல்லோருமவந்து திரிபிடகத்தி லொருபாகமாகிய விநயபிடகத்தைப் பிக்ஷுக்கள் படிகபப் பக்தியுடன கேட்பது வழக்கம். உபவஸததினங்கள் ஆதிகாலத்தில் மாதத்துக்கு இரண்டாயிருந்தன. பின்பு அஷ்டமீதிதிகளையுஞ் சோத்து நான்காக்கி னர்கள். இநத உபவஸதாநுஷ்டாநமும வருஷாகால நியமமும் ஆகிய இவ்விரண்டுமே பிக்ஷுக்களெலலோரும் ஒன்றுயிருநது செய்யவேண்டி யவை. முன்பு கூறிய சீலம் தியானம் பாவநை முதலாகிய, தமமை நல வழிப்படுத்துதற்கு வேண்டியமுயற்சிகளை ஒவ்வொருவரும் தத்தம ஆறி றலுக்கு ஏற்றபடி நடத்திக்கொண்டு வரவேண்டும். புததாபிறநத கபி லவாஸ்துவுக்கும் அவருக்கு ஞாலெதயமான புத்தகயைக்கும் அவா தருமசக்கரப் பிரவர்த்தநஞ் செய்யத்தொடங்கிய இடமான காசிக்கும அவர் பரிநிர்வாணத்தை யடைநத இடமான குசிநகரததுக்கும் பௌத்த பிக்ஷுக்களும பிக்ஷுணிகளும உபாஸகர்களும உபாஸிகைகளும ஆகிய எல்லோரும யாத்திரையாகச செலலுகிற வழக்கமுண்டு. ஸ்தூபங்கள, த்ாதுசைாபங்கள், *சைத்தியாலயங்கள முதலியவற்றில் வழிபடுதலும நித்தியநைமித்திகங்களை நடத்துதலும உபாஸகாகளுகருியவழியென று புத்தா தமமுடைய பரிநிர்வாணத்துககு முன்பு ஆநநதனைகிற சிஷ்ய னுக்குச சொன்னரென்று தெரியவருகிறது.

பெண்பாலாக்கு ஸந்யாஸயோக்கியதை உண்டென்பதும அவர்க ளுக்கு ஸநயாஸத்தைக கொடுப்பதும பௌத்தசமயததிலிதான் விசேஷ மாகவுள்ளனவென்று சொல்லுவதறகிடமுண்டு. இநததேசத்திலுள்ள பிறமதங்களில பெண்பாலாரும வைராகியத்தைப் பாராட்டலாம; அத னால அவர்களுக்கு மேன்மையுண்டென்கிற அபிப்பிராயம இருபபதா கத்தெரியவருகிறது. ஒருவிதமான நியமத்துக்கும உட்படாமல தமமு டைய அந்தக்கரணத்தையே தமக்கு அதிகாரியாக வைத்துகொண்டு ஆசையொன்றுமில்லாமல் தோஷங்களையெல்லாம விட்டசாந்திபெற்று ஸர்வஸ்வதந்திரமான நிலையாகிய ஸந்யாஸவழியில இருபபதறகு இயற் கையானதகுதி பெண்பாலார்க்கு இல்லையென்றும, அநத ஸநயாஸநில மைக்குரிய ஸ்வாதநதிரியத்தைக் குற்றமில்லாமற் பாதுகாத்துவருதறகு அவர்களால் இயலாதென்றும, இததேசயத்தில தொன்றுதொட்டுப் பெரி யோர்கள் அபிப்பிராயங் கொண்டிருநதார்கள். அப்படியிருநதும,புத்தா

* சைத்தியாலயங்கள்—புத்தப்படிமையுள்ள கோயில்கள்; இதனை, "சைத்தி யங்காணிற் றலையினை முட்டும், பைத்தியங் கொண்டவர்" (நீலகேசித்திரட்டு, அரு க்கசங்கிரஹாதச்சருக்கம், உக - ம் பாட்டு:) என்பதனாலும், 'புததப்ரதிமையது ஆல யங்தொழுப' என்னும் அதனுளையாலும், புத்தப்படிமையுசிக்கப்படுதலை, "ஏததின ரேத்துக வென்றிறை போல்வன, பாத்திய பைம்பொற் படிமைசெய் தாலவை, யேத்துகர் பெய்தவ செய்தவர்" (மொக்கலஹாதச்சருக்கம், கூஙு) என்னுஞ்செய்யுளா லும், 'புத்தப்ரதிமைசெய்தார்க்கும் அதுகண்டு உபேக்ஷியாது ஸத்கரித்துப் பூசனை செய்தொழுதார்க்கும் புண்ணியமுண்டு' என்னும் அதனுளையாலுமுணர்க.

தமது செல்வித்தாயின் சொல்லைமதித்தற்கு மன்மில்லாதவராய்ப் பெண் பாலார்க்கும் ஸந்யாஸாதிகாரத்தைக்கொடுத்தார். ஸந்யாஸிகளின் ஸமூதாயத்துக்குப் பிக்ஷுணீஸங்கமென்றும், ஸந்யாஸிகளின் ஸமுதாயத்துக்குப் பிக்ஷுஸங்கமென்றும், இவ்விரண்டன் ஸமுதாயத்துக்கு உபயதா ஸங்கமென்றும் பெயர்.

புத்தர் பிக்ஷுணிகளுக்கு நியமித்த கட்டளைகளெட்டுண்டு:—

க.—பிக்ஷுணியானவள், தான் நூறுவருஷத்துக்குமுன் ஸந்யாஸம் பெற்றவளாக விருந்தாலும், அன்று ஸந்யாஸம் பெற்றுக்கொண்ட பிக்ஷுவைக்கண்டால் கௌரவித்து அவனிவணங்கி எழுந்து நின்று கொண்டு கைகூப்பித் தொழுது பாராட்டவேண்டும். இந்நியமத்தை ஒவ்வொருவருபிக்ஷுணியும் பரிசுத்தமானதாகவெண்ணிக் காப்பாற்றிக் கௌரவித்து வாழ்நாளிலே எப்பொழுதும் கடவாமற்கைக்கொண்டொழுகவேண்டும்.

உ.—பிக்ஷுணியானவள் பிக்ஷுக்களொருவருமில்லாத விடத்தில் மழைக்காலத்தைக் கழிக்கக்கூடாது. இந்நியமத்.....வேண்டும்.

ங.—பிக்ஷுணிகள் பக்ஷத்திற்கொருமுறை பிராதிமோக்ஷாநுஷ்டானமும், தருமோபதேசம்பெறுதலும் ஆகிய இரண்டுகாரியத்துக்காகப் பிக்ஷுக்களினிடம் செல்லவேண்டும். இந்நியமத்.....வேண்டும்.

ச.—வருஷாகாலம் முடிந்தவுடனே, பிக்ஷுணிகள், ஸங்கத்தின் *உபயபாகத்தாரையும் அழைத்து, தம்மிடத்தில் யாரோனு ஏதாவதும் குற்றத்தைக் கண்டிருந்தாலும் கேட்டிருந்தாலும் தம்மிடத்தில் யாருக்காவது ஏதாவதொருவிதமான ஸந்தேகமிருந்தாலும் அவற்றையெல்லாம் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவேண்டும். இந்நியமத்.....வேண்டும்.

ஞ.—பெருங்குற்றம் ஏதாவது செய்திருக்கிற பிக்ஷுணி பக்ஷத்துக்கு ஒருமுறை ஸங்கத்தின் உபயபாகத்தாருடையமுன்னிலையில் அவாகள்விதித்த பிராயச்சித்தத்துக்கு உட்படவேண்டும். இந்நியமத்.....வேண்டும்.

சு.—பெண்பாலார் இரண்டுவருஷகாலம் பஞ்சசீலம், அகாலபோஜநத்தியாகம் ஆகிய ஆறு தருமங்களையுங் கைக்கொண்டொழுகியபின்புதான் தமக்கு ஸந்யாஸத்தைத் தரும்படி ஸங்கத்தின் உபயபாகத்தாரையும் வேண்டிக்கொள்ளலாம். இந்நியமத்.....வேண்டும்.

ஏ—எப்பொழுதும் எவ்விதமான நிலைமையிலும் பிக்ஷுணியானவள் பிக்ஷுவை வைதலும் கடுமொழிகூறலும் ஆகா. இந்நியமத்.....வேண்டும்.

---

* உபயபாகங்களாவன:—ப்ரவ்ரஜ்யை, உபஸம்பதையென்பன.

அ.—(லங்யாவம்பெற்றுக்கொண்ட) அன்றுமுதல் பிக்ஷுணிக்கிட
க்கு விரோதமாகப் பிக்ஷுணிகள் யாதொன்றும் பேசலாகாது. பிக்கி
ணிகளுக்கு எதிராகப் பிக்ஷுக்களின்சொற்கள் அவ்வாறு தடுத்தத்
படா. இந்தநியமத்.....வேண்டும். நான

இந்த எட்டுநியமங்களையும் ஆராய்ந்துபார்த்தால், பௌத்தமதமும
லங்காலத்தால் பெண்பாலார்க்கு ஸ்வாதந்திரியம் அதிகமாகக்கொடுக்
தென்று நிஷேக்க இடமில்லை. பிக்ஷுணிகளுக்கு உபவஸதாநுஷ்டானமை
இன்றியமையாதது; பிக்ஷுணிகளுக்கு உபதேசம் பண்ணவேண்டுகை
பிக்ஷுக்களின் கடமை. சாதாரணமாகப் பிக்ஷுக்களும் பிக்ஷுணிக
ளும் தனித்தனியே யிருக்கவேண்டுமென்ற நிர்பந்தம் உண்டு. பிக்ஷு
ணிகளின் இருப்பிடத்துக்கு, அவர்களுக்குத் தருமோபதேசஞ்செய்தா
சூரிய பிக்ஷுவுங்கூட, எந்தப்பிக்ஷுணிக்
மிருந்தாலொழியப் போகலாகாது. பிக்ஷுணிகளோடுகூட வழிக்கொள்
ளுதலும் ஒரிடத்திற்குச் செல்லுதலும் ஒருவருமில்லாமலிருக்கும்பொ
ழுது அவர்களோடு ஏகாந்தமாகவிருத்தலும் பிக்ஷுக்களுக்குத் தகா
தனவாம். பிக்ஷுக்களின் தினசரியைக்கும் பிக்ஷுணிகளின் தினசரியைக்
கும் மிக்கவேறுபாடில்லை. எந்தக்காலத்திலும் பிக்ஷுக்களைக்காட்டி
லும் பிக்ஷுணிகள் கணக்கிற் குறைவாகவிருந்தார்களென்று தெரிகிறது.

புத்தருடைய காலத்துக்குப் பின்பு பௌத்தமதத்துக்கு மூலாதா
ரம் லங்காந்தான். இப்பொழுதும், பௌத்தமதம் விளங்கிவருந் தேசங்க
ளில் பிக்ஷுக்களே அந்தீமதத்தைப் பாதுகாத்து எல்லோர்க்கும் தரு
மங்களை உபதேசித்துப் பரவச்செய்து வருகிறார்கள். உபாஸகர்களுக்
கும் உபாஸிகைகளுக்கும் சாதாரணமாக எல்லா மதத்தாரும் மதித்துக்
கைக்கொண்டிருக்கிற பஞ்சசீலாநுஷ்டானம் அல்லது அஷ்டசீலாநுஷ்டா
நத்தை யன்றி இவர்கள் பௌத்தர்களென்று எடுத்துக்காட்டக்கூடிய
விசேஷநியமம் ஒன்றும் எப்பொழுதுமேயில்லை. இதனாலேதான், பௌ
த்தசமயம் அதிகமாகச் சங்கத்தைப் பின்பற்றி வளரவேண்டியதாயிற்று.
ஒருதேசத்தில் பௌத்தசங்கத்தைச் சேர்ந்த பிக்ஷுக்களும் பிக்ஷுணி
களும் வேறுமதத்தை யடைந்தால், அத்தேசத்தாரெல்லாரும் பௌத்த
மதத்தை விட்டுவிடும்படிநேரும்.

இதனாலே, பௌத்தர்களுடைய திரிமணியாகிய புத்ததருமசங்கங்
களில் சங்கத்துக்கு உள்ள பெருமையையும் முதன்மையையும் அறிந்து
கொள்க.

# மணிமேகலைக்கதைச்சுருக்கம்.

## க.—விழாவறைகாதை.

பண்டைக்காலத்திற் காவிரிப்பூம்பட்டினத்தை வளப்படுத்த நிலை
ந்த அரசத்தியமுனிவருடைய கட்டளையின்படி, தூங்கெயிலெறிந்த தொ
டித்தோட்செம்பியனென்னுஞ்சோழன், இந்திரனிவணங்கிக் குறையிர
ந்து அவனனுமதிபெற்று இருபத்தெட்டுகாள் அந்நகரில் நடத்தியதும்,
அச்சோழன்காலத்திற்போலவே பிற்காலங்களில் அவன்பரம்பரையோ
ராலும் வருடங்கள்தோறும் நடத்தப்பட்டுவந்ததுமாகிய இந்திரவிழா
வை நடத்தக்கருதிய அந்நகரத்துள்ள பலசமயவாதிகளும் பிறரும் ஒரு
ங்குகூடி, "இந்திரவிழாவை நாம் மறந்தால் முசுகுந்தனது தயரைப்
போக்கியதான கார்த்திகாடிப்பூதம் துன்பஞ்செய்யும்; பாலிகைப் புடை
த்துண்பதாகிய சதுக்கப்பூதம் இந்நகரை விட்டுநீங்கும்; ஆதலால், இவ்
விழாவை நடத்துவேமாக" என்று தம்முள் நிச்சயித்துக்கொண்டு, அவ்
விழா நடக்கப்போதலை நகரத்தாருக்கு அறிவிக்கும்படி முரசறைவோ
னுக்குச்சொல்ல, அவன், *வச்சிரக்கோட்டத்துள்ளமுரசை யானையின்
மிசையேற்றி, முதலில் ஊரைவாழ்த்தி, "மேகம் மாதந்தோறும் மும்
மழைபொழிக; அரசன் செங்கோலினனாகுக. அறிஞர்களே, இந்திரவிழா
நடக்குங்காலத்திற் சுவர்க்கலோகம் வறிதாகும்படி எல்லாத்தேவரும்
அதனைநீங்கி இங்கே எழுந்தருளுவாரென்பது பெரியோர்களுடைய
துணிபாதலால், வீதிமுதலியவற்றிற் பூரணகும்பங்களும்பொற்பாலிகை
களும் பாவைவிளக்குக்களும் ஆகிய இவற்றைப் பரப்புமின்; சூலக்கழு
தும் சூலவாழையும் கரும்பும் வஞ்சிக்கொடியும் பூங்கொடியும் ஆகிய
இவற்றைக் கட்டவேண்டிய இடங்களிற் கட்டுமின்; தூணங்களில் முத்
தாமாலிகளை நாற்றுமின்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழமணலைமாற்
றிப் புதுமணலைப் பரப்புமின்; துகிற்கொடிவகைகளை மாடங்களிலும்
வாயில்களிலும் கட்டுமின்; சிவபெருமான்முதல் சதுக்கப்பூதமிறுதியா
கிய தெய்வங்களுறையுங் கோயில்களிற் செய்யவேண்டிய காரியங்களை
ஏற்பச்செய்யுமின்; தருமோபதேசஞ்செய்ய அறிந்தவர்களே, பத்தரி
யும் அம்பலங்களிலுஞ்சென்று பிரசங்கம்புரிமின்; சமயவாதிகளே,
வித்தியாமண்டபத்தையடைந்து இருத்தற்குரிய இடத்திலிருந்து வாதம்
புரிமின்; யாரிடத்தும் பகைமையும் கோபமும்கொள்ளன்மின்" என்று
கூறி முரசறைந்து இந்திரவிழாவைத் தெரிவித்தான்.

---

* வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதநிற்குங்கோயில்.

## உ.—ஊரலருரைத்தகாதை.

காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா கண்டபெற்றது; அவ்விழாக் காலத்திற் பண்டைவழக்கப்படியே ஆடிதிற்பொருட்டு மணிமேகலையும் *மாதவியும் வாராமையால் மனம்புழுங்கிய †சித்திராபதி, ‡வயந்தமாலை யையழைத்து, "நீ மாதவிபாற்சென்று விழாவிற்கு வாராதிருத்தல பற்றி இவ்வூரார்கூறும் பழிமொழியை அவளுக்குச்சொல்லிவா" என்று அனுப்ப, வயந்தமாலிசென்று மணிமேகலையோடு மாதவியிருந்த மலர் மண்டபத்தையடைந்து, அங்கே தவத்தால்வாடிய மாதவியினுடம்பைக் கண்டு வருத்தமுற்று அவளோநோக்கி, "நீ உன்மகளுடன் இந்திரவிழா விற்குவாராமலும், உன்மரபிற்கு ஒவ்வாத தவவொழுக்கம்பூண்டுமிருத் தல்பற்றி ஊரார்கூறும் பழிமொழிகள் இன்னவை" என்றுகூற, மாதவி, "கணவன் கொலையுண்டதற்குப்பொருளாய் மிகசினந்து மதுரையை யெரித்த பத்தினிக்கடவுளாகிய கண்ணகியினுடைய மகள் மணிமேகலை, தவவழியிற்செல்லுதற்கு உரியளேயன்றி, மிகவுமிழிந்த பரத்தைமைத தொழிலுக்கு உரியளல்லளாதலின், அவள் அங்கேவாராள்; நான் இங் கேவந்து பௌத்தாசாரியராகிய அறவணவடிகளைவணங்கி, என்காதலன் மதுரையிற் கொலையுண்டதுமுதலிய பெருந்துன்பத்தை வருந்திசொ ல்லி முறையிட்டேன்; முறையிட்டனைக்கு அவர்,

§"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றே ருறுவ தறிக" என்றருளி, (சூ - சுவ)

‖பஞ்சசீலத்தையும் உபதேசித்து, "இவற்றைக்கடைப்பிடி" என்றும அருள்புரிந்து, என்னைத் தவவழியிற்புகுத்தினராகலின், நானும் அங்கே வருதற்கு உரியேனல்லேன்; இச்செய்தியை என்தோழிமார்களுக்கும மென்றற்றுய் சித்திராபதிக்குஞ்சொல்" என்றுகூற, அதுகேட்ட வயந்த மாலி, பெறுதற்கரியமாணிக்கத்தைக் கடலில்வீழ்த்தியவர்போலச் செய லற்றுமீண்டு சித்திராபதியிடஞ்சென்றாள்.

---

* மாதவி - மணிமேகலையின்தாய்.

† சித்திராபதி - மாதவியின்தாய்.

‡ வயந்தமாலை - மாதவியின்தோழி.

§ இதில் சால்வகைவாய்மைகளும் கூறப்பட்டுள்ளன; அவை துக்கம், துக்க நிவாரணம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணமார்க்கமென்பன; இம்முறையாலன்றி வேறு முறையாற்சொல்லுவதுமுண்டு.

‖ பஞ்சசீலங்களாவன:—கொல்லாமை, கள்ளுண்ணுமை, பொய்யாமை, காம மின்மை, கள்ளாமையென்பன.

## கட்—மலர்வனம்புக்ககாதை

இங்கே மாதவி வயந்தமாலைக்குச்சொல்லிய வருத்தச்சொல்லைக் கேட்ட மணிமேகலைக்கு அக்கேள்விவழியாகப் பற்றறுதற்குரிய நற்காலம் (ஏதுநிகழ்ச்சி) வந்துற்றமையால், அவள், தன்னுடைய தாய்தந்தைகளான கண்ணகிக்கும் கோவலனுக்கும் மதுரையில்நேர்ந்த துயரச்செய்தி தன்காதுகளேசுட மணங்கலங்கி அழுது சிந்துகின்றகண்ணீரால் தான் தொடுக்கின்றமாலையை நனைத்துக்கொண்டிருப்ப, மாதவி, அதனைக்கண்டு கண்ணீரைத்துடைத்து அவளுடையதுக்கத்தை ஒருவகையாக மாற்ற நினைந்து, "இம்மாலை உன்கண்ணீர்க்கலப்பால் தூய்மையொழிந்ததாதலின், வேறுமாலைதொடுத்தற்கு நீ சோலைசென்று புதுமலர்பறித்துவா" என்றாள்.

அதனைக்கேட்ட சுதமதி, மாதவியைநோக்கி, "தாய்தந்தையர்க்குச் சம்பவித்த பெருந்துன்பத்தைக்கேடு மிக்க துக்கத்தையடைந்த மணிமேகலையின் கண்ணீரைக்காணிற் காமன் தனது படைக்கலங்களை எறிந்துவிட்டு நடுங்குவான்; இப்பாவையை ஆடவர் புறத்தே காண்பாராயின், விட்டுநீங்குவாரோ? நீங்கார்; இயற்கைத்தன்மைகுன்றுவர்; குன்றுமல் நிற்பாராயின், அவரகள் பேடியரன்றே? அத்தன்மையள்ளாதலால், இவளை இப்பொழுது வெளியில் பூப்பறித்தற்குத் தனியே அனுப்பலாகாது; இந்நகரத்தில் நான்வந்ததற்குரிய காரணங்கூறுவேன்; கேட்பாயாக: சண்பைநகரத்துள்ளானை கௌசிகனென்னும் அந்தணனுடையமகளாகிய யான், தனியேசெல்லுதற்கு அஞ்சாமல் ஆராய்ச்சியின்றி ஒரு சோலையிற்சென்று பூப்பறித்தேன்; அப்பொழுது இந்திரவிழாவைக்காண்டற்கு இந்நகரைநோக்கி ஆகாயவழியேவரும் மாருதவேகனென்னும் வித்தியாதரனொருவன் என்னைக்கண்டு எடுத்துக்கொண்டு மேலேசென்று, தன்வயமாகஞ்சில நாள்கழித்தபின் இந்நகரத்தே என்னைவிட்டுவிட்டு நீங்கித் தன்னகரம்போயினன்; மகளிர் தனியேசெல்லுதலாலுண்டாகுந்தீங்கு இத்தன்மையது; ஆதலால், மணிமேகலை தனியே போய்ச் சோலையிற் பூப்பறிக்குந்தன்மையையுடையாளல்லள்; இவளுடன் யாரேனுஞ்செல்லவேண்டும்; *இலவந்திகைச்சோலைக்குச்சென்றால் அரசனுடைய பக்கத்திலுள்ளார் அங்கிருப்பர்; †உய்யானத்திற்குச் செல்லலாமோவெனின், அதில் தேவர்களாலன்றி மனிதர்களால் விரும்பப்படாதனவும் வண்டுகள் மொய்க்கப்பெறுதனவுமான மலர்களோடுகூடிய மரங்களெல்லாம் வாடாத பூமாலைகளைத்தூக்குதலால், "இவ்வனம் பாசிக்கையை

---

* இலவந்திகைச்சோலை – யந்திரவாவியையுடைய வயந்தச்சோலை.

† உய்யானம் – அரசர் விளையாடுங்காவற்சோலை.

யுடைய பூதங்களாற் காக்கப்படும்" என்றுநினைந்து அவ்வனத்தை அமிழுடையோர் அடையார்; சூரியகிரணத்தாற் சிறையிழந்த சம்பாதியிருந்த சம்பாதிவனமும், காவிரியின்தந்தையாகிய கவேரனிருந்த கவேரவனமும் மிக்கமுதுமையையுடையனவும் தீண்டிவருத்துவனவுமாகிய தெய்வங்களாற் காக்கப்படுதலின், அவற்றினிடத்தும் அமிழுடையோர் செல்லார்;

அருளு மன்பு மாருயி ரோம்பு
மொருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பக — — —

## ச.—பளிக்கறைபுக்ககாதை.

மாளிகைகளில் எழுதப்பட்டுள்ள சித்திரங்களைக்கண்டு வியந்துநிற்கும் சனங்களும், சிறுதேரின்மீது செய்துவைக்கப்பட்டுள்ள யானையின்மேற் சிறுவர்களேயேற்றி மகளிர் பாராட்டுதலைக் கண்டுநிற்கும் சனங்களும் ஆகிய எல்லோரும், முன்னம் விராடநகரத்திற் பேடிவடிவங்கொண்டு சென்ற அருச்சுனனைக்கண்டு வியந்து சூழ்ந்துகொண்டவர்களைப்போல மணிமேகலையைச் சூழ்ந்துகொண்டு, "மிக்க அழகையுடைய இவளைத் தவவழியிற்புகுத்திய தாய் மிகக்கொடியவள்; இவள் பூப்பறித்தற்குச் சோலையிற் புகுவாளாயின், ஆங்குள்ள அன்னப்பறவைகள் முதலியன இவள் நடைமுதலியவற்றைக்கண்டு என்னபாடுபடா" என்று இவை போல்வனவற்றைச் சொல்லி அவளுடைய அழகைப் பாராட்டிக்கொண்டு மிகவும் வருந்தி நின்றனர்; மணிமேகலை, சுதமதியோடு மெல்லச் சென்று உவவனத்தில் மலர்கொய்தற்குப் புகுந்தாள்.

## ஞ.—பளிக்கறைபுக்ககாதை.

புகுந்தவள், அச்சோலையின்வளங்களையும் ஆங்குள்ள பொய்கையினழகையும் சுதமதிகாட்டக் காண்பாளாயினள்.

அவள் அங்கே அப்படியிருக்க, மதவெறிகொண்டு தெருத்தோறும் சனங்களை வருத்தித் திரிந்ததான காலவேகமென்னும் யானையின் மதத்தையடக்கித் தேரோடிச் சேனையுடன்வரும் உதயகுமரன், நாடகக்கணிகையர் வீதியில் ஒரு மாடத்தே மலரணைமேற் காதற்பரத்தையொருத்தியோடு, யாழின்கோட்டைத்தழுவிக்கொண்டு மயங்கிப் பாவை போலிருந்த எட்டிகுமரனைத் தெருப்பக்கத்துள்ள சாளரவழியாற் கண்டு, "நீ அடைந்த துன்பம் யாது" என்றான். உடனே அவன் துணுக்கென்றெழுந்து விரைந்து அருகேசென்று உதயகுமரனை வணங்கித் துதித்து, "இயற்கையழகுகெட்டு மலர்வனத்திற்கு இவ்வீதிவழியே நடந்துசெல்லும் மணிமேகலையைக் கண்டேன்; கண்டவுடன் அவளது தந்தையாகிய கோவலன் மதுரையிலடைந்த கொடுந்துன்பம் நினைவிற்கு வந்து என்மனத்தின்மையைமாற்றி இந்த யாழிலுள்ள பகைநரம்பில் என்கையைச் செலுத்தியது; இதுவே நான் அடைந்தவருத்தம்" என்று சொல்ல, பலநாளாக மணிமேகலையை விரும்பிக்கொண்டேயிருந்த உதயகுமரன், அவன்சொல்லால், அவள் சோலைசென்றுளென்பது தெரிந்து மகிழ்ந்து, "அங்கேபோய் மணிமேகலையை என் தேரிலேற்றிக்கொண்டு வருவேன்" என்று அவனுக்குச் சொல்லிவிட்டுத் தேரைச் செலுத்திக் கொண்டு சென்று உவவனத்தின் மதில்வாயிலையடைந்தான்.

மணிமேகலை அத்தேரொலியைக்கேட்டுச சுதமதியை நோக்கி, "உதயகுமரன் என்மேல் மிக்கவிருப்பமுடையவனென்று மாதவிக்கு

வயந்தமாலை சொல்லியதை முன்னங்கேட்டுளேன்; இஃது அவனுடைய தேரொலிபோலும்; இத்தன்பத்திற்கு யாதுசெய்வேன்" என்றாள்; அதைக்கேட்ட சுதமதி, அவளை ஆங்குள்ள *பளிக்கறையிற் புகுத்தித் தாமக்கோலிட்டுக்கொண்டு உள்ளேயிருக்கசெய்துவிட்டு, தான் அப்பளிக்கறைக்கு ஐந்துவிற்கிடைத்தூரத்தே நின்றாள்; அங்ஙனநின்ற சுதமதியைச சோலையினுள்ளேவந்த உதயகுமரன் கண்டு, "யாருமிலலாத இவ்விடத்தே நின்றாய்; நீ மணிமேகலையுடன் வந்தாயென்று அறிந்து கொண்டேன்; அவள் †முதுக்குறைவுற்றனளோ? அவளுடைய செவ்வாய் நகைத்தலைப்பெற்றதோ? கண்கள் பிறழ்ந்து உலாவி வேட்கையைப் புலப்படுத்துமோ? அவள் பௌத்தசங்கத்தாரிருப்பிடத்தை நீங்கி இவ்விடம்வந்ததற்குக் காரணம யாது? சொலவாய்" என்று தனது வேட்கைதோன்ற வினவினன்.

அப்பொழுது சுதமதி, வாயிலில்லாத அறையில அகப்படோ போல மனம்வருந்தி, "இளமைப்பருவததிலேயே முதுமைவேடம் பூண்டு வழக்கைக்கேட்டு உணமையை வெளிப்படுதிய சோழன்கரிகாற்பெருவளத்தானுடைய வழித்தோன்றலே, நீ ஆண்டில் இளையையாயினும் அறிவில் முதியாயன்றே? உனக்கு மகளிர தெரிவித்தற்குரியனவும் உளவோ? இலவே; ஆயினும் ஒன்று தெரிவிப்பேன்; கேட்டருளுக:—

வினையின் வந்தது வினைக்குவினை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூத்தவிளி வடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய் (சகசு - கடக).

என்று உடம்பினியல்பைக்கூறினள்; அவள் இங்ஙனங்கூறிய இனிய வார்த்தை உதயகுமரனதுகாதை அடையுமுன்னே பளிக்கறையுள்ளேயிருந்த மணிமேகலையினுருவம் அவன் கண்ணுக்குத் தோற்றியது.

## ரு.—மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை.

தோற்றியவுடன் அவ்வடிவத்தை மணிமேகலையின் வடிவமென்று நிச்சயித்து அப்பளிக்கறையினுள்ளே சென்றடைதற்கு நினைந்த உதயகுமரன், அதன்வாயில் காணப்படாமையால் அஃது இன்னவிடத்திலுள்ளதென்பதை அறிந்துகொள்ளுதற்குப் பளிக்குசசுவரைக் கையால் த—

* பளிக்கறை - படிகத்தாலாகிய அறை.
† முதுக்குறைவு - பேரறிவு.

விக்கொண்டு சூழ்ந்துவந்தான்; வந்தவன் சுதமதியைப்பார்த்து, "மணி மேகலை எத்திறத்தினள்? சொல்" என்றான்; என்றவனுக்குச் சுதமதி, "அவள் தவவொழுக்கமுடையள்; குற்றஞ்செய்தாரைச் சபிக்கும்வன்மை யையுமுடையள்; சிறிதும காமவிகாரமில்லாதவள்; ஆதலின், நீ அவளை விரும்புதல் தக்கதன்று" என்று கூறினள்; கூறவே "அவள் எத்தன்மை யளாயினும ஆகுக; எப்படியும் எனக்கு உரியளாகக்கடவள்" என்று சொல்லிக்கொண்டுசெல்பவன், மீட்டும் சுதமதியைப்பார்த்து, "துறவொ ழுக்கம்பூண்ட சமணமாதர்களின்நடுவே ஒரு வித்தியாதரனுல் இடப்பட் டாய்" என்று எல்லாராலுங்கூறப்படும் நீ அவளைநீங்கிப் பௌத்தசங்கத் தைச்சார்ந்த மாதவியின் மகளுடன் வந்ததற்குக் காரணம் யாது? சொலலுவாய்" என்றான்.

அதுகேட்ட சுதமதி, "அரச, யான் சண்பைநகரத்துள்ள கௌசிக னென்னும் அந்தணனுடையமகள்; என் இளமைப்பருவத்தில் அன்னை யிறந்தாள்; அவளிறந்தபின்பு தந்தையால ஆதரிக்கப்பட்டுவந்த நான் ஒருசோலையிறசென்று தனியேயின்று பூக்கொய்கையில் என்னை விரும்பி ஆகாயத்தே எடுத்துசென்று தன்வயமாக்கிக்கொண்ட வித்தியாதரனெ ருவனுல் இடப்பட்டு இரங்கரத்திருந்தேன்; இதையறியாத என் தந்தை என்னைக்காணமல வருந்தித தேடிக்கொண்டே கன்னியாகுமரியாற்றி ற்கு நீராடசெலபவர்களோடு சென்றான்; செல்லுகையில் இடையிலுள ளதான இரங்கரச *சங்கமுகத்துறையில நீராடுதற்கு அந்தணர்களோடு வந்து என்னை இரங்கரிற்கண்டு, "நீ இங்கே எப்படிவந்தனை" என்று சொலலி வருந்தி அந்தணாகளோடிருத்தற்கு நான் தகுதியில்லேனுயி னும என்னிடத்து மிக்க அன்புடையவனுதலின், அவன் என்னைக் கைவி டாதவனுகி மணிகடோறும பிசையெடுத்துண்பித்துத் தானுமுண்டு பொழுதுகழிபபானுயினன்; அபபடியிருக்கையில், ஒருநாள், அவன் பிச சையெடுத்தற்குச்செலலுமபொழுது இளங்சன்றையுடைய ஒருபசு அவ னைமுட்டி வயிறறைகிழித்துவிட்டது; அதனுல சரிந்தகுடலைக் கையி லேந்திக்கொண்டு, நானிருந்தவிடமென்று முன்பு அறிந்தவனுதலால் †சமணப்பள்ளியிற்புகுந்து, "முனிவர்களே, யான் உங்களடைக்கலம்; என்னைப் பாதுகாக்கவேண்டும" என்று முறையிட்டான்; அதைக்கேட்ட அவர்கள் சினந்து அவனை என்னுடனும் புறத்தே ‡தள்ளிவிட்டனர்; நாங்க ளிருவரும் மிக்கதுக்கமுடையவர்களாய்ப் புறவீதியிற்சென்று, "கதியற்ற எம்மைப் பாதுகாக்கும் அறவோர் யாரேனுமுண்டோ?" என்று புலம்பி

* சங்கமுகத்துறை – காவிரி கடலொடுகலக்குந்துறை.

† சமணப்பள்ளி – சமணமுனிவர்கள் தங்குவதற்காக அமைந்த இடம்.

‡ தள்ளிவிட்டனரென்றதனுல், சமணமுனிவருடைய இரக்கமின்மை கூறினள்.

முறையிட்டேன்; அப்பொழுது, மணிகடோறுஞ்சென்று யமமெனக்கு பாத்திரத்தையேந்திய கையையுடையவனும் முழுமதிபோன்ற முகத னனும் பொன்னிறமுள்ள *சிவரவாடையனுமாகிய சங்கதருமனென்ற முனிவன் விரைந்துவந்து, "என்னதுன்பமடைந்தீர்கள்?" என்று எம்மை அருளுடன்பார்த்து இனியமொழிகளைக் காதுகளில்நிறைத்து எம்மனத் தைக்குளிர்வித்து உடனே தன்கையிலுள்ள பிச்சைப்பாத்திரத்தை என் கையிற்கொடுத்துவிட்டு என்தந்தையின்துன்பம் முற்றும்நீங்கும்படி அவ னைத்தழுவியெடுத்துக்கொண்டு சென்று பௌத்தசங்கத்தாரிருப்பிடத் தைக்காட்டி என்றந்தையின் †மரணத்துன்பத்தையும் நீக்கினான்; அம் முனிவன் எனக்குச் செவியறிவுறுத்திய (பாதம்)

எங்கோ னியல்குண னேதமில் குணப்பொரு
ளுலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள
னின்பச் செவ்வி மன்பதை யெய்த
வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறக்கதி ராழி நிறப்பட வருட்டிக்
காமற் கடந்த வாமன் (எச - எஎ.)

பாதங்களேயே என்னுடைய சரணாவது இடைவிடாமற் பாராட்டுமேயல் லாமல் வேறொன்றையும் சொல்லவறியாது; அதுமுதல், பௌத்தசங்கத் தைச்சார்ந்திருந்த மாதவியிடத்தில் உறைவேனானேன்; அதனால் இவளு டன்வந்தேன்" என்று கூறினள்; அதுகேட்ட உதயகுமரன், "உனதியல் பை அறிந்துகொண்டேன்; மணிமேகலையைச் சித்திராபதியால் இனிச் சேர்தலுங்கூடும்" என்று சொல்லிவிட்டுக் காமபரவசனுய் அச்சோலையி னின்றும் போயினன்; போனவுடன் மணிமேகலை பளிக்கறையினின்றும் வெளியேவந்து சுதமதியைநோக்கி, "அன்பிலனென்றும் தவவுணர்ச்சியில் லாதவனென்றும் வருணக்காப்பிலனென்றும் விலோமாதென்றும் என்னை இகழ்ந்தானென்று நினையாமல், உதயகுமரன்பின்னே என்னுடைய நெஞ்சமானது செல்லுதலுற்றது; இதற்குக் காரணம் யாது? காமத்தி னியல்பு இதுவோ" என்று சொல்லிக்கொண்டுநின்றுள்; நின்றபொழுது, வந்து இந்திரவிழாவைக் காணுதலுற்ற மணிமேகலாதெய்வம், அவர்க ளுக்குத்தெரிந்தவளும் மாயவித்தைசெய்பவளுமாகிய ஒரு மடந்தைவே டம்பூண்டு அச்சோலையையடைந்து பளிக்கறையிலுள்ள ஸ்ரீபாதபீடிகை யை வலங்கொண்டு உயர எழும்பிநின்று,

"புலவன் றீர்த்தன் புண்ணியன் புராண
னுலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ

---

* சிவரவாடை - மருதந்துவர்நீரில்தோய்த்த பௌத்தபிக்ஷுக்களின் வஸ்திரம்.

† மரணத்துன்பத்தையும் நீக்கினனென்றதனும் பௌத்தமுனிவனுடைய அரு

## கூ.—சக்கரவாளக்கோட்டமூலைக்கதை

குற்றஞ் செடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ
காமந் கடந்தோ யேம மாயோய்
தீவெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
வாயிர வரத் தாழியன் றிருந்தடி
நாவா யிரமிலே னேத்துவ தெவன்" (சுஅ - கஅடு)

என்று துதிக்கத்தொடங்கியது. இங்ஙனந்துதித்துக்கொண்டிருக்கையிற் பகற்காலநீங்க அந்திமாலை வந்தது.

## கூ.—சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை.

வந்த அந்திமாலைப்பொழுது நீங்க, சந்திரன் உதயமாயினன்; மணிமேகலாதெய்வம், மீட்டும்,

ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்
பாத பீடிகை பணிந்தன னேதகு, (கக - கஉ)

அங்கே வாடிநின்ற சுதமதியைப்பார்த்து, "நீங்கள் இங்கேநின்றதற்குக் காரணம யாது? என்னதுன்பமடைந்தீர்கள்?" என்றுகேட்க, சுதமதி உதயகுமரன் மணிமேகலையைவிரும்பிச சொல்லிய சொல்லையும், பின்பு சந்திராபதியால் அவளைப் பெறலாமென்று அவன் எண்ணிச்சென்றதையும கூறினள்; கூறலும், அத்தெய்வம, அவளைப்பார்த்து, "உதயகுமரனுக்கு மணிமேகலைபாலுள்ள ஆசை சிறிதும் தணிவுற்றிலது; 'இது முனிவர்களுடைய தவவனம்; இதில யாம தீங்குசெய்யலாகாது' என்றெணணியே அவன் இசசோலையைநீங்கினன்; இவள் இதனைக்கடந்துசெல்வளாயின், புறவீதியில் அவன் இவளை அகப்படுத்திக்கொள்ளுதல் சரதமே; நீங்கள் இசசோலையைசூழ்ந்த மதிலின் மேற்றிசைக்கண்ணதாகிய சிறியவாயில்வழியேபோய் முனிவர்களுகிருப்பிடமாகிய சக்கரவாளக்கோட்டத்திறசெலலுக; சென்றால, ஒருபொழுதும் யாதொருதுன்பமும் அணுகாது" என்றுசொல்லியது; சொல்லலும, சுதமதி, "மாருதவேகனும நீயுமே அதனைச சக்கரவாளக்கோட்டமென்று சொல்லுவீர்; மற்றையோர்யாவரும் சுடுகாட்டுக்கோட்டமென்றே சொல்லாநிற்பர்; சக்கரவாளக்கோட்டமென்றதற்குக் காரணம்பாது? அதனைச் சொல்லுக" என்றாள்.

என்றலும், அத்தெய்வம், "காவிரிப்பூம்பட்டினம்தோன்றியகாலத்தே உடன்றோன்றியதான சுடுகாடு இசசோலையின் பக்கத்தேயுள்ளது. அது, நாற்புறத்தும வாயில்களையுடைய மதிலாற்சூழப்பட்டது; காளிகோட்டத்தையும, அருந்தவர் அரசாணைவணிறக்க உடனேயிறந்தமடவார் ஆகிய இவர்களுள் இன்னாரின்னார் இன்ன இன்னவிடத்தே புதைக்கப்பட்டாரென்பதற்கு அறிகுறியாக அவரவர்களுடைய வருணம் ஆச

சிரமமுதலியவற்றிற்கும் அவரவர்களுடைய தகுதிக்குமேற்பச் சிறிதும் பெரிதுமாகப் கட்டப்பட்டுள்ள பற்பலகோட்டங்களையும், மயானதெய்வங்களுக்குப் பலியிடுதற்குரிய தூண்களையும், கற்களைநிறுத்திசெய்யப்பட்டுள்ள திண்ணைகளையும், காவற்காரர்உண்பதற்கும் உறங்குவதற்கும் அமைந்துள்ள குடிசைகளையும், தோரணங்களையும், பந்தர்களையுமுடையது; பிணங்களைச் சுடுதற்கும் சும்மாபோடுதற்கும் குழியிற்புதைத்தற்கும் உள்ளேவைத்து வாயிலடைத்தற்கும் தாழியாற்கவித்தற்குமாக இரவும்பகலும் வருபவர்களுடையவோசையும், அங்ஙனம் வந்துசெல்பவர்களுடைய ஓசையும், சாப்பறைகளினோசையும், இறந்ததறவிகளைத் தொழுபவரோசையும், மற்றையோர்பொருட்டு அழுபவரோசையும், கழியின் கூக்குரலோசையும், செத்தோரையழைக்கும் பேராந்தைகளினோசையும், கோட்டானுடையகுரலும், ஆண்டலைப்பறவைகளின் குரலும் அம்மயானத்தில் மிகுதியாகவுண்டு; தான்றி ஒடுவை உழிஞ்சில் கான்றை சூரை கள்ளிமுதலிய பற்பல மரவிசேடங்களும் அங்கே அடர்ந்துள்ளன; பேய்கள்நெருங்கியுள்ள வாகைமரம்நிற்கும் மன்றங்களையுமநிணத்தோடு இறைசெங்கைத்தின்று மகிழ்ந்து பறவைகள் தங்கியுள்ள விளாமரம்நிற்கும் மன்றங்களையும், காபாலிகசமயத்தோர் வாழும வன்னிமரம்நிற்கு மன்றங்களையும், விரததாலிகளைத்த உடம்பையுடையசிலர் உடைந்ததலைகளை மாலையாகக்கட்டிய இலந்தைமரம்நிற்கும் மன்றங்களையும், பிணங்களைத்தின்போர் களித்துவாழும் வெளியான இடங்களையுடைய மன்றங்களையும் அம்மயானம் உடையது; நெருப்பிருந்தபாண்டங்களும் மண்டைகளும் பாடைகளும் அறுத்தெறிந்த மாலைகளும் உடைந்த குடங்களும் நெற்களும் பொரிகளும் சிறுபலியாக இடப்பட்ட அரிசிகளுமளங்கும் பரவப்பெற்றது;

தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வ
நீற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்
மூதியோ ரென்ன னிளையோ ரென்னன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய்ச் சுடலை தின்னைக் கண்டுங்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாத வாழ்
மக்களிற் †சிறந்த மடவோ ருண்டோ? (சுஎ - கூச).

இத்தன்மையதான அச்சுடுகாட்டைப் பார்ப்பனச்சிறுவனுகிய சார்ங்கலனென்னும் ஒருவன் ஒருநகரமாக நினைந்து அதில் தனியேசென்று அங்கே களித்தாடிய பேயொன்றைக் கண்டு அஞ்சி அதனால் தாக்கப்

---

* மண்டை - கபாண்டவிசேடம்.

† சிறந்த - மிருந்த.

பட்டுக் கதறிக்கொண்டு ஓடித் தனது தாயாகிய கோதமையையடைந்து, "சுடலையிலுள்ளபேய்க்கு என்னுயிரைக்கொடுத்தேன்" என்று சொல்லி அவள்முன் வீழ்ந்து இறந்தான்; உடனே கோதமை, "முதுமைப்பருவ மடைந்ததனால்த பாப்பானும் யானும் கண்ணிழந்துள்ளேமென்பதை யும் வேறுபுகலிலலேமென்பதையும் நினையாமல் எங்கள் மைந்தனுடைய உயிரையுண்டது அணங்கோ! பேயோ! அறிகிலேனே" என்று புலம்பிக் கொண்டு தன் அருமைப்புதல்வனுடைய உடம்பையெடுத்து மார்போடு தழுவிச்சென்று சுடுகாட்டைச் சூழ்ந்த மதில்வாயிலை யடைந்துநின்று, "*சமபாபதி, ஈரத்துறைகளிலும் மன்றங்களிலும் பழைய மரவடிக ளிலும் கோட்டங்களிலும் வேற்றிடங்களிலுமிருந்து யாருக்கும் எந்தச் சமயத்தும் யாதொருதீங்கும் அணுகாவண்ணம் பாதுகாத்தருளும் நீ என்மகனைக் காவாதொழிந்ததற்குக் காரணம யாது? நின்பால நடுவு நிலைமையில்லையோ; இனி யான் என்செய்வேன்" என்று வருந்தி முறை யிட்டாள்.

முறையிடவே சம்பாபதிவந்து, "இவ்விரவில் இம்மயானத்திற் பேய் கள் போக்குவரவுசெய்யும் வாயிலில் நின்று மிக்க வருத்தமடைந்து நீ என்னை அழைத்ததற்குக் காரணம யாது? சொல்வாய்" என்ன, கோ தமை நிகழ்ந்ததைக் கூறினள்; சம்பாபதி, "உன் மகனுயிரை அணங்கும் பேயும கவர்ந்தில; அவனுடைய அறியாமையையே பற்றுக்கோடாகக் கொண்டு இழவுசேழ அவனுயிரைக் கவர்ந்து சென்றது" என்று கூறினள்; கூறலும், கோதமை, "என்னுயிரை வாங்கிக்கொண்டு இவனுயிரை நீ தந்தருள்வாயாயின், இவன் கண்ணற்ற தந்தையைக் காத்தளிப்பான்; ஆதலால், அங்ஙனம் செய்தருள்வாயாக" என்று வேண்டினள்; சம்பா பதி மனமிரங்கி, "உயிர உடமபைவிட்டுநீங்கின் அது வினைவழியேசென்று வேறுபிறப்பை யடையாநிற்குமு; இதில் ஏதேனும் யியமுண்டோ? போனவுயிரை மீட்டளித்தல் என்னல் இயலுங்காரியமன்று; ஆதலால், மகன் இறந்ததுபற்றி நீ இரங்காதே;

> உலக மன்னவர்க் குயிர்ச்குயி ரீவோ
> நிலரோ விந்த வீமப் புறங்காட்
> டரசர்க் கமைந்தன வாயிரங் கோட்டம்
> நிரயக் கொடுமொழி நீயொழி" என்றலும், (ககூச - ககஎ).

கோதமை, "கேட்ட வரங்களையெல்லாம் தேவா தருவாரென்று நூல் கள் கூறுநிற்கும்; ஆதலால், யான் கேட்ட இவ்வரத்தை நீ தந்தருள்க; தாராயாயின், இவ்விடத்தில் இப்பொழுதே என்னுயிரைத் துறப்பேன்" என்று சொன்னுள்; சொல்லலே சமபாபதி, "நீ சொல்லியபடியே இச்

*சம்பாபதியென்பது காவிரிப்பூம்பட்டினத்து அதிதேவதையின்பெயர்.

*சக்கரவாளத்துள்ள தேவர்களில் யாரோனும் நீ கேய்ட வரத்தைக் கொடுப்பாருளராயின் யானும் அதனைக் கொடுக்கும் உரிமையுடையேனுவேன்; என் ஆற்றலைக் காண்பாயாக" என்று சொல்லிவிட்டு, †நான்குவகை அருவப்பிரமகணங்களையும் பதினுறுவகை உருவப்பிரமகணங்களையும் இருசுடர்களையும் ‡அறுவகைத் தெய்வகணங்களையும் பலவகை அசுரகணங்களையும் §எண்வகை நரகர்களையும் பல விண்மீன்கூட்டங்களையும் அச்சுவினிமுதலிய இருபத்தேழு நாட்களையும் கோட்களையும் தனக்குள்ளே அடக்கிக்கொண்டிருக்கும இச்சக்கரவாளத்தில் வரங்கொடுக்கும் வன்மையையுடைய தேவராகளையெல்லாம வருவித்துக் கோதமைக்குமுன்னே நிறுத்தி, "இவளுடையவருத்தத்தைக் கெடுத்திடுவீராக; இவளடைந்த வருத்தம் இதுவாகும" என்று நிகழ்ந்தவற்றைச்சொல்ல, அத்தேவர்கள் சம்பாபதி கூடியவாறே கூறிமுடித்தார்கள்; அதனைக்கேட்டு உண்மையறிந்து ஒருவாறு வருத்தமொழிந்தகோதமை தன்மகளைச சுடுகாட்டிற் சேர்த்துவிட்டு இறந்துபோயினுள்.

அப்பால், சம்பாபதியின் வன்மையை யாவருக்கும் புலப்படுத்த வேண்டி, எல்லாத்தேவர்களும் கூடியவிடத்து அவர்கள் கூடியதற்கு அறிகுறியாக, இவ்வுலகின் நடுவேயுள்ள மேருமலையும அதனைச் சூழ்ந்த ஏழுமலைகளும் நான்கு பெருந்தீவுகளும் இரண்டாயிரஞ சிறுதீவுகளும் மற்ற இடவிசேடங்களுமாகிய இவற்றைப்புலப்படுத்தி ஆங்காங்கு வாழ்பவர்களுடைய உருவங்களையும்வகுத்து மயனுல் நிருமிகரப்பட்டதாதலின், இது சக்கரவாளக்கோட்டமெனப் பெயர்பெற்றது; இது சுடுகாட்டைச் சூழ்ந்த மதிலின்புறத்தேயுள்ளதாதலாற் சுடுகாட்டுக்கோட்டமென்று எல்லாராலுங் கூறப்படும; இதன் வரலாறு இதுவாகும்" என்றுசொல்லக் கேட்டுக்கொண்டிருந்த மணிமேகலை, "மனிதர் வாழ்க்கை இத்தன்மைத்து" என்றுசொன்னுள். அவள் அங்கே அப்படியிருக்கையில், சுதமதி தூங்குதலுற்றனள்; அப்பொழுது அத்தெய்வம் தன்வித்தையால் மயக்கி மணிமேகலையைத் தழுவியெடுத்துக்கொண்டு ஆகாயவழியே மூப்பதுயோசனையளவு தெற்கேசென்று கடல்சூழ்ந்த மணிபல்லவமென்னும் சிறு தீவையடைந்து அதில் அவளைவைத்துவிட்டுச்

* எல்லா வுலகங்களையும் தன்னுள அடக்கிக்கொண்ட கோளத்தைச் சக்கரவாளமென்றல் பௌத்தநூல்வழக்கு.

† பிரமகணங்களே இயலுலகம் வருத்தக்கூறுதல் பௌத்தநூல் வழக்கு; மணிமேகலைப் புத்தகத்தின் கூ - ம் பக்கம் பார்க்க.

‡ அறுவகைத் தெய்வகணங்கள் தங்கும் உலகங்களின்பெயரை மணிமேகலைப் புத்தகத்தின் உ - ம் பக்கத்திற் பார்க்க.

§ எண்வகை நரகருடைய இருப்பிடங்களின் பெயரை மணிமேகலைப் புத்தகத்தின் சுசு - ம் பக்கத்திற் பார்க்க.

## எ.—துயிலெழுப்பியகாதை.

சென்ற மணிமேகலாதெய்வம், "விடிந்தால் மணிமேகலையை எப்படியும் நான் அகப்படுத்திக்கொள்வேன்" என்று எண்ணிக்கொண்டு காம பரவசனுய்த் துன்பமுற்றுத் தூங்காமலேயிருந்த உதயகுமரன் முன்னே சென்று, அவன்காண நின்று,

> "..... ..... .... மன்னவன் மகனே!
> கோளிலே திரிந்திடிற் கோணிலே திரியும்
> கோணிலே திரிந்திடின் மாரிவறங் கூரும்
> மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லே
> மன்னுயி ரெல்லா மண்ணுள் வேந்தன்
> றன்னுயி ரென்னுந் தகுதியின் ருகும்
> தவதிறம் பூண்டோ டன்மேல் வைத்த
> வவத்திற மொழிக." (எ - கச).

என்று அவனுக்குச சொல்லிவிட்டுப் பின்பு உவவனஞ்சென்று அங்கே தூங்குகின்ற சுதமதியையெழுப்பி, "யான் மணிமேகலாதெய்வம்; இந்நகரில் நடக்கும் இந்திரவிழாவைக்காணுதற்கு வந்தேன்; நீ அஞ்சாதே; பௌத்தசமயவழியே செல்லுதற்குரிய நற்காலம மணிமேகலைக்கு உண்டாயிற்று; ஆதலால், அவளே எடுத்துக்கொண்டுசென்று மணிபல்லவத்தில் வைத்தேன்; தன்னுடைய முற்பிறப்பிலநிகழ்ந்த செய்தியையும் அறிந்துகொண்டு அவள் இற்றைக்கு ஏழாவதுநாளில் இங்கே வந்துசேருவாள். இந்நகரில் வேறுவடிவங்கொள்வாளாயினும் அவள் உனக்கு ஒளிப்பாளல்லள்; அவள் இங்கே புகும்நாளில் இந்நகரின்கண்ணே பலஅற்புதங்கள் நிகழும்; நான்வந்ததையும மணிமேகலை நல்லவழியிற்சென்றதையும மாதவிக்குச் சொல்வாயாக; அவள் முன்னமே என்னேயறிவாள்; கோவலன், 'நமது குலதெய்வத்தின்பெயரை இக்குழந்தைக்கு இடுக' என்றுசொல்லி, என்பெயரை இவளுக்கு (மணிமேகலைக்கு) வைத்தநாளின்இரவில் மாதவியின் கனவிற்சென்று, "காமன் செயலற்று ஏங்கும்வண்ணம் ஆசையை முற்றக்கெடுக்கும் தவமாதைப்பெற்றாய்" என்று நனவிற்கூறுவதுபோல யான் கூறியதுண்டு. இதனேயும் அவளுக்கு நினேப்பூட்டுவாயாக" என்று கூறிப்போயிற்று.

அப்பாற் சுதமதியெழுந்து மணிமேகலையின்பிரிவால்வருந்தி அச்சோலையைச்சூழ்ந்த மதிலின்மேற்கேயுள்ள சிறிய வாயிலவழியேசென்று சக்கரவாளக்கோட்டத்தையடைந்து ஆங்குள்ள உலகவறவியின் ஒரு பக்கத்தேயிருந்தாள்; அவள் அப்படியிருக்குமபொழுது அவ்விடத்தே தூணிலுள்ளபாவையொன்றை அதிஷ்டித்திருக்குந் தெய்வமொன்று, சுதமதி மயங்கிஅஞ்சும்படி,

"இரவி வண்ம ஞெருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் றேவி
தயங்ணெர்க் கோதைத் தாரை சார்வுற
மயக்கி யானமுன் மன்னுயிர் நீத்தோய்
காராளர் சண்பையிற் ணெகிசன் மகளே
மாருத வேகஞ் டிங்கர் புகுந்து
தாரை தவ்வை தன்ஞெடு கூடிய
வீரா யாகிய சுதமதி ணேராய், (கஅ - கஅ).

தங்கையாகிய இலக்குமி தன்னுடையமுற்பிறப்பையும் உன்னுடைய முற்பிறப்பையும் அறிந்துகொண்டு இற்றைக்கு ஏழாநாளிரவில் இங்கரத்தேவருவள்; அவள் பிரிந்ததுபற்றி நீ அஞ்சற்க" என்று தனது தெய்வவாக்காற் கூறிற்று; அதணைக்கேட்டு மனங்டுங்கிய சுதமதி, பொழுதுபுலருமளவும் அவ்விடத்தேயிருந்து சூரியனுதித்தவுடன் எழுந்து புறப்பட்டு வீதிவழியேசென்று மாதவியையடைந்து முதனாளில் நிகழ்ந்தவற்றைச் சொன்னவுடனே அவள் மாணிக்கத்தையிழந்த நாகம்போன்று மிக்கதுயரத்தேதாடிருந்தாள்; சுதமதி, மணிமேகலையின்பிரிவாற்றுமையால் உயிரிழந்த உடம்புபோலச் செயலற்றிருந்தாள்.

## அ.—மணிபல்லவத்துத்துயருற்றகாதை.

சுதமதி இங்கே இப்படியிருக்க, மணிபல்லவத்திற் கடலருகே மணலிற்றுயின்ற மணிமேகலை, துயிலுணர்ந்து தனக்குத்தெரிந்த யாதொன்றும் அங்கே காணப்படாமையால், தான் முன்பிருந்த இடத்தைத்துறந்து வேற்றிடத்துச்சென்றுபிறந்த உயிரேபோன்றவளாகித் திகைத்துக் கொண்டிருக்கையில் சூரியனுதித்தான்; உதித்தவுடன் அவள், "இவ்விடம், உவவனத்தில் முன்னங் கண்டறியப்படாத ஒரு பகுதியோ!

சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனே
கனவோ கனவோ வென்பதை யறியேன்
மணலிடைக் குறூஉ மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கு
மெல்லவே வாராய் விட்டகன் றனையோ? (உ - உச).

இது, மாயவித்தையோடேதான்றிய அம்மடந்தைசெய்தவஞ்சமோ! என்னுந்தெரியவில்லையே! தனியேயிருத்தற்கு மிகவும் அஞ்சுகின்றேன்; நீ விரைந்துவருவாயாக" என்று சொல்லிக்கொண்டு, பல நீர்த்துறைகளிலும் பல மணற்குன்றங்களிலும் சென்று தேடித் தனக்குத்தெரிந்த ஒருவரையுங்காணுதவளாகிக் கூக்குரலிட்டு அழுதுவருந்துபவள், தன்றந்தையினைநோந்து,

"கோற்ஞெடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூ ணகலத்
தையா வோ" என் றழுவோண் முன்னர், (சக - சஉ)

## கூ.—பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை.

*இந்திரனிலிடப்பட்டதும் தரிசித்தோர்க்குப் பழம்பிறப்பைத் தெரிவிப்பதுமாகிய புத்தபீடிகை தோன்றியது.*

## கூ.—பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை.

தோன்றலும், அதனைக்கண்ட மணிமேகலை, விம்மிதத்தால் தன்னை அறியாளாயினள்; அவளுடையகைகள் தலைமேற்குவிந்தன; பின்பு ஆனந்தக்கண்ணீரைசுத்து அப்பீடத்தை மூன்றுமுறை வலம்வந்து பணிந்து எழுபவள், அப்பீடிகைக்காட்சியால் தன பழம்பிறப்பில்நிகழ்ந்த செய்திகளையறிந்து, "மாதவ, உறுதிப்பொருளைபுணர்ந்தோய், காயங்கையென்னும் நதிக்கரையில நீ சொல்லியவெல்லாம உண்மையாதலை விளங்கவறிந்தேன்:—காந்தாரமென்னும் பெரியதொருநாட்டிலுள்ள பூருவதேசத்தில் இடவயமென்னும் நகரை இராசதானியாகக்கொண்டு அரசுபுரிந்துவாழும அத்திபதியென்னும் அரசனுடைய மைத்துனனுகிய பிரமதருமன, நீ அவ்வரசனிடத்திற்சென்று தருமோபதேசம்புரிகையில், "இச்சமயத்தீவில இற்றைக்கு ஏழாவதுநாளில் பூகம்பமுண்டாகும்; உண்டானபொழுது இருநகருமநாகநாட்டில் நானூறுயோசனைப்பரப்பும் பாதலத்தில்வீழ்ந்து கெட்டொழியும; ஆதலால், நீ இந்நகரத்தைவிட்டு விரைவில வேறுநகரம் புகுவாய்" என்றுசொல்ல, அவன் நகரத்தார்யாவருக்கும் அச்செய்திபைப பறையறைவித்துசாற்றி எல்லாருடனும் அந்நகரைநீங்கி அதற்கு வடக்கேயுள்ள அவந்திநகரம செல்லுதற்குப் புறப்பட்டு வழிக்கொண்டு இடையேயுள்ள காயங்கையென்னும் நதிக்கரையையடைந்து அங்கே பாடிவீடு செய்துகொண்டிருந்தபொழுது ஐய! நீ உரைத்தபடியே குறித்தநாளிற் பூகம்பமுண்டாக இடவயநகரம் அழிந்து போயிற்று; அதுதெரிந்த அரசனும் மற்றையோரும் உன்பால் அன்பு மிக்கு உன்னைச சரணமடைந்து சூழ்ந்துநின்றகாலத்தில், அவர்களுக்கு முத்திவழியை உபதேசித்துகொண்டிருந்தாய்; இருந்தபொழுது, அசோதரநகரத்தரசனுகிய இரவிவன்மனென்பவனுடைய தேவியான அமுதபதியென்பவள்வயிற்றிற்பிறந்து இலக்குமியென்று பெயாபெற்று, அதிபதியென்னுமரசனுக்கு நீலபதியென்பவள்பாற்பிறந்த இராகுலனுக்கு மணிவியாய்ப்புக்கயான்என்கணவனேடுவந்து தருமங்கேட்டற்பொருட்டு வணங்கியவுடன், நீ என்னைநோக்கி, 'இவ்விராகுலன் இற்றைக்குப் பதினைந்தாநாளில் திட்டிவிடமென்னும் பாம்பாலிறப்பான்; நீ இவனேடு தீயிற் புகுவாய்; புகுந்து, பின்பு காவிரிப்பூம்படினத்திற்சென்றுபிழைப்பாய்; அவ்விடத்தில் உனக்கு ஒரு துன்பம்வரும்; அப்பொழுது மணிமேகலாதெய்வம் வந்துதோன்றி நள்ளிரவில் உன்னையெடுத்துக்கொண்டுசென்று காவிரிப்பூம்பட்டினத்திற்குத்தெற்கே கடலிலுள்ளசிறுதீவொன்றில்லை

த்துவிட்டுச்செல்லும்; சென்றபின் அங்குள்ள புத்தபீடிகையைத் தரிசித்துத் தொழுவாய்; தொழுதவுடன் உனது முற்பிறப்பில் நிகழ்ந்தசெய்திகளையறிந்து இன்று நான்சொன்ன மொழிகளையும் தெரிந்துகொள்வாய்' என்று நீ சொல்ல, 'என்கேள்வன் இன்னவாறு பிறப்பானென்பதையும்தெரிவிக்கவேண்டும்' என்று கேட்டேன்; கேட்டவெனக்கு 'உன்னைக் கொண்டுசென்ற தெய்வம் மீட்டுநீதான்றி உனக்கு அதனைப் புலப்படுத்தும்' என்று அருளிச்செய்தாய்; அத்தெய்வம வரவிலலையே" என்று ஏங்கி அழுதுகொண்டிருந்தாள்.

## கo. — மந்திரங்கொடுத்தகாதை.

மணிமேகலை இப்படியிருக்கையில், — புத்தபீடிகைக்காட்சியால இவள் பழமபிறப்பையறிந்தாள்; இவளுடைய இயற்கையும் அழகிது— என்றெண்ணிக்கொண்டு ஆகாயத்தினின்றுமிறங்கிவந்த மணிமேகலா தெய்வம், அவள்கேட்கும்படி,

> "உயிர்க ளெல்லா முணர்வுபா ழாகிப்
> பொருள்வழங்கு செவித்தூஉ தூர்ந்தறி விழந்த
> வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்கச்
> சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோ
> ரிளவள ஞாயிறு தோன்றிய தென்ன
> நீயோ தோன்றினை நின்னடி பணிந்தே
> னியே யாகிநிற் கமைந்தவிவ் வாசனம்
> நாமிசை வைத்தேன் நலமிசைக் கொண்டேன்
> பூமிசை யேற்றினேன் புலம்பறுக" (எ - கரு)

என்று புத்ததேவனுடைய பீடிகையை அவளுக்கேமதித்துத் துதித்து வலம்வந்து பூசித்து வணங்கியது; வணங்கியதெய்வத்தை மணிமேகலை வணங்கி, "உன் திருவருளால என்னுடைய முற்பிறப்பையறிந்தேன்; அப்பிறப்பிற் கணவனுயிருந்த இராகுலன் எங்கே பிறந்துளன்?" என்று கேட்டாள்.

கேட்டவளுக்கு அத்தெய்வம், "இலக்குமி! கேட்பாயாக; நீ ஒருநாள் சோலையொன்றில் இராகுலனுடன் ஊடியிருந்தாய்; இருந்தபொழுது அவன் ஊடலைத்தீர்த்தற்கு உனதடியைவணங்கினன்; வணங்குகையில், இரத்தினத்தீவுசென்று அங்கே தருமசக்கரத்தைப் பிரவிருத்திக்கச் செய்துவிட்டு வருபவனுகிய சாதுசக்கரனென்னும் பௌத்தசாரணமுனிவனொருவன் உச்சிப்பொழுதில் ஆகாயத்தினின்றும் இறங்கிவர, நீ அவனைக்கண்டு மெய்நடுங்கி மயங்கிக் கலங்கி ஒல்கிப் பணிந்தாய்; அதுகண்ட இராகுலன், "இங்கே வந்தவன் யார்?" என்று கோபித்துச்சொல்லியும், நீ அஞ்சி நடுநடுங்கி அவன்வாயைப் பொத்தி, "ஆகாயத்தினின்றுமிறங்கிய இப்பெரியோனுடைய மலரடியைவணங்காமலும் இவனைத்

தியாமலும் இருந்தது எவ்வளவுபெரும்பிழை?" என்று அவனுக்குச் சொல்லி அவனோடுகூட அம்முனிவருடைய பாதங்களைவணங்கி, "யாங்கள் தேவரீருடைய அடியேமல்லேமாயினும்,

அந்தீத் தண்ணீ ரமுதொடு கொணர்கேம் (கள)

அமுதுசெய்தருள்க; தேவரீருடைய திருவுளப்பாங்கின்படியே நடத்தற்கு உரிமையுடையேம" என்று தெரிவித்தலும், அம்முனிவன், "தாயே! உண்பேன்; இங்கே கொண்டுவருக" என்றுசொல்ல, நீ உடனே அவற்றைக்கொணர்ந்து அவனியுண்பித்தாய்;

அந்நா ளவனுண் டருளிய வவ்வமு
நின்னுங் கொழியாது நின்பிறப் பறுத்திடும்; (ச0-சக).

அவ்விராகுலனே உவவனத்தில் உன்பால்வந்த உதயகுமரன்; அதனாலே தான் அவனுடையமனம் உன்னை விரும்பியதன்றி உன்மனமும் அவனை மிகப்பற்றியது. அதுபற்றைமாற்றி நல்வழிப்படுத்தற்கு நீங்கள் உன்னை இத்தீவிற்கொணர்ந்துவைத்து இப்பீடிகையைக் காட்டினேன்; இலக்குமீ! இன்னுங்கேட்பாயாக; முற்பிறப்பில் உன்னுடைய தமக்கை மாராயிருந்த தாரையையும் வீரையையும் அங்கநாட்டுள்ள கச்சயநகரத்தரசனுகிய துச்சயனென்பவன் மணஞ்செய்துகொண்டு ஒருநாள் அவர்களோடுசென்று மலைவளங்களைக்கண்டுவந்து கங்கைக்கரையை அடைந்திருந்தபொழுது, அறவணவடிகள் அங்கேவரக்கண்டு உடனே எழுந்து வணங்கிய அவன், "தேவரீர் யாவீர்? எங்கே எழுந்தருளியது?" என்று கேட்க, அவர், "பாதபங்கயமலையைத் தரிசித்தற்குவருதேன்; ஆதிகாலத்தே புத்ததேவன் எல்லாவுயிர்களும துக்கத்தினின்றும நீங்கி இன்புற்றிருக்கவேண்டுமென்று நினைந்து அவைகள்யாவும் கேடுமிகும்படி அம்மலையின் உச்சியில் நின்றுகொண்டு தருமோபதேசஞ் செய்தபொழுது அவருடைய பாதசுவடுகள் தங்கபெற்றமையால் அஃது அப்பெயராயுடைத்தாயிற்று; குற்றமற்ற அறிவுடையீர்! நீங்களும் அதைத் தரிசித்து வழிபடுமின்" என்று கூறினர். அவர்கூறியவாறு உடனே சென்று அமலையையடைந்து தரிசித்த புண்ணியவிசேடத்தால் தாயுமவீரையும் முறையே மாதவியாகியும் சுதமதியாகியும்வந்து உன்னோடு கூடினர்; மணிமேகலை! நீ பழம்பிறப்பையறிந்தாய்; தருமத்தின் தோற்றத்தையும் தெரிந்துகொண்டாய்; மற்றைசமயவாதிகளுடைய கொள்கைகளையும் இனி ஒருகாலத்திற்கேட்பாய்; அங்ஙனங்கேட்கும்பொழுது, உன்னை, "இளமைப்பருவத்தினள்" என்றுநினைந்து அவர்கள் தத்தம் சமயவுண்மைகளைச் சொல்லார்கள்; ஆதலால், அக்காலத்து நீ வேற்றுவடிவங்கொள்ளவேண்டுவது இன்றியமையாதது" என்றுகூறி வேற்

* நின்னுங்கொழியாது - நின்னிடத்தைநீங்காது.

முவடிவைக்கொடுப்பதும் ஆகாயவழியே சஞ்சரிக்கச்செய்வதுமாகிய மந்திரங்களிரண்டை அவளுக்கு உபதேசித்து, "நீ புத்ததேவனருளிச்செய்த நல்லறவழியை நணுகுதல் ஒருதலையென்று உணர்வாயாக; இப்பீடிகையை வணங்கித்துதித்து ஊர்செல்வாயாக" என்று சொல்லிவிட்டு மேலேசெல்லுதற்கு எழுந்து, "இன்னும் ஒன்றைச்சொல்ல மறந்துவிட்டேனே" என்று அத்தெய்வம மீட்டும் இறங்கிவந்து, "சிறந்த விரதவொழுக்கமுடையாய், கேட்பாயாக; மக்கள்யாக்கை உணவாலாகியதொருதி; இம்மந்திரமோ பசியைத்தொலைக்கும்; இதனைக்கொள்வாயாக" என்று சொல்லி அம்மந்திரத்தை அவளுககு உபதேசித்துவிட்டு எழுந்து ஆகாயவழியே சென்றது.

## கக.—பாத்திரம்பெற்றகாதை.

அப்பால், மணிமேகலை, அத்தீவிலுள்ள மணற்குன்றுகளையும் பூஞ்சோலைகளையும் குளிர்ந்த பொய்கைகளையும் பாராத்துக்கொண்டு மெல்ல உலாவிவருகையில், ஒருத்திவந்துநின்று, 'கப்பல்கவிழப்பெற்ற மகளிர் போல இங்குத் தனியேவந்தீ யார்?" என்றுகேட்டாள்.

மணிமேகலை, "பொற்கொடிபோல்வாய்! 'நீ யார்' என்றது, என்னுடைய எந்தப் பிறப்பின் செய்தியைத் தெரிந்துகொள்ளுதற்கு? கேட்பாயாக; சென்றபிறப்பில் இலக்குமியென்னும் பெயரையுடையேன்; இராகுலனென்னும் அரசிளங்குமரனுக்கு மனைவியாகவிருந்தேன்; இப்பிறப்பில் நாடகக்கணிகையாகிய மாதவியின்வயிறறமிற்பிறந்தேன்; என்பெயர் மணிமேகலையென்பது; மணிமேகலாதெய்வம காவிரிப்பூம்பட்டினத்துள்ள உவவனத்திலிருந்து இத்தீவிற்கொண்டுவந்து வைத்தமையால், இந்தப் பீடிகையைத் தரிசித்து முற்பிறப்பை யறிந்துகொண்டேன்; இங்கே வந்தமையால் நான் அடைந்தபயன் இது; என்னுடைய வரலாறு இதுவாகும்; பூங்கொடிபோல்வாய்! உன் வரலாறுயாது?" என்று கேட்டவுடன், தீவதிலகை "இத்தீவிற்கு அயலிலுள்ளதான இரத்தினத்தீவத்திலே மிகவுயர்ந்துவிளங்காநின்ற சமந்தகூடமலையின் உச்சியிலேயுள்ள புத்ததேவனது அடியிணைப்படிமைகளைத் தரிசித்துவிட்டு இத்தீவிற்கு முன்னொருகாலத்தில் வந்தேன்; வந்ததுமுதல் இந்திரன் கட்டளையால் இந்தத்தருமபீடிகையைக் காத்துக்கொண்டு இவ்விடத்திலேயேயிருக்கிறேன்; என்பெயர் தீவதிலகையென்பது. புத்ததேவனருளிச்செய்த நல்லறவழியேநடப்போர் யாரேனும் இதனைத் தரிசிப்பாராயின், அவர்கள் அந்தத்தரிசனவிசேடத்தால் உடனே தம்முடைய பழம்பிறப்புணர்ச்சியை அடைவது திண்ணம்; அத்தன்மையினையுடையோர் உலகத்தில் மிக அரியர்; அவர்களுக்கே தருமபதம் உரித்து; இஃது உண்

மை; பழம்பிறப்புணர்ச்சியை யடைந்தமையால், மீ மிகவும் பெரியை; இந்தப்பீடிகைக்குமுன்னே மாமலர்க்குவலீயும் செய்ததும் மயங்கிய கோமுகியென்னும் கொழுநீரிலஞ்சியொன்று உள்ளது; அப்பொய்கையி னுள்ளேயிருந்து அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரமானது, ஒவ்வொ ருவருடத்தும், புத்ததேவன் அவதரித்த காலமாகிய வைசாகசுத்தபூர் ணிமைதோறும் மேலேவந்து தோன்றுகிற்கும்; இத்தினம் அப்பூர்ணி மையே; அது தோன்றும்வேளையும் இதுவே; இப்பொழுது அந்தப்பாத் திரம உன்கையிலவநமென்று எண்ணுகிறேன்; அதிலிடப்பட்ட அன்னம் எடுக்கஎடுக்க மேன்மேலும வளர்ந்துகொண்டேயிருக்கும்; அதன்வர லாற்றை உன்னூரிலுள்ள அறவணவடிகளிடத்தே இனிக்கேட்பாய்" என்று சொல்லலும், மணிமேகலை அதைப்பெறுதற்குவிரும்பிப் புத்த பீடிகையைவந்தித்து அவளோடுகூடிச்சென்று கோமுகிப்பொய்கையை வலஞ்செய்துவந்து நின்றவுட்ன், அபபாத்திரம் அப்பொய்கையினுள்ளி ருந்து மணிமேகலையின்கையை அடைந்தது; உடனே அவள் அளவுகடந தமகிழ்ச்சியுற்று நின்று,

"மாரனே வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடுமதகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
திறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
யெண்பிறக் கொழிய வீறந்தோய் நினனடி
கணபிறர்க் களிகருங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைதத செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த காவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
யுரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத வல்லது வாழ்தலென் னுலிற்
கடங்காது" (சுக-எஉ)

என்று புத்ததேவனைத்துதித்தாள்; இங்ஙனநதுதித்தமணிமேகலைக்கு உயிர்களுடைய பசித்துனபதநதையும அதனைத் தீர்ப்போருடைய பெரு மையையும் தேவதிலகைசொல்லப்புகுந்து,

"குடிப்பிறப் பழிக்கும் வீழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெருமபுணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறத்தும
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோ
ரிசைச்சொ லளவைக் கென்னு நிமிராது; (எசு-அக)

மூன்னுருகாலத்தில், கௌசிகமுனிவர் மழையே இல்லாதுபோனமை யால், பசியால் வருந்தி அதனைத்தீர்த்துக்கொள்ளுதறகு எங்குந்திரிந்து சிறிதும் உணவுகிடையாததுபற்றி மெலிந்து பின் நாயிறைச்சியைப்பெ ற்றுத் தின்னப்புகுந்து, முதலில் அவ்விறைச்சியின் ஒருபகுதியைத் தெய்வங்கட்குப் பலியிடுவாராயினர்; அதறிந்த இந்திரன் உடனே

எங்கும் மழைபெய்யச்செய்தமையால், உயிர்கள் களித்துவாழும்படி விளைவுபெருகியதென்பர்; அதை நீ கேட்டிருப்பையே.

ஆற்றார்க் களிப்போ ரறவிலை பகர்வோ
ராற்ரு மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
மூண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே; (கூ - கூசு)

ஆதலால், பசியைப்போக்கி உயிரைக்கொடுத்தலாகிய தருமத்தைச்செய்வாய்" என்று கூறினள்; அதுகேட்டமணிமேகலை, "போனபிறப்பில் என்கணவனுகிய இராகுலன் திட்டிவிடமென்னும பாமபாலிறந்தது பொருமல் யான் தீப்பாய்ந்து உயிரொடுவேவாநிற்கையில முன்னம சாதுசக்கரமுனிவனை உண்பித்த நினைவையுடையேனுனேன்; இறக்குங்காலத்தில எனக்கு அந்நினைப்பிருந்த புண்ணியவிசேடத்தாலேயே இருதப்பாத்திரம என்கையிற்புகுந்ததென்று எண்ணுகிறேன்; இதுநிற்க. பசியால்வாடிய குழந்தையின்முகத்தைக் கண்டு மனமிரங்கிப் பால்சுரக்கும் தாய்மூலை போலவே வயிறுகாய்பெருமபசி அலைத்தற்கு இரங்கி வெயிலென்றும் மழையென்றும் பாராமல் எங்கும வாடியலைந்துதிரியும் ஏழைகளுடைய முகத்தைக்கண்டு இரங்கி இப்பாத்திரம் மேன்மேலும் அவாகளுக்கு அமுது சுரந்தளித்தலைக் காணும் விருப்பமுடையேன்" என்று சொல்லக் கேட்டு மகிழ்ந்த தீவதிலகை, அவளோடு பின்னுஞ் சிலநேரம் அளவளாவிக்கொண்டிருந்து, "இனி இப்பாத்திரத்தோடு உன் ஊருக்குச்செல்வாயாக" என்றுசொல்ல, மணிமேகலை, அவள்பாதத்தைவணங்கிப் புத்தபீடிகையைத்தொழுது வலஞ்செய்து ஆகாயகமனமந்திரத்தை ஜபித்து மேலேயெழுந்து ஆகாயவழியேசென்று, தன்னைக் காணுதுவருந்தித் திகைத்து மயங்கி வழியைநோக்கிக்கொண்டேநிற்கும் சுதமதியையும மாதவியையும் பார்த்து, வியப்படையும்வண்ணம அவர்களுடைய முற்பிறப்பை அவர்களுக்கு அறிவித்து, "மானிடயாக்கையாற் பெறுதற்குரிய தவவழியை அறவணவடிகளிடத்தேத இனிப் பெறக்கடவீர்; இம்மது ஆபுத்திரனுடையகையிலிருந்த அமுதசுரபியென்னும அக்ஷயபாத்திரமாகும்; இதனைத் தொழுமின்" என்றுசொல்லி, அதனை அன்புடன் தொழுத அவர்களை அழைத்துக்கொண்டு அறவணவடிகளைத தரிசித்தற்குச் சென்றனள்.

## கஉ.—அறவணர்த்தொழுதகாதை.

சென்றவள், "அறவணவடிகள் எங்கேயுள்ளார்" என்று விசாரித்துக்கொண்டேபோய்,

நரைமுதிர் யாக்கை நடுங்கா ஈவி
னுரைமூ தாள னுறைவிடங் குறுகி, (கூ - ச)

அவரைத்தரிசித்து மும்முறைபணிந்து துதித்துத் தான் உவவனஞ்சென்றதும், உதயகுமரன் அங்கேவந்து சொல்லிப்போனதும், பின்பு மணிமேகலாதெய்வம் தன்னையெடுத்துச்சென்று மணிபல்லவத்தில்வைத்ததும், அத்தீவினுள்ள புத்தபீடிகைக்காட்சியால் தன் பழம்பிறப்பைத் தானறிந்துகொண்டதும், "முற்பிறப்பிற்கணவனுகவிருந்த இராகுலனே உதயகுமரனுக வந்துபிறந்தான்; அப்பிறப்பில் உனக்குத் தமக்கைமார்களாகவிருந்த தாரையும் வீரையுமே மாதவியும் சுதமதியுமாக வந்தனர்; அவர்கள் வரலாற்றை அறவணவடிகள்பால் நீ தெரிந்துகொள்" என்று மணிமேகலாதெய்வஞ்சொல்லி மூன்றுமந்திரங்களை யுபதேசித்துச்சென்றதும், அப்பால் தீவதிலகைவந்ததும், அவளுடன்சென்று தோழுகைப் பொய்கையிலிருந்த அமுதசுரபியைப்பெற்றதும், "ஊருக்குச்சென்று அறவணவடிகள்பால் ஆபுத்திரன்வரலாற்றை நீ கேள்" என்று அத்தீவதிலகைசொல்லத் தான்வந்ததும் ஆகிய இவற்றையெல்லாந்தெரிவிக்க, அம்முனிவாகேட்டு மகிழ்ந்து, "முன்பு ஒருமுறை நான் பாதபங்கயமலையைவழிபட்டு மீண்டுவருகையில துசசயராசனை ஒரு சோலையிற்கண்டேன்; "அரச, நீயும உன்மனைவியரும சுகமோ?" என்று யான்வினவ, அவன் மனங்கலங்கி அரற்றிக்கொண்டு, வீரை மதுவின்மயக்கத்தால் ஓரியானைமுன்சென்று இறந்ததும், அசசெய்தியைக்கேட்டுவருந்திய தாரை ஒருமாடத்தின்மீதேறி வீழ்ந்து மரித்ததுமாகிய பெருந்துன்பத்தைகூறி வருந்தினன்; நான் "இது பழவினைப்பயனுகும; ஆதலால், நீ வருந்தாதே" என்று சொல்லிப்போந்தேன்; அங்ஙனமிறந்த நீவிர் இப்போது கூத்தரைப்போல வேறுவேடம பூண்டுவந்தீர்கள்" என்று மாதவியையும் சுதமதியையுமபாத்துச சொல்லிவிட்டு, பின்னும் மணிமேகலையைப்பார்த்து, "இவ்வுலகிற் பௌத்ததருமங்கள்குறையப் பாவங்கள்மிகுத்தன; ஆனலும், சிறிதுசிறிது தருமமுண்டாதலுங்கூடுமென்று எண்ணி நான் தருமத்தை உபதேசித்துவருதலுமுண்டு; அத்தருமத்தை இவ்வுலகத்திலுள்ள மாந்தரையார்; இவ்வுண்மையையறிந்த இச்சக்கரவாளத்துள்ள தேவாகளுடைய வேண்டுகோளால், *ஆயிரத்தறுநூற்றுப் பதினுறுமாண்டில் துஷிதலோகத்திலுள்ள தேவன் இவ்வுலகத்தில் அவதரிப்பான்; அதற்குப்பிற்பாடு யாவருக்கும் அருளறத்தில் மனஞ்செல்லும்;

புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களு ஞாயிறுந் தீங்குரு வினங்கத்
தங்கா நாண்மீன் றகைமையி னடக்கும்
வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்

* இங்கே கூறப்பட்டுள்ள ஆண்டு இன்னசகாப்தத்தைச்சார்ந்ததென்று புலப்படவில்லை; ஆண்டு - வருடம்.

ஊனுடை யுயிர்க ளுறுதுயர் காணூ
வளிவலங் கொட்கு மாதிரம் வளம்படும்
நளியிரு மூன்நீர் நலம்பல தரூஉம்
கறவைகன் ரூர்த்திக் கலநிறை பொழியும்
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா
விலங்கு மக்களும் வெரூஉப்பகை நீங்கும்
கலங்கஞர் நரகரும் பேயுங் கைவிடும்
கூனுங் குருடு மூமுஞ் செவிடு
மாவு மருளு மன்னுயிர் பெரு அ
அந்நாட் பிறந்தவ னருளறங் கேட்டோ
ரின்னுப் பிறவி யிகந்தோ ராதலிற்
போதி மூலம் பொருந்திய நிறப்பி
ஞதன் பாத நவைகெட வேத்துதல்
பிறவி தோறு மறவேன் மடக்கொடி" (அசு - கஐசு)

இதுநிற்க; மணிமேகலை! இந்நகரத்தில் உன்ஞலே சிலவிசேடங்கள் உள்ளனவாம்; அவை நிகழ்ந்தபின்பன்றி யான்கூறுநதருமமொழி உன் மனத்திற்பொருந்தாது; இவ்விருவரும் முற்பிறப்பிற் பாதபங்கயமலை யை வழிபட்ட புண்ணியவிசேடத்தால் பிற்காலத்தில் உன்னேடுகூடிப் புத்தபேதவனது திருவடியைத்தொழுது வணங்கி வினைகளினின்றும் நீங்கி நிருவாணமடைவார்கள்; உயிர்மருநதாகிய மிகச்சிறந்த அமுதசுர பியை நீபெற்றனை; எல்லாவுயிர்களுடைய பசியையும தீர்ப்பாயாக;

மக்க டேவ ரெனவிரு சார்க்கு
மொத்த முடிவி ஞேர முரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல்" என்றே யவரும்
தவப்பெரு கல்வரஞ் சாற்றினர். (ககசு - ககசு)

மணிமேகலையும் அங்ஙனமே செய்வேனென்றுள்.

## கசு.—ஆபுத்திரன் நிறமறிவித்தகாதை.

பின்பு அறவணவடிகள் மணிமேகலையைநோக்கி, "ஆபுத்திரன் வரலாற்றைக்கூறுவேன்; கேட்பாயாக; வாரணசியென்னுமூரில் வேத மோதுவிப்பவனுகிய அபஞ்சிகனென்னும் அநதணன்மனைவி, சாலியென் பாள்; அவள் நிபமந்தப்பியொழுகினமையால் உண்டாகிய பாவத்தைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு, தான் கருப்பிணியாகவிருநதும் அதைப் பாராமல் கன்னியாகுமரிக்கு நீராடச்சென்றுள்; சென்றவள் சூலால்வரு நதி வழியிடையேபெற்ற குழந்தையிடத்தில் சிறிதும் இரக்கமில்லையா மல் அக்குழந்தையை ஒரு தோட்டத்தில் இட்டு நீங்கினள்; நீங்கவே அக் குழந்தை உணவுபெறாது பசியால் வருந்தியழுதது; அவ்வழுகையோ சையைக்கேட்டு ஒருபசுவானதுவந்து அதன் வருத்தந்தீரும்படி நாவால் நக்கிப் பாலூட்டி ஏழுநாள்வரையும் அப்புறஞ்செல்லாது பாதுகாத்துக்

கொண்டிருந்தது; அப்படியிருக்கையில், வயனங்கோடென்னும் ஊரி லுள்ளவனுகிய பூதியென்னும் அந்தணனொருவன் தன் மனைவியோடும் அவ்வழியேவருபவன், அக்குழந்தையழுத கூக்குரலைக்கேட்டுச் சென்று தனியேகிடக்கும் அதைக்கண்டு மிக்க துன்பத்தோடு கண்ணீர்பெருக்கி, 'இவன் பசுமகனல்லன்; என்மகனே' என்றுகூறி அக்குழந்தையை யெடுத்து ஊர்சென்று வீடடைந்து மகிழ்ச்சியுடன்வளர்த்து உரியகாலத் தத் தன்குலத்துக்குரிய கல்விகளை நன்குபயிற்றிவருதான்; வருகையில், அச்சிறுவன், ஒருநாள் அவ்வூரில் ஓரந்தணன்வீட்டிற்புகுந்து, யாகசாலை யில் ஒருபசு மாலையைச்சுற்றிய கொம்புகளோடுடையதாய்ப் பின்பு தனக் குண்டாகும் துன்பத்திற்கு அஞ்சி வெய்துயிர்த்துப்புலம்பி வேடர்களு டைய வலையிற்பட்ட மான்போல அஞ்சிக் கதறுவதைக்கண்டு மனமடுங் கிக் கண்ணீருருத்து, 'இவர்களறியாதவண்ணம் இப்பசுவைக் கவர்ந்து கொண்டு இரவிற்போய்விடுவேன்' என்று தன்னுள் எண்ணிக்கொண்டே ஒருபக்கத்தில் ஒதுங்கியிருந்து அன்றிரவில் அப்பசுவைக் கையிற்பற்றி ஊருக்குவெளியே போய்விட்டான்; பசுவைக்காணுத அந்தணர்கள் பலர் அதனைத்தேடிச்சென்று, வழியில் பசுவையும் அதனைக் கவர்ந்துசென்ற அசிறுவனையுங்கண்டு அகப்படுத்திக்கொண்டு, அவன் கருத்தையறியா ராய், "புலையா, இப்பசுவை இரவில் ஏன் கவர்ந்துசென்றாய்?" என்றுகேட்டு அவனைக் கோலாலடித்து ஒறுக்கத்தொடங்கினர். அப்பொழுது பசு, வருத்துகின்ற உபாத்தியாயனைமுட்டி வயிற்றைக்கிழித்துக் குடரைப் புறப்படச்செய்துவிட்டுக் காட்டில் விரைந்தோடிவிட்டது. ஆபுத்திரன் அவர்களைநோக்கி, "வருத்தன்மின்; யான் சொல்வனவற்றைக்கேண்மின்; நீங்கள் வருத்தும்படி இப்பசு என்னகுற்றஞ்செய்தது

விடுநில மருங்கிற் படுபுல் லார்த்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பா
லறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டி
மிதலைமே வந்த செற்ற மென்னை?" (நுக - நுஞ).

என்றுசொல்ல, அவர்கள், "நீ வேதவித்தியையறியாமல் வேள்வியை இகழுகின்றாய்; ஆதலால், பசுமகனென்பதற்குப் பொருத்தமுடையை" என்று இகழ்ந்துகூறலும், ஆபுத்திரன்,

"ஆன்மக னசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புனையோர் போற்று
நரிமக னல்லனே கேச கம்பள
னீங்கிவர் தங்குலத் திருடி கணங்களென்
றேங்குயர் பெருஞ்சிறப் புனைத்தலு முண்டா
லாவொடு வந்த வழிகுல முண்டோ" (சுசூ - சுஎ)

என்று சொல்ல, அவர்களுள்ளே ஓரந்தணன், "இவனுடைய பிறப்பின்

வரலாற்றை யான் அறிவேன்;முன்னொருநாள், கன்னியாகுமரியில் விதிப் படி நீராடிவிட்டு வருத்தத்தோடு வந்த சாலியென்னும் ஒரு பார்ப்பனி யைக் கண்டு, "உன் ஊர் யாது? நீ எதற்காக இங்கே வந்தனை?" என்று நான் கேட்டதற்கு அவள், "யான், வாரணசியென்னுமூரிலுள்ள ஆரண உவாத்தியாகிய ஓர்தனன் மனைவி; யானெழுகிய தீயவொழுக்கத்தாற் கணவனைப்பிரிந்து கன்னியாகுமரிக்கு நீராடச்செல்லுகையில், கொற்கை நகரத்துக்கு அப்பாற் காதவழித்தூரத்துள்ள இடையர்சேரியில ஆண் குழந்தையொன்றைப் பெற்று இரக்கமின்றி அதனை அவ்வுள்ள ஒரு தோட்டத்தில் இட்டுப்போனேன்; இப்படிப்பட்ட தீவினையெனக்கு நற்கதியுண்டோ" என்று மிகத் துன்புற்று அழுதாள்; அங்ஙனமழுத வள்பெற்ற அந்தமகனே இவன்; இதைச் சொல்லுதலால் யாதுபயனென்று இதுகாறும் உங்களுக்குத் தெரிவியாதிருந்தேன்; அசுத்தனுதலால் இவனைத் தொடாதொழிமின்" என்று சொல்ல, ஆபுத்திரன், "நிலோத்தமையின் புத்திரர்கள் பெரியமுனிவர்களாக இருத்தல் கேட்டிலிரோ; நீங்கள் *சாலிக்குத் தவறுகூறத் துணிந்தீர்களே" என்றுசொல்லி அவர் களைப்பார்த்து நகைத்தான். வளர்த்த பூதியும் அசுத்தனென்று எண்ணி உடனே அவனை நீக்கிவிட்டான். பசுவைத்திருடின கள்வனென்று இக ழ்ந்து அந்தணர்களுடைய கிராமங்களிலெல்லாம அவனுடைய பிசசைப் பாத்திரத்திற் கல்லிடத்தொடங்கினர்கள்; அதனால, வேறு புகலின்றித் தென்மதுரையையடைந்து கௌதாதேவியின்கோயிலாகிய கலிங்கமத்தின் முன்னேயுள்ள அமபலத்தையே யிருப்பிடமாகக்கொண்டு கையிற் பிச சைப்பாத்திரத்தையேந்தி வீடுகள்தோறும சென்றுசென்று வாங்கிவந்த

காணர் கேளார் சான்முடப் பட்டோர்
பேணுநர்ல்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்திட னூட்டி, (ககக - ககஙு).

அவர்களுண்டொழித்த மிசசத்தையே தானுண்டு பிசசையோட்டைத் தலையணையாகவைத்துக்கொண்டு அவ்வமபலத்தின்கண்ணே நாள்தோ றும் இரவிற் கண்படைபுரிந்து காலங்கழித்துவந்தான்.

## கச.—பாத்திரமபுகுறியகாதை.

அப்படி நிகழுங்காலத்தில், அவனுக்கு ஒருநாள் அங்கே நிகழ்ந்த செய்தியைச்சொல்லுவேன்; கேட்பாயாக; அவன் அவ்வம்பலத்தில் ஓரிர வில் தூங்கும்பொழுது, சிலர்வந்து, "பெரும்பசி எங்களை வருத்தாநின் றது" என்றார்கள்; அதைக்கேட்ட அவன் அத்தன்பத்தைத்தீர்த்தற்கு

* சாலியென்பதற்கு அருந்ததியென்றும் ஒருபொருள்தோன்றிற்று.

ஆற்றலில்லாதவனும் மிக்க வருத்தமடைந்தான்; அச்சமயத்திற் சிந்தா தேவி எழுந்தருளிவந்து, "இதனைக்கொள்வாயாக; நாடெல்லாம் வறுமையுற்றுள்ள இவ்வேழு வறுமையையடையாது; கொடுக்கக்கொடுக்க இதில் உணவு வளர்ந்துகொண்டேயிருக்கும்" என்றுசொல்லித் தன் கையிலுள்ள அக்ஷயபாத்திரமொன்றை அவன்கையிற்கொடுத்தாள்; உடனே அவன், அளவுகடந்தமகிழ்ச்சியடைந்து,

> "சிந்தா தேவி செழுங்கலை நியமத்து
> நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
> வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
> யேனை ருற்ற விடர்களைவாய்" (கஎ - உ0).

என்று துதித்து அவளைப்பணிந்து, முன்பு பசித்துவந்திருந்தவர்களை ஊட்டி மகிழ்வித்து, அன்றுமுதல் எல்லாவுயிர்களுக்கும் உணவளிப்பானாயினன்; உண்பதற்காக முனிதர்கள்பலர் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள்; விலங்குகளும் பறவைகளும் அவனைப் பிரியாவாய் அன்புடன் சுற்றிக்கொண்டன; அப்படியிருக்கையில், ஒருநாள் அவனதுபுண்ணியமகிமையைத் தனது *பாண்டுகம்பளநடுக்கத்தால் அறிந்த இந்திரன், அவனுக்கு வரங்கொடுக்கநினைந்து ஒரு முதியவேதியனது வடிவுகொண்டுவந்து நின்று, "நான் இந்திரன்; வரங்கொடுத்தற்கு வந்தேன்; நீ விரும்பியது யாது? உன்னுடைய பெரிய தானத்தின்பயனைப் பெற்றுக்கொள்வாயாக" என்றுசொல்ல, ஆபுத்திரன் விளாவெலும்பு ஒடியும்வண்ணஞ் சிரித்து,

> "அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
> நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
> யாவரு மில்லாத் தேவர்கனை ஞடுக்
> கிறைவ னெனிய பெருவிறல் வேந்தே! (சரீ - சரூ).

வருந்திவந்தவர்களுடைய தீர்த்தற்கரியபசியினைத்தீர்த்து அவர்களுடைய இனியமுகத்தை யான் காணும்படிசெய்கின்ற எனது தெய்வப்பாத்திரம் ஒன்றே போதும்; வேறொன்றும் வேண்டற்பாலதன்று" என்று அவனை மதியாதுசொன்னனன்; சொல்லவே இந்திரன் கோபித்துப் பசித்துன்பத்தால் வருந்துவோரில்லாமலிருக்கும்படி செய்வேனென்றுநினைந்து எங்கும் மழைபெய்வித்து மிக்க செல்வத்தையுண்டாக்கினன்; அதனால், பசித்துவருவோர் இலராயினர்; அதுகண்டு ஆபுத்திரன் மூன்றிருந்த அம்பலத்தைநீங்கி ஊர்கள்தோறும்போய், "உண்போர்யாரேனுமுண்டோ?" என்று விளவுத்தொடங்கினனன்; அதுகேட்டுச் செல்வக்களிப்பால் யாவரும் அவனை யிகழ்ந்தார்கள்; உண்போரைப் பெறுமையால், அவன்

---

* பாண்டுகம்பளம் - வெள்ளைக்கம்பளம்: தனது பாண்டுகம்பள நடுக்கத்தைக் கொண்டு உலகிலுள்ள சில நிகழ்ச்சிகளை இந்திரன் அறிந்துகொள்வானென்றுகூறுதல் பௌத்தர்களுடைய வழக்கமென்று தெரிகின்றது.

பெருஞ்செல்வத்தையிழந்தோமைப்போல வருத்தித் தனியேசெல்லுகை யில், தப்பிவந்த சிலர், அவனைக்கண்டு, சாவகநாடு மழையில்லாமை யால் மிகுந்த வறுமையுற்றதென்றும் அதிலுள்ளவுயிர்கள் பெரும்பாலும் பசியால் இறந்தனவென்றும் கூறினர்; அதுகேட்டு அவன் அந்நாட்டிற் குச்செல்லவெனன்றுநினைந்து கப்பலேறினன்; அக்கப்பல்சென்று மணி பல்லவத்தினருகே ஒருநாள் தங்கிற்று; அவன் அத்தீவில் இறங்கினன்; மீகாமன், இறங்கிய ஆபுத்திரன் எழுவிட்டானென்று எண்ணி இருளில் அக்கப்பலைச் செலுத்திக்கொண்டுபோயினன். போனதுதெரிந்து அவன் மிகுந்தவருத்தமடைந்து, பலர்க்கு உணவளிக்கும் இப்பாத்திரத்தை வைத்துக்கொண்டு யாருமில்லாத இத்தீவில் யான்மட்டும் இரேன்" என்று எண்ணி அப்பாத்திரத்தைத் தொழுது, "வருடத்திற்கு ஒருநாள் நீ தோன்றுவாயாக" என்றுகூறிக் கோமுகிப்பொய்கையில் அதைவிடுபவன், "மிக்கசுரூணையோடுகூடித் தருமஞ்செய்தலையே மேற்கொண்டு எல்லாவு யிர்களையும் பாதுகாப்போர் யாரேனும்வரின் அவர்கையிற் புகுவாயாக" என்றுசொல்லி அப்பொய்கையில்விட்டுவிட்டுத் தான் பட்டினியிருந்து உயிர்துறப்பானயினன். அப்பொழுது அத்தீவிற்குச்சென்ற யான் அவனைக்கண்டு, "நீ யாதுதுன்பமடைந்தாய்" என்றுகேட்க, நிகழ்ந்தவற் றைச்சொல்லி மணிபல்லவத்தில் உடம்பைப்போகட்டுவிட்டு எல்லாவுயிர் களையும் பாதுகாக்குமெண்ணத்தோடுசென்று சாவகநாட்டரசனுடைய பசுவயிற்றிலுதித்தான்.

## கரு.—பாத்திரங்கொண்டுபிச்சைபுக்ககாதை.

மணிமேகலை! இன்னும் கேட்பாயாக; முன்பு ஆபுத்திரனுக்கு ஏழு நாள்வரையும் பாலூட்டிய பசுவானது, அப்புண்ணியவிசேடத்தால் சாவ கநாட்டில் தவளமலையில் தவஞ்செய்துகொண்டிருக்கும் மண்முகமுனிவ னிடத்தே, பொன்மயமாகிய கொம்புகளையும குளம்புகளையும் உடைய தாய்ச்சென்று, ஈறுமுன்னமே பால்சுரந்து எல்லாவுயிர்களையும் உண்ணச் செய்துகொண்டிருந்தது; அதனைக்கண்டு, முக்காலவுணர்ச்சியையுமுடைய அம்முனிவன், "இப்பசுவயிற்றில் எல்லாவுயிர்களையும் பாதுகாக்கும் ஒரு விசேடபுருடன் பொன்மயமான முட்டையினிடம் தோன்றுவன்" என்று கூறினன். தருமஞ்செய்தற்காகவே மணிபல்லவத்தில் இறந்த ஆபுத்தி ரன் தன்னைக் குழவிப்பருவத்தே காத்தளித்தபசுவை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருந்தவனதலின், மண்முகமுனிவன்கூறியவாறே அப் பசுவயிற்றில் தோன்றினன்; அவன் தோன்றியகாலம் வைசாகசுத்த பூர்ணிமை; அப்பொழுது சில நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. அதுதெ ரிந்த சக்கரவாளக்கோட்டத்துளள முனிவர்கள், "புத்தன் அவதரிக்கும்

காலதாமல் முதானமும் நிமித்தங்கள் இப்பொழுது நிகழ்வதற்குக் காரணம் என்ன?" என்று வியப்புற்று, அதனுண்மையைத் தெரிந்துகொள்ளுதற்குக் கந்திற்பாவையையடைந்து விஞவினர்கள்; அது, "மணிபல்லவத்தில் இறந்த ஒரு விசேடபுருடன் உயிர்களைப் பாதுகாத்தற்காகச் சாவகநாட்டிலுதித்தான்; அதனாலேதான் நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. அவன் வரலாற்றை அறவணன்பாற் கேண்மின்" என்றுசொல்லி என் பாலனுப்பி எனது நாவைவருத்தியது; மகப்பேறில்லாமல் வருந்துபவனை அந்நகரத்தரசன்பூமிசந்திரனென்பவன் மண்முகமூனிவரிடமிருந்து மேற்கூறிய பசுப்பெற்ற குழந்தையை வாங்கிக்கொண்டுசென்று வளர்த்துவந்தான்; அச்சிறுவன் இப்பொழுது அரசாளுமைபெற்று வாழ்கின்றனன்; இதுநிற்க; காவிரிமாநதி மாறுது நீர்பெருகி இந்நாட்டைவளமுறச் செய்தும் யாதுகாரணத்தினாலோ உயிர்கள் வறுமையால்வருந்துகின்றன; ஆதலால்,

வெண்டிரை தந்த வமுதை வாலே
ருண்டொழி மிச்சிலே யொழித்தலைத் தாங்கு, (இக - இஉ),

மிகப் பயன்படுகின்ற இவ்வமுதசுரபியை நீ சும்மாவைத்திருத்தல் தகுதியன்று" என்றுகூறினர். அதைக்கேட்ட மணிமேகலை, உடனே அவரை வணங்கித் துதித்துப் பிக்குணிக்கோலம்பூண்டு, அப்பாத்திரத்தைக் கையிலேந்தி வீதியையடைந்தாள்; அடையவே, உச்சயினிநகரத்தரசனுகிய பிரச்சோதனனென்பவன் உதயணனை வஞ்சித்துச் சிறைப்படுத்திய பொழுது, அவனைச் சிறைமீட்டற்கு அவன்மந்திரியாகிய யௌகந்தராயணனென்பவன் வேற்றுவடிவங்கொண்டு வீதியையடைந்தகாலத்தில், அவனைக்கண்டு துன்புற்று அநேகர் சூழ்ந்தாற்போலப் பிக்குணிக்கோலத்தையுடைய மணிமேகலையைக்கண்ட பலரும், "உதயகுமரனுடைய உள்ளத்தில் ஒளிதிருக்குமிவள் எல்லாருங்காணுப்படி பிச்சைப்பாத்திரத்தையேந்தி வீதியையடைந்தது என்ன வியப்பு!" என்றுகூறித் துன்புற்று அவளைச் சுற்றிக்கொண்டனர். அப்பொழுது மணிமேகலை, "கற்புடைமாதர் இடும் ஐயத்தையே முதலில் ஏற்றுக்கொள்ளுதல் தகுதி" என்றுசொல்ல, காயசண்டிகை "மழையைத்தரும் கற்புடைமாதர்களுள் மிகமேம்பட்டவளாகிய ஆதிரையென்பவளுடைய வீடு இது; நீ இதிற் புகவேண்டும்" என்று அவளுக்குக் கூறினள்.

## கசு.—ஆதிரைபிச்சையிட்டகாதை.

அங்ஙனங்கூறிய காயசண்டிகை, மீட்டும் மணிமேகலையைநோக்கி, "இந்த ஆதிரையின் கற்புவிசேடத்தைக் கேட்பாயாக; இவள்கணவன் சாதுவனென்பான்; அவன் ஒருபரத்தையின் இணக்கத்தாற் கைப்பொருளிழக்கவறுமையுற்று வேறுதேயம்போய்ப் பொருள்தேடவெண்ணிக்

இலவணிகரோடு கப்பலேறிச்சென்றான்; செல்லுகையில் கடுங்காற்றால் அக்கப்பல்கவிழ்ந்தது; கவிழவே சாதுவன் அதிலிருந்து ஒடிந்துவிழுந்த பாய்மரத்துண்டமொன்றைத் தெப்பமாகப்பற்றிக்கொண்டு நீந்திச்சென்று, உடையில்லாது சஞ்சரிப்பவர்களாகிய நாகருடையமலைப்பக்கத்தை அடைந்தான்; அஃதங்ஙனமாக; அக்கப்பலின்றும் நழுவியமரத்தைப் பற்றிக் கடலில்நீந்திப் பிழைத்துக் காவிரிப்பூம்பட்டினம் வந்தோர், "இவனுடைய இறந்தவர்களோடு சாதுவனுமிறந்தான்" என்று ஆதிரைக்குக் கூறினர்; அதுகேட்ட அவள், மிக்க வருத்தமடைந்து இறக்கத் துணிந்து மயானத்திற் குழிதோண்டி அதில் விறகுகளை அடுக்குவித்துத் தீயையூட்டி, "விஞ்பயனால் என்கணவனடைந்த இடத்தை நானுமடையக்கடவேன்" என்று சொல்லி அதிற்புகுந்தாள்; புகுந்தவளை அத்தீயானது சுடாதொழிந்தது; ஒழியவே அவள், "தீயுஞ்சுடாதபாவியேன் இனியாதுசெய்வேன்" என்று வருகையில், ஆகாயவாணியானது, "ஆதிரை! உன்கணவனர் இறக்கவில்லை; அவன் பிழைத்துச்சென்று இப்பொழுது நாகர்மலையிலிருக்கிறான்; அங்கே பலவருடந்தங்கான்; சந்திரதத்தனென்னும் வாணிகனுடைய கப்பல்வழியேவந்து உன்னையடைவான்; நீ வருந்தாதே" என்று கூறிற்று; அதைக்கேட்ட ஆதிரை வருத்தமொழிந்து வீட்டையடைந்து கணவன் விரைவதுவருதலைக்குறித்து அதற்கேற்ற புண்ணியங்களே இடைவிடாது செய்துகொண்டிருந்தாள்; அங்கே நாகர் மலையையடைந்த சாதுவன், ஒருமரநிழலிலிருந்து அயர்ச்சியால் துயில் கொள்ள, அம்மலையிலுள்ளநாகர்கள்வந்து இவ்வுடம்பு நமக்கு நல்லவுணவாகுமென்றெண்ணி அவனை எழுப்பினர்; அவன் அவர்கள்பாஷையை விளங்கக்கற்றவனாதலால், அவர்களோடுபேச, அவர்கள் அவனைவருத்தாதலைத் தவிர்த்து, "எங்களாசிரியன் ஒருவனிருக்கின்றான்; அவனிடம் நீ வரவேண்டும்" என்று அழைத்துச்சென்றார்; சாதுவன், அவர்களோடும் போய்,

கன்னடு குழியினுங் கழிமுடை நாற்றமும்
வென்னெய் புணர்க்கு மிரவிய விருக்கையி
லெண்ணுதன் பிணமோ டிருந்தது போலப்
பெண்டே னிருந்த, (சுஉ - சுசு)

அவர்களுடையகுருநாதனைக்கண்டு அவனுடனளவளாவி அவனைவயமாக்கிக்கொண்டான்; கொள்ளவே அக்குருமகன், "நீ இங்குவந்தது எதன்பொருட்டு?" என்ன, சாதுவன் நிகழ்ந்ததைக்கூறினன். அவன், "பணியால் வருந்தியவினைக்கு வேண்டியவளவு கள்ளோடுமீனையுங்கொடுத்துப்பின் இனியளாகிய நங்கை ஒருத்தியையுங்கொடுபின்" எனச்சொன்னன். சாதுவன் அதுகேட்டு அவனுடைய அறியாமைக்குவருந்தி, "எனக்கு

அவைவேண்டா" என்றான்; அவன், "பெண்டிரையும் உண்டியையும்மன்றி மாந்தர்க்கு இன்பந்தருவது வேறே யாதளது? இருந்தாற்சொல்வாய்" என்று கோபித்துச்சொல்ல, சாதுவன்,

"மயக்குங் கள்ளு மன்னுயிர் கோறலுங்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலு
முறங்கலும் விழித்தலும் போன்ற தண்மையின்
கல்லறஞ் செய்வோர் கல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோ ரருநர கடைதலும்
உண்டென வுணர்தலி னுரவோர் கோள்தனர்" (அச - கo).

என்றுகூறினன்; பின்பு அவன்கேட்ட வினுக்களுக்கெல்லாம் தக்கவாறு விடைகூறி மற்றபிறப்பும் புண்ணியபாவங்களும் அவற்றால்வரும் இன்பதுன்பங்களுமுண்டென்பதை அறிவுறுத்தி இறக்கும்வரையும் நடக்கவேண்டியமுறையையும் அவனுக்கு இயையத்தெரிவித்து விடைபெற்று, அவன்கொடுத்த சந்தனம் அகில் துகில் முதலியவற்றைக் கைக்கொண்டு, அங்குவந்த சந்திரதத்தனென்னும் வாணிகனுடைய கப்பலிலேறி இந்நகரையடைந்து இவளோடு வாழ்வானுகிப் பல தானங்களுஞ்செய்தான். அப்படிப்பட்ட மேம்பாட்டையுடையளாகிய இந்த ஆதிரையின்கையால் முதலிற் பிச்சைபெறுக" என்றுசொல்ல, மணிமேகலை, அவளுடைய மனையிற்புகுந்து வாய்பேசாமற் சித்திரம்போல நின்றாள்; நின்றவுடன்,

தொழுது வலங்கொண்டு தயரது ளெளியோ
டமுத சுரபியி னகன்சரை நிறைதர,
"பாரக மடங்கலும் பசிப்பிணி யறுக"என
ஆதிரை யிட்டன *ளாருயிர் மருந்து. (கசஉ - கசடு).

## கஎ.—உலகவறவிபுக்ககாதை.

ஆதிரையளித்த பிச்சையை முதலில் ஏற்றபின்பு அமுதசுரபியிலுள்ள சோற்றுத்திரளை,

அறத்தி னீட்டிய வொண்பொரு ளறவோன்
றிறத்து வழிப்படூஉஞ் செய்கை போல, (கூ - ச).

எடுக்க எடுக்கக் குறையாமல் மேன்மேலும் வளர்ச்சியையடைந்து, வந்தோருடைய பசியைப் போக்கி விளங்கிற்று. அதுகண்ட காயசண்டிகை வியந்து மணிமேகலையை வணங்கி, "அன்னாய்! என்னுடைய தீராப்பசியையும் தீர்த்தருளவேண்டும்" என்று வேண்டினள்; உடனே மணிமேகலை, அமுதசுரபியிலிருந்து ஒருபிடியமுதையெடுத்து அவளதுகையிலிட்டாள். அதனையுண்டு அப்பசிநோய்தீர்ந்து மகிழ்ந்த காயசண்டிகை, "வடதிசையில் விந்தியாதரருலகிலுள்ள காஞ்சனபுரமென்பது என்னுடைய ஊர்;

* ஆருயிர்மருந்து - அன்னம்.

தென்னிலச்சண்ணாபிய பொதியின்மலையின்வளங்களைக் காண்பதற்குக் கண்ணனும் யானும் புறப்பட்டுப்போந்து இடையேயுள்ள காட்டாறொன்றின் கரையிலிருந்தேம். இருக்கையில், விருச்சிகனென்னு முனிவனொருவன் பாரணஞ்செய்தற்குப் பனங்கனியோன்ற பருமையையுடைய நாவற்கனியொன்றைத் தேக்கிலையில்வைத்துவிட்டு நீராடச்சென்றான். அக்கனி அம்முனிக்கு உணவாகுமென்பதனை அறியாதகான் முற்பிறப்பிற் செய்த தீவினையின்முதிர்ச்சியாற்சென்று அக்கனியைக் காலாற் சிதைத்துக்கெடுத்தேன்; நீராடி மீண்டுவந்த விருச்சிகன் அக்கனி. என்ஞற் சிதைந்திருத்தலையறிந்து கோபித்துத் தெய்வத்தன்மையுள்ளதும் பன்னிரண்டுவருடத்துக்கு ஒருமுறை ஒருகனியைத்தருவதுமாகிய நாவன் மரத்தினுண்டானது இது; இதையுண்டோர் பன்னிரண்டுவருடம் பசியொழிந்திருப்பார்; நானே பன்னிரண்டுவருடம் பட்டினியிருந்து ஒருநாளுண்ணும் விரதமுடையேன்; உண்ணுந்தினமும் இன்றுதானே; யான் உண்ணக்கருதிய கனியும் இதுவேகாண்; இதனை நீ அழித்துவிட்டாய்; ஆதலால் ஆகாயவழியேசெல்லுமந்திரத்தை மறந்து யானேத்தியென்னும் நோயாற் பன்னிரண்டுவருடம் நீராப்பசிகொண்டுவருந்திப் பின்பு இங்கு இக்கனியை நான் உண்ணுந்தினத்தில் நீ பசியொழிவாயாக" என்றுசூழ்ப் பசியால்வருந்திப்போயினன்; உடனே எனக்குப் பெரும்பசியுண்டாயிற்று; அதனால் மிக்கவருத்தமடைந்தேன்; அதுகண்ட என்கணவன் சிறந்தகனிகள் கிழங்குகள் காய்கள்முதலியவற்றை நிரம்பக்கொணர்ந்து என்னையுண்பிக்கவும் அப்பசி நீரவில்லை; அந்தரஞ்செல்லும் மந்திரமும் என்னினைவுக்கு வரவில்லை; அப்பொழுது அதுகண்டுவருந்திய என்கணவன், "நீ நடந்துசென்று இத்தமிழ்நாட்டில் ஆற்றூமாக்கட்கு அருந்தவர்களாகிய பெருஞ்செல்வர்கள் வாழ்ந்திருக்கும் காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து அங்கேயிருப்பாயாக" என்றுசொல்ல, நான் அவ்வண்ணமேவந்து இங்கிருக்கின்றேன்; இங்கு இந்திரவிழாநடக்குங்காலத்தில் ஒவ்வொருவருடத்தும் என்கணவன்வந்து என்வருத்தத்தைப் பார்த்துவிட்டுத் தானும்வருந்திச் செல்வான்.

தணிவில் வெம்பசி தவிர்த்தனை வணங்கினேன்
மணிமே கலையென் வான்பதிப் படர்கேன்; (எக - எச)

இந்நகரில் சூளிவர்கள் பலரிருக்கும் சக்கரவாளக்கோட்டமென்று ஒன்றுண்டு; அதில் பலரும்வந்தபுகுதற்காகவே எப்பொழுதும் கதவுதிறந்தன்ன உலகவறவியென்னும்பெயரையுடைய அம்பலமொன்றுண்டு. அதில்,

ஆரு நாக்க ளுறுபசி யுழந்தோ
ராரு மின்மையி னரும்பிணி யுற்றோ
ரிவரோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலர்; (எக - அ

ஆதலால் அவ்விடத்திற்கு செல்வாயாக" என்றுசொல்லிவிட்டு, தன்னூருக்குப்போயினள்; போகவே மணிமேகலை, விதியின் ஒரு பக்கத்தே ஒதுங்கிச்சென்று உலகவறவியைபடைந்து மூன்றுமுறை வலம்வந்து பணிந்து அதிலேறிச் சம்பாபதியையும் கந்திற்பாவையையும் வணங்கி,

வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப்
பசிஇன வருந்திய பைதல் மாக்கட்
கமுத சுரபியோ டாயிழை தோன்றி, (கக - கச)

"இப்பாத்திரம் ஆபுத்திரன்கையிலிருந்ததாகிய அமுதசுரபி; உண்ணுதற்கு விருப்பமுள்ள யாவரும் வருக" என்றுசொல்ல, பலரும்வந்து உண்பாராயினர்; ஆகவே அவ்வம்பலத்தில் உண்ணுமொலிமிகுந்தது.

## கஅ.—உதயகுமரன் அம்பலம்புக்காதை.

மணிமேகலை பிக்குணிக்கோலங்கொண்டு பாத்திரமேந்தி ஐயமேற்று உலகவறவியிற் சென்றுளென்பதைக் கேட்ட சித்திராபதி, மன்கொதித்து வெய்துயிர்த்துக் கலங்கி, "மணிமேகலையை இச்செயலினின்றும் நீக்குவேன்" என்றெண்ணிக்கொண்டு நாடகக்கணிகையரெல்லாரையும் பார்த்து, "கோவலன் இறந்ததுகேட்டு மாதவி எல்லாவற்றையுந் துறந்து முனிவர்களுடைய தவச்சாலையையடைந்து தாபதக்கோலம்பூண்டிருத்தல் நமக்குத்தக்கதாக இருக்கின்றது; யாம கணவனுடன் இறக்கும் பத்தினிப்பெண்டிரல்லேம்; பாணன் இறந்தபொழுது அவனுடன் இறவாத யாழைப்போல்வேம்; பின்னும்,

நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம், (கக - உ)

தாபதக்கோலந்தாங்குவது நம்முடையகுலவொழுக்கத்திற்கு ஒத்ததன்று; மாதவிமகள் மணிமேகலையின் பிக்குணிக்கோலத்தைமாற்றி அவள் கையிலேந்திய பிச்சைப்பாத்திரத்தை,

பிச்சை மாக்கள் பிறர்கைக் காட்டி, (கo)

பலநாளாக விரும்பிக்கொண்டிருக்கும் உதயகுமரனுல் அவளை அவனது தேரிலேற்றுவித்தே வருவேன். அங்ஙனஞ்செய்து வாரேனுயின் குடிக்குற்றப்பட்டு ஏழுசெங்கலைத் தலைமேலேற்றிக்கொண்டு நாடகவரங்கைச் சுற்றிவந்து பழியோடிருக்கும் நாடகமடந்தையாபோல இனி நான் நாடகக்கணிகையர்வீட்டிற்குச் செல்லேனாக் கடவேன்" என்று சபதஞ்செய்துவிட்டுத் தன்னேழ சிலர் சூழ்ந்துவரசென்று உதயகுமரனுடைய அரண்மனையையடைந்து அவனைக்கண்டு திகைத்து, மணிமேகலை உலகவற

னியை அண்டத்திருக்கின்றானென்பதை அவனுக்குக்குறிப்பிக்க, அவன் உலவவனத்தில் மணிமேகலையைக் கண்டதுமுதல் நிகழ்ந்தவற்றைக்கூறி அவனிடத்துள்ள விசேடத்தன்மையைப் பாராட்டினன்; சித்திராபதி, அவனுடைய மனத்தை வேறுபடுத்தும்வார்த்தைகள் பலவற்றைச்சொல்லுமுயல, அவன் உள்ளம்பிறழ்ந்து தேரேறி உலகலறவியையடைந்து, பலர்க்கும் உணவளித்துக்கொண்டிருக்கும் மணிமேகலையைக்கண்டு அஞ்சிச்சென்று, "நீ தவக்கோலம்பூண்டது யாதுகருதி" என்று வினவினன்; மணிமேகலை, "பழம்பிறப்பிற் கணவனுக இருந்த இவ்வீவனவணிகுதல் முறையாகும்" என்று எண்ணி வணங்கி,

> "பிறத்தலு மூத்தலும் பிணிப்பட் டிரங்கலு
> மிறத்தலு முடைய நிலம்பைக் கொள்கல
> மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
> மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்" (கசுஉ - கஉக)

காள்ள நினைந்து அவ்வீவனிடங்கிக் கோயிலினுள்ளேசென்று சம்பாபதியை வணங்கி, முன்பு மணிமேகலாதெய்வமுபதேசித்த மந்திரத்தை ஜபித்துக் காயசண்டிகைவடிவமுற்று அமுதசுரபியையேந்தி வெளியேவந்துநின்றாள்; அவள் அவ்வாறுவந்ததையறியாத உதயகுமரன்—சென்றமணிமேகலை சம்பாபதிகோயிலுள்ளே ஒளித்துக்கொண்டாள்—என்று நினைந்துசென்று சம்பாபதியைவணங்கி, "பிச்சைப்பாத்திரத்தைக் காயசண்டிகையின் கையிற்கொடுத்துவிட்டு ஒளித்துச்சென்ற மணிமேகலையை இங்கேயுள்ள இவ்வளவுபாவைக்கூட்டங்களுள்ளே நான் எவ்வாறு தெரிந்துகொள்ளுவேன்; நீ எனக்கு அவளைக் காட்டாயாயின், இவ்விடத்திலேயே *பாடுகிடப்பேன் பலநாள்சென்றுஞ் செல்லுக. மணிமேகலையை இங்கேவிட்டுவிட்டு நான்மட்டும் போகேன்; உன்னுடைய திருவடியைத்தொட்டேன்" என்று சபதங்கூறினன்.

## கஉ.—சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை.

உதயகுமரன், சம்பாபதியைவணங்கி இங்ஙனஞ் சபதங்கூறுகையில், அவன்கேட்கும்படி, "நீ எம்பெருமாட்டியின்முன்னே ஆராய்ந்துபாராமல் வஞ்சினங்கூறினை; இங்ஙனங்கூறியதில் யாதொருபயனுமில்லை" என்று ஆங்குள்ள சித்திரங்களுள் ஒன்றை அதிட்டித்துநிற்கும் தெய்வங்கூறியது; அவ்வார்த்தையைக்கேட்டு அவன் மனங்கலங்கி வருந்தி "மணிமேகலையை மறப்பாய்" என்று முன்னங்கூறிய தெய்வத்தின் வார்த்தையும் வியப்பைத்தருகின்றது; தெய்வத்தன்மையுள்ளதாக இருத்தலின், அவள் ஏந்திய பாத்திரமும் வியப்பைத்தருகின்றது; இச்சித்திரம்

---

* பாடுகிடத்தல் - வரம்பெறுதற்குக் கிடத்தல்.

பேசியதும் வியப்பை உண்டுபண்ணுகின்றது; இவற்றையெல்லாம் மணி மேகலையின் செய்தியை அறிந்துகொண்டபின்பு அறிவோம்" என்று நிச் சயித்துக்கொண்டு காமபரவசனுய் வெய்துயிர்த்து மீண்டு தன் இருப் பிடத்தை யடைந்தான். மணிமேகலை, "இவ்வடிவத்தோடு திரிந்தால் உதயகுமரன் விட்டுநீங்கான்; கைப்பற்றிக்கொள்ள முயலுவன்; ஆத லால், நாம் காயசண்டிகைவடிவங்கொள்ளுதல் நன்று" என்றெண்ணி அவ்வடிவுகொண்டு சம்பாபதியின் கோயிலிலிருந்த அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு எங்கும்போய், பசித்துவருந்த யாவருக்கும் உண வளித்துச் செல்லுபவள், ஒருநாள், அந்தகரத்துள்ள சிறைசாலையிற் புகுந்து அங்கே தண்டிக்கப்பட்டிருந்து பசியால்வருந்துவோரை அரு ளுடன்பார்த்து மனமுருகி இனியமொழிகளைக்கூறி உண்பிப்பாளாயி னள்; அதனைக்கண்ட காவலாளர் அவள் ஒரு பாத்திரத்திலிருந்தே பலருக்கு உணவளித்தலைத் தெரிந்து வியப்புற்று, "இப் பாத்திரத்தின் விசேடத்தையும் இவள் செய்கையையும் அரசனுக்குத் தெரிவிப்போம்" என்றுநினைந்து சென்று, ஒருமண்டபத்தில் மிக்கசிறப்புடன் சீர்த்தி யென்னும் இராசமாதேவியோடு வீற்றிருக்கும் அரசனுடைய செவ்வி யைப்பார்த்துச் சேய்மையில் வணங்கிநின்று,

> "வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
> யொளியொடு வாழி யூழிதோ றூழி
> வாழி யெங்கோ மன்னவர் பெருந்தகை
> கேளிது மன்னேம் கெடுகின்' பகைஞர்" (கஉஎ - கஙo).

என்றுவாழ்த்தி, "யானைத்தீயென்னும்நோயால் வருந்தி உடல்மெலிந்து இருகரில் திரியுமங்கையொருத்தி, சிறைக்கோட்டத்துள்ளேவந்து தே வரீவாழ்த்திக் கையின்கண் பிசசைப்பாத்திரம் ஒன்றையேவைத்துக் கொண்டு அதிலிருந்துண்டாகி வளரும் சோறமுல் அங்கேயுள்ள எல்லா ருடைய பசியையுநீர்த்து விளங்குகின்றுள். இவ்வற்புதத்தைத் தெரி விப்பதற்கே வந்தோம்" என்றார். அதைக்கேட்ட அரசன், "அம்மங்கை யை இங்கே அழைத்துவருக" என்றன். உடனே காவலாளர்கள்வந்து அதனைச்சொல்ல, அவள்சென்று அரசனைக்கண்டு, "அரசே! உனது அருள் வாழ்க" என்றுள். அரசன், "மிக்க தவமுடையாய்! நீயார்? கையிலேந் திய பாத்திரம் எங்கேகிடைத்தது?" என்றன். அவள் "அரசே! நெடுங் காலம் வாழ்வாயாக; யான் விஞ்சைமகள்; இந்தகரில் வேற்றுவடிவங் கொண்டுதிரிந்தேன். இது பிசசைப்பாத்திரம்; இதனை அம்பலத்தே யுள்ள தெய்வமொன்று எனக்கு அருளியது; தெய்வத்தன்மையோடு கூடியது; யானைத்தியென்னுந் தீராப்பசியைத் தீர்த்தொழித்தது; பசியால் மெலிந்தவர்களுக்கு மிருதசஞ்சீவினியாகவுள்ளது" என்று சொல்ல, அர சன் "யான் செய்யவேண்டுவது யாது?" என்றுகேட்ப, அவள் "சிறைச்

சாலையை அறச்சாலையாகச் செய்யவேண்டும்" என்றாள்; அரசன், அவள் விரும்பியவண்ணமே சிறைச்சாலையையழித்துத் தூய்மைசெய்து அவ் விடத்தைப் பலவகையான புண்ணியங்களும் நடத்தற்குரிய இடமாகச் செய்வித்தான்.

## உ0.—உதயகுமரனை வாளாலெறிந்தகாதை.

அரசனுடைய கட்டளையால், சிறைச்சாலை, பலவகைப்புண்ணியங்களும் நிகழ்தற்குரிய அறச்சாலையாய் விளங்கிற்று; உதயகுமரன் இச்செய்தியையெல்லாம் கேட்டு, "மணிமேகலை உலகவறவியை நீங்கி வெளியே வந்தபொழுது அவளைக் கைப்பற்றிக்கொணர்ந்து தேரிலேற்றி அவள் கற்ற வித்தைகளையும் அவள்கூறும் இனிய முதுமொழிகளையும் கேட்பேன்" என்று தன்னுள்ளே எண்ணிக்கொண்டுசென்று அவளிருக்கும் உலகவறவியில் ஏறினன். காஞ்சனனென்னும் வித்தியாதரன், "பெரும்பசியால் வருந்தும்படி காயசண்டிகைக்குப் பொதியின்மலையைச்சார்ந்த காட்டாற்றின்கரையில் விருச்சிகமுனிவன் இட்ட சாபத்தை அவள் அதுபவித்தற்குரிய பன்னிரண்டுவருடங்களும் சென்றன; சென்றும் அவள் வராமைக்குக்காரணம்யாதோ" என்று மிக்க கவலையுற்று, தனது நகரை நீங்கி ஆகாயவழியேவந்து காவிரிப்பூம்பட்டினத்திலிறங்கிப் பூகசதுக்கமும் பல பூஞ்சோலைகளும் முனிவர்களுடைய தவச்சாலைகளும் மன்றங்களும் அம்பலங்களும் ஆகிய இடங்களிலெல்லாம சென்றுசென்று தேடித்தேடித்திரிந்து, காயசண்டிகைவேடமபூண்டு உணவளித்து மாந்தர்கள் பலருடைய பசிகளையும் மாற்றிக்கொண்டிருக்கும மணிமேகலையை மணிமேகலையென்று அறியாதவனாகி காயசண்டிகையென்றே நிசசயித்துக்கொண்டு அருகிற்சென்று அவளைநோக்கி, "நீ வந்திய இப்பாத்திரம் ஒன்றுயிருந்தும் இதனால் அளிக்கப்படும் உணவை அருந்துவோர் பலராய் உள்ளார் எனக்கு இது மிக்கவியப்பைத் தருகின்றது. உன்னைவருத்திய யாதைதியாகியதோயை ஒழித்தற்குத் தேவர்கள் இதனைகொடுத்தார்களோ' என்று சொல்லிப் பின்பு பழையகட்பிணைப் புலப்படுத்துமொழிகள் பலவற்றைக்கூறிப் பாராட்டவும அவள் அவற்றைச சிறிதும் மதியாமல அவளை நீங்கி உதயகுமரனையடைந்து அவனருகேநின்று இளமையின் நிலையில்லாமையை அவனுக்கு அறிவுறுத்தநினைந்து, அங்கே இயல்பாகவந்த முதுமைப்பருவத்தாலொருத்தியைக் காட்டி, முன்பு அழகையுடையவளாயிருந்த அவளுடையஉறுப்புக்கள் வலிமைகுறைந்து அழகுகெட்டு வெறுக்கத்தக்கனவாக இருத்தலைப் பலவாற்றாலும் அவனுக்குப் புலப்படுத்துவாளாகி,

"தண்ணறல் வண்ணர்.....
.....
.....

.....
பூவினுஞ் சாந்தினும் புலான்மறைத் தியாத்தத்
தாவினு மணியினுந் தொல்லோர் வருத்த
வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனே" (சத - உஉ.)

என்றுகூறினள். அவள் அவ்வாறுகூறுதலைக்கேட்ட காஞ்சனன், "பான் பாராட்டிக்கூறுகின்ற சொற்களின்பொருளை இவள் கொள்ளுகின்றிலள்; என்னை மதிக்கின்றிலள்; அபலான் பின்னே செல்லுகின்றாள்; என்னை அயலானைக்கருதுகின்றாள்; காதற்குறிப்பைப் புலப்படுத்திக்கொண்டே நீதிமொழிகளை இவனுக்குக்கூறுகின்றாள்; இவன் ஆசாரியகனுதலி லேயே இவள் இவ்விடத்திற்றங்கிவிட்டாள்போலும்" என்று நினை ந்து மிக்ககோபங்கொண்டு புற்றிலடங்கும் பாம்பைப்போல அவ்வுல கவறிவியினுள்ளேபுகுந்து தீதுகருதி ஒளித்து அடங்கினன். அவன் அங்ஙனம் அடங்கியதை அறியாத உதயகுமரன், மிக்க வேட்கையை யுடையவனாகி, "மணிமேகலைதான் காயசண்டிகைவேடம்பூண்டு கையிற் பிசைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டுவந்துநின்று நம்மை மயக்கினள்; அறிந்தவன்போன்று பழமைகூறிப் பாராட்டிய அயலானொருவன் இங் கே இருத்தலால், இவள் இன்றிரவில் இவ்விடத்தைவிட்டு நீங்குவாளல் லள்; இவள் செய்தியை இன்றிரவின் நடுயாமத்தேதவந்து தெரிந்துகொள் வோம்" என்று தன்னுள் எண்ணிக்கொண்டேசென்று தன்னிருப்பிட மடைந்தான்; மணிமேகலையும் காயசண்டிகையுருவத்தோடே சம்பாபதி கோயிலை அடைந்து வதிந்தாள். அப்பால, எல்லாரும் தூங்கியபின்பு உதயகுமரன் முன்பு எண்ணியவாறே செல்லத்துணிந்து தனியேயெழு ந்து அரண்மனையைநீங்கி உலகவறவியையடைந்து,

வேக வெந்தீ நாகங் கிடந்த
போகுயர் புற்றினுள் புகுவான் போல (கஅ - கஙி)

அதனுள்ளேபுகுந்தான். உடனே, அங்கே முன்னம்புகுந்து இவன்வரவை நோக்கிக்கொண்டே கோபத்துடனிருந்த காஞ்சனன், "இவன் இவளி டத்திலேயே வந்தான்" என்று நிசசயித்து அதிவேகத்தோடுமெழுந்து, விரைந்துபோய், அவன் தோளைவெட்டிவீழ்த்திவிட்டு, காயசண்டிகை யைக் கைப்பற்றிக்கொண்டு ஆகாயவழியேசெல்லுவோமென்று நினைந்து அவளருகேசென்றான்; அப்பொழுது அங்கேயுள்ள கந்திற்பாவையா னது, "காஞ்சன! செல்லாதே, செல்லாதே; இவள் உன்மனைவியாகிய காயசண்டிகையல்லள்; இவ்வடிவம் மணிமேகலைகொண்ட வேற்றுவடி வம்; காயசண்டிகை கடும்பசியொழிந்து ஆகாயவழியேசெல்லுகையில் அவளுக்குநேர்ந்த துன்பத்தைக்கேட்பாயாக; ஆகாயசாரிகள் தூக்கை யெழுந்தருளியிருக்கும் விந்தமலைக்குநேராக ஆகாயவழியிற் செல்லார். யாரேனுஞ் செல்வாராயின், அம்மலையைக்காக்கும் விந்தாகடிகையென்

பவன் அவர்களைச் சாபையினுலேயிழுத்துத் தன்வயிற்றில் அடக்கிக்கொள்வான். இதனையறியாத காயசண்டிகை அம்மலைக்குநேராக மேற்சென்று அவள்வயிற்றில் அடங்கிவிட்டாள். காஞ்சன! இதனையுங்கேட்பாயாக: உதயகுமரன் ஊழ்வினையினுல் இறந்தானையினும் நீ இறந்தும் ஆராயாதவெட்டினமையால், அறிவில்லாதவனேயாவாய்; மிக்க தீவினையைச் செய்துவிட்டாய்; அவ்வினை விடாதுதொடர்ந்து உன்னைவருத்தும்" என்று சொல்லியது. அதுகேட்டு மனம்வருந்திக் காஞ்சனன் தன்னகரத்திற் குச்சென்றான்.

## உக.—கந்திற்பாவை வருவதுரைத்தகாதை.

அப்பால், சம்பாபதியின் கோயிலிலிருந்த மணிமேகலை, காஞ்சனன் செய்தியையும் உதயகுமரன் வெட்டுண்டுவீழ்ந்து இறந்ததையும் காஞ்சனனுக்குக் கந்திற்பாவைகூறிய அற்புதமொழியையுமறிந்து, உடனே யெழுந்து, தான்கொண்ட வேற்றுவடிவத்தைத்துறந்து, "முற்பிறப்பில் திட்டிவிடத்தால் உன்னுயிரேபோனகாலத்தில நின்பிரிவாற்றுது தீயிற் பாய்ந்து நானும் உயிர்துறந்தேன்; உவவனத்திற்கண்டபொழுது உன் பாற்கருத்தைச செலுத்தியதுபற்றி மணிமேகலாதெய்வம் என்னையெடுத் துச்சென்று மணிபல்லவத்தீவிலவைத்துப் புத்தபீடிகைக் காட்சியால் என் பழம்பிறப்பை எனக்குத் தெரிவித்து, உன் முற்பிறப்பையும் கூறிற்று. அதனால், நீ மூன்று கணவனுக்கிருந்ததையறிந்து யான் உன்பால் அன் புற்று,

> பிறந்தோ ரிறத்தலு மிறந்தோர் பிறத்தலும்
> அறந்தரு சால்பு மறந்தரு தின்பமும்
> யானினக் குரைத்தநின் னிடர்வினை யொழிக்கக்,
> காயசண் டிகைவடி வானேன் காதல, (கக - உஉ)

வித்தியாதரனுடைய வாட்படையால் வெட்டுண்டு வீழ்ந்தனையே; அந்தோ!" என்று புலம்பி வெய்துயிர்த்து வருந்தி அவனருகிற் செலவாளாயினள்; அப்பொழுது, அங்குள்ள கந்திற்பாவைத்தெய்வம், "நீ இவனிடத்திற் செல்லாதே; செல்லாதே; உனக்கு இவன் கணவனுகவிருந்ததும் இவனுக்கு நீ மனைவியாகவிருந்ததும் சென்ற பிறவியிலேமட்டும் நிகழ்ந்தனவல்ல; அதற்கு முன்னும் எத்தனையோபிறவிகளில் நிகழ்ந்தன:

> நினக்கிவன் மகனுத் தோன்றிய தூஉ
> மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்
> பண்டும் பண்டும் பல்பிறப் புளவாற்
> கண்ட பிறவியே யல்ல காரிகை. (உக - ஊஉ)

இங்ஙனம் தடுமாறும் பிறவித்துன்பத்தை ஒழித்துக்கொள்ளுதற்குமுயலும் அறிவினையுடையாய்! இவனிறந்ததுபற்றி நீ துன்பமடையாதே" என்று தனது தெய்வவாக்காற்சொல்லிற்று; அதுகேட்ட மணிமேகலை

சென்று, "இவ்வம்பலத்தில் யாவருக்கும் மெய்ம்மையைச் சொல்லிக் கொண்டு எழுந்தருளியிருக்குந்தெய்வம் ஒன்றுண்டென்பர்; அத்தெய்வம் நீதானே? உன் திருவடியை வணங்குகின்றேன்; சென்ற பிறவியில், திட்டிவிடத்தாலும் இப்பிறவியில் வித்தியாதரனுடைய வாளாலும் இவன் இறந்ததற்குள்ள காரணத்தை நீ அறிவையோ; அறிந்திருப்பாயாயின், அதனை அடிச்சிக்கு உரைத்தருளல்வேண்டுமே" என்றும்; என்றதும், அத்தெய்வம், "புத்ததேவன் அவதரித்து வருதலைக்கூறி, காயங்கரையென்னும் ஆற்றங்கரையிலிருந்துகொண்டு மனிதருடைய அறிவின்மையைப்போக்கும் பிரமதருமமுனிவனை இராகுலனும் நீயும் வழிபட்டு அவருக்குமுதுசெய்விக்கநினைந்து அக்கருத்தை அவருக்கு அறிவித்து அவர் உடன்பாடுபெற்று, "விடியற்காலத்திலேயே அடிசில்முதலியவற்றை விரைந்து ஆக்குவாய்" என்று மடையனுக்குக்கூறினீர்; அவன் யாதுகாரணத்தாலோ அக்காலத்தில்வாராமல் சிறிதுபொழுது பாணித்துவந்து, அங்ஙனம் வந்த அரசத்தால் வழுக்குற்றுக் கால்தளர்ந்து மடைக்கலஞ் சிதையும்படி வீழ்ந்தான்; வீழ்ந்ததனைக்கண்டும் இரங்காமல், "இவன் முனிவாக்குச் செய்யவேண்டிய காரியத்தை விரைந்துவந்து செய்யாது தாழ்த்தான்" என்று சினந்து தோளும் தலையும் துண்டுபட்டு வேறாகும்படி இராகுலன் அவனை வெட்டினான்; வெட்டிய அவ்வல்வினையே அப்பிறப்பில் அவனைத் திட்டிவிடதத்தால் இறக்கசெய்ததன்றி இப்பிறப்பிலும் இங்கு வெடிண்டுவீழசெய்தது. உதயகுமரன் இங்ஙனமிறந்ததற்குக் காரணம் இதுவே; வீணை தன்பயனை ஊட்டாமலொழியாதென்பது திண்ணம்; இன்னுங் கேட்பாயாக; உதயகுமரனிறந்ததற்கு மிகவும் வருத்தமுற்ற சக்கரவாளக்கோட்டத்து முனிவரால் அச்செய்தியையறிந்தவரசன் உன்னைச சிறையில்வைப்பான்; அது தெரிந்த இராசமாதேவி உன்னைச்சிறைமீட்டுத் தன்காவலில் வைத்துக்கொள்வாள்; மாதவியின் வேண்டுகோளாலவரத அறவணவடிகளுடையசொல்லால் அக்காவலினின்றும் நீங்குவை. அப்பால நீ சாவகநாடுபோய் ஆபுத்திரனிடஞ்சென்று அவனுழு மணிபல்லவத்தை அடைவை; தன்வரலாற்றைப் புத்தபீடிகைக்காட்சியாலும் தீவதிலகையாலுமறிந்து அவ்வரசன் தன்னுட்டை யடைந்தபின் நீ ஒரு முனிவன்வேடம் பூண்டு வஞ்சிநகரம் புகுவாய்; புகுந்து அந்நகரத்துள்ள சமயவாதிகள் பலருடைய கொள்கைகளையுங் கேட்பை;

தீவினை யுறுதலுஞ் செத்தோர் பிறத்தலும்
காயே யென்று மயக்கொழி மடவாய்! (ககஉ - ககச)

இதுநிற்க; என்வரலாற்றையுங் கேட்பாயாக; யான் தெய்வகணங்களைச் சார்ந்த ஒருவன்; என்பெயர் துவதிகனென்பது; இந்தப் பழைபதாணில் எனக்குஒப்பாக மயனற்செய்யப்பட்ட இந்தப் படிமத்தைவிட்டு ஒருபொ

மூதும் நீங்கேன்" என்று தனது தெய்வவாக்காற் சொல்லியது. சொன்னவுடன், மணிமேகலை, "அப்பால் என்னுடைய மரணமிறுதியாக நிகழுஞ் செய்திகளையெல்லாம் உரைத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தாள்; பிரார்த்திக்கவே, "மழையில்லாததுபற்றிக் காஞ்சிநகரத்தில் உயிர்கள் பசியால் வருந்துதலையும், மாதவி சுதமதியென்னும் இருவருடன் அறவணவடிகள் அந்நகரஞ்சென்று உன்னுடையவரவைப்பார்த்துக்கொண்டு தங்கியிருத்தலையும் வஞ்சிநகரத்தில் நீ அறிந்து உடனே அக்காஞ்சிநகரஞ் சென்று உணவளித்து எல்லாவுயிர்களையும் பாதுகாப்பாய்; அந்நகரத்தே உன்னுலே பற்பல அற்புதங்கள்நிகழும். அப்பால் வஞ்சிநகரிற் கேட்ட சமயவாதிகளுடைய கொள்கைகளையெல்லாம் அறவணவடிகளுக்கு நீ தெரிவிப்பாய்; அப்பொழுது, அவர்,

தவமுந் தருமமுஞ் சார்பிற் றோற்றமும்
பவமறு மார்க்கமும் பான்மையி னுரைத்து,
" மறவிரு ளிரிய மன்னுயி ரேமுற
வறவெயில் விரித்தாங் களப்பி லிருத்தியொடு
புத்த ஞாயிறு தோன்றுங் காறும் (கூஙூ – ஙூஎ)

இந்தத் தலத்திலேயே இறந்தும் பிறந்தும் தருமோபதேசஞ் செய்துகொண்டு தங்காநிற்பேன்" என்று சொல்லுவர்; அவர் செய்த உபதேசமொழிகள் பிழையாமல் நல்லறங்கள் பலவற்றையும் செய்து இறந்து பிறவிலவரும் பிறப்புக்களை *உத்தரமதுரை நாட்டிலேயேபெறுவாய்; அவைகள்யாவும் உனக்கு ஆண்பிறப்பாகவே நிகழும்; அப்பிறப்புக்களுள் ஒவ்வொன்றிலும் அருளறத்தினின்றும ஒழியாயாகிநின்று முடிவிற் புத்ததேவனுக்கு முதல் மாணாக்கனுகும் பெரும்பேறுற்றுப் பற்றற்று நிருவாணமடைவாய்; இன்னுங்கேள்; உன்குலத்து முன்னோர்களுள் தானந்தாங்கிச் சீலத்தில் மேம்பட்ட ஒருவனைக் கடலினின்றும முன்னம் எடுத்தளித்த மணிமேகலாதெய்வம் நீ முற்பிறப்பில் சாதுசக்கரமுனிவனுக்கு உணவளித்த புண்ணியவிசேடமுடையாயென்பதையறிந்து உவவனத்தினின்றும் உன்னையெடுத்து மணிபல்லவத்திற்கொண்டுசென்று புத்தபீடிகையைக் காணச்செய்தது" என்று தனது தெய்வவாக்கால் அத்தெய்வம் சொல்லிற்று; கேட்ட மணிமேகலை கவலையொழிந்து மயக்கம் நீங்கியிருந்தாள்; அவ்வளவிலே சூரியனுதித்தான்.

## உஉ.—சிறைசெய்காதை.

சூரியனுதித்தவுடன், கந்திற்பாவையையும் சம்பாபதியையும் வழிபட்டவர்கள், அங்கே உதயகுமரன் வெட்டுண்டுகிடத்தலைக்கண்டு, அதனைச் சக்கரவாளக்கோட்டத்திலுள்ள முனிவர்களுக்குக் கூறினர். அம்

* புத்ததேவரவதரித்ததும், அவருக்கு ஞானோதயமானதும் மகதநாடாதலால், அது நேர்த புண்ணியபூமியாகப் பௌத்தரால் மிகப் பாராட்டப்படும்.

மூனிவர்கள், "இவன் வெட்டுண்டதற்குக்காரணம் நீ அறிந்ததுண்டோ?" என்று மணிமேகலையைக்கேட்ப, அவள் நிகழ்ந்தவற்றைச்சொல்ல,அவர்கள் உதயகுமரனுடைய உடம்பையும் மணிமேகலையையும் வேறிடத்தில் ஒளித்துவைத்துவிட்டு அரண்மனைசென்று தம்முடையவரவை வாயில்காப்போரால் அரசனுக்குத் தெரிவித்து உள்ளேபோய் அரசனை யடைந்து அவனைவாழ்த்தியபின்பு, அவர்களுள் ஒருமுனிவர், "அரசே! இன்றுமட்டுமன்று; இங்ஙகரில் காமவிகாரத்தால் மயங்கிப் பத்தினிப் பெண்டிரை யடைத்து வன்மைசெய்தும் தவமகளிரைவிரும்பியொழுகியும் ஒறுக்கப்பட்டு இறந்தோர் முற்காலத்தும் பலருண்டு; கேட்பாயாக: அரசர்களுடைய பரம்பரையை வேரறுத்த பரசுராமன் போர்செய்தற்குவந்தபொழுது, துர்க்கை, அந்நாளில் இங்ஙகரையாண்ட காந்தனென்னும் அரசனைப்பார்த்து, "நீ இப்பொழுது பரசுராமனோடு போர்செய்தற்குச்செல்லுதல் தகுதியன்று" என்றுகூறுதலால், வேறிடஞ்செல்லுதற்குநினைந்த அவ்வரசன் இங்ஙகரைப்பாதுகாத்தற்குரியோர் யாரென்று ஆராய்ந்து காவற்கணிகையின்புதல்வனும் வீரருள்வீரனுமாகிய ககந்தனென்பவனே இதற்குத் தகுதியுள்ளானென்று நிச்சயித்து, அவனை வருவித்து, "அரசாளுங்குலவுரிமை உனக்கின்மையால், அரசபரம்பரையோரைக் கொல்லுதலையே விரதமாகக்கொண்ட பரசுராமன் உன்னோடு போர்செய்தற்குவாரான்; அகத்தியமுனிவருடைய கட்டளை பெற்று யான் மீண்டுவருமளவும் இங்ஙகரை நீ பாதுகாக்கக்கடவை; உன்னைக் காக்கப்படுதலின், இங்ஙகர்க்குக் காகந்தியென்று பெயருண்டாக்கடவது" என்றுசொல்லிவிட்டு வேற்றுவடிவங்கொண்டு தான் கருதியவிடஞ்சென்றான்.

அவன் சென்றபின்பு ககந்தனென்பவனால் இங்ஙகரம் பாதுகாக்கப்பட்டுவந்தது; அப்பொழுது ஒருநாள், ககந்தனுடைய பிள்ளைகளுள் இளையவன், காவிரியில் நீராடிவிட்டுத் தனித்து வருபவளாகிய மருதியென்னும் பார்ப்பனியைக காவிரிவாயிலிற்கண்டு காமபரவசனாய், "நீ வா" என்றழைத்தான்; அவள் மனங்கலங்கி, "இவ்வுலகில் மழைவளத்தைத்தரும் பத்தினிப்பெண்டிராயுள்ளார் பிறருடைய நெஞ்சிற்புகார்; நானோ இவனுடைய உள்ளத்திற் புகுந்தேன்; ஆதலால், இனி †அந்தணனுடைய முத்தீயைப்பேணுந்தகுதி எனக்கு இல்லையே! இதற்குக் காரணம் யாது?" என்று துன்பமுற்றுத் தன்னுடைய வீட்டிற்செல்லாமற் பூத‡சதுக்கம்புகுந்து மயங்கி, "தெய்வமே! கொண்டவனுக்கு யா

---

* காவிரிவாயில் – காவிரிக்கரையில் திருமுகத்துறைகழிகின்றவழி.

† அந்தணனென்றது கணவனை.

‡ சதுக்கம் – நாற்றெருக்கூடுமிடம்.

தொருகுற்றமுஞ் செய்திலேன்; அப்படியிருந்தும் பிறனுடைய செஞ்சில் எளிதாகப் புகுந்தேன்; யான்செய்ததவறு இன்னதென்று எனக்கே புலப்படவில்லை; 'தவமறைந்தொழுகுவோர்முதலிய தீயவர்களைப் பாசங்கட்டிவர நீ இங்கே அறைந்துண்பை' என்று ஆன்றோர்கூறக்கேட்டுளேன்; இப்பொழுது என்னை அங்ஙனஞ்செய்யாமையின், நீ ஈண்டிருத்தல் பொய்யாமோ" என்று அவலித்து அரற்றினள்; *அரற்றும்பொழுது சதுக்கப்பூதந்தோன்றி, "மடக்கொடி! கேட்பாயாக;

†தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
‡பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்; (நூல் - சுக.)

பொய்க்கதைகளையும் நகையைவிளைவிக்குமொழிகளையும் பிறர்வாய்க் கேட்டு நிருத்தகீதவாத்தியங்களையுடைய விழாக்களைவிரும்பித் தெய்வங்களை வழிபடுகியமத்தை மேற்கொண்டிருந்தனை; ஆதலின், உன் ஏவலால் மேகம் மழையைப்பெய்யாது; உத்தமப்பத்தினிப்பெண்டிரைப்போலப் பிறருடைய மனத்தைச்சுடுந்தன்மையும உனக்கு இல்லாதுபோயிற்று. மேற்கூறிய வெற்றுச்செய்கைகளை விடுவாயாயின், மேகம் உனதுமொழி வழிப்பட்டு ஒழுகாநிற்கும்; மனமேபோனவாறேயொழுகும் பெண்டிரைக் கட்டுவதுபோல உன்னை என்பாசம் கட்டுதல்செய்யாது; குற்றஞ்செய்தோரை ஏழுநாளவரையில் தண்டித்தல் அரசனுடைய முறைமை; அவன் அக்காலவரையறையுள் அதனைசெய்யாதொழியின், அப்பால் தண்டிப்பது என்னுடைய முறைமையாகும்; இவ்வேழுதினத்திற்குள்ளேதானே இச்செய்தியைக் கேட்டுக் ககந்தன் உன்னைவிரும்பிய சிறுதொழிலாளனை வெட்டிவிடுவான்" என்று எடுத்துரைத்தது; அப்பூதமுரைத்த ஏழுநாளுக்குள்ளே அச்சிறுதொழிலாளன் தாதையின்வாளால் தடியப்பட்டனன்; மன்னவரேறே! இன்னுங்கேட்பாயாக:—

இங்ஙனமில் முன்பிருந்த பேரழகையுடைய தருமதத்தனென்னும் வாணிகனும் அவன் மாமன்மகளாகிய விசாகையென்பவளும் ஒருவர்பால் ஒருவர் மிக்க அன்புபாராட்டி உரையாடிக்கொண்டிருந்தமை பற்றி, "இவர் காந்தருவமணத்திற்கு உரியவராயினர்" என்று ஊரிலுள்ளாரெல்லாரும் பழிகூறுவாராயினர். அதுபொறாத விசாகையானவள்சென்று உலகவறவியிலெறிந்து, "நகருள்ளீர்! இவள் யாதொருகுற்றமும் இல்லாதவள்" என்று தனது தெய்வவாக்கால் அவளை உயர்த்

* மருதி தன்குற்றத்தையெனைத்துவருந்தியதாக ஆசிரியர்கூறியது மிகப்பாராட்டற்பாலது.

† தீருக்தாள், குடு.

‡ பொய்யில் புலவன் - தீருவள்ளுவநாயனார்.

இக்கூறியது. அதுகேட்டு ஊரார் அவனை வியந்து புகழ்ந்தார்கள்; விசாகை, "இத்தெய்வம் தெளிவியாதாயின் இவ்வூராருக்கு என்பாலுண்டாகிய ஐயம் நீங்காது; மறுபிறப்பிலேதான் மைத்துனனுக்கு மனைவியாவேன்; இப்பிறப்பில் இவனை மணத்தல்செய்யேன்" என்று தன்னுடைய நற்றாய்க்குச்சொல்லிவிட்டுக் கன்னிமாடம்புகுந்து தவஞ்செய்துகொண்டிருந்தாள். அப்பால், தருமதத்தன் தன்பழியைப்போக்கிய கந்திற்பாவையைத்துதித்துக் காவிரிப்பூம்பட்டினத்தைக்கடந்து தென்மதுரையை யடைந்து, "விசாகையையன்றி வேறுமகளிரையான்விரும்பேன்; இப்பிறப்பு இங்ஙனம் ஒழிவதாக" என்று தன்னுட்கூறி விரதம்பூண்டவனுடைவாணிகஞ்செய்து அறவழியே பொருளீட்டிப் பெருஞ்செல்வமுற்று அரசனுல் *எட்டிப்பூப்பெற்று மிக்க சிறப்படைந்து அறுபதுபிராயம் வரையும் அருகநிற்றங்குவானுயினன். அப்பொழுது அவனிடத்தில் ஓரந்தணன்சென்று, "நீ விவாகமின்றி இங்ஙகரத்தே இருந்து என்னகாரியஞ்செய்தனை? மனைவியில்லாதவர்கள் எவ்வளவு தருமஞ்செய்வாராயினும் தெய்வலோக மடையாரென்பதை நீ கேட்டறிந்திலையோ? இனித் தாழ்த்தலின்றி உன்னகரஞ்சென்வாயாக" என்றுகூறலும், தருமதத்தன் அங்ஙகரைவிட்டு நீங்கிவந்து இங்ஙகரத்திற் புகுந்தான். அவன்வந்தது கேட்டவிசாகை சிறிதும் நாணமின்றிக் கன்னிமாடத்திலிருந்து புறத்தே வந்து அவனியடைந்து, "இப்பொழுது நமமுள் ஒருவரையொருவர் நாம் அறிந்திலேம்; முன்பு நம்மையடைந்த அழகுகள் எங்கே ஒளித்துச்சென்றன? உனக்கு அறுபதுபிராயம் ஆயின; எனக்கும் கூந்தல் நரைத்தது. முன்பிருந்த இளமையும் நாமமும் எங்கே ஒளித்துப்போயின? உரைப்பாயாக. இப்பிறப்பில் யான் நின்னடியை யடைந்தேன். மறுமையில் நின்னை மணப்பது திண்ணம்.

> இளமையு நில்லா யாக்கையு நில்லா
> வளைவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
> புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
> மிக்க வறமே விழுத்துணை யாவது' (கஉரி - கஉச).

ஆதலால், தானஞ்செய்க" என்றுசொல்ல, அவன் தான் சட்டியபொருள் நீலியல்லாம் விசாகைக்குக்காட்டி அப்பொருள்களைக்கொண்டு அவளோடுசெய்த கல்லறங்கள் மிகப்பல; இதுநிற்க; முன் இந்தவிசாகை கந்திற்பாவைத்தெய்வத்தால் பழிநீங்கிப் பலநாடுதேவ வீதியில்வருகையில், முன்பு மருகிபால்மடித்தகன்னையடையாமற்போனான், அவ்விசாகையைக் கண்டு அதிமோகங்கொண்டு, தன் சீலியல்லாதமாலையைவாங்கி அவள்

---

* எட்டிப்பூ - அரசனுல் வணிகர்களுக்குக் கொடுக்கப்படும் எட்டிப்பட்டத்திற்கு உரிய பொற்பூ.

கழுத்தில் இடுதற்குத்துணிந்து அம்மாலையையெடுத்தற்காக நீண்டு தன்கையைக் குடுமியிற்செலுத்த அக்கை அதைவிட்டு நீங்காததாயிற்று. ஆகவே "விசாகையின் ஒழுக்கவிசேடத்தால் அவன்கை கீழே இறங்கிலது" என்று பலர்கூறக்கேட்ட ககந்தன் மிகுந்த கோபங்கொண்டு தன் மகனென்றுபாராமல் உடனே அவனை வெட்டிவீழ்த்தினன்" என்று கூறலும், அரசன், 'இன்றுமட்டுமென்று' என்று தொடங்கிப் பலவற்றை யுங்கூறினீர். முன்புகழ்ந்ததாகக்கூறிய அத்தீபவொழுக்கம் இக்காளி யாம உளதோ? இம்புமின்" என்றுகேட்ப, ஒருமுனிவர்,

"முடிபொரு ளுணர்ந்தோர் முதுநீ ருலகிற்
கடியப் பட்டன வைந்துள வவற்றிற்
கள்ளும் பொய்யுங் களவுங் கொலையுந்
தள்ளா தாகுங் காமந் தம்பா
லாங்கது கடிந்தோ ரல்லவை கடிந்தோரென
நீங்கின ரன்றே நிறைதவ மாக்க
ணீங்கா ரன்றே நீணில வேந்தே
தாங்கா நரகந் தன்னிடை யுழப்போர், (சூகூ - களு)

தன் கணவனுகிய கோவலன் கொலையுண்டதுபற்றியல் மாதவி உலக வாழ்வைவெறுத்து முனிவர்களுடைய தவசரிதையை யடைந்தாள். அவள் பெற்ற மணிமேகலையென்பவள் இளமைபருவத்தேதானே தவஞ் செய்யத்துணிந்து சிந்தியும் பேரிலுஞ்சென்று பீடமேற்று அருந்தி ஊரம்பலமடைந்தாள்; அவள் அவ்வியல்பினளாகவும், அவளை விழைந்து நிழல்போல்விட்டுநீங்காமற் காமபரவசனுய் நள்ளிருளில் உதயகுமரன் அவ்வம்பலத்தை யடைந்தான். அதுதெரிந்த மணிமேகலை, அவன் தன்னை நலியாதிருக்கவேண்டிக் காயசண்டிகைவடிவடைபூண்டாள். அங் கே முன்னமிருந்தகாயசண்டிகையை அழைத்துரசெலுத்தற்குவந்த அவள் கணவனுகிய விந்தியாதரன்கண்டு, அவள் மணிமேகலையென்பதை யறியாமல், அவளைத் தன்மனைவியாகிய காயசண்டிகையென்றும் அங்கே வந்த உதயகுமரனைத் தன்மனைவியைச சேர்தற்கு வந்தவனென்றுந் தானே நிச்சயித்துக்கொண்டு முறுகியகோபமுற்று உடனே அவனை வா ளால் வெட்டி வீழ்த்தினன்" என்று சொன்னர். அதுகேட்ட அரசன் தன் மகனிறந்ததற்குச சிறிதும வருந்தாமல், பிராழிகவெனுதியைப பார்த்து, "உதயகுமரனுக்கு யான் செய்யவேண்டிய கடமையைத் தான் செய்தமையால் விந்தியாதரன் தகவிலனுனன்;

மாதவர் நோன்பு மடவார் கற்பும்
காவலன் காவ லின்றெனி னின்றுல்; (உஅ - உக).

தன்மகனைப் பூமியிலே கிடத்தி அவன்மீது தேர்க்காலைசெலுத்தி முறை செய்த அரசர்பிரானுடைய பரம்பரையில ஒருதீவினையாளன பிறந்தா

* சோழிகவேளுதி - மந்திரிகளுளொருவன்.

னென்பதை மற்றை அரசர்கள் கேட்குமுன்னம் அவனைப் புறங்காட்டை வித்துக் கணிகைமகளாகிய மணிமேகலையையும் சிறைப்படுத்துக" என்றனன். அவன் அவ்வாறுசெய்தான்.

## உசு.—சிறைவிடுகாதை.

பிற்பாடு, அரசன்கட்டளையால், வாசந்தவையென்னு முதியவளொரு த்தி, புத்திரதேசாதத்தாற் கலங்கி வருந்தும் இராசமாதேவியை விரைந் தடைந்து தொழுது முன்னின்று வாழ்த்தி அவளுடையவருத்தம்நீங் கும்வண்ணம் பலகட்டுரைகள்கூறி ஒருவாறு ஆற்றுவித்துப்போயினள். அவள் போனபின்பு இராசமாதேவி தன்னுடையவருத்தம் புறத்தேதோ ன்றுதவ்வண்ணம அடக்கிக்கொண்டவளாய், "மணிமேகலையை வஞ்சித்து வருத்துவேன்" என்று எண்ணி அரசனிடஞ்சார்ந்து, "செங்கோல்வேந் தே! மணிமேகலையின் பிக்குணிக்கோலத்தைக்கண்டு தன்னறிவுவேறு பட்ட உதயகுமான் அரசாட்சிக்கு உரியவனல்லன்; அவன் அக்கொடுந் தொழிலால் இழந்தது தக்கதே; தனது இளமையைப் பயனற்றதாகச் செய்த பேரறிவுடையளாகிய மணிமேகலைக்குச் சிறை தருதியன்று" என் றாள். அரசன், "உன்கருத்து அப்படியாயின் அவளைச் சிறையினின்றும் விடுவி" என்று கூறினன். கேட்ட இராசமாதேவி சிறையினின்றும் விடுவித்து அவளை அழைத்துக்கொண்டு அரண்மனைபுட்சென்று, "இவ் வூரிலுள்ளாரெல்லாரும் அடிதொழுதுபோற்றுமபடி இவளைப் *பித்தியாகச்செ ய்வேன்" என்றெண்ணி மயக்குமருந்தை அவளுக்கு ஊட்டினள். அவள் மறுபிறப்புணர்ந்தவளாதலால் சிறிதும் அறிவுவேறுபடாதிருந்தாள். அப்பால் இராசமாதேவி அமிழிலியாகிய ஓரிளைஞனை அழைத்து, "இவ ளுடம்பை எப்படியேனும் வேறுபடித்தி 'மணிமேகலை என்னைவிரும்பினா ள்' என்று பலர்க்கும சொல்லவாயாக" என்று சொல்லிப் பொற்காசுகள் பலவற்றைக் கைநிறைய அவனுக்குக்கொடுப்ப, அவன் அத்தீச்செயற்கு டமபட்டு மணிமேகலையிருந்த இடத்தை அடைந்தான். அடைதலும் அவள் 'இவன்வந்தது இராசமாதேவியின வஞ்சதால' என்றுணர்சசயித்து வேற்றுருவெய்துவிக்கு மந்திரத்தைஜபித்து ஆண்வேடம்பூண்டு அங் கேயிருந்தாள். அங்ஙனமிருந்ததனைக்கண்டஅமிழிலி நடுநடுங்கி, "அர சருடைய அந்தப்புரத்தில் ஆடவர் அணுகார்; இக்கொடியவளின் தீய நினைப்பையானறிந்திலேன்" என்றுபயந்து அவ்விடத்தைவிட்டு விரைந்து புறத்தே ஓடிப்போயினன். அதன்பின் இராசமாதேவி நமது அருமைப் புதல்வனை மயக்கி மாளச்செய்த இவளை இனி உயிரோடுவையேனென்று "நோய்மிகுதியால் இவளுக்கு உணவுசெல்லவில்லை" என்று

* பித்தி - பைத்தியங்கொண்டவள்.

அவள்பாற் பொய்க்கோயொன்றைக்காட்டி அவளைப் *புழுக்கறையில் அடைப்ப, அவள் ஊணெழிமந்திரமுடையவளாதலின் அம்மந்திரத்தை ஜபித்துச் சிறிதும் வாட்டமின்றி அவ்வறையிலேயே இருந்தாள். அதனைக்கண்ட இராசமாதேவி ஆச்சரியமுற்று நடுநடுங்கி அவளைவணங்கி, "மகனையிழந்த பெருந்துன்பமொழுக்கலாற்றாது இத்தீங்குகளைசெய்தேன்; நீ இவற்றைப் பொறுத்தருளவேண்டும்" என்று பலமுறைவேண்டினள். வேண்டலே மணிமேகலை, "சென்றபிறப்பில் நீ பதியின் வயிற்றிற்றோன்றிய இராகுலனைத் திட்டிவிடமென்னும்பாம்பு உயிருண்டபொழுது, அதனைப்பொறுத்துத் தீயிற்பாய்ந்து என்னுடைய உயிரைச்சுட்டநாளில்,

யாங்கிருந் தழுதனை யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
யுடற்கழு தனையோ வுயிர்க்கழு தனையோ
வுடற்கழு தனையே லுண்மகன் றன்னை
யெடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
யுயிர்க்கழு தனையே லுயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரிய
தவ்வுயிர்க் கன்பினை யாயி னுய்தொடி
யெவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டும் : (எக - எசு)

உன்மகனை வித்தியாதரனெருவன் வெட்டிவீழ்த்தியதற்குக் காரணமான தீவினையை இன்னதென்றுசூறுவேன்; கேட்பாயாக; அது முற்பிறப்பில் மடைக்கலஞ்சிதையவீழ்ந்த மடைத்தொழிலாளனை வெட்டிவீழ்த்தியதரனுண்டாகியதீவினையே; அத்தீவினை அப்பிறப்பிலேயே நஞ்சுவிழியரவால் அவனுடைய நல்லுயிரைவாங்கி இப்பிறப்பிலும் விஞ்சையன்வாளால் வெட்டுண்ணச்செய்தது; 'இசசெய்திகளையெல்லாம் நீ எப்படி அறிந்தாயோ?' என்பையாயின், நடந்தது இவ்வாறுகும்" என்று தான் உவவனஞ்சென்றதுமுதலிய எல்லாவற்றையும் அவளுக்கு விளங்கக்கூறிப்பின்னுங்கூறுவாளாயினள்: "நீ மருந்தால் எனக்குப்பித்தேற்றினை; யான் மறுபிறப்புணர்ந்தனைகளின், சிறிதும் அறிவுபிறழாதிருந்தேன்; உன் ஏவலால் கல்லாக்கயவன் என்பாலவரவேற்றுருவெய்துவிக்கும் மந்திரவலியால் ஆணுருக்கொண்டிருந்தேன். யாதொருநோயுமில்லாத என்னைப் பொய்க்கோய்காட்டி புழுக்கறையில் அடைத்தாய்; ஊணெழிமந்திரமுடைமையினாலேயே அத்துன்பத்தினின்றும் தப்பினேன். நீ சென்றபிறப்பில் எனக்குக் கணவனுயிருந்த இராகுலனை ஈன்றதாயாதலின், உனது துக்கத்தைக்கண்டு தீவினையைப்போக்கி உன்னை நல்வழிப்படுத்தற்பொருட்டே ஆகாயவழியேசெல்லுதலையும் வேற்றுருக்கொள்ளுதலையும் யான் நீங்கினேனில்லை; இதுநிற்க; இல்வுலகத்துள்ளோர்க்குத்

* புழுக்கறை = வாயில்லாத அறை.

பம் தருவனயாவையினின், காமம், கொலை, கள், பொய், களவென்னும் ஐந்துமாம். இவற்றைத்துறந்தோரே சிலமுடையோராவார்.

செற்றஞ் செறுத்தோர் முற்ற வணர்ந்தோர்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோ ரென்போ
ரல்லன் மாக்கட் கில்லது நிரப்புநர்
திருந்தே ரெல்வளை செல்லுல கறிந்தோர்
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தோர்
தண்டா மறுக்குந் தணிபொரு ளுணர்ந்தோர்
மன்பதைக் கெல்லா மன்பொழி யார்''என
ஞான நன்னீர் நன்கனந் தெளித்துத்
தேனு ரோதி செவிமுதல் வார்த்து
மகன்றுயர் நெருப்பா மனம்வீற காக
வகஞ்சுடு வெந்தீ யாயிழை யவிப்ப, (கஉக - கசக)

இராசமாதேவி, மனந்தெளிந்து மணிமேகலையைவணங்கினள்; மணிமேகலை அதனைப்பொருளாகி; "நீ என்கணவனைப்பெற்றதாயாக இருந்தலன்றி அரசனுடையமாபெருந்தேவியாக இருந்தும் என்னைவணங்குதல் தகுதியன்று" என்றுதடுத்து அவளைத்தானும் அன்புடன்வணங்கினள்.

## உசு.—ஆபுத்திரனுடைந்தகாதை.

மணிமேகலையை விரும்பிச்சென்ற உதயகுமரன் விஞ்சையனுடைய வாட்படையால் உலகவறவியில் வெட்டுண்டு இறந்ததையும் மணிமேகலை சிறையில் வைக்கப்பட்டிருத்தலையுங்கேட்டு வருந்தி நடுங்கி அவளைச் சிறையினின்றும் நீக்கவினைந்த சித்திராபதி, இராசமாதேவிபாற்சென்று வணங்கி, "மாபெருந்தேவி! கோவலனிறந்தானென்று மாதவி தனது பரத்தைமைத்தொழிலைநீத்துத் தவச்சாலையையடைந்ததும், அவள்மகளாகிய *அரங்கக்கூத்தி பாத்திரமேந்தி வீதிகள்தோறுஞ் சென்றுசென்று பிசைதையேற்றதும் யாவரும் அவமதித்துச்சிரித்ததற்கு இடமாயினவேயன்றி வேறலல; இதுநிற்க; உதயகுமரனிறந்ததன்றி, மணிமேகலையால் இனி இந்நகரத்திற்குவரும் பெருந்துன்பமுமொன்றுண்டு; கேட்பாயாக:

முன்னொருநாள், அரசன், இந்நகரிற் கடற்கரையைச்சார்ந்த புன்னைமரச்சோலையில் பேரழகினளாகிய ஒரு மங்கையைக்கண்டு விரும்பி அவளோடும் இன்புற்று ஒருமாதகம் அச்சோலையில் உறைவானாயினன்; அம்மங்கை அவனிடஞ்சொல்லாது தன்னிடஞ்சென்றாள்; செல்லவே, அரசன், இளங்கொடி யாங்கொளித்தனளென்று பலவிடத்துந்தேடிக்கொண்டிருக்கும்பொழுது, அற்புதசக்தியையுடைய ஒரு சாரணன்வர, அரசன் கண்டு அவனைவணங்கி முன்னின்று, "என்னுயிர்போல்பவளாகிய ஒருத்தி

* அரங்கக்கூத்தியென்றது மணிமேகலையை.

இங்கே ஒளித்தனள் ; அவளை அடிகள்கண்டதுண்டோ ? உண்டாயின் சொல்லுக" என்றுகேட்ப, அத்தச்சாரணன், " அரச! அம்மடந்தையை யான் இப்பொழுது கண்டிலேனாயினும் முன்பு அறிந்துளேன் ; கேட்பாயாக; அவள் நாகநாட்டரசனுகிய வளைவணனென்பவனுடைய தேவியான வாசமயிலியென்பவளின் வயிற்றிற்றோன்றிய பீலிவளையென்பாள்; அவள் பிறந்தகாளிற் சோதிடங்கூறவந்த கணி, " இவள் சூரியகுலத்தரசனொருவனைச்சேர்ந்து கருவுற்றுவருவாள்" என்று அரசனுக்குக்கூறினன் ; இது முன்புநடந்தது; அவளை நீகூறியமடந்தை; இனி, அவள்வயிற்றிற்றோன்றுமகனே வருவான் ; அவள் வாராள் ; நீ கவலாதிருக்கக்கடவை ; இன்னும் ஒன்றுகேட்பாயாக ; இந்திரவிழாச்செய்யாதகாரணம் மணிமேகலாதெய்வத்தின் சொல்லால் உன்னகரத்தைக் கடல்கொள்ளுமே ; இந்திரசாபமுமிருத்தலால், அதுதப்பாது ; ஆதலால், யான்கூறியதை உண்மையென்றேநினைந்து, இந்நகரைக் கடல்கொள்ளாதபடி இந்திரவிழாவை வருடந்தோறும் மறவாது செய்துவருக" என்றுசொல்லிவிட்டுப் போயினன். அவன்போன அந்நாள்தொடங்கி, நகரத்திற்கு எப்பொழுதுகேடுவந்துவிடுமோவென்று இந்நகரத்தாரெல்லாரும் நடுங்கிக்கொண்டேயிருக்கின்றனர். தன்னுடையபெயரைப்பிறறமடந்தை தின்பமுறுவாளாயின், அதனைப் பரிகரித்தற்கு மணிமேகலாதெய்வம வருதலுங்கூடுமோவென்று யானும் அஞ்சாநின்றேன்" என்றுசொல்லித் துதித்து, " நல்லமனமுண்டாகப்பெற்ற நாடகக்கணிகையை என்மணிக்குப்போதரும்படி கட்டளையிடுவாய்" என்றுகேட்ப, இராசமாதேவி,

> " கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும்
> உள்ளக் களவுமென் றுரலோர் துறந்தவை (எஎ - எஅ)

மேலானசெய்கையென்றுகொண்ட உனதுபரத்தைமைத்தொழிலை அசுத்தவழியென்றெண்ணிவந்த இவள் உன்னுடன்வந்தது உன்மனையிற் புகுதாள் ; என்னுடனேனே இருத்தற்குரியள்" என்று சொல்லிகொண்டிருக்கையில், மணிமேகலையின் நிலைமையைக்கேட்ட மாதவி, சுதமதிக்குக் கூறி வருந்திச்சென்று அறவணவடிகளைவணங்கி அறிவித்து அவரை முன்னிட்டுக்கொண்டு அவளைச சிறைமீட்டற்பொருட்டு இராசமாதேவியிடம்வர, இராசமாதேவி, அவரைக்கண்டவுடன் மற்றை இருவரோடுமெழுந்து எதிர்சென்று அவரடியைவணங்கினள் ; அவர் " அறிவுண்டாக" என்று ஆசிகூறினர். அப்பால் அவள் அவரைச் சிறந்த ஞானத்திலிருத்தி அடிவிளக்கிச் சிறப்புச்செய்து, " எமதுநல்வினையே மிகப்பெரியோராகிய உம்மை இங்கே எழுந்தருளச்செய்தது ;

> நாத்தொலை வில்லா யாயினுங் தளர்ந்து
> மூத்தவிவ் யாக்கை வாழ்பவர் மாண்டே" (கக • கஅ)

என்றுகூற, அவர், "யான் இக்கவவுடம்பிற் பொருந்தியிருக்கும் அத்த மிக்குஞ் சூரியன்போன்றேன்;

பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்ற
நிறந்தா ரென்கை யியல்பே யிதுகேள்" (கo௯ கo௮)

என்று பன்னிரு *நிதானங்களையும் அவளுக்கு விளங்கஉபதேசித்து, "எப்பொழுதும் நல்லறத்தையே பேணிக் கேட்டு அவ்வாறேயொழுகுக' என்றுசொல்லிப் பின்பு மணிமேகலையைநோக்கி, "மற்றைச்சமயதரு மங்களையெல்லாம் நீகேட்டபின்பு இவற்றையும் இவற்றின்பகுதிகளையும் உனக்குவிளங்க உணர்த்துவேன்" என்றுகூறித் தம்மிடஞ்செல்லுதற்கு எழுதலும், மணிமேகலை எழுந்து அவரைவணங்கிப் பின்பு இராசமாதே விமுதலியோரைநோக்கி, "அறவணவடிகள்கூறிய உபதேசமொழிகளை மறவன்மின்; அவர்கூறியவாறே ஒழுகுமின்; யான் இருநகரிலிருப்பேனு யின், 'உதயகுமரனுக்கு இவள் கற்புரியிருந்தாள்' என்று யாவருங்கூறு வர்; ஆதலால இங்கிருந்து, இனி, ஆபுத்திரனுடைகைந்து பின்பு மணிபல் லவஞ்சாரதது புத்தபீடிகையைத் தரிசித்துவிட்டு, அப்பால் வஞ்சிநகரஞ் சென்று, †பத்தினிக்கடவுளைதரிசித்தபின் எங்குப்போய் நல்லறஞ் செய்துகொண்டு ஒழுகாதிறபேன்; எனக்கு இடருளதாகுமோவென்று நீர் சிறிதுமகவலற்க" என்றுசொல்லி அவர்களையவணங்கி, சூரியாவர்த மபத்திற்குப்பின் அருகிமாலப்பொழுதிலெழுந்து, உலகவறவியையும் சமபாபதியையும் சுகதிறபாவையையும் வலங்கொண்டுதுதித்து ஆகாயவ ழியே பறந்துசென்று, இருதிறனுடையவழித்தோன்றலாகிய புண்ணிய ராசனது நகரப் புறத்தேதவள்ள சோலைக்குள்ளேயிறங்கி அப்வுயிர்த்து, ஆங்குள்ள ஒருமுனிவனைவணங்கி, "இநகரின்பெயரியாது? இதனையா ரும் அரசன்யார்?" என்றுகேட்டாள்; அமமுனிவன், "இதன்பெயர் ந கபுரமென்பது; இதனையாளபவன பூமிசுகதிரன்மகனுகிய புண்ணியராச னென்பான்; இவன் பிறதகாலத்தொடங்கி இந்நாடடிலு மழை பிழைத் ததில்லை; பூமியும மரங்களும பிறவும பலவளங்களையும மிகத் தாராதிற் கும்; உயிர்களுக்கு ஒருவகையான நோயுமில்லை" என்று அரசனுடைய பெருமையை அவளுக்கு விளங்கக் கூறினன்.

## உரு. — ஆபுத்திரனெடு மணிபல்லவமடைந்தகாதை.

அப்பொழுது, புண்ணியராசன், தன்பெருந்தேவியோடு அந்தோலை யிற்புகுந்து ஆங்குள்ள குருராவகனென்னும முனிவனைவணங்கி,

---

* நிதானம் - ஆதிகாரணம்; என்றது பேதைமைமுதலியனவற்றை.

† பத்தினிக்கடவுள் - கண்ணகி.

அறனு மறனு மளித்தமு நித்தத்
திறனுந் தக்கமுஞ் செல்லுயிர்ப் புக்கிலுஞ்
சார்பிற் றோற்றமுஞ் சார்பறத் தும்மியு
மாரிய னமைதியு மமைவுறக் கேட்டு, (ந-கூ.)

பின்பு, "இவள் ஒப்பற்றபேரழகினள்; கையிற்பிச்சைப்பாத்திரமொன்றையுடைய்வளாய்த் தருமங்கேட்கின்றனள்; யார்?" என்று விரைவிலே, அருகேநின்ற சட்டையிட்டபிரதானி அரசனிடம்வணங்கி, "இவளை யொப்பவர் யாருமில்லை; முன்னொருகாலத்தில் கிள்ளிவளவனென்னும் சோழன்தலைநகரும்பிக் காவிரிப்பூம்பட்டினத்திற்சென்றபொழுது, அங்கேயுள்ள அறவணவடிகள் இவள்வரலாறுகளையெல்லாம் விளங்கக்கூறினரென்று முன்னமே நான் உணர்ந்ததுண்டு; அம்மடந்தையே இவள்" என்றுகூறினன்; கூறலும், மணிமேகலை அரசனைப்பார்த்து, "உன்கையிலிருந்தபாத்திரமே என்கையையடைந்தது; செல்வத்தால் மயங்கினேனல்லம்; என்செய்தனை? மணிபல்லவஞ்சென்று புத்தபீடிகையைத் தரிசித்தாலன்றி உனதுபழம்பிறப்பின்செய்தியையறியாய்; ஆதலால், அரச! அங்கேவருவாயாக" என்றுசொல்லிவிட்டு, எழுந்து ஆகாயவழியே சென்று சூரியவம்சமபத்திற்குமுன்னமே மணிபல்லவத்திலிறங்கி வலங்கொண்டு புத்தபீடிகையைத் தரிசித்தாள். அது பழம்பிறப்பை அவளுக்குத்தெரிவித்தது. அதனையுணர்ந்து வியந்து அவள் அங்கே இருக்க, புண்ணியராசன், அச்சோலையைநீங்கி மகரிற்புகுந்து, தன்னை வளர்த்தகாயகிய அமுதசுரபியைக் கண்டு வினவித் தன்வரலாறுமுழுவதையும் அவள்கூறக்கேட்டு வருந்தி அரசாட்சியில்வெறுப்புற்றுத் துறவறத்திற்குத் துணிந்து தன்கருத்தைவெளியிட்டான்; அதனைக்கேட்ட சனமித்திரனென்னுமந்திரி அவனைவணங்கி,

"எங்கோ வாழி யென்சொற் கேண்மதி; (கக)

உன்னை அரசன்பெறுவதன்முன் இந்நாட்டில் பன்னிரண்டுவருடம் மழையில்லாமற்போயிற்று; வறுமைமிக்கது; அதனால் எல்லாவுயிர்களும் வருந்தின; அக்காலத்தில நீ தோன்றினை; தோன்றியபின் இந்நாட்டில் எல்லாவளங்களும் நிரம்பின; உயிர்கள் துயரமநீங்கி வாழ்வனவாயின; நீ நீங்குவாயாயின், எல்லாவுயிர்களும தாயைப்பிரிந்த குழந்தைகள்போலக் கூவாநிற்கும்; இந்தநிலையையுடைய உலகத்தைக் காவாமல உனதுபயணமேயிரும்பிச செல்லுதல் தகுதியன்று;

தன்னுயிர்க் கொங்கான் பிறவுயி ரோம்பு
மன்னுயிர் முதல்வ னறமுமி தன்றால்." (ககூ-ககள)

என்றுகூற, அரசன்கேட்டு, 'மணிபல்லவத்தை வலங்கொள்ளவேண்டுமென்று எனக்குண்டாகிய வரம்புகடந்த ஆசை தணிதற்கு அரிது;

# உரு.—ஆபுத்திரனெடு மணிபல்லவம்டைத்தகாதை.

ஆதலால், அங்கே போய்வருவேன்; ஒருமாதகாலம் இங்கனைப்பாது காத்தல் உனதுகடன்" என்றுகூறிப் புறப்பட்டுவழிக்கொண்டு கடற்கரையைச்சார்ந்து காவாயெமி மணிபல்லவத்தையடைந்தான்; உடனே மணிமேகலைவருது அழைத்துச்சென்று அவளெடு அத்தீவைவலம்வந்து, "பழம்பிறப்பையுணர்விக்கும தருமபீடிகை இது" என்றுகாட்ட, அரசன், அதைதரிசித்து வலங்கொண்டு துதித்தான்; துதிக்கவே அப்பீடிகை பழமபிறப்பின்செய்தியை அவனுக்கு விளங்கத் தெரிவித்தது. அதனையறிந்து வியப்புற்று, தனகருப் பழமபிறப்பில் அமுதசுரபியென்னும அக்ஷயபாத்திரத்தைபளித்த சிந்தாதேவியைத்துதித்து மணிமேகலையோடுமெழுந்து தென்மேற்கிற்சென்று கோமுகிக்கரையில் புன்னைமரத்தின் நிழலிலேயிருந்தான்; இருக்கையில், ஆபுத்திரனெடு மணிமேகலைவந்திருந்ததைத தீவதிலகையறிந்துவந்து, "அமுதசுரபியைக் கையிலேந்தி உயிர்களின்பெருந்துயரத்தைத்தீர்த்த பெரியோனே! அக்காலத்தில், மறந்து உன்னை இத்தீவில் தனியேவிட்டுவிட்டுக் கப்பலேறிச்சென்றபின்பு உன்னைநினைந்து மீண்டுவந்து இங்கே நீ இறந்திருத்தலையறிந்து உடனே தம்முயிரைநீத்த ஒன்பதுசெட்டிகளின் உடலென்புகள் இவை. காண்பாயாக. அசசெட்டிகள் உண்பிக்கவண்டு உடன்வந்தோர்கள், அவர்கள் இறந்ததுதெரிந்து தாமும இறந்தார்; அவர்களுடைய என்புகள் இவைகள்காண்; அலைகள்தொகுத்த மணலால்மூடப்பட்டுப் புன்னைநிழலின்கீழ உனது பண்டையுடமபு இருந்ததைப பார்ப்பாயாக.

நின்னுயிர் கொன்றாய் நின்னுயிர்க் கிரங்கிப்
பின்னுன் வந்த பிறருயிர் கொன்றாய்
கொலைவ னல்லையோ கொற்றவ ஞயினை" (கஎஉ-கஎச.)

என்று அரசனைநோக்கிக்கூறிப் பின்பு மணிமேகலையைப்பார்த்து, "காவிரிப்பூமபட்டினத்தைக கடலகொண்டது; அதற்குக்காரணங் கேட்பாயாக: நாகநாட்டரசன்மகளாகிய பீலிவளையென்பவள் தான்பெற்ற குழந்தையுடன்வந்து இத்தீவையும் புத்தபீடிகையையும் வலமவருதுதுதிக்கும பொழுது, கம்பளசெட்டியின்கபபல வந்துதங்க, பீலிவளை அவனிடஞ் சென்று," இவன் அரசன்புதல்வன்; இவனை அவனிடஞ்சேர்ப்பாயாக" என்றுசொல்லி, குழந்தையை அவன்கையிற்கொடுக்க, அவன் பெருமகிழ்ச்சியடைந்து வாங்கிக் கப்பலேறிசசெலலுகையில அஃது உடைந்து போயிற்று. போகவே கப்பலிலிருந்தோரிற்சிலா மெல்லப் பிழைத்துச்சென்று காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து புகல்வணிக்கெடுத்தசெய்தியை அரசனுக்குத்தெரிவித்தார். அதுகேட்டு அவன்பொறுமல் செயலற்றுக் கடற்கரையையடைந்து மகனைத்தேடிக்கொண்டு அலைந்தமையால், நகரம் இந்திரனுக்குவிழாசசெய்தலே விட்டொழிந்தது; ஒழியவே அதனை

ப்பொறுக்காமல் மணிமேகலாதெய்வம், "இங்ஙகையைக் கடல்கொள்ளுக" என்றுசபிக்கக் கடல் ஙகரை மூடியது; மூடவே அரசன் வேறிடஞ்சென்றான். அறவணவடிகளோடு மாதவியும் சுதமதியும் யாதொருவருந்தமுமின்றிப்போய் வஞ்சிஙகரம் புகுந்தார்" என்று சொல்லிப்போயினள்; அவள்போனபின்பு புண்ணியராசன் அவ்விடத்தே மணலெத்தேண்டி, அங்கேதேன்றிய தன்னுடைய பழைய உடம்பின் என்பைக்கண்டு மயக்கமுற்றான். மணிமேகலை தேற்றித் தருமோபதேசஞ்செய்து அவனை ஙகரத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் வஞ்சிஙகரஞ்செல்லநினைந்து ஆகாயத்திலெழுந்தாள்.

## உசு.—வஞ்சிமாநகர்புக்கதை.

எழுந்தவள் ஆகாயவழியேசென்று வஞ்சிஙகாப்புறத்தேயிறங்கி, தாய்கண்ணகியையும் தநதைகோவலனையும் தரிசிக்கவேண்டுமென்கிற ஆசை தூண்டுதலாற் கோயிலிற்புகுந்து கண்ணகியைவணங்கித் துதித்து "கணவனிறந்ததுதெரிந்து உடனிறவாமலும் கைம்மைநோன்பை நோலாமலும் சினங்கொண்டு மதுரையையழித்ததற்குக் காரணங்கூறியருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, பத்தினிக்கடவுளாகிய கண்ணகி, "எனது தலைவனுக்குநேர்ந்த மரணத்துன்பத்தைப் பொறுக்கமுடியாமையால் மதுரையை எரித்தழிக்கத்தொடங்கினேன்; அப்பொழுது மதுராபதியென்கிற அந்நகர்த்தெய்வம எனக்குமுன்னேதோன்றி, "இத்துன்பத்தை நீங்களனுபவித்தல் முற்பிறப்பிற்செய்த தீவினையினாலேயே, அதனைக்கூறுவேன்:

முன்பு கலிங்கநாட்டிலுள்ள சிங்கபுரத்தரசனாகிய வசுவென்பவனும் கபிலபுரத்தரசனாகிய குமரனென்பவனும் தமமுட் பகைமைகொண்டு போர்செய்வாராயினர்; அப்பொழுது மனைவியுடன் சிங்கபுரத்துக் கடைவீதியிற்சென்று பண்டம்விற்றுக்கொண்டிருந்த சங்கமனென்னும்வணிகன்பாற் பொருமையுற்று, அந்நகரத்தரசனிடம் தொழிலசெய்துகொண்டிருக்கும் பரதனென்பவன், "இவன் பகைவனுடையஒற்றன்" என்று அரசனுக்குச்சொல்லி, யாதொரு குற்றமுமிலலாத அரசங்கமனை அவ்வரசனைக்கொண்டு கொலைசெய்வித்தான். சங்கமன்மனைவி நீலியென்பவள், அதனைத்தெரிந்து, வங்கி அழுது பெரியமலைமீதுநின்று வீழ்ந்து உடம்பைத் துறக்கநிச்சயித்து, "எமக்குத்துன்பஞ்செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைவார்களாக" என்று சபித்துவிட்டு இறந்தாள். அப்பரதனே கோவலனாகப் பிறந்தான்; அவ்வினையால் இத்துன்பமடைந்தீர்கள்; பழம்பிறப்பிற்செய்த வினையின்பயனை யாருமநுகர்ந்தே ஒழிதலவேண்டும்" என்கிற உண்மைமொழியைக் கூறியது; அதனெய்வம

## உஎ.—சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதை.

கூறியபின்னும் என்கோபம் அடங்காமையால், நகரத்தை எரித்தழித்தேன்; முன்புசெய்த நல்வினையாலே நானும் என்கணவனும் தேவர்களாகிச்சென்றோம். இந்நல்வினையினிறுதியிற் கோவத்தாலுண்டாகிய பாவப்பயனை நுகர்தல்கூடும்; இப்படிப் பிறந்துமிறந்தும் புண்ணியத்தினிறுதியிற் பாவப்பயனையும் பாவத்தினிறுதியிற் புண்ணியப்பயனையும் நுகர்ந்து நுகர்ந்து உழலாநிற்பேம். அப்பால் மகதநாட்டிற் கபிலையம்பதியிற் புத்தஞாயிறு உதிததுப் போதிமரத்தினடியில் எழுந்தருளியிருந்து நால் வகைசசத்தியங்களையுமறிது பன்னிரண்டுசார்புகளின் தோற்றங்களையும அவற்றின்அழிவையும விளங்கக்கூறி இசசக்கரவாளமுழுவதும் தருமவொளியை வீசுங்காலத்தில், யாம் அவ்வுபதேசமொழிகளைக்கேட்டுத் துறந்து நிருவாணமடைவேம; இப்பயனை யாம அடைதற்குக்காரணம், முன்பு காவிரிப்பூமபட்டினத்திற புத்தசைத்தியத்திலுள்ள இந்திரவிகார மேழினையும் உன்தருதற்பொடன் ஏத்தியபுண்ணியமே; யாம் நிருவாணத்தை யடைவது பலநாளைக்குப் பின்பேயாயினும், அதுகாறும் பலவகையாகிய சித்திகளையும செய்துகொண்டிருப்பேம். இதுநிற்க, நீ இந்நகரிலுள்ள பல சமயவாதிகள்கூறும் கொள்கைகளையெல்லாங்கேட்டு அவற்றுள் ஒன்றும உனக்கு உண்மையன்றுதோன்றுமையால் பின்பு பௌததசமயத்தைப் பற்றியொழுகுவை" என்று சொன்னவுடன், மணிமேகலை வணங்கி வேற்றருவெய்துவிக்கு மந்திரதகைஜபித்து ஒரு முனிவன்வேடங்கொண்டு,

தேவ குலமுந் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
கற்றவ முனிவருங் கற்றடங கினரு
கன்னெறி *காணிய தொன்னூற் புலவரும் (எஉ-எநி.)

எங்கணும் விளங்கிய வஞ்சியமபதியில், செங்குட்டுவனென்னும் சேரர்பெருமானது புகழ் விளங்கும்படி சென்றுபுகுந்தாள்.

## உஎ.—சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதை.

புகுந்தமணிமேகலை, சமயவாதிகள்பலருடைய கொள்கைகளையும் அமியளிருமபி, அவருள்ளே வைதிகவழியைச்சாராத அளவைவாதியை முதலிலடைந்து, 'உனகொள்கையை உரை' என்றுவினவி, அவன் தன்கோட்பாட்டைக் கூறக்கேட்டும, அப்பாற சைவவாதியையும, அப்பாற பிரமவாதியையும, அப்பால் வைணவவாதியையும, அப்பால வேதவாதியையும், அப்பால் ஆசிவகவாதியையும, அபபால நிகண்டவாதியையும், அபபாற் சாங்கியவாதியையும, அப்பால் வைசேடிகவாதியையும், அப்பாற பூதவாதியையுஞ் சார்ந்துசாராது வினவிவினவி, அவர் தங்கொள்கைகளைக் கூறக்கேட்டும அவற்றை அமிந்துகொண்டாள்.

* காணிய - கண்ட.

## உஅ.—கச்சிமாநகர்புக்ககாதை.

அதன்பின், மாதவியையும் சுதமதியையும் அறவணவடிகளையும் காணவிரும்பிப் புறஞ்சேரித்தைக் கடந்துசென்று வஞ்சிமாநகரத்தினுள்ளே போய்ப் பலவகைச் சாதியாருமிருத்தற்குரிய வீதிகளையும் வேறுள்ள பலஇடங்களையும் முறையேகண்டு மகிழ்ச்சியுற்றுசெல்பவள், பௌத்ததருமங்களைச் சொல்லுமுனிவர்கள் தங்கியிருக்கும் தவச்சாலையிற் புகுந்து, அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த *மாசாத்துவானைப் பணிந்து, எடுக்கவெடுக்க உணவுவளரும் அமுதசுரபியின் விசேடத்தையும் அப்பாத்திரத்தைக்கொண்டு செய்த தானவிசேடத்தால் ஆபுத்திரன் புண்ணியராசனுப் பிறந்து சாவகநாட்டை ஆண்டிவரும் பெருமையையும் தான் அவனை மணிபல்லவத்திற்கு அழைத்துவந்து புத்தபீடிகையைக் காட்டப் பழம்பிறப்புணர்ச்சியை அவன் பெற்றதையும் தீவதிலகை வெளிப்பட்டதையும் காவிரிப்பூம்பட்டினத்தைக் கடலகொண்டமையால் மாதவியும் சுதமதியும் அறவணவடிகளும் சாதலின்றி இந்நகரில்வந்து புகுந்தார்களென்று தான் தீவதிலகைபாற் கேட்டதையும் புண்ணியராசன் நாகபுரஞ்செல்லத் தான் மணிபல்லவத்தைவிட்டுவந்ததையும் தாயாகியகண்ணகியைத் தரிசித்ததுமுதலியவற்றையும் பின் வேற்றுருக்கொண்டு பலசமயவாதிகளைச்சார்ந்து அவாகளுடையகொள்கைகளைக் கேட்டதையும அக்கோட்பாடுகளெல்லாம் பொருத்தமில்லாமையால் தான் அவற்றை மனங்கொள்ளாததையும் பௌத்ததருமத்தைக் கேட்கவிரும்பி அறவணவடிகளைத் தேடிக்கொண்டுவந்ததையுஞ்சொன்னள். இவற்றையெல்லாங் கேட்ட மாசாத்துவான், "உன்னைநான்கண்டது எனதுநல்வினையினாலே யே; உன்தந்தைகோவலனும் தாய் கண்ணகியுமடைந்த வருத்தங்களும மதுரையம்பதி அழிவுற்றதும் ஆகிய இவற்றைக்கேள்வியுற்று எல்லாவற்றையுநாமுறது பௌத்தமதத்தைச்சாராது தவஞ்செய்தலே மேற்கொண்டேன்; கொண்ட யான் இங்கேவருதற்குக் காரணங்கேட்பாயாக:—

முற்காலத்தில் இருங்கரையாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனென்னுமரசன் தன்தேவிமாரோடும இச்சேரலையைச சார்ந்து இருந்தபொழுது, இலங்காதேவத்துள்ள சமனெனியென்னு மலையையடைந்து தரிசித்து வலங்கொண்டு ஆகாயவழியேமீள்வோராகிய சாரணர் இச்சோலையிலிறங்கி ஒரு சிலாதலத்திலிருந்தார்; அங்ஙனமிருக்கக்கண்ட அரசன் அவர்களிடவணங்கி உபசரித்து அமுதுசெய்வித்துத் துதிக்க, அவர்கள்,

பிறப்பிற் றுன்பமும் பிறவா வின்பமு
மறத்தகை முதலவ னருளிய வாய்மை

* மாசாத்துவான் - கோவலனுடைய தந்தை.

## உஅ.—கச்சிமாநகர்ப்புக்கதை.

யின்ப வாமு திறைவன் செலிமுதற்
றுன்ப நீங்கச் சொரியு மந்நாள், (+கக - கஉஉ)

நின்தந்தைக்கு ஒன்பதுதலைமுறை முன்னேனுகிய கோவலனென்பவன் அவ்வரசனுக்குக் காதற்பாங்குதலால், இங்கேவந்திருந்து, அச்சாரணர் அரசனுக்குக்கூறிய அறமொழிகளைக் கேட்டு, தானீட்டிய பலகோடிதனங்களையும் முன்னோர்கள் தருமவழியே தேடிய பொருள்கள் பலவற்றையும் ஏழுதினத்துள் இரவலர்க்குகொடுத்துவிட்டுப் பின்பு தவஞ்செய்வானுயினன்; அவன் அக்காலத்திற் புத்ததேவனுக்குக் கட்டுவித்த சைத்தியத்தைத்தரிசித்தற்காகவே வந்தேன்; காவிரிப்பூம்பட்டினத்தைக் கடலினிழுங்கிவிடுமென்ற செய்தியை எண்டிள்ளை முனிவாசனத் துணிந்துகூறக்கேட்டு அந்நகரஞ்செல்லாமல் இவ்விடத்திலேயே இருந்துவிட்டேன்; தீவினையுடைமையாற் கொலையுண்டிறந்த உன்றந்தை, நலவினையால் தெய்வயாக்கையைப் பெற்றுப் பின்னுந் தீவினைப்பயனை அனுபவித்தது, அப்பால், புத்ததேவன் அவதரித்துச்செய்யுந் தருமோபதேசத்தைக் கேட்டு விடைவானென்று அமிருதோதார்கூறக் கேட்டேன்; நானும அக்காலத்தில அவ்வறமொழிகளைக் கேட்பேன்; உனது பிற்காலச்செய்திகளை நீ கந்திற் பாவையால்அறிந்தாயென்று அறவணவடிகளால்அறிந்தேன்; அமமுனிவர், உனக்குத் தருமோபதேசஞ்செய்தற்கு அமைந்தவிடம் காஞ்சிநகரமென்றெண்ணி இங்கிருந்து அங்கேசென்றார்; மாதவியும சுதமதியும் அவருடன் அந்நகரம போயினர்; இன்னுங்கேட்பாயாக; மழையிலலாமையாற் காஞ்சிநகரத்தில் மிக்க வறுமையுண்டாயிற்று; பலஉயிர்கள் இறந்தன; அந்நகரில ஐயமிடுவோர இலலாமற்போனமைபால், அங்கேயிருந்தமுனிவர்கள் இவ்விடம் வந்துவிட்டார்களர்; ஆதலால், அந்நகர மடைந்து எல்லாவுயிர்களையும பாதுகாத்தல் உனக்குக் கடனுகும்" என்று சொல்ல, மணிமேகலை அவனிவணங்கி, அமுதசுரபியைக கையிலேந்திக் கொண்டு, வஞ்சிநகரத்தின் மேற்பிசையினின்று மேலேயெழுந்து ஆகாயவழியே வடதிசைக்கட்சென்று, மிக்கசெல்வங்குன்றி வறுமையாற்று அழகுகெட்டுப்போயிருக்குங் காஞ்சிநகரத்தைக்கண்டு மனமிரங்கி வலமவந்து அந்நகரினடுவேயிறங்கி, அங்கே மெருகிடுமுழற்கிவ்வரியின் துணையிளங்கிள்ளியாற் கட்டுவிக்கப்படுள்ள புத்தாலயத்தை வணங்கி அதனருகுத்தென்மேற்கிற்சென்று ஒரு சோலையில்தங்கினள்; அந்நேரத்திலிருந்த ஒருவன், விரைந்துசென்று அரசனிவணங்கி, 'அரச! கோவலன்புதல்வி; சிறந்த தவஞ்செய்தொழுகுபவள்; இசசம்புத்தீவில் எல்லாருள்ளுஞ்சிறந்தவள்; அவள் கையிலேந்திய அமுதசுரபியைவணம பாதுகாத்துத்தானும் இந்நகரிலவந்து தருமதவனத்தை உறைகின்றாள்' என்றான். அதுகேட்ட அரசன் கந்திற்பாவை முன்பு நமக்குக்கூறியது உண்மையேயென்று மதி

த்து அத்தெய்வத்தைவந்தித்து மந்திரிகளுடன் விரைந்துசென்று மணி மேகலையையடைந்து அவளைநோக்கி,

"செங்கோல் கோடியோ செப்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ
நலத்தகை நல்லாய் நன்னு டெல்லா
மலத்தற் காலே யாகிய தறியேன்; (கஅஅ - ககக)

இனிச்செய்வது யாது?" என்று மயங்கிக்கொண்டிருந்தேன்; இருந்தபொ ழுது, ஒரு பெரியதெய்வம் எனக்கு முன்னேவந்து, "நீ வருந்தற்க; உனது நல்வினையால் ஒருமடந்தை இங்கே தோன்றுவள்; அவளுடைய கையிலுள்ள தெய்வப்பாத்திரத்திலிருந்து எடுக்க எடுக்கக குறையாமல் மேன்மேலுமுண்டாகிற உணவால் இவ்வுலகமெல்லாமுய்யும்; அவளு டைய கருணையால் மேகமும் மிகமழைபொழியும்; அவள் இந்நகரத் திற்குவந்தபின்பு உண்டாகும் விசேடங்கள் பலவாம; காற்வறுங் கூறினும் நீர்வறங் கூறாது; அவள் வந்திருத்தற்காகக் கோமுகியென்னும் பொய் கையும் அதனிடையுடைய மணிபல்லவமென்னுந்தீவும் இங்குவந்தனவெ ன்று சொல்லும்படி, இந்நகரவீதியில ஒருபொய்கையையும் அதனைச் சூழ ஒரு சோலையையும் உண்டுபண்ணுக" என்று சொல்லிவிட்டுப் போ யிற்று; அத்தெய்வம் போனபின்பு அது கட்டளையிட்டபடியே செய் துவைத்த இடம் இஃது" என்று சொல்லி அவ்விடத்தைக் காட்ட, மணி பல்லவம்போன்ற அச்சோலையையடைந்து அதையும் பொய்கையையுங் கண்டு மகிழ்ச்சியுற்ற மணிமேகலை, தனது பழம்பிறப்பை அறிவுறுத்திய புத்தபீடிகையை அசோகசோலையில் இயற்றுவித்துத் தீவதிலகையையும மணிமேகலாதெய்வத்தையுமவழிபடுதற்குரிய கோயிலையும் அங்கே உண்டாக்கி நித்தியபூசையையும் திருவிழாவையும் அரசனேக்கொண்டு செய்வித்துத் தான் வந்தித்துத்துதித்து மேற்கூறியபுத்தபீடிகையில் ஆரு யிர்மருந்தெனும அமுதசுரபியை வைத்து, உண்ணுதற்கு எல்லாவுயிர களும வருகவென்று அழைத்தனள்; அழைக்கவே,

மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
காலுர் கேளார் கான்முட மாளுர்
பேணு மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்
மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்
பன்னூ றுயிரம் விலங்கின் றொகுதியு
மன்னுயி ரடங்கலும் வந்தொருங் கீண்டி, (உஉக - உஉஎ)

உண்ணவுண்ண அவ்வுணவு மேன்மேலும் பெருகிப் பசித்துன்பத்தை அகற்றி விளங்கியது; அப்புண்ணிய விசேடத்தால், எங்கும் மழைபெய் தது; வளங்கள் மிகுந்தன. அப்படி நிகழுங்காலத்தில், அறவணவடிகள்,

## கூ.o.—பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை.

அங்கிகழ்ச்சிகளைக் கேட்டு மாதவியோடும் சுதமதியோடும் அறச்சாலை யடைந்தனர்; கண்ட மணிமேகலை விரைந்துசென்று அன்புடன் வணங்கி அவரடிகளிலக்கி ஆதனத்திலிருத்தி அறுசுவைப்போனகம் அமுதுசெய்வித்து, "யான் செய்த புண்ணியம் தப்பாது பலித்திடுக" என்றுசொல்லி மீட்டும் வணங்கினள்.

## உகூ.—தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை.

வணங்கிய மணிமேகலையை வாழ்த்திசைசொல்லும் அறவணவடிகள், "பிலிவளைபெற்ற குழந்தையைக கம்பளசெட்டி கடலிற் கெடுத்ததுதெரிந்த அரசன் வருத்தமுற்று அக்குழந்தையைத் தேடியலைந்தமையாற் காவிரிப்பூம்பட்டினத்தில இந்திரவிழாச செய்யப்படாது போயிற்று; மணிமேகலாதெய்வம் அதுதெரிந்து 'நகரைக் கடலகொள்ளுக' என்று சபித்ததது; இந்திரனும சபித்தான். அதனால, அந்நகரம் கடலால் விழுங்கப்பட்டது. அப்பால உன் தாயரும யானுமாக உன்பொருட்டு இந்நகரம் அடைந்தோம" என்று கூறினர்; கூறலே மணிமேகலை அவருடைய அடியிணையை வணங்கி, "மணிபல்லவத்தில புத்தபீடிகையைக் காத்துக்கொண்டிருக்கும தீவதிலகையென்பவளும இச செய்தியைச செப்பினள். நான் வேற்றுருக்கொண்டுசென்று வஞ்சிநகரமடைந்து ஆங்குள்ள பலசமயவாதிகளகூறிய கொள்கைகள்யாவும மனத்திற்குப் பொருந்தாமையால் அவற்றையும் முன்புகொண்டிருந்த வேற்றுவடிவத்தையுந துறந்து இந்நகரமடைந்து நுமமைச சரண்புகுகின்; தேவரீர் அடிசூடிக்கு உண்மைப்பொருளை யுணர்த்திபருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, அவர பிரத்தியக்கம, அனுமானமென்னும இரண்டு அளவைகளின் இலக்கணங்களையும் அவற்றின்போலிவகைகளையும உண்மையறிவுண்டாதற்குருகருவியாக அவளுக்கு விளங்கக்கூறினர.

## கூo.—பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை.

தானஞ்செய்தலை மேற்கொண்டு சிலத்தில் முதன்மைபாக நின்று பழமபிறப்பின் உணர்ச்சியையடைந்த மணிமேகலை, அப்பால, 'புததம் சரணங்கச்சாமி', 'தர்மமசரணங்கச்சாமி', 'ஸங்கமசரணங்கச்சாமி' என்பவற்றை மூன்றுமுறைசொலலி, மும்மணிகளையும் மூன்றுமுறைவணங்கி அறவணவடிகளைச சரணாகதியாக அடைந்தாள்; அடையவே பௌத்த தருமத்தை உபதேசிக்கத்தொடங்கிய அவர், "இதனைக்கேட்பாயாக:— உயிர்களெல்லாம் அழிவில்லாமல் இருந்தகாலத்தில் தேவர்கள் பிரார்த்திக்கத் தூதுசெலலாகத்தினின்றும் இவ்வுலகிலவதரித்து அரசமரத்தினடியிலேயிருந்து தத்துவத்தை ஆராய்ந்தறிந்து மாரனென்று முக்கும்

றங்களையும் அறுத்து விளங்கிய புத்ததேவன் அருளிச்செய்த இன்பமாகிய் கட்டளையாகும் இது; பண்டைக்காலத்தில் அவதரித்த அளவற்ற புத்தர்கள் கருணைமிகுந்து திருவாய்மலர்ந்தருளியதும் இதுவே" என்று சொல்லி, பேதைமைமுதலிய பன்னிருநிதானங்களின்தோற்றவொடுக்கங்களையும் பிறவற்றையும் முறையே விளங்க உபதேசித்து உன்மனந் திருள் நீங்கு" என்றுகூறி ஞானதீபத்தை நன்குகாட்டினர்; மணிமேகலை அவற்றைக்கேட்டு ஐயந்திரிபறவுணர்ந்து, "பிறவித்துன்பம் ஒழிவதாக" எனறு அந்தகரிலேயே நோற்றுக்கொண்டிருந்தாள்.

# அபிதான விளக்கம்.

பதி - பதிசம்.

அந்திபன் :—ஒரு தெய்வமுனிவர் ; தமது கமண்டலத்திலிருந்த காவிரியைக் காந்தனென்னுமரசனுடையவேண்டுகோளாற் பூமியிற் பெருகச்செய்தோர் அவ்வரசன் பரசுராமருக்கு அஞ்சித் தம்பாலடைக்கலமபுகுந்தபொழுது அவனைப் பாதுகாத்தவர், தங்கையெலறிந்ததொடித் தோட்செம்பியனைக்கொண்டு காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாவை எடுப்பித்தோர். (பதி) ஈக, ஈஙூ, *(ச) ஙூ, (உஉ) கூடு.

அங்நநாடு :—துச்சயனென்னும் அரசனுடையது, இந்நாட்டின் இராசதானி கச்சயநகரம். (ச0) டுஉ.

அங்காடிப்பூதம்.—(க) உ0.

அசலன்:—பசுவயிற்றிற்பிறந்த ஒருமுனிவர். (கஙூ) சுஙூ.

அசோதரம் :—இரவிவன்மனென்னும் அரசனுடைய நகரம். (கூ) ஙஅ.

அஞ்சிபதி:—காந்தாநாட்டுள்ள பூருவதேசத்தரசன் ; நீலபதிகணவன் ; இராகுலனுடைய தந்தை , இவனது இராசதானி இடவயமென்பது , தனதுமைத்துனனும் துறவுபூண்டோனுமாகிய பிரமதருமனென்பவனது கட்டளையால் அந்நகரைநீங்கிப் பின்பு அதனவடகதெயுள்ள அவந்திநகரை இராசதானியாகக் கொண்டான். (கூ) கச, ச2.

அத்தரி :—துர்க்கை; இவளுக்கு விந்தமலையில் ஓராலயமுண்டு , இவளுடையவெல்செய்பவள் விந்தாகடிகையென்பவள். (உ0) ஈகசு.

அபஞ்சிகர்:—காசியிலுள்ள ஓரந்தணன் ; இவன் வேதமோதுவிக்குந் தொழிலே உடையோன் , சாலியென்பவருடைய கணவன். (ஈஙூ) ச.

அமசுந்தரி:—பூமிசந்திரனென்னுமரசனுடையமனைவி ; புண்ணியராசனை வளர்த்ததாய். (உடு) எசு.

அமுதசுரபி :—தென்மதுரையிற் கலாநியமதத்துள்ள சிந்தாதேவியால் ஆபுத்திரயுள்ள ஒருபாத்திரம், இது, தன்னுட்பெய்த அன்னத்தை எடுக்கஎடுக்கக் குறையாது மேன்மேலும் வளரச்செய்யுந் தன்மையையுடையது, சிலகாலம் ஆபுத்திரன் கையிலிருந்து பலவுயிர்களுக்குப் பசித்துயரத்தைப்போக்கி, மணிபல்லவத்துள்ள தோழுகியென்னும் பொய்கையில் அவளுலிடப்பட்டு அதிற்சிலநாட்கிடந்து அப்பால் மணிமேகலைகையிற்சென்று தங்கிப் பலவுயிர்களுடைய பசித்துயர்களைப்போக்கியதன்றிக் காயசண்டிகையென்னும் ஒரு வித்தியாதரமங்கையினது தீராப்பசியாகிய பஸ்மகவியாதியையும் போக்கிற்று; இஃது அறவோடு, ஆருயிர்மருந்து, உயிர்மருந்து, ஐயகடிஞை, ஓடு, கடவுட்கடிஞை, கடிஞை, செய்வப்பாத்திரம், பசிப்பிணிமருந்து, பலர்தொழுபாத்திரம், பாத்திரம், மாபெரும்பாத்திரம், வணங்குறுபாத்திரம், விஞ்சைப்பாத்திர மெனவும் இந்நூலுள்ளே வழங்கப்படும். (பதி) ஙச, (கஙூ) ஙச, கஙசு, கஉடு, (கசஉ ; (கஉ) உசு, கஙச ; (கஙூ) க ; (கச) எஎ ; (கடு) டுச, டுஎ, சுசு ; (கசு) கசுங (கஎ) உ, கச, கடு , (கஎ) உக, கடுங (கங) கஉ, ச0, கடுக, கடுச; (உ0) சுங (உக) கசங, கடுக, கடுஅ . (உடு) கசு, கசசு, கஎடு , (உஉ) கஅக, உகஅ.

அமுதபதி :—இரவிவன்மனென்னும் அரசனமனைவி , தாரை, வீரை, இலக்குமியென்னும் மூவரையும் பெற்றவள். (கூ) ச0 (கஙூ) சுஙூ.

அரபபிபிரர் :—உலகம் மூப்பத்தொன்றனுள் இருபத்தெட்டாவதாகிய ஆகாசாநந்தியாயதனலோகமுதலிய நானகு உலகங்களிலும் முறையேதங்கும் நான்குவகைப் பிரஹ்மகணங்கள்; இவர்களைச்

* ( ) இவ்விருதலைப்பிறைகளுக்குட்பட்ட எண்கள் காதைகளையும் மற்றை எண்கள் அடிகளையுந் தெரிவிப்பன.

# அபிதான விளக்கம்

நியானம் ஐந்தனுள் ஐந்தாவதிற்றேறி ப
ர்சனென்பர் ; இந்நூற்பதிகத்தின் உ
உகும் அடிக்குறிப்பைப் பார்க்க. (ச)

அரும்:—புண்ணியம் ; இல்லது அரு
றம், அன்புகொளறம், தாங்காநல்லற
நல்லறம், பெருமைசால்நல்லறம், ம
யாவறம், மிக்கவறம், மூன்னவன்போ
யினல்லறமென்று இந்நூலுள்ளே வழ
கப்படும். (நு) எடு ; (கு) கூசு ; (க
கஉ ; (கஉ) ஙஅ, சுகு, கூக ; (கசு)
(உக) களு ; (உஉ) கஙஅ ; (உசு) கடு
(உடு) உஉ, உஉஅ ; (உஅ) கசு, கo
கஉசு, கசக, ககக.

அறவணவடிகள்:—காவிரிப்பூம்ப
டினத்திலிருந்த புத்தசங்கத்துள்ள ஒ
முனிவர்; கோவலன் கொலேயுண்ட
கேட்டு வருந்தியடைந்த மாதவிக்குத் த
மோபதேசஞ்செய்து துன்பகற்றித் துற
பூணச்செய்தேர்; பாதபங்கயமலேயை
தாம் தரிசித்ததன்றித் துச்சயனெ
ஞும் அரசனேயும் மனேவியரோடுசென்
அதனைத் தரிசிக்கும்படிக்குஞ்செய்தவர்
மணிமேகலேக்கு ஆபுத்திரன்வரலாற்
யும், அமுதசுரபியின் பெருமையையு
உணவளித்தலின் விசேடத்தையும் எடு
துக்கூறிப் பலருடைய பசித்துன்பங்
ளேயும் போக்கும்படிசெய்ததன்றித் த
மோபதேசஞ்செய்து அவளேநல்வழிப்ப
த்திய ஆசிரியரும் இவரே. ஜேந்திலை
யாலும் கந்திற்பாவைத்தெய்வத்தாலும்நி
ம்பப்புகழப்பட்டவர்; காவிரிப்பூம்பட்டி
னத்தைக் கடல்கொண்டபின்பு வஞ்சி
நகரத்தையடைந்து அவ்விடத்தே துறவ
பூண்டிருந்த கோவலன்றந்தையோடு அ
னவனாவி அப்பாற் காஞ்சிநகரஞ்சென்
அங்கே தவம்புரிந்திருந்தார். தம்பை
வணங்குவோர்க்கு "அறிவண்டாக" என்
றும் "வாய்வதாக நின்மணப்பாட்டறம்"
என்றும் இவர் ஆசிகூறியவாற்றல், எவ்
லோரும் எப்பொழுதும் ஞானமுடையவ
ராகவும் தருமமுடையவராகவும் இருந்
தல்வேண்டுமென்று எண்ணியிருந்தாரென்
றும், "நானமுதிர் யாக்கை நடுங்கா
நாவி, ஞானரோ தானன்" என்றும் "காத
தோலேவில்லா யாயினுங் தளர்ந்து. மூத்த
வியாசரை வாழ்கபல் லாண்டி" என்
றும் கூறப்பட்டிருத்தலால், இவர் மிக்க
மூப்புற்றும் சிறிது ம சொல்வன்மை குன்
றிருந்தாரென்று தெரிகின்றது. இ
னும் "பழுதறு மாதவன்" என்றும், "தூ
பொருண் மாதவன்" என்றும், "மன்ற
மாதவன்" என்றும், "மறவண நீத்த மாச
தே்ள்வி, யறவண வடிகள்" என்று
ல்லவை கடிந்த வறவண வடிகள்" என்று
ம், "அநந்திகழ் நாவி னறவண்ண" என்
றும் இந்நூலில் ஆங்காங்குச் சிறப்பித்துக்
கூறப்பட்டிருத்தலால், இவரது தூய்மை
முதலியன இனிதுவிளகுகும். (பநி) நெ
(உ) கூக ; (கo) நூஅ, (கக) நூஉ, கசo,
கசநி ; (கஉ) க, ககக, உஎ, கo, நூ
(கநி கூஅ, நிநி . (உக) எஅ, அo, கநி,
கநிநி, கஉஉ, களஉ ; (உசு) மஎ, கo,
கூஉ, கசஅ, கநிo , (உநி) கள, உoநி
(உஅ) க, அக, கநிo, உகூசு; (உகூ) உ
நஎ.

அநிநி:—சாதுவன்மனேவி ; ஒப்புயர்
வில்லாக் கற்பினன் . இவள் தன்கண
னிறந்தானென்பதுகேட்டு உயிரைவிடித்
தற்குத் தீயிற்பாய்ந்து அதுசுடாதையால்
ருத்தமுற்றிருந்து, 'உன்கணவன்வின
வில்வருவான்' எனக்கூறிய அசரீரியைக்
கேட்டுப் பின்பு அவ்வண்ணமே கணவன்
வாப்பெற்று, அவனேடுகூடி வாழ்ந்திருந்
தாள்; மணிமேகலே இருந்தபொழுது " பா
ரக மடங்களும் பசிப்பிணி யறுக" என்று
சொல்லி அமுதசுரபியில் முதலிற் பிச்சை
யிட்டவள் இவளே; பத்தினிப்பெண்டி
ரென்றும், வான்றரு கற்பினளென்றும்
இந்நூலிற் சிறப்பிக்கப்பட்டவள். (கடு)
எக (கசு) கூ, உஉ, கஎ, கஉஅ, கசுடு.

அபிநிதி:—சாலியின்புதல்வன். பிற
ந்தநாள்தொடங்கி ஏழுநாளளவும் ஒருபசு
பாலுமட்டிவளர்க்க வளர்ந்தமையால், இவ
ன் இப்பெயர்பெற்றான் ; அன்பும் அருளு
மூடையோன், தென்மதுரையிற் கலாங்ய
தத்துள்ள சிந்தாதேவியால் அமுதசுரபி
யென்னும் பாத்திரம்பெற்றுப் பலவுயிர்
களுக்கும் உணவளித்துப்பாதுகாத்து
மணிபல்லவத்தில் இறந்து பின்பு சாவக
நாட்டிள்ள நாகபுரத்திற் (Nagpore) பசு
வயிற்றிற் பொன்முட்டையிற்றங்கிப் பிற
ந்து புண்ணியராசனென்று பெயர்பெற
றவன். (பநி) நுஎ, நுகூ, கஉ ; (கக)
சுஅ, கசூ ; (கஉ) உடு, உஅ; (கசு) உ,
கூஉ ; (கச) கூஉ, சுடு, சுஅ ; (கஎ) கூடு;
(உக) அஉ, டிசு ; (உச) கதிசு; (உஅ) எடு.

பெயர்ப்:—வக்கிரவெண்ணை மாக

னுடைய நகரம்; இது காந்தாரநாட்டிற் பூருவதேசத்திலுள்ளது; இஃது இடிவய மெனவும் வழங்கும். (க) உச.

இந்திரவிகாரம் ஏழு:— காவிரிப்பூம் பட்டினத்துள்ள புத்தாலயத்தில் இந்திர னால் நிருமிக்கப்பட்டுள்ள ஏழரங்குகள் ஓகாரம் - கையாற் கருவியாற் பணணப் படாது மனத்தால் நிருமிக்கப்பட்டதென பர், இவை, சிலப்பதிகாரத்துள்ளுங் கூற ப்பட்டுள்ளன (காதிகொண்காதை, கச; நீர்ப்படைக்காதை, கூஉ); புத்தசங்கத்தார இருத்தற்கு இடமாக இருந்தவை; சார ணர்கள் இவற்றிலிருந்து பௌத்தராகமங களே உபதேசித்தார்களென்று தெரிகி றது. (உசு) ருஞி, (உச) எ)

இந்திரவிழா:— அகத்தியமுனிவர்கட் டளையின்படி தூங்கெயிலெறிந்ததொடித் தோட்செம்பியனென்னும் அரசனால் தொடங்கப்பட்டு வருடந்தோறும காவி ரிப்பூம்பட்டினத்திற சோழபரம்பரை யோரால் இந்திரனுக்கு நடத்தப்பட்டுவ ருத உத்ஸவம; இதனை நெடுமுடிக்கிள்ளி யென்னு மரசன் செய்யாதொழிந்ததையா லேதான் காவிரிப்பூம்பட்டினம் கடலாற் கொள்ளப்பட்டது. இஃது, ஆயிரநகண் ணேன்விழாவெனவும, இந்திரகோடணை யெனவும, இந்திரகோடணைவிழாவென வும், தீவகச்சாந்தியெனவும இந்நூலில் வழங்கும். இந்திரனுக்கு விழாச்செய்தற் குக் காரணம, தொல்நாபபியர், அகத்தி ணையியலிலுள்ள "மாயோன்மேய" என் னும் சூத்திரத்தின் விசேடவுரையில் ஆசி ரியர் நச்சிநார்க்கினியரெழுதியிருக்கினற னர். (க) உசு, ரு; (உ) ஈ (ங) கூச, ரூஞ, சஎ; (ஞ) கூச (எ) கஎ (ஏஎ) சுகூ; (உச) கூஉ சுகூ (ஏஞி) ககஎ.

இந்திரன்:—தேவராசன்; இவன் தூங் கெயிலெறிந்ததொடித்தோட்செம்பிய னுல் விழாக்கொள்ளப்படிவேண்டப்பட் டான்; மணிபல்லவத்தில் புத்தபீடிகை யைநிருமித்து, தரிசித்தோருடைய பழம பிறப்பைப் புலப்படுத்தும் பெருமையை அதற்குண்டாக்கி, அதனேப்பாதுகாக்கும் படி தீவதிலகையென்னும் தெய்வப்பெ ண்ணையும் நியமித்தான். உயிர்களைப் பா துகாக்கும் ஆபுத்திரனுக்கு வாமனித்தர்கு வந்து தன்வார்த்தையை அவன்மநியாத தறிந்து, இரப்போரைக் காணுது அவன் வருந்தும்வண்ணம் மழைபெய் வித்து வவ்விடத்தும் வளமுண்டாக யத்தான். தனது ஆசனமாகிய பாண்டில் பளத்தினது நடுக்கத்தால் உலகிலுள்ள அறவியல்புடையார்க்குச் செய்யவேண்டி யவற்றை யறிந்து வினாந்து செய்பவன்; சாவகநாட்டுள்ள நாகபுரத்தரசர், இவன் பரம்பரையோர். (பதி) கூஉ; (க) ஞி, கூ; (கக) உஅ, ஒகூ; (கச) உஅ, ஞகூ; (கஎ) கூச (கஅ) கூஉ; (உஞ) ருஞி.

இமயம்:—ஒருமலை தெங்குட்டுவ னென்னுஞ்சேரன் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியருவுருத்தச்சமைப்பித்தற்கு வருவித்த கல் இம்மலையினதே. (உக) அஅ.

இரத்நதீபம்:—இது மணிபல்லவத் திற்கு அயலிலேயுள்ளதாகிய ஒருதெறி வு. இலங்காதீவமென்றுங்கூறப்படும்; இ தில் புத்தருடையபாதப்படிமை யமைக் கப்பெற்ற உச்சியையுடைய மலையொன் றுண்டு. (க0) உரு, (கக) உக.

இரவிவன்மன்:—அசோதரநகரத் தர சன் இவன் அமுதபதியில் கணவன்; இல க்குமியின்தந்தை. (எ) கஅ; (க) கூக; (கக) ககூ.

இராகுலன்:—அத்திபதியென்னு மர சனுக்கு நீலபதியயிற்றிற் பிறந்தவன்; இலக்குமியின்கணவன், நிட்டிவிடமென் னும் பாம்பால் இறந்து பின்பு உதயகுமர னுகப் பிறந்தோன் இவனே. (க) சஅ, சஅ, (கப) கூக, சக; (கக) கட; (கம) கஉஅ (உக) சுஅஞ, (உஙி) சுஅ.

இராசமாதேவி:— நெடுமுடிக்கிள்ளி யின்மனைவி, உதயகுமரனுடையதாய்; மணிமேகலைகூறிய அறமொழிகேட்டுப் புதரிரசோகமீங்கினவள். இவளது இயற் பெயர் சீர்த்தியென்பது, இவள் மாலவி பரம்பரையிற் பிறந்தவள். (உக) எக; (உங) எ, அ0. (உச) எச.

இராமர்.—(உ எ) ருஉ.

இராவணன்.—(உ எ) ருச.

இலந்தை:—இரவிவன்மனுக்கு அமுத பதியயிற்றிற் பிறந்தவன்; தாரா வீரை யெனவர்களின் தங்கை; இராகுலனு டையமனைவி; நிட்டிவிடத்தாற்கணவனி நந்தவுடன் தீப்பாய்ந்து உயிரை நீத்த வன், சாதசக்கனென்னு முனிவனுக்கு உணவளித்தபுண்ணியத்தால் இவனே மணிமேகலையாகவந்து பிறந்து பௌத்த

தருமக்கேட்டனனென்று தெரிகின்றது. (எ) கo அ; (க) சக; (கo) உo, ஙo.

இலங்காதீபம்:—இஃது இரத்தினதீவமென்றும் பெயர்பெறும், இதிற் புத்தபாதப்படிமையுள்ளஉச்சியையுடையதும் சமந்தம், சமனளியென்றபெயர்பெற்ற துமாகிய மலையொன்றுண்டு. (உo) கoஎ.

இளங்கோவேர்கான்:—இவர் மலைநாட்டில் வஞ்சிநகாத்திருந்து அரசுசெய்த சேரலாதனென்னும் அரசனுடைய புத்திரர், சேரன்செங்குட்டுவனுடையதம்பி. இதனால், இவர் முதலில் இளங்கோவேர் தனென்றும் இளங்கோவென்றும், துறவுபூண்டமையாற் பின்னர் இளங்கோவடிகளென்றும் பெயர்பெற்றார்; சிலப்பதிகாரனூலாசிரியர் இவரே; மதுரைக்கூல வாணிகன்சாத்தனர் மணிமேகலையை இயற்றி இவனாக்கேட்பித்தாரென்று இந்நூற்பதிகத்தாற் தெரிகின்றது; இவனைச் சேரமுனியென்றுங் கூறுவர். (பதி) கூரி.

உஞ்சை:—உச்சைனி-இஃது அவந்தி நாட்டின் தலைநகரம், பிரச்சோதனனென்னும்அரசனுடைய இராசதானி.(கடு) சுக.

உத்தரமகதநாடு.—(உ க) கஎரி.

உதயகுமரன் :— காவிரிப்பூம்பட்டினத்தரசனுடைய நெடுமுடிக்கிள்ளியின்புதல்வன்; மணிமேகலைபால்விருப்புற்றுப் பலமுறை அவளிடஞ்சென்று இரந்துபின்னின்றோன்; முடிவில் அவள் காயசண்டிகையென்னும் வித்தியாதரமங்கையின் வடிவங்கொண்டிகிற்ப அவ்விடத்துச்சென்று அவ்வித்தியாதரமங்கையின் கணவனுகிய காஞ்சனனென்னும் வித்தியாதரனுடையவானால் வெட்டுண்டான். இவன்பெயர் இளங்கோனெனவும் வழங்கப்படும். (பதி.) சுக, சுக ; (ச) உஅ ; (எ) ச ; (கo) சுக ; (கஉ) அ ; (கரி) சுஎ , (கஅ) உஎ, சஉ, சுo, சுஉ, கஉ, கஎஉ; (கக) எ, கசு, உo ; (உo) கக, சுக, எசு, அஉ ; (உக) சு, உo, எo, எசு ; (உஉ) ச, கo, கசுரி ; (உச) க, உரி.

உருபப்பிரமர்:—உலகமூழப்பத்தொன்றனுள் பன்னிரண்டாவதாகிய பிரஹ்மகாயிகலோகமுதலிய பதினெரிலுமிருக்கும் உருபப்பிரஹ்மகணங்கள்; இவர் பதினெருவகையினர்; இதனை இந்நூற்பதிகத்தின் உஅ-உசு-ம் அடிகளின்குறிப்பாலும், சுo-ம் காதை கஎஉ-ம் அடிக்குறிப்பாலுணர்க.

உலகவாவி:—ஊர்பலம் ; இது காவிரிப்பூம்பட்டினத்திற் சக்கரவாளக்கோட்டத்துள்ள சம்பாபதிகோயிலின் முன்புள்ளது ; பலரும்வந்துதங்குதற்குரிய தருமசாலை ; இதுபோன்றதை 'உலோகோபகாரிகா' என்பர் வடநூலார், "பலர்புகத்திறந்த பருவாய் வாயி, லுலக வறவி" என்று இந்நூலிற் சிறப்பித்துக்கூறப்பட்டுள்ளது; அம்பலப்பீடிகையென்றும், பொதியிலென்றும், மன்றமென்றும், மன்றப்பொதியிலென்றுங் கூறப்படும் கந்திற பாவையுள்ள இடமுமிதுவே , செல்லுந்தோறும் மணிமேகலை இதனைவலஞ்செய்துதொழுதே இதிலேறினுளென்று தெரிகின்றது. (பதி) சுசு, (எ) கூசு, (க) கoஎ; (கச) க, ருக; (கஎ) எஉ, அசு, கூo; (கஅ) சுஉ, கசஈ. (கக) கரிக (கo) கரி, ஒ க, எக, ஃஎ, கஎ (உக) சு, (உஉ) கo, கஉசு, கசுசு (உச கசுக

உவவனம் :—காவிரிப்பூம்பட்டினத்தைச்சார்ந்த ஒருபூஞ்சோலை புத்தபாதபீடிகையுள்ள ஒருபளிக்கறையையுடையது , மணிமேகலை பூப்பறித்தற்குச் சென்றுளென்பதுகேட்டு, உதயகுமரன் அவளைக்கண்டு கைக்கொண்டுசெல்லுதற்கு மூதலில்வந்தமையன்றலிடம இதுவே; மணிமேகலாதெய்வம் அவளுக்குக் காட்சிகொடுத்து அவளை மணிபல்லவத்திற்குக் கொண்டுபோனவிடமும் இதுவே. (பதி) சரி: (சு) சுஉ, கசுக, (எ) கரு; (அ) கக, (கo) சஉ; (உக) கசு, கoரி. (ஒசு) ஃஅ.

எடிதுமான்:—காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஒருவணிகன்; அரசனுற்கொடுக்கப்படும் எட்டிப்பட்டம பெற்றோன்; மணிமேகலை உவவனஞ்சென்றதை உதயகுமரனுக்கறிவித்தவன் இவனே. (ச) ருஅ, சுச.

ஒவியச்சேனன்:—சித்திரசேனனென்னுங் கந்தருவன்; கந்திற்பாவையில் அதிட்டித்திருக்கும் தவதிகனென்னுந செய்வத்தின் நண்பன். (உக) கசுரி.

கநத்தன்:— காந்தனென்னுமரசனுடைய காவற்கணிகையின்புதல்வன்; அவ்வரசன் போர்செய்யவந்த பரசுராமருக்கு முன்னே தோன்றுதொளித்தபொழுது அவர்கட்டளையாற் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து செங்கோல்செலுத்தியவன்; தன்புதல்வரிருவருள் இளையோன் பார்ப்பனிமருதியையும், மூத்தோன் வணிகமா

தாகிய விசாகையையும் விரும்பித் தீங்கு செய்யமுயன்றுரென்பதைக்கேள்வியுற்று அவளை வாளாற்றடிந்தவன்; இவளுற் பாதுகாக்கப்பட்டமையின் காவிரிம்பூம் பட்டினம் காகந்தியென்று பெயர்பெற் றது. பரசராமர்காலமும் இவன்காலமும் ஒன்றென்றுதெரிகின்றது. (உ2) கூட, கூள, சூரு, எசு, கரிசு.

கங்ஙை:—ஒருநதி; இதன்கரையில் மனோவியரோடு துச்சயராசன் தங்கியிரு ந்தபொழுதுதான் பாதபங்கயமலையைத் தரிசிக்கவந்த அறவணவடிகள்கண்டு அம்ம லையைத்தரிசிக்குமபடி அவனுக்குக்கூறி னர். கண்ணகிவடிவஞ்சமைத்தற்காகக் கற்கொணர்தற்கு இமயஞ்சென்ற சேரன் செங்குட்டுவன நால்வகைச்சேனைகளோ டும் இதன்கரையில் தங்கியிருந்தான். (கு) ரிசு, (உசு) டிசு.

கதியர்:—துச்சயராசனது இராசதா னி, இஃது அங்கநாட்டுள்ளது. (கம) ரிரூ (கூ2) சூகூ.

கண்ணகி:—கோவலன்மனைவி. இவ ளது கற்புமுதலியவறறை வெளிப்படுத் தற்பொருட்டே சிலப்பதிகாரஞ் செய்ய ப்பட்டது. இவளே மறக்கற்புடையாளென் னப்; திருமாபதத்தினி, பத்தினிக்கடவுள், மங்கலமடந்தை, மாபெருப்பதத்தினி, வீர பத்தினியென்பன இவளுடைய பரியாய நாமங்கள். வஞ்சிநகர்புறத்துள்ளதாகிய தன்கோயிலேசசார்ந்துதரிசிதத்தத்தனனே விஞ்சுவிய மணிமேகலைகுத தான்மதுமை யை அழித்ததுமுதலியவறறையும், தனது பிற்காலச்செய்தியையும, அவளுடைய பிற்காலச்செய்தியையுகூறினள. இவள் புத்தசமயச்சார்புடையாளென்று இந்நூ லாலும், சைனமதசசார்புடையாளென்று சிலப்பதிகாரதாலும் தெரிகின்றது. (உ) சூக, ரிரு; (அ) சூக, (உ) கரிரு; (உசு) உ, கூ; (உஅ) கூக.

கச்சிப்பாவை:—சக்கரவாளக்கோட் டத்திற் சம்பாபதிகோயிலின் கிழக்கே யுள்ள தூணில் மயனுல் நிருமிக்கப்பட்ட ஒரு பிரதிமை; துவதிகனென்னுக் தேவ னுடைய வடிவமாகவுள்ளது இஃது எல் லாராலும் பூசித்து வழிபாடு செய்யப்படு தின், இதை அதிட்டித்துநின்ற துவதிகன், கேட்போர்க்கு இதன்வாயிலாகமுக்காலச் செய்தியையுங் கூறுவன்; இதனுல், இது நாவுவடைப்பாவையென்றுங் கூறப்படும், தூணிலிருத்தல்பற்றி, இதனைக் கந்தென் றும் கந்தமென்றுங் கூறுவர். இந்நூல் எ-ம் காதை, கூ-கூரி-ம் அடிகளின்குறி ப்பைப்பார்க்க. (கரி) கூச; (கஎ) கo; (ககூ) சூ, சச; (உo) ககக, கஉஎ; (உக) க, எ, ரூரி, கூஉ, சசு, கசூஉ; (உஉ) உ, கூக, கூச, கoச, (உச) கசூஉ; (உஅ) கூரி.

கபிலர்:—இப்பெயருள்ளவராய் இந் நூலில்வந்துள்ளநகரங்கள் இரண்டு. அவ ற்றுள்:—

க-ம் கபிலை.—இது, கலிங்கநாட்டுள்ள தும் குமரனென்னும் அரசனுடைய இராச தானி. (உசு) கஎ.

உ-ம் கபிலை.—இது, மகதநாட்டுள்ளது; கபிலனெப்பெரிய ஒருமுனிவர் தன்பா ற்றவஞ்செய்யப்பெற்றமையின், இஃது இப்பெயர்பெற்றதென்பர்; கபிலவாஸ்து வென்றுகூறப்படுவது இதுவே; இங்ஙகரி லேதான் கௌதமபுத்தர் அவதரித்தனர். (உசு) சச; (உஅ) கசசு.

கம்பளச்சிறைடி:—ஒருவணிகன் கப் பல்யாத்திரைசெய்பவன். பீலிவளையென் பவள், நெடுமுடிக்கிள்ளிக்குத் தான்பெ ற்றருழந்தையை அவனிடம்சேர்ப்பிக்கும் படி இவனிடத்தேதான் ஒப்பித்தனள். இவன் இயற்பெயர் இன்னதென்று தெ ரியவில்லை. (உரி) கூச, (உசு) சு.

கரிகாற்பெருவளவன்:—காவிரிப்பூம்பட்டி னதைதையாண்ட ஒருசோழன்; நெருப்பா ற்கரிந்த காலியுடையனுதலின், இவன் இப்பெயர்பெற்றனன். இதனை "முச்சக் காமும் மனப்பதற்கு நீட்டியகா, லிச்சக் கர மேயளந்ததாற்-செய்செ,யரிகான்மேற் றேன்றெறிக்கு மாய் புனனீர் நாடன், கரிகாலன் காவெருப் புற்று" என்னும் (பொருநராற்றுப்படையிற்றியிலுள்ளது) வெண்பாவாலும், "சுடப்பட் டெரிருய்த்த சோழன் மகனும், பிடர்த்தலைப் பேரா னைப் பெற்ற-கடைக்காற், செயிறறு செங் கால் செலீஇயினு னில்லே, யுயிருடை யா செய்தா வினை" எனனும் (பழமொழி, கoரு) வெண்பாவாலுமுணர்க; வடநாட் டரசர்களேவென்றுசென்று இமயமலையில் தன்புலிபொறியை வளைத்தான்; இவன், உருவப்பஃறேரினஞ்சேட் சென்னியின் புதல்வனென்றும், சோழநாட்டுள்ள வெ ண்ணியென்னுமூரிற்சேரபாண்டியர்களை ஒருகாலத்துப் பொருதுவென்றுனென

றும் பொருநராற்றுப்படையால் தொ
ன்றது; சோழன் கரிகாற்பெருவளத்
னென்னுங் கூறப்படுவன், இன்னும், இ
ன்வரலாற்றினை இர்நூல் ப - ம காதை,
கபி - கஉ-ம் அடிகளின்குறிப்பாலு
புறநானூறு அச்சப்புத்தகத்தில், பாட்ட
ட்டோர்வரலாற்றிலுள்ள சோழன்கரிகா
பெருவளத்தானென்னும் பெயர்க்குற்
பாலு முணர்ந்துகொள்க (க) கூக, (உ)
கஎ.

கலிங்கநாடு:—தாயமன்னவராகிய வ
குமரனென்னும இருவர்க்குரியது இதி
லிங்கபுரமென்றும் கபிலையென்றும் பெ
யர்பெற்ற இரண்டு நகரங்க ளிருந்த
(உசு) கச.

கலிநீபவம்:—தென்மதுரையிலுள்ள
சித்தாதேவியின்கோயில்; எல்லாசமய
தாராலும் புகழப்படுவது, கலாரூபிய
கிய சித்தாதேவிக்கு இடமாயிருத்தல
ற்றி, இம்மீது இப்பெயர்பெற்றது. கலே
வித்தை, நியமம்-கோயில். பலரும்வந்
தற்குரிய அம்பலமொன்று இக்கே
யிலின் முன்னேயிருந்தது. இவ்வம்பல
அம்பலப்பீடிகையென்றுங் கூறப்படு
இதிலிருக்கும்பொழுதுதான் ஆபுத்திரனை
அமுதசுரபியைப்பெற்றான். (கசு) கஅசு,
(கசஎ) கஅ, கஎ.

கவேரகன்னி—காவேரி இந்நூல் கூ-ம்
காதை, நிஉ-ம் அடிக்குறிப்பைப்பார்க்க.

கவேரவனர்:—இராசருஷியும் யோகி
களிற்சிறந்தவரும் காவேரியின்தந்தையு
மாகிய கவேரனென்பவர் தவஞ்செய்து
கொண்டிருந்த வனம் இது காவிரிப்பூம்
பட்டினத்தினருகேயுள்ளது; இந்நூல்
கூ-ம் காதை, நிஉ-ம் அடிக்குறிப்பைப்பா
ர்க்க. (க) நிசு.

கவேரன்:—ஓரிராசருஷி; இந்நூல்
கூ-ம் காதை, நிஉ-ம அடிக்குறிப்பைப்பா
ர்க்க. (க) நிசு.

கார்கி:—தூர்க்கை, சம்பாபதியுமாம்.
இவள் போர்செய்தற்குவந்த பரசுராமன்
முன்னே நீசெல்லாதேயென்று காத்த
னென்னும்அரசனுக்குக் கூறினள். (உஉ)
உஎ.

கனகவிசயர்:—கனகனும் விசயனும்;
இவர்கள் ஆரியநாட்டரசருள் ஒருசாரார்;
இவ்விருவரும் பாலகுமரனென்னுமரசன்
புதல்வர்; கண்ணகிவடிவஞ்சமைத்தற்பொ
ருட்டுச் சிலைகொணர்தற்காக இமயஞ்செ
ன்ற சோன்செங்குட்டுவனுல் வெல்லப்ப
ட்டு அவன்கட்டளைப்படி இமயச்சிலை
யைத் தலையிற்சுமந்தோர். (உசு) கசு.

காசித்தி:—காவிரிப்பூம்பட்டினம் மூ
ன்னெருகாலத்திற் ககந்தனென்னுந்தலை
வனுற பாதுகாக்கப்பட்டமையின், இங்க
கர் இப்பெயர்பெற்றது; நீலநேரியில்
வேதவாதத்சருக்கத்தில், "காதம் பலவுங்
கடந்தபின் காசந்திக் கடிநகருள்" என
இப்பெயருள்ள நகரமொன்று கூறப்பட்
டிருக்கிறது. (உஉ) கூஎ.

காஞ்சனபுரம்:- வித்தியாதரநகரங்க
ளுளொன்று; காஞ்சனனும், காயசண்டி
கையும் இங்நகரத்தோரே இது, விஞ்சை
மாநகரொனவும் வழங்கப்படும். (கநி)
அக, (கஎ) உஉ.

காஞ்சனன்.- ஒருவித்தியாதரன்; காய
சண்டிகையின்கணவன்; இவனதுநகரம்
காஞ்சனபுரம்; உலகவறவியில் உதயகுமர
னுக்குஞ்சிக் காயசண்டிகையின்வடிவமை
ய்திய மணிமேகலையை அவ்வதயகுமரன்
தொடர்ந்ததுகண்டு, காயசண்டிகையின
சோ நாயகனென்றுணர்ந்து, அவனை வா
ள்-ல் வெட்டிவீழ்த்தினுன். (பஏ) எநி,
(உ) உஎ, ஙக, கபஉ, ககஉ, கஉ-ந, கஉசு,
(உக) நி, சஉ, (உஉ) ககக, ககக, உ0க,
(உச) கூ.

காஞ்சி:—ஒருநகரப்; இதில் முக்காலச்
செய்திகளேயும நலகுமதரிவிக்குங் கந்தி
ற்பாவைததெய்வமும், தூணேயிளங்கின்வி
யென்பவனுற் கட்டப்பட்டுள்ள புத்தா
லயமொனறும், தென்மேற்குமூலையில்
தருமதவனமென்றபெயருள்ள ஒருசோ
லையுமிருக்தன, மணிமேகலை பலகாட்ட
ங்கியிருந்து அன்னமளித்துப் பலவுயிர
ளையும பாதுகாத்துத் தவத்திறம்பூண்டு
அறவணவடிகள் பால் தருமங்கேட்டு மரி
தவிட்டமும் இந்நகரமே. இது கச்சியென
வும் வழங்கப்படும். (பஏ.) கo; (உக)
கசஅ, கடுஉ, கஎசு; (உஅ) கநெசு.

காந்தன்:—ஒருசோழன்; அகத்தியமு
னிவர்பால் மிக்கபத்திமையுடையோன,
இவன் வேண்டுகோளுக்கிரங்கியே அவர்
தமது கமண்டலத்திருந்தகாவிரியை நதி
வடிவாக நிலத்திற்பெருகச்செய்து சோழ
காட்டை நீர்வளமுள்ளதாக்கினர். பரசு
ராமர் போர்செய்தற்குவந்தபொழுது, கன்
னி (துர்க்கை யின் கட்டளையால் அவரு
க்குமன்னேகெல்லாரை வேற்றாக்கொ

ண்டு சிலகாலம் வேறிடத்திருந்தான்; இதனால்; இவன் பரசுராமருடையகாலத்தவனென்று தெரிகின்றது; இவ்வரசன் காந்தமனெனவும், காந்தமன்னவனெனவும் இந்நூலுட் கூறப்படுவன். (பதி.) கo, (உஉ) உஎ.

காந்தாரம்:—சிலதேசங்களைத்தன்னுட்கொண்ட மிகப்பெரியதொரு நாடு, இதிலுள்ளதேசங்களுள பூருவதேசமெனபது ஒன்று. (கூ) கூ.

காயங்கரை:—ஒரு நதி, பிரமதருமனெனப்பெரிய ஒரு பௌத்தமுனிவன் இதன் கரையில் வதிந்து தவஞ்செய்தனன், அத்திபதியெனனு மரசன இடவயமெனனு நகரதினின்று நீங்கி அவனிக்குச் செல்லும்பொழுது நால்வகைச்சேனையோடு இதன்பக்கத்துள்ளூ சோலையிறங்கியிருந்தான. (கூ, கo, உக; (உக) கஎ, உறு) கூஎ

காயசண்டிகை:—ஒருவித்தியாதரமங்கை, காஞ்சனன் மனைவி இவள் அவலோடு பொதியினமலையின் வளங்காணச் சென்று, உண்டவர்களுக்குப் பன்னிரண்டு வருடமளவும் பசியையொழிக்கும் ஒரு காவதகனியைக காலாற் சிதைத்தது, அகனியை யுண்ணுதற் கெண்ணிவந்த பட்டினி நோனபியாகிய விருசசிகரென்னும ஒருமுனிவருடைய சாபததாற் பன்னிரண்டு வருடமளவும யானைதலையென்னும் பெருமபசிநோயால் வருந்தி மணிமேகலை கொடுத்தவுணவால் அப்பசி மூற்றவொழியப்பெற்றுத் தனது நகரஞ்செலலுகையில் இடையேயுள்ள விநதமலையைப் பாதுகாக்கும் விந்தாகடிகையென்பவள் சாயையாலிழுக்க அவள் வயிற்றிற் சென்று அடங்கினள. (பதி) கூடு, எஙூ, (கடு) கூசு, (கசு) உ; (கஎ) அ; (கஅ) கசக், கரு, (ககூ) கூ, கஙூஉ, (உo) உசு, அடு, கo, ககச; (உஉ) கஉ, கஉக, ககo, ககஅ.

காராமர்:—சண்பை நகரத்துளளார், இந்நூல் கூ - ம் காதை, உஅ - உக - ம் அடிகளின் குறிப்பையும், எ - ம் காதை கoஉ - ம் அடிக்குறிப்பையும் பார்க்க.

காரியாறு:—ஒருநதி, இந்நூல் ககூ-ம் காதை,கஉசூ-ம் அடிக்குறிப்பைப்பார்க்க.

காலவேநம்:—ஒரு யானை; இந்நூல் சு - ம் காதை, ழுஅ-ம் அடிக்குறிப்பைப் பார்க்க.

காவிரி:- ஒருநதி; இச்சொல், காவேரியெனனும் வடமொழிச்சிதைவு; இது, கவேரகன்னி, காவிரிப்பாவை, சோழர்குலக்கொடி, தமிழ்ப்பாவை, நீர்ப்பாவையெனவும் வழங்கப்படும். இந்நதி கடலோடுகலக்கும் சங்கமத்துறையானது சிறந்த புண்ணிய தீர்த்தமென்று பல நூல்களாலுங் கொண்டாடப்படும்; இந்நூல் கூ-ம் காதை, டுஉ - ம அடிக்குறிப்பைப்பார்க்க. (பதி) கஉ, கசு, உசூ, உறு; (கூ) டுறு; (டு) கூசு (கடு) கூஉ (உஉ) கo.

காவிரிபூம்பட்டினம்:—சோழர்களுடைய பழைய இராசதானி: இதில் இந்திரனுனிருமிக்கப் பட்டுள்ள எழாங்குகளோடையு ஒரு புத்தாலயமுண்டு: இந்நகரத்தின் பழையபெயர் சம்பாபதியெனபது இதுகாகந்தியென்றும்புகாரென்றுங் கூறப்படும். (கூ) டுசூ; (கஉ, கூடு; (உடு) கசு (உஎ) கசூடு.

காவிரிவாயில்:—காவிரிக் கரையில் திருமுகத்துறைகழிகின்ற வாயில்: இது காவிரிப்பூம்பட்டினத்துள்ளது. (உஉ) கசூ

கிந்தநோடி:—ஒருமுனிவர்; பிரமாண வாதநூலாசிரியர்களுளொருவர்; பிரத்தியகூமூதலிய பிரமாணம் பத்தினுள் மூவராற் கொள்ளப்பட்ட பிரமாணங்கள் எட்டே. (உஎ) ?.

கிள்ளிவளவன்:- ஒருசோழன். (உடு) கச, கஅo.

குச்சரர்குடிகை:—சம்பாபதியன்கோயில். கஅ) கசஅ, கடுஉ.

குரசர்:—கலிங்கநாட்டுள்ள கபிலேசுரத்தரசன். (உசு) கசு.

குமரி:—ஒருநதி இது கன்னியாகுமரியெனவுங் கன்னியெனவுங் கூறப்படும்: பலரும் தத்தம்பாவங்களைப் போக்குதற்குச்சென்று ஆடிவருவதோர் புண்ணிய தீர்த்தம்; தன்னருகே புஷ்பஹாலியென்றுபெயர்பெற்ற குமரித் தெய்வமெழுந்தருளியிருக்கும ஆலயமொனறையுடையது. (டு) கூஎ, (கசூ) எ, எச, அசூ.

கூலவாணிகன்சாத்தன்:—இவர் மணிமேகலைநூலாசிரியர், சிலப்பதிகாரநூலாசிரியராகிய இளங்கோவடிகட்கும் அவர் தமையன் சேரன்செங்குட்டுவனுக்கும் மிக்கநட்பினர். இவர் மதுரைக்கூலவாணிகன்சாத்தனுமொனவும் சித்தலைச்சாத்தனுமொனவுங் கூறப்படுவர். "தண்டமிழாசா

ஸ்சாத்தன்" என்று லெப்பதிகாரம், கா
சிக்காதையில் இவர் சிறப்பிக்கப்பட்
ருக்கின்றனர். (பதி) கூ.

கோகர்ணம்:—நரிவயிற்றிற்பிற
ஒருமுனிவர். அந்தகேசகம்பளரென்
ஒருபெயர் பௌத்தநூல்களிற் காண
மின்றது. (கஉ) ஈடு.

கோசலை:—பாண்டியர்களின் பழை
இராசதானி; இதற்கு ஒருகாதவூரத்திற
அப்பாலுள்ள மடைச்சேரியிலேதா
சாலியென்பவள் ஆபுத்திரனைப்பெற்ற
(க) அ.

கோசம்பி:—கௌசாம்பிநகரம் இந்
லில் கந்-ம் காதை, சுக-ம் அடிக்குறி
பைப்பார்க்க.

கோதமை:—ஒருபார்ப்பனி. சார்ங்க
னென்பவனுடைய தாய் (சு) கஉ, கூ, கஉ
உஉ; (எ) கூக; (கு) கூக, (கவ) எ
(உஉ) நி.

கோழி:—மணிபல்லவத்துள்ள தோ
பொய்கை. (கக) கூ, ஙூ; கச) கூக,
(உஙி: கஙி-ம் (உஅ) உ0உ.

கோவலன்:—இந்நூலில் இப்பெயர
யுடையவர் இருவருளர் அவர்களுள்:—

க-ம் கோவலன்-மணிமேகலையின் தா
தை; கண்ணகியின்கணவன்; சிலப்பதிகா
கீதநாயகன். வஞ்சிநகர்ப்புறத்தேயுள்ள
கோயிலிற் கண்ணகிவடிவத்தோடு இவன
வடிவமும் பூசிக்கப்பட்டுவந்தது. (உ
ஙூ0, சூ, கூ; (கூ) ஙி; (ச) சூஉ; (எ) கூச
(கஅ) எ: (உக) கூ; (உ0) கூ.

உ-ம் கோவலன் - மேற்கூறியகோவல
னுக்கு ஒன்பதுதலைமுறை முன்னேன்
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குக்
காதற்பாங்கன்; அவ்வேந்தனுக்குச் சா
னைர்கூறிய உபதேசமொழியைத் தானுங்
கேட்டுத் தான் தேடியவையுந் தன்முன்
னோர்தேடியவையுமாகிய பொருள்களை
யெல்லாம் ஏழுநாளிற் ருனஞ்செய்துவிட்
டுப் பின்னர்த் தவம்புரிந்தோன்; வஞ்சி
நகரத்தே புத்தருக்குச் சைத்தியாலயமொ
ன்று கட்டுவித்தோன். (உஅ) கஉச.

கோசிகன்:—சண்பைநகரத்துள்ள ஒர
ந்தணன்; சுதமதியின்தந்தை. (கூ) உசு;
(எ) கo2.

கோதமமுனிவன்:—இவர் அகல்லை
யின் கணவர்; அவளுடைய கற்பையழித்
ததுபற்றி இந்திரனுக்கு ஆயிரங்கண்களு
ண்டாகும்படி சாபங்கொடுத்தனர். (கஅ)
கo.

சக்கரவாளக்கோட்டம்:—புத்திரசோக
த்தால் வருந்திய கோதமையின் தன்பத
தைப் போக்குதற்காக இவ்வுலகத்துள்ள
எல்லாத்தேவர்களையும் சம்பாபதி வருவி
த்துக்காட்டியவிடத்து அக்காட்சியை எ
காலத்தும் யாவருங்காணும்வண்ணம் மய
னால் நிருமிக்கப்பட்டதுபற்றி இஃது இ
ப்பெயர்பெற்றது. (சக்கரவாளம - உலக
முப்பத்தொன்றையும் தன்னுள்ளே அட
க்கிய கோளம். கோட்டம்-அறை) காவ
ரிப்பூம்பட்டினத்தின் புறத்தேயுள்ள மய
னத்தின் பக்கத்துள்ளது இதனால் இத
சுடுகாட்டுக்கோட்டமெனவுங்கூறப்படும்
இதில் முனிவர்பலரிருந்து தவஞ்செய்
தார்; சம்பாபதிகோயில், கந்திற்பாவை
உலகவறவி என்னுமிம்மூன்றும் இதைச்
சார்ந்துள்ளவையே. (சு) உசு, கூ, கூ
உ0உ; (எ) கூக; (கு) கூக, (கவ) எ
(உஉ) நி.

சந்தரவாணர்:—சு-ம் காதை கo-ம்
அடிக்குறிப்பைப் பார்க்க (கo) எo (ம

ருவு.

சங்கதருமன்.—ஒருபௌத்தமுனிவர்
இவர்சுதமதிக்கும் அவளுடையதந்தைக்கு
ம் தருமோபதேசஞ்செய்தவர்; நி - ம் கா
தை, எ0-ம் அடிக்குறிப்பைப்பார்க்க.

சங்கமன்:—ஒருவணிகன், நீலியின்
கணவன் முற்பிறப்பிற் காரணமினறி
இவனைக் கொல்வித்த பாவத்தாலேயே
கோவலன் கொலையுண்டிறந்தான. (உசு)
உசு.

சண்பை:—ஒருநகரம், கடலோரத்துள்
ளது; சு-ம் காதை, உஅ-உக-ம் அடிகளி
ன் குறிப்பையும், எ-ம் காதை, கo உ-ம்
அடிக்குறிப்பையும் பார்க்க.

சதுக்கப்பூதம்:—(க) உச, உநி, (உஉ)
எஎ.

சந்திரதத்தன்:—கப்பலிற்சென்று வா
ணிகஞ்செய்யும் ஒருவணிகன்; சாதுவனை
நாகர்மலையிலிருந்து காவிரிப்பூம்பட்டின
த்திற்குக் கப்பலிலேற்றி அழைத்துவந்த
வன் இவனே. (கசு) சக, கஉச.

சம்பாதி:—ஒருபறவை. (சு) நிச.

சம்பாதிவனம்:—காவிரிப்பூம்பட்டின
த்தைச்சார்ந்துள்ள ஒருசோலை; மேலே
பறந்துசென்றபொழுது சூரியகிரணந
தாற் சிறையிழந்துவீழ்ந்த சம்பாதியென
னும்பறவை இருத்தற்கிடமானதுபற்றி,
இஃது இப்பெயர் பெற்றது. (சு) நிச.

சம்பாபதி —கந்திற்பாவின் வரலா

வதை, இஃது இவளுக்கியற்பெயர்; சமபு மரத்தினின்றிழிருந்து தோற்றமையின இவள் சமபுவெனவும் பெயர்பெறுவள், சிவந்தநிறமும் சடையுமுடையவள இவ ளிருநதமைபற்றி ஆதிகாலதது சம்பாப திபெயன்று பெயர்பெற்றிருநத நகரம், கா வேரிநதியின் சம்பநதததாற பின்பு காவி ரிப்பூமபட்டினமென்றும் பெயரெற்றது, புதநிரசோகமுற்ற சோதமைக்கு இந்தச சக்கரவாளதததுள்ள எலலாதவீதவாகளை யும வருவிததுகாட்டி அச்சோகத்தை மாற்றி அவளிதவீதற்றுவிததவள, இவரு டையகோயில குசசாருடைபெயரனறு கூறப்படும; அருந்தவமுநிபெயாள, கனனி, குசாரக்ருடிகைக்குமரி, சமபு, சமபுதவீவக காவறபெய்வம, சாபுதவீவதெயவம, தொனமூதாட்டி, பொன்னிறபொலிதத நிறத்தாள், முபெயாள முதிமூதாட்டி, மூதைமுதல்வியென இநதூலில இவள வழஙகபபடுவள. (பதி) உ, ரு, ஃ, ஙக, ஙா, உ0, உஙா (உ) உ (ஙா) ஙகஅ, ஙஙா, ஙஙள, ஙஉக, ஙகஅ0, (ஙள) அஉ; (ரு) ஙஙஅ, ஙகள, ஙஙஉ, ஙஙஅ0, (ஙஙள) ஙஉ, ஙஙஉ (உஉ) ஙஉ, (உஙா) ஙஉ (உஉ) ஙஅ0.

சமணர் —சமணதருமதாரிவினுள் ஒன் று, இது காவலநதீவெனவம வழஙகப்ப படும. (ங) ஙள, (சக) ஙஙள (உஙா) உ0 (ஙள) ஙஉ (உஉ) உஙா, (உஙா) ஙஉ (உஉ) ஙஅ0.

சமணேரி —சமணதகூடம சமணளியெ னறும பெயர்பெறும (ஙக) உஉ இதன வரலாற்றை மணிமேகலைப் புதகதனினை ஙள-ம பகுதகதிற் பாரக்க

சமவெளி —இலஙகாதீவதது ள்ள ஒரு மலை இதுபுத்தரதபாதச்படிமையுளள உ ச்சியையுடையது சமனகமெனறும பெயர் பெறும் இருதகி (பலிதகி) பெறறசாரண ரால் வலமவருதலிசிகபபடுவது. (ங) உஉ, (உஙா) ஙஙள.

சமவணர் —இமயமலையிலுளள ஒரு பொய்கை. (ஙஅ) ஙஉ.

சனமிந்திரர் —புண்ணியாசனுடைய மநதிரிகளுள் ஒருவன, அரசன் புத்தபீடி கையைத்தரிசித்தற்கு மணிபலலவதீதெ னறபொழுது நாகபுரததை ஒருமாதமவ ரையிற் பாதுகாத்தவன். (உஅ) ஙஅ.

சாதுசகதரன் —ஒருமுனிவன, ஆகாய கமனமுடையவன், தன முற்பிறப்பில இவனை ஒருபொழுதுண்பித்த புண்ணிய மே மணிமேகலை நல்வழிப்படுதற்கு ஏது வாயிறதென்பர், இநதூல் ங0-ம காதை உஙா-ம அடிக்குறிப்பைப்பார்க்க. (ஙக) ஙஙஉ, (உக) ஙஅங.

சாதுவன் —ஆதிரையின்கணவன், நா கர்களுக்கும அவர்கள்குருமகனுக்கும சில நீதிகளகூறி, அவர்களை நல்வழிப்படுதிதி னோன் (ஙசு) ச, உக, எஉ.

சாமிங்கலர் —கோதமையின்புதல்வன்; இவன் மயானதநிற் பேய்மகளாடியதைக் கணடி அருசி உயிரையிழநதான. (சு) ஙஙசு.

சாலி —ஒருபார்ப்பனி, அபஞ்சிகன் மனைவி அபுதரிரனுடைய தாய (ஙக) ரு, எரு, ஙஅ

சாவகம் —ஒருநாடு, இதன்தலைநகர் நா கபுரம், இதில் தவளமலையெனறு பெயர் பெறற ஒருமலையுண்டு. இஃது ஆபுதரிர னுடைனறது கூறப்படும. (பதி) அஉ; (ஙச) எஉ, ஙஙக, (ஙா) ஙஙக, ஙள, (உக) ஙஙக, (உங) ஙஙக (உ0) எரு.

சிங்கபுரம் —ஒருநகரம, கலிங்கநாட் டுள்ளது; இதனரசன வகுவென்பவன், இஃது அரிபுரமெனவம வழஙகபெறும. (உசு) ஙள, உஉ

சித்திரசேனன் —சீசாராசனுடையநகர். (ங) ஙக.

சித்திராபதி —மாதவியின்நற்றாய், மணி மேகலையை உதயகமாரனுக்கு கூட்டுதற் குப் பலவகையான முயனறவள், மிகவ விரருளளவள (பதி) ஈடு, (உ) ரு, எங; (ச) எங (ரு) அஉ, (ஙஅ) ரு, எரு, (உஉ) ஙள (உச) உ, அங.

சித்திராதேவி —ஸரஸவதிதேவி, இவளு ககுத தெனமதுரையிற கலாங்யமெனறு பெயர்பெற்ற ஓரால்யமிருநதது, இவள் ஆபுதரிரனுகது அமுதசுரபியை அளிதத வள, இவளைச சிதராவிளக்கெனறுங கூறுவர் (பதி-ங0 ஙஉ-ம காதை, ஙஅங; ஙச-ம காதை, ஙங உச-ம் காதை, ஙஙஙஙஙள-ம அடிகளின குறிப்பைப் பார்க்க. (உ) ஙக, ஙச.

சிநதி —மானவயிற்றிற்பிறநத ஒருமு னிவர. (ஙக) ஙஙச.

சிவபெருமான் —இவர்பெயர், ஆலமர் செல்வன, தூதல்விழிகாட்டதனிறையோ னென இநதூலில் வழஙகும. (ங) ஙிச; (உ) ஙச

சீதரன்:—சித்திபுத்தாசன் நீலபதியென்பவளுக்குத் தநதை (க) சுரு.

சீந்நி:—மாவலிபரம்பரையிலுதித்தவரசன்புத்திரி, நெடுமுடிக்கிள்ளியின் மனைவி, உதயகுமரனுடையதாய், இராசமாதேவியென்று கூறப்படுவள். (ககு) ரு, கூஅ.

சுநதன்:—புதிதன. (உஅ) கூறு

சுநதமதி:—கௌசிகனென்னுமந்தணனுடையபுதநிரி மாருதவேகனெனனுமொரு விதநியாதரனல் முனபு கயாநதுகொண்டு போகப்பட்ட இவன் பினபு அவனுற் காவிரிபபூமபட்டினதநிலிடப்பட்டு மாதவியின் உயிரதோழியாயிருநதாள் மணிமேகலைபால் மிக்க அனபுடையவள சஙக தருமனிடத்துத் தருமங்கேட்டவள. (பதி) சுரு, (கூ) கஎ, கஅ0, (ரு) உரு, அசு. கரு, (ரு) க0, கூஎ. (சு) கசு. (எ) கசு, சக, க0டு, கசுரு, (அ) உ0. (க0) எகூ, (ககி) கசு0; (கஉ) கஎ, கக0, (உரு) அரு.

சுநதரதேவர்:—சேரலாதனபுதநிரன, இளஙகோவடிகளின் தமையன இவன, கண்ணகி தனனுட்டையடைதது கணவனோடு சுவர்கமபுகுந்தாளென்பதைக்கேட்டு இமயமலையிலிருநது சிலைகொணாந்து அவள்வடிவமைதது பிரதிஷ்டை செய்வித்துப்பூசையுமவிழவுமநடதநினான, இநநூலாசிரியராகிய மதுரைக்கூல வாணிகன் சாத்தநாற்பால் மிக்க அனபுடையன். (உசு) எஎ. (உஎ) உ.

சேடி—விதியாதாருலகு (கஎ) உக

சைமினி—ஒருமுனிவர அளவையாதநூலாசிரியராகநவினாருவர, பிரத்தியக்ஷ முதலியபதநினுள ஒனாகொண்ட பிரமாணம ஆறில (உஅ) கூ.

சோழர்—(பதி) எசு, (ககி) சஉ, ககசு; (உஉ) கஉ, கசஉ, ககசு, உகரு.

சோழிதேவர்—நெடுமுடிக்கிளளியின் மநதிரிகளுளொருவன், உ-ம காதை, உருபும் அடிகளுறிப்பைப்பாக்க.

தக்கிணமதுரை:—தென்மதுரை, (கசு) க0ரு (உஉ) க0சு, கஉ.

நநதிலை.—கற்பகதருநிற்குங் கோயில், இது காவிரிப்பூம்பட்டினதநிலுள்ள கோயில்களுளொன்று. (ரு) ககச.

தருமசக்கரம்:—அறவாழி; க0-ம் காதை, உரு-ம் அடிக்குறிப்பைப் பார்க்க. (ரி) எசு, (சு) ககி.

தருமகாவதன்—காகபுரதநிதின் அயலிடதநதாகிய ஒருசோலையிலுளள பௌத்த முனிவன இவன் புணணியராசனுக்குத் தருமோபதேசஞ செய்தான. (ரு) உ.

தருமதநதன்:—காவிரிப்பூம்பட்டினத்துளள ஒருவணிகன. இவன மதனசெனறபெருமபொருளீட்டி எட்டிப்படடம பெற்றுன மரிகுமவரையிற கலியாணமினறியிருநதான. (உஉ) உ,கரு,கஎ.

தருமதேவனார்—காஞசிநகரதநின தென்மேற்கிலுளள தோரா சோலை. (உ) கஅ.

நகரமாஎ்வரை—சாவகநாட்டிலுளள தோரா மலை. (க) கூ

நாகர்:—மீனா இலக்குமியென்பவ நினறமகளை இரவிவனபனபுதநின், தக சயராசனமணைவி யானையால விரை இற நதனெனபதுகேடடு மாடதநிலுள நிலாமுறறதநிலிருநது பூமியிலவிழுநிற நதான, அநநிதபிறப்பில மாதவியாகவநது பிறநதவள இவளே. (எ) க00, கo்; (கரு) நுக, (கக) கசுரு, (கஉ) கரி, சஅ, கo்க.

நிரயபாலகர்—பிரஹ்மகாயிகலோக யபரிமலோகம மூருநதிலுமுளள இருபதுவகைப்பட்ட பருஹ்மகணபிண்டங்களி, சு-ம காதை, களசு-களஎ-ம அடிகளினகுறிப்பைப் பாக்க. (ரதி) உ0.

நிவிடீ:—கணணில்லிடமுடைய தோர பாமபு, இஃது அழறரஞகம, நருசு விழியாவெனவும வழஙகபபடும, நநதால் கு-ம காதை, சகு-ம அடிகருறிப்பைப்பாக்க, நாகஅரசாகள், (விநதவடிசஅரசர்) நிநதடி நிஷ்தகுலகிலரென்று சிறப்பிக்கப்படுவர Epigraphia Indica, Vol. III P 232 பாக்க. (கக) க00, (உக) கக, சo, (உசு) சுகு, கஅ.

நிருபர்:—இவரபெயர, இந்நூலுளளே நெடியோன, மன்னுயிரமுதலவனென வழஙகப்படும், (ககு) ரு அ, (கஎ) கு, (ககு) டுக.

நிருபாக்ஷர்:—திருக்குறளியற்றிய ஆசிரியர, "தெய்வத தொழாஅள் கொழுநற றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப், பொய யில் புலவர்" என்று இந்நூலிற் சிறப்பிகபபட்டுள்ளவர், இதனுல நிருந்தன இநநூலுக்கு முந்தியதெனபதும, திரு

வளரூவர் இந்நூலாசிரியர்க்கு முற்காலத்தவரென்பதும் பெறப்படுகின்றன. உரம் கர்த்தை, ஈக-ம அடிக்குறிப்பைப்பார்க்க.

நீலமணி —மணிபலலவத்துள்ள புத்தபீடிகையை இந்திரனகட்டினேப்படியே பாதுகாத்திருப்பவளான ஒருதெய்வமகளை, மணிபலலவத்தீவுத்தனியேயிருந்துவருந்திய மணிமேகலையை முதலிற் கண்டு அளவளாவியவள். புண்ணியராசனுடைய பூர்வசன்மசரீரம மணலிற்புதைத்துகிடந்ததனை அவனுக்குக்காட்டியவள் (பதி) நிக, (நக) கூ, உ0, உக, நிரு, எரு, கஉ, (கஉ) உரு, (உக) அசு, (உரு) கநிக, உகர; (உ0) உகஉ; (உரு) ஈக.

நூற்றாயிரர் — அங்கநகாட்டினகண்ணதாகிய கசசயநகரத்தரசன, தானை, சீறை யெனபவாகளினை கணவன். (எ) ஈக, (கம) நிச, (நக) கஉர, (கஉ) நம.

நூற்றுவேற்கை —துஷிதலோகப்-உலகமுப்பதுதொன்றனுள ஒனபதாவது, மகாராஜிகலோகமுதலிய தெய்வலோகமஅறனுள நானகாவது. இதிலுள்ள பிரமாயுவினென்னுந தேவனே புத்தரைஅவதரித்தானெனபா (கஉ) எக (கம) ஈ

நூலாடியமர்ந்தோன் —காஞ்சிகரத்திற் புத்தாலயமகட்டுவித்த ஒருசோழன், தொழுதகைஞரினியின பினனவன. (உஅ) கவெ.

நூலிழை —சகரவாளக்கோட்டத்துள்ள கருநிறபாவையை அறிவித்ததற்கனறு முசகாயசசெயதாயகூடிய ஒருதேவன, இவனசித்திரசேனனுக்கு நண்பன (உக ஈக, கவ நு, கஉர, (உஅ) கஉ.

நூலேபோலும் பெருநடை நெடுமொழி:—காவிரிபபூம்படினதநிலமுதலில அகரசியாளரினடைய கட்டளையினபடி இநதிரவிழாவெடுபபிதத ஒரு சோழன் இநநூல முதறகாதை உ-ம உரி குறிப்பைப் பாரக்க.

நெடுமதகு —உலகம்முப்பதொனறனுள மகாராஜிகலோகமுதலிய தெயவலோகமாறறினமுளள அதுவாகத தெயவகணபிண்டாகுக ஈ ம காணக. கஉ உ-ம் அடிகளின குறிப்பைப் பாரக்க (பதி) உஅ.

நெடுங்கிழாஞ் சென்னி:—காஞ்சிகரத்திரு நத ஒருசோழன்; தூணையளங்களிளரியின மூன்னோன். (உ அ) கவெ

நேதாநா டோறு:—மணிபலலவத்துள்ள புத்தபீடிகையை எடுத்துச்செல்லமுயன்று தமமுட்பகைமைகொணடுபோய்த்த இரண்டரசர். (அ) நிரு (க) நுஅ.

நாதாறு:—இப்பெயருள்ளநாடுகள் இந்நூலில் இரண்டிடதது வந்துளளன. அவறறுள.—

ஒனறு - புத்தபீடிகையை எடுத்துச செலலமுயன்று பகைமைகொண்ட அரசாகளுடையது, இது கீழ்த்திசையிலுள ளது. (அ) நிசு; (க) உக.

மற்றொன்று-வேளவணனென்னும் அரசனுடையது. (உ) நிக, (உரு) கஎஅ; (உக) கூ.

நாராயணீ —புண்ணியராஜனுடைய இராசதானி, சாவகநாட்டுள்ளது, இது இலாசாசனஙகளில போதவதிபுரமெனறு வழஙகும. (உ) கூஈக.

நாதர்:—மனிதரில ஒருவகையினர்; இவரகக்சாரணனொனறு இநநூலிற் கூறபடுவர; இநநூல அ-ம் காதை, முசு-ம அடிகளுகுறிபபைப்பாரக்க. (கஉ) கரு, ஈக, கூக.

நாதரிலர்:—இநிலுள்ளவர்களாகிய நாகர உடையில்லாமறசஞ்சரித்தவரென்றும இழிவானதொழிலகள பலவற்றைச செய்துகொண்டிருநதவொனறாக தெரிகினறது (கஉ) கரு, ஈக

நாபலர்தெழி —(உ) க, (க) கஎ, (கக) கரெ, (கரு) உ0

நீலபதி —சோதரனென்னுமாசன புதநிரி, அதற்பதிலெனனுமாசன மனனவி, இராகுலனுடையதாய (க) சுர, (உ0) கூஎ.

நெடுங்கொடியோர்:—ஒருபாணடியன், சிலமனினிமிததம கோவலனைக கொலை செயவித்தவன. (உ) நிக

நெடுமுடிக்கானி.—ஒருசோழன்; இவன்காரியாறறினபோரசெயது சேரபாண்டியாகளை வெனறவன, கிளளிவளவன, மாவணகிளளி, வடிவேலகிளளி, வெண்தேர்கிளளியெனனும இநநூலிற கூறப்படுவன, (உஉ) உ ஈக, நுஅ, (உரு) கச, கஅ0, ஈகக, (உக) கூ.

பாரிமகளிர் —திருமாலின அவதாரமூரதிகளுள ஒருவரா இவர போராசெயயவநதபொழுதுதான காதலனை யுரு சோழனிருவன ஒளிதது கொணடான, இவர, மழுவாளெறிடியோனெனறு இநநூலிறகூறபபடுவர (உஉ) உறுநடை

பாரிய —பெரும்புதசரசங்கிய வகையை

ன்பவனுடைய வேலைக்காரருள் ஒருவன்; இவன் காரணமின்றிச் சங்கமனென்னும் வணிகனைக்கொல்லுவித்தமைபற்றி அவனுடையமனைவியாகிய நீலியென்பவளாற் சபிக்கப்பட்டோன், கோவலனுக்குப் பிறந்த வன்இவனே. (உசு) உரை.

பலதேவன்:—கண்ணனுக்கு முன்னவன். (ககூ) சூடி, எஎ.

பளிக்கறைமண்டபம்:—காவிரிப்பூம்பட்டினத்தைச்சார்ந்த உவவனத்திலுள்ளது, இதிற் புத்தபாதபீடிகை யொன்றுண்டு; மணிமேகலை, தன்னை உதயகுமரன்கவர்வந்தபொழுது முதலில் இம்மணிமண்டபத்திலேதான் ஒளித்துக்கொண்டாள். (உ) சுஉ.

பாண்டிநாடு.—(கச) நிரை.

பாண்டியன்.—(ககூ) ஆச.

பாண்டுகம்பளம்:—இந்திரனுடைய ஆனை, இதன்சலனத்தால் இந்திரன் சில வற்றையறிந்துகொள்ளவான; இந்நூல கச-ம காதை, உஅ-உக-ம அடிகளின் குறிப்பைப் பார்க்க (உக) உக

பாதபங்கயமலை:—புத்ததேவன் எல்லாவுயிர்களுக்கும் தருமநிந்தையையுணர்டாக்கினைந்து, அவைகளெல்லாங் கண்டு கேட்கும்படி இதனமேலே நின்று தருமோபதேசஞ்செய்தபொழுது அவன்பாதச்சுவடு தங்கப்பெற்றமையின, இஃது இப்பெயர்பெற்றது, இதனை, "ஆதி முதல்வனறவாழி யாள்வோன், மாதுய செவ்வமகளை நீக்கி, விலங்குந் தமமுள் வெருவுமபகை நீக்கி, யுடனகுயிர் வாழ்கவென் றுள்ளங் கசிந்துகத, தொனறுகாலத்து நின்றற முறைதத, குனற மருங்கிற் குற்றங கெடுக்கும, பாத பங்கயங கிடததலி னீஙஙகிது,பாதபங் கயமலை யெனும்பெயர்த்தாயது" (கம-ம காதை, சுக-சுச) என்பதனாலுணர்க; இது பாதபங்கயமென்றும வழங்கப்படும. இமமலையைக்கிருதஜிரகூடமென இக்காலத்திற கூறுகினறனா; இது, மகததேசத்தின இராசதானியாயிருந்த இராசக்ருகநகரத்தின் சமீபத்திலுளளது. (கம) சூஎ; (கஉ) ஙஅ, கபஙூ.

பாதபீடிகை:—புத்தனுடையபாதப்படிமங்களுளள பீடம. இஃது இலங்கைத்தீவு, காவிரிப்பூமபட்டினம், மணிபல்லவம் தீவு முதலிய இடங்களிலிருந்ததென்றும் பண்டைக்காலத்துப் பௌத்தரால வழிபாடுசெய்யப்பட்டுவந்ததென்றுந் தெரிகின்றது; இப்பீடிகை, தருமபீடிகையென்றும், தாமரைப்பீடிகையென்றும், புத்தபீடிகையென்றும், மாமணிப்பீடிகையென்றும் இந்நூலில் வழங்கப்படும். (பதி) சுசூ, (சு) சுஙஙு; (டு) சுஎ; (சு) கஉ. (அ) டுரு, டுருஙூ, சுஙஙு (சு) சுஉ; (கo) க, கசூ, கசூ; (ககு) கசூ, உரு, உஎ, சுஎ, டுசூ, கஉசூ; (கஉ) ககூ, (உக) கசூ; (உடு) ஙசூ, சுஙூ, கஙஙூ (உச) எஎ, உகஎ, (உக) சுo.

பிதிருதேவர்:—நப்பின்னைப்பிராட்டியார். (கஙூ) சுஙூ.

பிடகம்:—பௌத்தாகமம்; இதவினயபிடகம், சூத்திரபிடகம், அபிதர்மபிடகமென மூன்றுவகைப்படும், இந்நூல் உசு-ம் காதை, சுசு-ம் அடிக்குறிப்பைப் பார்க்க.

பிரமதருமன்:—ஒருபௌத்தமுனிவன்; அததிபதியின்மைதனன், காயங்கனையெனனும் நதிக்கனையிலிருந்து நோற்றோனை, முக்காலவுணர்ச்சியு மூள்ளவன, பினனிகழுந்தீங்குகளை மேற்கூறிய அத்திபதிக்கு எவ்வதுக்கூறினவன். இலக்குமிகு மறபிறப்பினிகழுஞ்செய்திகளைத தெரிவித்தவன் புதபபீடிகையால தனது பழம்பிறப்புணர்ந்த மணிமேகலை இப்முனிவனகூறியதையும அப்பீடிகையாலறிந்து இவனை மிகுதநிதிதுப் பாராட்டினள் (சு) கரு (உக) டுரு.

பிரமன்:—ப்ரஹ்மா (பதி) உக; (ககூ) நுஅ, கூச.

பிலிவேளை:—ஹிரண்யனென்னும் அரசன்மகள் காவிரிப்பூம்பட்டினத்துள்ள கழிக்காஞற்சோலையை அடைந்து நெடுமுழிக்கிள்ளியோடு ஒருமாதமிருந்து கருவுற்றுப் பின்பு தன்னூராயைடைந்தவள (உஅ-ம எ (உo) எஎ, (உக) சு.

புரூரவன்:—நாகபுரதத்தரசன, பசுவயிற்றிற் பொனமுட்டையிற்றங்கிப் பிறந்தோன; இவனப்றந்தகாலத்திற் புதன்பிறந்தபொழுது நிகழ்ந்த நற்குறிகளெலலாம நிகழ்ந்ததையின, அவனபெயராகிய தருமராசனென்பது பெயர்த்து இவனுக்கு இடப்பட்டதென்ற தெரிகிறைது; தருமசாவகனெனனும் முனிவனிடத்து அறங்கேட்டோன், மணிமேகலையோடு மணிபல்லவமடைந்து புதபீடிகைகாட்டியால தன்பழம் பிறப்புணர்ந்தவன இவன், ஆபுதநிதனைவும், சாவக

மன்னனெனவும் வழங்கப்படுவன், இவனுடைய பூர்வசன்மநாமமீசுயம் ஆபுததிர னென்பது. (உக) அஉ; (உஈ) கஎ0, (உடு) க, ஙக, சுஅ, ஙகசு, ஙக0, ஙகஉ, கடுச; (உ0) ஙசு.

பூந்தர்:—புததேவன்; இவனுடைய பெருமை இந்நூலுட்பலவிடதது ங்கூறப் பட்டுள்ளது, இவன்பெயர், ஈருளறம பூண்டோன், அறவாழியாள்வோன, அற வியங்கிழவோன், அறவோன, ஆதிமுதல வன, ஆதிமுனிவன, ஆரியன், இயலகு ணன், உரகர்துயமொழிபபோன், எண பிறக்கொழிய இறநதோன, ஏகதேவன், ஒருவன், கண்பிறாகளிக்குங கண்ணே ன, காமற்கடந்தோன, சினேந்திரன், சுக சுன், தருமதலிவன், தன்னுயிராகஇரங்கா ன பிறவுயிரோபய டனனுயிர்முதலவன், தனக்கெனவாழாப்பிறர்க்குரியாளன, தீ நெறிக்கடமபகைகடந்தோன, தீமொழி க்கடைத்தசெவியோன், துறக்கமவேண டாத்தொல்லோன், நரகர்துயாகெடநடப் போன், நாதன, பகவன, பிணிப்பறுமாத வன, பிறர்க்கறமருளும பெரியோன, பிறர்கதமுயலுமபெரியோன, பிறாகரு ரியாளன, பிறவிப்பிணிமருத்துவன, புததஞாயிறு, புலவன, பெரியவன், பெ ருநதவமுனிவன், பெருமகன, பேரறிவா ளன, பொதுவறிவிகழ்நது புலமுறுமாத வன், போதிததலேவன, போதிநாதன, போதிப்பகவன், போதிமாதவன், போதி மூலதருநாதன், போதியுரவோன, மன னுயிராமுதல்வன், மாரனெனைதவீரன, மிகுகோன, முழுதுமுணர்ந்தோன, முறற வுணர்ந்தமுதலவன. முன்னவன, ஞானன, வாய்மொழிசிறநதகாவீரன எனஇநநூ லுளளே வழஙகப்படும. (சு) சுக, (எ) ஙக, ஞக, (ஙூ) சுக, (கo) க, சுக, அச (ஙக) உசு, கo, சுசு, சுக, எச, (கஉ) சுஎ, டுஎ. எச, எஅ, அசு, கoஉ, கoஅ, ஙகக (கடு) உசு, உக (ச) கசுஎ, கஎச; (உடு) சு, சுச, சடு. டுச, டுஉ, சுஉ, ஙகசு; (உசு) சுசு. (ஃ) கo, கடுக, ஙகசு, கஎச; (ஒ) உச, சஎ, (சo) ஙக.

பூந்தராய்நகர்:—தவவேடததில் மறை நது நீலமபுரிக்கொழுகுவோர்முதலிய அறுவகையாரைப்புடைத்துண்ணும்பூந்தம் நிறறலையுடைய நாற்சந்தி. இநதூல்முதற் காதை, உசு-உச-ம் அடிகளினகுறிபப ப்பார்க்க. (எ) எஅ; (உo) உக. (உஉ)சo, டுடு.

பூதம்:—அங்காடிப்பூதமெனவும் சதுக் கப்பூதமெனவும் இரண்டுள்ளன. இவற் றுள அஙகாடிப்பூதததின் வரலாற்றை, இந்நூல்முதற்காதை ஙசு-உo-ம அடிக ளின் குறிப்பாலும, சதுக்கப்பூதத்தின் வரலாறறை முதற்காதை உசு-உசo-ம் அடிகளின் குறிப்பாலு முணர்க. இந்தூ லில் வேறுபூதமும் கூறப்பட்டுளளது. (சு) ரிக

பூதி.—ஓரந்தணன்; வயனஙகோடென் னுமூரிலுளளவன் ஆபுததிரனெவளர்த தோன், இளமபூதியெனவுங கூறபபடு வன (கசு) கசு, டுஏ.

பூமிச்சந்திரர்:—நாகபுரதரசன், அமர சுந்தரியினகணவன், புண்ணிய ராசனெ வளர்ததவன. உச) கஎ0; உடு) எ

பூருவதேசம்:—காந்தாரநாட்டின ஒரு பகுதியாகவுள்ளது, இதறகரசன அததி பதியெனபவன. கூ) கங.

பொதியில்.—பாண்டிநாட்டுள்ள ஒரு மலை. இதன்வளததைக காணவந்தபொ ழுதுதான காயசணடிகை விருசசிகனசா பததால யானைததீயென்னுங நீராப்பகி யை யடைநதாள, இதில எழுந்தருளியி ருசதலினாலேயே அகததியமுனிவா மல யததருநதவன என்றுகூறபபடுவா. (க) சூ, (கடு) அஉ, (கஎ) உச, டுo; (உo) உஉ.

பொருசம்:—அரசமூரம என்றது பல்குளி நதிக்கரையிலுளளதையெனகொளக. இதனிழலிலிருநது ஆராயநதபொழுது நானகுவகைபபட்ட சததியகளோ அறித றகுரிய ஞானமுணடானமை பறறிப புத தன போதிமாதவன' எனறுசொலலப படுவன, அவனிருந்ததுபறறி இது மகா போதியெனறு வழஙகபபடும. கக-ம காதை, சசூ-ம அடிகளுறிப்பைப்பாரக. (கக) எக (கஉ) கo, கஙக. (உஅ) கஎச.

மகாநாம்:—ஒருநாடி, இது தகஷிணமக திம உததரமகதமென இரண்டுவகைப்ப டும். (உசு) சஉ.

மகாதேவி.—பெருந்தேவி. (சு) கசுடு.

மகாவஜ்ரதிருநாமா:—புததன் வைசாக சுதததபூரணிமையில் ஞானம்பெற்ற மையினை, அஃது இப்பெயர்பெறறுப் பௌதததாரால் நிரம்பககொண்டாடப்ப டும். (கo) அசு.

மணிமுகநர்:—ஒருமுனிவன் தவளமலையிலிருந்து தவஞ்செய்தோன் இம்முனிவனிடத்திருந்த பசுவயிற்றிலேதான்புண்ணியராசன் பிறந்தான். (க.) சு, கம, சுப.

மணிபல்லவம்:—ஒருசிறுதீவு; இதுகாவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே முப்பது யோசனையளவி லுள்ளது. தன்னைத் தரிசித்தோர்களுக்குப் பழம்பிறப்பின செயதியைத் தெரிவிப்பதாகிய புத்த பீடிகையொன்றும் கோமுகியெனறும பொயகையொனறும இதில இருகினன. (பதி) ரச, ஈர, சு) உகரு (எ) க, உஉ; (அ) உ; கு ஸ்ல (ககக) உ; (கஉ) சு; (கச) ஸக, (கஃ) சுரு, (உக) கடு, ஸ, கo, கஉச, (உப) (ச ) சுரு, கஉo, கo சு, கசுக, கஷ்உ; (உஅ) உஒக.

மணிநாகநலாதெய்வம்:—சில தீவிலுள்ளவரை அரக்கர் வாதைபணணுதபடி இந்திரனேவலாற பாதுகாத்ததுக்கொண டிருந்ததலேயுடைய ஒரு தெய்சம. சோவலன் தன குலதத்தினருவனே இத் தெய்வம் கடலிற பாதுகாத்த நனறிபாராட்டியே தன் புதலவிகது மணிமேகலையெனறு பெயரிட்டான, மணிமேகலையை நல்வழிப்படுத்தறகு எணணி அவளை உவவனதத்திருநது மணிபல்லவகொணடுசெனறு புதபீடிகைக்காட்சியாற்பழம பிறப்புணாவித்துப் பூவனஜனமாயகன இன்னுணைனபதைத தெரிவித்ததனறி, சிறநத மூனறு மகதிரங்களைப் பினபு அவளுக்கு உபதேசித்ததது. (பதி) எசு, சசு (கடு) சுரு; (சு) உ (கடு, உகசு, (எ) உ, கஅ, சுரு, சo, சு, (அ) உ, (சு) சுடு, ஸ, (கo) டு, கசு. (கக) க, எடு, கஉ., (கஉ) சு, கச, உ, உ., சுடு, (கஅ) அக, (கசு) கo, (உக) கச, கo, கஉ; (உச, ஸச, எசு, (கடு) சுஅ, (உஅ) எ), (உஅ) எக, உகஉ; (உசு) சுரு.

மணிமேகலை:—கோவலனுரு மாதவி பாற் பிறந்தவள்; இகசாபபியததலேவி "காதன் மடநதையா கையறு காலேயு மெய்யகலா, மேதகு நாணு மெலியவன் ரோவிழி போலுநெய்தற், போதவிழ் மெண்ணலர்ப் புன்னேயங கானல் பொருந்துமித்த, மாதவி பெற்ற மணிமே கலேநம மை வாழ்விப்பதே" எனை மகாகவியாகிய கம்பர்புதல்வர் அம்பிகாபதியென்பவர் தாமியறறிய கோவைச்செய்யுளில இவளையும் இவளன்னையையும சிலேடையிலமைதிதுப் பாராட்டியிருபதல் காணக. (பதி) கஉ, சுஅ; (உ) சு, கo; (கு) சு, கக, உo, சஉ, ஷஉ, கசஉ, கஎக (சு) உசு, சுஎ, கஉ (.) ஸக, கஉ, (எ) க, சு, கசு, உo, உடு, சுஉ, (ச) கஉ (கக) கு; (கo) க (கக) உ, கச, கஉ எ, (கஉ) சுக, ஸக, (கடு) (.) சி, எஉ, (கசு) கசo, (கஎ) கசி, எச, கசு; (கo) உடு, சுக, சுசு, எக, கஉக, கசசு, கடo, சுடுடு, கஎo, (ககக) சுo, கஅ , (உo) எo, ஷச, கக சு, (உக) கo, சுசு, கஅஅ (உஉ) சு, கஅo; (உசு) உக, கக, (உச) உஉ, எஉ, அக, கசுரு, (உடு) எ, உo, சுடு, கடுச, உசுக, (உச) உசுஎ.

மதுராபதி:—சென்மதுரையின் அதிதேவதை இநததெய்வதகாலேதான் கண்ணகி கோவலனுடையமுறபிறபபின் வரலாறமுதலியவறறைத் தெரிந்துகொண்டாள். இவள் மதுரைமாதெய்வமென்றுங கூறப்படுவள் (உசு ககு

மருதம்:—ஒருநகரம. இதில் சிங்காதேவியின்கோயிலொன திருந்தது, அபுதிரன முதலிற் பலராளிருந்து அறஞ்செய்தது இநநகரததேசானை, இது தக்ணைமதுரையெனவும வழஙகப்படும (கசு) கபடு; (உஉ) கசு, கஉக (உடு) கசுக, (உசு) கஉ.

மயூர:—தெய்வதசசன்; காவிரிப்பூம் பட்டினததிற பளிக்கறையிலுளள புதச பீடிகையையும், சகரவாளகோட்டதையும, சுதநிற்பாவையையும நிருமித்தவன் இவனே. இவனே அசுதசசனெனறுங கூறுவர் (க) எக, (சு) உசு, (உக) கஉஉ.

மருதி:— காவிரிப்பூம்பட்டினததுள்ள ஒருபாரப்பனி. (.உ) சக, கசஎ.

மரு.—(உச) உகo.

மாசாத்துவான்:—கோவலன்றந்தை; இவன் கோவலன் இறநததைகமகளவியுறறுத தன்கையிலுளளபொருளனைதையுங தானஞ்செயதுவிட்டுப் பௌதசமதச்சார்பினனுய்த் தூவதுவுண்டு வஞ்சிநகருஞ்சென்று தவஞ்செயதுகொண்டிருந்தான அறவணவடிகளேக் காணுதற்குக் காஞ்சிநகரஞ்செல்லுமபடி மணிமேகலையைத தூண்டினவன் இவனே. (உஅ)எசு.

மாதவி :—ஒருநாடகக்கணிகை, கோவலனுடைய காதற்பரதையாயிருந்து மணிமேகலையைப் பெறாரூள, கோவலன கொலையுண்டதுகேட்டுத் துறந்து அறவணவடிகள்பாலதருமங்கேட்டு அவருடன காஞ்சிசென்று நோற்றிருந்தாள (பதி) ஈசு (உ) சு, கo, கக, சுஎ, கூ) க, ஙக, சுஙக, (ச) சுஎ, அக (எ) கஉo, (அ) உங, (கo) எங, (ஙக) கச, (கஉ) கஎ, (கர) எக, (கஎ) அ, உரு, ருங, (உக) எஅ, கருஉ, கஎo, (உஉ) கஎக, (உஎ) ரி, உo, ஙங, கo.

மாரர்:—தருமவிரோதியான இசைகளை மனதிற்றுணடாக்குமஒருதேவன. இந்நூல நி-ம காதை, எஎ-ம அடிக்குறிப்பைப் பாரக்க. (ஙக) சுக, (சுo) ஙக.

மாந்தரவேலன் :—ஒரு விதரியாதரன், இந்திரவிழாசேவிதற்குக் காவிரிப்பூம பட்டினத்திற்குவருகையிற் சண்பைநகரத்திற சுதமதியெனனும பார்ப்பனியைக கவாதகொண்டவன. (சு) ஙங, (சு) உஎ; (எ) கபஉ.

மாபாதகாரி :—ஒருசோழன (ஙக) கஉ, கஙஅ, கச, க சு, (உச) உக, ருஅ (உரு) கச, கஅo, (உஅ) கஎஉ; (உக) ஙக.

மாயோன்—ஒரரசன நெடுமுடிக்கின்ளியினமனைவியாகிய சீதத்தினெனவ பவள. இவனருஎதத்தினனெனறு கூறபபட்டிருகிறாள. (ஙக) ருங.

முசுகுந்தன்.—சூரியருலத்திற்பிறந்த ஒருசக்க வாத்தி. இவன காவிரிப்பூயபட்டினத்திலிருந்து முனனமரசாணடவன. (க) ஙக.

முதுகடவுள்.—(சு) கசச, (ரு) ஙங.

மேரு.—ஒருமலை, இது சக்கரவாளத்தின் நடுவேயுளளது, சுமேருவென்றுங்கூறப்படும். (பதி) ஙட; (சு) ஙஙக (கஎ) கூஉ.

யாமினிதி:—தனியாப்பசியைவிளைவிபதோர் நோய்; இதனுற காயசண்டிகை பனனிரண்டுவெருடம் மிகதத்துன்புற்றுப் பின்பு மணிமேகலை அளித்தஉணவால் அதத்துன்பமொழிந்தாள். (பதி) சுசு; (கஎ) எ, சஅ, எங, (ஙக) ஙஙக, கரிங; (உo) நரு, ஙகஅ.

யூகி :—யௌகந்தராயணனென்று பெயர்பெற்ற ஓரநதணன்; கரு - ம காதை, சுசு-ம் அடிக்குறிப்பைப் பாரக்க.

வச்சிரத்தோட்டம்:-வச்சிராயுதநிற்குங் கோயில், இஃது அக்காலத்திற் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்தது. (க) உஎ; (ரு) ஙக.

வரத்தி:—ஒருநகரம. (க) உஅ.

வங:—ஓரரசன், இவன கலிங்கநாட்டுள்ள சிங்கபுரததை ஆண்டவன. உஅ) கசு.

வஞ்சி:—சேரர்களுடைய இராசதானி, இது ஒருகொடியினபெயனாப் பெற்றனபா கருவுரினவங் கூறப்படும. (பதி) அசு, (கi சு (கக) கஉo, (உக) ஙக, (உஅ) கருரு (உரி) உoசு, உஙஎ; (உசு) எஅ; (உஅ) உ, கoக.

வடிவேற்கிள்ளி:—ஒருசோழன். ஏ ரு) ஙஙஙக.

வந்தவர்.—வதஸராஜனுகிய உதயணன (கரு) சுஉ.

வயிரநாடன்:— மாதவிதோழி இவளாக கூனியென்றுங்கூறுவர். (பதி) சுசு, (உ) ஙo, கo, சுஎ, எச, (சு) க; (சி) ஙக

வயனங்கோடு :— பாண்டிநாட்டிளள ளதாகிய ஓரூர். ஆபுதிதரன் இந்தஉளரிலுள ள பூதியென்பவனுடையவீட்டிலேதான வளாகதான; இது வயவனருகோடென வும வழஙகப்படும. (ஙக) கரு.

வளவனசர்:—நாகநாட்டரசன், வாசமயிலையினகணவன, பீலிவளையின்றநதை. (உ) ரி.

வாதிரைதவ.—ஒருமுதியவள், இவள் இராசமாதேவி முதலியோர்க்கு மனததுனபமுண்டானபொழுது பலநீதிமொழிகளாகூறி அதனைதீபாகுபவள். (உசு).

வாரமயில —வளவனமனைவி, பீலிவளையினதாய் (உச) சுஙு.

வாணர்:—பாணருனான. (சு) கஉசு

வாரணசி:—காசி; இதுவாரணவாசியெனவும வழஙகும. (கசு) சு, எo.

விதாதை:—ஒருவணிகமாது, இவள் மரணபரியநதம் விவாகமினறிக் கனனிமாடததிருநதே காலங்கழிததவள. (உஉ) அசு, எக, கo, கஉச, கசங.

விசுவாமித்திரர்:—ஒருமுனிவர. இவர் வறட்காலமொனறிற பசிததுன்பைப் பொறக்கலாற்றாது நாயின்இறைச்சியைத்தின்னுதறகுமுயனறார, "அரசுதலை நீங்கிய வநதனன" எனறு கூறப்பட்டிருக்கிறார. (கக) ஙச.

விடாச்சிலபொறித்தவேர்தன்:—ஒரு சேரன் இவன இமயவரம்பன் நெடுஞசேரலாதனஎனவுங்கூறப்படுவன், சேர

லனுக்கு ஒன்பதாவதுமுறை முன்னோனு கியகோவலனுக்குக் காதற்பாங்கன் (உஅ) கoச.

விந்தர்:—ஒருமலை;இச்சொல விந்திய மென்னும் உடமொழிச்சிதைவு, இதில் தர்கை யெழுந்தருளியிருக்கும் ஆலய மொன்றண்டு; இதனைக்காப்பவள விநதா கடிகையெனபவள். (உ0) ககஎ, கஉ0.

விந்தாடிகை:—ஒருதெய்வப்டெண் விந்தமலையினமேல் யாரேனுஞ்செல்லு வாராயின், அவரைச் சாயையாலிழுதுதுத் தன்வயிற்றிலிடுபவள. (உ0) கஉ0

வியாதர்:—இவர் பிராணவாதநூலா சிரியர்களுள் ஒருவர்; இவர்கொண்டபிர மாணம் பத்து. (உஎ) ருக.

விராடன்:—ஓரரசன, இவன ஸ்ரீமகா பாரதத்திற் கூறப்பட்டவன். (ரு) ஙசசு.

விரிஞ்சி:—இவர் புலியயிற்றிற்பிறந்த ஒருமுனிவர். (கஙு) சுச.

விருச்சிநர்:—இவர் பொதியின் மலைச சாரலில் தவஞ்செய்துகொண்டிருநத ஒரு முனிவர் பனனிரண்டுவருடத்திற்கு ஒரு முறையுண்ணும் பட்டினிவிரதி, தாமபா ரணம செய்யக்கருதிவைதத நாவற்பழத தைச் சிதைத்ததுபற்றிக் காயசண்டிகை யைச சபிததவர். (கஎ) உ0, ரு(7).

வீனா:—இலக்குமி, தாரை எனபவரின் சகோதரி, துச்சயன்மனைவி, மதுமயக் கததால் யானையின்முனனேசென்று உயி ரை விட்டவள், சுதமதியாகப் பிறநதவள் இவளே. (எ) கo7; (கo) ருக; (கங) கசுஙு (கஉ) கு), சுசு, ககo.

வெள்வேற்கிள்ளி.—ஒரு சோழன். (உகூ) ரு.

மணிமேகலை

# பத்திரம்.


பக்கம்.

பதிகம்..... ... ..... . ... ..... ..... . ... .... .....க.

க. விழாவறைகாதை..... ... .....கூ

உ. ஊரலருரைத்தகாதை..... .....ககூ

ங. மலாவனம்புக்ககாதை .....உஉ

ச. பளிக்கறைபுக்ககாதை ..... .....ஙச

ஞ. மணிமேகலாதெய்வம்வருதுதோன்றியகாதை.....சச

கூ. சக்கரவாளக்கோட்டமூரைத்தகாதை .....ஞச

எ. துயிலெழுப்பியகாதை .....கூகூ

அ. மணிபல்லவத்துத் துயருற்றகாதை..... .....எஅ

கூ. பீடிகைகண்டுபிறபபுணர்ந்தகாதை .....அங

கo. மந்திரங்கொடுத்தகாதை... .....அஅ

ஙக. பாத்திரமபெற்றகாதை .....கூகூ

கஉ. அறவணாத்திதாழுதகாதை..... .....கoகூ

கங. ஆபுதந்திரன்றிறமறிவித்தகாதை .....ஙகச

கச. பாதந்திரமரபுகூறியகாதை .....கஉச

கஞ. பாதந்திரங்கொண்டுபிசசைபுக்ககாதை ..... .....கங

கக. ஆதிரைபிசசையிடடகாதை .....கங

களை. உலகவறவிபுக்ககாதை ..... ... ..... ...கசக

கஅ உதயகுமரன் அமபலமபுக்ககாதை... .....கஞஉ

ஙகூ. சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை .....கசஞ

உo. உதயகுமரனைகாஞ்சனன்வாளாலெறிந்தகாதை .....களள

உக. கந்திறபாவைவருவதுரைத்தகாதை .....கஅஞ

உஉ. சிறைசெய்காதை ..... .....ஙகூ

உங. சிறைவிடுகாதை ..... ..... ..உoள

உச. ஆபுதந்திரனுடைநதகாதை ..... ...உகள

உஞ. ஆபுத்திரனுடுமணிபலலவமடைநதகாதை.....உஉகூ

உகூ. வஞ்சிமாநகர்புகுகாதை ..... .....உசo

உள. சமயக்கணக்கர்தந்திறங்கேட்டகாதை .....உசஅ

உஅ. கசசிமாநகர்புக்ககாதை..... .....உகள

உகூ. தவத்திறமபூண்டிதருமங்கேட்டகாதை .....உஅங

ஙo. பவத்திறமறுகெனபபாவைநோற்றகாதை.....உகூகூ

கணபதி துணை.

# மணிமேகலை.

## பதிகம்.

[கதைபோதிபாட்டு.]*

இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளி மேனி விரிசடை யாட்டி
பொன்றிகழ் நெடுவரை யுச்சித் தோன்றித்
தென்றிசைப் பெயர்ந்தவித் தீவத் தெய்வதஞ்
சாகைச் சம்பு தன்கீழ் நின்று
மாநில மடந்தைக்கு வருந்துயர் கேட்டு
வெங்கிற லரக்கர்க்கு வெம்பகை நோற்ற
சம்பு வென்பாள் சமபா பதியினள்
செங்கதிர்ச் செல்வன் றிருக்குலமு விளக்குங்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட

---

இதுவும், இதுபோல் இந்நூலின் ஒவ்வொருபாகத்தின் தலைப்பில் இருக்கும் பகரத்தினுள்ளே பதிப்பிக்கப்பட்டுள்ள வாகையங்களும், இடைத்தகையெழுதப்பட்ட பிரதிகளுள் மிகப் பழமையானதும் இந்நூற்பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்ததுமாகிய **மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயவர்கள்** வீட்டுப் பிரதியிற் காணப்பட்டன. பதிகத்தினிறுதியில் "ஆறைம் பாட்டினுள் அறிய வைத் தனனென" என்றிருத்தலால், இந்நூற்பருதிகளின்பெயர் காதையென்றிருத்தலினும் பாட்டென்றிருத்தலே பொருத்தமுடை

---

க. ஞாயிறு - சூரியன். எள்ளும் - இகழும்; உவமவருபுமாம். 'எள்ளுந் தோறல்' எனவும்பாடம்.

க-உ. "பொன்னிற் பொலிந்த நிறத்தா டோன்ற" என்பர் பின்னும் (சு - ம் காதை, கசகு - ம் அடி).

ங. வரை - மேரு. உச்சி - உச்சியில.

ச. இத்தீவம் - சம்புத்தீவு.

ஞ. சாகை - இலை. சமபு - நாவல்.

ஏ. வெம்பகைநோற்ற-வெவ்வியபகை பாகநோற்ற.

அ. சம்பாபதியினள் - சம்பாபதியினிடத்தேயிருந்தாள். சம்பாபதியென்பது காவிரிப்பூம்பட்டினதிண்பழையபெயர்.

க. செங்கதிர்ச்செலவன் திருக்குலம் - சூரியகுலம்.

கஅ. கஞ்ச வேட்கையின் - நீருண்டாகும் விருப்பத்தையுடைய; (கம் - நீர்). காந்தமன் - காந்தருடையமன்; காந்தனென்பது ஒரு சோழனபெயர்; "கன்னியே வலிற் காந்தமனனவன்" (உஉ-ம் காதை-உஎ) என்று பின்வருதல காண்க.

# மணிமேகலை.

வமர முனிவ னகத்தியன் றனது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகிய சம்பா பதியயற
பொங்குநீர்ப் பரப்பொடு டொருங்கித கோன்ற
கடி வாங்கினி திருந்த வருந்தவ முதியோ
னோங்குநீர்ப் பாவையை யுவந்தெதிர் கொண்டாங்
காணு விசும்பி ஞகாய கங்கை
வேணவாத் தீர்த்த விளகதே வாவெனப்
பின்னிலை முனியாப் பெருந்தவன் கேட்டலுங்
கன்னி கேளிவ் வருந்தவ முதியோ
னின்னுல் வணங்குந் தகைமையள் வணங்கெனப்
பாடலசால சிறப்பிற் பாதத் தோங்கிய
கோடாச் செங்கோற் சோழர்தங் குலகொடி
கோனிலை திரிந்து கோடை நீடினுங்
குதானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை
தொழுதன னிற்பவத் தொன்மூ தாட்டி
கழுமிய வுவகையிற் கவாற்கொண் டிருந்து
தெய்வக கருவுந் திசைமுகக் கருவுஞ
செம்மலர் முதியோன் செயத வந்தா

கக. "அமர முனிவ னகத்தியன் றனது" என இவ்வடியே பின்னும்வரும்; (உஉ - ம்காதை - கூடு).

கஉ. கரகம் - குண்டிகை; "நீரற வறியாத கரகத்தி" என்பது புறநானூறு, ச. 'கரகங் கவிழ்ந்த' எனவும் பாடம். காவிரிப்பாவை - காவிரியாகியபாவை; "நீர்ப் பாவை" (பதிகம்-கசு) என்பர் பின்னும்.

கங. செங்குணக்கு - செவ்விய கிழக்கு; செம்மை - கோ்மை.

கஎ. ஆணு - நேயம்; "ஆணுப் பைங் கிளியாண்டுப் பறந்ததே" என்பது சீவக சிந்தாமணி, குணமாலையாரிலம்பகம், கடுஉ. 'ஆணுஉ விசும்பின்' எனவும் பாடம். ஆகாயகங்கை - பெயர்.

கஅ. வேணவா - வேட்கையாலாகிய அவா.

கக. பின்னிலைமுனியா - பின்நிற்றலை வெறாத. பெருந்தவன் - அகத்தியன்.

உ0. அன்னை - விரி. அன்னையென் றது, காவிரியை.

உக. 'தன்மையள்' எனவும் பாடம்.

உஉ. பரசித்து - பரதகண்டதலில்.

உங. சோழர்தங்குலகொடி - வேற்றவேந்தரணுகாமையால் சோழர்தங் குலகொடியாயுள்ளாள். இப்படியே வையை நதியை, "வையை யென்ற பொய்யாத குலகொடி" என்று ஓரங்கோவடிகள் கூறியிருத்தல் காண்க; சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்தகாதை, சஎ0.

உச. 'கோணிலை திரிந்து' எனவும் பாடம்.

உஎ. தண்டமிழ்ப்பாவை - காவிரி.

உஅ. தொழுதனணிறப - தொழுது நிற்ப.

உஎ. கழுமிய - கலந்த. கவான் - திடை.

உஅ - உகு. தெய்வக்கரு - உலகம் முப்பத்சொன்றனுள் மகாராஜிகலோகமுதலிய தெய்வலோகம் ஆறினுமுள்ள அறுவகைத் தெய்வகணபிண்டங்கள்; தெய்வலோகம் ஆறவன :— (க) மகாராஜிகலோகம், (உ) திரயத்திரிம்சலோகம், (ங) யாமலோகம், (ச) துஷிதலோகம், (ஞ) நிருமாணரதிலோகம், (சு) பரநிருமிதவசவர்த்திலோகம் என்பன; இந்நூலுள்

# பதிகம்.

கூ0 னென்பெயர்ப் படுத்தவிவ் விரும்பெயர் மூதூர்
நின்பெயர்ப் படுத்தே னீவா ழியவென
விருபாற் பெயரிய வருகெழு மூதூ
ரொருதூ றுவேள்வி யுரவோன் றனக்குப்
பெருவிழா வறைந்ததும் பெருகிய தலரெனச்

யிற், பெருவனப் பெய்திய தெய்வதக் கணங்களும்" என்று பின்வருதல் காண்க; (சு - ம் காதை, கஎஅ - கஎக). திசைமுகக்கரு - ப்ரஹ்ம காயிகலோக முதலிய ப்ரஹ்மலோகம் இருபதினுமுள்ள இருபதுவகைப்பட்ட ப்ரஹ்மகண பிண்டங்கள். ப்ரஹ்மலோகம் இருபதாவன :— (க) ப்ராஹ்மகாயிகலோகம், (உ) ப்ரஹ்மபுரோஹிதலோகம், (சு) மஹாப்ரஹ்மலோகம், (ச) பரீத்சாப லோகம், (டு) அப்பிரமாணபலோகம், (சு) ஆபாஸ்வரலோகம், (எ) பரீத்தசுப லோகம், (அ) அப்பிரமாணசுபலோகம், (கூ) சுபகிருஸ்நலோகம், (க0) பிரகச்பல லோகம், (கக) அஸம்ஜ்ஞாஸத்துவலோகம், (கஉ) அப்பிரகலோகம், (கசு) அசுப லோகம், (கச) ஸுதர்சலோகம், (கடு) ஸுதர்சிலோகம், (கசு) அகநிஷ்டலோகம், (கஎ) ஆகாசானந்தியாயதனலோகம, (கஅ) விஞ்ஞானஞ்தியாயதனலோகம், (கக) அகிஞ்சன்யாயதனலோகம், (உ0) நைவ ஸம்ஜ்ஞாயதனலோகமென்பன. இவற்றுள், (க) ப்ரஹ்மகாயிகலோகமுத லிய பதினைறையும் உரூபப்ரஹ்மலோ கமென்றும், (கஎ) ஆகாசானந்தியாயதன லோகமுதலிய நான்கையும் அரூபப்ரஹ்மலோகமென்றும் கூறுவர், "நால் வகை மரபி னரூபப் பிரமரு, நாலை வகையி னரூபப் பிரமரும்" என்ற இந் நூலுள்ளே பின்பு வருதல்காண்க; (சு-ம் காதை, கஎசு - கஎஎ). மேற்கூறியவற் றுள், தெய்வலோகங்கள் ஆறும ஸகாம லோகங்களென்றும், ப்ரஹ்மலோகங்கள் இருபதும் நிஷ்காமலோகங்களென்றும கூறப்படும். செம்பலர் முதியோன் - மஹாப்ரஹ்மா. இவை, பௌத்தநூலிற் காணப்பட்டன. அந்காள் - அந்காளில.

கூ. என்பெயர்ப்படுத்த - என்பெயர்ப் படச்செய்த; என்றதனால், சம்பாபதி யென்னும் பெயர், சம்புத்தீவ தெய்வத் திற்கு இயல்பாகவே உண்டென்பது பெ றப்பட்டது. இதனை, "தெவ்லோ கொலோ சம்பா பதி" (சு - ம் காதை, கசுஅ) என்று பின்வருதலாலுணர்க. சிலப்பதி காரத்திலும் இந்நூலிலும் தென்மதுரை யையும் அதன் அதிதேவதையையும் மதுராபதியென்று வழங்கியிருத்தல் காண்க. சோழர்களின் பழைய இராசதா னியாதலின், இங்ஙகாம், மூதூரெனப்பட் டது. இப்படியே இந்நூலிற் பலவிடத் தும் இங்ஙகரை மூதூரென்றவழங்குவர்; (உ-ம் காதை கூச, ச0; கூ-ம் காதை கூச; ச - ம் காதை உஅ; கஅ - ம் காதை சுக; உ0 - ம் காதை உஅ; உக - ம் காதை ககக). "ஆரங்கண்ணிச் சோழன்மூதூர்" (பதிகம் - கஉ) எனவும், "வீங்குநீர் வே லி யுலகிற் கவன்குலதோ, டோங்கிப் பரந்தொழுக லான்" (மங்கலவாழ்த்துப் பாடல், "பூம்புகார்."—) எனவும் சிலப் பதிகாரத்தும் வருதல காண்க.

கூஉ. இருபாற் பெயரிய - சம்பாபதி காவிரிப்பூம்பட்டினம் என்னும் இருவ கைப்பெயரினையுடைய, உருகெழுமூ தூர் - பகைவர்க்கு அச்சத்தைச்செய்தல் பொருந்திய பழைய ஊர். இவ்வடியே, ச - ம் காதையில் கூக - ம் அடியாய் வந் திருத்தல் காண்க.

க - கூஉ. விரிசடையாட்டி தெய்வதம் சம்புவென்பாள், சம்பாபதியினள்; (அக காலத்துக்) காவிரிப்பாவை ஏழுதி அச் சம்பாபதியயலில் தோன்ற, ஆங்கிருந்த முதியோள் நீர்ப்பாவையை எதிர்கொ ண்டு விளக்கே வாவென, (அதனைப்) பெருந்தவன் கேட்டு, வணங்கென, குல கதொடி தண்டமிழ்ப்பாவை அம்மூதியா னைத் தொழுதுநிற்ப, அம்மூதாட்டி, அவ ளைக் கவனிற்கொண்டிருந்து, அங்கா னில், என்பெயர்ப்படுத்த இம்மூதூரை நின்பெயர்ப்படுத்தேன், நீவாழியவென் றலால இருபாற்பெயரிய மூதூரென்க.

கூக. தூறுவேள்வியுரவோன் - இந்திர ன்; சதமகன்.

கூச. அலர்பெருகியதென்று; அலர் - பலராறியகிழத்தருஞ்சொல்.

# மணிமேகலை.

நடு சிதைந்த நெஞ்சிற் சித்திரா பதிதான்
வயந்த மாலையான் மாதவிக் குரைத்தது
மணிமே கலைதான் மாமலர் கொய்ய
வணிமலர்ப் பூம்பொழி லகவயிற் சென்றது
மாங்கப் பூம்பொழி லரசிளங் குமரனைப்
சஅ பாங்கிற் கண்டவள் பளிக்கறை புக்கதும்
பளிக்கறை புக்க பாவையைக் கண்டவன்
துளக்குறு நெஞ்சிற் றுயரொடும் போயபின்
மணிமே கலாதெய்வம் வந்துதோன் றியது
மணிமே கலையைமணி பல்லவத் துய்த்தது
சடு முவவன மருங்கினவ் வுரைசா றெய்வதஞ்
சுதமதி தன்னைத் துயிலெடுப் பியதுஉ
மாங்கத் தீவகத் தாயிழை நல்லா
டான்றுயி லுணர்ந்து தனித்துய ருழந்தது
முழந்தோ ளாங்கணை சொளிமணிப பீடிகைப்
நிஎ பழம்பிறப் பெல்லாம பான்மையி னுணர்ந்தது

நடு. சிததிராபதி - மாதவியின் நற்ருய். இதனை, பின்பு, "எற்பயந்த - சிததிரா பதிங்குஞ் செப்புமே" (உ - ம் காதை, எ0 - எக) எனறு மாதவி கூறுதலாலுணர்க.

நஉ. வயந்தமாலை - மாதவியின்தோழி; "தன்மக டோழி, வயந்த மாலையை வரு கெனக் கூஉய்" எனப் பின்னர்க்கூறுதல காண்க; (உ - ம் காதை, எ - அ). இவளைக்கு ளிபெனறுப் வழங்குவர். மாதவி - மணி மேகலையின்தாய்; நாடகக்கணிகை.

நஅ. பொழில - உவவனம். அகவ யின் - உள்ளிடத்தே.

நஉ. பொழில - பொழிலில். அரசி ளங்குமரன - உதயகுமரன்.

சஎ. பளிக்கறை - பளிங்காலாகிய அறை.

சக. பாவை - மணிமேகலை. அவன் - உதயகுமரன்.

சஉ. துளக்குறுநெஞ்சு - நிலைகலங் குதலுற்ற நெஞ்சு; "கடிமரக் துளங்கிய காவும்" என்பது புறநானூறு, உசு. 'பெயர்ந்தபின்' என்றும் பாடம்.

சக. மணிமேகலாதெய்வம் - இத்தீவி லுள்ளவரை அரக்கர்வாதைபண்ணுமல் இந்திரனேவலாலே பாதுகாத்துக்கொ ண்டிருந்ததலேயுடையது; தேவ வலு டைய குலதெய்வம்.

சச. மணிபல்லவம் - ஒரு சிறதீவு; இதனை அநதரத்தீவென்றும் வழங்குவர். 'மணிப்பலலவம்' எனவும் பாடம். இந் நூலில இப்பெயர்வருமிடங்களிலெல் லாம் இப்பாடங்கொள்க.

சடு. உவவனம - உண்டாக்கப்பட்ட வனம்; உபவனமென்னும் வடமொழிச் சிதைவு; இதனை ஆராமமென்றும் வழங் குவர். உரைசால் - புகழமைந்த.

சஎ. சுதமதி - மாதவியின் தோழியா கிய ஒரு பார்ப்பனி. துயில எடுப்பிய தூஉம் - துயில் எழுப்பியதும்; "உரவு நீப் பரப்பி னுர்துயி லெடுப்பி" என் பது, சிலப்பதிகாரம், அந்திமாலைச்சிறப் புச்செய்காதை, எசு. 'துயிலெழுப்பி யதூஉம்' எனவும் பாடம்.

சஅ. நல்லாள் - மணிமேகலை.

சஅ. தனித்துயருழந்ததும் - ஒப்பற்ற துயரால் வருந்தியதும்; "அருந்துய ருழக்குநின் றிருந்திழை யிரவை" என பது புறநானூறு, கசசு. 'தான்றுயிலெ முந்து' எனவும் பாடம்.

சக. 'உழந்தோண்முன்னர்' எனவும் பாடம். ஒளிமணிப்பீடிகை - செவ்வெ ளியையுடைய மாணிக்கத்தாலாகிய (புத தனுடைய) பாதபீடம். பீடிகை - பீடி கையால்.

முணர்த்தோண் முன்ன ருயர்தெய்வந் தோன்றி
மனங்கவ லொழிகென மந்திரங் கொடுத்ததுந்
தீவ திலகை செவ்வனந் தோன்றி
மாபெரும் பாத்திர மடக்கொடிக் களித்ததும்
திரி பாத்திரம் பெற்ற பைந்தொடி தாயரோ
டியாப்புறு மாதவத் தறவணர்த் தொழுத்து
மறவண வடிக ளாபுத் திரன்றிற
நறுமலர்க் கோதைக்கு நன்கன மூரைத்தது
மாங்கப் பாத்திர மாபுத் திரன்பாற்
சுரு சிந்தா தேவி கொடுத்த வண்ணமு
மற்றப் பாத்திர மடக்கொடி யேந்தி
பிச்சைக் கவ்வூர்ப் பெருந்தெரு வடைந்ததும்
பிச்சை யேற்ற பெய்வளை கடிஞையிற்

திக. உயர்தெய்வம் - ய்வம்.

திஉ. கவல் - கவலுதல்; மூதனிலத் தொழிற்பெயர். மந்திரம் - வேற்றரு அடைவிப்பதும், அந்தரந்திரியச்செய்வ தும், பசியைஒழிப்பது மாகிய மூன்று மந்திரங்கள். கொடுத்ததும் - உபதேசித தும். 'ஒழியென' எனவும் பாடம்.

திங. தீவதிலகை - மணிபல்லவத்திலு ள்ள புத்தனுடைய பாதபீடிகையை இந் திரனேவலாற்காவல்பூண்டு ஒழுகுபவள்; தீவுக்கு அலங்காரமாக உள்ளவ ளென பது பொருள். செவ்வனம் - செவ்வி தாக; "தீவ திலகை செவ்வன முகைக ரும்" (கச - ம் காதை, உ0) எனவும், "திறந்தோர்க் கலது செவ்வனஞ் சுர வாது" (கச - ம் காதை, கஉக) எனவும் பின்னர் இம்மொழி இப்பொருளில் வழ ங்கிவருதல் காண்க.

திச. மாபெரும்பாத்திரம் - அமுதசுர பியென்னும்பெயருள்ள பிக்ஷாபாத்திரம்; பாத்திரம - பாத்திரத்தை. மடக்கொடி க்கு - மணிமேகலைக்கு.

திடி. தாயரோடு-மாதவி சுதமதியென் னும் இருவரோடு; "ஆங்கத் தாயரோ டறவணர்த் தோர்ந்து" (பதிகம், அசு) எனவும், "பொற்றொடி தாயரு மப்பதிப் படர்ந்தனர்" (உஅ - ம் காதை, கடிச) எனவும், "நகர்கடல் கொள்ளநின் ரூய ரும் யானும்" (உக - ம் காதை, ஈடி) என வும் இவ்விருவரையும் மணிமேகலையின் தாயரென இந்நூலுள்ளே யாண்டும் வழ ங்கிவருதல் காண்க.

திசு. யாப்பு - கட்டு; அறவணர் - புதச சங்கதத்தாரான ஒரு முதியமுனிவர்.

திஎ. ஆபுத்திரன் - ஓர்ந்தணன்; தன் னைப்பெறறவுடன் தாய் நீங்கிவிட, ஏழு நாள் வரையில ஒரு பசுவாற்பாலூட்டிக காக்கப்பட்டமையின், இவன் இப்பெயர் பெற்றான். திறம் - வரலாறு.

திஅ. 'நறுமணககோதைக்கு' எனவும் பாடம்.

திக. 'அங்கைப் பாத்திரம்' எனவும் பாடம்.

சுஉ. சிந்தாதேவி - ஸரஸ்வதிதேவி. யாவருகும் சிந்தையிற்றோன்றிச் சொற பொருளுணர்த்துபவளென்பது பொ ருள்; இந்நூலுள்ளே, "நாமிசைப் பா வாய்" (கச - ம் காதை, கஅ) என வும், "செழுமகளைப் பாவாய்" (உடி - ம காதை, சுகூ) எனவும், "உணர்விற் றோன்றி யுரைப்பொரு ளுணர்த்து,மணி திக ழவிரொளி மடந்தை" (உடி - ம் கா தை, கசஅ - கசக.) எனவும் வழங்குத லால், இஃது உணரப்படும்.

சுக. மடக்கொடி - மணிமேகலை.

சுஉ. பிச்சைகரு - பிக்ஷைக்கு. அவ் வூர் - காவிரிப்பூம்பட்டினம்.

சுசு. 'பெருந்தகைகடிஞை' எனவும் பாடம். கடிஞை - பிச்சைப்பாத்திரம்; "தோமறு கடிஞையும்" என்பது சிலப் பதிகாரம், நாடுகாண்காதை, கூஅ.

பத்தினிப் பெண்டிர் பாத்தூண் ணீத்தலும்
கூடு காரிகை நல்லாள் காயசண் டிகைவயிற்
றூனைத் திக்கெடுத் தம்பல மடைந்தது
மம்பல மடைந்தன ளாயிழை யென்றே
கொங்கலர் நறுந்தார்க் கோமகன் சென்றது
மம்பல மடைந்த வரிசிளங் குமரன்முன்
எ0 வஞ்ச விஞ்சையன் மகள்வடி வாகி
மறஞ்செய் வேலோன் வான்சிறைக் கோட்ட
மறஞ்செய் கோட்ட மாகிய வண்ணமு
காயசண் டிகையென விஞ்சைக் காஞ்சன
ஞாயிழை தன்னை யகலா தணுகலும்
எடு வஞ்ச விஞ்சையன் மன்னவன் சிறுவனை
மைந்துடை வாளிற் றப்பிய வண்ணமு
மையரி யுண்க ணவன்றுயர் பொருஅ
டெய்வக் கிளவியிற் றெளிந்த வண்ணமு
மறைகழல் வேந்த ஞாயிழை தன்னைச்
அ0 சிறைசெய் கென்றதுஞ் சிறைவிடு செய்தது
நறுமலர்க் கோதைக்கு நல்லற முரைத்தாங்

சுச. பத்தினிப்பெண்டிர் - ஆதிரைமு தலியோர். பாத்தூண் - பகுத்துண்ணுமு

சுடு. காயசண்டிகை - ஒரு வித்தியா தரமகள்.

சுசு. ஆனைத்தீ - எதனலும தணியாத பெரும்பசியைச் செய்வதோர் வியாதி; இதனைப் பஸ்மகவ்யாதியென்பர் ஸ்ரீட பணமுடையார். இதனியல்பை சீவக சிந்தாமணி, நாமகளிலம்பகம், ககக, சுஎக, சுஎச - ம் பாடலகளாலுணர்க. அம்பலம் - உலகவறவி.

சுஅ. கோமகன - உதயகுமரன்.

எ0. விஞ்சையன்மகள் வடிவு - காஞ்ச னனென்னும்வித்தியாதரனுடைய மனை வியாகிய காயசண்டிகையினது உருவம. மகள் - மனைவி. இத்தூலுள்ளே "நினக கிவன் மகளுந தோன்றிய தூஉ - மனக கினி யாற்குநீ மகளாய தூஉம்" (உக-ம் காதை, உக-சு0) என்புழி மகளென்பது இப்பொருளுதாதலுணர்க. 'மகள் வடி வாயதும' எனவுமபாடம்.

எக. வேலோன் - சோழன். சோழனு டைய சிறைக்கோட்டதனை. சிறைக் கோட்டம் - சிறைச்சாலை.

எசு. 'காஞ்சயன்' எனவும் பாடம.

எச. அணுகலும்-உதயகுமரன் அணு கலும்.

எசு. மைந்து - வலி. தப்பிய - வெட் டிய; "வாளிற் றப்பியவலவினை யன்றே" (உக - ம் காதை, சு0) என்றவிடத்துத் 'தப்பிய' என்பது இப்பொருளுதாதலை யுணர்க.

எஎ. 'அழுதுயர் பொருஅள்' எனவும் பாடம். 'நெடுநிலேக கநினின்ற பாவை, வருவதுரைத்து மயக்கொழி யென்றது, மகன்றுயர் பொருஅ மன்னவன் மாத ரைச், சினங்கொண் டாங்கோர் சிறை யிடை யிட்டதுஞ், சிறைவிடு செய்த விராசமா தேவி, பொறைகொண் டிரப் பச் சிலங கொடுத்ததுந், தாழ்கழல் வேந் தன் சாவக மன்னனுக், காயிழை தன்னை யகற்றிய வண்ணமும்' எனவும்பாடம்.

எஅ. தெய்வக்கிளவி - கந்திற்பாவை யாகிய தெய்வத்தின் மொழி.

எகூ. அறைகழல்வேந்தன - மாவண் கிள்ளி.

அ0. விடு - விடுதல்.

அக. நறுமலர்க்கோதைக்கு - இராச மாதேவிகரு. நல்லறம் - பௌத்த சரு

# பதிகம்.

காய்வலீ யாபுத் திரனு டடைந்தது
மாங்கவன் றன்னெ டணியிழை போகி
யோங்கிய மணிபல் லவத்திடை யுற்றது
அரு முற்றவ ளாங்கோ ருயர்தவன் வடிவாய்ப்
பொற்கொடி வஞ்சியிற் பொருந்திய வண்ணமு
நவையறு நன்பொரு ளுரைமி னெவெனச
சமயக் கணக்கர் தந்திறங் கேட்டது
மாங்குத் தாயரோ டறவணர்த் தேர்ந்து
கூ0 பூங்கொடி கச்சி மாநகர் புக்கதும
புக்கவள் கொண்ட பொய்யுருக் களைந்து
மற்றவர் பாதம வணங்கிய வண்ணமுந்
தவத்திறம பூண்டு தருமங் கேட்டுப
பவத்திற மறுகெனப பாவை நோற்றது
கூடு மிளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாதத்தன்

மம்; இதனை அருளறமென்றுங் கூறுவர். 'நறுமலர்க் கோதை நல்லற முரைத்தாங்கு' எனவும் பாடம.

அஉ. ஆபுத்திரனுடு - சாவகநாடு.

அசு. ஆங்கவன றன்னெடு - ஆபுத்திரனெடு.

அச. புத்தனுடையபாதபீடிகையினை யுடைத்தாதலின், 'ஓங்கிய மணிபலல வம்' என்றார்

அடு. உயர்தவன்வடிவாய் - (மணிமேகலை) உயர்ந்த முனிவன்வடிவங்கொண்டு; "மையறு சிறப்பிற் றெய்வதந் தந்த, மந்திரமோதியோர் மாதவன் வடிவாய்" (உசு - ம் காதை, எ0 - எத) என்றுபின வருதல காண்க.

அசு. வஞ்சி - சேரனிராததானி; கருவூர். 'பொற்கொடிமூதூர்' எனவும் பாடம்.

அள. நவையறு - குற்றமற்ற. நன் பொருள் - நல்லதத்துவங்களை.

அஅ. சமயக்கணக்கர் - சமயவாதியர்; இஃது இப்பொருளதாதலை, "சமயக் கணக்கர் மதிவழி கூறுது" (கல்லாடம்-கஎ) எனவும், "மாறுகொண் டறையு மதிநூற் கடலகிளர், சமய கணக்கா தருதி றங் கடந்து" (கல்லாடம் - சுடு) எனவும் வருவனவற்றாலுணர்க.

அக. ஆங்கு - வஞ்சிநகரத்தில்.

கூ0. பூங்கொடி - மணிமேகலை. கச்சி - காஞ்சிநகரம். 'காஞ்சிமாநகர்' எனவும் பாடம்.

கூக. பொய்யுரு - முன்னங்கொண்ட தவவடிவு.

கூஉ. அவர் - அறவணவடிகள்.

கூங. தருமம் - பௌத்ததருமம்.

கூஎ. பாவை - மணிமேகலை.

கடு. இளங்கோவேந்தன் - **சிலப்பதிகார** நூலாசிரியராகிய **இளங்கோவடிகள்**. அருளிக்கேட்ப - அருள்புரிந்து கேட்ப; கேட்டருளவென விகுதிபிரித்துக் கூட்டினுமம அமையும்.

கூச. கூலவாணிகன் சாத்தன் - கூலவாணிகனான சாத்தன்; கூலம் எண்வகைத்து; அவை நெல்லு, புல்லு, வரகு, திணை, சாமை, இறுங்கு, சோளா, இராகியென; பதினெண் வகைத்தெனபர் கூத்தநூலார, அதனை, "பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக" என்பதனாலுணர்க, இது **மதிவாணர் நாடகத்தமிழ் நூல்**.

மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற
வாறைம பாட்டினு ளறியவைத் தனனென.

பதிகம் முற்றிற்று.

க. அரியேறு ..... ன்னுயர்த்த வாதியான் வண்டின்
புரியேறும போதி நிழற்கீழ்ப் – டெரியோ
னடித்தா மரைமலரை யன்போடுஞ் சென்று
பிடித்தார் பிறவார் பெயர்ந்து.

உ. பூத்தபுனற் பூம்பொய்கைப் பூம்புகார் மாதவிக்கு
வாய்த்த மணிமே கலைதுறவைச் – சாத்தன்
மணிமே கலை..... ..... .....

* இந்த இரண்டுசெய்யுளும், இந்தவண்ணமாக மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயரவர்கள்வீட்டுப்பிரதியில்மட்டுமிருந்தன.

---

கூஎ. தமிழ்த்திறம் - தமிழிலக்கணத்தின் பாகுபாடு; திறத்தால். மணிமேகலை துறவு - **மணிமேகலாதுறவென்**னும் பெயருள்ள இந்நூலை. இந்நூலுக்கு **மணிமேகலாதுறவென்**னும் பெயருண்மை, நீலகேசியுரைமுதலியவற்றிற் காணப்படும்; ஆயினும் மணிமேகலையென்னும் **பெயர்** இருவகையழகினும் மிகுதியாக வழங்குதல்பற்றி, அப்பெயரே, சுண்டெடுத்தாளப்பட்டது. இனி, மணிமேகலை துறவென்பதனை நூற்பெயராகக்கொள்ளாது அதற்கு மணிமேகலையென்பவளுடைய துறவென்று பொருள் கொள்ளினும் பொருந்தும். 'வண்டமிழ்த்தின் மணிமே கலைதிறம்' எனவும் பாடம்.

கூஅ. ஆறைம்பாட்டினுள் - முப்பது பாட்டினுள். எனவென்னும் அசைச் சொல் ஆசிரியப்பாவிற்குமுடிபு சிறப்பு டைத்து.

கூஉ - கூஅ. மூதூர் விழாவறைந்தது முதல பாவை நோற்றது ஈறுகவுள்ள மணிமேகலைதுறவை இளங்கோவேந தன் கேட்பக கூலவாணிகன் சாத்தன் ஆறைம்பாட்டினுள் அறிய வைத்தன

---

எல்லாவடியும் நேரடியாய் வந்து முடிதலின், இப்பாட்டு, நிலைமண்டில ஆசிரியப்பா.

**சிலப்பதிகாரத்தை** இந்நூலாசிரியர் கேட்டனரெனச் சிலப்பதிகாரப்பதிகத்திறுதியிலும், இந்நூலைச் சிலப்பதிகார நூலாசிரியர் கேட்டனரென இந்நூற்பதிகத்திறுதியிலும் கூறியிருத்தலால் இந்த இரண்டு நூலாசிரியரும் ஒரு காலத்தினரென்பது பெறப்பட்டது.

# மணிமேகலை.

## முதலாவ

## விழாவறைகாதை.

[முதலாவது விழாவறைந்தபாட்டு.]

உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படூஇய
வோங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
நி விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுண்

க - கூ. உலகும் - கண்மக்களுடைய ஒழுக்கம். திரியா - வேறுபடாத. ஓங்குயர் விழுச்சீர் - மிகவுமுயர்ந்த சிறிய புகழ். திரியாமூதூர்; சிறிமையடைய மூதூரென்க. "உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சி, நிலவாய்" என்பது திருமுருகாற்றுப்படை, வடசொ - கூடு. பலர் புகழ் மூதூர் - பலதேசத்தாரும் சொண்டாடும் பழமையாகிய நகரம், எனறது காவிரிப்பூம்பட்டினத்தை. பலருமுகழ்தலை, "பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்" (சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்துப்பாடல) எனவும், "வாழிய ரோ .. புகழாலமைந்த புகார்" (சிலப்பதிகாரம், புகார்காண்டத்தினிறுதிச் செய்யுள்) எனவும வருவனவற்றாலும் பிறவற்றாலும் உணர்க. பலர் - பலசமயத்தாருமாம். மூதூர்ப் பண்பு மேம்படூஇய - மூதூரினதுதலைமைகள் மிகும் பொருட்டு. 'மேம்படுதல்' எனவும் பாடம். மலயம் - பொதியினமலை. அருந்தவன் - அகத்தியன. மேம்படூஇய வுரைப்பவெனக. 'ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்ப' எனவும் பாடம்.

சு. தூங்கு எயில் எறிந்த - (தேவர்கட்குப் பகைவராகிய அசுரர்களுடைய) ஆகாயத்திலே யசைகின்ற மதில்களை அழித்த, தொடித்தோட் செம்பியன் - வீரவளையையணிந்த தோளையுடையசோழன; இவன் சோழருள் ஒருவன; இவன் தங்கையிலழித்தது பற்றிப் பின்வருவனவற்றாலுணர்க; "ஒன்னலர் குட்டுந் தூணெருங் கடுந்திறற், தூங்கெயி லெறிந்த நின்னோங்கலினர்" என்பதுபுறநானூறு, கூகூ. "தூங்கெயிண மூலறைந்தசோழனகாணம்மானே, சோழர் புகார்நகரம் பாடேலோரம்மானே" என்பது சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை, "வீங்குநீர்". "வீங்குதோட் செம்பியன் சிறுமை விறல்விசுமபிற், றூங்கு மெய்யுந் தோலுந்தலையுமாலை" என்பது, பழமொழி, கூக.

ஞ. விண்ணவர் தலைவன் - இந்திரன்.

ஈ - டு. அருந்தவன் உரைப்ப செம்பியன் வணங்கி யெனக; உரைப்ப எறிந்தவெனவுமியையும்.

சு. 'மண்ணகத்து' என்பதுமுதல சோழன்வார்த்தை. வான்பதிதன்னுள் நன்றுகிய காவிரிப்பூம்பட்டினத்தில.

மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
காலேழ் நாளினு நன்கினி துறைகென
வமரர் தலைவ னுங்கது நேர்ந்தது
க0 கவராக் கேள்வியோர் கடவா ராகலின்
மெய்த்திறம் வழக்கு நன்பொருள் விடெனு
மித்திறந் தத்த மியலபினிற் காட்டுஞ்
சமயக் கணக்கருந் தந்துறை போகிய
வமயக் கணக்கரு மகலா ராகிக்
கரு கரந்துரு வெய்திய கடவு ளாளரு
பாந்தொருங் கிண்டிய பாடை பாக்களு
மைம்பெருங் குழுவு மெண்பே ராயமும்

எ. விழாக்கோள எடுத்த - விழாவெடுத்தலே மேற்கொண்ட.

அ. நாலேழ்நாளினும் - இருபத்தெட்டு நாளிலும், "நாலேழ் நாளினும்" என்பர் மேலும் (க - காதை, சுஎ).

டு - அ. முன்னினறு உறைகென; உறைகென - உறைகவென்று சோழன் வேண்ட.

கூ. சோர்க்கது - இந்திரன் உடன்பட்டது, இது பெயர்; விழாவையென்றபடி.

க0. கடவார் - பிழையார்.

கக. மெய்த்திறம - மெய்ம்மையையுணர்த்துவனவாகிய தூலவகைகள், வழக்கு - உலகியல்; நன்பொருள் - நன்றாகிய தத்துவங்கள்; வீடு-முதலி; "மெய்த்திறம் வழகென விளம்புகின்ற, வெத்திறத்தினும்" (உஎ - ம் காதை, க0சு - க0எ) என்பர் மேலும். இப்படியே "அருமறை விதியு முலகியல வழக்குங், கருத்துறை பொருளும் விதிப்பட நினைக்கு" எனஞர் கலலாடத்தும், சுசு.

கஉ. இத்திறம் - இவ்வகைகளை.

கங. சமயக்கணகர் - சமயவாதியர். தந்துறைபோகிய - தம்முடையவழியிற் கைதேர்ந்த.

கச. அமயக் கணக்கரும் - காலங்களை எண்ணிச்சொலவோராகியசோதிடரும். கணக்கரென்பது கணகரென்னும் வட மொழிச்சிதைவு. அகலாரகி - இக்கரை விட்டு நீங்காராகி.

கஞ. கரந்துரு வெய்திய கடவுளாளரும் - மக்கள்கண்கள் காணப்பொறாவென்று தமது மிகக ஒளிபையுடைய செய்வயாக்கையையமறைத்து அககண்கள்பொறுக்குமளவினவாகிய உருவங்களை நிருமித்துகொண்ட தேவரும். இதனை, "அந்தரத் துள்ளோ ரறியா மரபின், வந்து காண்குறூஉம் வானவன் விழவும்" (சிலப்பதிகாரம், கடலாடுகாதை, எஉ - எசு) எனவும், "அவளுக்குப் - பூவந்த வண்கண் பொறாகென்று - மேவித்தன், மூவா விளநலங் காட்டி" (சிலப்பதிகாரம், களந்திறமுரைத்தகாதை, சுசு - சுசு) எனவும் வருவனவற்றாலும், இவற்றினை உரையாலும் உணர்க

கசு. ஒருங்கிண்டிய - ஒன்றுபடத்திரண்ட. பாடைமாககள் - மொழிவேறுபட்ட மாக்கள்; இவர்கள், மரகலகந்தருஞ் செலவப்பொருட்டாலவந்த பரதேசிகள்; இவரை, "புலம்பெயர்மாககள்" (சிலப்பதிகாரம்,இந்திரவிழவூரெடுத்தகாதை, கக) எனவும், "மொழிபெயர் தேதேயோர்" (சிலப்பதிகாரம், கடலாடுகாதை, கசசு) எனவுங்கூறுவர்.

கஎ. ஐம்பெருங்குழு - அமைச்சர், புரோகிதர், சேனுபதியர், தூதுவர், சாரணரென்னுமிவர்கள். எண்பேராயம - கரணத்தியலவர் முதலியோர். இதனை, "அமைச்சர் புரோகிதர் சேனு பதியர், தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர், பார்த்திபர்க்கைம்பெருங் குழுவெனப் படுமே," "கரணத் தியலவர் கருமவிதிகள், கனகச் சுற்றங் கடைகாப் பாளர், நகர மாந்தா னளிபடைத் தலேவர், யானை வீரரிவுளி மறவ, ரினைய ரெண்பேராய மென்ப" எனபனவற்றாலுணர்க,

## க.—விழாவறைகாதை.

வஞ்சிகாருங்கு குழீஇ வால்பதி தன்னுட்
கொடித்தேர்த தானைக் கொறறவன் றுயரம
விடுத்த பூதம விழாகோண் மறப்பின்
மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க
விடிங்குரன் முழக்கத் திடிமடை செய்திடுங்
கொடுத்தபா சத்துத் தொல்பதி நரகரைப்
புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடு
மாயிரு ஞாலத் தரசுதலை யீண்டு
மாயிரங கண்ணேன் விழாக்கால கொள்கென

இவை நிவாகரம்; "ஐம்பெருங் கு
மெண்பே ராயமும்" என்பது, பெ
கதையுள் இலாவாண காண்டத்த
மண்ணுநீராட்டலிலும், சிலப்பதி
த்து இந்திரவிழவூரெடுத்தகாதையி
(கடுஎ - ம் அடி) வருதலகாண்க.

கஅ. ஒருங்கு குழீஇ - ஒன்றா
கூடி. 'குழீஇய' எனறும் பாடம;
ற்குக் கடவுளாளர் முதலியோர் குழு
வான்பதியென இயைத்துப் பொ
ளாக்க. 'வானபதினனுள்' என்றது
லியன, சமயக்கணக்கர்முதலியோர்
தரை.

கக. கொற்றவன் - முசுகுந்தன்.
ரம் - அவனுடைய கண்ணுமனமும்
ளும்வண்ணம் அசுரர்விட்ட தாம,
திரத்தால அவனுக்குளதாகிய துனபம.
துயரம - துயரதரை. 'துயரற' எனறும
'துயரிற' என்றும பாடம்.

உ0. விடுத்தபூதம் - முசுகுந்தற்கு
தர்மந்திரமுபதேசித்தது அவ்விருஷப்
போகிய, பட்டினப்பாகசம் மருவூர்ப்
பாக்க மிரண்டற்கும இடையேயுள்ள
நாளங்காடியிடத்துப் பூதம். இதனைப்
பினவருவனவறறாலும் அவற்றின் உரை
யாலுமுணர்க; "வெறறிவேன மன்னன்
குற்றதை யொழிதலென .. .. பீடி
தை" (சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெ
தித்தகாதை, சுடு - சுஎ); "கடிவிசை யவு
ணர் .. .யிடனுங் காண்கும" (சிலப்
பதிகாரம், கடலாடுகாதை, எ - கசு).
விழாக்கோள் - விழாவெடுத்தல்.

உக. வலலெயிறு - லலியபல். 'வல்
லெயி றரும்ப' எனவும் பாடம.

உஉ. முழக்கத்து - முழக்கத்தோடு.
இடிமடை - துன்பம்.

உ0 - உஉ. பூதம் மறப்பின் இடிம்பை
செய்திடு மெனக.

உரு - உச. தொடுத்த - கட்டிய. நரகர்-
தமமைப் பிறர் நம்புவதற்குத் தவவேட
தில மறைந்து நின்று அதறவதறிற்
கிழுக்காணவற்றின்கண் ஒழுகும் பொய்
வேடத்தார முதலிய அறுவகையோர்.
புடைத்து - அறைந்து. பூதம் - மேற்
கூறிய பொய்வேடததார் முதலிய அறு
வரைத் தன்பாசங கட்டிவர அவரை
யறைந்துணணும் சதுக்கப்பூதம்; இத
னை, "மாதுய ரெவ்வமொடு மயஙகம்
புகாஅள் . சேயிழை யரறறலும்"
(உஉ - ம் காதை, ஈக - ருக) என இங்
நூலுள்ளும, "தவமறைந் தொழுகுந்
தனபயி லாள ரவமறைந் தொழுகு
மலவைப் பெண்டி, ரறைபோ கமைச்சர்
பிறாமணை நயப்போர், பொய்கரி யாளர்
புறங்கூற் றுளனொன, கைகொள் பசுத்
துக கைப்படி வோரெனக், கரி நான்
குங் கடுங்குர லெடுப்பிப், பூதம் புடைத்
துணும் பூத சதுக்கமும்" (இந்திரவிழவூ
ரெடுத்தகாதை, சஉஅ - கசு); "பதி
னி யெருதின் .. .உயிர்முன் புடை
ப்ப" (அடைக்கலகாதை, எசு - அசு)
எனச் சிலப்பதிகாரத்துளளுங கூறிய
ாற்றாலுணர்க.

உசி. மாயிருஞாலம் - மிகப் பெரிய
பூமி. ஈண்டும - கூடும்.

உசு. ஆயிரங்கணணேன் - இந்திரன்.
காலிகொள்கென - தொடங்குகவெனறு
சொல்ல; "காலிகோள் விழவின் கடை
நிலை சாற்றி" என்பது சிலப்பதிகாரம்,
இந்திரவிழவூரெடுத்தகாதை, கசச.

# மணிமேகலை.

வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங்
கச்சை யாணைப் பிடர்த்தலை யேற்றி
யேற்றுரி போர்த்த விடியுரு முழக்கிற்
கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்டை
முரசு கடிப்பிடூஉ முதுக்குடிப் பிறந்தோன்
றிருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வானமு மாரி பொழிக மன்னவன்
கோணிலை திரியாக் கோலோ னுகுக
நீடு தீவகச் சாந்தி செய்தரு ணன்னு

உள. வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதம் நிற்கு மதிலோயில், "வச்சிரக்கோட்டம்" எனபது சிலபதிகாரம், கனாத்திறமுரைத்தகாதை, கூ. மணங்கெழுமுரசம் - வீழாமுரசு. 'மணமுழாவாகி' எனவும் பாடம்.

உஅ. கச்சை - கிழ்வயிற்றிற் கட்டும் கச்சை. பிடர்தலை - பிடரிடம்.

உள - உக. "வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங், கச்சை யாணைப் பிடர்த்தலை யேற்றி" எனச் சிலப்பதிகாரத்தும் இவ்வடிகளை வந்திருத்தலாண்க; (இந்திரவிழவூரெடுத்தகாதை, கசக - கசஉ.)

உக - ஙக. வற்றாபோர்த்தமுரசு-வென்ற வெறினை உரியைப்போர்த்தினை முரசு. இருசாரர் தினைப் பினவருவனவற் றாலுணர்க; "வெறிஞண்டுடன் மடிதரு, வென்றதன் பச்சை சிவாது போர்த்த, ..... முரசம்" என்பது புறநானூறு, உஅஅ; "சாற்றிடங் கொண்ட வேற்றாரி முரசம்" எனபது பெருங்கதை, உஞ்சைக் காண்டம், விழாவாத்தினா; "எற்றாரி முரசி னிறைவன் மூதூர்கு" என்பது பெருங்கதை, உஞ்சைக்காண்டம், ஊர் தியிட்டது. "எற்றாரி முரச நாண" எனபது சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், சக. இடியுருமுழக்கின் முரசு=உருமிடிமுழக்கின் முரசு - உருமேற்றினது இடிப்புப்போலு முழக்கினையுடைய முரசு; "உருமிடி முரசமொடு" என்பது சிறுபாணாற்றுப்படை, உஉக. 'இடியுறுமுழக்கின்' எனவும்படம்; இதற்கு உறு - உவமவுருபு; "தோளுற்றெழுதெய்வத்தினை யவித்துயர் நீர்த்தவாறும்" (சீவகசிந்தாமணி, பதிகம், ஙி) என்புழிப்போல. கூற்றுக்கண்விளிக்கு முரசு - கூற்றையழைக்குமுரசு; கண் - அசைநிலையுமாம்; "மீன்க ணஞ்சுதன் சுனையே" (புறநானூறு, கூக) என்புழிப்போல. குருதி வேட்டைமுரசு - குருதிப்பலிகொள்ளும் விருப்பதனையுடைய முரசு; "குருதி வேட்டை யுருகெழு முரசம்" என்னூர் புறநானூற்றிலும், ஙூ. கடிப்பு - முரசடிக்குங்குறுந்தடி.

ஙூ. வாழ்கென்று - வாழ்கவென்று.

ஙூ. 'வானமுமமாரி' முதலியன முரசறைவோன்கூற்று. வானம் - மேகம். மாரி - மழை. 'வானமும் மாரியும்' எனவும் பாடம்.

ஙூ. கோணிலை திரியாக் கோலோனுகுக - கோள்கள் நிற்குமநிலை குலையாமைக்குக் காரணமாகிய செங்கோலையுடையோனுகுக; "கோணிலை திரிந்திடிற கோணிலை திரியும்" என இந்நூலுள்ளும் (ம - ம் காதை, அ), "கோணிலை திரிந்து மரஞ்சுகோல் கோடி னென்னுரை" எனச் சீவகசிந்தாமணியுளளும் (நாமகளிலம்பகம், உஉசு) வருதல் காண்க.

ஙஙி. தீவகச்சாந்தி - தீபசாந்தி; என்றது இந்திரவிழாவை; சம்புத்தீவக்காவதெய்வம், முற்காலத்து இதனீவிலுளளாராக்கு அசுரராலவரும் தீங்கைப் பரிகரிததறபொருட்டு இந்திரனுக்குச் செய்தமையால், இவ்விழா இப்பெயர்பெற்றது; இதனை, "காவ லோங்கிய மாபெருந்தீவினுட், காவற் றெய்வதத் தேவர்கோற் கெடுதத, தீவகச்சாந்தி,' என்ற பின் வருதலாலுணர்க; (உ - ம் காதை, க - ங). 'தீபசாந்தி' எனவும்படம். இனி, சுரத்திற்கு உளவாகுந் தீங்குகளைப் பரி

## க.—விழாவறைகாதை.

ளாயிரங் கண்ணேன் றன்னே டாங்குள
நால்வேறு தேவரு நலத்தகு சிறப்பிற்
பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவனீங் கியநா
சo னிங்ஙகர் போலவதோ ரியல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவ சென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலிற்
றேரண வீதியுந் தோமறு கோட்டியும
பூரண கும்பமும் பொலமபா லிகைகளும்
சரு பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்கதுலீக கமுகுமு வாழையும வஞசியும்
பூகமொடி வலலியுங் கரும்பு நடுமின்
பததி வேதிகைப பசுமபொற் றூணதது
முத்துக் காம முறையொடு நாற்றுமின்

கரிததற்பொருட்டுச் செய்யப்படுப் இவ் விழா, தீவிற்குச் செயவதனெடாகரு மென்பதுபற்றித் தீவகச்சாந்தியெனப் பட்டதெனினு மமையும; இவ்வூர்ப்பல தகை "உலகவறவி" என இந்நூலுள் ளும் (எ - ம காதை, கூக; கஎ-ம் காதை, எசு, அசு), இவ்வூர்வாயிலை, "உலக விடைகழி" எனச் சிலப்பதிகாரத்துள் ளும் (நாடுகாண்காதை உள), இவ்வூர சனை 'உலகமன்னவன" என (கூ - ம் காதை, சசு) இந்நூலுள்ளும் கூறியிருத் தல காணக.

கூஎ. நால்வேறு தேவர் - மூப்பத்து மூவர்; அவர் வசுக்களெண்மரும், திவா கரர் பன்னிருவரும், உருத்திரர் பதினெ ருவரும், மருத்துவரிருவருமாவார்.

கூஅ. பாலவேறு தேவர் - பதினெண் கணங்கள்; பால்-பகுதி. படர்ந்து-நின்ன ந்து. 'இப்பதியடர்ந்து' எனவும்பாடம்.

கூக. தரிகால் வளவன் - புகாரையா ண்ட ஓர் சோழன். நீங்கிய நான் - பகை வரை வெல்ல வாடதிசையை நோக்கி அவன் போன நாளில்; "இருநில மருங் கின் ..... புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்" என்று சிலப்பதிகார த்து வருதல் காண்க; இந்திரவிழவுரெடு த்தகாதை, அக - கச.

கச. பொன்னகர் - தேவலோகம். வறிதா - வறுமையையுடையதாக. தே வர் பலரும் விழாச்காண இந்நகர்க்கு வந்துவிடுதல்பற்றி, இவ்வாறு கூறப்பட் டது.

சo - சக. ஆகி வறிதாமென்க.

சசு. கோட்டி - சபை; கோயிலவாயி லென்பர் சிலப்பதிகார அருப்பகவுரை யாசிரியர்; வரந்தருகாதை, சுஉ. 'தேர் ட்டி' எனவும் பாடம்.

சச. பொலம் பாலிகை - பொற்பா

சரு. பாவைவிளக்கு - பிரதிமை வினக்கு; "பாவை விளகுப் பசுமபொற் படாதை" என்பது சிலப்பதிகாரம், இக் திரவிழவுரெடுத்தகாதை கடுச. உடன பரப்புமின் - ஒருங்குபரப்புமின்.

சசு. வஞ்சி - மரவிசேடம்; கொடிவி சேடமுமாம்; வஞ்சி நகரத்தை, "பொற் கொடிப் பெயர்ப்படுஉம் பொன்னகர்" எனப் பின்னாகூறுதல் காண்க; உக - ம் காதை, கூஉ.

சள. பூக்கொடிவலலி யென்றார், துகி ற்கொடியையாற்றுதற்கு; "கதலிகைக் கொடியுஞ் காழுன்று வ்லோதமும்," எனப் பின்வருதல காண்க. 'கரும்பொடு நடுமின்' எனவும் பாடம்.

சஅ. பத்தி - வரிசை. வேதிகை - திண்ணை. தூணம் - தூண்.

சக. தாமம் - மாலை. 'முகையொடு நாற்றுமின்' எனவும் பாடம்.

ரு0 விழவுமலி மூதூர் வீதியு மன்றமும்
பழமணன் மாற்றுமின் புதுமணற் பரப்புமின்
கதலிகைக ளொடியுங் காழூன்று விலோதமு
மதலை மாடமும் வாயிலுஞ் சேர்த்துமி
னுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
நிரு பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ ரூக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
யாறறி மரபி னறிந்தோர் செய்யுமின்
றண்மணற் பந்தருந் தாழ்தரு பொதியிலும
புண்ணிய நல்லுரை யறிவீர் பொருந்துமி
சுரு ஞெட்டிய சமயத் தூறுபோருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்ரு மாக்க டமமுட னுயினுஞ்
செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையுங்

ரு0. மன்றம் - ஊர்க்கு நடுவாய் எல லாருமிருக்கும் மரதடி ; "மன்றமும் பொதியிலும்" என்றார் திருமுருகாற்றுப்ப டையில், உசுஉ.

ருக. 'பழமணற் பாற்றுமின்' எனவும் பாடம்.

ருஉ. கதலிகைக்கொடியுங் காழூன்று விலோதமும் - துகிற்கொடி விசேடங் கள் ; காழ் - காம்பு. 'கதலிக்கொடியும்' எனவும் பாடம்.

ருசு. மதலை - கொடுங்கை ; பற்றுக் கோடுமாம்.

ருச. நுதலவிழிநாட்டத்திறையோன் - இறைவி கண்புதைத்தபொழுது நெற்றி யிற் புறப்பட விட்ட கண்ணையுடைய தலைவன்; என்றது மெய்பெருமானே ; விழிநாட்டம் - வினைத்தொகை. இனி, நுதலில் இமையாநாட்டமென்றுமாம்; "நு தல்விழி நாட்டத் திறையோன் கோயி லும்" என்பது சிலப்பதிகாரம், ஊர்கா ண்காதை, எ.

ருடி. சதுக்கத்துத் தெய்வம் - சதுக்கப் பூதம்; என்றது, முனனர்க்கூறிய (அறு வகை நரகமாப் புடைத்துண்ணும்) பூத த்தை. சதுக்கம் - நாற்றெருக்கூடுமிடம்.

ருசு. செய்வினை - செய்வினையை.

ருஎ. ஆறறிமரபினறிந்தோர் - நிருத்த முதலிய ஆறங்கங்களையுமுணர்ந்த மு றைமையுடைய அந்தணர்; "ஆறறியந்த ணர்க்கு" என்பது கலித்தொகை, கட வுள் வாழ்த்து. அறிந்தோர் - முன்னி லைப்பெயர்.

ருஅ. 'தண்மணப் பந்தர்' எனவும் பா டம். பொதியில - அம்பலம்.

ருக. புண்ணியநலவுரை - தருமபதம். 'அறிந்தோர்பொருதுமின்' எனறும் பா டம்.

சுரு. ஒட்டிய - சபதஞ்செய்த. 'ஒட்டி யதுறுபொரு ளுணர்ந்தவாதிகள்' என வும் பாடம்.

சுஉ. பட்டிமண்டம் - வித்தியாமண் டபம்; ஒலக்கமண்டபமென்றங்கூறுவர். "பட்டி மண்டப மேற்றினையேற்றினை" (திருவாசகம், திருச்சதகம், சக) என வும், "பகைப்புறதாதுக் கொடித்த பட்டி மண்டபமும்" (சிலப்பதிகாரம், இந்திர விழவூரெடுத்தகாதை, கரூ) எனவும வருதல்காண்க. பாங்கு - உரிய இடம.

சுஉ. பற்ருமாக்கள் - பகைவர்.

சுக. செற்றம் - பகைமை நெடுங்கா லம் நிகழும்கோபம் ; "செற்ற நீங்கிய மனத்தினர்" என்பது திருமுருகாற்றுப் படை, கசுஉ. கலாம் - போர்; "புலாற் களஞ் செய்த கலாஅத் தானையன்" எனபது புறநானூறு, சுக.

சூடு தண்மணற் றுருத்தியுந் தாழ்பூந் துறைகளுந்
தேவரு மக்களு மொத்துடன் றிரிதரு
நாலேழ் நாளினு நன்கறிந் தீரென
வெளிறுவாண் மறவருந் தேரு மாவுங்
களிறுஞ் சூழ்தரக் கண்முர சியம்பிப்
எ0 பகையும பிணியும் பகையு நீங்கி
வகையும வளனுஞ் சுரக்கென வாழ்தகி
யணிவிழா வறைந்தன னகநகர் மருங்கென.

விழாவறைகாதை முற்றிற்று.

தாழ்பூந்துறைகள் - ஆழ்ந்தபொ யுடைய நீர்த்துறைகள்.

சுஅ. ஒளிறுவாள் - விளங்கும்வாள்; "ஒளிறுவாண் மன்னர்" என்பது புறநா னூறு, கஎஎ. மறவர் - வீரர். 'வெளிறு வாண் மள்ளரும்' எனவும் பாடம்.

சுக. கண்முரசு - முகத்தையுடைய முரசு, "கடிப்பிடி கண்முரசம்" என்பது நாலடியார், எகை, கo. முரசின்முகத தைக கண்ணென்றல் மரபு.

எ0. பகை - உட்பகை.

எக. வகையும் வளனுஞ் சுரக்கென வாழ் த்தி - மழையும் செல்வமும் சுரகவென் று வாழ்தகி.

எ0 - எக. "பகையும் பிணியும் பகையு நீங்கி, வகையும் வளனுஞ் சுரகென வாழ் தகி" என இவ்வடிகளே சிலப்பதிகாரத் தும் வந்திருத்தல்காண்க ; இந்திரவிழவு ரெடுத்தகாதை, எஉ - எசு.

எஉ. அகநகர் - உண்ணகர்; எனறது பட்டினப்பாக்கத்தை.

க - எஉ. அருந்தவன் உரைப்பச் செ ம்பியன் விண்ணவர்தலைவனே நாலேழ் நாளினும் வான்பதிதன்னுள் உறைகென அவனேர்ந்ததைக் கேள்வியோர் கட வாராதலின், சமயச்சணக்கர் முதலி யோர் சூழ்இ 'மறப்பின் இடும்பைசெய் திடும் பொருந்தாதாயிடும் காலகொள்க' என மூதுக்குடிப்பிறந்தோன் முரசத்தை ஏற்றி இயம்பி எதகிச் சுரகெனவாழ்த் திப் பொழிக ஆதக நன்கறிந்தீர் துணி பொருளாதலின் நாலேழ்நாளினும் பர ப்புமின நடுமின் நாற்றுமின மாற்று மின் பரப்புமின் சேர்தகுமின் செய்யு மின பொருந்துமின் ஏறுமின அகலு மின் என அகநகர்மருங்கு விழாவை அறைந்தன னென்க.

எல்லாவடியும் நேரடியாய் வந்து முடி தலின், இப்பாட்டு, நிலைமண்டில ஆசிரி யப்பா.

இரண்டாவது

# ஊரலருரைத்தகாதை.

[இரண்டாவது ஊரலருரைத்தபாட்டு.]

நாவ லோங்கிய மாபெருந் தீவினுட்
காவற் றெய்வதக் தேவர்கோற் கெடுதத
தீவகச சாந்தி செய்தரு நன்னுண்
மணிமே கலையொடு மாதவி வாராத்
தனியாத் துன்பந் தலைத்தலை மேல்வரச்
சித்திரா பதிதான் செலலலுற் றிரங்கித்
தத்தரி நெடுங்கட் டன்மக டோழி
வயந்த மாலையை வருகெனக் கூஉய்ப
பயங்கெழு மாநக ரலறெடுத் தாயென
வயந்த மாலையு மாதவி துறவிக்
கயர்ந்துமெய் வாடிய வழிவினை ளாதலின்
மணிமே கலையொடு மாதவி யிருந்த
வணிமலர் மண்டபத் தகவயிற் செலீஇ
யாடிய சாய லாயிழை மடந்தை
வாடிய மேனி கண்டுளம் வருந்திப்
பொன்னே ரணையாய் புகுந்தது கேளா

க. நாவலோங்கிய மாபெருந்தீவு - சம்புத்தீவு; இது, மகாதவீபம் நானகனுள் ஒன்றுதலின், மாபெருந்தீவெனப்பட்டது; இச்சருத்து, "நால்வகை மரபின் மாபெருந்தீவும்" என்பதனுல விளங்கும் (சு - ம் காதை, கஙடு.

ங. நாள்-நாளில். "தீவகச் சாந்திசெய் தரு நன்னுன்"என்பது (க - காதை, ஙடு) முன்னும் வந்துள்ளது 'தீப சாந்திசெய்தரு மந்நாள்' எனவும் பாடம்.

ச. 'மாதவிபாரா' எனவும் பாடம்.

அ. கூஉய் - அழைத்து.

கூ. பயம் - பிரயோசனம். அலர் - பலரறிய நிகழ்த்துஞ்சொல். உரையென - (அலரை) மாதவிக்குச்சொல்லென்று ராபதிசொல்ல. 'அலர்பரித்துரையென' எனவும் பாடம்.

கo. துறவிக்கு - துறவுக்கு.

கக. அயர்ந்து - மனந்தளர்ந்து. அழிவினள் - வருத்தமுடையாள்.

கங. மலர்மண்டபம் - பூத்தொடுக்கு மண்டபம். அகவயிற்செலீஇ - உள்ளிடத்தேசென்று.

கச. சாயல் - மென்மை. மடந்தை - மாதவியினது.

கடு. வாடியமேனி - தவத்தால்வாடிய மேனியை.

கசு. பொன் - திருமகள். 'பொன்னேரணையாய்' என்பது முதலியன வயந்தமாலைகூற்று. புகுந்தது - சம்பவித்ததை.

யுன்னே டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்
வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்
பண்ணியாழ்க் காணமும் பாடைப் பாடலுங்
தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலுங்
கந்துகக் கருத்து மடைநூற் செய்தியுஞ்
சுந்தரச சுண்ணமுந் தூநீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமுங்
நாயக காரணமுங் கண்ணிய துணர்தலுங்
கட்டுரை வகையுங் காந்துறை கணக்கும
வட்டிகைச செய்தியு மலராய்ந்து தொடுத்தலுங்
கோலங் கோடலுங் கோவையின் கோப்புங்
காலக ங்கலிகளின் றுணிவு

கஎ. உற்றதொன்றுண்டுகொல் - உற்றதாகிய பகைமையொன்றுண்டோ. 'நின்னே டிவ்வூர் நின்றதொன் றுண்டுகொல்' எனவும் பாடம்.

கஅ. வேத்தியல் - அரசர்க்காடுங்கூத்து; பொதுவியல் - எல்லார்க்குமொப்ப ஆடுங்கூத்து; திறம் - வகை; "வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்து, மாத்திரை யறிந்து மயங்கா மரபி, னுடலும்" என்பது **சிலப்பதிகாரம்**, ஊர்காண்காதை, கூஅ - கடு0.

கக. பாட்டு - இசை. தூக்கு - தாளங்களின் வழியேவரும் செந்தூக்குமுதலிய எழுதூக்குக்கள்; "ஒருசீர் செந்தூக நிருசீர் மதலை, மூச்சீர் துணிவு நாற்சீர் கோயி, லைஞ்சீர் நிவப்பே யறுசீர் கழாலே,யெழுசீர் நெடுந்தூக்கென்மனார் புலவர்" என்பதனுணர்க. துணிவு-தாளங்கள்; துணிந்து நிகழ்த்தப்படுதலின் இப் பெயர் பெற்றதுபோலும்.

உ0. யாழ்க்காரணம் - யாழுக்குரியசெய்கை. 'யாழ்க்கானமும்' எனவும், 'யாழ்த்தானமும்' எனவும் பாடம். பாடைப் பாடல - அகநாடகங்களுகும் புறநாடகங்களுக்கும் உரிய உருக்கள்.

உக. கருவி - வாச்சியம். குழல் - வங்கியம்.

உஉ. கந்துகம் - பந்து. மடைதூல - பாகசாத்திரம்.

உங. சுந்தரச்சுண்ணம் - நிறத்தையுடைய வாசனைப்பொடி; "சுந்தரச்சுண்ணத்து" என்பது **சிலப்பதிகாரம்**, இந்திரவிழவுரெடுத்தகாதை, கடுடி.

உச. பாயற்பள்ளி - பாயலிடம். பருவதொழுக்கம் - காலங்கட்கேற்ப ஒழுகும் ஒழுக்கம்.

உடு. காயக்காரணம் - காயத்தாற்செய்யப்படும் அறுபத்துநானகுவகைக் காரணம். கண்ணியதுணர்தல - பிறர் கருதியதை அறிந்துகொள்ளுதல.

உசு. கட்டுரைவகை - தொடுத்துக்கூறும்கொல்வன்மை. காந்துறைகணக்கு - மறைந்துறையும்வகை; "அடிதில் லினையும யாழின் றுறையுங், கடிமலர்ச் சுவிப் பமுங் **காந்துறை கணக்கும்**, வட்டிகை வனாப்பும் வாக்கின் விகற்பமுங், கற்றவை யெல்லாங் **காட்டுமி** னமக்கென" என்பது **பெருங்கதை, உஞ்சைகாண்டம்**, யாழ்கைவைத்தது. 'கண்ணியது ணர்தலும்' எனவும பாடம்.

உள. வட்டிகை - எழுதுகோல்; "வட்டிகைச் செய்தியின் வகைத்த பாவை" என்பர் பினனுமு; ச - ம் காதை, நுசு.

உஅ கோலம - அவ்வக்காலங்கட்கேற்பகொள்ளும் ஒப்பனை; "இரவிற் கோர், கோலங கொடியிடையார் தாங் கொள்ள" என்பது **சிலப்பதிகாரம்**, கனத்திறமூலைத்தகாதை, சு - ச. கோப்பு கோத்தல். 'கோவையுங் கோப்பும்' எனவும் பாடம்.

உக. காலக்கணிதம் சோதிடம்; "ஆய்ந் வேதருங காலக் கணிதரும" என்

நூ0 நாடக மகளிர்க்கு நன்கனம வகுத்த
வோவியச செந்நூ லுரைமுறற் கிடகையுங்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை
நற்றவம் புரிந்தது நாணுடைத் தென்றே
யலகின் மூதூ ரான்றவ ரல்லது
நூரு பலர்தொகு புரைக்கும் பண்பில வாய்மொழி
நயம்பா டில்லை நாணுடைத் தென்ற
வயந்த மாலைக்கு மாதவி யுரைகுங்
காதல னுற்ற கடுந்துயர் கேட்டுப
போதல் செய்யா வுயிரொடு நின்றே
ச0 பொற்கொடி மூதூர்ப் பொருளுரை யிழந்து
நறுநெடு நங்காய் நாணுத் துறந்தேன்
காதல நிறப்பிற் கனையெரி பொத்தி

---

பது சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத தகாதை, சச. கலைகள் - பரதையர்க் குரியவென்று நூல்களிற் கூறப்பட்ட யாழ்வாசினைமுதலிய அறுபத்துநான்கி னுள் இப்பாட்டில முன்னும்பினனுங கூறதொழிந்த கலைகள்; பரதையர்க் குரியகலைகள் அறுபத்துநான் கென்பதைப் பின்வருவனவற்றாலுணர்க; "யாழ்முத லாக வறுபத் தொருநான், கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக், கலை யுற வுரைத்த காமக் கேள்வி" என்பது பெருங்கதை, உஞ்சைக்காண்டம், நரும தைச்சம்பந்தம். "கலிவலார் நெஞ்சிற் காமமே போன்றும்" என்பது சீவகசிந்தா மணி, மண்மகளிலம்பகம், சு. "பண் ணுங் கிளையும் பழித்த நிஞ்சொ, லெண் ணெண் கலையோ ரிருபெரு வீதியும்" என்பது சிலப்பதிகாரம், ஊர்காண்கா தை, கசுசு - கசுஎ. "எண்ணென் கிரட்டி யிருங்கலை பயின்ற, பண்ணியன் மடந தையர்" என்பது சிலப்பதிகாரம், அழற் பகொதை, கசுஅ - கசுக.

நூ0. நன்கனம்வகுத்த - நன்றாகவகுக் கப்பட்ட; "நாணமு முடையு நன்கன நீத்து" (சு - ம் காதை, அஅ) எனவும், "காயிடை கன்னா னன்கன கவிற்றி" (சகூ - ம் காதை உச) எனவும், "நாத்தொ லே வின்றி நன்கன மறிந்தபின்" (சகூ - ம் காதை, உசு) எனவும் நன்கனமென்பது இப்பொருள்பட்டு இத்தலுள்ளே பயின் றவருதல காண்க.

நூ1. ஓவியச்செந்தூல் - ஓவியதூல். இப்பெயருள்ள தூல் ஒன்றுண்டென்ப தைப் பின்வரும வாக்கியத்தாலுணர்க. 'ஒவியநூலுள் நிற்றல இருத்தல இடத தல் இயலதுவென்னும் இவற்றின் விக றப்புக்கள் பலவுள்' என்பது சிலப்பதிகா ரம், வேனிற்காதை, உசூ - உசு; அடி யார்க்குநல்லாருரை.

நூ2. துறைபோகிய - கற்றவகைக ளிற் கைதேர்ந்த.

நூசு - நூநி. நற்றவமபுரிந்தது நாணு டைதென்று பலர் கூடி உரைகுமு வாய்மொழியென்க.

நூசு. நயம்பாடில்லை - அழகுண்டாதலி ல்லை; 'நலயபாடிலலே' எனவும பாடம.

நூஅ. காதலன - கோவலன். கடுந்து யர் - மிக்கதுயர்; என்றது கொலையுண் டதை; "கணவற் குற்ற கடுந்துயர்" (உ - ம்காதை, கூ0), "காதலனுற்றகடு துயர்" (உ-ம் காதை, சுசு) என்பர் பின் னும். "கண்டாளவன்றனைக் காணக் கடுந்துயரம்" என்றார் சிலப்பதிகாரத் துள்; ஊர்சூழ்வரி, சுஅ.

ச0. பொருளுரை - புகழுரை.

சக. நங்காயென்றது, வயந்தமாலை யை.

சுஅ - சக. கேட்டு நின்று இழந்து துறந்தேனென்க.

சுஉ. கனையெரி - மிக்கநெருப்பு; "கனையெரியுறழிய மருங்கும்" என்பது புறநானூறு, உசு. பொதிதி - மூட்டி;

தூதுலகு குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவ ரீயா ராயி
சூது னன்னீர்ப பொய்கையி னளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயி னன்பரோ
டுடனுறை வாழ்ககைக்கு நோற்றுடம படுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்
தத்திறத தாளு மல்லளெம் மாயிழை
நும0 கணவற் குற்ற கடுந்துயர் பொருஅண்

"கானவர் பொதிய ஞெலிதீ விளக
கதது" என்பது புறநானூறு, உசஎ.

சசு. ஊதுலைக் குருகி னுயிர்த்து-உலை யிலூதும் திருத்தியுஞ்சைப்போலவே அழலெழுவுயிர்தது; "காதலர்ப் பிரிந்த நோயோ டெங்கனன, தூதுலக் குருகி னுயிர்த்தன ரொடுங்கி" (அந்திமாலைச் சிறப்புச்செய் காதை, ருஅ - ருக) என்றும், "காதலற் கெடுத்த நோயோ டெங்கனன், தூதுலக் குருகி னுயிர்த்தனள்" (அழற்படுகாதை, கடுக - கடுஉ) என்றும் சிலப்பதிகாரத்து வருதலகாண்க.

சசா. இன்னுயிரீவர் - இனியஉயிரைக் கொடுப்பார்; என்றது, காதலரிறதமை கேட்டபொழுதே இறப்ப ரென்றபடி; பாண்டியன்நெடுஞ்செழியனிறப்ப அவன்மனைவியாகிய பெருங்கோப்பெண்டும் உடனே இறந்தசரித்திரம் இங்கே அறியத்தக்கது; அதுவருமாறு:—"அரிமா னேந்திய வமளிமிசை யிருந்த, திருவீழ் மார்பிற் றென்னர் கோமான், நயங்கண்ணர்க தோதை தன்றுயர் பொருஅன், மயங்கினன் கொலலென மலரடி வருடித், தலேத்தா ணெடுமொழி தன்செவி கேளாள், கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பெருஅண், மன்னவன் செலவுழிச் செல்க யானெனத், தனனுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போற், பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்" என்பது, சிலப்பதிகாரம், காட்சிக்காதை, எஅ - அசு. இவ்வாறிறத்தலே மூதானந்த மென்பர்; "கயலேர் கண்ணி கணவ னெறி முடிய, வியனெறிச் செலவோர் வியந்துரைத் தன்ற". — "ஓருயி ராக வுணர்க வுடன்கலந்தார்க, கீருயி ரென்ப நிடைதெரியார் - போரில், விடனேந் தும் வேலோற்கும் வெள்ளோயி னூட்கு, மூடனே யுலந்த துயிர்" என்பது புறப் போருள்வெண்பாமாலே, பொதுவியற் படலம், க.

சஉ - சஙி. களியெரி - செறிந்தநெருப்பு; "நன்மர னளிய நறுந்தண் சாரல்" என்பது புறநானூறு, கடுo. காதலரிறப்பிற் பொய்கையிற்புகுவதுபோலச் செறிந்த நெருப்பிற்புகுவர் பதினிப்பெண்டிர்; "பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற, வள்ளித ழுவிழ்ந்த சாமரை, நள்ளிரும் பொய்கையுட் தீயுமோ ரற்றே" என்பது புறநானூறு, உசசு. கணவனை யிழந்த பதினிப்பெண்டிர்க்குப் பொய்கையுந் தீயும் ஒருதன்மையின வென்றபடி.

சசு - சஙி. பின்வரும்வாக்கியத்தில் இவ்வடிகளின்கருத்து அமைக்கிருத்தல் காண்க; "காதலன் வீயக் கடுந்துய ரெய்திப், போதல் செய்யா வுயிரொடு புல நது, நளியிரும்பொய்கை யாடுநர் போல, முளியெரி புகூஉ முதுக்குடிப் பிறந்த, பதினிப் பெண்டிர்"; (மணிமேகலை, கஅ - ம் காதை, கக - கஙி).

சஎ. நோற்றுடம்படுவர் - கைம்மை நோனபை நோற்று உடமபையருத்துவார். கைம்மைநோன்பு இன்னதென்பதைப் பின்வரும் மேற்கோள்களாலுணர்க. "வெள்ளெட் சாநதொடு புளிப்பெய் தட்ட, வேனே வெந்தை வல்சியாகப், பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு, முயவற் பெண்டிர்" என்பது புறநானூறு, உசசு. "இன்புறுதகுகணவ னிடரெரி யகமூழ்கத, துன்புற வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்" என்பது சிலப்பதிகாரம், துன்பமாலை. 'நோற்றுடன்படுவர்' என்றும் பாடம.

சஅ. பரப்புநீர் - கடல்.

சசு. ஆயிழை - கண்ணகி.

மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
கண்ணீர் மாடிய கதிர்முள வனமுலை
திண்ணிதிற் றிருகித் தீயழற் பொத்திக்
காவலன் பேரூர் கணியெரி யூட்டிய
மாபெருந் பத்தினி மகண்மணி மேகலை
யருந்தவப் படுத்த லல்லதி யாவதுந்
திருந்தாச் செய்தைத் தீத்தொழிற் படாஅ
ளாங்கன மன்றியு மாயிழை கேளா
யீங்கிம் மாதவ ருறைவிடம் புகுந்தேன்
மறவண நீத்த மாசறு கேள்வி
யறவண வடிக ளடிமிசை வீழ்ந்து
மாபெருந் துன்பங் கொண்டுள மயங்கிக
காதல னுற்ற கடுந்துயர் கூறப்
பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம

இக. சிறுபுறம் - பிடர்; "செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்து" என்பது சிலப்பதிகாரம், கடலாடுகாதை, கரூ. புதைப்ப - மறைப்ப; கூந்தல்அவிழ்ந்துதிடப்பவென்றபடி.

இஉ - இங. முலைதிருகி - இடமுலையை வலக்கையாற்றிருகி; "இடமுலை கையாற் றிருகி" என்பது சிலப்பதிகாரம், வஞ்சினமாலை, சரு. அழற்பொத்தி-அழலிலமூட்டி.

இசு. காவலன்பேரூர் - பாண்டியனது பெரிய ஊராகிய மதுரையை.

இடு. மாபெருமபத்தினி - கண்ணகி.

இசு. அருந்தவப்படுத்தலல்லது - செய்தற்கரிய தவவழியிற்சேர்த்தலேயன்றி. யாவதும் - சிறிதும். 'அருந்தவம்படுத்தலல்லது' எனவும பாடம.

இஎ. திருந்தாச்செய்கைத் தீத்தொழில் - பரத்தைமைதொழில்; "கள்ளும பொய்யுங் காமமுங கொலையு, முள்ளக களவுமென் றுரலோர் துறந்தவை, தலைமையாக் கொண்டகின் றன்மையில் வாழ்க்கை" என்று நிதிராபதியைநோகி இராசமாதேவி பரத்தைமையைஇழித்துச்சொலலியதாகப் பின்னுங் கூறுவர்; உசு - ம காதை, எஎ - எசு.

இடு - இஎ. மணிமேகலை தவவழியிற் சேர்க்கப்படவாளன்றிப் பரத்தைமைத் தொழிலிற் சேர்க்கப்படவாளல்ல; இப்படியே, "மணிமே கலையை யான்றய ருதக்குங், கணிகையர் கோலங காண்" என்று மாதவி கூறியதாகச் சிலபபதிகாரத்துங கூறினா; நீர்ப்படைகாதை, கரடு - கஅசு.

இகூ. மாதவர் - சங்கதசார் 'உறைவிடம புகுந்து' எனவும பாடம்.

சுஅ. மறவணநீத்த - பாவத்தன்மைகளைத துறந்த; பாவங்கள் பத்துவகைப்படுமெ; காயதத்திற்றொன்றவன மூன்றும், சொல்லிற்றொன்றவன நான்கும், உள்ளத்திற் றொன்றவன மூன்றுமென. இதனை, "தினை யெனபதியாதென வினவி, கொலையே களவே காமத தினிமை, வலியா வுடமபிற் றேறா தவை மூன்றும், பொய்யே குறளை கடுஞசொற் பயனிலை, சொல்லெனச் சொல்லிற் றேறாதவை நான்கும், வெஃகல வெகுளல் பொல்லாக் காட்சியென், றுள்ளநதன்னினுரப்பனமூன்றுமெனப், பத்துவகையால" என்பதனாலுணர்க; உசூம காதை, கஉச - கசூ; சுஅ - ம காதை, சுச - எஉ.

சுக. 'அறவண வடிக ளடியினை வீழ்ந்து' எனவும் பாடம்

சுசு கூற - அறவண வடிகட்குக கூற.

இனி, திக்கம, துக்கநிரோதமம, துக்கநிவாரணமார்க்கமென்னும் வாய்மைகள் நான்கு முறையே கூறப்படும்.

சுச. பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம் - துக்கம்.

சுடு. பிறவா ருறுவது பெரும்பேரின்பம - துக்க நிவாரணம.

பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றே ருறுவ தறிகென் றருளி
யைவகைச் சிலத் தமைதியுங் காட்டி
யுய்வகை யிவைகொளென் றுரவோ னருளினன்
மைத்தடங் கண்ணுர் தமக்குமெற் றியநத
சித்திரா பதிக்குஞ் செப்பு நீயென
வாங்கவ ளுரைகேட் டருமபெறன் மாமணி
யோங்குதிரைப் பெருங்கடல வீழ்த்தோர் டோன்று
மைய னெஞ்சமொடு வயந்த மாலையுங்
கையற்றுப் பெயர்ந்தனள் காரிகை திறத்தென.

ஊரலருரைத்தகாதை முற்றிற்று.

சுசு பற்றின் வருவது முன்னது - துக்கோறபத்தி; "பற்றெனப் படுவது பசைஇய வறிவே" (கூ0 - ம் காதை, கூஉ.) என்று பிணைர்க்கூறுவா.

சுசு - சுஎ. பின்னது அற்றே ருறுவது - துக்கநிவாணமார்க்கம.

சுஎ. அறிகென்றருளி - துக்கமுதலியவாய்மை நான்கினையு மறிந்துகொள்வா யென்றுபதேசித்து, இப்படியே, "துன்பத் தோற்றம் பற்றே காண, மிபபம் வீடே பற்றிலி காரண, மொனறிய வையே டாய்மை நான்காவது" என்பர் பின்னும்; கூ0 - ம் காதை, கஅசு - கஅஅ. வாய்மை, சதிய மெனறு வழஙகப் படும்.

சுஅ. ஐவகைச்சிலம் - காமம், கொலை, கள், பொய், களவு என்னும் இவைவிடுத்தையும மூற்றதுதுறத்தல; "கள்ளாம பொய்யுங் காமமுங் கொலையு, முள்ளக களவுமென் றுரவோர் துறநதவை" என்பர் பின்னும்; (உச - ம்காதை, எஎ - எஅ) "சில நீஙகாச் செய்வதறோகு" (உக-ம் காதை, ருஎ), "சிலந் தானுகித தானந் தலைநின்று" (உச - ம காதை, கூஅ), "தானந் தாங்கிச் சிலந் தலைநின்று" (கூ0-ம் காதை, க) என இநநூலுள்ளே சிலமென்பது பயின்றுவருதல காண்க.

சுக. உய்வகை இவைகொளெனறு - பிறப்பிறப்பினைமுதப்புமவகைநால் வகைவாய்மையும் ஐவகைச் சிலமுமா குமு; இவற்றைக கொள்வாயாகவென்று. உரவோன் - அறவணவடிகள்.

சுச - சுக. வாய்மையும் சிலமும் இனறியமையாதனவென்பதை, "வழுவாச் சிலம் வாய்மையிற் கொண்ட, பானமை யின்" (உக - ம காதை, உ0) என்பதனு லுணர்க.

எ0. மைத்தடங்கண்ணுர் - ஆயத்தார்.

எஉ - எரு. பெறுதற்கரிய மாணிக்கத தைப் பெரியகடலில் வீழ்த்தியவர்களே யொத்து; "ஆங்கது கேட்ட வரசனு நகாரும, மோங்கிய நன்மணி யுழுகடல் வீழ் தோர், தமமிற் றுன்பந் தாநனி யெய்த" என்பது சிலப்பதிகாரம், வரந்தருகாதை, உக - கூ0.

எடு கையற்று - செயலற்று. காரிகைதிறத்தது - மாதவியிடத்தினின்றுமு.

ச - எடு நன்னாளில் மாதவிவாராத்துன்பம் மேலவரக்கித திராபதி இரங்கிவ யாகமாலையைக்கூவி அவளை மாதவிக்கு உரையென்றுசொல்ல, வயந்தமாலை, மாத வியிருந்த மண்டபத்துச்சென்று கண்டு, வருந்தி, அனையாய், கேளாய, உண்டு கொல்! பணபிலவாய்மொழி நாணு டைதென்ற வயந்தமாலைகு உரைக கும் மாதவி, கேட்டு நின்றுஇதுநாணுத்துறந்தேன்; மணிமேகலை தீதிசொழிற் படாஅள்; இன்னுங்கேளை; புகுந்து வீழ்ந்து மயலைத் துயைக்கூற, உரவோன் அறிகென்றருளிக் காட்டி இவற்றைக கொள்ளென்றாளினன்; இத னைக் கண்ணுர்தமக்கும் சித்திராபதிக் கும் நீ செப்பென்றுசொல்ல, வயந்தமா லையுகேட்டு மணியைக் கடலிலவீழ்த தோர்போன்று கையற்றுப் பெயர்ந்தன ளென முடிக்க.

மூன்றாவது

# மலர்வனம்புக்ககாதை.

[மூன்றாவது மலர்வனம்புக்கபாட்டு.]

வயந்த மாலைக்கு மாதவி யுரைத்த
வுயங்குநோய் வருத்தத் துணைமுலை நோன்றி
மாமலர் நாற்றம போன்மணி மேகலைக்
கேது நிகழ்ச்சி யெதிர்ந்துள தாதலிற்
றந்தையுந் தாயுந் தாங்கனி யுழந்த
வெந்துய ரிடுமை செவியக மெதுப்ப
காத னெஞ்சங் கலங்கிக காரிகை
மாதர் செங்கண் வரிவனப் பழித்துப்
புலம்புநீ ருருட்டிய பொதியவிழ் நறுமல
ரிலங்கிதழ் மாலையை யிட்டுநீ ராட்ட
மாதவி மணிமே கலைமுக நோகித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலத்

க - உ. உரைத்த உரைமுன் தோன்றி - சொல்லிய சொல்லினிடமாக உதித்து.

ச. கன்மங்களாகிய காரணங்கள் தத்தமபயனைக் கொடுத்தற்குத் தோற்றுதலே, 'வது நிகழ்ச்சி' எனபது பௌத்த ரூல வழக்கு; இதனை வேதாந்தப்பவ தர்மமென்பர்; "வது நிகழ்ச்சி யீங்கின் றுதலின்" (கூ - ம் காதை - நிக) எனவும், "வது நிகழ்ச்சியாவது பலவுள" (கஉ - ம் காதை - கபஞ) எனவும, "வது நிகழ்ச்சியாவும் பலவுள" (உக - ம் காதை - கசுஅ) எனவும், இந்நூலுள்ளே இப்பெயர் பின் பும்வருதல்காண்க இஃது 'வது' எனவும் வழங்கும். எதிர்ந்துளதாதலின் - தோற்றியதாதலால்; "சுணங்கெதி ரிள முலே" என்பது மதுரைக்காஞ்சி, சகசு.

உ - ச. மணிமேகலைக்கு வதுநிகழ்ச்சி மலர் நாற்றம்போல் தோன்றி எதிர்ந்துளதாதலினென இயைக்க.

ஞ. தந்தையுந் தாயும் - கோவலனும் கியும. உழந்த - வருந்திய. 'தாழ்துய ருழந்த' எனறும் பாடம.

சு. வெதுப்ப - சுட.

எ. காரிகை - மணிமேகலே.

அ. மாதர்-காதல; உரிச்சொல்; "மாதர் காதல்" என்பது தொல்காப்பியம், சொல்லதிகாரம், கூஉ. வரிவனப் பழித்து - மையெழுதிய அழகைச்சிதைத்து; "வரிவனப் புற்ற" என்பது புறநானூறு, சூசூ. 'வரிவனப் பழித்து' எனறும் பாடம்.

க. புலம்புநீ ருருட்டி-வருத்தத்தாலுண்டாகிய கண்ணீரை உதிர்த்து 'புலம்புநீ ரூட்டி' என்றும் பாடம்.

எ - கஅ. காரிகை அழித்து மாலேயை நீராட்ட. 'இலங்குதிண் மாலேயை யிடுநீ ராட்ட' என்றும பாடம்.

கஉ. தாமரை - எழுவாய். மதி - மதியை. தாமரைமலர் மாதவிகைக்கும், மதி மணிமேகலேமுகத்திற்கும் உவமை.

காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றித்
தூநீர் மாலை தூத்தகை யிழந்தது
கரு நிகர்மலர் நீயே கொணர்வா யென்றலு
மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்குஞ்
சுதமதி கேட்டுத் துயரொடுங் கூறுங்
குரவர்க் குற்ற கொடுந்துயர் கேட்டுத்
தணியாத் துன்பந் தலைத்தலை யெய்து
உ0 மணிமே கலைதன் மதிமுகந் தன்னு
ளணிதிகழ் நீலத் தாயமல ரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன ஞயிற்
படையிட்டு நடுங்குங் காமன் பாவையை
யாடவர் கண்டா லகறலு
உரு பேடிய ரன்றே பெற்றியி னின்றிடி
னுங்கன மன்றியு மணியிழை கேளா
யீங்கிங் ஙகரத் தியான்வருங் காரணம
பாரா வாரம பலவளம் பழுநிய
காராளர் சண்பையிற் கௌசிக னென்போ
ஊ0 னிருபிறப் பாள னெருமக ளுள்ளே
ளெருதனி யஞ்சே னோ நெஞ்சமோ
டாரா மத்திடை யல்கொய் வேன்றனை

கூ. காமர் - விருப்பம்.

கசு. தூநீர் மாலை தூதகை யிழந்தது- தூய நீர்மையையுடைய மாலையானது கண்ணீரில் நனைந்து தூய தன்மையை யிழந்தது.

கரு. நிகர்மலர் - ஒளியையுடைய மலர்; "நீர்வார் நிகர்மலர் கடுப்ப" என்பது **அகநானூறு,** கக. "அரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்" என்பது **சிலப்பதிகாரம்,** களத்திறமுரைத்த காதை, க - உ

கசு. மதுமலர்க்குழலி - மணிமேகலை.

கஅ. குரவர்க்கு - தாய் தந்தையர்க்கு.

உஉ. கடைமணி யுகுநீர் - கண்மணிக் கடையினின்றும் உருகின்ற நீர், "ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுட" என்பது **சிலப்பதிகாரம்,** வழக்குரைகாதை, டுசு.

உக. படையிட்டுக் காமன் நடுங்கும் - படையை எறிந்துவிட்டுக் காமன் நடுங்கும்.

உச. உண்டோ, ஓ - எதிர்மறை.

உடு. பெற்றியின் - தங்கள் இயற்கைத்தன்மை நிரியுமல்; நின்றிடின் - (இவ்வே விரும்பாது) நிற்பாராயின்.

உஎ - உசு. யான்வருங் காரணத்தைக் கேளாய்.

உஅ - உக. பாராவாரம் - கடல். பழுநிய - முதிர்ந்த; "பெருவளம் பழுநி" என்பது **புறநானூறு,** ககசு. 'பாராவாரப் பல்வளம் பழுநிய' என்றும் பாடம். காராளர் - பூவைசியர். சண்பை - ஒரு நகரம்; சீகாழியுமாம், அங்கநாட்டிற் கங்கைக் கரையிலுள்ளதாகிய சமபையென்னு நகரமுமாம; இவ்வரைகருக் காராளரென்பதனைக் கராளரென்பதன் விகாரமாகக் கொள்க; கராளர் - ஒரு சாதியார்; "காராளர சண்பையிற் கௌசிகன் மகளே" என்பா பின்னும்; எ - ம் காதை, கoஉ.

கூக. ஒருதனி - ஒப்பில்லாததனி.

கூஉ. ஆராமம் - உபவனம்.

மாருத வேகனென் பானோர் விஞ்சையன்
றிருவிழை மூதூர் தேவர்கோற் கெடுத்த
பெருவிழாக் காணும பெற்றியின் வருவோன்
மூரன் மாலையன் றமனியப் பூணினன்
பாரோர் காணப் பலாதொழு படிமைய
னெடுத்தன னெற்கொண் டெழுந்தனன் விசும்பிற்
படித்தன னுங்கவன் பான்மையே னுயிரே
னுங்கவ னீங்கினே யகன்று ணண் மாறி
நீங்கினன் றன்பதி நெட்டிடை யாயினு
மணிப்பூங் கொம்பர் மணிமே கலைதான்
றனித்தலர் கொய்யுந் தகைமைய ளல்லள்
டன்மல ரடுகிய நன்மரப் பந்த
சரு நிலவுந் திகையி னெயிறபுறம் போகி

கூக. விஞ்சையன - வித்தியாதரன்.

கூச. மூதூர் - ஊழிப்பூம்பட்டினம்.

கூசு - கூஎ. தாரன் - பூமாலையையுடையவன்; மாலையன் - மணிமாலையையுடையவன்; 'தார மாலையன்' எனப் பாடமோதி, மந்தாரமாலையையுடையவனெனினுமமையும். தமனியப் பூணினன் - பொற் பூணினையுடையவன்; பாரோர் காணு - மக்கள் கண்ணிற்குப் புலப்படாத, பலா தொழுபடிமையன் - தேவர் பலருந் தொழும் தெய்வவடிவையுடையன்; படிமை - செய்வவடிவு "தாரன மாலையன் றமனியப் பூணினன், பாரோர் காணப் பலர்தொழு படிமையன்" என இவ்வடிகளே சிலப்பதிகாரத்தும் வருதல் காண்க; அடைக்கலகாதை, கஙுஎ - கடுஅ.

கூஎ - கூக. படிமையனும் வருவோனு மாகிய விஞ்சையன்.

கூஅ. எடுத்தனன் - எடுத்து. விசும்பி லெழுந்தனனென்க.

கூக. படித்தனன் - அகப்படுத்திக் கொண்டான். அவன் பான்மையனு யினேன் - அவனுடைய இன்பத்தின் பகுதியையுடையேனுயினேன்; "பனியிரு விசும்பிற் றேவர் பான்மையிற் றென்று சொன்னன்" என்பது சீவகசிந் தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், கூக.

சுஎ - சக. ஙுங்கவன் - மாருதவேகன். சங்கு - இந்நகரத்திடத்து. கண்மாறி எனை அகன்று நீங்கினன் - விழித்த கண் இமைகளும் அளவிலே மறைந்து எனனேவிட்டு நீங்கினன். கணமாறல் - விழித்த கண் இமைக்கு மளவிலே மறைதல்; "கண்மா றுடவ தொடுக்க மொற்றி" என்பது மதுரைக்காஞ்சி, சுஅஉ. தன்பதி நெட்டிடையாயினும் நீங்கின னெனக கூட்டுக. சுதமதியை மாருத வேகன இந்நகரத்து விட்டு நீங்கினனென்பதை, "அஞ்செஞ் சாயல ராந்தா ணதுளோர், விஞ்சைய னிட்ட விளங கிழை யென்றே, கலலென் பேரூர்ப் பலலோ ருளாயினே" என்று உதய குமரன கூறியவாற்றுனு முணர்க; கு - மகாதை, உரு - உடு. 'ஆங்கவ னென்னே யகன்று' என்றும பாடம்.

சுஉ. மணிப்பூங் கொம்பர் மணிமேகலை - மாணிக்கப் பூங்கொம்பு போலும மணிமேகலை; எழுவாய்.

சுசு. 'தன்மைய ளலலள்' என்றும் பாடம்.

இனிப் பூக்கொய்தற்குரிய இடங்கூறுகின்றுள்.

சுச - சடு. பலமலர்களே நிறைந்த நல்ல மரநிழலையுடைய இலவந்திகையினது மதிலின் புறத்தே சென்றுல; மரப்பந்தர் - சோலையுமாம். இலவந்திகை - யந்திர வாவி; இதனே, "நிறைக்குறி னிறைத்துப் போகுகுறிற் போகும், பொறிப்படை யமைந்த பொங்கில வந்திகை" என்பதனு லுணர்க; இது

## ங.—மலர்வனம்புக்ககாதை.

உலக மன்னவ னுழையோ ராங்குளீர்
விண்ணவர் கோமான் விழாகெ ணன்ணண்
மண்ணவர் விழையார் வானவ ரல்லது
பாடுவண் டிமிரா பன்மரம யாவையும
நூ0 வாடா மாமலர் மாலிக டேகலிற்
கைபெய் பாசத்துப் பூதங் காக்குமென்
றுய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார்
வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சமபாதி யிருந்த சமபாதி வனமுங்
நூநு தவாநீர்க் காவிரிப் பாவைதன் றுதை
கவேரனுங் கிருந்த கவேர வனமு
மூப்புடை முதுமைய தாககணங் குடைய
யாப்புடைத் தாக வறிந்தோ செய்தா

**பெருங்கதை**, உஞ்சைக்காண்டம், உவந்தவை காட்டல். 'இலவந்திகை - நீரா வியைச்சூழ்ந்த வயந்தச்சோலை ; அஃது அரசனும் உரிமையு மாடும் காவற்சோலை' என்பர் **அடியார்க்குநல்லார்**. ''பன மலரடுக்கிய நன்மரப் பந்தரிலவந திகையி னெயிற்புறம் போகி'' என இவ்வடி களே, **சிலப்பதிகாரத்**தும் வந்திருதலை காண்க ; நாடுகாண்காதை, கூ0 - கூக.

சசு. உலகமனனவன - சோழன். உழையோர் பகததிலுளளோர, உழை - பக்கம்.

சஎ. நன்னுள் - நன்னுளில.

சஅ. வானவரலலது - தேவர விரும்பு தலியன்றி ; அல்லது மண்ணவர விழை யாரென இயைக்க.

சக. தேவர்கள் விரும்பினமையால மரங்களில வண்டுகள் இமிரா வாயின ; சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட், பெருந்தண் மிலநத செனனி யன்'' என்பது **திருமுருகாற்றுப்படை**, சசு - சஉ.

சகூ-நு0. மரம் யாவையும மாலைகளத தூக்கலின்; தூக்குதல் - தொங்கவிடல. வாடாத மலர்மாலைகள், தேவர்களால நிருமிக்கப்பட்டன ; ''வாடா மாலைவா ர்களிர்ப் பிண்டி வாம'' எனபது **சீவக சிந்தாமணி**, முத்தியிலம்பகம், சஉ0.

நுக. கைபெய்பாசம் - கையினிட்த் துக் கொண்ட பாசம். மரங்கள் வாடா மாலைகளைத் தூக்குதலால பூதங்காதலை உணரப்பட்டது.

நுஉ. உய்யானம் - உதயானம் ; அர சர் வினையாடுங் காவற்சோலை; ''உய்யா னதநி னுறதலை மகிழ்ச்சியும்'' என் பது **சிலபபதிகாரம்**, ஊர்காண்காதை, கஉ.

நுசு. வெங்கதிர் - சூரியன்.

நுச. சமபாதி - சடாயுவி னுடன்பிற நதவன. புள்ளிருக்குவேளூர், சம்பாதி புரமென்று வழஙகப்படுதலாலும், காவி நிப்பூம்பட்டினத்திற்குச் சமீபமாக இ ருதலாலும், அது முற்காலத்துச் சம் பாதிவனமாக விருதலல கூடுமென்பது ஊகிகக்படுகினறது.

நுந - நுசு. தாதையாகிய கவேரன். ''கவேர கன்னிப் பெயரொடு விளங் கிய, தவாகளி மூதூர்'' என்பர் பின னுமை ; கூ - ம் காதை, நுஉ - நுசு.

நுஎ. மூதுமைய முதுமையையுடைய. தாக்கணஙகு - தீண்டிவருத்துந் தெய் வம ; ''தாக்கணஙகு, தானகொண் டன்ன துடைதது'' என்பது **திருக்குறள்**, கமஅஉ. ''வெம்முது பேய்கென னுயிர் கொடுதனென'' எனறு பின்னும் வருதல் காண்க ; சு - ம காதை, கசுo.

நுச - நுஎ. சம்பாதிவனமும் கவேரவ னமும தாகணஙகுடையன.

நுஅ. யாப்புடைத்தாக - உறுதியுடை த்தாக; யாப்பு - உறுதி; ''யாப்பமை

சருவ மன்பு மரீயி சோம்பு
மொருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன தாணையிற் பன்மலர் பூக்கு
முவவன மென்பதொன் றுண்டத னுள்ளது
விளிப்பறை போகாது மெய்புறத் திடுஉம
பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தானுண் டாங்கிடி
னரும்பவிழ் செய்யு மலர்ந்தன வாடா
சரும்பின மூசா தொல்யாண்டு கழியினு
மறந்தே னதன்றிற மாதவி கேளாய்
கடம்பூண்டோர் தெய்வங் கருத்திடை வைத்தோ
ராங்கவ ரடிக்கிடி னவரடி தானுறு
நீங்கா தியாங்கணு நினைப்பில ராயிடி

மாக்க ளியல்பிற் கொள்ளார்” என்பது சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, கூ.

ருக. அருள் - அன்புகாரணத்தால் தோன்றும்அளி. அன்பு - அருட்கு முதலாகி மனத்தின்கண் நிகழும் நேயம்.

சூ. பூட்கை - மேற்கோள்; “அறத்தாறு தவலும் பூட்கை” என்பது புறநானூறு, க.

சுக. பகவனது ஆணையின் - புத்தனது கட்டளையினாலே.

சுஉ. உள்ளது - உள்ளிடத்தது.

சுங - சுச. விளிப்பு அறைபோகாது - ஓசை அறைபோகாமல், மெய்புறத்து இடுஉம் - தன்னைச்சார்ந்தா ருடம்பைமட்டும் புறத்தே தோன்றவிகரும், பளிக்கறைமண்டபம் - பளிக்குமண்டபம்; தன்னுட் புகுந்தவர்களுடைய ஓசையை வெளிப்படுத்தாமல அவர்களுருவத்தை மட்டும் வெளிப்படுத்துவதென்று அப் பளிங்கு மண்டபத்தின் தன்மைகூறியவாறு. விளிப்பறை - இருபெயரொட்டுமாம்; அறை - ஓசை.

சுஉ - சுச. அதன உள்ளதாகிய மண்டபமெனக்கூட்டுக.

சுச. அதனுள்ளது - அம்மண்டபத்தின் உள்ளிடத்தது.

சுடு - சுசு. மணிச்சுடரொளிவிரிந்த தாமரைப்பீடிகை - மாணிக்கச்சோதி பரந்த பதுமபீடம். என்றது புத்தன் பாதபீடத்தை; புத்தன் பாதத்தை மணிபதமென்றலும், அதனை வழிபடுவோர் அதுபற்றி, ‘ஓம் மணிபதமேஹூம்’ என்ற மந்திரத்தை ஜபித்தலும் பௌத்த மத ஸம்பிரதாயம்.

சுச - சுசு. உள்ளதாகிய பீடிகையென்க.

சுசு. ஆங்கு இடின் - அப்பீடத்தே இட்டால.

சுஎ. அவிழ்செய்யும் - அவிழ்தலைச்செய்யும்.

சுஎ - சுஅ. தொலையாண்டு கழியினும் வாடா மூசா வென்க. காலம் தொனமைதலாதலின், ‘தொலையாண்டு’ என்றார். ‘சுரும்புமூசா’ எனறும் பாடம்.

சுக. ‘மறந்தே னிதனறிறம்’ எனறும் பாடம.

எ. கடம்பூண்டு - முறைமையால மேற்கொணடு; “நிழல்வாய் நேமி, கடம்பூண்டருட்டுங் கௌரியர்” எனபது சிலபபதிகாரம், அடைக்கலசாதை, க-உ. ஓர் தெய்வம - ஒரு தெய்வதத்தை.

எக. அவர் - அத்தேவருடைய, அடிக்கு ஆங்கு இடின - அடியின்பொருட்டு (மலரை) அபபீடத்தே இட்டால், அவரடிதானுறும் - (அம்மலர்) அத்தேவருடைய அடியை அடையும்.

எஉ. நினைப்பிலராய் இடின் யாங்கணும நீங்காது.

னீங்குதன் காரண மென்னை யென்றியேற்
சிந்தை யின்றியுஞ் செய்வினை யுறுமெனும்
எறி வெந்திற ஞென்பிகள் விழுமங் கொள்ளவுஞ்
செய்வினை சிந்தை யின்றெனின் யாவது
மெய்தா தென்போர்க் கேது வாகவும்
பயங்கெழு மாமல ரிட்டுகை காட்ட
மயன்பண் டிழைத்த மாபின தறுதா
அ0 னவ்வன மல்ல ணியிழை நின்மகள்
செவ்வனஞ் செல்லுஞ் செமமை தானிலண்
மணிமே கலையொடு மாமலர் கொய்ய
வணியிழை நல்லா யானும் போவலென்
றணிப்பூங் கொம்ப ரவலொடுங் கூடி
அரு மணித்தேர் வீதியிற் சுதமதி செல்வழி இச்
சிமிலிக் கரண்டைய னுழைகோற் பிரம்பினன்
றவலருஞ் சிறப்பின ராந்தா ணத்துளோ
ணுணமு முடையு நன்கன நீத்துக்

எச - எறி. சிந்தையின்றியுஞ் செய்வி னை யுறுமெனும் வெந்திறல் நோன்பி கள் - மனமில்லாதிருக்கவும் அறமும்பா வமு முளவாகுமெனறு சொல்லுகின்ற வெவ்விய திறலையுடைய விரதிகள், விழு மங்கொள்ளவும் - வருத்தங்கொள்ளவும.

எசு - எள. சிந்தையின்றெனிற் செய் வினை யாவதும் எய்தாது எனபோர்க்கு எதுவாகவும் - மனமிலலையாயின் அற மும்பாவமும் சிறிதும் உளவாகா வென் ரு கூறுவோராகுக குறியாகவும்.

எச - எள. மனமுள தாயவழி வினையு முளதாமென்பதும மனமிலதாயவழி வி னையுமிலதாமெனபதுமாகிய இவற்றை, பின் வரு ந திருக்குறள்களாலும் அவ ற்றிற்குப் பரிமேலழகரெழுதிய உரை யாலு முணர்க. (ஙகசு)—"இன்ஞ வெ னததா ணுணாந்தவை தன்னுமை, வே ணடும் பிறன்கட் செயல", (சுஙஎ)—"எனைததாணு மெஞ்ஞான்று மியாராகு மனத்தாளு, மாணுசெய் யாமை தலை."

எஅ. பயம் - பயன். 'இட்டுக்காட்டி' என்றும் பாடம்.

எக. அது - அப்பீடிகை.

அக. செவ்வனஞ் செலலும் - வேரு க்கச்செல்லுமென்றுமாம்; "திருமகளிரு என்பது

சிலப்பதிகாரம், கடலாடுகாதை, கஉஎ.

அச. அவளொடும் - மணிமேகலை யோடும்.

அசு. சிமிலிக்கரண்டையன் - உ4 லேவைத்த குண்டிகையையுடையன்; "கலபொளிக் தன்ன விட்டவாய்க் கரண் டைப், பலபுரிச் சிமிலி நாற்றி" என்பது மதுரைக்காஞ்சி, சஅஉ - சஅசு. நுழை கோற் பிரம்பினன் - திண்ணிதாகத் திரண்ட பிரம்பையுடையன். 'உழைத் தோற் பிரம்பினன்' என்றும் பாடம்.

அள. தவலருஞ்சிறப்பின ராந்தாணத் துளோன் - கேடில்லாத மேன்மையாளர் களுடைய இடத்தியுள்ளான்; ஆந்தா ணம் - இடம்; இது நைலைமுனிவர்களு டையஇடத்திற்கேயுரியபெயராக வழங் குகின்றது; இதனை ஆஸ்தாநமென்னும் வடமொழிச்சிதைவென்பா; இதற்கு நடுவென்று பொருள்கொண்டு, இதனை அந்தராளமென்னும் வடமொழிச்சிதை வென்றுவது அந்தஸ்தாநமென்னும் வ டமொழிச்சிதைவென்றுவது கொள்ளி னும் அமையும்; இவ்விரண்டுசொற்களும் முறையே அநதராணமென்றும் அந்தரா ணமென்றும் கன்னடபாஷையில வழங் குகின்றன. "அஞ்செஞ் சாயல ராந் தா ணதுள்" என்பர் பின்னும்; ங - ம்

காணு வுயிர்களுங் கையற
கூ0 யுண்ணு நோன்பொ டுயவ லியாணையின்
மண்ணு மேனியன் வருவோன் றன்னை
வந்தி ரடிகணும் மலரடி தொழுதே
னெந்த மடிக ளெம்முரை கேண்மோ
வழுக்குடை யாகையிற் புகுந்த நுமமுயிர்
கூடு புழுக்கறைப் படடோர் போன்றுளம வருந்தா
திமமையு மறுமையு மிறுதியி லின்பமுந்
தன்வயிற் றரூஉமென் றலிமக னுரைத்தது
கொலியு முண்டோ கொழுமடற் றெங்கின்
வீரூந் தேறலின் மெய்த்தவத் தீரே
க00 யுண்டு தெளிந்திவ் யோகத் துறுபயன்
கண்டா லெம்மையுங் கையுதிர்க் கொண்மென
வுண்ணு நோன்பி தன்னெடுஞ சூளுற்

காதை, உரு. 'ஆந்தானம்' எனவும், 'அந்தாணம்' எனவும் பாடம்

அசு. காணு வுயிர்களுங் கையற் றேங்கி - தண்ணிய உடமபுடைய உயிர்கட்கும் நடத்தல் இருத்தல் கிடத்தல் நிற்றன் முதலிய தன்றொழில்களால துன்பங்களுமோவென்று செயலற்றேங்கி.

கூ0. உயவல் யானை - வருந்துதலையுடைய யானை; "உயவற்பாண" என்பது புறநானூறு, சுசு.

கூட. மண்ணுமேனியன் - கழுவாத மேனியையுடையன். வருவோன்றன்

கூசு. கேண்மோ - கேளும்; ஓ - அசைநிலை; "முதுமறை மாக்கண் முன்னிய துணைமோ" (கசு - ம் காதை, நுசு) எனவும், "மாமறை மாக்கள் வருகுலங்கேண்மோ" (கசு - ம் காதை, கூ) எனவும் இந்நூலுள்ளே பின்பு வருதலுகாண்க.

கூச. அழுக்குடையாகையென்றன், மண்ணுமேனியாதலால். 'புகுந்தது நும்முயிர்' என்பும் பாடம்.

கூடு. புழுக்கறைப்பட்டோர் - புழுங்கச்செய்யும் அறையி லகப்பட்டோர். 'போன்று வருந்தாது' என்பும் பாடம்.

கூச - கூடு. திமமுயிர் பட்டோர்போன்று உளம் வருந்தாது. வருந்தாது - வருத்தாதவண்ணம்.

கூசு - கூஎ. இம்மைப்பயன்முதலிய மூன்றையும் தன்வயிற்றரூஉந் (கூக - ம் அடி) தேறலெனவும், உரைத்ததாகிய (கூக - ம் அடி) தேறலெனவுமியைக்க; தரூஉந்தலிமகனென இயைப்பினு மமையும.

கூஎ. 'தன்மையிற்றரூஉம்' என்பும் பாடம்.

க00. யோகமென்றது, அம்முனிவனது தவநெறியை; மருந்துமாம்; சேர்க்கையுமாம்.

கo2. எம்மையும் கையுதிர்க்கொண்மென - தேறலையன்றி எமமையும் அகற்றிவிடுமென்று. சிலமில்லாதவனைக்காணின், அவரோடுபேசாமல, அவனாப் போகும்படி கையசைத்துக்குறிப்பித்தல் சைனமுனிவர்க்கு இயல்பு; இப்படியே "மையறு படிவதது மாதவர் புறத்தெமைக், கையுதிர்க் கோடலின்" எனப் பிண்ணும் வருதல்காண்க; கு - ம் காதை நுடு. 'கைவிதிர்க் கொண்மென' என்பும் பாடம்.

கo2. உண்ணுநோன்பி - இரண்டு உவாவும் அட்டமியும் முட்டுப்பாடும் பட்டினிவிட்டுண்ணும் விரதி; என்றது சைனமுனிவனே; "பட்டினிநோன்பிகள்" என்று சிலப்பதிகாரத்து வருதல் காண்க; அடைக்கலக்காதை. கூசு. சூளுறல் - சபதஞ்செய்

றுண்மென விரக்குமோர் களிமகன் பின்னருங்
கணவிரி மாலையிற் கட்டிய திரள்புயன்
கஅடு குவிமுகி ழெருக்கிற் கோத்த மாலையன்
சிதவற் றுணியொடு சேணுங்கு நெடுஞ்சினைத்
ததர்வீழ் பொடித்துக் கட்டிய வுடையினன்
வெண்பலி சாந்த மெய்ம்முழு தூறீஇப
பண்பில் கிளவி பலசொடு முரைத்தாங்
ககஅ கழூஉம் விழூஉ மாற்றுங் கூஉந்
தொழூஉ மெழூஉஞ் சுழலுஞ் சுழலு
மோடலு மோடு மொருசிறை யொதுங்கி
நீடலு நீடு நிழலொடு மறலு
மைய லுற்ற மகன்பின் வருந்திக்
ககடு கையறு துன்பங் கண்மிசிற் குரருஞ்
சுரியற் குடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப புருவத்து மருங்குவீழ் பிறைநுதற்

---

கஅசு. உண்மென - உண்ணுமென்ற. ஓர்களிமகன்பின்னரும் - ஒருகட்குடியன்பின்னே நிற்போரும்.

அசு - கஅசு. கரண்டையன், பிரம்பினன், உளோன் என்பன-உண்ணுகோன் பிக்கு அடை; "ஆர்த்த வாய ஹார்களளி மூர்க்கன், செவ்வழிக் கீதஞ சிதையப் பாடி, யவ்வழி வருமோ ரந்த ணுளனேச, செல்ல லாணை நிலலிவ ணீயென, வெய்தச் சென்று வைதவண் விலக்கி, வழுத்தினே முண்ணுமிவ் வடிநறுக் தேறலெப், பழிப்புக் கூறுகின் பார்ப்பனக் கணமது, சொல்லா யாயிற் புலலு வேன் யானெனக், கையலைத் தோடு மோர் களிமகன் காண்மின்" என்பது **பெருங்கதை**, உஞ்சைக்காண்டம், உவந்தவைகாட்டல்.

கஅச. கணவிரிமாலை - அலரிமாலை. "கணவிரி மாலை ககைகொண் டென்ன" எனப் பின்னுங்கூறுவர்; டு - ம் காதை, சூஅ. 'கணவீர மாலை கட்டிய திருணையன்' எனவும் பாடம்.

கஅசு. சிதவற்றுணி - சிதினசீரை

கஅசு-கஅஎ. சினைத் ததர் வீழ்பு - களிஞுள்ள செறிந்த சுளளிகள்; வீழ்பு - சுள்ளிகளுக்கு ஆகுபெயர்; ததர் - கொத்துமாம்; "சிதர்ஙை முருக்கின் சேணுங்கு நெடுஞ்சினைத், ததர" என்பது சிறுபாணாற்றுப்படை, உருச - உடுடு.

கஅஅ. வெண்பலி - வெண்ணீறு; சாந்தம் - சந்தனம. 'வெண்பலிச் சாந்தம்' என்றும் பாடம்

ககக. சுழலுஞ்சுழலும் - சுழலுதலேயுஞ் செய்வன். இவ்வாறு பின்வருவன வற்றிற்கும் இப்படியேபொருள்கொள்க. "இயங்கலு மியஙகு மயங்கலு மயங்கும" என்பது **சிலப்பதிகாரம்**, அழற்படுகாதை, கடுச. 'சுழலினுஞ சுழலும்' என்றும் பாடம்.

ககச. மையலுற்றமகன - பித்தன்.

ககசு. சூடி - மோவாய்.

ககஅ. வெள்ளிவெண்டோடு - சங்கினுற்செய்த காதணி. 'வெள்ளிவண் டோடு' என்றும பாடம்.

ககக. கருங்கொடிப் புருவம் - காரியொழுங்காகிய புருவம்; "கருங கொடிப் புருவ மேரு" என்பது **சீவகசிந்தாமணி**, காந்தருவதத்தையாரிலம்பகம், கசுசு. இதனை, வடமொழியில் ப்ருலதா என்பதனோடு ஒப்பிடுக.

கஉ0 காந்தளஞ் செங்கை யேந்திள வன(
யகன்ற வல்கு லந்துண் மருங்கு
லிகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணில மளந்தோன் மகன்முன் ஞடிய
கஉரு பேடிக்கோ லத்துப் பேடுகாண் குரும்
வம்ப மாகதர் கம்பலை மூதூர்ச்
சுடும ணேங்கிய நெடுநில மணிதொறு
மையறு படிவத்து வானவர் முதலா
வெவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
கஊ0 வெண்சுதை விளககத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியங் கண்டுநிற் குரும

கஉஉ. வட்டுடை - முழங்காளளவாக உடுக்கும் உடைவிசேடம்; "வட்டுடைப் பொலிந்த தானை வள்ளலே" என்பது சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், சுo; "வட்டுடை மருங்குல் சேர்த்தி" என்பது, சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், உஎடு. எழுதுவரிக்கோலம் - கொங்கை முதலிய வற்றில் எழுதிய பத்திக்கீற்று; "எழுதுவரிக் கோல முழுமெயு முறீஇ" என பது சிலப்பதிகாரம், இந்திரவிழவுரெடுத்தகாதை, உஉசு.

கஉக - கஉச. வாணன் - பாணாசுரன்; ஊர் - சோணகரம்; நீணிலமளந்தோன் - கண்ணன்; மகன் - காமன் (பிரத்தியும்நன்.) "வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோ ஞடிய" என்பது சிலப்பதிகாரம், கடலாடுகாதை, ருச - ருஎ.

கஉடி. பேடி - புறநாடகம் பதினெஞ்ஞனுள் ஒன்று; அப்பதினெஞ்ஞையும் அவற்றை நிகழ்த்தியவர்களையும் பினவருமாறு வெண்பாவாலுணர்க; "கடையமயிராணிமரக் கால்விந்தை கந்தன், குடைதுடிமா லல்லியமற் கும்பஞ் - சுடர்விழியாற், பட்டமதன் பேடிதிருப் பாவையரன் பாண்டரங்கங்,கொட்டியிவை காண்பதினெஞ் சூத்து." இஃது உழைகாரணமாக வாணனுற் சிறைவைக்கப்பட்ட தன்மகன் அநிருத்தனைச் சிறைமீட்டுக் காமன் சோணகரத்தாடிய ஆடல். உழை - வாணன்மகள். 'பேடிகாண் குரும்' என்றும் பாடம்.

ககசு - கஉடி. "ஆண்மை திரிந்த பேடிக்கோலத்துக், காம ஞடிய பேடியாடலும்" என்பது சிலப்பதிகாரம், கடலாடுகாதை, ருசு - ருஎ. "சுருளிடு தாடி மருள்படு பூங்குழ, லரிபரந் தொழுகிய செழுங்கய னெடுங்கண், விரிவெண் டோட்டு வெண்ணகைத துவர்வாய்ச், சூடக வரிவளே யாடமைப் பணைத்தோள், வளரிள வனமூலைத் தளிரியன் மின்னிடைப், பாடகச் சீறடி யாரியப் பேடி" என்பது சிலப்பதிகாரம், நீர்ப்படைகாதை, கஅக - கஅசு.

கஉசு. வம்பமாக்கள் - புதியோர்; வம்பு - புதுமை; "வம்ப மாக்க டம்பெயர் பொறிதத" என்பது சிலப்பதிகாரம், இந்திரவிழவுரெடுத்தகாதை, ககக. கம்பலை - முழக்கம். மூதூர் - மூதூரில்.

கஉள. சுடுமண் ஒங்கிய - செங்கலாற் செய்யப்பட்டு உயர்ந்த; "சுடும ணேங்கிய நெடுநகர் வணாப்பு" என்பது பெரும்பாணாற்றுப்படை; சoடி. "சுடும ணெடுமதில்" என்பது புறப்போருள்வெண்பாமாலை, உழிஞைப்படலம், ககக. "சுடும ணேறு .. கடிமனே" என்பது சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, கசசு-கசள.

கஉஅ. படிவம் - தெய்வவடிவம்.

கஉக - கஊக. சுதை - சுண்ணச்சாந்து. வித்தகர்-ரண்டு, சிற்பாசாரிகள்; "வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச,

விழவாற்றுப் படுத்த கழிபெரு வீதியிற்
பொன்ஞண் கோத்த நன்மணிக் கோவை
யையவி யப்பிய நெய்யணி முச்சி
கஉடு மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெறு மழலை
சிந்துபு சின்னீ ரம்பட நீளப்ப
வற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகி
கசஅ றெடுத்நமணிக் கோவை யுடுப்பொடு தூயல்வாத்

நிரச் செய்கைப் படாம்" என்பர் _ ஆம்; கூ - ம் காதை, கசுஎ - கசுஅ. விளக்கத்தையுடைய சுதையா லியற்றிய ஒலியம்; ஒலியம் - சித்திரம். இவ்வடிகளோடு பின் வருவனவற்றை ஒப்பிடுக; "எவ்வகைச் செய்நியு முவமங காட்டி, நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற், கண்ணுள் வினைஞரும்" என்பது மதுரைக்காஞ்சி, நுகசு - நுகஅ. "மய னெனக கொப்பா வுருத்த பாவையி, னீங்கே னியான" என்பது மணிமேகலை, உக - ம் காதை, கசுஎ - கசுகூ.

கசுஎ. விழவு ஆற்றுப்படுத்த = விழவை வழிப்படுத்தின; நடத்திய என்றபடி; "முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்" என்பது திருமுருகாற்றுப்படை, உசச.

கசுஏ. ஐயவி யப்பிய நெய்யணி முச்சி - வெண்சிறுகடுகையப்பிய நெய்யையணிந்த மயிர்முடி; பேய்தீண்டி வருத்தாவண்ணம் குழந்தைகளின் மயிர்முடியில் நெய்யணிந்து வெண்சிறுகடுகை அப்புதல் மரபு. வெண்சிறுகடுகிற்குக் கடிப்பகையென்னும் பெயர் வந்ததற்குக் காரணமிதுவே; கடி - பேய்; "குறுநடைப் புதல்வர்க்குக், காவற் பெண்டிர் கடிப்பகையெடுத்து, தூபங்காட்டித் தூங்குதுயில் வதியவும்" (எ - ம் காதை, நுஎ - நுசு) எனவும், "அரவாய்க் கடிப்பகை யையவிக் கடிப்பகை" (எ - ம் காதை, எசு) எனவும் பின்பு வருதல் காண்க; சந்திரா பீடனென்பவனது தலையில் வெண்சிறு கடுகு அப்பியிருந்ததாக 'காதம்பரி' என்னும் வடநூலிற் கூறப்பட்டுள்ளது. முச்சி - முச்சியில்.

கசுஅ - கசுக. கயிற்கடை - கொக்குவாய் (கொக்கியென்று வழங்குகின்றது); "கயிற்கடை யொழுகிய காமர் தூமணி, செயுதகு கோவை" என்பது சிலப்பதிகாரம், கடலாடுகாதை, கo௯ - கo௨. முக்காழ் - மூன்று கோவையாகிய முதுதுவடம். பிறைச்சென்னி - பிறை வடிவமாகிய ஆபரணத்தின் இரண்டு கோடுகள். சென்னி - சென்னியில். முக்காழ் தாழ வென்க.

கசுள. 'மெய்பெறு மழலை' என்று சண்டிக்கூறியதுபோல, 'வீணையா மழலை' என்று பின்னுங்கூறுவர்; ச - ம காதை, கசுக.

கசுஅ. ஐம்படை - ஐம்படைத்தாலி; சாதத்தற் கடவுளான திருமாலின் சங்கம் சக்கரம் கதை கட்கம் சார்ங்கம் என்னும் ஐந்து ஆயுதங்களின் வடிவமாக அமைப்பது; இதனைப் பஞ்சாயுதமென்றும், ஐந்நாவதி மாதத்தில் பிள்ளைகளுக்கு இதனைத் தாரணஞ்செய்தல் மரபென்றும் கூறுவர் வடநூலார். இதற்கு விதி, 'சிநுகியரத்நம்' என்னும் வடநூலி லுள்ளது. "அமளித் துஞ்சு மைம்படைத் தாலிக், குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்" என்பர் பின்னும்; எ-ம் காதை நுசு – நுஎ. இது தாலியெனவும் தாலியைம்படை யெனவும் வழங்கும்; "தாலி கோள்தன்று மிலனே பால்விட், டயினியு மின்றயின் றனனே" என்பது புறநானூறு, எள. "எழிலார் திருமார்பிற் கேற்கு மிவையென், றழகிய வைம்படையுமாரமுங் கொண்டு, வழுவில் கொடையான் வயிச்சி ரவணன், றெழுதுவனைய நின்ரூன் ரூலேலோ ரீமணி வண்ணனே தாலேலோ" என்பது பெரியாழ்வார்திருமொழி, முதற்பத்து, கூ - ம் திருமொழி, கி.

தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வனைப்
பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத்
திலங்குதொடி நல்லார் சிலர்நின் றேற்றி
யாலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள்
கசசு காண்மி னேவெனக் கண்டுநிற் குரைமை
விசாடன் பேரூர் விசயனும் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாகதரின்
மணிமே கலைதனை வந்துபுறஞ் சுற்றி
யணியமை தோற்றத் தருந்தவப் படுத்திய
கடுக தாயோ கொடிய டகவில ளீங்கிவண்
மாமலர் கொய்ய மலர்வனந் தான்புகி
னலலிள வன்ன நாணு தாங்குள
வல்லுர கொலலோ மடந்தை தன்னடை
மாமயி லாங்குள வந்துமுன் னிறபன
கருடு சாயல்கற் பனகொலோ தையல் றன்னுடன்
பைங்கிளி தாமுள பாவைதன் னிளவிக

கசஉ - கசசு. பொற்றேரின்மேலுள்ள யானையிற் புதல்வனை யேற்றி; "பொற்றெ தேர்மிசைப் பைம்பொற போர்த்க, நற்கிரு ரூர்தலின்" என்பது. சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், கூ. 'சிலர் நன்றேற்றி' என்றும் பாடம்.

கசச. ஆலமர் செலவன் - சிவபெருமான்; மகன் - முருகக்கடவுள்; "ஆலமர் செல்வன் புதல்வன வரும" என்பது சிலப்பதிகாரம், குன்றகுரவை. கிருரை முருகக்கடவுளாக எண்ணினர். விழாக் கால்கோள் - விழாவின் தொடக்கம்.

கசடு. என - என்றசொல்ல.

கஉ - சசடு. வீதியில நலலார் சிலர், கோவையையும் முச்சியையும் குதலையையும் மழலையையும் பூணையுமுடைய புதல்வனை வேழதது முககாழ்தாழத துகில்தயல்வர ஏற்றிக் காண்மினே வென்றசொல்ல, அதனைக்கண்டு நிற்பவர்களும் என்க.

கசசு. பேரூர் - பேரூரில். விசயனும் பேடியை - அருச்சுனனுடைய பேடியை.

கசஎ. காணிய - காண. கம்பலைமாக்கள் - "வேறுவிலகாட்டெண்டி முழங்கித் திரியுமவர்; "கம்பலைமாக்கள் கணவனைத் தாங்காட்ட" என்பது சிலப்பதிகாரம், ஊர்சூழ்வரி, உக.

கசஅ. வந்து புறஞ்சுற்றி - பின்னரும் கண்டுநிற்குரும் காணகுரும் கண்டு நிற்குரும் கண்டுநிற்குரும் வந்துபுற தடைசுழ்ந்த.

கசகூ - கடுக. அணி யமை தோற்றத்து - ஆபரணங்க ளில்லாத தோற்றத்தையுடைய; "உப்பமை காமத துப்பின்" (நாமகளிலம்பகம், எஅ) எனவும், "நிகரமைந்த முழந்தாளும்" (நாமகளிலமபகம், கசசு). எனவும் சீவகசிந்தாமணியில 'அமை' என்பது இப்பொருளில் வருதலகாண்க. யருந்தவப்படுதிய - அரிய தவநெறியிற் சேர்த்த. தாயோ - மாதவியோ. "மணிமேகலை, யருந்தவப் படுத்த லலலதியாவதுந், திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்" என்று மாதவி முன்பு கூறியிருத்தல் காண்க; உ - ம் காதை, நடு - நிஎ.

கடுக. இவள் - மணிமேகலை.

கடுஉ - கடுசு. ஆங்குள அன்னம் நாணுது மடந்தைதன்னடைவலலுகொல் லோவென இயைக்க.

கருடு. 'சாயல கொல்லோ' என்றும் பாடம்.

கெஞ்சல கொல்லோ விசையுங வல்ல
வென்றிவை சொலலி யாவரு
செந்தளிர்ச் சேவடி நிலம்வடு வுறுமற
கசுஎ குரவமு மாவமுங் குருந்துங் கொன்றையுந்
திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியு
நரந்தமு நாகமும் பாந்தலர் புன்னையும்
பிடவமுந் தளவமு முடமுட் டாழையுங்
குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமுஞ்
கசுஏ செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமு
மெரிமல ரிலவமும விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திர செய்கைப் படாமபோர்த் ததுவே
யெப்பத் தோன்றிய வுவவனந் தன்னைத்
கஅ0 தொழுதனள் காட்டிய சுதமதி தன்னெடு
மலர்கொயயப புகுந்தனண் மணிமே கலையென.

மலர்வனம்புக்ககாதை முற்றிற்று.

கடுஎ. இசையுங அலல-ஒப்பனவல்ல.

கடுஅ. இனைந்து உக - வருந்திச்சிந்த.

கடுக. சேவடியும் நிலமும் வடுவுறு மல் ; மெல்ல நடந்தாளென்றபடி.

கசுஎ. குரவம் - குராமரம. மரவம்-வெண்கடப்பமரம். 'குந்தமுங் கொன்றையும்' என்றும் பாடம்.

கசுக. திலகம் - மஞ்சாடிமரம். வகுளம் - மகிழ்.

கசுஉ. நரந்தம்-நாரத்தை. நாகம் - சுரபுன்னை; "நனைவினையன நகுவிளையன நலனுடையன நாகம்" என்பது நீலகேசி.

கசுஙி. பிடவம் - குட்டிப்பிடவமென்னுங்கொடி. தளவம் - செம்முல்லை ; இதனைக் குறிஞ்சிப்பாட்டையாலுணர்க. "குருதிக் கூரெயிறு கூத்தியர்கட் கொண்ட கொடித்தளவமே" என்பது ஜீவக சிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், கடு. முடம் - வளைவ.

கசுசு. குடசம்-வெட்பாலை விசேடம்; வெதிரம் - மூங்கில்; "குடசமும் வெதிரமுங் கொழுங்கொடிப் பகன்றையும்" என்பது சிலப்பதிகாரம், புறஞசேரியிறுத்தகாதை, கடுஎ.

கசுஞ. எரிமலரிலவம் - நெருப்பைப் போலச் சிவந்தபூவையுடைய இலவமரம்.

கசுஅ. சித்திரச்செய்கைப்படாம் - சித்திரத்தொழிலமைந்த துகில.

கஅ0. தொழுதனள் காட்டிய - வன தேவதையைத் தொழுது உவவனத்தைக் காட்டிய; புததன்பாதபீடிகையுள்ளவன மாதலால தொழுதனளென்றுமாம்.

க - கஅக. மாதவியுரைத்த உரைமுன் றேன்றி மணிமேகலைக்கு எதுகிகழ்ச்சி எதிர்ந்துளதாதலின் அக்காரிகை வெது ப்பக் கலங்கி அழித்து உருட்டி ஆட்ட மாதவி நோக்கி மாற்றிக் கொணர்வாயென்றலும் அதனைக்கேட்டுத் துயரொடுகூறும் சுதமதி 'நீ ணெடனளையிற் காமன் நடுங்கும் ; ஆடவர் அதறலுமுண்டோ, நின்றிடிற் பேடியரன்றே, அன்றியும், யான் இந்நகரத்துவருங்காரணம்கேளாய், கொய்வேனை விஞ்சையன் எடுத்தனன், எழுந்தனன், பதெதனன், ஆயினேன், அவன் ஈங்கு என்னையகன்று தன்பதி நீங்கினன், ஆதலால, மணிமேகலை, தன் மையளலலன்; போகின், உழையோராங் குளர் ; செல்லார் ; எய்தார் ; உவவன மென்பதொன்றுண்டு; உண்டு ; உண்டு ; மரபினது அதுதான் ; செம்மை தானிலன் ; யானும் போவல்' என்று கூடிச் செலவுழி, பின்னரும் நிற்குநரும் காண் குநரும் நிற்குநரும் நிற்குநரும் மணிமே கலையைச்சுற்றி இனைந்துக, மணிமேகலை சுதமதிதன்னெடு மலர்கொய்யப் புகுந்த ளென முடிக்க.

நான்காவ

# பளிக்கறைபுக்ககாதை.

[நான்காவது மணிமேகலை உதயகுமரனைக்கண்டு பளிக்கறைபுக்கபாட்டு.]

பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வலை வுண்ட மருள்படு பூமபொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டின நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை பொதுமடர்
மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்
மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்
யோங்கிய விசைமலர்த் தாமரை

க. செல்வனுடைய கதிர். கதிர்த்தானைக்கு - கிரணங்களாகிய சேனைக்கு.

உ. பொழில் - சோலை. 'இருள்வலைப்புண்டன' என்றும் பாடம்.

கூ. தும்பி குழலிசை கொளுத்திக் காட்ட - தும்பிகள் வேய்ங்குழலின் ஓசையைப் பொருத்திக் காட்ட; தும்பி - வண்டின்னினைகளுள் ஒருசாதி. 'கொழுதிக் காட்ட' எனறும் பாடம்.

ச. 'மழலைவரி வண்டினம' என்றும் பாடம்.

கூ - ச. இவ்வடிகளின் பொருள்கொண்டே, "கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப், பொங்கர் வண்டின நல்லியாழ் செய்ய" என்ற பின்பு வந்திருத்தல காண்க; ககூ - ம் காதை, ஙச - ஙஅ.

ஞ. வெயில் நுழைபு அறியாப் (பொதும்பர்) - ஞாயிற்றின்கதிர் தோன்றிய காலத்தும் படுகின்றகாலத்துமுட்படச் சிறிதும் செல்லுதலறியாத இளமரகக; குயில் நுழை பொதும்பர் - இலேநெருக்கத்தாலே குயில்கள் நுழைந்துசெல்லும் இளமரக்கா; "வெயினுழை பறியாச் குயினுழை பொதும்பர்" என்பது பெதும்பாஞற்றுப்படை, கூசச.

க - சு. பொழிலிற் காட்டச் செய்ய மயில் ஆடுகின்ற பொதும்பராகிய அரங்கில இருந்து காண்பனவாகிய மந்திகளைக காண்பாயாக.

எ. மணிநீரிலஞ்சி - பளிங்குபோலும நீரையுடைய பொய்கை; நீலமணிபோலு நீரையுடைய இலஞ்சியென்றுமாம். இலஞ்சி - இலஞ்சியில.

கூ. ஒருதனி - ஒப்பிலாததனி; "ஒப்புடைய தானையு ளொருதனிய ஞெகி" என்பது சீவகசிந்தாமணி, நாமகளிலம் பகம, உருக; "ஒருதனி நினரூர்" (ச - ம காதை, கூசு) எனவும், "ஒருதனி யோங்கிய திருமலர்" (கடு - ம் காதை, எசு) எனவும், "விசைமலர்த் தாமரை யொருதனி யிருந்த, திரு" (கசு - ம் காதை, கூசு - கூச) எனவும், "உலக வறவியி னெருதனி யேறி" (கஎ - ம் காதை, அசு) எனவும், "ஒருதனி போயின னுலக மன்னவன்" (உடு - ம் காதை, உஐச) எனவும் 'ஒருதனி' என்பது இந்நூலுள்ளே பயின்றுவருதல காண்க.

அ - கூ. இவ்வடிகளின்பொருள், பின்பு, "குளனணி தாமரைக கொழுமலர் நாப்ப, ணெருதனி யோங்கிய திருமலர்

கo யாச வன்ன மாங்கினி திருப்பக்
கைாகின் றூலு மொருமயி றனக்குக்
கமபுட் சேவற் கனைகுரன் முழவாக்
கொமப ரிருங்குயில் விளிப்பது காணு
யியங்குதேர் வீதி யெழுதுகள் சேர்ந்து
கடு வயங்கொளி மழுங்கிய மாதர்கின் முகம்போல்
விைமலர்த் தாமரை கைாகின் றேங்கிய
கோடுடைத் தாழைக் கொழுமட லவிழ்ந்த
வாலவெண் சுண்ண மாடிய திதுகாண்
மாதர் நினகண் போதெனச் சேர்ந்து
உo தாதுண் வண்டின மீதுகடி செங்கையி
ளெருசிறை விரிய வலர்ந்த தாமரைச
செங்கயல பாயந்து பிறழ்வன கண்டாங்
கெறிந்தது பெருஅ திையிழந்து வருந்தி
மறிந்து நீங்கு மணிச்சிரல் காணெனப்
உடு பொழிலும் பொய்கையுஞ் சுதமதி காட்ட
மணிமே கலையம மலாவனங் காண்புழி
மதிமருள வெண்குடை மன்னவன்

போன்று" என்ற அடிகளில் வந்திருக்கி - ம் காதை, எடு - எசு.

கக. ஆலும் - ஆடிம ; ஆவாரிந்தழை கருமெனறுமாம் ; "மாலவனாைச் சிலம் பின் மலிழ்சிறந் சாலுமு, பீலி மஞ்ஞை யின்" எனபது பெருப்பாணர்றுப்படை, கூகo - கூகக. 'கனைகினறூடும்' எனறும் பாடம்.

கஉ. கம்புள் - சம்பங்கோழி. சேவ வினது குரல முழவொலியாக.

கங. கொம்பர் - கொமபரில. விளிப் பது - பாதெல ; "விளியாதான் கூத தாட்டுக் காண்டலும்" எனபுழி லிளித தல இப்பொருள்பட்டு வருதல காண்க.

கச. எழுகின்ற துகள.

கஎ. கோடு - கினை, 'கொமிடலவீழ் ந்த' என்றும் பாடம்.

கஅ. வால்வெண்சுண்ணம் - தூய வெ ள்ளிய சுண்ணம் ; "ஊர்தி வால்வெள் ' என்பது புறநானூறு, க. இத்தாமாைமலரினை.

கச - கஅ. துகள் சேர்ந்து ஒளிமழு ங்கிய நினமுகம்போற் சுண்ணமாடிய தாகிய இத்தாமாைமலரினைக் காண்பா யாக.

உக. 'அஞ்சிறை யிரிய' என்றும் பா டம்.

உங. அது - ஆதியொருமை. இளை முன்புகௌவியிருந்த உணவு.

உக - உங. அஞ்சிறைவிரிய எறிந் தென இயைக.

உச. மணிச்சிரல் - நீலமணிபோன்ற செச்சிலிப்பறவை ; "புலவுக் கயலெறி ந்த பொனவாய் மணிச்சிரல்" என்பது சிறுபாணாற்றுப்படை, கஅக.

ககூ - உச. நின்சணினைப் போதென் றெண்ணிச் 'சேர்ந்து உண்ணுகின்ற வண்டினங்களைக் கடியும் நின்செங்கை போலத் தாமாைமலரிற்பாய்ந்து பிறழ் வனவாகிய செங்கயல்களைக்கண்டு 'எறி ந்து 'அவற்றைப்பெறாமல் இளைப்பய மிழந்து வருந்தி மீண்டுநீங்கும் சிரலைக் காண்பாயாக.

உஎ. மருள் - உவமவுருபு ; "மதிமரு ள் வெண்குடை" என்பது புறநானூறு, கஎச. மன்னவன் - சோழன்.

னுகய குமர னுருகெழு மீதூர்
மீயா னடுங்க நடுவுநின் றேங்கிய
கூ0 கூம்புமுதன் முறிய வீங்குபிணி யவிழ்ந்து
கயிறுகால் பரிய வயிறுபாழ் பட்டாங்
கிதைசிதைந் தார்ப்பத் திரைபொரு மூன்றீ
ரியங்குதிசை யறியா தியாங்கனு மோடி
மயங்குகா லெடுத்த வங்கம் போலக்
கூரு காழோர் கையற மேலோ ரின்றிப
பாகின் பிளவையிற் பணைமுகந் துடைத்துக்
கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்கலக் குறுத்தாங்
கிருபாற் பெயரிய வுருகெழு மூதூ
சo றொருபாற் படாஅ தொருவழித் தங்காது
பாகும் பறையும் பருந்தின் பந்தரு

உஅ - உக. உருகெழு மீதூர் மீயான் - அச்சமபொருந்திய மேலிடதேவர்கள் வீற்றிருக்கின்ற மாலுமி; மீயான் - மேலிடத்துள்ளான்; 'மீதூர் மீயான' என்று வந்தமையின், மீயானென்பது இருதலைப் பெயர்மாத்திரையாய் நின்றது. மீயானெனபதற்குப் பொருள் மாலுமியென்பதை, "ஆழ்கடற் பௌவத் தருங்கல மியக்கு, மீயான் போல" என்பதனாலுணர்க; இது, பெருங்கதை, உஞ்சைக்காண்டம், மும்மலைநிலங்கடந்தது. 'உருகெழு மூதூர், நனிதா னடுங்க' என்றும் பாடம்.

கூ0. கூம்புமுதல் முறிய - பாய்மரம் அடியிலே முறியும்படி. 'முதன்முரிய' என்றும் பாடம்.

கூ0 - கூக. வீங்கு பிணி அவிழ்ந்து கயிறு காற்பரிய - இறுகின பிணிப்பவிழ்ந்து பரய்கட்டினகயிறு அறுபட.

கூக - கூஎ. வயிறு பாழ்பட்டு இதை தைசிதைத்து ஆர்ப்ப - நடுவிடம்பாழாகிப் பாய் பீறண்டு ஒலிப்ப.

கூஎ. கால் எடுத்த வங்கம் - கடுங்காற்றினால் அலைக்கப்பட்ட மரக்கலம்.

கூடு. காழோர் - சூத்துக்கோற்காரர்; "காழோர், கடுங்காலிறு வனைங் கைப்ப" என்பது மதுரைக்காஞ்சி, கூடுஅ - கூடுக.

பற - செயலற. மேலோரின்றி - பாகரின்றி; என்பது பாகரை வீரியென்றபடி.

கூசு. பாகின் பிளவையிற் பணைமுகம் துடைத்து - பாகனுயிரண்டாகிய பிளவையினையுடைய பரியமுகத்தைக் கையாற்றுடைத்து; பிளவை - அங்குசத்தாற் பிளக்கப்பட்ட புண.

கூஎ. கோவியன்வீதி - இராசப்பெருந்தெரு கொடிதேர்வீதி - கொடியணிந்த தேரோடும் வீதி.

கூஅ. பீடிகைத்தெரு - கடைத்தெரு. பெருங்கலக்குறுத்து - பெரிய கலக்கத்தையுண்டாக்கி.

கூஎ - கூஅ. இவ்வடிகள்போன்ற அடிகள், சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்தகாதையில் வந்திருத்தல் காண்க; (சo - சக.)

கூக. இவ்வடியே, பதிகத்தில், கூ - ம் அடியாக வந்துள்ளது.

சக. பருந்து - பாரன். பறை - பறையடிப்போர்; யானைக்குமுண்டு பறை அடிக்கப்படுதல் மரபு; இதனை, "நிறையழிகொல் யானை, நீர்க்கு விட்டாங்குப் பறையறைத் தல்லது போகற்க வென்னு, விறையே தவறடை யான்" என்பதனுணர்க; இது கலித்தொகை, குறிஞ்சி, உo.

மாதுல மாக்களு மலவுற்று விளிப்ப
நீல மால்வனை நிலனெடு படர்ந்தெனக்
கால வேகங் களிமயக் குற்றென
சடு விடுபரிக் குதிரையின் விளாக்துசென் றெய்திக்
கடுங்கண் யானையின் கடாத்திற மடகலி
யணித்தேர்த் தானையொ டரசிளங் குமரன்
மணித்தேர்க் கொடிஞ்சி கையாற் பறறிக
காரலர் கடம்பி னலல னென்ப
டுo தாரங் கண்ணியிற் சாற்றினன் வருவோ

சஉ. ஆதுல மாக்கள் - மிக்க வறுமை யையுடையோர்; 'வாதுவ மாகளும்' என்றும் பாடம். அலவுற்ற - சுழன்று; "நறையும் வியாயு மோச்சியு மலவுற்று" என்பது தருஞ்சிப்பாட்டு, எ. விளிப்ப - கூப்பிட.

சஊ. இலபொருளுவமை

சஎ. காலவேகமென்பது அவ்யானை யின்பெயர்; கட்டியங்காரனுடைய பட்டத்துயானையை அசனிவேகமென்றும், தடமித்தன் பட்டத்துயானையை வலாயசுந்தரமென்றும் சீவகசிந்தாமணியிற் கூறியிருத்தல்காண்க. களிமயக் குற்றென - மதமயக்குற்றுத் திரிந்ததாக; களி - மதத்திற்கு ஆருபெயர். 'கால மேகங் களிமயக் குற்றென' என்றும் பாடம்.

உக - சஅ. மீயான் நடுங்கக் கூம்பு முதல்முறியக் கயிறுகால்பரிய இதைஇ கைக்கார்ப்ப முந்நீரில் யாங்கணும் ஓடி மயங்குகின்ற வங்கம்போலக் காழோர் கையறப் பாகன்முதலியோர் அலவுறற விளிப்ப மூதூரில் மேலோரின்றித் துடைத்துப் பெருங்கலக்குறுத்து ஒருபாற் படாது ஒருவழித்தங்காது நீலமால்வ ரைபடர்ந்தெனக் காலவேகம் களிமயக் குற்றதாகவென முடிக்க.

வங்கம் யானைக்கும், காற்று மதத்திற்குமுவமை. வங்கம்போலக் காலவேகம் களிமயக்குற்றென வெனவியையும். இப்படியே, "வீங்குபிணி தோன்கயி றரீஇ யிதைபுடையூஉக், கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்த்துடன், கடுங் காற் றெறிப்பக் கல்பொரு துளைஇ, நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல, விருதலைப் பணில மார்ப்பச் னெஞ்சிறந்து, கோலோர்க் கொன்று மேலோர் வீசி, மென்பிணி வன்றொடர் பேணது காழ் சாய்த்துக், கந்துநீத் திழிதருங் கடாஅ யானையும்" என பதுமாக்காஞ்சியில் வந்திருதலை காண்க; ஈஎசு - சுஅசு.

சடு. பரிக்குதிரை, பரி - செலவு; "பகைப்புலங் கவாஅத பாய்பரிப் புரவி" என்பது மதுரைக்காஞ்சி, சுஅக

சசு. கடுங்கண - தறுகண்மை; அது கடுகுகொலலுதல்; "நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத், திரவுசினந் தணிந்து" என்பது பகைபடுகடாம், ஈஎடு - ஈஎசு. கடாததிறம் - மதத்தின்கூறுபாடுகள்.

சஅ. கொடிஞ்சி - 'தாமரைப்பூவடிவ மாகப்பண்ணிததேர்த்தட்டின்முனனே நடுவது' என்பர் நச்சினர்க்கினியர்; "கொடிஞ்சி நெடுந்தேர்க கடும் வீசி" என்பது மதுரைக்காஞ்சி. "நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோனை" என்பது புறநானூறு, எஎ.

சக. காரலர் கடம்பன் அல்ல னென்பதை - கார்காலத்து அலர்கின்ற கடம்பின் அலராதொருக்கப்பட்ட மாலையையுடைய முருகக்கடவுளல்லனென்பதை; "கார்நறுங் கடம்பின்" (புறநானூறு, உசு) என்பதனாற் கடம்பு கார்காலத்திற்கு உரியதெனபதும், "பராஅரை மராஅத், தருள்பூந் தண்டார் புரளு மார்பினன்" (திருமுருகாற்றுப்படை, சo - சக) என்பதனால் முருகக்கடவுள் கடப்பமாலையையுடையரென்பதும் அறியப்படும்.

டுo. ஆரங்கண்ணி-ஆத்திமாலை; இது சோழர்களுக்குரிய அடையாளமாலை; "ஆரங் கண்ணிச் சோழன்" என்பது சிலப்பதிகாரப்பதிகம், கஉ.

ஞடக மடந்தையர் நலங்கெழு
யாடகச செய்வினை மாடத் தாங்கட்
சாளரம பொளித்த கால்போகு பெருவழி
வீதிமருங் கியன்ற பூவணைப பள்ளித்
தகரக் குழலா டன்னெடி மயங்கி
மகர யாழின் வான்கோடு தழீஇ
வட்டிகைச செயதியின் வனைந்த பாவையி
னெட்டி குமர னிருந்தோன் றன்னை
மாதா தன்னெடி மயங்கினை யிருந்தோ
சுo யாதுநீ யுற்ற

சகூ - இo. அழகாலும் ஆண்மையாலும் உதயகுமரனை முருகக்கடவுளென்றெண்ணிக் கடப்பமாலையின்மையாலும் ஆத்திமாலையுண்மையானும் அவனைச் சோழன்மகனென்று கண்டோர் துணிந்தமையின், இவ்வாறு கூறப்பட்டது.

உஎ - இo. மன்னவன்மகிறவன், உதயகுமரன், அரசிளங்குமரன் சென்றெய்தி அடக்கிப் பற்றி அலலனென்பதைச் சாற்றித்தானேயொடு வருவோனென்க.

ஒக. நாடகமடந்தையர் - நாடகக்கணிகையர்; இவரைப் பதிலாரெனபர், அடியார்க்குநல்லார். வீதி - வீதியில்.

ஙஉ. ஆடகம் - நாலவகைப் பொன்னுள் ஒன்று. செய்வினை - செய்தொழில். மாடத்தாங்கண் - மாடத்திடத்தே.

ஙங. கால்போகுபெருவழி - காற்றுச் செல்லும் பெரியவழி; கால்போகு பெருவழியாகிய பொளித்தசாளரம். 'சாளரமொழித்த' என்றும் பாடம்.

ஙச. வீதி மருங்கு இயன்ற - வீதியிடத்தே இயற்றிய. பூவணைப்பள்ளி - மலரணையாகிய சேக்கையில்.

ஙதி. தகரம் - மயிர்ச்சாந்து. தகரக குழலாளென்றது, ஒரு கணிகையை; 'தாதவிழ் குழலாள்' என்றும் பாடம்.

ஙஞ. மகரயாழ் - நால்வகையாழுள் ஒன்று; அது பதினேழு நரம்புடையது. கோடு யாழ்த்தண்டு; "அங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்து வீங்கு திவவு" என்பது சிலபாணர்ற்றுப்படை, உஉஉ; "கருங்கோட்டுச் சிறியாழ்" என்பது நெடுநல்வாடை, எo. தழீஉ - தழுவி 'மாதர் வீணையின்வான்கோடு' எனறும் பாடம்.

ஙஎ வட்டிகை - எழுதுகோல்; "வட்டிகைக் செய்தியும்" என்னூர் மூன்னும், உ - ம் காதை, உஎ.

ஙஅ. எட்டி - வைசியர் பெறும் பட்டப்பெயர்; "எட்டிப் பூப்பெற் றிருமுப் பதிற்றியாண்டொட்டிய செலவத் துயர்ந்தோ ஞயினன்" என்பர் பின்னும்; உஉ - ம் காதை, ககூ. "எட்டி குமரனினிதினியக்கு, மின்னெலி வீணைப் பண்ணெலி வெரீஇ" என்பது பெருங்கதை, அவந்திகாண்டம், உவந்தவை காட்டல்; "எட்டி காவிதிப் பட்டந் தாங்கி" என்பது பெருங்கதை, அவந்திக காண்டம், கட்டிலேற்றியது. "எட்டி சாயல னிருந்தோன் றனறது" என்பது சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, ககூ. 'எட்டி காவிதி யென்பன தேய வழகாகிய சிறப்புப்பெயர்' என்பர் அடியார்க்நச்சினார்க்கினியர்; இதனைத தொல்காப்பியம், எழுததிகாரம, தொகைமரபு, கஉ - ம் சூத்திரவுரையிற் காண்க.

ஙக. மயங்கினை யிருந்தோய் - மயங்கியிருந்தாய்.

சுo. இடுக்கண் - துன்பம்.

இo - சுo. அங்ஙனம் வருவோன் வீதியில் மாடத்துப் பள்ளியிற் குழலாடனனெமெயங்கித் தழீஇப் பாவையினிருந்தோன்றன்னை, இருந்தோய், நீயுற்ற இடுக்கணயாதென்றலுமென்க.

எட்டிகுமரன் வீதிமருங்கியன்ற சாளரச்சேக்கையிலிருந்தமையின, உதயகுமரன் அவனைக்கண்டான்.

மாங்கது கேட்டு வீங்கிள முலையொடு
பாங்கிற் சென்று தான்றொழு தேத்தி
மட்டவி முலங்கன் மன்ன குமரற்
கெட்டி குமர னெய்திய துரைப்போன்
சுடு வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போற்
றகைநலம வாடி மலாவனம புகூஉ
மாதவி பயந்த மணிமே கலையொடு
கோவல னுற்ற கொடுந்துயர் தோன்ற
நெஞ்சிறை கொண்ட நீர்மையை நீக்கி
எ0 வெம்பகை நரமபி னென்கைச் செலுதகிய
திதுயா னுற்ற விடும்பை யென்றலு
மதுமலர்த தாரோன் மனமகிழ் வெய்தி
யாங்கவ டன்னியென் னணித்தே சேற்றி
யீங்கியான் வருவே னென்றவற் குரைத்தாங்
எடு கோடுமழை கிழியு மதியம் போல

சுஉ. பாகு - பகைம. தொழுது - ...

சுஙி. மட்டு - தேன்.

சுச. எய்தியது - நேர்ந்ததை.

சுo - சுச. என்றலும் அதுகேட்டு எட்டிகுமரன் கணிகையொடுஞ்சென்று தொழுது எதிர் மன்னகுமரறகு உரைப் போன்.

சுடு. செப்பினுள்வைகியமலர் புழுக் கத்தால் வாடும்.

சுசு. தகைநலம் - மிக்கவழகு.

சுஎ - சுஅ. பயந்த - பெற்ற. மணி மேகலையைக் கண்டவுடன எடடிகுமர னுக்குக் கோவலனடைந்ததுன்பம் நி னைவிற்கு வந்தமையின, 'மணிமே கலை யொடு, கோவல னுற்ற கொடுந்துயர் தோன்ற' என்றன்; இப்படியே "இள ங்கோன்கண்டவிளம்பொற் பூங்கொடி, .. . உருவி லாளனெ ருவம் பெ யர்ப்ப" என்பர் பின்னும்,டு - ம் காதை, க - சு.

சுகூ. நெஞ்சு இறைகொண்ட நீர்மை யை • மனம் தங்குதல்கொண்டதன்மை யை; "வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை" என்பது மதுரைக்காஞ்சி, உடுசு.

எo. பகைநரம்பு - நின்றநரம்பிற்கு ஆறுவதும் மூன்றுவதுமாகிய நரம்புகள்; "நின்ற நரம்பிற் காறுமூன்றுஞ், சென் றுபெற நிறபது கூட மாகும்" என்றார். கூடம - பகை.

சுச - எக. உரைப்போன் மலர்போல் நலமவாடி வனம்புகூஉம் மணிமேகலை யொடு கோவலனுற்ற துயர்தோன்ற அததுயரம் நீாமையைநீக்கி என் கை யைப் பகைநரம்பிற் செலுத்தியது; யா னுற்ற இடுமபை இதுவென் றலுமெ னக.

எஉ. தாரோன் - உதயகுமான். மூனி வருடைய உறைவிடத்தைநீங்கி மலர்வ னதத்திற்குச் சென்ற மணிமேகலையை இனி எளிதிற்பெறலாமெனறு மகிழ்ந் தான்.

எசு. அவள்தன்னை - மணிமேகலை யை.

எச. அவற்கு - எட்டிகுமரற்கு.

எடு. கிழியுமதியம - கிழிதற்குக் காரணமாகிய மதியம். மதியமபோல - சக் திரன்போல, கலைநிரம்பினமையின், உதயகுமாறனுக்கு மதி உவமையாயிற்று; "நான்வாய் நிறைந்தகலைவெண்மதி செல்வ தொத்தான்" என்பது சீவகசிந்தா மணி, கோவிந்தையாரிலம்பகம், சுச. மாடகஙகட்கு மழையையும், தேருக்கு மதியதையு முவமையாச்கினும் பொ ருந்தும்.

மாட வீதியின் மணித்தோ கடைஇக்
காரளி பூமபொழிற் கடைமுகங் குறுகவத்
தேரொலி மாதர் செவிமுத லிசைத்தலுஞ
சித்திரா பதியோ டுதய குமரனுற்
அ0 றென்மேல வைத்த வுள்ளத தானென
வயந்த மாலை மாதவிக கொருநாட்
கிளந்த மாறறங் கேட்டே னுதலி
னுங்கவன் றேரொலி போலு மாயிழை
யீங்கிதன் செவிமுத லிசைத்ததென் செய்கென
அடி வமுதுறு நீஞ்சொ லாயிழை யுரைத்தலுஞ்
சுதமதி கேட்டுத் துளக்குறு மயில்போற்
பளிக்கறை மண்டபம் பாவையைப் புகுகென்
றெளித்தறை தாழ்கோத் துள்ளகத் திரீஇ
யாங்கது தனக்கோ வாவியின் கிடகதை
கூ0 நீங்காது நின்ற நேரிழை தன்னைக்
கல்லென ரூனியொடு கடுந்தேர் நிறுத்திப்
பன்மலர்ப் பூமபொழிற் பகன்மூளத் ததுபோற்

எசு. கடைஇ - செலுத்தி; "காலி பக் கன்ன கதழ்பரி கடைஇ" என்பது மதுரைக்காஞ்சி, சசo.

எஎ. கடைமுகம்-வாயிலிடம். குறுக-அடைய.

எஅ. மாதர் - மணிமேகலை. செவி முதல் - செவியிடம்.

எக - எஅ. என்றலும் மகிழ்வெய்தி, அவனே என்தேரேற்றி இங்குவருவே ன்' என்று அவனுக்குரைத்த மதியம் போலத்தேராக கடைஇப் பொழிலின் கடைமுகங்குறுக, அத்தேரொலி செவி முதலிசைத்ததுவென்க

அஉ. கிளந்த - சொலலிய.

அங. ஆயிழை - விளி.

அச. என்செய்கு - யாதுசெய்வேன்.

அடி. அமுதுறு நீஞ்சொ லாயிழை - மணிமேகலை. 'அமுதூறு நீஞ்சொல்' என்றும் பாடம்.

எக - அடி. உதயகுமரன் என்மேல் வைத்த உள்ளத்தானென்று வயந்தமாலை தெரிவிக்கையோடுற்ற முன்னெருநாள் மாதவிக்குக் கிளந்தமாற்றத்தை நான் கேட்டேன்; ஆதலின், ஆயிழாய், என் செவிமுதலிசைத்த ஒலி, அவன் தேரொலிபோலும்; இதற்கு யான் யாதுசெய் வேனென்று மணிமேகலையுரைத்தலு மென்க.

அசு. துளக்குறுமயில் - தளர்ச்சியுற்ற மயில்.

அஎ. மண்டபத்தில். பாவையை - மணிமேகலையை. புகுக என்று.

அஅ. 'தாட்கோத்து' என்றும் பா டம். இரீஇ - இருக்கச்செய்து.

அக. ஐந்துவிற்கிடை நீளத்தே நிற் றல் மரபு; "ஐவிலி னகல நின்றுங் கடி தொழு திறைஞ்சினுற்கு" என்பது சீவ கசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், கசஅ. "இருந்த மன்னவற் கெழுகோ லெல்லையுட், பொருந்தல்செல் லாது புக் கவ ணிறைஞ்ச" என்று எழுகோலெல் லைகூறவர் பெருங்கதை நூலாசிரியர்; உஞ்சைக்காண்டம், உரிமைவிலாவணை.

அசு - கo. கேட்டு மண்டபத்திற்புகுக வென்று பாவையையொளித்துத் தாழ் கோத்து இருத்தி அது தனக்கு ஐந்தி விற்கிடக்கையில் மயில்போல் நின்ற நேரிழையாகிய சுதமதிதன்னை.

கூக. கடுந்தேர், கடுமை - விரைவு.

கூஉ. பகல் - சூரியன்.

பூமரச் சோலையும் புடையும பொங்கருங்
காமனைச் செங்கண் பரப்பினன் வரூஉ
மரசினங் குமர னருமி லொருசிறை
யொருதனி நின்ரு யுன்றிற மறிந்தேன்
வளரிள வனமுலை மடந்தை மெல்லிய
ணளரிடை யறியுந் தன்மையள் கொல்லோ
வினேயா மழலே விலோந்து மெல்லியன்
முனேயெயி றரும்பி முத்துநினைத் தனகொல
செஙகய னெடுங்கண் செவிமருவ கோடி
வெங்கணே நெடுவேள் வியப்புரைக் குங்கொன்
மாதவ ருறைவிட மொரீஇ இமணி மேகலே
தானே தமியளிங் கெய்திய துனையெனப்
பொதியறைப் பட்டோர் போன்றுளம வருநதி
மதுமலர்க் கூந்தற் சுதமதி யுரைக்கு
மிளமை நாணி முதுமை யெய்தி
யுரைமுடிவு காட்டிய வுரவோன் மருகற்

---

கூ. பொங்கர் - ஈண்டுக் கட்டுமலே; மரக்கிளேயென்றுமாம்.

கூ. பரப்பினன் - பரப்பி.

கூடு. ஒருசிறை - ஒருபக்கம்; 'வானவ ருறையும் பூநா றொருசிறை' என்பது சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, கடுஅ.

கூசு. திறம் - இயல்பு.

கூஎ. மெல்லியல - மணிமேகலே.

கூஅ. தளரிடை - ஆடவர் காமத்தாற் தளர்ந்த சமயத்தை; இடை - காலம; "உடையோர் போல விடையினது குறிஇ" என்பது புறநானூறு, டுசு. 'தளர்நடை யறியுந் தன்மையை கொல்லோ' என்றும் பாடம்.

கூக. "வினேயா மழலேயின் விரித்தூை யெழுதி" என்பது சிலப்பதிகாரம், வேனிற்காதை, சுஎ.

கஅ. "முனேவன ரினகையே முழுமதி புனாமுகமே" என்பது சிலப்பதிகாரம், கானல்வரி, கசு, "முனேயிள வெண்பன் முதுக்குறை நங்கை" என்பது சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, உஐ.

கஉ. வெங்கணே - விருப்பத்தைச் செய்யுமம்பு.

கஉ. மாதவர் - சங்கத்தார்; அறவணவடிகளென்றுமாம். ஈஇ - நீங்கி.

கஉ. தமியள் - தனித்தவளாய்.

கூ - கஉ. தானேயொடு தேனைப் புறத்தே நிறுத்திப் பொழிலில் பகன் முனேத்ததுபோல் வருங்குமரன், சுதமதியைகண்டு, ஒருசிறை தனிநின்றாய், உன்றிறமறிகின்றேன்; மணிமேகலே அறியுந்தன்மையள் கொல்லோ; அவள் முனேயெயிறு முத்துநினைத்தனகொல்; அவள் கண்கள வேல்வியப்புரைக்குங்கொல்; அவள் மாதவருறைவிடத்தையொரீஇத் தமியளாய் இவ்வு எய்தியதற்குக் காரண முனையென்று கேட்பவென்க.

கஉ. பொதியறைப்பட்டோர் - துவாரமிலலாத கீழறையில அகப்பட்டோர்; "போதார் பிறவிப் பொதியறை யோரென" என்பது சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, ககக. 'போன்றமெய்வருந்தி' என்றும் பாடம்.

கஎ - கஅ. இளமைநாணி முதுமை யெய்தி உரைமுடிவுகாட்டியவுரவோன் - இளமைப்பருவத்தைநாணி முதுமைப் பருவத்தையடைந்து, தம்முட் பகைமை கொண்டுவந்தா ரிருவருடைய சொல்லே ஆராய்ந்து அவற்றின்முடிவை அவர்களுக்கு விளக்கிய அறிவுடையோனுமிய கரிகாற்பெருவளத்தா னென்னுல்

கறிவுஞ் சால்பு மரசியல் வழக்குஞ்
கஉ0 செறிவனீ மகளிர் செப்பது முண்டோ
வனைய தாயினும் யாஞென்று கிளப்பல்
வினைவிளங்கு நடக்கை விறலோய் கேட்டி
வினையின் வந்தது வினைக்குவினீ வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
கஎடு மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம
புற்றடங் காவிற் செற்றச சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவலா வள்ளந் தன்பா லுடையது
கஉ0 மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து

சோழன். இவ்வரலாற்றை அடியில்வரும் பழமொழிவெண்பாவாலும், அதன் உரையாலுமுணர்க; உக —"உரைமுடிவு காணு னிளமையோ னென்ற, நரைமூது மக்க ளுவப்ப - நரைமுடித்துச், சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை, கல்லாமற் பாகம் படும்." என்பது - தம்மூள் மறுதலையாயினு நிருவர் தமக்கு முறைமைசெய்யவேண்டி வந்து சில சொன்னுல் அச் சொனமுடிவுகண்டே ஆராய்ந்து முறைசெய்ய அறிவுநிரம்பாத இளமைப்பருவத்தானென் றிகழ்ந்த நரைமூதுமக்களுவக்கும்வகை நரைமுடித்துவந்து முறைவேண்டிவந்த இருதிறத்தாரும் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறைசெய்தான் கரிகாற்பெருவளத்தானென்னுஞ் சோழன்; ஆதலால், தத்தம் குலதனக் குத்தக்கவிச்சைகள் கற்பதற்குமுன்னே செம்பாகமுளவா மென்றவாறு. இது பற்றியே, "முதியோ, ரவையபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்" என்று போருராற்றுப்படையிற் கூறியிருத்தல் காண்க; கஅ-கஅ. உரவோன்மருகற்கு - கரிகாற்பெருவளத்தான் வழித்தோன்றலாகிய உனக்கு; மருகன் - வழித்தோன்றல்; "உலகமாண்ட வுயர்ந்தோர் மருக" என்பது மதுரைக்காஞ்சி, உரு.

கo. சால்பு - அமைதி. அரசியலவழக்கு - அரசநீதி.

கo-கக. அதுகேட்டு உளம்வருந்தியுரைக்குஞ்சமதி மருகற்கு அறிவு முதலியவற்றை மகளிர்செப்புதலும் உளதாகுமோவென்றுளென்க.

இனப்பல - சொல்லுவேன்.

கக. வினை - போர். 'கேணி' என்னும் பாடம்.

இனி, மணிமேகலையை அவன் விரும்பாமலிருத்தற்கு உடம்பின் தூய்தனமையைச் சொல்லுவாள்:—

ககக. வினையின்வந்தது - கன்மத்தால் வந்தது. வினைக்குவினைவாயது - கன்மத்திற்கு வினைநிலமாகவுள்ளது.

ககச. புனைவன - சந்தனம் மலர்முதலியவைகள்.

ககடு. மூத்துவிளிவுடையது - முதுமையுற்றுச் சாதலையுடையது. தீப்பிணியிருக்கை - கொடியநோய்களுக்கு இருப்பிடமாகவுள்ளது.

ககள. அரவு அடங்கு புற்றினென இயைக்க. செற்றம - பகைமை நெடுங்கால நிகழ்வது. சேக்கை - தங்குமிடம்.

ககஅ. அவலம் - வருத்தத்தோனறி நிற்றல்; கவலை - யாதுசெய்வலெனறல்; கையாறு-மூர்ச்சித்தல்; அழுங்கல்-வாய்விட்டழுதல்; இஃது அரற்றெனப்படும். 'கையாற்றழுங்கல்' என்னும் பாடம்.

ககஅ - ககக. அவல முதலியவைகள் நீங்காததாகிய உள்ளத்தினைத் தன்னிடத்தே உடையது.

கஉo. யாக்கை இதுவென - யாக்கை னென்று.

என்றது, 'வினையின் வந்தது' என்றது முதலியவற்றை.

மிக்கோ யிதனைப் புறமறிப் பாரா
யென்றவ ளுரைத்த விசைபடு தீஞ்சொல்
சென்றவ ளுள்ளஞ் சோ முன்னர்ப்
பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவையி
னிளங்கொடி தோன்றுமா விளங்கோ முன்னென.

பளிக்கறைபுக்ககாதை முற்றிற்று.

கஉக. இதனை - இவ்வுடம்பை. புறமறிப்பாராய் - புறமறியாகப் பார்ப்பாயாக; பார்ப்பின், இதன் தூய்தன்மை விளங்கு மென்றபடி; "மற்றதனைப் பைம்மறியாப் பார்க்கப் படும்" என்பது நாலடியார், தூய்தன்மை, உ. 'பைம்மறியா கோக்கப் பருந்தார்க்குந் சகைமைசது' என்பது, இறையனாரகப்பொருளின் முதற் சூதகிர உரையிற் காணப்பட்டது.

கஉஉ. அவள் - சுதமதி.

கஉச. "பளிங்குபுறத தெறிந்த பவளப் பாவை" என்பா பின்னும்; கஅ - ம் காதை, எஅ; "பளிக்கறைப் பவளப் பாவை பரிசெனத் திகழுஞ சாயல்" என பிறு சீவகசிந்தாமண், நாமகளிலம் பகம், கசுரு.

கஉடி. தோன்றும் - தோன்றுகின்றாள்.

கஉஉ - கஉடி. என்று அவள் உரைத்தசொல் அவனுள்ளம் சென்று சேரா முன்னர், இளங்கொடி பாவைபோல இளங்கோமுன் தோன்றுமென்க.

க-கஉடி. காண்பனகாண் காளுய் காண் காண் காணெனச் சுதமதிகாட்ட மணி மேகலை வணங்காண்புழி, மன்னவன்சென் றுவன் உதயகுமரன் அரசிளங்குமரன் வருவோன், இருந்தோன் றன்னை, இருந் தோய், யாதென்றலும், உரைப்போன், என்றலும், மகிழ்வெய்தி உரைத்துக் கடைஇக் குறுகத தேரொலி இசைததலும என்செய்கெனவுரைததலும் கேட்டு இதீஇ நின்ற நேரிழைதனை, நின்றாய், அறிந்தேன்; தன்மையள்கொல்லோ, நிரைத்தனகொல், உரைகருங்கொல, உரையென, சுதமதி, செப்பலுமுண் டோ; இளப்பினீ; கேட்டி என்று உரைத் தசொல் சேராமுன்னர் இளங்கொடி தோன்று மெனமுடிக்க.

ஐந்தாவது

# மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை.

[ஐந்தாவது மணிமேகலை உதயகுமரன்பால் உள்ளத்தாளென மணிமேகலைதனக்கு மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியபாட்டு]

இளங்கோன கண்ட விளைபொறு பூங்கொடி
விளங்கொளி மேனி விணைவர் வியப்பப்
பொருமுக பளிங்கி னெழினி வீழ்த்துத்
திருவின் செயயோ ளாடிய பாவையின்
விமைமல ரைங்கணை மின விலோதனத்
துருவி லாளனெ னுருவம பெயர்பப
வோவிய னுள்ளத் துளளியது வியப்போன்

க. இளங்கோன - உதயகுமரன். பொற்பூங்கொடி - காமவல்லிபோன்ற மணிமேகலை.

உ. விளங்கொளி மேனி விண்ணவர் - தேவர்; சு - ம் காதை, கூ - கo.

கூ. பொருமுகப் பளிங்கின் எழினி - பளிங்காகிய பொருமுகவெழினியை; எழினி - இரைச்சிலை; பொருமுகவெழினி - மூவகைத் திரைச்சீலைகளுள் ஒன்று; "ஓருமுக வெழினியும் பொருமுக வெழினியுங், கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்து" எனபது சிலப்பதிகாரம், அரங்கேற்றுகாதை, கoக - கக்o.

ரு. திருவின் செய்யோள் - இலக்குமி; இன் - சாரியை; "செம்மலர்த் திருவின் பாவாய்" என்புழிப்போல. இது சீவகசிந்தாமணி, காமகளிலம்பகம், உசுசு. பாவை - பதினேராடலுள் ஒன்று; அஃது, போர்செய்தற்குச் சமைந்த சோலத்தோடு அசுரர் மோகித்துவீழ்ப்படி கொல்லிப்பாவைவடிவாய்த் திருமகள் ஆடியது; இதனை, "செருவெங் கோல மவுணர் நீங்கச், திருவின் செய்யோ ளாடிய பாவையம்" எனபதனுணர்க; இது சிலப்பதிகாரம், கடலாடுகாதை, சுo - சுக; "பாவை திருமக ளாடிய நசைத்குறப், போவாம மொன்றுடனே யொன்று." பாவையின - பாவைபோல; பாவையாடிய திருமகன்போல வெனனும் பொருந்தும.

ரு. மலரைங்கணை - மலராகிய ஐந்து பாணம். விலோதனம் - கொடி.

சு. உருவிலாளன் - அங்கன். 'உருவிலாளனெ னுருவம பெயர்ப்ப' எனற ரேனும, இவனுருவத்தைக் காண்பதாக லாரு உடனே மன்மதபாதை உண்டாகின்றதென்பது கருததாகக்கொள்க. சு - ம் காதை, சுஎ - சுஅ.

க - சு. பூங்கொடி, பாவையின் உருவிலாளனெ னுருவம பெயர்ப்பவென்க.

எ. ஓவியன் - சித்திரமெழுதுவோன்; உள்ளியது - சித்திரம் எழுதுவதற்காக நினைந்ததை; மணிமேகலையுருவத்தைச் சித்திரமென்று கருதினனென்றவாறுமாம; இது, "சித்திரக கைவினை நினை

காவியங் கண்ணி யாருக தெளிர்த்து
தாமொளி மண்டபந் தன்கையிற் றடைஇச்
கo சூழ்வோன் சுதமதி தன்முக நோக்கிச்
சித்திரக் கைவினை திசைதொறுஞ் செறிந்தன
வெத்திறத் தாணின் னிளங்கொடி யுளையெனக்
குருகுபெயர்க் குன்றங் கொன்றோ னன்னகின்
முருகச செவ்வி முகந்துதன் கண்ணுற்
கடு பருகா ளாயிற் பைந்தொடி நங்கை
யூழ்தரு தவத்தள் சாப சரத்தி
காமற் கடந்த வாய்மைய ளென்றே
தூமலர்க கூறுதற் சுதமதி யுரைப்பச்
சிறையு முண்டோ செழுமபுனன் மிகுதழீஇ
உo நிறையு முண்டோ காமங் காழ்கொளிற

---

தொறுஞ் செறிந்தன, வெத்திறத்தாணின் னிளங்கொடி யுளையென" (கு - ம் காதை, கக - கஉ) எனவும், "மேலிய பளிங்கின் விருந்திற் பாவையிஃ, தோலியச் செய்திலென் றெழிவேன் முன்னர்" (கச - ம் காதை, சுசு - சுஎ) எனவும், "ஈங்கிம் மண்ணீட்டி யாரென வுணர்தென்" (கச - ம் காதை, கடுசு) எனவும் பின் வருவனவற்றால் தணியப் படும். வியப்போன் - ஆச்சரியமடைவோன்; இது பெயர்; இனி, 'ஓலியன்' என்பதற்கு உதயகுமரன் ஆச்சரியத்தால் ஒத்திரம்போன் றவளுய் நின்றென றும், 'அது' என்பதற்கு அவ்வடிவதை யென்றும் பொருள்கூறினும் பொருந்தும்.

அ. காவியங்கண்ணியாகுதல் - மணிமேகலையாதலே.

எ - அ. வியப்போன் தெளிந்தென்க.

க தாழ் ஒளி மண்டபம் - தங்கிய ஒளியையுடைய பளிக்குமண்டபத்தை

தடைஇ - தடவிப்பார்த்து; மண்டபத்துள்ளே செல்லக் ருதியவன் வாயில் காணுதற்கு முயலுகின்றன்.

கஉ. எத்திறத்தாள் - எவ்விடத்திலுள்ளாள். நின் இளங்கொடி எதிறத்தாள்.

கo - கஉ. சூழ்வோன் நோகஇ உளையென.

கூ. குருகுபெயர்க்குன்றம் - கிரவுஞ்சகிரி, கொன்றோன் - முருகக்கடவுள்; "குருகு பெயர்க்குன்றங் கொன்ற நெடுவேலோ" எனவும், "குருகு பெயர்க்குன்றங் கொன்றான் மடவன்" எனவும் வருதல்காண்க; இவை, சிலப்பதிகாரம், குன்றக்குரவை

கச. முருகச்செவ்வி - இளமைப்பருவத்தின அழகை.

கடி. ஆயின் - ஆராயுமிடத்து.

கச - கடி நங்கை நின் செவ்வியைப் பருகாளெனவியைக்க.

கசு. ஊழ் - முறை; பௌத்தர்களுக்கு ஊழ்வினைஉடனபாடாகலின், ஊழ்வினையால் தரப்பட்ட தவத்தையுடையளென்றுமாம். சாபசரதத்தி - சாபமாகிய அம்பையுடையாள்; சாபம் - சபித்தல்; வில்லையும் அம்பையு முடையாளென்றும் ஒருபொருள் தோனறிற்று. தவத்தினைாச் சாபசரரென்பர் வடநூலார். 'ஊழ்தரு தவததர் சாபச் சாதகி' எனவும் பாடம்.

கக. செழும்புனல் மிக்குழிச் சிறையு முண்டோ - வளம்பபுனல் மிக்கவிடத்து அச்சிறை தாங்கும் அரணுமுண்டோ; இல்லையென்றபடி; "தாமரைத் சிறையு மில்லை நீமிகின், மண்ணுயிர் நிழற்று நிழலு மில்லை" என்பது புறநானூறு, டுக

உo. காமம் காழ் கொளின் நிறையும் உண்டோ - காமம அடிப்படின் அதனை நிறுத்தும்தன்மையும் உளதாகுமோ;

செவ்விய ளாயினென் செவ்விய ளாகென
வவ்விய நெஞ்சமொ டகல்வோ ளுயிடை
யஞ்செஞ் சாயல ளாந்தா ணத்துளோர்
விஞ்சைய னிட்ட விளங்கிழை யென்றே
உரு கல்லென் பேரூர்ப் பல்லோ ருளாயினே
யாங்கவ ருறைவிட நீங்கி யாயிழை
யீங்கிவ டன்னே டெய்திய தூரெனை
வார்கழல் வேந்தே வாழ்கநின் கண்ணி
தீநெறிப படரா தெஞ்சினே யாகுமதி
கூ0 யீங்கிவ டன்னே டெய்திய காரணம்
வீங்குநீர் ஞால மாள்வோய் கேட்டருள்
யாப்புடை யுள்ளத் தெம்மனே யிழந்தோன்
பார்ப்பன முதுமகன் படிம வுண்டியன்
மழைவளந் தரூஉ மழலோம் பாளன்
கூரு பழவினைப் பயத்தாற் பிழைமண மெய்திய
வெற்கெடுத் திரங்கித் தற்றக வுடைமையிற்

காழ் - வைரம். நிறை - நிறுத்துந் தன்மை; "பிறிது மாரூப காமங் காழ் கொளினே" என்பது குறுந்தொகை.

உக. 'செவ்வியளாகென' என்றும் பாடம்.

உஉ. ஒளவியம் - பிறர்க்கு இவள் உரியளாதல் கூடுமோவென்பதால் உளதாகிய பொறாமை. ஆயிடை - அப்பொழுது. 'அகல்வோ ளுயிழை' எனவும் பாடம்.

உங. அஞ்செஞ்சாயலர் - மகளிர்; என்றது ஜைனலக்ஷ்மிவிஹாரிகளை. ஆந்தானம் - அவர்களிடம். 'அந்தாணத்திடை' எனவும், 'ஆந்தானத்திடை' எனவும் பாடம்.

உச. விஞ்சையன் - வித்தியாதரன்; என்றது மாருதவேகனை.

உடு. உளாயினே - உளையையுடையாய்.

உசு - உடு. இவர்களிடத்தில் சுதமதி மாருதவேகனுக்கு இடப்பட்டாளென்பதை, "என்மக ளிருந்த விடமென் றெண்ணித், தன்னுற றுன்பந் தாங்காது புகுந்து, சமணீர் காணுஞ் சரணென் றோனே" என்பதனாலுணர்க; டு - ம் காதை, டுo - டூஉ.

உள. உளையென - சொலலென்று உதயகுமரன் சொலல.

உஅ. "வாழ்கநங் கணணி மாதோ" என்பது சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், உ.

உக. படரா - செல்லாத. நெஞ்சினே யாகுமதி - நெஞ்சையுடையாயாக ஆகக் கடவாய்; மதி - முன்னிலையசை.

கூo - கூசு. காரணம் கேட்டருள்.

கூஉ. யாப்பு - உறுதி. எம்மனே - எம அன்னே; "எம்மனே காணுய்" (சு - ம காதை, கஉக) என்பர் பினனும்; "எம மனே தமியை யாகி யிவ்விட ருற்ற தெல்லாம்" என்பது சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், உஅசு.

கூரு. படிமவுண்டி - நோற்றுப்பட்டினி விட்டுண்ணும் உணவு; "படிம வுண்டிப் பார்ப்பன மகனே" என்று வருதல் காண்க.

கூடு. மாருதவேகனுக்குத் தான் சில நாள் உரியளானதுபற்றி, 'பிழைமண மெய்திய' என்றாள்; "ஒத லந்தணர்க கொவ்வே ளுயினும்" என்று பின் வருதல் காணக; டு -ம் காதை, சசு.

கூசு. எற்கெடுத்து இரங்கி - என்னைக் காணப்பெறுது இரங்கி; "அரசுகெடுத்

குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறைப்
பரந்துசென் மாக்களொடு தேடினன் பெயர்வோன்
கடன்மண்டு பெருந்துறைக் காவிரி யாடிய
சுo வடமொழி யாளனொடு வருவோன் கண்டிங்
கியாங்கனம் வந்தனை யென்மக ளென்றே
தாங்காக் கண்ணீ ரென்றலை யுதிர்த்தாங்
கோத லந்தணர்க் கொவ்வே ஞயினுங்
காதல ஞதலிற் கைவிட லீயா
சுரு னிரந்தூண் டலைக்கொண் டிங்ஙகர் மருங்கிற்
பரந்துபடு மணிதொறுங் திரிவோ னெருநாட்
புனிற்றுப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினன்
கணவிரி மாலை கைக்கொண் டென்ன
நிணநீடு பெருங்குடர் கையகத் தேந்தி
நிo யென்மக ளிருந்த விடமென் றெண்ணித்
தன்னுறு துன்பந் தாங்காது புகுந்து
சமணீர் காணுஞ் சமணென் றேனை
யிவணீ ரலலவென் றென்னெடுமை வெகுண்டு
மையறு படிவத்து மாதவர்

---

தலமரு மல்லற் காலை" எனபது சிலப் பதிகாரம், அந்திமாலைசிறப்புச்செய் காதை, அ. தன் தக உடைமையின - தனனைத் தகுதிருக்குமபடி உடைமையி னலே.

நுஎ. 'குரங்குசெய் கடற்றுறை' எனவும், 'குரங்கிகு செய்கடற் குமரி' எனவும் பாடம். குமரி - கன்னியாகுமரி.

நுஅ - நுஅ. குற்றமுற்ற குலமகளிர் அக்குற்றத்தைப் போகுதற் பொருட்டெ குமரியாடச் செலலுதல் மரபாத லால், இவன் கன்னியாகுமரியாற்றிற் குச் செலபவர்களோடு சேர்ந்து சுதமதி யைத்தேடிச்சென்றனன்; "பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து, கொண் டோறம் பிழைத்த தண்டமஞ்சித், தென் றிசைக் குமரியாடிய வருவோள்" என்ற வருதல் காண்க; கசு - ம் காதை, கி - எ.

நுசு. கடன்மண்டு பெருந்துறைக்கா விரி - சங்கமுகத்துறை.

சo. வடமொழியாளர் - பார்ப்பார்; பார்ப்பனியை, "வடமொழி யாட்டி" என்று பினனர்க்கூறுவர், கசு - ம காதை, எசு.

சக. மகள் - விளிப்பெயர்.

சஉ. 'என்றலையுருத்து' எனவும் பாடம்.

சஎ. கைவிடலீயான் - கைவிடான்; "காவலன மகடனை கைவிட லீயான்" என்பர் பின்னும்; கக - ம் காதை, நுஉ. "காட்டிய தாதலிற் கைவிட லீயான்" என்பது சிலப்பதிகாரம், புறஞ்சேரியி றுத்தகாதை, அடி.

சஏ. புனிற்று - ஈன்ற அணிமையை யுடைய பசு. 'வயிற்றுறு புண்ணினன்' எனவும் பாடம்.

சஅ. கணவிரிமாலை - அலரிமாலை; சு - ம் காதை, கூசை. 'கணவீரமாலை' எனவும் பாடம்.

சக. 'கையகத்தடக்கி' எனவும் பாடம்.

ஙஉ. சமணீர்காள் - சமணர்களே.

ஙங. இவண் நீர் அலல என்று - இவ் விடத்திற்குரிய தன்மையன்றென்று.

ஙச. படிவம் - தவவேடம். மாதவர் - சைனமுனிவர்.

நிடி கையுதிர்க் கோடலிற் கண்ணிறை நீரே
மறவோ ருரீரோ வாருமி லோமெனப்
புறவோர் விதியிற் புலமபொடு சாற்ற
மங்குறூய் மாட மணிதொறும் புகூஉ
மங்கையிற் கொண்ட பாத்திர முடையோன்
சுஎ கதிர்சுடு மமயத்துப் பனிமதி முகத்தோன்
பொன்னிற் றிகழும் பொலமபூ வாடைய
னென்னுற் றனிரோ வென்றெமை நோக்கி
யன்புட னளீஇய வருண்மொழி யகனு
ளஞ்செவி நிறைத்து நெஞ்சகங் குளிர்ப்பித்துத்
கூடி தன்கைப பாத்திர மென்கைத் தந்தாங்
கெந்தைக் குற்ற விடுமபை நீங்க
வெடுத்தன னழீஇக் கடுப்பத் தலீயேற்றி
மாதவ ருறைவிடங் காட்டிய மறையோன்
சாதுயர் நீகிய தலிவன் றவமுனி
எஎ சங்க தருமன் றனெமக் கருளிய
வெங்கோ னியலகுண னேதமில் குணப்பொரு
ளுலக நோன்பிற் பலதகி யுணர்ந்து

நிடி. கையுதிர்க்கோடலின் - கையசைத்துப்போய் விடுவென்று குறிப்பித்தலால்; "காணமிலியெனக் கையுதிர்க் கோடலும்" என்பு பின்னும் வரும்; (கசு - மசாதை, எ0); இவ்வழக்கம் மலை நாட்டில் மிகுதியாகவுள்ளது. கணணி றை நீரேம - கண்களில் நிறைந்த நீரையுடையேமாய். 'கண்ணறைநீரென' எனவும் பாடம்.

நிசு. பாதுகாப்போர் யாளையுமில் லேம்.

நிஎ. புறவோர் - மற்றையோர்.

நிகூ. பாத்திரம் - பிச்சைப்பாத்திரம். இதனைக் கோரையென்பர்.

சுஎ. இல்லறத்தோர் எல்லோருமுண் டபின்பு, பௌத்த சன்யாசிகள் பகலில் உச்சிப்பொழுதிற் பிச்சைக்குச் செல்ல வேண்டுவது விதியாதலின், "கதிர்சுடு மமயத்து" என்றார். இப்படியே, "தரும சக்கர முருட்டினன் வருவோன், வெங் கதிரமயத்து வியன்பொழி லகவயின், வந்து தோன்றலும்" (எ0 - ம் காதை, உசு - உஅ) எனவும், "வெயில்லினங் கமயத்து வீளங்கித் தோன்றிய, சாது சக்கரன் றனனையா னூட்டிய" (சக - ம் காதை, எ0உ - எ0சு) எனவும் பினனர் வருதல் காணக.

சுக. மருதந்துவரில் சோய்க்சப்பட்டு மஞ்சள்நிறமுள்ளதாதலால், 'பொன்னிற் றிகழும் பொலம்பூ வாடை' எனப் பட்டது. இதனைச் சீவரமெனபர்.

சுசு. அளீஇய - கலந்த; "இன்சொலா லீரமுளீஇப் படிறிலவாஞ், செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" எனபது திருக்குறள், கூக.

சுரு. 'இடும்பைக ணீங்க' எனவும் பாடம்.

எ0. சங்கதருமன் - பெயர்; புத்ததர்ம சங்கமென்னு மூன்றனுள் சங்கத்திற் குரிய தருமத்தை அனுசரித்து நடப்பவனென்ற பொருள்.

எக. எங்கோன் - எம்மூடையசுவாமி; இயல் குணன் - இயல்பாகவே தோன்றின குணங்களையுடையோன்; "இறைவன் குரவனியல்குண னெங்கோன்" எனபது சிலப்பதிகாரம், நாடுகாண் காதை, கஅச.

எஉ. உலகநோன்பு - உலகலேம்; பல்

தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள
னின்பச் செவ்வி மன்பதை யெய்த
எடு வருளறம் பூண்ட வொருபெரும பூட்கையி

கதி உணர்ந்து - பலபிறப்புக்களிலும் பிறந்துபிறந்துஉணர்ந்து; கதி - பிறப்பு. 'புத்தன் கைவந்தமுத்திமையிட்டுக் கன் மவசத்தாலன்றிக் கருணையாற் பரிசுத்த ஞானத்துடன் பலவிலங்கிற் பிறந்தும் இறந்தும் பிணிப்பட்டும் மூத்தும் தர் மோபதேசம்பண்ணி ஒழியாமல் உலகுய் யகொண்டான்' எனறும், 'கணமவசத தாற் பிறந்தானெனில், விலங்காய்ப் பிற நது பேசுதலும், யானையாய் மருப்பீத லும், முயலாய் மாமலைமீதலும் பிறவும் கிகழா' என்றமை கூறுவா; இது, நீல கேசிவிருத்திசமயதிவாகாத்திற் கண் டது. புதத்ன் கருணையாற் பலவகைப் பிறப்பும் எடுத்தானென்பதைப் புத்த ஜாதகககதைகளிற் பரகககாணலாம்; "எறும்புகடை யயன்முதலா வெண்ணி றந்த வென்றுகாகைப், பிறந்திறந்த யோனிதொறும் பிரியாது சூழ்போகி, யெவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும யாதொ னறு லிடரெய்தி, னவ்வுடமபி லுயிர்க்கு யிரா யருள்பொழியுந் திருவுள்ளம்" எனவும், "மீனுரு வாகி மெயமமையிற் படிந தனை, மானுரு வாகியே வான்குண மிய றினை" எனவும்வருவன வீரசோழியம், யாப்புப்படலம, கக - ம் கலிதுறை யுதாரணங்கள. "வானுடும் பரியாய மரிண மாயும் வனகேழற் களிரூ யு மெணகாற் புண்மான, முளுயும் பணை யெருமை யொருதத லாயுத டகைகை யிளங களிறுயுஞ் சடங்க மாயு, மீளுய முயலாயு மன்ன மாயு மயிலாயும் பிறவா யும் வெல்லுஞ் சிங்க, மானுயுங கொலை களவு கட்பொய் காமம வகாந்தவர்தா முறைநதபதி மாணு வூரே" எனபது, நீலகேசிவிருத்திலமயதிவாகாத்திற் கண்டசெய்யுள்.

கக. தான்கீவித்திருததல தனக்கென் றறநினையாமல பிறர்க்கே உரிமைபூண் டொழுகுபவன். இதனை, "முன்னுன பெரு மைக்கணின் முன்முடி வெய்து காற, நன்றே நினைத்தான் குணமொழிந் தானற னக்கென், றென்றலு முள்ளான் பிறர்க்கே யுறுதி சூழ்ந்தா, னன்றே

றவன வன்னுள்சர ணங்க ளன்றே"

(இது வீரசோழியம், யாப்புப்படலம், கூ - ம் கலித்துறையுளையிலுள்ள உதார ணச்செய்யுள்) எனவும், "இருட்பார வினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென, வருட்பாரக் தனிசுமந்த வன்றமுத லன் ளளவு, மதுவொன்று மலரடிகளீழ் வந் தடைந்தோர் யாவர்கும, பொதுவன்றி நினைக்குரித்தோ புண்ணியநின் திரு மேனி", "தீதியல் புலியது பசிகெடு வகைகின திருவுரு வருளிய நிறமலி பெருமையை." (இவை வீரசோழியம், யாப்புப்படலம், கக - ம் கலிதுறை யுதாரணங்கள்) எனவும் வருவனவறறு லுணர்க. "பிறர்க்கற முயலும பெரி யோய் நின்னடி" (கக - ம காதை சுரு), "தன்னுயிர்க கிரங்கான் பிறவுயி ரோ ம்பு, மன்னுயிர் முதல்வன்" (உடு - ம் காதை, ககசு - ககள.) என்பர் பின்னும.

எச. இன்பச் செவ்வி மனபதை எய்த - நிருவாணமடைதற்குரிய பருவ தை உயிர்ப்பன்மைகள் அடையுமபடி; மன பதை - உயிர்ப்பன்மை; "மன்பதை காகுநின் புனமை" என்பது புறநா னூறு, உக.

எடு. அருளறம்பூண்ட ஒரு பெரும் பூட்கையின - காருணயதைப்பூண்ட ஒப்பற்ற பெரிய மேற்கோளினுலே; அருளறம், கல்லறம், காருண்யம, தயா தருமம் எனபன ஒருபொருட்சொற்கள்; இதனை "அஹிம்லா பரமோதர்மஃ" என பதிறகாண்க. சீதகோவிந்தத்தில் திரு மாலின் தசாவதாரதைத எடுதுச்சொல லிய "வேதா நுததரதே" எனனும் சுலோ கத்திற் பௌததாவதாரதினை பெருமை யைப்பற்றி, "காருண்ய மாதந்வதே" என்ற ஜீயதேவர் பாராட்டியிருக் கின்றனர.

எச - எடு. எய்தப் பூண்டவின்க. உயிர்ப்பன்மைகள் இன்பச் செவ்வியை அடையுமபடி புதத்ன அருளறம்பூண்ட மையை, "உயிரு ளெல்லா மூணர்வுபா ழாகிப், பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழுநத, வறந்தலை யுலகத் தறம் பாடு நிறகக், சுடர்வழக் கற்றுத் தடு மாறு காலையோ, நிளவன ஞாயிறு தோன்

னறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன் பாதந்
தகைபோ ராட்டுத லல்லதி யாவது
மிகைகா ணில்லேன் வேல்தே வாழ்கென
அ0 வஞ்சொ லாயிழை நின்றிற மறிந்தேன்
வஞ்சி நுண்ணிடை மணிமே கலைதனைச்
சித்திரா பதியாற் சேர்தலு முண்டென்
றப்பொழி லாங்கவ னயர்ந்து போயபின்
பளிக்கறை திறந்து பனிமதி முகத்துக்
அடி களிக்கயல் பிறழாக் காட்சிய ளாகிக்
கற்புத் தானில னற்றவ வுணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டியென்

---

றிய தென்ன, நீயோ தோன்றினை நின்னடி தொழுதேன்" (க0 - ம் காதை, எ - கஉ) எனவும், "மாதுய ரெவ்வ மக்னை நீக்கி, விலங்குந் தம்முள் வெரூஉம்பகை நீக்கி, யுடங்குயிர் வாழ்கவென் றுள்ளங் கரிந்துதத், தொன்று காலத்து நின்றற மூலாத்தி, னுன்றக மருங்கில்" (க0 - ம் காதை, கூஉ - சுசு) எனவும் இந்நூலுள்ளே பின்னர் வருவனவற்றுள்ளுங்காண்க.

எசு. அறக்கதிர் ஆழி திறப்பட உருட்டி - தருமசக்கிரத்தை உலகதலத்திற் பல வகையாக உருளச்செய்து; தருமத்தைச் சக்கிரமாகக் கூறியதற்கேற்ப 'உருட்டி' என்றார். 'திறப்பட' என்றதனால், பல வகையாக அவன் தருமோபதேசஞ்செய்தமை கூறியவாறுமிற்று. இதுபற்றியே புத்தனைத் தருமசக்கிரப் பிரவர்த்தனகாரியனென்பர்; "ஆதி முதல்வ னறவாழி யான்வோன்" என்பர் பின்னும்; க0 - ம் காதை, கூக. "அருளாழி நயந்தோய்நீ, யறவாழி பயந்தோய்நீ, மருளாழி துரந்தோய்நீ, மறையாழி புரந்தோய்நீ" என்பது வீரசோழியம், யாப்புப்படலம், கக - ம் கலித்துறையின் உதாரணத்தினுள்ளது.

எஎ. காமற்கடந்த - மாரனைவென்ற; மாரன் - தர்மவிரோதிகளான இச்சைனே மனத்தில் உண்டாக்கும் ஒரு தேவன்; மகாபோதிவிருட்சத்தின்மேலே தவமொழுக்கம்பூண்டு கோற்றிருக்கையில் இவனுற்செய்யப்பட்ட இடையூறனைத்தையும் வென்றுமேம்பட்டு விளங்கினமையால், புத்தனை 'காமற் கடந்த வாமன்' என்றார்; "மாரனை வெல்லும் வீர நின்னடி" (கக - ம் காதை, கூஉ) எனவும், "போதி மூலம் பொருந்தியிருந்து, மாரனை வென்று வீர னுமி' (கூ0 - ம் காதை, க0 - கஅ) எனவும் பின்னர் வருதல்காண்க. 'மாரன்' என்பதற்குப்பொருள் மன்மதனன்றென்பது பௌத்த ஸம்பிரதாயமாதலால், இந்நூலில், காமனென்று வருமிடமெல்லாம் மாரனென்று பொருள்கொள்க. வாமன் - புத்தன்; அழகுள்ளவனென்பதுபொருள். பாதம் - பாதத்தை.

எ0 - எஎ. அருளிய பாதம்.

எஅ. தகை பாராட்டுதல் என்பன - ஒரு சொன்னீரவாய்த் துதித்தலென்ற பொருளில்வந்தன. யாவதும் - சிறிதும். 'அல்லதையாவதும்' எனவும் பாடம்.

எக. மிகைகா - மிகைக்கின்ற கா; மிகைத்தல் - வேறபொருளுணர்ச்சொல்லுதல். "காமனை வென்றோ னுயிரற்றெட்டு, காம மல்லது கவிலா தென்னு" என்பது சிலப்பதிகாரம், காடுகாண் காதை, ககக - ககஎ.

அ0. நின்றிறம் - நின்வரலாறு.

அசு. அப்பொழிலில். அயர்ந்து - தன்னேமறந்து; விரும்பியென்றுமாம்.

அடி. களிக்கயல் - கண்கள்.

அக. 'கற்றவப்புணர்விலன்' எனவும் பாடம்.

அஎ. வருணக்காப்பு - வருணத்திற்கே

திகழ்ந்தன ஞெி நயந்தோ னென்ஞது
புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்ச
மிதுவோ வன்னுய் காமத் தியற்கை
யிதுவே யாயிற் கெடுகதன் றிறமென
மதுமலர்க் குழலாண் மணிமே கலைதான்
சுதமதி தன்னெடு நின்ற வெல்லையு
ளிந்திர கோடணை விழாவணி விரும்பி
வந்து காண்குறூஉ மணிமேக லாதெய்வம்
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகி
மணியறைப் பீடிகை வலங்கொண் டோங்கிப்
புலவன் றீர்த்தன் புண்ணியன் புராண
னுலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ
குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ
காமற் கடந்தோ யேம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
வாயிர வாரத் தாழியன் றிருந்தடி

---

ற்ற காவல்; வருணமாகிய காவலென்று மாம். பொருள் விலையாட்டி - விலைமாது.

அ. நயந்தோன் - விரும்பினேன்.

அக. 'புதுவோன் பின்னர்' எனவும் பாடம்.

கக. தன்னென்றது, காமத்தை. 'கெ கெலிதன் றிறமென' எனவும் பாடம்.

கூ. இந்திர கோடணைவிழா (=இந்திரவிழா) இந்திர கோடணையாகிய விழா; பலவகைப்பட்ட முழக்கங்களையுமுடைமையின், விழா, கோடணையெனப்பட்டது; கோடணை - முழக்கம்; அலங்காரமென்றுங் கூறுவர்; "இந்திர கோடணை பிற்நாள் காண, வந்தேன்" (எ - ம் காதை - கஎ - கஅ) எனவும், "இந்திர கோடணை விழவணி வருநாள்" (கஎ - ம் காதை, கூ) எனவும் பின்பு வருதல் காண்க.

கூஉ. கூம் காதை, கசு ஓர் பைந்தொடி பாகி - ஒரு பெண்வடிவுகொண்டு.

கூஎ. மணியறைப் பீடிகை - பளிக்கறையிலுள்ள பாதபீடத்தை.

கூக. 'உலவா நோன்பின்' எனவும் பாடம்.

க00. குற்றம் - காமவெகுளி மயக்கங்கள்; "யாமே லுணர்த்த பொருள்க ளெல்லாங், காம வெகுளி மயக்கங் காரணம்" (ரு0 - ம் காதை, உடுஉ - உடுங.) என்று பின்னர்க்கூறுவர்; "பூமகளே முதலாகப் புகுந்தமர ரெண்டிசையுந், தாமரா லடிமலரைத் தொழுதிறந்து வினவிய நாட், காமமூ கடுஞ்சினமுங் கழிப் பரிய மயக்கமுமாய்த், தீமைதால் கட்டினுக்குத் திறற்கருவி யாய்க்கிடந்து, நாமஞ்சார் நகர்களுக்கு நயப்பிலாநினிதுணர்த்தும், சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமா ருளரினையே" என்பது வீரசோழியம், யாப்புப்படலம், கக - ம் கலித்துறையின் உதாரணத்திலுள்ளது. 'குற்றங்கடிந்தோய்' எனவும் பாடம்.

கக. முற்றவுணர்ந்த முதல்வா - சர்வஜ்ஞா.

கஉ. வமமாயோய் - பாதுகாவலாகவுள்ளோய்; எமம் - இன்பமுமாம்.

கஙு. தீநெறியாகிய கடும்பகை; தீநெறி - குமார்க்கம். 'கடிந்தோ யென்கோ' என்றும் பாடம்.

கஙச. ஆயிரவாரத் தாழியன் - பாதத்தில் ஸஹஸ்ராரசக்கரரேகையையுடை

கஎடு நாவா யிரமிலே னேத்துவ தெவனென்
றெரிமணிப் பூங்கொடி யிருநில மருங்குவந்
தொருதனி திரிவதொத் தோதியி னெஞ்சுங்கி
நிலவரை யிறந்தோர் முடங்குநா நீட்டும்
புலவரை யிறந்த புகாரெனும் பூங்கொடி
கஉ0 பன்மலர் சிறந்த நன்னீ ரகழிப்
புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்படி
ஞாயி லிஞ்சி நகைமணி மேகலை
வாயின்மருங் கியன்ற வான்பிணைத் தோளி
தருநிலை வசிர மெனவிரு கோட்ட
கஉடு மெதிரெதி ரோங்கிய கதிரிள வனமுலை
யாபுனை வேந்தறகுப பேரள வியறறி
யுழி யெண்ணி நீடுகின் றுயர்ங்கிய
வொருபெருங் கோயிற திருமுக வாட்டி
குணதிசை மருங்கி ணுண்முதிர் மதியமுங்
கஉ0 குடதிசை மருங்கிற் சென்றுவீழ் கதிருமு
வெள்ளிவெண் டோட்டொடு பொறறே டாக
வெளளறு திருமுகம பொலியப் பெய்தலு

---

யவன்; 'ஆயிர நாமத் தாழியன்' எனவும் பாடம.

கஉடு. ஏததுவது எவன் - துதிப்பது ஏததன்மையது; என்னுவில் அடங்குவ தன்று என்றபடி. ககம் காதை, எக-எஉ.

கஉஎ. ஒதியின் - மெய்ஞ்ஞானத் துடன். 'ஒதியினெதி' எனவும் பாடம்.

கஉஅ. நிலவரை இறந்து - நிலவெல லையைக கடந்து. ஓர் - இடைச்சொல. நீட்டும் - நீட்டுகின்ருள்; சொல்லுகின் ருளென்றபடி. இனி, நிலவெலலையைக கடந்தோராகிய தேவர் தலேகுனிவதற் குக் காரணமாகிய தனது நாவை நீட்டு கின்ருளென்றுமாம்.

கஉக. புலவரையிறந்த - அறிவின் எல் லையைக் கடந்த; "புலவரை யிறந்தோய் போகுதல பொறேவன்" என்பது சிலப் பதிகாரம், நடுகற்காதை, கஎச. புகார்-காவிரிப்பூம்பட்டினம்.

கஉக. அரி - பருக்கைக்கல்.

கஉஉ. ஞாயில் - மதிலுறுப்புக்களில ஒன்று; அஃது, ஏப்புழைக்கு நடுவாய் எய்து மறையுஞ் சூட்டென்பர் அடியார நக்கினியர், குருவிசதலேயென்பா அடியார்க்குநல்லார். இஞ்சி - மதில.

ககசு. பணை - மூங்கில, இது தோரண கம்பமெனப்படும.

கஉ0 - ககசு. அகழியாகிய அடியினை யும், இஞ்சியாகிய மேகலையையும, பணை யாகிய தோளினையுமுடையாள்.

ககச. தருநிலை - கற்பகத்தரு நிற்கு கோயில; வச்சிர (நிலை) - வச்சிராயுத நிற்குங்கோயில்.

ககசு. ஆர்புனை வேந்தன் - சோழன்.

ககச - ககஅ. இருகோட்டமாகிய கொங்கைகளேயும், சோழன கோயி லாகிய திருமுகத்தையுமுடையாள்.

ககக. குணதிசை - கீழ்த்திசை.

கஉ0. தோடு - காதணிவிரேடம.

கஉஉ. வெள்ளறு - இகழ்சசியற்ற. பெய தலும் - அணிந்துகொள்ளவும.

ககக - கஉஉ. மதியமும் கதிரும் மு றையே வெள்ளித்தோடும் பொற்றோ டாகத் திருமுகத்திற்பெய்தலும்.

கஉக - கஉஉ. பூங்கொடி தோளி மு.

மன்னச் சேவ லயர்ந்துவிளை யாடிய
தன்னுறு பெடையைத் தாமரை யடக்கப்
கஉ நி பூமபொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்
டோங்கிருந் தெங்கி னுயர்மட லேற
யன்றிற் பேடை யரிக்குர லழைஇச்
சென்றுவீழ் பொழுது சேவற் கிசைப்பப்
பவளச் செங்காற் பறவைக ளானத்துக்
கஙo குவளை மேய்ந்த குடக்கட் சேதா
முலைபொழி நீமபா லெழுதுக ளளிப்பக்
கன்றுநினை குரல மன்றுவழிப் படர
வந்தி யந்தணர் செந்தீப் பேணப்
பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப
கஙஉ யாழோ மருதத் தின்னரம புளரக்
கோவலர் முலைலக குழன்மேற் கொள்ள
வமரக மருங்கிற் கணவனை யிழந்து
தமரகம புகூஉ மொருமகள் போலக்
கதிராற்றுப படுத்த முதிராத் துன்பமோ
கசo டந்தி யென்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனளான் மாநகர் மருங்கென.

மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை முற்றிற்று.

---

வாட்டி அவள், திருமுகம் பொலியப் பெய்தலும்=சூரியன அஸ்தமிக்கவும்.

கஉ. அயர்ந்து - மெய்ம்மறந்து; விரும்பியென்றுமாம்.

கஉ - கஉ. அன்னச்சேவல் பெடைகொண்டு தெங்கின் மடலேற.

கஉ. அரிகுரல் - மெலலிய குரலால, அழைஇ - அழைத்து.

கஉ - கஉ. பேடை, அழைஇப் பொழுதைச் சேவற்கு இசைப்ப.

கஉ. செங்காற் பறவை - அன்னப் புள். கானமென்றூர், மிருதிபற்றி.

கஙo. குடக்கண் (?) சேதா - செவ்விய பசு.

கஙஉ. குரல - குரலவாய்.

கஙo - கஙஉ. சேதா பால் துகளேயவிப்பக் குரலவாய்ப் படர.

கஙஙி. (?)

கஙங. முல்லை - முல்லைப்பண். "குழல்வளர் முல்லையிற கோவலர் தம்மொடு, மழலைத் தூமபி வாய்வைத் தூத" என்பது சிலப்பதிகாரம், அந்திமாலைச் சிறப்புச்செய்காதை, கஙி-கசு. 'முல்லை குழன்மேற் கொள்ள' எனவும் பாடம்.

கஙல. அமரகம - போர்க்களம்.

கஙஅ. தமரகம - தம்மவர்களிடம்.

கஙக. சூரியனைப்போக்கிய.

கசo. அந்திப்பொழுதாகிய மங்கை; பசலை மெய்யாட்டி யென்றார், கணவனைப் பிரிந்தாளென்பது புலப்பட.

கசக. இறுத்தனள் - தங்கினாள்.

கசo - கசக. பசலைமெய்யாட்டி மாநகர்மருங்கு வந்திறுத்தனளென்க.

க - கசங. இளம்பொற்பூங்கொடி உருவம் பெயர்ப்ப, சூழ்வோனை சுதமதி முகநோக்கி உரையென, உரைப்ப, அகலவோன் எய்தியது உரையென, கேட்டருள; சங்கதருமனருளிய வரமன் பாதத்தைப் பாராட்டுதலலது மிகைகாவில் லேனென, அவன்போயபின், மணிமேகலை சுதமதியொடு நின்ற வெலலையுள், மணிமேகலாதெய்வம், பைந்தொடியாகிப் பீடிகையை வலங்கொண்டு ஓங்கி ஒதுங்கி நாநீட்டும்; நீட்டப் புகாரெனும் பூங்கொடி பெய்தலும், பசலைமெய்யாட்டி முதிராத் துன்பமோடு நகர்மருங்கு வந்திறுத்தனளென்ற முடிக்க.

## ஆருவது

# சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை.

[ஆருவது மணிமேகலைதனக்கு
மணிமேகலாதெய்வம் சக்கரவாளக்கோட்டமுரைத்து
அவள் மணிபல்லவத்துக்கொண்டுபோனபாட்டு.]

அந்தி மாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலஞ்
சான்றோர் தங்க ணெய்திய குற்றந்
தோன்றுவழி விளங்குந் தோற்றம் போல
நு மாசறு விசும்பின் மறுநிறங் கிளர
வாசற விளங்கிய வந்நீர் தண்கதிர்
வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோற்
கள்ளவிழ் பூம்பொழி லிடையிடை சொரிய
வுருவு கொண்ட மின்னே போலத்
கo திருவி லிட்டுத் திகழ்தரு மேனிய

---

உ. மலர்கதிர் மண்டிலம் - சந்திரமண்டிலம்.

ங. சான்றோர்-உயர்ந்தகுடியிற்பிறக்த மேன்மக்கள். எய்திய - உண்டாகிய.

ச. தோன்றுவழி - தோன்றுமிடத்து. 'தோன்றுவழி விளக்கும்' என்றும் பாடம்.

ஞ. மாசு - குற்றம். விசும்பு - ஆகாயம். மற - களங்கம். நிறம் இளர - நிறம் விளங்கித்தோன்ற; நிறம் - மார்பிலென்றுமாம்.

ஈ - ஒ. சந்திரனிடத்துள்ள தாய்மையாலும், தான் அதற்குமாறாக இருத்தலாலும், களங்கம், சான்றோரிடத்துண்டாகிய குற்றம்போல விளங்கித் தோன்றியதென்பதாம்; இது, "குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம்விசும்பின், மதிக்கண் மறப்போ லுயர்ந்து," என்னும் கூடல - ம தீநந்தரனின் கருத்தை ஒருவாறு நினைவி, ஆண்டுள்ள பொருளையும் உவமத்தையும் முறையே உவமமாகவும் பொருளாகவும் பெற்றுவந்தமை காண்க. "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந், திங்களுஞ் சான்றோரு மொப்பர்" என்பது நாலடியார்.

சு. ஆசு - குற்றம். தண்கதிர் - நிலாவை.

எ. சந்திரனுக்கு வெள்ளிக்குடமும், நிலாவிற்குப் பாலும் உவமை. 'குடத் திற்பால்' என்றும பாடம்.

உ - அ. மண்டிலம் மறுநிறங்ளைப் பால்சொரிவதுபோல் தண்கதிரை இடையிடையே சொரியாநிற்க.

க. இல்பொருளுவமம். 'உருவுகண்ட' என்றும பாடம்.

கo. இந்திரவில்லைப்போல ஒளிவிட்டு அழகைத்தருகின்ற திருமேனியையுடையளாய்; "திருவி லிட்டுத் திகழ்தரு மேனியன்" என்பது சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, கடுக. இந்திரவில் இன்னவாறு தோன்றுமெனப் புலப்ப

ளாகி முதல்வ னறவாழி பான்வோன்
பாத பீடிகை பணிந்தன ளேத்திப்
பதியகத் துறையுமோர் பைந்தொடி பாகிச்
சுதமதி கல்லா டன்முக நோக்கி
கடி யீங்கு நின்றீ ரென்னுற் றீரென
வாங்கவ ளாங்கவன் கூறிய துரைத்தலு
மாசிளங் குமர னுயிழை தன்மேற்
றணியா நோக்கந் தவிர்ந்தில னெனி
யறத்தோர் வனமென் றகன்றன னுயினும்
உ0 புறத்தோர் வீதியிற் பொருந்துத லொழியான்
பெருந்தெரு வொழித்துப் பெருவனஞ் சூழ்ந்த
திருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி
மிக்க மாதவர் விரும்பின ருறையுஞ்
சக்கர வாளக் கோட்டம் புக்காற்
உரு கங்குல் கழியினுங் கடுநவை யெய்தா
தங்குநீர் போமென் றருந்தெய்வ முரைப்ப
வஞ்ச விஞ்சையன் மாருத வேகனு

---

டாமையினுல், அங்ஙனந்தோன்றுகின்ற தெய்வகட்கு அஃ ஏ உவமமாயிற்று; "மற்றவன் றேவ னுகி வானிடை யிலயிற் ரூன்றி" (குணமாலையாரிலம்பகம், கoக) எனச் சீவகசிந்தாமணியிலும், "வானிடை வில்லின் வரவறியா வாய்மை யாற், காணிலன் தோயாக் கடவுளே" (கட வுள்வாழ்த்து) எனநாலடியாரிலும் கூறி யிருத்தல்காண்க.

கக. கo - ம் காதை, சுக. அறவாழி யான்வோன் - புத்தன்.

கஉ. பாதபீடிகை - உவவனத்திற் பளிக்கறையிலுள்ள பாதபீடம. பணிந் தனளேத்தி - பணிந்தேத்தி.

கசு. டு - ம் காதை, சுசு.

கடி. நின்றீரென்றது, மணிமேகலை யையும் உளப்படுத்தி. என்னுற்றீர் - யாது தன்பமுற்றீர். எனை - என்ற மணிமே கலாதெய்வங்கேட்ப.

கo - கடி. மேனியள், எத்தி ஆகி நோ க்கி என்னுற்றீரெனவென்க.

கசு. அவள் - சுதமதி. அவன் - உதய குமரன். கூறியது - 'சித்திரா பதியாற் சேர்தலு முண்டி' என்றது; டு - ம் காதை, அஉ.

கஎ. ஆயிழைதன்மேல் - மணிமேகலை யிடத்தி.

கஅ. 'தவிர்லில னுகி' என்றும், 'தணிந் தில னுகி' என்றும் பாடம்.

கக. அறத்தோர் வனமென்று - மூனி வர்களுறைகின்ற வனமென்றுணர்ந்து.

உ0. புறத்தோர் வீதியில் - புறத்தி லுள்ளவர்களுடைய வீதியினிடத்தே.

கஅ - உ0. குமரன் தவிர்ந்திலனுகி அகன்றனனுயினும் வீதியிற் பொருந் துதலொழியானென்க.

ககு - உ0. டு - ம் காதை, சுசு - டுஎ.

உக. பெருந்தெருவென்றது, முன்பு கூறிய புறத்தோர்வீதியை.

உஉ. எ - ம் காதை, அசு. வெயில் - மதில். குடபாற் சிறுபுழை - மேற்றிசை யினிடத்தேயுள்ள சிறியவாயில்.

உசு - உச. கடி - ம் காதை, சுக, சுஉ; கஅ - ம் காதை, எடு - எசு; உஉ - ம் காதை, டு - சு.

உடு. கடுநவை - உதயகுமரனுற் பற் றப்படுகை.

உசு. அங்கு - சக்காவாளக்கோட்டத் திடத்தே.

கச - உசு. அவள் உரைத்தலும், அருள்

மஞ்செஞ் சாய னீயு மல்லது
நெடுநகர் மருங்கி னுள்ளோ செல்லாஞ்
சுடுகாட்டுக் கோட்ட மென்றல துரையார்
சக்கர வாளக் கோட்ட மஃதென
மிக்கோய் கூறிய வுரைப்பொரு ளறியே
னீங்கிதன் காரண மென்னை யோவென
வாங்கதன் காரண மறியக கூறுவன்
மாதவி மகளொடு வல்விரைவ் வரினு
நீகே ளென்றே நேரிழை கூறுமிங்
நாமப பேரூர் தன்னெடு தோன்றிய
விமபு புறங்கா டுங்கித னயல
தூரா நற்றே சோவியப படுத்துத்
தேவர் புருதரூஉஞ் செழுங்கொடி வாயிலு
நெல்லுங கருமபு நீருஞ சோலையு
நல்லவழி யெழுதிய நலநகிளர் வாயிலுட
வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத
துள்ளுரு வெழுதா வெளளிடை வாயிலு
மடித்த செவ்வாய்க் கடுத்த நோகிற்
றெடுத்த பாசத்துப் பிடித்த சூலத்து
நெடுநில மண்ணீடு நின்ற வாயிலு

---

தெய்வம், 'அரசிளங் குமரன் பொருந்துத லொழிபான்; ஆதலாற் போகிப் புக்காற் கடுநவை யெய்தாது; நீர் அங்குப்போம்' என்றனைப்பவென்க.

சுக. அஃது சக்கரவாளகோட்ட மென்று. 'கோட்டமிதென' என்றும் பாடம்.

சுசு. என்னையோவென - யாதென்று சுதமதிகேட்ப. 'என்கொ லோவென' என்றும் பாடம்.

சுச. கூறவல - கூறுவேன்.

சுஙி - சுசு. மாதவிமகளொடு நீ கேள். கோநிழை - மணிமேகலாதெய்வம்.

சுஅ. சமப்புறங்காடு-மயானம்; சுமம்-பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு; "கரிபுற விறகி னீம வொள்ளழல" என்பது, புறநானூறு, உசுக. இதன் - இந்த உவவனதினின். புறங்காடு இதன் அயலிடத்துள்ளது. 'சுமப்பெருங்காடு' என்றும் பாடம்.

சுக. ஊராநற்றேர் - விமானம். ஒவியப்படுத்து - தெரிரம்போல ஆகாயத்தே நிற்கும்படி செய்து. 'ஓலியகப் படுத்து' என்றும் பாடம.

சசு. வெள்ளிவெண்சுதை - மிகக வெண்மையையுடைய சுணணச்சாந்து. இழுகிய - பூசிய. 'எழுதிய மாடதது' எனறும பாடம்.

சசஎ. உரு - வடிவங்கள். வெளளிடை - வெளவானை இடம்.

சஙி. கடுத்தநோகு - கோவிதத்துப்பாதத்த பாவை.

சசு. தொடுத்த பாசம் - பிறரைக் கட்டிய கயிறு; க - காதை, உசு.

சஎ. நெடு நிலை மணணீடு - நீண்ட தோற்றததையுடைய பூதவடிவம்; எனறது மயானதைப் பாதுகாப்பதோ தெய்வவிசேட வடிவமென்பர். மணணீடென்பதற்குச் சுதையாற்செயயப்பட்ட பாவையென்று பொருள், "பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்தி" (சு - ம் காதை, உ0ம), "சுங்கிம மண்ணீட் டியாரென வுணர்கென்" (கஎ - ம்

நாற்பெரு வாயிலும் பாற்பட் டோங்கிய
காபபுடை யிஞசிக் கடிவழங் காரிடை
நூ0 யுலையா வுள்ளமோ டுயிர்க்கட னிறுத்தோர்
தலைதாங்கு நெடுமரந் தாழ்ந்துபுறஞ் சுற்றிப்
பீடிகை யோங்கிய பெரும்பலி முன்றிற்
காடமர் செலவி கழிபெருங் கோட்டமு
மருந்தவர்க் காயினு மரசர்க் காயினு
நூரு மொருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினு

---

காதை, கருசு) என இந்நூலுள்ளும், "கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாள ரும்" (இந்திரவிழவுரெடுத்தகாதை, சுo) எனச் சிலப்பதிகாரத்துள்ளும் வருதல் காண்க. மண் - ஈண்டுச்சுதை; "மண் மாண புனைபாவை யற்று" (சoஎ), "மண் ணே டியைந்த மரத்தினேயர்" (நுவசு) என்பன திருந்தூறள்.

சஅ. நாற்பெருவாயிலும் - செழுங் கொடிவாயிலும் நலங்கிளர்வாயிலும் வெளிடைவாயிலும் நின்றவாயிலுமா கிய நான்கு பெரியவாயிலும். பாற் பட்டு - பகுதிப்பட்டு.

சக. காப்பு - காவல். இஞ்சி - மதில். கடி வழங்கு ஆரிடை-பேயகள சஞ்சரிக் கின்ற அரிய இடம; என்றது மயான தை.

சஅ - சக. ஒங்கிய ஆரிடையென்க.

நு0. உலையாவுளமோடு - தளராத உள்ளதோடு, உயிர்க்கடனிறுத்தோர் - உயிராகிய கடனைகொடுதலோ, உயிர் கடனிறுத்தலைச சிலப்பதிகாரம், இந் திரவிழவுரெடுத்தகாதை, அள - அஅ - ம் அடிகளின உணரிற்காண்க. இவர் களை, சிமசானவாவினியது மந்திரஸாத கரான பைரவவேஷதாரிகளென்றும், காபாலிகமதத்தினரென்றும் கூறுவர்; இஃது அவிப்பலியெனப்படும்; "சிரநடித் நிந்தன வரிநத நிந்துகுவை செய்த பயிர வர்கள் செந்நிலம், பரிந்தெ நிந்துபொடி செய்ய மற்றவை பரிப்ப மற்றவர் சிரிப் பரே" என்பது தக்கயாகப்பரணி, காடு பாடியது.

நுக. தலைதாங்குநெடுமரம் - உயிர்க்கட னிறுத்தோருடைய தலைகள் தொங்கப் பெற்ற நீண்ட மரங்கள். பலிகொடுப் போர் கையை மரதத்தில் முடிந்துவிட் டத் தலையையரிந்து தூர்க்கைக்குப் பலி கொடுத்தல் மரபாதலால, இங்ஙனங்கூறி னர். "வீங்குதலை நெடுங்கழையின் மிசை தோறுந் திசைதோறும் விழித்து நின்று, தூங்குதலை சிரிப்பனகண் டுறங்குதலை மறந்திருகருஞ் சூடர்க்கட் சூர்ப்பேய்" என்பது கலிங்கத்துப்பரணி, கோயில் பாடியது, உக. இதுபோன்ற ஒழுக்கம், வடதூலில் தசகுமாரசரித்திரத்தில் உப ஹாரவர்மாவின் சைசவலிருதாந்தத தில் சொல்லப்பட்டுள்ளதென்பர். 'தலை தாங்குநெடுமரம்' என்றும் பாடம்.

நுஉ. பீடிகை - பீடம். பெரும்பலி பீடிகையோங்கிய முன்றிலென்க.

நுரு. காடமர்செல்வி - தூர்க்காதேவி; சண்டிகையென்றுங்கூறுவர்; கஅ - ம் காதை, ககநு. கோட்டம் - கோயில். "கோளி யாலமுங் கோழரா மரங்களுங் குழுமித, தூண் யார்தெழு சுடலையு முடலமுந் துவன்றி, மீளி யாக்கைய தாகியுண் பேய்க்கண மிகைசூழ், கூளி தாய்க்கென வாக்கிய கோட்டமொன் றுளதே" என்னும் நீலகேசிச் செய்யு ளாலும் மயானத்தில் தூர்க்கையாலயம் இருந்ததாகத தெரிகின்றது.

நு0 - நுரு. இறுத்தோருடைய தலை கள் தூங்குகின்ற மரங்கள் சுற்றப்பட் டுப் பலிபீடிகை ஓங்கிய முன்றிலையு டைய கோட்டம்.

நுரு. ஒருங்குடன்மாய்ந்த பெண்டிர் - கணவனுட னிறந்தமகளிர்.

நுச - நுடு. ஆயினும் - ஓர் எண்ணி டைச்சொல்; "பொதியி லாயினு மிமய மாயினும், . புகாரே யாயினும்" என்புழிப்போல; இது சிலப்பதிகாரம், மங்கலவாழ்த்துப்பாடல்.

நால்வே றுருவப் பால்வே றுகாட்டி
யிறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
சுடுமண் ணெங்கிய நெடுநிலைக் கோட்டமு
மருந்திறற் கடவுட் டிருந்துபலிக் கந்தமு
நிறைக்கற் றெற்றியு மிறைக்களச் சந்தியுந்
தண்டு மண்டையும் பிடித்துக் காவல
ருண்டுகண் படுககு முறையுட் குடிகையுந்
தூமக் கொடியுஞ் சுடர்த்தோ ணங்களு
மீமப் பந்தரு மியாங்கணும் பரந்து
சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னுடைப்போர் தாழியிற் கவிப்போ

---

இசு. நாலவேறுவருணம் - பிரஹ்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரவருணங்கள்.

இவ. இறந்தோர்மருங்கில் - இறந்தவருடம்பைப் புதைத்தவிடத்தே.

இஅ. குறியவும் நெடியவுமாகிய சிறிய மலைகளைக்கண்டாலொத்த; சிலப்பதிகாரம், நீர்ப்படைக்காதை, கடுசு.

இக. சுடுமண் - செங்கல். கோட்டம் - அறை; "ஈமப் புறங்சாட், டரசர்க் கமைந்தன வாயிரங் கோட்டம" என்பர் பின்னும்; சுடு காதை, சுசுஞ-சுசுஎ.

இஅ - இக. கண்டன்ன கோட்டம்.

சுஎ. அருந்திறல் கடவுள் திருந்து பலிக் கந்தம - பெறுதற்கரிய திறலையுடைய தெய்வங்களையுடைய, திருந்திய பலியிடுதற்குரிய தூணகள்; கந்தம் - ஸ்கந்தமெனனும் வடமொழிச்சிதைவு. இப்படியே, இது, "இலளொளிக் கந்தமும்" (உச - மகாதை, சுசுஈ) என இந்நூலுள்ளும், "கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப், பலிகண் மாறிய பாழ்படு பொதியில்" (இஉ) எனப் புறநானூற்றிலும் வருதல்காணக.

சுக. நிறைக்கற்றெற்றி - நிறுத்திய கல்லாலாகியநிண்ணை. மிறைக் களச் சந்தி - வினோத இடத்தினையுடைய பல வழிகளுங்கூடின சந்து; மிறை - வினவு. "மிறைக்கொளி யிருத்தி னானே" என்பது சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், உஎஅ. 'நிறைகற் றெற்றியும்' என்றும் பாடம்.

சுஉ. மண்டை - உண்ணுதற்குரிய ஒருவகை மண்கலம்; எற்கும்பாத்திரமென்றுங்கூறுவர்; "கலிழ்ச்ச மண்டை மலர்க்குநர் யாரென", "பாணர் மணடை நிறையப் பெய்ம்மார்", "எலாது கலிழ்ந்தவெ னிரவன் மண்டை" என்பன புறநானூற்றுச் செய்யுள்; கரு, கச, சுஅ. காவலர் - மயானங்காப்போர்.

சுசு. குடிகை - பர்ணசாலை; 'குடிகா' என்னும வடமொழிச்சிதைவென்பர், இஃது இக்காலதத்துக் குடிசையென வழங்குகினறது.

சுச. தூமகொடி - புகையொழுகு, "மீனசுடு புகையிற் புலவுநாறு நெடுங் கொடி" என்பது புறநானூறு, குஉ.

சுஎ - சுஞ. சுழிபெருங்கோட்டமும், நெடுநிலைகோட்டமும், பலிசகந்தமும், தெற்றியும், சந்தியும, குடிகையும, கொடியும், தோரணங்களும், பந்தரும் யாகசாலையும பரந்திலக.

சுசு. சுடுவோர்-பிணங்களைச்சுடுவோர், இடுவோர் - கொணர்ந்து அவற்றைச் சுமமா போகடுவோர். தொடுகுழி-சோண்டப்பட்டகுழி, கசு - ம் காதை, உஞ.

சுஎ. தாழ்வயின் அடைப்போர் - பன்னமாகிய இடங்களில் பிணங்களை அடைத்துவைப்போர்; தாழ்வயின் - தாழ்ந்த இடம். 'தாழ்வாயி னடைப்போர்' என்னும் பாடம். தாழியிற்கவிப்போர் - பிணங்களைத் தாழிகளுலே கவிப்போர்; இதனை, "தேவ ருலக மெய்தின ஞாலி, னன்னுளைக் கவிக்குங் கண்ணகன் குழி" (உஉஅ) எனவும், "கலிசெந் தாழிக

நிரவும பகலு மிளிவுடன் றரியாது
வருவோர் பெயர்வோர் மாறுச் சும்பையு
எ0 மெஞ்சியோர் மருங்கி னீமஞ சாறறி
நெஞசு நடுக்குறூஉ நெய்த லோசையுக்
துறவோ நிறந்த தொழுவிளிப் பூசலும்
பிறவோ நிறந்த வழுவிளிப் பூசலு
நீண்முக நரியின் றீவிளிக கூஉஞ்
எடு சாவோர்ப பயிருங் கூகையின் குரலும்
புலவுண் பொருந்திய குரலின் குரலு
மூண்டலே துற்றிய வாண்டலைக் குரலு
நன்னீர்ப் பணரி நளிகட லோதையி
னின்னு விசையொலி யென்றுநின் றறுது

குவிபுறத திருந்த'' (உசுஅ) எனவும், ''ஈமத் தாழி, யகலி தாக வணேமோ'' (உஇசு) எனவும், ''தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே'' (கூசச) எனவும் வரும் புறநானூற்றுப் பாடல்களாலுணர்க; இது, முதுமக்கட்டாழி யெனவும் வழங்கும்.

சுஅ. இளிவுடன் - அருவருப்புடன். 'இரவம பகலும பெயாவீ டினறி' என்றும் பாடம.

கூக. சுமை - ஒலி.

எ0. எஞ்சியோர் - சீவித்திருப்போர். 'எஞ்சினர் மருங்கின்' என்றும பாடம. ஈமஞ் சாற்றி - ஈமமுண்டெனபதைச் சொலலி.

எக. நெய்தலோசையும் - சாப்பறையின் ஓசையும்; ''ஒரி னெயிதல் கறங்க வோரி, லீர்ந்தண் முழவின் பாணி தும்ப'' என்பது புறநானூறு, ககச. ''பல்லவர்க் கிரங்கும் பாடிமிழ் நெய்தல, கலலென வொலிக்குங காடி'' என்பது புறப்பொருள்வெண்பாமாலை, காஞ்சிப்பொதுவியற்பால, சு.

எஉ. தொழுவிளிப்பூசல் - துதிமுழக்கம்; துறவோராதலால, தொழுவிளிப் பூசல கூறப்பட்டது.

எசு. பிறவோர் - இல்லறத்தோர்.

எச. 'தீவிளிகதரலும்' என்றும்பாடம்.

எடு. சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும் - இறப்போரை அழைக்கும் பேராந்தையின் ஒலியும்; பேராந்தை செத்தோரை அழைக்குமென்றது கூறுவர்; ''போழ்வாய்க் கூகை, சுட்டுக் குவி யெனச் செததோர்ப் பயிருங், கள்ளியம் பறந்தலே'' என்பது புறநானூறு, உசo.

எசு. குரால் - கோட்டான். 'புலவுண் பொருந்திய' என்றும் பாடம்.

எஎ. உணவாகத் தலைமூனையைக் கடித்துண்ட ஆண்டலைப்பறவைகளின் குரலும; ஆண்டலைப் பறவை-ஆண்மகனது தலைபோன்ற வடிவமுள்ள ஒருவகைப் பறவை; இதனை, ''நீண்டபலி பீடத்திலரிந்து வைதத நெடுங்குஞ்சித் தலையைத்த னினமென் றெண்ணி யாண்டலைப்பு ளருணேர்ந்து பார்க்கு மாலோ வணேதலுக்கி ரிமச்ச முறுத்து மாலோ'' என்பதனலுணர்க; இத்தாழிசை கலிங்கத்துப்பரணி, கோயில்பாடியது, கசு. ''அழுகுரற் கூகையோ டாண்டலை வளிப்பவும்'' என்பதுபட்டினப்பாலை,உடுஅ. ''ஆண்டலை பாட'' என்பது காவாக்காலமம்மையார் முத்தரிநப்பதிகம், க. ''ஈமத் தாமமு மெரிகளு மிருளொடு விளக்கர, வுமைக் கூகையு மோரியு முறழுமுழ் கதிக்கும், யாமத் தீண்டிவர் தாண்டலை மாண்பில வழைக்குங், தீமைக் கேயிட னுயதோர் செமமலை யுடைத்தே'' என்பது நீலகேசி. 'ஊன்றலை துற்றிய'என்றும் பாடம்.

எஅ. புணரி நளிகடல் - அலைகளையுடைய பெரிய கடல். ஓதையின் - ஓசை போல. 'நளிர்கடல்' என்றும் பாடம்.

எக. இளனு இசை ஒலி - துன்பத்தை இசைகின்ற ஒலிகள்.

அ0 தான்றியு மொடுவையு முழிஞ்சிலு மோங்கிக்
கான்றையுஞ் சூரையுங் கள்ளியு மடர்ந்து
காய்பசிக் கடும்பேய் கணங்கொண் டுண்டு
மாலமர் பெருஞ்சினை வாகை மன்றமும்
வெண்ணிணந் தடியொடு மாந்தி மகிழ்கிறந்து
அடு புள்ளிறை கூரும் வெள்ளின் மன்றமுஞ்
சுடலை நோன்பிக ளொடியா வுள்ளமொடு
மடைதீ யுறுக்கும் வன்னி மன்றமும
விரத யாக்கைய ருடைதலை தொகுத்தாங்
கிருந்தொடர்ப் படுக்கு மிரத்தி மன்றமும
கூ0 பிணந்தின் மாக்க ணிணம்படு குழிசியில்
விருந்தாட் டயரும் வெள்ளிடை மன்றமு
மழற்பெய் குழிசியும் பிழறபெய் மண்டையும
வெள்ளிற் பாடையு முள்ளீட் டறுவையும்

---

கூகூ - எக. மாரூச் சும்மையும், நெய்த லோசையும், தொழுவிளிப் பூசலும், அழு விளிப் பூசலும், கூவும், குரலும், குர லும், குரலும் ஆகிய இன்னிசைகள் அரு கிருக்கப்பெற்ற.

அக. 'கள்ளியும் படர்ந்து' என்றும் பாடம்.

அ0 - அக. தான்றி முதலிய மரவிசே டங்கள் நெருங்கப்பெற்று. 'கள்ளியும் படர்ந்து' என்றும் பாடம்.

அஉ. காய்பசி - மிக்கபசி; சு - ம் காதை, ககஎ; கக-ம் காதை, ஙஙூ. கணம்-கூட்டம்.

அசு. மால் - மேகம். சினை - கிளை. பலபேய்கள் கூட்டங்கொண்டிருத் தற்கு இடமானதுபற்றி, வாகையடி மனற மெனப்பட்டது. பின் வருவன வற்றையும், இப்படியே கொள்க. ஊரு க்கு ஐவாய் எல்லாருமிருக்கு மரதடி யை மன்றமென்பர், ஆசிரியர் நச்சினா ர்க்கினியர், திருமுருகாற்றுப்படை, உஉக.

அச. தடி - தசை. மாந்தி - உண்டு.

அடி. புள் - பேராந்தை, கோட்டான் கழுகு, பருந்து, காக்கை, ஆண்டலைப் புள் முதலியனவைகள். இறைகூரும் - தங்குதல் மிக்க. வெள்ளில் - விளா மரம்.

அக. சுடலை நோன்பிகள்-காபாலிகர்; "இறைவி கோட்டதது லீரிரு திங்கள தகவை, யுறையு ளாகவவ வுறையருக காட்டகத் துறைவான், பொறையு மாற றலும் பூமியு மேருவு மனையான், சிறை செய் சிந்தையா னந்தமில் பொருள் களைத் தெரிந்தான்" எனனும் நீலகேசிச் செய்யுளால 'முனிசந்திரன' என்ற ஒரு முனிவன் மயானதலிலிருந்து தவஞசெ ய்தானென்று தெரிகிறது. ஒடியாவுள் ளம் - தளராதவுள்ளம்.

அள. மடை - சோறு. வன்னி - வன் னிமரம்.

அஅ. உடைதலைகளைச் சேர்த்து.

அக. இருந்தொடர்ப்படுக்கும்-பெரிய மாலைகளாகச்செய்யும், இரதிமன்றம - இலக்தைமரஙிற்கும் மன்றம; "இரதி நீடிய வகன்றலை மன்றத்து" எனபது புறநானூறு, கூச.

கo. குழிசி - பானை.

கக. வெள்ளிடைமன்றம்-வெளியான இடத்தையுடைய மன்றம; "உள்ளுநர்ப் புனிக்கும் வெள்ளிடை மன்றமும்" என்பது சிலப்பதிகாரம், இந்திரவிழவு ரெடுத்தகாதை, ககஎ.

கூஉ. பிழல்(') 'பிறழ்பெய் மணடை யும்' என்றும் பாடம்.

கூக. வெள்ளிற் பாடை - இருபெய ரொட்டு. உள்ளீட் டறுவை - உள்ளே பண்டங்கள் இடுதலைப்பெற்ற உறி;

பரிந்த மாலையு முடைந்த கும்பமு
கூடு நெல்லும் பொரியுஞ் சில்பலி யரிசியும்
யாங்கணும் பரந்த வோங்கிரும் பறந்தலை
தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வ
ரீற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்
முதியோ ரென்ஞ னினையோ ரென்னுன்
க00 கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாயச சுடலை தின்னக் கண்டுங்
கழிபெருஞ செலவக கள்ளாட் டயர்ந்து
மிக்க நலலறம விரும்பாது வாழு
மகளிற சிறந்த மடவோ ருண்டோ
க0டு வாங்கது தன்னையோ ரருங்கடி நகரெனச்
சார்ங்கல னென்போன் றனிவழிச சென்றே
னென்புந் தடியு முதிரமு மியாக்கையென்
றன்புறு மாககட் கறியச் சாற்றி
வழுவொடு கிடந்த புழுவூன் பிண்டத்

---

"சுவன்மே லறுவையும்" என்பது சிலப் பதிகாரம், நாடுகாண்காதை, கூ. அறுவை - தோலையாதலால், உள்ளீட்டை யுடைய கிழியுமாம்.

கூ. பரிந்த மாலை - பாடையிற்கட்டி அறுதெதெறியப்பட்டமாலை; "வெள்ளின் மாலையம் விரிந்தவெண் டலைகளுங் கரிந்த, கொள்ளி மாலையுங் கொடிபடு கூளையு மகலும், பள்ளி மாறிய பாடையு மெலும்புமே பரந்து, கள்ளி யாரிடைக் கலந்ததோர் தோறறமுங் கடிதே" என்பது நீலகேசி.

கூடு. சில்பலி யரிசி - சிறுபலியாகிய அரிசி; "தூவெள் ளரிசி, சில்பலிச் செய்து" என்பது திருமுருகாற்றுப்படை, உசுசு - உசுச.

கூசு. பறந்தலை - பாழிடம்.

அசு - கூசு. வாகைமனறமும், வெள்ளின்மன்றமும், வன்னிமனறமும், இரதமிமன்றமும், வெள்ளிடை மன்றமும் ஆகிய இம்மன்றங்கள்யாங்கணும் அழற்பெய்குழிசி முதலியவைகள் பரந்த பறந்தலையெனக.

சுடு - கூசு. பரந்து அறுது பரந்த பறந்தலையென்க.

கூஅ. எ - ம் காதை, அக.

க00. கொடுந்தொழிலாளன் - காலன்.

சுக - க0க. ஆரிடை பறந்தலை சுடலை தின்னககண்டும.

க0உ. மிகப்பெரிய செல்வ மாகிய கள்ளையுண்டு வீணையாதிகளைச்செய்து.

க0ச மடவோர் - மூடர்

க0டு. அருகன்னை - அம்மயானத்தை. கடி - காவல்.

க0சு. தனிவழிச் சென்றேனு கிய சார்ங்கலன்.

க0அ. அன்புறு மாக்கட்கு - உடம்பினிடததே அன்புமிகுத்த மனிதர்கட்கு. மாக்களென்றார், ஐம்புலவுணர்ச்சியே யன்றி மனவுணர்ச்சியில்லாதவரென்று; "மாவு மாகளு மையறி வினவே" என்பது தோல்காப்பியம், மரபியல், கூஉ.

க0எ - க0அ. யாக்கை என்புமுதலியனவாமென்று மாக்கட்குச் சாற்றி.

க0கூ. வழு - தாதுவிசேடம்; வழுவொடு-வழுவுதலுடனென்றுமாம். பிண டமென்றது, உடம்பை.

க0அ - க0கூ. சாற்றிக் கிடந்தவென்க; இனி, சாற்றி வாய்கொண்டு உனக்கும் நரியோதையுமெனினுமமையும்.

கக0 தலைத்தக மூட்டிய வடிநரி வாய்க்கொண்
டுலப்பி லின்பமோ டுகேக்கு மோதையுங்
கலைப்புற வல்குல் கழுகுகுடைந் துண்டு
நிலைத்தலை நெடுவிளி யெடுக்கு மோதையுங்
கடகஞ் செறித்த கையைத் தீநா
ககடு யுடையக் கவ்வி யொடுங்கா வோதையுஞ்
சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை
காய்ந்தபசி யெருவை கவர்ந்து ணுைதையும
பண்புகொள் யாக்ையின் வெண்பலி யரங்கத்து
மண்கணை முழவ மாக வாங்கோர்
கஉ0 கருந்தலை வாங்கிக கையகத் தேந்தி
யிரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள
புயலோ குழலோ கயலோ கண்ணை
குமிழோ மூக்கோ விதழோ கஷிரோ
பல்லோ முத்தோ வென்ரு நிரங்காது
கஉடு கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பி னுடுங் கூத்துக்
கண்டனன் வெரீஇக கடுகவை யெய்தி

---

கக0. அலத்தகம் - செம்பஞ்சுக்கு ழம்பு.

கக க. உலப்பு இல் இன்பமோடு - கே டில்லாத இன்பத்தோடு.

கக கூ. 'நிலதலை' என்றம் பாடம்.

கக ச. தீநாய் - மயானத்திற்றிரியும் ஒருவகைநாய்.

கக எ. காய்ந்தபசி - மிக்க பசி; சு ம் காதை, அ2; கசும் காதை, கூரு. எருவை - தலைவெளுத்து உடல் சிவந்திருக்கும் பருந்து; கழுகுமாம்; "விசும்பா டெருவை பசந்திடி மடிப்ப" என்பது புறநா ஹாறு, சுச.

கக அ வெண்பலி யரங்கத்து - சாம் பற்குவையாகிய அரங்கத்திலே.

கக கூ. மண் கணை முழவமாக - மார்ச் சனையமைந்த நிரண்ட தண்ணுமையோ சையாக; தண்ணுமை - ஆடற்குரிய ஒரு வகைத் தோற்கருவி.

கக க - கக கூ. உகேக்கு மோதையும், எடுக்கு மோதையும், ஒடுங்கா வோதை யும், கவர்ந்துணுைதையும் ஆகிய இவை கள் முழவமாகவெண்க.

கஉ0. கருந்தலையென்றது, ஒரு பெண பிணத்தின் தலையை.

கஉக. பேய்மகள் - பெண்பேய்.

கஉகூ. குமிழ் - குமிழம்பூ. கவிர் - முள்ளுமுருக்கைப்பூ 'அதிரோகவிரோ' எனறும் பாடமம.

கஉச. என்ரு - என்று கருதாமல்.

கஉடு. கண் தொட்டு உண்டு - கண் ணேத் தோண்டி உண்டு. கவையடி பெ யர்த்தது - கவைத்த அடிகளேப்பெயர்த்து; "கருமறிக காதிற் கவையடிப் பேய்ம கள்' என்புகுறை பேய்மகளுக்குக் கவை யடியுண்டெனபது அறிந்து கொள்க. இரு சிறுபாணுற்றுப்படை, ககள. 'கவை யடிப்பெயர்த்து' எனவும் பாடம்.

கஉசு. தண்டாக் களிப்பு - தணியாத களிப்பு; "தண்டா வீகைத் தகைமாண குமி" எனபது, புறநாறு, சு.

கக க - கஉசு. உகேக்குமோதை முத லியன முழவமாக வெண்பலியரங்கத் தில் ஒரு பேய்மகள் கவையடி பெயர்த்தி ஆடுங் கூத்தைக் கண்ட.

கஉஎ. கண்டனன் - கண்டு. கடுகவை

விண்டோர் திசையின் விளித்தனன் பெயர்ந்தீங்
கெம்மனை காணு யீமச் சுடலையின்
கசுஂ வெம்முது பேய்க்கென் னுயிர்கொடுத் தேனெனைத்
தம்மனை தன்முன் வீழ்ந்துமெய் வைத்தலும்
பார்ப்பான் றன்னெடு கண்ணிழந் திருந்தவித்
தீத்தொழி லாட்டியென் சிறுவன் றன்னை
யாருமி றமியே னென்பது நோக்கா
கசுடு தாருயி ருண்ட தணங்கோ பேயோ
துறையு மன்றமுந் தொல்வலி மரனு
முறையுளுங் கோட்டமுங் காப்பாய் காவாய்
தகவிலை கொல்லோ சம்பா பதியென
மகன்மெய் யாக்கையை மார்புறத் தழீஇ
கசசு யீமப் புறங்காட் டெயிற்புற வாயிலிற்
கோதமை யென்பாள் கொடுந்துயர் சாற்றக்
கடிவழங்கு வாயிலிற் கடுந்துய ரெய்தி
யிடையிருள் யாமத் தெண்ணீயீங் கழைத்தனை
யென்னுற் றனையோ வெனக்குரை யென்றே
கசசு பொன்னிற் பொலிந்த நிறத்தா டோன்ற

---

யெய்தி - அப்பேயாற் பிடிக்கப்பட்டு; "கழல்கட் கூளிக ணெவைப் பட்டோர்" என்ப ஓ சிலப்பதிகாரம், இந்திரவிழவூ ரெடுத்தகாதை, கஉடு.

கஎசு - கஉஎ. செனரேனுகிய சார்ங் கலனென்போன் கண்டு.

கஉஅ. விண்டு - நீங்கி. விளித்தனன் பெயர்ந்து - கூப்பிட்டுக்கொண்டு பெயர்ந்து. 'விளிந்தனன்' என்றும் பாடம்.

கஉக. எம்மனை - என்தாயே.

கஉக. தம்மனை தன்முன் - தனது தாயின் முன்னே, மெய்வைத்தலும் - இறக்கவும். 'மெய்வைப்ப' என றும் பாடம்.

கஎசு - சஉக. சார்ங்கலனென்போன் வீழ்ந்து மெய்வைத்தலும.

கஉஉ. பார்ப்பானென்றது, சார்ங் கலன தந்தையை; 'பார்ப்பான் றன் னெடு கண்ணிழந் திருந்த' என்று இங் கே சொல்லுதலாலும், "கண்ணில் கண வனே" (சு - ம் காதை, கடுகு) என்று பின்பு வருதலாலும், சார்ங்கலனுடைய தந்தைதாயரிருவரும் கணவனேயிழந்தோ ரென்பது பெறப்பட்டது.

கஉங - கஉடு. சிறுவன்றன்னை ஆருயி ருண்டது.

கஉச. சு - ம் காதை, கசசு.

கஉடு. அணங்கோ பேயோ: கசஅ, கடுஎ. அணங்கு - காமநெறியான் உயிர் கொள்ளுந் தெய்வமகளென்பர், ஆசிரி யர் பரிமேலழகர், திருக்குறளி, கஅச.

கஉசு. தூறை - நீர்த்துறைகள். மன் றம் - ஊர்க்குநடுவாய் எல்லாருமிருக்கு மரத்திடி. தொலவலி மரன - பழைய வலி யையுடைய மரம். 'தொல்பதி மரனும்' என்றும் பாடம்.

கஉஎ. உறையுள் - தங்குமிடம். காவாய் - காவாமலிருந்தாய்.

கஉசு - கஉஎ. தீருழுகாம்புப்படை, உஉக - உஉசு.

சுஉஅ. தகவிலை கொல்லோ - தகவின் மையையுடையாயோ; தகவு நின்னிட மில்லையோவெனறுமாம.

கசஅ. கோதமை - அவள்பெயர், கொ டுந்துயர் - தனமகன் இறந்தானென்பது.

கசஉ. இருளையுடைய இடையாமம்.

கசடு. பொன்னிற் பொலிந்த நிறத் தான் - சூரியனைப்போல் விளங்கிய நிறத்

வாருமி லாட்டியென் னறியாப் பாலக
னீமப் புறங்காட் டெய்தினேன் றன்னை
யணங்கோ பேயோ வாருயி ருண்ட
தறங்குவான் போலக கிடந்தனன் காணென
கடுக வணங்கும் பேயு மாருயி ருண்ணு
பிணங்குநூன் மார்பன் பேதுகந் தாக
வூழ்வினை வந்திவ னுயிருண்டு கழிந்தது
மாபெருந் துன்பநீ யொழிவா யென்றலு
மென்னுயிர் கொண்டிவ னுயிர்தந் தருளிலென்
கடுந கண்ணில கணவனை யிவன்காத் தோம்பிடு
மிவனுயிர் தந்தென் னுயிர்வாங் கென்றலு
முதுமூ தாட்டி யிரங்கினண் மொழிவோ
கீய முண்டோ வாருயிர் போனுற்
செய்வினை மருங்கிற் சென்றுபிற பெய்தநீ
கசுக லாங்கது கொணர்ந்துநின் னூரிடர் நீகுத
லீங்கெனக காவதொன் றன்றுநீ யிரங்கல
கொலையற மாமெனுங் கொடுந்தொழின் மாகத
ளவலப் படிற்றுரை யாங்கது மடவா
யுலக மன்னவர்க் குயிர்கருயி ரீவோ
கசுந நிலரோ விந்த வீமப் புறங்காட்
டரசர்க் கமைந்தன வாயிரங் கோட்ட

---

னையுடைய சம்பாபதி; பொன் - சூரியன்; "இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து, விளங்கொளி மேனி விரி சடை யாட்டி" என்று இந்நூற்பதிகத்தின் முதலில வருதல்காண்க; க - உ.

கசஉ. சு - ம் காதை, கசஉ.

கஉக. என - என்று கோதமை சொல்ல.

கடுக. மார்பன் - சார்ங்கலன். பேது கந்தாக - அறியாமை காரணமாக.

கடுங. என்றலும் - என்று சம்பாபதி சொல்லலும்.

கடுஎ. கண்ணில் கணவனை: சு - ம் காதை, கசூ. ஒம்பிடும்-பாதுகாப்பான்.

கடுக. என்றலும் - என்று கோதமை சொல்லலும்.

கடுள. முதுமூதாட்டி - சம்பாபதி.

கடுக - கடுஅ. பிறப்பெய்துதலில ஐய முண்டோ? "செய்வினை வழித்தா யுயிர் செலு மென்பது, பொய்யில் காட்சி யோர் பொருளுரை யாதலின்" என்பது சிலப்பதிகாரம், நடுகற்காதை, கசுஎ - கசுஅ.

கசுஏ. அது - அவ்வுயிரை. ஆரிடர் - தீர்த்தற்கரிய துனபம்.

கசுக. எனக்கு ஆவதொன் றன்று - எனக்கு இயலுவதான ஒரு காரியமன்று.

கசுங. அவலப்படிற்றுரை-கேட்டதை தருகின்ற பொய்யுரை. அது அவலப் படிற்றுரையென்க. 'அலவலைப் படிற்றுரை' என்றும் பாடம்.

கசுடு. இலரோ-உளர். புறங்காட்டில.

கசுசு. ஆயிரம் கோட்டம் அமைந்தன; ஆயிரம் - அநேகம். "இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த, குறியவு நெடியவுங் குன்றகண் டன்ன, சுடுமண் ணேணிய நெடுங்கோட் டமும்" என்றார் முன்னும்; சு - ம் காதை, இவ - டுக.

நிரயக் கொடுமொழி நீயொழி யென்றலுங்
தேவர் தருவர் வரமென் றிருமுறை
நான்மறை யந்தணர் நன்னூ லுரைக்கு
கஎ0 மாபெருந் தெய்வ நீயரு ளாவிடின்
யானே காவே னென்னுயி ரீங்கென
வூழி முதல்வ னுயிர்தரி னல்ல
தாழித் தாழி யகவரைத் திரிவோர்
தாந்தரின் யானுந் தருகுவன் மடவா
கஎடு யீங்கெ னுற்றலுங் காண்பா யென்றே
நால்வகை மரபி னரூபப் பிரமரு
நானூல் வகையி னுரூபப் பிரமரு
மிருவகைச் சுடரு மிருமூ வகையிற்

---

கசுஎ. நிரயக் கொடுமொழி - நரகத்தைத்தரும் கொடிய வார்த்தை; என்றது, 'இவனுயிர் தந்தென் னுயிர்வாங்கு' (சு - ம் காதை, கஙிசு) என்றதை. என்றலும் - என்ற சம்பாபதி சொல்லலும்.

கசுசு. நூல் - வேதம்.

கஎ0. தெய்வமாகிய நீ.

கஎக. யான் என்னுயிரைத் துறப்பேன். எனை - என்று கோதமைசொல்ல. 'என்னுயிரென்றபின்' என்றும பாடம்.

கஎஉ. ஊழிமுதலவன் - மஹாபிரஹ்மா. ''தெய்வக் கருவுந் திசைமுகக் கருவுஞ், செம்மலர் முதியோன் செய்த வந்நாள்'' (உசு - உக) எனறு பதிகத்தில வருதல்காண்க; இகரத்தை அசைநிலையாக்கி ஊழ்வினையாகிய முதலவனெனக் கூறினும் பொருந்தும்.

கஎசு. சகரவாளமாகிய தாழியினுடைய உள்ளிடத்தே சஞ்சரிப்பவர்கள். 'அகவயிற்றிரிவோர்' என்றும் பாடம்.

கஎச. தரினெனவே தரலின்மை பெறப்பட்டது.

கஎசு - கஎச. இறந்துபோன உயிரை மீட்டுக்கொடுக்குமாற்றல் இந்தச் சக்கரவாளத்திலுள்ள தேவர்களுக்கு எங்ஙன மிலலையோ அங்ஙனமே எனக்குமில்லை யென்றபடி.

கஎடு. ஆற்றல்-சக்தி. என்று-என்று சம்பாபதிசொல்லி.

கஎசு. நால்வகை மரபின் அரூபப் பிரமரும் - உலகம் மூப்பத்தொன்றனுள் இருபத்தெட்டாவதாகிய 'ஆகாசாநந்தி யாயதனலோகம்' முதலிய நான்கு உலகங்களிலுமுள்ள அரூபப்பிரஹ்மசாதியாராகிய நாலவகையினருமு; இவர்களைத் தியானம் ஐந்தனுள் ஐந்தாவதில் தேறிய வர்களென்பர். 'அரூபப்பிடமரும்' என்றும் பாடம்.

கஎஎ. நாலநால்வகையின் ஈரூபப் பிரமரும் - மேற்கூறிய உலகங்களுள், பன்னிரண்டாவதாகிய 'பிரஹ்மகாயிகலோகம்' முதலாகிய உலகம் பதினறிலுமிருகிற ஈரூபப்பிரஹ்ம சாதியாராகிய பதினறுவகையினரும்; இவர்களில் கஉ, கசு, கசு-ம் உலகங்களிலுள்ளவர்களை 'ஸ்ரோதாபந்நி' என்னும் முதலாவது தியானதத்தில் தேறியவர்களென்றும், கஙி, கசு, கஎ - ம் உலகங்களிலுள்ளவர்களை 'ஸகிருதாகாமி' என்னும் இரண்டாவது தியானத்தில தேறியவர்களென்றும், கஅ, கசு, உ0 - ம் உலகங்களிலுள்ளவர்களை 'அநாகாமி' என்னும் மூன்றாவது தியானதத்தில தேறியவர்களென்றும், உக - வது முதலிய எழுலகங்களிலுள்ளவர்களை 'அர்ஹத்' என்னும் நான்காவது தியானதத்தில தேறியவர்களென்றுங் கூறுவர். 'ஈரூப்பிடமரும்' என்றும் பாடம்.

கஎசு - கஎஎ. இவ்வடிகளிற்கூறிய இருவகைப் பிரஹ்மலோகங்கள் இருபதின்பெயர்களையும் இந்தாற்பதிகத்தின உசு - ம் அடிகளின் உரையிற்காண்க.

கஎஅ. இருவகைச்சுடர் - சந்திர சூரியர்கள்.

பெருவனப் பெய்திய தெய்வத கணங்களும்
கஅ0 பல்வகை யசுரரும் படுதுய ருழுஉ
மெண்வகை நரகரு மிருவிசும் பியங்கும்
பன்மீ னீட்டமு நாளுங் கோளுந்
தன்னகத் தடக்கிய சக்கர வாளத்து
வரந்தரற் குரியோர் தமைமுன் னிறுத்தி
கஅரு யரந்தை கெடுமிவ ளருந்துய ரிதுவெனச்
சமபா பதிதா னுரைத்தவம் முறையே
யெங்குவாழ் தேவரு முரைப்பக் கேட்டே
கோதமை யுற்ற கொடுந்துயர் நீங்கி
யீமச் சுடலையின் மகணியிட் டிறந்தபின்
கசுஅ சமபா பதிதன் ஞற்ற றுன்ற
வெங்குவாழ் தேவருங் கூடிய விடந்தனிற்
சூழ்கடல் வளீஇய வாழியங் குன்றத்து
நடுவு நின்ற மேருக குன்றமும

---

கஎஅ - களக. இருமூ வகையிற் பெருவனப் பெய்திய தெய்வதகணங் கள் - மேற்கூறிய உலகம் மூப்பதுசொன் றனுள் ஆறுவதாகிய 'மஹாராஜிகலோ கம்' முதலிய உலகம் ஆறிலுமுள்ள அது வகைதெய்வகணங்கள். இதத உலகங் கள் ஆறினுடைய பெயரையும் பதிகத் தின் உஅ - ம் அடியின் உளையிற்காண்க. 'பெருவனப் பெய்திய' என்றார், விளங் கொளிமேனியராதலின்.

கஅ0. படுதுயர் - மிக்க துன்பம்.

கஅக. எண்வகை நரகர் - மேற்கூறிய உலகம் மூப்பதுசொன்றனுள் முதலாவ தாகிய நாரகலோகத்தின் பகுதிகளான மஹாநிரயம், ரௌரவம், காலஸுத்ரம், லஞ்சிவனம், மஹாவீசி, தபனம், ஸம் பிரதாபனம், ஸம்ஹாதம் என்னும் எட்டு நரகங்களிலுமுள்ளவர்கள்.

கஅஉ. ஈட்டம் - கூட்டம். கான் - இருபத்தேழு கட்சத்திரங்கள்.

கஅங மேற்கூறிய அருப்பிரஹ்மக ணமுதலியவற்றைத் தன்னுள் அடக்கிய சோனத்தைச் சக்கரவாளமென்பர்; "சக் கரவாளத்துத் தேவரெல்லாம்" (கஉ - ம் அடை, எஉ) எனவும், "எண்ணருஞ் சக் கரவாள மெங்கணும்" (உசு - ம் காதை, இஉ) எனவும் வருதல் காண்க.

கஅச. வரந்தரற் குரியோர் - தேவர். முன்னிறுத்தி - கோதமைக்கு முன்னே நிறுத்தி.

கஅரு. அரந்தை - துன்பம், கெடும் - கெடுமின். என - என்று சம்பாபதி சொல்ல.

கஅசு - கஅள. சம்பாபதி உரைத்தமு றையினை, சு - ம் காதை, கஎசு - கஎச - ம் அடிகளிற் காண்க.

கஅஅ. இறக்கத் துணிந்தமையால் கோதமை கொடுந்துயர் நீங்கினள். இது போன்ற நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரம், காட்சிக்காதை, அஉ - ம் அடிமுதலியவ ற்றிற் காண்க.

கஅசு. ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடு க்கும் விறகுக்கு.

கஉ0 - கஉக. தோன்றக் கூடிய விட மென்க. 'கூட்டியவிடம்' என்றும பாடம்.

கஉஉ. சூழ்கடல் - பெரும்புறக்கடல். ஆழியங்குன்றத்து - சக்கரவாளகிரியின் உட்பட்ட இடத்தில்.

கஉகூ. நடுவிடத்தேநின்றதாகிய, எண் பத்திராயிரம் யோசனை உயரமும் அவ்வ யரதலிற்கு தக்க பருமையும் அமைந்தி ள்ள மேருமலையும்.

புடையி னின்ற வெழுவகைக் குன்றமு
கசுரு கால்வகை மரபின் மாபெருந் தீவு
மோரீ ராயிரஞ் சிற்றிடைத் தீவும
பிறவு மாங்கத னிடவகை யுரியன
பெறுமுறை மரபி னறிவுவரக் காட்டி
யாங்குவா ழுயிர்களு மவ்வுயி ரிடங்களும்
உ00 பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து
மிக்க மயனு ழைந்கப் பட்ட
சக்கர வாளக் கோட்டமீங் கிதுகா
ணிடுபிணக் கோட்டத் தெயிறபுற மாதலிற்
சுடுகாட்டுக் கோட்ட மென்றல துரையா
உ0சு ரிதன்வர வினுவென் றிருந்தெய்வ முரைக்க
மதனி னெஞ்சமொடு வான்றுய செய்திப்
பிறந்தோர் வாழ்க்கை சிறந்தோ ளுரைப்ப
விறந்திருள் கூர்ந்த விடையிருள் யாமத்துத்

---

கசுச. அம்மேருவின் பக்கத்தே அதி லிருந்து உயரத்தில் ஒன்றற்கொன்று வரவரப் பாதி பாதியளவு குறைந்து குறைந்து ஒன்றைச்சுற்றி யொனருகச் சூழ்ந்துள்ள ஏழுகுலகிரிகளும.

கசுடி. மேற்கூறிய மேருவும் அதனை ச்சூழ்ந்துள்ள ஏழுகுலகிரிகளும் அககுல கிரிகள் ஒவ்வொன்றனையும சூழ்ந்து அவ்வக்கிரியின் உயர அளவுள்ள ஆழ மும் அகலமுமமைந்த ஏழு கடல்களும் ஆகிய இவற்றையெல்லாம சூழ்ந்து கிட க்கும் பெரும்புறக்கடலிலுள்ள சம்புத தீவு முதலிய நான்கு மகாதவீபங்களும். இந்த நான்கினுள் தெற்கேயுள்ளது சம் புத்தீவு. இதனை "நாவ லோங்கிய மா பெருந் தீவு" (உ - ம் காதை, க), "நாவ லொடு பெயரிய மாபெருந் தீவத்து" (கக - ம் காதை, கo எ) என்பவற்றாலு ணர்க.

கசுசு. மேற்கூறிய மஹாத்வீபம் நான் கினுள் ஒவ்வொன்றையும் தனிததனியே ஐந்நூறு ஐந்நூருகச் சூழ்ந்துள்ள இரண் டாயிரம் சிறு தீவுகளும்; இச்சிறு தீவுகள், அந்தரத்தீவுகளென்றுஞ் சொல்லப்படும்.

கசுடி - கசுசு. "அந்தரத தீவினு மகன் பெருந் தீவினும்" என்று பின்வருதல் காண்க; உடி - ம் காதை, உஉச.

கசுசு - கசுசு. இவ்வடிகளுக்கு எழுதி யவை, பரிமாணேத்துப் புத்தநூலிலிரு நீது தெரிந்துகொள்ளப்பட்டன.

கசுஎ-கசுஅ. உரியனவற்றைக்காட்டி.

கசுக. உயிர்களென்றது, அவ்வவ்வுயி ர்கள் வாழுகின்ற உடம்புகளை.

உ00. பாங்கு - பகுத்திரள்; "அடி யோர் பாங்கு மாயமு நீங்கி" என்றா சிலப்பதிகாரத்தும்; கொலைக்களக காதை, அடி; அழகுமாம். மண்ணீட் டின - சுடையாற் செய்யப்பட்டுள்ள பா வைவடிவமாக.

உ0க. மயன் - தெய்வத்தச்சன்; அசு ரத்தச்சனென்றுங் கூறுவர்.

உ0சு. இதேல் - போகுதேல. பிணக் கோட்டம - மயானம்.

உ0ச. சு - ம் காதை, சுo.

உ0டி. இருந்தெய்வம் - மணிமேகலர தெய்வம்.

உ0சு. மதனில் நெஞ்சமொடு - செரு க்கற்ற மனத்துடனே.

உ0எ. சிறந்தோள் - மணிமேகலே; வாழ்க்கையென்றது, நிலையாமையை. வாழ்க்கையைச் சிறநதோள் உரைப்ப.*

உ0அ. இடையிருள் யாமத்து - நடுயா மதத்தில், சு - ம் காதை, கசசு.

தூங்குதுயி லெய்திய சுதமதி யொழியப்
பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ
யந்தர மாரு வாறைந் தியோசனைத்
தென்றிசை மருங்கிற் சென்றுதிரை யுடுத்த
மணிபல் லவத்திடை மணிமே கலாதெய்வ
மணியிழை தன்னைவைத் தகன்றது தானென.

சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை முற்றிற்று.

---

உகஎ. பூங்கொடிதன்னை - மணிமேகலையை.

உகக. அந்தரம் ஆரு - ஆகாயமே வழியாக.

உகக - உகஉ. முப்பதுயோசனைதூரம் தென்றிசைகண்ணே சென்று.

உகஎ - உகச. கூ - ம் காதை, நெடி - இவ.

க - உகச. கதிர்மண்டிலம் சொரிய, மேனியள் எத்தி நோக்கி என்னுற்றீ ரென, அவள் உரைத்தலும், அருந்தெய்வ முரைப்ப, சுதமதி என்னையோவென, நேரிழை கூறும்; அங்ஙனங்கூறுகின்ற தெய்வம், இதன் வரவு இதுவென்றுரைக்க, இறந்தோளுரைப்ப, தெய்வம் இடையிருள்யாமத்துச் சுதமதியொழியப் பூங்கொடிதன்னைத் தழீஇச் சென்று மணிபல்லவத்தில் வைத்து அகன்றதென முடிக்க.

ஏழாவது

# துயிலெழுப்பியகாதை.

[ஏழாவது மணிமேகலாதெய்வம் உவவனம்புகுந்து சுதமதியைத் துயிலெழுப்பியபாட்டு.]

மணிமே கலைதனை மணிபல் லவத்திடை
மணிமே கலாதெய்வம் வைத்து நீங்கி
மணிமே கலைதனை மலாப்பொழிற் கண்ட
வுதய குமர னுறுதுய ரெய்திக்
கு கங்குல் கழியிலென் கையகத் தாளெனப்
பொங்குமெல் லமளியிற் பொருந்தா திருந்தோன்
மூன்னாத் தோன்றி மன்னவன் மகனே
கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியுங்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரு
கஎ மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணுள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின் முதுங்
தவத்திறம் பூண்டோ டன்மேல் வைத்த
வவத்திற மொழிகென் றவன்வயி னுரைத்தபி

---

ரு. மலர்ப்பொழிற் கண்ட - உவவனத் திற்கண்ட.

ச. உறுதுயர் - மிக்க துன்பம்.

டு. கையகத்தாள் - கையினிடத்தே யுள்ளாள்.

சு. பொருந்தாது - துயிலாது.

கூ. வறம் - வறுமை.

கஉ. 'தன்னுயி ரென்னுந் தகுவை யாயின்' என்றும் பாடம்.

அ - கஉ. 'பதிகம்' உ - ம் அடியைப் பார்க்க. இதுபோலவே, "கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகலகண் மிஞ்சி, நீணில மாரியின்றி விளைவஞ்சிப் பசியு நீடிப், பூண்முலை மகளிர் பொற் பிற் கற்பழிந் தறங்கண் மாறி, யாணையில் வுலகு கேடா மரசுகோல் கோடி னென் றூன்" என்று சீவகசிந்தாமணியிலும் வருதல் காண்க; நாமகளிலம்பகம், உசு.

கரு. தவத்திறம் - தவத்தின்கூறுபாடு.

கச. அவத்திறம் - கேடுசெய்யுங்காரி யம்; "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய் வார்மற் றலலா, ரவஞ்செய்வா ராசை யுட் பட்டு" என்ற உசுசு - ம் திருக்குற ளில் 'அவம்' என்பது இப்பொருள் பட்டு வருதல்காண்க. 'அவ்வயினுரை த்தபின்' என்றும் பாடம்.

சு - கச. கஅ - ம் காதை, அ0 - அரு.

க - கச. மணிமேகலாதெய்வம மணி மேகலையை மணிபல்லவத்திடை வை த்து நீங்கிப் பொருந்தா திருந்தோனு யிய உதயகுமரன் முன்னர்த்தோன்றி அவததிறம் ஒழிகவென்று உரைத்தபி னென்க.

கடி னுவவனம் புகுந்தாங் குறுதுயில் கொள்ளுஞ்
சுதமதி தன்னைத் துயிலிடை நீக்கி
யிந்திர கோடணை யிந்நகர்க் காண
வந்தே னஞ்சன் மணிமே கலையா
னுதிசான் முனிவ னறவழிப் படூஉ
உ0 மேது முதிர்ந்த திளங்கொடிக் காதலின்
விஞ்சையிற் பெயர்த்துநின் விளங்கிழை தன்னையோர்
வஞ்சமின் மணிபல் லவத்திடை வைத்தேன்
பண்டைப் பிறப்பும் பண்புற வுணர்ந்தீங்
கின்றேழ் நாளி லிந்நகர் மருங்கே
உடி வந்து தோன்று மடக்கொடி நல்லாள்
களிப்புமாண் செல்வக் காவற் பேரூ
ரொளித்துரு வெய்தினு முன்றிற மொளியா
ளாங்கவ ளிந்நகர் புகுந்த வந்நா
ளீங்கு நிகழ்வன வேதுப் பலவுள
ஈ0 மாதவி தனக்கியான் வந்த வண்ணமு
மேதமி னெறிமக ளெய்திய வண்ணமு
முரையாய் நீயவ ளென்றிற முணருந்
திரையிரும பௌவத்துத் தெய்வமொன் றுண்டெனக்
கோவலன் கூறியிக் கொடியிடை தன்னையென்

---

கஎ. இந்திரகோடணை - இந்திரவிழா.

கஅ. இதுபோன்ற அடி, சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, ஈசு - ம அடியாகவும் வந்திருத்தல்காண்க. அஞ்சல் - அஞ்சாதே.

கக. ஆதிசால்முனிவன் - புத்தன்.

உ0. எது முதிர்ந்தது - எதுநிகழ்ச்சி முற்றியது.

உக. விஞ்சையின் - வித்தையினாலே.

உச. இன்றேழ்நாளில் - இற்றைக்கு ஏழாவதுகாளில்; கக - ம் காதை, கஉக.

உடி. தோன்றும் - தோன்றுவாள். நல்லாள் - மணிமேகலை, 'வந்து காண் குறும்' என்றும் பாடம்.

உசு. பேரூர் - காவிரிப்பூம்பட்டினத்தில்.

உஎ. உருவை மறைத்து வருவாளாயினும். 'ஊன்றிற மொழியாள்' எனவும், 'உன்றிற மொழியாள்' எனவும் பாடம்.

உக. நிகழ்வனவாகிய எதுக்கள்.

ஈக. எதமில்நெறி - குற்றமில்லாத வழி; அஃதாவது விசுத்திமார்க்கம், 'எதமி னின்மகள்' எனவும் பாடம்.

ஈஉ. அவள் - மாதவி, என்றிறம் உணரும் - என்வரலாற்றை உணர்வாள். 'உரைப்பொரு ளுணரும்' என்றும பாடம்.

ஈசு. பௌவத்து - கடலினிடத்து. தெய்வமொன்று உண்டென - எனது குலமுதல்வனே விபதினின்றுநீக்கிப் பாதுகாத்த தெய்வமொன்று உள்ள தென்று.

ஊடி. நன்னுளிற் செறிந்த இருளிடத்தே. 'நல்லிருள்' என்றும் பாடம்.

ஊசு - ஊடி. இவ்வடிகளின் பொருளோடு சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, உஅ - ம் அடிமுதலியவற்றின் பொருளை ஒப்பிடுக.

ஊசு. கையற - செயலற்றுப்போக; சிலப்பதிகாரம், வரந்தருகாதை, ஙிஉ - உசு. 'காமன் கையிற் கடுநவை' என்றும் பாடம்.

நூறு ஞமஞ் செய்த நன்ன ணள்ளிருட்
காமன் கையறக் கடுநவை யறுக்கு
மாபெருந் தவக்கொடி யீன்றனை யென்றே
நனவே போலக் கனவகத் துரைத்தே
னீங்கிவ் வண்ண மாங்கவட் குரையென்
சம றந்தரத் தெழுந்தாங் கருந்தெய்வம் போயபின்
வெந்துய ரெய்திச் சுதமதி யெழுந்தாங்
ககன்மனை யரங்கத் தாசிரியர் தமமொடு
வகைதெரி மாக்கட்கு வட்டணை காட்டி
யாடல் புணர்க்கு மாங்கியன் மகளிரிற்
சநூ கூடிய குயிலுவக் கருவிகண் டுயின்று
பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்த் தீங்தொடை
கொளைவல் லாயமோ டிசைகூட் டுண்டு
வளைசேர் செங்கை மெல்விர லுதைத்த
வெம்மைவெய் துறுது தன்மையிற் றிரியவும்
நிம றண்பில் காதலன் பரத்தமை நோனு

---

நநி-சம. மணிமேகலாதெய்வம் புகுந்து நீக்கி, 'இந்நகரில் இந்திரவிழாக்காண வந்தேன்; யான் மணிமேகலாதெய்வம்; இளங்கொடிக்கு ஏது முதிர்ந்ததாதலால் அவளை மணிபல்லவத்தில வைத்தேன்; அவள் இந்நகரில இற்றைக்கு ஏழாநாளில் தோன்றுவள்; ஏதுப்பலவுள; மாதவிக்குமா; அவள் என்றிறமுணரும்; இவ்வண்ணம் அவட்கு உரை' என்று போயபினென்க.

சஉ. அகல் மனை அரங்கத்து - விசாலித்த வீடாகிய நடனசாலையில், ஆசிரியர் தம்மொடு - இயலாசிரியனும், ஆடலாசிரியனும், யாழாசிரியனும், இசையாசிரியனும், குழலோனும், தண்ணுமையோனுமாகிய இவர்களோடு நின்று.

சசு. வகைதெரிமாக்கட்கு - அவிநய முதலியகூறுபாடுகளைத் தெரிகின்றமாந்தர்களுக்கு. வட்டணை காட்டி - கமல வர்த்தனையைக்காட்டி; கமலவர்த்தனை யாவது கைத்தலநகாட்டல்; சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், கஅசு.

சச. அரங்கியல் மகளிரின் - நாடக மகளிர்போல; மகளிருடனென்றமாம்.

சநி. கூடியகுயிலுவககருவி - சேர்ந்த குழல் யாழ் மத்தளம் குடமுழா இடக்கையென்பவைகள்; "கூடிய குயிலுவக் கருவிக ளெலலாங், குழல்வழி நின்றநி யாழே யாழ்வழித், தண்ணுமை நின் றது தகவே தண்ணுமைப், பின்வழி நின் றது முழவே முழவொடு, கூடி நின் றிசைதத தாமந் திரிகை" என்று வரு தலகாண்க; இது சிலப்பதிகாரம், அரங் கேற்றுகாதை, கஅ - கசஉ. கண்டியின்று - ஒலியாதடங்கி. 'மகளிரின்' (எ - ம் காதை, சச) என்றதனால் அவர்கள் துயின்றமையும் பெறப்பட்டது.

சசு - சக. பண்ணுக்கிளை - பண்ணின் வகைகளை, பயிரும் - இசைக்கும். 'பயிறரும்' என்றும் பாடம். தீந்தொடை - இனியநரம்புகள். கொளைவல் ஆயமோடு - பாட்டில் வல்ல மகளிர்கூட்டத்துடனே; கொளை - ஒற்றறுத்தலுமாம். கூட்டுண்டு - சேர்ந்தனுபவித்து. 'வளையார்செங்கை' என்றும பாடம். உதைத்த - தெறித்த. உறுது - உறுமையால். தொடை திரியவுமென்க.

நிம - நிசு. பரத்தமை - பரத்தன் தன்மை; பரத்தையை நுகர்வான் பரத்தன்; "பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர், கண்ணேன்

துண்கண் சிவந்தாங் கொல்குகொடி போன்று
தெருட்டவுக் தெருளா தூடலொடு துயில்வோர்
விரைப்பூம் பள்ளி வீழ்துணை தழுவவுக்
தளர்நடை யாயமொடு தங்கா தோடி
ருரு விளையாடு சிறுதே ரீர்த்துமெய் வருந்தி
யமளித் துஞ்சு மைம்படைத் தாலிக்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
காவற் பெண்டிர் கடிப்பகை யெறிந்து
தூபங் காட்டித் தூங்குதுயில் வதியவு
சூ0 மிறையுறை புறவு நிறைநீர்ப் புள்ளுங்
காவுறை பறவையு நாவு ளழுந்தி
விழவுக்களி யடங்கி முழவுக்கண் டுயின்று
பாழவிறன் மூதூர் பாயல்கொ ணடுநாட்
கோமகன் கோயிற் குறுநீர்க் கன்னலின்
சுரு யாமங் கொள்பவ சேத்தொலி யரவமு
மூறையுணின் றெடுங்கிய வண்ணு வுயக்கத்து
நிறையழி யாணை நெடுங்கூ விளியுங்
தேர்வழங்கு தெருவுஞ் சிற்றிடை மூடுக்கரு
மூர்காப் பாள ரெறிதுடி யோதையு
எ0 முழங்குநீர் முன்றுறைக கலம்புணர் கம்மியர்
துழந்தடி கள்ளின் நெறப்பியுண் டயர்ந்து

---

பரத்தநின் மார்பு" என்பது திருக்குறள், கஙஙக; "வறமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு" என்பது சிலப்பதி காரம், கொலைக்களக்காதை, சுசு. 'பார்த் தமைநோனாது' என்றும் பாடம். நோ னாது - பொருமல். துயில்வோர் - ஊடி யமகளிர். 'துயில் வோள்' எனறும் பாடம். வீழ்துணை - விரும்பியகணவன். துயில்வோர் தழுவவும்.

ருச - ருகூ. தளர்நடையாயம் - சிறுர் கூட்டம். 'தாங்காதோடி' என் றும் பாடம். ஈர்த்து - இழுத்து. காவற் பெண்டிர் - செவிலித்தாயர். காவற் பெண்டிர் துயில்வ தியவும்.

கூ0. இறை - இறப்பு.

கூக. கா - சோலை.

கூஉ. களி - களிப்பு; கூத்துமாம்.

கூசு. நடுநாள் - நடு இரவில்.

சக - சூசு. தன்மையிற்றிரியவும், வீழ் துணைதழுவவும், துயில்வ தியவும், கருவி கண்டுயினறு நா உள்ளமூந்தி முழவுக் கண்டுயின்று ஊர் பாயலகொள் நடுநாளி லென்க.

சுச. கன்னலின் - நாழிகைவட்டி லால். 'குறிநீர்க்கன்னலின்' என்றும் பாடம்.

சுடு. யாமங்கொள்பவர் - நாழிகைக் கணக்கர்; சிலப்பதிகாரம், இந்திரவிழ வூரெடுத்தகாதை, சக.

சுசு. உண்ணு உயக்கம் - உண்ணுமை யாலுண்டாகியவருத்தம.

சுஎ. நெடுங்கூவிளி - நெடியகூப்பிடு தலின் முழக்கம்; எ - ம் காதை, ககடு.

சுஅ. சிற்றிடைமூடுக்கர் - சிறிய இட ங்களையுடைய முடுகருத் தெருக்கள்.

சுக. துடி - ஒருவகைத் தோற்கருவி.

எ0. கலம்புணர் கம்மியர் - கப்பலிற் சேர்த்து தொழில செய்வோர்.

எக. துழந்து அடி கள்ளின் சொப்பி உண்டு அயர்ந்து - துழாவிச் சமைத்த

பழஞ்செருக் குற்ற வனந்தர்ப் பூணியு
மரவாய்க் கடிப்பகை யையவிக் கடிப்பகை
விரவிய மகளி ரேந்திய தூமத்துப்
எடு புதல்வரைப் பய்ந்த புனிறுதீர் கயக்கர்
தீர்வினே மகளிர் குளனு டாவமும்
வலித்த நெஞ்சி னுடைவ ரின்றியும்
புலிக்கணத் தன்னோர் பூத சதுக்கத்துக்
கொடித்தேர் வேந்தன் கொற்றங் கொள்கென
அ0 விடிக்குரான் முழக்கத் திடும்பலி யோதையு
மீற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்
கடுஞ்சூன் மகளிர் நெடும்பு ணுற்றோர்
தந்துயர் கெடுக்கு மந்திர மாக்கண்
மன்றப் பேய்மகள் வந்துகைக் கொள்கென
அடு நின்றெறி பலியி னெடுங்குர லோதையும்
பல்வே றுருதையும் பாந்தொருங் கிசைப்பக்

---

கள்ளுகளில் நெல்லாற் சமைத்த கள்ளே யுண்டு தம்மைமறந்து; "இல்லடி கள்ளின் ரெறப்பி பருகி" என்பது பெரும் பாணாற்றுப்படை, கசஉ. 'தழந்த கள்ளின்' என்றும் பாடம்.

எஉ. அனந்தர் - கள்ளேயுண்டமையா லுண்டாகிய செருக்கு; "அனந்தர் நடக்க மல்லகி யாவதும்" என்பது பொருநாராற்றுப்படை, கச.

எசு. கடிப்பகை - பேய்க்குப் பகையாகவுள்ளதென்று பொருள்; அரவாய்க் கடிப்பகை - அரம்போன்றவாயினையுடைய வேப்பிலை. ஐயவிக்கடிப்பகை - சிறுகடுகு. பேய்முதலியவைகள் அணுகாதிருத்தற்கு இருவகைக்கடிப்பகையும் கூறப்பட்டன.

எச. 'இரவியன் மகளிர்' என்றும் பாடம். தூமத்து - புகையுடன்.

எசு - எச. மகளிரேந்திய அரவாய்க் கடிப்பகை ஐயவிக்கடிப்பகைவிரவிய தூமம் ஆகிய இந்த இரண்டென்சென்றென ஒருசொல் வருவிக்க.

எடு - எசு. புனிறுதீர்மகளிர்; கயக்கர்தீர்மகளிரென்க; கயக்கம் - கயங்குதல். 'புனிறுதி ருயக்கர், தீர்வியன் மகளிர்' என்றும் பாடம்.

எசு - எச. புதல்வரைப்பெற்றுப் புனிறுதீர்ந்த மகளிர் இரவிற் சென்று குளத்தில் நீராடுதலே, "கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து, பணைத்தேந் தினை மூலை யமுத மூறப், புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர்குளநீ ரயர" என்னும் மதுரைக் காஞ்சியாலுணர்க; சுஐ0 - சுஙசு. புதல்வரைப்பெற்றமகளிர் எழுந்துசென்று பத்தாவது இரவில் நீராடவேண்டுமென்று ஆபஸ்தம்பசூத்திரத்தில் கடு - ம் கண்டத்துள்ள அ - ம் ஸூத்திரத்தாலும், அந்தூலே அனுஸரித்துத் தோழப்பரென்று வழங்குகிற வைத்தீஸ்வரபௌமரியற்றிய கூநுஷ்யாரண்யத்தில் சு - ம் கண்டத்தில் நாமகரணப்பிரகரணத்திலுள்ள "தசமேஹனி" என்னும் ஸூத்திரத்தாலும் தெரிகின்றது.

எள. வலித்த நெஞ்சின் ஆடவர் இன்றியும் - பகைமையைக்கருதிய நெஞ்சினையுடைய வீரர் இல்லாதிருக்கவும்.

எஅ. புலிக்கணத் தன்னோர் - வீரர். பூத சதுக்கத்து - பூதத்தையுடைய சதுக்கத்திலே; சதுக்கம் - நாற்சந்தி.

அக. சு - ம் காதை, கஅ.

அஉ. கடுஞ்சூல் மகளிர் - முதற்சூலையுடைய மகளிர்; "கடுஞ்சூன் முண்ட

கேட்டுளங் கலங்கி யூட்டிரு ளழுவத்து
மூருந்தே ரிளகை நீங்கிப் பூம்பொழிற்
றிருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி
கூ0 மிக்கமா தெய்வம் வியந்தெடுத் தரைத்த
சக்கர வாளக் கோட்டத் தாங்கட்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயி
லுலக வறவியி னெருபுடை யிருத்தலுங்
கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய
கூடு வந்தி லெழுதிய வற்புதப் பாவை

---

கங் கதிர்மணி கழ ாஅலவும்" என்பது சிறுபாணாற்றுப்படை, கசஅ.

அஎ. ஊட்டிருளழுவத்து - ஊட்டி ஞற்போன்ற இருட்பரப்பில். 'பூட்டிரு ளழுவத்து' என்றும் பாடம்.

அசு. சு - ம் காதை, உஉ..

கூஉ - கூசு. கஎ - ம்காதை, எஎ - எஅ. உலக அறவி - ஊரம்பலம்; இஃது, எல் லாச்சாதியாரும் வந்து தங்குதற்குரிய தருமசாலை; இதனை 'உலோகோபகா ரிகா' என்பர் வடநூலார்.

சக - கூசு. சுதமதி யெழுந்து நடுநாளில் வந்தொலியரவமும், நெடுங்கூவிளியும், துடியோதையும், அனந்தர்ப்பாணியும், குளனுடரவமும், பலியோதையும், நெடு ங்குரலோதையும் ஆகிய பல ஓசைகளை யும் கேட்டு உளங்கலங்கி நீங்கிப்போகிச் சக்கரவாளக்கோட்டத்திடத்தே உலக வறவியின் ஒருபுடையிருத்தலுமென்க.

கூச - கூடு. நெடுநிலை உடைக் கந்து அந்தில் - நெடியதோற்றத்தையுடைய தூணுகிய அவ்விடத்தே, காரணம் காட் டிய - பழவினையாகிய காரணத்தை யாவ ருக்கும் காட்டுதற்பொருட்டு, எழுதிய - மயனென்னும் தெய்வத்தச்சனால் நிரு மிக்கப்பட்ட, அற்புதப் பாவை - யாவ ருக்கும் ஆச்சரியத்தை உண்பெண்ணு கின்ற பாவை; இது, மேற்கூறிய உல கவறவியிற் சம்பாபதிகோயிலின் கிழக் கேயுள்ள தூணென்றில் தெய்வகணத் தோனுகிய துவதிகனென்பவனுடைய வடிவம்போல் மயனால் நிருமிக்கப்பட்ட பாவை; இது முக்காலச்செய்தியையும் கேட்போர்க்குச் சொல்லும் இயல்பையு டையது; பேசுதல்பற்றி இது காவுடைப் பாவையென்றுஞ் சொல்லப்படும். இவ ற்றை, "கந்துடை நெடுநிலைக் கடவு ளெழுதிய, வந்திற் பாவை யருளு மாயி டின்" (கடு - ம் காதை, கூசு - சுச) என வும், "கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய, தன்றூணைப் பாவையை" (கஎ - ம் காதை, அசு - கூ0) எனவும், "நெடுநிலைக் கந்தினிடையின் விளங்கக், கடவு ளெழுதிய பாவையாங் குளாக் கும்" (உ0 - காதை, சகo - சகக) என வும், "கடவு ளெழுதிய நெடுநிலை கந்தின், குடவயி னமைத்த நெடுநிலை வாயின், முதியாள் கோட்டம்" (உச - ம் காதை, க - சு) எனவும், "என்றிவை சொல்லி யிருந்தெய்வ மூரைத்தலும்" (உச - ம் காதை, சுடு) எனவும், "மன் பெருந் தெய்வ கணங்களி னுள்ளேன், றவதிக னென்பேன் றிருன்றமுதிர் கந் தின், மயனெனக் கொப்பா வருத்த பாவையி, னீங்கேன்" (உச - ம் காதை, சகo - சசூ) எனவும், "நெடுநிலைக் கந்தி னின்ற பாவை" (உஉ - ம் காதை, உ) எனவும், "இலகொளிக் கந்தினெழுதிய பாவாய்" (உஉ - ம் காதை, சுக) எனவும், "நாவுடைப் பாவை நங்கையை யேத்த லும்" (உஉ - ம் காதை, கச) எனவும், "நாவுடைப் பாவையை நலம்பல வேத்தி" (உஉ - ம் காதை, கoச) எனவும் வருவனவற்றாலுணர்க. எழுதிய - பண்ணிய; "கடவு ளெழுதவோர் கற்ரூ ராரெனின்" (காட்சிக் காதை, சுசo) எனவும், "கடவு ளெழுதவோர் கற்கே யாரி லின்" (காட்சிக்காதை, சசுக) எனவும், "கடவு ளெழுதவோர் கற்கொண் டிலது" (கால்கோட்காதை, கச) எனவும் சிலப்பதிகாரத்துவருதல்காண்க.

மைத்தடங் கண்ணுண் மயங்கினள் வெருவத்
திப்பிய முரைகருந் தெய்வக் கிளவியி
னிரவி வன்ம னொருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் றேவி
க00 தயங்கிணைக் கோதைத் தாரை சாவுற
மயங்கி யானைமுன் மன்னுயிர் நீத்தோய்
காராளர் சண்பையிற் கௌசிகன் மகளே
மாருத வேகனே டிங்ஙகர் புகுந்து
தாரை தவ்வை தன்னெடு கூடிய
க0டு வீரை யாகிய சுதமதி கேளா
யின்றேழ் நாளி லிடையிருள் யாமத்துத்
தன்பிறப் பதனெடு நின்பிறப் புணர்ந்தீங்
கிலக்குமி யாகிய நினக்கிவ் யாள்வரு
மஞ்சலென் றுரைத்த தவ்வுரை கேட்டு

---

கூசு. மைத்தடங் கண்ணுள் - சுதமதி.

கூள. திப்பியம் - இது, திவ்யமென்னும் வடமொழிச்சிதைவு; தேவலோகத்திலிருப்பதென்று பொருள்; இவ்வாறு இறந்தகால எதிர்காலச் செய்திகளைக் கூறுதல் பெரும்பாலும் இவ்வுலகவழக்கமன்மையின், இதனை, 'திப்பியம்' என்றார். "செங்கோல் காட்டிய தெய்வமும் திப்பியம், பையர வல்குல் பலர்பசி கூர்யக், கையி லேந்திய பாத்திரந் திப்பிய, மும்தை முதல்வி யடிபிழைத் தாயெனச், சித்திர முமைத்த விதூஉந் திப்பியம்" என்று இந்நூலுள்ளே 'திப்பியம்' என்பது இப்பொருளில் வருதல்காண்க; கசு-ம் காதை, க0-கச. தெய்வகிளவியினால் திப்பியமுமாகும். தெய்வக்கிளவி - தெய்வதத்தன்மையுள்ளசொல; வடசொல்லாலெனினுமமையும்.

கூஅ. இரவிவன்மன் - அசோதரநகரத்தரசன்; இவன் சுதமதியென்பவளுடைய பூர்வஜன்மபிதா.

கூக. கசம் காதை, கூச. துச்சயன்=துர்ஜயன் - பகைவர்களால் வருத்தமுற்று வெல்லப்படுபவனென்ற பொருள்; இவன் அங்கநாட்டிலுள்ள கச்சயமென்னு நகரத்தரசன்; சுதமதியென்பவளுடைய பூர்வஜன்மநாயகன், க0-ம் காதை, இ0-இச.

க00. தாரை - இவள் வீரையின் முன் பிறந்தவள்; வீரை யானையால் இறந்தது கேட்டு இவள் இறந்தமையால், 'சாவுற' என்றார்; கஉ-ம் காதை, சடு - சஅ.

க0க. மயங்கி - மதுவைக் குடித்தமையால் மயங்கி. 'மயங்கியல் யானை' என்றும் பாடம்.

க0உ. சண்பையென்பதற்குப்பொருள் அங்கநாட்டிற் கங்கைக்கலையிலுள்ளதாகிய சம்பாநகரமென்று கொள்ளும்பொழுது காராளரென்பது காராளரென்பதின் விகாரமென்றும், கௌசிகனென்று பொருள்படுகின்ற காராளத்வம் அல்லது காராளதையென்பது இச்சொற்குப் பகுதியென்றும், இவர்கள் துர்க்காபூஜைசெய்து நரபலிகொடுப்போரென்றும், இப்பெயர் இக்காலத்து மஹாராஷ்டிரதேசத்திற் காரடிகளென்று வழங்குகின்றதென்றுங் கூறுவர். ரு-ம் காதை, உக.

க0ச. தாரை தவ்வை - தாரையாகிய தவ்வை; தவ்வை - மூன்பிறந்தவள். தாரை - மாதவியென்பவளுடைய பூர்வஜன்மநாமதேயம்.

க0டு. வீரை - சுதமதியென்பவளுடைய பூர்வஜன்மநாமதேயம்.

க0அ. இலக்குமி-மணிமேகலையென்பவளின் மூற்பிறப்பின் பெயர்; தாரை, வீரை, இலக்குமி இம்மூவரும் சகோதரிகள்.

க0கூ. அஞ்சல் - அஞ்சாதே. தெய்வம் உணர்த்தி.

கக0 நெஞ்ச நடுக்குறூஉ நேரிழை நல்லாள்
காவ லாளர் கண்டுயில் கொள்ளத்
தூமென் சேக்கைத் துயில்கண் விழிப்ப
வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பப்
புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்கப்
ககடு புகர்முக வாரண நெடுங்கூ விளிப்பப்
பொறிமயிர் வாரணங் குறுங்கூ விளிப்பப்
பணிநிலைப் புரவி பலவெழுந் தாலப்
பணிநிலைப் புள்ளும் பலவெழுந் தாலப்
பூம்பொழி லார்கைப் புள்ளொலி சிறப்பப்
கஉ0 பூங்கொடி யார்கைப் புள்ளொலி சிறப்பக்
கடவுட் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடை கொளக்
குயிலுவர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழக்
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ
கஉடு வூர்துயி லெடுப்ப வுரவுநீ ரழுவத்துக்

---

கக0. நல்லாள் - சுதமதி.

கக உ. சேகலைத் துயில் கண் - படுக்கையில அங்குகின்ற ஆடவர் மகளிரென்னும் இருபாலாருடைய கண்கள்.

கக கூ. 'வலம்புரி சங்கம்' என்றும் பாடம். வறிதெழுந்தார்ப்ப - பொருளின்றி முழங்க.

கக ச. புலம் - அறிவு. சங்கம் - புலவர் கூட்டம்; 'புலம்புரிசங்கம்' என்றும் பாடம்.

கக டு. வாரணம் - யானை. நெடுங்கூ விளிப்ப - நெடியகூப்பீட்டைச்செய்ய; எ - ம் காதை, கூ. கூ - கூப்பீடு; "வினைவினை நல்லி னினைகூஉக் கேட்பவும்" என்பது புறநானூறு, சச.

கக கூ. வாரணம் - கோழி.

கக எ. பணை - குதிரைப்பந்தி. ஆல - ஆட.

கக அ. பணை - யானை. 'கணநிலைப்புள்ளும்' என்றும் பாடம். ஆல - முழங்க.

கக எ - கக அ. 'பலவெழுந் தார்ப்ப' என்றும் பாடம்.

கக க. பூம்பொழில் ஆர்கைப் புள் ஒலி சிறப்ப - பொலிவு பொருந்திய சோலையினிடத்தே நிறைதீமையுடைய பறவைகளின் முழக்கம் அதிகரிக்க.

கஉ0. பூங்கொடியார் - மகளிர். புள் - கைவளை; "புட்கை போகிய புன்றலை மகாஅர்" என்பது மலைபடுகடாம், உடுக.

கஉக. தெய்வங்களுக்குரிய பீடங்களுக்குக் கொடுக்கப்படும் பொலிவுபெற்ற பலிகளானவை முடிவுகொள்ள.

கஉஉ. அணிகலங்கள் விற்கப்படுகின்ற அங்காடிவீதியில் மலராற் செய்யப்படும் அர்ச்சனைகளைக் கடையிடங்கள் கொள்ள; "பூப்பலி செய்து காப்புக் கடைநிறத்தி" என்பது சிலப்பதிகாரம், நடுகற் காதை, உகக; வயல்களில் இல்லுறை தெய்வங்களின் பொருட்டுக் காலையிற் பூவிதறல் மரபு.

கஉக - கஉஉ. 'கடிகொள' என்றும் பாடம்.

கஉகூ. தோற்கருவி வாசிப்பாருடைய இடங்களிலெல்லாம் செவ்வை செய்யப்பட்ட வாத்தியங்கள் பரவியெழ; பண் - இசையென்றுமாம்.

கஉச. உபகாரிகளுடைய வாயில்களோறும் கொடுத்தற்குரிய பல பண்டங்களும் பரவுதலுற்றுமிக.

கஉடு. எடுப்ப - எழுப்ப. 'ஊர்துயி லெழுப்பிய' என்றும், 'ஊர்துயி லெடுப்

காரிருள் சித்துக் கதிரவன் முனைத்தலு
மேவுறு மஞ்ஞையி னிணைந்தடி வருந்த
மாநகர் வீதி மருங்கிற் போகிப்
போய கங்குலிற் புகுந்ததை யெல்லா
காஉ மாதவி தனக்கு வழுவின் றுரைத்தலு
நன்மணி யிழந்த நாகம் போன்றவ
டன்மகள் வாராத் தனித்துய ருழப்ப
வின்னுயி ரிழந்த யாக்கையி னிருந்தன
ளென்னிய துரைத்த சுதமதி தானென.

துயிலெழுப்பியகாதை முற்றிற்று.

---

பிய' என்றும் பாடம். உரவுநீரழுவத்து - கடற்பரப்பில்.

கஉசு. சித்து - அழித்து.

கஉஎ. எ - அம்பு; "சுதமதி கேட்டுத் துளக்குறு மயில்போல்" என்றார் முன்னும்; ச - ம் காதை, அசு.

கஉக. போயகங்குலில் - சென்ற இரவில்.

கஙக. இப்படியே, "மன்னவன் மகனுக் குற்றது பொறுஅ, னன்மணி யிழந்த நாகம் போன்று" என்ற இவ்வுவமையே பின்னும்வரும்; உடு - ம் காதை, ககச - ககடு; "இருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியு, மருமணி யிழந்த நாகம் போன்றதும்" என்பது சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்தகாதை, இஎ - இஅ. அவள் - மாதவி.

கஙஙு. "இன்னுயி ரிழந்த யாக்கை யென்னத், தன்னிய சுற்றத் துயர்க் கடல் வீழ்ந்ததும" என்புழியும் இவ்வுவமை வருதல்காண்க; சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்தகாதை, இக - சுஐ.

க - கஙச. மணிமேகலாதெய்வம் நீங்கித்தோன்றி உரைத்தபின் புருத்தநீக்கி உளையென்று போயபின், சுதமதி எழுந்து கேட்டு உளங்கலங்கி நீங்கிப் போகி ஒருபுடையிருத்தலும், பாவை உரைக்கும; அது 'வரும், அஞ்சல்' என்றாளாத்தது; அதனைக்கேட்டு நடுக்குறுதல் காள், கதிரவன் முனைத்தலும் போகி மாதவிக்குணர்த்தலும், அவள் துயருழப்பத் தான் உயிரிழந்த யாக்கைபோல் இருந்தனளென முடிக்க.

எட்டாவது

# மணிபல்லவத்துத்துயருற்றகாதை.

[எட்டாவது மணிமேகலை
மணிபல்லவத்துத்துயிலெழுந்து துயருற்றபாட்டு.]

சங்கிவ ளின்னண மாக வீருங்கடல்
வாங்குதிரை யுடைத்த மணிபல் லவத்திடைத்
தத்துநீ ரடைகரைச் சங்குழு தொடுப்பின்
முத்துவிளை கழனி முரிசெம் பவளமொடு
விரைமர முருட்டுந் திரையுலாப் பரப்பின்
ஞாழ லோங்கிய தாழ்கண் ணகும்பி
னும்பலுங் குவளையுந் தாம்புணர்ந்து மயங்கி
வண்டுண மலர்ந்த குண்டுநீ ரிலஞ்சி
முடக்காற் புன்னையு மடற்பூந் தாழையும்
கொ வெயில்வர வொழித்த பயில்பூம் பந்தர்
சிறல்விளங்கு நிலாமண னறுமலர்ப் பள்ளித்
துஞ்சு துயிலெழூஉ மஞ்சி லோதி

---

க. இவள் - சுதமதி. 'சங்கிவ ரிங்ஙன மாக' என்றும் பாடம்.

ஙு. அடைகரையில். தொடுப்பு - விதைப்பு; "தொடுப்பி னுயிரம் வித்தியது விளையு" என்பது மதுரைக்காஞ்சி, கக; "தொடுப்பே ருழவ ரோதைப் பாணியும்" என்பது சிலப்பதிகாரம், நீர்ப்படைக்காதை, உசுஅ.

ஙு - ச. அடைகரையாகிய கழனியி லென்றுமாம்.

ஙி. விளாமரம் - சந்தனம் அகில் முதலியன; "விளாமர மென்றலில்" என்பர் மேலும்; கசு - ம் காதை, கஉஉ; "வீங்கு நிரை கொணர்ந்த விளாமர விறகின்" என்பது சிறுபாணாற்றுப்படை, கடிஙி.

ஙு. ஞாழல் - புலிநகக்கொன்றை; "பொன்னுறை ஞாழற் பூவுடன் கடுக்கும், பேழ்வாய்ப் புலியுகிர்" என்பது கல்லாடம், ஙஉ. அகும்பு - சேறு; "வார சும் பொழுகு முன்றில்" என்பது புறநானூறு, கசச.

எ. மயஙி - கலந்து.

அ. குண்டு நீர் இலஞ்சி - ஆழமான நீரையுடைய பொய்கைக்கரை; இலஞ்சி - ஆகு பெயர்.

ஙு. முடம் - வளைவு.

கொ. பந்தர் - கிழல்.

ஙு - கொ. புன்னையும் தாழையும் வெயிலின் வரவை யொழித்த பந்தர்.

கக. அறல் - நீர் அரித்து ஒழுகுதலா லுண்டாவது; "மட்டற லலையாற்று" என்பது புறநானூறு, கஎஎ. நிலாமணல் - நிலாவைப் போன்ற வெள்ளிய மணல். மலர் - உதிர்ந்து கிடப்பன; மலர்ப்பள்ளி - மலராலாகிய படுக்கையில். 'சிறல்விளங்கு நிலாமணற் றுமலர்ப் பள்ளி' என்றும் பாடம்.

கஉ. அஞ்சிலோதி - அழகிய கிலவா

காதற் சுற்ற மறந்து கடைகொள
வேறிடத்துப் பிறந்த வுயிரே போன்று
கடு பண்டறி கிளையொடு பதியுங் காணுள்
கண்டறி யாதன கண்ணிற் காண
நீலமாக்கட னெட்டிடை யன்றியுங்
காலை ஞாயிறு கதிர்விரித்து முகீப்ப
வுவவன மருங்கினி லோரிடங் கொல்லிது
உ0 சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனை
நனவோ கனவோ வென்பதை யறியேன்
மனநடுக் குறூஉ மாற்றக் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கு
மெல்வளை வாராய் விட்டகன் றனையோ
உரு விஞ்சையிற் ரேன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சஞ் செய்தனள் கொல்லோ வறியே
னெருதனி யஞ்சுவென் றிருவே வாவெனத்
திரைதவழ் பறவையும் விரிசிறைப் பறவையு
மெழுந்துவீழ் சில்லியு மொடுங்குசிறை முழுவலு
கூ0 மன்னச் சேவ லரச னகப்
பன்னிறப் புள்ளினம் பரந்தொருங் கீண்டிப்
பாசறை மன்னர் பாடி போல

---

னமயிரினையுடையாள்; "அஞ்சி லோதி யரசனுக் கொருநாள்" என்பர் மேலும்; உசு-ம் காதை, உச; "அஞ்சி லோதி யசையல்" என்பது தூரிஞ் சிப்பாட்டு, கஅ0.

க - கஉ. மணிபல்லவத்திற் கையிற் கழனியிற் பரப்பில் இலஞ்சிக்கையில் மணலிற் பள்ளியில் துயிலெழுந்த மணி மேகலை யென்க.

கக. கடைகொள - முடிவுகொள்ள.

கடு. காணுள் - காணுளாகி.

கசு. கண்டறியாதனவற்றை. காணு-கண்டு.

கள. நெட்டிடை - நெடிய இடம்.

கஅ. 'கால ஞாயிறு' என்றும் பாடம்.

கக. 'உவவனம்' என்பது முதல் மணிமேகலை கூற்று.

உ0. சுதமதி - வினி.

உக. இந்நிலை நனவோ கனவோ.

உசு. மயங்கும் - மயங்குவான்.

உச. மெல்லிய வளையினையுடையாய்; எல்லையுமாம்.

உடு. விஞ்சையிற் ரேன்றிய - வித்தையினலே தோன்றிய.

உள. ஒருதனி - ஒப்பற்றதனிமையை. வாவென - வாவென்று சொல்லிக்கொண்டு.

உஅ - உக. அலையில் தவழ்ந்துசெல்லும் பறவைமுதலிய நீர்வாழ் பறவைசாதிகள் நான்கும்.

உசு. 'ஒடுங்கு சிறை முழுவலும்' என்றும், 'ஒடுங்குசிறை மூயும்' என்றும் பாடம்.

ஊக. 'பன்னிறப் புள்ளும்' என்றும் பாடம்.

உஅ - ஊக. திரைதவழ் பறவைமுதலியனவாகிய பன்னிறப் புள்ளினம்.

ஊஉ. போர்குறித்துவந்து படைவீகளில் விட்ட பகையரசரிருவருடைய படைகளிரண்டும் எதிரெதிரிருத்தல் போல. படி - படைவீடு.

வீசுநீர்ப் பரப்பி னெதிரெதி ரிருக்குங்
துறையுந் துறைசூழ் நெடுமணற் குன்றமும்
பாங்கணுந் திரிவோள் பாங்கினங் காணுள்
குரற்றலைக் கூந்தல் குலைத்துபின் வீழ
வாற்றினள் கூஉ யழுதன ளேங்கி
வீழ்த்திய செய்திய விழுமக் கிளவியிற்
றாழ்த்திய நுறுவோ டந்தையை யுள்ளி
யெம்மிதிற் படுத்தும் வெவ்வினை யுருப்பக்
கோற்றொடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூ ணகலத்
தையா வோவென் றழுவோண் முன்னர்
விரிந்திலங் கவிரொளி சிறந்துதிர் பரப்பி
யுரைபெறு மும்முழ நிலமிசை யோங்கித்
திசைதொறு மொன்பான் முழநில மகன்று
விதிமா ணுடியின் வட்டங் குயின்று
பதுமச தார மீமிசை விளங்கி

---

கூக. 'எதிரெதிர் நிற்கும்' என்றும் பாடம்.

உஅ - கூ. நிறைவழும்பறவை முதலியன, அன்னச்சேவல் அரசனுக நீர்ப்பரப்பில் எதிரெதிரிருக்குந் துறையென்க. இப்படியே, "கம்புட் கோழியுங் கானக் குரனுளையுஞ், செங்கா லன்னமும் பைங்காற் கொக்குங், கானக் கோழியு நீர்நிறக் காக்கையு, முள்ளூ மூரலும் புள்ளும் புதாவும், வெல்போர் வேந்தர் முனையிடம் போலப், பல்வேறு குழுஉக் குரல் பரந்தோதையும்" என்றார் சிலப்பதிகாரத்தும்; நாடுகாண்காதை, ககச - ககக.

கூ - கூஇ. துறையும் குன்றமுமாகிய பாங்கணும். திரிவோள் - மணிமேகலை. பாங்கினம்-பக்கத்திலுள்ள இனக்கூட்டம்.

உச - கூஇ. திருவே வாவெனத் திரிவோள்.

கூ. குரற்றலைக் கூந்தல் - பூங்கொத்தை இடத்தேயுடைய கூந்தல்; "குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்தி" என்பது சிலப்பதிகாரம், ஊர்காண் காதை, அச; "குரற்றலைக் கூந்தல் குலைத்துபின் வீழ" என்பது சிலப்பதிகாரம், நாடுகாதை, கூஅ.

கூஎ. கூஉய் - கூவி.

கூஅ. விழுமக்கிளவியின்-துன்பத்தைப் புலப்படுத்தும் சொற்களால்.

கூக. தந்தையையுள்ளி - கோவலனை நினைந்து.

சஅ. எம்மிதிற்படுத்தும் வெவ்வினை - எம்மை இத்துன்பத்தினிடத்தே அகப்படுத்தும் வெவ்விய வினை; "என்னிதிற் படுத்த வேந்தல்" என்பது சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், உஉக. உருப்ப - முதிர; "ஊழ்வினை யுருத்தெழ" என்பது சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, உகஎ; கோபிக்க வென்றுமாம். 'எம்மிகற்படுத்தும்' என்றும் 'எம்மிதற் படுத்தும்' என்றும்பாடம்.

சக. கோற்றொடிமாதர் - கண்ணகி. வேற்றுநாடு - பாண்டிநாடு.

சஉ. வைவா ளுழந்த - கூரியவாளால் வெட்டுண்டு வருந்திய. அகலம் - மார்பு.

சஇ. நிலமிசை மும்முழமோங்கி.

சக. ஒன்பான்முழம் - ஒன்பதுமுழம்.

சஎ. விதிமாண் - விதி மாட்சிமைப்பட்ட, நூடியின் வட்டங்குயின்று-பளிங்கினால் வட்டஞ் செய்யப்பட்டு. 'வட்டமீ குயின்று' என்றும் பாடம்.

சஅ. பதுமச்தையுடையசதாரம்; பதி

யறவோற் கமைந்த வாசன மென்றே
நோ நறுமல ரல்லது பிறமலஞ் சொரியாது
பறவையு முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனங்
கீழ்நில மருங்கி னகரா டாளு
நிநி மிருவர் மன்னவ சொருவழித் தோன்றி
யெமதி தென்றே யெடுக்க லாற்றார்
தமபெரும் பற்று நீங்கலு நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சினம் புரிந
சூ0 ளிருஞ்செரு வொழிமி னெமதி தென்றே
பெருந்தவ முனிவ னிருந்தற முனாக்கும்

---

மமென்றதற்குப் புத்தனுடைய பாதங்க ளெனினும் பொருந்தும். மீமிசை - மேற்பட்ட இடம்.

சக. அறவோர்கு -புத்தனுக்கு.

சச - சக. சிறந்து பரப்பி ஒங்கி அகன்று குயின்று விளங்கி அமைந்த ஆசனமென்க.

நo. பிற - பிறவற்றை. மரங்கள் நறுமலரையே சொரியும்.

நக. பறவையும் அப்பீடிகையின் பக்கத்திற்சென்று சிறையொலியைச் செய்யாது. 'பாங்குசென் றதிராது' என்றும் பாடம்.

நங. பிறப்பு விளங்கு ஆசனம் - காண்போருடைய பழம்பிறப்புக்கள் அவர்களுக்கு விளங்குதற்குக் காரணமாகிய ஆசனம்.

நச. கீழ்நிலம் - கீழ்த்திசையிலுள்ள இடம். நாகரென்னும் ஒருவகை மனிதர் வாழுநாடு நாகநாடென்பர்; இந்நாட்டின் பெயர், "நாகநன் னாட்டு காணுறி யோசனே" (கூ - ம் காதை, உக) எனவும், "நாக நாடு நடுக்கின் றுள்ளுவன்" (உச-ம் காதை, நிச) எனவும், "நாக நன்னாடாள்வோன்" (உடு - ம் காதை, கஎஅ) எனவும், "நாகநா டாள்வோன்" (உக - ம் காதை, ங) எனவும் இந்நூலுள்ளே பின்பு வருதல் காண்க நாக இலச்சினையை (=பாம்பின் அடையாளத்தை) யுடைமையின், இவர்களுக்கு இப்பெயரும் தக்கதென்ற பெயரும் வந்தனவென்று ஊகிக்கின்றனர்.

நிச. எடுக்கல் ஆற்றார் - எடுக்கும் வன்மை இலராய்.

நிஎ. தம பெரும்பற்று - தம்முடைய பெரிய விருப்பம், நீங்கலு நீங்கார் - நீங்குதலேயும் செய்யார்; "சுழலலுஞ் சுழலு, மோடலு மோடி மொருநிறை யொதுங்கி, நீடலு நீடும்" என்றார் மூன்னும்; ங - ம் காதை, ககக - ககங; "கறைமிட றணியலு மணிந்தன் றக்கறே" என்பது புறநானூறு.

நிஅ. நெஞ்சு புகையுயிர்த்து - மனங் கொதித்து; "வஞ்சினஞ் சாற்றி நெஞ்சுபுகை யுயிர்த்து" என்பர் மேலும்; கஅ - ம் காதை, ஙஎ; "ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே" என்றார் சிலப்பதிகாரத்தும்; தன்பமாலை.

சுக. பெருந்தவ முனிவன் - புத்தன்; பொறிகளை யடக்கி நெடுநாள் மிக்க நியமத்தோடிருந்து அரியசவஞ்செய்தது பற்றி இவனைப் பெருந்தவ முனிவனென்றார்; "ஆதிசான் முனிவ னறவழி" (எ - ம் காதை, சக) எனவும், "பொதுவறி விகழ்ந்து புலமுற மாதவன்" (கo-ம் காதை, அச) எனவும், "போதி மாதவன் பூமியிற் றோன்றும்" (கடு - ம் காதை, உக) எனவும், "பிணிப்பறு மாதவன் பீடிகை" (உடு - ம் காதை, கூச) எனவும் இந்நூலுள்ளே வருதல் காண்க; "பொ

பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்துந்
தரும பீடிகை தோன்றிய தாங்கென.

மணிபல்லவத்துத்துயருற்றகாதை முற்றிற்று.

---

ருந்து போதியி, லிருந்த மாதவர், திருந்து சேவடி, மருந்து மாகுமே" எனவும், "காமருபூம் போதி, யோரார் முனிவரா" எனவும், "பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி, மாதவனீ" எனவும், "மாதவரின் மாதவனீ வானவ ருள் வானவனீ" எனவும், "மருளறுத்த பெரும்போதி மாதவனைக் கண்டிலமால்" எனவும் வருவன முறையே வீரசோழியத்தின் யாப்புப்படலத்துள்ள ரூ, ரக, கடி - ம் கவித்துறை யுதாரணங்கள். 'பெருந்தகை முதல்வன்' என்றும் பாடம்.

சுஉ. புரையோர் - ரண்டிப் பௌத்தரில் உயர்ந்தோர்; "புரையோர்ப் பேணிப் போதலும் போகுவை" (உக - ம் காதை, அரு) எனவும், "அரசவீற் றிருந்து புரையோர்ப் பேணி" (உடி - ம் காதை, அச) எனவும், "புரையோர் தாமும் பூம்பொழி லிழிந்து" (உஅ - ம் காதை, ரகஉ) எனவும் பின்னர் வருதல் காண்க.

டுஉ - சுரூ. மாமணிப் பீடிகை, அறத்தகையாசனம், தரும பீடிகை அது தோன்றியது.

சுரூ - சுரூ. அழுவோர்முன்னர்த் தோன்றிய தென்க.

டுச - சுரூ. இவ்வடிகளிற்கூறிய வண்ணமே "வேகவெந்திற னெகாரட்டரசர், சினமா சொழித்து மனமாசு தீர்த்தார், கறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப், பிறவிப்பிணி மருத்துவ னிருந்த மூலைக்குந், திருந்தொளி யாசனம்" என்று பின்னுங்கூறுவர்; க - ம் காதை, டுஅ - சுஉ.

க - சுரூ. இவள் இன்னணமாக, மணி, பல்லவத்திடைத் துயிலெழும் அஞ்சிலோதி, போன்ற காரணாய்க் கண்டு, திருவே வாவென்ற அழுவோர்முன்னர்த் தருமபீடிகை ஆங்குத தோன்றிய தென்க.

ஒன்பதாவது

# பிடிகைகண்டுபிறப்புணர்ந்தகாதை.

[ஒன்பதாவது மணிமேகலை மணிபல்லவத்திடைப்
பீடிகைகண்டே பிறப்புணர்ந்தபாட்டே.]

ஆங்கது கண்ட வாயிழை யறியாள்
காந்தளஞ் செங்கை தலைமேற் குவிக்கல
தலைமேற் குவிந்த கையள் செங்கண்
முலைமேற் கலுழ்ந்துமுத் தத்திர ளுருத்ததி
ரு னிடமுறை மும்முறை வலமுறை வாராக்
கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந் தென்ன
வீறுநசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்
கெழுவோள் பிறப்பு வழுவின் றுணர்ந்து
தொழுதகை மாதவ தணிபொரு ளுணர்ந்தோய்
கo காயங் கனையினீ யுரைத்ததை யெல்லாம்
வாயே யாகுதன் மயக்கற வுணர்ந்தேன்
காந்தார மென்னுங் கழிபெரு நாட்டுப்

---

க. அதுகண்ட - புத்தபீடிகையைக் கண்ட, ஆயிழை - மணிமேகலையானவள், அறியாள் - தன்னை அறியாளாயினள்; இது புதுமைபற்றிவந்த மருட்கையென்னுமெய்ப்பாடு.

உ - ச. செங்கண் கலுழ்ந்து - சிவந்த கண்கள் கலங்கி, முலைமேல் முத்தத்திரள் உருத்து - கொங்கைகளின்மேலே நீர்த்துளிகளைச் சொரிந்து, அதின் - அப் பீடிகையின்.

ஞ. (?)

சு. மின்கொடி மணிமேகலையினுடைய உருவத்திற்கும், முகில் அவள் கூந்தலுக்கும் உவமை.

எ. அலச - அலைய, 'இறநசுப் பலைய' என்றும் பாடம். நிலஞ்சேர்ந்து - வணங்கி.

அ. எழுவோள் தனது முற்பிறப்பின் செய்தியை என்றே வறிந்து.

க. 'தொழுதகை மாதவ' என்பது முதல் 'என்றிறத்தோனே' என்பதிறுதியாகவுள்ளவை, பிரமதருமனென்னு முனிவன் முற்பிறப்பில் தனக்குக் கூறியவற்றைப் புத்தபீடிகைக் காட்சியாலறிந்து, அம்முனிவனை எதிர்பெய்து, மணிமேகலை கொண்டு கூறுகின்றவையெனக்கொள்க.

கo. காயக்கனை - ஒரு நதியின்பெயர். உரைத்ததை, ஐ - சாரியை; பண்மையொருமை மயக்கம்.

கக. வாயேயாகுதல் - உண்மையாதலே; வாய் - உண்மை; "பொய்யறியா வாய்மொழியால்" என்பது மதுரைக் காஞ்சி, கக.

கஉ. பல நாடுகளைத் தன்னுள்ளே பெற்றதென்பார் 'காந்தாரமென்னுங் கழிபெருநாட்டு' என்றார்.

பூரு வதேயம் பொறைகெட வாழ
மத்தி பதியெனு மரசாள் வேந்தன்
கடி மைத்துன னுகிய பிரம தருமன்
னுக்கவன் றனபா லணிந்தற னுணர்ப்போய்
தீங்கனி காவ லோங்குமித் தீவிடை
யின்றேழ் நாளி லிருநில மாக்க
ணின்றுகடக் கெய்த நீணில வேந்தே
உ0 பூமி நடுக்குறூஉம் போழ்தத் திங்கள்
நாகரன் னுட்டு நாணூறி யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்து
மிதன்பா லொழிகென விருநில வேந்தனு
மாபெரும் பேரூர் மக்கட் கெல்லா
உடு மாவு மாவுங் கொண்டுகழி கென்றே
பறையிற் சாற்றி நிறையருந் தானையோ
டிடவய மென்னு மிரும்பதி நீங்கி
வடவயி னவந்தி மாநகர்ச் செல்வோன்
காயங் கனையெனும் பேரியாற் றடைகரைச்
கூ0 சேயுயர் பூம்பொழிற் பாடிசெய் திருப்ப
வெங்கோ னியாங் குணாத்தவன் நாளிடை
தங்கா தங்கர் வீழ்ந்துகே டெய்தலு
மருளறு புலவனின் மலரடி யதனை
யரசொடு மக்க ளெல்லா மீண்டிச்

---

கசு. பொறை - பாரம்; என்றது பாவத்தை.

கடி. பிரமதருமன் - விளி.

கசு. அவனென்றது, அத்திபதியென்னும் அரசனை.

கஎ. சம்புத்தீவில்.

கஅ. எ - ம் காதை, உச. (?)

கஅ - உ0. இன்றேழ்நாளில் பூமி நடுக்குறும்பொழுதில்.

உ0 - உஉ. இத்தகரும் நாகநாட்டில் நாணூறயோசனைப் பரப்பும் பாதலத்தில் விழுந்து கெடுதலும்.

உக. இனபாசு ஒழிகனை-இந்திரனின் புறத்தே செல்வாயாகவென்றுசொல்ல.

உடி. ஆ - பசு: மக - மற்றை யிலங்ருகன்; நெறிதம் நீங்கு செய்யத் தகாத சாதியர்தலின், பசு முற்கூறப்பட்டது; புறநானூறு, க.

உச. நிறை அருந்தானையோடு - பகை மேற்செல்பொழுது நிறுத்துதலரிய சேனையோடு; "நிறையருந் தானை வேந்தனு னேர்ந்து" என்பது சிலப்பதிகாரம், காட்சிக்காதை, கஅ. 'நிறையிருந் தானை' என்றும் பாடம்.

உஎ. இடவயம் - அத்திபதியின் நகரம். 'இடிவயம்' என்றும் பாடம்.

உஅ. 'வசந்திமாநகர்' என்றும் பாடம்.

கூ. பொழிலில். 'பாடிசெய் திருந்தோன்' என்றும் பாடம்.

உஅ - கூ0. செல்வோன் இருப்ப.

கூக. வெங்கோனென்றது - பிரமதரு மனை.

கூஉ. நகர்கேடெய்தியது கூறவே நாகநாட்டில் நாணூறு யோசனைப்பரப்பினதுகேடும் கூறியதாயிற்று.

கூச. 'எல்லாம் வீழ்ந்து' என்றும்பாடம்.

சூடு சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்துபல வேத்திய
வருளறம் பூண்ட வொருபே ரின்பத்
துலகுதுயர் கெடுப்பா வருளிய வள்ளா
ளாவக் கடலொலி யசோதர மாளு
மிரவி வன்ம னெருபெருந் தேவி
சமை யுலத்தகச் சிறடி யமுத பதிவயிற்
றிலக்குமி யென்னும் பெயர்பெற்றுப் பிறந்தே
னத்தி பதியெனு மாசன்பெருந் தேவி
சித்திபுர மாளுஞ் சிதரன் றிருமக
ணீல பதியெனு நேரிழை வயிற்றிற்
சரு காலைஞா யிற்றுக் கதிர்போற் ருேன்றிய
விராகுலன் றனக்குப் புக்கே னவனெடு
பராவரு மரபினின் பாதம் பணிதலு
மெட்டிரு நாளிலிவ் விராகுலன் றன்னைத்
திட்டி விடமூணுஞ் செல்லுயிர் போனுற்

---

சூடு. எத்திய - எத்த.

சூசு - சூடு. நின்மலரடியதனே எத்த.

சூஎ. அருளிய - உபதேசித்த.

சூசு - சூஎ. இன்பத்தை அருளிய அந் நாளில்.

சூஅ. கடலரவம்போன்ற ஒலியையுடைய அசோதர நகரம்; "மலீதேரான் கச்சியு மாகடலுந் தம்மு, மொலியும் பெருமையு மொக்கும்" என்று வருதல் காண்க.

சூக. 'ஒருபெரு மகளேன்' என்றும் பாடம்.

சமை. அலத்தகம் - அலக்தம் - அரக்கு.

சூக - சமை. தேவியாகிய அமுதபதி.

சூஉ. பிறந்து இலக்குமியென்னும் பெயர்பெற்றேனென விருதிபிரித்துக் கூட்டுக.

சூசு. 'சித்திரபுரம்' என்றும் பாடம். சிதாருகன் மகன்' என்றும் பாடம்.

சூஎ - சூச. பெருந்தேவியும் மகளுமாகிய நீலபதி.

சூசு. இராகுலனெண்பது புத்தனுடைய புத்திரன்பெயர்; அது புத்தனுக்குள்ள பத்தியினுல் இவனுக்கு இடப்பட்டதுபோலும்.

சூடு - சூசு. மனிதர்களுடைய பிறப்பிற்குப்புக்களுக்கு முறையே சூரியனுடைய உதயாஸ்தமனங்களே உவமை கூறுதல் பௌத்த ஸம்பிரதாயமாதலால், 'காலை ஞா யிற்றுக் கதிர்போற் ருேன்றிய விராகுலன்' என்றுன்; இதனை, "குணதிசைத் தோன்றிக் காரிருள் சித்துக், குடதிசைச் சென்ற ஞாயிறு போல, மணிபல் லவத்திடை மன்னுடம் பிட்டுத், தனியா மன்னுயிர் தாங்குல் கருத் தொடு, சாவது மாருக் தலேத்தாள் வேற்ற, னுவயிற் றுதித்தன னுங்கவன்ரு னென்" (சஉ - ம் காதை, சுக - சஎ) எனவும், "தேவி கோசாய் செம்பவ மாக்கையின், மெயினே னுயினும் வீழ்கதிர் போன்றேன்" (உச - ம் காதை, சஎ - சஎஉ) எனவும், "சாக்கா டென்ப திருவருத் தன்மை, யாக்கை வீழ்கதி ரென மறைத் திறைதல்" (சூ - ம் காதை, சஎஉ - சஎசு) எனவும் வருவனவற்ருலுணர்க.

சூஅ. 'மரபிற் பாதம்' என்றும் பாடம்.

சூஉ - சூஅ. அக்காளில் யான் இராகுலனுடன் பாதம் பணிதலும்.

சூஅ. எட்டிருநாளில் - பதினுறநாளில்.

சூக. திட்டிவிடம் - கண்ணில் விடமுடையதோர் பாம்பு; இதன் விழிக்குனிற்பட்டோர் இறப்பர்; இதனை, "திட்டி விடமூணைச் செல்லுயிர் போவழி"

நிற தீயழ லவலெனத் தேயிழை மூழ்குவை
யேது நிகழ்ச்சி யீங்கின் முதலிற்
கவேர கன்னிப் பெயரொடு வினங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்றுபிறப் பெய்துதி
யணியிழை நினக்கோ ரருந்துயர் வருகாண்
நிறு மணிமே கலாதெய்வம் வந்து தோன்றி
யன்றப் பதியி லாரிரு ளெடுத்துத்
தென்றிசை மருங்கிலோர் தீவிடை வைத்தலும்
வேக வெங்கிற லரக்கர் நாட்டசர்
கினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்
கூற கறச்செவி நிறந்து மறச்செவி யடைத்துப்
பிறவிப்பிணி மருத்துவ னிருந்தற முரைக்குந்
திருந்தொளி யாசனஞ் சென்றுகை தொழுதி
யன்றைப் பகலே யுன்பிறப் புணர்ந்தீங்

---

(கக - ம் காதை, கoo) எனவும், " நிட்டி விடமுண நின்னுயிர் போகான்" (உக-ம் காதை, கக) எனவும், " நிட்டி விடமு ணச் செல்லுயிர் போயது ம" (உக - ம் காதை, சo) எனவும், " அழற்க ணாக மாருயி ருண்ண" (உக - ம் காதை, கூக) எனவும், "நத்தகவிழியாவி னல்லுயிர்வா ங்கி" (உக - ம் காதை, அச) எனவும் இத்தலுள்ளே வருவன வற்றாலும், 'புத் தன் திருஷ்டிலிஷமாய்ப்பிறந்த ஜாதக த்து.....கண்விழிப்பிற் பிராணி கள் சாமென்றறிந்து தன் கண்விழியா தேயிடத்தமையின்' எனவும், 'சீ திரு ஷ்டிலிஷமாகாலத்து னினக்குக் கொ லையுன்னமில்லையெனினும் கண்விழிக் கிற் பிராணிகள் சாமென்றறிந்து அதற் கஞ்சி விழியாது மூடத்தன்னே'என வும்வரும் நீலகேசிவிருத்தியமயநீல காத்தாலும் உணர்க. 'விடமுண்டி' என் றும் பாடம். "கண்விழித் தமிழ்விடச் சினவரா வரசு" எனத் தாடகையைப் படைத்தும், "நிட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை" எனச் சும்பகர்ண படலத்தும் கம்பர் கூறியிருத்தல் காண்க.

இக. இராகவுலியும் யோகினிசித்திர சுந்தரமாலை கவேரனென்னும் முனி பெறுதலியிருப்பிப் பிரஹ்மதேவனுக்கு நித்த அரிய தவம் செய்து அவரருளால விஷ்ணுமாயையைத் தமது புத்திரியாக வடைந்து முக்தி பெற்றனரென்றும், பின்பு அக்கன்னி ப்ரஹ்மதேவர் கட்ட ஜியின்படி தனிவடிவுகொண்டு பிரவஹித் தமையால் அந்நதி காவேரகன்னி யென் றும் காவேரியென்றும் பெயர் பெற்ற தென்றும், ஆக்நேயபுராணத்தின் இர ண்டாம்பாகத்துள்ள காவேரிமாகாத்மிய த்தின் உக - ம் அத்தியாயத்தால் தெரி கின்றது; கூ - ம் காதை, இஇ - இக.

இக. மூதூர் - காவிரிப்பூம்பட்டினம். எய்துதி - அடைவாய்.

இச. அருத்தயரென்றது, உதயகுமர னால் மணிமேகலைக்கு உண்டாகும் சித்த வேறபாட்டை.

இக. மனமாசு - காமபமாகிய குற்றம். மனமாச - காமமும் மயக்கமும்.

இச - இக. அ - ம் காதை, இச - கூக.

கo. அறச்செவி - அறத்தைக் கேட் டற்குரிய காது; நிறந்தென்னார், கேட் பிறும் கேளாத்தகையவாதலின்; கீழ்த் தூன், சகஅ. மறம் - பாவம். 'மறச்செ வியடைப்ப' என்றும் பாடம்.

கக. பிறவிப்பிணி மருத்துவன் - புத் தன். மருத்துவன் - வைத்தியன்.

இச - கூ. வைத்தலும் சென்ற சூ னத்தைத் தொழுவாய்.

கூ. 'பின்பிறப் புணருநி' என்றும் பாடம்.

வுரைதெளி வாயெனச்
சூடு சாதுயர் கேட்டுத் தளர்ந்துரு மனத்தேன்
காதலன் பிறப்புங் காட்டா போவென
வாங்குனைக் கொணர்ந்த வரும்பெரும் தெய்வம்
பாங்கிற் றோன்றிப் பைந்தொடி கணவனீ
யீங்கிவ னென்னு மென்றெடுத் தோதினை
எ0 யாங்கத் தெய்வதம் வாரா தோவென
வேங்கின ளழுஉ மிளங்கொடி தானென.

பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை முற்றிற்று.

---

சுச. என - என்று நீ சொல்ல.

சுடு. சாதுயர் கேட்டு - இராகுலன் இறப்பானென்னும் துன்பமொழியைக் கேட்டு.

சுசு. காதலன் - கணவன். பிறப்பும், உம்மை - இறந்ததுதழீஇய எச்சப்பொருளதி.

சுஎ. 'ஈங்குனைக் கொணர்ந்த விரும் பெருந் தெய்வம்' என்றம் பாடம்.

சுக. என்னும் - என்ற சொல்லும்.

எக. இளங்கொடி - மணிமேகலை. அழுஉம்-அழுவாள், இளங்கொடி அழுஉம்.

க - எக. அதுகண்ட ஆயிழை தனை அறியாளாயினள்; அப்பொழுது அவள் கைகள் தலைமேற்குவித்தன; அங்ஙனங் குவித்த கையளாய் உருத்து வந்து சேர்ந்து எழுவோள் பிறப்பையுணர்ந்து, "மாதவ, உணர்ந்தேஎய், நீ உரைத்ததை யெல்லாம் மயக்கறவுணர்ந்தேன், பிரமதருமன், உரைப்போய், இத்தீவிடை இன்றேழ்நாளில் பூமி நடுக்குறலும் போழ்ந்தத்தி இங்கரும் நாகநாட்டு நானூறு யோசனைப் பரப்பும் வீழ்ந்துகெடையத்தும், இதன்பாலொழிக" என்றசொல்ல, வேந்தனும் சாற்றி நீங்கிச் செல்வோன் இருப்ப, எங்கோன், நீ உரைத்தகாலில் நகர் கெடையத்தலும், நின்மலரடியை எல்லாம் எத்த அருளியுஅந்நாளில், புக்கேன் அவனெடி நின்பாதம் பணிதலும், 'சூழ்குவை, எய்துதி, வருநாளில், வைத்தலும், கைதொழுதி, தெளிவாய்' என்ற நீசொல்ல, காட்டாயோவென்ற யான்கேட்ப ஒதினை; 'அத்தெய்வம் வாராதோ' என்ற இளங்கொடி எவ்வி அழுமென்.

பத்தாவது

# மந்திரங்கொடுத்தகாதை.

[பத்தாவது மணிமேகலாதெய்வம் வந்துதோன்றி மந்திரங்கொடுத்தபாட்டு.]

அறவோ ஞசனத் தாய்மொழி யறிந்த
பிறவிய ளாயினள் பெற்றியு மைதென
விமைமல ரேந்தி விசும்பூ டிழிந்து
பொருவறு பூங்கொடி பூமியிற் பொலிந்தென
வந்து தோன்றிய மணிமே கலாதெய்வ
முன்னைப் பிறப்பெய்தி நின்றோள் கேட்ப
வுயிர்க ளெல்லா முணர்வுபா ழாஅப்
பொருள்வழங்கு செவித்தூ ணார்ந்தறி விழுந்த
வறந்தலை யுலகத் தறம்டாடு சிறக்கச்
சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோ
ரிளவள ஞாயிறு தோன்றிய தென்ன

---

க. அறவோன் - புத்தன், ஆசனத்து - ஆசனத்தால்.

க - உ. அறிந்த பிறவியள் ஆயினள் - அறியப்பட்ட பிறவியை உடையாளாயினள்; என்றது முற்பிறப்பை அறிந்தாளென்றபடி. பெற்றியும் ஐது - இவள் பெற்ற பேறும் அழகிது, பெற்றி - பேறு; "பிணிப்பறத் தோர்ந்தம் பெற்றியெய்தவும்" என்பது சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, க00. என - என்ற மணிமேகலாதெய்வம் நினைந்து. 'பெற்றியு மஃதென' என்றும் பாடம்.

- இ. பூங்கொடி என்றி இழிந்து பூமியில் மின்னினைப் போலத் தோன்றிய தெய்வமென்க.

உ. முன்னைப் பிறப்பு - முற்பிறப்பு; நின்றோள் கேட்ப - நின்ற மணிமேகலை கேட்கும்படி. "அறிபிறப் புற்றனே" என்பர் பின்னும்; க0 - ம் காதை, எடு.

எ. 'உயிர்க ளெல்லாம்' என்பது முதல் புத்தனுடைய பாதபீடிகையை வணங்கும் மணிமேகலாதெய்வத்தின் வார்த்தை. உணர்வு பாழாஇ - அறிவின்றி.

அ. பொருள் - தருமம்; "பொருணீங்கிப் போச்சாந்தார்" என்பதிற் காண்க; இது திருக்குறள், உசக. தார்த்தென்னூர், அறத்தைக் கௌதோழிதலின்; மூன்பு "அறச்செவி நிறந்து" (க - ம் காதை, க0) என்றதும் இதுபற்றிப் போலும்.

க. வறம் தலை உலகத்து - வறுமையைத் தன்னிடத்தேயுடைய உலகத்தில், அறம் பாடு சிறக்க - தர்மோபதேசத்தை அதிகரிக்க; பாடு=படுதல் - உண்டாதல்; "அறம்பா டறிந்தனே" என்பது பின்னும்வரும்; க0 - ம் காதை, எடு; பாடு சிறக்க - பெருமை சிறக்கவென்றுமாம்.

க0. சுடர் - சூரியன், வழக்கு - வழங்குதல். காலை - காலத்தில்.

கக. இளவள ஞாயிறு - பால சூரியன்.

## கo.—மந்திரங்கொடுத்தகாதை.

நீயோ தோன்றினை நின்னடி பணிந்தே
னீயே யாகிநிற் கமைக்கவிவ் வாசன
நாமிசை வைத்தேன் றலைமிசைக் கொண்டேன்
கரு பூமிசை யேற்றினேன் புலமடு றென்றே
வலங்கொண் டாசனம வணங்குவோண் முன்னர்ப்
பொலங்கொடி நிலமிசைச சோர்தெனப் பொருந்தி
யுன்றிரு வருளா லென்பிறப் புணர்ந்தே
னென்பெருங கணவன் யாங்குள னென்றலு
உo மிலக்குமி கேளா யிராகுலன் றன்னெடு
புலத்தகை யெய்தினை பூமடொழி லகவையி
னிடங்கழி காமமோ டடங்கா ஞயவன்
மடந்தகை மெல்லியன் மலரடி வணங்குழிச
சாது சகரன் மீவிசுமடி திரிவோன்

---

கஉ. பீடிகையைப் புதைனுவே பாவித்தமையால், 'நீயோ தோன்றினை' எனறார்; "நீயேயாகி" எனறு பின்னர்க கூறுவதும் இக்கருத்துப்பற்றியே, பின் வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும். 'நீயே தோன்றினை' என்றும் பாடம்.

கஙி. புலம்பு - வருத்தம்: "புலம் புசேணகலப் புறுவி ராருவிர" எனபது மலைபடுகடாம்; சகஉ. என்று - என்று சொல்லி.

சசு. மாணிடமகளாய் நிற்றலின், 'வணங்குவோன்' எனத செய்வதனை உயர்திணையாற் கூறினர்; "யான்செய்த பாவ மென்னுரள்" எனபுழிப்போல. இது சீவகசிந்தாமணி, நாமகளிலமபகம, உசசு.

கஎ. பொலங்கொடி - பொற்கொடி; என்றது காமவல்லியை. பொருநதி - வணங்கி.

சு - கஎ. கேட்பப் புலம்பறகவென்று ஆசனததை வலங்கொண்டு வணங்குவோண்முன்னர்ப் பொருநதியெனச.

கஅ. அவளைத் செய்வமாகவறிநதே மணிமேகலை 'உன்றிருவருளால்' என்றாள்.

கக. என்றலும்- என்று மணிமேகலை கேட்பவும்.

உo. 'இலகுமி' என்பதுமுதல் மணிமேகலாதெய்வதத்தின் வார்தனதை. மூங்கைப் பிறப்பெய்தி நின்றே ளாதலின், மணிமேகலையை அதனெய்வம் இலகுமியென றழைதத்து.

உக. புலதத்தகையெய்தினை - ஊடி னாய்; புலத்தல்-ஊடுதல். அகவையின்- உள்ளிடதனே.

உஉ. இடங்கழி காமமொடு - வரம்பு கடந்து எழுதற்குக காரணமாகிய காம மோடு; இப் படியே, உசயகுமானைப் பற்றிச சொல்லுமபொழுது, "இடங் கழி காமமொடடங்காளுய்' என்பர் பின்னும்; கஅ - ம காதை, சகக "இடங் கழிமான் மலே" எனபதற்கு 'இராக வேகதனையினோடகும் மயகமுடைய மாலைகாலம்' என்று பொருள்கூறுவர், புறப்பொருள்வெண்பாமாலை யுரையா சிரியர்; பெருநதினைப்படலம், ஙி. "வம் பப் பரதனை" என்பதற்கு 'இடங்கழிகா மதனாலாகிய குணடகனனிகை' என்று பொருளகூறுவர் அடியார்க்குநல்லார்; சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, உசக.

உசு. நின்னடியை வணங்கும்பொ ழுது.

உச. சாதுசக்கரன் - காரணப்பெயர்; பெரியோர்கூட்டதனிலுள்ளவனென்ற வாறு. சகரம் - மண்டலம்; இனி, இதற்கு 'ஓம் மணிபதமேஹூம்' என்ற மந்திரம் சுற்றப்பகதனில எழுதப்பட்டுள்ள உலோகதனாலாகிய சக்கரமொன்றை வலக்கையிலவைத்து மேற்கூறிய மந்திரதனை உருவேற ஜபிதனுக்கொண

உரு றெருமா லொழித்தாங் கிரத்தின தீவத்துத்
தரும சக்கர முருட்டினன் வருவோன்
வெங்கதி ரமையத்து வியன்பொழி லகவயின்
வந்து தோன்றலு மயங்கினை கலங்கி

---

டேனும் ஐபியாமலேனும் அச்சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டிருத்தல் பௌத்தர்களிற் லெருடைய ஸம்பிரதாயமாதலால, இவன் அங்ஙனம் செய்யப்பட்ள்ள நல்லசக்கரத்தைச் சுழற்றிக்கொண்டிருத்தலேயுடையனென்ற பொருள்கூறினும பொருந்தும். இஃது இக்காலத்து **'தீபேத்'** தேசத்துப் புத்தர்களுடைய வழக்கமாகக் காணப்படுகின்றதென்றும், இம்மந்திரத்தை இங்ஙனம் ஜபித்தலால் வரும்பயன, நரகலோகமுதலியவற்றில் முறையேபிறவாமல் தாண்டிச்சென்று நிருவாணமடைதலென்றுங்கூறுவர். மீ விசும்பு திரிவோன் - மேலேயுள்ள ஆகாயத்திற் சஞ்சரிப்பவன்; பௌத்தரில் **இருத்தி** (=ரித்தி) பெற்றோர் ஆகாயவழியேயென்று அவ்வவ்விடங்களில் இறங்கிப் புத்தனுடைய பாதபீடிகை முதலியவற்றைத் தரிசித்ததலும, பக்குவிகளுக்குத் தருமோபதேசஞ்செய்தலும், எனோர்க்கு எண்ணியவற்றையளித்தலும் மரபு; இத்தன்மையையுடையோர சாரணரென்றும் சொல்லப்படுவர். இதனை, "நிலத்திற் குளிதது நெடுவிசும் பேறிச் சலத்திற் றிரியுமோர் சாரணன் றோன்ற" (உச - ம் காதை, சசு - சஎ) எனவும், "தரும சாரணர் தங்கிய குணத்தோர், கருமுகிற் படலத்துக் ககனத் தியங்குவோ, ரரசற் கேது வவ்வழி நிகழ்தலிற், பகையோர் தாமும் பூம்பொழி லிழிந்து" (உஅ - ம் காதை, கoக - ககஉ) எனவும் பின்புவருவன வற்றாலுணர்க. இப்படியே சமணரில இருத்திபெற்றோரும் சாரணரென்று சொல்லப்படுவர்; "நீ நினிற் பூவில் வானினீரைத்தழுதி யொதுங்கு கின்ற, சாரண னெண்ம ராவர் சமணரி லிருத்தி பெற்றோர்" என்று வருதல்காண்க; இது **சூடாமணிநிகண்டு**, இரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதி, ச.

உடு. தெருமரல் - மனக்கவற்சி, "செய்யார் சேஎந் தெருமரல் கலிப்ப" என்பது பொருநராற்றுப்படை, கசூ. இரத்தின தீவத்து - இரத்தின தீபத்தில; இது மணிபல்லவமென்னுந் தீவத்திற்கு அயலிலுள்ளதோர் சிறுதீவு. இதிற் புத்தரனுடைய பாதத்தருமிகள் பொருந்திய உச்சியையுடைய மலையொன்றுண்டு. அதன் பெயர் சமந்தகூடமென்பது; இதனை, "ஈங்கித னியலக தி்ரத்தின தீப, தோங்குயர் சமந்தத் துகளி மீமிசை, யற வியங கிழவோ னடியீண யாகிய, பிறவி யென்னும் பெருங்கடல் விடீஇ, மறவி நாவா யாங்குள தது" என்று மேல்வருதலாலுணர்க; கக - ம் காதை, உக - உடு.

உசு. உருட்டினன் - வினையெச்சமுற்று. தருமம் முதலும் முடிவுமில்லாத நிதியப்பொருளென்பார் தருமசக்கரமென்றும், அதனைத் தடையினறிச்செலுத்துதலின்றென்பார் உருட்டினனவருவோனென்றுங்கூறினர, இப்படியே "அறகதி ராழி றிறப்பட வருட்டி" எனருர்முன்னும்; சி - ம் காதை, எசு; தருமத்தை ஸநாதனமென்று வடநூலார் கூறுதல்காண்க. தருமத்தைச் சக்கரமாகவும, அதன் அங்கங்களாச் சக்கரத்திற்குரிய அங்கங்களாகவும் உருவகஞ்செய்துநூல்கள் கூறும்; அதனை, **அச்வகோஷபோதிஸத்துவரென்பவரால்** வடமொழியிற் செய்யப்பட்டுள்ள **புத்தசரித்காவ்யமென்னு** நூலில் **தர்மசக்கரப்பிரவர்த்தனத்தியேஷண** என்னும் பதினான்காம் வர்க்கத்தினிறுதியிற காண்க. இனி, முன்னர்க்கூறிய உலோகசகாரத்தைக் கையில்வைத்தலுஞ சுழற்றிவருவோனெனினும் பொருந்தும; இப்பொருளை, சாதுசக்கரனென்னும் பெயருக்குப் பொருத்தமுடைத்தாதல காண்க.

உஎ. வெங்கதி ரமையத்து - உச்சிப் பொழுதில்; சி - ம் காதை, சுப, கக - ம் காதை, கo2.

உச - உஅ. சாதுசக்கரன் திரிவோன் வருவோன அவன் வந்து தோன்றலு மெனக.

## கo.—மந்திரங்கொடுத்தகாதை.

மெல்லியல் கண்டனை மெய்ந்நடுக் குற்றனை
கூ0 நல்கூர் நுசுப்பினை நாணினை யிறைஞச
விசாகுலன் வந்தோன் யாரென வெகுளலும்
விசாமலர்க் கூந்த லவன்வாய் புதையா
வானூ டிழிந்தோன் மலரடி வணங்காது
நாநல கூர்ந்தனை யென்றவன் றன்னெடு
கூடு பகையறு பாத்தியன் பாதம பணிநதாங்
கமர கேணின் றமரல மாயினு
மந்நீர் தண்ணீ ரமுதொடு கொணர்கே
முண்டி யாமுன் குறிப்பின மென்றது
மெம்மனை யுண்கே னீங்குக் கொணர்கென
சo வந்நா ளவனுண் டருளிய வவ்வற
நின்னுங் கொழியாது நின்பிறப் பறுத்நிடு
மூவவன மருங்கி னுன்பாற் றேன்றிய
வுதய குமர னவனுன் னிராகுல
நுங்கவ னன்றியு மவன்பா னுள்ள
சடு நீங்காத் தன்மை நினக்குமுண் டாகலிற்

---

உக-கூ0. மெய்நடுக்குறுதல முதலியன இறைபொருளாகப்பிறந்த அசசமென்னு மெய்ப்பாடு.

கூஉ. சாதுசகரனேது தன் மனைவி இறைஞ்சக்கண்டு வெகுண்டமையின், இது குடிகோள்பற்றிவநத வெகுளி யென்னு மெய்ப்பாடு. 'வந்தோயாரென' என்றும் பாடம்.

கூச. நாநல் கூர்ந்தனை - நாவறமை யுற்றாய்; என்றது-சாரணனேத்துதியாது வீணேயிருந்தாயெனறு இகழ்ந்சபடி, ''நாடாது துணிந்துநா நல்கூர்ந் தனை'' என்பர் பின்னும; கக - ம் காதை, ச.

கூநி. பாத்தியன் - (புத்தனுடைய) பாதத்திற்கு அனபன்; ''நிருவாதவூர்ச் செபாத்தியன்'' என்பதில 'பாத்தியன' என்பது இப்பொருளில வருதல்காண்க. இது நம்பியாண்டார்நம்பிகள் திருவாகரு. 'பகையறு பார்த்திபன்' எனறும் பாடம்.

கூசு. நின் தமரலம் ஆயினும் - யாம் நினக்குச் சிறந்த அன்பரல்லேமாயி னும்.

கூள. அமுது - அன்னம்; இஃது அமிர்தமென்னும் வடமொழிச்சிதைவு. இத னை ஆருயிர் மருந்தென்று இந்நூலுள்ளே பலவிடதது நகூறுவர்.

கூஅ. உண்டி - உண்பாய். என்றலும் - என்று நீ சொல்லலும்.

கூக. எம்மனை - தாயே. கொணர்க என - கொண்டுவருகவென்று சாதுசக்கரன் சொல்லி.

சo. அவன் உண்டருளிய அவ்வறம் - சாதுசக்கரன் அமுதுசெய்தமையாலுண்டாகிய அந்தப்புணணியம். 'அவனுண் டருளிய வவ்வமுது' என்றும் பாடம்.

சக. நின்னுங்கொழியாது - நின்னை விட்டு நீஙகாது; நின்னுங்கு:—சக - ம் காதை, சஎ.

சo - சக. அவ்வறம் நின்பிறப்பை அறுத்திடுமெ.

சகூ. உதயகுமரனுகிய அவன்.

சஎ. அவனனறியும்-அவன் உன்பால் நீங்காதிருப்பத்தைச் செலுத்துவதல லாமலும்.

சஅ - சடு. உதயகுமரனே மணிமேகலை இடைவிடாது நினைத் திருந்தாளென்

கந்த சாலியின் கழிபெரு வித்தோர்
வெந்துகு வெண்களர் வீழ்வது போன்மென
வறத்தின் வித்தாங் காகிய வன்னோயோர்
திறப்படற் கேதுவாச சேயிழை செய்தே
நூ0 னின்னுங் கேளா யிலக்குமி நீநின்
றவ்வையு ராவோர் தாயையு மீயாது
மாங்கவர் தம்மை யங்கநாட் டகவையிற்
கச்ச மாளுங் கழற்கால வேந்தவ
ணுசசய னெனபோ லிருவவ் கொண்டன
நூநு னவருட னுங்கவ னகன்மலி யாடிக
கங்கைப பேரியாற் றடைகரை யிருந்துழி
மறவண நீத்த மாசறு கேள்வி
யறவண னுங்கவன் பாறசென் றேனை
யீங்கு வருநீ யாரென் றெழுந்தவன்
சுo பாங்குளி மாகவன் பாதம் பணிகலு

---

பதை, உதயகுமரன் வெட்டுண்டு இறந்த பொழுது, "உவவன மருடி னினபா ஓள்ளர், தவிர்வீலை ஞதிலிற் றலைமக டோன்றி, மணிபல லவதிடை பென னேபாங குய்த்துப், பிணிப்பது மாதவ பீடிகை காட்டி, யென்பிறப் புணர்த்" எனது அவள் கூறியவாற்றலுமுணர, உக - ம் காதை, கசு - கஎ.

சசு. கந்தசாலி - நிறந்வாசனையுள்ள ஒருவகை நெல; இப்பெயரினதாகிய நெலலொனறு உண்டென்பது, துசதுமா ரசரித்திரத்தின் உதசரார்தததில் அறி வது உச்சுவாசதநிலுள்ள கோமினிகதை யால கன்குபுலப்படும். இகதாலதது நிக நெல கன்னடதேசதநுளள மகலாபுர தநில் (மங்களூர்) மிகுதியாகவள்ளது. மணிமேகலையின உயர்வுபறறி அவளுக் குக் கந்தசாலி உவமைகூறப்பட்டது. கழிபெருவித்து - மிகச் சிறநதவிதை.

நஎ. களர் - உப்புநிலம். வீழ்வது போன்ம் - விதைகப்படவதைபோ லகும; எனற து, கருடத நகதமூலமாகியபீ உசபகுமாரன விருபபாபாபின உன நிபல்பு களால்சித்தில் விதைக்கப்பட்ட கந்தசாலியின் விதையைப் போன்ம் பய னற்றப்போமென்றபடி. என - என்ற கினைந்து. 'வெங்களர்' என்றும் பாடம்.

நஅ. திருமத்திற்குமூலமாகியஉன்னை.

நஅ - நக. ஞர்நிறப் படற்கு ஏதுவாக செய்தேசா - நின்னை ஒருவழிப்படுதற் குக காரணமாகக்செய்தேன; ஒருவழி - வைராகியமார்கம; "ஒருமன மெடுத் யிருமினைப் பிணிவிட, மூப்பதை கட நது காமவகையைப் பொருதணர்ந்து" என னு மருதபகாணக. இது, வீரசோழி யம், யாப்புப்படலம, நக - ம கலிநது றைபினறுகாணக. செயதெனனாது, மணிமேகலையை உவனதது நிவிருநது மணிபல்லவ தநிற்குக் கொண்டுபோய் புதகனது பாரபபிடிகையைக காட்டி முற பிறப்பினசெய்தியை அவள் அறிந்த உய்யுமபடி செய்ததனை, உச - ம் காதை, கூ - கஎ.

நூக. தவ்வையாராவோர - முன் பிற தோரார்வோர். 'தவ்வையு ராகிய தாரை யும் வீரையும்' என்றும் பாடம.

நூஉ - நஙா. அவர்தம்மைத துச்சயன மணஞ்செய்துகொண்டான்.

நஙநி. அவருடன - தாரை வீரையென பவருடன. ஆடி - வினையாடி.

நஙஅ. அவன் - துச்சயன. சென்றே னை - சென்ற அறவணவடிகளை.

நஙஉ - நஙஅ. உ - ம காதை, சுo - சுக.

நூக - சுo. அவன பாங்கு உளளி. அவனுடைய இயல்பை நினைந்து. பணி தலும் - துச்சயன் வணங்குசலும.

மாதி முதல்வ னறவாழி யாள்வோன்
மாதுய செவ்வ மக்கனீ நீக்கி
விலங்குந் தமமுள் விளருஉம்பகை நீக்கி
யுடங்குயிர் வாழ்கவென் றுள்ளங் கசிந்துகத்
கூடு தொன்றுகா லத்து நின்றற முணைத்த
குன்ற மருங்கிற் குற்றங் கெடுககும்
பாத பங்கயங் கிடத்தலி னீங்கிது
பாதபங் கயமலி யெனும்பெயர்த தாயது
தொழுது வலங்கொள்ள வந்தே னீங்கிப
எo பழுதில காட்சியீர் நீயிருந் தொழுமென
வன்றவ ளுணைதத வவ்வுரை பிழையாது
சென்றுகை தொழுது சிறப்புச் செயதலின்
மாதவி யாகியுஞ் சுதமதி யாகியுங்
கோதையஞ் சாய னின்னெடு கூடின
எடு ரறிபிறப புற்றனீ யறமபா டறிந்தனீ

---

சுக. சு - ம் காதை, கக. ஆதிமுதலவ னென்பது முதலியவை, அறவணவடி கள தூச்சயனீ நோக்கிக கூறும் வார் தை.

சுஉ. மாதுயர் எவ்வம் - மிக்கதுன்பம்; என்றது பிறப்பிறப்புகளை; துயரெவ் வம - ஒருபொருட் பன்மொழி. நீகனி - நீங்கச்செய்து.

சுங. வெளுஉம்பகை - அஞ்ஞதற்குக் காரணமாகிய பகை 'பகைநீங்கி' என றும் பாடம்.

சுச. உயிர் உடங்கு வாழ்க என்று - எல்லாவுயிர்களும் தம்முள மனவேறுபா டினறி ஒத்து வாழ்வனவாக வெனறு கருதி; எல்லாவுயிர்களும ஒருபடியாக நிருவாணமடைந்து வாழ்கவென்றுகருதி யென்று கூறினும பொருந்தும். உள்ளம் கசிந்து உக - மனம் கருணைமிகுதியால இரங்கிககாய.

சுடு தொன்று காலத்து - பழையகா லத்தில்.

சுஉ - சுடு. கஉ - ம் காதை, அஎ-கஅ.

சுடு - சுசு. நின்று அறம உணைதத குன் ற மருங்கில்-எலலா உயிர்களும காணும் படி நின்று தருமோபதேசஞ்செய்த மலை யினிடத்தே. அம்மலை கிருத்திரகூடம்; அது, மகதகேசதத்தின் இராஜதானியா கிய இராஜகருகநகரத்தின் ஸமீபத்தி லுள்ளது. குற்றம் - காமவெகுளி மயக கங்கள்.

சுக - சுசு முதலவன் உள்ளோன் உயிர வாழ்கவெனறு நின்று அறம உரை தீதருளறம.

சுஎ. பாதபங்கயம் - புத்தனுடைய பாததாமரைக குறிகள்.

சுஅ. பெயர்த்தாயது - பெயராயுடை தீதாயிற்று.

எo. பழுது இல காட்சியீர் - குற்றமி லலாத அறிவினையுடையீர். தொழுமெ னை - தொழுமினென்று துசசயன முத வியோரை நோக்கி அறவணவடிகள் சொல்ல. 'தொழுமினென்று' எனறும பாடம்.

எக. பிழையாது - தப்பாது.

எஉ. சிறப்பு - விழா; "சிறப்பொடு பூசனீ செல்லாது" என்பது திருக்குற ளில், கஅ; பூசையெனினும் பொருந் தும்.

எச. கோதையஞ்சாயலென்றது-மணி மேகலையை.

எங - எச. கஉ - ம் காதை, கஎ - கஅ.

எடி. அறிபிறப் புற்றனீ - முற்பிற ப்பை யறிந்தாய; 'முந்தைப் பிறப்பெ ய்தி னின்றேள்' என்று இக்காதையில்

பிறவற முணைப்போர் பெற்றியுங் கேட்குவை
பல்வேறு சமயப் படிற்றுரை யெல்லா
மல்லியங் கோதை கேட்குறு மந்ர
ளிளையள் வளையோ ளென்றுனக் கியாவரும்
அ0 வினைபொரு ளுணாயார் வேற்றுரு வெய்தவு
மந்தரந் திரியவு மாக்குமிவ் வருந்திறன்
மந்திரங் கொள்கென வாய்மையி னெதி
மதிகாண் முற்றிய மங்கலத் திருநாட்
பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்
அநி திருவற மெய்துதல் சித்தமென் றுணர்நீ
மன்பெரும் பீடிகை வணங்கினை யேத்தி
நின்பதிப் புகுவா யென்றெழுந் தோங்கி
மறந்தது முண்டென மறித்தாங் கிழிந்து
சிறந்த கொள்கைச் சேயிழை கேளாய
கூ0 மக்கள் யாக்கை யுணவின் பிண்ட

---

முன்னுங் கூறியிருத்தல காண்க; சு. அறம பாடு அறிந்தனை - தருமோபதேசத்தியை யறிந்தாய்; 'அறம்பாடு சிறக்க' என்னூர் முன்னும்; கo - ம காதை, கூ.

எசு. பிற அறம் உளைப்போர் - மற்றைச் சமயதருமங்களைச்சொல்லுவோர்.

எஎ. படிற்றுரை - பொய்வார்த்தை.

எஅ. அல்லியங்கோதை - முன்னிலைப்பெயர். 'கேட்குறுநாளில்' என்னும் பாடம்.

எக. இளையள் - இளமையையுடையாள். வளையோள் - வளைகளையுடையாள்.

அ0. வினைபொருள் உணாயார் - வினைகின்ற தத்தம் சமயத்துவங்களைச சொல்லார்; இயலபன்றெனபார் வினைபொருளென்னார்; ஆதலாலென ஒருசொல் வருவிக்க. வேறறுரு - வேறுவடிவம்.

எக - அ0. உசு - ம் காதை, சுஅ-சுக.

அக. அந்தரம் - ஆகாயம். 'அந்தரஞ் சேறலும்' என்னும் பாடம்.

அஉ. வாய்மையின் ஓதி - நால்வகை வாய்மையுடன் அம்மந்திரங்களை உபதேசித்து; வாய்மையின் - உண்மையுடனென்றுமாம்.

அசு. மதி நாள் முற்றிய - சந்திரன் நான்தோறும் ஒவ்வொரு கலையாகவளர்ந்து முற்றுப்பெற்ற, மங்கலத்திருநாள் - பௌர்ணமையில்; புதுதன ஞானம பெற்றதினம் வைசாகசுத்த பௌர்ணமையாதலால, அதனை விளக்குதற்பொருட்டு 'மதிநாண முற்றிய மங்கலத் திருநாள்' எனறார். புதுதன் பிறந்த தினமும் அதுவே. இதனால், வைசாகசுத்த பௌர்ணமையைச் சிறந்த திருநாளாகப் பௌத்தர் இக்காலத்துங் கொண்டாடுவர்.

அச பொதுவறிவு இகழ்ந்து - சாமானிய ஞானத்தைவெறுத்து, புலம் உமாதவன - நான்குவகையகிய சதுரியங்களை அறிதற்குரிய ஞானத்தையடைந்த புத்தனுடைய; புலம - மெய்ஞ்ஞானம, திருமருகாற்றுப்படை, சுசு.

அஞ. சித்தம் (=வித்தம்) - நிச்சயம்.

அசு. வணங்கினை - வணங்கி.

அஎ. மறித்து ஆங்கு இழிந்து - மீட்டும் அவ்விடத்தேயிறங்கி.

அக. கொள்கை - விரதம்; "சான்ற கொள்கை" என்பது மதுரைக்காஞ்சி, சஅ0.

கூ0. மனிதருடைய உடம்பு உணவாலாகியதொருதி; 'உண்டி முதற்றே யுணவின் பிண்டம்' என்பது, புறநானூறு, கஅ.

## கo.—மந்திரங்கொடுத்தகாதை.

மிப்பெரு மந்திர மிரும்பசி யறுக்குமென்
றுங்கது கொடுத்தாங் கந்தர மெழுந்து
நீங்கிய தாங்கு நெடுந்தெய்வந் தானென.

மந்திரங்கோடுத்தகாதை முற்றிற்று.

---

கக. எல்லாமந்திரத்திலும் சிறந்த தென்பார் பசியொழிக்குமந்திரத்தைப் பெருமந்திரமென்றார்.

கூ. நெடுந்தெய்வம் நீங்கியது. 'நீங்கிய தாங்க நெடுந்தெய்வம்' என்றபாடம்.

க - கூ. ஆயிழை ஆசனத்தால் அறிந்தபிறவியளாயினள்; இவள்பெற்றியும் ஐதென்று வந்துதோன்றிய தெய்வம், நின்றேள்கேட்ப "நீயோதோன்றினை; நின்னடிபணிந்தேன்; வைததேன; கொணடேன்; ஏற்றினேன்; புலம்பு அறுக" என்று ஆசனதைவலங்கொணடு வணங்காநிற்ப, அப்பொழுது அதெய்வத்தின்முன்னாப் பொருந்தி 'உனதிருவருளால் எனபிறப்புணாந்தேன், என்கணவன் யாங்குளன்' எனறு மணிமேகலைகேட்டலும், அதெய்வம் "இலகுமி! கேள், பொழிலில் இராகுலனெடு நீபுலந்தாய்; அப்புலவியை மாற்றவேண்டி அவன் உன்னடியை வணங்கும்பொழுது, சாதுசக்கரன் திரிவோன் வருவோன் அவன் வெங்கதிர மயத்துப் பொழிலினுள்ளே வருதோன்றலும், நீ கண்டமயங்கிக கலங்கி நெகுநற்று நாணி இறைஞ்ச, இராகுலன் 'வந்தோன்யார்' என்று வெகுளலும், நீ அவன்வாயைப்புதைத்தது 'இழிந்தோனுடைய அடியையவணங்காது நாலகூர்ந்தனை' எனறுசொலலி அவனெடு பாதகியன்பாதம்பணிந்து, 'அமர, கேள, கோணர்கேம்; உணடி; யாம் உன்குறிப்பினம்' என்றலும், அவன் 'கொணர்க' என்று உணடருளிய அவ்வறம் நின்னையொழியாது நின்பிறப்பையறத்திடும்; உவவனத்தில்தோன்றிய உதயகுமரன் முன் இராகுலன்; அவனுக்கன்றி அவன்பால உள்ளநீங்காத்தன்மை நினகு முண்டாதலின், நினதியல்பு வீழ்வது போலுமென்றெண்ணி உன்னை ஓர்கிறப்படற்கு ஏதுவாச்செய்தேன்; இலக்குமி! இன்னுங்கேள்; தாயையும்வீயையும் நின்றவ்வையராவோர்; அவர்தம்மைத் துச்சயன்கொண்டனன்; அவன் அவருடன் மலையாடி அடைகையிலிருந்துழிச் சென்ற அறவணனை அவன 'வருதீர்யார்' என்று எழுந்து அவனுடைய பாததைப்பணிதலும், அவன 'பாதபங்கயதைத் தொழுது வலங்கொள்ளவந்தேன; நீருந்தொழும்' என்ற வுரைபிழையாது தென்று தொழுது சிறப்புச செய்தலின், தாயையும வீயையும் நின்னெடு கூடினர்; உற்றனை; அறிதனை; பெற்றியும் கேட்குவை; அந்நாள், யாவருமு உனக்கு உரையார்; ஆதலால், இம்மந்திரங்கொள்க" என்று அவற்றை உபதேசிதது, "உணர்நீ; நினபதிப்புருவாய்" என்று எழுந்தோங்கி அதெய்வம், "யான் மறந்ததுமொன்றுண்டு" என்று மறித்தும் இழிந்து, "கேளாய்; யாக்கை உணவின்பிண்டம்; இப்பெருமந்திரம் இரும்பசியறுக்கும்" எனறு அம்மந்திரத்தைகொடுதது எழுந்து நீங்கியதென வினமுடிவுசெய்க.

பதினென்றாவது

# பாத்திரம் பெற்ற காதை.

[பதினென்றாவது மணிமேகலைக்குத் தீவதிலகை
கோமுகியென்னும் பொய்கையிலெழுந்த பாத்திரங்கொடுத்தபாட்டு.]

மணிமே கலாதெய்வ நீங்கிய பின்னர்
மணிபல் லவத்திடை மணிமே கலைதான்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையுந்
தண்மலர்ப் பொய்கையுந் தாழ்ந்தன வுணர்கி;
காவதந் திரியக் கடவுட் கோலத்துத்
தீவ திலகை செவ்வனந் தோன்றிக
கலங்கவிழ் மகளிரின் வந்திங் கெய்திய
விலங்குதொடி நலா யாநீ யென்றலு
மெடபிறப் பகத்துள் யாநீ யென்றது
பொற்கொடி யன்னாய் பொருந்திக கேளாய்
போய பிறவியிற பூமியங் கிழவ
னிராகுலன் மனையா னிலக்குமி யென்பே

---

கூ. குன்றமுதலியவற்றிற்கு இரண்டனுருபு வீரிக்க.

ச. 'தண்புனற் பொய்கையும்' என்றும் பாடம். தாழ்ந்தனள் நோக்கி - தாழ்ந்து நோக்கி=மெல்ல நோக்கி.

டு. காவதம் - காசம்; 'வ' பகுதிப் பொருள் விகுதி யென்பர் **அடியார்க்கு நல்லார்**; **சிலப்பதிகாரம்**, நாடுகாண் காதை, கூசு. கடவுட்கோலம் - தெய்வ வேடம்.

க - டு. நீங்கியபின்னர் மணிமேகலை நோக்கித் திரியவென்க.

கூ. தீவதிலகை.— பதிகம் - டுசு; இந்திரனேவலாற் புத்தனுடைய பாதபீடிகையைப் பாதுகாத்துக்கொண்டு மணிபல்லவத்திலிருப்பவள்; கக - ம் காதை, உஎ - உஅ. செவ்வனம் - செவ்விதாக; வேறுகெனினும் பொருந்தும்; "திருமகளிருக்கை செவ்வனம் கழிந்து" என் பதிற்காணக; இது **சிலப்பதிகாரம்**, கடலாடுகாதை, கூஎ.

எ. கலம் - கப்பல். மகளிரின் - மகளிர்போல.

அ. தொடி - வளை. என்றலும் - என்ற தீவதிலகை சேட்கவும் 'இலங்குதொடி யன்னாய் யாநீ யென்ன' எனறும பாடம.

சு - அ. தீவதிலகை தோன்றி யாநீ யென்றலும்

கூ. 'எப்பிறப் பகத்துள்' என்பதுமுதலியன மணிமேகலையின் வார்த்தை.

கூ பொற்கொடி யன்னாய் - காமவல்லியையொப்பாய்.

கக. போய பிறவி - சென்ற பிறப்பு. கிழவன் - உரியவன்.

கஉ. மனையான் - யான் மனைவி. இலக்குமி என்பேர் - இலக்குமியென்பது

## ககஃ—பாத்திரம்பெற்றகாதை.

ராய பிறவியி லாடலங் கணிகை
மாதவி யீன்ற மணிமே கலையா
கரு னென்பெயர்த தெய்வ மீங்கெனைக் கொணரவிம்
மன்பெரும் பீடிகை யென்பிறப் புணர்ந்தே
னீங்கென் வரவிதீங் கெய்திய பயனிது
பூங்கொடி யன்ஞ யார்நீ யென்றலு
மாயிழை தன்பிறப் பறிந்தமை யறிந்த
உ0 தீவ திலகை செவ்வன மூனைக்கு
மீங்கித னயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை

---

எனது பெயர். 'இலக்குமி யெனபேன்' என்னும் பாடம்.

கக. ஆய பிறவியில் - இப்பிறப்பில்.

கஙு-கச. பலவகையினராகிய கணிகையர்களுள் மாதவி நாடகக்கணிகையாதலின், அதனை விளகுதற்பொருட்டு 'ஆடலங் கணிகை மாதவி' என்றுள். கணிகையர்களின்வகையினை, சிலப்பதிகாரம் இந்திரவிழவுரெடுத்தகாதையிலும், ஊர்காண்காதையிலும் காண்க.

கடு. என்பெயரத தெய்வமென்றது மணிமேகலாதெய்வத்தை.

கசு. பீடிகை - பீடிகையால்.

கஎ. பயனிதுவென்றது, பழம்பிறப் பணர்ந்ததனை.

கஅ. என்றலும் - என்ற மணிமேகலை கேட்கவும்.

கக. ஆயிழை - மணிமேகலை. அறிந்தமை - அறிந்த தன்மையை.

உ0. உரைக்கும் - சொல்லுவாள்.

மேல்வருவன தீவதிலகையின்வார்த்தை.

உக. இதன் அயலகத்து - இந்த மணிபல்லவத்தின் அயலிடத்துள்ள, இரத்தினதீவதது - இரத்தினதீவதத்தில்.

உஉ. ஓங்குயர் சமந்தத்து - மிகவுமுயர்ந்த சமந்தமென்னு மலையினது, உச்சி மீமிசை - உச்சியின்மேலே ; மீமிசை - மேல்; ''கொல்களிற்ற மீமிசைக்கொடி'' என்பது புறநானூறு, கக. 'ஓங்குயர் சிமயத்து' என்னும் பாடம். இம்மலைக்குச் சமனெளியென்றும் பெயருண்டு ; '' இலங்கா தீவத்துச் சமனெளி யென்னுஞ், சிலம்பினை யெய்தி வலங்கொண் டு மீளுந், தரும சாரணர்'' (உஅ - ம் காதை, கoஎ - கoசு) என்று பின்வருதலாலுணர்க.*

---

* ''ஆறைந்தி யோசனைத், தென்றிசை மருங்கிற் சென்றுதினை யுடுத்த, மணிபல் லவத்திடை'' (சு - ம் காதை, உகக - உகசு) என்றதனால் மணிபலலவம் காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே முப்பதுயோசனைதூரத்திலுள்ளதென்றும், ''ஓங்கித னயலகத் திரத்தின தீவத், தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை, யறவியங் கிழவோ னடியிணை யாகிய, பிறவி யெனனும் பெருங்கடல் விடூஉ, மறவி நாவா யாங்குள சாதலின்'' (கக - ம் காதை, உக - உடு) என்றதனால் இரத்தினதீவம் மணிபல்லவத்திற்கு அயலிடத்துள்ளதென்றும், அதிற் புத்தனுடைய பாதகருறிகளுள்ள உச்சியையுடைய சமந்தமென்னு மலையொன்றுண்டென்றும் தெரிதலாலும், ''இலங்கா தீவத்துச் சமனெளி யென்னுஞ், சிலம்பினை யெய்தி வலங்கொண்டு மீளுந், தரும சாரணர்'' (உஅ - ம் காதை, கoஎ - கoசு) என்பதனால் இலங்காதீவத்திற் சமனெளியென்ற பெயருள்ள புத்தஸ்தலமாகிய மலையொன்றுண்டென்று தெரிதலாலும் முன்னுள்ள சமந்தமென்பதும், பின்னுள்ள சமனெளியென்பதும் இலங்கையிலுள்ள ஆடம்ஸ்பீக்' என்று 'இங்கிலிஷ்' பாஷையில் வழங்கும் மலையையே குறிக்கின்றன

யறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉ
மறவி நாவா யாங்குள தாதலிற்
றொழுது வலங்கொண்டு வந்தே னீங்குப்
பழுதில் காட்சியிற் நன்மணிப் பீடிகைத்
தேவர்கோ னேவலிற் காவல் பூண்டேன்
தீவ திலகை யென்பெய ரிதுகே
கூ0 டரும தலிவன் றலைமையி னுரைத்த

---

உசு. அறவியங் கிழவோன் - அறத்திலே நிற்கின்ற உரிமையையுடையோனுகிய புத்தன்; "அறவியாற் காறு மூன்றும்" (குணமாலையாரிலம்பகம், உஎடு) எனவும், "அறவிய மனத்த ராகி" (முத்தியிலம்பகம், உஎக) எனவும் வருவன சீவகசிந்தாமணி; "அறவிய மனத்தினே யாகி" எனவும், "அறவியான் ரூஞ மறவமிர்த மீச்சான்" எனவும் வருவன நீலகேசி. இணை - இரண்டு.

உச. பிறவி காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கனையின்றிவருதலின், 'பிறவி யென்னும் பெருங்கடல்' என்றார். விடூஉம் - கடத்தும்.

உடு. அறவி நாவாய் - அறத்திலே நிற்பதாகிய நாவாய்; நாவாய் - கப்பல்.

உஉ - உடு. உச்சிமிசை அடியினை யாகிய நாவாய் உள்ளது.

உசு - உடு. பிறவியாகிய பெருங்கடலேக்கடத்தும் அடியிணையாகிய நாவா யென்க; இப்படியே "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா, ரிறைவ னடிசேரா தார்" (திருக்குறள், கo) என்று வருதல் காண்க.

உசு. ஈங்கு வந்தேன்.

உக-உசு. இம்மணிபல்லவத்தின் அயலிடத்தேயுள்ளதாகிய இரத்தினதீவத்துள்ள சமந்தமென்னுமலையினது உச்சியிற் புத்தனது பாதமாகிய அறவிநாவாய் உள்ளதாதலால அதனைத் தொழுது வலங கொண்டு ஈங்குவந்தேனென்றாளென்க.

உஎ. பழுது இல காட்சி - குற்றமற்ற தோற்றத்தையுடைய. பீடிகை - பீடத்தை.

உஅ. காவல் பூண்டேன் - காத்தலே மேற்கொண்டேன.

உக. என்பெயர் தீவதிலகையென்பது.

கo. தருமராசனென்பது புத்தன்பெயர்களுள் ஒன்றுதலின், சருமதலிவனென்றாள்.

---

வென்றெண்ணுவதற் கிடமுண்டு. எங்ஙனமெனின், இலங்கைத்தீவின் மேனகாணத்தில் தென்கீழ்ப்பிரிவில் இரத்தினபுரியென்ற ஓரிடமும், சிலாாற் சமந்தகூடமென்றும் சிலாாற் சமனேலியென்றும சொல்லப்பட்டுள்ள மலையொன்றும உள்ளனவென்று யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை, வே. சதாசிவப்பிள்ளையென் பவராற் கி. பி. 1884-ம்ஞ்சத்திற் பதிப்பிக்கப்பட்டுள்ள இலங்கைப்பூமிசாஸ்திர சங்கிரகமென்னும் புத்தகத்தால தெரிகின்றன. மணிபல்லவம் காலிறிப்பூம்பட்டினத்திற்குத்தெற்கே ஆறைந்துயோசனைதாரத்துள்ளதென்றும் அதன் அயலிலுள்ளது இரத்தின தீவமென்றும் முன்பு கூறியதற்கு 'ஆடம்ஸ்பீக்' காலிறிப்பூமபட்டினத்திற்குத்தெற்கே சற்றேறக்குறைய முப்பது காததூரத்திலிருத்தலும், அம்மலே பண்டைக்காலத்துச் சமந்தமென்றும் சமனெளியென்றும் கூறப்பட்டவந்தென்பதற்கு இக்காலத்து அது 'சமந்தகூடம்' 'சமனேலே' என்று கூறப்படுதலும், அம்மலே இரத்தினதீவத்துள்ளதென்பதற்கு அதனைச்சார்ந்த ஓரிடம் 'இரத்தினபுரி' என்ற பெயர்பெற்றிருத்தலும், சமனெளியென்பது இலங்காதீவத்துள்ளதென்பதற்கு அஃது இலங்கைத்தீவிலிருத்தலும் சான்றுதலறிக.

பெருமைசா னல்லறம் பிறழா நோன்பினர்
கண்டுகை தொழுவோர் கண்டதற் பின்னர்ப்
பண்டைப் பிறவிய ராருவர் பைந்தொடி
யரிய ருலகத் தாங்கவர்க் கறமொழி
கூடு யுரிய துலகத் தொருதலை யாக
வாங்கன மாகிய வணியியழை யிதுகே
ளீங்கிப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையு நெய்தலு மயங்கிய
கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சி
சுo யிருதிள வேனிலி லெரிகதி ரிடபத்
தொருபதின் மேலு மொருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையிற்

கூக - கூசு. நோன்பினரே இப்பீடிகை யைத்தரிசித்தற்குக் கைதொழுதற்கு உரிய ராவார்; அங்ஙனந்தரிசித்தபின்பு அவர் பழையபிறப்பின்செய்தியையறியும்அறி வையுடையராவார்.

கூச - கூடு. அரியர் உலகத்து - அத்தன் மையையுடையோர் உலகத்திற் பெறு தற்கரியர், அவர்க்கு அறமொழி உரி யது - அவர்க்குத் தருமபதம் உரிமையை யுடையது. ஒருதலையாக - நிச்சயமாக.

கூசு. ஆங்கனமாகிய அணியிழை - அத் தன்மையையுடையாயாகிய அணியிழா ய்; என்றது, நீ தருமபதங்கேட்டற்கு உரிமையையுடையாயெனறபடி.

கூஎ. பெயர் - புகழ்; பெரும்பெயர் - வீடுமாம்; "மிக்குப் புகழெய்திய பெரு ம்பெயர் மதுரை" என்பதனாலறிக; இது மதுரைக்காஞ்சி, சுகூக.

கூஅ. மயங்கிய - கலந்த.

கூக. கோமுகி - மணிபலலவத்துள்ள ஒருபொய்கை; காரணப்பெயர்; பசுவின் முகம்போனற வடிவமுடையதென்பது பொருள். இலஞ்சி - பொய்கையில். 'என் னுமிக கொழுநீ ரிலஞ்சி' என்றும் பாடம்.

கூஎ - கூக. முன்னிடத்ததாகிய இலஞ் சியில்.

ஆபுத்திரன் வேண்டுகோளின்படி கோமுகியென்னும் பொய்கையுளள்ளே யிருந்து அமுதசுரபியென்னும் பாத்திரம் ஒவ்வொருவருடத்தும் மேலேவந்து தோன்றுதினம் புத்தனுடைய ஜனன காலமாகிய விசாகநட்சத்திரத்தோடு கூடிய வைசாகசுத்த பௌர்ணமையாத வின், அத்தினத்தை மேலேவரும் நான் கடிகளாற் சிறப்பித்துக் கூறுவார்.

சo. இருது இளவேனிலில் - இளவே னிற்பருவதத்தில்; பன்னிரண்டுமாதங்க ளுள் ஆவணிமுதலிய இரண்டிரண்டுமா தங்கள் இருதுவெனவும் பெரும்பொழு தெனவும் பருவமெனவுங் கூறப்படும். அவை, முறையே கார், கூதிர், முன் பனி, பினபனி, இளவேனில், முதுவே னிலென ஆறுவகையாம். அவற்றுள், ஈண்டு இளவேனிலென்றது சித்திரை வைகாசி மாதங்களே. கதிர் எரி இட பத்து - சூரியன் மிக்க வெம்மையைச் செய்கின்ற வைகாசிமாதத்தில்.

சக. ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின் - இருபத்தேழு நட்சத்திரங்க ளுள் கார்த்திகைமுதலாகிய பதின்மூன் றுநட்சத்திரங்கள் சென்றபின்பு.

சஉ. மீனத்து இடைநிலைமீனத்து அகவையின் - நட்சதத்திரங்களுள் நடுவில் நிற்றலையுடையதான விசாகநட்சத்திரத் தில்; "போதித் தலைவனெடு பொருந் திய போழ்ததது" என்று பின்புவரு தலின், ஈண்டு விசாகம் கொள்ளப்பட் டது. அச்சுவினிமுதலிய இருபத்தேழு ளுள் பதினைஞ்சாவதும் நடுவிலுள்ளது மாகிய நட்சத்திரம் சித்திரையாக இரு க்க அதனை நடுவிலுள்ளதாகக்கூறாமல் இவ்விடத்தில் விசாகத்தைக்கூறியது என்னையோவெனின், ஒவ்வொருவருட

போதித் தலைவனெடு பொருந்தித் தோன்று
மாபுத் திரன்கை யமுத சுரபியெனு

---

த்தும், பகலையும் இரவையும் சமஞக முப்
பதுமுப்பது நாழிகையாகவேபெற்ற இர
ண்டு விஷுவத தினங்களுள் ஒன்றாகிய
மேஷாயனத்திற் சூரியனுக்கு எந்நட்ச
த்திரத்திற் பிரவேசமுண்டாகின் றதோ
அதை நட்சத்திரங்களில் முதலாவதாகக்
கூறுவது சோதிடநூற்முணிபாதலாலும்
முன்னெருகாலத்திற் சூரியனுக்குக் கிரு
த்திகாப் பிரவேசமிருந்தபொழுது மேஷா
யனம் நேரிட்டிருந்ததென்றும் அதுபற்
றிக் கார்த்திகையை முதலாகக்கொண்டு
நட்சத்திரங்களே எண்ணிவந்தார்களென்
றும் பழைய சோதிடநூல்களால் தெரிகி
ன்றமையாலும் நட்சத்திரங்களின் நடுவி
லுள்ளதை விசாகமென்றுகூறியது குற்
றமன்றென்க. இப்படியே முன்னெரு
காலத்தில் நட்சத்திரங்களைக் கார்த்திகை
முதலாக எண்ணிவந்தார்களென்பது, கி
ருஷ்ணயஜுர்வேத ஸம்ஹிதையாலும்
கிருஷ்ண யஜுர்வேத பிராஹ்மணதை
லும் தெரிகின்றதென்பர். உச்சயினி நக
ரத்தில் விக்கிரமார்க்கனுடைய அவைகக
ளத்திலிருந்த நவரத்தினங்களுள் ஒருவ
ரென்று சொல்லப்படுகிற வராகமிகிரரெ
ன்கிற பிரஸித்தஜ்யோதிஷ்கர், தமதுகா
லத்தில மேஷாயனத்திற் சூரியனுக்கு
அச்வினீநட்சத்திரப் பிரவேசமுண்டாயி
ருத்தலையறிந்து பழையவழககத்திற்கு
மாறுக நட்சத்திரங்களே அச்வினீமுத
லாக எண்ணும் வழக்கத்தை வற்புறுத்
தினமையின், இக்காலத்தில் நட்சத்திர
ங்கள் இங்ஙனம் எண்ணப்பட்டு வருகி
ன்றனவென்பர். 'அசுவயின்' என்றும்
பாடம்.

சக - சஉ. இங்கே விசாகநட்சத்திரத்
தைப் பதினெண்காவதாகக் கூறியிருத்த
லின், இந்நூலாசிரியர் நட்சத்திரங்களைக்
கார்த்திகைமுதலாக எண்ணிவந்தகாலத்
தினரென்பது ஊகித்தறியப்படுகின்
றது.

சக போதி - அரசமரம்; இதற்குப்
போதத்தையுடையதென்பது பொருள்;
போதம் - ஞானம்; இதனடியிலிருந்த
பொழுது நால்வகைச்சத்தியங்களையும்
அறிந்துகொள்ளுதற்குரிய ஞானத்தைப்
புத்தன் அடைந்தமையால், இவ்வது இப்
பெயர்பெற்றதென்பர்; புத்தன் இதனடி
யிலிருந்தானென்பதை, "போதி நீழற்
பொருந்தித் தோன்று, நாதன்" (கக - ம்
காதை, எசு - எசு) எனவும், "போதி
மூலம் பொருந்திய சிறப்பி, னுதன்"
(கஉ - ம் காதை, கoக - கoஉ) எனவும்,
"ஒங்குயர் போதி யுரவோன்" (கஉ - ம்
காதை, ககக) எனவும், "போதித் தலை
வனெ" (கஙி - ம் காதை, உசு) என
வும், "போதி மாதவன்" (கஙி - ம
காதை, உக) எனவும், "முன்னவன்
போதியி னல்லறம்" (உச - ம் காதை,
கசக) எனவும், "பைம்பூம் போதிப் பக
வற்கு" (உச - ம் காதை, கஎச) எனவும,
"போதி மூலத்து, நாதன்" (உக - ம
காதை, உசு - உச) எனவும், "போதி
மூலம் பொருந்தி யிருந்து" (சுo - ம கா
தை, கo) எனவும இந்நூலுள்ளே பின்
வருவனவற்றாலுணர்க. இது மகாபோதி
யெனவுங் கூறப்படும். தலைவன் - புத்
தன். இனி, போதியென்பதற்கு ஞான
மென்ற பொருள்செய்தல் பௌத்தர்
சைனர்களுடைய வழகக மாகவிருத்த
லின், போதித்தலைவனென்றதற்கு ஞா
னத்திற்குத் தலைவனென்று பொருள்
கூறினும் பொருந்தும்; "போதிச் செல்
வம் பூண்டவ ரேத்தும் பொலிவின்ஞா
லாதிக காலத தந்தணன் காதன் மக
னெந்தான்" என்பதிற காண்க; இது
சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம்,
கூஎ. தோன்றும் - முற்று.

சo - சஉ: - கஙி - ம் காதை, உசு - உச.

சச. அமுத சுரபி - அமுதந்தினதி
மணம்போன்ற மணமுடையதென்றும்,
அமுதத்தைக்கொடுக்கும் காமதேனுவை
ப்போன்றதென்றும் பொருள் கூறுவர்;
அமுதம்-அமிர்தம், உணவு. சுரபி-மணம்,
காமதேனு. இஃது ஆரியர்மருந்தென்றும்
கூறப்படும்; உக - ம காதை, கசக.

சo - சச. அமுதசுரபி, புத்தன்பிறந்த
காலத்தே ஒவ்வொருவருடத்தும் தோ
முகியென்னும் பொய்கையிலிருந்து
தோன்றுதலின், 'போதித் தலைவனெடு
பொருந்தித் தோன்றும்' என்றார்.

சரு மாபெரும் பாத்திர மடக்கொடி கேளா
யங்கா ளிங்கா ளப்பொழு திப்பொழுது
நின்ஞங்கு வருவது போலு நேரிழை
யாங்கதிற் பெய்த வாருயிர் மருந்து
வாங்குநர் கையகம வருத்துத லல்லது
சுo தான்றெலீ வில்லாத் தகைமைய தாகு
நறுமலர்க் கோதை நின்னூ ராங்க
ணறவணன் றன்பாற் கேட்குவை யிதன்றிற
மென்றவ ளுரைத்தலு மிளங்கொடி விருமபி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
சுருி தீவ திலகை தன்னெடுங் கூடிக்
கோமுஞி வலஞ்செய்து கொள்கையி னிற்றலு
மெழுந்து வலம்புரிந்த விளங்கொடி செங்கையிற்
றெழுதகை மாபிற் பாத்திரம் புகுதலும்
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாண்
சுo மாத்தினை யின்றி மனமகிழ் வெய்தி
மாரணை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடுமபகை கடிந்தோய் நின்னடி

---

சசு - சடு. பாத்திரம் தோன்றும்.

சஎ. நின்ஞங்கு வருவது போலும் - அப்பாத்திரம் நினகையிடத்து வருவது போலும்; நின்ஞங்கு.— கo-ம் காதை, ஈக. "நின்ஞங்கு வருஉ மென்னெஞ்சி னை, யென்ஞங்கு வாரா தோம்பினேகொ ணமே." எனபது கலித்தொகை, உசு.

சஅ. அகில் - அமுதசுரபியென்னும் பாத்திரத்தில். ஆருயிர் மருந்து - அன்னம்; பசிநோயால் வருந்தாவண்ணம் உயிர்களைப் பாதுகாத்தலின், இஃது இங்ஙனங் கூறப்பட்டது; "அகன்சுரைப் பெய்த வாருயிர் மருந்து" என்பர் பின்னும்; கக-ம் காதை, ககஎ. சோற்றையும் தண்ணீரையும் இருமருந்தென்பர் கோவூர்கிழார்; இதனை, புறநானூறு, கo - ம் பாட்டிற்காண்க.

சஈ. கையகம் - கையிடத்தை.

சுo. தானென்றது - அன்னத்தை. தான்றெலீ வறியா' என்னும் பாடம்.

சுக. கோதை - வளரி. 'நறைமலர்க் கோதை' என்னும் பாடம்.

சுஉ. இதன்றிறம் - இப்பாத்திரத்தின் வரலாறு. இதன்றிறதை அறவணன் பாற்கேட்குவை.

சுசு. அவள் - தீவதிலகை. இளங் கொடி - மணிமேகலை.

சுச. தொழுதனள் வணங்கி - கைகுவித்து வந்திதது.

சுசு. கொள்கையின் நிற்றலும் - நியமத்தோடு மணிமேகலைநிற்றலும்.

சுஎ. எழுந்து - கோமுகியிலிருந்து எழுந்து. இளங்கொடி - மணிமேகலை.

சுஎ - சுஅ. பாத்திரம் எழுந்து இளங் கொடியினுடைய செங்கையிற்புகுதலும்.

சுo. மாத்தினையின்றி - அளவின்றி.

சுக. 'மாரணை' என்பது முதலியன, பாத்திரம்பெற்ற மகிழ்ச்சியால் மணிமேகலை புத்தனைக் குறித்துச் செய்யுந்துதிகள். 'மாரன்' என்பதற்குப் பொருள், கு - ம் காதை, எஎ - ம் அடிக்குறிப்பிற் காண்க.

சுஉ. கு - ம் காதை, கoசு. தீ நெறிக் கடும்பகை - கொடிய வழிகளாகிய மிக்க

பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
யெண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறக்த நாவோய் நின்னடி

---

பகையை; காமமுதலியவற்றை 'அரிஷட் வர்க்கம்' என்றும், 'வைரி' என்றும் வடநூலார் கூறுதல்போலத் தீநெறியைக் கடிம்பகையென்றார். 'கடப்போய் நின்னடி' என்றும் பாடம்.

கூ. பிறர்கு அறம் முயலும் பெரியோய் - மற்றையோர்க்குப் புண்ணிய முண்டாதற்கு முயலுகின்ற பெரியோனே; இப்படியே "பிறர்க்கற மருளும பெரியோன்" என்பர் பின்னும்; உக - ம் காதை, கஎஅ. போதிவிருட்சத்தினடியிற் புத்தனுக்கு ஞானோதயமானபொழுது மாரன் அவனைநோக்கி 'நீ இப்பொழுதே நிருவாணமடை' என்றுசொல்ல, புத்தன் மயங்குகையில், பிரஹ்ம தேவர்வந்து 'நீ இப்பொழுது அடைய வேண்டாம்; நீ யறிந்த தருமத்தை உபதேசித்து நிருவாணமடைதற்குரியவழியை எல்லோர்க்குங் காட்டிவிட்டு அப்பாற் செல்க' என்றலின், புத்தன் தருமோபதேசஞ் செய்யத்தொடங்கினனென்ற புத்தசரிதத்தால் தெரிகின்றது.

கூ. துறக்கம் - சுவர்க்கம். அழிவற்ற நிருவாணமே அவனால் விரும்பப்பட்டமையின், அழிதன மாலையதாயதுறக்கம் வேண்டப்படாததாயிற்று.

கூடு. எண் பிறக்கு ஒழிய இறந்தோய் - மார்த்தர்களுடைய எண்ணங்கள் எட்டாமற் பின்னே கிடக்கும்படி மேற்பட்ட நிலையிற் சென்றோனே; பிறக்கு - பின்; "துறைபிறக் கொழியப் போகி" என்பது பெரும்பாணாற்றுப்படை, கூடுக; "முதிர்காய் வள்ளியம் கரபிறக் கொழிய" என்பது முல்லைப்பாட்டு, கoக. இறத்தல் - கடத்தல். 'இருந்தோய் நின்னடி' என்றும் பாடம்.

கூக. பிறர்க்குக் கண் அளிக்கும் கண்ணோய் - உயிர்களுக்கு ஞானத்தை யருளிச்செய்த ஞானியே; கண் - ஈண்டு ஞானம். புத்தன் பலர்க்குத் தருமோபதேசஞ்செய்த ஆதிரியனுதலின், இங்ஙனங்கூறினர். இனி, உலோகோபகாரத்திற்காகப் புத்தனெடுத்த அநேக ஜாதகங்களுள், ஒன்றில் இவன் கொடையைப் பரிசோதிக்கவெண்ணி, இந்திரன்வந்து இரண்டகண்களையுங் கேட்டபொழுது இவன் அவற்றைக் கொடுத்தானென்பராகலின், இதற்கு இந்திரனுக்குக் கண்ணைக்கொடுத்தோனென்ற பொருள்கூறினும் பொருந்தும். இதனைப் பின்வரும் பாடல்களாலுணர்க. "விண்ணவர் நாயகன் வேண்டக், கண்ணினி தளித்த காதற், புண்ணிய னிருந்த போதி, நண்ணிட நோய்நலி யாவே". இது வீரசோழியம், யாப்புப்படலம், கூ - ம் கலித்துறையின் உதாரணம். "கண்கொடித்தான் றடிகொடுத்தான் கயப்புலிக்குத் தற்கொடுத்தான், பெண்கொடுத்தா னுடம்பினையும் பிளந்திட்டுப் பிறர்க்கிந்தான, மண்கொடுத்தான் மகக்கொடுத்தான் மன்னுந்தற் சேர்ந்தார்க்கு, விண்கொடுத்தா னவன்கொடுத்த விரித்துரைப்பன் கேளென்றான்" இது நீலகேசி. "மிக்கதனங் கவ்வாரி மூன்றம் பெய்யும் வெகுளிற்றை மிகுசிந்தா மணியை மேனி, யொக்கவரிந் தொருகூற்றை யிரண்டு கண்ணே யொளிதிகழுந் திருமுடியை யுடம்பி லூனை, யெக்கிலிழுங குருதினை யரசு தன்னை யின்னுயிர்போற் றேவியையீன் றெடுத்த செல்வ, மக்கின்வக் திரந்தவர்க்கு மகிழ்ந்தே யீயும் வான வர்தா முறைந்தபதி மாண வூரே" இது நீலகேசிவிருத்திசமயதிவாகரத்திற் கண்டசெய்யுள்.

கூஎ. தீமொழி - பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்பன; மொழிக்கு - சொல்லைக் கேளாதிருத்தற்கு.

கூஅ. வாய்மொழி - சத்தியம்.

நாகர் துயர்கெட நடப்போய் நின்னடி
எ0 யுரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னுயிற்
கடங்கா தென்ற வாயிழை முன்னர்ப்
போதி நீழற் பொருந்தித் தோன்று
நாதன் பாத நவைகெட வேத்தித்
எடு தீவ திலகை சேயிழைக் குரைக்குங்
குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ

---

கூக. நாகர்களிற்சிலர்க்குக் கிலேசசாந்தி செய்வித்தற்பொருட்டு மனமிரங்கி ஒருஜாதகத்திற் புத்தன் நாகலோகத்திற்குச் சென்றனென்பராதலின், இங்ஙனங்கூறினர்; "அருவினை சிலர்கெட வொருபெரு நாகிடை, யெரிசுடர் மாமல ரெனவிடு மடியினை" என்று வருதல் காண்க; இது, வீரசோழியம், யாப்புப் படலம், கசு-ம் கலித்துறையினுதாரணம்.

எ0. உரகர் - நாகர்; நாகர்களுக்குக கருடனுலுண்டாகிய துன்பம் நீங்கும் பொருட்டு அவனுக்குத் தயாதர்மத்தை உபதேசஞ்செய்து அவனுல் அவர்களுக்கு அபிர்தங்கிடைக்கும்படி புத்தன் செய்தானென்பது ஒருஜாதககதை. இதனைப் பின்னுள்ளசெய்யுட்களாலறிக; "மீதியல கருடனே விடவர வொடுபகை விதிமுறை கெடவறம் வெளியுற வருளினே.", "பொற்புடை நாகர்த்துயரம் போக்கினை", "பைங்நாகர் குலமுய்ய வாயமிழ்தம் பகர்ந்தனையே.", "ஆரமிழ்த மணிநாகர் குலமுய்ய வருளினையே, வார்றைப்புள் ளரையற்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே." இவை, வீரசோழியம், யாப்புப்படலம், கக-ம் கலித்துறையினுதாணங்கள். தயையைப் புலப்படுத்துதலிலேயே பயனுகநினைந்து ஸ்ரீஹர்ஷகவியென்பவரால் வடமொழியிற் செய்யப்பட்டுள்ளதாகிய ஜீமூதவாகனன் சரிதமாயுள்ள நாகாநந்தமென்னு நாடகத்தை உற்றுநோக்கின், அது, ஈண்டுக்கூறிய புத்தஜாதாகக்கதையின் வழிப்பட்டதாக யாவருக்கும் நன்குவிளங்கும்.

எக-எஉ. வாழ்த்தல் அடங்காது; இப்படியே "ஆயிர வாரத் தாழியன் றிருந்தடி, நாவா யிரமிலே னேத்துவ தெவன்" என்று முன்னும்வந்திருத்தல்காண்க. கூ-ம் காதை, கஎச - கஎடு.

எசு. போதி - அரசமரம்.

எச. புத்தனே நாதனென்றல் மரபு; இதனை, "நவையற நாத னல்லறம் பகர்வோர்" (உஅ - ம் காதை, எக), எனவும், "நாத னல்லறங் கேட்டலே விரும்பி" (உஅ - ம் காதை, அக) எனவும் இந்நூலுள்ளே பின்வருவனவற்றாலுணர்க. புத்தாகளிற் சிலர் தேவர்களேயும நாதரென்பதுண்டு. நவை - குற்றம்.

எடு. சேயிழைக்கு உரைக்கும் - மணிமேகலைக்குத் தீவதிலகை சொல்லுவாள்.

இனிப் பகியின கொடுமை கூறப்படுகின்றது.

பின்வரும் "பகிப்பிணி யென்னும் பாவி" (அ0 - ம் அடி) என்பதனை 'அழிக்கும்' (எசு) என்பதுமுதலிய முற்றுவினைகளோடு தனித்தனியேகூட்டுக.

எச. குடிப்பிறப்பு அழிக்கும் - பிறந்தன்றைப்பற்றப்பட்டாருடைய உயர்குடிப்பிறப்பைக்கெடுக்கும்; அக்குடியிலிருந்த முன்னோர்களுக்கில்லாத இழிந்த செயல்களே அவர்களிடத்து உளவாக்கவான் இவ்வாறு கூறப்பட்டது; "தொலவரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக, நல்குரவு வென்னு நசை" என்பது திருக்குறள், கஎசு. விழுப்பங் கொல்லும - சிறப்பினைவருத்தும்.

எள. கல்வீப் பெரும்புணை விடூஉம் - கல்வியாகிய பெரிய தெப்பத்தை நீக்கும்; "நற்பொருணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார், சொற்பொருள் சோர்வு படும்" (திருக்குறள், கஅசு.) எனவும், "பிறந்த குலமாயும பேராண்மை மாயுஞ், சிறந்ததங் கல்வியு மாயும்" (நாலடி

நாணணி கலையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
அo பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோ
ரிசைச்சொ லளவைக் கென்னு நிமிராது
புன்மரம் புகையப் புகையழற் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி
னரசுதலை நீங்கிய வருமறை யந்தண
அரு னிருநில மருங்கின் யாங்கணுங் கிரிவோ
னரும்பசி களைய வாற்றுவது காணுன்
றிருந்தா நாயுன் றின்னுத லுறுவோ
னிந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
கூo மழைவளந் தருதலின் மன்னுயி ரோங்கிப்
பிழையா விளையுளும் பெருகிய தன்றே

---

யாச், இன்மை, ஓ) எனவும் வருதல் காண்க.

எஅ. நாண் அணி களையும் - நாணுகிய ஆபரணத்தை நீக்கும்; அழகுசெய்தலின், நாணுடைமை அணியெனப்பட்டது; "அணியன்றே நாணுடைமை சான்றோர்க்கு" என்பது திருக்குறள், கoசு.

அo. பண்பிற்குப் பண்பு இலலீலையேனும் தன்னுற் சாரப்பட்டாரிடத்துள்ள எல்லா நன்மைகளேயும் அழித்தற்கொடுமைபற்றிப் பசியைப் பாவியென்றார்; இப்படியே "இன்மை யென வொரு பாவி" என்றுவருதல் காண்க; இது திருக்குறள், கoசஉ. அது - அப்பசியை.

அக. இசை-புகழ். அளவைக்கு - அளத்தற்கு. என் நா நிமிராது - எனது நா எழமாட்டாது. நிமிர்தல் - பேசுதற்கு முயறல். உபகாரிகளின்புகழ் அளவுபடாதென்றபடி.

பசியாயையும் வருத்தி வேறுபாடுறுவிக்குமென்பதற்கு உதாரணமாக விச்வாமித்திரமுனிவர் வறட்காலமொன்றில் நாயூன் றின்பதற்கு முயன்றதைத் தீவதிலகை இனிச்சொல்லுவாள்.

அக. மழை வளம் கரத்தலின் - மழையாகிய செல்வம் மறைந்துபோனமையால்.

அச. விச்வாமித்திரமுனிவர்.

அசு. அரும்பசி-தீர்த்தற்கரிய பசியை. ஆற்றுவது காணுன் - தணிதற்குரிய உணவு யாதொன்றையும் காணுனுகி.

அஎ. விச்வாமித்திரமுனிவர் பசியினகொடுமையால் நாயூன் றின்பதற்கு முயன்றரென்பதை மனுஸ்மிருதி, கo - ம அதிகியாயம், கoஅ - ம் சுலோகத்திற காண்க.

அஅ. இந்திரசிறப்பு - பலியிடுதல் (=வைச்வதேவம்); இது மற்றைதேவர்களுக்கும் உரித்தெனினும் தலைமைபற்றி 'இந்திரசிறப்பு' எனப்பட்டது; உபகாரற்குமுன்பு இதனைச் செய்தலவேண்டுமென்பது விதி.

அக. வானவர் பெருந்தகை - இந்திரன்.

கo. 'மன்னுயிரோம்பி' என்றும பாடம்.

கச. பிழையா விளையுள் - தப்பாதவிளைவு; "வேலி, யாயிரம் விளையுட் டாக" என்பது பொருநராற்றுப்படை, உசசு - உஎஉ; "வெள்ளமா ருது விளையுள் பெருக" என்பது மதுரைக்காஞ்சி, கoக.

அங - கக. மழைவளங் கரத்தலின், அந்தணன் கிரிவோன் காணுன் உறுவோன செய்வோன் முன்னர் வந்துதோனறிய பெருந்தகை தருதலின், ஒங்கிப் பெருகியதன்றே.

வாற்றுகர்க் களிப்போ ரறவிலை பகர்வோ
ராற்று மாக்க ளருமடிசி னீவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
கூடு மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
முண்டி கொடுததோ ருயிர்கொடுத் தோரே
யுயிர்கொடை பூண்ட வுரவோ யாகிக்
கயக்கறு நல்லறங் கண்டனை யென்றலும
விட்ட பிறப்பிலயான் விரும்பிய காதலன்
கஅ0 றிட்டி விடமுணச செலலுயிர் போவுழி
யுயிரொடு வேவே னுணர்வொழி காலத்து
வெயிலவிளங் கமயத்து விளங்கித் தோன்றிய
சாது சகசரல ரனையா னூட்டிய
காலம போல்வதோர் கனமயக குற்றே
கஅடு ஞங்கதன் பயனே யாருயிர் மருந்தா
யீங்கிப் பாததிர மென்னைப் புகுந்தது

கூஉ. ஆறறுநர்க்கு - பொறுக்கும் வன்மையையுடையோராகிய செல்வர்க்கு; ஆற்றுநர்க்களிப்போர் பயன் கருதிச் செய்வோராகின் றமையின், 'அறவிலைபகர்வோர்' என்னார். "இம்மைச் செய்தது மறுமைக் காமெனு, மறவிலை வாணிக ஞஅ யல்லன" என்பது புறநானூறு, கசுழ.

கூசு. ஆற்றுமாக்கள்-தரிதிரர், "ஏறறுகை பாற்றுமை பெனனுஞ்சு தாம்வ னையா, தாற்றுதார்க் கீவதா மாண்டன்" என்பது நாலடியார், எகை, அ.

கூச. மேற்று - மேலது

கூசு - கூச. வாழ்க்கை கனோர் மேற்று.

கூஉ - கூச. இவ்வடிகளின் கருத்து "எ மக்கிலோர் பிறர்க்கிலோர், பிறர்க்கி லோர் தமக்கிபவென, வினைத் தூதைத னன யாளுக" எனபதில் வந்திருத்தில காண்க; இது புறநானூறு, கசுசு.

கூடு. மண்டிணி ஞாலத்து - அணுக கள் செறிந்த நிலவுலகத்தில்; "மண்டி ணிந்தநிலனும்" என்பது புறநானூறு, உ.

கூசு. புறநானூறு, (கஅ) கக - ம் அடி.

கூவ. உயிர்கொடை - உயினைகொ தெதில. உரவோயாகி - வலிய அறிவி னையுடையோயாகி.

கூஅ. கயக்கு - கயங்குதல் (=கசங்கு தல்); "கயக்கறு மாகதர் கடிந்தனர்கே ளாய்" என்பர் பின்னும்; கசு - ம் காதை, அடு. 'கண்டனை' என்றது, தெளிவுப ற்றி. என்றலும் - என்று தீவதிலலக சொலலலும்.

கூக. விட்டபிறப்பு - போனபிறப்பு. காதலன் - கணவன்; அவன் இராகு லன்.

கஅ0. திட்டிவிடமுண - திருஷ்டிவி ஷமெனனுஞ் பாம்புதீண்ட; க - ம் கா சை, சசு - ம வரிக் குறிப்பைப்பார்க்க. உயிர்போவுழி - உயிர்போனவிடத்து.

கூசு - கஅ0. காதலன் உயிர்போவுழி.

கஅக. உயிரொடு வேவேன் - அவன் பிரிவாற்றாது தீயிற்பாய்ந்து உயிரொடு வேவாநிற்பேன். வேவேன் - பெயர்.

கஅ0 - கஅக. கூ - ம் காதை, சக - கூ0.

கஅஉ. கூ - ம் காதை, கூ0; கக - ம் காதை, கஅஉ.

கஅசு. ஊட்டிய - உண்ணச்செய்த.

கஅச. கனமயக்குற்றேன் - கனவா கிய மயகத்தையடைந்தேன்.

கூசு - கஅச. காதலன் உயிர்போவுழி வேவேன் உணர்வொழிகாலத்துக் கன மயக்குற்றேன்.

கஅடு. அதன் - அக்கனவின்.

கஅடு - கஅசு. உயிர் உடம்பினீங்கும் பொழுதுளள நினைப்பின்பயனே மறுபிற

நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
வித்திநல் லறம்விளைந்த வதன்பயன்
றுய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து
கசo வயிறுகாய் பெரும்பசி யகலத்தற் கிரங்கி
வெயிலென மூனியாது புயலென மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமு
னறங்கடை நில்லா தயர்வோர் பலரா
லீன்ற குழவி முகங்கண் டிரங்கித்
ககடு தீம்பால் சுரப்போ டன்முலை போன்றே
நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்
தகன்சுரைப் பெய்த வாருயிர் மருந்தவர்
முகங்கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையே, னென
மறந்தே னதன்றிற நீயெடுத் தாைத்தனை
கஉo யறங்கரி யாக வருள்சுரந் தூட்டுஞ்

---

ப்பில் அவ்வுயிர் அடையுமென்பது தொன்னூற்றணிபாதலின் இங்ஙனங்கூறினான்; கரை-ம் காதை, கoக-கoச. இக்கருத்தை, "பிறப்பென்னும் பேதைமை" என்கிற சூடுஅ-ம் திருக்குறளுக்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரையாலுமுணர்க.

கoஎ. சம்புத்தீவில்.

கoஅ. நல்லறத்தை வித்தி. 'வித்திய கல்லறம்' என்றும் பாடம். பயன் - பயனே; என்றது பலவகைத்தாகிய செல்வத்தை.

கoக. துய்ப்போர் தம்மனை - அனுபவிக்கும் செல்வருடைய வீட்டில், துணிச்சிதருடுத்து-கிழிந்த சீலைகளை உடுத்திக் கொண்டு. சித்தர் - சிதாரெனவும் வழங்கும்.

ககக. மூனியாது - வெறுக்காமல். புயலென மடியாது - மழையென்று ஓரிடத்தில் தங்காமல்; மடிதல் - தங்குதல்; "மல்லற் பேருர் மடியின்" என்பது பெரும்பாணாற்றுப்படை, உடுச.

ககஉ. புறங்கடைநின்று - தலைவாயிலில் நின்றுகொண்டு, புன்கண் கூர்ந்து - துன்பமிகுந்து; "அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப், புகத்தாம் பெருஅர் புறங்கடை பற்றி, மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத், தவத்தாற் றவஞ்செய்யா தார்." என்பது நாலடியார், அறன்வலியுறுத்தல், க.

ககஉ - ககரு. முன் அறங்கடை - முற்பிறப்பிற்செய்த பாவத்தால், நில்லாது - ஓரிடத்தில் நில்லாது. அறத்தினீக்கப்பட்டமையின், பாவம் அறங்கடையென்றப்பட்டது; "அறன்கடை நின்ருருளெல்லாம்" என்பது திருக்குறள், கசஉ.

ககடு. சுரப்போன் - தாய்.

ககக. நெஞ்சுவழிப் படூஉம் - மனத்தின்வழியே யொழுகும். விஞ்சை - வித்தை.

ககஎ. சுரை - ஈண்டுப்பாத்திரத்தில் உள்ளீடில்லாது குழிந்தபாகம்.

ககஅ - ககஅ. அவர்முகங்கண்டு - மேற்கூறிய பசியாளர்களுடைய வாடியமுகங்கண்டு. வேட்கை - வீருப்பம். எனவென்று மணிமேகலை சொல்ல.

ககக. அதன் நிறம் - அப்பாத்திரத்தின் வரலாற்றை. அதன் றிறமறந்தேன்.

கஉo. அறம்கரியாக - தருமமேசான்றாக. அருள் - 'ஒன்றின் துயர்கண்டால் காணாரின் றித்தோன்றும் இரக்கம்' என்பர், புறநானூற்று உரையாசிரியர்; இதனை, புறநானூறு, கூ-ம் பாட்டின் விசேடவுரையிற் காண்க; 'தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கண்மேலும் செல்வது' என்பர் பரிமேலழகர்; இதனை, திருக்குறள் உகூ-ம் அதிகாரம் அருளுடைமையின் அவதாரிகையிற்காண்க.

சிறந்தோர்க் கல்லது செவ்வனஞ் சுரவா
தாங்கன மாயினை யதன்பய னறிந்தனை
யீங்குநின் றெழுவா யென்றவ ளுரைப்பத்
தீவ திலகை தன்னடி வணங்கி
கூடு மாபெரும் பாத்திர மலர்க்கையி னேந்திக்
கோமகன் பீடிகை தொழுதுவலங் கொண்டு
வானூ டெழுந்து மணிமே கலைதான்
வழுவறு தெய்வம் வாய்மையி னுரைத்த
வெழுநாள் வந்த தென்மகள் வாராள்
கஅ0 வழுவா யுண்டென மயங்குவோண் முன்னர்
வந்து தோன்றி யவர்மயக் கங்கனீர்
தந்தி லவர்க்கோ ரற்புதங் கூறு
மிரவி வன்ம னெருபெரு மகளே
தூரகதத் தானைத் துச்சயன் றேவி
கஉடு யமுத பதிவயிற் றரிதிற் ரோன்றித்
தவ்வைய ராகிய தாயையும் வீயை
மவ்வைய ராயினீர் நும்மடி தொழுதேன்
வாய்வ தாக மானிட யாக்கையிற்
றீவினை யறுக்குஞ் செய்தவ நுமக்கிங்
கசo கறவண வடிக டமபாற் பெறுமின்
செறிதொடி நல்லீ ரும்பிறப் பீங்கிஃ

---

கஉக. (பாத்திரம்) சுரவாதை.

கஉஉ. ஆங்கனமாயினை - அறங்கரியாக அருள்சுரந்தூட்டும் அத்தனமையையுடையாயாயினை. 'அவர் முகங்கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையேன்' என்று முன்பு கூறியதலால், 'அதன்பயனறிந்தனை' என்றாள்.

கஉங. அவன் - தீவதிலகை.

கஉச. கோமகன் பீடிகை - புத்தனுடைய பாதபீடிகை.

கஉஅ. தெய்வம்-மணிமேகலாதெய்வம்.

கசo. வழுவாய் - தப்புதல். என - என்று நினைத்தது. 'வழுவர லுண்டென மயங்குவோள்' என்றும் பாடம். மயங்குவோள் - சுதமதி.

கசக. சுதமதியோடு மாதவியையும் உளப்படுத்தி 'அவர்' என்றார்.

கசஉ. அந்தில் - அவ்விடத்து. அற்புதம் - ஆச்சரியம். கூறும் - மணிமேகலை சொல்லுவான்.

கஉஎ - கசஉ. மணிமேகலைதான், மயங்குவோண் முன்னர் வந்து தோன்றிக் கலைந்து அவர்க்கு ஓர் அற்புதங்கூறும்.

கசச. தேவியென்றது சுதமதியை.

கசசு - கசச. எ - ம் காதை, கஅ - கசு.

கசசு. தவ்வையர் - தமக்கைமார்.

கசடு - கசசு. 'தோன்றியென், றவ்வையராகிய' என்றும் பாடம்.

கசஎ. அவ்வையர் - தாய்மார்.

கசஅ - கசக. வாய்வதாக-வாய்ப்புடைத்தாகுக. செய்தவம் நமக்கு வாய்வதாக வென்க. "வாய்வ தாகின் மனப்பாட்டமும்" என்பர் பின்னும்; உக-ம் காதை, எகக; "வாய்வதின் வந்த குரவை" என்பது சிலப்பதிகாரம், துன்பமாலை; "வாய்வதிற் - றந்தையுந் தாயுந் தொழுதெழுக" என்பது ஆசாரக்கோவை, டுடி.

கசo - கசக. உம்பிறப்பின்வரலாற்றை அறவணவடிகளிடம் அறிந்துகொள்ளுமின்.

காவுத் திரன்கை யமுத சுரபியெனு
மாபெரும் பாத்திர நீயிருந் தொழுமெனத்
தொழுதவ ரேத்திய தூமொழி யாரொடும
கசரு பழுதறு மாதவன் பாதம் படர்கே
மெழுகென வெழுந்த ளிளங்கொடி தானென.

பாத்திரம்பெற்றகாதை முற்றிற்று.

---

கசக - கசசு. இஃது, ஆபுதகிரன் கையிலிருந்த அமுதசுரபியெனப்படுகின்ற மிகச்சிறந்துள்ள பாத்திரம்; இதனை நீருந் தொழுமினென்று மணிமேகலை சொல்ல.

கசச. தூமொழியார் - சுதமதியும் மாதவியும.

கசரு. பழுது - குற்றம்; இனி, சீலப் பதிகாரம், ஊர்சூழ்வரியில் "பழுதொழிந் தெழுந்திருந்தான்" எனபதில 'பழுது' என்பதற்கு உடமபென்ற அடியார்க்குநல்லார் பொருள்செய்திருத்தலால, இங்கே பழுதறு மாதவனென்பதற்கு உடற்பற்றெழுந்த அறவணவடிகளென்று பொருள்கூறினும் பொருந்தும; "செய்தவ யாகையின், மேவினே னாயினும் வீழ்கதிர் போன்றேன்" என்று அறவணவடிகள் கூறியதாகப் பின்பு கூறுதல்காண்க; உசை - ம் காதை, க0க - க02. படர்கேம் - செல்லுவேம்.

கசசு. இளங்கொடி - மணிமேகலை. இளங்கொடி, நீர் எழுகவென்றசொல்லி எழுந்தனளென்க.

க - கசசு. மணிபலலவத்தில் தெய்வ நீங்கியபின்னர் மணிமேகலை தாழ்ந்து நோக்கித் திரிய, தீவதிலகை தோனறி 'யார்நீ' என்றலும், 'கேளாய், என்வரவு ஈது, பயன் இது, அன்னாய், நீயார்' என்றலும், தீவதிலகை உரைக்கும்; அங்ஙனமுறைப்பவள், என்றதைதலும், மணிமேகலை விரும்பிப் பீடிகையைதொழுது வணங்கிக கூடி வலஞ்செய்து நிறறலும், அவள்கையிற் பாத்திரம் புகுந்தது; புகுசதலும், மகிழ்வெய்தி 'வாழ்தீதல் வன்னெறிகடங்காது' என்றன, என்ற மணிமேகலையின் முன்னர்த தீவதிலகை யுரைக்கும்; அங்ஙனமுரைப்பவள் 'கண்டனை' என்றலும், மணிமேகலை 'காண்டல வேட்கையேன்' என, அவளுரைப்ப, மணிமேகலை வணங்கி நெறியலங்கொண்டு எழுந்து மயங்குறோன முன்னர் வந்துதோன்றிக் கனைத்து கூறும்; அங்ஙனங்கூறுகின்றவள், தொழுமென, தொழுதேதத்திய அவளொடும், இளங்கொடி எழுந்தனளென விணமுடிவு செய்க.

பன்னிரண்டாவது

# அறவணர்த்தொழுதகாதை.

[பன்னிரண்டாவது மணிமேகலை பாத்திரங்கொண்டே தன்னூர் அறவணர்த்தொழுதபாட்டு.]

ஆங்கவர் தம்முட னறவண வடிகள்
யாங்குள னென்றே யிளங்கொடி வினஅப்
நரைமூதிர் யாக்கை நடுங்கா நாவி
னுனைமூ தாள னுறைவிடங் குறுகி
மைம்மலர்க் குழலி மாதவன் றிருந்தடி
மும்முறை வணங்கி முறையுளி யேத்திப்
புதுமலர்ச் சோலை பொருந்திய வண்ணமு
முதய குமரனுங் குற்றுரை செய்தது
மணிமே கலாதெய்வ மணிபல் லவத்திடை
யணியிழை தன்னை யகற்றிய வண்ணமு
மாங்கத் தீவகத தறவோ னுசன
நீங்கிய பிறப்பு நேரிழைக் களித்தது
மளித்த பிறப்பி னுகிய கணவனைக்
களிக்கய னெடுங்கட் கடவுளிற் பெற்றதுந்
தவ்வைய ராகிய தாயையும வீயையும
வெவ்வினை யுருப்ப விளிந்துகே டெய்தி

---

அ. அவா - சுதமதி மாதவி.

உ. இளங்கொடி - மணிமேகலை. வினஅய்=வினவி - கேட்டுக்கொண்டு.

ச. உனைமூதாளன் - அறவணவடிகள். குறுகி - அடைந்து.

ஙு - ச. உச - ம் காதை, ஙுங - க00; "நரைமூ தாளர்" என்பது புறநானூறு, இஉ.

ஞ. குழலி - மணிமேகலை.

ரு. முறையுளி - விதிப்படி.

மேல்வருவன மணிமேகலை வார்த்தை.

எ. சோலை - உவவனம்.

கo. அணியிழை - எழுவாய்.

கக - கஉ. ஆசனம் பிறப்பை அளித்ததும்.

கச. கடவுளின் - மணிமேகலாதெய்வத்தால்.

கடு - கசு. வீயை மதுமயக்கத்தால் யானைக்குமுன்னே சென்றும், தாயை நிலாமுற்றத்தின்மேல் எறி வீழ்ந்தும் இறந்தமையால், 'தாயையும் வீயையும், வெவ்வினை யுருப்ப விளிந்து' என்றார்; கஉ - ம் காதை, சடு - சஅ.

மாதவி யாகியுஞ் சுதமதி யாகியுங்
கோதையுஞ் சாய னின்னெடுங் கூடின
ராங்கவர் தந்திற மறவணன் றன்பாற்
உ0 பூங்கொடி நல்லாய் கேளென் றுரைத்தது
முரைத்த பூங்கொடி யொருமூன்று மந்திரந்
தனக்குரை செய்துதா னேகிய வண்ணமுந்
தெய்வம் போயபின் றீவ திலகையு
மையெனத் தோன்றி யருளொடு மடைந்தது
உரு மடைந்த தெய்வ மாபுத் திரன்கை
வணங்குறு பாத்திரம் வாய்மையி னளித்தது
மாபுத் திரன்றிற மறவணன் றன்பாற்
கேளென் றுரைத்துக் கிளரொளி மாதெய்வம்
போகென மடந்தை போந்த வண்ணமு
கூ0 மாதவன் றன்னை வணங்கின ளுரைத்தலு
மணிமே கலையுரை மாதவன் கேட்டுத்
தணியா வின்பந் தலைத்தலை மேல்வரப்
பொற்றொடி மாதர் நற்றிறஞ் சிறக்க
வுற்றுணர் வாய்நீ யிவர்திற முரைக்கே
கூரு னின்னெடுந் தெய்வ நினக்கெடுத் துரைத்த
வந்நா ளன்றியு மருவினை கழூஉ
மாதி முதல்வ னடியிணை யாகிய
பாதபங் கயமலி பரவிச் செல்வேன்
கச்சய மாளுங் கழற்கால் வேந்தன்
சு0 றுச்சயன் றன்னையோர் சூழ்பொழிற் கண்டேன்
மாபெருந் தானை மன்ன நின்னெடுந்

---

கஎ - கஅ. க0 - ம் காதை, எசு - எசு. கக. திறம் - வரலாறு.

உக. பூங்கொடி - மணிமேகலாதெய்வம். மூன்றுமந்திரம்-வேற்றரு அடைவிப்பதும், ஆகாயத்தில் நிரியச்செய்வதும், பசியை நீக்குவதும்; க0-ம் காதை, அ0 - கக.

உசு. ஐயெனத் தோன்றி - விரைவாகத்தோன்றி.

உஙி. தெய்வம் - தீவதிலதை.

உஎ - உஅ. கக - ம் காதை, டுஎ. 'கேளென் றுரைத்த' என்றும் பாடம்.

உகூ. போக என - போவாயென்று சொல்ல.

ஙூஉ. தலைத்தலை மேல்வர :—உ - ம் காதை, டு.

மேல்வருவன அறவணவடிகளுடைய வார்த்தை.

கூக. மாதர் - விளி. நற்றிறம் - நல்ல கூறுபாடுகள்.

ஙூசு. உரைக்கேன் - உரைப்பேன்.

ஙூக. அந்நாள் அன்றியும்-அந்தநாளிற் சென்றதல்லாமலும்.

ஙூஅ. பாதபங்கயமலி:—க0-ம் காதை, சுக - சுஅ.

ஙூஅ - சு0. செல்வேன் துச்சயனை ஓர் பொழிலிற்கண்டேன்.

தேவியர் தமக்குந் தீதின் றேவென
வழிதக வுள்ளமொ டமற்றின ளாகி
யொளியிழை மாதர்க் குற்றதை யுரைப்போன்
சடு புதுக்கோள் யானைமுன் போற்றது சென்று
மதுக்களி மயக்கத்து வீரை மாய்ந்ததூஉ
மாங்கது கேட்டோ ரமிய மேறித்
தாங்காது வீழ்ந்து தாரைசா வுற்றதூஉங்
கழிபெருந் துன்பங் காவல னுரைப்பப்
ரு0 பழவினைப் பயனீ பரியலென் றெழுந்தே
னுடு கூத்த ரணியே போல
வேற்றே ரணியொடு வந்தீ தோவென
மணிமே கலைமுன் மடக்கொடி யார்திறந்
துணிபொரு ணாதவன் சொல்லிய மையான்
ருரு பிறவியு மறவியும் பெற்றியி னுணர்ந்த
நறுமலர்க் கோதாய் நல்கினை கேளாய்
தரும தலைவன் றலைமையி னுரைத்த
பெருமைசா னல்லறம் பெருகா தாகி
யிறுதியி னற்கதி செல்லும் பெருவழி
சுo யறுகையு நெருஞ்சியு மடர்ந்துகண் ணடைத்தாங்குச்
செயிர்வழங்கு தீக்கதி திறந்து கல்லென்
றுயிர்வழங்கு பெருநெறி யொருதிறம் பட்டது

---

சசு. 'ஆற்றருளுகி' என்றும் பாடம்.

சச. உற்றதை – உற்றதன்பத்தை.

சடு. புதுக்கோள் யானை - புதிதாகப் பிடித்துக்கொண்டுவரப்பட்ட யானை.

சள. அது - வீரைமாய்ந்தது. அரமியம் - நிலாமுற்றம்.

சஉ. கழிபெருந் துன்பம் - மிகப்பெரியதுன்பம்; அவ்வீருவரும் இறந்த பெரியதுன்பமுமாம்; கழிதல் - நீங்குதல்.

சஙு - சஉ. மாய்ந்ததும் சாவுற்றதுமாகிய துன்பத்தைக் காவலனுரைப்ப.

ரு0. பரியல் - வருந்தாதே.

ருக. 'ஆடுங் கூத்தரிய ரணி' என்றும பாடம்.

ருஙு - ருஉ. "ஆடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக், கூடிய கோலத் தொருவருநின் றியலாது" என்பது சிலப்பதிகாரம், நடுகற்காதை, கசுடு - கசுசு.

ருசு. அமையான் - தணியாளுகி.

ருருி. அறாலி - புண்ணியத்தோடு கூடியவழி.

ருசு. நல்கினை கேளாய் - உவந்தகேளாய்; நல்குதல - உவத்தல்; "நல்கினு நல்கா ளுயினும்" என்பது புறநானூறு, டு.

ருருி - ருசு. உக - ம் காதை, கo டு - கoசு.

ருள. தருமதலைவன் - புத்தன்; இதன் பொருளை, கக - ம் காதை, சுo - ம அடிக்குறிப்பிற்காண்க.

ருக. இறுதியில்நற்கதி - நிருவாணம்.

பெருவழி - தருமம்.

சுo. அறுகை - அறுகம்புல். கண்ணடைத்தாங்கு - இடம் அடைக்கப்பட்டாற்போல.

சுக. செயிர் - குற்றம்.

சுஉ. உயிர்வழங்கு பெருநெறி - பிறந்திறக்கும் உயிர்களெல்லாம் போகும்

தண்பனி விழுங்கிய செங்கதிர் மண்டில
முண்டென வுணர்த லல்லதி யாவதுங்
சுரு கண்டினி தினங்காக் காட்சி போன்றது
சலாகை நுழைந்த மணித்துளை யகவையி
னுலாநீர்ப் பெருங்கட லோடா தாயினு
மாங்கத் துளைவழி யுருநீர் போல
வீங்கு நல்லற மெய்தலு முண்டெனச்
எ0 சொல்லலு முண்டியான் சொல்லுத றேற்றூர்
மலலன்மா ஞாலத்து மக்களே யாதலிற்
சக்கர வாளத்துத் தேவ செல்லாங்
தொகொருங் கீண்டித் துடிதலோ கத்து
மிகோன் பாதம் விழுந்தன நிரப்ப
எரு விருள்பாந்து கிடந்த மலர்தலை யுலகத்து
விரிகதிர்ச செல்வன் றோன்றின னென்ன
வீசெண் ணுற்றே டூசெட் டாண்டிற்
பேறறி வாளன் றோன்றுமதற் பிறபாடு
பெருங்குரு மருங்கிற் சுருங்கைச் சிறுவழி

---

வழி ; சிலப்பதிகாரம், நடுகற்காதை, கவசு - கஎச. ஒருநிறமபட்டது - ஒரு வழிப்பட்டது.

சுரு. செஞதிர்மண்டிலம் - சூரியமண்டலம்.

சுச. யாவதும் - சிறிதும்.

நிகூ - சுடு. பெருவழி போன்றது.

சுசு. சலாகை - சிறிய காராசம். அகவையின் - உள்ளிடத்தே.

எ0. யான்சொல்லலும் உண்டு. தேற்றூர் - தெனியார.

எ0 - எக. மக்கள் தேற்றூராதலின்.

எரு. தொக்கு - கூடி. துடிதலோகம் - துஷிதலோகம் ; இஃது உலகம் முப்பத்தொனறனுள் ஒன்பதாவது ; மஹாராஜிகலோகமுதலிய தெய்வலோகம் ஆறனுள் நான்காவது.

எச. மிக்கோன்-சிறந்ததேவன் ; இவன் பெயர் பிரபாபாலனென்று சில புத்தநூலால தெரிகின்றது.

ஙிஅ - எச. சுo - ம் காதை, எ - கூ.

எகூ. செலவன் - சூரியன்.

ஙடு - எசு. "சுடர்வழக் கற்றத் தடுமாறு காலையொ, ரிளவள ஞாயிறு தோன்றிய தென்ன" (கo - ம் காதை, கo - கக) எனவும், "மைத்திருள் கூர்த மனமாசு தீரப், புத்த ஞாயிறு தோன்றுங் காலை" (கஉ - ம் காதை, அடு - அசு) எனவும், "மறவிரு ளிரிய மன்னுயி ரேமுற, வறவெயில் விரித்தாங் களப்பி லிருதியொடு, புதத ஞாயிறு தோனறுங் காறும" (உக - ம் காதை, கசுடு - ககஎ) எனவும, "துளகமில் புதத ஞாயிறு தோனறி" (உசு - ம் காதை, கசுஎ) எனவும் இந்நூலில யாணடும் புத்தன்தோற்றத்திற்குச் சூரியனே உவமைகூறுசில காணக.

எஎ. (?)

எஅ. பேரறிவாளன் - புதத்ன். பிற்பாடு - பின்னுக ; இஃது ஒருசொல, "பெண்ணணி கோலம் பெயர்ந்தபிற் பாடு" என்பது சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுதத காதை, க.

எக - எஅ தோன்றினனென்பதற்பே றறிவாளன் தோன்றுவான்.

எக. சுருங்கை - மதகு ; இச்சொல காந்தபடையென்பர் அடியார்க்கு நல்லார்; சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, சுடும அடியுரையிற்காண்க. சிறுவழி - சிறுவழியில.

அ0 யிருமபெரு நீத்தம் புகுவது போல
வளவாச் சிறுசெவி யளப்பரு நல்லற
மூளமலி யுவகையோ டுயிர்கொளப் புகூஉங்
கதிரோன் றேன்றுங் காலை யாங்கவ
னவிரொளி காட்டு மணியே போன்று

அடு மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களு ஞாயிறுந் திங்குரு விளங்கத்
தங்கா நாண்மீன் றகைமையி னடக்கும
வானம் பொய்யாது மாநிலம் வளம்படு

கூ0 மூனுடை யுயிர்க ளுறுதுயர் காணூ
வளிவல நொட்கு மாதிரம் வளம்படு
நளியிரு முந்நீர் நலம்பல தருஉங்
கறவைகள் றூர்தஞ்சி கலநிறை பொழியும
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா

கூடு விலங்கு மக்களுந வெளுஉப்பகை நீங்குங்
கலங்களுர் நரகரும் பேயுங் கைவிடுங்

---

அ0. நீத்தம் - வெள்ளம்.

அக. செவி - செவியில்.

அஉ. உயிர் உவகையொடு கொள்ள.

எக - அஉ. சிறுவழியில நீதத்ம்புகுவ துபோலச் சிறுசெவியில நலறம்புகும்.

அங. காலை - காலத்தில.

அச. மணி - சூரியகாந்தம்.

அடு. மைத்து - கறுத்து.

மேல்வருவன, புத்தன் அவதரிக்குங் காலத்து உளவாகும் நற்குறிகள்.

அஎ. நீங்கு உறுவிளங்க - நீமை உறு மல்விளங்க; விரோதமிலலாமலிருக்கவென்றபடி.

அஅ. நாண்மீன் - நகூத்திரங்கள்.

அங. வானம் - மேகம.

கூ0. உடம்புமெலிந்த உயிர்கள் துய ராக்காணூ; உடையுயிர் - வினைத்தொகை.

கக வளி வலம் கொட்கும்-காற்று வல மாகச்சுழலும்; "வலமாதிரதான் வளி கொட்ப" என்பது மதுராக்காஞ்சி, கூ. மாதிரம் - திசை; மலியுமாம்; "மாதிரங கொழுக்க" என்பது மதுராக்காஞ்சி, கo.

கூஉ. நளி இரு முந்நீர் - நீர்செறிந்த பெரியகடல்; "நளியிரு முந்நீர் நாவா யோட்டி" என்பது புறநானூறு, சுசு. முந்நீர் - எழுவாய். நலம் - "ஓர்க்கோலை சங்க மொளிர்பவளம் வெண்முத்த, நீர்ப் படு மூப்பிலே டைந்து" என ஐம்வளங் கள்.

கூங. கறவை - கறத்தலையுடைய பசுக் கள், கன்று ஆர்த்தி - கன்றை உண்ணச் செய்து, கலன் நிறை பொழியும் - கறவைக்கலமும் அதனினின்றும் பால்சொ ரியும்சாலும் வழியும்படி பாலைப்பொழி யும்; நிறை - சால்; "பீர்வாய் பரந்த நீரது நிறைமுதல்" என்பது பதிற்றுப் பத்து, இரண்டாம்பதது, கு; "கன்றரு த்தி மங்கையர் கலநிறை பொழிதர, நின றமேதி" எனபது சீவகசிந்தாமணி, நாம களிலம்பகம், சo. கறவைகள் பொழி யும்.

கூச. பறவைகள் நீங்கா. துய்த்து அனுபவித்து; புசித்தென்றுமாம்.

கூடு. மிருகச்சாதியும் மனிதச்சாதியும் தம்முள் அருசுதற்குக்காரணமாகிய பகைமையை ஒழியும்.

கூஙு. அலர் - தன்பம்; அலாை நர கச்சாதியும் பேய்ச்சாதியும் விட்டொழி யும்.

கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மாவு மருளு மன்னுயிர் பெருஅ
வன்கூட் பிறந்தவ னருளறங் கேட்டோ
கஂ0 ரின்னுப் பிறவி யிகந்தோ ராதலிற்
போதி மூலம் பொருந்திய சிறப்பி
னுதன் பாத நவைகெட வேத்துதல்
பிறவி தோறு மறவேன் மடக்கொடி
மாதர் நின்னுல் வருவன வில்லு
கஂ0 ரே றுநிகழ்ச்சி யாவும் பலவுள
வாங்கவை நிகழ்ந்த பின்ன ரலதுஉ
நூங்கொடி மாதர் பொருளுனா பொருந்தா
யாதி முதல்வ னருந்துயா கெடுகுமு
பாதபங் கயமலே பரசின ராதலி
கஂ0 னீங்கிவ ரிருவரு மிளங்கொடி நின்னே

---

கூ. கூன் - வளைவு; ஈண்டு வளைவையுடைய வடிவத்திற்கு ஆருபெயர். குறள் - குறுகியவடிவம்; 'மக்களுள் தீரக குறியானைக் குரளனென்றும், அவனில் நெடியானைச் ஙிந்த னென்றும்' கூறவர் ஆசிரியர் நச்சினர்க்கினியர்; இதனை, தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், சஂ - ம் சூத்திரவுரையிற் காண்க. ஊமம் - ஊமை.

கூஅ. மா - விலங்குவடிவாகப்பிறப்பது. மருள் - அறிவின்றி மயங்கியிருப்பது. உயிர் - ஈண்டுமக்களுயிர்.

கூக - கூஅ. கூன்முதலியவடிவங்களை உயிர்கள் பெறமாட்டா. கூன்முதலிய ஆறனுடு குருட்டையும் மணிபோற்பிறப்பதாகிய பிண்டத்தையுங்கூட்டி எண வகையெச்சமென்பர்; இதனை, "சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமுங், கூனுஞ் குறளு மூமுஞ் செவிடு, மாவு மருளு மூளப்பட வாழ்நர்க், கென்பே ரெச்ச மென்றிவை யெல்லாம், பேதைமை யல்ல தறிய மில்லென" (புறநானூறு, உஅ) என்பதனுலும், "குறளொடு செவிடு மூங்கை கூன்மருள் குருடு மாவே, யுறமுறப் பில்லாப் பிண்ட மோதிய வெண்மெய் யெச்சம்" (சூடாமணி நிகண்டு, பன்னிரண்டாவது, பல்பெயர்க் கூட்டத தொருபெயர்த்தொகுதி, கச) என்பதனுலும் உணர்க.

கூக. அருளறம் - வினைத்தொகை, தியாகருமமுமாம்.

கஂ0. இன்னு - துன்பம். இகந்தோர் - கடந்தோர்.

கஂஉ. பாசம் - பாதத்தை. நவை - குற்றம்.

கஂஉ - கஂரு. ஏத்துதலை மறவேன்; மறவேனென முமாம்.

கஂச. மாதர் - வினி. இவ்வூரில.

கஂரு. உக - ம் காதை, கசு. ஏதிச்ழ்ச்சியென்பதற்குப்பொருளை, சூம காதை, ச - ம் அடிக்குறிப்பிற்காண்க.

கஂச - கஂரு. வருவனவாகிய ஏதிர்ச்ழ்ச்சி.

கஂஎ. பொருளுனா - மெய்வார்த்தை. என்றது தருமோபதேச மொழிகளை, "பொய்யில் காட்சியோர் பொருளுனா யாதலின்" என்பது சிலப்பதிகாரம், நடுகற்காதை, ககஅ. 'பொருளுனாபொருந்தா' என்றும் பாடம்.

கஂஅ. ஆதிமுதல்வன் - புத்தன்.

கஂக. பரசினர் - துதித்தார்.

கஂஅ - கஂக. ஆதிமுதலவனது பாதபங்கயமலே.

கக0. இருவர் - மாதவி சுதமதியென்பவர். இளங்கொடி - வினி.

டோங்குயர் போதி யுரவோன் றிருக்கடி
தொழுது வலங்கொண்டு தொடர்வினை நீங்கிப்
பழுதி னன்னெறிப் படர்குவர் காணு
யாருயிர் மருந்தா மமுத சுரபியெனு
கசடு மாபெரும் பாத்திர மடக்கொடி பெற்றனை
மக்க டேவ ரெனவிரு சார்க்கு
மொத்த முடிவி னோரை முகைக்கேள்
பசிப்பிணி தீர்த்த லென்றே யவருந்
தவப்பெரு நல்லறஞ் சாற்றின ராதலின்
கஉ0 மடித்த தீக்கொளிய மன்னுயிர்ப் பசிகெட
வெடித்தனள் பாத்திர மிளங்கொடி தானென.

அறவணர்த்தொழுதகாதை முற்றிற்று.

---

ககக. உரவோன் - புத்தன்; உரம் - அறிவு.

ககங. பழுது இல னன்னெறி - குற்றமில்லாத நல்லவழி; இதனை, விசுத்திமார்க்கமென்பர். நெறி - நெறியில். படர்குவர் - செல்குவர்.

கஅக - ககங. பரஞ்சோதியாதலின், இவரிருவரும் நின்னை டி உரவோனடியைத் தொழுது வலங்கொண்டு நீங்கிப் படர்குவர்.

ககச. இருசார்க்கும் - இரண்டு பகுதி கட்கும்.

ககஅ தீர்த்தலாம். அவரும்-அறவண டிகளும். 'பசிப்பிணி தீர்த்த வன்றே யாவரும்' என்றும் பாடம.

ககள - ககஅ. ஓரறம் தீர்த்தலாம்.

ககக. தவப்பெரு நலறம - மிகப்பெரிய நல்லதருமம்.

கஉ0. கொளிய - கொளுதினற்போன்ற. 'தீக்கதி மன்னுயிர் பசிகெட' என்றும் பாடம்.

கஉக. இளங்கொடி பாத்திரத்தை எடுத்தனள். 'எடுத்தனன் பாத்திரம' என்றும் பாடம்.

க - கஉக. இளங்கொடி அவர்தம்முடன் அடிகள் யாங்குளரென்று வினஅய்க்குறுகி மாதவனடியைவணங்கி எத்தி உசாத்தலும், கேட்டு அவரும் தவப்பெரு நல்லறம் சாற்றின ராதலின், இளங்கொடி பாத்திர மெடுத்தனளென முடிக்க.

பதின்மூன்றாவது

# ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை.

[பதின்மூன்றாவது மணிமேகலைக்கு அறவணர் ஆபுத்திரன்றிறங்கூறியபாட்டு.]

மாபெரும் பாத்திர மடக்கொடிக் கருளிய
வாபுத் திரன்றிற மணியிழை கேளாய்
வார ணாசியோர் மறையோம் பாள
ஞான வுவாத்தி யபஞ்சிக னென்போன்
பார்ப்பனி சாலி காட்புக்கடை கழிந்து
கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சித்
தென்றிசைக குமரி யாடிய வருவோள்
சூன்முதிர் பருவத்துத் துஞ்சிரு ளியவிடை

உ. திறம் - வரலாற்றை.

கூ. வாரணாசி - காசி; 'வாரணவாசி' என்றும் பாடம். மறையோம்பாளன் - வேதத்தைப் பாதுகாத்தலையுடையான்; அந்தணனென்றபடி. "வயனங் கோட்டிலோர் மறையோம் பாளன்" என்பர் பின்னும்; கசு - ம் காதை, கடு.

ச. ஆரண உவாத்தி - வேதம் ஓதுவிப்பவன்; இஃது உபாத்தியாயனென்னும் வடமொழிச்சிதைவு. வேதத்திற் சில பாகத்தையேனும் வேதாங்கங்களேயேனும் ஜீவனத்தின்பொருட்டு ஓதுவிப்பவன் உபாத்தியாயன்; இதனை மனுஸ்மிருதி இரண்டாவது அத்தியாயம், கசகம் சுலோகத்திற் காண்க. இப்பெயர் தமிழ்நூல்களில் உவாத்தியன் உவாத்தியான் உவாத்திகனெனவும் வழங்கும். அபஞ்சிகன் - காரணப்பெயர்; பங்கமில்லாதவனென்பது பொருள். 'ஆரணவுவாத்திகன்' என்றும் பாடம்.

ஙி. பார்ப்பனி சாலி - அவன் மனைவி சாலியென்பாள்; அந்தணர்களிற் கணவனைப் பார்ப்பானென்றும், மனைவியைப் பார்ப்பனியென்றுங் கூறுதல் மரபு; "பார்ப்பான் றன்னெடு கண்ணிழந் திருந்தவித, தீத்தொழி லாட்டி." என்று மூனபு வந்திருத்தல்காண்க; சுஎ-ம் காதை, கசூ-கசூ. காப்புக் கடை கழிந்து - காவலின எல்லையைக்கடந்து; வியபிசரிதனென்ற படி.

சு. கொண்டோற் பிழைத்த தண்டம் அஞ்சி - கணவனுக்குப் பிழைசெய்தமையாலுண்டாகும சிக்கைக்குப் பயந்து; தண்டம் - சிக்கை; "கொணடோற் பிழைத்த தண்டந் தூகி" என்பதன் பெருங்கதை, உஞ்சைக்காண்டம், சாங்கியன்முயலை.

எ. குமரி - கன்னியாகுமரியென்னும் ஆறு. ஆடிய - ஆதற்பொருட்டு. குற்றமுற்ற குலமகளிர் அகுற்றதைப் போக்குதற்பொருட்டுக் குமரியாடச்செல்லுதல மரபு; டு - ம் காதை, கூஎ - கூஅ.

அ. 'சூன்முதி ருயக்கத்து' எனறம பாடம். துஞ்சிருள் - யாவருந் தூங்குதற்குக் காரணமாகிய இருளில, இயவு இடை - வழியினிடததே. துஞ்சிருள் - செறிந்த இருளுமாம். 'துஞ்சிருள் யாமத்து' என்றும் பாடம்.

யீன்ற குழவிக் கிரங்கா ளாகித்
கo தோன்றுத் துடவையி னிட்டன னீங்கத்
தாயிரா வாக்குழ வித்துயர் கேட்டோ
ராவந் தணைந்தாங் கதன்றுயர் தீர
நாவா னக்கி நன்பா லூட்டிப்
போகா தெழுநாட் புறங்காத் தோம்ப
கரு வயனங் கோட்டிலோர் மறையோம் பாள
னியவிடை வருவோ னீளம்பூதி யென்போன்
குழவி யேங்கிய கூஉக்குரல் கேட்டுக்
கழுமிய துன்பமொடு கண்ணீ ருகுத்தாங்
காமக னல்ல னென்மக னென்றே
உo காதலி தன்னெடு கைதொழு தெடுத்து
நமபி பிறந்தான் பொலிகநங் கிளையெனத்
தம்பதிப் பெயர்ந்து தமதொடுங் கூடி
மார்பிடை முந்நூல வணியா முன்னர்
நாவிடை நன்னூ னன்கன நவிற்றி

---

கூ. குழவிக்கு - குழந்தைக்கு.

கo. துடவை - தோட்டம்; "தொடுப்பெறிந் தழுத துளர்படு துடவை." இது **பெரும்பாணாற்றுப்படை**, உoக; "தொய்யாது வித்திய துளர்படு துடவை." இது **மலைபடுகடாம்**, கூஉ.

கூ - கo. கசு - ம் காதை, அசு - அஎ

கக. தூவாக் குழவி - உண்ணுதற் குழந்தை. துயர் - பசித்துயரதனால் ஒழியா மல அழுது கூப்பிடும் ஒலி; ஆகுபெயர்; "தாயி னூவாக் குழவி போல, வோவா தழு கூஉகின் னூடற்றியோர் நாடே." என்பது **புறநானூறு**, ச.

கஉ. ஆ - பசு. அதன் றுயர் - அக்குழ ந்தையின் பசித்துன்பம்.

கச. புறங்காத்து ஓம்ப - பாதுகாக்க; இவை ஒருபொருட்பன்மொழி. புறங் காத்தல் - பாதுகாத்தல்; "வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப" என்பது **தொல் காப்பியம்**, செய்யுளியல், கசo; "மெலி வில செங்கோ னீபுறங் காப்ப" என்பது **புறநானூறு**, சஉ. இதனால் ஆபுத்திர னென்பது இவனுக்குப் பெயராயிற்று.

கஞ. வயனங்கோடு - ஓரூர். 'வயவ னங் கோட்டில்' என்றும் பாடம். மறை யோம்பாளன் :—கசு - ம் காதை, சு.

கசு. வருவோன் - மனைவியுடன்வரு வோன்; பின் "காதலி தன்னெடு கை தொழு தெடுத்து" (உo - ம் அடி) என் பதனால், 'மனைவியுடன்' என்பது கொ ள்ளப்பட்டது. பூதியென்பது அவன் பெயர்; "காதை பூதியுக் தனமனை கடி தர" என்று இக்காதையிலேயே பின்பு வருதல்காண்க; கoக.

கஅ. கழுமிய - கலந்த; **புறநானூறு**, உடுஅ. கண்ணீர் - உவகைக்கண்ணீர்

கக. ஆ மகன் அல்லன் - பசுவினுடைய மகனல்லன்; பசுப் பாதுகாத்தலினைக் கடோனுதலின் இங்ஙனங்கூறினான்.

உo. காதலி - மனைவி; கைதொழுது அக்குழந்தையைத் தனக்குத் தந்தது தெய்வமென்றெண்ணி அதெய்வத்திற்கு அஞ்சலிசெய்து; "பழுதில் காட்சிப் பைந்தொடி புதல்வனை, தொழுதனன் வாங்கி" என்று இருதலுள்ளே பின்புவரு தல் காண்க; உடு - ம் காதை, கஅஅ - கஅக.

உக. நம் கிளை பொலிகவென்று.

உஉ. பதி - ஊர்.

உசு. மூந்நூல் - பூணூல். வணியா முன்னரென்பது வினாயக்கற்பித்தமை வினக்கிகின்றது.

உச. நன்னூல் - வேதம் வேதாங்கங் கள். நவிற்றி - நவிற்ற; நவிலுதல் -

உடு யோத்துடை யந்தணர்க் கொப்பவை யெல்லா
நாத்தொலி வின்றி நன்கன மறிந்தபி
னப்பதி தன்னுளோ ரந்தணன் மனைவயிற்
புக்கோ னுங்குப் புலைசூழ் வேள்வியிற்
குரூஉச்கொடை மாலை கோட்டிடைச் சுற்றி
கூ0 வெரூஉப்பகை யஞ்சி வெய்துயிர்த்துப் புலம்பிக்
கொலைகவில் வேட்டுவர் கொடுமர மஞ்சி
வலையிடைப் பட்ட மானே போன்றுங்
கஞ்சிநின் றழைக்கு மாதுயர் கண்டு
நெஞ்சுநடுக் குற்று நெடுங்கணி ருகுத்துக்
கூடு கள்ள விணையிற் கடுந்துயர் பாழ்பட
நள்ளிருட் கொண்டு நடக்குவ னென்னு
மூள்ளங் காந்தாங் கொருபுடை யொதுங்கி
யல்லிடை யாக்கொண் டப்பதி யகன்றோன்
கல்லத ரத்தங் கடவா நின்றுழி
சo யடர்க்குறு மாக்களொ டந்தண செல்லாங்

---

கூறி அடிப்படுதல்; "நல்லோர் குழீஇய நாகவி லவையத்து" என்பது மலைபடுகடாம், எஎ; "மறைநவி லந்தணர் நுவலவும் படுமே" என்பது புறநானூறு, க.

உடு. ஒத்து - வேதம்; "மறப்பினு மோத்துக் கொளலாகும்" என்பது நீதிநெறி விளக்கம், ககஅ.

உக. நாத்தொலிவு: மணிமேகலை, உச - ம் காதை, ககக; சிலப்பதிகாரம், அரங்கேற்றுகாதை, சச.

உஅ. புலை சூழ் வேள்வியில் - அசுத்தமாகிய ஊன்றினையைக் கருதுகின்ற யாகசாலையில்; சூழ்தல் - கருதல். புலையும், வேள்வியும் ஆருபெயர். 'புக்கோனுங்குப் புலைசூழ் வேள்வியில்' என்றும் பாடம்.

உக. நிறம்பொருந்திய தொடுக்கப்பட்டமாலை கொம்பினைக்ணே சுற்றப்பட்டு. 'குரூஉக்கொடி மாலை' என்றும் பாடம்.

கூ0. வெரூஉப்பகை - அச்சத்தைத்தரும்பகை. வெரூஉ - அச்சம்; "வெரூஉப் பறை அவலும் பரூஉப்பெருந் தடக்கை" என்பது பொருநராற்றுப்படை, எசக. புலம்பி - வருத்தமுற்று; புலம்பு - வருத்தம்; "புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சி" என்பது மலைபடுகடாம், சக.

கூக. தொலை நவில் வேட்டுவர் - கொலை தொழிலைச்செய்கின்ற வேடருடைய. கொ மெரம் - வில்.

கூசு. அழைக்கும் ஆ துயர் - கூப்பிடுகின்ற பசுவின துயரதை.

கூ0 - கூசு. புலம்பிப் போன்று அஞ்சி நின்று அழைகரும் ஆ.

உஅ - கூக. புக்கோன் ஆனைதுதுயரத்தைக் கண்டென்க.

கூடு. கள்ளவினையில் - திருட்டுத்தொழிலால், கடுந்துயர் பாழ்பட - பசுவினது மிக்கதுன்பம் இல்லையாமபடி; கடுந்துயர் - மரணத்துனபமுமாம. 'கடுவினை பாழ்பட' என்றும் பாடம்.

கூசு. நள்ளிருள் - செறிந்தவிருட்டு; "வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்" என்பது பொருநராற்றுப்படை, எஉ.

கூஎ. உள்ளம கரந்து - தன்னெண்ணத்தை மறைத்து.

கூக. கல்லதரத்தம் - பருக்கைகற்கள பொருந்திய என்னெறியையுடைய அருநெறி; "கல்லத ரத்தங் கடகை" என்பதி சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, இஎ.

சo. அடர்க் குறுமாக்களொடு - நெருக்குதலைச்செய்யும் அறிவில்லாதாரோடு, "ஒலித்தொருங் கீண்டிய வூர்க்குற மாந்

கடத்திடை யாவொடு கையகப் படுத்தி
யாகொண் டிந்த வாரிடைக் கழிய
நீசமக னல்லாய் நிகழ்ந்ததை யுரையாய்
புலேச்சிறு மகனே போக்கப் படுதியென்
சுரு றலேக்கோ லதனு லறைந்தனர் கேட்ப
வாடடிநின் றலேக்கு மந்தண ருவாத்தியைக்
கோட்டினிற் குத்திக் குடர்புய்த் துறுத்துக
காட்டிடை கல்லாக் கதழ்ந்துகிளர்ந் தோட
வாபுத் திரன்ரு ணுங்கவர்க் குரைப்போ
நூo ளேவன செய்யன்மி ளெடிவன கேண்மின்
விடுநில மருங்கிற் படுபுல லார்ந்து
நெருநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பா
லறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டு
நுரு மிதளெடு வந்த செற்ற மென்னை
மூதுமறை யந்தணர் முன்னிய தாைமோ

---

களும்'' என்பா பின்னும்; கடி - ம் காதை, நிகo. குறுமாக்கள்.—கலித்தோகை, அஉ.

சக. கடம் - அருநெறி.

சஉ. ஆ கொண்டி - பசுவைக் கைப் பற்றிக்கொண்டு; ஆநிடை - அரியவழி.

சசு. 'நீ மகனல்லாய்' என்றும் பாடம்.

சச. ஊனேவிரும்பிப் பசுவைக்கவர்ந்தானென்ற நினைந்து 'புலேச்சிறு மகனே' என்றூர். 'புலேச்சிமகனே' என்றும் பாடம். போகுகப்படுநி - விலக்கப் படுவாய்.

சடு. அலேக்கோல் - வருத்துதலேச்செய்யும் கோல்; அறைந்தனர் - அடித்தனராய். 'கேட்புழி' என்றும் பாடம்.

சசு. ஆட்டி அலேக்கும் - மிகவும் வருத்துகினற. இவை ஒருபொருட்பன் மொழி.

சஎ. கோடு - கொம்பு. குடர் புய்த் துறுத்து - குடரைப்பிடுங்கி; ''கோடு புய்க் கல்லா தழக்கு நாடகேள்'' என்பது கலித்தோகை, கூஅ; ''புய்த்தெறி கரும்பின் விடுகழை'' என்பது புறநானூறு, உஅ.

சஅ. கதழ்ந்து கிளர்ந்தோட - விரைந் தெழுந்தோட; கதழ்தல் - விரைதல்; ''சோயுங கதழ்குருதி சோள்புடைப்ப'' என்பது புறப்பொருள்வெண்பாமாலே, காஞ்சிப்படலம், கசு. கிளர்தல் - எழுதல்; ''கால்கிளர்ந் தன்ன வேழம்'' என்பது திருமுருகாற்றுப்படை, அஉ. 'கழிந்துகிளர்ந் தோட' என்றும் பாடம்.

மேல்வருவன ஆபுத்திரன்கூற்று.

நo. ஒடிவன - சொல்லுவனவற்றை. ''நோவன செய்யே ளெடியது கேணமோ'' என்றும் பாடம்.

நுக. விடுநிலமருங்கில் - மேய்தற்கு அரசனுல்விடப்பட்ட நிலத்தினிடத்தே, படு புல் ஆர்ந்து - தானே உண்டாகிய புல்லேமேய்ந்து. பசுக்கள் கவலேயின்றி மேய்தற்கு அரசனுல் விடப்பட்டநிலம் கோஸஞ்சாரபூமியெனப்படும்.

நிசு. பிறந்தநாள் - மக்கள்வினை. நீம்பால் - இனியபால்.

நிடி. இதளெடு - இப்பசுவினிடத்து; உருபுமயக்கம். செற்றம் - கோபம்.

நிசு. மூன்னியது-எண்ணியது. உளாமோ - உளையென்னும் எவற்பன்மை உயிர்மெய்கெட்டு ஒகாரம்பெற்று வந்தது. 'மூதுமறை மாக்கண் முன்னிய தாைமோ' என்றும் பாடம். எனவென்று ஒருசொல் வருவிக்க.

பொன்னணி நேமி வலங்கொள்சக் கரக்கை
மன்னுயிர் முதல்வன் மகனெமக் கருளிய
வருமறை கன்னூ லறியா திகழ்ந்தனை
சு0 தெருமர வுள்ளத்துச் சிறியை நீயவ்
வாமக னுதற் கொத்தனை யறியா
நீமக னல்லாய் கேளென விகழ்ந்தலு
மான்மக னசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்று
கூடு நரிமக னலலனை நேச கம்பள
னீங்கிவர் நுங்குல தருடி கணங்களென்
றேங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலு முண்டா
லாவொடு வந்த வழிகுல முண்டோ
நான்மறை மாக்கா ணன்னூ லகத்தென
எ0 வாங்கவர் தம்முளோ ரந்தண னுரைக்கு
மீங்கிவன் றன்பிறப் பியானறி குவனென
நடவை வருதகமொடு நல்கூர் மேனியள்
வடமொழி யாட்டி மறைமுறை யெய்திக்
குமரி பாதங் கொள்கையின் வணங்கித்

---

சுஎ. நேமி - சக்கரத்தின்சூடு; வட்டமுமாம். வலம் - வெற்றி; வலப்பக்கமுமாம். நேமியையுடைய சக்கராயுதம்.

சுஅ. மன்னுயிர்முதல்வன் - திருமால். மகன் - பிரமன். 'எமக்களித்த' என்றும் பாடம்.

சு0. தெருமரல் - சுழற்சி. சிறியை - சிறுமையையுடையாய்.

சுக. நூற்பொருளையறியும் அறிவிலா யென்பார், 'ஆமக னுதற் கொத்தனை' என்றார்; "விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனையவர்" என்று வருதல் காண்க; இது நீதிநூற்துறள், சகர.

சுஉ. இகழ்ந்தலும் - அவ்வந்தணர் இகழ்ந்துபேசுதலும்.

மேல்வருவன ஆபுத்திரன் கூற்று.

சுங. (?) அசலனென்பவன் ஆனின் மகன்; ஆன் - பசு. சிருங்கியென்பவன் மானின் மகன்.

சுச. (?) விரிஞ்சியென்பன் புலியின் மகன். புரையோர் - மேலோர்.

சுஞ. (?) கேசகம்பளனென்பவன் நரியின் மகன்: அகிதகேசகம்பளரென்ற ஒரு முனிவர்பெயர் பௌத்தநூல்களிற் காணப்படுகின்றது.

சுஅ - சுக. ஆவொடு - ஆவால். மன னூலகத்து ஆவொடு வந்த அழிகுல முண்டோ? இல்லையென்றபடி. முனனம் 'ஆமக னுதற் கொத்தனை' எனற அந்தணர் இகழ்ந்ததற்குப் பரிகாரங் கூறுகின்றவனுதலின், 'ஆவொடு வந்த வழிகுல முண்டோ' என்றான்.

எ0 - எக. இவன் பிறப்பை யான் அறிகுவனென்று ஓரந்தணன் உரைப்பான்.

எஉ. நடவை - வழி. நல்கூர் மேனியள் - இளைதத உடலமைபையுடையாள்.

எங. வடமொழி யாட்டி - பார்ப்பனி; இந்நூலில் இ - ம காதை, சு0 - ம் அடியிற் பார்ப்பாரை வடமொழியாளரென்று கூறியிருத்தல் காண்க. மறைமுறை யெய்தி - வேதவிதிப்படியே சென்று.

எசை. குமரியாடப்போந்தோர், ஆங்குள்ள குமரித்தெய்வப் படிமத்தை வணங்குதல் மரபு.

எடு தமரிற் றீர்ந்த சாலியென் போடீ
யாது நின்னூ ரீங்கென் வசவென
மாமறை யாட்டி வருகிற முளாக்கும்
வார ணுசியோர் மாமறை முதல்வ
ஞரண வுவாத்தி யரும்பெறன் மனீவியான்
அ0 பார்ப்பார்க் கொவ்வாப் பண்பி னெழுகிக்
காப்புக்கடை கழிந்து கணவனீ யிழந்தே
னெறிபய முடைமையி னிரியன் மாக்களொடு
தெற்கட் குமரி யாடிய வருவேன்
பொற்றோர்ச் செழியன் கொற்கையம் பேரூர்க்
அடு காவதங் கடந்து கோவல ரிருக்கையி
னீன்ற சூழவிக் கிரங்கே னெகிச்
தோன்றுத துடவையி னிட்டனன் போக்தேன்
செல்கதி யுண்டோ தீவினீ யேற்கென்
றல்லலுற் றழுத வவண்மக னீங்கிவன்
கo சொல்லுத றேற்றேன் சொற்பய மின்மையிற்
புல்லலோம் பன்மின் புலீமக னிவனென
வாபுத் திரன்பின் பமர்நகை செய்து

---

எடு. தமரிற்றீர்ந்த - தனகருச் சிறந் தோரினின்றும் நீங்கிய.

எச - எடு. வணங்கித் தீர்ந்த சாலி.

எசு. ஈங்கு வரவு என்னென.

எஎ. உரைக்கும் - உரைப்பான்.

எஅ. வாரணஞி=வாராணஸீ - காசி; வடமொழியில் 'விச்தாந்தகௌழதீ' என்னும நூலின் அவ்யயீபாவப்பிரகரணதில், "யஸ்யசாயாமः" எனனும் ஸூத்ரவியாக்கியானததில் 'வாராணஸீ' என்பதற்கு 'நல்லஜலதுக்குத் தூரத் திலில்லாத நகரீ' என்று தத்துவபோதினியென்னும் உரையாசிரியர் பொருள்செய்திருப்பதாகக் கூறுவர்.

எசு. 'உவாதத்' என்பது, "தவாஅக் ராதலின்" எனப் பேநங்கதையிலும் வந்திருத்தல் காண்க; இஃது உஞ்சைக்காண்டம, பிடியேற்றியது.

அ0. ஒழுகி - நடந்து.

அக. காப்புக்கடை கழிந்து :—கசு - ம் காதை, இ.

'அஉ. எறிபயம் - அடிததலாலுணடாகும் அச்சம். 'நெறிபய முடைமையின்' என்றும் பாடம். இரியல் மாக்கள் - கெடுதலுற்ற மாக்கள்; விளாந்துசெல்லுமாக்களென்றுமாம்.

அசு. 'தக்கண குமரி' என்றும் பாடம். ஆடிய - நீராடும்பொருட்டு.

அச. செழியன் - பாண்டியன். கொற்கை - பாண்டியர்களின் பழைய இராசதானி.

அ0 கோவலர் - இடையர்.

அஎ. துடவை - தோட்டம்.

அசு - அஎ. கசு - ம் காதை, க - க0.

அஅ. தீவினீயேற்குச் செல்கதியுண்டோ.

கo. பயம் - பிரயோசனம்; இன்மையிற் சொல்லுதறேற்றேன்.

கக. புல்லலோம்பன்மின் - ஸ்பரிசித்தலைச் செய்யாதொழிக. இவன் புலீமகன் - இவன் அசுததமுடைய மகன். புலீ - லியபிசாரமுமாம்; இது மலைநாட்டுவழக்கு.

கஉ. அமர்நகை - விரும்புஞ்சிரிப்பு.

மாமறை மாக்கள் வருங்குலங் கேண்மோ
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கூடு கடவுட் கணிகை காதலஞ் சிறுவ
ரருமறை முதல்வ ரந்தண ரிருவரும்
புரிநூன் மார்பீர் பொய்யுரை யாமோ
சாலிக் குண்டோ தவறென வுரைத்து
நான்மறை மாக்களீ ரகுவன னிற்ப
கஂ வோத லந்தணர்க் கொவ்வா னென்றே
காதை பூதியுந் தன்மனை கடிதர
வாகவர் கள்வனென் றந்தண ருறைகருங்
கிராம மெங்கணுங் கடிஞையிற் கலலிட
மிக்கசெல வத்து விளங்கியோர் வாழுங்
கஂடு தக்கண மதுரை தான்சென் றெய்திச
சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்
தந்தின் முன்றி லம்பலப் பீடிகைத்

---

கூ. கேண்மோ - கேளுமென்னும் வெற்பன்மை உயிர்கெட்டு ஓகாரமபெற் றுவந்தது.

கூஉ. முதுமறைமுதல்வன் - பிரஹ்மா.

கூடு. கடவுட்கணிகை - திலோத்தமை யென்பாள். சிறுவர் - பிள்ளைகள்.

கூசு. முதல்வராகிய அந்தணரிருவரும். இருவர் - வஸிஷ்டர், அகஸ்தியர்.

கூடு-கூசு. அந்தணரிருவரும் காதலஞ் சிறுவரென்க.

கூச - கூசு. வஸிஷ்டரும் அகஸ்திய ரும் திலோத்தமையின் பிள்ளைகளென் பதைப் பின்வரும் வாக்கியத்தாலுணர்க. 'வஸிஷ்டனும் அகஸ்தியனும், பிரஹ்மா திலோத்தமையென்னும் அப்ஸரஸைகண்டகாலத்துக் கலசத்து ஜனித ரானர்' என்பது, நீலகேசிவிருத்திஸமய திவாகரத்திற் கண்டது.

கூஅ. தவறு - குற்றம்.

கூக. நகுவனன் - சிரிப்பவனுகி.

கஂஂ. ஒவ்வான் - பொருந்தான்; என்றது ஆபுத்திரனை.

கஂக. காதை - தகப்பன். கடிதர - நீக்க.

கஂசு. கடிஞை - பிச்சைப்பாத்திரம். கல் இட - கல்லைப் போகட; உலகத்திற் கடிஞையிற் கலலிடுவார் எக்காலத்தும் இலராகவும் இவனுக்கு இங்ஙனந்தீநகதேயென்ற இரங்கிச்கூறினர் 'கடிஞையிற கலலிடுவாரில்' எனபது ஒரு பழமொழி; இதனைப் பின்வரும் வெண பாவாலுணர்க; "நீனேதத் நிதுவென் றந் நிர்மையை நோக்கி, மனத்த தறிதே வர் மாணடார் - புனைதத, குடிஞை யிரட் டுங் குளிர்வனை நாட, கடிஞையிற கல்லி டுவா ரில." இது பழமொழி, உசசு.

கஂடு. தக்கணமதுரை - தென்றிசை கணுள்ள மதுரை; என்றது கூடற பதியை; தக்கணம் - வடசொற்றிரிபு; சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, அர, அடியார்க்கு நல்லாருரையைப்பாரக.

கஂசு. சிந்தாவிளக்கு-ஸரஸ்வதிதேவி; பதிகத்தின சுஂ-ம வரிக்குறிப்பைப் பார்க்க. நியமம் - கோயில்; ஸரஸ்வதிதே வியின் கோயிலாகவின, அதற்குக கலை நியமமென்பது பெயராயிற்று; கச-ம காதை, கஂ-கக, கஅ - கஅ.

கஂஅ. முன்றில் அம்பலப்பீடிகை-சித்தாதேவியின் கோயிலவாயிற்கணுள்ள மன்றினிடத்தில். அம்பலப்பீடிகை-அம் பலமாகிய பீடிகை; அஃது உயர்த்துக கட்டப்பட்டிருததலின், பீடிகையெனப் பட்டது; பீடிகையென்பதற்குக் கோயில்வாயிற்சணுள்ள பலி பீடமெனினும

தங்கினன் வதிந்தத் தக்கணப் பேரு
ரையக் கடிஞை கையி னேந்தி
கஅ0 மையறு சிறப்பின் மனைதொறு மறுகிக்
காணூர் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரிலலோர் பிணிநடுக குற்றோர்
யாவரும வருகவென் றிசைத்துட னூட்டி
யுண்டொழி மிச்சிலுண் டோடுதலே மடுத்துக்
கஅநி கண்படை கொள்ளுங் காவலன் ருனென.

ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை முற்றிற்று.

---

பொருந்தும்; இங்ஙனங்கொள்ளுங்காற் பீடிகையையுடைய அம்பலமென மாறுக.

கஅ. தங்கினன் வதிந்து - தங்கி; ஒருபொருட்பன்மொழி. தக்கணப்பே ரூர - மதுரையில.

கஅ0. மை-குற்றம். மறுகி-சுழன்று.

கஅக. காணூர் - குருடர். கேளார் - செவிடர்.

கஅஉ. பேணுநரில்லோர் - அகதிகள். 'பேணின ரில்லோர்' என்றும் பாடம். பிணி - நோய்.

கஅக - கஅஉ. உ -ம் காதை, உஉ-உஉரு.

கஅரு. யாவரும் - மேற்கூறப்பட்ட காணூர்முதலிய யாவரும். உடன் ஊட்டி - ஒருங்குண்ணச்செய்து; உடன - உடனேயென்றுமாம்.

கஅச. உண்டொழி மிச்சில் உண்டு - அவர்கள் உண்டொழிந்த மிகுதியையுண்டு; இது "விருந்தோம்பி, மிச்சின் மிசைவான்" என்ற அதி-ம் திருக்குறளின் பொருளைத் தழுவி வந்தவாறு காண்க. ஒடு - பிச்சைப்பாத்திரம். தலைமடுத்து - தலையேயாகக்கொண்டு. 'தலையடுத்து' என்றும் பாடம்.

கஅடு. கண்படை - உறக்கம். காவலன் - காத்தலையுடையவன்; என்றது ஆபுத்திரனை. காவலன் கண்படை கொள்ளுமென்க.

க - கஅடு. அணியிழை, ஆபுத்திரன் நிறங்கேளாய்; பாரப்பனி சாலி, கழிந்து அஞ்சி வருவோள் இங்காளாகிக குழலியை இட்டு நீங்க, ஆ கேட்டு அணைந்து நக்கி ஊட்டிப் போகாது ஓம்ப, பூதியென்போன் கேட்டு உருத்து என்மகனென்று எடுத்துப் பெயர்ந்து கூடி நவிற்ற, அறிந்தபின் புகுகோன் ஆதுயர் கண்டு உற்று உருத்து உள்ளங்கரந்து ஒதுங்கி அகன்றேனுக்கு கடவாதின்றழி அந்தணரெல்லாம குறமாக்களோடு சென்று கையகப்படுதலைக கேட்ப, நல்லா குத்திப் புய்த்துமுதத்து ஓட, ஆபுத்திரன் உரைப்போன 'உரைமோ' என, அந்தணரிகழ்தலும், ஆபுத்திரன் 'நன்னூல கத்து ஆவொடுவநத அழிகுலமுண்டோ' என, ஓரந்தணனுரைக்கும; அங்ஙனமுரைப்பவன 'புல்லலோம்பன்மின்; புலை மகனிவன்' என, ஆபுத்திரன் நகைசெய்து 'சாலிக்குத்தவறுண்டோ' என்றுரைத்து நகுவனனிற்ப, பூதி ஒவ்வானென்றகடிதர, கிராமமெங்கணுங்கல்லிட, காவலன் மதுரை சென்றெய்தி வதிந்து எந்திமறகி இசைதது ஊட்டி மிச்சிலுண்டு மடுத்துக கண்படைகொள்ளுமென வினைமுடிவுசெய்க.

பதினன்காவது

# பாத்திரமாபுகூறியகாதை.

[பதினன்காவது மணிமேகலைக்கு அறவணர் அமிர்தசுரபியென்னும் பாத்திரம் சிந்தாதேவி ஆபுத்திரற்குக் கொடுத்தவண்ணங் கூறியபாட்டு.]

ஆங்கவற் கொருநா ளம்பலப் பீடிகைப்
பூங்கொடி நல்லாய் புகுந்தது கேளாய்
மாரி நடுநாள் வல்லிருண் மயக்கத்
தாரிடை யுழந்தோ ரம்பல மரீஇத்
தூயில்வோன் றன்னைத் தொழுதன ரேத்தி
வயிறுகாய் பெரும்பசி மலைக்கு மென்றலு
மேற்றா ணல்லது வேற்றா ணில்லோ
னுற்றுவது காணு ஞரஞ செய்தக்

---

க. ஆங்கவற்கு - ஆபுத்திரனுக்கு; ஆங்கவன் - ஒருசொல்; "ஈங்கிவள்" என்புழிப்போல. இது தீநுச்சிற்றம்பல க்கோவையார், கக அம்பலப்பீடிகை - அம்பலத்தில். அம்பலம் - பலருஞ்சென்று தங்குதற்குரிய பொதுவிடம். இது மன்றமெனவும் கூறப்படும். அம்பலப் பீடிகை :—கசு - ம் காதை, கoஎ; கச-ம் காதை, டுகக.

உ. நல்லாயென்றது, மணிமேகலையை. புகுந்தது - நேர்ந்தது.

க - உ. அவற்குப் புகுந்ததைக் கேள்.

ங. மாரிநடுநாள் - மழைத்துளிகளையுடைய இடையாமத்தில். வல்லிருண்மயக்கத்து - வலிய இருட்கலப்பில்; 'இருண்மயக்கத்து' என்றதனால், நடுநாள் - இடையாமமாயிற்று; "புதையிருள்கூர், நெறியா ருருண்பெற நாடி நாளிடை நீக்குதுமே" எனவருதல் காண்க; இது நந்தைவாணன்கோவை, உகங.

ச. அரியவழியில் வருந்தி வந்தோராகிய கூத்தர்முதலியோர் அம்பலத்தை யடைந்து; கூத்தர்முதலியோர் வந்து தங்குமிடம் அம்பலமென்பதை, "மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்" என பதனாலுணர்க. இது மலைபடுகடாம், சகஉ. 'அம்பலம் வினைஅய்' எனறம பாடம்.

ஞ. தூயில்வோன்றன்னை - ஆபுத்திரனை.

ட. மலைக்கும் - மாறுபடுத்தும்; வருத்துமென்றபடி; "மலைதற்போகிய சிலைத்தார் மார்ப" என்பது புறநானூறு, கo. "வயிறுகாய் பெரும்பசி வருத்தும்" என்று பின்னும் வருதல் காண்க. கஎ - ம் காதை, டுஎ. 'மலையு மென்றலும்' என்றம், 'அலைக்கு மென்றலும்' என்றம பாடம்.

ண - சு. உழந்தோர் மரீஇத் தொழுதேத்திப் பசி மலைக்குமென்றலுமென்க.

எ. ஏற்றாண் - இரந்துண்ணுமுணவு. வேற்றாண் இல்லோன் - வேறுணவில்லாத ஆபுத்திரன்.

அ. ஆற்றவது காணுன் - உதவும்வழியைக் காணுஞனி. ஆற்றுதல் - உதவுதல்; "ஒருவீ ரொருவீர்க் காற்றுநிர்" என்பது புறநானூறு, டுஅ. ஆர் அஞர் - நீர்த்தற்கரிய வருத்தம்.

கேளிது மாதோ கெடுகநின் றீதென
கo யாவரு மேத்து மிருங்கலி நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
யேடா வழிய லெழுந்திது கொள்ளாய்
நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது
வாங்குநர் கையகம் வருந்துத லல்லது
கடி தான்றெலை வில்லாத் தகைமைய தென்றே
தன்கைப் பாத்திர மவன்கைக் கொடுத்தலுஞ்
சிந்தா தேவி செழுங்கலி நியமத்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
உo யேனோ ருற்ற விடர்க்கா வாயெனத்
தான்றொழு தேத்தித் தலைவியை வணங்கி
யாங்கவா பசிதீர்த் தந்நா டொட்டு
வாங்குகை வருந்த மன்னுயி ரோம்பலின்
மக்களு மாவு மாஞ்சேர் பறவையுந்

---

இனி ஆபுத்திரன வருத்தம் தீரும்படி அவனுக்குச் சிந்தாதேவி அமுதசுரபியென்னும பாத்திரங்கொடுத்தமை கூறுவார்.

கூ. இதுகேள். நின் தீதுகெடுக.

கo. யாவரும் ஏத்தும் - எச்சமயத்தினரும் துதிக்கும். நியமம் - கோயில். கலிநியமம் —கஈ - ம் காதை, கoசு.

கக. தேவியாகிய சிந்தாவிளக்கு.

கஉ. அழியல் - வருந்தாதே. இது கொள்ளாய் - இப்பாத்திரத்தைக்கொள். 'ஏடா பரிய லெழுந்திது கேளாய்' என்றும் பாடம்.

கஙு. வறங்கூரினும் - வற்கடம் மிகினும். வறம் - வற்கடம்; "ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணகடோர்பு, காலத்திற் றோன்றிய கொண்மூப் போல" என்பது கலித்தொகை, அஉ. வறங்கூராது - வறமையுறாது.

கடி. தான் என்றது, பாத்திரத்தை. என்று - என்றுசொல்லி. 'தான்றெலை வறியாத் தகைமையது' என்றும் பாடம்.

கச - கடி. கக - ம் காதை, சக - டுo; கஎ - ம் காதை, டு - சு.

எ - கசு. இல்லோன் ஆருயிரெய்தச் சிந்தாவிளக்கு 'நின்தீதுகெடுக' எனத் தோன்றி 'கொள்ளாய், கூராது, தகைமையது' என்று பாத்திரத்தைக்கொடுத்தலும்.

மேல்வருவன, பாத்திரம்பெற்றமகிழ்ச்சியால் ஆபுத்திரன் சிந்தாதேவியைத் துதிக்குந்துதிகள்.

கஅ. நந்தாவிளக்கே-கெடாததீபமே; மைவிளக்கு அழிதன் மாலைதத்தால்வின், நந்தாவிளக்கே யென்றான்; இது தெரிதருதேற்றவுவமையென்னு மலங்காரம். இவள் வாக்கின்மடன்தையாதலின், 'நாமிசைப் பாவாய்' என்றான்; "தேவ ராயினும் பிரம ராயினு, காமாசு கழுஉ நலங்கினர் திருந்தடி" என்பர் பின்னும்; உடு - ம் காதை, கடுo - கடுக.

கஎ - உo. அடுக்கிய விளிகளாற் சிந்தாதேவிபால் ஆபுத்திரனுக்குள்ள அனபின் மிகுதி விளங்கும்.

உக. தொழுது - அஞ்சலிசெய்து. தலைவி - சிந்தாதேவி.

ஈ - உக. உடு - ம் காதை, கஈஈ - கடுஈ.

உஈ. வாங்குகை வருந்த :—கஈ - ம் காதை, சஈ. மன்னுயிர் என்றார், வில்லங்கு முதலியனவும் உண்பிக்கப்படுதல் நோக்கி. ஓம்பலின் - பாதுகாத்தலினாலே.

உச. மாவும் - விலங்குகளும்.

உரு தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமர தீண்டிய பறவையி னெழுஉ
மிழமென் சும்மை யிடையின் ரெலிப்ப
வீண்டுநீர் ஞாலத் திவன்செய லிந்திரன்
பாண்டு கம்பளந் துளக்கிய தாதலிற்
கூ0 றளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வளைந்த யாக்கையோர் மறையோ னுகி

---

உரு. உடன் தொக்கு ஈண்டி-ஒருமிக கச்சேர்ந்து நிரண்டு. விடா-விடாவாய்.

உசு. பழுமரத்துஈண்டிய - பழுத்தமர த்தின் கண்ணே வந்துகூடிய. பறவை யின் - பறவைபோல :—பொருநராற்று ப்படை, சுச; பெரும்பாணாற்றுப்படை, உ0; புறநானூறு, கஎசு, கூ - ம் அடி; சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரி லம்பகம், கூகூசு; நாலடியார், சுற்றந்த ழால், உ எழுஉம் - எழுப்புகின்ற.

உச. சும்மை - ஒலி. இடையின்று - இடையீடில்லாமல். இடை - இடை யீடு; "எய்த வறியா திடையின்றி" என்பது புறப்போருள்வெண்பாமாலை, பொதுவியற்படலம்.

உச - உஎ. உசு - ம் காதை, உஉஉ - உகூஉ.

உ0 - உஎ. ஆபுத்திரன் களவாயெனத் தொழுது எதனி லணங்கி அந்நாள்தொ ட்டு அவர் பசிநீர்தது ஓம்பலின் விடா வாய் எழுஉஞ் சும்மை இடையின்ரெலி ப்பவெனக.

மேலே, ஆபுத்திரனுடைய புண்ணிய மிகுதியைத் தனது பாண்டு கம்பள நடுக் கத்தாலறிந்த இந்திரன் அவனுககு வரங் கொடுத்தற்பொருட்டு விருத்தவேடியன் வடிவுகொண்டுவருகிலக கூறுவார் .—

உக. பாண்டு கம்பளம் - வெள்ளாக்க ம்பளமாகிய ஆசனம். துளக்கியது - நடு ங்கச்செய்தது.

உச - உக. ஆபுத்திரன் அறச்செயல இந்திரனுடைய பாண்டுகம்பளத்தை நடு ங்கச்செய்தது. இப்பூவுலகில் தானம் சீலம் முதலியவற்றிற் சிறந்த பௌதத ருளராலுலும், அவர்களுக்குவேதனும் து ன்பமுளதாலுலும் இந்திரனுடைய பாண் டுகம்பளம் நடுங்குமென்றும், அகருதிப் பால் அவற்றையறிந்துவந்து அவர்களு க்கு வேண்டிய வரங்களைக்கொடுத்தலும் நீங்குகளே ஒழிதலலும இந்திரனுடைய கடப்பாடெனறும தெரிகின்றது, புத்த தருமவொழுக்கினையுடிய வணிகனெரு வன் கப்பல் கவிழப்பெற்றுக் கடலில்வரு ந்தியதைத் தனது பாண்டுகம்பளத்தின நடுக்கத்தாலறிந்தஇந்திரன் அவ்வணிகனே அத்துன்பத்தினின்று நீகிகிப் பாதுகாத தனனெனறு இதனால உக - ம சாதையில (கசு - உசு) வருகிலகாண்க; "நமி விநமி வன்பாரிருவர்குமாரர் சபச்சரணமபண ணியருளாகினென்ற பகவானே யடைகது நமஸ்கரித்துக கந்த புஷ்பாதிகளாற்பூசி தது நானுவித ஸ்தோத்திரங்களே அநிம தரமாகப்பாடிநினறு விணணப்பமசெய் வார் —பகவானே, சம்மாற புத்திரபௌ தாதி பங்நானகளுககு வேறுவேறு இராகியமகொடுகப்பட்டன, யாங்கள அப்பொழுது ஸங்கிருமாயினமலலேம, இப்பொழுது எங்களுககு விபவங்களைப் பிரஸாதிக்கருளவேணடுமெனற நிரப்ப ந்தித்துநின்று துதிப்ப, இரணேந்த ர ணேந்திரன் தனது ஆசனங்கர் பித்தலில் அறிந்து கடிதுவந்து மறுஷ்யரூபத்தை ககொண்டு பருவதம்போலச் சலியாதி எழுந்தருளினினற பகவானது தைரியாதி சயத்தினைகண்டு விஸ்மிதனுகிப் பிரத கூணிமபண்ணித்துநிதுகை குமாரர்களே நோகஷிக்சொலலுவானை" என்று ஸ்ரீபுரா ணத்துள்ள முதலாவது விருவபஸ்ரீத்த ங்கரர்புராணத்தில் வருவதலால, இப்படி யே தனது ஆசனநடுகுகத்தால அறிய வேண்டுவனவறையறிந்து கலலுயிர்க ளுககுச் செய்யவேண்டுவெனவற்றை இந திரன செய்வானென்று கூறுதல் சைன சமபிரதாயமென்றும் தெரிகினறது.

கூ - கூக. தளர்ந்தநடையின - நடை தளர்தலால, தண்டுகால்ஊன்றி - தான்பி

மாயிரு ஞாலத்து மன்னுயி ரோம்பு
மாருயிர் முதல்வன் றன்முன் ரேன்றி
யிந்திரன் வந்தே னியாது நின்கருத்
கூடு துன்பெருந் தானத தறுபயன் கொள்கென
வெள்ளே மகன்போல் விலாவிற நக்கிங்
கெள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோ
னீண்டுச் செய்வினை யாண்டுநுகர்ந் திருத்தல்
காண்டகு சிறப்பினுங் கடவுள ரல்ல
சஅ கறைஞசெய மாகதர் புறங்காத தோம்புநர்
நற்றவரு செய்வோர் பற்றற முயலவோர்
யாவரு மிலலாத் தேவர்நன் ஞட்டுக்
கிறைவ னுகிய பெருவிறல் வேந்தே

டிததண்டினேயே காலாகவுன்றி, வளைந்த யாக்கை மறையோன ஆகி - கூனிய உடம்பையுடைய வேதியனகி; "தளர்ந்த நடையிற் றண்டொ லூனறி, வளைந்த யாகை மறையோன்" எனபது சிலப்பதிகாரம், அடைகலகாதை, சச - சடு. ஆகி ஊன்றியென்க.

ஈசு. ஆருயிர்முதல்வன் - ஆபுத்திரன்; "ஆருயி ரோம்புநன்" எனவும, "அருக்தே மாந்த வாருயிர் முதலவனே" எனவும், இவனே இகாதையிலேயே பினபு கூறுதல்காண்க; டுகூ - சுஅ.

ஈசஅ. யாதுநின்கருதது - உன்னுடைய எண்ணம் எனன.

ஈடு. தானஙகள் பலவற்றுள்ளும் சிறந்தமையின், அன்னதானம, பெருந்தான மெனப்பட்டது. உறுபயன் - மிக்கபிரயோசனம். கொள்க என - கொள்கவென்று இந்திரன்சொலல.

இனி, இயஙனஙகூறிய இந்திரனுக்கு ஆபுத்திரன விடைபகர்ந்தது கூறுவார்.

ஈசு. வெள்ளேமகன் போல் - பயனில் லாதசொலலையுடையவன்போல, "வெள்ளேக் கோட்டி" என்பதற்கு 'பயனில் லாத உரைக்கோட்டி' (வரந்தருகாதை, ககஅ) என்று பொருள்கூறுவர், சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர்.

ஈஎ. எள்ளுதல் - இகழுதல. போம் - ஏவற்பன்மை. செய்வோன் - பெயர்.

ஈஅ. ஈண்டுச்செய்வினை - இவ்வுலகத்துசெயயும் புணணியங்களின்பயனே. ஆண்டு - அவ்விடதது.

ஈஅ - ஈக. நுகர்ந்திருத்தல் காணடகு - அனுபவிதிருதகலேச் செய்கினற. நுங்கடவுளரென்ரூன், தனக்கு அவர் அயலென்னுங்கருதகால்; "நின்ற நின் கார்மயி றன்னேயும்" என்புழிப் போல. இது திருச்சிற்றம்பலக்கோவையார், எசு.

சஅ. புறங்காத்தோம்பல்.— கசு - ம் காதை, கச.

சஉ. யாவருமில்லா - அறஞ்செய்மாக்கள் முதலியோர்களில் ஒருவருமில்லாத.

சுஅ - சுஉ. தேவருலகம் வினேப்பயனனுபவிப்போர்க்கேயன்றி அறஞ்செய்மாக்கள் முதலியோர்க்கு இடமன்றென்பதை, "பொலமபூங் காவி னன்னுட்டோரும், செய்வினே மருங்கி னெய்தலலலதை, யுடையோ ரீதலு மில்லோ ரிரத்தலுங, கடவ தன்மையிற் கையற வுடைத்து" (புறாணூறு, சுஅ) எனவும், "ஈவாருங கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்" (கஙுஅம் திருக்குறளுக்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரையிற்கணட செய்யுள்.) எனவும், 'ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாருமஃ ஒரு தனமையராதலின் ஒப்புரவு புதலேலுலகத்து அரிதாயிற்று' (திருக்குறள், உகசு, பரிமேலழகருரை) எனவும் வருவனவற்றாலுணர்க.

சஉ - சசு. "யாவரு..... பெருவிறல் வேந்தே" என்பது இகழ்ச்சி.

வருந்தி வந்தோ ரரும்பசி கனிந்தவர்
சிந்தி திருந்துமுகங் காட்டுமென் றெய்வக் கடிஞை
யுண்டி கொல்லோ வுடுப்பன கொல்லோ
பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ
யாவையீங் களிப்பன தேவர்கோ னென்றலும்
புரப்போன் பாத்திரம் பொழிந்தாண் சுரந்தீங்
இ0 இரப்போர்க் காணு தேமாந் திருப்ப
நிரப்பின் றெய்திய நீணில மடங்கலும்
பசப்பு நீாாற் பல்வளஞ் சுரக்கென
வாங்கவன் பொருட்டா லாயிரங் கண்ணே
னோங்குயர் பெருஞ்சிறப் புலகோர்க் களித்தலும்
இரு பன்னீ ராண்டு பாண்டிநன் னாடு
மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது
வசித்தொழி லுதவ மாநிலங் கொழுப்பய
பசிப்புயி ரறியாப பான்மைத் தாகலி

---

சஉ. உசு - ம் காதை, கசுடி. 'அருந்துபசி கனிந்து' என்றும் பாடம்.

சஎ - சடி. வந்தோரரும்பசி - வந்தோருடைய பொறுத்தற்கரியபசியை. கனிந்து - நீக்கி. அவர் திருந்துமுகங்காட்டும் - அவருடைய இனியமுகத்தையான் காணக்காட்டும்; என்றது அவர் திருந்துமுகங்காட்டும் என் தெய்வக்கடிஞையே யமையும்; உன்னுற் கொடுக்கப்படுவன எனக்கு இன்பஞ் செய்யாவாகலின், அவைவேண்டாவென்றவாறு; "ஈத்துவக்கு மின்பம்" என்ற வருதல்காண்க. இது நீநுக்தரா, உஉஅ. காட்டும் - முற்று. தெய்வக்கடிஞையென்றான், வாங்குநர் கையகம் வருத்துதலல்லது தான் தொலைவில்லாத் தன்மைத்தாதலின்.

சஅ ஈங்கு அளிப்பன - எனக்கு அளிப்பன; ஈங்கு - தன்மையையுணர்த்திற்று; "ஒழிக காம மீங்கென" என் புழிப்போல. இதுசீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், சகூ தேவர்கோன் - விளி.

சக - சஅ. உன்னுலளிக்கப்படுவன உண்டிமுதலியவற்றுள் யாவையென்று ஆபுத்திரன் இந்திரனே இகழ்ந்துகூறலும்.

கவ - சஅ. எத்துணைசெய்வோன் என்றலுமென்க.

இனி, தன்னை ஆபுத்திரன் அமைத்தானென்று இந்திரன் நினைந்து அவன் அன்னதானஞ்செய்தற்கு இடமில்லையாகும்படி மழைபெய்வித்து நாட்டை வளப்படுத்தி இரப்பாரை இல்லையாக்கினமை கூறுவார்.

சக. புரப்போன்பாத்திரம் - உயிர்களைப் பாதுகாப்பவனுடைய பிச்சைப் பாத்திரம்.

இ0. எமாந்திருப்ப - ஆபுத்திரன் உண்பித்தற்கு ஆசையடைந்திருக்கும்படி; "அருந்தே மாந்த வெஞ்சம்" எனது புறநானூறு, கo0. துன்பமுற்றிருப்பவெனினுமமையும்.

இக. நிரப்பு - வறுமை.

இசு. ஆங்கவன் பொருட்டு - ஆபுத்திரன்பொருட்டு, ஆங்கவன ஒருசொல.

இசஅ. அளிததலும் - இந்திரன கொடுத்தலும்.

இ0 - இசஅ. எமாந்திருப்பப் பெருஞ் சிறப்பை இந்திரன் அளித்தலும்.

இசு. உஅ - ம் காதை, கடுஎ.

இடு-இசு. பன்னிரண்டுவருடம் மழை வளத்தை இழந்ததாகிய பாண்டிநாடு.

இஎ. வசி - மழை. வசி :— க - வது காதை, எக. வசித்தொழிலுதவ :— உஅ - ம் காதை, உசுஅ.

இஅ. பசிப்பு - பசித்தல். 'பசியுயிர் ரறியா' என்றும் பாடம்.

இடு - இஅ. பாண்டிநன்னாடு பான்மைத்தாகலின்.

ஞருயி ரோம்புந னம்பலப் பீடிகை
சுo யூஞெலி யரவ மொடுங்கிய தாகி
விடருந் தூர்த்தரும் விட்டேற் றூளரு
நடவை மாக்களு நகையொடு வைகி
வட்டுஞ் சூதும் வம்பக் கோட்டியு
மூட்டா வாழ்க்கை முறைமைய தாக
வாபுத் திரன்ரு னமபல நீங்கி
யூரூர் தோறு முண்போர் வினஅ
யாரிவ னென்றே யாவரு மிகழ்ந்தாங்
கருந்தே மாந்த வாருயிர் முதல்வனை

---

ருக. ஆபுத்திரன் பலநாளிருந்து அற ஞசெய்தறஞ்செய்யுமதுபற்றி அம்பலம் அவனதாகக்கூறப்பட்டது. அம்பலப் பீடிகை :— கசு - ம் காதை, கoஎ; கச - ம் காதை, க.

சுo. ஊஞெலி அரவம் - மக்களும் மாவும் பறவையும் ஒருங்குவந்து சோற்றை உண்ணுதலால் ஒலிக்கும்ஒலி. ஒலி யரவம் - வினைத்தொகை.

சுக. விடர் - தீயசடையையுடைய காமுகர்; ஒரு வித்தையையுடையவரென்று கூறுவர் **பிரதாபருத்திரீயமென்னும்** வடநூலாசிரியர். தூர்த்தர் - வஞ்சகர். விடருந்தூர்த்தரும் :—சுரு - ம் காதை, சுo. விட்டேற்றூளர் - (?) "விடருந்தூர்த்தரும விட்டே றிசைப்ப" என்பது **பெருங்கதை**, உஞ்சைகாண்டம், நருமதைச் சம்பந்தம். சிற்றினமாவது விடரும் தூர்த்தரும் நடருமூளரிட்ட குழுவென்று, **திருக்குறள்**, சிற்றினஞ்சேராமை யென்னும் அதிகாரத்தின் அவதாரிகையிலும், நகைவகையராகிய நட்பினராவார் விடரும தூர்த்தரும் வேழம்பரும்போன்று பலவகையால் நகுவிதத்துத் தாம் பயன் கொண்டு ஒழிவாரென்று அகஎ - ம் திருக்குறளின் விசேடவுரையிலும் **பரிமேலழகர்** ரெழுதியிருக்கின்றனர். இவ்வடியிலுள்ள விடர்முதலிய மூன்றுபெயர்களுள் மூன்றுவதாகிய விட்டேற்றூளரென்பதற்குச் சரியாக முறையே 'நடர்' 'வேழமபர்' என்பனவற்றைப் பரிமேலழகர் அமைத்திருத்தலே நோக்குமிடத்து விட்டேற்றூளரென்பதற்கு நடரென்றேனும் வேழம்பரென்றேனும் பொருள்கொள்ளுதல பொருத்தமுடைத்தெனத் தோற்றுகின்றது. இனிச் சுற்றத்தினின்றும், நட்பினின்றும் நீங்கிப் பிறரையும் அவ்வண்ணம் செய்விப்போனை விட்டேற்றியென்றல் வழக்கின்கண உண்மையின், விட்டேற்றூளரென்பதற்கு அத்தன்மையையுடையோரென்றுபொருள்கூறினும் பொருந்தும்.

சுஉ. நடவை - வழி. வைகி - (விடர் முதலியோர்) தங்குதலால்.

சுங. வட்டு - உண்டையுருட்டுதல்; இதனை,"அரங்கின்றி வட்டாடியற்றே" (திருக்குறள், சoக) எனவும், "கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்" (நற்றிணை, சு.) எனவும் வருவனவற்றாலுணர்க. வம்பக் கோட்டி - பயனில சொற்களைச் சொல்லுவோர்கூட்டம்; "புல்லா வெ முதகிற் பொருளில் வறுங்கோட்டி" என்பது **நாலடியார்**, மேன்மக்கள், இ. "வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்" என்பது **சிலப்பதிகாரம்**, வரந்தருகாதை, ககஅ.

சுச. மூட்டா வாழ்க்கை - குறையாத வாழ்க்கை; "மூட்டா வின்பத்து முடிவுல கெய்தினர்" என்பது **சிலப்பதிகாரம்**, அடைக்கலக்காதை, ககஎ

சுக - சுச. பீடிகை ஒடுங்கியதாகி முறைமையதாகவென்க.

சுசு. உண்போர் வினஅய் - உண்போர்வினவி. 'உண்போர் வினவ' என்றும் பாடம.

சுஎ. இகழ்ந்து - இகழ்ச்சியால்.

சுஅ. அருந்தேமாந்த - பிறர் உண்ண ஆசைப்பட்ட; கஅ - ம் காதை, எஉ;

யிருந்தாய் நீயோ வென்பா ரின்மையிற்
எo றிருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள
வொருதனி வரூஉம் பெருமகன் போல
தானே தமியன் வருவோன் றன்முன்
மாநீர் வங்கம வந்தோர் வணங்கிச
சாவக நன்னாட்டுத் தண்பெயன் மறுத்தலி
எடு ஞானயிர் மடிந்த நுரவோ யென்றலு
மமரர்கோ ஞாயி னருந்துவோர்ப் பெறாஅ
குமரி மூத்தவென் பாத்திர மேந்தி
யங்கந் நாட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாகவொடு மகிழ்வுட னேறிக
அo கால்வினை கடிகக் கடல்கல குறுதலின்

---

புறநானூறு, கoக. ஆருயிர்முதலவனே - ஆபுத்திரனே.

சுக. நீ இருந்தாயோவென்று வினவுவோரில்லாமையால்.

சுஎ - சுக. இகழ்தலால இன்மையின்.

எo. செலவத்தைக கடலகொள்ள.

எக. பெருமகன் - அரசன்; "பெரு நில முழுதாளும் பெருமகன்" என்பது சிலப்பதிகாரம், மங்கலவாழ்த்துப் பாடல.

எஉ. உண்போர் பலரிடையேயிருந்தோன் இப்போது மிகத்தனிமையுற்றானென்பார் 'தானே தமியன் வருவோன' என்று ஆசிரியர் இரங்கிக்கூறினர்; இப்படியே, "காடேந்து பூஞ்சாரல கடந்தான் காலிற் கழலானே" சீவகசிந்தாமணி, பதமையாரிலம்பகம், சுச.) என்றும், "கானம் வழங்கன் மேவிக் காலினனெனை னானே" (சீவகசிந்தாமணி, கேம சரியாரிலம்பகம், க.) என்றும் திருத்தக்கதேவர் நடந்துசென்ற சீவகனேபற்றி இரங்கிக்கூறியிருத்தல் காண்க.

எo - எஉ. "நயனுடையா னல்கூர்க்தா ஞதல் செயுநீர, செய்யா தமைகலா வாறு" என்னும் ஒகக - ம் திருக்குறளை இவ்வடிகளின்பொருளோடு ஒப்பிடுக.

எசு. மாநீர் - கடல். வங்கம் - கப்பல்.

எச. தண்பெயல் மறத்தலின் - தண்ணியமழை இல்லாது போனமையால்.

எடு. ஊன் உயிர்மடிந்தது - உடம்போடு கூடியவுயிர் அவ்வுடம்பினின்றும் நீங்கிற்று. என்றலும - என்று வங்கம்வந்தோர கூறலும்.

எசு. இந்திரன்கட்டளையிலால் உணர்போரைப்பொறமல்; ஆணையிற் பெருஞ்சென்க. ஆணை - கட்டளை. வரங்கொடுத்தற்குவந்த இந்திரனை ஆபுத்திரன் மதியாததுபற்றி இந்திரன் கோபங்கொண்டு இரப்போர் இலராகும்வண்ணம் நாடுவளஞ்சுரக்கும்படி மழை பெய்வித்தமையின், இங்ஙனங்கூறினார; இதனை, இக காதையில ஈச - ம் அடிமுதலியவற்றுடனிணக்க.

எஎ. குமரிமூத்த என்பாத்திரம் - ஒரு கன்னிப்பெண் வறிதே மூத்தாற்போனற எனதுபாத்திரம; கொடுப்போரு கொழுநனுடையன்றித் தானும பயனிழந்து கழிந்த குமரியை எண்டி உவமைகூறினமையின், தானும எற்பாருமேயனறிப் பாத்திரமும் பயனிழந்து கழிந்ததே யென்று ஆபுத்திரன் இரங்கியவாறுமாம்; "அற்றார்க்கொன சூற்றார்தன் செல்வ மிகநலம, பெற்ற டமியணமூத்தற்று" எனறார் திருக்குறளிலும; கoஎ. குமரிமூத்த .— உஉ - ம் காதை, கசசு. பாத்திரம - பாத்திரத்தை.

எஅ. அங்கக்காடு - இவை ஒருசொன்னீர்மைய. என் கருத்தென - எனதெண்ணமென்று ஆபுத்திரனினைந்து. 'புகுவதுபொருளென' என்றும் பாடம்.

அo. கால் - காற்று. 'கால்வினைகடிகக' என்றும் பாடம்.

மாவிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத
தங்கிய தொருநாட் டானுங் கிழிந்தன
னிழிந்தோ னேறின னென்றிதை யெடுத்து
வழங்குநீர் வங்கம் வல்லிருட் போதலும்
அரு வங்கம போயபின் வருந்துதுய செய்தி
யங்கு வாழ்வோர் யாவரு மின்மையின்
மன்னுயி ரோமபுமிம் மாபெரும் பாத்திர
மென்னுயி ரோமபுதல் யானே பொறேஎன்
றவந்தீ மருங்கிற் றனித்துய ருழுந்தேன்
கூ0 சுமந்தெனை பாத்திர மென்றனன் றெழுது
கோமுகி யெனனுங் கொழுநீ ரிலஞ்சியி
னேரியாண் டொருநாட் டோன்றென விடுவோ
வருளறம பூண்டாங் காருயி ரோம்புந
ருளதெனி லவாகைப் புகுவா யென்றுங்
கூரு குண்ணை நோன்போ டியிரபதிப பெயர்ப்புழி
யருநா ளாங்கவன் றன்பாற் செவறே
னென்னுற் றனேயோ வென்றியான கேட்பு
தன்னுற் றனபல தானெடுத துரைத்தனன்
குணதிசைத் தோன்றிக காரிருள் சீததும்

---

அக. இதை - கப்பற்பாம்.

அஉ. ஒருநாள் கப்பல தங்கியது.

எக - அஉ. வறி ஆஙகு இழிந்தனன்.

அசு. அங்கு - மணிபலலவததில்.

அஎ. ஓம்பும் - முற்று. பாததிரம் மன னுயிரோமபுமென்க.

அஅ. 'யானேபோற்றேன்' என்றும் பாடம்.

அக. இப்பாத்திரமடைதற்கு முற்பிற ப்பில் மிகநல்வினைசெய்த நான அதனை யொழித்து பின்னர்ச் சிறிது தீவினையுஞ் செய்தபக்கததானே தனிதது துயரத தையுழந்தேன்; இவ்வடியைப்போலச் சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, உசு - ம் அடி வந்திருத்தல்காண்க.

கூ0. பாததிரம் சுமந்து என் - எற்போ ரில்லாத இவ்விடததில இப்பாத்திரத்தை யான்சுமததலால் வருமபயன் யாது.

கூக. 'என்னுமிக் கொழுநீர்' என்றும் பாடம்.

கூஉ. ஓர்யாண்டொருநாளென்றது - வைசாகசுத்தபௌர்ணிமையை.

கூரு. அருளறம் - தயாதர்மம். இதனை, ரு - ம் காதை, எடு - ம் அடிக்குறிப்பிற் காண்க.

கூச. புகுவாயென்று - புகுவாயென்று சொல்லிப் பாததிரததைக் கோமுகியில் விடதது.

கூடு. உண்ணுநோன்போடு - பட்டினி விட்டிருததலாகிய விரதத்தால், உயிர் பதிப்பெயர்ப்புழி - உயிரை விடுகையில; உயிர்பதிப்பெயர்ததல - உயிரைநீ ததல்; "உண்ணு நோனபோ டுயிர்பதிப் பெயர் தததும்" என்பது சிலப்பதிகாரம், நீர்ப் படைக காதை, அரு.

கூசு. யானெனறது அறவணவடி கள்.

கூஎ. என் உற்றனேயோ - யாது துன் பமடைந்தாயோ.

கூஅ. தனனுற்றனபல - தன்னை யடைந்த பலதுன்பங்களே. 'தன்னுறுதுன் பம' என்றும் பாடம்.

கூக. குணதிசை - கீழ்த்திசை. சீத்து - நீக்கி.

க00 குடதிசைச் சென்ற ஞாயிறு போல
மணிபல் லவத்திடை மன்னுடம் பிட்டுத்
தணியா மன்னுயிர் தாங்குங் கருத்தொடு
சாவக மாளுந் தலைத்தாள் வேந்த
னுயிற் றுதித்தன னங்கவன் றனென

பாத்திரமரபுகூறியகாதை முற்றிற்று.

---

க00. குடதிசை - மேற்றிசை.

கஉ. தன்னுற் பசிதணிக்கப்படாத நிலைபெற்ற உயிரைப்பாதுகாக்கும் எண்ணத்துடன்.

கஅ. சாள் - முயற்சி. வேந்தன் - பூமிசந்திரன். 'தலைத்தார்வேந்தன்' என்றும் பாடம்.

கஈ. ஆங்கவன் - ஆபுத்திரன்.

கஉ - கஈ. ஆபுத்திரனைப்பெற்றபசுமண்முகனென்னு முனிவனிடத்தாயினும் பூமிசந்திரனுடையநாட்டகத்ததாதலின், 'வேந்தனு' னைப்பட்டது.

கஉ - கஈ. உயிர் உடம்பினீங்குங் காலத்து அதனுல் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த்தோன்று மென்பது எல்லா நூல்களுக்கும் ஒத்த துணிபாகலின், 'மன்னுயிர் தாங்குங் கருத்தொடு, ஆவயிற் றுதித்தனன்' என்றார். இக்கருத்தை, கூடிஅ - ம் நிருக்குறுஞக்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரையாலுணர்க.

க - கஈ. உழந்தோர் மலைக்குமென்றலும், இல்லோன் அருளெய்த, சிகாவிளக்குத் தோன்றிப் பாத்திரங்கொடுத்தலும், ஆபுத்திரன் ஒம்பலின், விடாவாப் ஒலிப்ப, இந்திரன்கொள்கென, உரைசெய்வோன் 'யாவையீங்களிப்பன தேவர்கோன்' என்றலும், ஆயிரங்கண்ணோனுலகோர்க்களித்தலும், பாண்டிநனஞடுபான்மைததாகலின், பீடிகை முறைமையதாக, ஆபுத்திரன்நீங்கி உண்போரிலுவி எனபாரினமையின் வருவோனறன்முன் வந்தோர் மடிந்தென்றலும், வங்கமேறி இழிந்தனன்; வங்கம் வலலிருட்போதலும் துயரெய்தி விடுவோன் புகுவாயென்று உயிர்பதிப்பெயர்ப்புழிச் சென்றேன் கேட்ப உதைத்தனன்; அவன் ஆவயிற்றுதித்தனனென விணமுடிவு செய்க.

பதினேந்தாவது

# பாத்திரங்கொண்டுபிச்சைபுக்ககாதை.

[பதினேந்தாவது மணிமேகலை பாத்திரங்கோண்டு பிச்சைக்குப் பேருந்தெருப்போய பாட்டு.]

இன்னுங் கேளா யிளங்கொடி மாதே
யங்நா ளவனே யோம்பிய நல்லாத்
தண்ணென் சாவகத் தவள மால்வனை
மண்முக னென்னு மாமுனி யிடவயிற்
பொன்னின் கோட்டது பொற்குளம புடையது
தன்னலம பிறர்தொழுத் தான்சென் றெய்தி
யீரு முன்ன மின்னுயிர்க் கெல்லாந்
தான்முலை சுரந்து தன்பா லூட்டலு
மூன்று காலமுந் தோன்றநன் குணர்ந்த
வான்ற முனிவ னதன்வயிற் றகத்து
மழைவளஞ் சுரப்பவு மன்னுயி ரோம்பவு
முயிர்கா வலன்வந் தொருவன் றோன்றுங்
குடர்த்தொடா மாலே பூண்பா னலல
னடர்ப்பொன் முட்டை யகவையிற் றனெனப்

---

உ. அந்நாள் - சாலியென்பவள் ஈன்ற போகட்டுப்போனநாளில். — கசு - ம் காதை, கo. அவனே - ஆபுதநிரனே. ஆ - பசு.

சு. சாவகம் - சாவகநாடு.

சு. இடவயின் - இடத்தில்.

ஙி. கோட்டது - கொமபையுடையது.

அ. 'நான்முலை சுரந்து நன்பா லூட்டலும்' என்றுமபாடம்.

உ - அ. நலலா, மாமுனியிடத்திற் கோட்டதாய்க் குளம்புடையதாய்ச சென்றெய்தி உயிர்க்கெல்லாம் தன்பாலூட்டலுமென்க.

கo. முனிவன் - மண்முகன்.' அதன்வயிற்றகத்து - அப்பசுவயிற்றில். 'ஆன்வயிற் றகத்து' என்றும் பாடம்.

கஉ. உயிர்காவலனுகிய ஒருவன்வந்து தோன்றுவான்.

கo - கஉ. அதன்வயிற்றகத்துத் தோன்றுமென்க.

கச. அடர் - தகடு; பொன் அடர் முட்டை அகவையிற்றனன் - பொற்ற கட்டாலாகிய முட்டையின் உள்ளிடத்துள்ளான். எனை - என்ற மண்முகமுனிவன்சொலல.

கசு - கச. அங்ஙனந்தோன்றுவோன் குடர்மாலே பூண்பானல்லன், முட்டை அகவையிற்றனென; "குடர்த்தொடர் மாலே சூழா தாங்கோ, ரடர்ப்பொன் முட்டையு ளடங்கிய வண்ணமும்" என்பர் பின்னும், உருபம் காதை, ஙஉ - ஙசு.

கரு பிணிநோ யின்றியும் பிறந்தறஞ் செய்ய
மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்
றற்காத் தளித்த தகையா வதனை
யொற்கா வுள்ளத் தொழியா ஞதலி
ஞங்கவ் வாவயிற் றமரர்கண முவப்பத
உ0 தீங்கனி நாவ லோங்குமித் தீவினுக்
கொருதா ஞகி யுலகுதொழுத் தோன்றினன்
பெரியோன் பிறந்த பெற்றியைக் கேணி
யிருதிள வேனிலி லெரிகதி ரிடபத்
தொருபதின் மேலு மொருமூன்று சென்றபின்
உரு மீனத் திடைநிலை மீனத் தகவயிற்
போதித் தலைவனெடு பொருந்திய போழ்தத்து
மண்ணக மெல்லா மாரி யின்றியும்
புண்ணிய நன்னீர் போதொடு சொரிந்தது
போதி மாதவன் பூமியிற் றோன்றுங்
கூ0 கால மன்றியுங் கண்டன சிறப்பெனச
சக்கர வாளக் கோட்டம வாழு
மிக்க மாதவ விருமபினர் வியந்து
கந்துடை நெடுநிலைக கடவு ளெழுதிய
வந்திற் பாவை யருளு மாயிடி
னறிகுவ மென்றே செறியிருட் சேறலு

---

கரு. பிணிநோயின்றியும் - பிணியா லுளதாகும் வருத்தம் இல்லாதிருக வும்.

கக. உயிர் நீத்தோன் - உயிரைத்துறந் தவனுமிப ஆபுத்திரன்.'

கடு - கசு. நோயின்றியும் அறஞ்செ ய்தற்பொருட்டு உயிரைநீத்தானெனக ; "உண்ணு நோன்போ யிர்ப்பதிப் பெய ர்ப்புழி" என்று முன்புவந்திருத்தல் காண்க ; கச - ம் காதை, கடு.

கஎ. தகை - அழகு ; தகுதியுமாம். தகையாத் தகுதி' எனறம்பாடம்.

கஅ. ஒற்கா - தளராத ; இஃது ஒல்கா வென்பதன் விகாரம் ; "ஒல்கா வுள்ளமொ டொருபுடைத் தழீஇ" என்பது புறநா ஞாறு, ககடி.

கசு - உக. நீத்தோன் அவ்வாவயிற்றுத் தோன்றினன்.

உஎ. பெற்றி - பேறு. 'பெற்றி யது கேள்' என்றும் பாடம்.

உசு. 'எறிகதிரிடபத்து' எனறும் பா டம.

உசு - உசு. இவ்வடிகளின் பொருளை, கக - ம் காதையில் சஅ - ம அடிமுதலிய வற்றின குறிப்பிற்காண்க.

உக - உசு. போழ்ததுத் தோன்றின னெனவியையும்.

உக. போதிமாதவன் - புதன். 'போதிநாதன' என்றும் பாடம.

கூ0. சிறப்புக்கள் காணப்பட்டன.

உக - கூ0. புதன் தோன்றுகால த்து உளவாகுஞ் சிறப்புக்களை, கஉ - ம் காதையில அசு - ம் அடி முதலியவற்றிற் காண்க.

கூஅ. அந்தில் - அவ்விடத்து ; "அந்தி லரங்கத் தகன்பொழி லகவயின்" என் பது சிலப்பதிகாரம், காடுகொண காதை, கூ.

உஎ - கூஇ. நீர்சொரிந்தது, நிறப்புக் கண்டனவென்று மாதவர்வியந்து அறிந

## கடி.—பாத்திரங்கொண்டுபிச்சைபுக்ககாதை. கஉடு

மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்
றணியா வுயிருயச் சாவகத துதித்தன
னுங்கவன் றன்றிற மறவண னறியுமென்
றீங்கென் னுவை வருத்திய திதுகேண்
சுo மண்ணுள் வேந்தன் மண்முக னென்னும்
புண்ணிய முதல்வன் றிருந்தடி வணங்கி
மக்களே யிலலேன் மாதவ னருளாற்
பெற்றேன் புதல்வனே யென்றவன் வளர்ப்ப
வரைசாள் செல்வ மவன்பா லுண்மையி
சருு னிரைதார் வேந்த னுயின னவன்றன்
னுறக்க வேந்தன் னுயப்பிலன் கொல்லோ
வறக்கோல் வேந்த னருளிலன் கொல்லோ
சுரந்து காவிரி புரந்துநீ பரக்கவு
நலதகை யின்றி நல்லுயிர்க் கெல்லா
நுo மலதகற் காலே யாகிய தாயிழை
வெண்டிரை தந்த வமுதை வாளே
ருண்டொழி மிசசிலே யொழித்துவைத் தாங்கு
வறனே டுலகின் வான்றுயா கெடுகவு
மறனே டொழித்த லாயிழை தகாதென
நுடு மாதவ னுரைத்தலு மணிமே கலைதான்

---

வமென்று பாவைபாற் செறியிருளிற செல்லுதலுமென்க.

ஙஙு. என்னுவை வருத்தியதென்றது-முனிவர்களுக்கு ஆபுதிரன்வரலாற்றை யான் சொல்லும்படி அப்பாவை செய்த தென்றவாறு.

சo. வேநதன் - பூமிசந்திரன்.

சக. 'திருந்தடி பொருந்தி' என்றும் பாடம்.

சஙு. நிரைதார் - வினைதொகை. அவன்றன் - ஆபுத்திரன்றன்.

இதுகாறும் ஆபுதிரன்றிறங கூறப் பட்டது.

சசு. துறக்கவேந்தன் - இந்திரன். துய்ப்பு இலன் கொலலோ - அனிநகர்ச்சி இலனுயினனே. 'துப்பிலன் கொல்லோ' என்றும் பாடம்.

நுo. அலத்தற்காலே ஆகியது - வறுமைக்காலம உண்டாயிற்று.

சசு - நுo. இப்படியே "செங்கோல் கோடியோ செய்தவம் பிழைதீதோ, கொங்கவிழ்குழலார் கற்புகுறை பட்டோ, நலதகை நல்லாய் நன்னுடெல்லா, மலதகற் காலே யாகிய தறியேன" என்று பின்வருதல காண்க; உஅ - ம் காதை, கஅஅ - ஙஙக.

நுஉ. ஒழிதது வைத்தாங்கு - பயன்படுத்தாதுவைததாற்போல. மிச்சில - மிகுதி. 'ஒளிததுவைத தாங்கு' என்றும் பாடம்.

நுரு. வறன் ஒடு உலகு - வற்கடமான காலம பரந்தவுலகம; "வறனேடின் வையகதது வான்றருகற்பினுள்" என்பது கலித்தொகை, சசு.

நுசo. அறனேடொழிதச்சில் - அமுதசுரபியைப் பயன்படுதாதுவைத்தல்.

நுரு - நுசo. உக - ம் காதை, கநுஎ - கநுஅ.

நுடு. மாதவன் - அறவணவடிகள்.

ரூயர் தம்மொடு தாழ்த்துபல வேத்திக்
கைக்கொண் டெடுத்த கடவுட் கடிஞையொடு
பிக்குணிக் கோலத்துப் பெருந்தெரு வடைதலு
மொலித்தொருங் கீண்டிய வூர்க்குறு மாக்களு
மெலித்துகு நெஞ்சின் விடருந் தூர்த்தரும்
கொடிக்கோ சம்பிக் கோமக ளுகிய
வடித்தேர்த் தானை வத்தவன் றன்னை
வஞ்சஞ் செய்துழி வான்றலை விடீஇய
வுஞ்சையிற் றோன்றிய யூகி யந்தண
னிருவுக் கொவ்வா வுறுநோய் கண்டு
பரிவுறு மாக்களிற் றும்பரி வெய்தி

---

இசு. தாயர் - மாதவி, சுதமதி

இஎ. கடிஞை - பிச்சைப்பாத்திரம்.

இஅ. பிக்குணிக்கோலத்து - பிக்குணிக்கோலத்துடன்; துறந்தோர்களில் ஆண்பாலாரைப் பிகூ-க்களென்றும், பெண்பாலாரைப் பிகூ-ணிகளென்றுங்கூறுதல் பௌத்தசம்பிரதாயம்; கோலம் - வேடம்.

இஇ - இஅ. மணிமேகலை ஏத்திக் கடிஞையொடு கோலத்தொடு பெருந்தெரு வடைதலுமென்ச.

இனிப் பெருந்தெருவிற் பிச்சைக்குப் போந்த மணிமேகலையின் பிக்குணிக் கோலத்தைக் கண்டோருடைய மனவருத்தத்தைக்கூறுவார்.

இக. குறுமாக்கள் - அறிவில்லாத சிறியர்; "அடர்க்குறு மாக்கள்" என்றூர் முன்னும்; கசு - ம் காதை, சo; "மடக்குறு மாக்கள்" என்பது கலித்தொகை, அஉ. 'ஒளித்தொருங் கீண்டிய' என்றும் பாடம்.

கூ. மெலிந்து - மெலித்தென்றுயது விகாரம். விடருந் தூர்த்தரும் - கசo-ம் காதை, கூக. 'விடமருந் தூர்த்தரும்' என்றும் பாடம்.

கூச. கோசம்பி - கௌசாம்பிகரம்; இது, முதலிற் குசாம்பனென்பவனற் செய்யப்பட்டதாதலின், இப்பெயர் பெற்றதென்பர்; பாகதம்; "கொடியணி நெடுமதிற் கொடிக்கோ சம்பி" என்பது பெதுங்கதை, உஞ்சைக்காண்டம், வயந்தகனன்றது. கோமகளுகிய - அரசளுகிய.

கூஉ. வடி - திருத்தம்; "வாளுட்டும வடி நீண்மதில்" என்பது புறநானூறு, கஅ. வத்தவன் - வத்ஸதேசத்தரசனுகிய உதயணன்; "வயந்தகுமரன் வத்தவர் குரைப்ப" என்பது பெருங்கதை, உஞ்சைக்காண்டம், ஊர்தியிட்டது.

கூஎ - கூசு. வத்தவனன்னை வஞ்சஞ் செய்துழி - (தனகருத் திறைகொடாததுபற்றிச் சினந்து சாலங்காயனெனனுந் தன்மந்திரியால் யந்திரயானையைக் காட்டி வஞ்சமாகப்பிடிப்பித்துப் பிரசோதனனென்னு மரசன்) உதயணனைச் சிறைப்படுத்தியபொழுது.

கூட. உஞ்சையில் - உச்சயினிநகரத்தில; இஃது அவந்திநாட்டிலுள்ளது; பிரச்சோதனனுடைய இராசதானி; இதையே அவந்தியென்றும் வழங்குவர்; தோன்றிய - வேற்றருவகுதொண்டு தோன்றிய; யூகியந்தணன - இவன் பிரமசுந்தரயோகியென்பவருடைய குமாரன. உதயணனுடைய மந்திரிகள் நாலவருளொருவன்.

கூக. பரிவுறுமாக்களில் - துன்பமுற்றனங்களைப்போல.

கூக - கூசு. பிரச்சோதனன் உதயணனை வஞ்சித்துச் சிறைப்படுத்தியபொழுது அவனைச் சிறைமீட்டற்கு யூகியென்பவன் மாறுவடிவங்கொண்டு உச்சயினிநகரப் பெருந்தெருவையடைந்ததும், அவனைக்கண்டோர் பலரும் பரிவுற்றச் சூழ்ந்ததுமாகியவிவற்றை உதயணகுமாரகாவ்யத்துள்ள உஞ்சைக்காண்டத்தி லுணர்க. பெதுங்கதையென்று வழ

யுதைய குமர னுளங்கொண் டொளித்த
மதுமலர்க் குழலாள் வந்து தோன்றிப்
பிச்சைப் பாத்திரங் கையினேந் தியது
திப்பிய மென்றே சிந்தைநோய் கூர
மணமலி மறுகின் மாதவி யின்ற
வணிமலர்ப் பூங்கொம பகமலி யுவகையிற்
பத்தினிப் பெண்டிர் பண்புட னிடூஉம
பிச்சை யேற்றல் பெருந்தக வுடைத்தெனக்
குளனணி தாமரைக் கொழுமலர் நாப்ப
ணெருதணி யோங்கிய திருமலர் போன்று
வான்றரு கற்பின் மகளிரிற்
றுன்றணி யோங்கிய தகைமைய ளன்றே
வாதிரை நல்லா ளவண்மலி யிம்மலி
நீபுகல வேண்டு நேரிழை யென்றனள்
வடதிசை விஞ்சை மாநகர்த் தோன்றித்
தென்றிசைப் பொதியிலோர் சிற்றியாற் றடைகரை
மாதவன் றன்னுல வல்வினை யுருப்பச்
சாபம் பட்டுத் தனித்துய ருறூஉம்
வீவில் வெமபசி வேட்கையொடு திரிதருங்

---

குகின்ற உதயணன் கதையென்னும்ப ழையதமிழ்நூலில் இவ்வரலாற்றைக்கூ றும்பாகங் கிடைக்கவில்லை.

ஙூ. திப்பியம் - ஈண்டு ஆச்சரியமென் னும்பொருளோடதந்து நின்றது. சிந்தை நோய்கூர - மனவருத்தமிக; சிந்தை - சிந்தாகுலம்; "என்றண்டாங் கொல்லி னிக் கட்படு நாளெனுஞ் சிந்தையே" என்பது சீவகசிந்தாமணி, குணமாலை யாரிலம்பகம, சுஙூ.

ஙுக - எஙூ. குறுமாக்களும் விடரும் தூர்த்தரும், மாக்களிற் பரிவெய்தி, சூழ லாள் தோன்றி வந்தியது திப்பியமென் றும் நோய்கூரவென்க.

எஉ. பூங்கொம்பு-மணிமேகலை. 'அணி மலர்ப் பூங்கொடி' என்றும் பாடம்.

ஙஉ - எச. பூங்கொம்பு பத்தினிப்பெ ண்டிர் இடும் பிச்சையேற்றல பெருந்தக வுடைத்தெனகூறு.

புதுக்கோள் யானை வேட்டம் வாய்த்தென

---

கஙிக. இமையோ பாவாய் - தேவர் களுடைய தலைவி; "பவமறு வித்த வானோர் பாவாய்" (உஙி - ம் காதை, கசள) என்று சிந்தாதேவியைப் பின்பு கூறுதல காண்க.

இனி, உதையகுமரன் மணிமேகலையின் நகைமுதலியவற்றுல் தான்வலியழிந்து அவளுக்கு வயமாயினமை கூறுவான், தன்னே யானேயாகவும் அவள் நகைமுத லியவற்றை யானேயையடக்கி வயமாக்குங் கருவிகளாகவும் உருவகஞ்செய்து கூறுகின்றுன்.

கசுக. 'அஞ்சனஞ் சேரா' என்றதனுற் கண்ணுக்கு மையெழுதாமை தெளிவிக்கப்படும்.

கசுங. கோணம் - தோட்டி; "கோணற் றின்ற வடுவாழ் முகத்த" என்பது மதுரைக்காஞ்சி, இகூஉ.

கசுச. கவைமுட்கருவி-கவைத்த முள் னையுடைய பரிக்கோல; "கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக, கலலா வினுஞர் கவளங் கைப்ப" என்பது முல்லைப்பாட்டு, சுரு - சுசு. கடிகொள - காவல்கொள்ள.

கசுஙு - கசுச. குவிமுட் கருவிமுதலிய மூன்றும் யானையையடக்கும் கருவி விசேடங்கள்.

கசு0-கசுச. நகை குவிமுட்கருவியும், கண் கோணமும், புருவம் கவைமுட் கருவியுமாகிக் கடிகொளவென வியைக்க; இது நிரனிறை.

கசுரு. கல்வியாகிய பாகர்களாற் காத்தலாகிய வலியைப்போக்கி; "மடங்கெழு நோக்கின் மதிமுகந் திறப்புண், டிடங்கழி நெஞ்சத் திளமை யானை, கல்விப் பாகன் கையகப் படாஅ, தொல்கா வுள்ளத் தோடு மாயினும்" என்றதிற் கல்வியைப் பாகனுக உருவகஞ்செய்திருத்தல் காண்க. இது சிலப்பதிகாரம், கட்டுரைகாதை, சுசு - சுக.

கசுஎ. முதுக்குறைமுதுமொழி - பேரறிவைப் புலப்படுத்தியமொழி; என்பது "பிறத்தலு மூத்தலும்" என்றது முதலிய வற்றை.

கசுஅ - கசுஎ. யாழோசைபோல இனிமையாக மொழிகளே யெடுத்துகாட்டி; யானே யாழிற்கு வயமாகுமாதலின், இங்ஙனம் கூறினுன்; இதனேப் பின்வரும் மேற்கோள்களாலுணர்க; "காழ்வளை நில்லாக் கடுங்களிற் ருெருத்தல், யாழ் வளைதல் தங்கி யாங்கு" என்பது கலித் தொகை, உ. "அணியிழை மகளிரும் யானேயும் வணக்கு, மணியொலி வீணை" என்பது பெருங்கதை, உஞ்சைகாண்டம், நருமதைச்சம்பந்தம். "இசையினி லிவட்குத தோற்றும் யானேயால் வேறு மென்னி, னிசைவதொன் றன்று கண்டீர்" என்பது சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம, உருசு. 'யானே நாதத்திற்றேற்றதலின், அதற்கு வணங்குதலியல்பு' என்பர் ஆசிரியர் நச்சினர்க்கினியர்.

கசுஅ. புதிதாகக் கொள்ளப்படும்யானே வேட்டையில் அகப்பட்டதென்றகருதி. இது, மணிமேகலையின் உட்கோளென்று உதையகுமரன கருதினன். 'புதுக்கோட்டியானே' எனறும் பாடம்.

முதியா ளுன்றண் கோட்டம் புகுந்த
கஎ0 மதிவாண் முகத்து மணிமே கலைதனை
யொழியப் போகே னுன்னடி தொட்டே
னிதுகுறை யென்றன னிறைமகன் றனென

உதையகுமரன் அம்பலம்புக்ககாதை முற்றிற்று.

---

ககக. முதியாள் - விளி.

கஎக. அடிதொடுதல் - சூளுறவுகளுள் ஒன்று; இசனைப் பின்வருவனவற்றாலு ணர்க; "நம்மு, ணுமுசாஅங் சோனடி தொட்டேன்" எனபது கலித்தோகை, கூச. "அடல்வலி யெயினர்நி னடி தொடு கடனிது" எனவும் "அடிதொடு படுகடனிது" எனவும் வருவன சிலப்பதிகாரம், வேட்டுவவரி; "சுடரொடு"— "தடியொடு".—

கஎஉ. இதுகுறை - இஃது எனக்கு வேண்டுவதாரியம்; குறை - காரியம்; "முறைவேண் டுநாகுங குறைவேண் டுநாக்கும், வேண்டுப வேண்டுப வேண் டினர்க கருளி" என்பது பேரும்பா ணாற்றுப்படை, சசஙூ - சசச. இறைமகன் - உதையகுமரன்.

க - கஎஉ. சித்திராபதி, அதுகேட்டு எறி வெய்துயிர்த்தது கலங்கித் தீர்ப்பலென்று கூதிரியன் மடந்தையரெல்லார்க்குங்கூறும்; அங்ஙனங்கூறுகின்றவள வஞ்சினஞசாற்றி உயிர்த்துத் தேர்ந்து போகிக குறுகிப் பொருந்தி நின்று ஏதத அவன் 'தவறின்றே' என, அவள், 'வேந்தே; நின்கண்ணி வாழ்க, காஞ்சி அம்பலதாயது' என, அதுகேட்டு அவட்கு உரைப்போன் 'எய்யாமையலேன்' என்று சொல்ல, சித்திராபதி சிறநதையெய்தி, 'படிறறுரை யடகுதல் சோன் முறையன்றே குமரற்கு' என்றலும, உதையகுமரன் உளளம பிறழ்நது ஏறி எய்திக காண்டலும் அடங்காஞசிச்சென்று துணிந்து கேட்ப, அவள் வணங்கி நடுங்கி மயங்கி, 'வேட்டதுசெய்க' என்றுகூறி நீங்கப் புகுதக சொழுது ஏதி ஒதிக் காயசண்டிகை வடிவாய் வந்துதோன்ற, தாழோன்புக்கு மரி இ 'இதுகுறை' என றனனென வினைமுடிவுசெய்க.

## பத்தோன்பதாவது

# சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை.

[பத்தோன்பதாவது மணிமேகலை காயசண்டிகைவடிவாய்ச் சிறைக்கோட்டம்புக்குச் சிறைவீடுசெய்து சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக்கிய பாட்டு.]

முதியாள் திருந்தடி மும்மையின் வணங்கி
மதுமலர்த் தாரோன் வஞ்சினங் கூற
வேடவிழ் தாரோ யெங்கோ மகண்மு
டாடாது துணிந்து நாநல்கூர்ந் தனையென
விக்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திர மொன்று தெய்வங் கூறலு
முதைய குமர னுள்ளங் கலங்கிப்
பொதியறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி
யங்கவ டன்றிற மயர்ப்பா யென்றே

---

க. முதியாள் - சம்பாபதி. மும்மை - மனம் வாக்குக் காயங்கள். 'முறைமையின் வணங்கி' என்றும் பாடம்.

உ. தாரோன் - உதையகுமரன். வஞ்சினம் - சூளுறவு; அஃது "உன்னடி தொட்டேன்" என்றது; கஅ - ம் காதை, கஎக.

மேல்வருவன தெய்வதத்தின் கூற்று.

ச. நாடாது துணிந்து - ஆராயாது துணிவுற்று, நாநல்கூர்ந்தனை - நாவறுமையுற்றாய்; என்றது, "எண்ணித்துணிக கருமம் துணிந்தபி, னெண்ணுவ மென்ப திழுக்கு" என்னும் சசுஎ - ம் திருக்குறளின் பொருளேத தழுவிவந்த வாறு காண்க. நாநலகூர்ந்தனை—கo - ம் காதை, சுஅ.

ஞ. விக்தகர் - சிற்பாசாரிகள்; "விக்தக ரியற்றிய, கண்கவ ரோவியம்" (சு - ம் காதை, கசுo - சசுக) எனவும், "விக்தக ரியற்றிய விளங்கிய கைவினைச், சித்திர செயகை" (சு - ம் காதை, கசுஎ - கசுஅ) எனவும் முன்பு வந்திருத்தல் காண்க; "விக்தக ரியற்றிய வீளங்கிய கோலத்து" என்பது சிலப்பதிகாரம், நடுகற்காதை, உஉக.

ஃ. ஒன்றுதெய்வம் - பொருந்திய தெய்வம்.

ச - சு. நல்கூர்ந்தனையெனக் கூறலு மென்க.

அ. பொதியறை - துவாரமில்லாத கீழறை; "போதார் பிறவிப் பொதியறையோர்" என்பது சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, ககக.

க. அவள் - மணிமேகலை. அயர்ப்பாய் - மறப்பாய்.

கo. செங்கோல் காட்டிய - செங்கோன்முறையை எடுத்துக் காட்டிய. தெய்வமுமென்றது மணிமேகலா தெய்வதத்தை; உம்மை - எதிரதுதழீஇயது. இப்பியமென்பதன்பொருளை, எ - ம் காதை, சுஎ - ம் அடிக்குறிப்பிற்பார்க்க.

கூ - கo. உதயகுமரனுக்கு மணிமேக

பையர வல்குல் பலர்பசி களையக்
கையி லேந்திய பாத்திரந் திப்பிய
முந்தை முதல்வி யடிபிழைத் தாயெனச்
சித்திர முலைத்த வித்தூஉந் திப்பிய
கரு மிந்நில மெல்லா மிளங்கொடி செய்தியிற்
பின்னறி வாமெனப் பெயர்வோன் றன்னை
யகல்வாய் ஞால மாரிரு ளுண்ணப்
பகலசோட்டிப் பணையெழுந் தார்ப்ப
மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு
உ0 நீல யானை மேலோ ரின்றிக்
காமர் செங்கை நீட்டி வண்டுபடு
பூநாறு கடாஅஞ் செருக்கிக் கால்கிளர்ந்து

---

லாதெய்வம் செங்கோன் முறையை எடுத்துக்காட்டி, மணிமேகலை திறத்தை நீ மறப்பாயென்று கூறியதனை, "கோ னிலை திரிந்திடிற் கோணிலை திரியுங், கோணிலை திரிந்திடின் மாரி வறங்கூரு, மாரி வறங்கூரின் மன்னுயி ரிலலை, மன் னுயி ரெலலா மண்ணுள் வேந்தன், றன் னுயி ரென்னுந் தகுதியின் ருகுந், தவத திறம் பூணடோ டன்மேல் வைத்தி, வவததிற மொழிகென் றவன் வயி னுரைத்தபின்" (எ - ம் காதை, அ - கச) எனவும், "பொன்றிகழ் மேனி யொரு த்தி தோன்றிச், செங்கோல் காட்டிச் செய்தவம புரிந்த, வங்கவ டன்றிற மயர் ப்பா யென்றனள்" (கஅ - ம் காதை, அக - அசு) எனவும் இந்நூலுள்ளே முன் புவந்தவாற்றாலுணர்க.

கக. 'பசிகெடுப்ப' என்றம் பாடம்.

கக - கஉ. களைய எந்தியபாதிரம்.

கசு. பிழைத்தாய் - தவறுசெய்தாய்.

கச. இன்னமும் - இதுவும்.

கடி. இந்நிலையெல்லாம் - செங்கோல் காட்டிய தெய்வமுதலிய மூன்றன் வர லாற்றையும். இளங்கொடி - மணிமே கலை.

கக. பெயர்வோன்றன்னை - பெயர்ந்து செல்லும் உதயகுமரனை.

இனி இராத்திரியை யானையாக உருவ கித்துக் கூறுவார்.

கஅ. பகல் அரசு - சூரியனுகிய அர சனை. பணை - பறை; யானை செல்லுங் கால அதன்வரவை எல்லார்க்கு தெரி விதற்குப் பணைமுழங்கும்; "வெரூஉப் பறை துவலும் பரூஉப்பெருந் தடகை, வெருவரு செலவின் வெருவி வேழம்" என்பது பொருநராற்றுப்படை, கஎக - கஎஉ.

கக. மாலை நெற்றி - அந்திக்காலமா கியநெற்றி; பிறைககோடு - பிறையா கிய தந்தம்.

உ0. நீலயானை - கரியநிறத்தையு டைய (இராத்திரியாகிய) யானை. மே லோர் - பாகர்; "மேலோரின்றி" எனரூர் முன்னும்; ச - ம் காதை, சுடு; "மேலோர் வீசி" என்பது மதுரைக்கா ஞ்சி, சுஅக.

உக. காமர்செங்கை - விருப்பமாகிய துதிக்கை.

உஉ. பூநாறுகடாம் - எழிலேப்பாலை மலரினது மணநாறுகின்றமதம்; இதனை, "பாதத யானையிற் பதங்களிற் படிமத நாறக், காதத வங்குச நிழிர்ந்தி டக் கால்பிடித் தோடிப், பூதத வேழி லேப் பாலையைப் பொடிப்பொடி யாகக், காத்திரங்களாற் றலத்தொடுக் தேய்த்த தோர் களிறு" என்னுஞ் செய்யுளாலு ணர்க; இது கம்பராமாயணம், வனக் காட்சிப்படலம், சு. செருக்கி - எரித்தி. கால்கிளர்ந்து - காற்றைப்போலே எழு நது; "கால்கிளர்ந் தன்ன வேழம்" என பது திருமுருகாற்றுப்படை, அஉ.

நிறையழி தோற்றமொடு தொடர முறைமையி
னகர நம்பியர் வளியோர் தம்முடன்
உரு மகர வீணையின் இளிகரம்பு வடித்த
விளிபுண ரின்சீ ரெஃகுளங் கிழிப்பப்
பொருஅ நெஞ்சிற் புகையெரி பொத்திப்
பரூஅக் குருகி னுயிர்த்தவன் போயபி
னுறையுட் குடிகை யுள்வரிக் கொண்ட
ஈ0 மறுவில செய்கை மணிமே கலைதான்
மாதவி மகளாய் மன்றந் திரிதரிற்
காவலன் மகனே கைவிட லீயான்
காய்பசி யாட்டி காயசண் டிகையென
வூர்முழு தறியு முருவங் கொண்டே
ஈரு யாற்று மாககட் காற்றுந் துணையாகி

---

கசு - உரு. பெயர்வோன்றன்னை நீல யானைதொடர வெனலியைக்க; இரவுவர வென்றபடி.

உசு. நம்பியர் - காதலஞ்செலவர்; "நறுஞ்சாக் தகலத்து நம்பியர்" என்பது சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, கoo. வளியோர் - மகளிர்.

உரு. மகரவீணை - மகரயாழ்; இது நாலவகையாழ்களுள் ஒன்று; பதினேழு நரம்புகளையுடையது இளைநரம்பு - குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளையென்னும் ஐந்துமாம்; இதனை "இளையெனப் படுவ இளகுகு காலைக், குரலே யிளியே துத்தம் விளரி, கைக்கிளையெனவைந் தாகு மென்ப." என்பதனாலுணர்க. வடித்தல - 'சுட்டு விரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்' என்பர் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர்; 'நரம்பை உருவுதல்' என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

உசு. இளி-இசை; எழுநரம்பினுள் ஒன்றன் பெயராயிருந்தும் எல்லாப்பண்ணிற்கும் இஃது அடிமணையாதலின், ஈண்டு இப்பொருளைத் தந்துநின்றது. சீர் - தாளவறுதி. எஃகு - வேல். சீராகிய எஃகு ஊதைதைக்கிழிப்ப.

உஎ. எரிபொததி - (காமமாகிய) தீமூட்டப்பட்டு.

உஅ பரூஅக்குருகின் உயிர்த்து - கொல்லனுலைமூகருப்போலே யுயிர்த்து; பரூஅக்குருகு - வெளிப்படை; கருஞ்சாப் பூவாவஞ்சியென்றும், குறிஞ்சிமலையை ஊராக்குதிரையென்றும், குறிஞ்சிப்பண்ணைக் கொய்யாக் குறிஞ்சியென்றும் நாஞ்சின்மலையை உழாநாஞ்சிலென்றும் நூல்களில வழங்குதல் காண்க. "ஊதுலைக் குருகி னுயிர்த்து" என்றார் மூன்னும்; உ - ம் காதை, சுசு.

கசு - உஅ. பெயர்வோன்றன்னை நீல யானைதொடர, சீராகியஎஃகு உளங்கிழிப்ப எரிபொத்தி உயிர்த்து அவன் போயபினென்க.

இனி, மணிமேகலை உதயகுமரனுக்கு அஞ்சிக் காயசண்டிகை வடிவத்துடன் பிச்சையிடுதற்கு வெளிப்பட்டு வந்தமை கூறுவார்.

உக. உறையுட் குடிகை - இருப்பிடமாகிய சிறிய கோயிலில். உள்வரிகொண்ட - வேற்றுருவங்கொண்ட; உள்வரியாவது பாண்டவர் விராடநகரத்துப் பிறிதுருவங்கொண்டாற்போலவது; இருத்திரிமவேட மென்றும் வடிவமறைத்தலென்றுங்கூறுவர் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர்.

ஈக. 'மாதவிமகளாய்' என்பது மூதாயின மணிமேகலையின் உட்கோள். மன்றம் - உலகவறவி.

ஈஉ. காவலன்மகன் - உதயகுமரன். கைவிடலீயான் - கைவிடான்.

ஈரு. கஎ - ம் காதை, சுச.

யேற்றலு மிடுதலு மிரப்போர் கடனவர்
மேற்சென் றளித்தல் விழுத்தகைத் தென்றே
நூற்பொரு ணுணர்ந்தோர் நுனித்தன ராமென
முதியாள் கோட்டத் தகவயி னிருந்த
சுஐ வழுத சுரபியை யங்கையின் வாங்கிப்
பதியகந் திரிதரும் பைந்தொடி நங்கை
யதிர்கழல் வேந்த னடிபிழைத் தாளை
யொறுக்குந் தண்டத் துறுசிறைக் கோட்டம்
விருப்பொடும புகுந்து வெய்துயிர்த்துப் புலமபி
சரு யாங்குப் பசியுறு மாருயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்தநின் னாட்டலு
மூட்டிய பாத்திர மொன்றென வியந்து
கோட்டங் காவலர் கோமகன் றனக்கிப
பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்
ரூ0 யாப்புடைத் தாக விசைத்துமென் றேகி
நெடியோன் குறளுரு வாகி நிமிர்ந்துத
னடியிற் படியை யடக்கிய வந்நா
ணீரிற் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்செழு திருமகள்

---

நஅ - நஅ. வாங்குதலும கொடுத்தலும் இரப்போர்கடனுமாதலின், அவர் எவ்விடத்தும் வலிந்து சென்று கொடுத்தல் நெறிபுடைததென்ற நூற்பொருளுணர்ந்தோர் ஆராய்ந்து சொன்னரென்று கருதி. (?)

சo. வாங்கி - கொண்டு.

சக. நங்கை - மணிமேகலை. 'பைந்தொடி மடந்தை' என்றும் பாடம்.

சஉ. பிழைத்தாளை - பிழை செய்தாளை.

சஙு. தண்டத்து - தண்டத்தினையுடைய. சிறைக்கோட்டம் - சிறைச்சாலை.

கo - சசு. மணிமேகலை, நுனித்தன ராமென வாங்கிப் புகுந்து நின்று மாக்களூட்டலுமென்க.

இவள் பலரையும் உண்பித்தல்கண்ட கோட்டங்காவலர் வியப்புற்றச்சென்று அரசனுக்குத தெரிவித்தல் இனிக்கூறப்படும்.

ரo. யாப்புடைத்தாக - உறுதியுடைத்தாக. இசைத்தும் - சொலலுவேம.

சஎ - ரo. கோட்டங்காவலர் வியந்து தானமும் செய்தியும் கோமகனுக்கு இசைத்தமென்றேகியென்க.

ரக. நெடியோன் - திருமால், குறளுருவாகி - வாமனனாகி, நிமிர்ந்து - பேருருவங்கொண்டு

ரஉ. அடக்கிய - அடகக. அந்நாளில் அடககிய அந்நாளென வியைத்துப் பெரசசதொடராக்கினுமமையும்.

ரஙு. நீரிற் பெய்த - நீருடன் பூமியைக்கொடுத்த; பூமியைத தாரைவார்த்துக் கொடுத்தவெனறபடி.

ரஉ - ரஙு. அடககிய நீரிற் பெய்தவெனவியைக.

ரசு. மாவலி மருமான் மகள் - மகாபலியின் வழிதோன்றலாகிய அரசனுடைய மகள்; அரசன்பெயர் புலப்படவில்லை.*

---

* மகாபலியின் பரம்பரையரசர் யாரென்று விளுவியபொழுது, இராசாங்கத்திற் லொசாதன பரிசோதகர்களுள் ஒருவராகிய ம-ரா-ரா-ஸ்ரீ வி. வேங்கையரவர்கள்

குரு சீர்த்தி யெனலுந் திருத்தகு தேவியொடு
போதவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்குக்
கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டின நலியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயி லாடும்
கூ0 விரைப்பூம் பங்கர் கண்டளஞ் சிறந்தும்
புணர்துணை நீங்கிய பொய்கை யன்னமொடு
மடமயிற் பேடையுந் தோகையுங் கூடி
யிருசிறை விரித்தாங் கெழுந்துடன் கொட்பன

குரு. சீர்த்தியென்ற பெயர் கூறப்ப டிம செல்வமிக்க தேவியுடன். 'சிதர தகையெனும் திருத்தகு தேவி' என்றும் பாடம்.

குசு. போது - மலரும் பருவமுள்ள அரும்பு. 'பொருந்தினன் புகுகு' என்றும் பாடம்.

குஎ. குழல் - வேய்ங்குழல்.

குஅ. பொங்கர் - சோலை

குஎ - குஅ. இவ்வடிகளிற்போலவே "குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மழலை வண்டின கல்லியாழ் செய்ய" என்ற முனைபு வந்திருத்தல் காணுக; சு - ம் காதை, கூ - சு.

குக. வரி - வரிப்பாட்டு ; கிற்றுமாம். 'மாமயி லாடுவ' என்றும் பாடம்.

குஎ - கூ0. காட்டச் செய்யப் பாட ஆடிப்பந்தர்கண்டு உளஞ்சிறந்ததுமென்க.

கூக. துணை - பெண்ணன்னம்.

கூஉ. தோகை - ஆண்மயில். 'சேவலுங் கூடி' என்றும் பாடம்.

கூசு. கொட்பன - சுழலுவனவற்றை.

---

(எம் - எ), அன்புடன் எழுதியனுப்பியவிடை வருமாறு :— "பாணவம்சத்து அரசர்கள் மகாபலியின் பரம்பரையைசேர்ந்தவர்கள்; அவர்களின் கல்வெட்டுகளுள், வட ஆர்காடு ஜில்லா வேலூருக்குத்த திருவல்லமென்கிற கிராமத்திலும் மைஸூர் ஸம்ஸ்தானத்தில குல்காண்போடே என்கிற ஊரிலும் கிடைத்திருக்கின்றன; "முவ்வுலகிலும் தோழப்பட்டவனுயும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தலைவனுயுமிருந்கின்ற பரமேசுவரனுக்த வாயில்காத்தும்படியாக நியமிக்கப்பட்டமகாபலிசுலத்தைச்சேர்ந்தவன்" எனறு சிலபாணவரசர்கள், தங்களுக்குரிய கல்வெட்டுகளிற் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். பாணகுலதைச்சேர்ந்த செப்புப்பட்டயங்கள் இரண்டுண்டு. அவற்றில ஒனறு, சிதம்பரம் கனகஸபையின் முகட்டைப் பொன்வேய்ந்த பராந்தகனென்று சொல்லப்பட்ட வீரநாராயணச்சோழன் பாணவம்சத்தை நின்முலஞ்சேர்ந்து அவர்களின் நாட்டைக் கங்கவம்சத்தைச்சேர்ந்த அத்திமல்லனென்ற அரசனுக்குகொடுத்ததாகச் சொலலுகின்றது. இந்த வீரநாராயணன் கி. பி. 10-ம் நூற்றாண்டின் முற்பாதியில ஜீவித்திருந்சான். மற்றொரு செப்புப்பட்டயத்தில் கீழே எழுதப்பட்டிருக்கும் வம்சாவலி கிடைத்தது :— பலி, அவன் மகன் பாணன், அவன குலதத்திற்பிறந்தவன் பாணதிராசன், இவ்வம்சத்தைச்சேர்ந்த அநேக அரசர்கள் மரித்தபிறகு இருந்தோன் ஜயநந்திவர்மன் (-இவன் ஆந்திரதேசத்திற்கு மேற்கிலிருந்த நாட்டை அண்டவன்), அவன் மகன் முதலாம் விசயாதித்தன், அவன்மகன ஜகதேகமல்லனென்கிற மல்லதேவன், அவன்மகன் பாணவித்தியாதரன், அவன் மகன் பிரபுமேருதேவன், அவன் மகன் முதலாம் விக்கிரமாதித்தன், அவன் மகன் புகழ்பெப்பவர்கண்டனென்கிற இரண்டாம் விசயாதித்தன், அவன்மகன் விசயபாதுவென்ற கூறப்பட்ட இரண்டாம் விக்கிரமாதிதன் (-இவன் கிருஷ்ணராஜனென்ற அரசனுக்கு நேசன்.) இந்த அரசர்களின்காலம் தெரியவில்லை."

ஒருசிறைக் கண்டாங் குண்மகிழ் வெய்தி
சுடு மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையு
மாடிய சுரவையிஃ தாமென நோக்கியுங்
கோங்கலர் சோர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொற் றட்டிற் றீம்பா லேந்திப்
எ0 பைங்கிளி யூட்டுமோர் பாவையா யென்று
மணிமலர்ப் பூமபொழி லகவயி னிருந்த
பிணவுக்குரங் கேற்றிப் பெருமகர் மயை
மடவோர்க ளியற்றிய மாமணி யூசல
கடுவனுக் குவது கண்டுநகை யெய்தியும
எடு பாசிலை செறிந்த பசுங்காற் கழையொடு
வால்வீ செறிந்த மாஅயங் கண்டு
நெடியோன் முன்னெறி நின்றன னெனைத

---

கூச. ஒருசிறை - ஒருபக்கம்.

சுடு. மாமணிவண்ணன் - கண்ணன். தம்முன் - பலதேவர். பிஞ்ஞை - நப்பின்னை. 'பின்னையும்' என்றும பாடம்.

கூக. ஆடிய - (துவராபதியில் எருமன்றத்தே அக்காலத்து) ஆடிய. சுரவை - கைகோத்தாடுங்கூத்து; இதனை, வரிக்கூத்தின் ஒருறுப்பென்றும, விசேடக கூத்து ஆறினுள் ஒன்றென்றுங்கூறுவர் அடியார்க்கு நல்லார்.

சுடு - கூக. கண்ணனும் பலதேவரும் நப்பின்னையுமாகிய மூவரும துவராபதியில் எருமன்றத்தே குரவைகூத்து ஆடியதனை, "மாயவன்றன் முன்னிறைம வரிவளைகைப் பின்னையொடுவ, கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புனஞ்சோர, வாய்வளைச்சோக் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத, தாதெருமன் றத்தாயிற் குரவையோ ரகவுடைத்தே" என்பதனாலுணர்க. இது சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை.

கூக - கூக. அன்னத்திற்குப் பலதேவரும், மயிற்பேடைக்கு நப்பின்னையும், தோகைக்குக் கண்ணனும் உவமைகள். கொட்பனயற் றறத கண்டி மகிழ்வெய்திக் குரவையிஃதாமென நோக்கியுமென்க.

கூஎ. கோங்கலர் - கோங்கம்பூ.

கூஅ. மஞ்ஞை - மயில்.

எ0. பாவை - பெண். எனறமனை கருதியும்.

கூஎ - எ0. கோங்கலர்ச்சோர் பாவை டையபொற்றட்டும், மாங்கனிக்குக இளி யும், மயிலுக்குப் பெண்ணும் உவமைகள்.

எஉ. பிணவுக்குரங்கு - பெண்குரங்கு, "பனமி புல்லாயா னாயென மூனறு, மொழிய வென்ப பிணவென பெயர் தொடை" (தொல்காப்பியம், மரபியல், சூஅ) எனனும சூத்திரத்தில 'ஒனறில' எனறதனுள் 'பிணவு' எனபது குறிக்கும கொளளப்பட்டது.

எசு மடவோர்க்கு - மகளிர்க்கு.

எச. கடுவன - ஆணுரங்கு; "குரங்கி னேற்றினைக் கடுவ னெனறறும்" என்பது தொல்காப்பியம், மரபியல், சூத, ஊக்குவது - செலுத்துதல. 'கணியிழைக் கெய்தியும்' எனறும பாடம்.

எக - எச. கடுவன், பிணவுக்குரங்கை யேற்றி ஊசலை ஊக்குவதுகண்டு மகிழ்வெய்தியுமென்க.

எடு. கழை - மூங்கில.

எசு. வால்வீ - வெள்ளியமலர். மராம் வெணகடம்பு.

எஎ. நெடியோன் - கண்ணன். முன்னமையன்; என்றது பலதேவனை. 'நெடியோன் நம்முனெறி' என்றும பாடம்.

எடு - எஎ. கழைக்குக கண்ணனும்,

## கசு.—சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை. கஎக

தொடிசேர் செங்கையிற் றெழுதுகின் றேத்தியு
மாடற் கூத்தினே டவிநயந் தெரிவோர்
அ0 நாடகக் காப்பிய நன்னூ னுணிப்போர்
பண்ணியாழ் நரம்பிற் பண்ணுமுறை நிறுப்போர்
தண்ணுமைக் கருவித் கண்ணெறி தெரிவோர்
குழலொடு கண்டங் கொளச்சீர் நிறுப்போர்
பழுனிய பாடல பலசொடு மகிழ்வோ
அடு ராரம பரிந்த முத்தங் கோப்போ
ரீரம் புலர்ந்த சாந்தங் நிமிர்வோர்
குங்கும வருணங் கொங்கையி னிழைபபோ
ரஞசெங் கழுநீ ராயிதழ் பிணிட்போர்
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைவோர்
கூ0 பொலவெனி னுடியிற் பொருநரு நிற்போ
ராங்கவர் தமமோ டகலிரு வானத்து
வேநதனிற் சென்று விளோயாட் டயர்ந்து

---

வெணகடம்பிற்குப் பலதேவரும் உவ மைகள்.

எஅ. தொடி - வீரவளை; தொடித் தோட்கை துடிப்பாக" என்பது மது ரைக்காஞ்சி, கூச.

எக. அவிநயம - கதைதழுவாதே பா ட்டுகளின பொருள்தோனறக் கைகா ட்டி அவிநயிப்பது.

அ0. நாடகம் - கதைதழுவிவருங்கூ நரு. காப்பியம் - காவயம். நாடகங்கா ப்பியமாகிய நன்னூலென்க. நுணிப் போ - கூர்ந்து ஆராய்வோர்; "தூற் பொரு ளுணர்ந்தோர் நுணிதனர்" என இகாதையிலேயே முன்பு வந்திருத்தல் காண்க; கூஅ - ம் அடி.

அக. பண்களேயுடைய வீணைநரம்பு களிற பண்களே முறையே நிறுத்து வோர்.

அஉ. தண்ணுமைக்கருவி - மத்தளம்; இதனே உத்தமத்தோற கருவியென்பர். கணணெறிதெரிவோர் - அதன் முகத் தில அடித்தலேயாராய்வோர்; கண் - வாத்தியங்களின் முகம்; "பண்ணமை முழவின் கண்ணெறி யறிநது" என் பது சிலப்பதிகாரம், அரங்கேற்று காதை, கூக.

அகூ குழலொடு கண்டம் கொள - வேய்ங்குழலோடு மிடற்றுப்பாடல் பொ ருந்துமவணணம். சீர் - தாளவறுதி.

அச. பழுனிய பாடல் - முற்றுப்பெ ற்ற இசைப்பாடல். மகிழ்வோர் - மகிழ் நதுபாடுவோர். 'பலவொடு மகிழ்வோர்' என்றும் பாடம்.

அடு. ஆரம் பரிந்தமுத்தம் - ஆரம் அறு படுதலாற சிந்தியமுத்துக்கள்.

அசு. புலர்ந்த சாந்தம் - உலர்ந்த சந் தனம.

அஎ. குங்குமவருணம் - சிவந்தொய் யிற்குழம்பு. இழைப்போர் - எழுது வோர.

அஅ. ஆயிதழ்பிணிப்போர் - அழகிய இதழைக்கட்டுவோர்; 'ஆயிதழ் பிணைப் போர்' என்றும் பாடம்.

கo. ஆடி - கண்ணுடி. 'பொன்னணி யாடியின்' என்றும் பாடம்.

எக - கூக. தெரிவோரும், நுணிப்போ ரும், நிறுப்போரும், தெரிவோரும், நிறு ப்போரும், மகிழ்வோரும், கோப்போ ரும், நிமிர்வோரும், இழைப்போரும், பிணிப்போரும், குடைவோரும், நிற்போ ருமாகிய அவர்களோடென்க.

கக - கூஉ. வானத்து வேந்தனில் - இந்திரன்போல, "வேந்தன் மேய தீம் புன லுலகமும்" (தொல்காப்பியம்,

குருந்துந் தளவுந் திருந்துமலர்ச் செருந்தியு
முருகுவிரி முல்லையுங் கருவிளம் பொங்கரும்
பொருந்துபு நின்று திருந்துநகை செய்து
குறுங்கா னெகுலமு நெடுஞ்செவி முயலும
பிறழ்ந்துபாய் மானு மிறும்பகலா வெறியும
வம்மெனக் கூஉய் மகிழ்துணை யொடுதன
செமமலர்ச் செங்கை காட்டுபு நினறு
மன்னவன் முனு மலர்க்கணை யைந்தனு
மின்னிள வேனிலு மிளங்காற் செல்வனு
மெந்திரக் கிணறு மிடுங்கற் குன்றமும
வந்துயீ முருவியு மலர்ப்பூம பகுதரும
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீக கேணியு
மொளிக்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும
யாங்கனுந் திரிந்து தாழ்ந்துளீ னாடி

---

அகத்திணையியல், ரு ) எனவும், வேந்தனும் வேந்து கெடும்" திருந்தாள், அகக.) எனவும் வருதலால், வேந்தனென் றற்கே இந்திரனென்ற பொருள்கூறினும இழுக்காது. வினையாட்டயாந்து - வினையாட்டை விரும்பிசசெய்து.

கூக. தளவு - செம்முல்லை. செருந்தி - ஒருமரம்; இது செருந்தெனவும வழங்கும. 'குருகுந் தளவுந் திருமலர்ச் செருந்தியும்' என்றும் பாடம்.

கச. முருகு - வாசனை. கருவிளம் - ஒருமரம். "நறுந்தண் ணகிலுஞ் சுருந்தனை குழையுங், கருவிளை வோடும்" என்பது பெருங்கதை, உஞ்சைகாண்டம, நீராட்டரவம். பொங்கா - சோலை; இனி யுமாம்.

கூ. நகுலம - கீரி.

கூஎ. இறும்பு - குறுங்காடு. வெறி - ஆடு. 'விரும்பு கயாவெறியும' என்றும் பாடம்.

கூஅ. வம்மெனக்கூஉய் - யாருமென் றழைவி, வாருமென்றது 'வம்' எனின்றது, "கதுமெனக் களைந்து வம்மெனை கூஉய்" என்பது பொருநராற்றுப் படை, கoக. மகிழ்துணை - இராசமாதேவி.

கூக. காட்டுபு - காட்டி.

கூடo. மலர்க்கணை மைந்தன் - மன்மதன.

கoக. இன்னிள வேனில் - இனிய இளவேனிறபருவம்; அஃதாவது சித்திரைவைகாசிமாதங்கள். இளங்காற்செல்வன் - தென்றற்காறறாகிய செலவன், "சிறகார செலவன் மறுகிற றாற்ற" எனபது சிலபபதிகாரம், அந்திமாலைச் சிறப்புசசெய்காதை, கஅ.

கoஉ. எந்திரகிணறு - நீரை நிறைக்க வேணடுபாயின் நிறைதலதுப் போகுமெண்ணிமாயற்ற போகுகுதறகுரிய கிணறு. இங்கெதறகுனறம - செயகுனறு.

கoச. காப்புநீர்கேணி - பாறைகளையுடைய நீரையுடைய கிணறு; இதனை அகழ்கேணியென்பர்.

கoசி. பளிங்கறை - பளிங்கறை. பள்ளி - இடம்.

கoசு. யாங்கனும் - கிணறும குறுங்காடும் அருவியும பாக்குமரமும பொயகையும சேணியும் இடங்களுமாக பள்ளியுமாகிய எவ்விடதது. திரிந்து - மன்னவனும் மைந்தனும் வேனிலும செல்வனுந் திரிந்து.

கoஉ - கoசு. இவ்வடிகளிற்போலவே, "அந்தகசேனியு மெந்திர கிணறுந், தணபூ வடாவுர சேலைத்தான் முருவியு, மெணசுனைக் குன்றெறு வேணடுபாடு, மிவ்வோயோகை யியற்றிய லிவ்வோயாட்டி ஆ, ஆ, நெடுநிரப் பூபி லிராக நோகதி" (பெருங்கதை, உ ஏசைச்சாண்டபரலி

## ககூ.—சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை. கஎஊ

மகத வினைஞரு மாட்டக் கம்மரு
மவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
ககo கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத
தவள நித்திலத் தாமந் தாழ்ந்த
கோணச சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்
ககடு பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்ட
திந்திர திருவன் சென்றினி தேறலும்
வாயிலுக வினைத்து மன்னவ னருளாற்
சேய்நிலத் தன்றியுஞ் செவ்வியின் வணங்கி

---

ப்புலம்பல்) எனவும், "பளிகறைப் பூமி யும்பர்தெறி களதது, மணிக்கயிற் ஹசன் மறலிய விடதது, கொய்மலர்க் காவும் பொய்கை கானியு, மந்தக் கேணியும் வந்துபெயர் கூவி" (பெருங்கதை, உஞ் சைக்காண்டம், யாழ்கை வைத்தது) எனவும் வருதல்காண்க.

கoஎ. மகதவினைஞர் - மகதநாட்டுப்பி றந்த இரதினவேலைக்காரர். மராட்டம்-மகாராஷ்டிரதேசம்.

கoஅ. அவந்தி - அவந்திதேசம். யவனம - யவனதேசம்.

கoஎ - கoஅ. மகததேசதது பிறந்த இரதினவேலைக்காரா முதலியோர தொழிலிற் பெயர்பெறறவரென்பதை, "யவனத தச்சரு மவநதிக கொலலரு, மகதத்துப் பிறந்த மணிவினைக காரரும பிறந்த பசும்பொன் வினைஞருரு, கோசலத தியன்ற வோவிய தொழிலரும், வதத நாட்டு வண்ணக் கம்மரும" என பதனாலுணர்க. இது, பெருங்கதை, உஞ் சைக்காண்டம, சயந்திபுகது.

கoஎ - கoக. மேற்கூறிய மகதவினை ஞர் முதலியோர் தண்ணிய தமிழ்நாட் டிற்பிறந்த வேலைக்காரருடனேகூடி.

ககஉ. நிததிலததாமம - முத்துமாலை.

ககங. கோணச்சந்தி - கோணமாகி யசந்தி; "சந்திக கோணமு மெந்திர வாணியும்" என்பது பெருங்கதை, உஞ்சை க்காண்டம், சயந்திபுகது. விதானம் - மேற்கட்டி.

ககச. தமனியம் - பொன். 'வகை வேறு வனப்பின்' என்றும் பாடம்.

ககடு. பைஞ்சேறு மெழுகா - ஆப்பி யால் மெழுகப்படாத; "பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்" பெரும்பா ணாற்றுப்படை, உசுஅ; சந்தனததால மெழுகியவென்றபடி; "மங்கல வெள்ளை வழிததுமுத் தீர்த்பின்" என்றவருசல காணக. இது சீவகசிந்தாமணி, கேம சரியாரிலம்பகம், சுசு. 'செமபொன் மண்டபதது' எனறும பாடம்.

ககசு. இந்திரதிருவன் - இந்திரச்செ லவமுடைய அரசன.

ஙக - ககசு. இந்திரதிருவன், தேவி யொடுபுக்குக கண்டு உளஞ்சிறந்தும் நோகதியும பாவையாரமென்றும நகையெ ய்தியும் எதியும அவர்தம்மோடுசென்று அயர்ந்து பொருந்துபுகினறு நகைசெய்து கூஉய்க் காட்டுபுகின்று யாங்களுங்கிரி ந்து வினையாடி மண்டபதது அவன் சென்று இனிது வறலுமென்க.

ககள. வாயிலுகு இசைதது - வாயில காவலர்க்குத தெரிவிதது. அருளால் - கட்டளையால்.

ககஅ. சேய்நிலத்தன்றியும் - தூரமான இடததேசாம் நின்றதல்லாமலும். செவ் வியின் - சமயததில்.

சுஅ - ககஅ. கோட்டங்காவலர் இசை த்துமென்றேகி இசைதது வணங்கியெ னக் கூட்டுக.

யெஞ்சா மண்ணைசெ யிகலுளங் தூரப்ப
வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையுந் தேரு மாவு
மறங்கெழு நெடுவாள் வயவரு மிடைந்த
தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத் தலைவந்தோர்
சிலைக்கய னெடுங்கொடி செருவேற் றடக்கை
யார்புனை தெரிய விளங்கோன் றன்னுற்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்ருடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
யொளியொடு வாழி யூழிதோ றூழி

---

கசக. எஞ்சா மண் நசைஇ - குறையாத மண்ணைவிரும்பி, இகல் உளம் தூரப்ப - மாறுபாடு உள்ளதைதைச்செலுத்த. எஞ்சார் மண்ணசை' என்றும பாடம்.

கஉ0. வஞ்சியின் இருந்து - கருவூரிலிருந்து, வஞ்சி சூடி - வஞ்சிப்பூமாலையைச்சூடி; "பூவா வஞ்சியிற் பூதத வஞ்சி, வாய்வாணெடுந்தகை மணிமுடிக் கணிந்து" என்ற இப்படியே சிலப்பதிகாரத்துங் கூறியிருத்தல் காண்க; கால்கோட்காதை, கிரு.

கஙக - கஉ0. இதனே, "எஞ்சா மண்ணசை வேந்தனே வேந்த, னஞ்சு தகச் சென் றடல்குரித் தன்றே" (தொல்காப்பியம், புறத்திணையியல், எ.) எனவும், "வாடா வஞ்சி சூலைமலைந்து, கூடார் மண கொனல்குறித்தன்று"; "வஞ்சி வணங்கார் வணக்கிய வண்டார்ப்பக், குஞ்சி மலைந்தானெங் கோ" (புறப்பொருள்வெண்பாமாலை, வஞ்சிப்படலம், க) எனவும் வருவனவற்றாலுணர்க.

கஉக. முறஞ்செவி யானை - முறம் போலும் காதுகளேயுடையயானை; "முறஞ்செவி வாரணம்" என்பது சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, உசஎ.

கஉஉ. மறம் - ஆண்மை. வயவர் - வீரர். 'மறவரு மிடைந்த' என்றும் பாடம்.

கஉக. தலைத்தார்ச்சேனையொடு - முதன்மையாயிய தாரிப்படையோடு. மலைத்து - மாறுபட்டு. தலைவந்தோரென்றது சேரபாண்டியர்களை; பின் "சிலைக்கய னெடுங்கொடி" என்ற வருதலால் இங்ஙனங்கொள்ளப்பட்டது.

கஉச. சிலைக்கய நெடுங்கொடி - (வானுடைய வில்கொடியையும், பாண்டியனுடைய கயற்கொடியையும்.

கஉடு. ஆர் - ஆத்தி; இது சோழர்களுக்கு உரிய அடையாளமாலை இளங்கோன் - தம்பி; இவன் யுவராஜபட்டம் இருந்தலின், 'இளங்கோன்' எனறு போலும்.

கஉஈ. காரியாறு - ஒருநதியின்பெயர். இதனே, 'காரியாற்றுநூலியெடுத்துள்ளி' (புறநானூறு, சல) எனவும், "கொல்களிமுன் னளிப்பார்க்குத் திருகுகாரிகை கரைபணிந்து" (Periyapuranam, திருநாவுக்கரசுநாயனார்புராணம், கூசுஉ) எனவும் வருவனவற்றாலுணர்க. பெருமபோர்புரிவோர் ஆற்றிடையே அது செய்தல் இயலபு; "உடன்றுமேல் லாரு வாரிய மன்னரைக, கம்புனற் காவைப்போன்ற வென்றேய்" (சிலப்பதிகாரம், நடுகற்காதை, கஉ0 - கஉக.) எனறு வருவல காண்க.

கஉஎ. மாவண்கிள்ளி - வினி, இஃது அரசன் பெயர்.

கஉசு - கஉஎ. வஞ்சோருடைய சோடிகளோ இளம்பேரூனுற் காரியாறுகுகொண்ட மாவண்கிள்ளியென்க.

கஉஅ. ஒளி - உறங்காதிற்கவும் உலங்காகயின்ற அரசரிடத்துள்ள கடமை டன்மை; "ஐயை நினமுனாய மெனி நிழாரி நின்ற, வொளியோ டொழுகப் படிம" என்பது திருக்குறள், கூசஅ, "உயிருகு மாயிறு மன்னவன் றண்ணெனி, கறவரு தெண்டிரை வையகங் காக்கு மாலை" என்பது சீவகசிந்தாமணி, நாமக

வாழி யெங்கோ மன்னவர் பெருந்தகை
கசூ0 கேளிது மன்னே கெடுகநின் பகைஞர்
யாணைத் தீநோய்க் கயர்ந்துமெய் வாடியிம்
மாநகர்த் திரியுமோர் வம்ப மாத
ரருஞ்சிறைக் கோட்டத் தகவயிற் புகுந்து
பெரும்பெயர் மன்ன நின்பெயர் வாழ்த்தி
கசூரு யையப பாத்திர மொன்றுகொண் டாங்கு
மொய்கொண் மாக்கண் முசிக்கவுண் சுரந்தன
ரூழிதோ ஆழி யுலகங் காத்து
வாழி யெங்கோ மன்னவ வென்றலும்
வருக வருக மடகொடி தானென்
கசரு0 றருள்புரி நெஞ்சமொ டரசன் கூறலின்
வாயி லானரின் மடந்தொடி தான்சென்
றுய்கழல் வேந்த னருள்வா ழியவெனத்
தாங்கருந் தன்மைத் தவத்தோய் நீயார்
யாங்கா கியதிவ் வேந்திய கடிஞையென்
கசரூ றரசன் கூறலு மாயிழை யுரைக்கும்
விரைத்தா வேந்தே நீநீடு வாழி
விஞ்சை மகள்யான் விழவணி மூதூர்
வஞ்சந் திரிந்தேன் வாழிய பெருந்தகை
வானம வய்கக மண்வளம் பெருகுக
கஞ0 நீதின் றூக கோமகற் கெங்கோ
தையற கடிஞை யமைய மருங்கோர்

---

ளிலமபகம், உகசு. 'ஒலியொவெழாஅ' என்றும பாடம்.

கஉசு. 'வாழி யெங்கோ வாழிய பெருந்தகை' என்றும் பாடம்.

கசுக. அயர்நது - கவலையுற்ற.

கசுஉ. வம்பமாதர் - காயசணடிகை; வம்பு - புதுமை.

கசுச. பெருமபெயர் - பெரியபுகழ்.

கசுசு. மொய் - நெருக்கம். முசிக்க - (வாங்குதலால்) மெலிய. 'மொசிக்கவுண் சுரந்தனள்' எனறும் பாடம்.

கசுஉ - கசுசு. மாதா புகுந்து வாழ்த்திக கொணடு ஊணசுரந்தனள்.

கசுஅ. என்றலும - என்று கோட்டங் காவலர் கூறலும.

கசுகு. மடகொடிவருக வருகவென்ற.

கசரக. வாயிலானரின் - வாயிலாளர்களால்.

கசரஉ. வாழியவென - வாழ்கவென்று மணிமேகலேசொல்ல. 'தாள்வா ழிய' என்றும் பாடம்,

மேலவருவது அரசன்கூற்று.

கசரச. நீ ஏந்திய இப்பாத்திரம் எங்கே கிடைத்தது.

மேலவருவன மணிமேகலைகூற்று.

கசரஎ. விஞ்சைமகளென்பதற்கு வித்தையையுடைய மகளென்றும், விசுதியாதரமகளென்றும் இருபொருள்கொள்க. பின்வருவனவும் இப்படியே ஏற்பப்பொருள் கொள்ளுதற்குரியவை.

கசரக. வானம் - மழை.

கஞ0. கோமகற்குத் தீதின்றூருக. 'கோமகன் றனக்கீங்கு' என்றும் பாடம்.

கஞ0 - கஞக. ஈது ஐயக்கடிஞை - இது பிச்சைப்பாத்திரம்.

தெய்வந் தந்தது திப்பிய மாயது
யாஞைத் தீதோ டரும்பசி கெடுத்த
தூணுடை மாக்கட் குயிர்மருந் தீதுவென
கடுடு யான்செயற் பாலதெ னிளங்கொடிக் கென்று
வேந்தன் கூற மெல்லிய லுரைக்குஞ்
சிறையோர் கோட்டஞ் சீதரு ணெஞ்சத்
தறவோர்க் காக்கு மதுவா ழியரென
வருஞ்சிறை விட்டாங் காயிழை யுரைத்த
ககூ0 பெருந்தவர் தம்மாற் பெருபொரு ளெய்தக்
கறையோ ரில்லாச் சிறையோ கோட்ட
மறவோர்க் காக்கின னாசாள் வேந்தென

**சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கியகாதை முற்றிற்று.**

---

கஙஉ. திப்பியமாயது-தெய்வலோகத் திருந்து உண்டாகியபொருளாவுள்ளது.

கஙச ஊண் உடைமாககட்கு-உடமபு மெலிந்தவர்களுக்கு. உயிர்மருந்து - உயி ரைக்கொடுக்குமருந்து. 'மானிட மாக்க ளுயிர்மருந்து' என்றும்பாடம். எனவ ன்று மணிமேகலைசொல்ல.

கஙட. 'கோட்டஞ் சிதைத்து' என்றும பாடம்.

கஙஅ. 'அறவோர்க் காக்குமதி' என்றும் பாடம்.

கஙட - கஙஅ. சிறைச்சாலையை இடி த்துத் தூய்மைசெய்து அவ்விடத்தை அருள்பொருந்திய மனத்தையுடைய மு னிவர்களுக்கு உரிய இடமாகச்செய்யும துவே நீ செயற்பாலதென்று மணிமே கலை சொல்ல.

கஙக. 'அருஞ்சிறை விடுத்த தாயிழை தானென' என்றும் பாடம்.

ககூ0. பெருமபொருள் - அறம்; ஞா னமுமாம்.

ககக. கறையோர் - கடமைகொடுப் போர். இல்லாக்கோட்டமென்க; என் றதனால், அரசன் கறைவீடுசெய்த செய் கோன் முறையையுடையனென்றவாரு யிற்று; இதனை, "சிறைப்படு கோட் டஞ் சிதின் யாவதும், கறைப்படு மாக் கன் கறைவீடு செய்மதி, னிடுபொரு ளா யினும் படுபொரு ளாயினு, முற்றவர்க் குறுதி பெற்றவர்க் காமென, யானெய செருத்தத் தணிமுர சிரீஇக், கோன்முறை யறைந்த கொற்ற வேக்தன்" (கட்டுரை காதை, கஉசு - ககூக.) எனவும், "சிறை யோர் கோட்டஞ் சிதின் யாங்கணும, கறைகெழு நல்லூர்க் கறைவீடு செய்ம மென" (நடுகற்காதை, உ0ச - உ0ச) எனவும் சிலப்பதிகாரத்து வருதல்வா ணக.

க - ககூ. தாரோன் வணங்கிக் கூற தெய்வங்கூறலும, உள்ளங்கலங்கி வருத் தி அறிவாமெனப் பெயர்வோன்றானே நீலயானைதொடர எஃகு உளங்கிழிப்ப அவன் பொதகி உயிர்ததுப் போயபின, மணிமேகலை நுனிததனரென்று கருதி வாங்கிக் கோட்டம்புகுந்து மாக்கள் ஊட்டலும், காவலர் வியந்து கோமக னுககு இசைத்துமென்றேகி, திருவன் சென்று வறலும, வாயிலுகசைதது வணங்கி, 'மன்னவ, வம்பமாசர் ஊண சுரந்தனன்' என்றலும், 'வருகவருக' என்று அரசன்கூறலின், மடகொடி வாயிலானறிற சென்று 'நின் அருள்வா ழிப' என, 'யாங்காயிது' என்றுஅரசன் கூறலும், ஆயிழையுணைக்கும்; அங்ஙன முரைப்பவள் 'உயிர்மருந்து இது' என, 'யான்செயற்பாலது வன்' எனறு வேந் தன்கூற, மெல்லியல் உணர்கும்; அது ணம் உரைப்பவன் 'நீ செயற்பாலது அறவோர்க்கு ஆக்குமது' என, வேந்து பெரும்பொருளெய்துதற்குக் கோட்டத் தை அறவோர்க்கு ஆக்கினனென வீனை முடிவுசெய்க.

இருபதாவது

# உதையகுமரனைக் காஞ்சனன் வாளாலெறிந்தகாதை.

இருபதாவது மணிமேகலை காயசண்டிகைவடிவெய்தக் காயசண்டிகை கணவனுகிய காஞ்சனனென்னும் விச்சாதரன்வந்து காயசண்டிகையா மெனக்கருதி அவள் பின்னிலைவிடா உதையகுமரனைப் புதை யிருட்கண் உலகவறவியில் வாளாலெறிந்துபோனபாட்டு.

அரச ஞணையி னுயிழை யருளா
னிரயக் கொடுஞ்சிறை நீகிய கோட்டங்
தீப்பிறப் புழுகதோர் செய்வினைப் பயத்தான்
யாப்புடை நற்பிறப் பெய்தினர் போலப
இ பொருள்புரி நெஞ்சிற புலவோன் கோயிலு
மருள்புரி நெஞ்சத் தறவோர் பள்ளியு
மட்டிற் சாலையு மருகதினர் சாலையுங்
கட்டுடைச செல்வக காப்புடைத் தாக
வாயிழை சென்றதூஉ மாங்கவ டனக்கு
கo வீயா விழுச்சீர் வேந்தன் பணிந்ததூஉஞ்

உ. நிரயக கொடுஞ்சிறை - நரகவேத னையைச்செய்யும் கொடியசிறை. கோட் டம் - அறை.

ங. நிப்பிறப்புழுந்தோர் - கொடிய பிற வியிற்பிறந்து வருந்தினோர். 'செய்த வப் பயத்தால்' எனறும் பாடம்.

ச. யாப்பு - பொருத்தம்.

இ. பொருளுபுரிநெஞ்சிற் புலவோன் - சதியும் நான்மையும் விரும்பிய நெஞ் சினையுடைய புததன்; பொருள் - சத்தி யம்.

ரு. அறவோர்-பௌத்தமுனிவர்; "அற வோர் பள்ளியு மறனெம் படையும்" என்று வருதல்காண்க; இது சிலப்ப திகாரம், இந்திரவிழவுரெடுத்த காதை, கஎக. "அருணெஞ்சத், தறவோர் பள்ளி" (உo - ம் காதை, கக - கஉ) என் பர் பின்னும்.

எ. அட்டிற்சாலை - மடைப்பள்ளி; "அடிசில் வைக லாயிரம்" என்பது சீவ கசிந்தாமணி, நாமகளிலம்பகம், சுஎ. அருந்தினர்சாலை - போசனசாலை.

அ. கட்டு - உறுதி. காப்பு உடைத் தாக - காவலியுடையதாக.

உ - அ. கோட்டம் காப்புடைத்தாக வென இயைக்க.

கூ. ஆயிழை - மணிமேகலை.

கo. வீயாவிழுச்சீர் - மாறுத லிறந்த கீர்த்தி. பணிததது - சொல்லியது; அது, "யான்செயற் பாலதெ னிளங கொடிகடு" (ருக - ம் காதை, சஞ்சி) என்றது.

கிறையோர் கோட்டஞ் சித்தரு ணெஞ்சத்
தறவோர் கோட்ட மாக்கிய வண்ணமுங்
கேட்டன ஞெகிழத் தோட்டலர் குழலியை
மதியோ ளெள்ளினு மன்னவன் காயினும்
கடு பொதியி னீங்கிய பொழுதிற் சென்று
பற்றினன் கொண்டென் பொற்றே ரேற்றிக்
கற்றறி விச்சையுங் கேட்டவ ளுரைக்கு
முதுக்குறை முதுமொழி கேட்குவ னென்றே
மதுக்கமழ் தாரோன் மனங்கொண் டெழுந்து
உ0 பலர்பசி களையப் பாவைதா ளெறுங்கிய
வுலக வறவியி னூடுசென் றேறலு
மழைசூழ் குடுமிப் பொதியிற்குன் றத்துக்
கழைவளர் கான்யாற்றுப் பழவினைப் பயத்தான்
மாதவன் மாதர்க் கிட்ட சாப
உடு மீரா ருண்டு வந்தது வாராள்
காயசண் டிகையெனக் கையற வெய்திக்
காஞ்சன னென்று மவடன் கணவ
னெங்கிய மூதூ ருள்வந் திழிந்து

---

கக-கஉ. அருணெஞ்சத் தறவோர்.— உ0 - ம் காதை, கூ.

கஙு. கேட்டனஞெகி - (உதயகுமரன்) கேட்டு.

கச. மதியோர் எள்ளினும் - அறிவுடையோர் இகழ்வாராயினும். காயினும் - கோபித்தாலும்.

கடு. பொதியில்=பொது இல் - அம்பலம்.

கசு. பற்றினன்கொண்டு - பிடித்துக் கொண்டு.

கசு - கசு. குழலியைப் பற்றினன் கொண்டென்க.

கஎ. விச்சை - வித்தை; உம்மை இறந்தது தழீஇயது. 'விஞ்சையும்' என்றும் பாடம்.

கஅ. முதுக்குறை முதுமொழி :— கஅ - ம் காதை, கசஎ; உ0 - ம் காதை, எச. 'முதுக்குறை மொழியுங் கேட்குவன்' என்றும் பாடம்.

கக. தாரோன் - உதயகுமரன்.

உ0. 'பாவைதா ளெறுங்கிய' என்றும் பாடம்.

உக. ஊடு - உள்ளே.

கூ - உசு. சென்றதூஉம் பனிதத்தூஉம் வண்ணமும்கேட்டு எள்ளினும் காயினும் சென்று குழலியைப்பற்றிக்கொண்டு எற்றிக் கேட்டுக் கேட்குவனென்று மனங்கொண்டு தாரோன் எழுந்து சென்று ஏறலு மென்க.

மேலே, காஞ்சனன் காயசண்டிகையைத் தேடிப்போகுதலும், உதயகுமரனைக் கொன்றதும் கூறப்படும்.

உஉ. பொதியிற்குன்றம - பொதியின் மலை.

உரு. கழை - மூங்கில். யாற்று - ஆற்றில்.

உச. மாதவன் - விருச்சிகன். மாதர்க்கு - காயசண்டிகைக்கு.

உடு. ஈராருண்டு - பன்னிரண்டுவருடம்.

உசு. கையறவு - செயலறுதல்.

உடு-உசு. காயசண்டிகை வாராள்.

உஅ. மூதூர் - காவிரிப்பூம்பட்டினம். இழிந்து - இறங்கி; என்றதனால், காஞ்சனன் ஆகாயகமனமுடையனென்பது பெறப்பட்டது; "விஞ்சையன போலி னன் விலங்குவிண் படர்ந்தென" என்

பூத சதுக்கமும் பூமலர்ச் சோலையு
கூ0 மாதவ ரிடங்களு மன்றமும் பொதியிலுந்
தேர்ந்தனன் றிரிவோ னேந்திள வனமுலை
மாந்தர் பசிநோய் மாற்றக் கண்டாங்
கின்றுநின் கையி னேந்திய பாத்திர
மொன்றே யாயினு முண்போர் பலரா
கூடு லானைத் தீநோ யரும்பசி கனைய
வான வாழ்க்கைய ரருளினா கொல்லெனப்
பழமைக கட்டுரை பலபா ராட்டவும்
விழையா வுள்ளமொ டவன்பா னீங்கி
யுதைய குமரன் றன்பாற் சென்று
சூ0 நரைமூ தாட்டி யொருத்தியைக் காட்டித்
'தண்ணறல் வண்ணந் திரிந்துவே றாகி
வெண்மணி லாகிய கூந்தல் காணுய்
பிறைநுதல் வண்ணங் காணு யோநீ
நரையையிற் றிரைதோற் றகையின் றுயது
சடு விறலவிற் புருவ மிவையுங் காணு
யிறவி னுணங்கல போன்றுவே றுயின
கழுநீர்க கண்காண் வழுநீர் சுமந்தன
குமிழ்மூக் கிவைகா ணுமிழ்சி யொழுக்குவ

---

இகாதையிற் பின்வருதல காண்க; கஉக - ம அடி. 'உள்வந்து புகுந்து' என்றும் பாடம்.

உக. பூசசதுககம் - தவவேடத்தில் மறைந்துநின்று அத்தவத்திற்கு இழுக் கானவற்றினகணெழுகும் பொய்வேடத் தார்முதலிய அறுவகையோரையும் பாச தாறகட்டி அடிதத்துணரும் பூதம் நிற்றற்கிடமாகிய சதுககம், சதுககம் - நாறசநதி; ''தவமறைநதொழுகுந் . . . பூதம் புடைதத்துணும பூத சது ககமும'' என்று சிலப்பதிகாரத்து வரு தலகாண்க; இநதிர விழவூரெடுதத காதை, கஉஅ - கசுஏ. பூ - பொலிவு. 'பூமரச் சோலையும்' என்றும் பாடம்.

கூ0. மன்றம - ஊருகருகுநடுவாய் எல லாருமிருகக மரததிடி. பொதியில் - அம்பலம; ''மன்றமும் பொதியிலும்'' (திருமுருகாற்றுப்படை, உஉசு.) என்பத்கு ஆசிரியர் நசசினாரககினியார் இங்ங னம் எழுதியிருததலகாண்க.

கூட. தேர்ந்து திரிவோன் - காஞ்ச னன்.

கூஉ. கணடு - (காஞ்சனன்) கண்டு. மேலவருவன காஞ்சனன் கூற்று.

கூடு நோய் - பஸ்மகவியாதி.

கூசு. வானவாழ்க்கையர் - தேவர்.

கூடு - கூசு. கனைய அருளினர்கொல

கூஎ. பலபாராட்ட - பலவற்றைககூ றிப் பாராட்ட.

கூஅ. அவன் - காஞ்சனன்.

சூ0. நரைமூதாட்டி- நரையையும் மூது மையையுமுடையவள்.

சூக. 'தணணறல் வண்ணம்' என் பதுமுதலியன மணிமேகலைகூற்று. அறல் - கருமணல்.

சூஉ. 'கூந்தலுங் காணுய்' என்றும் பாடம்

சூச. நரைமை - வெண்மை.

சூசு. இறவின் உணங்கல் - இருன்மீ னின்வற்றல்.

சூஅ. 'ஒழுகுவ' என்றும் பாடம்.

நிரைமுத் தினைய நகையுங் காணாய்
இ0 சுரைவித் தேய்ப்பப் பிறழ்ந்துவே ரியன
விலவிதழ்ச் செவ்வாய் காணு யோநீ
புலவுப் புண்போற் புலால்புறத் திடுவது
வள்ளோத் தாள்போல் வடிகா திவைகா
ணுள்ளுண் வாடிய வுணங்கல் போன்றன
இடு விரும்பூது சான்ற முலையுங் காணாய்
வெறும்பை போல வீழ்ந்துவே ரியன
தாழ்ந்தொகி தெங்கின் மடல்போற் றிரகி
வீழ்ந்தன வினவேய்த் தோளுங் காணாய்
நாமபொடு விடுதோ லுகிர்த்தொடர் கழல்று
கூ0 திரங்கிய விரல்க ளிவையுங் காணாய்
வாழைத் தண்டே போன்ற குறங்கிவை
காழைத் தண்டி னுணங்கல காணு
யாவக் கணைக்கால் காணு யோநீ
மேவிய நாமபோ டென்புபுறங் காட்டுவ
கூடு தளிரடி வண்ணங் காணு யோநீ
முளிமுதிர் தெங்கி னுகிர்கர யுணங்கல்
பூவினுஞ் சாந்தினும் புலான்மறைத் தியாத்துத்
தூசினு மணியினுந் தொல்லோர் வருத்த
வஞ்சந் தெரியாய மன்னவன் மகளெனை
எ0 விஞ்சை மகளாய் மெல்லிய னுரைத்தலுங்
தற்பா ராட்டுமென் சொற்பயன் மொழிவாய

---

சக. நகை - பல. 'பலலுங்காணாய்' என்றும் பாடம்.

இ0. சுரைப்பழத்தின்விதை பல்லுக்கு உவமையாதலே "சுரைவித்துப் போலுந் தம் பல்." என்பதனாலுமுணர்க ; இது நாலடியார், அவையறிதல், இ.

இஉ. புலவு - புலாலாற்றம்.

இரு. வள்ளோத்தாள் - வள்ளோத்தண்டு. வடிகாது - வடிந்ததாது. 'வடிந்ததாது' என்றும் பாடம்.

இச. உணங்கல் - வற்றல்.

இடு. இறம்பூது - அதிசயம் ; "இறம்பூது போலுமஃ தறிந்தரு ளீயென" என்பது சிலப்பதிகாரம், பதிகம், கு. 'முலையிவைகாணாய்' என்றும் பாடம்.

இஎ. திரங்கி - திரைந்து,

இஅ. 'தோளிவைகாணாய்' என்றும் பாடம்.

ருக. உகிர்த்தொடர் - நகருறினதோடர்ச்சி. 'உகிரொடெழன்று' எனறும் பாடம்.

கூ. குறங்கு - துடை. இணை. இரண்டு.

கூஉ. ஆவம் - அம்புக்கூடு.

கூசு. முளிமுதிர்தெங்கு - உலர்ந்த முதிர்ந்த தெனனை.

கூஎ. "பூவினவ நீங்கிற் புலாலுபுறத் திடுவது" என்றார் முன்னும் ; ஈண்டு காதை ககச. 'புலான்மறைத்து' என்றும் பாடம்.

கூக. தெரியாய் - தெரிந்துகொள்வாய்.

எ0. விஞ்சைமகளாய் - காயசண்டி கையாய், மெல்லியல் - மணிமேகலை.

## உ0.—உதையகுமரனை வாளாலெறிந்ததாதை. கழுக

பிறன்பின் செல்லும் பிறன்போ லேக்கு
மதுகமம ழலங்கன் மன்னவன் மகற்கு
முதுக்குறை முதுமொழி யெடுத்துக் காட்டிப்
எரு பவளக் கடிகையிற் றவளவா ணகையுங்
குவளைச் செங்கணுங் குறிப்பெடு வழாஅ
லீங்கிவன் கூதல னுதவி னேந்திழை
யீங்கொழிக் தனளென விகலெரி பொத்தி
மற்றவ ளிருந்த மன்றப் பொதியிலுட்
அ0 புறநடங் காவிற் புக்கொளித் தடங்கினன்
காஞ்சன னென்னுங் கதிர்வாள் விஞ்சைய
னுங்கவ ருணர்த்த வாசிலாங் குமரனுங்
கலாயா வேட்கை கையுதிர்க் கொள்ளான்
வலாசோ செங்கை மணிமே கலையே
அரு காயகல் டிகையாய்க சடிஞை யேந்தி
மாய விஞ்சையின் மனமயக் குறுநதன

மேல்வருவது காஞ்சனனைசெய்தி.

எஉ. பிறனென்றது உதயகுமரனே. இங்கே பிறன்பின் செல்லுமென்றது போல, "எண்ணிப்பத் தினகையிட்டா லிருநிரன் மகளு மாங்கே, வெணணெய் கருன நெரியுற நூறபொன் மெலிகநது பின் னீரகு மனறே." (சனகமாலையா ரிலம்பகம், சசு) என்று சீவகசிந்தாமணி யிலும் வந்திருத்லகாண்க.

எச. கஅ - ம் காதை, கசுஎ.

எடு. பவளகடிகை - பவளத்துண் டம்; எனறது உசட்டினை. 'கடிகையும்' என்பும் பாடம்.

எசு. குறிப்பு - இங்கிதம.

எடு - எசு. இவ்வடிகளின் பொரு ளோடு "ஒதநெளிர் பவளத துள்ளொளி நிறந்த, முருநுக்கூர்த தனன முள்ளெ யிற் றமுத, மருநடேத மாந்த வாருயிர் தளிர்ப்ப, விருநதின் மூர லருமபிய ஹூஉ, மாயி தழ்க் குவளை மலர்புரத தோட்டிக், காய்வேல் வென்ற கருங்கய னெடுங்க, ணறிவுபிறி தாகிய தாயிழை தனகெனைச், செவியகம் புகூஉச்சென்ற செவ்வியும், பளிங்கு புறதநெறிந்த பவ ளப் பாவையென், னுளநகொண் டொ ளிததா ஞயிர்க்காப் பிட்டி" (கஅ - ம் கா தை, எ0 - எசு.) என்று உதயகுமரன் கூறியவாக்கியம் ஒப்புநோக்கற்பாலது.

எள. இவனென்றது உதயகுமரனே. காதலன் - ஆசாநாயகன்.

எஅ ஈங்கு ஒழிந்தனள் - இவ்விடத் திலேயே தங்கிவிட்டாள்; என்னைதகலி ர்ந்தாளென்றமாம்; ஈங்கு - தன்மையை யுணர்த்தநதுநே "ஒழிக காம மீங்கென" (சீவகசிந்தாமணி, நாமகளிலமபகம், சசு) என்பதிற்காண்க. இகல் - மாறு பாடு.

எக. மன்றப்பொதியில் - மன்றமாகி யபொதியில; இருபெயரொட்டு; இப்ப டியே, "மனறப் பொதியிற், கந்துடை நெடுநிலைக் கடவுட் பாவை" (உக - ம் காதை, சு - எ.) எனறு பின்னும்வரும.

அ0. இங்கே காஞ்சனனுக்குப்பாம்பை உவமை கூறியதற்கேற்ப "வேக வெந்தீ நாகஙு கிடந்த, போருயர் புற்றினே புகு வான் போல" (கஅ - கக.) எனவும, "வெஞ்சின வரவ நஞ்செயி றரும்பத், தன்பெரு வெகுளியி னெழுந்துபை விரி த்தென" (கo - கo) எனவும் இககா தையிலேயே பின்புவருதல் காண்க.

அஉ. அவள் - மணிமேகலை.

அந. கையுதிர்க்கொள்ளான் - நீக்கான்.

மேல்வருவன உதயகுமரனுட்கோள்.

அசு. மாயவிஞ்சையின் - மாயவித்தை யினால்.

எம்பல மருங்கி லயர்ந்தறி வுளைத்தவிவ்
வம்பலன் றன்னெடிவ் வைகிரு ளொழியா
னிங்கிவள் செய்தி யிடையிருள் யாமத்து
வந்தறி குவனென மனங்கொண் டெழுந்து
வான்றேர்ப் பாகனீ மீன்றிகழ் கொடியனீக்
கருப்பு வில்லினை யருப்புக்கணை மைந்தனீ
யுயாவுக் துணையாக வயாவொடும் போகி
யூர்துஞ் சியாமக் தொருதனி யெழுந்து
வேழம் வேட்டெழும் வெம்புலி போலக்
கோயில் கழிந்து வாயி னீங்கி
யாயிழை யிருந்த வம்பல மணைந்து
வேக வெந்தீ நாகங் கிடந்த
போகுயர் புற்றனீ புகுவான் போல
வாகந் தோய்ந்த சாந்தல ருறுத்த
வூழடி யிட்டத னுள்ளகம் புகுதலு
மாங்குமுன் னிருந்த வலர்தார் விஞ்சைய
னீங்கிவன் வந்தன னிவள்பா லென்றே
வெஞ்சின வாவ நஞ்செயி றரும்பத்
தன்பெரு வெகுளியி னெழுந்துபை விரித்தென

---

அஎ. அயர்ந்து - வருந்தி; மறந்தென் றுமாம். அறிவுரைத்த - பழமைக்கட் டொை பலபாராட்டிய.

அஅ. வம்பலன் - அயலான். வைகி ருள் - வைகறைப்பொழுது. 'ஒளியான்' என்றும் பாடம்.

கூக. வான்றேர் - ஆகாயத்திலுலவும் தென்றற்காற்றுருவிய தேர். 'மான்றோ' என்றும் பாடம்.

கூஉ. கஅ - ம் காதை, கஅஇ, உஇ - ம் காதை, கூ; "மைதழா நெடுங்கணூர் மனந்துட் காமனு, தாதுலாங் கவர்கணை யரும்பு வைத்தவே" என்பது சூளா மணி, குமாரகாலச்சருக்கம், இ.

கூஎ. உயாவுத்துணையாக - விளவுந்து ணையாக; கொண்டென்ற ஒருசொல் வருவிக்க; தனியேயென்னுனென்றபடி. வயா - வேட்கைநோய்; இதுவயவென வும் வழங்கும்; "வயவுற மகளிர் வேட் குணி னல்லது" என்பது புறநானூறு, உ0. 'உயிர்த்துணை யாகவயர்வொடும்' என்றும், அயாவொடும்' என்றும் பாடம்.

கூச. போயவன் நடுஇரவில் மீட்டுமே எழுந்து வந்தான்.

கூஅ. நீ - விடம்.

கூக. போகுயாபுற்றனீ - மிகவுயர்ந்த புற்றின்துவாரம்.

கூஅ - கூக. உ0 - ம் காதை, அ0; கo0 - கoஇ.

கoo. சாந்து - சந்தனம். அலருறுதிர் பலரறியச்செய்ய.

கoக. ஊழ்அடியிட்டு - முறையே அடி வைத்து; "ஊழடி மூட்டம்" என்பதி குறிஞ்சிப்பாட்டு, உநுஅ. அதன் உள்ள கம் - அம்பலத்தினுள்ளிடம்.

கoங. 'புகுவதனன' என்றும் பாடம். என்ற - என்றகருதி.

கoச. நஞ்சு எயிறு அரும்ப - விடத் தைப் பல் வெளிப்படுத்த; விடதைதையு டைய பல்தோன்றவென்றுமாம்.

கoஇ. பை - படம்.

கoச-கoஇ. உ0-ம் காதை, அ0; கூஅ-கூங

விருந்தோ னெழுந்து பெரும்பின் சென்றவன்
சுரும்பறை மணித்தோ டுனிய வீசிக்
காயசண் டிகையைக் கைக்கொண் டந்தரம்
போகுவ லென்றே யவள்பாற் புகுதலு
கக0 நெடுநிலைக் கந்தி னிடவயின் விளங்கக்
கடவு ளெழுதிய பாவையாங் குரைக்கு
மணுக லணுகல் விஞ்சைக் காஞ்சன
மணிமே கலையவண் மறைந்தரு வெய்தினள்
காயசண் டிகைதன் கடும்பசி நீங்கி
ககஞ வானம் போவழி வந்தது கேளா
யந்தரஞ் செலவோ ரந்தரி யிருந்த
விந்த மாலவரை மீமிசைப் போகார்
போவா ரூளெனிற் பொங்கிய சினத்தள்
சாயையின் வாங்கித் தன்வயிற் றிடீஉம்
கஉ0 விந்தங் காக்குமு விந்தா கடிகை
யம்மலி மிசைப்போ யவள்வயிற் றடங்கினள்
கைமமை கொள்ளேல் காஞ்சன விதுகே

---

க0சு. இருந்தோன் - காஞ்சனன்.

க0எ. சுரும்பு அறை மணித்தோள் - மலையையொத்த அழகியதோள்; சுரும்பு - மலே. அறை - உவமவுருபு.

க0க. போகுவல - போவேன.

க0உ - க0க. விஞ்சையன் இருந்தோன், இவன் இவள்பால வந்தனனென்று எழுந்து சென்று வீசிப் போகுவ லென்று புகுதலுமெனக.

கக0. கந்து - தூண.

ககக. கடவுள் எழுதிய - மயனுற்பண்ணப்பட்ட; "மயனெனக கொப்பா வருத்த பாவையி, னீங்கேன்" என்று பின வருதலகாண்க; உக - ம காதை, கசுஉ - கசுரு.

மேலவருவன கந்திற்பாவை காஞ்சனனேநோகிக்கூறும் கூற்று.

ககஉ. அணுகல் அணுகல் - அணுகாதே அணுகாதே.

ககச - ககடு. தன்பசிநீங்கிக் காயசண்டிகை வானம்போவழி அவளுக்கு வந்த தன்பத்தைககேள்.

ககசு. அந்தரஞ்செலவோர் - தேவர். அந்தரி - தூகை.

ககஎ. விந்தமால்வரை - விந்தியமலே. 'மீமிசைச் செல்லார்' என்றும் பாடம்.

ககசு - ககஎ. விந்தியமலேயிலிருத்தல் பற்றித் துர்க்கைகக விந்தியவாவினி யென்றும் ஒரு பெயருண்டு.

ககஅ - ஙஉ0. விந்தமலேயைப் பாதுகாக்கும் விந்தாகடிகை யென்பவள், யாரேனும் மேற்போவாராயின் மிக்ககோபத்தையுடையளாய்ச் சாயையினுல். அவர்களே இழுத்துத் தன்வயிற்றிலிவள்; பிரஹ்மதேவரிடம் வரம்பெற்ற ஸிஹ்மிகை யென்னுமரக்கி இலங்கைக்குச் சென்ற ஹநுமானே நிழலாலிழுத்துத் தடைப்படுத்தியதாக ஸ்ரீமத் வால்மீக ராமாயணம், சுந்தரகாண்டத்தால் தெரிகின்றது.

கஉக. (காயசண்டிகை) விந்தாகடிகையின் வயிறறிலடங்கினள்.

கஉஉ. கைம்மை கொள்ளேல்-சிறுமையைக்கொள்ளாதே; கைம்மை - சிறுமை; சிறுமையென்றது ஆராயாது செய்தலே. இனி, உதையகுமரன் மணிமேகலேயின் பூர்வஜன்மநாயக னென்பதனைத் தனது ஞானத்தாலறிந்த கந்திற்பாவை அவன

ஞ்விணை வந்திங் குதைய குமரனை
யாருயி ருண்ட தாயினு மறியாய்
கஉடு வெவ்வினை செய்தாய் விஞ்சைக் காஞ்சன
வவ்வினை நின்னையு மகலா தாங்குறு
மென்றிவை தெய்வங் கூறலு மெழுந்து
கன்றிய நெஞ்சிற் கடுவினை யுருத்தெழ
விஞ்சையன் போயினன் விலங்குவிண் படர்ந்தென.

உதையகுமரனைக் காஞ்சனன் வாளாலெறிந்தகாதை முற்றிற்று.

---

இறந்தது பற்றி, மணிமேகலையை அமங்கலமாக நினைந்து அவளைக் கொள்ளாதே யென்று கூறிற்றென்றலுமாம்; கைம்மை - அமங்கலம்.

கஉங - கஉச. மடைதொழில செய்வோனை முற்பிறப்பில வெட்டிய பாவம் உதையகுமரனை வெட்டுண்ணச் செய்தது; ஆராயாது செய்தலின் நீ அற்யாய். இவ்வரலாற்றை, உக - ம் காதையாலும் (ஏஎ - ம் அடிமுதலியவை.) உங - ம் காதையாலும் (அஉ - ம் அடிமுதலியவை.) அறிந்து கொள்க.

கஉஅ. கடுவினை - உதையகுமரனைக் கொன்ற பாவம்.

கஉஇ. விலங்கு - குறுக்காக.

க-கஉங. கோட்டம காப்புண்டதாக, தாரோன் கேட்டுமனங்கொண்டெழுந்து சென்று எறலும், கணவன் கையறவெய்தி வந்து இழிந்து தேர்ந்து திரிபோதைக் கண்டு பலபாராட்டவும், நீ திரென்று காட்டி மெல்லியல உரைத்தலும், விஞ்சையன் புகழ் ஒளிர்ந்து ஆடுகினனை; அரசிளங்குமாரனும் கொளனை மனங்கொண்டு எழுந்து போகி எழுந்து கழிந்து நீங்கி அணைந்து புகுதலும், விஞ்சையன், எழுந்து சென்று வீழ்ந்து புரளலும், பாவை உரைக்கும்; அங்ஙனம் உரைப்பது கூறலும, விஞ்சையன எழுந்து படர்ந்து போயினனென வினைமுடிவு செய்க.

இருபத்தோன்றுவது

# கந்திற்பாவை வருவதுரைத்தகாதை.

[இருபத்தோன்றுவது மணிமேகலை உதயகுமரன்மடிந்ததுகண்டு உறுதுயரெய்த, நெடுநிலைக்கந்தின் நின்றபாவை வருவதுரைத்து அவள் மயக்கோழித்தபாட்டு.]

கடவு ளெழுதிய நெடுநிலைக் கந்தின்
குடவயி னமைத்த நெடுநிலை வாயின்
முதியாள் கோட்டத் தகவையிற் கிடந்த
மதுமலர்க் குழலி மயங்கின ளெழுந்து
விஞ்சையன் செய்தியும் வெண்வேல் வேந்தன்
மைந்தற் குற்றது மன்றப் பொதியிற்
கந்துடை நெடுநிலைக் கடவுட் பாவை
யங்கவற் குரைத்த வற்புதக் கிளவியுங்
கேட்டன ளெழுந்து கெடுகவிவ் வுருவெனத்
தோட்டலர்க் குழலி யுள்வரி நீங்கித்
திட்டி விடமுண நின்னுயிர் போநாட்
கட்டழ லீமத் தென்னுயிர் சுட்டே

---

க. கடவுள் எழுதிய - தெய்வகனியொத்த பாவையை (மயன்) பண்ணின; "கடவுட் பாவை" என்பர் பின்னும்; எ - ம் அடி.

உ. குடவயின்-மேற்றிசை யிடத்தே.

ங. முதியாள் கோட்டம் - சம்பாபதி கோயில.

க - ங. இவ்வடிகளால், சம்பாபதிகோயில், கந்திற்பாவைக்கு மேற்றிசையிலுள்ளதென்று தெரிகின்றது.

ச. குழலி - மணிமேகலை.

ஞ. விஞ்சையன்-காஞ்சனன். வெண் - வெற்றி; "வென்வே லாடவன்" என்பது புறப்பொருள்வெண்பாமாலை, வஞ்சிப் படலம், உச. 'வெள்வேல' என்றும பாடம்.

ரு. மைந்தற்கு-உதயகுமரனுக்கு. மன்றப்பொதியில் :—உ0 - ம் காதை, எக.

எ. கந்திற்பாவை.

அ. அங்கவற்கு - காஞ்சனனுக்கு. அற்புதம் - ஆச்சரியம்.

கூ. இவ்வுருக் கெடுகவென்று.

க0. குழலி-சுட்டு, உள்வரிநீங்கி-மறைந்தவேட மொழிந்து; என்றது காயசண்டிகையின் வடிவமொழிந்தென்றபடி.

இனி, உதயகுமரனைக்குறித்து மணிமேகலை புலம்புதல் கூறப்படும்.

கக. திட்டிவிடம் - கண்ணில் விடமுடையதோர் பாம்பு; இதனியலபை, இந்நூல க - ம் காதை, சக - ம் அடிக்குறிப்பிற்பார்க்க. இதனைப் பாம்புகளுக்கு அரசென்றுங் கூறுவர்.

கஉ. கட்டழல் - மிக்கநெருப்பு. ஈமம் - மயானம.

கக - கஉ. இவ்வடிகளாற் போனபிறப்பின்செய்தி கூறினள்.

னுவவன மருங்கி னின்பா லுள்ளந்
தவிர்வினே ஞதலிற் றகுமக டோன்றி
கரு மணிபல் லவத்திடை யென்னையாங் குய்த்தூட்
பிணிப்பறு மாதவன் பீடிகை காட்டி
யென்பிறப் புணர்ந்த வென்மூற் றேன்றி
யுன்பிறப் பெல்லா மொழிவின் றுரைத்தலிற்
பிறந்தோ நிறத்தலு மிறந்தோர் பிறத்தலு
20 மறந்தரு சால்பு மறந்தரு துன்பமும்
யானினக் குரைத்துநின் னிடர்வினே யொழிக்கக்
காயசண் டிகைவடி வானேன் காதல
வைவாள் விஞ்சையன் மயக்குறு வெகுளியின்
வெவ்வினே யுருப்ப வினிந்தனே யோவென
உரு விழுமக் கிளவியின் வெய்துயிர்த்துப் புலம்பி
யழுதன ளேங்கி யயாவுயிர்த் தெழுதலுஞ்
செலலல் செல்லல் சேயரி நெடுங்க
ணல்லியக் தாரோன் றன்பாற் செல்ல
னினக்கிவன் மகனுத் தோன்றிய தூஉ
கூ0 மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்
பண்டும பண்டும பல்பிறப் புளவாற்

---

கசு. தலைமகள் - மணிமேகலாதெய்வம்.

கங - கச. உவவனத்திற் கண்டபொழுது உதயகுமரன்பால் மணிமேகலைகுக காதலிருந்ததென்பதை, "புதுவோனை பினைறைப் போனதென் னெஞ்ச, மிதுதோ வன்னுய் காமத தியற்கை" (இ - ம காதை, அக - கூ0) என்றும், "அவன்பா லுள்ள, நீக்காத தன்மை நினக்குமுண் டாதலின்" (கo - ம் காதை; சச - சஅ) என்றும் முன்வந்திருத்தலா லுணர்க.

கஎ பிணிப்பறு மாதவன் - புத்தன்; பிணிப்பு - பற்று; "பிணிப்பறுத்தோர் தம் பெற்றி யெய்தவும்" என்பது நிலப் பதிகாரம், அடைக்கலக்காதை, கoo.

கச - கஅ. தலைமகள் தோன்றி உய்த்துக் காட்டித் தோன்றி உரைத்தலினென்க.

உ0. சால்பு - அமைதி; இன்பமுமாம். மறம் - பாவம்.

கக - உ0. உக - ம் காதை, ககங.

உசு. உருப்ப - சோபிக்க விளிந்தனேயோ - இறந்தாயோ.

உங - உசு. உருப்ப வெகுளியின் வினிந்தனேயோ.

உரு. விழுமக்கிளவி - துன்பத்தைப் புலப்படுத்தும் சொற்கள். வெய்துயிர்த்து - வெயிலைபோலெறிய.

உசு. அயாவுயிர்த்து - நெட்டுயிர்ப்புக் கொண்டு. எழுதலும் - மணிமேகலை எழுந்தலும.

மேல், மணிமேகலையைநோக்கிக கந்திற்பாவை கூறுதலைச் சொலலுவார்.

உஎ. செல்லல் செல்லல் - போகாதே போகாதே. சேயரிநெடுங்கண் - விளி.

உஅ. அல்லி - அகவிதழ். தாரோன் - உதையகுமரன்.

உக. மகனு - கணவனுக.

கூ0. மனக்கினியாற்கு - உதயகுமாலுக்கு. மகளாயதூஉம் - மனேவியானதும.

உங - கூ0. "நோதக வுண்டோ தீம் மக னுர்க்கு" எனக் கணவனை மகனு ரென்று சிலப்பதிகாரம், கொலைக்களக

## உக.—கந்திற்பாவை வருவதுணர்த்தகாதை. கஅள

கண்ட பிறவியே யல்ல காரிகை
தடுமாறு பிறவித் தாழ்தரு தோற்றம்
விடுமாறு முயல்வோய் விழுமங் கொள்ளே
கூடு லென்றிவை சொல்லி யிருந்தெய்வ மூசைத்தலும்
பொன்றிகழ் மேனிப் பூங்கொடி பொருந்திப்
பொய்யா நாவொடிப் பொதியிலிற் பொருந்திய
தெய்வ நீயோ திருவடி தொழுதேன்
விட்ட பிறப்பின் வெய்துயிர்த் தீங்கிவன்
சஅ நிட்டி விடமுணச் செல்லுயிர் போயது
நெஞ்சு நடுங்கி நெடுந்துயர் கூரயான்
விஞ்சையன் வாளி னிவன்வினிந் ததூஉ
மறிதலு மறிதியோ வறிந்தனே யாயிற்
பெறுவே னல்லகின் பேரரு ளீங்கென
சடு வையரி நெடுங்க ணுயிழை கேளொனத்
தெயவக் கௌவியிற் றெய்வங் கூறுங்
காயங் கரையெனும் பேரியாற் றடைகரை
மாயமின் மாதவன் வருபொரு ளுரைத்து

---

காதையில் [அடி - கள] கூறியிருத்தல் காண்க.

ரூஉ. நீ அறிந்துகொண்ட முற்பிறப்பில் மட்டுமல்ல ; காணுதல - அறிதல்.

உரு-ரூஉ. தோன்றியதூஉம் ஆயதூஉம் கண்டபிறவியேயல்ல , பண்டும பணமும பல்பிறப்புளவாலென வியைக்க.

ரூரு. தாழ்தரு - தங்குகின்ற ; அழுத்துகின்றவென்றுமாம்.

ரூஉ விழுமம் - துன்பம்.

ரூடு. சொலலியுரைத்தல் - கூறிவிளக்குதல் ; "அறைந்தனர் சாற்றும்" (சிலப் பதிகாரம், நாடுகாணகாதை, கரு) என் புழிப்போல.

ரூரு. பூங்கொடி - மணிமேகலை.

மேல், மணிமேகலையின் வினவும், கந்திற்பாவைகூறும் விடையும் கூறப்படும்.

ரூரு. விட்டபிறப்பு - போனபிறப்பு. இவன் - உதயகுமரன்.

ரூரு - சஅ. இவன் உயிர்போதற்குக் காரணமாகிய தீவினையையும்.

சக. யான் நெடுந்துயர் கூர; கூர-மிக.

சஉ. வினிக்ததூஉம் - இறந்ததற்குக் காரணமாகிய தீவினையையும்.

சரு. அறிதலுமறிதியோ - அறிதலும் செய்தியோ; இஃது, "உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்" (கலித் தொகை, பாலைக்கலி, உஉ) என்பது போல் நின்றது.

சச. நலல நினது பெருங்கருணையை இவ்விடத்துப் பெறுவேன் ; எனறது - நீகூறும் விடையைகேட்கும் விருப்ப முடையேனென்றவாறு என - என்ற மணிமேகலை சொலல. 'பேறுவே றில்லேன்' என்றும் பாடம்.

சடு. ஆயிழை - வினி.

சரு. தெய்வம் - கந்திற்பாவை.

சஎ. கரை - கரையில்.

சஅ. மாதவன் வருபொருள் - புத்தன் அவதரித்தலை. உலகத்திற் பாவங்கள் அதிகரித்தகாலந்தோறும அப்பாவங்களைப்போகி அருளறத்தை நிலை நிறுத்தி உயிர்களை நிருவாணமடைவித்தற்பொருட்டுப் புத்தாவதாரமுண்டென்பது பௌதநூறுமணிபு; "ஈரெண் ணூற்றோடிரெட் டாண்டிற், போறி வாளன் றோன்றும்" (கஉ - ம் காதை, எஉ - எஅ) எனவும், "மறவிரு விரிய மன்னுயி ரே

மருளுடை மாக்கண் மனமாசு கழூஉம்
பிரம தருமணிப் பேணினி ராகி
யடிசிற் சிறப்பியா மடிகளுக் காக்குதல்
விடியல் வேலை வேண்டின மென்றலு
மாலைநீங்க மனமகிழ் வெய்திக்
காலை தோன்ற வேலையின் வரூஉ
நெடைத்திறத் திழுக்கி நல்லடி தளர்ந்து
மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனைச்
சில நீங்காச் செய்தவத் தோர்க்கு

---

மூற, வறவெயில் விரித்தாங் களப்பி லிரு
த்திலோடு, புத்த ஞாயிறு தோன்றுங்
காறும்" (உக - ம் காதை, ககஎ - கசஎ)
எனவும், "புலவன் முழுதும் பொய்
யின் றுணர்ந்தோ, னுலகுயக் கோடற்
கொருவன் றுணர்ந, மந்நா ளவனறங்
கேட்டோ ரல்ல, தின்னுப் பிறவி யிழுக்
குநரில்லே" (உடு - ம் காதை, சடு-சஅ)
எனவும், "கரவரும் பெருமைக் கபிலே
யம் பதியி, னளப்பரும் பாரமிதை யள
வின்று நிறைந்து, தூளக்கமில் புத்த ஞா
யிறு தோன்றி" (உசு - ம் காதை, சச
சசு) எனவும் இந்நூலுள்ளே பலவிடத்
தும வருதல் காண்க.

சசு. மருள் உடை மாக்கள் - மயக்கத்
தையுடைய மனிதர் மனமாசு - காமவெ
குளி மயக்கங்கள்; "வெஃகல் வெகு
ளல் பொல்லாக காட்சியென், றுள்ளந்
தன்னி லுருப்பன மூன்றும்" (கூ - ம்
காதை, ஏ0 - எக) என்பதனுணர்க.
கழூஉம் - கழுவும்.

சுக. அடிகளுக்கு அடிசிற்சிறப்பு ஆக்
குதலென்க

சுஉ. விடியல் வேலை-நாள்வெயிற்கா
லம்; வைகறைப்பொழுதெனினும்பொ
ருந்தும்.

சுக - சுஉ. அடிகளுக்கு அடிசிற்சிற
ப்பு விடியல்வேலையாகுதல் வேண்டின
மென்ற மடையனை நோக்கிக் கூறுத
லும்.

சுசு. மாலைநீங்கி' என்றும் பாடம்.

சுஎ - சுஉ. அடைகாயில் உலாத்
திக் கழூஉம் பிரமதருமணிப்பேணி விடி
யல்வேலையில் ஆக்குதலை வேண்டினமெ
ன்றலுமென்க

சுசு. மாலை - இரவு.

சுச. காலை-நாள்வெயிற்காலை. வரூஉ -
வந்து.

சுடு. நடைத்திறத்து இழுக்கி - நடை
வகையால வழுக்கி.

சுசு. மடைக் கலம் - சோற்றுப்பாத்
திரம். மடையன் - சமையற்காரன்.

சுஎ. சீலம் - பஞ்சசீலம்; தசசீலமு
மாம்; கொல்லாமை = அஹிம்லை,
பொய்சொல்லாமை = ஸத்தியம, களவி
ன்மை = அஸ்தேயம், காமமின்மை =
பிரமசரியம், இரவாமை = அஸங்கிரகம
என்னும் இவை பஞ்சசீலம்; இவ்வைக்
தினோடு உயர்ந்த ஆசனதது இருத்தல
கிடதலின்மை, சந்தனம் மால முத
லியன தரியாமை, பொன்வெள்ளிக
ளோத் தீண்டாமை, பாடலாடல் விரும்
பாமை, உசயத்திற்கு முன்பு புசித்தல்
என்னும் ஐந்தும்சேரத் தசசீலமாம். பஞ்
சசீலததுள், இரவாமை நின்ற நிலைக்கள
த்தின்கண் கள்ளுண்ணுமையைச்சேர்த்
துக்கூறுவாரு மூளர். இது, நீலகேசி
விருத்தசமயதிவாகரத்திற் கண்டது.
கொல்லாமை, திருடாமை, வியபிசரியா
மை பொய்கூறுமை, கள்ளுண்ணுமை
யென்னுமிவை பஞ்சசீல மென்றும்,
இவை இல்லறத்தார் எல்லோர்க்கும் உரி
யனவென்றும், இவ்வைந்தினோடு இரவில
தாய்மையில்லாத உணவைப்புசியாமை,
சந்தனமுதலிய மணமுள்ள பொருள்களை
உபயோகியாமை, தனையிற் பாய்மேலே
படித்தல் என்னும் மூன்றுஞ்சேர அஷ்ட
ங்சீலமென்றும், இவை இல்லறத்தாரில்
நிஷ்டாபரர்களுக்கே யுரியனவென்றும,
இவ்வெட்டினோடு நாட்டியம் சானமுதி

வேலே பிழைத்த வெகுளி தோன்றத்
தோளுந் தலையுந் துணிந்துவே ருக
சுo வாளிற் றப்பிய வல்வினை யன்றே
விரா மலர்க் கூந்தன் மெல்லிய னின்னே
டிராகுலன் றன்னை யிட்டக லாதது
தலைவன் காக்குந் தன்பொருட் டாகிய
வுலை வெவ்வினை யென்போ றறியா
சுரு ரறஞ்செய் காத லன்பின னுயினு
மறஞ்செய் துளதெனின் வல்வினை யொழியா
தாங்கவ் வினைவந் தணுகுங் காலைத்
தீங்குறு முயிரே செய்வினை மருங்கின்
மீண்டுவரு பிறப்பின் மீளினு மீளு
எo மாங்கவ் வினைகா ணுயிழை கணவனை
யீங்கு வந்திவ் விடர்செய் தொழிந்த
தின்னுங் கேளா யிளங்கொடி நல்லாய்
மன்னவன் மகற்கு வருந்துதுய செய்தி
மாதவ ருணர்த்திய வாய்மொழி கேட்டுக்
எரு காவல னின்னையுங் காவல்செய் தாங்கிடு

---

வியவற்றை வீரும்பாமை, பொன் வெள்ளிகளைத் தொடாமையென்னும் இவ்விரண்டும்சேரத் தகசிலமென்றும், இப்பத்தும் துறவிகளுக்கேயுரியனவென்றும், இப்பத்தில் வியபிசரியாமை நின்றவிடத்திற் பிரமசரியம் கூறப்படுமென்றும் தரீமிகசூத்திர மென்னும் பௌத்ததூல் கூறும்.

நிஅ. பிழைத்தவெகுளி - தவறினமையால்வந்த கோபம்.

சுo. தப்பிய - வெட்டிய.

சுக. மெல்லியல் - விளி.

நிசு - சுஉ. இவ்வடிகளிற்போலவே, "மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனை, புடற்றுணி செய்தாங் குருதிசெழும் வல்வினை, நஞ்சுவிழி யரவி னல்லுயிர் வாங்கி, விஞ்சையன் வாளால் வீட்டிய தன்றே" என்ற இராசமாதேவியை நோக்கி மணிமேகலை கூறியதாகப் பின்புவருதல் காண்க; உசும் காதை, அஉ-அடி.

சுசு. தலைவன் - கடவுள். காக்கும் - காப்பான்; தடுப்பானென்றபடி.

சுசு - சுச. வினையைத் தலைவன் காக்குமென்போர் அறியாரென இயைக்க, செய்தவன் நகர்ந்தாலன்றி வினை தொலையாதென்றவாறு.

சுரு. 'அறஞ்செய் காதல னின்பினு முயினும்' என்றும் பாடம்.

சுசு. மறம் செய்துளதெனின்-பாவம் செய்யப்பட்டிருப்பின். வல்வினை-சுட்டு.

சுஅ. தீங்கு - துன்பம்.

எo. அவ்வினை - மடையனை வெட்டியபாவம். கணவனை - உதயகுமரனை.

எo - எக. அவ்வினை ஈங்குவந்து உன் கணவனை இவ்விடர் செய்தொழிந்ததென்க.

இனி, மணிமேகலைக்குப்பின் வருவனவற்றைக் கந்திற்பாவைதெய்வம் கூறுதல் கூறப்படும்.

எசு. மகற்கு - உதயகுமரன் இறந்ததற்காக.

எச. உணர்த்தியவன் ஒருவனுயினும் உலகக்கவந்தோர் பலராதலின் 'மாதவ ருணர்த்திய' என்றார். 'மாதவ ருரைத்த' என்றும் பாடம். வாய்-உண்மை.

எரு. காவல் செய்தாங்கிடும் - சிறையில வைப்பான். 'காதலி னின்னையும்' என்றும் பாடம்.

மிடுகிறை நீக்கி யிராசமா தேவி
கூட வைக்குங் கொட்பின ளாகி
மாதவி மாதவன் மலரடி வணங்கித்
தீது கூறவ டன்னெடுஞ் சேர்ந்து
அo மாதவ னுரைத்த வாய்மொழி கேட்டுக்
காதலி நின்னையுங் காவ னீக்குவ
ளரசாள் செல்வத் தாபுத் திரன்பாற்
புரையோர்ப் பேணிப் போகலும் போகுவை
போனு லவனெடும் பொருளுரை பொருந்தி
அரு மாநீர் வங்கத் தவனெடு மெழுந்து
மாயமில் செய்தி மணிபல் லவமெனுந்
தீவகத் தின்னுஞ் சேறலு முண்டாற
றீவ திலகையிற் றன்றிறங் கேட்டுச்
சாவக மன்னன் றன்னு டடைந்தபி
கூo னுங்கத் தீவமவிட் டருந்தவன் வடிவாய்ப்
பூங்கொடி வஞ்சி மாநகர் புகுவை
யாகுகந் நகரத தறிபொருள் விளவு

---

எசு. இராசமாதேவி - பட்டமகிஷி.

எள கொட்பு - கொள்கை.

எஅ. மாதவன் - அறவணவடிகள்.

எசு. தீது - மணிமேகலை சிறையில வைக்கப்பட்டிருத்தல்.

அo. வாய்மொழி-உண்மைமொழி.

கூ-அசு. இராசமாதேவி நீகஙகை கொட்பினளாகிக கேட்டே நின்னைக காவல் நீக்குவளென்க.

அஉ. ஆபுத்திரனென்றது புண்ணிய ராசனே; இது, "நாக புரமிது நன்னக ரான்வோன், பூமிசந் திரன்மகன் புண்ணிய ராசன்" (உச - ம் காதை, கஎo - கஎக) என்ற திருமாவகன் மணிமேகலைக்குக் கூறியவாற்றாலுணரப்படும்; புண்ணியராசனே ஆபுத்திரனென்றே இந்நூலிற் பெரும்பாலும் வழங்குவர்.

அசு. புரையோர் - சங்கத்தார்; புரை-உயர்ச்சி. போகலும் போகுவை - போகுதலுஞ்செய்வை. 'போக்கலும் போக்கும்' என்றும் 'போனினும் போகுவை' என்றும் பாடம்.

அச. பொருளுரை - தருமபதம்; என்றது, நாகபுரத்தின் பக்கத்ததாகிய சோலையிலுள்ள தருமசாவகனை ஆபுத்திரனுகருக்கூறும் உபதேசமொழிகளேகுறித்தநின்றது. பொருந்தி - கேட்டு. அமமொழிகளாவன, "அறனு மறனு மறிதரு நிதத்த, திறனுந துக்கமுஞ் செலவுயிர்ப் புகிலுஞ், சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்தியு, மாரிய னமைதியும்" (உஞ - ம் காதை, கூ - சு) என்பவைகள்.

அரு - அஎ. மணிமேகலை நாகபுரத்திலிருந்து ஆகாயவழியேபோந்து மணிபல்லவத்தையடைந்தானெனும், ஆபுத்திரன் கப்பல்வழியேயவந்து அத்தீவத்தை அடைந்தானென்றும் உஞ்-ம காதையிலுள்ள உசும் அடிமுதலியவற்றாலு வினங்குதலால், 'வங்கத் தவனெடு மெழுந்து' என்பதற்குப் பின்பு கப்பலேறி மணிபல்லவத்தை யடைவோனுகிய ஆபுத்திரனினின்று நீங்கி ஆகாயவழியேயெழுந்தெனப் பொருள்கொண்டு எழுநது சேறலுமுண்டெனவியைக்க. அவனெடு மென்பது, ஐந்தாவதன்மயக்கம்.

அசு. சாவகமன்னன் - சாவகநாட்டரசனுகிய ஆபுத்திரன்.

கo. தீவம் - மணிபல்லவம்.

கூ. யஞ்சிமாநகர் - கருநூர்; இது

மோங்கிய கேள்வி யுயர்ந்தோர் பலரா
லிகறவ னெங்கோ னெவ்வுயி ரினைத்து
கூடு முறைமையிற் படைத்த முதல்வனென் போர்களுந்
தன்னுரு வில்லோன் பிறவுருப் படைப்போ
னன்னே னிறைவ னுகுமென் போர்களுந்
தன்ப நோன்பித் தொடர்ப்பா டறுத்தாங்
கின்பவுல குசசி யிருத்துமென் போர்களும்
கஅ0 பூத விகாரப புணர்ப்பென் போர்களும்
பல்வேறு சமையப் படிற்றுரை யெல்லா
மல்லியங் கோதை கேட்குறு மந்நா
ளிறைவனு மில்லை யிறந்தோர் பிறவா
ரறனே டென்னையென் றறைந்தோன் றன்னைப்
கஅடு பிறவியு மறவியும பெற்றியி னுணர்ந்த
நறுமலர்க் கோதை யெள்ளினை நகுதி
யெள்ளினை போலு மிவ்வுரை கேட்டிங்
கொளளிய துரையென வன்பிறப் புணர்த்துவை
யாங்குநிற் கொணர்ந்த வருந்தெய்வ மயக்கக்
கஅ0 காம்பன தோளி களுமயக் குற்றனை
யென்றவ னுரைக்கு மிளங்கொடி நல்லா
யன்றென் றவன்முன் னயர்ந்தொழி வாயலை

---

சேரர்களுடைய இராசதானி; மலைநாட்டிலுள்ளது.

கூச - கூடு. படைத்த முதல்வனே இறைவன் எங்கோன் எனபோர்களுமென்க; இவர்கள பிரஹ்மவாதிகள்; "பேருலகெல்லாம் பிரம வாதியோர், தேவனிட்ட மூட்டை யென்றனன்" (உள - ம் காதை, கூசு-கூள) என்றுவருதல் காண்க. இவர்களே இரணிய கருப்பவாதிகளென்றுகூறுவர்.

கூசு. 'தானுருவிலலோன்' என்றும் பாடம்.

கூசு - கூள- என்போர்கள் அத்துவைதவாதிகள்.

கூஅ. நோன்பு - கன்மங்கள். இத் தொடர்ப்பாடு - இந்தப்பந்தங்கள். 'நோன்பிற் றொடர்ப்பாடு' எனறும் பாடம்.

கூஅ - கூக. நோன்பு அறுத்து இருத்துமென்போர்கள் - கர்மப்ரஹ்மவாதிகள்.

க00. புணர்ப்பென்போர்கள் - பூதவாதிகள.

கூச - க00. இவ்வடிகளிற்கூறிய சமய இலக்கணங்களுட் சிலவும், இன்னும் பலவும இந்நூல் உள - ம் காதையால் விளங்கவுணரப்படும்.

க0ச. அறனெடு என்னை - தருமத்தாலவரும் பயன்யாது. அறைந்தோன - உலோகாயதன்.

க0டு. அறவி - தருமத்தோடு பொருந்தியவழி.

க0கூ. எள்ளினை நகுதி - இகழ்ந்துசிரிப்பாய்.

க0ச - க0கூ. அறைந்தோன்றன்னை எள்ளினை நகுதி.

க0எ. இவ்வுரைகேட்டு எள்ளினைபோலும். 'என்னுரை கேட்டீங்கு' என்றும் பாடம்.

கக0. 'காம்பினைத்தோளி' என்றும் பாடம்.

ககஉ. அயர்ந்தொழிவாயலை - மறந்தொழியாய்.

தீவினை யுறுதலுஞ் செத்தோர் பிறத்தலும்
வாயே யென்று மயக்கொழி மடவாய்
ககடு வழுவறு மரனு மண்ணுங் கல்லு
மெழுதிய பாவையும் பேசா வென்ப
தறிதலு மறிதியோ வறியாய் கொல்லோ
வறியா யாயி னுங்கது கேளாய்
மூடித்துவரு சிறப்பின் மூதூர் யாங்கணுங்
கஉ0 கொடித்தேர் வீதியுந் தேவர் கோட்டமு
முதுமர விடங்களு முதுநீர்த் துறைகளும்
பொதியிலு மன்றமும் பொருந்துப நடிக
காப்புடை மாநகர்க் காவலுங் கண்ணி
யாப்புடைத் தாக வறிந்தோர் வலித்து
கஉடு மண்ணினுங் கல்லினு மாததினுஞ் சுவரினுங்
கண்ணிய தெய்வதங் காட்டுநர் வருக்க
வாங்கத் தெய்வத மவ்விட நீங்கா
வூன்கணி னூர்கட் குற்றதை யுரைக்கு
மென்றிறங் கேட்டியோ விளங்கொடி நல்லாய்
கஊ0 மன்பெருந் தெய்வ கணங்களி னுள்ளேன்
றுவதிக னென்பேன் றொன்றுமுதிர் கந்தின்
மயனெனக் கொப்பா வருத்த பாவையி
னீகுகேன் யானென் னிலையது கேளாய
மாந்த ரறிவது வானவ ரறியா

---

ககஊ. உக - ம் காதை, ககூ - உ0

ககச. வாயே - உண்மையே. 'மடக கொடி மடவாய்' என்றும் பாடம்.

ககடு. உக - ம் காதை, கஉடு.

ககஎ. அறிதலு மறிதியோ - அறிதலும் செய்தியோ.

கஉ0. தேவர் கோட்டம் - தேவர்கோயில்.

கஉக. முதுமரம் - பழையமரம்.

கஉகூ. காவலுங்கண்ணி - காவலையுங் கருதி.

கஉச. யாப்புடைத்தாக - உறுதியுடைத்தாக. வலித்து - எண்ணி.

கஉசு. தெய்வதங்காட்டுநர் - தெய்வத்தை நிறுத்துவோர்; உக - ம் காதை, கஉக. 'கண்ணிய வருவுங் காட்டுநர் வருத்த' என்றும் பாடம்.

கஉஅ. ஊன்கணினூர்கட்கு - மானிடர்களுக்கு.

மேல்வருவன, மணிமேகலைக்குத்தன் துவரலாறறைக் கந்திற்பாவை கூறுங் கூற்று.

கஉக. கேட்டி - கேட்பாய்.

கஊக. துவதிகனென்பேன் - துவதிகனென்று பெயர் கூறப்படுவேன். தொன்று முதிர் - கந்து - பழைமை முதிர்ந்தூண்.

கஊஉ. மயன் - தெய்வத்தச்சன்; அசுரத்தச்சனென்றுங்கூறுவர்; கந்திற்பாவை இருத்தற் கிடமாகிய சக்கரவாளக் கோட்டமும் மயனுற்செய்யப்பட்டதென்ற இந்நூல் சு - ம் காதை, ககஉ ம் அடிமுதலியவற்றுல் தெரிகின்றது. 'பாவையை' என்றும பாடம்.

ககூடு ரோவியச் சேனனென் னுறுதுணைத் தோழ
னுவதை யிங்ஙகர்க் காருரைத் தனரோ
வவனுடன் யான்சென் றுடிட மெல்லா
முடனுறைக் தார்போ லொழியா தெழுதிப்
பூவும் புகையும் பொருத்துபு புணர்ந்து
ககூ0 ஈாஈனி வருந்தவென் னலம்பா ராட்டலின்
மணிமே கலையான் வருபொரு ளெல்லாங்
துணிவுட னுரைத்தே னென்சொற் றேறெனத்
தேறே னல்லேன் றெய்வக் கிளவிக
ளீறு கடைபோக வெனக்கரு ளென்றலுங்
ககடு துவதிக னுரைக்குஞ் சொல்லலுஞ் சொல்லுவேன்
வருவது கேளாய் மடக்கொடி நல்லாய்
மன்னுயிர் நீங்க மழைவளங் காந்து
பொன்னெயிற் காஞ்சி நகர்கவி னழிய
வாங்கது கேட்டே யாருயிர் மருந்தா
கடு0 யீங்கிம் முதியா ளிடவயின் வைத்த
தெய்வப் பாத்திரஞ் செவ்விதின் வாங்கித்
தையனிற் பயந்தோர் தம்மொடு போகி
யறவணன் முனு மாங்குள ஞதலிற்
செறிதொடி காஞ்சி மாநகர் சேர்குவை
கடுடு யறவண னருளா லாய்தொடி யவ்வூர்ப்
பிறவண மொழிந்துநின் பெற்றியை யாகி
வறனெ டுலகின் மழைவளந் தருஉ

---

ககூடு. ஒவியச்சேனன்-சித்திரசேனன்.

ககூஎ. அவனுடன் - சித்திரசேனனுடன். ஆடிடம் - வீனையாமிடம்.

ககூக. 'தொணர்ந்து' என்றும் பாடம்.

கசஎ. தேறென - தெளிவாயென்று கந்திற்பாவைசொல்ல.

மேல்வருவன மணிமேகலைகூற்று.

கசஅ. தெய்வக்கினவிகளைத் தேறேனல்லேன்; தெளிவேனென்றபடி.

கசச. ஈறு கடைபோக-மரணம் இறுதியாக; "கடைபோகச் செல்வமுய்த் தார்" என்பது நாலடியார், மெய்ம்மை, க, என்றலும்-என்ற மணிமேகலை சொல்லலும்.

மேல்வருவன கந்திற்பாவைகூற்று.

கசடு. உரைக்கும் - முற்று. சொல்லலுஞ் சொல்லுவேன்-யான் சொல்லுதலையுஞ் செய்வேன்.

கசஎ. நீங்கக் கரந்து - நீங்கும்படி மறைந்து.

கடு0. முதியாள் - சம்பாபதி.

கடுஎ. நிற்பயந்தோர் - மாதவியும் சுதமதியும்.

கடுக. ஆங்கு - காஞ்சிநகரில்.

கடுச. செறிதொடி - விளி.

கடுக - கடுச. ஆங்குளஞதலிற் சேர்குவை.

கசக - கடுச. அதுகேட்டு வாங்கிக் காஞ்சிமாநகர் சேர்குவையென்க.

கடுசு. பிறவணமொழிந்து - ஆணுரு வொழிந்து; வேற்றுமதசப் பற்றொழிந்து தென்றுமாம்.

கடுஎ. வறன் ஒடு உலகில் - வறட்காலம் பரந்த உலகத்தில்.

மறனே டேந்தி யாருயி ரோம்புவை
யாய்தொடிக் கவ்வு ரறனெடு தோன்று

ககo மேது நிகழ்ச்சி யாவும் பலவுள
பிறவற முரைத்தோர் பெற்றிமை யெல்லா
மறவணன் றனக்குநீ யுரைத்த வந்நாட்
டவமுந் தருமமுஞ் சார்பிற் றோற்றமும்
பவமறு மார்க்கமும் பான்மையி னுரைத்து

ககூடு மறவிரு ளிரிய மன்னுயி ரேமுற
வறவெயில் விரித்தாங் களப்பி லிருத்தியொடு
புத்த ஞாயிறு தோன்றுங் காறுஞ்
செத்தும் பிறந்துஞ் செம்பொருள் காவா
வித்தல நீங்கே வினங்கொடி யானுங்

களo தாயரு நீயுந் தவறின் றுக
வாய்வ தாகநின் மனப்பாட் டறமென
வாங்கவ னுரைத்தலு மவன்மொழி பிழையாய்
பாங்கிய னல்லறம் பலவுஞ் செய்தபின்
கச்சிமூற் றத்து நின்னுயிர் கடைகொள

---

கஞஅ. அறனெடு - அமுதசுரபி.

கஞஎ-கஞஅ. கடும் காதை, ஙசு-ஞச.

ககக. பிறவறமுரைத்தோர் - வஞ்சி நகரத்தில் மற்றைச் சமயதருமங்களோச் சென்றேருடைய.

ககஙு சார்பு - துவாதசநிதானம்; அவை, "பேதைமை செய்கை யுணர்வே யருவுரு, வாயி னூறே தகர்வே வேட்கை, பற்றே பவமே தோற்றம் வினைப் பய, னீற்றென வருத்தவியல்பி ராறும்" என்பன; உச - ம் காதை, கoஞ - கoஅ; கo - ம் காதை, சஞ - சஅ. இவற்றின் இயல்பு, கo - ம் காதையில் விளங்கக் கூறப்படும்.

ககச. பவம் - கருமங்களின்கூட்டம்; "பவமென்ப் பவேது கரும வீட்டம்" (கo - ம் காதை, கக) என வருதல் காண்க. 'உரைத்தவன்' என்றும் பாடம்.

ககஞ. மறவிருள் - பாவமாகிய இருட்டு. எம் உற - நிருவாணமாகிய இன்பத்தை அடையும்படி; எம் - இன்பம்.

ககட. இருத்தி-அணிமாதியோக சித்திசெய்ட்டும்; "எத்திறத் தார்க்கு மிருத்தியுஞ் செய்குவம்" என்று பின்னும் வருதல்காண்க; உசு - ம் காதை, கக. சித்தி எண்பதென்பதென்று கூறலுமுண்டு; "எனபத்தொன் பதுநிறையிலபினு ளுளவென்று, பண்பொருந்த நான பொருளோப் பாசறியப் பகர்ந்தனேயே" என்று வருதல்காண்க; இது, வீரசோழியம், யாப்புப்படலம், கக - ம் கலித்துறை யுதாரணத்திற் கண்டது.

ககஎ. தோன்றுகாறும் - தோன்றுமளவும்.

ககஅ. செம்பொருள் - தருமம்; மெய்யுணர்ந்தார் நெஞ்சிறகெலலாஞ் செம்மையுடைத்தாய்த் தோன்றலின், இப்பெயர் பெற்றது; "செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" என்பது திருக்குறள், கக. காஎ - காத்து.

ககக. இத்தலம்-இக்காஞ்சிநகரத்தில். 'இத்திற நீங்கேன்' என்றும பாடம்.

கஙக. அறம் வாய்வதாக.

கஙஎ. அவன் - அறவணன். பிழையாய் - தப்பாயாய்.

ககச - கஙஎ. அவன் உரைத்து நின் மனப்பாட்டறம் வாய்வதாகவென வினைத்தலும்.

கஙக. நலலறம் - காருண்யம்.

கஙச. கச்சிமூற்றம் - காஞ்சிநகரிடம். கடை - முடிவு.

களரு வுத்தர மகதத் துறுபிறப் பெல்லா
மாண்பிறப் பாகி யருளற மொழியாப்
மாண்பொடு தோன்றி மயக்கங் கலிந்து
பிறர்க்கற மருளும பெரியோன் றனக்குத்
தலைச்சா வகனுய்ச் சார்பறுத் துய்தி
கஅ0 யின்னுங் கேட்டியோ நன்னுதன் மடந்தை
யூங்க ணேங்கிய வுரவோன் றன்னீ
வாங்குதிரை யெடுத்த மணிமே கலாதெய்வஞ்
சாது சக்கரற் காரமு தீத்தோ
யீது நின்பிறப் பென்பது தெளிர்தே
கஅரு யுவவன மருங்கி னின்பாற் றேன்றி
மணிபல லவத்திடைக் கொணர்ந்தது கேளெனத்
துவதிக னுரைத்தலுந் துயர்க்கட னீங்கி
யவதி யறிந்த வணியிழை கல்லாள்
வலியொழி மஞ்ஞையின் மனமயக் கொழிதலு
கஙo முலகுதுயி லெழுப்பினன் மலர்கதி ரோனென.

கந்திற்பாவை வருவதுரைத்தகாதை முற்றிற்று.

---

களரு. உதரமகதம் - வடமகதநாடு.

களசு. ஒழியாய் - நீங்காயாய்.

களஅ. பெரியோன் - புததன்.

களகூ. தலைச்சாவகனுய் - முதன்மாணாக்கனுய், சாவகன்=ஸ்ராவகன் - கேட்பவன்; "தரும சாவகன றன்னடி வணங்கி" என்பர் பின்னும்; உரு - ம் காதை, உ. சார்பு - பன்னிருநிதானம். உய்தி - பிழைப்பாய்.

களக. உன்குலத்தில் முன்பு அறத்தால் உயர்ச்சியுற்றிருந்த அறிவுடையோனிய ஒருவனே; ஊங்கண் - முன்பு; "தூங்கெயி லெறிந்தநின் னூங்கணேர் நினைப்பின்" என்பது புறநானூறு, கூக "போந்தைக் கண்ணிநின் னூங்கணேர் மருங்கிற், கடற்கடம் பெறிந்த சாவலன்" என்பது சிலப்பதிகாரம், நடுகற் காதை, கசூ - கசுடு.

களஉ. நினை எடுத்த - அழுந்தி இற வாவண்ணம் கடலினின்றும எடுத்த. எடுத்தகதையை, சிலப்பதிகாரத், அடைக்கலக்காதை, உஅ - ம் அடி முதலியவற்றிற் காண்க.

களசு. சாதுசக்கரற்கு - சாது சக்கர னென்னுமுனிவனுகசு.

களச. ஈது - இத்தன்மையையுடையது.

களஅ. அவதி - எல்லை.

களo. மலர்கதிரோன் - வினைத்தொகை.

க - களo. குழலி எழுந்து கேட்டு எழுந்து நீங்கி வெய்துயிர்த்துப் புலம்பி அழுதேங்கி அயாவுயிர்த்தெழுதலும், இருந்தெய்வம் உரைத்தலும், பூங்கொடி பொருந்தி 'நின்பேருன் பெறுவேன்' என, தெய்வங்கூறும்; அங்ஙனங்கூறுந் தெய்வம் 'என்சொற்றேறு' எனு, மணிமேகலை 'எனக்கு அருள்' என்றலும் துவதிகனுனாக்கும்; அங்ஙனமுனாக்குந் துவதிகன் உரைத்தலும், நல்லாள்நீங்கி மயகொழிதலும், கதிரோன் துயிலெழுப்பினனென வினைமுடிவுசெய்க.

இருபத்திரண்டாவது

# சிறைசெய்காதை.

[இருபத்திரண்டாவது மணிமேகலைபோருட்டால் மடிந்தான் உதயகுமரனென்பது மாதவர்வாய்க்கேட்ட மன்னவன் மணிமேகலையை மந்திரியாகிய சோழிகவேளதியாற் காவல்கொண்டபாட்டு.]

கடவுண் மண்டிலங் காரிருள் சீப்ப
நெடுநிலைக் கந்தி னின்ற பாவையொடு
முதியோள் கோட்டம் வழிபடல் புரிந்தோர்
நுதைய குமரற் குற்றதை யுரைப்பச்
இ சாதுயர் கேட்டுச் சக்கர வாளத்து
மாதவ செல்லா மணிமே கலைதனை
யிளங்கொடி யறிவது முண்டோ விதுவெனத்
துளங்கா தாங்கவ ளுற்றதை யுரைத்தலு
மாங்கவ டன்னை யாருயிர் நீங்கிய
கஅ வேந்தன் சிறுவனெடு வேறிடத் தொளித்து
மாபெருங் கோயில் வாயிலுக் கிசைத்துக
கோயின் மன்னனைக் குறுகினர் சென்றீங்
குயர்ந்தோங் குச்சி யுவாமதி போல
நிவந்தோங்கு வெண்குடை மண்ணக நிழற்செய
கடு வேலுங் கோலு மருட்கண் விழிக்க
தீதின் றருள்கரீ யேக்கிய திகிரி

---

க. கடவுண்மண்டிலம் - சூரியன்.

ஈ. முதியான் - சம்பாபதி.

க - ச. பாவையொடு கோட்டத்தை வழிபடல்புரிந்தோர் உற்றதை முனிவர்க்கு உரைப்ப.

இ. சாதுயர் - உதயகுமரனிறந்ததன் பம்.

ஈ. மணிமேகலையைநோக்கி.

எ. இளங்கொடியென்பது முன்னிலைக்கண்வந்தது. இது - உதயகுமரனிறந்தது. என - என்று முனிவர்கேட்ப.

இ - எ. மாதவரெல்லாம் மணிமேகலையைநோக்கி இதனை நீ அறிவது முன்டோவென.

அ. துளங்காது - நடுங்காது.

இனி, சக்கரவாளக் கோட்டத்துள்ள முனிவர் அரசனையடைந்து உதயகுமரன் இறந்தது மொழிதல கூறப்படும்.

கக. வாயில் - வாயில்காப்போர்.

கஈ. உவாமதி - பூர்ணசந்திரன்.

கச. செய - வியங்கோள்.

கஈ. திகிரி தீதின்று உருள்க; தீது இடையூறு.

நினக்கென வரைந்த வாண்டுகொல்லா
மனக்கினி தாக வாழிய வேந்தே
யின்றே யல்ல விப்பதி மருங்கிற்
கன்றிய காமக் கள்ளாட் டயர்ந்து
பத்தினிப் பெண்டிர் பாற்சென் றணுகியு
நற்றவப பெண்டிர் பின்னுளம் போக்கியுந்
தீவினை யுருப்ப வுயிரீறு செய்தோர்
பாரான் வேந்தே பண்டும் பலரான்
மன்மருங் கறுத்த மழுவா ணெடியோன்
றன்முன் ரேன்ற றகாதொழி நீயெனக்
கன்னி யேவலிற் காந்த மன்னவ
னிங்ஙகர் காப்போர் யாரென நினீஇ
நாவலந் தண்பொழி னண்ணர் நடுக்குறக்
காவற் கணிகை தனக்காங் காதல
னிகழ்ந்தோர் காயினு மெஞ்சுத லில்லோன்
ககந்த னெனக் காதலிற் கூஉ

---

கஎ. வணாந்த - எல்லையிட்ட.

கஅ. இனிது - பன்மையொருமை மயக்கம்.

காமமிகுதியாற் கொலையுண்ட உதய குமரன்பொருட்டு வருந்தாவண்ணம், முற்காலத்து அங்ஙகரத்திற் காமமிகுதி யால் நிங்ஙழைத்தக் கொலையுண்ட இரு வருடைய சரித்திரங்களே அம்முனிவர்க ளுள் ஒருவர் அரசனுக்குக் கூறுதல் மேற்கூறப்படும்.

உ0. கன்றிய - அடிப்பட்ட; "காமமே கன்றி நின்ற" என்பது சீவகசிந்தா மணி, நாமகளிலம்பகம், கஅக. அயர் ந்து-செய்து. காமக்களாட்டு:—கஅ-ம் காதை, அஅ; உடு - காதை, கூக.

உஉ. நற்றவப் பெண்டிர் - நல்ல தவஞ்செய்யுமகளிர்; நற்றவம் - வீடுபே றுதற்குச் செய்யுந் தவமுமாம்; "நற்ற வஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய் வாக்கு மஃதிடம்" என்பது சீவகசிந்தா மணி, நாமகளிலம்பகம், சஅ.

உச. பண்டும், உம்மை-எதிரதுதழீஇ ய எச்சப்பொருளது.

உடு. மன்மருங்கறுத்த - இராசகுல த்தை இல்லையாக்கின; "சூர்மருங் கறு த்த மொய்ம்பின் மதவலி" என்பது திருமுருகாற்றுப்படை, உஎடு. மழுவா ணெடியோன் - பரசுராமன்; மழுவாள் - மழுவாகிய வாள்.

உஎ. கன்னி - துர்க்கை; சம்பாபதியு மாம். காந்தமன்னவன் - காந்தனென் னும் பெயராயுடைய அரசன்.

உஅ இங்ஙகரென்றது, காவிரிப்பூம் பட்டினத்தை. நினீஇ - நினைந்து.

உக. நாவலந்தண்பொழில் - சம்புத் தீவில். நண்ணர் - பகைவர்.

ஊ. காவற்கணிகை - கனகதாடுங்கூ த்தி; இராக்கிடைப் பெண்டென்பர் சில ப்பதிகார அரும்பதவுரையாசிரியர்; இக் கிரவிழவுரெடுத்தகாதை, ஙo - ம் அடிக் குறிப்பைப் பார்க்க. இவள் அரசன் காமகளிழத்திபோலும். காதலன்-மகன்.

ஊக. எஞ்சுதல் - குறைதல். 'இகந் தோர்க் கீயினும்' என்றும் பாடம்.

உக - ஊக. நண்ணர் இகழ்ந்தோராய் நடுக்குறக்காயினும் எஞ்சுதலில்லோன்.

ஊஉ. ககந்தனுமென - ககந்தன் காத்த ற்குரியனுவானென்று நினைந்து. கூஉய்- அழைத்து.

ஊ - ஊஉ. காதலனும் எஞ்சுதலில்லோ னுமாகிய ககந்தனென்க.

மேல்வருவது, ககந்தனோக்கி அர சன் கூறுங்கூறு.

யரசா ளுரிமை நின்பா லின்மையிற்
பரசு ராமனின் பால்வக் தணுகா
கூறு ணமர முனிவ னகத்தியன் றனது
துயர்நீக்கு கிளவியின் யான்றேன் றளவுங்
கதந்தன் காத்தல் காகந்தி யென்றே
யியைந்த நாம மிப்பதிக் கிட்டீங்
குள்ளரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாட்
சம டெள்ளுநீர்க் காவிரி யாடினள் வருஉம்
பார்ப்பணி மருதியைப் பாங்கோ ரின்மையின்
யாப்பறை யென்றே யெண்ணின ளுகிக்
காவிரி வாயிலிற் கதந்தன் சிறுவ
னீவா வென்ன நேரிழை கலங்கி
சுறு மண்டிணி ஞாலத்து மழைவளக் தருஉம
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்
புக்கேன் பிறனுளம் புரிநூன் மார்பன்
முத்தீப் பேணு முறையெனக் கில்லென
மாதுய செவ்வமொடு மீனியகம் புகாஅள்
நூ0 பூத சதுககம் புக்கணண் மயங்கிக்
கொண்டோற் பிழைத்த குற்றக் தாணிலேன்

---

கூசு. கதந்தன் கணிகைமகனதலின், அவன்பால் அரசவுரிமை இலதாயிற்று.

கூறு அமரமுனிவனுகிய அகத்தியன்.

கூறு - கூச. இம்மன்னவன் அகத்திய முனிவர்பாற் பத்திமையுடையனுதலை, "கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட, வமர முனிவ னகத்தியன் றனது, கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை" (பதிகம், கo-கூ) என்பதனுலுணர்க.

கூ. கதந்தன் - அண்மைவிளி. காத்தல் - வியங்கோள்; 'என்ற கூறி' என வருவிக்க. 'கதந்தன் காத்தலின்' என்றும் பாடம்.

கூக. உள்வரிக்கொண்டு - வேற்றுருவக்கொண்டு. கான் - காவில்.

இனிக் கூறப்படுவது, பத்தினிப்பெண்டிர்பாற்சென்றணுகித் தீங்குற்றேன் கதை.

சஉ. யாப்பறை - உறுதியற்றவன். 'என்னின ளுகி' என்றும் பாடம்.

சக. காவிரிவாயிலில் - காவிரிக்கரையின்கிருமுகத் துறைகழிகின்றவாயிலில்; "காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து" என்பது சிலப்பதிகாரம், நாடுகாண் காதை, கூ.

சச. என்ன - என்றகூற. நேரிழை - மருதி.

சஎ. பிறனுளம்புக்கேனென்க. இக் கருத்தைத்தழுவி, சிலப்பதிகாரம், மதுரைகாண்டத்துப் பாடலிலுள்ள "நீதிநூல் வடமீன்" என்பதில் 'நீது' என்பதற்கு 'பிறர்நெஞ்சு புகுதல்' என்ற அடியார்க்கு நல்லார் பொருள்செய்திருத்தல் காண்க. புரிநூன்மார்பனென்றது தன் கணவனுகிய அந்தணனை.

சக. மாதுயரெவ்வம் - மிக்கதுன்பம். புகாஅன் - புகாளாய்.

நூ0. பூதசதுக்கம் - தவமறைந்தொழுகுந் தன்மையிலானார்முதலிய அறவகையினைப் பாசத்தாற்கட்டிப் புடைத்துண்ணும் பூதங்கிற்கியுடைய சதுக்கம்; சதுக்கம் - நாற்சந்தி. பூதசதுக்கத்தின் வரலாற்றைச் சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்தகாதை, கூஉ - ம அடிமுதலியவற்றாலுணர்க.

நூ. கொண்டோன் - கணவன்.

கண்டோர் நெஞ்சிற் கரப்பெளி தாயினேன்
வான்றரு கற்பின் மனையறம் பட்டேன்
யான்செய் குற்றம் யானறி கில்லேன்
நுஙு பொய்யினே கொல்லோ பூத சதுக்கத்துத்
தெய்வ நீயெனச் சேயிழை யரற்றலு
மாபெரும் பூதக் தோன்றி மடக்கொடி
நீகே ளென்றே நேரிழைக் குரைக்குங்
தெய்வக் தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள்
சுஂ பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறுய்
பிசியு நொடியும் பிறர்வாய்க் கேட்டு
விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
கடவுட் பேணல கடவியை யாகலின்
சுஙு மடவர லேவ மழையும் பெய்யாது
நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறர்நெஞ்சு சுடூஉம் பெற்றியு மில்லை
யாங்கவை யொழிகுவை யாயி ஞயிழை
யோங்கிரு வானத்து மழையுநின் மொழியது
ஏ0 பெட்டாங் கொழுகும் பெண்டிரைப் போலக்
கட்டா துண்ணியென் கடுக்தொழிற் பாச

---

நுஉ. கரப்பு - ஒளித்தல்.

நுசு. வான்றருகற்பு - மழையைதத ரும் கற்பு. மனையறம பட்டேன் - இல் லறத்திற்குத் துணையாக நிற்றலே ஒழிந் தேன்.

நுச. யானறிகில்லேன்-யானறியேன்.

நுடு. பொய்யினேகொல்லோ - பொய் ம்மையை யுடையாயோ; 'போயினே கொல்லோ' என்றும் பாடம்.

நுடு - நுசு. நீ இல்லையாயினேயோ.

நுஎ. பூதம் - சதுக்கப்பூதம். 'மாபெ ருந் தெய்வம்' என்றும் பாடம்.

நுக - சுo. திருக்குறள், நுடு. 'தொழு மவள்' என்றும் பாடம்.

சுக. பொய்யில்புலவன் - திருவள்ளு வர். பொருளுரை - பொருளையுடைய சொல்; தருமவார்த்தையுமாம். தேறுய்- தெளியாயாய்.

சுஉ. பிசி - பொய்; என்றது பொரு ளொடு புணராப் பொய்ம்மொழிகளை; நொடி - பொருளொடு புணர்ந்த நகை மொழி. 'கேட்டும்' என்றும் பாடம்.

சுசு. விசிபிணிமுழவின் விழா - கட் டப்பட்ட கட்டினையுடைய முழவினை யுடைய விழா. 'விரும்பியும்' என்றும் பாடம்.

சுச. கடவியையாகலின் - கடப்பா டாக வுடையையாகலின்.

சுடு. மடவரல் - மூன்னிலைப்பெயர்.

சுஎ. நிறை - நிறுத்தல். பெண்டிர் தம்மேபோல - பெண்டிரைப்போல.

சுஏ. பெற்றியுமில்லை - தன்மையுமி ல்லை.

சுஅ. அவை - பிசியும் நொடியும் கே ட்டலும், விழாக்கோள்விரும்பலும், கட வுட்பேணலும்.

ஏ0. பெட்டாங்கு - விரும்பியவண் ணம். பெண்டிரைப்போல - பெண்டி ரைக்கட்டுவதுபோல.

மன்முறை யெழுநாள் வைத்தவன் வழுஉம்
பின்முறை யல்ல தென்முறை யில்லை
யீங்கெழு நாளி விளங்கொடி நின்பால்
எடு வாங்கா நெஞ்சின் மயரியை வாளாற்
கங்கன் கேட்டுக் கடிதலு முண்டென
விகந்த பூத மெடுத்துரை செய்ததப்
பூத முரைத்த நாளா லங்கவன்
றூதை வாளாற் றடியவும் பட்டன
அ0 னின்னுங் கேளா யிருங்கட லுடுத்த
மண்ணுள் செல்வத்து மன்னவ ரேறே
தரும தத்தனுந் தன்மா மன்மகள்
பெருமதர் மழைக்கண் விசாகையும் பேணித்
தெய்வ காட்டுக் திப்பிய வோவியக்
அடு கைவினை கடந்த கண்கவர் வனப்பினர்
மைத்துனன் முறைமையால் யாழோர் மணவினைக்
கொத்தன சென்றே யூர்முழு தலசெழப்
புனைபா வோவிய புறமபோந் தென்ன
மனைய நீங்கி வாணுதல் விசாதை
கூ0 யுலக வறவியி னூடுசென் றேறி
யிலகொளிக் கந்தி னெழுதிய பாவா
யுலகர் பெருமபழி யொழிப்பாய் நீயென
மாதக ருள்ளீர் மழைதரு மிவளென
நாவுடைப் பாவை நகைபை யெடுத்தலுக்
கூடு தெய்வ காட்டித் தெளித்திலே னுயின்
மைய லாரோ மனமா சொழியாது
மைத்துனன் மனையாண் மறுபிறப் பாகுவே

---

எஉ. எழுநாள் - எழுநாளாம். வைத்து - சொன்னடை; இதற்குப்பொருளில்லை. வழுஉம் - தவறும்.

எடு. மயரி - மயக்கமுடையான்.

எசு - எக. எழுநாளிற்கடிதலுமுண்டு.

எஙு. இகந்தபூதம் - (நீமையைக்) கடந்தபூதம்.

எஅ. நாளால் - நாளில்.

இனிக்கூறப்படுவது, நற்றவப்பெண்டிர் பின்னுளம்போல்கித் தீங்குற்றோன் கதை.

அஉ - அடு. தருமதத்தனும் விசாகையும் வனப்பினர்.

அக. யாழோர்மணவினைக்கு - காந்தருவவிவாகத்திற்கு.

அஙு. ஒத்தனர் - இயைந்தனர்.

அஅ. புனையாவோவியம் - வண்ணங்களைக்கொண்டெழுதாதவடிவைக்கோட்டினசித்திரம்; "புனையா வோவியங் கற்பப்" என்பது நேமிநல்வாடை, கசஅ; செயற்கையழகு யாதொன்றும் இனமையின், இவ்வனக்கூறினர்.

கo. ஊடு - உள்ளே. 'ஊடுவக் தேறி' என்றும் பாடம்.

கஉ. எனை - என்ற விசாகைவேண்ட.

கக. இவன் மழையைத் தருவானென்ற.

கச. நாவுடைப்பாவை - கந்திற் பாவை. எடுத்தல் - உயர்த்தல்.

கஎ. மறுபிறப்பில் மைத்துனன் மனை

னிப்பிறப் பிவனெடுங் கூடே னென்றே
நற்றாய் தனக்கு நற்றிறஞ் சாற்றி
மற்றவள் கன்னி மாடத் தடைந்தபின்
றரும தத்தனுந் தந்தையுந் தாயரும்
பெருநகர் தன்னைப் பிறகிட் டேகித்
தாழ்தரு துன்பந் தலையெடுத் தாயென
நாவுடைப் பாவையை நலம்பல வேத்தி
மிகோ ருறையும் விழுப்பெருஞ் செல்வத்துத்
தக்கண மதுரை தான்சென் றடைந்தபின்
றரும தத்தனுந் தன்மா மன்மகள்
விரிதரு பூங்குழல் விசாகையை யல்லது
பெண்டிரைப் பேணே னிப்பிறப் பொழிகெனக்
கொண்ட விசதந் தன்னுட் கூறி
வாணிக மரபின வருபொரு ளீட்டி
நீணிதிச் செல்வனு நீணில வேந்தனி
னெட்டிப பூப்பெற றிருமூப் பதிற்றியாண்
டொட்டிய செல்வத துயர்ந்தோ ஞயின
னந்த ணுளை ஞருவன் சென்றீங்
கென்செய தீனியோ விருநிதிச் செல்வ
பத்தினி யிலலோர் பலவறஞ் செயயினும்
புத்தே ளுலகம் புகாஅ தென்பது
நேட்டு மறிதியோ கேட்டனீ யாயி
னீட்டித் திராது நின்னக ரடைகெனத்
தக்கண மதுரை தான்வறி தாக

---

வியாவேன். மைத்துனனென்றது தருமதத்தனை.

கக. நற்றிறம் - விரதம்.

கஅ0. அவள் - விசாகை.

கஅஉ. பெருநகர் - காவிரிப்பூம்பட்டினம். பிறகிட்டு - பின்வைத்து.

கஅரு. தலையெடுத்தாய் - நீகஇனெய்.

கஅசு. தக்கணமதுரை - கூட்டல்; தக்ஷணம் - பாகதச்சிதைவு.

கஅள தருமதத்தனும், உம்மை - இறந்ததுதழீஇயது.

ககஅ0. கொண்ட - மேற்கொண்ட.

ககக வாணிகமரபு - கொள்வதுமிகையும் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்ப நிடிச்செய்தல்.

ககரு. எட்டிப்பூப்பெற்று - அரசனற் கொடுக்கப்படுமெ எட்டிப்பட்டத்திற்குரிய பூவைப்பெற்று; இதன்வரலாற்றை இந்நூல் ச - ம் காதை, டுஅ - ம் அடிக் குறிப்பிற்பார்க்க. இரு மூப்பதிற்றியாணடு - அறபதுவருடம்; எனறது அவன்பிராயததை; "ஆறைந் திரட்டி யாணடெனக் காயது" என்ற பின்பு விசாகைகூறுதல் காண்க; கஉக - ம் அடி.

ககச. ஒட்டிய - நீராதி.

கஅள - ககச தருமதத்தனும் கூறி எட்டிப் பெற்ற உயர்ந்தோனியினெனன்க.

கஉ0 அடைக என - அடைவாயென்று அந்தணனை கூற.

விப்பதிப் புகுந்தன னிருநில வேந்தே
மற்றவ னிவ்வூர் வந்தமை கேட்டுப்
பொற்றொடி விசாகையு மீண்டுப்புறம் போந்து
கூடு நல்லா ளுணுள் பலலோர் காப்ப
ணல்லவை கடிந்த வவன்பாற் சென்று
நம்முளு மறிந்தில நம்மை முன்னுண்
மம்மர் செய்த வனப்பியாங் கொளித்தன
வாறைந் திரட்டி யாண்டினக காயதெ
கஉ0 ஞறைங் கூந்தலு நரைவிரா வுற்றன
விளமையுங் காமமும் யாங்கொளித தனவோ
வுளனில லாள வெனக்கிங் குரையா
யிப்பிறப் பாயினியா னின்னடி யடையே
னப்பிறப் பியானின் னடித்தொழில் கேட்குல
கூடு னிளமையு நில்லா யாகையு நிலலா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரா
மிக்க வறமே விழுத்துணை யாவது
தானஞ் செய்யெனத் தரும தத்தனு
கசு0 மாமன் மகள்பால வான்பொருள் காட்டி
யாங்கவ னவளுடன் செய்த நல்லற
மோங்கிரு வானத்து மீனினும பலவாற்
குமரி மூத்தவக் கொடுங்குழை நலலா
ளமர வருளா லகனக ரிடுஉம்

---

கஉஉ. புருந்தனன் - தருமதத்தன் புகுந்தனன்.

கஉக. அலலவை - பொய்முதலியன. மேல் வருவது விசாகைகூற்று.

கஉஅ. மம்மர் - மயக்கம வனப்பென்றது இருவருடைய அழகையும.

கஉக - கஉ0. என் கூந்தலும - எனது கூந்தலும், கூந்தல் - மயிர்மாத்திரையாய் ஐவகையுமுணர்த்தலின், 'நரைவிரா வுறறன' என்ற பன்மைகூறினர்; "வண்ணப்போ தருச்சித்து மலிவாளுத் தலையலே" என்ற வீரசோழிந்தா மணியில் வந்திருத்தல்காண்க; நரமகளிலமபகம், கசுஇ.

கஉஎ. 'யாங்குயுத் தனவோ' என்றம் பாடம்.

கஉஞ. அப்பிறப்பு - மறபிறப்பு.

கஉஇ. 'நில்லாது' என்றம் பாடம்.

கஉன, புததேளுலகம் - தேவருலகம்.

கஉக. தானஞ்செய்யென - தானஞ் செய்யென்று விசாகைசொல்ல.

கச0. மாமன்மக ள் சாகை. 'மாமன் மகள்போல் வாக ளொருன் காட்டி' என்றம் பாடம்.

கசங. குமரிமூத்த - கன்னிப்பெண் ணுகலிருந்து வறிதே மூப்புற்ற; நலலான் - விசாகை; "குமரி மூதத்வென் பாத்திரம" என ஆபுதிரன் கூறியதாக முன்னூல கூறியிருத்தல்காண்க; கசம் காதை, ஏவ; "அற்றுர்க்கொன் றுற்று தான் செலவ மிகாலம், பெற்று டமியண் மூத்தற்று." என்பது நீநூற்றுள், கo0எ.

கசச. அமரன் அருளால் - கந்திற்பா

கசடு படுபழி நீங்கிப் பல்லோர் காப்பட்
கொடிமிடை வீதியின் வருவோள் குழன்மேன்
மருகி பொருட்டான் மடிதோன் றம்முன்
கருகிய நெஞ்சினன் காமங் காழ்கொளச்
சுரியிரும் பித்தை சூழ்ந்து புறக்தாழ்ந்த
கடுo விரிபூ மாலை விருமபினன் வாங்கித்
தொல்லோர் கூறிய மணமீ தாமென
வெல்லவிழ் தாரோ னிடுவான் வேண்டி
மாலை வாங்க வேறிய செங்கை
நீலக் குஞ்சி நீங்கா தாகலி
கடுடு னேறிய செங்கை யிழிந்தில திந்தக்
காரிகை பொருட்டெனக கசந்தன கேட்டுக்
கடுஞ்சினந் திருகி மகன்றுயர் நோக்கான்
மைந்தன் றன்னை வாளா லெறிந்தன
னூழிதோ னூழி யுலகங் காத்து
கசுo வாழிய வெங்கோ மன்னவ வென்று
மாதவர் தமமுளோர் மாதவன் கூறலும்
வீயா விழுச்சீர் வேந்தன் கேட்டன
னின்றே யல்ல வென்றெடித் துரைத்து
நன்றறி மாதவிர் நலம்பல காட்டினி
கசுடு ரின்று முளதோ விவ்வினை யுரைமென

---

வைபிலுள்ள துவதிகனென்னும தேவ னுடைய கருணையால்.

கசடு. படுபழி - மைத்துனன் முறை யால் யாழோர் மணவினைககு ஒத்தனரென்று ஊர்கூறிய பொய்ப்பழி.

கசடு - கசசு. நாப்பண்வருவோள் - விசாகை.

கசஎ. மருகி - முற்கூறிய பார்ப்பனி மருகி. தம்முன் - தமையன்.

கசஅ. கருகிய நெஞ்சு - இருண்ட நெஞ்சு. காழ்கொள - வயிரங்கொள்ள. காழ்கொளக் கருகிய நெஞ்சினனென்க.

கசக. சுரியிரும்பித்தை - சுரிந்தகரிய தன் குடுமியில்.

கடுo. மாலையை விரும்பி வாங்கி.

கடுஉ. எல் - விளககம். இடுவான் வேண்டி - இடவிரும்பி.

கடுசு. வாங்க-கொள்ளுதற்பொருட்டு.

கடுச. நீலக்குஞ்சி - கருமையையுடைய குடுமி; நீலம் - கருமை; "நீல யானை மன்னவன்" என்பது சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், ககக.

கடுசு - கடுச கை நீங்காதாகலின்.

கடுடு - கடுசு. விசாகைக்குச் சூட்டுதற்பொருட்டு மாலைவாங்குதறகு எறிய கை குஞ்சியினறும் இழிந்திலதென்று ககந்தன் கேட்டு.

கடுஎ. னெஞ்சிருகி - கோபமுறுகி; "காய்சினந் திருகிய கடுந்திறல் வேனில" என்பது பெரும்பாணற்றுப்படை, கூ நோக்கான் - நோக்காளுய்; இது நோக்கல் நோக்கம்.

கசுஉ. வீயா - மாறுதி.

கசுசு. 'இன்றேயல்ல' என்று எடுத்துரைத்ததனை இக்காதையில் ககூ - ம் அடியிற் காண்க.

கசுடு. உரைமென - சொல்லுமென்று அரசன் சொல்ல.

வென்றி நெடுவேல் வேந்தன் கேட்பத்
தீதின்றாக செங்கோல் வேந்தென
மாதவர் தம்முளோர் மாதவ னுரைக்கு
முடிபொரு ளுணர்ந்தோர் முதுரீ ருலகிற்
களவு கடியப் பட்டன வைந்துள வவற்றிற்
கள்ளும் பொய்யுங் களவுங் கொலையுங்
தள்ளா தாகுங் காமந் தமபா
லாங்கது கடிந்தோ ரல்லவை கடிந்தோ ரென
நீங்கின ரன்றே நிறைதவ மாக்க
களரு ணீங்கா ரன்றே நீணில வேந்தே
தாங்கா நரகந் தன்னிடை யுழப்போர்
சேயரி நெடுங்கட் சித்திரா பதிமகள்
காதல னுற்ற கடுந்துயர் பொருஅண்
மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தனண்
கஅ0 மற்றவள் பெற்ற மணிமே கலைதான்
முற்றிழை முலையினண் முதிராத கிளவியள்
செய்குவன் றவமெனச சிற்றிலும் பேரிலு
மையங் கொண்டுண் டம்பல மடைந்தன
ளாங்கவ ளவ்வியல் பினளே யாயினு
கஅரு நீங்கா னவனோ நிழல்போல யாங்கணுங்

---

ககள. வேந்தே, செங்கோல் தீதின்றாகவென்க.

ககஅ. உரைக்கும் - உரைப்பான்.

ககக. முடிபொருள் உணர்ந்தோர் - பரமார்த்தத்துவஞானிகள்.

களo. கடியப்பட்டன - விலக்கப்பட்டன. ஐந்தாவன, கள், பொய், களவு, கொலை, காமமென்பன; "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு, முள்ளக் களவு மென் றிவரோர் துறந்தவை" என்பர் பின்னும்; உரை - ம் காதை, எள - எஅ. அவற்றில் - அவ்வைந்தனுள்ளே.

களக - களஉ. காமம், கள்முதலிய நான்கினையும் நீக்காது; என்றது, காம முடையோர் மற்றை நான்கு குற்றத்தையும் உடையராகுமென்றபடி.

களக. ஆங்கது - அத்தன்மையதாகிய காமத்தை. அல்லவை கடிந்தோர் - அல்லாதகன்முதலியவற்றையுங் கடிந்தோரா வார். 'அவைகடிந்தோரெனை' எனும் பாடம்.

களச. நீங்கினரன்றே - அகன்றாரன்றே நீங்கினரென்க.

களசு. உழப்போர் - வருந்துவோர்.

களடு - களக. நீங்காதே நரகத்திற் றானபமனுமுபலப்பாராவார்.

மேல உதயகுமரன்செய்திகூறப்படும்.

களஅ. காதலனுற்ற கடுந்துயர் - கோவலன் கொலையுண்டிறந்தது.

களக. மாதவர்பள்ளியுள் - சங்கதி தாரான அறவணவடிகளுடைய உறைவிடத்தில். 'அடைந்தனும்' எனும் பாடம்.

களஎ - களக. மகளாகியமாதவி பள்ளியுளடைந்தனள்.

கஅo. அவள் - மாதவி.

கஅஉ. தவம் செய்குவனென்ற.

கஅக. ஐயம் - பிக்ஷை. அம்பலம் - உலகவறவி.

கஅஎ. அவனோ நிழல்போல் யாங்கணும் நீங்காரூப.

காரிகை பொருட்டாற் காமங் காழ்கொள
வாரிரு ளஞ்சா னம்பல மடைந்தனன்
காயசண் டிகைவடி வாயினள் காரிகை
காயசண் டிகையு மாங்குள ளாதலிற்
கசஂ0 காயசண் டிகைதன் கணவ ஞகிய
வாய்வாள் விஞ்சைய னெருவன் றோன்றி
யீங்கிவள் பொருட்டால் வந்தன னிவனென
வாங்கவன் றீவினை யுருத்த தாகலின்
மதிமருள் வெண்குடை மன்ன நின்மக
கசஂடு னுதய குமர னெழியா ளுக
வாங்கவ டன்னீ யமபலத் தேற்றி
யோங்கிருள யாமத் திவணீயாங் குய்த்துக்
காயசண் டிகைதன் கணவ ஞகிய
வாய்வாள விஞ்சையன் றனனீயுங் கூஉய்
உ00 விஞ்சை மகள்பா லிவன்வந் தனனென
வருச விஞ்சையன் மனத்தையுங் கலக்கி
யாயுகவன றன்கை வாளா லம்பலத்
தீங்கிவன் றன்னீ யெறிந்தகென் றேத்தி
மாதவர் தமமுளோர் மாதவ னுரைத்தலுஞ்
உ0டு சோழிக வேனதி தன்முக நோககி

---

கஅசு. காரிகைபொருட்டு - மணிமே கலைபொருட்டு. காழ்கொள - மூற்ற.

கஅள. அஞ்சாளைய அமபலமடைந்த னன்.

கஅஅ. காரிகை - மணிமேகலை.

கஅக. உளள் - உள்ளாள்.

ககக. வாய்வாள் - தப்பாத வாள்.

ககஉ. இவள்பொருட்டு - காயசண்டி கையின பொருட்டு.

ககங. அவன - உதயகுமரன்; காஞ்ச னனுமாம.

ககஙு. மருள் - உவமவருபு. 'மதிமரு ணெடுங்குடை, என்றும பாடம்.

ககஙு. அவளதனனை - மணிமேக லையை.

ககள. இவனை - உதயகுமரனை.

ககக. கூஉய் - அழைத்து.

உ00. விஞ்சைமகள் - காயசண்டிகை.

உ0ங. எறிந்தது -(அதீவினை) வெட் டியது.

உ0டு. ஏனதியென்பது வேந்தனுற் கொடுக்கப்படும் பட்டப்பெயர்களுளொ ன்று; இதனை, தொல்காப்பியம், புறத திணையியலுள்ளு - மருததிறத்தில் 'யாரா யம் பெற்ற நெடுமொழி யானும' என்ப தற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழு திய வுரையாலும, அதில "போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக, கார்கடல பெற்ற களையனறே - போ ர்க்கெல்லாங், தானதி யாகிய சார்வேந் தன் மோதிரஞ்சே, ரேனதிப் பட்டத் திவன்" என்று அவர் எடுத்துக்காட்டிய பழம்பாட்டாலு முணர்க; பெரியபு ராணத்துக கூறப்பட்டுள்ள திருநதொ ண்டர்களுள் ஒருவர்க்கு ஏனதிநாதநா யனெனற திருநாமம் இதுபற்றியே வந்த குடிப்பெயரேயாம்; சீவகசிந்தா மணி, மண்மகளிலம்பகத்தில் "செம் பொனீண்முடி" என்னுஞ்செயியல் 'ஆழி தொட்டான்' என்பதற்கு 'எனதிமோ திரஞ்செறித்த சேனபதி' என்று ஆசிரி யர் நச்சினார்க்கினியரெழுதி யிருகின்

யான்செயற் பால தினக்கோன் றன்னைத்
தான்செய் ததனைத் தகவிலன் விஞ்சையன்
மாதவர் நோன்பு மடவார் கற்பும்
காவலன் காவ லின்றெனி னின்றுண்
உ0 மகனே முறைசெய்த மன்னவன் வழியோர்
துயர்வினை யாளன் றுன்றின னென்பது
வேந்தர் தஞ்செவி யுறுவதன் முன்ன
மீகைவன் றன்னையு மீமத் தேற்றிக்
கணிகை மகளையுங் காவல்செய் கென்றன
உசுரி ணனிவிளர் நெடுமுடி யாசாள் வேந்தென.

சிறைசெய்காதை முற்றிற்று.

---

றனர். மேற்கூறியவாற்றலும், இக்காதையின் தலைப்பில் 'மந்திரியாகிய சோழிகவேனதி' என்றிருத்தலும் 'சோழி கவேனதி' என்பதற்குச் சோழனுடைய (எனதிமோதிரஞ்செறித்த) சேனபதியும மந்திரியுமாகிய ஒருவனென்ற பொருள்கொள்ளுதல பொருத்தமுடைத்து.

உ0ஏ. விஞ்சையன் தகவிலன் - காஞ்சனன் தருதியில்லாதவனையனன்.

உ0சு - உ0ஏ. யான் செயற்பாலதைத் தான் செய்ததனலென்க.

உ0அ - உ0க. காவலின்றெனின், நோன்புமின்று, கற்புமின்று; "அருந்திற லரசர் முறைசெயி னல்லது, பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் தெறவாது" என்பது சிலப்பதிகாரம், நிகற்காதை, உ0ஏ - உ0அ.

உ0ம. மகனே முறைசெய்த மன்னவன் - கன்றையிழந்த பசுவின்துயரைத் தீர்த்தற்குத் தன்மகனேக்கொடுத்து அவன் மார்பில் உருளேசெல்லும்படி தேரோடூர்ந்த மனுவேந்தன்; இதனைப் பின்வருவன வற்றாலுணர்க; "வாயிற் கடைமணி நடுநா நடுங்க, வாவின் கடைமணி யருநீர் வெளகடத் தான்றன், அரும்பெறற் புதல்வனே யாழியின் மடித்தோன், பெரும்பெயர்ப் புகாரென பதியே" (வழக்குரைகாதை, இசு - இசு) எனவும, "கறவை முறைசெய்த காவலன்தா னமமானே, காவலன பூம்புகார் பாடேலோ ரம்மானே" (வாழ்த்துக்காதை, "புறவு நிறை"—) எனவும வருவன சிலப்பதிகாரம்; "மருளும் பசுவொன்றின மமர்கோய் நீர, வருளுர் நிருத்தே ரூவோன" என்பது கூலோத்துங்கசோழுலா. இக்கதையின் விரிவைப் பேரியபுராணத்தில் திருவாரூர்ச் சிறப்பிலாணக.

உ0க துயர்வினை - தீவினை.

உ0உ - உ0க. முன்னம் எற்றி

உ0ச. கணிகைமகள் - மணிமேகலை

க - உ0கரி மண்டிலம் சிப்பப் புரிதோர் உரைப்பக்கேட்டுமொதவலெலவாம மணிமேகலையைநோகி 'இதனே நீயறிவதுமுண்டோ' என, அவள் உளாத்திலும், அவளைச் சிறவனெடு வேறிடத் தொளித்து இதைத்துச்சென்ற குறிஞ்சி மாதவனுடனாத்தலும், கேட்டு வேந்தன் 'உரையும்' என, ஒர்மாதவனுரைக்கும்; அங்ஙனமுரைக்குமாறவன் ஏதிலுரைத்தலும், வேந்து காவல்செய்கென்னென விளைமுடிவுசெய்க.

## இருபத்துமூன்றுவது

# சிறைவிடுகாதை.

[இருபத்துமூன்றுவது மணிமேகலை சிறைவீடுசெய்த இராசமாதேவி குறைகொண்டிரப்பச் சீலங்கொடுத்தபாட்டு.]

மன்னவ னருளால் வாசந் தவையெனு
நன்னெடு நகர்ந்த னரைமூ தாட்டி
யாசற் காயினுங் குமரற் காயினுங்
திருநிலக் கிழமைத் தேவியர்க் காயினுங்
கடுரை விரித்துங் கற்றவை பகர்த்தும்
பட்டவை துடைக்கும் பயங்கெழு மொழியின
ளிலவங்கரி நெடுங்க வரிராசமா தேவி
கலங்கரு மொழியக் கடிதுசென் றெய்தி
யழுதடி வீழா தாயிழை தன்னைத்
தொழுதுமுன் னின்று தோன்ற வாழ்த்திக்
கொற்றங் கொண்டு குடிபுறங் காத்துச்
செற்றந் தெவ்வர் தேயந்தம தாக்கியுந்
தருப்பையிற் கிடத்தி வாளிற போழ்ந்து

---

உ. நகைக்கூந்தல் - வெண்மையையுடைய கூந்தல்.

கூ - ச. ஆயினுமென்பது விகற்பப் பொருளோத் தருவதோ ரிடைசசொல்; சண்ணிடைச்சொல்லுமாம்.

ஙி. கட்டுரை - பொருள்பொதிந்த சொல்.

சு. பட்டவை - உண்டான துன்பங்கள். 'பட்டது துடைக்கும்' என்றும் பாடம். பயம் - பிரயோசனம்.

ஞ - சு. விரித்தும் பகர்ந்தும் துடைக்குமொழியினள்.

அ. கலங்கருந்தர் - கலங்குதற்குக் காரணமாகிய துன்பம். கடிதுசென்று விரைந்துசென்று.

க - அ. வாசந்தவையெனுமூதாட்டி, மொழியினள், தேவியது அருமொழிய மன்னவனருளாற் கடிதுசென் றெய்தி யென்க.

கூ. 'அழுதன ளடிவீழ்ந்து' என்றும் பாடம்.

கo. தொழுது - அஞ்சலிசெய்து.

கக. கொற்றங்கொண்டு - வெற்றிகொண்டு; "கொற்றங் கொண்டு கோலினி தோச்சென" என்பது பெருங்கதை, இலாவாணகாண்டம், மண்ணு நீராட்டியது. குடிபுறங்காத்து - குடிகளைப் பிறர் நலியாமற் பாதுகாத்து; "குடிபுறங் காத்தோம்பி" என்பது திருக்குறள், நிசக.

கஉ. செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழ்வது. தெவ்வர் - பகைவர். 'செற்ற தெவ்வர்' என்றும் பாடம்.

கங. தருப்பையிற்கிடத்தி - பரப்பிய தருப்பைப்புல்லிற் கிடத்தி. போழ்ந்து-பிளந்து.

செருப்புகன் மன்னர் செல்வுழிச் செல்லென
கரு மூத்து விளிதலிக் குடிப்பிறந் தோர்க்கு
நாப்புடை பெயராது நாணுந்தக வுடைத்தே
தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன
றென்னெனப் படுமோ நின்மகன் மடிந்தது
மன்பதை காக்கு மன்னவன் றன்முன்
உ0 றுன்பங் கொள்ளே லென்றவள் போயபின்
கையாற் றுள்ளங் கரந்தகத் தடக்கிப்
பொய்யாற் றெழுக்கங் கொண்டுபுற மறைத்து
வஞ்சஞ் செய்குவன் மணிமே கலையையென்
றஞ்சி லோதி பரசனுக் கொருநாட்
உரு பிறர்பின் செல்லாப் பிக்குணிக் கோலத்

---

கச. செருப்புகல் மன்னர் - போரின் கண்ணேபுகுப் போர்செய்து வீழ்சிலை யுடைய அரசர், செல்வுழிச் செல்க என-செல்லுமுலகதிலே செல்கவென்ற அந்தணர் கூறுமவணணம்.

கரு. மூத்துவிளிதல - மூப்புற்று இறத்தல. இக்குடி - சோழபரமபரை.

கக - கரு. போரிலிறவாமல் முதுமையுற்று நோயால் இறந்த அரசருடம்பை அந்தணர் தருப்பைப்புல்லிறகிடதநி, தருவ ஆணையேபற்றக்கோடாக யுதாதிலிலையிறந்த அரசர்செல்லும் உலகதிலே இவர்செல்கவென்ற அவ்வுடம்பை வைவளாற்பினர்த அடக்குதல் மரபாதலின், இங்ஙனங்கூறினர்; இப்படியே, "ஓடன் மரிய பீடின் மன்னர், நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக், காதன் மறந்தவர் தீதுமருங் கறுமா, றறமபுரி கொன்கை நான்மறை முதல்வர், நிறம்புரி பசும்புற் பாப்பினர் கிடப்பி, மறங்கந் தாத நல்லமர் வீழ்ந்த, நீண்கழன் மறவர் செல்வழிச் செல்கென, வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர்" எனப் புறநானூற்றில், கசுமை பாட்டில் வந்திருத்தல் காண்க.

கக. நாப் புடைபெயராது - இதனைக் கூறுதற்கு வனது நாப் புடைபெயராமாட்டாது நாணுத்தகவுடைத்து-நாணுத்தகுநிலையுடைத்து; "மலைத்தனே யென்பது நாணுத்தகவுடைத்தே" என்பது புறநானூறு, கசு. 'நாணுத் தகவுடைத்தென' என்றும் பாடம்.

கஎ - கக. விளிதல் நாணுத்தகவுடைத்து.

கஉ - கசு. தீமதாகவியம் மூத்துவிளிதல் இக்குடிப்பிறந்தோர்க்கு நாணுத்தக வுடைதிது.

கஎ - கஅ. நின்மகன் மடிந்தது நின் மண் காததமையாலன்று; பிறர்மண கொண்டமையாலுமன்று; காமதிதால, அவ்விறப்பு யாதென்ற கூறப்படும்.

கக. மன்பதை - உயிர்ப்பன்மை.

உ0 கொள்ளேல கொள்ளாதே. அவள் போயபின் - வரசநதவைபோனபினபு

இராசமாதேவி, அரசனையடைந்து மணிமேகலையைக் கைறமிட்டு உடன கொணடுசென்ற தன் காவலில்வைத்து வஞ்சித்தல் இனிகூறப்படும்.

உக. கையாற்றுள்ளங்கரந்து - செயல நவினையுடைய உள்ளதைமறைத்து; என்றது புதறிசோதனதை வெளிப்படுத்தாமலென்றபடி.

உஉ. பொய்யாறெழுக்கங்கொண்டு. பொய்வழிக்கண் ஒழுகுதலைகொண்டு. புறமறைத்து - புறதறதே தோன்றுமல் புறமறைத்து; என்றது மணிமேகலையை வஞ்சித்தற்கெணணிய தனது நியமெணணத்தை ஒருவாற்றானும் வெளிப்படுத்தாமலென்றபடி.

உக. மணிமேகலையை வஞ்சஞ்செய்குவனென்ற கருதி.

உச. அஞ்சிலோதி - அழகிய நிலவான கூதலையுடைய இராசமாதேவி.

உஓ. கோலத்து - வேடத்தைச்சண்டி.

அறிவு திரிந்தோ னாசிய முனிலன்
கருமபுடைத் தடக்கைக் காமன் கையற
வரும்பெற விளமை பெரும்பிறி தாக்கு
மறிவகலப்பட்ட வாயிழை தனக்குச்
சிறைதக் கன்று செங்கோல் வேந்தெனச்
சிறப்பின் பாலார் மக்க ளல்லார்
மறப்பின் பாலார் மன்னர்க் கென்ப
தறிந்தனே யாயினிவ் வாயிழை தன்னைச்
செறிந்த சிறைநோய் தீர்க்கென் றிறைசொல
வென்னெ டிருப்பினு மிருக்கவிவ் விளங்கொடி
தனனெ டெடுப்பினுந் தகைக்குந ரில்லென்
றநகவ டனைகூஉ யவடன் னெடு
கொங்கவிழ் குழலாள் கோயிலுட் புக்காங்
கறிவு திரித்திவ் வகனக செல்லா
மெறிதரு கோலமயான் செய்குவ லென்றே

---

உசு. அறிவுதிரிந்தோன் - அறிவு வேறுபட்ட உதயகுமரன். 'அறவிய நிரிந்தோன்' என்றும் பாடம்.

உஎ. கையற - செயலற.

உஅ. இளமை-இளமையை. பெரும்பிறிதாக்கும் பயனபடாது கெடச்செய்த.

உஎ - உஅ. கையறப் பெரும்பிறிதாக னுமென்க.

உக. தலைப்பட்ட-நேர்பட்ட; முதன்மைப்பட்டவென்றுமாம்.

ஈ0. தகன்று - தக்கதன்று; விகாரம். வேந்து - அண்மைவிளி. என - என்று

இராசமாதேவி சொலல.

உச - ஈ0. அஞ்சிலோதி ஒருநாள் அரசனுக்குச் சிறைதக்கனெனவென்க.

ஈக - ஈஉ. சிறப்பின்பாலார் மககள் - கல்விமுதலியவிசேடமுடையவர்கள் புதல்வர். அல்லார் மறப்பின்பாலார் - அல்லாதவாகள் மறதத்திற்குரியவா. என்பதுன்று பெரியோர்கூறுதலே; இவ்வடிகளின் கருத்து, "உற்றழி யுதவியு முறுபொருள் கொடுத்தீம், பிற்றை நிலை முனியாது நற்ற னன்றே, பிறப்போ ன்ன வுடன்வயிற் றுள்ளுஞ், சிறப்பின் பாலாற் றுயு மனந்திரியு, மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு, மூத்தோன்வ ருக வென்னு தவரு, ளறிவுடை யோனு றரசுஞ் செல்லும், வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங், கிழ்ப்பா லொருவன் கற்பின், மேற்பா லொருவனு மவன்கட் படுமே." என்னும் (புறநானூறு, கஈசு.) பாட்டின் பொருளை ஒருவாறு தழுவிவந்திருத்தல்காண்க.

ஈக. ஆயிழை - மணிமேகலை.

ஈஉ. சிறைநோய் - சிறைத்துன்பம். தீர்க்கென்று - தீர்க்கவென்று. இறை - அரசன்.

ஈஎ. தன் ஒடு எடுப்பினும் - தனக்குரிய ஒட்டையேற்றிப் பிச்சைக்குப் புகுவாளாயினும், தகைக்குநர் இல் - தடுப்பவர்களில்லை; "அணித்தகை யுடம்பு" என்பது சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம், எ. என்று - என்றகூறி.

ஈஎ. அவள்தனைககூஉய் - மணிமேகலையை யழைத்து.

ஈஅ. குழலாள் - இராசமாதேவி.

ஈஎ - ஈஅ. குழலாள் அவளோடு கோயிலுட்புக்கு.

ஈக. அறிவுதிரித்து - அறிவைவருந்தால் வேறுபடச்செய்து; பித்தாக்கியென்றபடி.

ஈ0 எறிதருகோலம் - அடிக்குங்கோலத்தை. செய்குவலென்று - இவளுக்குச செய்வேனென்றகருதி.

மயற்பகை யூட்ட மறுபிறப் புணர்ந்தா
ளயர்ப்பது செய்யா வறிவின ளாகக்
கல்லா விளைஞ னொருவனைக் கூஉய்
வலலாங்குச் செய்து மணிமே கலைத
சரு னிணைவள ரிளமுலை யேந்தெழி லாகத்துப்
புணர்குறி செய்து பொருந்தின னென்னுட்
பான்மைக் கட்டுரை பலர்க்குரை யென்றே
காணம் பலவுங் கைந்நிறை கொடுப்ப
வாங்கவன் சென்றவ் வாயிழை யிருந்த
ரு0 பாங்கி லொருசிறைப் பாடுசென் றணுகலுங
தேவி வஞ்ச மிதுவெனத் தெளிந்து
நாவியன் மந்திர நடுங்கா தோதி
யாண்மைக் கோலந் தாயிழை யிருப்பக
காண மெற்றோன் கடிந்துய செய்கி
ருரு யசை ருரிமையி லாடவ ரணுகார்

---

சக. மயற்பகையூட்ட - பிதற்றுதற்குக் காரணமாகிய மருட்கையூட்ட; "வஞ்சமுண்டி மயற்பகை யற்றோ" என்பது சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்தகாதை, கஉ. உணர்ந்தாள் - மணிமேகலை.

சஉ. அயர்ப்பது - மறப்பது.

சக-சஉ. "மயற்பகை யூட்டினை மறுபிறப் புணர்ந்தே, னயர்ப்பது செய்யா வறிவினை ஞயினேன்" என்ற இக்காதையிலேயே பின்பு வருதல்காண்க; கஉ - கூ. உணர்ந்தாள் அறிவினளாக.

சக கூஉய் - அழைத்து.

சஎ. வல்லாங்குச்செய்து - வல்லபடி செய்து; "வடியா ரூவின் வலலா யகுப் பாடி" என்பது புறநானூறு, சஎ.

சஅ. காணம் - பழங்காசு; இதனை, சீவகசிந்தாமணி, குணமாலையாரிலம்பகம், உசஎ - ம் கவியுரையிற்காண்க. கைந்நிறைகொடுப்ப - கைந்நிறையக்கொடுப்ப; நிறைய - விசாரம்; "நிலநெளி பரந்த வன்கே" என்பதில் 'நெளி' என்பதுபோல; இது சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், உடு.

சக - சஅ ஒருவனைக்கூஉய் 'செய்து புணர்குறிசெய்து பொருந்தினன்' என்னுங் கட்டுரையைப் பலர்க்கும் உரை' எனறகூறிக் காணமபலவும் கொடுப்பவெனக.

சக. ஆயிழை - மணிமேகலை.

ரு0. பாங்கில ஒருசிறைப்பாடு - அழகில்லாத ஒரு பக்கத்தினிடத்தே; பக்கத்துள்ள ஒரு சாவலிடத்தென்றுமாம.

சக - ரு0. அவன்சென்று பாடுசென றணுகாதலுமென்க.

ரு2. தேவி - இராசமாதேவி. இது - இவ்வினைஞன் வந்தது.

ரு2. நாவியல மந்திரம் - நாப்புடை பெயருமனவிலே உசசரிக்கப்படும் மந்திரம்; என்றது வேறறருவெயுதவிக்கு மந்திரத்தை, "ஆறெழுத்த தடகிய வருமறைக கேள்வி, நாவியன் மருங்கி னவிலப் பாடி" என்பது திருமுருகாற்றுப் படை, கசக - கஅ.

ரு4 - ரு5. ஆயிழை இது தேவிவஞ்சமெனறதெளிந்து மந்திரத்தையோதிக கோலத்திட னிருப்பவெனக.

ரு5. அரசருரிமையில் ஆடவரணுகார் - அரசருடைய தேவிமாரிருக்கும் அந்தப்புரத்தில் ஆண்மக்கள் சுழலார்; "ஆடவர் ருயரா வருங்கடி வளைப்பின்" என்பது நெடுநல்வாடை, கூ0க. அந்தப

நிரயக் கொடுமக ணிணைப்பறி யேனென்
றகநகர் கைவிட் டாங்கவன் போயபின்
மகணோய் செய்தாளை வைப்பா தென்னென்
றுய்யா நோயி னுணைழிந் தனளெனப்
சுஎ பொய்ந்நோய் காட்டிப் புழுக்கறை யடைப்ப
வுணைழி மந்திர முடைமையி னந்த
வாணுதன் மேனி வருந்தா திருப்ப
வையென விம்மி யாயிழை கடுங்கிச்
செய்தவத் தாட்டியைச் சிறுமை செய்தே
ரு னென்மகற் குறற விடுக்கண் பொருது
பொன்னே ணெயாய் பொறுகென் றவிடாழ
நீல பதிதன் வயிற்றிற் ரோன்றிய
வேலங் கமழ்தா ரிராகுலன் றன்னை
யழற்க ணாக மாருயி ருண்ண

---

புரததை, 'குழைமுகப் புரிசை' என்பர் திருத்தக்கதேவர்; சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், உசசு.

இசு. நரகதையடைதற்குரிய கொடுமையையுடைய இவளது தியவெண்ணத்தை நானறிந்திலேனெனகருதி; இராசமாதேவி வியபிசரிக்குங்கருதுடையாளென்று அவ்விளைஞன கருதிஞனபோலும் 'நிணைப்பதறியேனென்று' என்றும் பாடம்.

இள. அகநகர் - அந்தப்புரம்.

இச - இள. காணமபெற்றேன், தய ரெய்தி அறியேனென்று கைவிட்டுப் போயபினென்க.

சசு - இள. உசும காதை, கூச - கடு.

இஅ. மகணோய்செய்தாளை-உதயகுமரனுக்குக்காமநோயை உணடாக்கிக்கொல்லுவித்த இவனை, வைப்பது என்னென்று-உயிருடன்வைத்தல நமதன்பிற்குயாதுபயனென்று இராசமாதேவி கருதி.

இக. உய்யாநோயின் - உயிரைத்தாங்கியிராமைக்குக் காரணமாகிய கோயினால்.

சுஎ. புழுக்கறை - புழுங்கச்செய்யும் அறை; "புழுகறைப் பட்டோர் போன்று" என்றார் முன்னும்; கூ - ம் காதை, கடு.

இஅ-சுஎ. (இராசமாதேவி) வைப்பதென்னென்ற காட்டி அடைப்பவென்க.

சுஉ. வாணுதல் - மணிமேகலை.

இஅ - சுஉ :—உசு - ம் காதை, கூச - கூள.

சுசு. ஐயெனவிம்மி - விரையப் பொருமி; "ஐயென வீரப்ப" (கோவிந்தையாரிலம்பகம், சஅ) எனவும், "மோதிரந் தொட் டையென" (குணமாலையாரிலம்பகம், ககஅ) எனவும் வருவன சீவகசிந்தாமணி. ஆயிழை - இராசமாதேவி.

சுச. செய்தவதாட்டியை - மணிமேகலைக்கு; ஓ - உருபுமயகுகம. சிறுமை - குற்றம்; என்றது மயற்பகையூட்டியது முதலிய மூன்றனையும்.

சுச - சுஞ. பொருது செய்தேனென்ச.

சுசு. பொன்னேரணெயாய்-திருமகளின்மறுதலிலேபோல்வாய்; திருமகளுக்குரோராகிய அத்தன்மையையுடையாயெனினுமையும்; இப்படியே, "கோளரிக் குங்கிகரன்னர்" (திருநக் கிற்றப்பலக்கோவையார், உஉடு) என்று வருகிருக்கல் காண்க.— உ - ம காதை, கசு. அவள் - இராசமாதேவி.

மேலவருவன மணிமேகலைகூற்று.

சுவ - சுஅ. தோன்றிய இராகுலன் றன்னை.

சுக அழற்கண்நாகம் - கிட்டிவிடமென்னும்பாம்பு. அழல்-விடம்; "ஐக் தலை யரவின் சீற்றத் தாரழல் குளிக்க

எ0 விழித்த லாற்றே னென்னுயிர் சுடுநாள்
யாங்கிருந் தழுதணி யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி கல்லாய் பொருந்தா தது செய்தணி
வுடற்கழு தணியோ வுயிர்க்கழு தணியோ
யுடற்கழு தணியே லுன்மகன் றன்னை
எரு யெடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
யுயிர்க்கழு தணியே லுயிர்புகும் புகலில்
செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரிய
தவ்வுயிர்க் கன்பினை யாயி னுய்தொடி
யெவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டு
அ0 மற்றுன் மகனை மாபெருந் தேவி
செற்ற கள்வன் செய்தது கேளாய்
மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனை
யுடற்றுணி செய்தாங் குருத்தெழும் வல்வினை
நஞ்சுவிழி பரவி னல்லுயிர் வாங்கி
அரு விஞ்சையன் வாளால் வீட்டிய தன்றே

---

லூற்றார்" என்பது சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், உரை; "அழல்வாய் நாகத் தாரெயிறழுந்தினர்" என்பது சிலப்பதிகாரம், இந்திரவிழவூ ரெடுத்தகாதை, கஉச. "நஞ்சுவிழி யரவு என்ற இப்பாம்பின்பெயர் இக்காதையி லேயே பின்னும் வருதல்காண்க; அச-ம் அடி.

எ0. விழித்தல்-உயிர்வாழ்தல்; நாகத தின் தொழிலாக்கினுமமையும். 'இழித தலாற்றேன்' என்றும் பாடம்.

எக. இளங்கோன்றனக்கு யாங்கிருந் தழுதனை; அழுதிலையென்றபடி.

எஞ். புறங்காடி - மயானம். 'சுமப் புறங்காடி' என்றும் பாடம்.

எசு. புக்கில் - புகுமிடமாகிய வுட ம்பு; "நோக்கார்தொ றெப்பதோர் புக ழில" (நாலடியார், தூய்தன்மை, ச.) என்பதில் 'புக்கில்' என்பது உடம் பென்னும்பொருளில் வந்திருத்தல் கா ண்க.

எஎ. வினையென்றது கல்வினை தீவி னையென்னுமிரண்டையும். 'செயற்பா ட்டு வினை' என்றும் பாடம்.

எக - எஎ. வினையால் உயிர்புகும்புக் கில் தெரித்துணர்வரியதென்க.

எஅ. அன்பினையாயின் - அன்பினை டையாயாயின்; ஆய்தொடி - விளி.

எக. எவ்வுயிர்க்காயினும் - எவ்வுயிர்க் கும்.

அ0. மாபெருந்தேவி-இராசமாதேவி; விளி.

அக. செற்றகள்வன் - கோபிதத ஞ்சனன். செய்தது கேளாய - தொ னை செய்ததற்குக காரணமான தீவினையைக கேள்.

அஉ. மடைக்கலம் - சோற்றுப்பாத் திரம். மடையன் - சோறுசமைப் போன்.

அசு. உடம்பைத் துண்டமாகவெட்டி னமையால் தோன்றியெழுந்த வலிய தீ வினை. 'உருதெழு மல்வினை' என்றும 'உருதெழு மவ்வினை' என்றும், 'உருதீ தெழு பாவம்' என்றும் பாடம்.

அச. அரவின் - அரவினால.

அஞ. வாங்கியென்றது முற்பிறப்பின்செ ய்தியை.

அஞ. வீட்டியது - சொன்னது; வீழ் த்தியதென்பதன்மரூஉவுமாம்.

அசு-அஞ. வினை முற்பிறப்பில உயிரை அரவின்வாங்கி இப்பிறப்பில விஞ்சை யன்வாளால் வீட்டியது

யாங்கறிந் தனையோ வீங்கிது வெனிற்
பூங்கொடி கல்லாய் புருந்த திதுவென
மொய்ம்மலர்ப் பூம்பொழில் புக்கது முதலாத்
தெய்வக் கட்டுரை தெளிந்ததை யீரு
கூ0 வுற்றதை யெல்லா மொழிவின் முரைத்து
மற்று முரைசெயு மணிமே கலைதான்
மயற்பகை யூட்டினீ மறுபிறப் புணர்ந்தே
னயர்ப்பது செய்யா வறிவினே னுயினேன்
கல்லாக் கயவன் காரிருட் டான்வர
கூறு நல்லா யாணுரு நான்கொண் டிருந்தே
னுரைழி மந்திர முடைமையி னன்றே
மாணிழை செய்த வஞ்சம் பிழைத்த
தந்தாரு சேறலு மயலுருக் கோடலுஞ்
சிந்தையிற் கொண்டிலேன் சென்ற பிறவியிற்
க00 காதலற் பயந்தோய் கடுந்துயர் களைந்து
தீதுறு வெவ்வினை தீர்ப்பது பொருட்டாற்
றையா லுன்றன் றடுமாற் றவலத்
தெய்யா மையறீர்ந் தின்னுரை கேளா

---

அசு. இது - இச்செய்தியை.

அள. புருந்தது இதுவென - சம்பவித்தது இதுவென்று.

அஅ. பொழில - உவவனம்.

அக. தெய்வககட்டுரை-கந்திற்பாவை தெய்வங் கூறிய பொருள் பொதிந்த சொல்.

கூ0. ஒழிவின்று - தப்பாமல.

அள - கூ0. இதுவெனவுரைதென்க.

கூக. மணிமேகலை பின்னும் சொல்லுவாள்.

கூஉ. மயற்பகை - பித்தேறுதற்குக்காரணமாகிய மருந்து.

கூசு. அயர்ப்பது - மறப்பது.

கூஉ - கூசு. "மயற்பகை யூட்ட மறுபிறப் புணர்ந்தா, னயர்ப்பது செய்யா வறிவின னாக" என்ற இப்படியே இக்காதையில் முன்னும் வந்திருத்தல்காண்க; சக - சஉ.

கூச. கயவன் - கீழ்மகன்; கொடியவனுமாம். இருள் - இருளில்.

கஞி. நான் ஆணுருக்கொண்டிருந்தேன்.

கூச - கஙி :—உசு - ம் காதை, சசு - இல.

கூசு. 'உடைமையி னன்றே' என்றும் பாடம்.

கூள. ஐஞ்சம் - ஊணுழிந்தனளென்று பொய்ந்நோய்காட்டிப் புழுக்கறையடைத்தது. பிழைத்தது - தப்பியது.

கூசு-கூள. மன்றிரமுடைமையினன்றே வஞ்சம்பிழைத்தது; உசும் காதை, இசகூஉ.

கூஅ. அயலுருக்கோடல் - வேற்றுரு வங்கொள்ளல்.

கூக - க00. போனபிறப்பில் எனக்குக் கணவனுயிருந்தானே இப்பிறப்பிற் பெற்றேம்.

கூஅ - கக. உனது துயரைக்களைந்து வினையைத் தீர்த்தற்பொருட்டே சேறலும் கோடலும் சிந்தையிற் கொண்டிலேன்.

க0உ. தையால் - விளி.

க0உ - க0சு. தமோறீறவலத்தெய்யாமையல் - தமோறுதற்குக் காரணமாகிய வருத்தத்தைச்செய்யும் அறியாமையாகி

யாள்பவர் கலக்குற மயங்கிய நன்னுட்டுக்
கoநி காருக மடந்தை கணவனுங் கைவிட
வீன்ற குழவியொடு தான்வே ருகி
மான்றேர் திசைபோய் வரையாள வாழ்வுழிப்
புதல்வன் றன்னியோர் புரிநூன் மார்பன்
பதியோ ரறியாப் பான்மையின் வளர்க்க
கசo வாங்கப் புதல்வ னவடிற மறியான்
றுன்புணர்ந் தறிந்துபின் றன்னுயிர் நீத்தது
நீர்நசை வேட்கையி னெடுங்கட முழலுஞ்
சூன்முதிர் மடமான் வயிறுகிழித் தோடக
கான வேட்டுவன் கடுங்கணை துரப்ப
கநி மான்மறி விழுந்தது கண்டு மனமயங்கிப்
பயிர்குரல் கேட்டதன் பான்மைய னுகி
யுயிர்ப்பொடு செங்க ணுருத்த நீரகண்

---

யமயக்கம் ; மையல - செலவச்செருக்கு மாம் ; "மையண்மத யானைநிரை மன்னன்" என்பது சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், கூஎ.

மேல், காமம், கொலை, கள், பொய், களவு ஆகிய இவ்வைந்தும் நீக்கற்பாலன வென்ற இராசமாதேவிக்கு மணிமேகலை உபதேசித்தல முதலியன கூறப்படும்.

கoச. ஆன்பவர்கலக்குற-அரசர் கொடுங்கோல் செலுத்துதலால். மயங்கிய நன்னுட்டு - யாவரும் தததம் நிலைதடுமாறியநல்லநாட்டில்.

கoநி. காருகமடந்தை - இல்லறவொழுக்கினளாகியவொருத்தி; நெய்வோர் குலத்துப் பிறந்த ஒருதத்தியென்றுமாம். கைவிட - துறக்க.

கoக. குழவியும் தானும் வெவ்வேறிட த்துப் பிரிவுற்ற.

கoஎ. மான்ற - மயங்கி. வரையாள்-தன்னலம் வீலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதா ரென்னும் நியதியில்லானாய்.

கoச - கoஎ. நாட்டிற் காருகமடந்தை கணவன்கைவிடுதலால் வேறுகி மான்று போய் வையானாய் வாழ்வுழியென்க. இல்லறவொழுக்கினளாகிய இவள் கற்பொழிந்து வானவின்றி வாழ்தற்கு அரசன்கொடுங்கோன்மைகாரணமாதலின், 'ஆனபவர் கலக்குற' என்பது கூறப்பட்டது ; "மாதவா நோன்பு மடவாரகறபுங், காவலன் காவ லினநெனினின்ரூல" என்று இருநூலிலேயே இக்கருதது முன்புபருதிருததல் காண்க; உடம காதை, உoஅ - உoக.

கoஅ - கoக புரிநூன்மார்பன புதல்வன்றன்னை வளர்க்க.

ககo. ஆவகப்புதல்வன - அங்ஙனம் வளர்க்கப்பட்டபுதல்வன் ; அவளதிறம்-அவள் தன்னுடைய தாயென்னுந்தன்மையை.

ககக. பின்னர்நிகழ்ந்தன்க.

ககஉ. நீர்நசைவேட்கையின் - நீரை நசையே விரும்புதலால்; நசைவேட்கை-விரதொனை; "நினனனைகவேட்கையினிரவலர் பருவதை" என்பது புறநானூறு, கூ கடம - காடு.

ககக. சூல் - கருப்பம.

ககச. வேட்டுவன்-வேடன். துரப்ப-செலுத்த.

ககநி. மான்மறி - பெண்மான் ; மான்குட்டியுமாம்.

ககங. பயிர்க்குரல் - பயிறாகியகுரல்; பயிர் - திருகுகருன் ஒன்றை மறறொன்ற அழைகரும் ஓசைகருறிப்பு; "மடமா ஞது பிணைபயி ரழைப்பின்" எனபது புறநானூறு, கடுவ. ஆன்ன பான்மையனுகி - அதன் பக்கததோனும்.

டோட்டி யெய்தோ ஞெருயிர் துறந்ததுங்
கேட்டு மறிதியோ வாட்டடங் கண்ணி
கஉ0 கடாஅ யானைமுன் கட்கா முற்றோர்
விடாஅது சென்றதன் வெண்கோட்டு வீழ்வ
துண்ட கள்ளி னுறைசெருக் காவது
கண்டு மறிதியோ காரிகை நல்லாய்
பொய்யாற் ஞெழுககம் பொருளெனக் கொண்டோர்
கஉடு கையாற் றவலங் கடந்தது முண்டோ
களவேர் வாழ்கைய ருறூஉங் கடுந்துய
ரிளவேய்ந்த தோளாய்க திதுவென வேண்டா
மன்பே ருலகதது வாழ்வோர்க் கிங்கிவை
துன்பந் தருவன துறககல் வேண்டுங்
கஙo கற்ற கல்வி யன்ருற் காரிகை
செற்றஞ செறுத்தோர் முற்ற வுணர்ந்தோர்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோ ரென்போ
ரல்லன் மாக்கட் இல்லது நிரப்புநர்
திருந்தே செலவனீ செல்லுல கறிந்தோர்
கஙடு வருந்தி வந்தோ ரருமடபசி கனேர்தோர்

---

கஅ. ஒட்டியெய்தோன - வேட்டுவன்; சுட்டு. 'ஒட்டியெயதோன்' எனறும் பாடம்.

ககக - ககக. நீதததும் துறநததும் கேட்டுமறிதியோ; இதனால், காமத்தையும் கொலையையும் நீததலவேணடுமெனபது கூறப்பட்டது.

கஉ0. கடாஅயானை - மதயானை; "கடாஅக் களிற்றின்மேல்" எனபது திருக்குறள், கoஅ. கட்காமுறறோர் - கள்ளே விரும்பியுண்டுகளிததோர்.

கஉக. கோடு - கொம்பு

கஉ0 - கஉங. கட்கா முற்றோர் இங்ஙனமாதலே, "புதுக்தோள் யானை முன் போற்ருது சென்ரு, மதுகளி மயகக தது வீனை மாய்நதாஉம்" (கஉ - ம் காதை, சஙி-ஞசு,) எனறதனாலுமுணர்க.

கஉச பொய்யாற்ருெழுக்கம-பொய் வழிக்கணெழுகுதல், பொருளெனகொண்டோர் - காரியமாகக்கொணடோர்.

கஉடு. கையாற்றவலம் - செயலறவாகிய துன்பம.

கஉசு. களவேர்வாழ்க்கையர் - களவே உழவுபோலும் இவ்வாழ்கைப்பொருளாகவுடையோர், "கைப்பொருள் வெளவுங் களவேர் வாழ்க்கைக், கொடியோர்" என்பது பெருங்பாணாற்றுப்படை, சoசக. கடுந்துயர் - மிக்கதுயர்.

கஉஅ. இவை - காமமுதலிய இவ்வை ந்தும்.

கஙo. கலவி காரிகை அன்று - கல்வி அழகுடைத்தன்று; காரிகை - அழகு; எனறது பின்பு கூறப்படும் நற்குணங்களிலலாதவழி கல்வி அழகுடையதன் றென்றவாறு. இவ்வடியையுமுனனுள அடியோடு கூட்டித துன்பந் தருவனவற்றைத் துறவாவழிக் கலவி அழகுடைத்தன்றென்று பொருள்கூறினுமபொருந்தும்.

கஙக. செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழ்வது.

கஙஙு. அல்லன்மாக்கட்கு - வறுமைத் துன்பமுடையார்க்கு. 'இல்லது நிரப்பினர்' என்றும் பாடம்

கஙஉ - கஙஙு. நிரப்புநரே வாழ்வோரென்போர்.

கஙச. எலலீ-வினி

கஙச - கஙடு. அரும்பசி கனேர்தோரே செலலுலகறிநதோர்.

துன்ப மறுக்குந் துணிபொரு ளுணர்ந்தோர்
மன்பதைக் கெல்லா மன்பொழி யாரென
ஞான நன்னீர் நன்கனந் தெளித்துத்
தேனு ரோதி செவிமுதல் வார்த்து
கசஂ மகன்றுயர் நெருப்பா மனம்விற காக
வகஞ்சுடு வெந்தீ யாயிழை யவிப்பத்
தேறுபடு சின்னீர் போலத் தெளிந்து
மாறுகொண் டோரா மனத்தின ளாகி
யாங்கவ டொழுதலு மாயிழை பொருஅ
கசடு டான்றெழு தேத்தித் தகுதி செய்திலே
காதலற் பயந்தோ யன்றியுங் காவலன்
மாபெருந் தேவியென் றெதிர்வணங் கினளென.

சிறைவிடுகோதை முற்றிற்று.

---

கசுசு. துணிபொருள்-பரமார்த்த தத்துவஞானம்.

கசுவ. மன்பதைக்கெல்லாம் - உயிர்ப் பன்மைகளுக்கெல்லாம்.

கசுச - கசுவ. அன்பொழியாரே தணி பொருளுணர்ந்தோர்.

கசுஅ. ஞானநன்னீர் - ஞானமாகிய நல்லநீரை. நன்கனம் - நன்றாக.

கசுஉ. தேனுரோதி - இராசமாதேவி. செவிமுதல் - செவியிடம்.

கசஂ. மகன்றுயர் - புதல்வனிறந்தது யரம் = புதல்விரோகம்.

கசக. அகம் - உள்ளிடம். ஆயிழை - மணிமேகலை.

கசுஅ - கசக. ஞானநீரைத் தெளித்து வார்த்து வெந்தீயை அவிப்பவென்க.

கசஉ. தேறு - தேற்றாங்கொட்டை.

கசங. மாறுகொண்டு - பகைமைகொண்டு.

கசச. ஆங்கவள் - இராசமாதேவி. ஆயிழை - மணிமேகலை.

கசக. காதலற்பயந்தோயன்றியும் - எனது பூர்வஜனம நாயகனைப் பெற்ற தலலாமலும்.

கசங - கசள. காவலன் மாபெருந்தேவியென்று - அரசனது பட்டமகிஷியா கவுமுள்ளாயென று.

- கசள. வாசந்தவையென்னுமூதாட்டி, மொழியினள், அவள் மனனவனருளாற் சென்றெய்தித் தொழுது முனனின்று வாழ்த்தி, 'மன்னவனறனமுன் தன்பங்கொன்னேல' என்று போயபின், அஞ்சிலோதி கரந்து அடகிக் கொண்டு மறைதது 'மணிமேகலையை வஞ்சஞ்செய்குவல்' என்று ஒரு நாள அரசனுக்கு, 'நிறைதக்கனறு' என, 'நீர்க்க' என்று இறைசொல, குழுவாள அவனைக்கடவுப் புக்கு 'செய்குவல்' எனறு ஊட்ட, அறிவினளாக, சொடுப்ப, அணிதலும், இருப்ப, போயபின், அடைப்ப, இருப்ப, அவன்தொழ, மணிமேகலைஒழிவின் றுணர்த்து மற்றுமுனைசெய்யும; அவனமுனைசெய்பவன் அவிப்ப, அவள தொழுதலும், ஆயிழை பொறுஅளாய 'மாபெருந்தேவி' என்று வநிரவணங்கினளென விணைமுடிவுசெய்க.

இருபத்துநான்காவது

# ஆபுத்திரனுடைந்தகாதை.

[இருபத்து நான்காவது மணிமேகலை மாநகரோழிந்து ஆபுத்திரனுடைந்தபாட்டு.]

மன்ன குமரனே வஞ்சம் புணர்த்த
தொன்முது கணிகைதன் சூழ்ச்சியிற் போயவன்
விஞ்சையன் வாளின் விளிந்தோ னென்பது
நெஞ்சு நடுகுறக் கேட்டுமெய் வருந்தி
மாதவி மகடனே வான்சிறை நீக்கக்
காவலன் றேவி காற்கீழ் வீழ்ந்தாங்
கரவே ரல்கு லருந்தவ மடவா
ருரவோற் களித்த வொருபத் தொருவரு
மாயிரங் கண்ணே னவிநயம் வழூஉக்கொள
மாயிரு ஞாலத்துத் தோன்றிய வைவரு
மாங்கவன் புதல்வனே டருந்தவ னுணர்ந்த
வோங்கிய சிறபபி னொருதூற்று நாலவருந்
திருந்திழை மணிமுடித் தேவர்கோன் றன்மு
னுருப்பசி முனிந்த வெண்குவ தெழுதுகியு
மொன்று கடைநின்ற வாறிரு பதின்மரு
தொன்றுபடு மாநகர்த் தோன்றிய நாண்முதல்
யானுறு துன்ப மியாவரும பட்டிலர்
மாபெருந் தேவி மாதர் யாரினும்

---

க. மன்னகுமரனே - உதயகுமரனே. புணர்த்த - சோதித்திய.

உ. முதுகணிகை - சித்திராபதி; எழு வாய்; தொன்முது - ஒருபொருட்பன் மொழி. போயவன் - உதயகுமரன.

ங. விளிந்தோன் - இறந்தான்.

இ. மாதவிமகடனே - மணிமேகலையை. நீக்க - நீங்குதறபொருட்டு.

சு. காவலன்றேவி - இராசமாதேவி.

இ - சு. நீக்க வீழ்ந்து.

உ - சு கணிகை, விளிந்தோனென்ப தைக் கேட்டு வருந்தி வீழ்ந்து.

எ. 'அரவோர்' என்பது முதலியன சித்திராபதிகூற்று.

கக. புதல்வன் - சயந்தன்.

எ - கஉ. (?)

கடு. தூற்றிருபதொருவர். 'ஒன்று கடையிட்ட' எனறும் பாடம்.

கசு. தொன்று - பழமை.

கஅ. மாபெருந்தேவி - விளி. மாதர் நாடகக்கணிகைகள். 'மாதர் யாவரும்' என்றும பாடம்.

கஎ-கஅ. மாதரெல்லாருள்ளும் யாஞ்சு துன்பம் யாவரும்பட்டிலரென இயைத்.

பூவிலை யீத்தவன் பொன்றின னென்று
மாதவி மாதவர் பள்ளியு ளடைந்ததும்
பாத்துபடு மணிதொறும் பாத்திர மேந்தி
யாங்கக் கூத்திசென் றையங் கொண்டது
நகுத லல்லது நாடகக் கணிகையர்
தகுதி யென்னுந் தன்மை யன்மையின்
மன்னவன் மகனே யன்றியு மாதரா
லிந்நக ருறாஉ மிடுக்கணு முண்டா
லும்பளந் தழீஇய வுயர்மண னெடுங்கோட்டுப்
பொன்குயிலை யுலாவும் புண்ணியங் கானற்
கொர்மணி நெடுமுடிக் கிள்ளி முன்னு
விளவேனி லிறுபப விறும்பூது சான்ற
பூநாறு சோலை யாருயி லொருசிறைத்
தானே தமிய னொருத்தி தோன்ற
வின்ன னார்கொ லீங்கிவ னென்று
மன்னவ னறியான் மயக்க மெய்தாக்
கண்ட கண்ணினுங் கேட்ட செவியினு
முண்ட வாயினு முயிர்த்த மூக்கினு
முற்றுண ருடம்பினு மெற்றிசிலைக் காமன்

---

கக. பூவிலை - அற்றைப்பரிசம்; "பூவிலை மடந்தைய ரேவற் கெழியர்" என்பது சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்தகாதை, நிக. ஈத்தவன் - கோவலன்.

உ0 மாதவர்பள்ளி - சங்கத்தாரான அறவண அடிகளுறையுமிடம்.

உஉ. அரங்ககூத்தி - மணிமேகலை.

உக - உஉ. அரங்கக்கூத்தி பாத்திரமேந்திச் சென்று மனைதொறும் ஐயங்கொண்டதும்.

உ0 - உச. அடைந்ததும் கொண்டதும் நகுதற்குக் காரணமாவனவேயன்றி நாடகக்கணிகையர்களுடைய இயலபன்மையால் அவற்றை அவர்க்குத் தகுதி யென்று கூறார்; இனி 'நாடகக்கணிகையர்' என்பதை எழுவாயாகக் கொண்டு அவர் தகுதியென்னுரெனினுமமையும்.

உடி. மன்னவன் மகனேயன்றியும் - உதயகுமாரனுக்கு உண்டான இடுக்கணில் லாமையும், மாதரால்-மணிமேகலையால்.

உக. இடுக்கண் - துன்பம்.

உஎ. உம்பளம் - உப்பளம்; விகாரம். கோடு - கரை.

உஅ. கானல் - கடற்கரைச்சோலை

உக. நெடுமுடிக்கிள்ளி - அரசனபெயர். முன்னு - முன்னுக.

கூ. இறுப்ப - நுங்குதலால் இறுமபூது - அதிசயம். இறுப்பசசான்ற.

கூக. சோலை - சோலையில். ஒருசை - ஒருபக்கத்தில்.

கூஉ தானே தமியன் - சான்தனிதந் வனாய்; தமி - தனிமை; கஅ - மகிதை, கஉச.

உக-கூஉ. முன்னுத் தோன்றவென்க.

கூக. ஈங்குளனாகிய இத்தன்மையயுடையான் யாவனோவெனறு

கூச. அறியான் - அறியானுய். மன்னவன் மயக்கமெய்தி; 'மயக்கமெய்தி' வன்பது இடகரர்.

கூக. வாயென்றது நாவினை. உயிர்த்த - மோந்த.

கூஎ. உற்றுணருடம்பு - தீண்டியுணரு முடம்பு.

மயிலையுஞ் செயலையு மாவுங் குவளையும்
பயிலிதழ்க் கமலமும் பருவத் தலர்ந்த
மலர்வா யம்பின் வாசங் கமழப்
பலர்புறங் கண்டோன் பணிந்துதொழில் கேட்ப
வொருமதி யெல்லை கழிப்பினு முரையாள்
பொருவரு பூங்கொடி போயின வங்காள்
யாங்கொளித் தனளவ் விளங்கொடி யென்றே
வேந்தரை யட்டோன் மெல்லியற் றேர்வுழி
நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச்
சலத்திற் றிரியுமோர் சாரணன் றோன்ற
மன்னவ னவனீ வணங்கி முன்னின்
றென்னுயி ரனைய ளீங்கொளித் தாளுள
ளென்னு ளொருத்தியைக் கண்டியோ வடிகள்
சொலுமி னென்று தொழுவன னுரைப்பான்
மண்டிலே னுயினுங் காரிகை தன்னைப்
பண்டறி வுடையேன் பார்த்திப கேளாய்

---

ஈஅ. மயிலை - மல்லிகைவிசேடம். செயலை - அசோகு.

ஈக. பயிலிதழ் - செறிந்தஇதழ்.

ஈ0. கமழ - கமழ்தலால்.

ஈஅ - ஈ0. மயிலை முதலியனவாகிய அமபென்க.

ஈஙி - ஈ0. கண்ணினும் செவியினும் வாயினும் மூக்கினும் உடமபினும் காமனுடைய மலரம்பின் வாசங்கமழ்தலால். சண்டுக்கூறிய 'கண்டசண்' முதலியன அரசனுடைய பொறிகள்; என்றது - வேறுவேறுகாலங்களில் வேறுவேறுபொருள்களானனுபலிகப்படுவன ஒருகாலத்து அவள்கண்ணே யனுபலிக்கப்பட்டனவென்பதாம்.

ஈச. பலர்புறங்கண்டோன் - அரசன்.

ஈஉ. மதி - மாதம். கழிப்பினும் - கழித்தாளாயினும். உரையாள் - சொல்லாளாய்.

ஈஙு அந்நாள் - அந்நாளில்.

ஈஙி. தேர்வுழி - தேடும்பொழுது.

ஈசு. நிலத்திற்குளித்து-நீரிற்புகுவது போல நிலத்திற் புகுந்து. நெடு விசும் பேறி - சந்திரசூரியர்களே யெட்டிப்பிடித்தறுச்செலவதுபோல் நீண்ட ஆகாயத்திற்சென்று.

ஈள. சலதத்தில் திரியும் - பூமிமேல்நடப்பதுபோல் நீர்மேலேநடந்துதிரியும்.

ஈசு - ஈள. குளித்து எறித் திரியும் ஒர்சாரணன்தோன்றவென்க. நிலதத்திற் குளித்தல் முதலியன அற்புதசத்தியாகிய இருத்தியெனப்படும். தனது தந்தையாகிய சுத்தோதனனுக்கு ஞானமுண்டாகுதற்பொருட்டு நிலத்திற்குளித் தன்முதலிய பலவற்புதங்களைப் புத்தன காட்டினனென்று அசுவகோஷபோதிசத்துவரென்பவராற் செய்யப்பட்டுள்ள புதசரிதத்தின், கூ-ம் வர்க்கததாற் றெரிகின்றது; "நீரினிற் பூவில வானினிலத்துழி யொதுங்கு கின்ற, சாரணரெண்ம ராவர் சமணரி லிருத்தி பெற்றோர்" என்றார் சூடாமணிநிகண்டையாரும்; மக்கட்பெயர்தொகுதி ச. "வானூடிழிந்தோன்" (கo-ம்காதை, கூ) என்று இந்நூலில் முனவந்திருத்தல்காண்க.

ஈஅ. அவனீ - அச்சாரணனே.

ஙிo. அன்னள் - அத்தன்மையாள்.

ஈஅ - ஙிக. அவனீ வணங்கி நின்று சொல்லுமினென்று மன்னவன் றொழுவென்க.

ஙிகூ. அறிவுடையேன் - அறிதலுடையேன்.

நாக நாடு நடுக்கின் றுள்ளவன்
நிரு வாகை வேலோன் வஞ்சிவணன் றேவி
வாச மயிலை வயிற்றுட் டோன்றிய
பீலிவளை யென்போள் பிறந்த வந்நா
ளரவிகுலத் தொருவ னிணைமுலை நேரயற்
கருவொடு வருமெனக் கணியெடுத் துரைத்தன
கூ0 ளங்கப் புதல்வன் வருஉ மல்லது
பூகொடி வாளாள் புலமட லீதுகே
டவதச சாந்தி செய்யா நாளுன்
காவன் மாநகர் கடல்வயிறு புகூஉ
மணிமே கலைகன் வாய்மொழி யாலு
கூரு தணியா திந்திர சாபமுண் டாகலி
னங்குப்பதி யழிதலு மீங்குபா திதெய்தலு
மேந்தரை யட்டோய மெயினைக் கொண்டிக்
காசின மாநகர் கடலவயிறு புகாமல
வாசவன் விழாக்கோண் மறவி லென்று
எ0 மாதவன் போயின மாநாட் டொட்டிய
காவன் மாநகர் கலக்கொழி யாநாட்
றன்பெயர் மடந்தை நுயருறு மாசின்
மன்பெருந் தெய்வம் வருகுறு முண்டென
வஞ்சினே னரசன் றேவியென் றோத்தி
எரு நன்பனம் பிறந்த நாடகக் கணிகையை
யெண்ணினைத் தருகென வினாசபா தேஎனி

---

ஙஙு. வாகை - வெற்றி.

ஙஙூ - ஙூக. தேவியாகிய வாசமயிலை.

ஙூஎ. அந்நாள் - அக்காலிலு.

ஙூக. கரு-கருப்பம். வரும் - பருவான். கணி - நூலவல்ல நிமித்திகன்.

ஙூஅ - ஙூக. அந்நாளிற் கணியெடுத்து ரைத்தனன்.

கூ0. வரூஉமல்லது -வருவானேயன்றி.

கூக. பூங்கொடி-பீலிவளை. புலம்பல் - வருந்தாதே.

கூஎ. தீவகச்சாந்தி - இந்திரவிழவு.

கூக. நகர் - காவிரிப்பூம்பட்டினம்.

கூச. மணிமேகலை - மணிமேகலாதெய்வம். அது-நகர் கடல்வயிறு புகுதல்.

கூஎ - கூச. செய்யாநாளில வாய்மொழியால் நகர் கடல்வயிறு புகூஉமென்க.

கூச - கூக. இந்திராபமுமுண்டாதலின, அது தணியாது.

கூக ஆங்கு - அக்காலத்தே. பதிவிண்டில முன்னது நகரம், பினனது அரசன். 'ஆவகுப் பதியழிதலு மூங்குப்பதி புருதலும்' என்பது பாடம.

கூஅ. காசு - குற்றம.

ஙூக. மறமில்லை - மறவாதே.

எ0. மாதவன் - சாரணன.

எக. கலகரு - கலங்குதல.

எஎ. மடந்தை - மணிமேகலை.

எரு. தெய்வம்-மணிமேகலாதெய்வம்.

எகு. காடகக்கணிகை - மணிமேகலை. 'நஞ்சுணையிருந்த நாடகக் கணிகை' என்பது பாடம.

எசு. தருகென - தருவாயென்று இந்திராபதி கேட்ப.

கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு
முள்ளக களவுமென் றிவோர் துறந்தவை
தலைமையாக் கொண்டநின் றலைமையில் வாழ்க்கை
அ0 புலைமையென் றஞ்சிப் போந்த பூங்கொடி
நின்னெடு போந்து நின்மணிப் புகுதா
லென்னே டிருகருமென் றீங்கிவை சொல்வழி
மணிமே கலைதிற மாதவி கேட்டுத்
துணிகயந் துகள்படத துளங்கிய வதுபோற்
அடு றெளியாச சிந்தையள் சுதமதிக குரைத்து
வளியெறி கொமபின் வருந்திமெய்ந் நடுங்கி
யறவண ரடிவீழ்ந் தாங்கவர் தமமுடன்
மறவேன் மன்னவன் றேவிதன் பால்வர
தேவியு மாயமுஞ சிததிரா பதியு
கூ0 மாதவி மகளு மாதவாக காண்டலு
மெழுந்தெதிர் சென்றுங் கிணைவளைக் கையாற்
றெழுநதகை மாதவன் றணிையடி வணங்க
வறிவுண் டாகவென் றுங்கவன் கூறலு
மிணைவளை நல்லா ளிராசமா தேவி
கூரு யருந்தவர்க் கமைந்த வாசனங் காட்டித்
திருந்தடி விளக்கிச் சிறப்புச செய்தபின்

---

எஎ. 'கள்ளுமபொய்யும்' என்பது முத லியன இராசமாதேவிகூற்று.

எஅ. உரவோர் - அறிவுடையோர். துறநதவை - நீக்கியவை.

எஎ-எஅ. உஉ-ம் காதை, கஎ0-கஎஉ.

எக. தலைமையில் வாழ்க்கை - கடை யான பரததைமைதிதொழில; "மேலோ ராயினு நூலோ ராயினும, பால்வகை தெரிநத பகுதியோ ராயினும, பிணியெ னைக கொண்டி பிறகிட் டொழியுங, கணிகையர் வாழ்கைக கடையே" என ரூரா சிலப்பதிகாரதது ம, காடுகாண்கா தை, கஅ0 - கஅக. 'தனமையில வாழ் கைக' என றும பாடம்.

எஎ - எக — உ - ம் காதை, நிஎ.

அ0. புலைமை-அசுத்தமுடையது. பூங் கொடி - மணிமேகலை.

அஉ. இருகரும - இருப்பாள் ஈங்கி னைசொலவழி-இவறறை இராசமாதேவி சொலலுபொழுது.

இனி மணிமேகலையின் செய்திகேட் டமாதவி அறவணவடிகளுடன் இராச மாதேவிபாலவருதல் கூறப்படும்.

அரு. திறம்-காவலிவிருத்தல். திறத் தைககேட்டு.

அச. துணிகயம் - தெளிந்த நீர்நிலை. துளங்குதல் - கலங்குதல்.

அடு. சிந்தையள் - சிந்தையளாய்.

அசு. வளியெறிகொமபின் - காற்றால லைகசப்பட்ட பூங்கொம்புபோல.

அஉ - அஅ. ஈங்கிவை சொல்வழி மா தவி கேட்டுத தெளியாச்சிந்தையளாய் உரைத்து வருந்தி நடுங்கி வீழ்ந்து அவ ருடன இராசமாதேவிபால வரவென்க.

அக.—உச-ம் காதை, கசக. ஆயம் - சில தியாகூட்டம்.

கூ0 - கூரு. நல்லாளாகியதேவி ஆசன ஙகாடடி விளக்கிச் சிறப்புச் செய்தபி னைனக.

யாண்டுபல புக்கதும் மிணையடி வருந்தினென்
காண்டகு நல்வினை நும்மையீங் கழைத்தது
நாத்தொலி வில்லா யாயினுந் தளர்ந்து
க00 மூத்தவிவ் யாக்கை வாழ்கபல் லாண்டெனத்
தேவி கேளாய் செய்தவ யாக்கையின்
மேவினே னுயினும் வீழ்கதிர் போன்றேன்
பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்று
றிறந்தா ரென்கை யியல்பே யிதுகேள்
க0ரு பேதைமை செய்கை யுணர்வே யருவுரு
வாயி னுறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பய
னிற்றென வருத்த வியல்பீ ராறும்
பிறந்தோ ரறியிற் பெரும்பே றறிகுவ
கக0 ரறியா ராயி னுழ்ஞர் கறிகுவர்
பேதைமை யென்ப தியாதென வினவி
னேதில விவற்றை யுணராது மயங்கி
யியற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளித
கககு லுலக முன்றினு முயிரா முலக
மலகில பல்லுயி ரறுவகைத் தாகு

---

கூஎ. 'யாண்டு பலபுக்க' எனபது முதலியன இராசமாதேவிகூற்று. யாண்டு - வருடம்.

கூஏ - கூஅ. எனது நல்வினை இணையடி வருந்த நும்மை ஈங்கழைத்தது.

கூக. நாத்தொலிவில்லாயாயினும் - நா மெலிதலில்லாயாயினும்; சொல்வன்மை குறைந்திலா யென்றபடி. 'நாத தொலி வில்லை யாயினுங் தளர்ந்து' என்றும் பாடம்.

க00. இவ்யாக்கையென்றது - அறவணவடிகளுடம்பை. 'மூத்தநிவ் யாக்கை' என்றும் பாடம். எனறு இராசமாதேவிசொல்ல.

கூக - க00. "தாமுநிர் யாக்கை நடுக்கா ராவி, நுனைமுள் நானன்" என்று முன்னும் வற்றிருத்தல் காண்க; கூ-ம் காதை, க - ச.

க0க. 'தேவிகேளாய்' என்பது முதலியன அறவணவடிகள் கூற்று. தவயாக்கை - தவவுடம்பு.

க0உ. வீழ்கதிர் - அஸ்தமிக்குஞ்ஞாயிறு. மரணத்திற்குச் ஞாயிறு அஸ்தமித்தலை உவமைகூறுதல் பௌத்தரன்மரபு. "சாகாடென்ப சருவருந் தன்மை, யாக்கை வீழ்கதி ரெனமறைக் திடுதல்" (கூ0 - ம் காதை, க0உ க0க) என இதனிலிற் பின்பு வருதல் காண்க.

க0க - க0ச. பிறப்புப்பல்மூப்பிறப் புக்கள உடலுக்கியற்கைவே றமை.

க0டு. க0அ. பேதைமை முதலிய பன னிரண்டும் துவாதசாங்கானமெனப்படும்; இவற்றினியல்பை, இந்நூல, கூ0 - ம் காதையால் விளக்கவுணர்க.

கஎக. பேதைமை - அவிச்சை.

கஎஉ. இவற்றை-துவாதசாங்கானத்தை.

கஎச. கோடு - கொம்பு.

கஎக - கஎச. பேதைமையென்பது மயங்கிக் கண்டதுமறந்து கேட்டது தெளிதலென்க.

கஎடு. 'உலகமூன்றினும்' என்பது முதற் செய்கை கூறப்படும்.

கஎடு - கஎக. உயிராமுலகம் அலகில-உயிராகிய உலகம் அளவில்லாதன. செய்கை கூறுதற்கு அக்மாக ணாடு அறுவகையுயிர்களும் கூறப்பட்டன.

கஎக - கஎஅ. பேயுமென்றே அறுவகைத்தாருமென்க.

மக்களுந் தேவரும் பிரமரு நாகரும்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
கஉ0 சொல்லப் பட்ட கருவினுட் டோற்றி
வினைப்பயன் விளையுங் காலை யுயிர்கட்கு
மனப்பே ரின்பமுங் கவலையுங் காட்டுங்
தீவினை யென்ப தியாதென வினவி
னுய்தொடி நல்லா யாங்கது கேளாய்
கஉடு கொலையே களவே காமத் தீவிழை
வலியா வுடமபிற் ரோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற் ரோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
கஊ0 றுள்ளந் தன்னி னுருப்பன மூன்றுமெனப்
பத்து வகையாற் பயன்றெரி புலவ
ரித்திறம் படரார் படர்குவ ராயின்
விலங்குஞ் பேயு நாகரு மாகிக்
கலங்கிய வுள்ளக் கவலையிற் ரோன்றுவர்
கஊடு நல்வினை யென்ப தியாதென வினவிற்
சொல்லிய பத்தின் ரொருதியி னீங்கிச்
சீலந் தாங்கித தானந் தலைநின்று
மேலென வகுத்த வொருமூன்று திறத்துத்
தேவரு மகளுரும் பிரமரு மாகி

---

கஉ0. சொலலப்பட்ட கரு - மேற்கூறிய மக்கட் கருமுதலிய ஆறும்; "தெய்வக்கருவுந் திசைமுகக் கருவும் (பதிகம், உஅ.) என்றுமுன்புவந்திருததல் காண்க.

ககஎ - கஉஉ. (செய்கை) இருவகையால் தோற்றிக காட்டு மென்க.

கஉடு. காமததீவிழைவு - காமமாகிய கொடிய விழைவு.

கஉடு - கஉஊ. கொலையும் களவும் காமமுமென உடம்பிற்ரோன்றுவன மூன்றும்.

கஉஎ. குறளை - கோள். பயனில் சொல - அறம்பொருளின்பங்களுள் ஒன்றும் பயவாத சொல்.

கஉக வெஃகல் - விரும்பல். வெகுளல் - கோபிததல்; வெஃகல் முதலிய மூன்றும் முறையே காமம் வெகுளி மயக்கமெனப்படும்.

கஊ0. உருப்பன - தோன்றுவன.

கஉஊ-கஊக. தீவினையென்பது, மூன்றும் நான்கும் மூன்றுமெனப் பத்துவகைப்படும்.

கஊஉ. இத்திறம்-கொலைமுதலிய தீய வழிகளில். படரார் - செல்லார்.

கஊஉ - கஊச. இக்கருத்து "விலங்கு நரகரும் பேய்களு மாகுங், கலங்களுர்த் தீவினை கடிமின்" எனப்பின்னும் வருதல் காணக; உடு-ம் காதை, சக-சஉ.

கஊக. சொல்லியபத்து-கொலை, களவு, காமம், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல், வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சியென்பன.

கஊஎ. சீலம் - பஞ்சசீலமுதலியன.

கசo மேவிய மகிழ்ச்சி விஞைப்பய னுண்குவ
ரரசன் றேவியொ டாயிழை நல்லீர்
புரைதீர் நல்லறம் போற்றிக் கேண்மின்
மறுபிறப் புணர்ந்த மணிமே கலைதீ
பிறவறங் கேட்ட பின்னுள் வந்தனக்
கசடு கித்திறம் பலவு மிவற்றின் பகுதியு
முத்தோர் நகையாய் முன்னுறக் கூறுவ
லென்றவ னெழுதலு மிளங்கொடி யெழுந்து
நன்றறி மாதவ னல்லடி வணங்கித்
தேவியு மாயமுஞ் சித்திரா பதியு
கடுo மாதவர் நன்மொழி மறவா துய்ம்மி
னிந்நகர் மருங்கின்யா னுறைவே னுயின்
மன்னவன் மகற்கிவள் வருங்கூற் றென்குவ
ராபுத் திரனு டடைந்ததற் பின்னுண்
மாசின் மணிபல் லவந்தொழு தேத்தி
கடுடு வஞ்சியுட் புக்கு மாபத் தினிதனக்
கெஞ்சா நல்லறம் யாதுகணுஞ் செய்குவ
லெனக்கிட ருண்டென் றிரங்கல் வேண்டா
மனக்கினி யீதென் றவரையும் வணங்கி
வெந்துறு பொணபோல் வீழ்ததிர் மறைந்த
கசுo வந்தி மாலை யாயிழை போகி
யுலக வறவியு முதியாள் குடிகையு
மிலகொளிக் கந்தமு மேதத்தி வலகொண்
டந்தர மாரூப் பறந்துசென் றுயிழை

---

கசo. மகிழ்ச்சிவிஞை - நல்வினை.

கஅடு - கசo :—சுo - ம் காதை, சடு - அக.

கசக. ஆயிழை நல்லீரென்றது, மாதவியையும் சுதமதியையும் ஆயத்தையும்

கசஉ. புரை - குற்றம். நல்லறம் - அருளறம்.

கசஎ. பிறவறம் - மற்றைச் சமயதருமம்.

கசசு. 'முத்தொகை யாக முன்னர்க் கூறுவன' என்றும் பாடம்.

கசடு - கசசு. இதனிறம் பலவற்றையும் இவற்றின்பகுதிகளையுங் கூறுவேன்.

கசஎ. இளங்கொடி - மணிமேகலை.

கசக:—உச - ம் காதை, அக.

கடுடு. மாபத்தினிதனக்கு வஞ்சியுட் புக்கு - கண்ணகியைதரிசித்தற்பொருட்டு வஞ்சிநகரத்திற் புகுந்து.

கடுஅ. அவளையும், உம் - இறந்தது தழீஇயது.

கசo அந்தி மாலையில்.

கசக. முதியாள் குடிகை - சம்பாபதி கோயில். 'முதியான்கோட்டமும்' என்றும் பாடம்.

கசஉ. கந்தம் - தூண். என்றது கந்திற்பாவையை; ஆகுபெயர் "கலிகெழு கடவுள் கந்தங் கைவிட" என்பது புறநானூறு, இஉ

கசஞ அந்தரம் ஆறு - ஆகாயமேவழியாக.

யிந்திரன்மருமா னிரும்பதிப் புறத்தோர்
கசுடு பூம்பொழி லகவையி னிழிந்து பொறையுயிர்த்
தாங்குவாழ் மாதவ னடியிணை வணங்கி
யிங்ஙகர்ப் பேர்யா திங்ஙக ராளுஞ
மன்னவன் யாரென மாதவன் கூறு
ஙாக புரமிது ஙன்னக ராள்வோன்
களஅ பூமிசந் திரன்மகன் புண்ணிய ராச
னீங்கிவன் பிறந்த வங்காட் டொட்டு
மோங்குயர் வானத்துப் பெயல்பிழைப் பறியாது
மண்ணு மானும் வளம்பல தருஉ
முண்ணின் றுருங்கு நோயுயிர்க் கில்லெனத்
களடு தடைமலர்த் தாரோன் றன்றிறங் கூறின
னகைமலர்ப் பூம்பொழி லருந்தவன் றானென.

ஆபுத்திரனுடைந்தகாதை முற்றிற்று.

---

கசுஉ. இந்திரன்மருமான் - புண்ணிய ராசன்; மருமான் - வழித்தோன்றல். பதி - நாகபுரம்.

கசுடு. அகவையின் - உள்ளிடத்தே.

கசுசு. மாதவன் - தருமசாவகன்.

கசுஅ யாரென - யாரென்ற மணிமே கலை கேட்ப. கூறும் - சொல்லுவான்.

களக. தொட்டு - தொடங்கி.

களஉ. பெயல் - மழை. பிழைப்பு அறியாது - தவறுதலையறியாது.

களந. தருஉம் - கொடுக்கும்.

களச. உயிர்களுகு நோயிலலை.

களடு. தாரோன் - புண்ணியராசன்.

களசு. அருந்தவன் - தருமசாவகன்.

கூகளசு. தொனமுதுகணிகை கேட்டு வருந்தி வீழ்ந்து எத்தி, 'தருக' என, இராசமாதேவி ஈங்கிவை சொல்வுழி, மாதவி அறவணவடிகளுடன் வர, காணடலும், எதிரென்று தினேயடிவணங்க, அவன், 'அறிவுண்டாக' என்றுகூறலும், இராசமாதேவி காட்டி விளக்கிச் செய்த பின், 'வாழ்க' என, 'தேவி கேளாய்; நலலீர், கேண்மின்; மணிமேகலை முன்னுறகுகூறுவல்' என்று அவனெழுதலும், இளங்கொடி எழுந்து வணங்கி என்று வணங்கிப் போகி எத்தி வலங்கொண்டு சென்று இழிந்து பொறையுயிர்த்து வணங்கி, 'யாது' யாவர்' என, மாதவன் கூறும்; அங்ஙனங்கூறுமருந்தவன் கூறினனென வினைமுடிவுசெய்க.

இருபத்தைந்தாவது

# ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்தகாதை.

[இருபத்தைந்தாவது மணிமேகலை ஆபுத்திரனை மணிபல்லவத்திடை யழைத்துப் புத்தபீடிகைகாட்டிப் பிறப்புணர்த்தி வஞ்சிமாநகர்புக்கபாட்டு.]

அரச னுரிமையோ டப்பொழில் புகுந்து
தரும சாவகன் றன்னடி வணங்கி
யறனு மறனு மறிந்தமு நித்தத்
திறனுந் துகளுஞ் செல்லுயிர்ப் புக்கிலுஞ்
சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்தியு
மாரிய னமைதியு மமைவுறக் கேட்டுப
பெண்ணினை யில்லாப் பெருவனப் புற்றுள்
கண்ணினை யியக்கமுங் காமனை டியங்கா
வங்கையிற் பாததிரங் கொண்டறங் கேட்கு
மிங்கினை யில்லா ளிவள்யா ரென்னக்
காவலற் றொழுது கஞ்சுக னுரைப்போ

---

க. அரசன் - புண்ணியராசன்; உரிமை - மனைவி; "உரிமைமுன் போக்கி யல்லா லொளிமுடி மன்னர் போகார்" என்பது சீவகசிந்தாமணி, நாமகளிலம் பகம், உசசு

உ. தருமசாவக னென்பது - அப்பொழிலில் நோற்றவதியும் ஒரு முனிவன் பெயர். இப்பெயர்க்குத் தருமங்கேட்பவ னென்பது பொருள்.

ங. மறன் - பாவம். அநித்தம் - அநித்தியப்பொருளின்வகை.

ஙஅ. நித்தத்திறன் - நித்தியப்பொருளின்வகை. துக்கம் - பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு, விரும்பியனபெறுமை, வேண்டாதனபெறுதல் என்னுமாறும். புக்கில் - புகுமிடம்.

ஙக. சார்பிற்றோற்றம் - பேதைமை முதலிய பன்னிரண்டு நிதானத்தினது தோற்றம். உய்தி-பிழைத்தல்; "செய்தி கொன்றோர்க் குய்தியில்" (புறநானூறு, ஙஅ.) எனவும், "உய்திக கால முளையி ரோ" (சிலப்பதிகாரம்) நாடுகாண்காதை, உசஅ) எனவும வருதலகாணக.

ஙசு. ஆரியன - ஆரியன்; என்றது புத்தரை. 'அறிவுறக் கேட்டு' எனறும் பாடம்.

ஙஎ. பெருவனப்பு - பேரழகு.

ஙஅ. இயக்கம் - இயங்குதல; இவ்வடியோடு "உருவிலாளரை டுருவம பெயர்ப்ப" (ஙஃம் காதை, சு.) என்று முன்வந்தது ஒப்புநோகக்தபாலது.

ஙக. அறங்கேட்கும் - தருமத்தைக்கேட்பாள்.

கஅ. யாரென்ன - யாரென்று அரசன் கேட்ப.

க - கஅ. அரசன், புகுந்து வணங்கிக் கேட்டு 'இவள்யார்' என்னவென்க.

கக. கஞ்சுகன் - சட்டையிட்ட பிரதானி.

கஞ்சுகன் மணிமேகலையின் வரலாற

ஞவலக் தீவிலிங் நங்கையை யொப்பார்
யாவரு மில்லை யிவடிற மெல்லாங்
கிள்ளி வளவனெடு கெழுதகை வேண்டிக்
கடு கள்ளவிழ் தாரோய் கலத்தொடும் போகிக்
காவிரிப் படப்பை நன்னகர் புகுகென்
மாதவ னறவண னிவள்பிறப் புணர்ந்தாங்
கோதின னென்றியா னன்றே யுரைத்தே
னுங்கவ ளிவளவ் வகனகர் நீகுகி
உ0 யிங்கு வந்தன ளென்றலு மிளங்கொடி
நின்கைப் பாத்திர மென்கைப் புகுந்தது
மன்பெருஞ் செல்வத்து மயங்கினை யறியா
யப்பிறப் பறிந்திலை யாயினு மாவயிற்
றிப்பிறப் பறிந்திலை யென்செய் தனையோ
உடு மணிப்பல் லவம்வலங் கொண்டா லல்லது
பிணிப்புறு பிறவியின் பெற்றியை யறியா
யாங்கு வருவா யரசநீ யென்றப்
பூங்கமழ் தாரோன் முன்னர்ப் புகன்று
மையறு விசுமபின் மடகொடி யெழுந்து
கூ0 வெய்யவன் குடபால் வீழா முன்னர்
வானின் றிழிந்து மறிதிரை யுலாவும்
பூநா றடைகரை யெகணும் போகி
மணிப்பல் லவமவலங் கொண்டு மடக்கொடி

---

றை அரசனுக்குக் கூறுதல் இனிக் கூறப் படும்.

கசு. இவள் திறமெல்லாம் - இவளு டைய வரலாறு முழுதும்.

கச. கிள்ளிவளவனென்றது உதியசும ரன் தந்தையை. கெழுதகைமை-உரிமை; என்றது - நட்பை.

கசு. காவிரிப்படப்பை நன்னகர் - கா விரியைத் தோட்டக கூற்றிற்கு எலலை யாகவுடைய காவிரிப் பூம்பட்டினம்; படப்பை - பக்கமுமாம்; "காவிரிப் படப்பைப் பட்டினம" என்பது சிலப் பதிகாரம், அடைக்கலக்காதை, கடுக.

கஅ. அன்றே - யான்போய்வந்த அக் காலத்தே.

கசு - கஅ. இவடிறமெல்லாம் அன்றே யுரைத்தேன்.

உ0. இளங்கொடி - மணிமேகலை.

கக - உ0. உரைப்போனுகிய கஞ்சு கன் 'ஈங்குவந்தனள' என்றலும்.

உக. 'நின்கைப்பாத்திரம்' என்பது முதலியன, புண்ணியராசனோக்கி ம ணிமேகலைகூறுவதுகூற்று. பாத்திரம் - அமுதசுரபி.

உஉ. செல்வத்து - செல்வத்தால்.

உசு அப்பிறப்பு - போனபிறப்பு; என்றது காலிவயிற்றிற்பிறந்த பிறப்பை.

உசு. பிணிப்பு - பற்று. பெற்றி - தன்மை.

உஎ. ஆங்கு - மணிபல்லவத்திற்கு. நீ ஆங்கு வருவாயென்று.

உஅ. தாரோன் - புண்ணியராசன்.

உ0 - உஅ. இளங்கொடி புகன்று.

உக. மடக்கொடி - மணிமேகலை.

கூ0. குடபால - மேற்றிசை.

கூக இழிதரு - இறங்கி.

பிணிப்பறு மாதவன் பீடிகை காண்டலுங்
கூடு தொழுதுவலங் கொள்ளவத் தூமணிப் பீடிகைப்
பழுதில் காட்சி தன்பிறப் புணர்த்தக்
காயங் கரையெனும் பேரியாற் றடைகரை
மாயமின் மாதவன் றன்னடி பணிந்து
தருமங் கேட்டுத் தாடொழு தேத்திப்
சஂ பெருமகன் றன்னெடும் பெயர்வோர்க் கெல்லாம்
விலங்கு நாகரும பேய்களு மாக்குங்
கலங்களுர்த் தீவினை கடிமின் கடிந்தாற்
றேவரு மக்களும் பிரமரு மாகுதி
ராகலி னல்வினை யயரா தோம்புமின்
சடு புலவன் முழுதும் பொய்யின் றுணர்ந்தோ
னுலகுயக் கோடற் கொருவன மூன்று
மந்தர ளவனறங் கேட்டோ ரல்ல
தின்னுப் பிறவி யிழுக்குந ரில்லே
மாற்றருங் கூற்றம் வருவதன் முன்னம
டுஂ போற்றுமி னறமெனச சாற்றிக் காட்டி

---

நசு. மாதவன்பீடிகை - புத்தபீடிகை.

உசு - நசு. மடக்கொடி எழுந்து இழிந்து போகி வலங்கொண்டு காண்டலு மென்க.

நசூ. பழுது - குற்றம்

நடு-நசூ. பீடிகைகாட்சி உணர்த்த.

நஎ. அடைகரை - அடைகையிலுள்ள.

நஅ. மாதவன் - பிரமதருமன்.

நஆ. 'தருமங்கேட்டு' எனபது முதலியன, பிரமதருமனே முன்னிலையாகவி, மணிமேகலை கூறுங்கூற்று.

சஂ. பெருமகன் - அரசன்; என்றது அத்திபதியை. பெயர்வோர்க்கெல்லாம்-அவர்திருகரத்திற்குச் செலவோ ரெல்லோருக்கும்.

சஉ. கலங்களுர்த்தீவினை - கலங்குதற்குக் காரணமாகிய துன்பத்தையுண்டாக்கும் கொலைமுதலிய பதகுவகையினதாகிய பாவத்தை.

சஅ. கல்வினை - கொலலாமைமுதலிய பத்துவகையினதாகிய புண்ணியததை. அயராது ஓம்புமின் - மறவாது பாதுகாத்திடுமின.

சடு. புலவன் - ஞானி; புத்தனென்பது இப்பொருட்டு. முழுதும் பொய்யின் றுணர்ந்தோன் - ஸர்வஜ்ஞன்.

சசு. உலகுயக் கோடற்கு - உலகைப் பிழைப்பித்தற்பொருட்டு; ஏகதேவனென்பது புதன்பெயர்களுள் ஒன்றுதலின், இங்கே ஒருவனென்றார்.

சடு - சசு. புலவனும் உணர்ந்தோனுமாகிய ஒருவன் உலகை உயகோடற்குத் தோன்றுமென்க.

சவ. அபனறம் - அவனும் கூறப்படும் அறம.

சஅ. இன்னுமை - துன்பம். இழுக்குநரில்லே - தப்புவோரிலலே.

சஆ. மாற்றருங்கூற்றம் - பிறரால் தடுத்தற்கரிய கூற்றம்; "மாற்றருங் கூற்றம்" என்பது தொல்காப்பியம், புறதிணையியல், உச; "மருந்தில் கூற்றம்" என்பர், இறும்பிடர்த்தலையார்; புறநானூறு, கூ.

டுஂ. அறம்போற்றுமினென்று, சாற்றிக்காட்டி - சொல்லிப் பொருளவிளங்கச்செய்து; சாற்றி - நிறைத்தென்றுமாம்; "நிவந்தசெ னீதத்ங குளங கொளச் சாற்றி" என்பது மதுரைக்காஞ்சி, உசஉ.

## ரு.—ஆபுத்திரனுடை மணிபல்லவமடைந்தகாதை. உஉசு

நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீ
ரல்வுரை கேட்டுநும் மடிதொழு தேத்த
வெவ்வுரை யெங்கட்கு விளம்பினி ராதலிற்
பெரியவன் றேன்ற மூன்னரிப் பீடிகை
நிரு கரியவ னிட்ட காரணந் தானு
மன்பெரும் பீடிகை மாய்த்துயிர் நீங்கிய
வென்பிறப் புணர்த்தலு மென்னென் றியான்றொழ
மூற்ற வுணர்ந்த முதல்வனீ யல்லது
மற்றப் பீடிகை தன்மிசைப் பொருளது
சுo பீடிகை பொருத்த பின்ன ரல்லது
வானவன் வணங்கான் மற்ற வானவன்
பெருமகற் கமைத்துப் பிறந்தார் பிறவியைத்
தருமப் பீடிகை சாற்றுக வென்றே
யருளின ஞதலி னுயிழை பிறவியு
ரு மிருளறக் காட்டு மெனறெடுத் துரைத்த
தன்றே போன்ற தருந்தவர் வாய்மொழி
யின்றெனக் கென்றே யேத்தி வலங்கொண்
டீங்கிவ ளின்னண மாக விறைவனு
மாங்கப் பொழில்விட் டகனகர் புகுந்

---

நிக. நாவே கடிப்பாக வாயாகியபறை யை அறைந்தீர்; கடிப்பு - பறையடிக் குங குறந்தடி; "நாக்கடிப் பாக வாய்ப் பறை யறையினும்" என்பது சிலப்பதி காரம், ஊர்காண்காதை, உக.

சo - நிக பெயர்வோர்களெல்லாம் சாற்றிக்காட்டி அறைந்தீரெனவியைக்க.

நிசு. வெவ்வுரை - பதிஞ்ஞாளில இராகுலன் திட்டிவிடமெனனும் பாம பாலிறப்பானென்றம், நீ அவனுடு தியில சூழ்குவையென்றுஞ் சொன்ன சொற்கள். இதனீ, இந்நூல் க - ம் கா தை, சஅ-ம் அடிமுதலியவற்றாலுணர்க.

நிஅ. பெரியவன - புத்தன்; பீடிகை - பீடிகையை.

நிடு கரியவன் - இந்திரன்; "தேவர் கோ னிட்ட மாமணிப் பீடிகை" எனறு முன்பு வந்திருத்தலிகாண்க; அ - ம் காதை, நிஉ.

நிடு - நிஎ. காரணந்தானும் உணர்த் தற்குக காரணமும் என்னவென்றியான் தொழ.

நிஅ. மூற்றவுணர்ந்த முதல்வன் - எல் லாமறிந்தமுதல்வன்; ஸர்வஜ்ஞன்.

நிக பொருளது - சுமவாது; மூற்று' சுக. வானவன - இந்திரன்.

சுஉ. பெருமகற்கமைத்து - புத்தனை அறிந்து கோடறவொருட்டு இயற்றி. பிறந்தார்பிறவியை - பிறந்தோருடைய பழம்பிறப்பின் செய்தியை.

சுசு. சாற்றுக - உணர்த்துக.

சுச. அருளினன்-ஆணைதந்தான். ஆயி ழைபிறவியும் - உன்பிறவியையும்.

சுக - சுச அவ்வானவன் அமைத்துச் சாற்றுகவென்ற அருளினனென்க.

சுடு. இருளற - மயக்கமற.

சுசு. அருந்தவ-முனனிலக்கண் வந் தது.

சுடு - சுசு. அனறு உரைத்ததாகிய வாய்மொழி.

சுசு - சுஎ. எனக்கு வாய்மொழி இன் றைகுரைத்தது போன்றதென்று.

சுஅ இவள - மணிமேகலை; இன்ன

எo தக்தை முனியாத் தாய்பசு வாக
வந்த பிறவியு மாமுனி யருளாற்
குடர்த்தொடர் மாலை சூழா தாங்கோ
ரடர்ப்பொன் முட்டையு ளடங்கிய வண்ணமு
மாமுனி யருளான் மக்களே யில்லோன்
எடு பூமிசந் திரன்கொடு போந்த வண்ணமு
மாய்தொடி யரிவை யமரசுந் தரியெனுந்
தாய்வாய்க் கேட்டுத் தாழ்துய ரெய்தி
யிறந்த பிறவியின் யாய்செய் ததூஉம்
பிறந்த பிறவியின் பெற்றியு நினைந்து
அo செருவேல் மன்னர் செவ்விபார்த் தணங்க
வரசுவீற் றிருந்து புரையோர்ப் பேணி
நாடகங் கண்டு பாடற் பான்மையிற்
கேள்வி யின்னிசை கேட்டுத் தேவிய
ரூடற் செவ்வி பார்த்துநீ டாது
அடு பாடகத் தாமரைச் சீறடி பணிந்து
தேமரு கொங்கையிற் குங்கும மெழுதி
யங்கையிற் றுமலர் சுரிகுழற் சூட்டி
நறுமுகை யமிழ்துஞ்உந் திருநகை யருந்தி

---

ணமாக - இப்படி இங்கேயிருக்க. இறைவன் = புண்ணியராசன்.

எo. முனி-மண்முகமுனிவன்; கடி-ம் காதை, ச.

எக. அடர் - தகடு.

எஉ - எக:—கடி - ம் காதை, கக கச.

எக - எக. அருளால் அடங்கியவண்ணமும்.

எடு. பூமிசந்திரன் - நாகபுரத்தரசன்.

எச - எடு. இல்லோனுகிய பூமிசந்திரன்.

எக. அமரசுந்தரி - பூமிசந்திரன் மனைவி.

சுஅ - எஎ. இறைவனும் விட்டுப் புக்ருப் பிறவியும் அடங்கியவண்ணமும் போந்தவண்ணமும் கேட்டுத் துயரெய்தியென்க.

எஅ. இறந்தபிறவி - போனபிறப்பு. யாய் - தாய்; என்றது சாலியை. இறந்த பிறப்பின் செய்தியை மணிமேகலையா லுணர்ந்தான்போலும்.

எக. பெற்றி - பேறு; என்றது பசு வயிற்றிற்பிறந்ததுமுதலியவறறை.

அo. செவ்வி - தம் குறைகூறுதற் கேற்ற மனமொழிமெய்கள் இனியனுக் காலம். உணங்க - வாட.

அக. வீற்றிருந்து - கவலையின்றி யிருந்து; செமமாந்திருந்தென்றுமாம். புரையோர்ப்பேணி - பெரியோரை வழிபட்டு; அமைச்சர் புரோகிதர்களே விரும்பித் துணைக்கொண்டென்றுமாம்.

அச. ஊடல - பிணங்கல்; 'வழக்காட்டு' என்பர், புறப்பொருள்வெண்பாமாலை உரையாசிரியர். நீடாது - தாழாது.

அடு. பாடகம் - ஒருவகைக்காலணி.

அசு. குங்குமம் - குங்குமச்சாந்து.

அள. அங்கையின் - அகங்கையினுலே. துமலர் - நெருங்கிய மலர். அங்கையிற்சூட்டி.

அஅ. முகை - அரும்பு; நறுமுகைபோலும் திருநகை. 'அமிழ்தூறு திருநகை' என்றும் பாடம்.

மதிமுகக் கருங்கட் செங்கடை கலக்கக்
கூ0 கருப்பு வில்லி யருப்புக்கணை தூவத்
தருக்கிய காமக் கள்ளாட் டிகழ்ந்து
தூவறத் துறத்த னன்றெனச் சாற்றித்
தெளிந்த நாதனென் செவிமுத லிட்டவித்
தேத மின்ரு யின்று விளைந்தது
கூரு மணிமே கலைதன் காரண மாகவென்
றணிமணி நீண்முடி யரசன் கூற
மனம்வே றுயினன் மன்னென மந்திரி
சனமித் திரனவன் றுடொழு தேத்தி
யெங்கோ வாழி யென்சொற் கேண்மதி
க00 நுங்கோ னுன்னைப் பெறுவதன் முன்னுட்
பனனீ ராண்டிப் பதிகெழு நன்னுடு
மன்னுயிர் மடிய மழைவளங் காந்திங்
கின்ரூள் குழவிக் கிரங்கா ளாகித்
தான்றனி தின்னுந் தகைமைய தாயது
க0ரு காய்வெங் கோடையிற் கார்தோன் றியதென
நீதோன் றினையே நிரைத்தா ரண்ண
னேன்றிய பின்னர்த் தோன்றிய வுயிர்கட்கு
வானம் பொய்யாது மண்வளம் பிழையா

---

கூ0. கருப்புவில்லி - மன்மதன். 'கரு ப்புவி லநங்கன்' என்றும் பாடம். அருப் புக்கணை - மொட்டாமலராகிய அமபு. வில்லி கணையைத்தூவ.

கூக. காமக்கள்ளாட்டு - காமமாகிய கள்ளையுண்டு வினையாடும் வினையாட்டு; "காமக் கள்ளாட் டடங்கினர் மயங்க" என்பது சிலப்பதிகாரம், அழற்படகாதை, கஉஎ.

அஉ - கூக. 'நாடகங் கண்டு' என்பது முதலியன காமக்கள்ளாட்டிற்கு அடை.

கூஉ. தூவறத்துறத்தல - பற்றுக்கோ டறத்துறத்தல்; 'துவரத்துறத்தல்' என் றும்பாடம்.

கூரு. நாதன் - தருமசாவகன். முதல் - இடம். வித்து - அவன்கூறிய உபதேச மொழி.

கூசு. ஏதமின்ரு - குற்றமில்லாமல்.

கூசு. நீண்முடி - தொன்றுதொட்டுவ ந்தமுடி; குலத்தின்பெருமை கூறியவா று; "நெடுமுடிக் குரிசில்" என்பது சீவ கசிந்தாமணி, நாமகளிலம்பகம், உகடு. அரசன் - புண்ணியராசன்.

கூரு - கூசு. வித்து, மணிமேகலைதன் காரணமாக இன்று விளைந்தென்ற அர சன்கூற.

எஎ - கூசு. அரசன்துயரெய்தி நினை ந்து இகழ்ந்து சாற்றிக் கூறவென்க.

மேல்வருவன, சனமித்திரனென்னு மந்திரிகூற்று.

கூஎ. மன் - அரசன்.

கூக. கேண்மதி - கேள்; மதி - முன் னிலையசை.

க00. நுங்கோன் - பூமிசந்திரன். 'நுங் கோனின்னே' என்றும் பாடம்.

க0க. இப்பதி கெழு நன்னுடு - இங்க ஈதநினையுடைய நல்ல சாவகநாடு.

க0உ. கரந்து - மறைந்து

க0க - க0உ —கசை-ம் காதை, டுடு-டுசு.

க0ரு ஈன்ரூள் - சாய்.

க0க - க0ச. நாடு தகைமையதாயது.

க0அ. பிழையாது - தப்பாது.

தானுடை யுயிர்க ளுறுபசி யறியா
கசo நீயொழி காலை நின்னு டெல்லாந்
தாயொழி குழவி போலக் கூஉந்
தூயர்நீலை யுலகங் காத்த லின்றிநீ
யுயர்நிலை யுலகம் வேட்டணை யாயி
னிறுதி யுயிர்க ளெய்தவு மிறைவ
கசடு பெறுதி விரும்பினை யாகுவை யன்றே
தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு
மன்னுயிர் முதல்வ னறமுமி தன்றுன்
மதிமா றேர்ந்தனை மன்னவ வென்றே
முதுமொழி கூற முதல்வன் கேட்டு
கஉo மணிபல் லவம்வலங் கொள்வதற் கெழுந்த
தணியா வேட்கை தணித்தற் கரிதா
லரசு முரிமையு மகநகர்ச் சுற்றமு
மொருமதி யெல்லை காத்தனின் கடனெனக்
கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉ
கஉடு யிலங்குநீர்ப் புணரி யெறிகரை யெய்தி
வங்க மேறினன் மணிபல் லவத்திடைத்

---

கoசு. உயிர்கள் அறியா.

கசo நீ ஒழிகாலை-நீ நீங்கியபொழுது.

ககக. கூஉம் - கூப்பிடும்; முற்று.

கசo - ககக:—"தாயி னூவாக குழவி போல, வோவாது கூஉம்" என்பது புற நானூறு, ச; "புன்கண் கொள்ளனீ போந்தற்கு இரங்கினின், மன்பெரு நன்ஞெடி வாயெதி தழைக்கும்" என்று இக் காதையிலேயே பினபு வருதல்காண்க; உசுசு - உசுள.

ககசு. உயர்நிலையுலகம் - நிருவாணம்; "வரனென்னும் வைப்பு" (திருக்குறள், உச.) என்று வந்திருத்தல்காண்க. வேட்டணையாயின் - விரும்பினுயாயின்.

ககச. இறுதி - மரணம். உயிர்கள் இறுதியெய்தவும்.

ககடு. பெறுதி - இலாபம்.

ககசு - ககடு. வேட்டணையாயின் விரும்பினையாகுவை.

ககசு. தன்னுயிர்க்கு - தன்னுயிர் வருந்துதற்கு. ஓம்பும் - பாதுகாக்கும். மன்னுயிர்முதலவன் - புத்தன். அறம் - கருணையம. இது நீ துறந்து நிருவாண மடைதற்கெண்ணியது. இது முதல்வ னறமுமன்று.

ககசு - ககஎ. புத்தனே, 'பரதுக்கதுக் கன்' (சிவஞானசித்தியார், பரபக்கம், சௌத்திராந்திகன்மதம) என்று கூறியிருத்தலகாண்க.

ககஅ. மதி மாறேர்ந்தனையென்றன்; பிறவுயிர்களின் வருததத்தை நீக்கக்கரு தாது தன்பயனேககருதித் துறததற்கு எண்ணினமையால்

ககக. முதல்வன் - புண்ணியராசன்.

ககஅ - ககக. சனமித்திரன், மன்மனம் வேறுயினனென்று தொழுதேதனி முது மொழிகூற.

கஉசு. மதி - மாதம்.

கஉச. கலஞ்செய் கம்மியர்-கப்பலில் தொழில்செய்வோர்; "கலம்புணர் கம்மியர்" (எ-ம் காதை, எo.) என்று முன் புவந்திருத்தல் காண்க.

கஉடு. புணரி - கடல்.

ககக - கஉசு. முதல்வன் அம்மொழியைக்கேட்டுக் காத்தல் நின்கடனெனக கூறிக் கூஉய் எய்தி எறினனென்க.

## உடு.—ஆபுத்திரனுடை மணிபல்லவமடைந்தகாதை. உகக

தங்கா தக்கலஞ் சென்றுசார்ந் திறுத்தலும்
புரைதீர் காட்சிப் பூங்கொடி பொருந்தி
யரசன் கலமென் றகமகிழ் வெய்திக்
கசுஐ காவலன் றன்னெடுங் கடற்றிரை யுலாவுந்
தேமலர்ச் சோலைத் தீவகம் வலஞ்செய்து
பெருமகன் காணுய் பிறப்புணர் வில்குந்
திருமு பீடிகை யிதுவெனக் காட்ட
வலங்கொண் டேத்தினன் மன்னவன் மன்னவற்
கசுடு குலந்த பிறவியை யுயர்மணிப் பீடிகை
கையகத் தெடுத்துக் காண்போர் முகத்தை
மையறு மண்டிலம் போலக் காட்ட
வென்பிறப் பறிந்தே னென்னிடர் தீர்ந்தேன்
றென்றமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்
கசஐ மாரி நடுநாள் வயிறுகாய் பசியா
லாரிரு ளஞ்சா தம்பல மணைந்தாங்
கிரந்தூண் வாழ்க்கை யென்பால் வந்தோர்க்
கருந்தூண் காணு தழுங்குவேன் கையி
னுடுவறங் கூரினு மிவ்வோடு வறங்கூரா
கசடு தேடா வழிய லெழுந்தது கொள்கென
வழுத சுரபி யங்கையிற் றந்தென்
பவமறு வித்த வாளெர் பாவா

---

கஉள. தங்காது-இடையே தங்காமல். இறுத்தலும் - தங்கலும்.

கஉஅ. புரை - குற்றம். காட்சி - அறிவு. பூங்கொடி - மணிமேகலை.

கசுஐ-கசுக. காவலன் றன்னெடும் வலஞ்செய்து.

கசுஉ. பெருமகன் - அரசன்; அண்மைவிளி.

கஉஅ - கசுசு. பூங்கொடி பொருந்தி மகிழ்வெய்தி வலஞ்செய்து காட்ட.

கசுடு. உலந்தபிறவி-போனபிறப்பில் கிழந்த செய்தியை.

கசுவ. மையறுமண்டிலம்-குற்றமற்ற கண்ணாடி; "வயக்குறு மண்டிலம்" என்பது கலித்தொகை, உடு.

கசுடு - கசுள. மண்டிலம்போலப் பீடிகை உலந்தபிறவியைக் காட்ட.

மேல்வருவன, பழம்பிறப்புணர்ந்த புண்ணியராசன் கூற்று.

கசுக. கலை - வித்தை.

கசஐ. மாரிநடுநாள் - மழையையுடைய நடுஇரவில்.

கசஉ. இரந்துண்ணுந்தூணையே வாழ்க்கைப்பொருளாகவுடைய என்பால்வந்தோர் பொருட்டு.

கசசு. அழுங்குவேன்-வருந்துவேன்; பெயர்.

கசடு. 'ஏடாபரியல்' என்றும்பாடம்.

கசச - கசடு:—கச - ம் காதை, கஉ - கசு.

கசசு. அங்கையின் - அழகிய கையினுல்.

கசவ. பவம் - கருமக்கூட்டம்.

கசுக - கசவ. இவ்வடிகளிற்கூறப்பட்டுள்ள சரிதநிரத்தை, இந்நூலில் கச - ம் காதை, சு - ம் அடி முதலியவற்றுல் உணர்க.

யுணர்விற் றேன்றி யுரைப்பொரு ளுணர்த்து
மணிதிக ழுவிரொளி மடந்தை நின்னடி
கடுo தேவ ராயினும் பிரம ராயினு
நாமாசு கழுஉ நலங்கெளர் திருந்தடி
பிறந்த பிறவிகள் பேணுத லல்லது
மறந்து வாழேன் மடந்தையென் றேத்தி
மன்னவன் மணிமே கலையுட னெழுந்து
கடுரு தென்மேற் காகச் சென்று திரையுலாங்
கோமுகி யென்னும் பொய்கையின் கரையோர்
தூமலர்ப் புன்னைத் துறைநிழ லிருப்ப
வாபுத் திரனே டாயிழை யிருந்தது
காவற் றெய்வதங் கண்டுவந் தெய்தி
கசுo யருந்துயிர் மருந்துமு னங்கையிற் கொண்டு
பெருந்துயர் தீர்த்தவப் பெரியோய் வந்தனே
யந்நா ளின்னே யயர்த்துப் போயினர்
பின்னுள் வந்துநின் பெற்றிமை நோக்கி
நின்குறி யிருந்து தம்முயிர் நீத்தோ
கசுரு ரொன்பது செட்டிக ளுடலென் பிவைகா
ணுங்கவ ரிடவுண் டவருடன் வந்தோ

---

கசஅ. உரைப்பொருள் - சொற்பொருள்.

கசக. மணி - பளிங்கு; "மணிமரு டெண்ணீர்" என்பது மலைபடுகடாம், உடுo; முத்துமாம்.

கடுக. நாமாசு-நாக்குற்றம். கழுஉம்-போக்கும். 'நாமுறை புகழ்ந்த நலந்திகழ் திருந்தடி' என்றும் பாடம்.

கடுஉ. பிறவிகள் - பிறவிகள்தோறும். பேணுதல் - உட்கொண்டு வழிபடுதல.

கடுங. மடந்தை - விளி.

கசக - கடுங. நின்னடிகளைப் பிறவிகடோறும் பேணுதலல்லது மறவேன்.

கடுடு. உலாம - உலாவும்.

கடுசு. கனை - கனையில்.

கடுங - கடுஎ. மன்னவன் எத்தி எழுந்து சென்று கனையில நிழலில் இருப்பவென்க.

கடுஅ. 'ஆயிழை தன்னே' என்றும்பாடம்.

கடுக. தெய்வதம் - நீவதிலகை.

கசo 'அருந்துயிர் மருந்து' என்பது முதலியன, நீவதிலகை புண்ணியராசனை நோக்கிக்கூறும் கூற்று. உயிர்மருந்து-சோறு.

கசுக. பெருந்துயர் - பசிதுயர். வந்தனே - வந்தாய்.

கசுஉ. அந்நாள்-போனபிறப்பில் மணிமையிலிருந்து கப்பல்வழியேவந்து இத்தீவத்தைஅடைந்த அந்தாளில. அயாதது - மறந்து. போயினர் - வினையெச்சமுற்று.

கசுங. பெற்றிமை-தன்மை. என்றது உண்ணுநோன்போ டுயிர்ப்பதிப்பெயர்த்தமை; கச - ம் காதை, கடு.

கசுச. நின்குறியிருந்து - நீஇறந்தவிடத்து உண்ணு நோன்புடனிருந்து; குறி-இடம்.

கசுசு. ஆங்கவரிடவுண்டு-அவ்வொன்பது செட்டிகளும் உணவளிக்கவுண்டு. 'ஆங்கவர் மடவா ரவருடன் வந்தோர்' என்றும் பாடம்.

## உடு.—ஆபுத்திரனெடு மணிபல்லவமடைந்தகாதை. உகடு

சேங்கெமெய் வைத்தோ சென்பு மிவைகா
ணூர்திரை தொகுத்த வுயர்மணல் புதைப்ப
வாய்மலர்ப் புன்னீ யணிநிழற் கீழா
கஎ0 லன்புடை யாருயி ராசற் கருளிய
வென்புடை யாக்கை யிருந்தது காணுய்
நின்னுயிர் கொன்றுய் நின்னுயிர்க் கிரங்கிப்
பின்னுள் வந்த பிறருயிர் கொன்றுய்
கொலைவ னலலியோ கொற்றவ னுயிணை
கஎடு பலர்தொழு பாத்திரங் கையி னேந்திய
மடவர னலலாய் நின்றன் மாநகர்
கடல்வயிறு புக்கது காரணங் கேளாய்
நாக நன்னு டாள்வோன் றண்மகள்
பீலிவளீ யென்பாள் பெண்டிரின் மிக்கோள்
கஅ0 பனிப்பகை வானவன் வழியிற் றோன்றிய
புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தியித்
தீவகம் வலஞ்செய்து தேவர்கோ னிட்ட
மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்தழிக்
கம்பளச செட்டி கலமவந் திறுப்ப

---

கசுஎ. மெய்வைத்தோர் - உயிர்நீங்கினோர்.

கசுஅ. ஊர்திரை தொகுத்த - பரந்த அலைகள் நிரட்டிய. 'ஊதை யீட்டிய வுயர்மணல்' என்றும்பாடம்.

கசுக. ஆய்மலர்-அழகியமலர், கீழால்-கீழிடத்தே; உருபுமயக்கம்.

கஎ0. அன்பையுடைய அரியவுயிரை உனக்குக் கொடுத்த. ஆருயிரென்றது, சுண்டி விஞ்ஞானஸ்கந்தத்தை.

கஎக. காணுய் - பாராய்.

கஎ0-கஎக. இவ்வடிகளோடு, "அன்போடியைந்த வழகென்ப வாருயிர்க், கென்போடியைந்த தொடர்பு." என்னும் எங-ம் திருக்குறள் ஒப்புநோக்கற் பாலது.

கசுஅ - கஎக. புதைப்பக் கீழால் யாக்கையிருந்தது காணுயென்க.

கஎச. கொலைவன் - கொல்லுதலைச் செய்பவன்; "கொலைவன் யார்கொலோ கொலைவன் மற்றிவன்" என்பது புறநானூறு, கடுஉ.

கஎஉ - கஎச. 'நின்னுயிர் கொன்றுய்' என்பது முதலியன வஞ்சப்புகழ்ச்சி.

கஎடு. 'பலர்தொழுபாத்திரம்' என்பது முதலியன, தீவதிலகை மணிமேகலையைநோக்கிக கூறுங்கூற்று.

கஎசு. நகர் - காவிரிப்பூம்பட்டினம்.

கஎசு - கஎஎ. நகர் கடலிலமூழ்கிற்று.

கஎஅ. நாக நன்னுடாள்வோன் - வானவணன்.

கஅ0. பனிப்பகைவானவன்-சூரியன். வழி - பரம்பரை.

கஅக. பூங்கொடி - பீலிவளீ.

கஅ0 - கஅக. பூங்கொடிபொருந்திய தீனே, இந்நூல உச - ம காதையில் உகூம் அடிமுதலியவற்றாலுணாக.

கஅக - கஅஉ. இத்தீவகமென்றது - மணிபல்லவத்தை.

கஅசூ. பீடிகை - புத்தபீடிகை. ஏத்தழி - துதித்தழிடத்து.

கஎஅ-கஅசூ. மகள் என்பாள் மிக்கோள் பூங்கொடி குழவியொடுபொருந்தி வலஞ்செய்து வலங்கொண்டு ஏத்தழியென்க.

கஅச. இறுப்ப - தங்க.

கஅடு வங்கவன் பாற்சென் றவன்றிற மறிந்து
கொற்றவன் மகனிவன் கொள்கெனக் கொடுத்தலும்
பெற்ற வுவகையன் பெருமகிழ் வெய்திப்
பழுதில் காட்சிப் பைந்தொடி புதல்வனைத்
தொழுதனன் வாங்கித் துறைபிறக் கொழியக்
ககூ0 கலங்கொண்டு பெயர்ந்த வன்றே காரிரு
ளிலங்குநீ ரடைகரை யக்கலங் கெட்டது
கெடுகல மாக்கள் புதல்வனைக் கெடுத்தது
வடிவேற் கிள்ளி மன்னனுக் குரைப்ப
மன்னவன் மகனுக் குற்றது பொறுஅ
ககூடு னன்மணி யிழந்த நாகம் போன்று
கானலுங் கடலுங் கரையுந் தேர்வுழி
வானவன் விழாக்கோண் மாறக சொழிந்தது
மணிமே கலாதெய்வ மற்றது பொறுஅ
ளணிநகர் தன்னை யலைகடல் கொள்கென
உ00 விட்டனள் சாபம் பட்ட திதுவாற்
கடவுண் மாநகர் கடல்கொளப் பெயர்ந்த
வடிவேற் றடக்கை வானவன் போல
விரிதிரை வந்து வியனகர் விழுங்க
வொருதனி போயின னுலக மன்னவ
உ0டு னருந்தவன் றன்னுட னுயிழை தாயரும்
வருந்தா தேகி வஞ்சியுட் புக்கனர்
பரப்புநீர்ப் பௌவம் பலர்தொழக் காப்போ
ருரைத்தன கேட்க வுறுகுவை யாயினின்

---

கஅடு. அவன்றிறம் - அவன் காவிரிப் பூம்பட்டினத்திற்குச் செல்லுதலை.

கஅசு. கொடுத்தலும் (பீலிவளை) கொடுத்தலும்.

கஅக. தொழுதனன்வாங்கி - தொழுதுவாங்கி; க - ம் காதை, உ0. பிறக் கொழிய - பின்னெழிய.

ககூ0. இருள் - இருளில்.

ககூட. கெடுத்தது - இழக்கசெய்தியை.

ககூசு. உற்றது பொறுஅன் - உண்டான துன்பத்தைப் பொறுமல்.

ககடு:—வ - ம் காதை, ககக.

ககக. தேர்வுழி - தேருமிடத்து. 'கானலும் பொழிலும்' என்றும்பாடம்.

ககவ. வானவன் விழாக்கோள் - இந்திரவிழாவெடுத்தலை.

ககசு - ககவ. தேர்வுழி ஒழிந்தது.

உ00. பட்டது - உண்டானசெய்தி.

உ0க - உ0உ. (?)

உ0ச. ஒருதனி - துணையின்றி. மன்னவன் - நெடுமுடிக்கிள்ளி.

உ0டு. அருந்தவன் - அறவணவடிகள். ஆயிழைதாயர் - உன்தாயர்; என்றது மாதவியையும் சுதமதியையும்.

உ0எ. பௌவம்-கடல். காப்போர்-மணிமேகலாதெய்வம். பலர்தொழப்பெனவத்தைக்காப்போரென்க.

உ0அ. உரைத்தன-சொல்லப்பட்டன; மூற்று.

உ0எ-உ0அ. மேற்கூறிய செய்திகள், காப்போளால் எனக்கு உரைக்கப்பட்டனவென்க. இனி, 'உரைத்தன' என்ப

மன்னுயிர் முதல்வனீ மணிமே கலாதெய்வ
முன்னு ளெடுத்தது மக்கா ளாங்கவ
னறவா சாண்டது மறவணன் றன்னீன்
மறுபிறப் பாட்டி வஞ்சியுட் கேட்பையெ
நற்சாத் தீவகத் தருள்தெய்வம் போயபின்
மன்னவ னிரங்கி மணிமே கலையுடன்
முன்னிய தூமண லகழத் தோன்றி
யூன்பிணி யவிழவு முடலென் பொடுங்கித்
தான்பிணி யவிழாத் தகைமைய தாகி
வெண்சுதை வேய்ந்தவ ணிருக்கையி னிருந்த
பண்புகொள் யாக்கையின் படிவ நோக்கி
மன்னவன் மயங்க மணிமே கலையெழுந்
தென்னுற் றனீயோ விலங்கிதழ்த் தாரோய்
நின்னு டடைந்தியா னின்னீயீங் கழைத்தது
மன்னு நின்றன் மறுபிறப் புணர்த்தி
யந்தரத் தீவினு மகன்பெருந் தீவினு
நின்பெயர் நிறுத்த நீணில மாளு
மரசர் தாமே யருளறம் பூண்டாற்
பொருளு முண்டோ பிறபுரை தீர்த்தற்

---

தைப்பெயராக்கி, 'கேட்கவுறுகுவையாயின்' என்பதனெடு கூட்டிப் பொருளு ரைப்பினும் பொருந்தும்.

உ0அ - உ0க. நின்மன்னுயிர் முதல் வனென்றது - கோவலன்மரபில் முற் பட்டானெருவணிகனே.

உ0ம. முன்னுள் - மரக்கலமுடைந்த அக்காலத்தில்.

உ0க. அறவரசாண்டது - புண்ணிய தானஞ் செய்தது. 'ஆங்கவன்றன்னே' என்றும் பாடம்.

உ0சு. தெய்வம் - தீவதிலகை.

இனிமணிமேகலைத்தோண்டித தன்பழைய உடம்பைக்கண்டு புண்ணியராசன் வருந்துதலும் மணிமேகலை அவனைத்தேற்று தலும் கூறப்படும்.

உ0டு. தூ - தாய்மை. அகழ - தோண்ட.

உ0க. ஊன்பிணியவிழவும்-தசையின் பிணிப்புநீங்கவும்.

உ0ஙு. தானென்றது - யாக்கையை. பிணியவிழா - கட்டவிழாத.

உ0அ. வெள்ளிய சுண்ணச்சாந்தால் வேயப்பட்டு அவ்விடத்து இருத்தல்போல இருந்த. 'வேய்ந்தவ ணிருக்கையின்' என்றும் பாடம்.

உ0ச. படிவம் - வடிவம்.

உ0உ. ஈங்கு - இத்தீவத்திற்கு.

உ0ரு. மறுபிறப்பு - பழம்பிறப்பு.

உ0ள. அந்தரதீவினும் - இரண்டாயிரம் சிறுதீவுகளிலும், அகன்பெருந்தீவினும் - நான்கு பெருந்தீவுகளிலும்.

உ0டு. பெயர் - புகழ்.

உ0உ - உ0டு. நின்னீயீங்கழைத்தது உணாததினிறுத்தற் பொருட்டேயென்க.

உ0ள. உலகத்திற் குற்றந்தீர்த்தற்குப் பொருளேயிராது; எல்லாவுயிர்களும் குற்றமற்றனவாமென்றபடி. பிற - இடைச்சொல. புரை - குற்றம்.

உ0ச - உ0ள. இவ்வடிகளின் பொருள், "மன்னவ னெப்படி மன்னுயிரப்படி" எனனும் பழமொழியின் பொருளே விளக்கிற்று.

கறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்
மறவா திதுகேண் மன்னுயிர்க் கெல்லா
உகo முண்டியு முடையு முறையுரு மல்லது
கண்ட தில்லெனக் காவல னுரைக்கு
மென்னுட் டாயினும் பிறர்நாட் டாயினு
நன்னுத லுரைத்த நல்லறஞ் செய்கே
னென்பிறப் புணர்த்தி யெண்ணீ படைத்தனை
உகடு நின்றிற நீங்க லாற்றேன் யானெனப்
புன்கண் கொள்ளனீ போந்ததற் கிரங்கினின்
மன்பெரு நன்னுடி வாயெடுத் தழைக்கும்
வங்கத் தேகுதி வஞ்சியுட் செல்வனென்
றந்தரத் தெழுந்தன ளணியிழை தானென.

ஆபுத்திரனுடே மணிபல்லவமடைந்தகாதை முற்றிற்று.

---

உகo. உண்டிமுதலியவற்றையல்லாமல். உறையுள் - இருப்பிடம்; "பசுத்தூண்டு பல்லுயி ரோம்புத னூலோர் - தொகுத்தவற்று வெல்லாந் தலை" என்பது திருக்குறளை, உஉ.

உசு. கண்டதில்லென - கண்டதில்லையென்று சொல்ல.

உஉஅ-உசு. அறமெனப்படுவது எல்லாவுயிர்கட்கும் உண்டிமுதலியவற்றையீதலையன்றி வேறுகண்டதில்லை யென்று மணிமேகலைசொல்ல; உண்டிமுதலியவற்றை யீதலே யறமென்றபடி.

உஉஉ. ஆயினும்-எண்ணிடைச்சொல்.

உஊரு. நன்னுதல் உரைத்த - நீசொல்லிய. செய்கேன் - செய்வேன்.

உஊச. என்பிறப்பு உணர்த்தி - என்பழம்பிறப்பை யறிவித்து. பழம்பிறப்புணர்ந்து நல்லறம் பூணுதற்குரிய விசேடவுணர்வினளுதற்குக காரணமா யிருந்ததுபற்றி, 'என்னீ படைத்தனை' என்றான். இது, "நானவன்றன்மகள்" (சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை, "தெனனவன்") என்றாற்போன்றது.

உஎடு. நின்னிடத்தினின்றும் பிரியும் வன்மையிலனென்று அரசன் சொல்ல.

உஊசு. புன்கண் கொள்ளல் நீ - நீ துன்பங்கொள்ளாதே. போந்ததற்கு இரங்கி - நீ இங்குவந்ததற்கு வருந்தி.

உஎஅ. நாடு உன்னையழைக்கும்.

உஊசு - உஎஅ :—உடு - ம் காதை, கஅo-ககக.

உஎஅ. எகுதி - போவாய்.

உஎக. அந்தரத்து-ஆகாயத்தில். அணியிழை - மணிமேகலை.

க - உஎக. அரசன், புகுந்து வணங்கிக் கேட்டு, 'இவள் யார்' என்ன, கஞ்சு

கன், 'ஈங்குவந்தனள்' என்றலும், இளங்கொடி, 'வருவாய்' என்று புகன்று எழுந்து இழிந்து போகி வலங்கொண்டு பீடிகையைக்காண்டலும், அதனைத்தொழுது அவள் வலங்கொள்ள, அப்பீடிகை உணர்த்த, பணிந்து, 'போன்றது' என்று எதிர் வலங்கொண்டு இன்னணமாக, இறைவனும் விட்டுப் புக்குக் கேட்டெய்தி நினைந்து கள்ளாட்டிகழ்ந்து சாற்றி, 'வினைந்தது' என்று கூற, மந்திரி சனமித்திரன், தொழுதேத்தி 'மன்னவ, மதிமாறேற்றனை' என்று முதுமொழி கூற, முதல்வன் கேட்டு, 'காத்தல் நின் கடன்' என்று கூறிக் கூவுக்கலையெய்தி எறினன்; அக்கலம், சென்று சார்ந்திறுத்தலும், பூங்கொடி, பொருத்தி மகிழ்வெய்தி வலஞ்செய்து, 'பீடிகை இது' எனகாட்ட, மன்னவன் வலங்கொண்டெதினன், அவனுக்குப் பீடிகை பிறவியைக்காட்ட, மன்னவன், 'மறந்துவாழேன்' என்று எதிர் மணிமேகலையுடன் எழுந்து சென்ற இருப்ப, தெய்வதம் கண்டு வந்தெய்தி, 'பெரியோய், வந்தனை; உடலென்பு இவைகாண்; என் புமிவைகாண்; காஞ்சி; கொன்றாய்; கொன்றாய்; ஆயினை; மடவரனல்லாய், நகர் கடல்வயிறு புக்கது; காரணங்கேளாய்; மணிமேகலாதெய்வம் சாபமிட்டனள்; இதுபட்டது; உலகமன்னவன் போயினன்; தாயரும் புக்கனர்; கேட்கவுருகுவையாயின் வஞ்சியுட்கேட்பை' என்று தெய்வம் போயபின், மன்னவன் இரங்கிப் படிவ நோகி மயங்க, மணிமேகலை எழுந்து, 'கண்டது இல்' எனை, காவலன் உரைக்கும்; அங்ஙனம் உரைப்பவன், 'நீங்கலாற்றேன் யான்' என, அணியிழை, 'ஏதி; செல்வன்' என்று எழுந்தனளென வினைமுடிவுசெய்த.

இருபத்தாருவது

# வஞ்சிமாநகர்புக்ககாதை.

[இருபத்தாருவது மணிமேகலை கண்ணகிகோட்டமடைந்து வஞ்சிமாநகர் புக்கபாட்டு.]

அணியிழை யந்தா மாறு வெழுந்து
தணியாக் காதற் றுய்கண் ணகியையுங்
கொடைகெழு தாதை கோவலன் றன்னையுங்
கடவு ளெழுதிய படிமங் காணிய
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
வணங்கி நின்று குணம்பல வேத்தி
யற்புக்க டனில்லாது நற்றவம் படாது
கற்புக்கடன் பூண்டு றுங்கடன் முடித்த

---

க. அணியிழை - மணிமேகலை.

உ. தணியா - குறையாத. தாய் கண்ணகி - தாயாகிய கண்ணகி.

ங. கொடைகெழுதாதைகோவலன் - ஈதல்பொருந்திய தாதையாகியகோவலன்; கோவலன் கொடையிற் சிறந்தவனென்பது, சிரிப்பிள்ளையை அறியாது தொன்ற கணவனுல் நீப்புண்ட பார்ப்பனியின் கொலைப்பாவ நீங்குதற்குத் தருமாசனத்தோருரைத்த தால்வழியே தானஞ்செய்து அப்பார்ப்பனியைக் கணவனுடுகூட்டிப் பாதுகாத்தா னென்றற் றொடக்கத்துச் சரித்திரங்களால் நன்கு புலப்படும்; இதனை, சிலப்பதிகாரம், அடைக்கலக்காதையிற் காண்க.

ச. (இமயமலைச்சிலையால்) தெய்வமாகப்பண்ணிய வடிவத்தைத் தரிசித்தற் பொருட்டு; "கைவினை முற்றிய தெய்வப் படிமம்" (நடுகற்காதை, உஉ அ.) என்ற சிலப்பதிகாரத்து வந்திருத்தல் காண்க. 'படிவங்காணிய' என்றும் பாடம்.

ஞ. வேட்கை துரப்ப - ஆசை செலுத்துதலால். கோட்டம் - கோயில்; இது சேரன் செங்குட்டுவனுற் கட்டுவிக்கப்பட்டது.

எ. 'அற்புக்கடன்' என்பதுமுதலியன மணிமேகலைவார்த்தை. அற்புக்கடன்காதலனிறப்ப உடனிறத்தலும் நீப்பாய்தலும். நற்றவம்படாதல் - நல்லதவவழியிற்சேறல்; அஃதாவது கைம்மைநோன்பைநோற்று உடம்பை வருத்துதல்.

அ. கற்புக்கடன் பூண்டு - கற்பைக் கடனுக மேற்கொண்டு; "கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது, பொற்புடைத தெய்வம் யாங்கண் டிலமால்" (அடைக்கலக்காதை, கசஈ - கசச) எனவும், "தற்பயந்தாட் கில்லைத் தன்னைப் புறங்காத்த, வெற்பயந் தாட்கு மெனக்குமோர் சொல்லில்லை, கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த, பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீரா" (வாழ்த்துக்காதை) எனவும் இவ்வண்ணம் கண்ணகியை முறையே கவுந்தியடிகளும் அடித்தோழியும் சிறப்பித்துப் பாராட்டியிருத்தல் காண்க; சிலப்பதிகாரம். கண்ணகிகற்பை, மறக்கற்பென்றும், சிறியகற்பென்றுங் கூறுவர். நீம் கடன்முடித்தது - உம்முடையகடனை நிறைவேற்றியது; என்றது, இங்கே மதுரையை அழற்படுத்திச் சினைத்துப் பதினான்காளிற் கோவலனைச் சென்று கூடியதை யுணர்த்திற்று.

ஏ - அ. இவ்வடிகளின்கருத்து இன்ன

தருளல் வேண்டுமென் றழுதுமுன் னிற்ப
கo வொருபெரும் பத்தினிக் கடவுளாங் குரைப்போ
ளெம்மிறைக் குற்ற விடுக்கண் பொறுது
வெம்மையின் மதுரை வெவ்வழற் படுநாண்
மதுரா பதியெனு மாபெருந் தெய்வ
மிதுநீர் முன்செய் வினையின் பயனுற்
கரு காசில் பூம்பொழிற் கலிங்கநன் னுட்டுத
தாய மன்னவர் வசுவுங் குமரனுஞ
சிங்க புரமுஞ் செழுநீர்க் கபிலியு
மங்காள் கின்றே ருடற்செரு வுறுநாண்
மூவிரு காவத முன்னுந ரின்றி
உo யாவரும் வழங்கா விடத்திற் பொருள்வேட்டுப்
பல்கலன் கொண்டு பலரறி யாம
லெல்வளே யாளோ டரிபுர மெய்திப்
பண்டக சலம்பகர் சங்கமன் றன்னைக்

---

தாதலே, "காதல னிறப்பிற் கணவெயி பொதத்தி, யூதுலக் குருகி னுயிர்த்தகத் தடங்கா, தின்னுயி ரீவ ரீயா ராயி, னன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர், நளியெரி புகாஅ ராயி னன்பரோ, டென்னு றை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர், பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத், தத்திறத் தாஞ மல்லலெம் மாயிழை, கணவற் குற்ற கடுந்துயர் பொறுஅண், மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக, கண்ணீ ராடிய கதிரிளை வனமுலை, திண்ணிதிற் றிருகித் தீயழற் பொதிக், காவ லன் பேரூர் கணெயெரி யூட்டிய, மாபெ ரும் பத்தினி" (உ - ம் காதை, சஉ-டுடு) என்று இந்நூலில் முன்பு வந்திருதத லாலுணர்க.

கூ. 'அழுதனணிற்ப' என்றும்பாடம்.

க - கூ. அணியிழை எழுந்து புகுந்து வணங்கிநின் றுரத்தி அருளல்வேண்டு மென்று அழுது நிற்பவென்க.

கo. பத்தினிக்கடவுள் - கண்ணகி.

கக. 'எம்மிறைக்கு' என்பது முதலிய ன, பத்தினிக்கடவுளாகிய கண்ணகிவார் த்தை. இறை - கோவலன். இடுக்கண் - துன்பம்; ஈண்டுக் கொலை.

கஉ. வெம்மையின் - கோபத்தால். மதுரை - மதுரையை. படுநாள் - படுத்து நாள்; விகாரம்.

கசு. மதுராபதியென்பது மதுரையம் பதியின் அதிதேவதையின் பெயர்; "மதுரா பதியென்னு மாது" என்றார் இளங்கோவடிகளும்.

கச. 'இதுநீர்' என்பதுமுதலியன, மதுராபதி தனக்குக் கூறியதைக் கொண்டுகூறும் பதினிக்கடவுள் வார்த்தை. வினை - தீவினை. பயன் - பிரயோசனம். இது பயன். ஆல - அசை.

கடு. காசு - குற்றம்.

கசு. ஞாயிரராகிய வசுவும் குமரனும்.

கவ. கபிலை - கபிலபுரம். 'செழுநீர்க் கபிலை' என்றும் பாடம்.

கசு - கவ. சிங்கபுரம் வசுவுக்கும், கபி லை குமரனுக்கும் உரிய நகரங்கள்.

கஅ ஆள்கின்றோர் - பெயர். நாள் - நாளில்

கக. மூவிருகாவதம்-ஆறுகாதம். முன் னுநர் - முறைபடுவோர்.

உo. வழங்கா - செல்லாத. பொருள் வேட்டு - பொருளே விரும்பி.

உக. கலன் - ஆபரணம்.

உஉ. எல்வளே - ஒளிபொருந்தியவளே யையுடையாள்; என்றது நீலியை. அரி புரம் - சிங்கபுரம்.

உசு. பண்டக்கலம் - பொன்னுலாகிய அணிகலம்; பண்டம் - பொன்; பண்ட மும் கலமுமாம்; ஈண்டுப் பண்டம -

கண்டனர் கூறத் தையனின் கணவன்
உரு பார்த்திபன் றெழில்செயும் பரத னென்னுக்
தீத்தொழி லாளன் றெற்றெனப் பற்றி
யொற்ற னிவனென வுரைத்துமன் னற்குக்
குற்றமி லோஜைக் கொலைபுரிந் திட்டன
னுங்கவன் மனைவி யழுதன ளரற்றி
கூ0 யேங்கிமெய் பெயர்ப்போ னிறுவரை யேறி
யிட்ட சாபங் கட்டிய தாகு
மும்மை வினைவந் துருத்தலொழி யாதெனு
மெய்ம்மைக ளிளவி விளமபிய பின்னுஞ்
சீற்றங் கொண்டு செழுநகர் சிதைத்தேன்

சரகரு. பகர்சங்கமன்தன்னை - விற்கும சங்கமனென்னும வணிகனை.

உச. தையல் - விளி.

உடு. பார்த்திபனென்றது வசுவை. பரதனென்பது கோவலனுடைய பூர்வஜன மநாமதேயம்.

உசு. தெற்றென - விரைவாக.

உள. ஒற்றன்-வெய்ததிபவன. மன்னற்குரைத்து. 'உரைத்து மன்னவனுல்' என்றும பாடம்.

உஅ. குற்றமிலோனை - நிரபராதியை

உக. மனைவி - நீலியென்பவள். அழுதரற்றி.

கூ0. மெய்பெயர்ப்போள் - உயிர்விடுவோள். 'மெய்வைப்போள்' என்றுமபாடம். இறுவரை - பெரியமலை; "இறுவரை யிவர்வதோ நிலங்கெயிற் றரியெனை" என்பது சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், உளை.

கூக. கட்டிய தாகும் - பந்தித்தாகும்.

கூஉ. உம்மைவினை - பழவினை. உருதல் - தோன்றுதல்.

கூரு. கிளவி - சொல.

கசு - கூரு. மாபெருந்தெய்வம் விளம்பியபின்னுமென்க. இச்சாபவரலாறு, "கடிபொழி லுடுத்த கலிங்கநன நுட்டு, வடிவேற் படக்கை வசுவங் குமரனுந், தீம்புனற பழனச் சிங்கபுரத்தினுங்,காம்பெழு கானக் கபில புரத்தினு, மரசான் செலவத்து நினைதார் வேந்தர், மியாத் திருவின் விழுக்குடிப் பிறந்த, தாய வேந்தர் சமமுட் பகையுற, விருமுக் காவதத் திடைநிலத தியாங்கணுஞ், செருவெல் வெனறியிற் செல்வோ ரினமையி, னரு மபொருள வேட்கையிற் பெருங்கல சுமந்து, கரந்துறை மாக்களிற் காசலி தன்னொடு, சிங்கா வணபுகழ்ச் சிங்க புரதிற்ஞ, சங்கா டிப்பட் டருங்கலன் பகருஞ், சங்கம னெனனும் வாணிகன் றனனை, மூந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவன, வெந்திறல் வேந்தற்குகோத தொழில செய்வோன், பரத னென்னும் பெயரனக் கோவலன், விரத நீங்கிய வெறப்பின ஞத்லி, ஞெற்ற னிவனெனப் பறறினை கொணடு, வெற்றிவேன் மன்னறகுக காட்டிக் கொல்வுழிஇக், கொலைகளப் பட்ட சங்கமன் மனைவி, நிலைகளங் காணு னீலி யென்போ, னரசர் முறையோ பரதர் முறையோ, வூரீர் முறையோ சேரியீர் முறையோ வென, மன்றினு மறுகினுஞ் சென்றனள் பூசலிட், டெழுநா ளிரட்டி யெல்லை சென றபின், நெழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்தி, மலைதலை யேறியோர் மால விசும பேணியிற், கொலைதலை மகனைக கூடுபு நின்றே, னெம்முறு துயரஞ் செய்தோர் யாவதுந், தமமுற துயரமிற் றருக வென்றே, விழுவோ னிட்ட வழுவில சாபம், பட்டனிர" (சிலப்பதிகாரம், கட்டுரைகாதை, கசுஅ - கஎ0) என்ற கணணகிகரு மதுராபாகர்த் தெய்வங் கூறியதாக இளங்கோவடிகள் கூறியிருத்தலாலும் விளங்கவுணரப்படும்.

கூஎ. நகர் - மதுரை.

கூடு மேற்செய்கல் வினையின் விண்ணவர்ச் சென்றே
மவ்வினை யிறுதியி னடுசினப் பாவ
மெவ்வகை யானு மெய்துத லொழியா
தும்ப ரில்வழி யிம்பரிற் பல்பிறப்
பியாங்கணு மிருவினை யுய்த்துமைப் போல
சஅ நீங்கரும் பிறவிக் கடலிடை நீக்திப்
பிறந்து பிறந்து முழல்வோம் பின்னர்
மறந்து மழைமாரு மகதநன் ஞாட்டுக்
கொருபெருந் திலகமென் றுரவோ ருரைக்குங்
காவரும் பெருமைக் கபிலேயம பதியி
சடு னளப்பரும் பாரமிதை யளவின்று நிறைத்துத்
துளக்கமில் புத்த ஞாயிறு தோன்றிப்
போதி மூலம பொருந்திவந் தருளித்
தீதறு நால்வகை வாய்மையுந் தெரிந்து

---

கூடு. விண்ணவர்ச்சென்றேம் - கண வனும் யானும் தேவராகச்சென்றேம்.

கூசு. அவ்வினை - மேற்செய்கலவினை. அடுசினப்பாவம் - மதுகையையழித்த கோபத்தாலுண்டானபாவம்.

கூசுகூ. பாவம் எய்துதலொழியாது.

கூஅ. உம்பர் இலவழி - தேவருலகத தில் நலவினை துகர்ச்சியில்லாதவிடதது.

கூஅ - கூக. பல்பிறப்பு யாங்கணும் - எல்லாப்பிறவியின் கணணும. இருவினை யுய்த்து - இருவினைகளாற் செலுத்தப் பட்டு.

சஉ. 'மழைவளரு' என்றும் பாடம். மகதநன்ஞாட்டுகு - மகதநாட்டுகு.

சசு. திலகம் - மேலாதல். கபிலை இராசதானியாதலின், இங்ஙனம கூறப் பட்டது.

சச. காவு-மறைத்தல. கபிலேயம்பதி-கபிலநகர்; இது, கபிலரென்று பெயரு ள்ள ஒருமுனிவர் தவஞ்செய்தற்கு முன னம இடமாயிருந்ததுபற்றி இப்பெயர் பெற்றதென்பர்; கபிலவஸ்துவெனவும் வழங்கும்.

சடு. பாரமிதை - உடம்பு நேரவும் உறுப்பு நேரவும் பொருள் நேரவும் தான முதல் ஞானமீறாகவுள்ள பத்தும பூரித் தல்; அவை, (க) தானபாரமிதை, (உ) சீலபாரமிதை, (ங) கூமாபாரமிதை, (ச) வீரியபாரமிதை, (ஞ) தியானபாரமிதை, (ஃ) ப்ரஜ்ஞாபாரமிதை, (எ) உபாயபார மிதை, (அ) தயாபாரமிதை, (கூ) பலபார மிதை, (கஅ) ஞானபாரமிதையென்ன பன. இவை தசபாரமிதையென்று கூறப்படும். இதனை, "தானஞ் சீல மேபொறை தக்க தாய வீரிய, மூன மில்தி யானமே யுண ர்ச்சி யோடு பாயமும், மான மில்ல ருளி னை வைத்த லேவ லிம்மையு, ஞான மீ ரைம் பாரமிதை நாடுங காலி வைகளே." என்னும் செய்யுளாலுணர்க; இது, நீல கேசி, மொக்கலவாதச்சருக்கவுரையிற் கண்டது. தசபாரமிதையென்பது, தச பாரமெனவும் வழங்கும்; இதனை, "இன் பஞ்சால் பெரும்பார மீரைந்து முடனி றைத்து, நன்கன நிலேபெற்ற நாதன்" (நீலகேசி, மொக்கலவாதச்சருகம.) எனவும், "தானமே முதலாகத் தசபார நிறைதருளி, யூனமொன் றில்லாமை யொழிவின்றி யியற்றினையே" (வீரசோ ழியம், யாப்புப்படலம், கக - ம் கலித்து றையுதாரணம்) எனவும் வருவனவற்று ளுணர்க. அளவின்று - அளவில்லாமல். 'அளவினறு நிறைந்து' என்றும பாடம்.

சசு புத்தஞாயிறு - புத்தரூபிய ஞா யிறு.

சஎ. போதி - அரசவிருக்ஷம்; என்றது மகாபோதியை.

சஅ. நால்வகைவாய்மை - துக்கமுத லியன.

பன்னிரு சார்பின் பகுதித் தோற்றமு
மந்நீலை யெல்லா மழிவுறு வகையு
மிற்றென வியம்பிக் குற்றவீ டெய்தி
யெண்ணருஞ் சககர வாள மெஙகணு
மண்ண லறகதிர் விரிக்குங் காலைப்
பைந்தொடி தந்தை யுடனே பகவ
னிந்திர விகார மேழுமேத் துதலிற்
முன்பக் கதியிற் ரேறறா வின்றி
யன்புறு மனத்தோ டவனறங் கேட்டுத்
துறவி யுள்ளந் தோன்றித் தொடருமை
பிறவி நீத்த பெற்றிய மாகுவ
மத்திற மாயினு மநேக கால

---

சகூ. பன்னிருசார்பு - பேதைமைமுத லிய துவாதசநிதானங்கள்

ஙூ0. பனனிருசாரபின அழிவம்.

சகூ - ஙூ0. "சாபபிற் ரீறுறறமுஞ் சார்பறத் துய்தியும" எனறு முனபு வந் திருதறல காண்க; உஙூ - ம் காதை, ஙூ.

ஙூக. இற்று - இதறன்மைறது; இத் னைத் தோற்றறதோடும் வகையோடும் தனித்தனியேகூட்டுக. குற்றவீடெய்தி- காமமுதலிய குற்றஙகளினின்றும் விடு தலபெற்று; "குற்றவீ டராக மாதிக குணஙகளைக குறைதத லாகும" என்பது சிவஞானசித்தியார், பரபட்சம், சௌதத் திராந்திகனமதம், சு.

ஙூக. அண்ணல - தலமை. முன்பு புத்தனே ஞாயிறுக உருவகித்ததற்கேற்ப ஈண்டு அவனுலுபதேசிக்கப்படிய அறங களைக் கதிராக உருவகஞ் செயதார். 'வி ரிக்கும் போது' எனறும பாடம.

சஉ - ஙூக. மகதநாட்டிற கபிலையம்ப தியில் நிறைத்துத் தோனறி வநதருளித தெரிந்து இயமபி வய்தி விரிகதிரு காலை யென்க.

ஙூச. பைந்தொடி-முன்னிலைப்பெயர்.

ஙூஙூ. இந்திரவிகாரம் எழுமை - இந்திர னால் நிருமிக்கப்பட்ட அரஙகுகள் எழ னேயும்; இவை காவிரிப்பூம்பட்டினதது ள்ளவைகள், ஆகாயசாரிகள மறையவி ருந்து பௌத்தாகமத்தின பொருளே யா வாக்கும் விளங்கவுணர்த்துவதறகு இட மாக இருப்பவை, இதனே, "பணையைந தோங்கிய பாலிலைப் போதி, யணிதிகழ் நீழ லறவோன திருமொழி, யந்தர சா ரிகளறைந்தனர் சாறறு, மிந்திர விகார மேழுடன போதி" (சிலப்பதிகாரம், நாடுகாணகாதை, கக - கச.) என்பதனு லுணர்க. ஏதுததலின் - ஏதறிய புண் ணியததால்; இதனால், கோவலனுமக கண ணனியும காவிரிப்பூம்பட்டினததிலிருநத பொழுது இவற்றை ஏதறிவழிபட்டார் களெனபது பெறப்பட்டது.

உ. உணர்ந்தோள்-மணிமேகலை. பழம பிறப்பில் நிகழ்ந்தவற்றை அறிதற்குரிய அறிவும் யோகவலித்தியைப்போன்ற இரு தியும் பகருவிகளுக்கு எப்படியேனும உணடாகுமென்பது பௌத்தநூற்றுணி பு இப்பழம்பிறப்புணர்ச்சியையும் இருத் தியையும முறையே மணிபல்லவதது ளள புததபீடிகைகாட்சியாலும் மணி மேகலாதெய்வததாலும் மணிமேகலைய டைந்தாளென்று இநதூலிலுள்ள கூ - ம் காதை, கo - ம் காதை கூறுதல் காண்க. மஹாபோதி விருக்ஷத்தினடியிலிருந்த பொழுது விததார்த்தனுக்கு மூற்பிறப்புக களில நிகழ்நதசெயதிகள் மனததிற்றோ ற்றியபின்னரே ஸததியசதுஷ்டய ஞா னம் தோற்றியதென்று புத்தசரித்திரங் கூறும்.

ஙு. புதத மென்னும் - புததனும் தரு மமும் சங்கமுமெனகிற, **புத்தன்** - ஸர் வஜ்ஞனு , பாலீபாஷையிலுள்ளதாகிய **மகாவீர்க்க** மென்னும் நூலிலுள்ள மகா கண்டகமென்னும்பாகத்திலும, மதியம நிகாயததுளள ஆரியபரியேஷணஸூத் திரததிலும், தீர்க்கநிகாயத்துள்ள மகாப ரிநிர்வாணஸூததிரத்திலும், மஹாபதான ஸூததிரதிலும புததசரிதங கூறப்பட் டுள்ளதென்பா. **தருமம்** - அவனகூறிய அருளறநூல்களள அவை, அபிதருமம், ஸூத் திரதருமம், வினயதருமமென மூன்று வகைபடுமெனனும், அவற்றுள் அபித ருமவகைகள் அபிதர்மாத்தஸங்கிரகமெ னனுநூலிலும், ஸூத்திரதாமவகைகள் லாரஸங்கிரகமென்னு நூலிலும், வினய தாமவகைகள பிராதிமுக்தகவினயவினி

முத்திற மணியை மும்மையின் வணங்கிச்
சரணு கதியாய்ச் சரண்சென் றடைந்தபின்
முரணுத் திருவற மூர்த்தியை மொழிவோ
னறிவு வறிதா யுயிர்நிறை காலத்து
முடிதயங் கமரர் முறைமுறை யிரப்பத்
துடித லோக மொழியத் தோன்றிப்

---

ச்சயமென்னுநூலிலும் சருக்கமாகக் கூறப்பட்டுள்ளனவென்றும், இம்மூன்றுவகைத்தருமங்களும் பிடகத்திரயத்தில் விரிவாகக கூறப்பட்டுள்ளனவெனறுங் கூறுவர். ஸங்கம் - பௌத்தரில் துறந்தோர்களின்கூட்டம், இதில்துறந்த இருபாலாரும் கலப்பின்றி வேறுவேறிடங்களில் இருத்தல்வேண்டுமென்பதும், அவர்களில் பிக்ஷுக்களுக்குப் பிக்ஷுணிகள் வணங்கி நடத்தலவேண்டுமென்பதும், பதின்மருக்குக் குறையாமலிருத்தலவேண்டுமென்பதும்விதி. மற்றையவிதிகளை வந்தவிடங்களிற் கண்டுகொளக.

ச. முத்திறமணி - த்ருமணி, மேற்கூறிய புத்த தரும சங்கதத தருமணியென்பர், மும்மையின் வணங்கலாவது- "புத்தம் சரணங்கச்சாமி, தர்மம் சரணங்கச்சாமி, ஸங்கம் சரணங்கச்சாமி" என்பனவற்றை மூன்றுமுறைஜபித்து மூனறுமுறைபணிதல், இனி 'மும்மையின் வணங்கி' என்பதற்கு மனோவாகுக்காயங்களென்னும் முகரணங்களால வணங்கியெனினும் பொருந்தும். 'முறைமையின் வணங்கி' என்றும பாடம

ஞ. சரணுகதி - சரணமாக அடைதல் சரணம் - அடைக்கலம்

ஒ - ரு. உணர்ந்தோள் வணங்கிச்சென்று அடைந்தபினைக என்றது தருரத்நங்களையும் மணிமேகலை வணங்கிய பினைன்றவாறு.

சு. முரணுத் திருவறமூர்த்தியை - பூர்வோத்தர விரோதமிலவாத தாமஸ்வரூபத்தை, "மலியா வறத்தின் மாதவம் புரிந்தேன்" (உஅ - ம் காதை, கo) எனவும், "முன்பின் மலியா மங்கல மொழி" (ஈo - ம் காதை, உசுக) எனவும் இந்நூலுள்ளே வந்திருத்தல் காண்க, தங்கள் தருமத்தை முதலிலும் இடையிலும் கடையிலும் உத்தமமானதென்று கூறுவர் பௌத்தர்.

மேல்வருவன அறவணவடிகள்கூற்று.

எ. அறிவு வறிதாய - நிருவாண இலக்கணதைத ஆராய்ந்து அதனைப் பெறுதற்குரிய ஞானமின்றி காரணகாரிய ஞானமினறி யென்றுமாம். கo-ம காதை, எ.

ஃ. அமரர் - மஹாராஜிகலோகமுதலிய ஆறுலகிலுமுளள தேவாகள; ஆறு தேவலோகங்களின் பெயரை இந்நூற் பதிகம, உ - உகூ - ம அடிகளின் குறிப்பிற் பாக்க.

க. துடிதலோகம = துஷிதலோகம், இது மேறகூறிய மஹாராஜிகலோக முதலிய தெய்வலோக மாறினுள் நான்காவது. கௌதம புத்தராக அவதரித்த பிரபாபாலரெனனும் போதிஸதுவர் இவ்வுலகம் அவதரிப்பதற்கு முனபு இருந்த விடமெனபர் "தொழுமடிய ரிதயமல ரொருபொழுதும் பிரிவரிய துணைவனெனலா, மெழுமிரவி கிரணநிக ரிலகுதுகில புனைசெய்தரு வினைவ னிடமாக, முழுவுமறை யவருமுனி வரருமரி பிரானுகவனு மெவருங், தொழுசகைய வியைவரு மறமருவு துறிசெய்திழு துடித்புரமே." (ரீ ராமாயணம், யாப்புப்படலம், ஈகூ - ம கலிதுறை யுதாரணம) எனனுஞ் செய்யுள, துடிதபுரமெனறு ஒரு புதனுலம பூமியிலிருந்ததாகத தெரிவிக்கினறது துடிதவிமானமெனற ஒரு விமானமிருபதாக நீலகேசியுரை கூறுகினறது. தோன்றி - கோசலதேசதநிற கபிலவஸ்துவிற் சாக்கியசகுகிரவாதியாகிய சுதோதனனுடைய பட்ட மகிஷியான மாயாதேவியின வயிறறிலிருது அவள் வலமருங்குலவழியே உயிபபினி வனதகில அவதரித்தது இங்ஙனவதரித்ததை, "உயிபபினி வனதது னொண்குழைத தேவி, வலம்படு மருங்குல வயோ யுரும, லான்றோ னவவழித தோன்றின னுதலி, னீன்றோ ளேழாநா ளினனுயிர் வைத்தாள்." (இது, விம்பசார

க0 போதி மூலம பொருந்தி யிருந்து
மாரனை வென்று வீர ஞகிக்
குற்ற மூன்று முற்ற வறுகுமை

கதையென்னுங் காப்பியம்) என்னுஞ் செய்யுளாலுணர்க.

அ - கூ. ஈண்டுக் கூறியதுபோலவே "தகரவாளத்துத் தேவ ரெல்லாந், தொக்கொருங் கீண்டித் துடித்த லோகத்து, மிகலோன் பாதம் வீழ்ந்தன ரிரப்ப" (கூ - ம காதை, எக - எச) என்று முனபுவந்திருத்தல் காண்க.

க0. போதிமூலம - இக்காலத்துப் புத்தகயையென்று வழங்கப்படுவதும் கைரஞரா அல்லது பல்குனியென்று கூறப்படும் நதிக்கரையிலுள்ளதுமாகிய இடத்தில ஐந்து கிலோயை யுடைத்தாய்விளங்கிய அரசமரத்தின் அடியில போதி - அரசமரம. இஃது ஐந்துகிலோயையுடைத்தாதல, "பீணையை தோங்கிய பாசிலைப் போதி, யணிதிகழ் நீழ லறவோன்" (சிலப்பதிகாரம், நாடுகாண்காதை. கக - கூ) என்பதனுற் பெறப்படுகின்றது. வித்தாரத்தின் உணமையறிவை யடைதற்குத் துறவுபூண்டு பலவிடத்துஞ்சென்று பலவாறுமுயன்று முடிவில இமமரத தடியில்வந்து சீலசமாதியிலிருந்து பழம் பிறப்புக்களே யறிந்து தசபாரமிதையும நிறையப்பெற்று ஆராய்ந்தபொழுது ஸதியநதஞ்ஞ ஞானமுழுதும அவனுக குதோறறினமையால, இமமரம, மஹாபோதிவிருக்மெனறு பௌதாகளால் மிகப்பாராட்டி, நெடுந்தூரத்திருந்தும சிகரோகண மெனகப்படுவது. பணடைகாலத்தில இத்தெனனடியிருந்த பௌதாகள் வடதிசைநோகி இத்தினை தொழுதுவந்தாகளெனறு தெரிகின்றது, 'போதிவிருட்சம் வடக்கேயிருப்பதென்று பௌதத்தன தொழுதலால திக்குளதெனக' என்பது சிவஞானசித்தியார், சௌதாந்திகன் மதமறுதலே, கூ - ம திருவிருத்தத்துரை. இமமரதத்தினகீழிருநது ஞானமபெற்றமையால், புத்தன் போதிவேநதனென்று கூறப்படுவன்; இம்மரதத்தடியில் வித்தாரதன தசபாரமிதையும் நிறையப்பெறறு எலலாமறிந்தானென்பது, "அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப், பொருண்முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவரன்ற, னருண்மொழியா லுலவாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார், மருணெறியாம் பிறநூலு மயக்கறுக்கு மாறுளதோ." என்னும் சித்தாந்தத்தொகைச் செய்யுளால் நன்குணர்த்தப்பட்டது, இச்செய்யுளையும் இஃது இந்த நூலிலுள்ளதென்பதையும் நீலகேசிதரடுமையும், சிவஞான சித்தியார் பரபக்கதற்கு ஸ்ரீஞானப்பிரகாசரெழுதியவுரையுந் தெரிவித்தன.

கக. மாரன் - தர்மவிரோதியான ஒரு தேவன், இவன் புத்தனுக்கு ஞானமுண்டாகாதவண்ணம் தனமகளிர மூவரும தானுமாகவநது பலவகையான இடையூறுகளைச்செய்து முடிவில் தோல்வியுற்றன; "தாமநறுங குழன்மழைக்கட் டளிரியலா தமமுன்னாக, காமனையே முனந்தொலேதாற் கண்ணேட்டம் யாதாநகொல்." என்பது வீரசோழியர், யாப்புப்படலம், கக-ம க - றை, உ - ம். மாரனென்றமையால், புத்தனே மாரஜி தனென்று கூறுவர். வீரியம தசபாரமிதையுளளொனறுதலின, அதனையுடையானெனபார் 'வீரன்' எனறார், வீரியமென்றது, இங்கே அறிவுபெறுத்துணையும் பல வகையான இடையூறறினுகுமஞ்சாது மடிவின்றிமுயன்ற முயறசியை, அது "வினைவாய போதிகையுறுமளவும் வினை மடியான், றளர்வின்றி யெழிய தாளினலலலேனே" என்பதனுற் பெறப்படும. இச்செயயுள், நீலகேசிவிருத்தசமயத் வாகரத்தில், புதசனுடைய வீரியபாரமிதைகருகாட்டிய மேறகோள, "காமற கடநத வாமன" (ந - ம காதை, எவ), "மாரனை வெலலும வீர" (கக-ம காதை, சு க) என்றார் முன்னும. இராமனே யுதத வீரனென்றும, கனனைத தானவீரனெனறும, புதசனைத தயாவீரனென்றுகூறுவாவடதூலா.

கo. குறற மூனறு - காமம் வெகுளி மயக்கங்களை, "காமம் வெகுளி மயக்கங் காரணம" எனபா பின்னும, உ.ருக - ம் அடி. இமமூன்றையும் துவரத் துறந்த

வாமன வாயமை யேமக் கட்டுரை
யிறந்த காலத தெண்ணில்புத தர்களுஞ
கறி சிறந்தருள கூர்ந்து திருவாய் மொழிநத
தீரறு பொருளி னீர்தெறி யுடைத்தாய்ச்

மையின், புத்தன் முக்குற்றங் கடிந்தோனென்று கூறப்படுவன்; "குற்றங் கெடுத்தோய்" (நி-ம் காதை, கo) என்று முன்புவந்திருத்தல் காண்க; 'அறுக்கும்' என்றதனால் குற்றமூன்றையும் கட்டென்றுராயிற்று, "போய்க் குற்ற மூனறு மறுத்தான்புகழ் கூறுவேற்கென, வாய்க்குற்ற சொல்வின் வழுவும்வழு வல்ல வன்றே." என்பது குண்டலகேசி, அவையடக்கம். "பூமகனே முதலாகப் புகுநதமர ரெண்டிசையுங், தூமலரா லடிமலரைத தொழுதிரந்து வினவியநாட், காமமுங கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த,தீமை சால் கட்டினுக்குத திறற்கருவி யாய்க்கிடந்த, நாமஞ்சா நமாகளுகு நயப்படுமா றினிதுரைத்தல, சேமஞ்சா நன்னெறிக்குச செல்லுமா றருளினேயே." என்பது, வீரசோழியம், யாப்புப்படலம், க-ம் கலித்துறை யுதாரணம. இனி, பொய், கொலை, கள், காமம், களவு என்பனவற்றை ஐகுற்றமென்று இவர் வழங்குவதுமுண்டு "கள்ளும் பொய்யுங காமமுங கொலையு, முளளக களவுமென் றுரவோர் துறந்தவை" (உ-ம காதை, எ-ஏ) என்றும், "வீடு கொண்ட நல்லறம் பகர்ந்து மனபதைக்கெலாம் விளஙகு திஙக ணோமையால் விரிந திலங்கு மனபினேன், மோடுகொண்ட வெண்ணுரைக் கருங்கடற் செழுஞ்சுடர் மூளைகதெழுந்த தென்னலாய் முகிழ்நதிலங்கு போதியி, னுகின்ற மூவகைப் பவங்கடந்து குற்றமான வைநதொடங கொர் மூன்றறுதத நாதனுண் மலர்ததுணர்ப், பீடுகொண்டவார் தளிர்ப்பிறங்கு போதியானை யெம்பிரானை நாளுமேதது வார் பிறப்பிறப்பிலார்களே." (இது, வீரசோழியம், யாப்புப்படலம், ங-ம் கலித துறையுதாரணச்செய்யுள்) என்றும் வருதல் காண்க.

கந. வாமன்... கட்டுரை— புத்தனது நால்வகைச் சத்தியங்களாகிய, இன்பதை விளைவிக்கும் பொருள் பொதிந்த சொல்; வாமன் - அழகியவன

எ - கஙு. காலத்து இரப்பத் தோனறி இருந்து வென்று வீரனுகி அறுக்குமாமனது வாய்மையாகிய கட்டுரையென்க, கo-ம் காதை, ரிஅ - எச.

கச. கௌதம புத்தருடைய காலதறிற்குமுன்பு தருமஙகுறைந்த ஒவ்வொரு காலததும் ஒவ்வொருவராகப் புதராகள பலா அவதரித்து உபதேசஞ்செயது திருமஸ்தாபனஞ்செய்தார்களென்பது பௌத்தநூற்றுணிபாதலின், 'இறநத காலத் தெண்ணில்புத் தர்களும்' என்றார். கௌதம புத்தருடைய சரித்திரதிலும், புதஜாதக கதையிலும் இக்கருத்து ஆஙகாஙகுப்பெறப்படும், கௌதம புத்தருக்கு முன்னேயுள்ள புத்தர்களுள், இருபதினமூவர பெயர்களமட்டும இப்பொழுது தெரிகின்றன. அவைவருமாறு :—(க)-தண்ணகாரர், (உ)-மேதங்கரர், (ஙு)-சரணஙகரர், (ரு)-தீபங்கரர், (ரு)-கௌண்டினனியர், (சு)-மஙகளர, (எ)-ஸுமஙகளர், (ஏ)-ஹிரேவதர், (க)-சோபிதர், (கo)-அநோமதர்சி, (கக)-பதுமர, (கஉ)-நாரதர், (கஙு)-பதுமோததரர, (கரு)-ஸுமேதர, (கரு)-ஸுஜாதர, (கசு) பிரியதர்சி, (கஎ)-அாதததர்சி, (கஉ)-தர்மதர்சி, (ககூ)-ஸித்தார்ததர, (உo)-திஷ்யர, (உக)-புஷ்யர், (உஉ)-விபச்சித, (உஙு)-சிஹி, (உரு)-விருஷபர், (உரு)-ஸுகுந்தர், (உசு)-கோவகாமர, (உஎ)-கசியபரென்பன. இவ்விருபதிறபுதெழுவரும கௌதம புதரும ஸாவஜ்ஞய புதரெனறு கூறப்படுவர். இலஙகையிலுள்ள விதிதியோதய பாடசாலைத் தலைவராகிய ஸ்ரீஸுமஙகளரால் தெரிந்து கொள்ளப்பட்டது. தண்ணகாரன், மஹாவீரன் முதலிய இருபத்துமூன்று புத்தரென்பாருமுளர.

கஙு - கரு. யான்கூறுவது, எமக்கடரையும் திருவாய்மொழிந்ததுமாகவுளளதென்று அறவணவடிகள் கூறினு ரென்க.

கசு. ஈரறு பொருளின் - பன்னிரண்டு பொருள்களால, என்றது 'பேதைதை

சார்பிற் றோன்றித் தத்தமின் மீட்டு
மிலக்கணத் தொடர்தலின்
மண்டில வகையா யறியக் காட்டி
உ0 யெதிர்முறை யோப்ப மீட்சியு மாகி
யீங்கி தில்லா வழியில வாகி
யீங்கி துள்ள வழியுண் டாகலிற்
றக்க தக்க சார்பிற் றோற்றமெனச்
சொற்றகப் பட்டு மிலகணத் தொடாபாற்
உரு கருதப் பட்டுங் கண்டநான் குடைத்தாய்

---

முதலியவற்றை. அவையாவன :— பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயனென்பன. இவற்றை முறையே அவித்தை, கர்மம அலலது ஸம்ஸ்காரம், விஜ்ஞானம், நாம ரூபம் அல்லது ரூபாரூபம், ஷடாயதனம், ஸபரிசம், வேதனை, தருஷ்ணை, உபாதானம், பவம, ஜன்மம் கர்மபலம என்பர் வடநூலார். இவை துவாதச நிதானமெனப்படும , இவறறுள் விஜ்ஞானததிற்குப் பௌதிக இயல்பு உண்டென்பர், (கூ0 - ம் காதை, சரி - சஉ.)

' 'ஈறறுபொருளின்' என்றது முதலிய வற்றிற்குப் பின்வரும், 'பேதைமை' (சரி - ம் அடி) என்பது முதலியவற்றுல் விவரணங்ங கூறப்படும.

கஎ - கஉ. சாபிற்றோன்றி - சம்பந்தத்தால் உண்டாகி , சம்பந்த மெனறது காரியகாரணத தொடர்ச்சியை. "சாபிற்றோற்றம்" (உடு - ம் காதை, கசுங) எனற முன்பு வநதிருததல் காண்க. மேறகூறிய பன்னிரண்டனுள பேதைமையிலிருநது செய்கையும், அதிலிருந்து உணாவும், அதிலிருந்து அருவுருவும, அதிலிருநது வாயிலும, அதிலிருந்து ஊறும, அதிலிருந்து நுகர்வும், அதிலிருநது வேட்கையும, அதிலிருநது பற்றும, அதிலிருநது பவமும், அதிலிருந்து தோறறமும், அதிலிருந்து வினைப்பயனும் தோன்றுமெனக்கொள்க. இதனுல் முதன்மூறைத் தோற்றங் கூறியவாருயிற்று. தத்தமில் மீட்டும் இலக்கு அண்ணத்தொடர்தலின் - அப்பன்னிரண்டனுள் செய்கை முதலிய ஒவ்வொன்றும் தீததமக்கு முன்னுள்ள வற்றில்நின்றும் தோன்றியதுபோலப் பன்னிரண்டாவதாகிய வினைப்பயனினின்றும் எண்ணுமுறையில் முதற்கண்ணின்றதாகிய பேதைமைதோனற அதனினின்று திரும்பவும் செய்கைமுதலியன முன்தோன்றியவாறே தோனறுதலால் , மீட்டும, உம்மை - இறந்ததுதழீஇயது. பேதைமை முதலிய பன்னிரணடும தங்கட்டோன்றுவனவற்றைநோக்கப் பகுதியாதலும், தமக்கு முதலாவனவற்றைநோக்க விகுதியாதலு முடையனவென்பது பௌதத்தர்கொள்கை. இலக்கு-குறி. (கூ0 - ம் காதை, கo0 - ககஉ.)

ககூ. மண்டிலம் - வட்டம், "ஊழின் மண் டிலமாச சூழுமிந் நுகாச்சி" என் பா பின்னும , (கூ0 - ம் காதை, ககஉ.)

உ0. எதிர்முறை ஒப்ப - தோன்றும் முறைமையைநீக்க எதிரதல் - தோன்றுதல் , எனறது காரணததை இல்லையாக்க வென்றபடி. பேதைமைமீளச் செய்கையும், அதுமீள உணர்வும், அதுமீள அருவுருவும், அதுமீள வாயிலும, அதுமீள ஊறும், அதுமீள நுகாவும், அதுமீள வேட்கையும, அதுமீளப் பற்றும, அதுமீளப் பவமும, அதுமீளத தோற்றமும், அதுமீள வினைப்பயனுமீளுமெனறவாருயிற்று. மீளுதல - ஈணடு இன்மைப் பொருட்டு. 'எதிர்முறை யொப்ப' என்றும் பாடம் , (கூ0 - ம் காதை, ககக - கஙகூ.)

உக. இதுவென்றது காரணததை. இல்லாகி - காரியங்களில்லையாகி.

உடு. மேற்கூறிய பேதைமைமுதலிய பன்னிரண்டனுள், பேதைமை, செய்கை என்னும் இந்த இரண்டும் முதற்கண்ட மென்றும், உணர்வு, அருவுரு, வாயில்,

மருவிய சந்தி வகைமூன் றுடைத்தாய்த்
தோற்றம ரார்கதின் மூன்று வகையாயத்
தோற்றற் கேற்ற காலமூன் றுடைததாய்க
குற்றமும வினையும் பயனும வினோ்ந்து
கூ0 நிலையில வறிய துன்பமென நோகக
வுலையா வீட்டிற் குறுதி யாகி
நால்வகை வாய்மைகளுச சாபிட னுகி
யைந்துவகைக் கந்தத் தமைதி யாகி
மெய்வகை யாறு வழகருமுக மெய்தி
கூடு நயங்க ணான்காற் பயன்க ளெய்தி
யியன்றநால் வகையால் விளுவிடை யுடைத்தாய
நின்மிதி யின்றி யூழ்பா டினறிப்
பின்போக் கலலது பொனறக கெடாதாயப

ஊறு, துகர்வு என்னு மிவ்வைந்தும் இர ண்டாங் கண்டமென்றும், வேட்கை, பற்று, பவம் என்னுமிம்மூன்றும் மூன்ரு ங்கண்டமென்றும், தோற்றமும் வினைப் பயனும் நான்காங்கண்டமெனறுங கூறப் படும்; (கூ0 - ம் காதை, கஙஙி - கசன.)

உசு. செய்கையு மூணர்வுஞ் சேர்தலே முதற்சந்தியென்றும், துகர்வும வேட்கை யுஞ்சேர்தலே இரண்டாஞசந்தியென்றும், பவமுந் தோற்றமுஞ்சேர்தலே மூன்ரு ஞ்சந்தியென்றுங் கூறுவர், (கூ0 - ம் காதை, கசஅ - கஙிஉ.)

உள. தோற்றம் - பிறப்பு (கூ0-ம் கா தை, கஙிங - கஙிச.)

உச:—கூ0 - ம் காதை, கஙிக-கசூச.

உக:—கூ0 - ம் காதை, கசூக - கஎச.

கூ0 - நக:—கூ0 - ம் காதை, கஎஙி - கஎஅ.

கூஉ. நால்வகை வாய்மைக்கு-நான்கு வகைப்பட்ட சத்தியங்களுக்கு, நான்கு சத்தியங்களாவன:—துக்கம், துக்கோத் பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரண மார்க்கமென்பன, (கூ0 - ம் காதை, கஎக - கஎஅ.)

கூக. ஐந்துவகைக்கந்தம் - பஞ்சஸ்க ந்தம், ஸ்கந்தம் - கூட்டம், அவையா வன:—உருவம், வேதனை, குறிப்பு, பா வனை, விஜ்ஞானம் என்பன; "ஓஙருரு வம் வேதனை யுளக்குறிப்புப் பாவனை மெய், தாங்குணர்வென் றைந்தாங்கத் தம்" என்பது பரமத்திமிரபானு, (கூ0-ம காதை, கடக - ககஎ.)

கூச. ஆறுவழகளவன:— உண்மைவ ழகரு, இனமைவழக்கு, உள்ளதுசார்ந்த உண்மைவழக்கு, இலலதுசார்ந்த இன மைவழக்கு, உள்ளதுசார்ந்த இன்மை வழக்கு, இல்லதுசார்ந்த உண்மைவழக்கு, என்பன (கூ0 - ம் காதை, ககக-உகச)

கூஙி. நயங்கள்நான்கு - ஒற்றுமைநயம, வேற்றுமைநயம, புரிவின்மைநயம், இய ல்புநயம் என்பன, (கூ0 - ம் காதை, உகள - உஎச.) பயன்கள் - பிரயோச னஙகள், அவை நான்குவகைப்படும (கூ0 - ம் காதை, உஎச - உகச.)

கூசு. நால்வகையால் விஞுவிடையு டைமை - துணிந்துசொல்லல், கூறிட்டு மொழிதல், விஞுவின்விடித்தல், வாய்வா ளாமை என்பன, (கூ0 - ம் காதை, உகஙி - உசக.)

கூள. நின்மிதி-நிர்மாணம்=உண்டாக்கு தல். ஊழ்பாடு-முடிவுபடுதல் ஊழ்-முடிவு. தொடக்கமும் ஈறுமின்றி யென்பதாம்.

கூஅ. பின்போக்கு - தொடர்ச்சி, இத னை ஸந்தானமென்பர், அது வாயுஸ் தானம், தீபஸந்தானம், தாராஸந்தானம், பிபீலிகாஸந்தானம் என நான்குவகைப்ப டும். பொன்றகெடாதாய் - மூற்றக்கெ டாததாகி.

கூஅ - சச:—கூ0 - ம் காதை, உஙி0-உஙிக.

பண்ணுந ரின்றிப் பண்ணப படாதா
சூ0 யானு மின்றி யென்னது மின்றிப்
போனது மின்றி வந்தது மின்றி
முடித்தலு மின்றி முடிவு மின்றி
வினையும பயனும பிறப்பும வீடு
மினையன வெல்லாந் தானே யாகிய
சுநி பேதைமை செய்கை யுணாவே யருவுரு
வாயி லூறே நுகர்வே வேடகை
பற்றே பவமே தோற்றம வினைப்பய
னிற்றென வருத்த வியல்பீ ராறும
பிறக்தோ ரறியிற் பெருமபே றறிகுவ
நிo ரறியா ராயி னுழ்ந்ர கறிகுவா
பேதைமை யென்பதி யாதென வினவி
னேதிய விவற்றை யுணராது மயங்கி
யியற்படி பொருளாற கண்டது மறத்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளித
நிநி லுலக மூன்றினு முயிரா முலக

---

இனிப் பேதைமைமுதலிய பன்னிரண்டுசார்பும் அவற்றின இலக்கணங களும் முறையே கூறப்படும்.

சுநி. பேதைமை - அவித்யை. செய்கை - காமம். உணர்வு - விஞ்ஞானம. அருவுரு - நாமரூபம்.

சுசு. வாயில் - ஷடாயதனம், அஃதாவது ஞானேந்திரியங்களும் மனமும. ஊறு - ஸ்பரிசம, அஃதாவது இந்திரிய விஷயசம்பந்தம். நுகர்வு-வேதனை, அஃதாவது சுகதுக்க அனுபவம். வேட்கை-த்ருஷ்ணை, அஃதாவது இனபததை அடையவேண்டுமென்றும் துனபத்தைப் போக்கவேண்டுமென்று முண்டாகு மாசை.

சுஎ. பற்று-உபாதானம்; அஃதாவது இன்பத்தைக்கொடுக்கும் பொருள்க ளோடு ஒட்டிக்கொளளுதல. தோறறம்-ஜனனம். வினைப்பயன - காமபலம. இயல்பு - ஸ்வபாவம்.

சுக. பெரும்பேறு - நிர்வாணம்.

நிஉ. இவற்றையென்றது நான்கு சத்தியங்களையும், அவற்றை நன்கு விளக்குந் துவாதச நிதானங்களையும்.

நிசு. கோடு - கொம்பு.

(ர)க - ஈசு. பேதைமையென்பது மயங்கிக் கண்டதுமறநது கேட்டது தெளிதலென்க, "பேயமை யாகுமிப் பேதை மைக ளல்வினை டெனுமக, காமுற் ருமதன் பயதரு மூன்ற காமினைக் கடந்து, நாம ருஉம்புகழ் கொடுபபதார் நன்னெறிநண்ணும, வாமன வாயமாழி மறநதிட்டு மறநதொழி கின்ரும்" இது வீரசோழியம், யாப்புப்படலம், (ர) - ம கலித்துறை யுதாரணம்) என்று கூறப்பட்டிருத்தல் காணக. இவவடிகளாற் பேதைமையதிலக கணம் கூறப்பட்டது.

(ரநி). உலகமூன்றினும் - மூன்றுலகங் களுள்ளும், உலகம முப்பத்தொன்றென் பாரெவனின் மஹாராஜிகலோகமுதலிய உலகம் இருபத்தாறினையும் மேலுலகென்றும், நாரகலோகமுதலிய உலகம நான்கினையும் கீழுலகென்றுங்கொண்டு அவற்றை நடுநின்ற மனுஷ்யலோகததுடன் கூட்டி, இநதுலாசிரியர் உலகம மூன்றெனக் கொண்டார்போலுமெனக, "திருமேவு பதுமஞ்சேர் திசைமுகனே முதலாக, வருமேவி யவதரித்த வுயிரனைதது

மலகில பல்லுயி ரறுவகைத் தாகு
மக்களுந் தேவருமப் பிரமரு நரகருங
தொக்க விலங்குமப் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற
சுஅ சொல்லப் பட்ட கருவிற சார்தலுங்
கருவிற் பட்ட பொழுதினுட் டோற்றி
வினைப்பயன் விளையுங் காலையுயிர் கட்கு
மனப்பே ரின்பமுங் கவலையுங் காட்டுந
தீவினை யென்ப தியாதென வினவி
சுரு ஞய்தெரிந் நலலா யாங்கது கேளாய்
கொலையே களவே காமத தீவிழை
வுலையா வுடமபிற் ரூறறுவ மூன்றும
பொய்யே குறளை கடுஞசொற பயனில
சொல்லெனச் சொல்லிற ரூற்றுவ நான்கும
எஅ வெஃகல் வெகுளல பொலலாக காடசியன
வுள்ளந் தன்னி லுருபப னூன்றுமெனப்
பத்து வகையாற் பயன்றெரி புலவ
ரித்திறம படரார் படர்குவ ராயின
விலங்குமப் பேயு நரகரு மாகிக்
எடு கலங்கிய வுள்ளக கவலையிற் ரூறனறுவா
நல்வினை யென்ப தியாதென வினவிற

---

மூயக்கொள்வா, னிவ்வுலகுங் கீழுலகு மிசையுலகு மிருணீங்க, வெவ்வுலகுந் தொழுதேத்த் வெழுந்தசெழுஞ் சுடரெ ன்ன, விலங்குகதி ரோரிரண்டும் விலங்கி வலங் கொண்டெவ, வலங்குசினைப் போதியின்கீ ழமமமர்ந்த பெரியோய்நீ" (இது வீரசோழியம், யாப்புப்படலம், கக - ம் கலிததுறையுதாரணம்) என்பதில் இப்படியே உலகங்கள் மூன்றுகக் கூறப் பட்டிருத்தல் காண்க. உயிராமுலகம் - சேதனப்பிரபஞ்சம.

நுசு. அலகில - அளவில்லாதன.

நுசு - நுஅ. மக்களும் தேவரும் பிரம ரும் நரகரும் விலங்கும் பேயுமென்று பல்லுயிர் அறுவகைத்தாகும், இவ்வறு வகைப்பிறப்பும் ஷட்கதி யெனப்படும. செய்கை கூறுதற்கு அங்கமாக ஈண்டி அறுவகையுயிர்களுங் கூறப்பட்டன.

சுஅ. சொல்லப்பட்ட கரு - மேற்கூறி யமக்கட்கரு முதலிய ஆறும். கரு-பீஜம்; பதிகம், உ.

சுஉ. "விளைவின்கண், வீயா விழுமந் தரும்" என்பது திருக்குறள், உஅச

சுஅ - சுங. (செய்கை) சாதலிலும இன்பத்தையும கவலையையுங் காட்டும்

சுசு காமததீவிழைவு - இருபெ ரொட்டு.

சுஉ. குறளை - கோள். கடுஞ்சொல - கோபச்சொல்.

சுஉ - சுக. பயனில்சொல் - அறம பொருளின்பங்களுள் ஒனறும் பயனா சொல்.

எஅ. பொல்லாக்காட்சி - மயகம அஃதாவது உண்மையையறியாமை.

எக. உருப்பன - தோன்றுவன.

சுசு - எஉ. தீவினையென்பது மூன றும் நான்கும் மூன்றுமெனப் பத்துவகை ப்படும். இப்பதனதையும தச ஸம்யோ ஜனையென்பது பௌத்தநூல்வழக்கு

எக. இத்திறம் - கொலை முதலிய இப்பாவவழிகளில். படரார் - செல வார்.

சொல்லிய பத்தின் றொகுதியி னீங்கிச்
சீலந தாங்கித தானந் தலைநின்று
மேலென வகுதத வொருமூன்று திறத்துத
அ0 தேவரு மக்களுந பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைபபய னுண்குவ
ருணர்வெனப் படுவ துறங்குவோ ருணர்விற்
புரிவின் றாகிப புலன்கொளா ததுவே
யருவுரு வென்பதவ் வுணர்வு சாராத
அரு வுயிரு மூடமபு மாகு மென்பா
வாயி லாறு மாயுங் காலை
யுள்ள முறுவிகக வுறுமிட னாகு

எ. சொல்லியபத்து - கொலை, களவு, காமம, பொய், குறளை, கடுஞசொல, பயனில்சொல், வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சி யென்பன "மருடரு மனமவாய் மெய்யிற் கொலைமுதல் வினை பத தாமே" என்பது சித்தாந்தத்தோ அக நீங்கலாவது இப்பதினினிறமு நீங்கிக் கொலலாமைமுதலிய பத்தினை யும் பெறுதல். ' பள்ளிவலம் புரிதல, தவ ஞசெய்தல், தானஞ்செயதல என்னும காயதினகுண மூன்றும், மெயயுரை, நலவார்ததை, இனியனகூறல், பயன் படுசொற்கூறல் என்னும் வாகினின் குணம் நான்கும், அருணினைவு, ஆசை யறுததல், தவப்பற்று என்னும் மனதினின் குண மூன்றும் ஆகிய நற்குணம் பதது' என்று கூறுவாருமுளர் இது, சிவஞா னசித்தியார், சௌததிராந்திகன் மதம், கூ0 - ம பாட்டுரையிற்கண்டது.

எஉ.—கூ0 - ம் காதை, க. இலதகின வகைகளை இந்நூல் ஈ கம்ம காதை, டுஎ-ம அடிக்குறிப்பிற் காண்க.

ஃக. மகிழ்ச்சிவினைப்பயன் - இன்பம், மகிழ்சசிவினை - புண்ணியம்.

சுஉ - ஃக. இவ்வடிகளிற் கூறியது போலவே "விலங்கு நாகரும் பேய்களு மாக்குங், கலங்களுர்த் தீவினை கடிமின் கடிந்தாற், றேவரு மகளரும் பிரமரு மாகு தி, ராகலி னல்வினை யயா தோம்புமின்" (உதி - ம் காதை, சக-முஉ) என்று முன் புவந்திருத்தல் காண்க.

சுநு-அக:—உஉ-ம்காதை, கo-கஉo.

அஉ. உணர்வு-விஞ்ஞானம் ; இதுபஞ் சஸ்கந்தத்துள் ஒன்றாகவும் கூறப்படுமை பின்னர்க்காண்க. உறங்குவோருணர்வி ன் - தூங்குவோருடைய உள்ளம் கர்த் ருதவமும போக்தருத்வமுமின்றிச் சா கூழிமாதிதினையாக நிற்றல்போல.

ஃங புரிவு இன்றாகி - செய்யுந்தொ ழில் யாதொன்று மின்றி ; புலன்கொளா தது - விஷயங்களை அனுபவியாது சாகூழி மாத்திரையாயிருததலையுடையது.

ஃஉ - ஃங. உணர்வு, உள்ளம், விஞ் ஞானமென்பன ஒருபொருட்சொற்கள், இதனைப் பின்னர்க்காண்க, இதுவே கருமத்தொகுதியோடு கூடிய வியவகார தசையில உயிரென்றுமழைகப்படுமென் பதும, முடிவில் ஆனமாவென்று ஒன்று இலலையென்பதும் பௌததர்கொள்கை; ஆன்மா இல்லையென்பதனால் இவர்கள் அநானவாதிகளென்று கூறப்படுவர், இதத இரண்டடிகளாலும் உணர்வினிலக் கணம கூறப்பட்டது.

ஃச - ஃடு. அருவுரு - நாமரூபம் "அரு வுருததன்மை, யாக்கை" என்பர் பின்னு ம், கoஉ - கoங இவ்விரண்டடிகளாலும் அருவுருவினிலக்கணம கூறப்பட்டது.

ஃண. வாயிலாறு - ஷடாயதனம் ; வா யில், துவாரம், வழி, ஆயதனம், இட மென்பன ஒருபொருட் சொற்கள்.

ஃத. உள்ளமுறுவிக்க - விஞ்ஞானத் தில் விஷயங்களையடைவிததற்கு உறும் இடனாகும - உற்ற இடங்களாகும் · இட ங்களாவன— மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் இந்திரியமைந்தும் 'மன மொன்றும்.

ஃந - ஃத. இவ்விரண்டடிகளாலும வாயிலினிலக்கணம் கூறப்பட்டது.

மூநென வுளைப்ப துள்ளமூம் வாயிலும்
வேறு புலன்களே மேவுத லென்ப
கூ0 நுகர்வே யுணர்வு புலன்களே நுகர்தல்
வேட்கை விருமபி நுகர்ச்சியா ராமை
பற்நெனப் படுவது பசைஇய வறிவே
பவமெனப் படுவது கரும வீட்டந
தருமுறை யிதுவெனத் தாந்தாஞ் சார்தல்
கூரு பிறப்பெனப் படுவதக் கருமப் பெற்றியி
னுறப்புண ருள்ளஞ் சார்பொடு கதிகளிற்
காரண காரிய வுருக்களிற் நேன்றல்
பிணியெனப் படுவது சார்பிற் பிறிதா
யியற்கையிற் நிரிந துடம பிடுமபை புரிதன்
க00 மூப்பென மொழிவ தந்தத் தளவுந்
தாக்குநிலை யாமையிற் முந்தளாந் திடுதல்
சாக்கா டென்ப தருவுருத் தன்மை
யாக்கை வீழ்சதி சொனபறைந் திடுதல

---

அஅ. ஊறு - ஸ்பரிசம், உள்ளமும் வாயிலும் - விஞ்ஞானமும் ஷடாயதனமும்.

அக. புலன்களே - விஷயங்களே.

அஅ - அக. ஷடாயதனங்கள் விஷயங்களேஸ்பரிசிதல் ஊறெனப்படுமென்பர்; இவ்விரண்டடிகளாலும் ஊற்றினிலக்கணம் கூறப்பட்டது.

கூ0. உணர்வு - விஞ்ஞானம்; இதனால் நுகர்வினிலக்கணம் கூறப்பட்டது.

கக. வேட்கை-தருஷ்ணை; ஆராமை-நிரம்பாமை; "ஆர வியற்கை யவா" (திருக்குறள், கஎ0) என்றார் திருவள்ளுவரும்; நிரம்பாமையாவது - தாமேயன்றித் தம்மையனும் நிலையாமையின், வேண்டாதனவாகிய பொருள்களே வேண்டி மேன்மேல்வளர்தல்; இதனால் வேட்கையதிலக்கணம் கூறப்பட்டது.

கூஉ. பசைஇய - ஒட்டிக்கொண்ட; இதனாற் பற்றினிலக்கணம் கூறப்பட்டது.

கூந. ஈட்டம் - கூட்டம், ஈண்டுக்கூறியதுபோலப் பவத்தைக் கருமத்தொகுதியென்று பின்னுங்கூறுவர், ககந, கசஉ - ம் அடிகளிற் காண்க.

கூந - கூர. இந்த இரண்டடிகளாலும் பவத்தினிலக்கணம் கூறப்பட்டது.

கூரி. கருமப்பெற்றியின் - கருமங்களினியல்போடு.

கூசு. உறப்புணருள்ளம் - மிகப்புணர்ந்த விஞ்ஞானம், சார்பொடுகதிகளில் - சம்பந்தத்தோடு கூடிய பிறப்புவகைகளில்.

கஎ. இங்கே 'காரண காரிய வருக்களிற் நேன்றல்' என்றதற்கேற்ப, "அனபுடை யாருயி ராசற் கருளிய, வென்பு டையாக்கை" என்று முன்னுங் கூறியிருத்தல்காண்க, உரி - மகாதை, கஎ0 - களக.

கூசு - கூஎ. உள்ளம் தோன்றலென்க.

கூரி - கூஎ. இவ்வடிகளால் தோற்றத்தினிலக்கணம் கூறப்பட்டது.

கூஅ. பிணி - வியாதி. பிரிதாய் - வேறாகி.

கூக. இயற்கை-ஸ்வபாவம். திரிதல்-வேறுபடுதல். இடும்பை - துன்பம்.

கூஅ - கூக. இவ்வடிகளாற் பிணியினிலக்கணம் கூறப்பட்டது.

க00 - க0க. அந்தம் - மரணம். இவ்வடிகளால் மூப்பினிலக்கணங்கூறப்பட்டது.

க0உ - க0ந. சாக்காடு-மரணம். அருவுருத்தன்மையினையுடையவுடம்பு அஸ்தமிக்குஞ் சூரியனைப்போலே மறைந்தி

பேதைமை சார்வாச் செய்கை யாகுஞ்
க0டு செய்கை சார்வா வுணர்ச்சி யாகு
மூணர்ச்சி சார்வா வருவுரு வாகு
மருவுருச் சார்வா வாயி லாகும
வாயில சார்வா வூறு குமமே
யூறு சார்ந்து நுகர்ச்சி யாகு
ககO நுகர்ச்சி சார்ந்து வேட்கை யாகும
வேட்கை சார்ந்து பற்று குமமே
பற்றிற் றோன்றுங் கருமத் தொகுதி
கருமத் தொகுதி காரண மாக
வருமே யேனை வழிமுறைத் தோறற்
ககடு தோற்றஞ் சார்பின் மூப்புபபிணி சாககா
டவல மரற்றுக் கவலைகை யாறெனத்
தவலி றுன்பந தலைவரு மென்ப
வூழின்மண் டிலமாச் சூழுமிந் நுகர்ச்சி
பேதைமை மீளச செய்கை மீளுஞ
கூO செய்கை மீள வுணாசசி மீளு
மூணர்சசி மீள வருவுரு மீளு
மருவுரு மீள வாயின மீளும
வாயின மீள வூறு மீளு
மூறு மீள நுகர்சசி மீளு
கூடு நுகர்ச்சி மீள வேடகை மீளும
வேட்கை மீளப் பற்று மீளும
பற்று மீளக கருமத தொகுதி
மீளுங் கருமத் தொகுதி மீளத்
தோற்ற மீளுந் தோற்ற மீளப்

---

போதல், "செய்தவ யாகையின், மே
வினே னுயினும் வீழ்கதிர் போன்றேன்"
(உச - ம் காதை, கO க - கO உ.) என்று
இந்தவுவமையே இந்நூலில் முன்பு கூற
ப்பட்டிருத்தல் காண்க, இவ்வடிகளாற்
சாக்காட்டினிலக்கணம் கூறப்பட்டது.

கூஅ - கO கூ. இவ்வடிகளாற் பிணிமூப்
புச் சாக்காடென்னும் வினைப்பயன்
களுகு இலக்கணங கூறினர்.

ககச. தோற்றம் - ஜனனம்.

ககசு. அவலமுதலியவற்றினிலக்கண
ங்களை இப்புத்தகத்தின் சஉ - ம் பக்கத்
திற் பார்க்க.

ககரி - ககள. மூப்புமுதலியன துக்க
மெனவுங் கூறப்படுமாதலின், அவைகள்
'தவலி றுன்பம்' எனப்பட்டன.

ககச. ஊழ் இல் மண்டிலமா - மூடி
வில்லாத வட்டமாக, ஊழ் - மூடிவு;
"ஊழ்பாடின்றி" (கூO - ம் காதை, கூள.)
எனுமிடத்தும் முன்னும், இந்நுகர்ச்சி சூழு
மெனக.

கO உ - ககச. இவ்வடிகளால் துக்க
மும் துக்கோத்பத்தியுமாகிய வாய்மைக
ளிரண்டும் கூறப்பட்டனவென்பர்.

ககக. மீள - நீங்க; இல்லையாகவென்
றுமாம்.

கஙூ0 பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்
சாகா டவல மரற்றுக் கவலை
கையா றென்றிக் கடையி றுன்ப
மெலா மீளுமிவ் வகையான் மீட்சி
யாதிக கண்ட மாகு மென்ப

கஙஎ பேதைமை செயகை யென்றிவை யிரண்டுங்
காரண வகைய வாத லானே
யிரண்டாங் கண்ட மாகு மென்ப
வுணர்ச்சி யருவுரு வாயி லூறே
நுகாசசி யென்று நோகைப் படுவன

கசஐ முனனவற் றியலபாற் றுன்னிய வாதலின்
மூனறுங கண்டம வேட்கை பற்றுக
கருமவீட் டமமெனக கட்டு ரைபபவை
மறறப் பெறறி நுகாசசி யொழுக்கினுட
குற்றமும விஞையு மாக லானே

கசஎ நான்காங் கண்டம பிறப்பே பிணிசே:
மூபபே சாவென மொழிந்திடுந் துன்ப
மெனவிவை பிறப்பி லுழகுபய ஞதலிற்
பிறப்பின் முதலுணா வாதிச சந்தி
நுகர்ச்சி யொழுகொடு விழைவின் கூடடம

கஙூ0 புகர்சசியின் றறிவ திரண்டாஞ சநதி

---

கஙூ0. பிறப்பு-ஈண்டுப் புனர்ஜனனம், இப்படியே பின்னும்வரும்.

கஙஙூ. மீட்சி இவ்வகையினையுடை தது.

ககக - கஙஙூ. இவ்வடிகளால் துகக நிவாரணமாகிய மூன்றாவது வாய்மை கூறப்பட்டதென்பர்.

இனி, நான்குகண்டங்களும் முறையே கூறப்படும்.

**முதற்கண்டப்:—**

கஙஅ-கஙசூ. பேதைமையும செய்கை யுமாகிய இரண்டும் காணங்களாகவுள்ள னவாதலின், அவை முதற்கண்டமென்று கூறப்படும்.

**இரண்டாங்கண்டப்:—**

கஙஎ - கசஐ. உணர்ச்சி முதலிய ஐந் தும், பேதைமை செய்கையென்னுமிர ண்டாலும் வந்தனவாதலின், அவை இர ண்டாங்கண்டமென்று கூறப்படும்.

**மூன்றாங்கண்டப்:—**

கசக - கசச. வேட்கைமுதலிய மூன் றும் மேற்கூறிய நுகர்ச்சியொழுக்கத்தி ன்காணுண்டாகிய குற்றமும் அதனாலுள தாகும் வினையுமாக இருததலின், மூன றுங்கண்டமென்று கூறப்படும். வேட் கைமுதலிய மூன்றனுள் வேட்கையும் பற்றும் குற்றமெனவும் பவம் வினையெ னவுங்கொள்க.

**நான்காங்கண்டப்:—**

கசஎ. 'ஊழ்க்குப்பய ஞதலின்' என றும் பாடம்.

கசஏ - கசஎ. பிறப்பும் பிணிமூதலிய கன்மபலனுமாகிய இவைகள் மூற்கூறிய வினைப்பயனுக இருத்தலின், அவை நான் காங்கண்டமென்று கூறப்படும்.

**சந்தி மூன்று:—**

கசஅ. பிறப்பின் முதல் - செய்கை செய்கையும் உணர்வுந் சேர்தல் முதற் சந்தியாகும்.

கசக - கூட்டம் - சேருதல்.

கசக - கஙூ0. நுகர்ச்சியும் வேட்கை யுங்கூடுதல் இரண்டாஞ் சந்தியாகும்.

கன்மக் கூட்டத தொடுவரு பிறப்பிடை
முன்னிச செலவது மூன்றுஞ் சந்தி
மூன்றுவகைப பிறப்பு மொழியுங் காலை
யானறபிற மார்க்கத் தாய வுணாவே
கஞ்சு தோன்றல வீடெனத் துணிந்து தோன்றியு
முணாவுள் ளடங்க வுருவாய்த தோன்றியு
முணர்வு முருவு முடங்கத் தோன்றிப
புணர்தரு மகக டெய்வமவிலங் காகையுங
கால மூனறுங் கருதுங் காலை
கசுஎ யிறந்த கால மெனனல வேண்டு
மறந்த பேதைமை செயகையா னவறறை
நிகழ்ந்த காலமென நேரப படுமே
யுணர்வே யருவுரு வாயி னூறே
நுகர்வே வேட்கை பறறே பவமே
கசுஞ தோற்ற மென்றிவை சொல்லுங காலை
யெதிராகா லமுமென விசைகபப படுமே
பிறப்பே பிணியே மூப்பே சாவே
யவல மரறறுக கவலைக யாறுகள
குலவிய குற்றமெனக கூறப படுமே
களஎ யவாவே பறறே பேதைமை யென்றிவை
புனியுமடை பவமும வினைசெய லாகு
முணர்சசி யருவுரு வாயி னூறே
நுகாசசி பிறபபு மூபபுப்பிணி சாவிவை
நிகழ்சசிபபய னுங்கே நேருங் காலைக
களஞ குற்றமும வினையும பயனுந தொம்பம
பெற்ற தோறறப் பெற்றி னிலையா
வெப்பொரு ளுகளு மானமா விலெனென
விப்படி யுணரு மிவவிட டியலபா

---

கறிக - கறிஎ. பவமும் தோற்றமுஞ் சோதல் மூன்றுஞ் சந்தியாகும.

**முவகைப் பிறப்பு:—**

கறிங - கறிஅ. (1)

**மூன்று காலம்:—**

கறிசு - கசுஅ. பேதைமையும் செய்கையுமாகிய இரண்டும் இறந்தகாலதனவெனறும், உணர்வுமுதலிய வொன்பதும் நிகழ்காலத்தனவென்றும், புனர்ஜனன முதற் கையாறறுதியாகவுள்ள வினைப்பயன்களொன்பதும் எதிர்காலத்தனவென்றுங் கூறப்படும்.

**தீற்றம்:—**

**கசுக - களஎ.** அவாவும் பற்றும் பேதைமையுமாகிய இமமூனறும் குற்றமென்று கூறப்படும்.

**வினை:—**

களக. பவமும் செய்கையும வினையாகும்.

**பயன்:—**

களஉ-களஅ. உணர்சசி முதலியவாறும் மூப்புப் பிணி சாக்காடென்னும் வினைப் பயனென்றும் ஆகிய வேழும் பயனாகக் கூறப்படும்.

களசு. தோன்றிய இயல்பையுடைய பொருள்கள் நிலையா.

களஞ - களஅ. இவவடிகள், மூன்பு, “நிலையில வறிய தன்பமென நோக்கு,

மூணர்வே யருவுரு வாயி னூறே
கஅ0 நுகர்வே பிறப்பே பிணிமூப்புச் சாவே
யவல மரற்றுக் கவலைகை யாறென
நூலலப் படுவன கோயா குமமே
யக்நோய் தனக்குப்
பேதைமை செய்கை யவாவே பற்றுக்
கஅநி கருமவீட டம்மிவை காரண மாகுந
தீன்பந் தோற்றம பறறே காரண
மின்பம வீடே பற்றிலி காரண
மொன்றிய வுரையே வாய்மைநான் காவ
தருவு நுகாச்சி குறியே பாவனை
கஅ0 யுளள வறிவிவை யைங்கந்த மாவன

---

வுலையா வீட்டிற் குறுதி யாகி" (கூ0 - ம் காதை, கூ0 - கூக) என்றதனை விளக்கி நின்றன.

**வாய்மை நான்கு:—**

கஅக - கஉஉ. உணர்வுமுதல் வினைப்ப யனீருகவுள்ளவேழும் துக்கமென்று கூறப்படும், அதற்குப் பேதைமைமுதலிய ஐந்தும் காரணமாகும்; ஆதலால் தோன்றுதல் துன்பம்; அதற்குக்காரணம் பற்று, வீடு இன்பம், அதற்குக்காரணம் பற்றின்மையே, என்கிற நான்குரைகளும் நான்கு வாய்மைகளாகும். "பிறந்தோருறுவது பெருகிய துன்பம், பிறவாருறுவது பெரும்பேரின்பம், பற்றின் வருவது முன்னது பின்ன, தற்றேருறுவது" (உ - ம் காதை, சூச - சூஎ) என்று இப்படியேமுன்பும் வந்திருத்தல்காண்க. துன்பமுதலிய நான்கினையும முறையே துக்கம், துக்கோதபத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரணமார்க்கமென்று வடநூலார் கூறுவர். இவற்றை சத்தியசதுஷ்டயமென்பர் நீலகேசியுரையாசிரியர்; இந்நான்கினுள் துக்கநிவாரணமார்க்கம் எட்டுவகைப்படும்; அஃது அஷ்டாங்கமார்க்கமென்றும் விசுதிமார்க்கமென்றும் பழுதிலாவாழ்க்கையென்றுங் கூறப்படும். அவ்வெட்டுமாவன:— நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர்தலேப்பாடு என்பன, "பழித்திடாப் பழுதில்வாழ்க்கை யெட்டையும்பாரித்து" என்பது சிவஞானசித்தியார், சௌதிராநதிகன்மதம், நூக, "நற்காட்சி நல்லொழுக்க நல்வாய்மை நல்வாழ்க்கை, நற்செய்கை யோடைந்து நாடி" எனவும், "நன்முயற்சி நன்காடை கடைப்பிடிநல லோர்தமபாற், செல்கை யுட னெட்டனைத்துந் தேறு" எனவும் வருவன **பரமதகிமிரபானு**. இவ்வெட்டும் ஸம்மியக் திருஷ்டி, ஸமமியக் ஸங்கற்பம், ஸமமியக் வாக்கு, ஸம்மியக கருமம், ஸம்மிய காஜீவம், ஸம்மியக் வியாயாமம், ஸமமியக ஸ்மிருதி, ஸம்மியக் ஸமாதியென்று பெயர்பெறுமென்றும், இவைகளே ஜனனமரணதுக்கதைமாறுதற்குரிய வழியென்றும **அகவகோஷ போத்ஸத்துவரால்** வடமொழியிற்செய்யப்பட்டுள்ள புத்தசரித்திரதினின் கடைம வர்க்கத்தால் தெரிகின்றன.

**பஞ்சஸ்கந்தம்:—**

கஅக. நுகாசசி - வேதனை.

கஅ0. உள்ளவறிவு - விஞ்ஞானம்.

கஅக - கஅ0. உருவம, வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானமென்னும் இவ்வைந்தும் பஞ்சஸகந்தமெனப்படும். அவற்றுள் உருவக்கந்தம், பூதவுரு உபாதாயவுருவென விருவகைப்படும். பூதவுரு - பிருதுவி, அப்பு, தேயு, வாயு, என்னும் நான்குமாம். உபாதாயவுரு - வலி, கந்தம், இரதம், வண்ணமென்னு நான்குமாம். வேதனை - சுகலவேதனை (=சுகவறிவு), அகுசலவேதனை (=துக்கவறிவு), குசலாகுசலவேதனை (=சுகதுக்கவறிவு) என்னு மூன்றுமாம். குறிப்பு - மெய்

வறுவகை வழக்கு மறுவின்று கிளப்பிற்
றொகையே தொடர்ச்சி தன்மை மிகுத்துரை
யியைநதுரை யெனற நான்கினு மியைந்த
வுண்மை வழக்கு மின்மை வழக்கு
ங்கூடு மூள்ளது சார்ந்த வுண்மை வழக்கு
மிலலது சார்ந்த வின்மை வழக்கு
மூள்ளது சார்ந்த வின்மை வழக்கு
மில்லது சார்ந்த வுண்மை வழக்குமெனச
சொலலிய தொகைதிற முடமபுநீர் நாடு

---

வாய கண் மூகருச் செவியென்னு மைந்
தும மனமொனறும் ஆகிய ஆறுமாம.
பாவனேயாவது மனேவாக்குக்காயங்களி
னலுண்டாகும் நல்வினேபததும தீவினே
பததும ஆகிய இருபதுமாம். இவை
முனபு கூறப்பட்டன. விஞ்ஞானததி
னிலகணம் முன்பு கூறப்பட்டுள்ளது.
"எட்டிவை யுருவ மூன்று வேதனே யாறு
ஞான, மொட்டிய குறிபபோ றாறு செய
கையு மிருப தாகக், கட்டிய பஞ்ச கந்தங
கணததினிற் டங்க மாருங, தொட்டநாற
பதது மூன்றுஞ் சுகதநூற் றுணிவு தா
னே" [சுகதநூல - பௌத்தநூல] எனறு
வருதலகாண்க . இன்னும் இவற்றினிலக்
கணங்களே, " ஓங்குருவம் வேதனே யுள
குறிப்புப் பாவனேமெய், தாங்குணா
வென றைதாங்கந் தம" எனவும், "உரு
வமுடல பூத முபாதாய மென்னு, மிருவி
ததநி ஞலுமெழு மென்" எனவும், " வே
தனே தன்பின் பிவற்றின் விரவலுமென,
றோதிவொரு மூனருமென் றோ" எ-ம்,
" பொறிவிதமோ நைதும பொறியைப்
பொருநநி, யறியுமன முங்குறிப்பென்
றய" எ-ம, " வாகருமன மாகையினை
பாவனேயென் றேமதியா, யாகுமினை
சாமறம்பா வம" எ-ம், " இந்நால வகை
யினுமேய்ந தையமற வெணணுமெணம,
வீஞ்ஞான மென்றே விளங்கு" எ - ம்,
" இந்தவித மைநதுஞசந் தானதத் தெழுந்
தழிகை, பநதமென வேநீதான் பா"
எ - ம், " அறக்கெடுத லேபரம முத்தி
யினை யைந்து, மறக்கெடுமா றுங்கூறு
வாம்" எ - ம் வரும் பரமதத்திமிரபானு
வென்னுந்திருவாக்காலு மறிந்துகொள்க.
இந்தப் பஞ்சஸ்கந்தக்கூட்டமே உயிரெ
னபர் ; அது, " கவையொப் பனகை விர
லேந துகளு, மிவையிப் படிகைப் பிடி
யென் றதுபோ, லவையப் படிகந் தங
களேந் துகளு, நவையைப் படிநல் லுயிரா
மெனவும்" (நீலகேசித்திராட்டி, புத்தவா
தச்சருக்கச்செய்யுள்) என்னும் பாடலால்
நன்குணர்த்தப்படுகின்றது. இவ்வைந்தி
னுளளே குறிப்பினைக் குறியென்றும்,
இது வடமொழியில் ஸம்ஜ்ஞாஸ்கந்தமெ
ன்று பெயாபெறுமென்றுங கூறுவாரும்,
இரண்டொன்றிற்கு வேறு இலக்கணங
கூறுவாருமுளர , அவற்றை வல்லாவா
யககேட்டுணாக.

**ஆறுவழக்கு:—**

ககூக - ககூஎ அறுவகைவழக்காவன:- தொகை, தொடாசசி, தன்மை மிகுத்து
ரை, இயைநதுரையெனற நான்கொடுஞ
சோநத உணமைவழக்கு முதலிய ஆறு
மாம. இயைநதுரையைத் தொகையி
லடக்கி மூன்றென்பாருமுளர.

ககூக. தொகைதானுமாவது உடம்பும்
நீரும நாடுமெனக , என்றது - பலதாது
க்களின்கூட்டம் உடம்பென்றும் பலதா
ளிகளின்கூட்டம் நீரென்றும பலவூர
களின்கூட்டம நாடெனறும வழங்கப்படு
மாறுபோலப் பஞ்சஸ்கநதங்களின் கூட்
டமே ஆன்மாவென்று வழஙகப்படுவது
தொகையென்றவாறு , இனி இத்தொ
கையினே உண்மைவழக்கு இன்மைவழ
க்கு என்பவற்றோடுசேர்த்து ' சுவரும்மா
மும் ஆக்கையும கற்றையுங்கூடின சமூ
தாயததை வீடென்று வழஙகுமாறுபோல
வும் பலவூருங்கூடின சமூதாயததை நா
டென்று பற்றென்று வழஙகுமாறுபோ
லவும் பஞ்சஸ்கந்தக்கூட்டத்தை ஆன்மா
வென்று வழங்குமது கற்பனாமமெனக

உ00 தொடர்சசி வித்து மூலேதா ளென்றிந்
நிகழ்ச்சியி லவற்றை நெல்லென வழங்குத
லியல்பு மிகுத்துரை யீறுடைத் தென்றுந்
தோன்றிற் றென்று மூத்த தென்று
மூன்றி னொன்றி னியல்புமிகுத் துரைத்த
உ0நி லியைந்துரை யென்ப தெழுத்துப் பலகூட
சொல்லெனத் தோற்றும பலநாட் கூடிய
வெல்லையைத் திங்க ளென்று வழங்குத
லுள்வழக் குணர்வில வழக்கு முயற்கோ
டுள்ளது சார்ந்த வுள்வழ காகுஞ்
உ50 சித்தத் துடனே யொத்த நுகாச்சி
யுள்ளது சாரந்த வில்வழக காகுஞ்

---

கொள்க' என்றும், ' மரம் கற்றைமுதலிய வற்றைப்பிரித்தால் வீடில்லேயானுற்போலவும் ஊர்களேப்பிரித்தாற் பற்றும நாடு மில்லேயானுற்போலவும் ஐந்துஸ்கந்தங்க ளேயும் பிரித்துணருங்கால ஆன்மா இல்லேயாமெனகொள்க' என்றும் விளங்க அவற்றிற்குஉதாரணங்காட்டினருமுளா. (சிவஞானசித்தியார், பரபக்கவுரையாசிரியர்). "ஒருவனென் றேதப் பட்டானுவாதி யைந்துங கூடி, வருபவ னென்று ரைத்த றேமுகையுண்மை வழக்கதாகு, முருவமங் காதி யாய வைந்தையு மொருவ னின்று, தருவது தொகையினின்மை வழக்கதாஞ் சாற்றுங் காலே." என்பது சிவஞானசித்தியார், சௌத்திராந்திகன்மதம், எ.

உ00 - உ0க. தொடர்ச்சியாவது-வித்திலிருந்து மூளேயும மூளேயிலிருந்து தாளுந்தோன்றி நிகழ்ந்து நெல்லென்று வழங்குமாறுபோல எல்லாம் காரணகாரிய சம்பந்தமாகவுள்ளதென்பது, " காரணகாரியத்தின் றேமுடர்ச்சியாய்க் காலமூன்றின், சோர்வறத் தோன்றுங் கெட்டு வழியென்கை தொடர்ச்சி யுண்மை, யோர்தரி ஞெருவ னேயெக் காலத்து முன்னா னென்று, தேர்வது தொடர்ச்சியின்மை வழக்கதாஞ் செப்புங் காலே." சிவஞானசித்தியார், சௌத்திராந்திகன்மதம், அ.) என்று இத்தொடர்ச்சியை உண்மைவழக்கு இன்மைவழக்கென்பவற்றேமுதொர்த்தி அவற்றிற்கு இலக்கணங் கூறியிருத்தல் காண்க.

உ0உ. இயல்பு மிகுத்துரை - தன்மை மிகுத்துரை,

உ0உ - உ0ச. தன்மைமிகுத்துரையாவது - ஒருபொருளினுடைய இறப்புப் பிறப்பு மூப்பு என்பவற்றுள் ஒன்றனியல்பைமிகுத்துச்சொல்லுதல். இதனே உண்மைவழக்கு இன்மைவழக்கென்பனவற்றேமுசொர்த்தி " தோற்றிய பொருள்களெல்லா நாசமா மென்று சொல்லு, மாற்றமுன் னுரைத்தன் மற்றை மிகுத்துரை வழக்கினுண்மை, போற்றிய பொருளுகண் கட்குப் போனது போன்மு திர்ந்து, வேற்றுமைப் பட்ட தென்கை மிகுத்துரை யில்வ ழக்கே" (சிவஞானசித்தியார், சௌததிராந்திகன்மதம், கு) என்றுமுறையே அவற்றிற்கு இலக்கணங்கூறியிருத்தல் காண்க.

உ0எ. திங்கள் - மாதம்.

உ0ஏ - உ0எ. தொனகக்கும் இயைதுரைக்கும் வேற்றுமையாதோவெனின் பலபொருள்களின் வரையறைப்படாத தொகுதி தொகையாமென்றும், பலபொருள்களின் வரையறைப்பட்டதொகுதி இயைந்துரையாமென்றுங் கூறுவர்.

ககக - உ0எ. இவ்வடிகளால் தொகை முதலிய நான்கினிலக்கணங்களும் கூறப்பட்டன.

உ0ஐ - உகங. இவ்வடிகளால் உண்மைவழக்கு, இன்மைவழக்கு, உள்ளதுசார்ந்தவுண்மைவழக்கு, உள்ளதுசார்ந்தவின்மைவழக்கு, இல்லதுசார்ந்தவுண்மைவழக்கு இல்லதுசார்ந்த வின்மைவழக்கு

சித்தமுற் பவித்தது மின்போ லென்கை
யிலலது சாரந்த வுண்மைவழக் காகுங்
காரண மின்றிக் காரிய நேர்த
உகடு விலலது சாரந்த வில்வழக் காகு
மூயற்கோ டிணையிற் றோற்றமு மிலலென
ஞனகு நயமெனத் தோனறப படுவன
வொற்றுமை வேற்றுமை புரிவின்மை யியல்பென்க
காரண காரிய மாகிய பொருள்களே
உ0 யெனறு வுணர்ந்த லொறறுமை நயமாம
வீற்றுவீற் றாக வேதனே கொள்வது
வேற்றுமை நயமென வேண்டல வேண்டுமம
பொன்றக கெடாஅப பொருள்வழிப பொருள்களாக
கொன்றிய காரண முதலுகா ரியததை
உடு தருகற் குளளாக தானிலை யென்றல்
புரிவின்மை நய்மெனப் புகறல வேண்டு
நெல்லித தகத்து ணெண்மூளை தோற்றுமென
னலல வியலபுநய மிவறறினுங் கொளபயன்

---

என்னும ஆறினிலக்கணங்களும் முறை பே கூறப்பட்டன, "அறுவகை வழக்கு நெறிபட வுணர்ந்து" என்பது பௌதத நூல் (இஃது இன்னநூலிலுள்ளதென்று வினாகவில்லை) இவ்வறுவகைவழகினை பெயரும் அவற்றி னிலகணங்களும் ாண்டுக்கூறப்பட்டிருததலபோலப் பின வரும் திருவிருத்தங்களிலுங கூறப்பட் டிருததல் காண்க அவை வருமாறு — "உள்வழக் கில்வழகுள் ளதுசாந்த வளவழகாே, டுள்ளது சார்ந்த வின்மை வழகுட னின்மை சாாத, வள்வழக னினை சாந்த வில்வழக கென்ரே ாரு, மூள்வழக குளதுண் டெனகை முயறகோடின் றில்வ ழககே", "உணா வுசார்ந் துணாவு திகைகை யுள்ளது சாாத வுண்மை, யுணர்வுபி னின்று மெனகை யுள்ளது சாந்த வின்மை, யுணாவுமுன் பின்றித் தோன்ற வில்லது சார்ந்த வுண் மை, யுணரினல் லதுசா ரின்மை யுள்ளங கை யுரோமந் தானே". சிவஞானசித்தி யார், சௌதிராந்திகன்மதம, கo, கீ.

**நயங்கள் நான்கு:—**

உகள – உகo. ஒற்றுமைநயம் வேற்று மைநயம் புரிவின்மைநயம் இயல்புந்ய மென நயங்கள் நான்கு வகைப்படும்

உகூ – உ0. இந்த இரண்டடிகளா லும் ஒறறுமைநயதனிலக்கணங் கூறப் பட்டது.

உ0க. வேறுவேறுக அறிதல்.

உ0க – உ1. இந்த இரண்டடிகளா லும் வேற்றுமைநயத்தினிலகணங்கூற ப பட்டது.

உ1கூ. பொன்றக்கெடாப்பொருள் – முற்றக்கெடாதபொருள். வழிப்பொருள் காரியப்பொருள். வழி – பின்.

உ1ங. உளளம் – விஞ்ஞானம்.

உ2கூ. புரிவின்மை – செய்தலில் லாமை,

உ2ங – உ3கூ. "உணர்வெனப் படுவ துறறங்குமோ ருணர்விற், புரிவின் றாகிப் புலன்கொளா ததுவே" என்றரா மூன் னும், கூo – ம் காதை, கூ1 – கூக. விஞ் ஞானததிலடஙகியிருக்கும் கன்மபீஜமே மறுபிறப்பிற்குக காரணமென்பர்.

உ3க – உ3கூ. இநத நான்கடிகளாலும் புரிவினமை நயதனிலகணம் கூறப் பட்டது

உ3ஙு – உ4ஃ. இவ்வடிகளால் இயல்பு நயத்தினிலகணம் கூறப்பட்டது.

உ4க. இவற்றின நாம கொளபபன – இநத ஒறறுமை யமுதலிய நயஙகளு நான்

ரொக்க பொருளல தொன்றில்லை யென்று
உக0 மப்பொரு ளிடைப்பற் றுகா தென்றுஞ
செய்வா னெடுகோட் பாடில்லை யென்று
மெய்துகா ரணத்தாங் காரிய மென்று
மதுவு மன்றத லாதது மன்றென்றும
விதிமுறை தொகையினுல் விரிநக நான்கும
உகடு விஞவிடை நான்குள
துணிந்து சொல்லல் கூறிட்டு மொழிதல
விஞவின் விடுத்தல் வாய்வா ளாமையெனத
தோன்றியது கெடுமோ கெடாதோ வென்றற்
கேடுண் டெனற றுணிந்துசொல லாகுஞ்
உசo செத்தான் பிறப்பா னெபிற வாறே
வென்று செப்பிற்
பற்றிறந் தானே வன்மக னெவினன
மிகக்கூ றிட்டு மொழிதலென விளமபுவா

---

காலும் நாம் கொள்ளும்பயன யாவையெனின்,—

**பயன்கள்:—**

உஉகூ. தொக்கபொருளலது - சோநத பொருள்களேயல்லாமல். ஒன்று - வேறுகிய ஒன்று. இவ்வடியாற் கூறப்பட்டது ஒற்றுமைநயத்தாற்போந்த பயனென்க.

உகo. இவ்வடியாற் கூறப்பட்டது வேற்றுமைநயத்தாற்போந்த பயனென்க

உகக. செய்வான் - கருத்தா. இவ்வடியாற்கூறப்பட்டது புரிவின்மைநயத்தாற் போந்த பயனென்க.

உகஉ - உகக. இவ்வடிகளாற் கூறப்பட்டஇரண்டும் இயல்புநயத்தாற்போநத பயன்களெனக்கொள்க. இங்நுனங் கொள்ளாமல் இந்த இரண்டுபயனேயும் பிரித்து முன்னதை முன்னதனெடுகூட்டினும் பொருந்தும்.

உகச. விரிந்த - முற்று. நான்கும் விரிந்தனவென்க. நான்கும் - நான்குபயன்களும்.

**விஞவிடை நான்கு:—**

உகடு. விஞக்களுக்குரிய விடைக ளென்க.

உகசு. கூறிட்டுமொழிதல் - பகுத்துச் சொல்லல்.

உகஎ. வாய்வாளாமை - பேசாதிருத்தல் ஆசிரியா நச்சினார்க்கினியர், தொல் காப்பியப் புறததிணையியலில் "அறுவகைப் பட்ட பாரப்பனப் பககமும்" என்னுஞ் சூதநிரதநில், 'நாலிரு வழககிற றுபதப் பக்கமும்' என்பதனுரையில், தவஞசெய்வோககு உரியனவாக எடுத்துக் காட்டிய 'ஊணசையின்மை, நீர்நசையினமை, வெப்பமபொறுததல், தடபம பொறுத்தல், இடம்வரையறுத்தல், ஆசனம்வரையறுத்தல், இடையிட்டுமொழிதல, வாய்வாளாமை' என்னும் எடடினுள இம்மொழிவந்திருதல காண்க.

உஙஃ - உஙஎ. துணிநதுசொல்லல, கூறிட்டுமொழிதல், விஞவின்விடுதல, வாயவாளாமையென நான்குவிடைகளுள்ளன

உஙஅ - உஙக. தோன்றியது - உண்டான பொருள். தோன்றியபொருள் கெடுமென்பது ஒருதலேயாதலின, ஈண்டுக் கேடுண்டெனறல் துணிந்துசொலல லாயிற்று : இந்த இரண்டடிகளாலும துணிந்துசொல்லலென்னும் விடையினியல்பு கூறப்பட்டது.

உசo - உசங. இந்த வடிகளாற் கூறிட்டுமொழிதலென்னும் விடையினியல்பு கூறப்பட்டது.

விஞவின் விடுத்தன் முட்டைமுந் திற்றே
உசநி .பனேமுந் திறறே வெனக்கட் டுரைசெ
யென்ற லெமமுட்டைக் கெப்பணே யென்றல
வாய்வா ளாமை யாகா யப்பூப
பழைதோ புதிதோ வென்று புகலவா
னுகசு மாற்ற மூரையா திருததல
உடுo கட்டுமை வீடு மதனகா ரணத்த
தொட்டித் தருதற் குரியோ ரிலலே
யாமே லுரைத்த பொருள்கட் கெலலாங்
காமம வெகுளி மயகஙகு காரண.

---

உசநி - உசகூ. இந்தவடிகளால் விஞ வினவிடுதலென்னும் விடையினியல்பு கூறப்பட்டது.

உசஅ. பழைது - பழையது.

உசள - உசஅ. இந்தவடிகளால் வாய் வாளாமையென்னும் விடையினதியல்பு கூறப்பட்டது.

உடுo. கட்டு - பந்தம். 'அதன் காரணத்தது' என்பதனைகட்டிலேடுமை வீட்டிலேடுமை தனித்தனியே கூட்டுக.

உஅஉ. 'பொருள்க ளெல்லாம்' எனறும பாடம.

உமுகூ. காமமுதலிய மூன்றும முகசு றறமெனப்படும.

உருஉ - உருகூ. மேற்கூறிய பொருள்களெலலாவற்றிற்கும காமம வெகுளி மயக்கமென்னும் இம்மூனறுங காரணமாகும், "காமம வெகுளி மயகக மிவை மூனற - ஞமஙு கெடகெடு நோய்" எனறு வநதிருததலகாண்க, திருக்குறள், கூசo.

இனி, எல்லாவற்றிற்குமகாரணமாகிய காமவெகுளி மயக்கஙகளே முறையேநீக குதற்குரிய பாவனைகள் கூறுவா.

**பாவனை ஐந்து:—**

மைததிரீபாவனை கருணாபாவனை முதிதபாவனை அசுபபாவனை உபேக்ஷாபாவனையெனப் பாவனை ஐந்துவகைபபடும. அவற்றுள்,—

க. **மைத்திரீபாவனை:—** அஃதாவது ஒருதுறவி வசதியான ஓரிடததையடைநது தக்க ஆஸனத்திலிருந்தபினபு பின்வருமாறு தியானித்தலாம், 'உத்தமமான பிறப்பினையுடைய பிராணிகளெல்லாம களிப்புற்றுவாழ்வனவாகுக, அவையெல்லாம துகசம வியாதி துராசையென்னும இவைகளினின்றும விடுபட்டனவாகுக, எலலாமனிதர்களும் எல்லாதேவர்களும் நரகவாதையினறை பீடிக்கப்படுகிற யாவரும ஸநதோஷமுடையவாகளாக ஆகுக, அவாகள துகசம வியாதி துராசையெனனும் இவற்றினின்றும விடுபட்டவாகளாக ஆகுக.' மைதரம ஸநேகம அன்பு எனபன ஒருபொருட்சொற்கள், மைதரிமெனபது குரோதத்திறகுயாரூனது அவவிரணடிய ஒரிடதது நிகழா, மைததிரமெனபது தருஷ்ணையெனனு மாசையனறு, அவிதசை அலலது மோகங்காரணமாக தருஷ்ணைபிறகும, அதனால் துராசைபிறகும மைதரிமெனனும் ஸநேகதநிலிருநது துராசை யுணடாகாது. ஒருவனுக்குத தனதுணைவன்விஷயமாக வண்டாகுமன்புதானமைதரிமென்பது

உ. **கருணாபாவனை:—** அஃதாவது 'வறியவாகளை வறுமைநீஙகிச செல்வமுடையவர்களாக ஆகுக' என்றுபாவிததல. கருணையாவது இரக்கமுளள எணணம அஃது, ஒருபிராணிதுன்பமுறுவதைகாணினை, மனக்கலகததையும அததுன்பதை நிவாரதிபண்ணவேண்டுமெனபதையும ஒருவருகசு உணடாகுமு

ங. **முதிதபாவனை.—** அஃதாவது 'ஆங்கமுடையவாகளுடைய நலல அதிரவ்ட்டமானது எப்பொழுதும நீஙகாதிருதத்ல வேணடுமு ஒவ்வொருவருமு தத்தமகசு அமைநதுள்ள நல்வினைப்பயனை அடைக' எனறு பாவிததல. முதிதையெனபதற்குச ஸநதோஷமென்பது பொருள,

மநிததக் துக்க மநான்மா வசுகியெனத
உநிது தனித்துப் பார்த்துப் பற்றறுத் திடுதன

ஆனல்அஃது உலகப்பொருள்களேயுடை மையால் உண்டாகுங் களிப்பன்று; இது மைத்திரீ, கருணையென்னும் இரண்டுபா வனைகளுக்கும் சம்பந்தமானது. முற்கூ றிய மூன்றுவகைப்பாவனைகளுள் ஏதாவ தொன்றை அப்பியஸிக்குந்தறவி, தான் கருதியபாவனையை முதலில் சிலஜனங்க ளிடத்தும் அப்பால் ஒருதெருவில்வாழ்ப வர்களிடத்தும் அப்பால் ஒருநாரிடதது மும் அப்பால் ஒரு தேயத்தாரிடத்தும் முறை யேசெலுத்தற் பயிலுதல்நலம.

ச. அசுபபாவனை:— அசுபமென்பதற் குப்பொருள் அமங்கலம், நல்லஅதிர்ஷ்ட மென்பதன் எதிர்மொழியாயிருப்பதோடு மகிழ்ச்சியின்மை வெறுப்பு என்பனவற் றையுண்டாக்குவதாகவுமுள்ளது. இதை ப்பயிலும ஒருதறவி, சரீரமானது மூப் பத்திரண்டு குற்றத்தாலாக்கப்பட்டதென் றும் சாணியின்குவியலில் தோன்றிவள ரும் புழுக்கள்போலக் கருப்பப்பையில் உண்டாகின்றதென்றும் மலஙகழிக்குமி டத்தைப்போல அசுத்தத்தின் கொளகல ஞயிருப்பதென்றும் அருவருப்பானகசிவ அதிலுள்ள நவத்துவாரங்களின்வழியே ஓயாமற் பெருகுகின்றதென்றும் ஜலதா ரையைப்போல் வெறுத்தற்குரியநாற்றத் தை அது வெளிப்படுத்துகின்றதென்றும் பாவிக்கவேண்டும். 'சரீரத்தின் காலவ ளவை ஒரு நிமிஷமே மின்னலேயும்துரை யையும் நீரிற்போகட்ட உப்பையும் காய் ந்த புல்லிற்பற்றிய நெருப்பையும் கட லின் அலேயையும் ஆகாயத்திற் சஞ்சரிக் கிறஜ-வாலேயையும புன்னுனியிற்பட்ட பனித்துளியையும்போலப் பிறந்தபோ தே அதுநாசமாம்' என்று சரீரத்தின்நிலே யின்மையைப்பாவித்தலும் அசுபபாவனே யின்பாற்படும்.

ஈ. உபேக்ஷாபாவனை:— அஃதாவது எல்லாவுயிர்களேயும் சமமாகப்பாவித்தலு ம் விருப்புவெறுப்பின்றி யிருத்தலுமாம். இது, மற்ற நான்குபாவனைகளேக்காட் டிலும் மிகவுயர்ந்தது. அருகத்துக்களால் அனுட்டிக்கப்படுவது, இது சமஸித்தத் துவமென்றுங் கூறப்படும். உபேக்ஷை-உதாசினம்.

மைத்திரீ, கருணே, முதிதை, உபே கைஷையெனனும் நான்கு பாவனைகளும உயர்வுபற்றிப் பிரஹ்மவிகாரபாவனையெ ன்று கூறப்படும், இவை மஹாப்பிரஹ் மாக்களால் அனுஷ்டிக்கப்படுவன.

ஈண்டு எழுதப்பட்டுள்ள மைத்திரீபா வனைமுதலிய ஐந்தினிலக்கணங்களும, இங்கிலிஷ்பாஷையிலுள்ள இவ்வகைப பௌத்தமதநூற் புத்தகமொன்றிலிருந்து பெயர்த்து எழுதப்பட்டன.

உ (ரு). பார்த்து - அசுபபாவனேபண் ணி. பற்று - காமம்.

உ (ரு) - உ (ரு). அசுபபாவனேயாற் கா மத்தையொழிக்க வென்றவாறு. உடம பினே அநிதயியம் துகசம் அநான்மா அசு சியென்று பாவித்தல் அசுபபாவனேயெ னப்படுவதன்றி ஸ்ரீலக்ஷணபாவனேயென றும கூறப்படும். இதனேச் சிவஞான சித்தியாரி, சௌத்திராந்திகன்மதம் உம் திருவிருத்தத்துரையிற்காண்க; இவ்வ சுபபாவனே, "நன்கென நாறுமி தென் றிவ் வுடம்புந யக்கின்ற தாயி, ஞேன பது வாயிலக டோறு முண்ணின்ற மூக குச சொரியத், தின்பதோர் நாயு மிழுப பத் திசைதொறுஞ் சீப்பில்கு போழ்தி, னின்பநன் ஞற்றமி தன்க ணெவ்வகை யாற்கொள லாமே." எ-ம், "உறுப்புக் டாமுடன் கூடி யொன்ரு யியைந பெரும்பை, மறைப்பில் விழைவிற்குச சார்வாய் மக்குவ தேலிவ் வறுப்பு, குறைத்தன போல வழுகிக குறைந்து குறைந்து சொரிய, வெறுப்பிற் கிடந பொழுதின் வேண்டப் படுவது முண் டோ." எ - ம், "எனதெனச் சிநதித் லான்மற் றிவ்வுடம் பின்பத்துக் காமேற, றினேபெய்த புன்கத்தைப் போலச் சிற் யவு மூத்தவு மாகி, வினேயப் புழுக்குந மாவி காணவும வாழவும் பட்ட, வினேய வுடம்பினேப் பாவி யானென தெனனு மாமோ." [புன்கம் - சோறு] எ - ம் வருஉ தூண்டலகேசிச் செய்யுட்களாலுமுணர்த் தப்பட்டது; "வினேயின் வந்தது வினே க்குவிளே வாயது, புனேயன கீங்கிற் புலர் ல்புறத் திடுவது, மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை, பற்றின் பற்றிடு

மைத்திரி கருணை முதிதையென் றறிந்து
திருந்துநல் லுணர்வாற் செற்றமற் றிடுக
சுருதி சிந்தனை பாவனை தரிசனை
கருதி யுய்த்து மயக்கங் கடிக
உசுO விநநால் வகையான் மனத்திரு ணீங்கென்று
முன்பின் மலையா மங்கல மொழியினை
ஞான தீப நன்கனங் காட்டத
தவத்திறம பூண்டு தருமங் கேடடுப்
பவத்திற மறுகெனப் பாவைநோற றனளென

பவத்திறமறுகெனப்பாவைநோற்றகாதை முற்றிற்று.

---

குற்றக் கொள்கலம், புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை, யவலக் கவலை கையா றழுங்க, றவலா வள்ளந தன்பா லுடையது, மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து, மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்" (ச - ம் காதை, ககக - கஉக) எனவும், "என்புந் தடியு முதிரமும யாக கையென், றன்புறு மாக்கட் கறியச் சாற்றி, வழுவொடு கிடந்த புழுவூன் பிணடத, தலதக மூட்டிய வடிநரி வாய்கொண், டெலப்பி லின்பமோ டெளிக்கு மோதையுங, கலப்புற வல்குல் கழுகுகு டைக துண்டி, நிலத்தலை நெடுவிளி யெடுகரு மோதை யுங், கடகளு செறித்த கையைத தீநா, யுடையக் கவ்வி யொடுங்கா வோதையுஞ், சார்ந்த் தோய்ந்த வேந்திள வனமுலை, காய்ந்தபசி யெருவை கவர்ந்தூ ணுணதை யும்" (சு - ம் காதை, கJஎ - ககஎ) எனவும் இந்நூலுள்ளே வந்தனவும் அசுபபா வனையின்பாற்படும்.

உநிஎ. 'திருந்துநல்லருளால்' என்றும் பாடம். செற்றம் - கோபம்.

உநிசு - உநிஎ. மைதகிரீபாவனைமுத லிய மூன்றுலும் கோபத்தைப்போக் குக.

உநிஅ. சுருதி - ஞானனூற்பொருளைக் கேட்டல. சிந்தனை=சிந்தனை - சிந்தித் தல். பாவனை=பாவனை - பாவித்தல் இது தெளிதலென்றுங் கூறப்படும். தரிசனை - அறிதல். மேற்கூறியபாவனையைநதனுள் ஈண்டுக்கூறிய சுருதிமுதலியன உபே க்ஷாபாவனையின்பாற்படும்.

உநிக. உய்த்து - ஆராய்ந்து.

உநிஉ - உநிக. உபேக்ஷாபாவனையால் மயக்கதைதப் போக்குகவென்றவாறு.

உசுO. இந்நால்வகையென்றது மேற் கூறிய சுருதிமுதலிய நான்கினையும. மனத்திருள் - மயகக ம், 'இநநால்வகை யான் மனதிருணீங்கு' என்றது அனு வாதம்.

உசுக. முன்பின்மலையா - பூர்வோத்த ரவிரோதமில்லாத, உஅ - ம காதை, கJO, சுO - ம் காதை, சு.

உசுக - உசுஉ. மொழியினற் காட்ட வென்க.

உசுச. பவத்திறம் - பிறப்பின்வகை கள். பாவை - மணிமேகலை.

க - உசுச. உணாதோள் வணங்கிச் சென்று அடைந்தபின் மொழிவோன் காட்டப் பாவைகேட்டுப்பூண்டி நோற்ற னளென்க.

---

மணிமேகலை முற்றுப்பெற்றது.

மணிமேகலைப்பாட்டு

# முதற்குறிப்பு அகராதி.


| பாட்டு. | | பக்கம். |
|---|---|---|
| அணியிழையந்தர ... ... ... ... | | உ0 |
| அந்திமாலைநீங்கிய ... ... ... . ... | | நூ |
| அரசனுணையினையிழை ... ... ... ... ... | | களை |
| அரசனுரிமையோ ... ... ... ... ... | | உஉ |
| அறவோனுசனத்து ... ... .. ... | | அ |
| ஆங்கதுகண்டவாயிழை ... ... ... ... | | ஙா |
| ஆங்கதுகேட்டாங் ... .. ... ... ... | | கநூ |
| ஆங்கவர்தம்முடன் ... .. ... ... ... | | க0க |
| ஆங்கவற்கொருநாள் ... ... . ... ... | | கஉ |
| ஆங்குத்தாயரோ ... .. ... ... .. ... | | உஎ |
| இளங்கதிர் ஞாயிறெள் .. ... .. . ... | | க |
| இளங்கோன்கண்ட ... ... ... ... ... | | நா |
| இறைஞ்சியவிளங்கொடி... ... ... ... ... | | உஙூ |
| இன்னுங்கேளாயிளங்கொடி ... ... ... | | கஙூ |
| ஈங்கிவள்செய்தி ... ... .. ... ... ... | | கஙூ |
| ஈங்கிவளின்னணம் ... ... .. ... ... | | எஅ |
| உலகந்திரியா ... ... ... ... ... ... | | கூ |
| கடவுண்மண்டிலம் ... ... ... ... | | கஙஎ |
| கடவுளெழுதியெடுநிலை ... ... ... | | கஅ |
| தானந்தாங்கிச் ... ... ... ... ... ... | | உகூ |
| நவையறுநன்பொரு ... ... ... ... ... | | கநஅ |
| நாவலோங்கிய ... ... .. ... ... ... | | கசு |
| பத்தினிப்பெண்டிர் ... ... ... ... .. | | கநஎ |
| பரிதியஞ்செல்வன் ... ... ... ... ... | | நூ |
| மணிமேகலாதெய்வ ... .. .. ... ... | | கூ |
| மணிமேகலைதனை ... ... ... ... | | சூ |
| மன்னருமரனை ... .. ... .. ... ... | | உகள |
| மன்னவனருளால் ... ... ... ... ... | | உ0எ |
| மாபெரும்பாத்திரம் ... ... ... ... ... | | கஙசு |
| முதியாள்திருந்தடி ... ... ... ... ... | | கசுஞ |
| வயந்தமாலைக்கு ... ... ... ... ... ... | | உஉ |

# அரும்பதவகராதி.

| பதம். | பக்கம். |
|---|---|

## அ.

| | |
|---|---|
| அகலை, சா, கூ, கசு, ஃகு, கூ, ஒஉ | |
| அகைத்தல் - தழைத்தல், பறித்தல், | ஒஉ |
| அங்கி - அக்கினி, | உசுக |
| அசும்பு - சேறு, சிறுதிவலையுமாம், | எஅ |
| திருச்சிற்றம்பலக்கோவையார் கசகூம் பாட்டிற் காண்க. | |
| அஞர் - துன்பம், | ககஙூ |
| அடர் - தகடு, | கஙூங, உஙூ0 |
| அடுக்களை - மடைப்பள்ளி, | உஆஎ |
| அணங்கு, | உரி, கசஙூ |
| அணு, | உரிஙூ |
| அத்தம் - அரியவழி, | ககஅ |
| அதர் - வழி, | ககஅ |
| அந்தரி - தூர்க்கை, | கஅஙூ |
| அந்தில் - அவ்விடம், | எச, கoஎ |
| அம்பி - கப்பல், | உஅஙூ |
| அமர் - விருப்பம், | கஉக |
| அமலை - திரளை, | கசசு |
| அமைதி, | உக, ஒஉசு |
| அயர்ப்பாய் - மறப்பாய், | ககசுரி |
| அயா - வருத்தம், | கஅஉ, கஅசு |
| அரங்கம் - ஆடிடம், | ஒகஅ |
| அரமியம் - நிலாமுற்றம், | ககக |
| அரவம் - பாம்பு, | கஅஉ |
| அருகன் - பக்குவி, | உஎச |
| அல்லல் - துன்பம், | உகரி |
| அல்லி - அகவிதழ், | கூச |
| அவச - அலைய, | ஙஙூ |
| அவத்தல் - இடுக்கட்படுதல், | கஙூரி, உஅ0 |
| அவர் - பலரறியாநிகழ்த்துஞ்சொல், | ஙூ, கசு, உ00 |
| அவலலமை - மனத்திற்றோற்றியதை ஆராயாதுசெய்யுந்தன்மை, | கசசூ |
| அவலற்று - சுழன்று, | ஙூஎ |
| அவ்வையர் - தாய்மார், | கoஎ |
| அவதி - எல்லை, | ககரி |
| அவம் - வீண், | சுக |
| அவலம், | சூஉ, உகரி |

| பதம். | பக்கம். |
|---|---|
| அழல் - விடம், | ஒகஙூ |
| அழிதகவு, | ககஙூ |
| அழியல் - வருந்தாதே, | கஉரி, ஒஙூங |
| அழிவினள், | கஙூ |
| அழுவம - பரப்பு, | எச |
| அழைஇ - அழைத்து, | ரிங |
| அளக்கர் - கடல், அளத்தையுடைமையின் இப்பெயர் பெற்றதென்பர், | கரஎ |
| அளியன் - அளிகததக்கான், | கரஙூ |
| அற்றம - மறைவு, | ஙூக |
| அறஞ்சுகடை - பாவம், | கரசு |
| அறம், | ஒஉஅ, உஙூஅ |
| அறல் - கருமணல், | கஎக |
| அறவி - அறத்தையுடையது, கூஅ, ககக, கரி0, கரிக, கஎஅ, ககக | |
| அறவோன் - புத்தன், | ஃக, கoசு |
| அறுகை - அறுகம்புல், | ககக |
| அறுவை - உடை, | சூ0, உஎக |
| அறுவையர் - உடைநெய்வோர், | ஒஎக |
| அறை - உவமவுருபு, | ரிஙூங |
| அறைபோதல் - கிழறுத்தல், | ககக |
| அனந்தர் - களளேயுண்டமையாலுண்டான செருக்கு, | எங |

## ஆ.

| | |
|---|---|
| ஆ - பசு, | ககஅ, கஙூங |
| ஆங்கனம், | உ0, உங, கசஅ, கசரி |
| ஆட, | கசரி |
| ஆடவர், | ஒங |
| ஆடி, | ஃ0, கூஉ, கஎக |
| ஆடிய - அசைந்த, பூசிய, | கசு, கரக |
| ஆண்டலை - ஆண்மகனது தலைபோன்ற வடிவமுள்ள ஒருவகைப்பறவை, | ரிக |
| ஆணு - அன்பு, | ஒ |
| ஆணை - ஆஞ்ஞை, | கஙூ0 |
| ஆதுலர் - நோயாளிகள், மிக்க வறுமையுடையோர், | ஙூஅ |
| ஆந்தாணம் - இடவிசேடம், | உஎ, சசு |
| ஆயினும் - எண்ணிடைச்சொல், | ரிஎ, உ0எ, உஙூஅ |

பதம். பக்கம்.

ஊரம்; ருக
ஆராமம் - உபவனம், உஉ
ஆராமை -நிரம்பாமை; தெவிட்டாமையுமாம், ஈ0அ
ஆலும் - ஆடும், ஈ(ரு)
ஆவம் - அம்பறுத்தூணி, கஅ0
ஆவி - புகை, உ ஙக
ஆற்றுநர், க0ரு
ஆற்றுவது, கா ஏ
ஆனறவர் - அமைந்தவர், கூஅ

இ.

இகந்த, உ00
இகல், கஎஉ
இடங்கர் - முதலேச்சாதிவிசேடம், உசூஅ
இடின், ா சு
இடும்பை - துன்பம், ஙக
இடை - சமயம், ... ரக
இணர - பூங்கொத்து, எ ி
இதை - கப்பற்பாய், ஈசு, கஙஈ
இந்தியம் - பொறிகள், ா ஙஈ
இயவு - வழி, ஙஎ
இரதநி - இலாதகையாம, சு0
இரியல் - கெடுதல், கா க
